
திருமந்திரம்

மூலபாட ஆய்வுப் பதிப்பு

மூன்றாம் பகுதி



"மான்கன்று நின்று வளர்கின்ற வாறே" - திருமந்திரம், 731

பதிப்பாசிரியர்
டாக்டர் சுப. அண்ணாமலை



டாக்டர் *சுப. அண்ணாமலை*
பதிப்பாசிரியர்

திருமந்திரம் – மூலபாடப் பதிப்பை உருவாக்கிக் கருத்து வரைந்தவர்.

"தமிழாகரர்" என்னும் பட்டம் இவருக்குத் தவத்திரு குன்றக்குடி அடிகளாரால் வழங்கப்பட்டது.

1929 - ஆம் ஆண்டு பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம், தேவகோட்டையில் தோன்றினார்.

சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் பயின்று, 1952 - இல் B.O.L (Hons) தேர்வில் மாநில முதன்மை பெற்றுத் தேறி, சென்னைப் பல்கலைக் கழகத்தில் "லாசரஸ்" – தங்கப்பதக்கமும், அரங்கையா செட்டி பரிசும் பெற்றார்.

கோவை பி.எஸ்.ஜி. கலைக் கல்லூரியில் ஓர் ஆண்டும், மதுரைத் தியாகராசர் கல்லூரியில் 34 ஆண்டும் தமிழ்த் துறையில் பணியாற்றி, இதில் 20 ஆண்டு, இக்கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவராகவும், 11 ஆண்டுகள் முதல்வராகவும் பணியாற்றி, 1988 - இல் ஓய்வு பெற்றார்.

(தொடர்ச்சி பின்பக்க உள்அட்டையில்)

உ
சிவமயம்

திருமூலநாதர் அருளிய

திருமந்திரம்

என வழங்கும்

சதாசிவ ஆகமம்

மூலபாட ஆய்வுப் பதிப்பு

மூன்றாம் பகுதி :

ஐந்து இந்திரியம் அடக்கற்கு அருமை முதல்
தோத்திரம் வரை

கருத்துரை எழுதிப் பதிப்பித்தவர்:

டாக்டர் சுப. அண்ணாமலை, எம். ஏ., பிஎச்.டி.

இந்தியப் பண்பாடு - ஆராய்ச்சி நிறுவனம்
84, கலாக்ஷேத்ரா சாலை
திருவான்மியூர், சென்னை - 600 041

முதற் பதிப்பு: ஏப்ரல் 1997
இரண்டாம் பதிப்பு : ஜூன் 2002
உரிமை: பதிப்பாசிரியர்க்கு

பக்கங்கள் : 28 + 652 = 680
Map Litho Paper - 18.6 Kg.

மூன்று பகுதிகள் சேர்த்து விலை ரூ.450/-

நன்றியுரை

இந்நூலை வெளியிட அன்புடன்
இசைவு நல்கிய மதுரை, காமராசர்
பல்கலைக் கழகத்தார்க்கு நன்றி

அச்சிட்டோர் :

கலாக்ஷேத்ரா பதிப்பகம்
திருவான்மியூர், சென்னை - 600 041

உள்ளுறை

சொற்சுருக்க விளக்கம்

1.	கந். கலி. வெ.	..	கந்தர் கலி வெண்பா
2.	சிலப்.	..	சிலப்பதிகாரம்
	அ) இந்தி.	..	இந்திரவிழ வூரெடுத்த காதை
3.	சிவ. போ.	..	சிவஞான போதம்
4.	திரு ஞா. தேவா.	..	திருஞானசம்பந்தர் தேவாரம்
	அ) திரு.	..	திருமுறை
5.	திருநா. தேவா.	..	திருநாவுக்கரசர் தேவாரம்
6.	திருவா.	..	திருவாசகம்
	அ) கீர்த்தி.	..	கீர்த்தித் திருவகவல்
	ஆ) சிவபு.	..	சிவபுராணம்
	இ) திருவண்.	..	திருவண்டப் பகுதி
	ஈ) திருவம்.	..	திருவம்மானை
	உ) திரு வெம்.	..	திருவெம்பாவை
	ஊ) திருத்தோ.	..	திருத்தோணோக்கம்
	எ) கோ.	..	கோயிற் பதிகம்
7.	திருவாத. புரா.	..	திருவாதவூரடிகள் புராணம்
8.	திருவிளை.	..	திருவிளையாடற் புராணம்
9.	தேவா.	..	தேவாரம்
10.	நாலா. பெரி. திரு.	..	நாலாயிர திவ்வியப் பிரபந்தம் பெரியாழ்வார் திருமொழி
11.	பட்டின.	..	பட்டினத்தார் பாடல்கள்
12.	பண்டார.	..	பண்டார மும்மணிக் கோவை
13.	பெ. பு	..	பெரிய புராணம்
	அ) திருஞான.	..	திருஞானசம்பந்தர் புராணம்
	ஆ) தில்லை. புரா.	..	தில்லை வாழந்தணர் புராணம்

1/4

பதிப்புகளின் பெயரும் குறியீடுகளும்

முன்னர் வந்த பதிப்புகளுள் கீழ்க்கண்ட பதினொரு பதிப்புகள், பாடத் தேர்வுக்காக ஒப்பு நோக்கப்பட்டன. இப்பதிப்புகளின் பெயரும் இப்பொழுதைய பதிப்பில் இவற்றுக்குக் கொடுக்கப்படும் குறியீடுகளும் வருமாறு

எண்	பதிப்பு	குறியீடு
1.	திருமந்திரம் மூவாயிரம். கொ. சண்முகசுந்தர முதலியார்	(சண்)
2.	திருமந்திரம். மாவை. வே. விசுவநாத பிள்ளை	(விசு)
3.	திருமந்திரம். திரு. வி. கலியாணசுந்தரனார் பார்வை	(திரு. வி. க)
4.	திருமூலர் அருளிய திருமந்திரம். எஸ். சங்கரலிங்க முதலியார்	(சங்)
5.	திருமந்திரம். சைவசித்தாந்த மகாசமாஜம்	(சைவ)
6.	திருமந்திரம் மூவாயிரம். துடிசை கிழார் சிதம்பரனார்	(துடி)
7.	திருமூலர் திருமந்திரம் – பஞ்சாட்சர தீபம் என்னும் உரையுடன். திருவாவடுதுறை ஆதீனம்	(திரு) அல்லது (தி)
8.	திருமந்திர மாலையாகிய திருமந்திரம். சி. அருணைவடிவேல் முதலியார் தருமபுர ஆதீனம்	(த)
9.	திருமந்திரம். ஜி. வரதராசன் உரை	(வ)
10.	திருமூலநாயனார் திருவாய் மலர்ந்தருளிய திருமந்திரம் – பதிப்பு விவரம் தெரியவில்லை	(தெ)
11.	திருமந்திரம் – ஆங்கிலமொழி பெயர்ப்புடன். இராமகிருஷ்ண மடம், சென்னை.	(இராம)

இடைச் செருகல் : காரணங்களும் குறியீடுகளும்

எண்	காரணம்	குறியீடு
1.	கூறியது கூறல்	அ
2.	பொருட் சிறப்பு இன்மை	ஆ
3.	பொருட் பிழை உடைமை	இ
4.	பொருள் தெளிவு இன்மை	ஈ
5.	இயலின் பெயர்க்குப் பொருந்தாமை	உ
6.	இயலின் பிற பாடலுடன் கருத்து மாறுபடுதல்	ஊ
7.	இயலின் பிற பாடலை வடிவால் ஒத்தல்	எ
8.	ஆசிரியர் கருத்துடன் மாறுபடுதல்	ஏ
9.	ஆசிரியர் நூல்கூறும் முறையுடன் மாறுபடுதல்	ஐ
10.	ஆசிரியரைப் படர்க்கையில் குறிப்பிடுதல்	ஒ
11.	ஆசிரியரின் வரலாற்றோடு மாறுபடுதல்	ஓ
12.	நடைச் சிறப்பு இன்மை	ஔ
13.	ஆசிரியரின் நடைக்கு மாறுபடுதல்	க
14.	பிற்காலச் சொல் வழக்கு உடைமை	ங
15.	பொருந்தாச் சொல்லாட்சி, பொருந்தாத் தொடர் உடைமை	ச
16.	சொல்லாட்சியும் நடையும் சிறப்பு இலவாதல்	ஞ
17.	யாப்புப் பிழை உடைமை	ட
18.	இலக்கணப் பிழை உடைமை	ண
19.	வேறுநூற் செய்தி உடைமை	த
20.	நூற்பொருளோடு பொருந்தாமை	ந
21.	சுவடிகளில் இல்லாமை	ப

உ

சிவமயம்

நூன் முகம்

திருமூலர் அருளியதும் சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் பத்தாவதாக வைத்து எண்ணப்படுவதுமான திருமந்திரம் என்னும் சதாசிவ ஆகமத்தின் மூலபாட ஆய்வுப் பதிப்பில், மூன்றாவது பகுதி இந்நூல். முதற் பகுதி "கடவுள் வாழ்த்து" – இயல் முதல், "திருவம்பலச் சக்கரம்" என்னும் இயல் முடிய 58 இயல்கள் கொண்டது. இரண்டாம் பகுதி "நவகுண்டம்" என்னும் இயல் முதல் "பசு இலக்கணம்" என்னும் இயல் முடிய 53 இயல்கள் கொண்டது.

இம் மூன்றாவது பகுதி "ஐந்து இந்திரியம் அடக்கற்கு அருமை" என்னும் இயல் முதல் நூல் இறுதி "தோத்திரம்" என்னும் இயல் முடிய 62 இயல்கள் கொண்டது

பலர் கருதிவந்தது போல், திருமந்திரம் சைவ நெறி தொடர்பான செய்திகளைத் திரட்டி, ஒரு தொகுப்பாகத் தரும் நூலன்று – கட்டமைப்பு உடைய முழுநூல். சிவயோகம் பற்றி அறிவு பூர்வமாக, முறை வகுத்துக் கூறும் இனிய நூல்.

இந்நூலின் இம் மூன்றாம் பகுதியில் உள்ள 'தத்வமசி' – மகாவாக்கியம் பற்றிய விளக்கம், இந்த நூலை இந்திய தத்துவ சாஸ்திரங்களுடன் இணைக்கிறது. திருமூலர் 'பதஞ்சலி யோக சூத்திரத்தை' அடிப்படையாகக் கொண்டு, சிவயோக முறையை உருவாக்கியுள்ளார் என்பதும், இவருக்கு இந்திய ஆன்மீகத் துறையில் இருந்த தொடர்பைக் காட்டுகின்றது.

இதே சமயம் சன்மார்க்க நெறியில், யோக சாதனையால், மனிதன் மரணத்தை வென்று, ஊனுடம்பை சுத்தவுடம்பு, மந்திர உடம்பு, ஞான உடம்பு ஆகப் படிப்படியே மாற்றிக் கொண்டு வாழலாம் என்பது ஒரு புது யுகத்தைத் தோற்றுவிக்கிறது.

இவ்வாறு பழமைக்குப் பழமையாய்ப் புதுமைக்குப் புதுமையாய் விளங்கும் திருமந்திரத்தை அன்பர்கள் எளிமையாகப் படித்துப் புரிந்து கொள்ளும் பொருட்டு இப்பதிப்பு உருவாக்கப்பட்டது. இப்புதிய முயற்சியைத் தமிழ் மக்கள் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்.

சுப. அண்ணாமலை

துணைநின்றோர்க்கு நன்றி

கோவிலூர் ஆதீன அதிபர், வணக்கத்திற்குரிய ஸ்ரீ நாச்சியப்ப ஞானதேசிக சுவாமிகள் இத்திருமந்திரப் பதிப்பினை, நல்லாசி கூறி வெளியிட்டுள்ளார்கள்.

இப்பதிப்பு உருவாவதற்குத் துணைநின்றோர் பலர். மதுரை, காமராசர் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர், டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி அவர்கள், தமிழியல் துறையில் எனக்குப் பணியளித்ததுடன் நான் பல ஊர்களுக்குச் சென்றும், பாரிசிலிருந்து வரவழைத்தும், திருமந்திரச் சுவடிகள் பெறவும், அவற்றை நிழற்படப்படி யெடுக்கவும் உரிய முழுச் செலவையும் பல்கலைக் கழகத்திலிருந்து தந்துதவினார். மற்றொரு துணை வேந்தர், டாக்டர் எம். டி. கே. குத்தாலலிங்கம் அவர்கள் இப்பதிப்பை வெளியார் வெளியிட இசைவளித்தார். இப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர் தமிழண்ணல் அவர்கள் மூலபாட ஆய்வுக்கு வழிகாட்டியதுடன், இம்மூன்றாம் பகுதிக்கு, அரியதோர் அணிந்துரை வரைந்துதவியுள்ளார்.

இந்தியன் வங்கியின் முன்னாள் மேலாளர் திரு. எம். திருநாவுக்கரசு அவர்களும், என் பேராசிரியர், திரு. அ.ச. ஞானசம்பந்தனார் அவர்களும் இந்நூல் விரைந்து வெளிவரத் தூண்டுகோலாக இருந்தனர். திரு. அ.ச. ஞானசம்பந்தனார் அவர்கள், இப்பதிப்பு முதற் பகுதிக்கு மதிப்புமிக்க அணிந்துரையும் எழுதித் தந்தார். இரண்டாம் பகுதிக்குத் தமிழக அரசின் முன்னாள் தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கட்டராமன் அவர்கள் அணிந்துரை உதவினார்.

சென்னை கலாக்ஷேத்ரா அச்சகத்தார் இந்நூலை அழகுற அச்சேற்றினர். டாக்டர். மெ. மெய்யப்பன், டாக்டர் ஆ. ஆனந்தராசன், திரு. சக்திவேல், என் மகள் திருமதி லெ. அங்கயற்கண்ணி ஆகியோர் அச்சுப்படிகளைத் திருத்தி உதவினர்.

சுவாமிகளுக்கும், இப்பெருமக்கள் அனைவர்க்கும் என் நன்றி உரியது.

மதுரை, *சுப. அண்ணாமலை*
ஏப்பிரல், 1997. பதிப்பாசிரியன்

அணிந்துரை

முனைவர் தமிழண்ணல், எம்.ஏ., பிஎச்.டி.,
முன்னைத் தமிழ்த்துறைத் தலைவர்,
சிறப்புநிலைப் பேராசிரியர் (யு.ஜி.சி)
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்,
மதுரை – 625 021.

திருமூலர் அருளிய திருமந்திரம், தமிழர்க்குக் கிடைத்த பெறற்கரும் கருவூலங்களில் ஒன்றாகும். தமிழில் புதுமரபு தோற்றுவித்த சித்தர் அவர். அவரது கருத்துவீச்சு, நம் காலத்து வள்ளற்பெருமான்வரை தொடர்ந்து, பாவலர் கோமான் பாரதியிடமும் எதிரொலித்தது.

காலப் பழமையால் இத்தகைய பெருநூல்கள் ஏடெழுதுவோரின் குறை நிறைகளாலும் அவ்வக் காலத்து மொழிநிலை மாற்றங்களாலும் – சிலபோது தவற்றைச் சரியெனவுணர்ந்தும், முறையானதைத் தவறெனக் கருதியும் சிறுசிறு வேறுபாடு, மாறுபாடுகட்குட்பட்டு, சிறுதுளி பெருவெள்ளமாகி 'மூலம் இதுவென உணரமுடியாமற் போகின்றன. இத்தகைய மாற்றங்களை உண்டாக்கிவிட்டனரே என வருந்துவதைவிட, அவர்கள் எவ்வாறோ எழுதிப் பயன்படுத்தி எதிர்காலச் சந்ததிக்குக் காப்பாற்றித் தந்து சென்றதையே நினைந்து நாம் மகிழ வேண்டும். அதற்காகப் பிழைபட்ட ஒன்றை நாம் பின்பற்றவேண்டுமென்பது கருத்தன்று.

இன்று 'மூலபாட ஆய்வியல்' முறை, ஓர் அறிவியலாக வளர்ந்துள்ளது. கிடைக்கின்ற ஏடுகளையெல்லாம் ஒருங்குவைத்து, ஒப்பிட்டு, சிலகுடிவழி வேறுபாடங்கள் இவையெனவும் பகுத்தறிய இன்று பெருவாய்ப்புள்ளது. இத்திருமந்திரப் புதுப் பதிப்பின் ஆசிரியர், முனைவர் சுப. அண்ணாமலையவர்கள் 'இராமலிங்க வள்ளலார்' பற்றிய ஆய்வில் திளைத்த பட்டறிவு மிக்கவர். மதுரைத் தியாகராசர் கல்லூரியில் பேராசிரியராய், தமிழ்த்துறைத் தலைவராய், முதல்வராய் விளங்கிய பெருமைக்குரியவர். இவர் அச்சில் வெளிவந்த திருமந்திரப் பதிப்புக்கள் பதினேழையும் பாரிசு நகரம் உட்படப் பல இடங்களில் கிடைத்த பதினைந்து ஏடுகளையும் ஒப்பிட்டுத் தம் நுண்மாண் நுழைபுலத்தால் பெரிதும் திருமூலர் பாடிய திருமந்திர மூலப்படி இதுவே என நாம் ஒப்புமாறு பதிப்பிக்க மிகவும் முயன்றுள்ளார். படியெடுப்போர் வேண்டுமென்றன்று, இயல்பாகச் செய்துவிடும் தவறுகளும் உள. சிலர் தம் புலமைமிகையால் 'கை' வைத்துவிடுவதுமுண்டு. அவற்றைக் களைய 'மூலபாட ஆய்வியல்' முறையே உதவும். மேலும் அதற்கும் அப்பாற்பட்டு ஐயம் எழும் இடங்களில் பாடற்பொருள், அதிகார இயைபு, முழுமைப் பார்வை, யாப்பமைதி, நடை, நூலாசிரியர் காலச் சொல்வழக்கும் இலக்கணக் கூறுகளும் ஆகிய இவற்றைக் கொண்டு உண்மை காண வேண்டியிருக்கும். இவ்வாறு 'மீட்டுருவாக்கம்' செய்யும் பணியையும் இப்பதிப்பாசிரியர் மேற்கொண்டுள்ளார்.

தமிழ்ப் பெருநூலொன்று, இத்தகைய அறிவியல் சார்ந்த மூலபாட ஆய்வியல் முறைப்படியும் மீட்டுருவாக்கநெறிப்படியும் முதன்முதலாகச் செவ்விய – திருந்திய – தெளிவான வடிவம் பெற்றுள்ளது எனலாம். இத்துணைக் கடின உழைப்பும் திறனும் உளவென்பது, இந்நூலை ஒருமுறை பார்வையிடுவார்க்கும் புலனாகும். தமிழ்நூற்பதிப்பு வரலாற்றில் தமிழ்த்தாத்தா சாமிநாதய்யர் பரம்பரை இன்னும் இருப்பதை இந்நூல் நினைவூட்டுகிறது.

பொருள் விளங்குமாறு பிரித்தும், யாப்புப் பிசகாமல் சொற்பிரிவின்றியும் இருமுறை பாடல்கள் பதிப்பாகியுள்ளன. முதலிற் பாடவேறுபாடு சுட்டப்படுவது. இப்பதிப்பாசிரியர் 'மூலபாடத்தைத்' தேர்வு செய்வதையே முதற்பணியாகக் கொண்டமையைச் சுட்டிக்காட்டுகிறது, பிறகு பாடலின் கருத்தும், அதன்பின்னர் தேவைப்படுமளவு சிறப்புக் குறிப்புக்களும் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடலுக்கும், கட்டுரைத் தலைப்புப்போல், பதிப்பாசிரியர் தந்துள்ள தலைப்புக்கள் உடனடி விளக்கம் போலவும் கருத்துப் பிழிவு போலவும் சுவைபொருந்த அமைந்துள்ளன.

சங்கப் புலவர் பெயர்களில் மாமூலனார், மூலங்கீரனார் (மூலன் மகன் கீரனார்) என வருவன 'திருமூலர்' என்ற பெயரின் பழமையைக் குறிக்கின்றன. தொல்காப்பியம் ''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த, மறைமொழி தானே மந்திரம் என்ப'' (1434) என்ற நூற்பாவில் கூறியுள்ளவை திருமந்திரத்திற்கு மிகவும் பொருந்திவருதலும் மிக நுட்பமாக எண்ணிப் பார்க்க வேண்டியதாகும். திருவள்ளுவர் ''நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து, மறைமொழி காட்டிவிடும்'' (28) என்று, முன்னதை அடியொற்றிக் கூறியுள்ளார். 'மந்திரம்' என்பதைத் தொல்காப்பியர் 'வாய்மொழி' என்றும் சுட்டுவார் (1336). இவை உலகியலையும் உளவியலையும் ஆராய்ந்து கூறிய அடிப்படை உண்மைகள். மறைமொழி பொருள் பொதிந்தது, தோண்டத் தோண்டச் சுரங்கத்தில் பொன்னும் மணியும் கிடைப்பது போலத் துருவித் தேடவைப்பது, கற்பவர் தேடி அடையுமாறு – மேன்மேலும் தேடுமாறு – தேடலுக்கு இடம் வைப்பது. அதுவே மறைமொழி. இலக்கியக் 'குறிப்பு' மொழியின் வேறுபடுத்தவே இதனை 'மறைமொழி' என்றனர்.

''வேதம் வேறு ஆகமம் வேறு. 'வேதமோடு ஆகமம்' என்ற திருமந்திரத் தொடராலும் இதை அறியலாம். திருமந்திரம் தமிழில் எழுந்த முதல் ஆகமம் – சைவ ஆகமம். வடமொழி நெறி வழிவந்த 'யோகம்' பற்றிய செய்திகள் இந்நூலில் மிகுதியாகவுள ஆயினும் அவை 'சிவயோகமாகவும்' 'யோக நெறியில் சிவனை வழபடுதல் பற்றியனவாகவும் இந்நூலுள் புதுமுறையில் கூறப்படுகின்றன. ''அழியும் உடம்பைக் கொண்டே அழியா வாழ்வு பெறலாம்''. இத்தகைய பலசெய்திகள் இப்பதிப்பாசிரியரால் ஆய்வு முன்னுரையிலும் பிற இடங்களிலும் ஆங்காங்கு சுட்டிக் காட்டப்படுகின்றன.

காலப்போக்கில் மொழிகள், பண்பாடு, நாகரிகம், சமயச் சிந்தனைகள் போல்வன ஒன்றுடன் ஒன்று கலப்பதும் தழுவிப்போவதும் எதிர்த்து எழுவதும் அவ்வாறு கலக்குமிடத்துப் பிறிதாகிப்போவதும் தன்னியல்பு கெடாமல் காத்துக்கொள்வதும் உலகில் நிகழ்வனவேயாம். அவையனைத்தும் உயிர்ப்புடன் உலவியமைக்கு இவை சான்றுகளே

யன்றிக் குறைகளாகிவிடா. தமிழ் நெறியும் வைதிகநெறியும் இணைந்து சைவநெறி உருவாகியதென்பது திருமூலர் கருத்துவழி எடுத்துக்காட்டப்படுகிறது. "இதுவரை கூறியவற்றால் வைதிகநெறியும் தமிழ்நெறியும் கலந்து உண்டாகிய திருநெறி என்ற சுத்த சைவநெறியின் முதற்பேராசிரியர் திருமூலர் என்று அறியலாம்" என இவ்வாசிரியர் கூறும் கருத்தும் சைவத்திற்குத் 'திருநெறி' என்றும் திருமூலர் பெயரிட்டிருப்பதாகக் கூறியுள்ள செய்தியும் அன்புநெறியும் அறநெறியுமே திருமூலரால் சைவநெறியாக விளக்கப்பட்டன என்ற ஆய்வுரையும் இன்ன பிறவும் கற்பவர் சிந்தனையைத் தூண்டுவனவாம்.

அரசுகளிடத்தும் கற்றவர்களிடத்தும் வடமொழி தென்னாட்டில் பெருஞ்செல்வாக்குப் பெற்றிருந்த இடைக்காலத்தே, தமிழ்நாட்டுக் கலைகளும் மெய்யியலும் பிறவும் வடமொழியில் எழுதிவைக்கப்பட்டன. தென்னாட்டில் மட்டுமே காணப்படுகிற, தென்னாட்டுச் சிற்பிகளுக்குரியதான சிற்பக்கலை வடமொழியில் எழுதிவைக்கப் பட்டிருக்கிறது. வடநாட்டில் எங்கும் காணப்படாததும், தமிழகத்திலிருந்தே தொடங்கிப் பரவி வளர்ந்ததும் இளங்கோவடிகளால் எடுத்துரைக்கப்பட்டதுமாகிய நாட்டியக் கலையின் 'சாத்திரம்' வடமொழியில் எழுதப்பட்டுள்ளது. இப் பதிப்பாசிரியர் கி.பி. மூன்றாம் நூற்றாண்டளவில் சைவத்திற்குரிய ஆகமங்கள் வடமொழியில் எழுதப்பட்டிருக்க வேண்டுமென்றும், அவை வடமொழியில் எழுதப்படினும் தமிழ்நெறியை அடிப்படையாகக் கொண்டனவே என்றும் கூறுவன மிக ஆழமான சிந்தனை வெளிப்பாடுகளாகும்.

திருமூலர் மிக அரிய மெய்ப்பொருளுண்மைகளை, மிக எளிய நடையில் கூறுகிறார்.

கண்காணி இல்லென்று கள்ளம் பலசெய்வர்
கண்காணி இல்லா இடமில்லை, காணுங்கால்
கண்காணியாகக் கலந்தெங்கும் நின்றானைக்
கண்காணி கண்டார் களவொழிந் தாரே. (2043)

இன்று பலர் செய்யும் 'திருவிளையாடல்களுக்கு' கண்காணி இல்லை என்ற மிதப்புத்தானே காரணம்? எவ்வளவு எளிமையாய், அரிய செய்தியைச் சொல்கிறார். 'துறவெல்லாம் வேண்டாம், இயல்பாய் மனமொன்றி இறைவனை வழிபட்டாற் போதும்' 'கைவிடலாவது ஒன்றில்லை, கருத்தினுள் எய்தியவனை இயல்பினான் ஏத்துமின்' என்பது திருமூலம். 'செத்த பிறகு சிவலோகம் சேரலாம்' என்றெண்ணியிருக்கும் பித்த மனிதரிடம், இன்றே – இப்போதே – இப்பிறவியிலேயே சிவகதி அடையலாம் எனக் கூறுவது திருமூலம். "சென்றே புகுங்கதி இல்லை" இங்கேயே அதை அடையலாம் என்ற புரட்சிக் கருத்துச் சித்தர் மரபுச் சிந்தனையாகும் (2080). 'பசுக்கள் பலவண்ணம் பால் ஒரு வண்ணம், பசுக்களை மேய்க்கின்ற ஆயன் ஒருவன்' (2167) என்ற திருமூலம் அழகிய உவமையால் ஆன்ம ஒருமையைச் சுட்டுகிறது. "முன்னிக்கு ஒருமகன், மூர்த்திக்கு இருவர், வன்னிக்கு மூவர், வதுவைக்கு நால்வர், கன்னிக்குப் பிள்ளைகள் ஐவர்" (2127)

என்றாற்போலப் பொருளைப் பொதிந்து வைத்துத் தேடவைப்பதாலேதான், இம் மறைமொழிகள், என்றும் நின்று பயன் தரும் நிறைமொழிகளுமாயின. இதன் பொருள் ஆகாயத்திற்கு ஒருகுணம் ஓசை, காற்றுக்கு ஓசையும் தொடுதலும், நெருப்புக்கு ஓசை, தொடுதல், ஒளி, நீருக்கு அவற்றோடு சுவை, நிலத்திற்கு மணமும் கூட்டிக்கொள்ள வேண்டும் என்பதாம்.

இந்த உடம்புக்கும் உடம்பொடு கூடிய வாழ்வுக்கும் இவ்வுலக வாழ்விலேயே சிவப்பேற்றின்பத்தைப் பெற்று, இறவாமையைப் எய்த முடியும் என்பதற்கும் திருமூலர் தரும் எழுச்சிமிக்க எண்ணங்கள் ஈடற்றவை. "உடம்போடு உயிரிடை நட்பறி யாதார், மடம்புக்க நாய் போல் மறைந்து நின்றாரே" (2122) என்று அன்னார்தம் அறியாமையைக் கடிகின்றார். பொதுவாகச் சித்தர் மரபு, இன்றைய பகுத்தறிவாளர் சிந்தனைகளையும் கடந்து நிற்பது, நடுநிலை பிறழாதது, நம் வாழ்வுக்குப் பயன்படுவது. இவை சமயவுண்மைகளை எல்லாம் அறிவியலோடும் உலகியலோடும் இணைத்துப் பேசுவதனாற் போலும், சமயச் சார்பினரும் திருமந்திரத்தை தேடிப் பரப்பவில்லை. ஏனைய சிந்தனையாளரும் இதன் அருமையை அறியவில்லை.

திருமந்திரத்திற்குக் கிடைத்த இக் 'கருத்துரைச் செம்பதிப்பு' இந்நிலைமையை மாற்றி, இந்நூற் கல்வியை வளர்க்கும், பரப்பும் என்ற நம்பிக்கையுள்ளது. யான் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில், துறைத்தலைமை ஏற்றிருந்த காலத்தில் பெரும் பேராசான் சுப. அண்ணாமலையவர்கள், தமிழியற்புலத்தில் சேர்ந்து இவ்வரிய பணியைத் தொடங்கினார்கள். இன்று அது நிறைவேறி, மூன்று பகுதிகளும் முழுவதும் வெளிவருவது கழிபேருவகை தருகின்றது. பதிப்பாசிரியர் தம் அரிய முயற்சி, இனி வருவார் பலர்க்கும் வழிகாட்டுதலாயமைந்து, என்றென்றும் நிலைபெறும் என்பதுறுதி.

ஏரகம், தமிழண்ணல்
சதாசிவநகர்,
மதுரை – 625 020.

12.4.1997.

உ

சிவமயம்

முன்னுரை

திருமந்திர மூலபாட ஆய்வுப் பதிப்பின் இம் மூன்றாம் பகுதி ஞானம் பற்றி அமைகின்றது. சிவயோகத்தின் அடிப்படை அன்பு; அவ்யோகத்தின் விளைகனி ஞானம்.

''தமிழ் மண்டலம் ஐந்தும் தாவிய ஞானம்'' என்றும் (திருமந். 1630).

''முத்தியை ஞான முழுத்தமிழோசையை'' என்றும் (திருமந். 2090) இந்த ஞானச் செல்வத்தைத் தமிழ் மக்கள் பெற்றிருந்தமையைத் திருமூலர் குறிப்பிடுகின்றார். வடநாட்டு வழிமுறையாக வந்து கலந்த அட்டாங்க யோகத்தைத் திருமூலர் சிவயோகமாக வளர்த்து, அதன் மூலம் இந்த ஞானத்தைப் பெறுதல் பற்றித் திருமந்திரத்தின் (இப்பதிப்பின்) முதலிரண்டு பகுதிகளில் கூறினார். இம்மூன்றாம் பகுதியில் ஞானத்தை விரிவாகக் கூறுகின்றார்.

ஞானத்தை முதலிரண்டு பகுதிகளில் அவர் கூறாமல் இல்லை. இம்மூன்றாம் பகுதியில் யோகம் பற்றிக் கூறாமல் இல்லை. யோகமும் ஞானமும் முறையே சாதனமும் சாத்தியமும் (பயிற்சியும் பயனும் – The Means and the End) ஆதலின், அவ்வாறு கூறினாலும், யோகம் பற்றி அங்கும், ஞானம் பற்றி இங்கும் முழுமையாக வகுத்துக் கூறுகின்றார்.

யோகம் என்பது ஒன்றியிருத்தல் (To be united with). அதனால் பெறுவது அனுபவம்; உணர்வால் பெறும் அனுபவம்[1]. இவ் அனுபவத்தைச் சிந்தித்துத் தெளியும் தெளிவு ஞானம்.

திருமூலர் தமது யோக சாதனையால் பெற்ற ஞானத்தையும், பிற சிவயோகியர் பெற்ற ஞானத்தையும், உபநிடத, ஆகம நூற் செய்திகளையும் தக்கவாறு இணைத்து, ஞானநெறியாக வகுத்துக் கூறுகிறார். அதனை ''வேதாந்த சித்தாந்த நெறி'' என்கின்றார். அவரது நூல் ஆகமம் (சதாசிவ ஆகமம்) ஆதலின், இந்த ஞானநெறி ஞானபாதமே ஆகும்[2].

1. *சிற்றின்பமும் உணர்வு அனுபவமே.*

2அ. *சிவாகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கையும் நான்கு பாதங்களாக வகுத்துக் கூறும்.*

ஆ) *திருமூலர் தனது நூல் சதாசிவாகமம் என 'வரலாறு' – இயலில் கூறியதன்றி, 'அசபை' இயலிலும் கூறுகின்றார். பா. எண். 885.*

'உணர்வு அனுபவத்தைச் சிந்தித்துத் தெளியும் தெளிவே ஞானம்' என்றோம். ஆகவே உணர்வு, அதன் படிநிலைகள் ஆகியவை இப்பகுதியில், முதலில் கூறப்படுகின்றன.

யோக சாதனையில், உணர்வு உடம்பு முழுவதும் எதிரொலிக்கின்றது. இடுப்பு (மூலாதாரம்) முதல், தலையுச்சி (சகஸ்ராரம்) வரை அனுபவத்தைப் பெறச் செய்கின்றது. தலையுச்சிக்கு மேலும், 12 அங்குல உயரம் வரை உணர்வு அனுபவம் உண்டாகும் என்பர்.

இவ்வனுபவங்களுள் சிறப்புடையது புருவ மத்தியிலும், தலையுச்சியிலும் உணரப்படும் ஒளி. இவ்வனுபவங்களைப் பெற்றுச் 'சீவன்' வளர்கின்றது என்று கூறுகின்றார் திருமூலர். உடம்பில் வாழும் உயிரே சீவன். உடலை விட்டுச் சென்றால், ஆன்மா.

சிவயோகத்தின் தனிச்சிறப்பு, உடலில் வாழும் போதே, உயிர் சிவானுபவமும், ஆனந்தமும், ஞானமும், வீடுபேறும் பெறுவது தான்.

இதனை, "நான் கண்ட வன்னியும்" என்னும் பாடலில். (எண் 731) "ஊன் கண்டு கொண்ட உணர்வும் மருந்தாக மான் கன்று நின்று வளர்கின்ற வாறே" என்று திருமூலர் கூறுகின்றார்.

'சீவன் மான் கன்று; அது மூலக்கனலையும், பிராண வாயுவையும், உணர்வையும் உணவாகக் கொண்டு வளர்கிறது' என்பது இப்பாடலின் கருத்து. மான் என்பது பிரகிருதி; பிரபஞ்சம். இதைச் சைவநெறி 'பிரகிருதி மாயை' என்று வழங்கும். இந்த மாயையிலிருந்து தோன்றியவையே உடம்பும், உலகமும். ஆகவே, சீவன் பிரகிருதியின் பிள்ளை.

இந்தப் பிள்ளை வளர்ந்து சிவத்தின் பிள்ளையாகிறது.

"ஆன்மாவே மைந்தனும் ஆயினென் என்பது
தானாம் அறையற்ற தன்மை அறிகிலர்
ஆன்மாவே மைந்தன் அரனுக்கு; அவன் இவன்;
ஆன்மாவும் இல்லை; அதற்கு ஐந்தும் இல்லையே".

என்பர் திருமூலர் (பா. எண். 2280). இதனை வள்ளலார் விரிவாகவே பாடுகின்றார்:

"பெருமாயை என்னும் ஒரு
பெண்பிள்ளை நீதான்
பெற்ற உடம்பிது சாகாச்
சுத்த உடம்பாக்கி
ஒரு ஞானத் திருவமுதுண்டு
ஓங்குகின்றேன், இனிநின்
உபகரிப்பு ஓர் அணுத்துணையும்
உளத்திடை நான் விரும்பேன்

அருளாய ஜோதி எனக்கு
உபகரிக்கின்றது நீ
அறியாயோ என்னளவில்
அமைக, அயல் அமர்க;
தெருளான உலகிடை என்
சரிதம் உணர்ந்திலையோ
சிற்சபை என் அப்பனுக்குச்
சிறந்த பிள்ளை நானே."[3]

(பெருமாயை – பிரகிருதி மாயை. தெருள் – தெளிவு)

"நான் சிவனுக்கு மைந்தன் ஆனேன்" என்று உணர்வது – சீவன் சிவமே ஆவது என்ற உணர்வு – ஒன்றிப்பையே ஆகும். "அறையற்ற தன்மையை, அறையும்" முறை அது. அதாவது 'சொல்ல இயலாத ஒன்றைச்' சொல்லும் உத்தி அது.[4]

சீவன் சாதாரண உலகியல் வாழ்க்கையில் தொடங்கிச் 'சிவம்' – ஆகும் நிலை வரை, அடையும் உணர்வுகளை மிக விரிவாக வகுத்துக் கூறுகின்றார் திருமூலர். உலகியல் உணர்வுகள் போல, அவை எல்லாம் இறையியல் உணர்வுகள் ஆகும். அவை கற்பனை அல்ல; வறட்டுத் தத்துவம் அல்ல; உடம்போடு இருந்து அனுபவிக்கும் உணர்வுகள் என்று தெளிவுறுத்துகின்றார்.

ஞானம் பற்றிய செய்திகளை மூன்று வகைப்படுத்தி, சீவன், பரம் (அருள்), சிவம் – ஆகியவை பற்றிய ஞானமாக வைத்து விளக்குகின்றார்.

சுருங்கக் கூறுமிடத்து,

சிவம் தான் பொருள்; அதன் தன்மை அருள். அருளைச் 'சத்தி'
என்பர். சத்தியாக நம்முடன் கலந்து நிற்கின்றது சிவம். நம்முடைய
மல அழுக்குகளை நீக்கி, நாமும் சிவத்துடன் கலந்து நிற்பது
சிவயோகம். அந்த யோக – அனுபவத்தில் பெறுவது சிவஞானம்.

இதன் விரிவை நூலில் காண்போம்.

படிமங்களின் ஆட்சி:

நூலின் இறுதியில், 'சூனிய சம்பாஷணை' என்னும் இயலில், திருமூலர் படிமங்களைக் (symbols) கொண்டு யோக, ஞானச் செய்திகளை உணர்த்துகின்றார்.

3. *திருவருட்பா, 6 ஆம் திருமுறை; தத்துவ வெற்றி, 14*

4. *திருமூலர் நூலின் செய்தி இதுவே. இதன் காரணமாகவே, "மான்கன்று நின்று வளர்கின்ற" காட்சி, இப்பதிப்பின் மேற்படமாக அமைக்கப்பட்டது.*

இவ்வியல் முழுதும், 96 பாடல்களில் இப்படிம ஆட்சி மிகச் சிறப்பாக உள்ளது. இப் படிமங்களால் உணர்த்தப்படும் சரியான பொருளைக் காண, இப்பதிப்பில் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. முன்னே போந்த இயல்களில் கூறப்பட்ட செய்திகளையே, இங்குப் படிமங்கள் கொண்டு கூறுகின்றார். அவற்றுக்கு முரணாகாத வகையில் பொருள் கூறப்பட்டுள்ளது.

கடவுளை வாழ்த்தி ஒர் இயல் அமைத்து, நூலைத் தொடங்கிய ஆசிரியர், கடவுளைப் போற்றித் துதிப்பதற்குத் 'தோத்திரம்' என்னும் இயல் அமைத்து, நூலை நிறைவு செய்கின்றார்.[5]

பதிப்பைப் பற்றிய குறிப்புகள்:

"தமிழ் மூவாயிரம்" என்ற பெயராலும், "மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்" என்ற பிற்சான்றோர் வாக்காலும் திருமந்திரம் 3000 பாடல் கொண்டது என்பது தெளிவு. ஆனால், பதிப்புகளில் மூவாயிரத்தின் மேற்படப் பற்பல எண்ணிக்கையில் பாடல்கள் உள்ளன. மாவை. வே. விசுவநாதப்பிள்ளை பதிப்பில் (1912) 3047 பாடல்கள் உள்ளன. தருமபுரப் பதிப்பு இரண்டு முறை வந்த பாடல்களை விலக்கி, 3000 பாடல்களைக் கொண்டுள்ளது.

மூலபாட ஆய்வுப் பதிப்பாக வெளிவரும் இப்பொழுதைய பதிப்பில் 49 பாடல்களை, இரண்டு முறை வந்தனவாக விலக்கி, 2998 பாடல்கள் காட்டி, அவற்றுள்ளும் 440 பாடல்கள் (முதற் பகுதி – 152; இரண்டாம் பகுதி – 191; மூன்றாம் பகுதி 97) இடைச்செருகலாகலாம் என இனங்காட்டித் திருமூலர் வாக்காக மொத்தம் 2558 பாடல்களே கொள்ளப்பட்டன.

இடைச் செருகல்கட்கு மாறாகத் திருமூலர் வாக்கே கிடைக்க, இறையருள் முன்னிற்க.

சுப. அண்ணாமலை
பதிப்பாசிரியர்

5. சுவடிகளுள் பெரும்பாலானவற்றில் "தோத்திரம்" இயலே இறுதியாக உள்ளது. பதிப்புகளில் "சர்வ வியாபி" என்னும் இயல் இறுதியாக உள்ளது. தருமை யாதீனப் பதிப்பில் "சர்வ வியாபகம்" என இவ்வியலின் பெயர் உள்ளது.

இயல் நிரல்

பொருள் மாலை

127. முப்பரம்

உடம்பின் உள்ளேயும் வெளியேயும்
பரம்பொருள் அனுபவம் 2418 - 2423.
மற்றொரு நோக்கு 2424.

128. பரவிலக்கணம்

பர – ஆன்மா: விளக்கம். 2425,
பரசிவ நிலை 2426 - 2431,
பராசத்தியின் நிலை 2432 - 2438.

129. முத்துரியம்

நிராதார யோகத்தில் உணர்வு நிலைகள் 2439 - 2445.

130. மும்முத்தி

முத்தி வகை : விளக்கம் 2446 - 2449.

131. முச்சொரூபம்

சீவன் சீவ, பர, சிவ ஒளியாதல் 2450 - 2456.

132. முக்கரணம்

சிதாகாய அனுபவம் 2457 - 2459

133. முச்சூனிய தொந்தத்தசி

சீவன், பரம், சிவம் – இவை உருவாய்த்
தோன்றிப் பின்பு தத்தம் சொரூபம் ஆதல் 2460 - 2465.

134. முப்பாழ்

முப்பாழ்: விளக்கம் 2467 - 2472.

135. காரிய, காரண உபாதி

உபாதி நீங்கினால் உயிர் 'சிவம்' ஆகும். 2473 - 2476.

136. உபசாந்தம்

அருளைப் பெறுதல் 2477 - 2479,
உயிர் 'வியாபகம்' பெறுதல் 2480 - 2481.

137. புறங்கூறாமை

ஆன்மா சிவம் அன்று; அடக்கம் வேண்டும் 2483 - 2486,
சிவனது உறவு 2487 - 2489,
அருட்பேறு 2490 - 2494,
சிவசித்தர் 2495 - 2497.

138. அஷ்டதள முக்குண அவத்தை

சகஸ்ரார அனுபவம் 2498 - 2507.

150. குருமட தரிசனம்

ஞானாசிரியனின் (சிவகுருவின்) இடத்தைக் 'கண்டுகொள்ளல்' (அகவெளி அனுபவம்) 2613 - 2619.

151. ஞானகுரு தரிசனம்

சிவகுருவைக் 'கண்டு கொள்ளல்' (அகவெளி அனுபவம்), 2620 - 2626,
பிராசாத யோகத்தின் துணை 2627,
அருள் வாழ்வு 2628 - 2637.

152. பிரணவ சமாதி

சமாதியில் 'எல்லாம் சிவமே' என்ற உணர்வு பெறுதல் 2638 - 2641,
ஒளிநெறி 2642 - 2643.

153. ஒளி

உடல், உயிரின் அகத்திலும் புறத்திலும் ஒளி 2644 - 2660.

154. தூல பஞ்சாக்கரம்

பிரணவமும் திருவைந்தெழுத்தும் 2661 - 2662,
திருவைந்தெழுத்தின் பெருமை 2663 - 2669.

155. சூக்கும பஞ்சாக்கரம்

வீடுபேறு தரும் மந்திரம் 2670 - 2674.

156. அதி சூக்கும பஞ்சாக்கரம்

வினை தீர்க்கும் மந்திரம் 2675 - 2677.

157. காரண பஞ்சாக்கரம்

சிவகதி தரும் மந்திரம் 2678 - 2680.

158. மகா காரண பஞ்சாக்கரம்

பிறவி நீக்கும் மந்திரம் 2681 - 2683.

159. திருக்கூத்து

அருள் விளையாட்டு 2684 - 2685.

(i) சிவானந்தக் கூத்து

ஐந்தொழிற் கூத்து 2686 - 2693.

(ii) சுந்தரக் கூத்து

பரவெளிக் கூத்து 2694 - 2700

112. ஐந்து இந்திரியம் அடக்கற்கு அருமை

கண்கெட்ட பிறகா சூரிய வணக்கம்?

1999. ஆக மதத்தன அஞ்சு களிறு உள,
ஆக மதத் தறியோடு அணைகின்றில;
பாகனும் எய்த்து, அவைதாமும் இளைத்தபின்
யோகு திருத்துதல் ஒன்று அறியோமே.

ஆக மதத்தன [1]வஞ்சு களிறுள
ஆக மதத்தறி யோடணை கின்றில
பாகனு மெய்த்தவை [2]தாமு மிளைத்தபின்
[3]யோகு [4]திருத்துத லொன்றறி யோமே. (1)

வேறு பாடம்: 1. வைந்து (ஓ) IV. 2. தானு (சுவ) 3. யோக (ஈ) I யோகி (இ) I. 4. திருந்துத (விசு) (தி)

கருத்து: மதங்கொண்டனவாக ஐந்து யானைகள் உள்ளன. மதம் பிடித்தால் கட்டுத்தறியில் நில்லா. பாகனும் களைத்துப்போக, அவையும் மெலிந்து போனபின்பு, யோகம் செய்தலைச் சிறிதும் அறியோம்.

இது ஏகதேச உருவகம். யானை - ஐம்பொறிகள். தறி - அறிவு. பாகன் - ஆன்மா. "ஒன்றும்" என்பதில் உம்மை தொக்கது; சிறிதும். ஐம்பொறிகளின் வலிமை குறைந்த பிறகு யோகம் செய்ய வியலாது.

சண்டிக்குதிரை

2000. கருத்தின் நன்னூல் கற்றுக் கால்கொத்திப் பாகன்
திருத்தலும் பாய்மாத் திகைத்தன்றிப் பாயா,
எருத்துஉற ஏறி இருத்தலும் ஆங்கே
வருத்தலும் அம்மா வழி நடவாதே.

கருத்தினன் னூல்கற்றுக் கால்கொத்திப் பாகன்
திருத்தலும் பாய்மாத் [1]திகைத்தன்றிப் பாயா
[2]வெருத்துற வேறி [3]யிருத்தலு மாங்கே
[4]வருத்தலு மம்மா வழிநட வாதே. (2)

வேறு பாடம்: 1. திகைப்பன்றிப் (அ) I. 2. தெருத்துற (த) 3. யிருக்கிலு (சங்) 4. வருத்திலு (ஒ ஒ) I.

கருத்து: குதிரைப் பாகன் கருத்தோடு குதிரையேற்றம் பற்றிய நூல்களைக் கற்றுக் குதிரைகளுக்குக் கால்களை அரண்செய்து, சேணம், முகமறைப்பு ஆகிய அணிகளைப் பூட்டியவுடன் அவை சிறிது நேரம் திகைத்து நிற்கும். அவன் பிடரியில் ஏறினாலும், சாட்டையால் அடித்தாலும் ஓடமாட்டா.

இஃது ஒட்டணி. இதனால் உணர்த்தும் பொருள் வருமாறு:-

ஒருவன், தத்துவ நூல்களைக் கற்று, பிராணாயாமம் செய்து, தாரணை செய்தாலும், மனம் தியானத்தில் ஒன்றி நில்லாது. பொறிபுலன் வழியே செல்லும். விரதம் முதலியவற்றால் உடம்பை வருத்தினாலும் பொறிகள் நெறிப்படமாட்டா.

'பொறிகளின்மீது ஆட்சி தா' என இறைவனை வேண்டுவது ஒன்றே வழி எனப் பெறவைத்தார். பாய்மா என்ற பெயரும், கால்கொத்தி என்ற குறிப்பும், குதிரையைக் குறிக்கும்.

மூலைக்கொன்று பறந்தால்?

2001. புலம் ஐந்து, புள்ஐந்து, புள் சென்று மேயும்
நிலம் ஐந்து, நீர் ஐந்து, நீர்மையும் ஐந்து,
குலம் ஒன்று, கோல்கொண்டு மேய்ப்பான் ஒருவன்
உலமந்து போம் வழி ஒன்பது தானே.

[1]புலமைந்து புள்ளைந்து [2]புட்சென்று மேயு
நிலமைந்து நீரைந்து நீர்மையு மைந்து
குலமொன்று கோல்கொண்டு மேய்ப்பா னொருவ
[3]னுலமந்து போம்வழி யொன்பது தானே. (3)

வேறு பாடம்: 1. புலனைந்து (அ இ) I. 2. யுட் சென்று (சங்) 3. னுலவந்து (ஆ) I; உலம் வந்து (சங்).

கருத்து: பறவைகள் ஐந்து. அவை வாழும் பகுதிகள் ஐந்து. அப்பறவைகள் சென்று இரை உண்ணும் இடங்கள் ஐந்து. உண்பனவற்றின் இயல்பு ஐந்து. பண்புகள் ஐந்து. ஆனால் அப்பறவைகளின் குலம் ஒன்றே. அவற்றை மேய்ப்பவனும் ஒருவனே. ஆயினும், அவை அலைந்து திரியும் வழிகள் ஒன்பது.

இஃது ஒட்டணி. இதனால் பெற வைத்த பொருள்: புலம் - ஐம்பொறிகள். புள் - புலன். நிலம் - பொருள். நீர் - பொருளின் இன்பம் அல்லது துன்பம். நீர்மை - நல்ல பண்பா, தீய பண்பா என்பது. குலம் -

உடம்பு. மேய்ப்பான் - ஆன்மா. வழி ஒன்பது - உடம்பில் உள்ள ஒன்பது துவாரம் (கண், காது, மூக்கு, வாய், நீர்வழி, மலவழி)

சிங்கத்தின் பல்லை யார் உடைப்பது?

2002. அஞ்சு உள சிங்கம், அடவியில் வாழ்வன,
அஞ்சும் போய் மேய்ந்து, தம் அஞ்சு அகமே புகும்,
அஞ்சின் உகிரும் எயிறும் அறுத்திட்டால்
எஞ்சாது இறைவனை எய்தலும் ஆமே.

[1]அஞ்சுள சிங்க மடவியில் வாழ்வன
வஞ்சும்போய் மேய்ந்துத மஞ்சக மேபுகு
மஞ்சி னுகிரு மெயிறு மறுத்திட்டா
லெஞ்சா திறைவனை யெய்தலு மாமே[2]. (4)

வேறு பாடம்: 1. ஐந்துள (அ இ ஈ ஒ ஓ) II. 2. மாகுமே (அ) II.

கருத்து : காட்டில் ஐந்து சிங்கங்கள் வாழ்கின்றன. அவை வெளியே சென்று இரையுண்டு தம் இருப்பிடங்களுக்குள் புகும். அவை ஐந்திற்கும் நகங்களையும் பற்களையும் நீக்கிவிட்டால், இறைவனைத் தடையின்றி அடையலாம்.

இஃது ஏகதேச உருவகவணி. காடு - உடல். சிங்கம் ஐந்து - புலன்கள் ஐந்து. அகம் - ஐம் பொறிகள்.

வரிகட்டி மாளுமா?

2003. ஐவர் அமைச்சருள் தொண்ணூற்றறுவர்கள்,
ஐவரும் ஐந்து இடம்ஆளக் கருதுவர்,
ஐவரும் ஐந்து சினத்தோடே நின்றிடில்
ஐவர்க்கு இறை இறுத்து ஆற்றகிலேனே.

ஐவ [1]ரமைச்சருட் டொண்ணூற் றறுவர்க
[2]ளைவரு [3]மைந்திட மாளக் கருதுவ
ரைவரு மைந்து [4]சினத்தோடே நின்றிடி
லைவர்க் கிறையிறுத் [5]தாற்றகி லேனே[6]. (5)

வேறு பாடம்: 1. ரரசரமைச்சருட் (ஆ இ) II. 2. ரைவரமர்ந்திட (இ) II. 3. மைந்தரு வாளக் (விசு); மைந்தரு (தி) (வ) 4. இனத்தோடே (ஓ) I. 5. தாற்றுகி (ஆ இ ஈ) I. 6. லோமே (விசு) (தி) (வ).

கருத்து: நாட்டின் அமைச்சர் ஐவர். அவரது அலுவலர் தொண்ணூற்றறுவர். ஐவர்களும் ஐந்து பகுதிகளை ஆள எண்ணுகின்றனர். ஐந்து சூழல்களில் இந்த ஐவரும் சினந்து எழுந்தால், அவர்களுக்கு என்னால் கப்பம் கட்ட இயலாது.

இஃது ஒட்டணி. இதனால் புலப்படும் பொருள் : அமைச்சர் ஐவர் - ஐம்புலன்கள். தொண்ணூற்று அறுவர் - தத்துவ தாத்துவிகங்கள். ஐந்து இடம் - ஐம்பொறிகள். சினம் - மிகுந்த அவா; வெறி. இறை - புலன் விஷயங்களை அனுபவிக்கும் வலிமை; உடம்பின் வலிமை. இங்கு இவ் வலிமை இன்மையை எண்ணி வருந்துவது ஆன்மா.

ஓட்டவும் தெரியவில்லை;
இறங்கவும் வழி இல்லை

2004. சொல்லகில்லேன் சுடர்ச் சோதியை நாடொறும்
செல்லகில்லேன் திருமங்கையும் அங்கு உள
வெல்லகில்லேன் புலன் ஐந்துடன், தன்னையும்
கொல்ல நின்று, ஓடும் குதிரை ஒத்தேனே.

[1]சொல்லகில் லேன்சுடர்ச் சோதியை நாடொறுஞ்
[2]செல்லகில் லேன்றிரு மங்கையு மங்குள
வெல்லகில் லேன்புல னைந்துடன் றன்னையுங்
கொல்லநின் றோடுங் குதிரையொத் தேனே. (6)

வேறு பாடம்: 1. சொல்லுகிலேன் (ஆ இ) III. 2. சொல்லகில் (அ ஈ ஒ ஓ) I.

கருத்து: சுடர் வீசித் திகழும் சிவபெருமானை நாளும் போற்று வேனல்லேன். அவனிடம் நீங்காது உறையும் தாயாகிய அருட்சத்தி யின் கருணையுள்ளத்திலும் நான் இடம் பெற்றிலேன். (இவ்வருள் - துணை பெறாமையால்) ஐம்புலன்களையும் அவற்றின் வயப்படும் என் ஆணவ முனைப்பையும் வெல்ல இயலாதவன் ஆனேன். அந்த முனைப்பு என்னைக் கொல்ல உள்ள குதிரை. அஃது என்னை ஏற்றிக்கொண்டு (படு குழிக்கு) ஓடுகிறதே! (என்ன செய்வேன்?)

கொண்டு கூட்டு : 2 ஆம் அடி: அங்குள திருமங்கையும் செல்லகில்லேன் எனக் கூட்டுக.

வெளியார் ஆதிக்கம்

**2005. எண்-இலி இல்லி உடைத்து அவ் இருட்டறை
எண்-இலி இல்லியோடு ஏகின் பிழைதரும்
எண்-இலி இல்லியோடு ஏகாமைக் காக்குமேல்
எண்-இலி இல்லது ஓர் இன்பமது ஆமே.**

எண்ணிலி யில்லி [1]யுடைத்தவ் விருட்டறை
யெண்ணிலி யில்லியோ டேகிற் பிழைதரு
மெண்ணிலி யில்லியோ டேகாமைக் காக்குமே
[2]லெண்ணிலி [3]யில்லதோ ரின்பம தாமே. (7)

வேறு பாடம்: 1. யுடைக்க (அ) I; யடைத்தங் (ஆ) I; படைத்த (இ) IV; யுடைத்த (ஈ) I. 2. யெண்ணிலி (சுவ) விசு - பதிப்பில் உள்ள பாடம் மேற்கொள்ளப் பெற்றது. 3. இல்லையோ டின்பம (அ) I; யிலாததோ (இ) I; யில்லத்தோ (த)

கருத்து: மானிடவுடல் எண்ணற்ற துளைகளை உடைய ஓர் இருட்டறை. அவ்வுடம்பில் உள்ள புலன்களின் வசமாகிவிட்டால், ஓட்டைகளின் வழியே உள்ளே நுழையும் புற 'விடயங்கட்கு' இடங்கொடுத்தால், குற்றம் இழைப்போம். அங்ஙனம் வசப்படாமல் நம்மை நாமே காத்துக்கொண்டால், இறைவனது இல்லத்தில் உள்ள இன்பத்தை அனுபவிக்கலாம்.

இல்லி - ஓட்டை. எண்ணிலி (4 ஆம் அடி) அளவுக்கு உட்படாதவன், இறைவன். இல் - இடம்; இல்லது - உடம்பில் உள்ளது. நம் உடம்பில் அந்த இடம் சகஸ்ராரம்.

யோகத்தின் ஆற்றல்

**2006. விதியின் பெருவலி வேலைசூழ் வையந்
துதியின் பெருவலி தொல்வா னுலக
மதியின் பெருவலி மானிடர் வாழ்க்கை
[1]நிதியின் பெருவலி நீர்வலி தானே. (8)**

வேறு பாடம்: 1. நெதியின் (அ ஆ ஈ ஒ ஓ) I.

கருத்து: மக்கள் வாழ்க்கையின் போக்கு அவரவர் வினைப்பயனின் வலிமையால் அமையும். மக்கட்கு அவரவரின் வழிபடு தெய்வத்தைப் போற்றிய வழிபாட்டின் வலிமை, அவர்கட்கு

வானுலக வாழ்வைப் பெற்றுத் தரும். சிறப்புற்ற மாந்தராகிய யோகியரின் வாழ்க்கையின் சிறப்பு, அவர் தமது உடம்பில் சந்திர மண்டலத்தின் வலிமையைப் பெருக்கிக் கொள்வதற்கு ஏற்ப அமையும். அவர்கள் எய்தும் அட்டமா சித்தி என்னும் பேறு, அவர்கள் தமது சுவாதிட்டானச் சக்கரத்தின் வலிமையைப் பயன் படுத்துவதால் அமையும்.

நிதி - செல்வம்; ஈண்டு அட்டமா சித்தி. நீர் - நீர்மயமாக உள்ள மணி பூரகச் சக்கரத்திற்குக் கீழே உள்ள சுவாதிட்டானம். இவ்வாறு அன்றி, விந்து என்றும் பொருள் கொள்ளலாம். இதன் விரிவை 'விந்து செயம்' என்னும் இயலில் காண்க.

113. ஐந்து இந்திரியம் அடக்கு முறைமை

அருள் வலை

2007. குட்டம் ஒரு முழம் உள்ளது, அரை முழம்
வட்டம் அமைந்தது ஓர் வாவியுள் வாழ்வன
பட்டன மீன்பல, பாவின் வலைகொணர்ந்து
இட்டனம் யாம் இனி எய்துகிலோமே.

குட்ட மொருமுழ முள்ள தரைமுழம்
வட்ட மமைந்ததோர் வாவியுள் வாழ்வன
பட்டன [1]மீன்பல [2]பாவின் வலைகொணர்ந்[3]
திட்டன [4]மியாமினி [5]யெய்துகி லோமே. (1)

வேறு பாடம்: 1. மீன்கள் (த) 2. வாவின் (ஆ இ) I; வாயின் (ஈ) I; பரவன் (விசு) (தி) (வ); பரவின் (சங்) பரதன் (த) 3. விலைகொணர்ந் (அ) I. 4. னியாமினி (விசு) (தி) (வ) (த) 5. யேதமிலோமே (ஓ) IV.

கருத்து: ஒரு முழ ஆழமும் அரை முழ விட்டமும் உடைய வட்ட வடிவான ஒரு குளம் உள்ளது. அதில் ஐந்து மீன்கள் உள்ளன. அவற்றைப் பிடிப்பதற்குப் பல பாக்களை உடைய வலையைக் கொண்டுவந்து வீசியுள்ளோம். அவை அந்த வலையுள் அகப்படுவது உறுதி. இனி, யாம் அவற்றால் வரும் மயக்கத்தை அடையோம்.

இஃது ஒட்டணி அமைந்த பாடல். அதனால் போந்த பொருள்:- ஒரு முழ ஆழமும் அரை முழ விட்டமும் உடையது நமது தலையில்

முன்பகுதியில் உள்ள சந்திர மண்டலம். அதில் நினைவு என்ற நிலையில் புலன் வாசனைகள் உள்ளன. அருளால் அவற்றை அடக்கியாண்டால், அவற்றால் மயக்கம் நேராது.

பா - வலையில் உள்ள குறுக்குக் கயிறுகள். பா, பரத்தல் எனக் கொண்டு பரவலான எனவும் கொள்ளலாம். அருள் பெற்றால் அன்றிப் புலன்களை அடக்குவது அரிது என்றார்.

“ஒரு முழம் உள்ள குட்டம், ஒன்பது துறை உடைத்தாய், அரைமுழம் அதன் அகலம் அதனில் வாழ் முதலை ஐந்து” என்றார் அப்பரடிகளும் (திருநா. தே., 4 ஆம் திருமுறை, திருக்கச்சி ஏகம்பம், 2).

மூச்சு வீணானால்?

2008. **கிடக்கும் உடலில் கிளர் இந்திரியம்**
அடக்கல் உறும்-அவன் தானே அமரன்;
விடக்கு இரண்டு, இன்புற மே உறு சிந்தை
நடக்கின் நடக்கும், நடக்கும் அளவே.

கிடக்கு முடலிற் கிளரிந் திரிய[1]
[2]மடக்க [3]லுறுமவன் றானே யமரன்
விடக்கிரண் டின்புற [4]மேயுறு சிந்தை
நடக்கி னடக்கு நடக்கு மளவே. (2)

வேறு பாடம்: 1. திரியத்தை (அ ஆ ஈ ஓ) II. 2. யடக்க (அ ஆ) I. 3. லுறுமிவன் (ஆ இ) I. 4. மெய்யுறு (அ) I; மேவுறு (சங்).

கருத்து: சடமாகக் கிடக்கும் உடம்பில், அறிவு வரும் வாயில்கள் ஆகிய புலன்களை அடக்குபவனே மரணமில்லாமையை எய்துவான். (பிறர் மரணமடைவர். எப்படி?) புலன்களால் தூண்டப் பட்டு உடலின்பம் பெறுதற்கு மனம் விரும்பினால், அவ்விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் மூச்சு ஒழுங்கின்றி நடந்து வீணாகும். மூச்சின் எண்ணிக்கை அளவுக்கு உட்பட்டது ஆதலின் அந்த அளவு வரை நடக்கும். அது தீர்ந்தவுடன் மரணம் நேரும்.

புலனின் தூண்டல் இல்லாதவனுக்கு விருப்பங்களும் தோன்றா. மூச்சும் வீணாகாது. மெல்லென நடந்து ஆயுளை நீட்டிப்பிக்கும்.

மடக்குவதா அடக்குவதா?

2009. "அஞ்சும் அடக்கு, அடக்கு" என்பர் அறிவிலார்
அஞ்சும் அடக்கில் அமரரும் அங்கு இல்லை,
அஞ்சும் அடக்கில் அசேதனமாம் என்றிட்டு
அஞ்சும் அடக்கா அறிவு அறிந்தேனே.

அஞ்சு மடக்கடக் [1]கென்ப ரறிவிலா[2]
ரஞ்சு [3]மடக்கி லமரரு மங்கில்லை
யஞ்சு மடக்கி லசேதன மாமென்றிட்
டஞ்சு [4]மடக்கா வறிவறிந் தேனே. (3)

வேறு பாடம்: 1. கென்பா (ஆ ஒ) III. 2. ரறிவல்லார் (ஆ) I ரறிவிலர் (ஈ) III. 3. மடக்கு மமரரு (விசு) (தி) 4. மடங்கா (ஒ) I.

கருத்து: அறிவில்லாதோர், "ஐந்து புலன்களையும் அடக்கு" என மீண்டும் மீண்டும் கூறுவர். அவற்றை அடக்கினால், நுண்ணுடம்பினரான தேவர்களும் வாழ வியலாது. அவற்றை அடக்கினால் அறிவு பெற வழியில்லை என்று அறிந்து, அவற்றை அடக்க வேண்டாத அருளறிவைப் பெற்றேன்.

அருள் பெற்றால், புலன் அறிவும் அருளறிவின் வழிநின்று, ஞான வின்பம் தரும் என்றார்.

உள்ளதும் போயிற்று

2010. முழக்கி எழுவன மும்மத வேழம்,
அடக்க அறிவு என்னும் கோட்டையை வைத்தேன்,
பிழைத்தன ஓடிப் பெருங்கேடு மண்டிக்
கொழுத்தன வேழம் குலைக்கின்ற வாறே.

[1]முழக்கி யெழுவன மும்மத வேழ
[2]மடக்க வறிவென்னுங் [3]கோட்டையை வைத்தேன்
பிழைத்தன வோடிப் [4]பெருங்கேடு மண்டிக்[5]
கொழுத்தன வேழங் [6]குலைக்கின்ற வாறே. (4)

வேறு பாடம்: 1. முழங்கி (அ இ) III. 2. மடங்கி (ஒ) I மடங்க (ஈ ஓ) III. 3. தோட்டியை (தி) 4. பெருங்கோடு (இ) I. 5. மண்டக் (ஈ) III. 6. குலைகின்ற (ஓ) III.

கருத்து: மூன்று மதமும் சொரிகின்ற யானை ஐந்தும் பிளிறிக் கொண்டு புறப்பட்டன. அவற்றை அடக்கி நிறுத்த, அறிவு என்ற கோட்டையைக் கட்டினேன். அவை அதிலிருந்தும் தப்பி ஓடி, பெருங்கேடு விளைத்து, நன்றாக விளைந்து இருந்த கரும்பு களையும் சிதைத்து விட்டன.

இப்பாடல் ஒட்டணி அமைந்தது. இதனால் விளங்கும் பொருள் வருமாறு:-

ஐந்து புலன்களும் ஆரவாரம் செய்து விஷயங்களை அனுபவிக்கத் துடித்தன. அவற்றை அடக்க அறிவைப் பயன்படுத்தினேன். ஆயினும், அவை அடங்காமல் பெருங்கேடு உண்டாக்கி, என்னிடம் ஏற்கனவே சேர்ந்து இருந்த அறிவையும் கெடுத்துவிட்டன.

பிழைத்தன - முற்றெச்சம். கொழுத்தன - வினையாலணையும் பெயர்.

புலன் அடக்கம்

2011. ஐந்தில் ஒடுங்கில் அகல் இடம் ஆவது
ஐந்தில் ஒடுங்கில் அருந்தவம் ஆவது
ஐந்தில் ஒடுங்கில் அவன்பதம் ஆவது
ஐந்தில் ஒடுங்கில் அருள் உடையாரே.

ஐந்தி லொடுங்கி லகலிட மாவது
வைந்தி லொடுங்கி லருந்தவ மாவது
வைந்தி லொடுங்கி 'லவன்பத மாவது
வைந்தி லொடுங்கி லருளுடை யாரே. (5)

வேறு பாடம்: 1. லரன்பத (விசு) (தி) (வ).

கருத்து: ஐந்து புலன்களும் ஒடுங்குவது உலகத்தையே வெல்வதாகும். அஃது அரிய தவமும் ஆகும். அதன்பயனாக, இறைவன் திருவடியை அடையலாம். அவனது அருளுக்கு உரியவர் ஆகலாம்.

மனம் அடங்கினால் ...?

2012. பெருக்கப் பிதற்றின் என்? பேய்த்தேர் நினைந்து என்?
விரித்த பொருட்கெல்லாம் வித்து ஆவது உள்ளம்,
பெருக்கின் பெருக்கும்; சுருக்கின் சுருக்கும்;
அருத்தமும் அத்தனை; ஆய்ந்து கொள்வார்க்கே.

பெருக்கப் [1]பிதற்றினென் பேய்த்தேர் நினைந்தென்
விரித்த பொருட்கெல்லாம் வித்தாவ துள்ளம்
பெருக்கிற் பெருக்குஞ் சுருக்கிற் சுருக்கு
மருத்தமு மத்தனை யாய்ந்துகொள் வார்க்கே[2]. (6)

வேறு பாடம்: 1. பிதற்றிலென் (ஆ, இ, ஈ, ஒ) III. 2. வார்கட்கே (அ) II.

கருத்து: அதிகமாகப் பிதற்றி என்ன பயன்? கானல் நீர்போன்ற உலகத்தை எண்ணி மயங்குவதால் என்ன பயன்? எங்கும் உள்ள பொருள்களை உணர்வது நமது உள்ளம். அந்த உள்ளத்தைப் பெருக்கினால் உலகமும் பெருகும். சுருக்கினால் உலகமும் சுருங்கும்.

பொருளால் விளையும் உணர்வும் அப்படியே. மனத்தை அடக்கினால் நற்பயன் உண்டு என்பது கருத்து.

புலனடக்குக; சிவானந்தம் பெறுக

2013. இளைக்கின்றவாறு அறி இன்னுயிர் வைத்த
கிளைக்கு ஒன்றும் ஈசனைக் கேடு இல் புகழோன்
தளைக் கொண்ட நாகம் அஞ்சு ஆடல் ஒடுக்க,
துளைக்கொண்டது அவ்வழி தூங்கும் பெடைத்தே.

இளைக்கின்ற [1]வாறறி [2]யின்னுயிர் வைத்த[3]
[4]கிளைக்கொன்று மீசனைக் கேடில் புகழோன்
[5]றளைக்கொண்ட நாகமஞ் சாட லொடுக்கத்[6]
துளைக்கொண்ட [7]தவ்வழி தூங்கும் பெடைத்தே[8]. (7)

வேறு பாடம்: 1. வாற்றி (ஒ) I; வாறறிந் (ஒ) III. 2. யினின்னுயிர் (ஒ) I; தின்னுயிர் (விசு); தெண்ணுயிர் (ஓ) I. 3. வையக் (இ) IV; வையத் (ஆ) IV. 4. கிளைத்தொன்று (ஒ) I; திளைக்கொன்று (ஆ) I. 5. றளைக்கொன்ற (ஈ) IV. 6. லொடுக்கித் (ஒ) IV; லொடுக்கின் (த) 7. லவ்வழி (அ) I. 8. படைத்தே (விசு) (தி) (வ) (த).

கருத்து: தான் பிறந்து பிறந்து எய்க்கின்றமையை உணர்பவனும், புகழுடையவனும் ஆகிய யோகி, தன்னை அடியார் கூட்டத்தில் இணைத்துக் கொண்டு, அவ்வடியார்களுடன் ஒன்றி நிற்கும் இறைவனைச் சேர்ந்திடக் கருதி, ஐம்புலன்களின் ஆட்டத்தை ஒடுக்க, அவனது உயிராற்றல், (யோக சாதனையில்) சுழுமுனை நாடியில் மேலே ஏறி, அனுபவத் தானங்களில் சிவானந்தம் பெற்று நிற்க, சிவனது நாயகியாகத் தன்னை உணர்வான்.

"இன்னுயிர் தூங்கும் பெடைத்து" என வினை முடிவு செய்க. இன்னுயிர் என்றதும், புகழோன் என்றதும் யோகியையே. கிளைக்கு ஒன்றுதல், அடியார்க்கு இசைதல். இறைவன் தொண்டர்க்குத் தொண்டன். வைத்த - ஆன்மாவின் பக்குவம் நோக்கி, அதற்கு அடியார் உறவை இறைவன் அருள்வான் என்க. யோகியைக் கேடு இல் புகழோன் என்றது, அவன் புலனடக்கும் அருமை நோக்கி. புலன்களை நாகம் என உருவகித்தார். துளை - சுழுமுனை. துளைக் கொண்டது - உயிராற்றல்; வினையாலணையும் பெயர். அவ்வழி - நெஞ்சறி சுட்டு. பெடைத்து பெண் (நாயகி) தன்மையை உடையது.

அருள் வாழ்க்கை

2014. பாய்ந்தன பூதங்கள் ஐந்தும் படர் ஒளி
சாய்ந்த அடிஞானத் தறியினில் பூட்டிடும்
ஆய்ந்து கொள், ஆனந்தம் என்னும் அருள் செய்யில்
வேய்ந்து கொள் மேலை விதி அது தானே.

பாய்ந்தன பூதங்க ளைந்தும் படரொளி
[1]சாய்ந்தடி ஞானத் தறியினிற் பூட்டிடு[2]
[3]மாய்ந்துகொ ளானந்த மென்னு மருள்செய்யில்
வேய்ந்துகொண் [4]மேலை விதியது தானே. (8)

வேறு பாடம்: 1. சாய்ந்தவடிஞானத் (அ) I; சார்ந்திடு (விசு) (தி) (வ); சாய்ந்திடு (த) 2. பூட்டிட்டு (ஓ) I; 3. வாய்ந்துகொ (விசு) (த) 4. வேலை (அ) I மூலை (ஓ) II.

கருத்து: ஐந்து பூதங்களிலும் பரவி இருப்பவனாகிய ஒளிமயமான இறைவன் ஆன்மாவினிடம் மெல்லிதான திருவடிஞானத்தை உண்டாக்கி, அந்தத் தறியில் ஐந்து புலன்களையும் பூட்டிவிடுகின்ற அருளைத் தருவானாகில், அது ஆனந்தமாகும். யோகி தலைமேல் கொள்ள வேண்டியது, அந்த அருள் வாழ்க்கையே. நீ அதை ஆராய்ந்து தெரிந்துகொள்.

சாய்ந்த அடி ஞானம் - மெல்லிதான மெய்யுணர்வு.

எங்கும் கோயில்

2015. நடக்கின்ற நந்தியை நாடோறு முன்னிப்[1]
படர்க்கின்ற சிந்தையைப் பைய வொடுக்கிக்
குறிக்கொண்ட [2]சிந்தை குறிவழி நோக்கில்
வடக்கொடு தெற்கு மனக்கோயி லாமே. (9)

வேறு பாடம்: 1. முன்னில் (சங்) (விசு) 2. சிந்தைக் (அ இ ஒ) I.

கருத்து: எல்லா உயிர்களிடத்திலும் இயங்கும் சக்தியாக உள்ள இறைவனை நாள்தோறும் எண்ணி, பல இடத்திலும் அலைகின்ற மனத்தைப் படிப்படியாக ஒடுக்கி, ஏதாவது ஓர் இலக்கை மனத்தால் இடைவிடாது நினைத்தால், உலகு எங்கும் இறைவன் கோயிலாக விளங்கும்.

படர்கின்ற என்பது எதுகை நோக்கித் திரிந்தது.

மலை விழுந்தால்?

2016. சென்றன நாம மிகை நாள் சில பல;
நின்றது நீள் பொருள் நீர்மேல் நெருப்பு ஒத்து;
வென்று புலன்கள் விரைந்து விடுமின்கள்;
குன்று விழ உகின், தாங்கலும் ஆமே?

சென்றன [1]நாம [2]மிகைநாள் சிலபல
நின்றது நீள்பொரு ணீர்மே னெருப்பொத்து[3]
வென்று புலன்கள் விரைந்து விடுமின்கள்
குன்று [4]விழவுகிற் றாங்கலு மாமே. (10)

வேறு பாடம்: 1. நாழிகை (ஈ ஒ) I; 2. நாள்கள் (அ ஈ ஒ) II; 3. லெழுத்தொத்து (விசு) (தி) (வ) (த) 4. விழவதிற் (ஆ) II.

கருத்து: பெயரை மிகையாகக் கொண்ட எத்தனையோ உயிர்கள் சிலவும் பலவும் ஆன காலங்கள் இருந்து இறந்தன. ஆனால், தண்ணீர் மேல் நெருப்பு இருந்தால் அது எவ்வாறு அணைவது இல்லையோ, அது போல உயிருடன் சேர்ந்து இருக்கும் இறைவன் இறப்பதில்லை. ஆகவே இறைவனைப் போல அழியா வாழ்வு பெறுவதற்கு, ஐந்து புலன்களையும் விரைவில் ஒடுக்குக. உடல் அழிந்தால் அவ்வழிவைத் தடுக்க இயலாது.

நாமமிகை - பெயரை மட்டும் தாங்கி வேறு பயன் இல்லாத உயிர். இது பெயர்ச்சொல். நீள் பொருள் - என்றும் உள்ள இறைவன். இப் பாடலில் நான்காம் அடி ஒட்டணி அமைந்தது. மலை, உடம்புக்கு உவமை.

இறைவனைப் போற்று, புலன் அடங்கும்

2017. போற்றிசைத்தும் புனிதன் திருமேனியே
போற்றிசெய்; மீண்டே புலன் ஐந்தும் புத்தி ஆம்;
நால் - திசைக்கும், பின்னை, ஆற்றுக்கும் நாதனை
ஊற்றுகை உள்ளத்து ஒருங்கலும் ஆமே.

போற்றிசைத் [1]தும்புனி தன்றிரு மேனியே[2]
போற்றிசெய் [3]மீண்டே புலனைந்தும் புத்தியா
[4]நாற்றிசைக் கும்பின்னை [5]யாற்றுக்கு நாதனை
[6]யூற்றுகை யுள்ளத் [7]தொருங்கலு மாமே. (11)

வேறு பாடம்: 1. துப்புணி (அ) I. 2. மேனியைப் (இ) I. 3. மீட்டே (விசு); மீட்டுப் (த) 4. னாற்றிசைக் (விசு) (த) 5. நாயற்று (ஆ) I நாயிற்று (இ) III யாருக்கு (விசு) 6. யூற்றுரை (அ) I யூற்றுக்கை (ஓ) I. 7. தோங்கலு (ஓ) I; யொருக்கலு (சங்)

கருத்து: எதையேனும் போற்றின், சிவனது திருமேனியையே போற்று. அவ்வாறு செய்யின் ஐம்புலன்களும் விடயங்களைப் பற்றாமல், புத்திக்கு அடங்கும். பின்பு, தலையின் நான்கு பக்கங்களிலும் வீற்றிருந்து அனுபவம் தருவோனும், சுழுமுனை வழிக்குத் தலைவனும் ஆகிய சிவனை உள்ளத்தில் நிறுத்தி, அவனோடு ஒன்றி, சிவானந்தம் பெறலாம்.

யோகிக்குத் தலையின் முன்பகுதி கிழக்கு; பின்புறம் மேற்கு; வலப்புறம் தெற்கு; இடப்புறம் வடக்கு. ஊறுகை - ஊறுதல். எதுகை நோக்கித் திரிந்தது.

இருள் நீங்குமா?

2018. தரிக்கின்ற [1]நெஞ்சஞ் சகளத்தி னுள்ளே
யரிக்கின்ற வைவரை யாரு முணரார்
சிரிக்கின்ற வாறு சிலபல பேசில்[2]
வரிக்கொண்ட மைசூழ் வரையது வாமே. (12)

வேறு பாடம்: 1. நெஞ்சங்க ளுள்ளத்தி (ஆ இ) IV. 2. பேச (ஓ) III.

கருத்து: மனம் அமைந்துள்ள உடம்பில், (அதனுடன் சேர்ந்து) அரித்துத்தின்னும் ஐம்புலன்களின் வஞ்சகத்தை ஒருவரும் அறியார்.

புலன் விடயத்தில் ஈடுபட்டு மகிழ்ச்சியாகப் பொழுது போக்கினால் உடம்பு இருள் சூழ்ந்த கரிய மலையாகவே இருக்கும்.

இருள் - ஆணவ மலம். யோக சாதனையால் ஒளிக் குன்றமாக வேண்டிய உடம்பு, புலன் அனுபவத்தினால் இருள் மலையாக இருப்பதை எண்ணி வருந்துகின்றார்.

சகளம் - உடம்பு. வரி - உறுதி. மை - கருமை. இங்கு இருள்.

துறக்க வேண்டா; தோத்திரம் செய்க

2019. கைவிடல் ஆவது ஒன்று இல்லை, கருத்தினுள்
எய்தியவனை இயல்பினால் ஏத்துமின்;
ஐவருடைய அவாவினில் தோன்றிய
பொய் வருடு ஐய புலன்களும் ஐந்தே.

கைவிட லாவதொன் றில்லை கருத்தினு
ளெய்தி யவனை [1]யியல்பினா லேத்துமி
னைவ ருடைய வவாவினிற் றோன்றிய[2]
பொய்வரு டைய புலன்களு மைந்தே. (13)

வேறு பாடம்: 1. யிசையினா (ஓ) III; யிமைப்பினா (ஆ) IV. 2. தோன்றியே (விசு) (தி) (வ).

கருத்து: புலன்களை அடக்குவதற்குப் பொருள் எதனையும் துறக்க வேண்டா. ஐம்பொறிகளின் மூலம் வரும் உணர்வே புலன். அதனால் மனம் கொள்ளும் அவா புலனிச்சை எனப்படும். அது நுட்பமானது. பொய்யானது (பொய்யான மயக்கம்). அதனை வெல்ல வேண்டும். அதற்குச் சிந்தையில் சிவனை நிறுத்தி, மனத்தாலும் சொல்லாலும் போற்றுக.

ஐ - நுட்பம். வருடு - பொருந்திய. பொய்வர் - பெயர் எனக் கொள்ளலும் ஒன்று.

114. அசற்குரு நெறி

யார் குருவாகார்?

2020. உணர்வு ஒன்று இலா மூடன், உண்மை ஓராதோன்
கணுவின்றி வேதாகம நெறி காணான்
பணிவு ஒன்று இலாதோன், பரநிந்தை செய்வோன்,
அணுவின் குணத்தோன் அசற்குரு வாமே.

உணர்வொன் றிலாமூட னுண்மையோ ராதோன்
கணுவின்றி வேதா கமநெறி காணான்[1]
பணிவொன் றிலாதோன் பரநிந்தை செய்வோ
னணுவின் குணத்தோ னசற்குரு வாமே. (1)

வேறு பாடம்: 1. காணோன் (அ ஆ ஈ ஒ ஓ) I.

கருத்து; சிறிதும் உணர்வில்லான்; அறியாமை உடையான்; உண்மைப் பொருளாய்வு செய்யாதோன்; வேத, ஆகம நெறிகளைச் சிக்கல் இன்றி உணராதான்; அடக்கமிலான்; பிறரை நிந்திப்போன்; ஆணவ மலத்தால் பற்றப்பட்ட உயிரின் தன்மை (அறியாமை) நீங்கப் பெறாதவன் - இத்தகையோன் சற்குரு ஆகான்.

உணவுக்கு அலைபவன் ஞானம் தருவானா?

2021. மந்திர தந்திர மாயோக ஞானமும்
பந்தமும் வீடுந் தரிசித்துப் பார்ப்பவர்[1]
சிந்தனை [2]செய்யத் தெளிவியா தூண்பொருட்
டந்தக ராவோ ரசற்குரு வாமே. (2)

வேறு பாடம்: 1. பார்ப்பர் (அ) I; பார்ப்பவர்ச் (த) 2. செய்யாத் (விசு) (த)

கருத்து: மந்திரம், ஞானநூல், யோகம், ஞானம், கட்டுநிலை, முத்திநிலை - இவற்றைத் தாமும் தெளியாது, மாணவரையும் தெளிவியாது, உணவிற்காக அறிவிழந்து அலைபவர் சற்குருமார் ஆகார்.

பந்தம் - கட்டு நிலை; ஆணவம் முதலிய மலங்களால் கட்டுண்ட, பிறப்பு நிலை. கட்டு நீங்குதலே முத்தி.

தன்னை வெல்லாதவன் குருவா?

2022. ஆமாறு அறியாதோன், மூடன், அதிமூடன்,
காமாதி நீங்காக் கலதி, கலதிகட்கு
ஆமாறு சத்தத்து அறிவு ஒன்று அறிவு இலோன்
கோமான் அலன்; அசத்து ஆகும் குரவனே.

ஆமா றறியாதோன் மூட னதிமூடன்
காமாதி நீங்காக் கலதி கலதிகட்
[1]காமாறு [2]சத்தத் தறிவொன் றறிவிலோன்
கோமா [3]னலனசத் தாகுங் குரவனே. (3)

வேறு பாடம்: 1. காமாற (இ) I; காமாறச் (த) 2. சத்தறிவிப் போனறிவிலோன் (இ) II. 3. னலசத் (சங்) னலசனத் (சைவ).

கருத்து: உயிர் ஆக்கம் பெறும் வழியை அறியாதவன்; அறியாமை உடையான்; காமம் முதலிய உட்பகை நீங்கப் பெறாத பாவி. ஏனைய பாவிகளை உய்விக்கும் வண்ணம், உண்மைப் பொருள்பற்றி ஒன்றும் அறியாதோன். இத்தகையோன் ஞானத்தலைவன் அல்லன். அசற்குரு ஆவான்.

2023. கற்பாய கற்பங்க ணீக்காமற் கற்பித்தாற்
றற்பாவங் குன்றுந் தனக்கே பகையாகு
நற்பா லரசுக்கு நாட்டுக்குங் கேடென்றே
முற்பாலே நந்தி மொழிந்து வைத்தானே. (க)

2024. குருடர்க்குக் கோல்காட்டிச் செல்லுங் குருடர்
முரணும் பழங்குழி வீழ்வர்கண் முன்பின்
குருடரும் வீழ்வர்கண் முன்பின் னறவே
குருடரும் வீழ்வார் குருடரோ டாகியே. (அ)

115. சற்குருநெறி

திருவருள் அனுபவம்

2025. தாள் தந்து அளிக்கும் தலைவனே சற்குரு
தாள் தந்து தன்னை அறியத் தரவல்லோன்
தாள் தந்து தத்துவாதீதத்துச் சார்சீவன்
தாள்தந்து பாசம் தணிக்குமவன் சத்தே.

தாடந் [1]தளிக்குந் தலைவனே சற்குரு
[2]தாடந்து தன்னை யறியத் தரவல்லோன்
றாடந்து தத்துவா [3]தீதத்துச் சார்சீவன்
றாடந்து பாசந் [4]தணிக்கு மவன்சத்தே[5] (1)

வேறு பாடம்: 1. தணிக்குந் (ஓ) I. 2. றாடந்த (அ) I. 3. தீதச் சதா சிவன் (இ) IV. 4. தணிக்கும் (அ) IV. 5. வசனத்தே (அ) IV.

கருத்து: திருவடி எனப்படும் அருளனுபவத்தைத் தரும் தலைவனே சற்குரு, அவன் பதிஞானம் தந்து, ஆன்மா தன்னையும் தலைவனையும் அறியச் செய்யவல்லான், முப்பத்தாறு தத்துவங் களையும் கடந்து நிற்கும் பரம்பொருளை அறியும் அறிவைத் தருவான். ஆணவ மலத்தை நீக்குவான். இத்தகையவனே சற்குரு.

இறைவன் தந்த அருள்

2026. தவிர வைத்தான் வினை தன் அடியார்; கோள்
தவிர வைத்தான் சிரத்தோடு தன் பாதம்;
தவிர வைத்தான் நமன் தூதுவர் கூட்டம்;
தவிர வைத்தான் பிறவித்துயர் தானே.

தவிரவைத் தான்வினை தன்னடி யார்கோ¹
டவிரவைத் தான்சிரத் தோடுதன் பாதந்
தவிரவைத் தானமன் றூதுவர் கூட்டந்
தவிரவைத் தான்பிற வித்துயர் தானே. (2)

வேறு பாடம்: 1. யார்கோன் (சங்)

கருத்து: இறைவன் தன் அடியாரின் வினைப்பயன்கள் நீங்கத் திருவருளை வைத்தான். கோள்களின் ஆட்சி நீங்க, என் தலையில் தன் திருவடியை வைத்தான். எமதூதர் அடியாரைப் பற்றாமல் நீங்குமாறு அருள்தந்தான். பிறவித்துன்பம் தீரவும் அருள் தந்தான்.

திருவருள் நமக்கு வைப்புப் பொருள் என்பதோர் பொருளும் விளைந்தது காண்க.

குருவருள்

2027. கறுத்த இரும்பே கனகம் - அது ஆனால்
மறித்து இரும்புஆகா வகை-அது போலக்
குறித்த அப்போதே குருவருள் பெற்றால்
மறித்தும் பிறவியில் வந்து அணுகாரே.

கறுத்த விரும்பே கனகம தானான்
மறித்திரும் பாகா வகையது போலக்
குறித்தவப் போதே குருவருள் பெற்றான்
[1]மறித்தும் பிறவியில் வந்தணு காரே[2]. (3)

வேறு பாடம்: 1. மறுத்துப் (அ இ) I; மறித்துப் (சங்) 2. கானே (விசு) (தி) (த)

கருத்து: இரும்பு இரசவேதியில் பொன்னானால், மீண்டும் இரும்பு ஆகாது. அதுபோல, ஆன்மா பக்குவம் பெறும்பொழுது, குருவின் அருளைப் பெற்றால், மீண்டும் பிறவாது.

குறித்த அப்போது - குருவின் திருக்குறிப்பைப் பெறும் பொழுது. அதுவே ஆன்மா பக்குவம் அடையும் காலம்.

2028. பாசத்தை நீக்கிப் பரனோடு தன்னையு
நேசத்து நாடி மலமற நீக்குவோ
ராசற்ற சற்குரு வாவோ ரறிவற்றுப்
பூசற் கிரங்குவோர் போதக் குருவன்றே. (அ, ஔ, ண)

சிவ குரு

2029. நேயத்தே நிற்கும் நிமலன், மலம் அற்ற
நேயத்தை நல்க வல்லோன், நித்தன், சுத்தனே
ஆயத்தவர் தத்துவம் உணர்ந்தாங்கு அற்ற
நேயர்க்கு அளிப்பவன் நீடும் குரவனே.

நேயத்தே நிற்கு நிமலன் மலமற்ற[1]
நேயத்தை நல்கவல் [2]லோனித்தன் சுத்தனே
[3]யாயத்த வர்தத் துவமுணர்ந் தாங்கற்ற[4]
[5]நேயர்க் களிப்பவ னீடுங் குரவனே. (4)

வேறு பாடம்: 1. மனமற்ற (ஆ இ) I. 2. னித்த (இ) IV. 3. யாயத்துவர் (சுவ) V. 4. தாசற்ற (இ) IV; தாரற்ற (விசு). 5. நேயத் தளிப்பனன் (த)

கருத்து: அன்பின் வலைப்படுவோன்; மலமற்றவன்; அடியாரின் ஆணவமலத்தை நீக்கி, அன்பு அருள்பவன்; என்றும் உள்ளவன்; உள்ளம் தூயவன்; அடியார் கூட்டத்தவராய், தத்துவக் கூட்டங் களை உணர்ந்து, அவற்றினின்றும் விலகிய அன்பருக்கு வீடுபேறு அளிப்பவன் - இவன் குரு.

சைவம் குருவைச் சிவமாகவே கொள்ளும். முதலடியைத் திருவாசகம் மேற்கொண்டது.

குருவின் பரிசம்

2030. பரிசன வேதி பரிசித்த தெல்லாம்
வரிசை தரும்பொன் வகையாகு மாபோற்
குருபரி சித்த குவலய மெல்லாந்
திரிமலந் [1]தீர்ந்து [2]சிவனவ னாமே. (5)

வேறு பாடம்: 1. தீந்து (அ ஓ) I. 2. சிவகதியாமே (ஓ) IV.

கருத்து: பரிசன வேதி என்னும் மருந்து பட்ட உலோகம் எல்லாம் பொன்னாகும். அது போல் குரு தொட்டவுடன் உலகில் யாரும் மும் மலங்களும் நீங்கப் பெற்றுச் சிவநிலை அடைவர்.

தன்னையே பெற . . .

2031. தானே என நின்ற சற்குரு சன்னிதி
தானே என நின்ற தன்மை வெளிப்படின்,
தானே தனைப் பெறவேண்டும் சதுர் பெற
ஊனே என நினைந்து ஓர்ந்துகொள் உன்னிலே.

தானே யெனநின்ற சற்குரு சன்னிதி
தானே யெனநின்ற தன்மை வெளிப்படிற்
றானே தனைப்பெற வேண்டுஞ் சதுர்பெற
[1]வூனே யெனநினைந் தோர்ந்துகொ ளுன்னிலே[2]. (6)

வேறு பாடம்: 1. லூனே (த) 2. ளுன்னியே (அ) I.

கருத்து: சிவமே எனக் கருதும்படி உள்ள சற்குருவின் முன்னிலையில், அருளேயெல்லாம் என்ற உண்மையைத் தெரிந்து கொண்டால், அந்த அனுபவத்தின் மூலம், 'தானும் சிவமும் வேறு இல்லாமல் உள்ள நிலையை' அடைய வேண்டும் என்ற விருப்பம் உண்டாகும். அந்த விருப்பம் நிறைவேற, சிவன் உனது உடம்பிலேயே உள்ளான் எனப் பாவனை செய்து தியானம் செய்வாயாக.

தனை என்றது, அத்துவித நிலையை.

பெரு நெறி பிடித்தொழுக

2032. வரும்வழி போம்வழி மாயா வழியே[1]
கருவழி கண்டவர் காணா வழியே[2]
பெருவழி யாநந்தி [3]பேசும் வழியைக்
குருவழி [4]யேசென்று கூடலு மாமே. (7)

வேறு பாடம்: 1. வழியைக் (விசு) 2. வழியை (விசு) (த) 3. பேசா (ஆ இ ஈ ஒ) II. 4. சென்று (ஒ) I.

கருத்து: இறப்பாலும் பிறப்பாலும் மாறாத ஒரு நிலையை, மீண்டும் மீண்டும் பிறந்து உழல்பவர், அங்ஙனம் அழியாத நிலையை, பெரிய வாழ்வாக என் குருபிரான் கூறிய நிலையை அவர் கூறிய வழியிலேயே சென்று அடையலாம்.

2033. குருவென் பவனே வேதாக மங்கூறும்
பரவின்ப னாகிச் சிவயோகம் பாவித்
தொருசிந்தை யின்றி யுயர்பாச நீக்கி
வருநல் குரவன்பால் வைக்கலு மாமே. (க, ட)

குரு உபதேசம்

2034. சத்தும் அசத்தும் சதசத்தும் தான் காட்டி,
சித்தும் அசித்தும் சிவபரத்தே சேர்த்து,
சுத்தம் அசுத்தம் அற, சுகமான சொல்
அத்தன், அருட்குருவாமவன் - கூறிலே.

சத்து மசத்துஞ் சதசத்துந் தான்காட்டிச்
சித்து மசித்துஞ் [1]சிவபரத் தேசேர்த்துச்[2]
சுத்த மசுத்த மறச்சுக மானசொ
லத்த [3]னருட்குரு வாமவன் கூறிலே. (8)

வேறு பாடம்: 1. சிவபாதத் (ஈ) IV. 2. துவத்தே சேத்து (ஈ) I. 3. மருட்குரு (த)

கருத்து: மாணவனுக்குச் சத்து, அசத்து, சதசத்து என்னும் மூன்று வகைப் பொருளையும் அறிவித்து, அறிவுப் பொருள், அறிவிலாப் பொருள் என்னும் இரண்டையும் அறிவதற்கு, 'அருளறிவைப்' பெற்று அளித்து, அசுத்த மாயை, சுத்த மாயை என்னும் இரண்டின்

தத்துவங்களான முப்பத்தாறும் அவனை விட்டு விலக, அவனைத் 'தன் - அறிவு' பெறச்செய்து, பரநிலை (அருள் நிலை) அனுபவத்தை அனுபவிப்பதற்குரிய உபதேசத்தைச் செய்பவனே சற்குருவாவான்.

சத்து - உண்மைப் பொருள்; இறைவன். அசத்து - உண்மை இல்லாத (தானாக இயங்காத), நிலையில்லாத பொருள்; மாயையும் அதன் காரியமான உலகமும். சதசத்து - மேற்கூறிய இரண்டுமாக இல்லாத பொருள்; ஆன்மா. சத்தாகிய சிவம் அசத்தாகிய உலகை அறியாது. உலகு அசத்தாதலின் சிவத்தை அறியாது. இவ்விரண்டையும் உணர்வது, இவ்விரண்டும் அல்லாத ஆன்மா என்பது சிவஞான போதம் (7 ஆம் நூற்பா.).

பரம் - அருள் ('உகாரம் பரமே' என ஆசிரியர் 'திருவம்பலச் சக்கர அதிகாரத்தில் கூறினார், அவ் உகாரத்தை 'நமசிவாய' மந்திரத்தின் 'வ' - கரத்திற்கு ஒப்பாகக் கூறினார். வகாரம் அருளைக் குறிக்கும்) சுகம் - பேரின்பம். சொல் - உபதேசம். அருட்குருவாமவன் - குரு எனப்படும் தன்மையுடையோன். ஆகுமவன் என்பது இடைக்குறைந்தது, வினையாலணையும் பெயர் (செய்பவன் என்பது போல).

உண்மைச் சாதகன்

2035. உற்றிடும் ஐமலம் பாசம் உணர்வினால்
பற்று அற நாதன் அடியில் பணிதலால்
சுற்றிய பேதம் துரியம் மூன்றால் வாட்டி,
தற்பரம், மேவுவோன் சாதகனாமே.

உற்றிடு மைம்மலம் பாச முணர்வினால்[1]
[2]பற்றற நாத னடியிற் பணிதலாற்
சுற்றிய போதந் துரியமூன் றால்வாட்டித்
தற்பர [3]மேவுவோன் சாதக னாமே[4]. (9)

வேறு பாடம்: 1. வுணர்வினாற் (ஓ) I. 2. பற்றறு (ஓ) I. 3. மேவுவோர் (அ ஈ ஒ ஓ) I. 4. ராமே (விசு).

கருத்து: ஆன்மாவின் பாசம் காரணமாக அதன் உணர்வில் மலங்கள் ஆட்சி செய்யும். ஆனால் ஆன்மா இறைவனது திருவடியில் வணங்கி, அடக்கமாக வாழ்ந்தால் அதன்பற்றுக்கள் நீங்கும். பிறகு, மேல்நிலையில் இறைவன் வேறு, தான் வேறு என்று ஆன்மா உணரும் வேறுபாட்டு உணர்வை, சீவதுரியம், பரதுரியம், சிவதுரியம் என்ற மூன்று அவத்தைகளின் அனுபவத்தால் நீக்கிக் கொண்டு,

தானேசிவம் ஆகும். இத்தகையவனே தனது ஆன்மீகப் பயிற்சியை நிறைவு செய்பவன் ஆவான்.

ஐமலம் - ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி. பாச உணர்வு என்பது பந்தம். அவத்தை விளக்கத்தை ஆசிரியர் பின்னே கூறுவார்.

சிவநிலை

2036. எல்லாம் இறைவன் இறைவி உடன் இன்பம்;
அல்லார் புலனும்; வருங்கால் உயிர்தோன்றி
சொல்லா மலம் ஐந்து அடங்கியிட்டு ஓங்கியே
செல்லாச் சிவகதி சேர்தல் விளையாட்டே.

எல்லா மிறைவ னிறைவி யுடனின்ப
[1]மல்லார் புலனும் வருங்கா லுயிர்தோன்றிச்
சொல்லா [2]மலமைந் தடங்கியிட் டோங்கியே
செல்லாச் சிவகதி சேர்தல் விளையாட்டே. (10)

வேறு பாடம்: 1. மல்லாப் (இ ஈ) I; வல்லார் (தி) (வ) 2. மலமைந் திட்டங்கியிட் (அ) I; டங்கியுட் (ஓ) I.

கருத்து: உயிர்கள் ஐம்புலன்களும் பிற தத்துவங்களும் அல்ல. மக்கள் அனுபவிக்கத்தக்க இன்பமெல்லாம் இறைவன் இறைவியுடன் கூடி நின்றே ஆகும். ஆதலால் உயிர்கட்குப் பதிஞானம் தோன்றும் போது அருளும் அவர்களுக்குத் துணை நிற்கும். அதனால், இவ்வளவு கொடுமை உடையவை என்று சொல்ல முடியாத ஐந்து மலங்களும் அடங்கிவிடும். அப்போது உயிர்கள் உணர்வால் உயர்ந்து, எளிதில் கிடைக்காத சிவநிலையை அடையும். இவ்வாறு அருளுவது இறைவனுக்கு விளையாட்டாகும்.

கொண்டு கூட்டு: உயிர் புலனும் அல்லார்; இன்பம் எல்லாம் இறைவன் இறைவியுடன்; தோன்றி வருங்கால் சொல்லா மலம் ஐந்து அடங்கியிட்டு ஓங்கியே சிவகதி சேர்தல் எனக் கூட்டுக.

இறைவி என்று இங்குக் கூறியது அருளை. உயிர், பலவின்பாற் பெயர்.

இறைவன் செய்கை

2037. ஈனப் பிறவியில் இட்டலும் மீட்டு ஊட்டி,
தானத்துள் இட்டு, தனை ஊட்டித் தாழ்த்தலும்
ஞானத்தின் மீட்டலும், நாட்டலும் வீட்டுற்று
மோனத்துள் வைத்தலும் முத்தன்தன்-செய்கையே.

ஈனப் பிறவியி [1]லிட்டது மீட்டூட்டித்[2]
தானத்து ளிட்டுத் தனையூட்டித் தாழ்த்தலு
ஞானத்தின் மீட்டலு நாட்டலும் வீட்டுற்று[3]
மோனத்துள் வைத்தலு முத்தன்றன் செய்கையே. (11)

வேறு பாடம்: 1. விட்டதும் (அ) I; லிட்டது (விசு) (தி) (வ) 2. மிட்டூட்டித் (இ ஈ) IV; 3. வீடுற்று (விசு) (தி) (வ).

கருத்து: உயிரை இழிவானதாகிய மண்ணுலுகப் பிறப்பில் சேர்ப்பதும், அப்பிறப்பு முடிந்தவுடன் நல்வினைப் பயன்களை அதற்குக் கொடுப்பதற்காகப் பதவிகளில் இருத்துவதும், பதிஞானத்தை அளித்தலால் அவ்வுயிரை மீட்பதும், அருள் வாழ்வில் நிறுத்துவதும், பிறகு அவ்வுயிர் வீடுபேறு பெற்றுப் பேசாத பெருவாழ்வை அடையச் செய்வதும் ஆகிய இவை எல்லாம் குருபிரானின் செய்கையே.

இட்டல் - இடல் என்னும் தொழிற் பெயரின் விகாரம். மீட்டு - மீண்டும். ஊட்டி - அனுபவிக்கச் செய்து. முத்தன் - சிவன்; முத்தனாகிய குரு.

அருள் விளையாட்டு

2038. அத்தன் அருளின் விளையாட்டு அடைஞ்ச இடம்
சித்தொடு அசித்து அற, தெளிவித்துச் சீவனை,
சுத்தனும் ஆக்கி, துடைத்து மலத்தினை,
சத்துடன் ஐங்கருமத்து இடும் தன்மையே.

அத்த னருளின் விளையாட் டடைஞ்சிடஞ்[1]
சித்தொ [2]டசித்துச் [3]தெளிவித்துச் சீவனைச்
சுத்தனு மாக்கித் [4]துடைத்து மலத்தினைச்
சத்துட னைங்கரு மத்திடுந் தன்மையே[5]. (12)

வேறு பாடம்: 1. டடைஞ்சடஞ் (அ ஒ) I; டிடஞ்சடஞ் (விசு) (தி) (வ)
2. டசித்தறத் (அனை . சுவ) தருமபுரப் பதிப்பின் பாடம் மேற்கொள்ளப்

பெற்றது. 3. சேர்வித்துச் (ஓ) II; தெளிவித்த (சைவ) 4. துடைத்தை (ஆ இ ஈ) III. 5. தன்னையே (அ) I.

கருத்து: சிவபெருமானது ஐந்தொழில் அருள்விளையாட்டு என்பது, ஆன்மாவின் அறிவை, சித்து (இறைவன்) அசித்து (உலகம்) ஆகியவை பற்றித் தெளிவு பெறச் செய்து, அதன் மலங்களை நீக்கிச் சுத்த நிலையில் வைத்து, உண்மைப்பொருளாகிய தன்னுடன் கலந்து நிற்கச் செய்வதாகும்.

அடைந்திடம் என்பது மருவி, அகரம் தொக்கது. அற - நன்றாக. சுத்த நிலை - மலம் அற்றநிலை.

கொண்டு கூட்டு: அருளின் விளையாட்டு ஐங்கருமத்து அடைஞ்சிடம் சீவனைச் சத்துடன் இடும் தன்மையே எனக் கூட்டுக.

2039. ஈசத் துவங்கடந் தில்லையென் றப்புறம்
பாசத்து ளேயென்றும் பாவியு மண்ணலை
நேசத்து ளேநின்ற நின்மல னெம்மிறை
தேசத்தை யெல்லாந் தெளியவைத் தானே (க, ங)

அமுதம் இருக்கச் சோறு ஏன்?

2040. மாணிக்க மாலை மலர்ந்து எழு மண்டலம்
ஆணிப்பொன் நின்று, அங்கு அமுதம் விளைந்தது;
பேணிக் கொண்டு உண்டார் பிறப்பு அற்று இருந்தார்கள்
ஊணுக்கு இருந்தார் உணராத மாக்களே.

மாணிக்க மாலை மலர்ந்தெழு மண்டல
[1]மாணிப்பொன் னின்றங் கமுதம் விளைந்தது
பேணிக்கொண் டுண்டார் பிறப்பற் றிருந்தார்க[2]
ளூணுக் கிருந்தா ருணராத மாக்களே[3]. (13)

வேறு பாடம்: 1. மாணிக்கப்பொன் (அ ஆ இ ஓ) I. 2. றிருந்தார் (தி) 3. மாந்தரே (ஓ) IV.

கருத்து: மாணிக்கங்களின் வரிசை போல் செல்வொளி பரப்பும் சந்திர மண்டலத்தில் (யோகியின் தலை) சிறந்த உரை வாய்ந்த பொன் போன்ற சோதி நிற்க, அங்கே அமுதம் விளையும். இதனை

அறிந்து, இவ்வனுபவத்தைப் பெற்று, அவ்வமுதத்தை உண்டோர் பிறவி அறுத்தனர். இதனை அறியாத பிற மாந்தர் சோறுண்டு சுகமுறவே வாழ்கின்றனர்.

அமுதம் உண்ண அறியாமல் சோறு உண்பார் என்க. அமுதம் சாவாமையைத் தர, சோறு சாவைத் தடுக்காதவாற்றை அவர் அறியாராயினார்.

செய்தவனே சொல்வான்

2041. அசத்தொடு, சத்தும் அசத்சத்தும் நீங்க
இசைத்திடு பாசப்பற்று ஈங்கு அறுமாறே
அசைத்து இருமாயை அணுத்தானும் ஆங்கே
இசைத்தானும் ஒன்ற அறிவிப்போன் இறையே.

அசத்தொடு சத்து [1]மசற்சத்து நீங்க
[2]விசைத்திடு பாசப்பற் றீங்கறு மாறே
[3]யசைத்திரு மாயை [4]யணுத்தானு மாங்கே
[5]யிசைத்தானு மொன்றறி விப்போ னிறையே. (14)

வேறு பாடம்: 1. மச்சத்து (ஆ, இ) I; மசத்சத்து (விசு) (தி) (வ) 2. விசைத்தியல் (ஓ) II; விசைத்திய (அ) I. 3. பசைத்திரு (ஈ) I; 4. யனுத்தானே (இ) II. 5. விசைப்பானு (இ) IV; மொன்ற வறிவிப்போ (ஒ, ஓ) II.

கருத்து: அசத்துப் பொருளாகிய உலகம், சத்துப் பொருளாகிய சிவம், சதசத்தாகிய ஆன்மா - இவற்றின் இயல்பை அறியாமல், ஆன்மாவைக் கட்டுறுத்தும் ஆணவமலமாகிய பந்தம் நீங்கும் வண்ணம், ஆன்மாவிற்கு மாயையினின்றும் படைத்த உலகு, உடம்புகளை அளித்து, அவற்றில் பொருந்தி வாழச் செய்வித்தவனும் சிவனே; அதனை ஆன்மாவுக்குப் பக்குவக் காலத்தில் சற்குருவாக வந்து அறிவிப்பவனும் அவனே.

அங்ஙனம் அறிவிக்கும்பொழுது, ஆன்மா சத்து, அசத்து, சதசத்து ஆகியவற்றை உணரும் என்க. மாயை, சுத்தமாயை அசுத்த மாயை என இரு வகைத்து ஆதலின், 'இரு' என அடை கொடுத்தார். அன்றி, இரு மாயையொடும் உயிரைப் பொருத்தி என்றாரல்லர். ஒன்ற - பக்குவக் காலம் வர. அசைத்தல் - கட்டுதல்.

2042. ஏறு நெறியே மலத்தை யெரித்தலா
லீறி லுரையா லிருளை யறுத்தலான்
மாறில் பசுபாசம் வாட்டலால் வீடுக
வேறு பரனே குருவா மியம்பிலே. (அ, க)

116. கூடா வொழுக்கம்

அவனுக்கு எங்கும் கண்

2043. "கண்காணி இல்" என்று கள்ளம் பல செய்வர்;
கண்காணி இல்லா இடம் இல்லை, காணுங்கால்;
கண்காணியாகக் கலந்து எங்கும் நின்றானைக்
கண்காணி கண்டார் களவு ஒழிந்தாரே.

கண்காணி யில்லென்று கள்ளம் பலசெய்வர்[1]
கண்காணி [2]யில்லா விடமில்லை காணுங்காற்
கண்காணி யாகக் கலந்தெங்கு நின்றானைக்
[3]கண்காணி கண்டார் களவொழிந் தாரே. (1)

வேறு பாடம்: 1. பல செய்வார் (இ ஈ) III; 2. யில்லை (சங்) 3. கண்காணக் (ஆ ஈ) I.

கருத்து: மாந்தர் தாம் செய்வதை ஒருவரும் மேற்பார்க்கவில்லை என்று வஞ்சனை பலவும் செய்வர். மேற்பார்ப்பவன் இறைவன். அவன் இல்லாத இடமே இல்லை. எவ்விடத்திலும் உள்ள பொருள்கள் தனக்கே உரிமை என்னுமாறு அவன் அவற்றை உண்ணின்று இயக்குகிறான். தம்முடைய புருவத்திடைக் கண்ணால் அவனைக் கண்டோர் வஞ்சனை செய்யார்.

கண் காணி (4ஆம் அடி) கண்ணால் காணஉரிமை உடையது.

2044. செய்தா னறியுஞ் செழுங்கடல் வட்டத்துப்
பொய்தான் மிகவும் புலம்பு மனிதர்கள்
மெய்தா னுரைக்கில் விண்ணோர் தொழச்செய்வன்
மைதாழ்ந் திலங்கு மிடறுடை யோனே (அ, ட)

வயிற்றுப் பிழைப்பா பத்தி?

2045. பத்தி விற்று உண்டு, பகலைக் கழிவிடும்
மத்தகர்க்கு அன்றோ மறுபிறப்பு உள்ளது?
வித்துக் குற்று உண்டு விளைபுலம் பாழ் செய்யும்
பித்தர்கட்கு என்றும் பிறப்பு இல்லை தானே.

[1]பத்திவிற் றுண்டு பகலைக் கழிவிடு
மத்தகர்க் கன்றோ மறுபிறப் புள்ளது
[2]வித்துக்குற் றுண்டு [3]விளைபுலம் பாழ்செய்யும்
பித்தர்கட் கென்றும் பிறப்பில்லை தானே. (2)

வேறு பாடம்: 1. பற்றிவித் (ஆ) I. 2. விற்றுக் (ஒ) I. 3. விளைநிலம் (அ) IV.

கருத்து: பத்தி செய்வதை வயிற்றுப் பிழைப்புக்காக மேற்கொண்டு, வாணாளை வீணாகக் கழியவிடும் மயக்க அறிவினர்க்கே மறு பிறப்பு உண்டு. பிறப்பிற்கு வித்தாகிய வினையை நுகர்ந்து, (கழித்து) மேலும் புதுவினை (ஆகாமியம்) உண்டாகாதவாறு, அது உண்டாகத் தக்க அடிப்படையையே அழிப்பவராகிய இறைப்பித்தர்க்குப் பிறப்பு இல்லை.

நாளில் பகலின் அருமை கருதிப் 'பகல்' என்றார். கழியவிடும் - அகரம் மறைந்தது, வினை விளையும் நிலத்தைப் பாழ் செய்தலாவது, எல்லாம் இறைசெயல் என்று எண்ணிச் செய்தல். உலகியலுக்கு மாறாகப் பயன் விரும்பாமையின் "பித்தர்" என்றார்.

யாத்திரை வேண்டா

2046. "வடக்கு, வடக்கு" என்பர்; வைத்தது ஒன்று இல்லை;
நடக்க உறுவரே ஞானம் இலாதார்;
வடக்கில் அடங்கிய வையகம் எல்லாம்
அகத்தில் அடங்கும் அறிவுடையோர்க்கே.

வடக்கு வடக்கென்பர் [1]வைத்ததொன் றில்லை
நடக்க [2]வுறுவரே [3]ஞானமில் லாதார்
வடக்கி லடங்கிய வையக மெல்லா
[4]மகத்தி லடங்கு மறிவுடை யோர்க்கே. (3)

வேறு பாடம்: 1. வச்சதொன் (ஓ) I. 2. வுறுவர் (ஆ இ) II. 3. ஞானமி (ஈ) IV. 4. முகத்தி லொடுங்கு (ஓ) II.

கருத்து: வடக்குப் புண்ணியத்திசை; அங்குள்ள தலங்கட்கு யாத்திரை செல்ல வேண்டும் எனக் கூறுவர், வடக்கே பெறக் கிடந்தது ஒன்றும் இல்லை. சிவஞானம் பெறாதோர் வடக்கு நோக்கி யாத்திரையும் மேற்கொள்வர். உலகில், வடக்கில் கிடைப்பனவாக எண்ணப்படுபவை எல்லாம், ஞானிகளுக்கு, அவர்களது அகவுலகில் கிடை ப்பனவாகும்.

வையகம் - ஆகுபெயர். வைத்தது - வைப்புநிதி, இங்கு மோட்சம். உறுதல் - தொடங்குதல்.

உள்ளேவிட்டு வெளியே தேடுவர்

2047. காயக் [1]குழப்பனைக் [2]காயநன் னாடனைக்
காயத்தி னுள்ளே கமழ்கின்ற நந்தியைத்
தேயத்து ளேயெங்குந் தேடித் திரிவர்கள்
காயத்து ணின்ற கருத்தறி யாரே. (4)

வேறு பாடம்: 1. கழிப்பனைக் (ஓ) I; குளம்பினைக் (ஈ) I; குழம்பனைக் (ஓ) I; குழகனை (இ) IV. 2. காயக்கண்ணாடனை (ஓ) IV.

கருத்து: ஆகாயம் என்னும் பூதத்தை ஏனைய பூதங்களுடன் கலந்து உலகத்தைப் படைத்தவனை, சிதாகாயம், பரமாகாயம் என்ற வெளியைத் (அறிவு வெளி) தன் இருப்பிடமாகக் கொண்டவனை, நம் உடம்பிலும் ஒளிமயமாக விளங்கும் நந்தியை மக்கள் நாட்டில், பல தலங்களில் திரிந்து தேடுவர். தம் உடம்பிலேயே அவன் உறைவதை அறியாது போயினர்.

குழப்பன் - கலப்பவன். பூதங்களைக் கலந்து உலகம் படைத்தலைப் பஞ்சீகரணம் என்பர். கமழ்தல் - ஈண்டு ஒளிவீசுதல். கருத்து - காரண வகை; தன்மை பற்றிய அறிவு. அதனைக் குருவின் வாயிலாகப் பெற வேண்டும்.

உடம்பைப் படைத்து, நாடுபோல் வளமுடையதாக்கி, அதில் ஒளிவிடு பவன் சிவம். படிநிலை அருளினைக் கூறியவாறு.

படிமுறை அனுபவம்

2048. கண்காணி யாகவே கையகத் தேயெழுங்
கண்காணி யாகக் கருத்து ளிருந்திடுங்
கண்காணி யாகக் கலந்து வழிசெய்யுங்
கண்காணி யாகிய காதலன் றானே. (5)

கருத்து: என் பேரன்பனாகிய சிவன், என்மீது முழு உரிமை கொண்டு அடிமை கொள்ளும்பொருட்டு, கண்ணாற் காணும் பொருளாக என் முன்பு தோன்றுகிறான். உலகின் மேற்பார்வையாளனாக என் அறிவுக்குப் புலப்படுகின்றான். என் உயிரறிவில் அருள்அறிவாகக் கலந்து, அருள்வாழ்வு வாழ வழிகாட்டுகிறான்.

4ஆம் அடி: ஆகிய - ஆகும் பொருட்டு; வினையெச்சம். இறைவன் உலகப் பொருளாய்த் தோன்றுவதையும் (ஆலயத்தில் உள்ளதெய்வ உருவம்), குருவுபதேசத்தில் அறிவுப் பொருளாய் விளங்குவதையும், பின்பு அருளனுபவம் அளிப்பதையும், இறுதியில் சிவகதி நல்குவதையும் படிமுறையில் கூறினார்.

1 ஆம் அடி: கண் காணி - கண்ணாற் காணப்படும் பொருள். இ - செயப்படு பொருள் விகுதி (உறப்படுவது உறி; முறிக்கப்படுவது முறி என்பவைபோல அரிதின் வருவது)

2 ஆம் அடி: கண்காணி - ஒரே சொல். கண் காணிப்பவன்.

3 ஆம் அடி: கண்காணி - உயிர் அறிவு கண் எனப்பட்டது. அதனுள் நின்று காண்பது ஆகிய அருளறிவு 'காணி' எனப்பட்டது.

4 ஆம் அடி: கண் - இடம் என்னும் பொருள் உடைய பெயர்ச் சொல். காணி - உரிமை. ஈண்டு உரிமை உடையோனுக்கு ஆகுபெயர்.

இறைவனை அறியார்

2049. கன்னி ஒரு சிறை; கற்றோர் ஒரு சிறை;
மன்னிய மாதவம் செய்வோர் ஒரு சிறை;
தன் இயல்பு உன்னி உணர்ந்தோர் ஒரு சிறை;
என் இது? ஈசன் இயல்பு அறியாரே.

கன்னி யொருசிறை கற்றோ ரொருசிறை
மன்னிய மாதவஞ் [1]செய்வோ ரொருசிறை
தன்னியல் [2]புன்னி யுணர்ந்தோ ரொருசிறை
[3]யென்னிது வீச னியல்பறி யாரே. (6)

வேறு பாடம்: 1. செய்வ (அ) II. 2. புன்னை (அ) I. 3. யென்னியல் (ஆ, இ) I; யென்னியல்புன்னியியல் (ஒ) I.

கருத்து: கன்னி வெளியிலிருந்து இல்லற நாயகனைப் பெறுதற்குத் தேட, மறுபுறம் கற்றோர், தமது கல்வியாலேயே இன்புறுவது போல், தவம் செய்வோரும், ஆன்மாவாகிய தம்மை உணர்ந்தோரும் முறையே இறைவனை வெளியே தேடியும், தம்மையே இறைவன் எனக் கருதியும் இறைவனின் இயல்பு அறியாமல் மயங்குகின்றனர்.

அவர்கள் இறைவனை அகத்தில் உணரவறியார் என்பது கருத்து. ஆன்மாவின் உள்ளொளியே இறைவன்; ஆன்மா இறைவன் அன்று. உன்னுதல் - வேதாந்த விசாரணை.

பெரிய கண்

2050. [1]காணாத கண்ணிற் [2]படனமே கண்ணொளி
காணாத [3]வர்கட்குங் காணாத வவ்வொளி
காணாத [4]வர்கட்குங் கண்ணாம் பெருங்கண்ணைக்
காணாது கண்டார் [5]களவொழிந் தாரே[6]. (7)

வேறு பாடம்: 1. காணாதவர் கண்ணில் (த) 2. படலமே (விசு) (தி) (வ) 3. தவர்கட்குக் (த) 4. களவொழிந் (அனை. சு) 5. தார்களே (அ ஆ இ ஈ ஒ) II.

கருத்து: குருடனுக்குக் கண்ணொளியாக இருப்பது (அவன் கற்றவனாயின்) கல்வியே. அக்கல்விக்கண்ணைப் பெறாதவர் புறக்கண்ணால் காணமாட்டாத பேரொளி இறைவன். கல்வி ஞானம் வழிகாட்ட அவனைக் காணமுயன்று, தெளிவுபெற இயலாதவர்க்குப் பதிஞானம் என்ற கண்ணைத் தரும் அறிவொளி அவன். அவனைக் காணாமல் கண்டோர் யாவர் எனின், ஆணவமலம் அற்றோர் என்க.

காணாது காணல் - காண்கின்றோம் என்ற உணர்வு இன்றிக் காணுதல். களவு - ஆணவ மலம், தற்போதம் என்ற இரண்டும். "கள்ள வினைப் பசுபோதக்கவளம் இடக் களித்துண்டு" என்பார் பரஞ்சோதி யாரும் (திருவிளை.).

அருள் மருந்து

2051. பித்தன் மருந்தால் தெளிந்து பிரகிருதி
உய்த்து, ஒன்றுமாபோல், வழி அந்தன் கண்ணொளி
அத்தன்மை ஆதல்போல், நந்தி அருள் தரச்
சித்தம் தெளிந்து என் செயல் ஒழிந்தேனே.

பித்தன் மருந்தாற் றெளிந்து பிரகிருதி[1]
[2]யுய்த்தொன்று மாபோல் [3]வழியந்தன் கண்ணொளி
யத்தன்மை யாதல்போ ணந்தி யருடரச்
சித்தந் தெளிந்தென் செயலொழிந் தேனே. (8)

வேறு பாடம்: 1. பிரகிருதியு (ஆ இ) I. 2. மத்தொன்று (ஆ இ) I. 3. விழியந்தண் (அ) I; விழியந்தன் (ஒ) I; மினியந்தன் (ஈ) I; வளியுந்தன் (இ) I; வழியந்தகன் (ஆ) V.

கருத்து: பித்தம் கொண்டவன் மருந்துண்டு, பித்தம் தெளிந்து, உலகியல் நடத்துவது போலவும், பிறவிக் குருடனது கண், மருத்துவத்தால் ஒளி பெற்று, அவன் வாழ உதவுதல் போலவும், நந்தி அருள் தந்தமையால் அறியாமை நீங்கி ஞானம் பெற்றேன். என் செயல் என எதுவும் இன்றி வாழ்கின்றேன்.

வழி அந்தன் - பிறவிக் குருடன்.

குறிப்பு: சுவடி எதிலும், பதிப்பு எதிலும் ‘வழியந்தன்’ என்ற பாடம் இல்லையெனினும் மீட்டுருவாக்கம் (Reconstruction) என்னும் முறையில் இப்பாடம் ஆக்கப் பட்டது.

துன்பற்று வாழ அறியார்

2052. பிரான் மயம் ஆகப் பெயர்ந்தன எட்டும்
பராமயம் என்று எண்ணிப் பள்ளி உணரார்,
சுராமயம் உன்னித் தம் சூழ்வினையாளர்
நிராமயம் ஆக, நினைப்பு ஒழிந்தாரே.

பிரான்மய மாகப் பெயர்ந்தன வெட்டும்[1]
பராமய மென்றெண்ணிப் [2]பள்ளி யுணரார்
[3]சுராமய [4]முன்னித்தஞ் சூழ்வினை யாளர்
நிராமய [5]மாக நினைப்பொழிந் தாரே. (9)

வேறு பாடம்: 1. வெட்டுப் (ஓ) I. 2. பண்ணி (ஆ) I. 3. தராமய (ஆ) I. 4. முன்னிய (ஓ) IV; 5. மாக்கி (ஈ) II.

கருத்து: மாயையிலிருந்து தோன்றியவையும், சிவன் ஒன்றி நிற்கப் பெற்றவையுமான எட்டும் பரம் அன்றி வேறில்லை என்று எண்ணிய வாறே துயில் உணராதோர், உலகப்பொருள்கள் எல்லாம் களிப்புத் தருவன என்றே எண்ணி, வினைகளால் சூழப்படுகின்றாரே அல்லாமல் துன்பம் இன்றி வாழும் நினைப்பையே பெறவில்லை.

எட்டு - ஐம்பூதங்களும் சூரியன், சந்திரன், இயமானன் (புருடன்) என் பவையும். சிவன் இவற்றில் ஒன்றிநிற்பதால் இவை அவன் திருமேனிகள்; அட்டமூர்த்தங்கள் என்பர். இதனை மணிமேகலையும் கூறும் (சமயக் கணக்கர் திறம் கேட்ட காதை). பரம் - மேலானது; சிவம். ஆசிரியர், இதனை அருள் என்னும் பொருளில் ஆள்வார். பள்ளி உணரார் - மயக்கம் நீங்கார் என்றும் பொருள் படும். சுரா - சுராபானம், மது. ஈண்டு ஆகுபெயர்.

இரண்டும் பொருந்தா

2053. ஒன்று, இரண்டு-ஆகிநின்று, ஒன்றி ஒன்றாயினார்க்கு
ஒன்றும், இரண்டும் ஒருகாலும் கூடிடா,
ஒன்று; இரண்டு-ஒன்றே உரைதருவோர்க்கெலாம்
ஒன்று, இரண்டா நிற்கும், ஒன்றொடு ஒன்றாதே.

ஒன்றிரண் டாகிநின் றொன்றியொன் றாயினார்க்
கொன்று மிரண்டு மொருகாலுங் கூடிடா[1]
வொன்றிரண் [2]டொன்றே யுரைதரு வோர்க்கெலா[3]
மொன்றிரண் டாநிற்கு மொன்றொடொன் றாதே[4]. (10)

வேறு பாடம்: 1. கூடிடார் (ஓ) I. 2. டென்றே (ஓ) I; டன்றே (இ) I. 3. வோர்க்கலா (ஓ) II. 4. றானதே (அ) II.

கருத்து : உயிர் வேறு, இறைவன் வேறு என்னும்படி உலகியலில் இருந்து, அருள் வாழ்வில், இருவரும் ஒன்றாகிவிடுவர். உண்மை இதுவாதலின், அத்துவிதம், துவிதம் என்ற கொள்கைகள் இரண்டுமே ஒரு போதும் பொருந்தா. ஆனால் அத்துவிதம் என்றோ, துவிதம் என்றோ கொள்கை கொண்டோர் உள்ளனர். அவர்களுக்கு, முறையே, இறைவனும் உயிரும் ஒருபொருளே என்பதே அனுபவமாகக் கிடைத்தும், அவ்விருவரும் வேறுதாம்

என்பதே அனுபவமாகக் கிடைத்தும் வரும். அவர்களுடைய கொள்கைகள் தம்முள் என்றும் மாறுபட்டேநிற்கும்.

சுத்தாத்துவிதமே பொருந்துவது எனப்பெறவைத்தார்.

உடம்பும் உயிரும்

2054. உயிர்-அது நின்றால், உணர்வு எங்கும் நிற்கும்;
அயரும் அறிவு இல்லையால், உடல் வீழும்,
உயிரும் உடலும் ஒருங்கிக் கிடக்கும்,
பயிரும் கிடந்து; உள்ளம் பாங்கு அறியாரே.

உயிரது [1]நின்றா லுணர்வெங்கு நிற்கு
[2]மயரு [3]மறிவில்லை [4]யாலுடல் வீழு
முயிரு முடலு [5]மொருங்கிக் கிடக்கும்
பயிருங் [6]கிடந்துள்ளம் பாங்கறி யாரே. (11)

வேறு பாடம்: 1. வென்றா (ஆ இ) II. 2. மருவறி (அ) I; மருமறி (ஈ ஓ) I; மயிரறி (ஓ) I. 3. வில்லையா (சங்) 4. லாருடல் (ஒ, ஓ) IV; லாருடன் (அ ஈ) IV. 4. மொருக்கிச் (ஈ ஓ) IV. 5. கிடந்துள்ளப் (விசு) (தி) (வ).

கருத்து: உடம்பில் மூச்சு இயங்கினால், உயிரின் உணர்வும் இயங்கும். (அதே போல்) இயங்கும் (உயிரின்) அறிவு இல்லை என்றாலும், உடம்பு விழுந்து விடும். (இவ்வண்ணம்) உயிரும் உடம்பும் ஒன்றுக்கு ஒன்று ஆதாரமாக ஒன்றுபட்டுக் கிடக்கும். கிடந்து பயிலும் (செயல் செய்யும்; வாழும்). (இதை உணராது உயிர் வேறு, உடல் வேறு என்றும், இரண்டும் ஒன்றே என்றும் கூறுவோர்) தம் உள்ளத்தால் இவற்றின் தன்மையைச் சிந்தித்து அறியாதவரே யாவர்.

இப்பாடல் ஒட்டணியமைந்தது. கருத்தினால் மேற்பாடலின் தொடர்ச்சி யாயிருப்பது. மேற்பாடலில் இறைவனும் உயிரும் ஒன்றே என்றும் வேறே என்றும் கூறுவோரின் கொள்கைகள் இரண்டும் பொருந்தா எனக்கூறிய ஆசிரியர், இப்பாடலில், அதனை உவமையால் விளக்கி அமைந்தார்.

நிற்றல் - தங்குதல். முற்சென்ற உரைகாரர் வேறு பொருள் கூறி இடர்ப்பட்டனர் 2 ஆம் அடி: அயர்தல் - செய்தல். ஆல் - அசை. 'எனின்' என ஒரு சொல் வருவிக்க. 3 - 4 ஆம் அடிகள்: கிடக்கும்; கிடந்து பயிரும் எனக்கூட்டுக. பயிர்தல் - பழகுதல்.

உயிரை இயக்கும் பொருள்

2055. உயிர் அது வேறா, உணர்வு எங்கும் ஆகும்
உயிரை அறியில், உணர்வு அறிவு ஆகும்;
உயிர் அன்று; உடலை விழுங்கும் உணர்வை
அயரும் பெரும்பொருள் ஆங்கு அறியாரே.

உயிரது வேறா வுணர்வெங்கு மாகு
முயிரை யறியி லுணர்வறி வாகு
முயிரன் றுடலை விழுங்கு முணர்வை
யயரும் பெரும்பொரு ளாங்கறி யாரே. (12)

வேறு பாடம்: 1. முயிரின் (அ) I;

கருத்து: மூச்சு வேறு; உணர்வு வேறு. உயிர் என்பது மூச்சே. ஆனால் உணர்வு என்பது நான் என அறியும் அறிவு. உடல் முழுதும் பரவியிருப்பது மூச்சு அன்று; உணர்வே. அந்த உணர்வை இயங்கச் செய்யும் பேரறிவுப் பொருள், அவ்வுணர்வினுள்ளேயே இருப்பதை, துவிதக் கொள்கையும் அத்துவிதக் கொள்கையும் பேசுவோர் அறியமாட்டார்.

சுத்தாத்துவிதம் ஆகிய சைவசித்தாந்தம் உணர்ந்தோரே அறிவர் எனப் பெறவைத்தார்.

தலைமேல் வாணி

2056. உலகு-ஆணி, ஒண்சுடர், உத்தம சித்தன்,
நில ஆணி ஐந்தனுள் நேருற நிற்கும்;
சிலை-ஆணி ஆகிய தேவர் பிரானைத்
தலைவாணி செய்வது தன்னை அறிவே.

உலகாணி யொண்சுட [1]ருத்தம சித்தன்[2]
[3]நிலவாணி யைந்தினு ணேருற நிற்குஞ்
[4]சிலையாணி யாகிய தேவர் பிரானைத்
[5]தலைவாணி [6]செய்வது தன்னை யறிவே[7]. (13)

வேறு பாடம்: 1. ராதித்தன் (இ) IV. 2. சித்தின் (இ ஈ ஓ) I. 3. நிலைவாணி (ஆ) I; 4. சிலவாணி (சைவ) 5. தலையாணி (இ) IV தலவாணி (ஈ) I.

6. செய்து (அ) IV; யாவது (ஆ) II. 7. யறியே (அ) IV யறியவே (இ) II; யறிவதே (விசு) (தி) (வ).

கருத்து: விக்கிரகத்தில் நிலைபெற்றிருக்கும் சிவபெருமான் உலகங்களுக்கு ஆதாரம். ஒளிச்சுடர். (அன்பரின்) மேலான உள்ளத்தில் வாழ்பவன். உலகத்திற்கு மூலப்பொருள்களாகிய நிலம் முதலிய ஐந்து பூதங்களிலும் அவ்வவற்றின் தன்மையாக (இயக்கமாக) நிற்பவன் - இவனை யோகி தனது சகஸ்ராரத் தானத்தில், நாத வடிவில் உணர்வது, தனது உயிரில் உறையும் இவ்விறைவனை உணர்வதே ஆகும்.

இப்பாடலிலும், மேற்பாடல்களின் தொடர்ச்சியாக, இறைவன் உயிர்க்கு உயிராக விளங்குவதை உணர்த்துகின்றார்.

ஆணி (1 ஆம் அடி) - ஆதாரம். ஆணி (3 ஆம் அடி) - நிலைபெறுவது. வாணி - வாக்கு; இங்கு நாதம், பரநாதம் ஆகியவை. தன்னை - ஆன்மாவையும் அதன் உள்ளுறை ஒளியையும். அறிவு (4 ஆம் அடி இறுதி) அறிதல்; தொழிற்பெயர். தொழிலால் வரும் பெயராக வன்றித் தொழிலின் பெயராக நின்றது.

2057. தானந்த மாமென நின்ற தனிச்சுட
ரூனந்த மாயுல காய்நின்ற வொண்சுடர்
தேனந்த மாய்நின்ற சிற்றின்ப நீயொழி
கோனந்த மில்லாக் குணத்தரு ளாமே. (உ)

ஆன்மாவின் ஆதாரம்

2058. உண் முதல் ஆகிய ஊன் உயிர் உண்டு எனும்
கண் முதல் ஈசன்; கருத்து அறிவார் இல்லை;
நன்முதல் ஏறிய, நாமம் அற நின்றால்
தன் முதல் ஆகிய சத்து-அது ஆமே.

[1]உண்முத லாகிய வூனுயி ருண்டெனுங்[2]
[3]கண்முத லீசன் கருத்தறி வாரில்லை
நன்முத லேறிய நாம மறநின்றாற்
றன்முத [4]லாகிய [5]சத்தது வாமே. (14)

வேறு பாடம்: 1. உன்முத (அ ஈ) I; இண்முத (இ ஒ) I. 2. கொண் டெனும் (ஆ இ) IV. 3. கன்முத (அ ஆ இ ஈ ஒ) I. 4. லாகித் (அ ஒ) III. 5. தத்துவமாமே (அ ஈ ஒ ஓ) III.

கருத்து: உணவை ஆதாரமாகக் கொண்ட உடம்புக்கு உண்மையான ஆதாரம் உயிர். அது போல், அவ்வுயிரின்கண், முதலாக (ஆதாரமாக) நிற்பவன் ஈசன். இவ்வுண்மையைப் பலரும் அறியார். (எப்பொழுது அறியக்கூடும் என்றால்) அனுபவத்தில் சிவனை உணரும் உயிருணர்வு சிறந்து எழ, சீவபோதம் கெட்டு நின்றால், ஆன்மாவின் ஆதாரமாகிய உண்மைப்பொருள் விளங்கித் தோன்றும்.

உண் - உணவு. முதனிலைத் தொழிற் பெயர். 2 ஆம் அடித் தொடக்கத்தில் உயிரின் கண் என ஒரு சொல் வருவிக்க. எனும் - உவமவுருபின் பொருளில் வந்தது. நன்முதல் - சிவன். ஏற என்பது ஏறிய எனத் திரிந்தது.

தத்துவங்கட்கு அப்பால்

2059. இந்தியம், அந்தக் கரணம் இவை உயிர்,
வந்தன சூக்கம் உடலன்று, மான் - அது
தந்திடும் ஐவிதத்து ஆற்றற் புருடனும்
முந்துஉளம் மன்னும் ஆறாறு முடிவிலே.

[1]இந்திய மந்தக் கரண மிவையுயிர்
[2]வந்தன [3]சூக்க முடலன்று மானது[4]
தந்திடு [5]மைவிதத் தாற்றற் புருடனு
முந்துள மன்னுமா [6]றாறு முடிவிலே. (15)

வேறு பாடம்: 1. இந்திரிய (அனை. சுவ) (விசு) பதிப்பின் பாடம் மேற்கொள்ளப் பெற்றது. 2. வந்ததன் (அ) I. 3. சூக்குமம் (ஓ) II. 4. வானது (விசு), மானன்று (தி) 5. மைவியத் (அ ஓ) I; மைவிதத்தாபித்தற் (ஓ) I; மைவியத்தற் (ஆ இ) I; மவ்வியத்தத் (தி) 6. மாறாது (அ) I.

கருத்து: ஆன்மா ஞானேந்திரிய, கன்மேந்திரியங்கள், அந்தக் கரணம், பிராணன் ஆகியவை வந்து அமைந்தனவாகிய சூக்கும வுடலோ தூலவுடலோ அன்று. இவை பிரகிருதி மாயையிலிருந்து தோன்றியவையே. வித்தியா தத்துவங்கள் ஆகிய காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்னும் ஐந்துவகை ஆற்றல்களை ஆளும் புருடனோ என்றால்,அதுவும் அன்று. (அதுவும் ஒரு தத்துவமே. அது இவ்வைந்துடன் அசுத்தமாயையில் தோன்றுவதே) இவை எல்லாம் உள்ளிட்ட முப்பத்தாறு தத்துவங்களும் அல்லாதது. அவற்றை விலக்கி நிற்கும்பொழுது, ஆன்மா தன்னைத் தானே உணரும்.

கொண்டு கூட்டு: முந்து உளம், இந்தியம், அந்தக் கரணம், உயிர் இவை வந்தன சூக்கம் உடல் அன்று; மானது தந்திடும், ஐ விதத்து ஆற்றல் புருடனும் (அன்று), ஆறாறு முடிவிலே மன்னும்''- எனக் கூட்டுக. முந்து உளம் - உடலுக்கு முன்பே உள்ள ஆன்மா.

117. கேடு கண்டிரங்கல்

ஓயாத வினை

2060. வித்துப் பொதிவார் விதைவிட்டு, நாற்றுவார்
அற்ற தம்வாழ்நாள் அறிகிலர் பாவிகள்,
உற்ற வினைத்துயர் ஒன்றும் அறிகிலர்,
முற்றுஒளி தீயின் முனிகின்றவாறே.

வித்துப் பொதிவார் [1]விதைவிட்டு நாற்றுவா
ரற்றதம் வாணா [2]ளறிகிலர் பாவிக
ளுற்ற வினைத்துய ரொன்று மறிகிலர்
முற்றொளி [3]தீயின் [4]முனிகின்ற வாறே. (1)

வேறு பாடம்: 1. விரைவிட்டு (அனை. சுவ) 2. ளறிகிலாப் (சங்) 3. தீயல் (அ) I; தீ முன் ஈ நின்ற (தி); யீயன் (த) 4. முளிகின்ற (வ)

கருத்து: சில மாந்தர் விதைகளைச் சேமிப்பர். அதில் ஒரு பகுதி எடுத்து விதைப்பர். நாற்றுப் பிடுங்கி நடுவர். வாழ்நாளுக்கு வரையறை உண்டு என்பதை அவர் அறியார். அவருள் பாவம் செய்தோர், அதன் பயனாகத் துன்பம் விளைந்த போது, அது தம் பாவவினையால் வந்தது என்பதைச் சிறிதும் அறியார். அவர்கள் இவ்வாறு வினைகளைப் பெருக்கி, தீயினால் எரிக்கப்பட்டு மறைவார்.

முதலடியில் ஒட்டணி அமைந்துள்ளது. அதனால் உணர்த்தப்படும் பொருள்:- வித்துப் பொதிவார் - சஞ்சித வினையைச் சேர்ப்பார். விதைவிட்டு நாற்றுவார் - விதைத்து, நாற்று நடுவது போல், பிராரத்தத்தை அனுபவிக்கும்போதே ஆகாமியத்தை உண்டாக்குவர்.

முனிகின்ற - முனியப்படுகின்ற எனச் செயப்பாட்டு வினையின் பொருள் தந்தது.

2061. போது சடக்கெனப் போகின் றதுகண்டும்
வாதுசெய் தென்னோ மனிதர் பெறுவது
நீதியு ளேநின்று நின்மலன் றாள்பணிந்
தாதியை யன்பி லறியகில் லார்களே. (க)

உடம்புக்கு வந்த கதி

2062. கடன்கொண்டு, நெற்குற்று, கையரை ஊட்டி
உடம்பினை ஓம்பி உயிரார் திரிவர்;
தடங்கொண்ட சாரல் தழல்முருடு ஏறி
இடங்கொண்டு உடலார் கிடக்கின்ற வாறே.

கடன் கொண்டு [1]நெற்குற்றுக் கையரை யூட்டி[2]
யுடம்பினை யோம்பி [3]யுயிரார் திரிவர்
தடங்கொண்ட சாரற் [4]றழன்முரு டேறி
யிடங்கொண் டுடலார் கிடக்கின்ற வாறே. (2)

வேறு பாடம்: 1. நெற்குத்துக் (இ ஒ) I. 2. நீட்டி (ஆ) II. 3. யுயிராத் (விசு) (தி) 4. றழன்முருட் (அனை. சுவ.)

கருத்து: கடன் கொண்டேனும் நெல் பெற்று, அதைச் சோறாக்கி, வஞ்சகராகிய ஐம்புலன் உணர்வை வளர்த்து, உடம்பைக் காத்து, உயிரார் (என்றும் இருப்போம் என்று) திரிகின்றார். (ஆனால்) மலைச் சாரலில் உள்ள மரங்களில் தீப்பற்றுவது போல (அம்மரங்களை அழிப்பது போல) இந்த உடல் கட்டை விறகில் ஏறிக் கிடக்கிறது. (சிறிது போதில் எரிந்து அழியும்)

காட்டு மரங்களில் யாரும் தீ வைப்பதில்லை. அவை உரசுவதால் தீப்பற்றி அவற்றையே அழிக்கின்றது. அதுபோல், மனிதரின் வாழ்நாள் முடிவு, பிறரால் உண்டாக்கப்படுவதன்று. வினை நுகர்ச்சி முடிந்தால், வாழ்நாள் தானே முடியும்.

உயிரார், உடலார் என்பன எள்ளற்குறிப்பு. கடன் கொண்டேனும் உடம்பை வளர்த்தால், நெடு நாள் இருக்கலாம் என்ற உயிரின் எண்ணத்தை 'உயிரார் திரிவார்' என்பதால் புலப்படுத்தினார். இஃது எள்ளற் குறிப்பே. முருடு - விறகு; ஆகுபெயர்.

பசுஞானம் பயன் தருமா?

2063. விரைந்து அன்று நால்வர்க்கு மெய்ப்பதி சூழ்ந்து
புரந்த கல்லால் நிழல் புண்ணியன் சொன்ன
பரம் தன்னை ஓராப் பழமொழியாளர்
உரம் தன்மை ஆக ஒருங்குகின்றார்களே.

விரைந்தன்று நால்வர்க்கு மெய்ப்பதி சூழ்ந்து
புரந்தகல் லானிழற் [1]புண்ணியன் சொன்ன
பரந்தன்னை யோராப் [2]பழமொழி யாளர்
ருரந்தன்மை யாக [3]வொருங்குகின் றார்களே[4]. (3)

வேறு பாடம்: 1. புண்ணியஞ் (ஓ) I. 2. பழிமொழி (விசு) (தி) (வ) 3. வொருங்கிநின் (விசு) (தி) 4. றாரே (விசு).

கருத்து: சிவபெருமான் சனகன் முதலிய முனிவர்களின் வேண்டுகோளுக்கு விரைந்து அருளி, கல்லால் மரநிழலில் வீற்றிருந்து, உண்மையான தலைவன் யார் என்பது பற்றி ஆய்ந்து கூறிய மேலான உபதேசத்தைச் சிந்தியாது, பழைய பொய்மைகளையே நம்பி வாழும் மாந்தர், பசுஞானமே மெய்ஞ்ஞானம் என்று, அதில் ஒடுங்கி நிற்கின்றனர்.

மேற்பாடல்களில் உடம்பை உண்மை என நம்பியவரின் கேடு கூறிய வர், இப்பாடலில் ஆன்மாவே (பசுஞானமே) கடவுள் என எண்ணுவோரின் கேடு கூறினார். தன்மை - ஆன்மா. உரம் - அறிவு, ஞானம்.

சிவனடியார்க்கே பேரின்பம்

2064. நின்ற புகழும், நிறைதவத்து உண்மையும்
என்றும் எம் ஈசன் அடியவர்க்கே நல்கும்
அன்றி, உலகம் அது இது தேவு என்று
குன்றுகையாலே குறைப்பட்ட வாறே.

நின்ற புகழு நிறைதவத் துண்மையு
மென்றுமெம் மீச னடியவர்க் கேநல்கு
மன்றி யுலக மதுவிது தேவென்று
குன்றுகை யாலே குறைப்பட்ட வாறே. (4)

கருத்து: சிவபெருமான் தன்னை வழிபடும் அடியவர்க்கே நிலையான புகழையும், தவத்தின் பயனாம் நிறையின்பத்தையும் வழங்குவான். ஆனால், மாந்தர் தத்தமக்குத் தோன்றியவாறு தெய்வம் கொண்டு, நிறைஞானம் பெறாமல் போவதால், புகழும் பேரின்பமும் பெறாராயினர்.

இதில் மற்றொரு தெய்வங் கொண்டாரின் கேடு கூறினார்.

பிறப்பு வளர்ப்பையும் அறியவில்லை

2065. இன்பத்துளே பிறந்து, இன்பத்துளே வளர்ந்து
இன்பத்துளே நினைக்கின்றது இது மறந்து
துன்பத்துளே சிலர், சோறொடு கூறை என்
துன்பத்துளே நின்று தூங்குகின்றாரே.

இன்பத்து ளேபிறந் தின்பத்து ளேவளர்ந்
தின்பத்து [1]ளேநினைக் கின்ற திதுமறந்
[2]துன்பத்து ளேசிலர் சோறொடு கூறையென்
துன்பத்து ளேநின்று தூங்குகின் றாரே[3]. (5)

வேறு பாடம்: 1. ளேதிளைக் (த) 2. தின்பத்து (அ) I. 3. றார்களே (அ ஆ இ ஈ ஓ) II.

கருத்து: இன்பத்தில் பிறந்து, இன்பத்தில் வளர்ந்தும், இன்பத்தையே நினைப்பதைவிட்டு, சிலர் துன்பத்திலே அழுந்தி, உணவு என்றும் உடை என்றும் அலைந்து, வினைகளைப் பெருக்கி, துன்பத்தினை மேன்மேலும் அனுபவித்துச் செய்வதறியாது வாழ்கின்றனர்.

இன்பத்தில் பிறத்தல் - சிவனது அருள் நோக்கத்தாற் பிறந்தமை. இன்பத்தில் வளர்தல் - சிவன் தந்த தனுகரண புவனங்களை அனுபவித்தல். இன்பத்துள் நினைத்தல் - சிவனைச் சார்ந்து எதையும் உணர்தல். துன்பத்தில் அழுந்துதல் - புலன் இன்பங்களுக்காக விரும்பி, மீண்டும் மீண்டும் துன்புறுதல். துன்பத்தில் நிற்றல் - வினையிலிருந்து மீளமாட்டாமை.

இது வினைபெருக்குவார் கேடு கூறிற்று.

பெற்று இழந்தார்

2066. பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி பேணார்
பெறுதற் கரிய பிராணிக ளெல்லாம்
பெறுதற் கரியதோர் பேறிழந் தாரே. **(6)**

கருத்து: பெறுதற்கு அருமையான மனிதப் பிறப்பைப் பெற்றும், (மனிதன் பெறக் கூடிய அருளறிவால் அன்றி வேறொன்றால்) பெறவியலாத இறைவன் திருவடியை வழிபடமாட்டாத மாந்தர் யாவரும், பெறற்கரிய நற்பேறாகிய வீட்டின்பத்தினை இழந்து விட்டனர்.

பிராணி : பிராணனை - மூச்சுக் காற்றை - வயப்படுத்துதல் மாந்தர்க்கே உரியது ஆதலின் 'பெறுதற்கரிய பிராணி' என்றார்.

சிற்றின்பமே தொழிலா?

2067. 'ஆர்வ மனமும், அளவு இல் இளமையும்
ஈரமும் நல்லர்' என்று இன்புறு காலத்து,
தீர வருவது ஓர் காமத்தொழில் நின்று
மாதவன் இன்பம் மறந்தொழிந்தாரே.

[1]ஆர்வ மனமு மளவி லிளமையு
மீரமு [2]நல்லரென் றின்புறு காலத்துத்
தீர வருவதோர் காமத் தொழினின்று
மாதவ [3]னின்ப மறந்தொழிந் தாரே. (7)

வேறு பாடம்: 1. ஆர (அ ஈ ஓ) I. 2. நல்லவென் (விசு) (தி) (வ) 3. வின்ப (ஓ) III; மின்ப (ஆ) I; ரின்ப (இ) IV.

கருத்து: சிலர் ஆர்வம் உடைய மனமும், காலத்தே பயன்கொள்ளத் தக்க, மிக்க இளமையும், அன்பும் உடையர் ஆதலின், (இவர் இறைவன் அடிக்கு) நல்ல அன்பர் எனச் சான்றோர் மகிழும் காலத்தில், இவை யாவும் பயனற்று ஒழியச் சிற்றின்பம் பெறுதலிலேயே தொடர்ந்து முயன்று, சிவானந்தத்தை மறந்தே போயினர்.

உள்ளத்து எழும் ஞாயிறு

2068. இப்பரிசே இளஞாயிறு போல் உரு
அப்பரிசு அங்கியின் உள்உறை அம்மானை,
இப்பரிசே கமலத்து உறை ஈசனை
மெய்ப்பரிசே வினவாது இருந்தோமே.

இப்பரி [1]சேயிள ஞாயிறு போலுரு
வப்பரி சங்கியி னுள்ளுறை யம்மானை[2]
யிப்பரி சேகம லத்துறை யீசனை
மெய்ப்பரி சேவின [3]வாதிருந் தோமே. (8)

வேறு பாடம்: 1. சேயுள (அ) I. 2. யம்மனை (அனை. சுவ.) 3. வாவிருந் (அ இ ஈ ஒ) III (இப்பாடத்திற்கு ஈறு கெட்ட எதிர்மறை வினையெச்ச மாகப் பொருள் கொள்க.)

கருத்து: எழுகின்ற சூரியன் போன்ற உருவம், இங்கே என் புருவ மத்தியில் தோன்றும் பெருமானுடையது. அங்ஙனம் இங்குத் தோன்றும் வகையில், மூலக்கனலின் உட்சத்தியாக அத்தலைவன் உறைகின்றான், புருவத்திடைக் காட்சியின் பின்னர், அவன் சகஸ்ராரத் தாமரையிலும் தோன்றுவான். அத்தகைய இறைவனை, நம்மிற் பலர் ஆராயாமல் இருந்தோமே.

"இப்பரிசே" என்னும் குறிப்பால், இஃது ஆசிரியரின் அனுபவம் என்க. 3-ஆம் அடியில், "இப்பரிசு" என்பது, இதனைத் தொடர்ந்து எனப்பொருள் தரும்.

இதுதான் வாழ்வின் பேறு

2069. [1]கூடகில் லார்குரு வைத்த குறிகண்டு[2]
நாடகில் லார்நயம் பேசித் திரிவர்கள்
பாடகில் லாரவன் [3]செய்த பரிசறிந்
தாடவல் லாரவர் [4]பேறிது வாமே. (9)

வேறு பாடம்: 1. கூடவல் (த) 2. நெறிகண்டு (ஈ) IV. 3. வைத்த (த) 4. பேறெது (விசு) (தி) (வ) (த)

கருத்து: குருபிரான் காட்டிய இலட்சியத்தை உணர்ந்து, அதை எய்தமாட்டார். அதற்குரிய வழியை ஆராயமாட்டார். பேச்சின்பமே

கண்டு ஆடல்களில் வீண்பொழுது போக்குவர். இறைவன் நமக்குச் செய்த நன்மையை அறிந்து, அவனைப்புகழ்ந்து பாடமாட்டார். (உலகியலிற் களிப்புற்றுத் திளைப்பர்.) அவர்தம் வாழ்வின்பேறு இதுவே!

"ஆடவல்லார்" என்பதைத் "திரிவர்" என்பதன் பின் கூட்டுக.

நாள் வழிபாடு ஏன்?

2070. நெஞ்சு நிறைந்து அங்கு இருந்த நெடுஞ்சுடர்
நம் செம்பிரான் என்று, நாதனை நாள்தொறும்
துஞ்சும் அளவும் தொழுமின்; தொழாவிடின்,
விஞ்சத்து விட்டதோர் ஆனையும் ஆமே.

நெஞ்சு நிறைந்தங் கிருந்த நெடுஞ்சுடர்
நஞ்செம் பிரானென்று நாதனை நாடொறுந்
துஞ்சு மளவுந் தொழுமின் றொழாவிடின்
[1]விஞ்சத்து விட்டதோ ரானையு மாமே. (10)

வேறு பாடம்: 1. னஞ்செற்று (ஓ) I; லஞ்செத்து (ஆ) I; லஞ்சுற்று (விசு) லஞ்சற்று (தி) (வ).

கருத்து: "நமது செம்பொருள் - இறைவன், உயிருணர்வில் நிறைந்து நின்ற பேரொளி" என்று அனுபவத்தில் கண்டு, அத்தலைவனை, இறக்கும் வரை நாளும் வணங்குக. இல்லையேல், அவன் விந்திய மலையில் விடப்பட்ட யானைபோலப் புலனாகாது போவான்.

இறைவன் யானை போலப் பெரிய பொருளாயினும், உலகியல் எண்ணங்களுக்கு இடையே அவன் மறக்கப்படுதலின், 'விந்தத்துவிட்ட யானை' என்றார். சுடராய் நிற்பவன், மறக்கப்படுதலின் 'ஆனையும் ஆம்' என்றார். விஞ்சம் - விந்தம், போலி. விந்தமலை உவமையாகியது, அது கரிய மலை எனப்படுதலின் நிறம் ஒத்தலின், யானை தனியே தோன்றாது.

பிறர் "அஞ்சற்றுவிட்டதோர் ஆனையுமாமே" எனப் பாடம் கொண்டு, வினைமுடிவு காட்டாமல், இடர்ப்பட்டு உரை கூறினர்.

வினைமுடிவு: "நாதன் விஞ்சத்து விட்டதோர் ஆனையும் ஆம்" என வினைமுடிவு செய்க.

அருளுக்கு உருகவேண்டாமா?

2071. விருகம், மனிதர்கள், மிக்கோர், பறவை
ஒருவர் செய்த, அன்பு வைத்து உன்னாதது இல்லை;
பருகுவர், ஓடுவர், பால்-பயன் கொள்வர்
திரு மரு மாதவம் சேர்ந்துணராரே.

[1]விருக [2]மனிதர்கண் மிக்கோர் பறவை
யொருவர்செய் தன்புவைத் துன்னாத தில்லை
பருகுவ ரோடுவர் [3]பாற்பயன் கொள்வர்
திருமரு மாதவஞ் [4]சேர்ந்துண ராரே. (11)

வேறு பாடம்: 1. மிருக (சங்) 2. மனிதர் (சுவ.) த - பதிப்பின் பாடம் மேற் கொள்ளப்பெற்றது. 3. பார்பயன் (ஓ) I. 4. செய்துணராரே (ஆ இ) III; சேர்ந்துணர்ந்தாரே (விசு) (தி) (வ).

கருத்து: விலங்கு, மனிதர், தேவர், பறவை முதலிய பிறவிகளில் பிறந்தோருக்கு, இறைவன் செய்த அருள் எதுவும், அன்புடன் எண்ணவேண்டாததாக இல்லை. பெரியதவம் செய்து, அதனால் இறைவனை உணரப்பெறாதோர், அவன் அருட்செயல்களை எண்ணி இன்புறுதலைவிட்டு, உலக வின்பம் நுகர்வதும், மேன் மேலும் நுகர்தற்காக அலைவதும், உலகப் பொருள்வகை தோறும் என்ன என்ன பயன் உண்டோ, அவற்றை எல்லாம் கொண்டும் வாழ்நாளைப் போக்குவர்.

செய்த - செய்த அருள். வினையாலணையும் பெயர். பால் - வகை.

வேறு என்று விட்டுவிடவில்லை

2072. நீதியிலோர் பெற்ற பொன்போல இறைவனைச்
சோதியில் ஆரும் தொடர்ந்து அறிவார் இல்லை,
ஆதி அயன் என்று, அமரர்பிரான் என்று-
(அ) நாதியே வைத்தது நாடுகின்றேனே.

நீதியி லோர்பெற்ற பொன்போ லிறைவனைச்
சோதியி லாருந் தொடர்ந்தறி வாரில்லை
யாதி [1]யயனென் றமரர் பிரானென்ற[2]
நாதியே [3]வைத்தது நாடுகின் றேனே. (12)

வேறு பாடம்: 1. யானென் (ஆ) IV; பயனென் (தி) 2. பிரானென்று (அனை. சுவ) V. 3. வையக (அ) IV.

கருத்து: நீதிமுறை இல்லாதவர் கெடுவழியில் ஈட்டிய செல்வம் அவரால் அனுபவிக்கப் பெறாததைப் போல, இறைவனை அனுபவத்தில் சோதிக்காட்சியாகப் பெறுபவர் யாரும் இல்லை. யானோ, "யாவரையும் படைப்பவன் என்றும், தேவதேவன்" என்றும் அநாதி காலம் தொட்டுக் கூறப்படும் அந்த உண்மைப் பொருளை அனுபவத்தில் பெற ஆய்வு செய்து கொண்டிருக்கிறேன்.

சிவானந்தத் தேன்

2073. இருந்தேன் மலர் அளைந்து இன்புற வண்டு
பெருந்தேன் இழைக்கின்ற பெற்றிமை ஓரார்
அருந்தேன் நுகராத, வாய்புகும் தேனை,
அருந்தேனை யாரும் அறியகிலாரே.

இருந்தேன் [1]மலரளைந் [2]தின்புற வண்டு
பெருந்தே னிழைக்கின்ற பெற்றிமை யோரா
[3]ரருந்தே [4]னுகராத [5]வாய்புகுந் தேனை
யருந்தேனை யாரு மறிய கிலாரே. (13)

வேறு பாடம்: 1. மலர்களைந் (விசு) 2. தின்புற்ற (ஆ) IV. 3. வருந் தேன் (ஓ) II. 4. னுகாது (விசு) (தி) (வ); னுகராது (சங்) 5. வாய்புகு (சங்)

கருத்து: வண்டு தேன் உள்ள மலர்களைக் கிண்டி, தேனடை கட்டும் தன்மையைச் சிந்திக்கமாட்டார். இறையனுபவம் ஆகிய அரிய தேனோ, வண்டு நுகராதது; நேராக நம் வாயில் புகுவது.

'இன்புற' என்றதால், வண்டு சுவைப்பதைப் புலப்படுத்தினார். கருவிகரணங்களுக்கு அகப்படாது, உயிருணர்விற் புலப்படுதலின் "வாய்புகும் தேன்" என்றார்.

உடம்பிலேயே இருக்கின்றது

2074. கருத்து அறியாது கழிந்தன காலம்,
அருத்தி உள்ளான் அமராபதி நாதன்;
ஒருத்தி உள்ளாள் உலகத்து உயிர்க்கு எல்லாம்
வருத்தி நில்லாது, வழுக்குகின்றாரே.

கருத்தறி யாது கழிந்தன கால
மருத்தியுள் ளானம ராபதி நாத
[1]னொருத்தியுள் ளாளுல கத்துயிர்க் கெல்லாம்
வருத்திநில் லாது [2]வழூக்குகின் றாரே. (14)

வேறு பாடம்: 1. ஒருத்தனுள்ளா னுலகத் (ஒ) IV. 2. வழுக்கின்ற வாறே (ஆ) I.

கருத்து: உலக வாழ்க்கையின் உட்பொருளை அறியாமல் மாந்தர் காலம் கழிக்கின்றனர். தேவர் தலைவனாக உள்ள அத்துணை உயர்ந்த சிவபிரான் மாந்தரின் அன்பிற்கு வயப்படுவான். மாந்தரின் உ டம்பில், சத்தி குண்டலினியாக உறைகின்றாள். ஆயின் உறங்கிக் கிடக்கின்றாள். அவளை எழுப்பிப் பயன்கொண்டு, இறையனுபவங் களைப் பெற்று வாழாமல், தவறுகின்றனர். என்னே இவரது அறியாமை!

நடுங்குவது ஏன்?

2075. குதித்து ஓடிப் போகின்ற கூற்றமும் சாரா,
விதித்தன நாட்களும் வீழ்ந்து கழிந்த;
விதிர்த்து, இருந்து என்செய்தீர்? ஆறுதிர் ஆகில்,
கொதிக்கின்ற கூழில் துடுப்பு இடலாமே.

குதித்தோடிப் போகின்ற கூற்றமுஞ் சாரா[1]
[2]விதித்தன நாட்களும் வீழ்ந்து கழிந்த
[3]விதிர்த்திருந் தென்செய்தீ [4]ராறுதி ராகிற்
கொதிக்கின்ற கூழிற் றுடுப்பிட லாமே. (15)

வேறு பாடம்: 1. சார (அ) I; சார்வா (ஓ) II; சாரார் (ஆ) I; சார்வாய் (விசு) (தி) (வ) 2. பதித்தன (ஓ) II. 3. விதித்திருந் (அணை. சுவ) அதிர்த்திருந் (துடி) 4. ரறுகில (இ) II.

கருத்து: இயமனும் நெருங்காது, தோற்று ஓடுவான். வரையறுக்கப் பட்ட வாணாட்கள் முடிந்து, வாழ்வு அதன் மேலும் நீள்கின்றது. (யோகத்தால் இவ்வாறு மரணமில்லாமையை அடைய வாய்ப்பிருக்கவும்) நீர் இறப்பை எண்ணி, அஞ்சி, நடுங்கி, செய்தவாறு என்ன? அச்சம் நீங்க வேண்டின், மூலாதாரத்தில் கனலுகின்ற மூலக்கனலில் மூச்சுக்காற்றாகிய துடுப்பை இட்டு, சுழுமுனையில் செலுத்தி, யோக அனுபவங்களைப் பெறுவீராக.

குதித்து - வெல்லப்பட்டு, "கூற்றம் குதித்தலும்" என்னும் குறட்பாக் காண்க. அக்குறட்பாவிற் கூறப்பட்ட தவத்தின் ஆற்றலையே ஆசிரியர் இத்திருமந்திரத்தும் கூறுகின்றார். சாரா - ஈறுகெட்ட எதிர் மறைவினையெச்சம் "கூற்றமும் சாரா குதித்தோடிப் போகின்ற" என மாற்றுக. வீழ்ந்து - ஓடி. விதியால் வந்த ஆயுள் முடிந்தது; அருளால் வந்த ஆயுள் தொடர்ந்தது என்க. சுழுமுனை நாடியில் இயங்கும் மூச்சு, துடுப்புப்போல, மூலக்கனலை, நெற்றிக்கும் (ஆணை என்ற சக்கரம்) தலையுச்சிக்கும் (சகஸ்ராரம்) கொண்டு செல்லும். அங்ஙனம் செய்ய வில்லையேல், சுக்கிலத்தால் பெறப்படும் உயிராற்றல் வீணே அழியும்; இறப்பு நேரும்.

காற்றுள்ள போதே ...

2076. கரை அருகு ஆறாக் கழனி விளைந்த
திரை அருகா முன்னம் சேர்ந்து இன்பம் எய்தும்
வரை அருகு ஊறிய மாதவம் நோக்கி
நரை உருவாச் செல்லும் நாள் பலவாமே.

கரையரு [1]காறாக் கழனி விளைந்த[2]
திரையரு காமுன்னஞ் [3]சேர்ந்தின்ப மெய்தும்
வரையரு கூறிய மாதவ நோக்கி[4]
நரையுரு வாச்செல்லு நாள் பல வாமே. (16)

வேறு பாடம்: 1. காறார் (ஓ) I. 2. களைந்த (ஓ) I. 3. தேர்ந்தின்ப (சங்) 4. நோக்கில் (ஓ) I. 5. வாய்ச் செல்லு (ஆ இ ஓ) I. 6. நாளில (ஓ) II.

கருத்து: ஆற்றின் கரையருகில், மற்றொரு வெள்ளம் போல, வயல் விளைந்து கிடக்கின்றது. (இதன் இயல்பு இது வாதலின்) ஆற்றில் நீர் குறையுமுன், வயலில் பாய்ச்சி, விளைவித்து உழவன் இன்பம் எய்துவான்.

இதுவரை கூறிய அடிகள் ஒட்டணி அமைந்தவை. உவமையால் உணர்த்தப்படும் பொருள் வருமாறு:- உடம்பின்கண் இருந்தே பேரின்பம் பெறலாம். சுக்கிலம் குறையும் முன் மாந்தர் யோக முயற்சி மேற்கொண்டு இன்பம் பெறுவர். இனி, பின் இரண்டு அடிகளின் பொருள் வருமாறு: -

தலையுச்சியின் அருகே அமுதம் ஊறச் செய்யும் பெரிய யோக முயற்சியின் பயனாக, நரை தோன்றாமல் பன்னாள் வாழலாம்.

தலையுச்சியை மலையென்று கூறுதல் யோக நூல் வழக்கு என்பதை முன்னும் கண்டோம். நோக்கி - காரணமாகக் கொண்டு. உருவா - உருவாமல், ஊடுருவாமல்.

முழுமுதல் தெய்வம்

2077. வரவு அறிவானை, மயங்கு இருள் ஞாலத்து
இரவு அறிவானை, செழுஞ்சுடர்ச் சோதி
முரவு அறிவான், முன் ஒரு தெய்வம் என்று
விரவு அறியாமலே மேல் வைத்த வாறே.

வரவறி வானை மயங்கிருண் ஞாலத்[1]
திரவறி [2]வானைச் [3]செழுஞ்சுடர்ச் சோதி[4]
[5]முரவறி [6]வான்முன் னொருதெய்வ மென்று[7]
விரவறி யாமலே மேல்வைத்த வாறே. (17)

வேறு பாடம்: 1. ஞானத் (ஆ இ) I. 2. யானைச் (அ) I. 3. யெழுஞ் சுடர்ச் (விசு) (தி) (வ) 4. சோதியை (ஓ) I. 5. யுரவறி (ஓ) I; யரவறி (விசு) (தி) (வ) 6. வார்முன் (ஓ) IV. 7. மென்ன (ஆ) IV.

கருத்து: உலகங்கள் தோன்றிய தோற்றத்திற்கு (படைப்பிற்குக்) காரணமானவனை, ஆன்மாக்கள் ஆணவத்துடன் வாழும் உலகங்களின் அழிவைச் செய்பவனை - அவ்விறைவன், தமது உடம்பினுள் சோதியாய்த் தோன்றி, நாதமாக முரலுதலை (ஒலி செய்தலை) அறிந்து, அவன் மூல முதல் தெய்வம் என்று உணர்ந்து, அவனோடு கூடி இன்புறுதலை அறியாமலே, மக்கள் மேலும் மேலும் (வினைகளை ஈட்டிப்) பிறந்து இறக்கின்றனர்.

முதலிரண்டு அடிகளுக்கு, உலகத்தின் படைப்பு, ஒடுக்கம் எனக் கொள்ளாது ஆன்மாவின் வினைக்கு ஏற்ற பிறப்பை அளிப்பவன் என்றும், ஆன்மாவின் ஆணவ மலம் பரிபாகம் அடைதலை அறிந்து, அதற்கு வீடுபேறு அளிப்பவன் என்றும் பொருள் கொள்ளலாம். இருள் - ஆணவ மலம். முரல்வு என்பது எதுகை நோக்கித் திரிந்தது; தொகுத்தல் என்னும் செய்யுள் விகாரம். யோகசாதனையில், நாதம், விந்து என்பவை அனுபவப்படுதலை "செழுஞ் சுடர்ச் சோதி முர(ல்)வு" என்றார். முன் ஒரு தெய்வம் - முழுமுதல் தெய்வம். உலகப் படைப்புக்கும் ஒழுக்கத்திற்கும் காரணம் ஆதலின் அவனே முழு முதல் தெய்வம். விரவு - விரவுதல், கலத்தல், அத்துவிதமாய் நிற்றல்.

2078. மறந்தொழி மண்மிசை மன்னாப் பிறவி
யிறந்தொழி காலத்து மீசனை யுள்கும்
பறந்தலம் வந்து படுதுயர் தீர்ப்பான்
சிறந்த சிவநெறி சிந்தைசெய் யீரே. (ரு)

2079. செல்லு மளவுஞ் செலுத்துமின் சிந்தையை
வல்ல பரிசா லுரைமின்கள் வாய்மையை
இல்லை யெனினும் பெரிதுள னெம்மிறை
நல்ல வரனெறி நாடுமி னீரே. (சு)

118. இதோபதேசம்

உன்னில் நில்

2080. ஒன்றே [1]குலமு மொருவனே தேவனு
நன்றே நினைமின் னமனில்லை நாணாமே[2]
[3]சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்ம்மினே. (1)

வேறு பாடம்: 1. யுலகு (ஆ) IV. 2. நாணாதே (ஓ) IV. 3. சென்று (ஓ) IV.

கருத்து: உயிர்க்குலம், தம்முள் வேறுபாடு இருப்பினும், அன்பினால் ஒன்றிநிற்க வேண்டுவதே குறிக்கோள். அவ்வொருமைப் பாட்டில் சிவம் விளங்கும். ஆதலின், யாவரிடத்தும் தயங்காது அன்பு செய்து, அன்பில் ஊன்றிநின்றால் இறப்பு இல்லை. சிவகதி பெறலாம். இந்நிறைவு இங்கே, இப்போதே பெறுதற்குரியது; வேறு உலகில் பிறந்து பெறுவது அன்று. உமது உயிருணர்வை அன்புமயமாக்கி, அதில் இடையறாது நிற்பீராக.

இடையறாது நிற்றல் தியானம். "நும் சித்தத்து நிலைபெற நின்று, நீர் நினைந்து உய்ம்மின்" எனக் கூட்டுக. நீர் - இயல்பு. ஈண்டு, அன்பு. உயிரின் இயற்கைக் குணம் அன்பு; தயை; சீவகாருணியம்.

அன்பின் உள்ளொளி அருள். அருளின் உள்ளொளி சிவம். சாதி, இனம், நாடு, மொழி, உயிர் வகை முதலிய வேறுபாடு பாராது அன்பு செய்க என்பார், "நாணாமே நன்றே நினைமின்" என்றார்.

ஆசிரியர், "அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே" என்றார், முன்னும். இப்பாடல் திருமந்திர நூலின் கருவாக அமைந்த செய்தியைத் தன்னுட்

கொண்டது, பண்டைத்தமிழர் நெறியை அறிவுறுத்துவது. உலகுக் கெல்லாம் அல்லல் நீக்கி அமைதி தருவது.

"அன்புற்று அமர்ந்த வழக்கு என்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு"

என்னும் திருக்குறள் மறையை நினைக.

வாயாரப் பாடுக

2081. போற்றிசைத்து செய்த அந்தண் கயிலைப் பொருப்பனை
நாற்றிசைக்கும் நடுவாய் நின்ற நம்பனை,
காற்று இசைக்கும், கமழ், ஆக்கையைக் கைக்கொண்டு
கூற்று உதைப்பான் தன்னைச் கூறிநின்று உய்ம்மினே.

[1]போற்றிசைத் [2]தந்தண் கயிலைப் பொருப்பனை
நாற்றிசைக் குந்நடு [3]வாய்நின்ற நம்பனைக்[4]
காற்றிசைக் [5]குங்கம ழாக்கையைக் கைக்கொண்டு
[6]கூற்றுதைப் பான்றன்னைக் கூறிநின் றுய்ம்மினே. (2)

வேறு பாடம்: 1. போற்றி செயந்தண் (ஓ) IV. 2. தான்றண் (ஆ) I. 3. வாய்கின்ற (துடி) 4. நண்பனை (இ) I. 5. குங்கடை (விசு) 6. கூற்று தைத் தான்றன்னைக் (ஓ) IV.

கருத்து: யாவரும் போற்றிய கயிலை நாதனை, யோகியின் தலையில் நான்கு பக்கங்களிலும் அவன் அனுபவம் பெற அருளி, தலையுச்சியில் நின்ற நம் தலைவனை, பிராணன் என்ற மூச்சுக் காற்று நாதமாக ஒலிப்பதும், மணம் வீசுவதுமாகிய யோகியின் உடலைத் தன் இடமாகக் கொண்டு, இயமனை உதைப்பவனை வாயாரப்பாடி உய்க.

சென்ற பாடலில் மனப்பணி கூறியவர், இங்குச் சொற்பணி கூறுகின்றார்.

2082. இக்காய நீக்கி யினியொரு காயத்திற்
புக்குப் பிறவாமற் போம்வழி நாடுமின்
எக்காலத் திவ்வுடல் வந்தெமக் கானதென்
றக்கால முன்ன வருள்பெற லாமே. (ஆ, ஔ)

எண்ணுவது கைகூடும்

2083. போகின்ற வாறே புகுகின்ற அப்பொருள்
ஆகின்ற போதும் அரன் அறிவான் உளன்,
சாகின்ற போதும் தலைவனை நாடுமின்
ஆகின்ற அப்பொருள் அக்கரை ஆகுமே.

போகின்ற வாறே புகுகின்ற வப்பொரு
ளாகின்ற போது மரனறி வானுளன்
சாகின்ற போதுந் தலைவனை நாடுமி
னாகின்ற வப்பொரு ளக்கரை யாகுமே. (3)

கருத்து: உடம்பை விட்டு உயிர் பிரியும் போது உடன் பிரிந்து, அவ்வுயிர் மீண்டும் ஓர் உடம்பிற் புகும்பொழுது உடன் புகுந்து, அதனை எந்த நாளும் பிரியாது 'ஒன்றாகும்' இறைவன் அவ்வுயிர்க்குச் சாட்சியாய் இருந்து, அதன் பக்குவத்தையும் அறிந்து கொள்கின்றான். ஆகவே மரணத்தறுவாயிலும் அவனையே நாடும் அளவிற்கு இப்பொழுதிருந்தே பயிலுக. இறுதிக்கண் நிலைக்கும் அந்த நாட்டத்தினால் விளையும் பயன் வீடு பேறாகவே இருக்கும்.

மரணம் வரை இறைவனைச் சாரும் பயிற்சி வீடுபேற்றைத் தரும், "எதைப் பாவிக்கின்றாயோ, அது கைகூடும்" என்பது வேத மொழி ஆதலின்.

2084. பறக்கின்ற வொன்று பயனுற வேண்டின்
இறக்கின்ற காலத்து மீசனை யுள்கும்
சிறப்பொடு சேரும் சிவகதி பின்னைப்
பிறப்பொன் றிலாமையும் பேருல காமே. (அ, ஔ)

ஞானத்தால் உணர்க

2085. கூடியும் நின்றும் தொழுது, எம் இறைவனைப்
பாடி உளே நின்று பாதம் பணிமின்கள்,
ஆடி உளே நின்று அறிவு செய்வார்கட்கு
நீடிய ஈற்றுப் பசு-அது ஆகுமே.

கூடியு நின்றுந் தொழுதெம் மிறைவனைப்
பாடியு ளேநின்று பாதம் பணிமின்க
ளாடியு ளேநின் றறிவுசெய் வார்கட்கு
நீடிய வீற்றுப் பசுவது வாகுமே. (4)

வேறு பாடம்: 1. தொழுதெங் குரவனைப் (ஆ இ) IV.

கருத்து: அன்பரொடு மருவியும், தனித்து நின்றும் எம் இறைவனைத் தொழுது பாடி, அகம் குழைந்து அடி பணிக; உள்ளுறுப்பு எல்லாம் உருக, ஞானத்தால் உணர்வார்க்கு, அவன் நெடுநாள் பிரிந்த - புதிதாக ஈன்ற - தாய்ப்பசுப் போல அன்பு செய்வான்.

செல்லும் கதிக்கு

2086. விடுகின்ற சீவனார் மேலெழும் போது
நடுநின்று நாடுமின் னாதன்றன் பாதங்
கெடுகின்ற வல்வினை கேடில் புகழோ
[1]னிடுகின்ற [2]தும்மை [3]யிமையவ ரோடே. (5)

வேறு பாடம்: 1. னிடுகின்றா னுன்மை (சைவ) 2. நும்மை (அ இ) I. 3. யிறையவ (அ ஓ) IV.

கருத்து: பிரியும் உயிர் மேலே எழும்பொழுது சுழுமுனையில் மூச்சுவிட்டவாறு இறைவனது திருவடியை எண்ணுக. தீவினை அழியும், இறைவன் உம்மைத் தேவபிறப்பில் பிறப்பிப்பான்.

குறிப்பு: இப்பாடலை யடுத்துச் சுவடிகளிலும் பதிப்புகளிலும் உள்ள "ஏறுடையா" என்னும் பாடல் "மாகேசுவர பூசை" இயலில் வந்தது.

2087. இன்புறு வீரறிந் தேயெம் மிறைவனை
யன்புறு வீர்தவஞ் செய்யுமெய்ஞ் ஞானத்துப்
பண்புறு வீர்பிற வித்தொழி லேநின்று
துன்புறு பாசத் துழைத்தொழிந் தீரே. (ஐ, ங)

2088. மேற்கொள்ள லாவதோர் மெய்த்தவ மொன்றுண்டு
மேற்கொள்ள லாவதோர் மெய்த்தாளு மொன்றுண்டு
மேற்கொள்ள லாவதோர் மெய்நெறி யொன்றுண்டு
மேற்கொள்ள லாம்வண்ணம் வேண்டிநின் றோர்க்கே.
(ஆ)

2089. சார்ந்தவர்க் கின்பங் கொடுக்குந் தழல்வண்ணன்
பேர்ந்தவர்க் கின்னாப் பிறவி கொடுத்திடும்
கூர்ந்தவர்க் கங்கே குரைகழல் காட்டிடுஞ்
சேர்ந்தவர் தேவரைச் சென்றுணர் வாரே. (ஆ)

பாலில் படும் நெய்போல் ...

2090. முத்தியை, ஞான முழுத்தமிழோசையை
எத்தனை காலமும் ஏத்துவர் ஈசனை;
நெய்த்தலைப் பால்போல் நிமலனும் அங்கு உளன்;
அத்தகு சோதி; அது விரும்பாரே.

[1]முத்தியை [2]ஞான [3]முழுத்தமி ழோசையை
யெத்தனை காலமு [4]மேத்துவ ரீசனை
நெய்த்தலைப் [5]பால்போ னிமலனு மங்குள
னத்தகு சோதி யதுவிரும் பாரே6. (6)

வேறு பாடம்: 1. முத்திரை (அ) I. 2. ஞானத்தை (விசு) (தி) (வ) ஞானமு (சண்) 3. முத்தமி (ஓ) II. 4. மேத்துமீனிசனை (த) 5. பாலா (இ) IV. 6. பீரோ (தி); பாரன்றே (துடி)

கருத்து: வீடுபேறாக விளங்கும் பதத்தை, ஞானம் நல்கும் தமிழின் ஓசை தரும் நலத்தை, சிவனைப் பெரியோர் அன்புடன் எத்துணைக் காலங்களும் வாழ்ந்திருந்து ஏத்துவர். பாலினிடத்து நெய் இருத்தல் போல், அவர்தம் உணர்வில் அவன் விளங்குகின்றான். அத்தகைய சோதிப் பொருளாகிய அவனை மக்கள் விரும்பாதிருக்கின்றனரே.

இறைவனைத் "தமிழ் ஓசை" என்றது, தமிழ்ப் பாடலால் அடையும் உணர்வு அவனை உணர உதவுதலின்.

2091. நியமத்த னாகிய நின்மலன் வைத்த
வுகமெத் தனையென் றொருவருந் தேறார்
பவமத்தி லேவந்து பாய்கின்ற தல்லாற்
சிவமத்தை யொன்றுந் தெளியகில் லாரே. (உ)

2092. இங்கித்தை வாழ்வு மெனைத்தோ ரகிதமுந்
துஞ்சொத்த காலத்துத் தூய்மணி வண்ணனை
விஞ்சத் துறையும் விகிர்தா வெனநின்னை
நஞ்சற் றவர்க்கன்றி நாடவொண் ணாதே. (உ)

2093. பஞ்சமு மாம்புவி சற்குரு பான்முன்னி
வஞ்சக ரானவர் வைகி லவர்தம்மை
யஞ்சுவ னாத னருநர கத்திடுஞ்
செஞ்சநிற் போரைத் தெரிசிக்கச் சித்தியே. (உ)

2094. சிவனை வழிபட்டா ரெண்ணிலாத் தேவ
ரவனை வழிபட்டங் காமாறொன் றில்லை
யவனை வழிபட்டங் காமாறு காட்டுங்
குருவை வழிபடிற் கூடலு மாமே. (உ, ஏ)

2095. நரருஞ் சுரரும் பசுபாச நண்ணிக்
கருமங்க ளாலே கழிதலிற் கண்டு
குருவென் பவன்ஞானி கோதில னானாற்
பரமென்ற லன்றிப் பகர்வொன்று மின்றே. (உ)

2096. ஆட்கொண் டவர்தனி நாயக னன்புற
மேற்கொண் டவர்வினை போயற நாடொறு
நீர்க்கின்ற செஞ்சடை நீளன் உருவத்தின்
மேற்கொண்ட வாறலை வீவித் துளானே. (உ)

119. உடலைந்து பேதம்

ஒன்றில் மூன்று

2097. காயப்பை [1]யொன்று சரக்குப் பலவுள
[2]மாயப்பை [3]யொன்றுண்டு மற்றுமோர் பையுண்டு
காயப்பைக் குண்ணின்ற [4]கள்ளன் புறப்பட்டான்
மாயப்பை [5]மண்ணாய் மயங்கிய வாறே. (1)

வேறு பாடம்: 1. யொன்றுண்டு (ஆ) II. 2 மாயப் (சண்) 3. தன்னி லே (ஓ) IV தன்னில் (ஈ) II; படைதன்னின் (சண்) 4. கள்வன் (ஓ) IV. 5. மண்ணா (விசு) (தி).

கருத்து: உடம்பு ஒரு பை; அதில் இட்ட பொருள்கள் எட்டுவகைத் தாதுக்கள். இப்பையினுள் மாயமாகிய ஒரு பை உண்டு; அதனுள் மேலும் ஒரு பை உண்டு. உடம்பினுள் மறைந்து நின்ற உயிர் வெளி

யேறினால், அதுவும் உள் நின்ற இரண்டு உடம்புகளும் மண்ணோடு மண் ஆகும்.

மாயப்பை - சூக்கும உடம்பு; மற்றுமோர் பை - காரண உடம்பு. மூன்று உடலும் தனித்தனி யல்ல; ஒன்றை யொன்று சார்ந்தவை என்பது கருத்து.

சூக்கும உடம்பு

2098. அத்தன் அமைத்த உடல் இரு கூறினில்,
சுத்தம் - அது ஆகிய சூக்குமம் சொல்லுங்கால்
சத்த, பரிச, ரூப, ரச, கந்தம்
புத்தி, மன், ஆங்காரம் புரியட்டகமே.

அத்த னமைத்த வுடலிரு கூறினிற்
சுத்தம தாகிய [1]சூக்குமஞ் சொல்லுங்காற்
சத்தப் பரிச ரூப ரசகந்தம்
[2]புத்திம னாங்காரம் [3]புரியட் டகமே[4]. (2)

வேறு பாடம்: 1. சூக்குமஞ் (ஆ இ ஈ) I. 2. புத்திமனமாங்காரம் (அ இ ஈ ஓ) II புத்தி மனாவங்காரம் (ஓ) II; புத்திமா (சண்) 3. புரியட்ட காயமே (ஓ) II. 4. டகமாமே (அ ஓ) II.

கருத்து: சிவபெருமான் படைத்ததாகிய உடம்பின் இரண்டு வகைகளுள், சுத்தம் ஆகிய சூக்கும உடம்பு ஐந்து தன்மாத்திரை களும், புத்தி, மனம், அகங்காரம் என்ற அந்தக் கரணங்களும் கொண்டு 'புரியட்டகம்' எனப் பெயர் பெறும்.

2099. எட்டினி லைந்தாகு மிந்திரி யங்களுங்
கட்டிய மூன்றுங் கரணமு மாயிடு
மொட்டிய பாச முணர்வது வாகவே
கட்டி யவிழ்த்திடுங் கண்ணுதல் காணுமே. (அ, ங)

உடல் ஒரு பொருளா?

2100. இரதம், உதிரம், இறைச்சி, தோல், மேதை
மருவிய அத்தி, வழும்பொடு, மச்சை
பரவிய சுக்கிலம் பாழாம் உபாதி
உருவம் அலால், உடல் ஒன்று எனல் ஆமே?

இரத முதிர மிறைச்சிதோன் மேதை
மருவிய வத்தி வழும்பொடு மச்சை
பரவிய சுக்கிலம் பாழா முபாதி
யுருவ [1]மலாலுட லொன்றென லாமே. (3)

வேறு பாடம்: 1. மாலாலுட (சைவ).

கருத்து: உணவின் சாரம், இரத்தம், இறைச்சி, தோல், நிணம், எலும்பு, வெண்மையான நீர், மச்சை, சுக்கிலம் - இவற்றின் காரியம் உடல் என்பது தவிர, உடல் என்று, சிறப்புக்குரிய பொருள் ஒன்று இல்லை.

மச்சை - எலும்பினுள் உள்ள வழுவழுப்பான நீர். உபாதி - காரியம். மாயா காரியம். பாழாம் - அழியத்தக்க.

காக்கும் கழல்கள்

2101. ஆரே அறிவார் அடியின் பெருமையை;
யாரே அறிவார் அருங்கலம் நின்றது,
யாரே அறிவார் அறுபத்தெட்டு யாக்கைக்கு
யாரே அறிவார் அடிக்காவல் ஆனதே.

ஆரே யறிவா ரடியின் பெருமையை
யாரே யறிவா [1]ரருங்கல நின்றது
யாரே யறிவா [2]ரறுபத்தெட் டாக்கைக்கி[3]
யாரே யறிவா ரடிக்காவ லானதே. (4)

வேறு பாடம்: 1. ரங்கவர் (விசு) (தி) (வ); ரருந்தவ (த) 2. ரறுபதோ (விசு) ரதுபத்தோ (சண்) 3. டாக்கையை (ஓ) II.

கருத்து: சிவபெருமானது திருவடியின் பெருமையை யார் அறிவார்? ஏனெனில், அஃது ஆன்மாவிற்கு அருங்கலமாக நிலைபெற்று நிற்பது. அறுபது தத்துவங்களை உடைய தூலவுடம்புக்கும், எட்டுத் தத்துவங்களை உடைய சூக்கும உடம்புக்கும் அது காவலாக நிற்பது.

இந் நூல், முதற்பகுதி: கலைச்சொல் விளக்கம் என்ற பின்னிணைப்பில், 'தாத்துவிகம்' என்ற தலைப்புக் காண்க. சூக்கும உடம்பின் எட்டுத் தத்துவங்கள் மேற்பாட்டிற் கூறப்பட்டன.

நான்கு வகை உடம்பு

2102. எண்சாண் அளவாய் எடுத்த உடம்புக்குக்
கண், கால், உடம்பில் கரக்கின்ற கைகளில்,
புண்கால் அறுபத்தெட்டு ஆக்கை புணர்க்கின்ற
நண்பால் உடம்புதான் நால் உடம்பு ஆகுமே.

எண்சா ணளவா [1]யெடுத்த வுடம்புக்குக்[2]
கண்கா லுடம்பிற் கரக்கின்ற கைகளிற்
புண்கா லறுபத்தெட் டாக்கை புணர்க்கின்ற
நண்பா [3]லுடம்புதா னாலுடம் பாகுமே. (5)

வேறு பாடம்: 1. லெடுத்த (அ ஓ ஓ) III. 2. வுடம்புக்குட் (ஓ) IV. 3. லுடம்புதன் (சண்).

கருத்து: எண்சாண் அளவுள்ள உடம்புக்கு, கண், கால், கை முதலிய உறுப்புகளில் அறுபது தத்துவங்களையும், சூக்கும வுடம்பில் எட்டுத் தத்துவங்களையும் சேர்க்கும் திருவருளால், அவ்வுடம்பே நான்கு உடம்புகள் ஆகும்.

தூல உடம்பு - அன்ன மய கோசம். மற்ற நான்கு உடம்புகள்: பிராணமய, மனோமய, விஞ்ஞானமய, ஆனந்த மய கோசங்கள்.

உயிர் சிவனிடம், சிவன் உயிரிடம்

2103. உடம்பு நாலுக்கும் உயிராய சீவன்
ஒடுங்கும் பரனோடு; ஒழியாப் பிரமம்
கடம்தொறும் நின்ற கணக்கது காட்டி,
அடங்கி, அவற்றது, யார் அறிவாரே?

[1]உடம்புநா லுக்கு முயிராய சீவ
னொடுங்கும் பரனோ [2]டொழியாப் பிரமங்
கடந்தொறும் நின்ற கணக்கது காட்டி
[3]யடங்கி [4]யவற்றதி யாரறி வாரே. (6)

வேறு பாடம்: 1. உடம்புகள் நாலுக்கு (அ இ ஓ) II; உடம்புற (ஈ) II; உடம்புதன் (ஓ) II; உடம்புக்கு (விசு) (தி) (வ); உடம்புகணாற்கு (துடி); உடம்பிற் குணாலுக் (த) 2. டொழிபரப் (ஓ) I. 3 அடங்கியே யற்றது (ஓ) II. 4. யற்றது வாரறி (சண்); யற்றதிங் காரறி (த)

கருத்து: நான்கு உடம்புக்கும் உயிராக உள்ள சீவன் சிவபரம் பொருளோடு, முத்தி நிலையில் ஒடுங்கும். அதுபோல எங்கும் வியாபகமாம் பிரமமாகிய சிவனோ, ஒரே தண்ணீர் குடங்கள் தோறும் வேறு வேறு ஆகித் தோன்றுவது போல, உயிர் தோறும் 'ஒன்றாகி', நிற்கிறான்.

வாழும் உடம்பு

2104. ஆறு அந்தம் ஆகி நடுவுடன் கூடினால்
தேறிய மூவாறும் சிக்கென்று இருந்திடும்
கூறும் கலைகள் பதினெட்டும் கூடியே
ஊறும் உடம்பை உயிருடம்பு என்னுமே.

ஆறந்த மாகி நடுவுடன் கூடினாற்
[1]றேறிய [2]மூவாறுஞ் சிக்கென் றிருந்திடுங்
கூறுங் கலைகள் பதினெட்டுங் கூடியே
யூறு முடம்பை யுயிருடம் பென்னுமே[3]. (7)

வேறு பாடம்: 1.றேறந்த வாறு (ஓ) IV. 2. மூவாறு (அ ஆ ஈ ஓ) I. 3. பென்னுமே (அ ஓ) I; பெண்ணுமே (சண்).

கருத்து: பிராண வாயு அந்தக்கரணத்துடன் சேர்ந்து சுழுமுனை நாடி வழியாக மூலாதாரம் முதலிய ஆறு ஆதாரங்களையும் கடந்து, தலையுச்சியில், சகஸ்ராரத்தில் சேர்ந்தால், அவை அழியமாட்டா. அவை சேர்ந்து நிற்க வாழ்நாள் வளரப்பெறும் உடம்பையே, (யோகியர் உலகம்) உயிர் வாழும் உடம்பு என்று கருதும்.

தேறிய மூவாறு - பத்து வாயுக்களும் நுண்ணுடம்பின் கருவிகள் எட்டும், ஆகப் பதினெட்டு. கூறும் கலைகள் பதினெட்டு - பிராசாத கலைகள் பன்னிரண்டனுள் முதல் எட்டும், சிவகலைகள் பத்தும் (இவற்றைப் பின்னிணைப்பிற் காண்க).

ஐந்து உடம்பும் அருள் வழியில்

2105. மெய்யினில் தூலம் மிகுத்த முகத்தையும்
பொய்யினில் சூக்கம் பொருந்தும் உடலையும்
கையினில் துல்லியம் காட்டும் உடலையும்
ஐயன் அடிக்குள் அடங்கும் உடம்பே.

மெய்யினிற் றூல [1]மிகுத்த முகத்தையும்
பொய்யினிற் [2]சூக்கம் பொருந்து முடலையுங்
கையினிற் றுல்லியங் காட்டு முடலையு
மைய னடிக்கு [3]ளடங்கு முடம்பே. (8)

வேறு பாடம்: 1. மிகுந்த (அ ஆ இ ஈ ஒ) I. 2. சூட்சப் (அ) IV; சூக்குமம் (ஒ) IV; ஆக்கம் (ஆ) I. 3. ளடக்கு (தி).

கருத்து: தூல உடம்பையும், அதில் தூலத் தன்மையை மிகுதிப்படுத்திய பிராணமய கோசத்தையும், பொய் போலத் தோன்றி, உள்ளதாகிய மனோமய கோசத்தையும், சுழுமுனை நாடியில் ஒளிக்காட்சி காணும் விஞ்ஞானமய கோசத்தையும் சிவபெருமானின் அருள் வழியில் இயங்கச் செய்து, தானும் அவ்வாறு இயங்குவது ஆனந்தமயகோசம்.

விஞ்ஞானம் - ஆன்ம ஞானம்; பதிஞானம். "ஐயன் அடிக்குள் அடக்கி" என, ஒருசொல் வருவிக்க.

நில்லாது, நிலைமாறும்

2106. காயும் கடும்பரி கால்வைத்து வாங்கல் போல்
சேய இடம் உண்மை செல்லவும் வல்லது
காயம் துகிற் போர்வை ஒன்றுவிட்டு, ஆங்கு ஒன்று இட்டு
ஏயுமவர் என்ன எய்திடும் காயமே.

காயுங் கடும்பரி கால்வைத்து வாங்கல்போற்
சேய [1]விடமுண்மை செல்லவும் வல்லது
[2]காயந் துகிற்போர்வை யொன்றுவிட் டாங்கொன்றிட்[3]
டேயு [4]மவரென்ன [5]வெய்திடுங் காயமே. (9)

வேறு பாடம்: 1. விட மண்மை (விசு) (தி) (வ) 2. காயத் (விசு) (தி) (வ); காயத்துகிர் (சைவ) 3. டாங்கொன்றொ (ஆ) IV. 4. மவரெ ண்ண (ஓ) I; மலரென்ன (ஓ) I. 5. வெண்ணிடுங் (ஓ) I; வேய்ந்திடுங் (சண்)

கருத்து: மனோமய கோசம், கோபத்துடன் விரைந்து பாயும் குதிரையின் வேகம் போன்ற ஒரு வேகத்தில், தொலைவில் உள்ள இடத்திற்கும் உண்மையாகவே செல்ல வல்லது. தமது உடலின்மேல் போர்வைகளை மாற்றி மாற்றிப் போர்த்து பவரைப் போல் வெவ்வேறு கோலம் பூணுவது.

மனத்தின் எண்ண விரைவையும், போக்கு மாறுபாட்டையும் கூறினார்.

உயிருடன் செல்லும் உடல்

2107. நாகம் உடல் உரி போலும், நல் அண்டசம்
ஆக, நனாவில் கனா மறந்தாற் போலும்
ஆகும் அரன்-அருளாலே சென்று அங்கங்கு
ஏகும் இடம்சென்று இருபயன் உண்ணுமே.

நாக முடலுரி போலுநல் லண்டச
[1]மாக [2]நனாவிற் கனாமறந் தாற்போலு[3]
[4]மாகு [5]மரனரு ளாலேசென் றங்கங்கு[6]
[7]வேகு [8]மிடஞ்சென் [9]றிருபய னுண்ணுமே[10]. (10)

வேறு பாடம்: 1. மாகநண் ணாவிற் கணாமறத்தல்லது (ஓ) I; நல்லது (சண்) மாகு (ஈ) I. 2. நனவிற் (அ ஈ) III; நனவிறந்தல்லது போலு (ஆ இ) II கனாவிற் (ஒ) I. 3. தல்லது போலு (ஈ ஒ ஓ) II. 4. போகலு மாகு மரனருளாலே சென் (விசு) (தி) (வ) 5. மரனாக வருளாலே (இ) I; மாணக வருளாலே (ஆ) I. 6. றங்குத்தங்குமே (ஆ இ) II. 7. யோகு (அ) I. றேகு (விசு) (தி) (வ) 8. முடன் சென் (அ) I. 9. றுறுபல (அ) IV; றிடாப்பய (இ) II. 10. னுன்னுமே (அ ஈ) I.

கருத்து: பாம்பு தோல் உரித்துப் புது உடல் தாங்குதல் போலவும், முட்டையிலிருந்து வெளிவரும் குஞ்சு வேறு கூட்டில் வாழ்வது போலவும், கனவில் கண்டதை நனவில் மறத்தல் போலவும், உயிர் சிவனருளாலே, வேறு பிறப்பிற் சென்று வினைப்பயனை அனுபவிக்கும். (இவ்வாறு செல்லும் பொழுது சூக்கும உடம்புடன் செல்லும்.)

நரக, சுவர்க்கங்களில் புகும் உடல்

2108. உண்டு நரக சுவர்க்கத்தி லுள்ளன
கண்டு [1]விடுஞ்சூக்கங் காரண னாச்சில[2]
பண்டு தொடரப் பரகாய யோகிபோற்
பிண்டட மெடுக்கும் பிறப்பிறப் பெய்தியே. (11)

வேறு பாடம்: 1. விடுஞ்சூக்கக் (இ) I. 2. னாகச்சில (அ) II; னாஞ்செயல் (ஓ) II; னாச்செலப் (சண்); மாச்செல (விசு).

கருத்து: ஒருவன் தூலவுடம்பில் வினைப்பயன்களை அனுபவித்து, உடலைவிட்டு நீங்கி, சூக்கும வுடலோடு நரக, சொர்க்கங்களில் அனுபவிப்பனவற்றை நுகர்ந்து, சஞ்சித வினையின் எச்சம் தொடர்வதால், பரகாய நுழைவு செய்யும் ஒரு யோகியைப் போல், மீண்டும் ஒரு தூலவுடம்பில் புகும்.

சூக்கம் காரணன் - சூக்கும உடலினையுடைய கருத்தா.

2109. தானவ னாகிய தற்பரந் தாங்கினோ
னானவை மாற்றிப் பரமத் தடைந்திடு
மேனை யுயிர்வினைக் கெய்து மிடஞ்சென்று
வானு நிலனும் புகுந்து வருந்துமே. (அ)

யாருக்கு, எது உடம்பு?

2110. ஞானிக்குக் காயம் சிவமாம்; அஞ்ஞானிக்கு
ஊன் நிற்கும் காயம் உடம்பு ஆகும்; யோகிக்கு
மேல்நிற்கும் காயமே விந்து நாதாந்தமாம்;
மோனிக்குக் காயம் முப்பாழ் கெட்ட முத்தியே.

ஞானிக்குக் காயஞ் [1]சிவமாமஞ் ஞானிக்கு
[2]வூனிற்குங் காய முடம்பாகும் யோகிக்கு
[3]மேனிற்குங் [4]காயமே [5]விந்துநா தாந்தமா[6]
மோனிக்குக் காயமுப் பாழ்கெட்ட முத்தியே. (12)

வேறு பாடம்: 1. சிவபரமஞ் (அ) IV; சிவமே தனுவாஞ் (ஓ) II; சிவ மேதனு வாகும் (சண்) சிவமேய்நனுவாமஞ் (த); மென்றுஞ்சிவமாமஞ் (ஈ) IV. 2. ஞானிக்குக் காய முடம்பே யதுவாகும் (ஓ ஈ) II; காயமுடம்பேயது வாகும் (அ ஓ) II; ஞானிக்கூன்னிற்கும் உடம்பேயதுவாகும் (த) 3. ஞானிக்கு விந்துவும் யோகிக்கு விந்துவாம் (ஓ) I. 4. போகிக்கு (அ) II; யோகிக்கு (ஈ ஓ) II. 5. விந்துவும் (அ ஓ) IV. 6. நாதமு (ஈ ஓ) IV நாதமா (அ) IV.

கருத்து: ஞானிக்கு உடம்பு சிவமே. அஞ்ஞானிக்கோ, தூல வுடம்பே உடம்பு. யோகிக்கு விந்து நாதங்களே உடம்பு. மௌனிக்கு, மும்மலமும் கெட்ட முத்தியே உடம்பு.

மலமே உடம்பு

2111. விஞ்ஞானத்தோர்க்கு ஆணவமே மிகுதனு;
தைஞ்ஞானத்தோர்க்குத் தனு மாயைதான் என்ப;
அஞ்ஞானத் தோருக்குக் கன்மம் தனு ஆகும்;
மெய்ஞ்ஞானத்தோர்க்குச் சிவதனு மேவுமே.

விஞ்ஞானத் [1]தோர்க்கா ணவமே மிகுதனுத்
[2]தைஞ்ஞானத் தோர்க்குத் தனுமாயை தானென்ப[3]
[4]வஞ்ஞானத் தோருக்குக் [5]கன்மந் தனுவாகு
மெய்ஞ்ஞானத் தோர்க்குச் சிவதனு மேவுமே. (13)

வேறு பாடம்: 1. தோர்க்கு மானவ மேமிகுத் (அ) I; தோர்க்காணவே (ஆ) I. 2. தஞ்ஞானத் (அ) IV; வெஞ்ஞானத் (ஓ) II வெய்ஞ்ஞானத் (த) 3. தானென்று (அ) II. 4. வைஞ்ஞானத் (ஆ ஒ ஓ) I. 5. கரணந் (ஓ) II; கன்ம (விசு)

கருத்து: விஞ்ஞானாகலருக்கு ஆணவமே உடம்பு. பிரளயாகலருக்கு மாயை. சகலருக்குக் கன்மம். மும்மலமும் கெட்ட மெய்ஞ் ஞானிக்குச் சிவமே உடம்பு.

2112. மலமென் றுடம்பை மதியாத வூமர்
தலமென்று வேறு தரித்தமை கண்டீர்
நலமென் றிதனையே நாடி யிருக்கிற்
பலமுள்ள காயத்திற் பற்றுமிவ் வண்டத்தே. (ஏ, ங)

2113. நல்ல வசனத்து வாக்கு மனாதிகள்
மெல்ல விளையாடும் விமல னகத்திலே
அல்ல செவிசத்த மாதி மனத்தையு
மெல்லத் தரித்தார் முகத்தார் பசித்தே. (ஔ)

2114. பண்ணாருங் காமம் பயிலும் வசனமும்
விண்ணாம் பிராணன் விளங்கிய சத்தமும்
புண்ணா முடலிற் பொருந்து மனத்தையு
மண்ணாந்து பார்க்க வழியு முடம்பே. (ஏ ஔ)

2115. அழிக்கின்ற வோருடம் பாகுஞ் செவிகண்
கழிகின்ற காலவ் விரதங்க டானம்
மொழிகின்ற வாக்கு முடிகின்ற நாடி
யொழிகின்ற வூனுக் குறுதுணை யில்லையே. (க)

2116. இலையா மிடையி லெழுகின்ற காம
முலைவாய நெஞ்சத்து மூழ்கு முளத்துத்
தலையாய மின்னுட றாங்கித் திரியுஞ்
சிலையாய சித்தஞ் சிவமுன் னிடைக்கே. (ஔ)

120. அவத்தை பேதம்

(i) கீழாலவத்தை

2117. ஐயைந்து மத்திமை யானது சாக்கிரம்
கைகண்ட பன்னான்கிற் கண்டங் கனாவென்பர்
பொய்கண் டிலாத புருடனித யஞ்சுழுனை
மெய்கண் டவனுந்தி யாகுந் துரியமே. (ட)

ஐந்து உணர்வு நிலைகள்

2118. முப்பதோடு ஆறில் முதல் நனா ஐயைந்தாய்,
செப்பு அதின் நான்காய், திகழ்ந்து இரண்டு ஒன்று ஆகி
அப்பதி யாகும் நியதி முதலாகச்
செப்பும் சிவம் ஈறாய்த் தேர்ந்து கொள்வீரே.

முப்பதோ டாறின் [1]முதனனா வையைந்தாய்ச்
செப்பதி னான்காய்த் திகழ்ந்திரண் டொன்றாகி
[2]யப்பதி யாகு நியதி முதலாகச்
[3]செப்புஞ் சிவமீறாய்த் தேர்ந்துகொள் வீரே[4]. (1)

வேறு பாடம்: 1. நனா வினவ வைந்தாய் (அ) I; முதல் விட்டங்கை யைந்தாய்ச் (இ) IV; முதனனா வைந்தாகச் (சண்) 2. யிப்பத்தியாய் நிற்கும் நியமங்களஞ்சதாய் (அ ஈ) II. 3. யப்பத்தி செய்வா ராய்ந்து கொள்வீரே (ஆ இ) II. 4. ளீரே (சண்).

கருத்து: தத்துவங்கள் முப்பத்தாறனுள், சாக்கிர நிலையில் (விழிப்பு) இருபத்தைந்து தத்துவங்களுடன் உயிர் இருக்கும். சொப்பன

(கனவு) நிலையில் நான்கு தத்துவங்களுடன் இருக்கும். சுழுத்தி (உறக்க) நிலையில் புருடனும் சித்தமுமாக, மொத்தம் இரண்டாக இருக்கும். துரிய (பேருறக்கம்) நிலையில் புருடன் மட்டுமே உணரும். தத்துவங்கள் நிலம் முதல் சிவம் வரை 36 என அறிக.

பதி - நிலம். நியதி - முறை. துரியாதீதம் என்பது, கீழாலவத்தையில், உயிர்ப்பு அடக்கம்; பேருறக்கம் கடந்த நிலை.

இவ்வைந்தும் உணர்வு நிலைகள். வடமொழியில் அவத்தை என்பர். சாக்கிரம்: 25 தத்துவங்கள்: ஞானேந்திரியம் 5, கன்மேந்திரியம் 5, தன்மாத்திரை 5, கன்மேந்திரிய விடயங்கள் (வாக்கு முதலிய) 5, அந்தக் கரணம் 4, புருடன்.

சொப்பனம்: 4 தத்துவங்கள் : அந்தக் கரணம் 4

சுழுத்தி : 2 தத்துவங்கள் : சித்தம், புருடன்

துரியம் : 1 தத்துவம் : புருடன்.

விழிப்பில் கருவி

2119. இந்தியம் ஈர்-ஐந்து, இசைந்தன மாத்திரை
யந்திரம் ஆதிகள் ஐயைந்து-அவையுடன்
உந்து கரணம் ஒருநான்கும் ஆன்மாவும்
வந்த அச்சாக்கிரப்பாலது ஆமே.

[1]இந்திய மீரைந் [2]திசைந்தன மாத்திரை
[3]யந்திர மாதிக ளையைந் தவையுட
[4]னுந்து கரண மொருநான்கு மான்மாவும்
[5]வந்தவச் சாக்கிரப் பாலது வாமே. (2)

வேறு பாடம்: 1. இந்திரிய (அ இ ஈ ஒ ஓ) II. 2. தீரைந்து (ஓ) II; தீரைந்து தன் (த) 3. யந்தம தாதிக (அ) II; யந்தர (ஆ இ) I; மந்திரமாய்நின்ற மாருதம் ஈரைந்து (ஓ) IV. 4. னுய்ந்து (அ) I; வுந்தி (ஓ) I; வந்து (இ) I; மந்தக் (ஓ) IV. 5. பந்தவச் (அ) I பந்தவிச் (ஓ) I; பந்தித்த (ஆ) II; பந்தவச் சக்கரப் (சண்)

கருத்து: சாக்கிரத்தில் இயங்கும் கருவிகளின் கூட்டமாவது: ஞானேந்திரியம் ஐந்தும் கன்மேந்திரியம் ஐந்தும் ஆகப் பொறிகள் பத்தும்; தன்மாத்திரை என்ற புலன்கள் ஐந்தும்; வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் என்ற கன்மேந்திரியங்களால் செய்யப்படும்

பேச்சு, செலவு, கொடை, கழிப்பு, ஆனந்தம் என்னும் செயல்கள் ஐந்தும் ஆகப் பத்தும்; வாயுக்கள் பத்தும்; அந்தக் கரணம் நான்கும், புருடனும் என்ற இவை முப்பத்தைந்தும் ஆகும்.

இந்தியம் - விகாரம். மாத்திரை - முதற்குறை. யந்திரம் - பொறி, உடம்பு. இங்கு வாயுவுக்கு ஆகுபெயர். புருடதத்துவத்தை ஆன்மா என்றது, ஒற்றுமை நோக்கி. பாலது - என ஒருமையால் கூறினார், கருவிகளின் கூட்டம் என்ற ஒருமை பற்றி.

பூதங்களின் நிறம்

2120. பாரது பொன்மை பசுமை யுடையது
நீரது [1]வெண்மை செம்மை நெருப்பது
[2]காரது மாருதங் கறுப்பை யுடையது
வானகந் தூம மறைந்துநின் றாரே[3]. (3)

வேறு பாடம்: 1. வெண் செம்மை நெருப்பது பையது (சண்) 2. காரறு (சண்) 3. றார்களே (துடி).

கருத்து: நிலம் என்ற பூதத்தின் நிறம் பொன்மை. அது பசுமைத் தன்மை வாய்ந்தது. நீரின் நிறம் வெண்மை, நெருப்பின் நிறம் செம்மை. மேகத்தை உந்தும் காற்றின் நிறம் கறுப்பு. ஆகாயத்தின் நிறம் புகை நிறம். இப்பூதங்களில், இவற்றின் அதி - தேவதைகள் மறைந்துறைகின்றனர்.

குறிப்பு: நான்காமடி எதுகையிலதேனும் சுவடிகளில் உள்ளவாறே பதிப்பிக்கப்பட்டது.

விழிப்பு நிலையில் கருவிகள்

2121. பூதங்கள் ஐந்தும், பொறியவை ஐயைந்தும்
ஏதம் படச் செய்து இருந்த புறநிலை;
ஓதும் மலம் குணம்; ஆகும் ஆதாரமோடு
ஆதி அவத்தைக் கருவி தொண்ணூற்றாறே.

பூதங்க [1]ளைந்தும் பொறியவை யையைந்து[2]
மேதம் [3]படச்செய் திருந்த புறநிலை
யோது மலங்குண மாகுமா தாரமோ
டாதி யவத்தைக் கருவிதொண் ணூற்றாறே. (4)

வேறு பாடம்: 1. ளந்து (அ) I. 2. யைந்துளு (ஆ ஈ ஒ ஓ) II; யைந்தும் (இ) II. 3. படஞ்செய் (ஆ இ ஈ ஒ ஓ) I.

கருத்து: ஐந்து பூதமும், ஐந்து ஞானேந்திரியமும், ஐந்து கன்மேந்திரியமும் என, உயிருக்குக் குற்றம் விளையும்படி செய்யும் புறநிலைக் கருவிகள் 15ம், அகநிலைக் கருவிகள் 21ம் மலங்களால் விளையும் குணங்கள் மூன்றும், ஆதாரங்கள் ஆறும் முதல் அவத்தை ஆகிய சாக்கிரத்தில் செயற்படும் தொண்ணூற்றாறு கருவிகளுள் சிலவாகும்.

அவத்தை உறும் இடங்கள்

2122. இடவகை சொல்லில், இருபத்தஞ்சு ஆனை,
படுபர சேனையும், பாய்பரி ஐந்தும்
உடையவன், மத்திமை உள்ளுறு நால்வர்
அடைய நெடுங்கடை ஐந்தொடு நான்கே.

இடவகை சொல்லி [1]லிருபத்தஞ் சானை
[2]படுபர சேனையும் பாய்பரி யைந்து[3]
முடையவன் மத்திமை [4]யுள்ளுறு நால்வ[5]
ரடைய நெடுங்கடை யைந்தொடு நான்கே. (5)

வேறு பாடம்: 1. யிருபத்தஞ் (ஈ) I. 2. படுபரி (அ) I; படுவரை (ஆ இ) I படுபரை (ஈ) I. 3. யைம்பு (ஓ) I; யாய்ந்து (இ) I. 4. யுள்ளுற (விசு) (தி) 5. மூவர் (ஆ இ) II.

கருத்து: (சாக்கிரம் முதல் துரியம் வரை நான்கு அவத்தைக்கும்) உடம்பில் உரிய இடங்கள் யாவை எனச் சொல்லப் புகுந்தால், 25 யானை போன்ற ஆன்ம தத்துவங்கள் இருபத்தைந்தையும், பகைச்சேனையை அழிக்கும் காலாட்படை போன்ற 7 வித்தியா தத்துவங்களையும், குதிரைப்படை போன்ற 5 சிவதத்துவங் களையும் உடைய ஆன்மா, சாக்கிரம் முதல் துரியம் வரை உள்ள அவத்தைகளை முறையே புருவமத்தி உள்ளிட்ட நான்கு இடங்களில் எய்துவான். அதற்கு வாயில்களாக உள்ளவை ஐம்பொறிகளும் கருவழி, எரு வழிகளும் ஆகிய ஒன்பது துவாரங்களாகும்.

இவ்வொன்பது வாயிலும் திறந்தும் மூடியும், ஒருவன் அவத்தைகளை அடைய உதவும் என்க. புருவமத்தி முதல் நான்கு; புருவமத்தி, கழுத்து, நெஞ்சு, உந்தி. 2 - ஆம் அடியில் பரத்தைப்படு என மாற்றி இரண்டாம்

வேற்றுமையுருபு விரிக்க. இது 'இல்முன்' என்பது 'மூன்றில்' என வந்தது போன்ற போலி, வினைத்தொகையில் வந்தது. உடையவன் - ஆன்மா. மத்திமை - இடவாகு பெயராய்ச் சாக்கிரத்தைக் குறித்தது. அரசன் ஒருவன் மூவகைப் படையுடன் சென்று, பகைவரை வென்று, அவரது கோட்டையினுள் உள்ள நான்கு பெண்களை அடைவதாக உருவகம் செய்தமையால், சாக்கிரம் முதலிய நான்கு அவத்தைகள் 'நால்வர்' எனப்பட்டன.

மடம் புகுந்த நாய்

2123. உடம்பு முடம்பு முடம்பைத் தழுவி
[1]யுடம்பினு ணின்ற வுயிரை யறியா[2]
ருடம்போ டுயிரிடை [3]நட்பறி யாதார்
[4]மடம்புக்க நாய்போன் [5]மறைந்துநின் றாரே. (6)

வேறு பாடம்: 1. யுடம்பிடை (சண்) 2. யழியா (ஓ) I. 3. நடப்பறி (ஓ) I; மடம்புகு (ஓ) IV. 5. மயங்குகின் (ஓ) II.

கருத்து: அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம் விஞ்ஞானமய கோசம் என்ற நான்கு உடம்புகளையும் தழுவி, அவற்றுள் நின்று இயங்கும் ஆன்மா உண்டு என்று அறியாதோர், அவ்வான்மாவும் தூலவுடம்பும் கொண்ட நட்பினை அறியாதார் ஆவர். (அந்த நட்பே உயிர் அவத்தைகளை அடைதற்குக் காரணம்) அதுமட்டுமின்றி, மடத்தில் நுழைந்த நாய், உணவு பின்னர்க் கிடைக்கும் என்று எண்ணி, மறைந்து நிற்பது போல், அவர் தம்மையே தாம் அறியாது நிற்பர்.

மடத்தில் துறவியர் எப்போதோ ஒருவேளை உண்பர். அங்குப் புகுந்த நாய், உடனே தனக்கு உணவு கிடைக்காவிடினும், பின்னர்க் கிடைக்கும் என்று மறைந்து நிற்கும். இல்லறத்தார் வீடாயின் அடிக்கடி உணவு கிடைக்கும்.

உடம்பை விட்டபின் ஆனந்தம் கிடைக்கும் என்று இவர் இருந்தலின், மடம்புகு நாய் இவர்க்கு உவமை ஆயிற்று.

சாகாக் கலை

2124. இருக்கின்றவாறு ஒன்று அறிகிலர்; ஏழை
முருக்கும் அசபையை மாற்றி முகந்து
கருக்கொண்டு, காமாரி சாரமும் தேரா,
உருக்கொண்டு தொக்க உடல் ஒழியாதே.

இருக்கின்ற வாறொன் றறிகில ரேழை[1]
[2]முருக்கு [3]மசபையை [4]மாற்றி முகந்து
கருக்கொண்டு காமாரி [5]சாரமுந் தேரா[6]
வுருக்கொண்டு தொக்க [7]வுடலொழி யாதே. (7)

வேறு பாடம்: 1. ரேழைகண் (ஓ) II. 2. முருக்குஞ் (ஆ இ ஒ) II. 3. மசைவை (அ) I சபையை (ஒ) I சவையை (இ) I செவியை (ஆ) II மரிவையை (ஓ) IV. 4. யாற்றி (அ) IV. 5. சாரமுகந்தேர்ந்து (விசு) (தி) (வ). 6. தேர்ந்து (ஆ இ). 7. வுடவழி (த)

கருத்து: உடம்பு அழியாமல் இருக்கும் உபாயத்தை ஒரு சிறிதும் மாந்தர் அறியார். உடம்பின் ஏழு தாதுக்களையும் அழிப்பதாகிய மூச்சுக் காற்று வேகும் காற்று (வேகும் கால்); அஃது இடைகலை, பிங்கலை நாடிகளுள் ஏதாவது ஒன்றில் செல்லுவதை மாற்றி, சுழுமுனை நாடியில் செலுத்தி, கருவாகிய உயிர்ச்சத்தியையும் (மூலக் கனல்) தலைக்கு ஏற்றி, மன்மதனை வென்ற சிவனை (அவனது சிற்சத்தியோடு) சகஸ்ரார நாடியில், உயிருணர்வால் முகந்து கொண்டு (அனுபவித்து), அதன் விளைவாக அங்கு விளையும் அமுதத்தைத் தேர்ந்து, அதனை உடம்பெங்கும் பரவச்செய்தால், அவ்வருளமுதம் சேர்ந்தமைந்த உடம்பு என்றும் அழியாது.

இப்பாடலில் வேகாக் கால், சாகாத்தலை, போகாப்புனல் என்ற மூன்றும் கூறினர். கால் - காற்று. தலை - ஏழு தாதுக்கள். புனல் - அருள் அமுது; அது விளைதற்குக் காரணமான சுக்கிலம். அதனையே 'கரு' என்றார். 2 ஆம் அடி மூன்றாம் சீர்: ஆற்றி என்ற பாடத்திற்குச் 'செயல்பட வைத்து' எனப் பொருள் கொள்க.

அசபை - மூச்சுக் காற்று. தியான மந்திரத்துடன் சேர்ந்த மூச்சுக்காற்றை 'அசபை' என்றே கூறினார், மூச்சுவிடும் நினைப்பு மாற, மந்திரமே நினைவில் நிற்றலின். விரிவு 'திருவம்பலச் சக்கரம்' - இயலில் 950 - ஆம் பாடலில் காண்க.)

பிராசாத கலைச் சிவானுபவம்

2125. ஒளித்திட்டு இருக்கும் ஒருபதினாலை
அளித்தனன் என்னுளே ஆரியன் வந்து
அளிக்கும் கலைகளின் நாலறு பத்து
ஒளித்திட்டு வைத்தான் ஒடுங்கிய சித்தே.

ஒளித்திட் டிருக்கு மொருபதி னாலை[1]
யளித்தன னென்னுளே யாரியன் வந்து
வளிக்குங் கலைகளி னாலறு பத்து[2]
[3]வொளித்திட்டு வைத்தா [4]னொடுங்கிய சித்தே. (8)

வேறு பாடம்: 1. னாறை (த) 2. பத்துள் (த) 3. ஒளித்திட்டு (த) 4. ளொடுங்கிய (ஒ) I.

கருத்து: ஆசாரியன் வந்து, என்னுள்ளே ஒளிமயமாக விளங்கும் பிராசாத கலைகள் பன்னிரண்டையும், சிவம், சத்தியையும் (ஆக 14) காணச் செய்தான். பிராசாத கலைகள் 12-ம் 64 கலைகளாக உள்ள மூலக்கனலுடன் (உயிராற்றல்) இணைந்து ஒளிவீசச் செய்தான். அப்பொழுது என் ஆன்மபோதம் அருள் வியாபகத்தில் ஒடுங்கி நின்றது.

"அளிக்கும் நால் அறுபத்துக் கலைகளின்" என மாற்றுக.

பிராசாத கலையின் விரிவை 'ஏரொளிச் சக்கரம்' என்னும் முன்னை இயலிலும், 'ஆறந்தம்' என்னும் இயலில், 2356, 2359 ஆம் பாடல்களிலும் கூறினார். ஏரொளிச் சக்கர வியலில் பிராசாத கலைகள் 12 என்றே. "ஈராறு நாதமாய்" என்ற தொடரில் (பாடல் என் 1244) கூறினார்.

குறிப்பு: இப்பாடல் 'அ' - சுவடியில் இல்லை.

பூதங்களை வெல்லுதல்

2126. மண்ணினில் ஒன்றும்; மலர் நீரும் அங்கு ஆகும்;
பொன்னினில் அங்கி, புகல் வளி, ஆகாசம்
மன்னும்; மனோ, புத்தி, ஆங்காரம் ஓர் ஒன்றாய்
உன்னி முடிந்தது பூத செயமே.

மண்ணினி லொன்று [1]மலர்நீரு மங்காகும்[2]
பொன்னினி லங்கி [3]புகல்வளி யாகாச[4]
மன்னு மனோபுத்தி யாங்கார மோரொன்றா
[5]யுன்னி [6]முடிந்தது [7]பூத செயமே. (9)

வேறு பாடம்: 1. மலநீரு (அ ஆ ஈ ஒ) I; மலர் நீறு (ஒ) I; மலநீர்க் (இ) I. 2. கங்காகும் (இ) I; மருங்காகும் (வ); மருங்காரும் (த) 3. புகழ்வெளி

(ஓ) I; புகழ்வலி (ஓ) I; புகழ்வளி (இ) I; புகழ்வழி (ஆ) I; புகன்வழி (ஈ) I. 4. யாகாய (ஈ) IV. 5. யுன்னின் (விசு) 6. முடித்த து (ஓ) I. 7. ஒருபூத (விசு) 8. சமமே (ஓ) I.

கருத்து: மேலே, "இடவகை சொல்லில்" என்னும் பாடலில், கீழாலவத்தையில், மேலிருந்து கீழ் இறங்குதலைக் கூறினார். இப்பாடலில், கீழிருந்து மேலே ஏறுதலைக் கூறுகின்றார். நிலம் என்ற பூதத்திற்கு இடமான சுவாதிட்டானத்தில் உயிராற்றல் அடங்கும். இதனை "உயிர்ப்பு அடக்கம்" (துரியாதீதம்) என்பர். அந்த உயிராற்றல் மலர்கின்ற மணிபூரகம் என்ற ஆதாரம் நீருக்கு இடமாகும். (இங்குப் புருடதத்துவம் ஆன்மாவுடன் இருக்கும்) (அடுத்து) பொன் போன்ற நெருப்பிற்கு இடமான அனாகதம் என்ற ஆதாரமும், (அடுத்து) காற்றுக்கு இடமான விசுத்தி என்ற ஆதாரமும், (அடுத்து) ஆகாயத்திற்கு இடமாகிய ஆக்ஞை என்ற ஆதாரமும் உள்ளன. அவற்றில் முறையே ஆன்மா மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்ற நான்கு அந்தக் கரணங்களுடனும் இருக்கும். மூலாதாரத்திலிருந்து ஆக்ஞை வரை மூலக்கனலை (உயிராற்றலுடன்) ஏற்றுபவன் ஐந்து பூதங்களையும் வெல்கின்றான்.

கிரியையில் 'தத்துவசுத்தி' எனக் கூறப்படுவதனுள் 'பூத சுத்தி' என்பது, யோக நூலில் இவ்வாறு பூதசெயமாகக் கூறப்படுகிறது.

முன்பு ஆசிரியர் 'ஏரொளிச் சக்கரம்' பன்னிரண்டையும் முறையே ஐம்பூதங்களுக்கு உரிமையாக்கிக் கூறியதை நினைக. (பாடல் எண். 1247, 1248) உன்னி என்பதை உன்ன எனத் திரிக்க.

தன்மாத்திரைச் செயம்

2127. முன்னிக் கொருமகன் மூர்த்திக் கிருவர்
வன்னிக்கு மூவர் வதுவைக்கு நால்வர்
கன்னிக்குப் பிள்ளைக [1]ளைவர்மு னாளில்லை
கன்னியைக் [2]கன்னியே காதலித் தாளே[3]. (10)

வேறு பாடம்: 1. ளைவர்மி (அ) I; ளைவர்மீ (ஓ) III. 2 கன்னியாகக் (துடி) 3. தாரே (சண்); தானே (சைவ).

கருத்து: முதலில் நிற்பதாகிய ஆகாய பூதத்திற்குக் குணம் ஓசை. அதிலிருந்து தோன்றும் காற்றுக்கு ஓசையும் ஊறும் (ஸ்பரிசம்). அதிலிருந்து தோன்றும் நெருப்புக்கு ஓசை, ஊறு, ஒளி. அதிலிருந்து பிறக்கும் நீருக்கு ஓசை, ஊறு, ஒளி, சுவை. நிலத்திற்கு இந்நான்குடன் மணமும் குணமாகும். இக்குணங்களும் பூதங்களும்

ஆதியிலிருந்து உள்ளவை அல்ல - இவற்றைச் சிவன் சிற்சத்தி யுடனாகிச், சத்தியாகவே இருந்து, மாயையிலிருந்து படைத்தான்.

"உண்ணாமுலை யுமையாளொடும் உடனாகிய ஒருவன் பெண்ணாகிய பெருமான்" என்ற ஞானசம்பந்தர் வாக்குக் காண்க. 4 ஆம் அடி: கன்னி (1) - சிற்சத்தி. கன்னி (2) - மாயை, செயலெல்லாம் சத்திக்கே உரியன வாதலின் அவள் படைத்தாள் என்றார். உண்மை நிலையில் சிவம், இயங்கு நிலையில் சத்தி. முன்னி - முன்னே உள்ளது. மேற்பாடலில் பூதசெயம் கூறினார். இங்குத் தன்மாத்திரைச் செயம் கூறுகிறார்.

தத்துவ சுத்தி

2128. **கண்டன ஐந்தும் கலந்தன தான் ஐந்தும்**
உண்டன நான்கும் ஒருங்கி உணர்ந்த பின்
பண்டையது ஆகிப் பரந்த வியாக்கிரத்து
அண்டமும் தானாய் அமர்ந்து நின்றானே.

[1]கண்டன வைந்துங் கலந்தன தானைந்தும்[2]
[3]உண்டன நான்கு மொருங்கி யுணர்ந்தபின்
பண்டைய தாகிப் பரந்த வியாக்கிரத்
தண்டமுந் தானா யமர்ந்துநின் றானே. (11)

வேறு பாடம்: 1. கண்டகன (விசு) (தி) (வ) 2. தானைந்துஞ்சென் (சைவ); தாமைந்துஞ் (த) 3. சென்றுண்ட (அ இ ஓ) II; சென்றுட (ஆ ஈ ஓ) I; (சைவசித்தாந்தசமாசப் பதிப்பின் பாடம் மேற்கொள்ள ப்பட்டது) 4. மொடுங்கி (இ) மொருங்கே (விசு).

கருத்து: ஐம் பூதங்களுக்கும், தன்மாத்திரைகளுக்கும் உடம்பில் இடமாக உள்ள ஆறு ஆதாரங்களையும், அவற்றில் நின்று உணர்ந்த ஐந்து அவத்தைகளையும், அவற்றை உணர்தற்குக் கருவியாக இருந்த நான்கு அந்தக் கரணங்களையும், அவற்றைக் கண்டு, கலந்து, அனுபவித்த தன்னையும், ஆன்மா தன்னில் ஒன்றி நின்று உணர்ந்தபிறகு; உலகமும் உடம்புகளும் அவ்வுடம்புகளுள் ஆன்மா புகுந்து வாழும் வாழ்க்கையும் உண்டாவதற்கு முன், சொல் அளவாக நின்ற அண்டத்தினை, ஆன்மா சாட்சியாக இருந்து, கண்டு கொண்டு, இருக்கும். இஃது, ஆன்மா உலகை உணர்தல், இதனைத் 'தத்துவ சுத்தி' என்பர். இது 'தசகாரியத்துள்' ஒன்று. அதனை யோகத்தால் அடைதலை இங்குக் கூறினார்.

வியாக்கிரம் - சொல்.

மனப்பதிவே கனவு

2129. நின்றவ னிற்பப் பதினாலிற் பத்துநீத்
தொன்றிய வந்தக் கரணங்க ணான்குடன்
மன்று கலந்த மனைவாழ்க்கை வாதனை
கன்றிய கண்டத்திற் கண்டான் கனாவதே[1]. (12)

வேறு பாடம்: 1. கனவதே (விசு) (தி) (வ).

கருத்து: மேற் பாடலில் கூறியவாறு, தத்துவசுத்தி செய்தவன் ஒருபால் நிற்க, மறுபுறம், கனவு காண்பவன், மொத்தம் பத்து இந்திரியம், நான்கு அந்தக் கரணங்கள் ஆக 14 கருவிகளுள், இந்திரியங்கள் தவிர அந்தக் கரணங்களால்; நனவில், தான் பெற்ற மன வாழ்க்கையின் பதிவுகளைத் தனது கழுத்தில் கனவு என்ற அவத்தையில் இருந்து காண்பான்.

வாதனை - வாசனை; பதிவு (Impression)

உறக்கம்

2130. தானம் இழந்து, தனிப்புக்கு இதயத்து,
மானம் இழந்து, மதிகெட்டு, மால் ஆகி
ஆன விரிவு அறியா அவ்வியத்தத்தின்
மேனி அறிந்து சுழுத்தியது ஆமே.

தான [1]மிழந்து [2]தனிப்புக் கிதயத்து
மான [3]மிழந்து மதிகெட்டு மாலாகி
யான விரிவறி [4]யாவவ் வியத்தத்தின்
மேனி [5]யறிந்து சுழுத்திய தாமே. (13)

வேறு பாடம்: 1. மிகழ்ந்து (ஓ) I. 2. தனிபுக் (விசு) (தி) 3. மழிந்து (ஈ) III; மகிழ்ந்து (ஓ) 4. யானவை யவியத்தின் (அ) I; யாவை வியத்தத்தின் (ஈ ஓ) I; யாவையை வீயத்தின் (ஆ இ) I. 5. யழிந்து (ஓ) II.

கருத்து: கனவு காணும் இடம் ஆகிய கழுத்தைவிட்டு, உயிர் தனியே இதயத்தில் புகுந்து, அகங்காரம் புத்தி என்ற இரண்டும் இன்றி, மயங்கி, உலகை அறியாமல், புருடன் ஆன்மாவினை அறியும் நிலை சுழுத்தி என்ற உறக்கமாகும்.

அவ்வியத்தம் - காணப்படாதது. இங்கு ஆன்மா. சித்தம் செயற் படுதலின் ஆன்மாவினை அறியும்.

பேருறக்கம்

2131. சுழுனையைச் [1]சேர்ந்துள [2]மூன்றுடன் காட்சி
கெழுமிய சித்தம் பிராணன்றன் போத
மொழுகக் கமலத்தி னுள்ளே யிருந்து
விழுமப் பொருளுடன் மேவிநின் றானே. (14)

வேறு பாடம்: 1. சேர்ந்துடன் (அ) I; சேர்ந்துளம் (ஓ) I; சேர்ந்து நான் (ஓ) I; சேர்ந்துளன் (ஈ) I. 2. மூன்றுள (த) 3. மொழுக்க மலத்தின் (அ) I; மெழுமக் (ஆ இ) II.

கருத்து: உறக்க நிலைக்கு உரிய சித்தம், புருடன், பிராண வாயு என்ற மூன்றனுள் சித்தமும் பிராண வாயுவினால் உண்டாகும் கிளர்ச்சியும் நீங்க, புருடன் தொப்பூள் இடத்தில் மூலப் பிரகிருதி யோடு பொருந்தி நிற்பான். இது துரிய நிலை.

விழும் அப்பொருள் - ஆன்ம தத்துவங்கள் வந்து ஒடுங்கும் பொருள்; மூலப்பிரகிருதி. துரியம் - பேருறக்கம்.

உயிர்ப்படக்கம்

2132. தானத்து எழுந்து தருக்கும் துரியத்தான்
வானத்து எழுந்து போய் வையம் பிறகிட்டு,
கானத்து எழுந்த கருத்தின் தலையிலே
ஊனத்து அவித்தை இட்டு, ஊமன் நின்றானே.

தானத் தெழுந்து [1]தருக்குந் துரியத்தான்[2]
வானத் தெழுந்துபோய் வையம் பிறகிட்டுக்
கானத் [3]தெழுந்த கருத்தின் றலையிலே
ஊனத் [4]தவித்தையிட் டூமனின் றானே. (15)

வேறு பாடம்: 1. தருந்துரியத்தினின் (த) 2. துரியத்தின் (ஓ) III. 3. தெழுந்து (ஆ இ) I. 4. தவித்தைவிட் (ஈ) II.

கருத்து: உயிருணர்வு தொப்பூள் இடத்திலிருக்கும்பொழுது துரிய நிலை உண்டாகும். அதன் பிறகு உள்ளமாகிய ஆகாயத்தில் எழுந்து சென்று, உலகத்தை மறந்து, மூலாதாரத்தில் அவித்தையை அனுபவித்துக் கொண்டு புருடன் நிற்பது துரியாதீதமாகும்.

கானத்து எழுந்த கருத்து - ஓசையின் விளைவு. இஃது உருவகமாக நின்று, விடய வாசனையை உணர்த்தியது. தலையிலே - கடந்த நிலையில். துரியாதீதம் - உயிர்ப்பு அடக்கும்

பிரணவ யோகம்

2133. ஊமை எழுத்தொடு பேசும் எழுத்து உறில்
ஆமை அகத்தினில் அஞ்சும் அடங்கிடும்
ஓம்மயம் மற்று அது; உள்ளொளி பெற்றது;
நாம் மயம் அற்றது; நாம் அறியோமே.

ஊமை [1]யெழுத்தொடு பேசு மெழுத்துறி[2]
லாமை யகத்தினி லஞ்சு மடங்கிடு
மோமய [3]மற்றது வுள்ளொளி பெற்றது
நாமய மற்றது நாமறி யோமே. (16)

வேறு பாடம்: 1. யெழுத்துடன் (ஆ இ) III. 2. மெழுத்தறி (ஈ) I. 3. முற்றது (ஒ ஓ) IV.

கருத்து: மகர எழுத்தால் குறிக்கப்படும் சிவத்தோடு, அகார, உகாரங்களால் முறையே குறிக்கப்படும் உயிரும் அருளும் சேர்ந்தால் ஆமைக்கு உறுப்புக்கள் அடங்குவது போல் ஐம்புலன் களும் அடங்கும். ஆன்மா பிரணவமயமாகும். உள்ளொளி பெறும். அகங்காரம் அடங்கும். அந்த அனுபவத்தைச் சொல்ல அறியோம்.

கீழாலவத்தைத் துரியாதீதத்தைக் கூறிய ஆசிரியர், ஒப்பு நோக்காக மிக்க மேல் நிலைத்துரியாதீதத்தை இப்பாடலிற் கூறுகிறார்.

மத்திய துரியம்

2134. துரியம் இருப்பதும் சாக்கிரத்துள்ளே
நரிகள் பதினாலும் நஞ்சு உண்டு செத்து,
பரிய புரவியும் பாரில் பரந்தது;
துரியம் இறந்த இடம் சொல்ல ஒண்ணாதே.

துரிய [1]மிருப்பதுஞ் சாக்கிரத் துள்ளே[2]
நரிகள் பதினாலு நஞ்சுண்டு செத்துப்[3]
பரிய புரவியும் [4]பாரிற் பரந்தது[5]
துரிய [6]மிறந்திடஞ் சொல்லவொண் ணாதே. (17)

வேறு பாடம்: 1. மிருப்பது (இ) III; மிறப்பது (த) 2. துள்ள (த) 3. செத்தது (ஆ ஈ ஒ) I; செற்றிது (அ) I செத்தன (விசு) (தி) (வ) 4. பாறிப் (விசு) (வ) 5. பறந்த (ஒ) I பரந்து (ஓ) I; பறந்தது (விசு) (வ); பறந்தன (தி) 6. மிறந்தது (ஆ) IV.

கருத்து: மேலே கூறிய பிரணவ யோகிக்குச் சாக்கிரத்தின் ஒரு பிரிவாகவே துரியநிலை விளையும். அவனுக்கு ஞானேந்திரியங் களும் கன்மேந்திரியங்களும் அந்தக் கரணங்களும் ஆகப் பதினான்கு தத்துவங்களும் செயலிழக்கும். சுழுமுனை நாடியில் செல்லும் மூச்சு ஆகாயத் தானமாகிய தலையில் பரவும். அவன் அடுத்து அடையும் துரியாதீத நிலையை விளக்க வியலாது.

சாக்கிரத் தானமாகிய நெற்றியில் ஐந்து அவத்தைகளும் அடையலாம். அவை 'மத்தியாலவத்தை' எனப்படும். "இலாடத்தே சாக்கிரத்தை எய்திய உள்ளம், இலாடத்தே ஐந்தவத்தை எய்தும்" என்பார் மெய்கண்டார். (சிவஞானபோதம் : 4 ஆம் சூத்: 25 ஆவது உதாரண வெண்பா) முன்னே கூறியவை 'கீழாலவத்தைகள்' ஆகும். அக்கீழால வத்தைகளை வள்ளலார் 'சீவ சாக்கிரம்' முதலியனவாகக் கூறி, மத்தியாலவத்தை, சுத்த அவத்தை, பராவத்தை, மேலாலவத்தை ஆகியவற்றை முறையே 'சுத்த சாக்கிரம் முதலிய ஐந்து, பரசாக்கிரம் முதலிய ஐந்து, குரு சாக்கிரம் முதலிய ஐந்து, சிவ சாக்கிரம் முதலிய ஐந்து என வகுப்பார்.

ஓயாப் பிறவி, ஒழியா அவத்தை

2135. மாறா மலம் ஐந்தால் மன்னும் அவத்தையின்
வேறாய மாயா தனு, கரண - ஆதிக்கு இங்கு
ஈறு ஆகாதே எவ்வுயிரும் பிறந்து -இறந்து,
ஆறாத வல்வினையால் அடியுண்ணுமே.

மாறா மலமைந்தான் மன்னு மவத்தையின்
வேறாய [1]மாயா தனுகர ணாதிக்கிங்[2]
[3]கீறாகா [4]தேயெவ் வுயிரும் பிறந்திறந்
தாறாத வல்வினை யாலடி யுண்ணுமே. (18)

வேறு பாடம்: 1. மாமாயா (இ) I. 2. ணாதிமிக் (ஆ இ) II. 3. கீறாங்கா (அ) I. 4. யெவ்வுயிரும் (ஆ - தவிர அவை சுவ.) I; யெவ்வுயிரிங்குப் (ஆ) I.

கருத்து: ஐந்து மலங்களின் பிடிப்பு உள்ளமையால், உயிர்கள் அவத்தை களை எய்தும். தம்மின் வேறு ஆகிய மாயையின் காரிய மாகிய உடம்பு, கருவி, கரணங்களை உடைய பிறப்புக்களுக்கு எல்லை இல்லாமலே, பிறந்தும் இறந்தும், வினையினால் அலைப்புறும்.

'அவத்தையின் மன்னும்' என்க. தனு கரணாதி-தனு, கரண, புவன, போகம். (உடம்பு, கருவி, உலகம், அனுபவப்பொருள்)

2136. உண்ணுந்தன் னூடாடா தூட்டிடு மாயையு
மண்ண லருள்பெற்ற முத்திய தாவது
நண்ண லிலாவுயிர் ஞானத்தி னாற்பிறந்
தெண்ணுறு ஞானத்தி லேர்முத்தி யெய்துமே. (ஆ)

கேவல அவத்தை

2137. அதி மூட நித்திரை, ஆணவம் நந்த,
அதனால் உணர்வோன் அருங் கன்மம் முன்னி,
திதமான கேவலம் இத்திறம் சென்று
பதம் ஆகா ஐயவத்தைப் படுவோனே.

அதிமூட நித்திரை யாணவ நந்த
வதனா லுணர்வோ [1]னருங்கன்ம முன்னித்[2]
[3]திதமான கேவல [4]மித்திறஞ் சென்று[5]
[6]பதமாகா வையவத் தைப்படு வோனே[7]. (19)

வேறு பாடம்: 1. றாங்கன (ஈ ஒ ஓ) II; னருங்கல (ஆ இ) II. 2. நீத்த (இ) II. 3. இதமான (ஓ) II. 4. மீதரஞ் (ஓ) II. 5. சென்றும்பர் (இ) II. 6. பரமாக (த) 7. வானே (சண்).

கருத்து: கேவல நிலையில், இருளில், ஆழ்ந்த துயிலில் கிடக்கும் உயிர், (இறையருளால்) ஆணவமலம் சிறிதே விலக, சிறிது அறிவுற்று, மூல கன்மத்தின் பயனாக, பிறவியடைந்து, மேலே கூறியவாறு, ஐந்து கேவலாவத்தைகளை அடைவான்.

பதம் ஆகா - பதமாகி; வினைகளை அனுபவிக்கும் நிலையை அடைந்து. கீழாலவத்தைகள் 'கேவலாவத்தைகள்' என்றும் வழங்கப் பெறும்.

2138. ஆசான்முன் னேதுயின் மாண வகரைத்
தேசாய தண்டா லெழுப்புஞ் செயல்போல்
நேசாய வீசனு நீடாண வத்தரை
யேசாத மாயாடன் னாலே யெழுப்புமே. (ஔ)

மூன்று உடல்

2139. மஞ்சொடு, மந்தாகினி, குடம் ஆம் என
விஞ்சு அறிவு இல்லோன் விளம்பும் மிகுமதி
எஞ்சல் இல் ஒன்று எனும்; மாறு என இவ்வுடல்
அஞ்சு உணும், மன்னன் - அவன் பொன் அளவே.

மஞ்சொடு மந்தா [1]கினிகுட மாமென
விஞ்சறி வில்லோன் [2]விளம்பு மிகுமதி
யெஞ்சலி [3]லொன்றெனு மாறென விவ்வுட
லஞ்சுணு [4]மன்ன [5]னவன்பொன் னளவே. (20)

வேறு பாடம்: 1. கினிகொட்ட (அ) I கினிகொட (ஆ இ ஈ) I. 2. விளங்கு மிகுதி (இ) I. 3. லொன்றேனு (த) I. 4. மன்னன் பொன்ன (அ) ; மன்னவென்பொன் (ஒ) I; மன்னவள் றென்போ மளவே (ஓ) I; மன்னவன் பொன்னளவே (இ) I. 5. னன்றேபோமளவே (சங்க) (சைவ); மன்னவ னன்றேபோ மளவே (துடி)

கருத்து: மேகம், கங்கை, குடநீர் - இவற்றை மிக்க அறிவில்லாதவன் ஒன்றே என்பான். ஆனால் அது உண்மை அன்று என உரைப்பது போல இத்தூலவுடம்பு, அதில் உள்ள உயிரின் பிராரத்த வினைதீரும் மட்டும் ஐந்து அவத்தைகளை அடையும்.

மேகம் காரணவுடம்புக்கு உவமை. கங்கை தூலவுடம்பிற்கு உவமை. கங்கையாறு பல இடங்களிலும் பாய்ந்து எல்லா இடங்களிலும் நிறைவது போல இவ்வுடம்பு எல்லாத் தத்துவங்களும் நிறைந்து வினைப்பயன்களை அனுபவிப்பது. குடநீர் சூக்கும வுடலுக்கு உவமை. இஃது எட்டுத்தத்துவங்கள் மட்டுமே உடையது. இவற்றுள் தூலவுடம்பே அவத்தைகளை அடையும்.

2140. படையுடை மன்னவன் பாய்பரி யேறி
வடிவுடை மாநகர் தான்வரும் போது
அடியுடை யைவரு மங்குறை வோருந்
துடியில்லம் பற்றித் துயின்றனர் தாமே. (அ, ஔ)

2141. நேரா மலத்தை நீடைந் தவத்தையி
னேரான வாறுன்னி நீடு நனவினி
னேரா மலமைந்து நேரே தரிசித்து
நேராம் பரத்துட னிற்பது நித்தமே. (ஆ)

(ii) மத்திய சாக்கிராவத்தை

அறிவு விளக்கம்

2142. சாக்கிர சாக்கிரந் தன்னிற் றிரோதாயி
சாக்கிர சொப்பனந் தன்னிடை மாயேயஞ்[1]
சாக்கிரந் தன்னிற் சுழுத்திதற் காமியஞ்
சாக்கிரந் தன்னிற் றுரியத்து மாயையே. (1)

வேறு பாடம்: 1. மாமாயை (ஆ ஓ) II.

கருத்து: உயிர் பொருள்களை நன்கு உணரும் நிலைகளாகிய மத்திய சாக்கிராவத்தை ஐந்தையும் கூற எடுத்துக் கொண்டார். சாக்கிரத்திற் சாக்கிரம் என்ற அவத்தையில் திரோதான மலம் ஆன்மாவின் அறிவை மறைத்து நிற்கும் (அந்த நிலையில் ஆன்மா அறியும்) சாக்கிரத்தில் சொப்பனம் என்ற நிலையில், மாயேயம் அறிவு விளக்கம் செய்யும். சாக்கிரத்தில் சுழுத்தி என்ற நிலையில், கன்மமலம் அறிவு விளக்கம் செய்யும். சாக்கிரத்தில் துரியம் என்ற நிலையில் மாயா மலம் அறிவு விளக்கம் செய்யும்.

இவை 'சகலாவத்தைகள்' என்றும் வழங்கும்.

அவத்தைகளில் அறிவு விளக்கம்

2143. மாயை எழுப்பும் கலாதியை; மற்று அதின்
நேய இராக-ஆதி எய்தத் துரியத்துத்
தோயும் சுழுனை, கனா, நனாவும் துன்னி
ஆயினன், அந்தச் சகலத்து உளானே.

மாயை யெழுப்புங் கலாதியை மற்றதின்
னேய [1]விராகாதி [2]யெய்தத் துரியத்துத்
தோயுஞ் [3]சுழுனை கனாநனா வுந்துன்னி
[4]யாயின னந்தச் [5]சகலத்து ளானே. (2)

வேறு பாடம்: 1. விரசாதி (அ) I; விகாரகாதி (ஈ) I; வாக்காதி (இ) II. 2. யேத்தத் (ஆ இ) I; யேய்ந்த (விசு) (தி) (வ) 3. சுழிமுனை (ஓ) II. 4. யாயபின் (ஈ) IV. 5. சகலத்தனானே (அ) I.

கருத்து: அசுத்த மாயை, உயிருக்குத் துரிய நிலையில் கலை, வித்தை , அராகம் ஆகிய தத்துவங்களைச் செயற்படுத்தி விளக்கம் செய்யும். இங்ஙனம் சகல ஐந்தவத்தையை அடையப் புகுபவன் பின்பு சுழுத்தி நிலையினை அடைவான். அப்பொழுது அவனுக்குப் புருட தத்துவம் செயற்படும். பின்பு கனவு, சாக்கிரம் என்ற நிலைகளை முறையே அடைந்து, மூலப்பகுதியையும், ஆன்ம தத்துவம் 24 - ஐயும் இயக்கப் பெறுவான்.

கொண்டு கூட்டு: "துரியத்து, மாயை கலாதியை, மற்றதின் நேய இராகாதி எய்த எழுப்பும்; அந்தச் சகலத்து உளான் சுழ்னை தோயும்; கனா நனாவும் துன்னி ஆயினன்" எனக் கூட்டுக.

குருடன் நடப்பது போல்

2144. மேவிய அந்தன் விழிகண் குருடன் ஆம்;
ஆவயின், முன் அடி காணுமது கொண்டு
மேவும் தடிகொடு செல்லும்; விழிபெற
மூவயின் ஆன்மா முயலும் கருமமே.

மேவிய [1]வந்தன் விழிகட் குருடனா
[2]மாவயின் [3]முன்னடி காணு மதுகொண்டு[4]
மேவுந் தடிகொடு [5]செல்லும் விழிபெற[6]
[7]மூவயி னான்மா முயலுங் கருமமே. (3)

வேறு பாடம்: 1. வந்தகன் (விசு) (தி) 2. மாவியின் (ஆ) I; மாயையின் (இ) I; மாவையின் (சங்) 3. முன்னடிக் (அ ஆ இ ஈ ஓ) I. 4. மதுகண்டு (ஓ) II. 5. சொல்லும் (தி) 6. விழியெழ (ஈ) IV. 7. மூவையு (சங்).

கருத்து: ஆணவ மலத்தால் அறிவு மறைப்புண்டவன், விழியற்ற குருடனை ஒத்தவன். துரியாதீத நிலையில் உயிர்ப்பு அடங்கப் பெற்றவனும் குருடனை ஒத்தவனே. அந்த நிலையில் முன்னே நடந்து சென்றவரின் அடிச் சுவட்டை அறிவதற்குக் குருடன் ஒரு தடியை ஏந்தி அதனால் தடவியவாறே நடப்பான். ஆணவ மலத்தால் மறைப்புண்டவனுக்கு இது போல், முறையே வினை (கன்மம்) யாலும், மாயையினாலும் கிடைக்கும் பிறவி துணை யாகிறது. துரியாதீத நிலையில் உள்ளவனுக்குத் துரியம், உறக்கம்,

சொப்பனம், விழிப்பு என்பவை படிப்படியே வர, முறையே மாயை, கன்மம், மாயேயம், திரோதானம் என்ற சத்திகள் செய்யும் விளக்கம், குருடனுக்குக் கோல்போல், துணை செய்யும். அவன் மேன்மேல் அறிவு பெற்று வாழ்வான். இது சகலர் ஆகிய ஆன்மாக்கள் செயல் செய்து அறிவும், தெளிவும் பெறும் முறையாகும். பிரளயாகலர் கன்மமலம் நீங்கப் பெற்றவர் ஆதலின், அவர்களுக்கு மாயை, மாயேயம், திரோதானம் என்ற சத்திகள் செய்யும் விளக்கம் உதவும். விஞ்ஞானாகலர் மாயையும் இல்லாதவர் ஆதலின், அவர்களுக்குத் திரோதான சத்தி செய்யும் விளக்கம் உதவும்.

ஒரு பாடலில் இத்துணைப் பொருளை ஆசிரியர் செறித்து வைத்தமை அருமைப்பாடுடையது.

சிறைக்குள் இருப்பினும் உரிமை

2145. மத்திமம் ஒத்த சிலந்தி வலை-அத்துள்
ஒத்து அங்கு இருந்து, அங்கு உயிர் உண்ணுமாறுபோல்
அத்தனும் ஐம்பொறி ஆடு-அகத்துள் நின்று
சத்தம் முதல் ஐந்தும் தான் உண்ணுமாறே.

[1]மத்திம மொத்த சிலந்தி வலையத்து[2]
[3]ளொத்தங் [4]கிருந்தங் குயிருண்ணு மாறுபோ
லத்தனு மைம்பொறி [5]யாடகத் துண்ணின்று
சத்த முதலைந்துந் தானுண்ணு மாறே. (4)

வேறு பாடம்: 1. மத்தக (ஈ) I. 2. வலயத்து (அ) IV. 3. ளொத்துளிருந்து (ஓ) IV. 4. கிருந்து (சங்) 5. யாகத் (அ) I.

கருத்து: சிலந்தி தான் பின்னிய வலையில் நடு விடத்திலே அசையாதிருந்து, அதில் அகப்படும் சிறு பூச்சிகளைப் பிடித்துண்பது போல், சிவன் ஐம்பொறி ஆட்ட ஆடும் உடம்பினுள் நின்று, புலன்விடயத்தை உயிருடன் ஒன்றியிருந்து உணர்வான்.

வலையின் நடுவே இருப்பினும் சிலந்தி அதில் சிக்குறாதவாறு போல் இறைவன் உடம்பில் இருப்பினும் விடயவாதனையுறான்.

2146. வைச்சன வைச்சு வகையிரு பத்தைஞ்சு
முச்சு முடன்மனை வானொரு வன்னுளன்
பிச்சன் பெரியன் பிறப்பிலி யென்றென்று
நச்ச வருள்செய்து நானுய்ந்த வாறே. (அ, உ)

2147. நாலா றுடன்புருட னற்றத் துவமுடன்
வேறான வையைந்து மெய்ப்புரு டன்பரங்
கூறா வியோமம் பரமெனக் கொண்டனன்
வேறான நாலேழு வேதாந்த தத்துவமே. (உ, க, ட)

2148. ஏலங்கொண் டாங்கே யிடையொடு பிங்கலை
கோலங்கொண் டாங்கே குணத்தி னுடன்புக்கு
மூலங்கொண் டாங்கே முறுக்கிமுக் கோணிலுங்
காலங்கொண் டானடி காணலு மாமே. (அ, உ)

2149. நாடிகள் பத்தும் நலந்திகழ் வாயுவும்
ஓடிய காலி லொடுங்கி யிருந்திடும்
கூடிய காமம் குளிக்கு மிரதமு
நாடிய நல்ல மனமு முடலிலே. (அ, உ)

குறிப்பு: இப்பாடலை அடுத்துச் சுவடிகளிலும், பதிப்புகளிலும் உள்ள "ஆவனவாவ" என்ற பாடல் 'மூவகையாருயிர் வர்க்கம்' இயலில் வந்தது. (பா. எண். 311)

2150. பத்தொடு பத்து மோர்மூன்றும் பகுதியு
முய்த்த துரியமு முள்ளுணர் காலமு
மெய்த்த வியோமமு மேலைத் துரியமுந்
தத்துவ நாலே ழென்னத் தக்கதே. (உ)

2151. விளங்கிடு முந்நூற்று முப்பதோ டொன்பான்
தளங்கோ ளிரட்டிய தாறு நடந்தால்
வணங்கிடு மைம்மலம் வாயு வெழுந்து
விளங்கிடு மவ்வழி தத்துவ நின்றே. (அ, உ)

2152. நாலொரு கோடியே நாற்பத்தெண் ணாயிரம்
மேலுமோ ரைந்நூறு வேறா யடங்கிடும்
பாலவை தொண்ணூறோ டாறுட் படுமவை
கோலிய வையைந்து ளாகுங் குறிக்கிலே. (உ)

2153. ஆகின்ற தொண்ணூறோ டாறும் பொதுவென்பர்
ஆகின்ற வாறா றருஞ்சைவர் தத்துவ
மாகின்ற நாலேழ் வேதாந்தி வயிணவர்க்
காகின்ற நாலாறை யைந்துமாயா வாதிக்கே. (உ, ப

2154. தத்துவ மாவது தன்வழி நின்றிடில்
வித்தக னாகி விளங்கி யிருக்கலாம்
பொய்த்தவ மாமவை போயிடு மவ்வழி
தத்துவ மாவ தகார வெழுத்தே. (உ, ஔ)

2155. அறிவொன் றிலாதன வையேழு மொன்று
மறிகின்ற வென்னை யறியா திருந்தே
னறிகின்றாய் நீயென் றருள்செய்தார் நந்தி
யறிகின்ற நானென் றறிந்துகொண் டேனே. (அ, உ)

அவத்தை கடந்து ...

2156. சாக்கிர சாக்கிரம் ஆதி தனில் ஐந்தும்,
ஆக்கும் மல-அவத்தை ஐந்தும், நனவாதி
போக்கி, இவற்றொடு பொய்யான ஆறாறும்
நீக்கி நெறிநின்றோன் தானாகி நிற்குமே.

சாக்கிர சாக்கிர மாதி தனிலைந்து
மாக்கு மலாவத்தை [1]யைந்து நனவாதி[2]
போக்கி [3]யிவற்றொடு பொய்யான வாறாறு
நீக்கி [4]நெறிநின்றோன் றானாகி நிற்குமே. (5)

வேறு பாடம்: 1. யையைந்து (அ ஆ ஈ ஓ) I. 2. நனவாதியாய் (அ ஈ ஓ) I. 3. சிவத்தொடும் (த) 4. நெறிநின் றொன்றாகி (அ) IV; றொன்றாகியே (ஈ ஓ) IV.

கருத்து: மத்திய சாக்கிராவத்தை ஐந்தையும், கேவலாவத்தை ஐந்தையும், சுத்த நனவு முதலிய அவத்தைகளை எய்துதலால் நீக்கி, முப்பத்தாறு தத்துவங்கள் தனக்குக் கருவியே - என உணர்வோன், சிவத்தோடு கூடிச் சிவமாகி நிற்பான்.

2157. ஆணவ மாதி மலமைந் தலரோனுக்
காணவ மாதி நான்காமாற் கரனுக்
காணவ மாதிமூன் றீசர்க் கிரண்டென்ப
ஆணவ மொன்றே சதாசிவற் காவதே. (உ, ட)

வரும் வழி, போம் வழி

**2158. தத்துவம் ஆறாறு; தன் மனு ஏழ் கோடி
மெய்த்தகு வன்னம் ஐம்பான் ஒன்று, மேதினி
ஒத்த இரு நூற்று இருபான் நான்கு; எண்பான் ஒன்று,
வைத்தபதம், கலை ஓர் ஐந்தும் வந்ததே.**

தத்துவ [1]மாறாறு தன்மனு வேழ்கோடி
மெய்த்தகு வன்னமைம் பானொன்று மேதினி
யொத்திரு நூற்றிரு பானான்கெண் பானொன்று
வைத்த பதங்கலை யோரைந்தும் வந்ததே. **(6)**

வேறு பாடம்: 1. மாறைந்து (ஆ இ) II.

கருத்து: அத்துவாக்கள் ஆறு. அவற்றுள், தத்துவங்கள் 36. மந்திரம் ஏழு கோடி. வன்னம் 51. புவனங்கள் 224. பதங்கள் 81. கலைகள் 5.

அத்துவா - வழி. உலகம் படைக்கப்படும் வழிமுறை. அவற்றை ஒன்றில் ஒன்றாக ஒடுக்கிக் கொண்டே சென்று சிவத்தை அடைவர் ஆதலின், ஆன்மா ஞானம் பெறும் வழியும் அதுவே.

குறிப்பு: இப்பாடல் முதல் மூன்று பாடல்களை அ, ஒ - சுவடிகளும் பதிப்புகளும் 'அத்துவாக்கள்' என்ற தனியியலுள் தருகின்றன. ஆ இ - சுவடிகள் முன்னை இயலின் தொடர்ச்சியாக இவற்றைக் காட்டுகின்றன. அதுவே பொருந்துதலின், இப்போதைய பதிப்பில், அவ்வாறே மேற்கொள்ளப்பட்டது.

நிராதார யோகம்

**2159. நாடிய மண்டல மூன்று நலந்தெரிந்
[1]தோடு [2]மவரோடி யுள்ளிரு பத்தைஞ்சு
[3]கூடுவர் கூடிக் குறிவழி யேசென்று
[4]தேடிய [5]பின்னைத் திகைத்திருந் தார்களே. (7)**

வேறு பாடம்: 1. தோடுவ ரோடி (அ இ ஒ) II. 2. மவரோடுள்ளிரு (சங்) 3. கூடுமவர் கூடிக் (ஆ ஈ ஒ) II. 4. தேடியே (ஈ) IV. 5. மன்னைத் (ஈ) IV.

கருத்து: உடம்பில் அக்கினி, சூரிய, சந்திர மண்டலங்களின் பயனை அனுபவத்தால் உணர்ந்து, சுழுமுனை நாடியின் வழியே மூலக்கனலை ஏற்றுபவர், இருபத்தைந்து தத்துவங்களையும்

உடம்பில் உணர்ந்து, அவற்றினின்று விடுபடுவர். அவர் மேலும், குரு உபதேசப்படி, சகஸ்ராரத்திற்கு மூலக் கனலை ஏற்றி, அதன்பின் நிராதார யோகத்தினை அடைந்து. அஃது இன்னவாறு என்று சொல்லமாட்டாமல் இருப்பர்.

தலையில் ஐந்து அவத்தை

2160. சாக்கிர சாக்கிரம் - ஆதி தலை ஆக்கி,
ஆக்கிய தூலம் அளவு ஆக்கி, அதீதத்துத்
தாக்கிய அன்பான தாண்டவம் சார்ந்து, அது
தேக்கும் சிவம் ஆர்தல் ஐந்தும் சிவாயவே.

சாக்கிர சாக்கிர மாதி தலையாக்கி[1]
யாக்கிய தூல [2]மளவாக்கி யதீதத்துத்
தாக்கிய [3]வன்பான தாண்டவஞ் சார்ந்தது
தேக்குஞ் [4]சிவமார்த லைந்துஞ் சிவாயவே[5]. (8)

வேறு பாடம்: 1. தலையாகி (ஓ) I. 2. மளவாகி (அ இ ஈ ஓ) I. 3. வன்பாலத் (ஆ இ) III; வன்பான் (சங்) 4. சிவமாத (ஓ) I. 5. சிவாயமே (சங்)

கருத்து: சாக்கிர சாக்கிரம் முதலிய ஐந்து அவத்தைகளையும் தலையில் அனுபவிக்கத் தொடங்கி, தூலவுடம்பின் உச்சியை எல்லையாக்கி, அதற்கும் மேல் நீளும் அன்பினால் சிவதாண்டவத்தைக் கண்டு, அந்தத் துரியாதீதத்தில் பெருகும் சிவானந்தத்தை அனுபவித்தல் - ஆகிய ஐந்து அவத்தைகளும் உணர்த்துவது திருவைந்தெழுத்தின் அனுபவமே ஆகும்.

இப்பாடலால் அடுத்த இயலுக்குத் தோற்றுவாய் செய்தார்.

(iii) சுத்த நனவாதி

சுத்த சாக்கிரம்

2161. நனவு ஆதி தூலமே சூக்கப் பகுதி;
அனதான ஐயைந்தும் விந்துவின் சத்தி;
தனது ஆம் உயர்விந்து தான் நின்று போந்து
கனவா நனவில் கலந்தது இவ்வாறே.

நனவாதி தூலமே சூக்கப் பகுதி
[1]யனதான வையைந்தும் விந்துவின் சத்தி
தனதா முயர்விந்து தானின்று போந்து
கனவா நனவிற் கலந்ததிவ் வாறே. (1)

வேறு பாடம்: 1. யனகாண மையைந்து (அ) I; யனவான (த) 2. தனகா (ஒ ஓ) I. 3. முயிர்விந்து (விசு) (தி) (வ).

கருத்து: நனவு (சாக்கிரம்) முதலியன தூலமாய்த் தோன்றுதல் கீழாலவத்தையும் மத்திய அவத்தையும் ஆகும். அவை சூக்குமமாய்த் தோன்றுதல் சுத்தாவத்தை. இச் சுத்தாவத்தையில் தொழிற்படும் தத்துவங்கள் இருபத்தைந்தும் சுத்தமாயையின் தத்துவங்கள் ஆகும். சுத்த சாக்கிரத்தில், சுத்தமாயை தன் 25 தத்துவங்களையும் இயக்கி, அதனைத் தூலத்தின் (கீழ், மத்திய அவத்தைகளின்) கனவு போலத் தோன்றச் செய்யும்.

குறிப்பு: பெரும்பான்மைச் சுவடிகளில் 'சுத்த நனவாதி' என்னும் இயற்பெயரே உள்ளது.

சுத்தத்தில் நான்கு

2162. நனவி லதீதம் பிறந்தார் கிடந்தார்
நனவிற் [1]றுரிய [2]நிகழ்ந்தார் தவழ்ந்தார்
நனவிற் [3]சுழுனை நடந்தார் வளர்ந்தார்
நனவிற் கனவோட [4]னன்செய்தி யானதே. (2)

வேறு பாடம்: 1. றுரியமுந் (அ, ஆ, இ) I. 2. தளர்ந்தார் (ஆ இ) I; நகந்தார் (ஒ) I; நகர்ந்தார் (விசு); நகழ்ந்தார் (சங்) 3. சுழுத்தி (விசு) (த) 4. னன்செயலானதே (இ) III.

கருத்து: சுத்த நனவை மேற் பாடலில் விளக்கியவர், இங்கு மற்ற அவத்தைகளை விளக்குகின்றார்: சுத்த அவத்தைகள் நனவு தொடங்கித் துரியாதீதம் வரை தோன்றுமாயினும், கீழாலவத்தை களை விளக்கியது போலத் துரியாதீதத்திருந்து கூறுகிறார். சுத்த துரியாதீத நிலையை அடைந்தோர், சிவம் என்ற ஒரு தத்துவத்துடன் கூடிச் செயலற்று இருப்பர். சுத்த துரியநிலை எய்தியவர் இயங்கத்தொடங்கித் தவழ்வர். சுத்த சுழுத்தி அடைந்தோர் நடப்பர். சுத்த சொப்பனம் எய்தியவர் ஓடுவர்.

இவ்வவத்தைகளை எய்தியோருக்குக் குழந்தைகளை உவமித்துப், பிறந்தார், தவழ்ந்தார், நடந்தார், ஓடினார் என்று கூறினார்.

இதுவரை கண்டவற்றுள் கீழாலவத்தைகள் மட்டும் நனவு முதல் துரியாதீதம் வரை கீழ் இறங்கியும், பிறகு துரியாதீதம் முதல் நனவு வரை மேலே ஏறியும் மாறி மாறி நடக்கும். மத்தியவவத்தையும் சுத்தாவத்தையும் நனவு முதல் துரியாதீதம் வரை மேலேறுதல் மட்டுமே நிகழும் என உணர்க. இம் மூன்று வகை அவத்தைகளுள் கீழாலவத்தை உலக அனுபவத்திற்கு உரியது. ஏனையவை இறையனுபவத்திற்கு உரியன.

துரியாதீதம் பெற்றோர் அறிவு

2163. செறியும் கிரியை சிவ தத்துவம் ஆகும்;
பிறிவு இல் சுகபோகம் பேரருள்; கல்வி
குறி தன் திருமேனி குணம் பல ஆகும்
அறிவு இல் சராசரம் அண்டத்து அளவே.

செறியுங் கிரியை [1]சிவதத் துவமாம்
பிறிவில் [2]சுகபோகம் பேரருள் கல்வி
குறிதற் றிருமேனி குணம்பல வாகு
மறிவில் சராசர மண்டத் தளவே[3]. (3)

வேறு பாடம்: 1. சிவதத்துவத்துப் (அ) I. 2. சிவபோகம் (இ) IV; சுகயோகம் (சங்) 3. துளவே (இ) I.

கருத்து: சுத்த துரியாதீதம் அடைந்தோரிடம் எண்ண அளவாக உள்ள செய்கைகள் சிவதத்துவத்தின் சங்கற்ப அளவாக உள்ள செயல்களை ஒப்பவை. சிவனது எட்டுப் பேரருளே அவர் அனுபவிக்கும் ஆனந்தம். அவர் கற்பவை சிவனுடைய எட்டுக் குணங்கள். அவர்கள் அண்ட சராசரம் எங்கும் வியாபகமான அறிவைப் பெற்றவர் ஆவர்.

பிறிவு - எதுகை நோக்கி விகாரப்பட்டது. குறிக்கின்ற தனது (இறைவனது) மேனி என்க. அறிவில் - அறிதல் இயலாத. அவர்களது அறிவு சராசரங்களை எல்லாம் தழுவி அண்டத்தின் அளவாய்ப் பரவி நிற்கும் என்க. இது சுத்த துரியாதீதம் பெறறோர்க்கு அல்ல து, பிறர்க்கு இயலாமையின், "அறிவு இல்" என்றார்.

2164. ஆதி பரஞ்சிவஞ் சத்தி சதாசிவ
மேதமி லீசனல் வித்தியா தத்துவம்
போதங் கலைகால நியதி மாமாயை
நீதியீ றாக நிறுத்தின னென்னே. (அ, ஆ)

சுத்த அவத்தைத் தத்துவங்கள்

2165. தேசு திகழ்சிவஞ் சத்தி சதாசிவ
மீசனல் வித்தை யிராகங் கலைகால
மாசகல் வித்தை நியதி மகாமாயை
யாசில் புருடாதி யான்மாவீ ராறே. (4)

கருத்து: சிவதத்துவமாவன, சிவம், சத்தி, சதாசிவம், மாயேச்சுரம், சுத்தவித்தை என்னும் ஐந்து மாகும். வித்தியா தத்துவமாவன, அராகம், கலை, காலம், வித்தை, நியதி, மாயை, புருடன் என்ற ஏழும் ஆகும். ஆக, இவை பன்னிரண்டு தத்துவங்கள்.

இவை சுத்த அவத்தைகளில் தொழிற்படுவன என்பது கருத்து.

மலம் நீங்கினாலும் இறைவன் ஆகான்

2166. ஆணவம், மாயையும், கன்மமும் ஆம் மலம்
காணும் முளைக்குத் தவிடு, உமி; ஆன்மாவும்
தாணுவை ஒவ்வாமல் தண்டுலமாய் நிற்கும்
பேணும் அவற்றுநின் பாசம் பிரித்தே.

ஆணவ மாயையுங் கன்மமு மாமலங்
[1]காணு [2]முளைக்குத் தவிடுமி யான்மாவுந்
தாணுவை யொவ்வாமற் றண்டுல மாய்நிற்கும்
[3]பேணு மவற்றுநின் [4]பாசம் பிரித்தே[5]. (5)

வேறு பாடம்: 1. காணுமின் முக்குத் (ஈ ஓ ஓ) I. 2. முளையத் (த) 3. பேணுவாய் மற்றுநின் (அ ஈ ஓ) I. 4. பாகம் பிறப்பே (அ) II. 5. பிரித்துமே (துடி).

கருத்து: ஆன்மாவிற்கு ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங் களும் முளைக்கும் தானியத்திற்குத் தவிடும் உமியும் போல்பவை. இறைவன் அம்மலங்களை ஆன்மாவைவிட்டுப் பிரித்தபின், ஆன்மா அரிசி போல இருக்கும். அப்பொழுதும் அது மலமற்றவனாகிய இறைவனை ஒவ்வாது.

இறைவன் இயல்பாகவே மலங்கள் இல்லாதவன். ஆன்மாவுக்கு அவன் அவற்றைப் பிரித்து அருளுகின்றான். எனவே அருளும் நிலையில் இறைவனும், அருளப்படும் நிலையில் ஆன்மாவும் உள்ளனர்.

மலம் நீங்கினால் இறைவனின் சார்பில்

2167. பசுக்கள் பல வண்ணம், பால் ஒரு வண்ணம்,
பசுக்களை மேய்க்கின்ற ஆயன் ஒருவன்
பசுக்களை மேய்க்கின்ற ஆயன் கோல் போடின்
பசுக்கள் தலைவனைப் பற்றி விடாவே.

பசுக்கள் பலவண்ணம் பாலொரு வண்ணம்
பசுக்களை மேய்க்கின்ற வாய னொருவன்[1]
பசுக்களை மேய்க்கின்ற வாயன்கோல் போடிற்
பசுக்க டலைவனைப் பற்றி விடாவே[2] (6)

வேறு பாடம்: 1. னொருவண்ணம் (அ ஈ ஒ ஓ) II. 2. யிடாவே (த)

கருத்து: இது பிறிது மொழிதல் அணி. இவ்வணியால் குறிக்கப்படும் பொருளாவது:- ஆன்மாக்கள் பலவகை. ஆனால் பசுத்தன்மை என்பது ஒன்றே. அவற்றின் தலைவன் இறைவன், அவன் ஆன்மாக்களை இடை விடாது பிறப்பித்தலை நிறுத்தினால், அவை அவனை உறுதியாகச் சார்ந்து, அகலாமல் நிற்கும்.

பிறப்பித்தலை நிறுத்துவது, ஆன்மாக்களின் இருவினை ஒப்பைக் காட்டும். வினை நீங்கியபின், ஆணவமும் படிப்படியே நீங்கும். பின் ஆன்மா இறைவனின் அருள் வியாபகத்தில் அடங்கி நிற்கும்.

அறியாமை வளர்ந்தால் நரகம்

2168. உடலிந் [1]தியமன மொண்புத்தி சித்த
மடலொன் றகந்தை யறியாமை மன்னிக்
கெடுமவ் வுயிர்மயன் மேலுங் கிளைத்தா
லடைவது தானேழ் நரகத்து ளாயே. (7)

வேறு பாடம்: 1. திரியமன (ஓ) II.

கருத்து: உடம்பில் உள்ள ஐம்பொறிகள், மனம், புத்தி, சித்தம் ஆகியவை அறியாமையில் நிலை பெற்று நிற்க, அதனால் கேடுறும் உயிர், அந்த அறியாமை நீங்காது மேலும் வளர்ந்தால், ஏழு நரகங்களில் கிடந்து, மீளாது உழலும்,

சென்ற பாடலில் மலம் நீங்கினால் முத்தி கிடைக்கும் என்ற ஆசிரியர் இப்பாடலில், அவை நீங்காது மயக்கத்தை வளர்த்தால் நரகம் கிடைக்க, அத்துன்பம் நெடிது நிற்கும் என்றார்.

அவத்தையும் ஐம்மலமும்

2169. தன் தெரியாதது அதீதம் தற்கு ஆணவம்,
சொல் தெரிகின்ற துரியம் சொல் காமியம்,
பெற்றல் சுழுத்தி, பின் பேசுறும் காதலால்
மற்றது உண்டிக் கன, நன ஆதலே.

தற்றெரி யாத [1]ததீதந்தற் காணவஞ்
சொற்றெரி கின்ற துரியஞ்சொற் காமியம்
[2]பெற்றல் [3]சுழுத்திப்பின் பேசுறுங் காதலான்[4]
மற்றது வுண்டிக் கனநன வாதலே. (8)

வேறு பாடம்: 1. தீதந்தற் (அ) I; வதீதந்தற் (விசு) (தி) (வ); வதீதந்தன்னாணவந் (த) 2. பெற்றலஞ் (அ) I; பெற்ற (ஓ) I. 3. சுழுத்தி யின் (ஆ இ ஓ) I. 4. காதலா (ஓ) I.

கருத்து: உயிர், தன்னையும் அறியாது, ஆணவத்தோடு கூடி, மூலாதாரத்தில் கிடப்பது கீழாலவத்தைத் துரியாதீதம். தன்னைத் தெரிகின்ற நிலையில், கான்மியத்துடன் கூடி, உயிர் உந்தியில் இருப்பது துரியம். பின், உயிர் மாயையோடு கூடி நெஞ்சில் இருப்பது சுழுத்தி. பிறகு, கன்மங்களை நுகர்ந்து, முறையே கண்டத்திலும், புருவமத்தியிலும் உயிர் இருப்பது கனவும், நனவும் ஆகும்.

மலங்களைக் கூறியதனால், இப்பாடலை இங்கு அமைத்தார்.

சுத்தாவத்தையில் அனுபவம்

2170. நனவில் கனவுஇல்லை; ஐந்தும் நனவில்
கனவிலாச் சூக்குமம் காணும் சுழுத்தி
தனில் உண் பகுதியே; தற்சுட்டு மாயை
நனவில் துரியம்; அதீதம் தலைவந்தே.

நனவிற் [1]கனவில்லை யைந்து நனவிற்
கனவிலாச் சூக்குமங் காணுஞ் சுழுத்தி
[2]தனிலுண் பகுதியே தற்சுட்டு மாயை
நனவிற் றுரிய மதீதந் தலைவந்தே[3]. (9)

வேறு பாடம்: 1. கனவின்னைவில்லை யைந்து (ஆ இ) I. 2. தனலுண் (விசு) (தி) (வ); தனினுண் (த); 3. தலைவந்ததே (ஓ) I.

கருத்து: சுத்த அவத்தை ஆகிய கனவில் அனுபவிக்கப்படும் தத்துவம் ஒன்றும் இல்லை. ஏனைய நான்கு அவத்தைகளுள் சாக்கிரமாகிய நனவில் சுத்த மாயா தத்துவங்கள் ஐந்தும் அனுபவப் படும். சுழுத்தியில், சுத்ததத்துவங்களின் நுண்ணிய தன்மை அனுபவப்படும். துரியத்தில் சத்தியும் சிவமும் அனுபவப்படும். துரியா தீதத்தில் சிவம் மட்டும் அனுபவப்படும்.

"தனில் உண்பகுதி" என்பதை, "நனவில் உண்பகுதி ஐந்து" என்பது முதலாக "மாயை நனவில்துரியம்" என்பது வரை, இடைநிலை விளக்காகக் கூட்டுக. 'நனவு' என்ற சொல், சுத்தம், விழிப்பு என்ற இருபொருளிலும் வந்துள்ளது. 3 ஆம் அடியில் "மாயை" என்பது சத்தி எனப் பொருள் தந்தது. "தலை" என்பது சிவம்.

சுத்த அவத்தையில் தத்துவம் நீங்குதல்

2171. ஆறாறில் ஐயைந்து அகல நனாநனா;
ஆறாம் அவைவிட ஆகும் நனாக்கனா
வேறான ஐந்தும் விடவே நனாவினில்
ஈறாம் சுழுனை இதில் மாயைதானே.

ஆறாறி லையைந் [1]தகல நனாநனா[2]
[3]வாறா மவைவிட [4]வாகு நனாக்கனா
வேறான [5]வைந்தும் [6]விடவே நனாவினி
லீறாஞ் சுழுனை யிதின்மாயை தானே. (10)

வேறு பாடம்: 1. தகலங்கு கனா (ஈ) I. 2. னனாநனா (த) 3. மாறாகு (அ) 4. வாகுமன்னாக்கனா (ஒ) I; வாகுமன்னான்கனா (அ) I. 5. வையைந்தும் (ஈ ஒ) I. 6. வீட (ஈ) IV.

கருத்து: முப்பத்தாறு தத்துவங்களுள் ஆன்ம தத்துவம் 24-ம், புருடதத்துவமும் நீங்கப்பெறும் நிலையில் அடைவது சுத்த சாக்கிரம். வித் தியா தத்துவங்களுள் புருடன் தவிர, மற்றவை நீங்கும் நிலையில் அடைவது சுத்த சொப்பனம். (அதாவது, ஆன்மாவும், புருடதத்துவமும் மட்டும் இருப்பது சுத்த சொப்பனம்) சிவதத்துவம் ஐந்தும் நீங்கும் நிலையில், சுத்த சுழுத்தி. எனவே இதில், சுத்த மாயை மட்டும் ஆன்மாவுடன் கூடி நின்று ஆணவ மலத்தைப் பரிபாகப் படுத்தும் (நீங்க ஆயத்தமாக்கும்).

உடலின் பயன் முடிந்தது

2172. மாயையில் வந்த புருடன், துரியத்தில்
ஆய முறைவிட்டு அதுவும் தான் அன்றாகி,
சேய கேவல விந்துடன் செல்லச் சென்றக்கால்
ஆய தனுவின் பயன் இல்லை ஆகுமே.

மாயையில் வந்த புருடன் றுரியத்தி
லாய முறைவிட் டதுவுந்தா னன்றாகிச்
சேயகே [1]வலவிந் [2]துடன்செல்லச் சென்றக்கா
லாய தனுவின் பயனில்லை யாகுமே. (11)

வேறு பாடம்: 1. வலம் வந்த (ஆ இ ஈ ஒ). 2. துவுஞ்செலச் (த)

கருத்து: மேற்பாடலில் கூறியபடி, சுத்த சுழுத்தியில், சுத்த மாயையுடன் கூடிப் பக்குவம் வரப்பெற்ற ஆன்மா, அதன் பிறகு சுத்த துரியத்தில் அம்மாயையும்விட்டு, அது தான் அன்று எனத் தெளிந்து, அப்பாற்பட்டதாகிய பரவிந்து (சிவனது சிற்சத்தி) வுடன் இணைய ஆயத்தமாகும். அப்பொழுது இத்தூலவுடலால் பயன் ஒன்றும் இல்லை.

இங்ஙனம் ஆயத்தமாகிய ஆன்மா, பரவிந்துவுடன் இணைவது சுத்த துரியாதீதம். அதனை அடுத்த பாடலில் விளக்குவார்.

பேரொளி காணல்

2173. அதீதத் துரியத்து அறிவன் ஆம் ஆன்மா,
அதீதத் துரியம் - அதனால் புரிந்தால்
அதீதத்து எழுந்து அறிவாகு இயமானால்
முதிய அனலில் துரியத்து முற்றுமே.

அதீதத் துரியத் [1]தறிவனா மான்மா
வதீதத் துரிய [2]மதனாற் புரிந்தா
லதீதத் தெழுந்தறி வாகிய மானான்[3]
முதிய வனலிற் றுரியத்து முற்றுமே. (12)

வேறு பாடம்: 1. ததீதனா (த) 2. மகனாப் (ஈ) I; மதனார் (ஈ) I. 3. மானன் (ஓ) I.

கருத்து: சுத்த துரியாதீதத்தில் ஞானம் எய்தும் ஆன்மா, அந்த ஞானத்தினோடு துரியாதீதத்திலேயே நிலைபெற்றால், பேரறிவே வடிவாகிய சிவபரம் பொருளினால், மிக முதிர்ந்த பேரொளியைக் கண்டு, அதில் கூடும்.

அறிவன் - பதிஞானம் பெற்றவன். இயமானன் - செலுத்துபவன். இயமானனால் என்பது விகாரப்பட்டது.

2174. ஐயைந்து பத்துட னானது சாக்கிரங்
கைகண்ட வையஞ்சிற் கண்டங் கனாவென்பர்
பொய்கண்ட மூவர் புருடன் சுழுனையின்
மெய்கண் டவனுந்தி மேவ லிருவரே. (அ)

கனவில் ஐந்து அவத்தை

2175. புரியட் [1]டகமே பொருந்த நனவு
புரியட் டகந்தனின் மூன்று கனவு
புரியட் டகத்தி லிரண்டு சுழுத்தி
புரியட் டகத்தொன்று [2]புக்க துரியமே[3]. (13)

வேறு பாடம்: 1. டகமும் (ஒ ஓ) I. 2. புக்காற் (த) 3. றுரியமே (சைவ)

கருத்து: புரியட்டகம் என்ற நுண்ணுடல் தொழிற்படுவது கனவில் நனவு. அவற்றுள் மனம், புத்தி, அகங்காரம் என்னும் மூன்றும் தொழிற்படுவது கனவில் கனவு. அவற்றுள் புத்தியும் அகங்காரமும் தொழிற்படுவது கனவில் உறக்கம். அகங்காரம் மட்டும் தொழிற்படுவது கனவில் துரியம்.

அகங்காரம் அடங்குதல் துரியாதீதம் எனக் குறிப்பால் உணர்த்தினார்.

நனவில் ஐந்து அவத்தை

2176. நனவி னனவு புலனில் வழக்க[1]
நனவிற் கனவு நினைத்தன் மறத்த[2]
னனவிற் [3]சுழுனையுண் ணாட லிலாமை
நனவிற் றுரிய [4]மதீதத்து நந்தியே[5]. (14)

வேறு பாடம்: 1. விளக்க (இ) I. 2. மறைத்த (அ ஓ) I. 3. சுழுனையுன்னாட (அ ஈ) I. 4. மதீதத்தூண் (த) 5. நன்மையே (ஈ) II.

கருத்து: நனவில் நனவு என்பது தன்மாத்திரைகள் ஐந்தும் தொழிற்படாது இருத்தல். நனவில் கனவு என்பது நினைப்பு மட்டும் இருத்தல். மறந்து போவது சுழுத்தி. உயிர் உணர்வினால் எதையும் ஆராய்தல் இல்லாதிருத்தல் துரியம். துரியா தீதத்தில் எல்லாம் விட்டு நீங்க, சிவம் அனுபவப் பொருளாகும்.

கனவில் ஐந்தவத்தை

2177. [1]கனவி னனவுபோற் காண்ட னனவாங்
கனவினிற் [2]கண்டு மறத்தல் கனவாங்
கனவிற் சுழுத்தியுங் [3]காணாமை காண
லனுமாதி [4]செய்தலி லான துரியமே. (15)

வேறு பாடம்: 1. கனவு (ஆ இ) I. 2. கண்ட (த) 3. காணாத (த) 4. சேரி (இ) II; சேயரி (ஆ) I; தேய்தலி (த)

கருத்து: கனவில் நனவு ஆவது, நனவு போலக் காண்பது. கனவில் கனவாவது, கண்டு மறந்து விடுதல். ஒன்றையும் காணாமை கனவில் சுழுத்தி. கண்டவற்றைக் கொண்டு, ஏனையவற்றை அனுமானத்தால் உணர்தல் துரியம்.

உயிர்ப்பு அடங்கல் துரியாதீதம் என்பது குறிப்பால் உணர்த்தினார்.

சுழுத்தியில் ஐந்தவத்தை

2178. சுழுத்தி [1]நனவொன்றுந் தோன்றாமை தோன்றல்
[2]சுழுத்தி கனவத னுண்மை சுழுத்தி[3]
சுழுத்தி யறிவறி வாலே யழிகை[4]
சுழுத்தி துரியமாஞ் [5]சொல்லறும் பாழே. (16)

வேறு பாடம்: 1. கனவு போல் (ஆ இ) II. 2 சுழுத்திக் (த) 3. சுழுத்தியிற் (விசு) (தி) (வ) (த) 4. யறிகை (ஆ இ) 5. சொல்லறு வாறே (ஓ) I சொல்லறுமாமே (ஓ) II.

கருத்து: சுழுத்தியில் நனவு என்பது, ஒன்றும் அறியாமல் உறங்குதல். ஆன்மாவின் உண்மை தோன்றுதல், அதில் கனவு ஆகும். அதில் சுழுத்தி என்பது, சிவபோதத்தால், சீவபோதம் அழிதல். அதில்துரியம் என்பது, அருளொளிக் காட்சியாகும். சுழுத்தியில் துரியாதீதம், சிவனது சொரூபத்தை (உண்மை இயல்பை) உணர்தல் என்பது குறிப்பு.

துரியத்தில் ஐந்தவத்தை

2179. துரிய நனவா [1]மிதமுணர் போதந்[2]
துரியக் கனவா மகமுணர் போதந்
துரியச் சுழுத்தி வியோமந் துரியந்[3]
துரியம் பரமெனத் தோன்றிடுந் தானே. (17)

வேறு பாடம்: 1. மிதமுரை (சங்) 2. பேதந் (அ) I. 3. துரியத் (த)

கருத்து: துரியத்தில் நனவாவது, நன்மையை அறியும் ஞானம்; கனவாவது, உயிரின் உள்ளொளியை - இறைவனை - உணரும் ஞானம். சுழுத்தியாவது அண்டவெளியில் ஆகாயம் எனப் பரந்து நிற்கும் இறைவனது அருவத்தை உணர்தல். துரியமாவது, அதற்கும் மேலான அறிவைப் பெறுதலாகும்.

துரியா தீதத்தில் ஐந்தவத்தை

2180. அறிவறி கின்ற வறிவு நனவா
மறிவறி யாமை யடையக் கனவா
மறிவறி யவ்வறி [1]யாமை சுழுத்தி
யறிவறி வாகு [2]மான துரியமே. (18)

வேறு பாடம்: 1. யாமல் (அ ஆ இ ஒ) I. 2. யாகு (ஆ இ) I; வாயின தான (த).

கருத்து: சிவபோதத்தை - பதி உணர்த்தும் ஞானத்தை - உணரும் அறிவு, துரியாதீதத்தில் நனவாகும். அதில் கனவாவது, அங்ஙனம் உணர்ந்தும் சிவத்தை நன்கு தெளியாமை ஆகும். அருளறிவு சிவத்தை உணர்ந்து நிற்க, தான் என்ற எண்ணம் அறவே இல்லாமற் போவது, துரியாதீதத்தில் சுழுத்தி. சிவ அறிவே ஆன்ம அறிவாக நிற்பது துரியம் ஆகும்.

விரிந்து ஒடுங்கும்

2181. தான் எங்கும் ஆயவன் ஐம்மலம் தான் விட்டு,
ஞானம் தனது உரு ஆகி நயந்த பின்,
தான் எங்குமாய் நெறி நின்று, அது தான்விட்டு
மேல்நந்தச் சூக்கம் அவை, வன்னம் மேலிட்டே.

தானெங்கு மாயவ னைம்மலந் தான்விட்டு
ஞானந் [1]தனதுரு வாகி நயந்தபின்[2]
றானெங்கு மாய்நெறி நின்றது தான்விட்டு
[3]மேனந்தச் சூக்க மவைவன்ன மேலிட்டே[4]. (19)

வேறு பாடம்: 1. தன்னுரு (அ ஈ ஒ) III. 2. நயந்துபின் (த) 3. மோனந்தச் (ஆ இ ஒ) I. 4. மேலீடே (த)

கருத்து: வியாபகம் என்னும் தன்மைஉடைய ஆன்மா, தனது இயல்பாகிய அந்தத் தன்மையை அடைவதற்குத் தடையாக இருந்த ஐந்து மலங்களையும் நீக்கி, ஞானமே வடிவமாகி, எங்கும் வியாபகமாக நின்று, பின்பு அதனையும் விட்டு நுண்மைபெற்று, அருவமாய் உள்ள சிவத்தில் ஒடுங்கும்.

மேல் - பிறகு. நந்த - ஒடுங்குவதற்கு. சூக்கம் - சூக்குமம் என்பதன் திரிபு; அருவம் அவை - பகுதிப் பொருள் விகுதி. வன்னம் - தன்மை. ஈண்டு நுண்மையைக் குறித்தது.

வினைமுடிவு: எங்கும் ஆயவன் சூக்கம் அவை (ஆகும்) என முடிவு செய்க.

2182. ஐயைந்து மாறுமோ ரைந்து நனாவினி
லெய்யும் நனவு கனவு சுழுத்தியா
மெய்யுந் துரியத்து ளெய்தும் பகுதியா
யையமுந் தானான வத்துரி யத்தனே. (அ)

இயக்கும் ஆற்றல்

2183. ஈது என்று அறிந்திலன் இத்தனை காலமும்
ஈது என்று அறிந்தபின் ஏதும் அறிந்திலேன்;
ஈது என்று அறியும் அறிவை அறிந்தபின்
ஈது என்று அறியும் இயல்புடையோரே.

[1]ஈதென் றிறிந்தில னித்தனை காலமு
மீதென் றறிந்தபி னேது மறிந்திலே
னீதென் றறியு மறிவை யறிந்தபி
னீதென் றறியு மியல்புடை யோரே[2]. (20)

வேறு பாடம்: 1. ஈதொன் (அ) I. 2. யோனே (ஒ) I.

கருத்து: இத்துணைக்காலமும், 'நம்மை இயக்குவது இது' என்று யான் அறிய வில்லை. இப்போது அதனை அறிந்தபின், வேறு எதையும் உணரவில்லை. அவ்வறிவைப் பெற்றோர், சிவத்தையே புகலிடமாக அறிந்துகொள்வர்.

இறைவன் செய்யும் உதவி

2184. உயிர்க்கு உயிர் ஆகி, உருவாய், அருவாய்
அயற்புணர்வு ஆகி, அறிவாய், செறிவாய்
நயப்புஉறு சத்தியும் நாதன், உலகாதி
இயற்பு இன்றி, எல்லாம் இருள் மூடம் ஆமே.

உயிர்க்குயி [1]ராகி யுருவா யருவா
யயற்புணர் வாகி யறிவாய்ச் செறிவாய்
நயப்புறு சத்தியு நாத னுலகாதி
[2]யியற்பின்றி யெல்லா மிருண்மூட மாமே[3]. (21)

வேறு பாடம்: 1. ராகிய (துடி) 2. யியல்பின்றே லெல்லா (த) 3. லாமே (அ) I.

கருத்து: சத்தியும் சிவமும் உலகத்து உயிர்கட்கு உயிராகி ஒன்றி நின்றும், தெய்வ உருவாய்த் தனித்து நின்றும், அருவாய் விளங்கியும், உடனாய்நின்று கலந்தும் அறிபொருளாகவும், வியாபகப் பொருளாகவும், இருந்து இயக்கவில்லையேல் உயிர்களை ஆணவ மலம் மூடியே கிடக்கும்.

ஈசன் செய்த உதவி

2185. சத்தி இராகத்தில், தான் நல்லுயிர் ஆக்கி,
ஒத்து உறு பாச மலம் ஐந்தோடு, ஆறாறு
தத்துவ பேதம் சமைத்துக் கருவியும்
வைத்தனன் ஈசன் மயம் அறுமாறே.

சத்தி [1]யிராகத்திற் றானல் லுயிராக்கி[2]
யொத்துறு பாச மலமைந்தோ டாறாறு
தத்துவ பேதஞ் [3]சமைத்துக் கருவியும்
[4]வைத்தன னீசன் [5]மயமறு மாறே. (22)

வேறு பாடம்: 1. யராகத்திற் (இ ஓ) III; விராகத்திற் (சங்) 2. லுயிராகி (ஆ) IV. 3. சமையக் (ஈ) IV. 4. அமைத்தன (ஓ) II. 5. மயலறு (ஈ) IV; மலமறு (ஆ இ) III. 6. மாமே (ஈ ஓ) I.

கருத்து : ஆன்மாவைப் பிடித்த ஆணவ மலம் நீங்கும் வண்ணம், ஈசன் சத்தியுடன் சேர்ந்து, அதை உலகில் உயிராகப் படைத்து, ஆணவ மலம், முதலிய ஐந்து மலங்களும் செயற்படுமாறு, 36 தத்துவங்களைப் படைத்து, உயிருக்குக் கருவிகளாக உதவுமாறு செய்தான்.

மயம் - வயமாகும் தன்மை.

ஆணவம் நீங்குதல்

2186. சாக்கிர-அதீதத்தில் ஆணவம்தன் உண்மை
சாக்கிர-அதீதம் துரியத்தில் தான் உறல்
சாக்கிர-அதீதத்தில் ஆணவம்தான் விட,
சாக்கிர-அதீதம் பரன்-உண்மை தங்குமே.

சாக்கிரா தீதத்தி லாணவந் தன்னுண்மை[1]
சாக்கிரா தீதந் துரியத்திற் றானுறற்[2]
சாக்கிரா [3]தீதத்தி லாணவந் தான்விடச்[4]
சாக்கிரா தீதம் பரனுண்மை தங்குமே. (23)

வேறு பாடம்: 1. தானுண்மை (அ) IV. 2. றானுறஞ் (அ ஈ ஓ ஓ) I; றானுறச் (இ) IV; றானுறல் (தி) 3. தீதமாணவமிடைத் (அ ஓ ஓ) I. 4. தான்விடாச் (சங்)

கருத்து: மலங்களைக் கூறி வருபவர், அவை நீங்குதல் பற்றி, முன்பு கூறினாராயினும் மீண்டும் இயைபு பற்றி அனுவதித்தார்.

கேவல நனவுக்கு மேல், ஆன்மா, தன்னை ஆணவமலம் பற்றிக் கொண்டிருத்தலை உணரும். அத்துரியத்தில், ஆன்மா தன்னை உணரும். அதன்மேல், அம்மலம் நீங்க, ஆன்மா தன்னிடம் சிவன் உறைதலை உண ரும்.

ஆன்மா சிவனது இருப்பை உணர்ந்து, என்றும் பேரானந்தத்தில் நிலைத்துத் திளைக்கும் என்ற பொருளும் விளைதல் காண்க.

இங்குச் 'சாக்கிராதீதம்' எனப்படுபவை சகலநிலை, சுத்தநிலைகளில் உள்ள அவத்தைகள்.

மலத்தடை

2187. மலக்கலப் பாலே மறைந்தது சத்தி
மலக்கலப் பாலே மறைந்தது ஞான
மலக்கலப் பாலே [1]மறைந்தனன் றானு[2]
மலக்கலப் பற்றான் மதியொளி யாமே. (24)

வேறு பாடம்: 1. மறைந்துநின் (ஆ இ) I. 2 றாணு (சைவ)

கருத்து: ஆணவ மலம் ஆன்மாவோடு ஒட்டியுள்ளமையால் சத்தியின் அருளை ஆன்மா அறிந்து பயன் கொள்ளவில்லை. அக்காரணத்தால் அதற்கு மெய்யுணர்வு வாய்க்கவில்லை, அது தன்னை உணரவில்லை. இத்துணைக் குறைகளுக்கு ஏதுவாயுள்ள ஆணவமலம் நீங்குதல் அரிது. அது நீங்கினால் ஆன்மாவின் அறிவு, பதினாறு கலையும் நிரம்பிய முழுமதி போல் ஒளிவிடும்.

குற்றம் எப்படி உண்டாகின்றது?

2188. திகைக்கின்ற சிந்தையுள் சிங்கங்கள் மூன்று
நகைக்கின்ற நெஞ்சுள் நரிக்குட்டி நாலு
வகைக்கின்ற நெஞ்சினுள் ஆனைகள் ஐந்து
பகைக்கின்ற நெஞ்சுக்குப் பால் இரண்டு ஆமே.

[1]திகைக்கின்ற சிந்தையுட் சிங்கங்கள் மூன்று
[2]நகைக்கின்ற நெஞ்சு ணரிக்குட்டி நாலு[3]
[4]வகைக்கின்ற நெஞ்சினு ளானைக ளைந்து
[5]பகைக்கின்ற நெஞ்சுக்குப் பாலிரண் டாமே. (25)

வேறு பாடம்: 1. திசைக்கின்ற (ஓ) I. 2. நசைக்கின்ற (ஓ) I. 3. நான்கு (விசு) (தி) (வ) 4. வசைக்கின்ற (அ ஓ) I; பகைக்கின்ற (ஆ இ) II. 5. பசைக்கின்ற (அ ஒ ஓ) I.

கருத்து: நன்னெறி அறியாமல் திகைக்கும் சிந்தையுள் காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்று சிங்கங்கள் உள்ளன. நகைப்பிற்குரிய அந்நெஞ்சில் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நான்கு நரிகள் உள்ளன. பல்வேறு எண்ணங்களில் அலைபாயும் மனத்தில் ஐம்புலன்கள் என்னும் யானைகள் உள்ளன. மனம் ஓடுதல் (பிரவிருத்தி) ஒழிதல் (நிவிர்த்தி) என்னும் மாறுபட்ட தன்மைகளை உடையது.

ஆணவ மலத்தினால், குற்றம் உண்டாக்கும் குணங்களையும் புலன்களையும் அந்தக் கரணங்களையும் கூறினார்.

தீமை வருமுன் காக்க

2189. கதறு பதினெட்டுக் கண்களும் போகச்
[1]சிதறி யெழுந்திடுஞ் சிந்தையை நீரும்
விதறு [2]படாமுன்ன மெய்வழி நின்றா
லதிர வருவதோ ரானையு மாமே. (26)

வேறு பாடம்: 1. கவறு (அனை சுவ) II (பதிப்புகளில் உள்ளவாறே கொள்ளப்பட்டது); கதறிப் (த) 2. படாவன்ன (ஆ) I.

கருத்து: வருந்துதற்குக் காரணமான புரியட்டகவுடம்பும் பத்து வாயுக்களும் வாயிலாகப் புலன்களில் சென்று சிதறும் மனத்தை அதற்குக் கெடுதி ஏற்படும் முன், ஞான நெறியில் செலுத்தி வாழ்ந்தால், அப்புலன்கள் தளர்வு எய்துமாறு சிவன் தோன்றுவான்.

நீர் - தன்மை, மனத்தின் தன்மை. தளர்வு எய்துதல் - அலைபாயும் நிலை குறைதல்.

2190. நனவகத் தேயொரு நாலைந்தும் வீடக்
கனவகத் தேயுட் கரணங்க ளோடு
முனவகத் தேநின் றுதறியுட் புக்கு
நினைவகத் தின்றிச் சுழுத்திநின் றானே. (அ)

2191. நின்றவ னாசா னிகழ்துரி யத்தனா
யொன்றி யுலகி னியமா திகளுற்றுச்
சென்று துரியாதீ தத்தே சிலகால
நின்று பரனாய் நின்மல னாமே. (அ, ஆ)

2192. ஆனவவ் வீச னதீதத்தில் வித்தையாய்த்
தானுல குண்டு சதாசிவ மாசத்தி
மேனிக ளைந்தும்போய் விட்டுச் சிவமாகி
மோன மடைந்தொளி மூலத்த னாமே. (அ)

உள்ளும் வெளியும்

2193. மண்டலம் மூன்றினுள் மாய நன்னாடனைக்
கண்டுகொண்டு, உள்ளே, கருதிக் களிக்கின்ற
விண்டு அலர் தாமரை மேல் ஒன்றும்; கீழ் அகத்து
அண்டமும் தானாய் அகத்தினுள்ளாமே.

மண்டல மூன்றினுண் மாயநன் னாடனைக்
கண்டுகொண் டுள்ளே [1]கருதிக் களிக்கின்ற[2]
விண்டலர் தாமரை மேலொன்றுங் கீழகத்[3]
தண்டமுந் தானா யகத்தினுள் ளாமே. (27)

வேறு பாடம்: 1. கருத்துக் (ஆ இ) IV. 2. கழிக்கின்ற (அ இ ஈ ஒ ஓ) I; கழிகின்ற (சைவ) (விசு) (வ) 3. கீழத்த (ஈ ஓ) I; கீழாக (ஓ) I; கீழாகத் (தி) (வ)

கருத்து: உடம்பைக் கோயிலாகக் கொண்டு எழுந்தருளியுள்ள சிவனை, அதன் மூன்று மண்டலங்களிலும் தரிசித்த பின்பு, அவன், மகிழ்ச்சிக்கு இடமாகச் சகஸ்ராரத்தில் விரியும் தாமரையின்மேல் பொருந்தி விளங்குவான். கீழே உள்ள ஆறு ஆதாரங்களையும் தழுவிக் கொண்டுள்ள ஆகாயமும், தானேயாய், உயிருணர்விற்குப் புலப்படுவான்.

மாய நாடு - உடம்பு. மூன்று மண்டலம் - அக்கினி மண்டலம், சூரிய மண்டலம், சந்திர மண்டலம். அகம் - உயிருணர்வு.

ஏமாற்றமும் இன்ப நிலையும்

2194. போது அறியாது புலம்பின புள்ளினம்
மாது அறியாவகை நின்று மயங்கின,
வேது அறியாவனம் நின்றனன் எம் இறை
தூது அறிவார் உச்சி சூடி நின்றாரே.

போதறி யாது புலம்பின புள்ளின
மாதறி யாவகை நின்று மயங்கின
[1]வேதறி [2]யாவன நின்றன னெம்மிறை[3]
[4]தூதறி வாருச்சி சூடிநின் றாரே[5]. (28)

வேறு பாடம்: 1. யேதறி (அ) I. 2. யாவன (அ ஈ ஓ) I; யாவண்ண (இ) I. 3. னெம்மைத் (அ) I. 4. தூரறி (ஆ இ) II; சூதறி (சங்) (த) 5. றானே (அ ஆ இ) I.

கருத்து: பறவைக் கூட்டம் விழித்துக் கொள்ளும் நேரம் அறியாமல், விழித்து எழுந்து ஒலி யெழுப்பின. ஆதலால், நேரம் அறியாமல் மாதர்கள் திகைத்து நின்றனர். எம் தலைவன் வெம்மை அறியாத சோலையில் நின்றான் (அவனைக் காணாராயினும்) அவனிடம் தூது விட்டோர் அவனை வணங்கி மகிழ்ந்தனர்.

ஓர் அகப்பொருள் நிகழ்ச்சி இது. இரவுக் குறி வைத்த தலைவனின் வரவை எதிர்பார்த்துத் தலைவியும் தோழியும் இருக்க; பறவைகள் முன்னதாகவே விழித்தெழுந்து ஒலித்தமையால், குறியிடத்திற்குச் சென்று, தலைவனைக் காணாமல் திகைத்தனர். தலைவனோ குறித்த நேரத்தில் சோலைக்கு வந்து நின்றான். இவ்வாறு அல்ல குறிப் பட்டாலும், அவனிடம் தலைவி தூதுவிட்டு, அவனைக் கூடி மகிழ்ந்தாள்.

இதனை உவமையாகக் கொண்டு பின் வரும் செய்தி உணர்த்தப் படுகிறது:

சுத்த அவத்தைகளை எய்த இயலாதவாறு தத்துவங்கள் செயற்பட்டன. அதனால் ஆன்மா இறையனுபவத்தைப் பெறாது திகைத்தது. இறைவன் வெம்மையற்ற அருள் வெளியில் நின்றான். அன்பு உணர்வை அவனிடம் செலுத்தி, ஆன்மா அவனைக் கூடிச் சிவானந்தம் நுகர்ந்தது.

தலைவியையும் தோழியையும் 'மாது' எனப் பெண்மைக்குணம் என்ற பொருள்படச் கூறியமையால் 'மயங்கின' என அஃறிணை முடிவு கொடுத்தார். வெய்து என்பது 'வேது' என மருவியது. உச்சி சூடுதல் உயிருணர்வு சகஸ்ராரத்தை அடைந்து, அங்குச் சிவத்துடன் கலத்தல்.

அகப்பொருட் குறிப்பு அரிதே அமையும் திருமந்திரப் பாடல்களுள் இஃது ஒன்று.

யோக நெறியால் பயன் பெற்றேன்

2195. கருத்தறிந் தொன்பது கண்டமு மாங்கே
பொருத்தறிந் [1]தேன்புவ னாபதி நாடித்
திருத்தறிந் தேன்மிகு தேவர் பிரானை
வருத்தறிந் தேன்மன மன்னிநின் றானே. (29)

வேறு பாடம்: 1. தோன்புவ (சைவ) (விசு); தோம்புவ (தி)

கருத்து: புவனாபதி யம்மையின் திருவருளை வேண்டிப் பெற்று, உட ம்பில் உள்ள மூன்று மண்டலங்களும், ஆறு ஆதாரங்களுமாகிய ஒன்பது பிரிவுகளின் பயனை அறிந்து, அவற்றில் என் உயிருணர் வைச் சேர்த்தேன். என் சிந்தையை அருள்வழி நிறுத்தினேன். சிவனை நோக்கிச் செய்யும் தவத்தால் வருந்தினேன். அதன் பயனாக, அவன் என் "சிந்தையே கோயிலாகக் கொண்டான்".

திருத்து அறிந்தேன் - திருத்தலை அறிந்தேன் எனலுமாம். வருத்து வருத்தம். முதனிலைத் தொழிற் பெயர்.

விளக்கைத் தூண்டுக

2196. ஆன விளக்கொளி தூண்டுமவன் எனத்
தான விளக்கொளியாம், மூல சாதனத்து
ஆன விதி, மூலத்தானத்து அவ்விளக்கு
ஏனை மதி மண்டலம் கொண்டு எரியுமே.

ஆன விளக்கொளி தூண்டு மவனெனத்[1]
தான விளக்கொளி யாமூல சாதனத்
தான விதிமூலத் [2]தானத்தி லவ்விளக்
கேனை மதிமண் டலங்கொண் டெரியுமே. (30)

வேறு பாடம்: 1. மவனென்னத் (சங்) 2. தனதில்லம் விளக்கி (இ) I.

கருத்து: தகளி, எண்ணெய், திரி முதலிய மூலக்கருவிகளால் எரிவதாகிய விளக்கினை ஒருவன் தூண்டுதலும் இன்றியமையாதது. அதுபோல, உலகமாகிய பெரிய இடத்து விளக்காகிய விந்து (சுத்த மாயையின் ஒரு தத்துவம்) என்ற மூலக் கருவியால் எரியக் கூடியது, நமது உடம்பில், மூலாதாரத்தில் உள்ள விளக்கு (மூலக்கனல்) ஆயினும்,அதை பிராணாயாம விதிப்படி, உடம்பில் சந்திர மண்டலத்தின் ஆற்றலால் தூண்டிவிட வேண்டும்.

சந்திர மண்டலம், தோளுக்கு மேல் உள்ள பகுதி. "ஏனை" என்றது, மூலக்கனல் இருப்பது அக்கினி மண்டலத்தில் ஆதலால். மூலக்கனலை நடுநாடி வழியாகச் சந்திர மண்டலத்திற்கு ஏற்றுவதால் அக்கனல் எரியும் என்பது கருத்து.

"மூல சாதனத்து" என்பதை முன்னும் சுட்டுக.

அண்டவெளி யனுபவம்

2197. உள்நாடும் ஐவர்க்கு மண்டை ஒதுங்கிய
விண் நாட நின்ற வெளியை வினவுறில்,
அண்ணாந்து பார்த்து ஐவர் கூடிய சந்தியில்
கண்ணாடி காணும் கருத்து அது என்றானே.

உண்ணாடு [1]மைவர்க்கு மண்டை யொதுங்கிய
விண்ணாட நின்ற வெளியை வினவுறி
லண்ணாந்து பார்த்தைவர் கூடிய சந்தியிற்
கண்ணாடி காணுங் கருத்ததென் றானே. (31)

வேறு பாடம்: 1. மைவர் குமண்டை (த)

கருத்து: அகமுகம் ஆக்கப்படும் ஐம்பொறிகளை உடையவர்க்கு, சகஸ்ராரத்தின் மூலம் வாய்க்கும் அண்ட வெளி அனுபவம் எத்தகையது? மூச்சுக் காற்றுப் புருவ மத்திக்கு மூலக் கனலைக் கொண்டு செல்ல, ஐம்புலனறிவும் அங்கே உயிரறிவாகத் திரண்டு நிற்க, அந்த அறிவால் காண்பவர்க்கு அண்டவெளி அனுபவம் வாய்க்கும்.

அறிபவன் யார்?

2198. அறியாதவற்றை அறிவான் அறிவான்;
அறிவான் அறியாதான்; தன் அறிவு ஆகான்
அறியாது, அவத்தை அறிவானைக் கூட்டி
அறியாது அறிவானை யார் அறிவாரே?

அறியா தவற்றை யறிவா னறிவா
னறிவா னறியாதான் [1]றன்னறி வாகா
னறியா [2]தவத்தை யறிவானைக் கூட்டி
யறியா தறிவானை யாரறி வாரே. (32)

வேறு பாடம்: 1. நன்னறி (அ ஒ) I; யறியாதான் காண் (இ) IV. 2. தவற்றை (த)

கருத்து: எளிதாக அறிய இயலாத தன்னையும், ஆணவ மலத்தையும், தலைவனையும் திருவருளால் அறிபவனே மெய்யுணர்வாளன்.

பசு போதம் என்ற இயல்பாகிய அறிவால் அறிய முனைபவன் அறியாதவனே. ஆன்ம அறிவிற்கு எட்டாத நிலையில் இருந்து கொண்டு, தானே ஒன்றையும் அறியமாட்டாத ஆன்மாவுக்கு, உடம்பை அளித்து, ஐந்து அவத்தைகளையும் அடைவித்து, ஆன்மாவிற்கு அறிவித்து, அஃது அறியாமல் தான் அறிகின்ற இறைவனை யார் அறிவார்?

ஆன்மா தானாக எதையும் அறியாது, இறைவன் அதற்கு அறிவிக்கின்றான். தானும் அத்துடன் சேர்ந்து அறிகின்றான். அவத்தைகளினால் அறியத்தக்கவனுக்கு அந்த அவத்தைகளைக் கூட்டி என்க.

சொன்னதும் சொல்லாததும்

2199. துரிய தரிசனம் சொற்றோம்; வியாத்தம்
அரியன; தூடணம் அந்நனவாதி;
பெரியன கால பரம்பின் துரியம்;
அரிய அதீதம்; அதீதத்தது ஆமே.

துரிய தரிசனஞ் [1]சொற்றோம் வியாத்த[2]
மரியன தூடண மந்நன வாதி
பெரியன கால பரம்பிற் றுரிய[3]
மரிய வதீத மதீதத்த தாமே. (33)

வேறு பாடம்: 1. தெரிகின்ற (ஓ) IV. 2. வியார்த்த (ஓ) I; வியோம (சைவ) (விசு) (த) 3. றுரியந்தா (இ) II.

கருத்து: இதுவரை சுத்த துரிய அனுபவத்தைக் கூறினோம். அண்டவெளி அனுபவம் சொல்லற்கரியது. அதை நோக்க, கேவல நனவு முதலிய ஐந்து அவத்தைகள் சிறப்பில்லாதவை. சுத்த அவத்தைகளும் கடந்த பரஅவத்தைகள் பெரியன. அவற்றில் துரியம் அரியது. துரி யாதீதமோ சொல் எல்லையைக் கடந்ததாகும்.

மேல்நிலை அடைய வேண்டாவா?

2200. மாயையில் சேதனன், மன்னும் பகுதியோன்,
மாயையின் மற்றது நீவுதல், மாயையாம்
கேவலமாகும்; சகலமா யோனியுள்
தோயும் மனிதர், துரியத்துட் சீவனே.

மாயையிற் [1]சேதனன் மன்னும் பகுதியோன்
மாயையின் மற்றது நீவுதன் மாயையாங்
கேவல மாகுஞ் சகலமா யோனியுட்[2]
டோயு [3]மனிதர் துரியத்துட் சீவனே. (34)

வேறு பாடம்: 1. சேதன (அ இ ஒ) III. 2. யோனிபுக்குத் (அ இ ஒ) II. 3. மனித்தம் (த)

கருத்து: ஆன்மா முதலில் மயக்க நிலையாகிய கேவல நிலையில் கிடக்கும். இறைவனின் கருணையால், அசுத்த மாயையின் தொடர்பைப் பெற்று, அதில் தோன்றும் மூலப் பகுதியிலிருந்து கிடைத்த உடம்பை உடையதாய், அறிவுடையதாய் விளங்கும். இது சகல நிலை. இதிலிருந்து மேல் நிலைக்குச் செல்ல வேண்டிய மக்கள் - அதாவது மாயையின் துணையால் வினை, ஆணவம் ஆகியவற்றை நீக்க வேண்டியவர் - சுத்த துரிய அவத்தையை அடைதல் முறை. ஆனால், அவர்கள் சகல நிலையிலேயே பல பிறவிகளில் பிறந்து இறந்து உழலுதல் அறியாமையின் விளைவு ஆகும்.

நீவுதல் - நீக்குதல். "யோனியுள் தோயும் மனிதர் அங்ஙனம் செய்தல் மாயையாம் என முடிக்க.

(iv) கேவல, சகல, சுத்தாதி

அறிவு நிலைகள் மூன்று

2201. தன்னை அறி சுத்தன், தற் கேவலன் தானும்
பின்னம் உறநின்ற பேத சகலனும்
மன்னிய சத்து, சதசத்து, அசத்துடன்
துன்னுவர் தத்தம் தொழிற்கு அளவாகவே.

தன்னை [1]யறிசுத்தன் றற்கே வலன்றானும்
பின்ன முறநின்ற பேத சகலனு
மன்னிய [2]சத்துச் சதசத் தசத்துடன்
[3]றுன்னுவர் தத்தந் தொழிற்கள வாகவே. (1)

வேறு பாடம்: 1. யறியத்தன் (விசு) (தி) 2. சத்தசத் துச்சத (சங்) (சை) (த) 3. றுன்னுவ (ஆ இ ஒ) I.

கருத்து: சிவத்தை அறியும் சுத்தன்; தன்னையும் அறியாது, ஒன்றையும் அறியாது, தான் மட்டும் கிடக்கும் கேவலன்; இவரின் வேறாக, பல பிறப்பிலும் பிறக்கும் சகலன் - இவர்கள் முறையே, தத்தம் வினைகளின் பரிபாகத்திற்கு ஏற்ப, சத்து, அசத்து, சதசத்து என்னும் தன்மைகளை உடையோர் ஆவர்.

கேவலம், சகலம், சுத்தம் என்பன உயிரின் நிலைகள். இவற்றையும் 'அவத்தை' என்பர். சென்ற இயலிற் கண்ட அவத்தைகள் வேறு, இவை வேறு. அவை உயிர், சகலம் என்ற நிலையில் உள்ள போது (பிறந்து வாழும் போது) அடையும் உணர்வு நிலைகள். இவை அறிவு நிலைகள். அதனை இப்பாடல் விளக்குகின்றது.

உயிர், கேவல நிலையில் அறிவு அற்றிருக்கும். அஃது "அசத்து" என்ற அறிவு நிலை. உயிர் பிறக்கும் சகல நிலையில் தன்னையும் அறியும், சிவத்தையும் அறியும். இது "சதசத்து" (சத் அசத்து) என்ற அறிவுநிலை. உயிர் ஆணவ மலம் நீங்கி முத்தி பெறும்போது சிவத்தை மட்டும் அறியும். சிவமே ஆகிவிடும். இது 'சத்து' என்ற அறிவுநிலை.

வாழ்வின் சிற்பி

2202. தானே தனக்குப் பகைவனும் நட்டானும்;
தானே தனக்கு மறுமையும் இம்மையும்;
தானே தான்செய்த வினைப்பயன் துய்ப்பானும்,
தானே தனக்குக் கருமமும் ஆமே.

தானே தனக்குப் பகைவனு நட்டானுந்[1]
தானே தனக்கு மறுமையு மிம்மையுந்[2]
தானே தான்செய்த வினைப்பயன் றுய்ப்பானுந்
தானே தனக்குக் [3]கருமமு மாமே[4]. (2)

வேறு பாடம்: 1. நட்பனுந் (ஆ ஓ) I. 2. மின்மையுந் (அ ஈ ஓ) I. 3. கருவனு (அ ஈ) I தலைவனு (ஓ) IV. 4. மாகுமே (அ) II.

கருத்து: ஒருவன் தான் செய்த வினைகளின் பயனைத் தானே அனுபவிக்கின்றான். இனிவரும் பிறவிகளில் அனுபவிக்க வேண்டிய கருமங்களையும் தானே தேடிக் கொள்கின்றான். ஆதலின், தானே தனக்கு நண்பனும் ஆகிறான்; பகைவனும் ஆகிறான். கருங்கக் கூறின், தனக்கு இம்மையையும் மறுமையையும் தானே உண்டாக்குகிறான்.

கருமம் - ஆகாமியம்; வருவினை. வினைப் பயன் - பிராரத்தம்.

இருளிலிருந்து ஒளிக்கு

2203. ஆம் உயிர் கேவலம், மாமாயையின் அடைந்து
ஆம் உயிர் மாயை எறிப்ப, அறிவுற,
காமியம், மாயேயமும் கலவாநிற்ப,
தாம் உறு பாசம் சகலத்தது ஆமே.

[1]ஆமுயிர் கேவல மாமாயை யின்னடைந்[2]
[3]தாமுயிர் மாயை [4]யெறிப்ப வறிவுறக்[5]
காமிய மாயேய முங்கல வாநிற்பத்
தாமுறு பாசஞ் சகலத்த தாமே. (3)

வேறு பாடம்: 1. ஆயுயிர் (ஈ ஒ) I. 2. யினடைந் (அ) I; யின்னடந் (சைவ) (விசு) (தி) (வ) 3. தாயுமுயிர் (ஈ ஒ ஓ) I. 4. யெரிப்ப (ஒ ஓ) I. 5. வறிவுற்றுக் (ஓ) IV.

கருத்து: கேவல நிலையில் கிடந்த உயிர், சுத்த மாயையில் பொருத்தப்பட்டு, பின் அசுத்த மாயை விளக்கம் தர, அதனால் சிறிது அறிவு வந்தடைய, காமியமலமும், மாயேய மலமும் தன்னுடன் பொருந்த, தன்னை அனாதியே பற்றியுள்ள ஆணவம் காரணமாக, சகல நிலைக்கு வரும்.

பலப்பல பிறவி

2204. சகல அவத்தையில் சார்ந்தோர் சகலர்
புகலும் மலம் மூவகையும் புணர்ந்தோர்,
நிகர் இல் மலரோன், மால், நீடு பல் தேவர்கள்
நிகழ்நரர், கீடம் அமைந்து, அற்றதாமே.

சகல வவத்தையிற் சார்ந்தோர் சகலர்
[1]புகலு மலமூ வகையும் புணர்ந்தோர்
நிகரின் மலரோன்மா [2]னீடுப றேவர்க
[3]ணிகழ்நரர் கீட [4]மமைந்தற்ற தாமே[5]. (4)

வேறு பாடம்: 1. புகலா (அ ஒ ஓ) III. 2. னீடும்பஃ (அ) IV. 3 நிகழ் நாறு (ஈ) IV இகழும் நரர்கீடமந்தமு மாமே (த) 4. மந்தமு மாடுமே (ஓ) II; கீடாந்த மாமே (ஓ) II; மந்தமுமாமே (சங்) 5. வாறே (ஆ) V.

கருத்து: சகல அவத்தையில் உள்ள சகலர் மும்மலமும் உடையோர். அவர்கள் பிரமன், திருமால், பலவகைத் தேவர்கள், மக்கள், புழு எனப் பலவகைப் பிறவிகளாக அமைந்து, இறத்தல் இயல்பாகும்.

அற்றது - இறப்பதாகிய இயல்பு. ஆம் - உள்ளதாகும். சகல அவத்தையில் உள்ளோர் மூவகையினர். அவர்கள் சகலர், பிரளயாகலர், விஞ்ஞானாகலர் என்போர். அவருள் சகலர் இயல்பு இங்குக் கூறினார்.

உயர் பிறவி

2205. தாவிய மாயையில் தங்கும் பிரளயம்
மேவிய மற்றது உடம்பா, மிக்கு உள்ளன
ஓவல் இலக்கணர், ஒன்றிய சீகண்டர்
ஆவயின் நூற்றெட்டு உருத்திரர் ஆகுமே.

தாவிய மாயையிற் றங்கும் பிரளய[1]
மேவிய மற்ற [2]துடம்பாமிக் குள்ளன[3]
[4]வோவ லிலக்கண ரொன்றிய சீகண்ட
[5]ராவயின் னூற்றெட் டுருத்திர ராகுமே[6]. (5)

வேறு பாடம்: 1. பிரளயமா (அ) I; பிரளயர் (அ இ ஓ) II; பிரளய (விசு) (தி) (வ) 2. துடம்பாகுமிக் (அ) I. 3. குள்ள (இ) I குள்ளான (ஓ) I குள்ளனர் (த) 4. வோவிய லிலக்கண (அ) II; வோவி (இ ஈ ஓ) I; வோவலில் கன்மத்தர் (த); 5. மேவயின் (ஈ) I. 6. ரென்பவே (த)

கருத்து: மாயையின் தொடர்பு நீங்கப்பெறாத பிரளயம் என்ற நிலை, மாயையே உடம்பாக அமைய, மற்று உள்ளனவெல்லாம் நீங்கிய தன்மை உடைய சீகண்ட ருத்திரர், நூற்றெட்டு உருத்திரர் ஆகியோரைத் தன்னகத்திற் கொண்டது.

மற்றுள்ளன - மாயேயம், கன்மம், திரோதானம்.

விஞ்ஞானாகலர் சிலர்

2206. ஆகின்ற கேவலத்து ஆணவத்து ஆனவர்
ஆகின்ற வித்தேசராம் அனந்தாதியர்
ஆகின்ற எண்மர், எழுகோடி மந்திரர்
ஆகின்ற ஈசர் அனேகரும் ஆமே.

ஆகின்ற கேவலத் தாணவத் தானவ
ராகின்ற வித்தேச [1]ராமனந் தாதிய[2]
ராகின்ற வெண்ம ரெழுகோடி மந்திர
ராகின்ற வீச ரனேகரு மாமே. (6)

வேறு பாடம்: 1. ரானந்த ராதிய (ஆ ஓ) I; ராமணந் (சங்) 2. ராதிகள் (ஈ) II.

கருத்து: ஆணவ மலம் மட்டும் உடைய விஞ்ஞானாகலர் அட்ட வித்தேசுரரும், ஏழு கோடி மகாமந்திரரும் ஆவர்.

அனந்தர் முதலிய எட்டு வித்தேசுவரர் என்க. எட்டு வித்தேசுரர்கள்: அனந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிமூர்த்தி, சீகண்டர், சிகண்டி ஆகியோர்.

ஈசர் - மந்திரேசர் - இது மகாமந்திரர்க்கு மற்றொரு பெயர்.

மலநீக்கம்

**2207. ஆமவரில் சிவன் ஆரருள் பெற்றுளோர்
போம்மலம் தன்னால் புகல் விந்து நாதம் விட்டு
ஓம் மயம் ஆகி, ஒடுங்கலின், நின்மலம்
தோம் அறு சுத்தாவத்தைத் தொழில் தானே.**

[1]ஆமவ ரிற்சிவ னாரருள் பெற்றுளோர்
போமலந் தன்னாற் [2]புகல்விந்து நாதம்விட்
டோமய [3]மாகி யொடுங்கலி னின்மலந்[4]
தோமறு [5]சுத்தாவத் தைத்தொழி றானே. (7)

வேறு பாடம்: 1. ஆமாறிற்சீவ (சங்); ஆமாறிற்சிவ (விசு) (தி) (த) 2. புகழ்விந்து (ஓ) I. 3. மாக்கி (அ ஈ ஓ) I. 4. லிம்மலந் (ஓ) I. 5. சுத்தா வவத்தைத் தொழிலே (ஓ) IV.

கருத்து: விஞ்ஞானாகலருள் சிவனது பேரருளைப் பெற்றோர், ஆணவ மலத்தை விட்டு, அதனோடு சுத்தமாயா காரியமான விந்து, நாதம் என்ற நிலைகளில் மனம் பற்றாது, பிரணவப் பொருளாகிய சிவமயமாகி ஒடுங்குவர். ஆதலின், சுத்த அவத்தையில் நிகழும் தொழில் மலநீக்கம் என்பது பெறப்பட்டது.

"சுத்தாவத்தைத் தொழில் நின்மலந்தானே" எனக் கூட்டுக.

மூன்றல்ல; நான்கு

2208. ஓரினும் மூவகை, நால்வகையும் உள;
தேரில் இவை கேவலம்; மாயை சேர் இச்சை
சார் இயல் ஆயவை; தானே தணப்பவை
வாரி வைத்து ஈசன் மலம் அறுத்தானே.

[1]ஓரினு மூவகை நால்வகை யும்முள
தேரி லிவைகே வலமாயை சேரிச்சை[2]
சாரிய லாயவை [3]தானே தணப்பவை
வாரிவைத் தீசன் மலமறுத் தானே. (8)

வேறு பாடம்: 1. ஏரினு (அ ஓ) I; ஓரிருள் (த) 2. சேரிச்சையுஞ் (அ ஆ ஈ ஓ) I. 3. தாமே (சைவ) (விசு) (தி) (வ).

கருத்து: அவத்தைகள் மேலே கூறியவாறு மூன்று வகையும், அதுவன்றி, நான்கு வகையும் உள்ளன. அவை ஒவ்வொன்றும் தனிநிலை உடையவை. அவை முறையே, கேவலம்; மாயை சேர்வதால் விருப்பத்துடன் கூடிய சகலம்; ஆன்மாவின் தவத்தால் மலங்கள் விலகும் நிலை ஆகிய சுத்தம்; அருள் என்பவை. சிவன் இவற்றை உயிருக்கு என வைத்து (நுகர்வித்து) ஆணவமலத்தை நீக்குவான்.

தானே - ஆன்மாவே. தானே தணப்பவை - ஆன்மா, தன் தவத்தால், விட்டு நீங்குபவை. அவை தாமே விலகா என்றவாறு. கேவலம் - தனிநிலை. இந்த அடைமொழியை நான்கிற்கும் கூட்டிக் கேவல கேவலம், கேவல சகலம், கேவல சுத்தம், கேவல அருள் எனக் கொள்க. கேவலம் தனிநிலை ஆதலின் இவை காரணநிலைகள் என்க. இவற்றிற்குக் காரிய நிலைகள் உண்டு.

உரைகாரர் இப்பாடல் மூன்றாம் அடியில், “தானே” என்றற்கு மாறாகத் “தாமே” எனப் பாடங்கொண்டு பிழைபட்டனர்.

சிவமாதலே சுத்த நிலை

2209. மெய்யான போதாந்தம் ஆறாறும் விட்டு அகன்று,
எய்யாமை நீங்கவே, வெய்யவன் தான் ஆகி,
மெய்யாம் சராசரமாய், வெளிதன்னுள் புக்கு,
எய்தாமல் எய்தும் சுத்தாவத்தை என்பதே.

[1]மெய்யான போதாந்த [2]மாறாறும் விட்டகன்
றெய்யாமை நீங்கவே [3]வெய்யவன் றானாகி
[4]மெய்யாஞ் சராசர மாய்வெளி தன்னுட்புக்
கெய்தாம லெய்துஞ்சுத் தாவத்தை யென்பதே[5]. (9)

வேறு பாடம்: 1. பொய்யான (விசு) (தி) (வ) 2. மாறாறு (சங்) 3. யெய்தவன் (ஆ) I. 4. மெய்யாய் (தி) 5. யென்பவே (விசு) (தி).

கருத்து: பசு போதமாகிய உயிர் - அறிவின் அளவாகிய, மண் முதல் நாதம் வரையுள்ள 36 தத்துவங்களையும் கடந்து, அறியாமை முற்றுமாக விலக, இறைவனோடு "ஏகனாகி" (அத்துவித சம்பந்தம் கொண்டு), அவ்வனுபவத்தால் சராசரங்களாக உள்ள பொருள்களில் வியாபித்து அறிதலும், அண்டவெளியை அறிதலும் சுத்தா வத்தை ஆகும்.

ஆட்டுவிப்பவன்

2210. அனாதி பசு; வியாத்தியாகும்; இவனை
அனாதியில் வந்த மலம் ஐந்தால் ஆட்டி,
அனாதியில் கேவலம், அச்சகலத்து இட்டு,
அனாதி பிறப்பு அற, சுத்தத்துள் ஆகுமே.

[1]அனாதி பசுவியாத்தி யாகு மிவனை
யனாதியில் வந்த மலமைந்தா லாட்டி
யனாதியிற் கேவல [2]மச்சக லத்திட்
டனாதி பிறப்பறச் சுத்தத்து ளாகுமே[3]. (10)

வேறு பாடம்: 1. வினாதி (ஓ) I. 2. னச்சக (த) 3. ளாக்குமே (த)

கருத்து: ஆன்மா அநாதி. ஆனால் ஆணவ மலத்தால் வியாபிக்கப் பட்டுள்ளது. சிவம் ஆன்மாவை ஆணவமலம் உள்ளிட்ட ஐந்து மலங்களில் மூழ்கச் செய்து, அவ்வகையில் அதற்குக் கேவலம், சகலம் என்ற நிலைகளை அளித்து, தொடங்கிய காலம் அறியப்படாது வந்துகொண்டிருக்கும் பிறவித்தொடர் நீங்குமாறு சுத்தநிலையில் வைத்துக் தானும் அதுவுமாக இருப்பான்.

சுத்தநிலையாகிய வீடுபேற்றின்பத்துள் சிவன் ஆன்மாவை 'உடனாய்' நின்று செலுத்துதலின், "ஆக்குமே" என்னாது, "ஆகுமே" என்றார். அச்சகலம் - பண்டறிசுட்டு, பிறப்புப் பலவும் மாறி மாறி வருவது என

முன்பே அறியப்படுதலின். ஆணவமலம் மட்டுமே அனாதி மலம். ஏனைய ஆதி மலமே. ஆணவம் சகச மலம்; இயல்பாக உள்ளது. ஏனையவை ஆகந்துகம்; இடையில் வந்து சேர்ந்தவை. இவை காரணம் பற்றி வருபவை.

இறைவனை அவனது நிலையிற் காணுதல்

2211. அந்தரம் சுத்தாவத்தை கேவலத்தாறு
தந்தோர், தம் சுத்த கேவலத்து அற்ற தற்பரத்-
தின்பால், துரியத்திடையே அறிவுற,
தன்பால் தனை அறி தத்துவந்தானே.

அந்தரஞ் சுத்தாவத் தைகேவ லத்தாறு
தந்தோர்தஞ் சுத்தகே வலத்தற்ற தற்பரத்
[1]தின்பாற் றுரியத் திடையே யறிவுறத்
தன்பாற் றனையறி தத்துவந் தானே. (11)

வேறு பாடம்: 1. தின்பாறு மேவிடையே (அ) I.

கருத்து: கேவல சுத்தாவத்தையில் நின்று பரவெளி (நாதம் கடந்தநிலை) அனுபவத்தைப் பெற்றோர், அதில் தமக்கு அனுபவம் தந்த, பின் அதையும் கடந்து நின்ற - சிவத்தைத் துரிய அவத்தையில் அறிவர். அது 'சிவத்திலே வைத்துச் சிவத்தை அறிதல்' ஆகும். அதாவது சிவத்தைச் சொரூபநிலையில் (அதன் இயல்பு நிலையில்) **(Absolute state)** அறிதலாகும்.

கொண்டு கூட்டு: "கேவல சுத்தாவத்தை ஆறு அந்தரம் தந்தோர், தம் சுத்த கேவலத்து (கேவலசுத்தத்து) அற்ற தற்பரத்தின்பால், துரியத்திடையே அறிவுற" எனக் கூட்டுக.

குறிப்பு: இப்பாடல் 'ஓ' சுவடியில் இல்லை.

தத்துவ ஒடுக்கமும் தோற்றமும்

2212. ஐயைந்து ஒடுங்கும் ஆன்மாவில்; ஆன்மாவும்
மெய்கண்டு, சுத்த அவத்தையில் வீடாகும்;
துய்ய அவ்வித்தை முதல் மூன்றும், தொல்சத்தி,
ஐயன் சிவம், சத்தி ஆம் தோற்றம் அவ்வாறே.

ஐயைந் தொடுங்கு மான்மாவி லான்மாவு
[1]மெய்கண்டு சுத்த [2]வவத்தையில் வீடாகுந்
[3]துய்யவவ் வித்தை முதன்மூன்றுந் தொல்சத்தி
[4]ஐயன் [5]சிவஞ்சத்தி யாந்தோற்ற மவ்வாறே. (12)

வேறு பாடம்: 1. மெய்கண்டிடுஞ் (தி) 2. வித்தை (தி) (த) 3. துய்ய வவத்தை (ஓ) II. 4. யையஞ் (அனை. சுவ); யைய (விசு); ஐயை (த) திருவாவடுதுறை ஆதீனப் பதிப்பின் பாடம் கொள்ளப்பட்டது. 5. சிவஞ்சித்தி (சங்) (சைவ) (த) சிவசித்தி (விசு).

கருத்த: சுத்த அவத்தையில், நனவில் தொழிற்படும் சுத்த மாயையின் 25 தத்துவங்களும், சுத்த அவத்தையின் கனவில், ஆன்மாவின் அறிவில் ஒடுங்கும். ஆன்மா சுத்த மாயையின் ஐந்து தத்துவங்களுள் ஒன்றான சுத்த வித்தையில் உண்மை ஞானம் (பதிஞானம்) பெறும். சுத்த சுழுத்தியில், சுத்த வித்தை, மாயேச்சுரம், சாதாக்கியம் என்ற தத்துவங்கள் சத்தியில் ஒடுங்கும். துரியத்தில் சத்தி, சிவத்துள் ஒடுங்கும். துரியாதீதத்தில் சிவமும் நீங்கும். சொரூபசிவம் தரிசன மாகும். மீண்டும் தோன்றும்போது சிவம், சத்தி , சாதாக்கியம், மயேச்சுரம், சுத்தவித்தை, 25 தத்துவங்கள் என்ற வரிசையில் தோன்றும்.

முப்பத்தாறா, இருபத்தெட்டா?

2213. ஐயைந்தும் ஆன்மாவில் ஆறோடு அடங்கிடும்;
மெய்கண்ட மேல்மூன்றும் ஏகும் மெய்யோகத்தில்
கைகண்ட சத்தி சிவபாகத்தே காண
எய்யும்படி அடங்கும், நால்ஏழ் எய்தியே.

ஐயைந்து [1]மான்மாவி லாறோ டடங்கிடு
மெய்கண்ட [2]மேன்மூன்று [3]மேகுமெய் யோகத்திற்
கைகண்ட சத்தி [4]சிவபாகத் தேகாண
[5]வெய்யும் படியடங் குந்நாலே ழெய்தியே. (13)

வேறு பாடம்: 1. மானவி (சங்) 2. மென்மூன்று (சங்) 3. மேருமெய் (அ) I; மேகமெய் (ஆ) IV; மேவுமெய் (விசு) (தி) (வ) (த) 4. சிவபாதத் (ஓ) I; சிவபரத் (த) 5. வெய்தும் (ஆ இ) I.

கருத்து: சுத்தாவத்தையில் ஒடுங்கும் தத்துவங்கள் 28 எனக் கொள்ளும் முறையை விளக்குகிறார்: ஆன்ம தத்துவம் 24ம், புருட

தத்துவமும் ஆன்மாவில் அடங்கும். வித்தியாதத்துவம் ஆறும் மாயையில் அடங்கும். சுத்த தத்துவங்களுள், மேலே கூறிய சுத்த வித்தை, மாயேச்சுரம், சாதாக்கியம் என்ற மூன்றும் சத்தி-சிவம் என்ற ஒரு கூட்டில் அடங்கும். இவ்வாறு இந்த 28 தத்துவங்கள் ஒடுங்கும் எனக் கொள்ளப்படுதல் ஒருமுறை. (ஆன்ம தத்துவம் 24, புருடன், சிவதத்துவம் 3 - ஆக 28 என்க).

36 தத்துவங்களை இம் முறையில் 28 ஆக அடக்குவர். இது, கணக்கிடும் முறையே. ஆன்ம தத்துவம் 24ம் ஒடுங்கும்போதே வித்தியா தத்துவங்களும் ஒடுங்குதலின் கணக்கிற் சேர்க்கவில்லை.

2214. ஆணவத் தாரொன் றறியாத கேவலர்
பேணிய மாயை பிரளயா கலராகும்
காணு முருவினர் காணாமை காண்பவே
பூணுஞ் சகலமும் பாசமும் புக்கோரே (அ, ஆ)

2215. ஆணவ மாகும் விஞ்ஞான கலருக்குப்
பேணிய மாயை பிரளயா கலராகும்
ஆணவ மாயையும் கன்ம மூன்றுமே
காணுஞ் சகலர்க்குக் காட்டு மலங்களே. (அ, ட)

உதவி செய்பவர் யார்?

2216. கேவலம் தன்னில் கிளர்ந்த விஞ்ஞாகலர்
கேவலம் தன்னில் கிளர் விந்து சத்தியால்;
ஆவயின், கேவலத்து அச்சகலத்தையும்
மேவிய மந்திர மாமாயை மெய்ம்மையே.

கேவலந் தன்னிற் [1]கிளர்ந்தவிஞ் ஞாகலர்
கேவலந் தன்னிற் கிளர்விந்து சத்தியா[2]
லாவயிற் கேவலத் தச்சக லத்தையு
[3]மேவிய மந்திர [4]மாமாயை மெய்ம்மையே. (14)

வேறு பாடம்: 1. கிளந்த (த) 2. சத்தி (ஒ) I. 3. மேவியு (அ) I. 4. மாய (அ, ஈ) I.

கருத்து: கேவல சுத்தநிலையை அடைவதற்கு முயலும் விஞ்ஞானா கலர், அங்ஙனம் முயல்வதற்குத் துணை நிற்பவள் சத்தி. கேவல

சகல நிலையிலும், துரிய, துரியாதீத நிலைகளை அடையச் சுத்தமாயையிலிருந்து பிறக்கும் மந்திரங்களே துணை நிற்கும்.

மலநீக்கத்தில் சுத்த மாயையின் துணை பற்றிக் கூறினார். யோக சாதனையில் மந்திரங்களின் துணையை ஆசிரியர் முன்னர்க் கூறினார்.

சகல நிலையில் உள்ளவர் மூவகையினர்: சகலர், பிரளயாகலர், விஞ்ஞானாகலர். இவருள் விஞ்ஞானாகலருக்குச் சத்தி உதவிட, ஏனையோருக்குச் சுத்தமாயையில் பிறக்கும் மந்திரங்கள் உதவும் என்று கூறுகின்றார். இந்த விஞ்ஞானாகலர் மந்திர வடிவம் உடையோர் என்பதும் இங்கு உணர்த்தினார். முதல் இரண்டு அடிகளில் வாளா "கேவலம்" எனக் கூறினாலும், கேவல சுத்தம் என கொள்க.

இருபடிகடந்தனர்; மறுபடி கடக்க ...

2217. மாயையின் மன்னு பிரளயாகலர் வந்து
மாயையும் தோன்றாவகை நிற்ப, ஆணவம்
மாய, சகலத்துக் காமிய மாமாயை
ஏய மன் நூற்றெட்டு உருத்திரர் என்பவே.

மாயையின் மன்னு பிரளயா கலர்வந்து
மாயையுந் தோன்றா வகைநிற்க வாணவ
[1]மாயச் சகலத்துக் காமிய மாமாயை
ஏயமன் னூற்றெட் டுருத்திர ரென்பவே. (15)

வேறு பாடம்: 1. மாய (அனன. சுவ) (பதிப்) V.

கருத்து: ஆணவமலத்தோடு, மாயா மலமும் உடைய பிரளயாகலர், மாயைப் பாதிப்புக் குறைவாகவும், ஆணவ மலப் பாதிப்பு மிகுதி யாகவும் உடையவராய் நிற்பர். அப்போது அவர்கள் சுத்த மாயையிலிருந்து வடிவம் பெற விரும்பி, அவ்வாறு பெற்று 108 உருத்திரர் ஆவர். ஆணவமலம் நீங்கும் வகையில் முயல்வர்.

சகலம் - சகளம்; உருவம். காமியம் - விருப்பம். ஆணவம் மாய - ஆணவ மலம் நீங்குவதற்காக. ஏய - பொருந்திய. சுத்த மாயையில் உண்டாகிய உருத்திர வடிவம் என்க.

இப்பிரளயாகலருக்கு மாயையின் பாதிப்பு இன்மையும், தமது ஆணவ மலம் நீங்கத் தவம் செய்தற்காக, அவர்கள் சுத்தமாயையிலிருந்து வடிவம் பெறுதலும் பக்குவமுதிர்ச்சியைக் காட்டும்.

2218. மும்மலங் கூடி முயங்கி மயங்குவோர்
அம்மெய்ச் சகலத்தோர் தேவா சுரர்நரர்
மெய்ம்மையில் வேதா விரிமால் கீடாந்தம்
தம்முறை யோனிபுக் கார்க்குஞ் சகலரே. (அ)

2219. சுத்த வவத்தையிற் றோய்ந்தவர் மும்மலச்
சத்தசத் தோடத் தனித்தளை பாசமு
மத்த விருள்சிவ னான கதிராலே
தொத்தற விட்டிடச் சுத்தரா வார்களே. (அ, ஆ)

இருளிலிருந்து ஒளிக்கு

2220. தற்கே [1]வலமுத்தி தானே தனிமையாம்
[2]பிற்பாற் சகலங் [3]கலாதிப் பிரிவதாஞ்[4]
சொற்பாற் புரிசுத்த கேவலஞ் சாக்கிரத்[5]
தற்பாற் புரிவது தற்சுத்த மாமே. (16)

வேறு பாடம்: 1. வலா முத்தி (சங்) (சைவ) வலம் முத்தி (விசு) 2. பிற்பாச் (ஈ ஓ) I. 3. கலாதி (ஆ ஈ ஓ) I. 4. பிறிவதாஞ் (இ ஓ) I. 5. சாக்கிரந் (ஓ) I.

கருத்து: கேவலம், சகலம், சுத்தம்-இந்நிலைகளை மீண்டும் விளக்குகின்றார்: கேவலத்தில் ஆன்மா தனித்து, மாயை, ஆணவ, கன்மங்களின் செயற்பாடுகளால் பாதிக்கப்படாமல், அறியாமை யிருளில் கிடக்கும். பின்னர், (இறைவன் கருணையால் அதற்கு) வந்தடையும் சகல நிலையில், கலை முதலிய அத்துவாக்களில் அமையும் பிறவிகளில் சேரும். பின்பு, சுத்த கேவலம் என்று வழங்கப்படும் சுத்த நிலையில், சுத்த சாக்கிரம் முதலிய ஐந்து அவத்தைகளை அடையும்.

கேவலநிலையில் ஆணவம் முதலிய மலங்களின் செயற்பாடு இராது. ஆதலின் ஆன்மா அவற்றின் பாதிப்பைப்பெறாது. ஆகவே, அதனைக் 'கேவல முத்தி' என்றார். நின்மல அல்லது சுத்த அவத்தைகள் ஞானப் பேற்றைக் குறிக்கும். ஆகவே, ஆன்மா அறியாமையிலிருந்து விடுபட்டு, ஞானம் பெறும் யாத்திரை இப்பாடலால், சுருங்கக் குறிக்கப்பட்டது.

முதலடியில் "கேவலாமுத்தி" என்ற பாடம் உண்டு, அதனைச் 'கேவல அமூர்த்தி" என்பதன் திரிபாகக் கொண்டு, அமுத்தன் என்பதே அமூர்த்தி என்றும் வழங்கும் எனக் கருதலாம். இதற்குத் தனிமையிற் கிடப்பவன்; முத்திபெறாதவன் எனப் பொருள். 4 ஆம் அடி: "தன்பால்" என்பது வலித்தல் விகாரம் பெற்றது, எதுகை நோக்கி.

இருளில் ஆன்மா

2221. அறிவு இன்றி முத்தன், அராகாதி சேரான்
குறி ஒன்று இலா நித்தன், கூடான் கலாதி,
செறியும் செயல் ஒன்றின் கருத்தா அல்லன்,
கிறியன், மலவியாபி, கேவலத்தானே.

அறிவின்றி [1]முத்த னராகாதி சேரான்
குறியொன் [2]றிலாநித்தன் கூடான் கலாதி
செறியுஞ் [3]செயலொன் [4]றின்கருத்தா வல்லன்[5]
கிறியன் மலவியாபி [6]கேவலத் தானே. (17)

வேறு பாடம்: 1. மூத்த (அ) I; மூத்தோ (விசு); யமுத்த (தி); அறிவின்ற மூர்த்த (த) 2. லாதித்தன் (விசு) 3. செயிலிலோன் (இ) II; செயலிலான் (ஆ) II. 4. றிண்கத்தா (அ ஆ இ) V; றினக்கத்தா (ஈ) V; றினங்கற்ற (சைவ) (விசு) (வ); றினக்கற்ற (தி) (த) 5. வல்லோன் (அ ஒ ஓ) I; வில்லோன் (தி) (த) 6. கேவலந் (சைவ).

கருத்து: ஆன்மா கேவலத்தில், பாதிப்பு அற்ற நிலையிலும், அராகம் முதலிய வித்தியா தத்துவங்களின் விளைவான குணங்கள் இல்லாமலும், இச்சையில்லாமலும், ஒரே மாதிரியாகவும், கலை முதலிய தத்துவங்களுடன் சேராமலும், ஒரு செயலையும் செய்யாமலும், ஆணவ மலத்தால் நன்கு பற்றப்பட்டு, மயங்கிக் கிடக்கும்.

முத்தன் - பாதிப்பு அற்றவன். அமுத்தன் என்பதன் திரிபு எனவும் கொள்ளலாம். இப்பாடலைச் சிவஞானசித்தியார் 4 ஆம் சூத்திரம், 3 ஆம் அதிகரணம் 38 ஆம் பாடலுடன் ஒப்பு நோக்குக.

உடலும் ஞானமும்

2222. விந்துவு மாயையு மேவுங் கிரியையுஞ்
சந்தத ஞான பரையுந் தனுசத்தி
[1]விந்துவின் மெய்ஞ்ஞான மேவும் பிரளயர்
வந்த சகலசுத் தான்மாக்கள் வையத்தே (18)

வேறு பாடம்: 1. விந்துவு (அ) I.

கருத்து: சுத்த மாயையும் அசுத்த மாயையும், தம்முள் திருவருட் சத்தி நின்று உதவ, ஆன்மாக்களுக்கு ஆற்றலாக அமையும்.

அமையவே, ஆன்மாக்கள் செயல் ஆற்றும். ஞானம் எய்தும்போது, பிரளயாகலரும், சகலரும், விஞ்ஞானாகலரும் சுத்த மாயையின் காரியமான நால்வகை வாக்குகளால் ஞானம் பெறுவர்.

விஞ்ஞானா கலருக்கும் பிரளயாகலருக்கும் சுத்தமாயை உடல்; சகலருக்கு அசுத்த மாயை உடல். வாக்குகளால் ஞானம் பெறுவர் என்றது, மந்திர உபதேசத்தால் ஞானம் பெறுதலை.

மேல்நிலை அனுபவங்கள்

2223. கேவலம் ஆதியில் பேதம் கிளக்குறின்,
கேவலம் மூன்றும்; கிளரும் சகலத்துள்
ஆவயின் மூன்றும்; அதி சுத்தம் மூடவே
ஓவல் இலா ஒன்பான் உற்ற உணர்வோர்கட்கே.

கேவல மாதியிற் பேதங் கிளக்குறிற்[1]
கேவல மூன்றுங் கிளருஞ் சகலத்து
ளாவயின் [2]மூன்று மதிசுத்த மூடவே[3]
யோவ லிலாவொன்பா னுற்றுணர் வோர்கட்கே. (19)

வேறு பாடம்: 1. கிளர்குன்றிற் (அ ஒ) I. 2. மூன்றில்க் (அ) I. 3. மூன்றதே (ஆ இ) IV. மூன்று மா (த)

கருத்து: மேலே கூறிய மூன்று அவத்தைகளைத் தாண்டி அனுபவிக்கும் அவத்தைகள் உண்டு. அவை கேவல கேவலம், கேவல சகலம், கேவல சுத்தம், சகல கேவலம், சகல சகலம், சகல சுத்தம், சுத்த கேவலம், சுத்த சகலம், சுத்த சுத்தம் என்ற ஒன்பதும் ஆகும்.

இவை மேல்நிலை அனுபவங்கள்.

மேல்நிலை அனுபவங்கள் - 2

2224. கேவலத்தில் கேவலம் அதீதாதீதம்,
கேவலத்தில் சகலங்கள் வயிந்தவம்,
கேவலத்தில் சுத்தம் கேடு இல் விஞ்ஞாகலத்து
ஆவயின் நாதன் அருள்முத்தி தானே.

கேவலத் திற்கே வலமதீ தாதீதங்[1]
கேவலத் [2]திற்சக லங்கள் வயிந்தவங்
கேவலத் திற்சுத்தங் கேடில்விஞ் ஞாகலத்[3]
[4]தாவயின் னாத [5]னருண்முத்தி தானே[6]. (20)

வேறு பாடம்: 1. தாதீதமாங் (அ ஈ ஓ ஓ) II. 2. திற்சகலங்கிளரும் வரை தத்துவங் (அ) I கிளரும் வரைத்தவங் (ஈ ஓ ஓ) II. 3. ஞானகலத் (அ ஆ ஓ) II; ஞானர்க் (இ) IV; ஞாகலர்த் (சங்) ஞாகலர்க் (விசு) (தி) (வ). 4. காவயின் (இ) IV. 5. னருண்மூர்த்தி (இ ஓ) II; குணமுத்தி (ஓ) IV. 6. தானாமே (துடி)

கருத்து: இப்பாடலில் மூன்று அவத்தைகட்கும் மேம்பட்ட அனுபவங்கள் சுட்டப்படுகின்றன. கேவல கேவலம் என்பது அப்பாலைக்கு அப்பால் உள்ள அனுபவம். கேவல சகலம் சுத்த மாயையில் பெறும் அனுபவங்கள். கேவலசுத்தம் விஞ்ஞானா கலருக்கு உரியது. அது சிவன் அருளும் முத்தியே.

சகலாவத்தையின் வகைகள்

2225. சகலத்திற் கேவலஞ் சாக்கிரா தீதஞ்
சகல சகலமே [1]சாக்கிர சாக்கிரஞ்
சகலத்திற் சுத்தமே தற்பரா வத்தை .
சகலத்தி லிம்மூன்று தன்மையு மாமே. (21)

வேறு பாடம்: 1. சாக்கிரா தீதஞ் (த)

கருத்து: சகலத்தில் கேவலம் விழிப்பு நிலையைக் கடந்த ஒரு நிலை. சகலத்தில் சகலம் என்பது விழிப்புநிலை. சகலத்தில் சுத்தம் என்பது, உயிர் பரவெளி அனுபவம் பெறுதல்.

சுத்தாவத்தையின் வகைகள்

2226. சுத்தத்திற் சுத்தமே [1]தொல்சிவ மாகுதல்
சுத்தத்திற் கேவலஞ் தொல்லுப சாந்தமாஞ்
சுத்த சகலந் துரிய விலாசமாஞ்
சுத்தத்தி லிம்மூன்றுஞ் சொல்லலு மாமே. (22)

வேறு பாடம்: 1. சொல்சிவ (அ ஓ) III.

கருத்து: சுத்த சுத்தம் என்பது சிவமாதல். சுத்த கேவலம், யாதும் மனச் சலனம் அற்ற நிலையை எய்துதல். சுத்த சகலம் துரிய அவத்தையை எய்துதல்.

யாப்பிற்காக வரிசையைப் பிறழ வைத்தார்.

சுத்த நிலையில் ஐந்தவத்தை

2227. சாக்கிர சாக்கிரம் தன்னில், கனவொடும்,
சாக்கிரம் தன்னில் சுழுத்தி, துரியமே,
சாக்கிராதீதம் தனில் சுகானந்தமே
ஆக்கும் மறை ஆதி, ஐம்மல பாசமே.

சாக்கிர சாக்கிரந் தன்னிற் கனவொடுஞ்
சாக்கிரந் தன்னிற் சுழுத்தி துரியமே
சாக்கிரா தீதந் தனிற்சுகா னந்தமே
[1]யாக்கு [2]மறையாதி யைம்மல பாசமே. (23)

வேறு பாடம்: 1. லாக்க (அ) I. 2. பரையாதி (இ) I.

கருத்து: சுத்தாவத்தையைக் கூறி வருகிறார் ஆதலின், சுத்தத்தில் படும் ஐந்து அவத்தைகளை மீண்டும் கூறுகிறார். மேற்பாடலில் கூறிய சுத்த சுத்தம் என்பதை இப்பாடலில் பிறிதொரு கோணத்தில் விளக்குகிறார்.

சுத்த சாக்கிரத்தில் சிவ தத்துவம் ஐந்தும் தொழிற்படும் (அனுபவிக்கப் படும்). சுத்த சொப்பனத்தில் சுத்தவித்தை ஒழிந்தவை தொழிற்படும். சுத்த சுழுத்தியில் சிவம், சத்தி, சாதாக்கியம் - மூன்றும் தொழிற்படும். சுத்த துரியத்தில் சிவம், சத்தி - இரண்டும் தொழிற்படும். சுத்த துரியாதீதத்தில் சிவம் மட்டுமே அனுபவப்படும். இவ்வாறு அனுபவம் உண்டாகுமாறு இயக்குபவன் சிவபெருமான். (பரசிவம்) ஐந்துமலங் களையும் நீக்குவதற்கு இவ்வாறு இயக்குகிறான்.

மறை யாதி - சிவபெருமான். "மறை யாதி ஐம்மல பாசம் (நீக்கி) சுகானந்தம் ஆக்கும்" என முடிக்க. நீக்கி - இசையெச்சம்.

சென்றவர் மீளார்

2228. சாக்கிராதீதத்தில் தான் அறும் ஆணவம்,
சாக்கிராதீதம் பராவத்தை தங்காதே
ஆக்கு பரோபாதியாம் உபசாந்தத்தை
நோக்கும்; மலம் குணம் நோக்குதல் ஆமே?

சாக்கிரா தீதத்திற் [1]றானறு மாணவஞ்
சாக்கிரா தீதம் பராவத்தை தங்காதே[2]
யாக்கு பரோபாதி [3]யாமுப சாந்தத்தை
நோக்கு மலங்குண நோக்குத லாமே[4]. (24)

வேறு பாடம்: 1. றோன்று (அ) I. 2. தங்காது (இ) I. 3. யாவுப (சைவ) 4. லாகுமே (ஈ) II.

கருத்து: சுத்த துரியாதீதத்தில் பதிஞானத்தால் ஆணவமலம் நீங்கும். அதன் இடத்தை அருள் மேற்கொள்வதாகிய பராவத்தை உண்டாகும். பிறகு பரத்துடன் தொடர்புடைய உபசாந்த நிலை (முழு அமைதி) ஏற்படும். அதன் பின், ஆன்மா, ஆணவத்தையும், அது விளைவித்த குணங்களையும் மேற்கொள்ளுமோ? கொள்ளாது.

என் செயலா? அருளின் செயலா?

2229. பெத்தமும் முத்தியும், பேணும் துரியமும்,
சுத்த அதீதமும் தோன்றாமல் தான் உணும்
அத்தன் அருள் என்று அருளால் அறிந்தபின்
சித்தமும் இல்லை, செயல் இல்லை தானே.

பெத்தமு முத்தியும் பேணுந் துரியமுஞ்
சுத்த வதீதமுந் [1]தோன்றாமற் றானுணு
மத்த னருளென் றருளா லறிந்தபின்
சித்தமு மில்லை செயலில்லை தானே. (25)

வேறு பாடம்: 1. தோணாமற் றோணும் (இ) I, II.

கருத்து: ஆன்மா கட்டுண்ட (பிறப்பு) நிலையும், அது பெறும் வீடு பேறும், சுத்த துரியமும், சுத்த துரியாதீதமும் ஆகிய இவை எல்லாம், தான் தோன்றாது நின்று ஆட்டுவிக்கும் சிவனது அருள் என்று, அந்த அருளின் துணைகொண்டே அறிந்துவிட்டால், பின் சித்தம் ஏது? செயல் ஏது?

அருளை உணர்ந்த ஆன்மாவுக்குச் சித்த விருத்தியும், தன் செயல் என்பதும் இல்லை.

அன்பு பிறந்த வழி

2230. எய்திய பெத்தமும் முத்தமும் என்பன
எய்தும் அரன் அருளே; விளையாட்டோடு
எய்திடு உயிர் சுத்தத்து இடு நெறி என்னவே
எய்தும் உயிர், இறைபால் அறிவு ஆமே.

எய்திய பெத்தமு முத்தமு மென்பன
வெய்து மரனரு ளேவிளை யாட்டோ
டெய்தி டுயிர்சுத்தத் திடுநெறி யென்னவே
யெய்து முயிரிறை பாலறி வாமே. **(26)**

கருத்து: ஆன்மா பெறும் கட்டுநிலை (பிறப்பு நிலை) யும், வீடு பேறும் இறைவன் அதற்குக் கருணையால் நல்குபவையே; அங்ஙனம் செய்வது அவனுக்கு ஒரு விளையாட்டு. அது மட்டுமன்று; கேவல நிலையிற் கிடக்கும் உயிரைச் சுத்த நிலை எய்துவிக்கும் நெறியும் ஆகும். இதனை உணரும் உயிர், இறைவனிடம் அன்பு பூண்டொழுகும்.

அறிவு ஆம் - அன்பு கொள்ளவேண்டும் என உணரும். அறிவுடைய தாகும் என்பதை 'அறிவு ஆம்' என்றார். இஃது உபசார வழக்கு. இவ்வறிவு ஏதுவாக அன்பு தோன்றும்.

உலகம் மதித்தலால் பயன் என்ன?

2231. ஐம்மலத்தாரும் மதித்த சகலத்தார்,
ஐம்மலத்தாரும் அழிவினைப் பாசத்தார்,
ஐம்மலத்தார் சுவர்க்க நரகு ஆள்பவர்,
ஐம்மலத்தார் அரனார்க்கு அறிவோரே.

ஐம்மலத் தாரு [1]மதித்த சகலத்தா
ரைம்மலத் தாரு [2]மழிவினைப் பாசத்தா
ரைம்மலத் தார்சுவர்க் [3]கந்நர காள்பவ
ரைம்மலத் [4]தாரர [5]னார்க்கறி வோரே. **(27)**

வேறு பாடம்: 1. மச்சகலத்தவ (ஆ இ) IV. 2. மழுவினைப் (அ ஒ) I; மருவினைப் (ஆ இ ஈ) III. 3. கந்நெறி (விசு) (தி) (வ) 4. தார்நால் (இ) IV. 5. வர்க்கறி (இ) IV வகைக்கறி (ஆ) IV.

கருத்து: உலகியல் நெறியாளரால் மதிக்கப்படும் பலரும் ஆன்மபக்குவத்தைப் பொறுத்த அளவில், சகல நிலையில் உள்ளோரே யாவர். அவர்கள் தம்மைச் சிதைக்கும் இருவினை யென்னும் கட்டினை உடையோர். அவ்விருவினையுள், புண்ணிய மிகுதியால் சுவர்க்கத்தையோ, அன்றிப் பாவ மிகுதியால் நரகத்தையோ அடைவர். இதுவன்றி, சிவபெருமானை அறியும் அறிவுடையார் ஆவாரோ? ஆகமாட்டார்.

அவர்கள் உலகில் பெறும் மதிப்பினால் வரும் பயன் ஒன்றுமில்லை. சிவனை அறியும் மெய்யறிவே உண்மையாக மதித்தற்குரியது என்றவாறு. "வினைப் பாசத்தாரும்" என, உம்மையைப் பிரித்துக் கூட்டுக. பிறரால் மதிக்கப்படுபவர் உண்மையில் வினையால் கட்டுண்டவர் என்று உரைத்த நயம் காண்க. கண்டுண்ட அடிமைத் தன்மை மதிப்புக்குரியதா என்று தொனிக்கும் அங்கதத்தை உணர்க. அவர்கள் வேறுலகை எய்தினும், சுவர்க்க நரகங்களையே எய்துவர்; வீட்டுலகை எய்துவரோ? என, அவரது உலகியல் மதிப்பின் பயனின்மையைப் புலப்படுத்தினார்.

கருவிலே திரு

2232. கருவில் அதீதம் கலப்பிக்கும் மாயை;
அரிய துரியமதில் உண்ணும் ஆசை;
முரிய சுழுனை; முயல்எட்டுச் சூக்கத்து
அரிய கனா; தூலம் அந்நனவு ஆகுமே.

கருவி [1]லதீதங் [2]கலப்பிக்கு மாயை
யரிய துரிய மதிலுண்ணு மாசை[3]
[4]முரிய சுழுனை [5]முயலெட்டுச் சூக்கத்
தரிய கனாத்தூல மந்நன வாமே. (28)

வேறு பாடம்: 1. யதீதங் (ஒ) I. 2. கலப்புக்கு (அ) I; கலவிக்கு (ஒ) I. 3. மாசையு (ஓ) II. 4. யுரிய (இ) IV; புரிய (ஆ) I. 5. முதலெட்டுஞ் (ஆ) II.

கருத்து: உயிர் சுத்த துரியாதீத அவத்தையை அடையும் தன்மையை, மாயை, உயிர் புகும் உடலுக்குக் கருவிலேயே அமைத்துவிடும். சுத்த துரிய அவத்தையைப் பெறும் விருப்பத்தை யும் இவ்வாறு, உயிர் கருவிலே பெறுமாறு செய்யும். இருபத்தைந்து தத்துவங்களும் செயலற்று இருக்கும் சுத்த சுழுத்தி, புரியட்ட காயம் என்ற சூக்கும உடம்புடன் எய்தும் சுத்த கனவு, தூலவுடம்பில்

எய்தும் சுத்த நனவு ஆகியவற்றை எய்தும் நிலையையும் இவ்வாறே, மாயை கருவில் அமைக்கும்.

"பெத்தம் என்பது சுத்தத்து இடும் நெறி" என மேற்கூறிய ஆசிரியர், இங்கு அதனை விளக்கினார். பெத்தம் - பிறவி அடையும் நிலை. முரிய - முரிதலை உடைய. முரிதல் - கெடுதல். இங்கு முதனிலையளவில் நின்றது.

முயல் எட்டு - சூக்கும உடம்பு ஐந்து தன்மாத்திரையும், மனம், புத்தி, அகங்காரம் என்ற மூன்றும் ஆக எட்டுத் தத்துவங்களையுடையது ஆதலின் "புரி அட்ட காயம்" எனப்படும். அதனை இங்கு "முயல் எட்டு" என்றார். முயல் - முயல்கின்ற; அனுபவிக்கின்ற.

இத்திருமந்திரத்திற்கு முன்னை உரைகாரர் வேறு வேறு உரை கண்டு இடர்ப்பட்டனர். "சுழுனை முதலெட்டும்" என்ற பாடமும் அவரது இடர்ப்பாட்டிற்கு ஒரு காரணம். "பாடந்திருந்தின், நல்ல பொருள் கிடைக்கலாம்" என்று குறித்துள்ளார். ச. தண்டபாணி தேசிகர்.

ஐம்மலத்தொழில் எப்போது சேரும்?

2233. **ஆணவம் ஆகும் அதீதமேல்; மாயையும்**
பூணும் துரியம்; சுழுத்தி பொய்க்காமியம்;
பேணும் கனவு மாயேயம்; திரோதாயி
காணும் நனவின் - மலக்கலப்பாகுமே.

ஆணவ மாகு [1]மதீதமேன் மாயையும்[2]
பூணுந் துரியஞ் சுழுத்திபொய்க் காமியம்
பேணுங் கனவு [3]மாயேயந் திரோதாயி
காணு நனவின் மலக்கலப் பாகுமே. (29)

வேறு பாடம்: 1. மதீதத்து (ஆ இ) III. 2. மாயையாம் (த) 3. மாமாயை (ஓ) II.

கருத்து: சகல நிலையில் உள்ள ஆன்மா, பக்குவம் முதிர முதிரத் தன் அவத்தைகளில் மலநீக்கம் பெறுதலைக் கூறுகின்றார்: துரியா தீதத்தில் ஆணவமலம் ஆன்மாவைப் பிணித்து நிற்கும். துரியத்தில் அதனுடன் மாயை பிணிக்கும். சுழுத்தியில் இவற்றுடன் கன்மம் பிணிக்கும். கனவில் இவற்றுடன் மாயேயம் பற்றும். நனவில் இவற்றுடன் திரோதாயி பிணிக்கும்.

ஐம்மலமும் நீங்கும் போது, திரோதாயி முதல் ஒரு மலம், இருமலம் எனப் படிப்படியாக அவத்தை தோறும் நீங்கி, துரியாதீதத்தில் ஆணவம் நீங்க, சுத்த நிலை எய்தும் என்க. ஆணவமலப் பிணிப்பின் அழுத்தம் பற்றி, அதில் தொடங்கித் தலைகீழாகக் கூறினார்.

இருளிலிருந்து ஒளிக்கு

2234. அரன் முதலாக அறிவோன்அதீதத்தன்
அரன் முதலா மாயைத்தங்கிச் சுழுனைக்
கருமம் உணர்ந்து, மாமாயை கைக்கொண்டோர்
அருளும் மறைவார் சகலத்து உற்றாரே.

அரன்முத லாக வறிவோ னதீதத்த
னரன்முத லாமாயைத் தங்கிச் சுழுனைக்
கரும முணர்ந்துமா மாயைகைக் கொண்டோர்
அருளு மறைவார் சகலத்துற் றாரே. (30)

கருத்து: சகல நிலையில் பக்குவம் எய்துவோர் பற்றி மேலும் கூறுகின்றார். சகலர் துரியாதீதத்தில், "வாழ்வின் தலைவன் சிவமே" என உணர்வர். துரியத்தில், "மாயையே முதல்" என்பர். சுழுத்தியில் "ஊழ்வினையே முதல்" என்பர். கனவில், மாயேயத்தின் செயலால், அருள் இன்னது என்பதை உணராத நிலையில் இருப்பர். நனவில் முழு மறைப்புக்குட்படுவர்.

முதலா - (2 ஆம் அடி) தலைவன் ஆகாமல். ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம்.

கேவலத்திலிருந்து சகலத்திற்கு

2235. உரு உற்று, போகமே, போக்கியத்து உற்று,
மருவு உற்றுப் பூதம், மன - அதீதம் மன்னி,
வரும் அச்செயல் பற்றிச் சத்த-ஆதி வைகி,
கரு உற்றிடு சீவன் காணும் சகலத்தே.

உருவுற்றுப் போகமே [1]போக்கியத் துற்று[2]
மருவுற்றுப் பூத [3]மனாதீத மன்னி
[4]வருமச் செயல்பற்றிச் [5]சத்தாதி வைகிக்
கருவுற் றிடுஞ்சீவன் காணுஞ் சகலத்தே. (31)

வேறு பாடம்: 1. போக்கியந் (அ ஓ) I; போய்க்கியந் (ஓ) I. 2. துற்ற (ஈ) IV. 3. மனாதியான் (ஓ) II; மனாதிமான் (ஈ) I. 4. வருமெய்ச் (ஓ) IV; மருவச் (ஓ) I. 5. சத்தாகி (சங்).

கருத்து: கேவலநிலையில் பொருந்தி, ஐம்பூதங்கள், மனம் முதலிய அந்தக் கரணங்கள் - ஆகியவற்றுடன் தொடர்பு இன்றி இருந்த ஆன்மா, கருவில் புகுந்து, மூலகன்மத்திற்கு ஏற்றவாறு, சத்தம் முதலிய தன்மாத்திரைகளுடன் பொருந்தி, ஐம்பூதச் சேர்க்கையால் ஆகிய உடம்பை மேற்கொண்டு, அதில் புகுந்து (அந்தக் கரணங் களைப் பெற்று) இன்ப, துன்பங்களை அனுபவித்து, இவ்வாறு சகலநிலையை உடையதாக இருக்கும்.

போக்கியம் - இன்ப, துன்ப அனுபவங்களைத் தரும் பொருள்கள். அச்செயல் - மூலகன்மம். பண்டறி சுட்டு. ஆன்மா தனது முதற்பிறவியில் அனுபவிக்கும் பிராரத்த வினை மூல கன்மம் ஆகும். அது தோன்றிய வகை அறியப்படாத ஒன்றாகும். தன்மாத்திரைகள் ஐந்து: சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம். இவற்றிலிருந்து தோன்றுவனவே ஐம்பூதங்கள்.

கொண்டு கூட்டு: "மருவுற்றுப் பூத மனாதீதம் மன்னிக் கருவுற்றிடும் சீவன், வருமச் செயல்பற்றிச் சத்தாதி வைகி, உருவுற்றுப் போகமே போக்கியத்து உற்றுச் சகலத்தே காணும்" என வினை முடிவு செய்க.

சுத்த நிலை

2236. இருவினை ஒத்திட, இன்னருட்சத்தி
மருவிட, ஞானத்தில் ஆதனம் மன்னி,
குருவினைக் கொண்டு, அருட்சத்தி முன் கூட்டிப்
பெருமலம் நீங்கிப் பிறவாமை சுத்தமே.

இருவினை யொத்திட வின்னருட் சத்தி
மருவிட ஞானத்தி [1]லாதன மன்னிக்[2]
குருவினைக் [3]கொண்டருட் சத்திமுன் கூட்டிப்
பெருமல [4]நீங்கிப் பிறவாமை சுத்தமே. (32)

வேறு பாடம்: 1. லாதர (த) 2. மன்னவே (அ ஆ இ ஈ ஓ) II. 3. கொண்ட (ஈ) II. 4. நீக்கிப் (அ ஓ) I.

கருத்து: ஆன்மா, தனக்கு இருவினையொப்பு நிகழ, அடுத்துத் தனது அறிவு அருளறிவாக, மெய்ஞ்ஞானம் அடையும் பக்குவம்

எய்தி, ஞான குருவை அடைந்து, திருவருட் சத்தியின் கருணையை முதலில் பெற்று, (அவள் சிவத்தைக் காட்டக் கண்டு) ஆணவ மலத்திலிருந்து விலகிப் பிறவா நிலையை எய்தும். அதுவே சுத்த நிலை ஆகும்.

ஆன்மா தோன்றா எழுவாய், இப்பாடலுடன் சிவஞான சித்தியார் 4 ஆம் நூற்பா, 3 ஆம் அதிகரணத்து 9 ஆம் பாடல் ஒத்திருத்தல் காண்க.

மாதேவன் காட்சி

2237. ஆறாறும் ஆறு; அதின் ஐயைந்து அவத்தையோடு
ஈறா அதீதத் துரியத்து இவன் எய்த
பேறான ஐவரும் போம் பிரகாசத்து
நீறு ஆர் பரசிவம் மாதேவம் ஆகுமே.

ஆறாறு [1]மாறதி னையைந் தவத்தையோ
டீறா [2]வதீதத் துரியத் திவனெய்தப்[3]
பேறான வைவரும் [4]போம்பிர காசத்து[5]
[6]நீறார் பரஞ்சிவ [7]மாதேவ மாகுமே. (33)

வேறு பாடம்: 1. வாரதி (ஒ) I. 2. றதீதத் (ஆ இ) II; மதீதத் (விசு) (தி) (வ) 3. திவனெனப் (ஆ இ) II; திவனென்னப் (ஒ) II. 4. யோம்பிர (ஈ ஒ) I; மோமப் பிரகாசத்து (ஒ) I. 5. காரத்து (ஈ) IV; காசத்தின் (த) 6. ஈறாத் (த) 7. மாவேத (அ ஆ இ ஒ) I; மாதேய (சங்) (சைவ).

கருத்து: முப்பத்தாறு தத்துவங்களும் தொழிற்படுதலும், ஒடுங்குதலும் சாதனமாக அமைய, சாக்கிரம் முதல் துரியாதீதம் வரை, அவற்றின் உட்பிரிவுகளான 25 அவத்தைகளையும், ஒவ்வொன்றாக ஆன்மா அடைந்து வரும் பொழுது, இறுதியான சுத்த துரியாதீதத்தை எய்துவன். அப்பொழுது சுத்த வித்தை முதலிய சிவதத்துவம் ஐந்திலும் நிற்கும் தெய்வக் காட்சிகள் தோன்றி, அனுபவம் தந்து மறைய, பரசிவம் பேரொளியாய்த் தோன்றி, தான் தேவதேவன் என்பதைப் புலப்படுத்தி நிற்கும்.

பேறு - அனுபவம். தேவம் - தெய்வம் என்பதன் திரிபு. பிரகாசத்து - ஒளியுடைய. நீறு ஆர் - திருநீறு அணிந்த.

அவத்தையை அடைந்தென்ன?
அவனோடு ஒன்ற வேண்டும்

2238. தன்னை அறியாது, உடலை முன், தான் என்றான்;
தன்னை முன் கண்டான், துரியம் தனைக் கண்டான்
உன்னும் துரியமும் ஈசனோடு ஒன்றாக்கால்
பின்னையும் வந்து பிறந்திடும் தானே.

தன்னை யறியா [1]துடலைமுன் றானென்றான்
றன்னைமுன் கண்டான் றுரியந் தனைக்கண்டா
னுன்னுந் துரியமு மீசனோ டொன்றாக்காற்
பின்னையும் வந்து பிறந்திடுந் தானே[2]. (34)

வேறு பாடம்: 1. னுடலைமுன் (ஒ) III. 2. தானன்றே (துடி)

கருத்து: ஆன்மா முன்பு தன்னை அறிவுப்பொருள் என உணராமல், தான் அறிவற்ற உடலே என்று கருதிக் கொண்டிருந்தது. பிறகு, துரிய அவத்தையை அடைந்து, தன்னை உணர்ந்தது. அந்நிலைக்குச் சென்றாலும், ஆன்மா சிவத்தோடு 'ஒன்றாக' வில்லையேல், மீண்டும் பிறப்பு எய்தும். அவத்தையை அடைந்தென்ன? அவனோடு ஒன்ற வேண்டும்.

உன்னும் - நினைக்கும். நினைக்கும் துரியம் என்பது துரியாதீதத்தைக் குறிக்கும். "துரியமும் எய்தி" எனற்பாலது, எய்தி என்பது எஞ்சி நின்றது. இசையெச்சம்.

முத்தி கிடைக்கும்

2239. சாக்கிரம் தன்னில் அதீதம் தலைப்படில்
ஆக்கிய வந்த வயிந்தவ மால் நந்த,
நோக்கும் பிறப்பு அறும்; நோன் முத்தி சித்தியாம்
வாக்கும் மனமும் மருவல் செய்யாவே.

சாக்கிரந் தன்னி லதீதந் தலைப்படி
[1]லாக்கிய வந்த [2]வயிந்தவ மானந்த[3]
நோக்கும் பிறப்பறு நோன்முத்தி சித்தியாம்[4]
வாக்கு மனமு மருவல்செய் யாவே. (35)

வேறு பாடம்: 1. வாக்கிய (அ ஈ ஓ) I. 2. வசிந்தவமா (அ) I; வசிந்தமா (ஈ ஒ ஓ) I. 3. மானந்தம் (ஈ ஓ) I. 4. சித்தியா (அ ஓ) I.

கருத்து: ஆன்மா சுத்த துரியாதீதத்தை அடைந்தால், பிறப்பிற்குரிய உடலை அளித்த மாயை வலி குறைதலுடன், உயர்நிலை அனுபவங்களைத் தந்த சுத்த மாயையும் ஒடுங்க, எதிர்காலத்தில் வரவிருக்கும் பிறப்புகள் வாரா தொழியும். அருள்வலிமையால் பெறும் முத்திநிலை வாய்க்கும். அந்நிலை சொல்லுக்கும் எண்ணத்திற்கும் எட்டாதது.

யோகமும் துரியாதீதமும்

2240. அப்பும் அனலும் அகலத்துளே வரும்,
அப்பும் அனலும் அகலத்துளே வரா,
அப்பும் அனலும் அகலத்துள் ஏது? எனில்,
அப்பும் அனலும் கலந்தது அவ்வாறே.

அப்பு மனலு மகலத்து ளேவரு
மப்பு மனலு மகலத்து ளேவரா[1]
வப்பு மனலு மகலத்து ளேதெனி[2]
லப்பு மனலுங் [3]கலந்ததவ் வாறே[4]. (36)

வேறு பாடம்: 1. ளேவர (ஆ இ) I. 2. ளேயொன்றி (அ) IV; ளேரவே (இ) I; ளோனெனிற் (ஓ) IV. 3. கலந்தவவ் (விசு) (தி) 4. வாறன்றே (துடி)

கருத்து: நீரின் தண்மையும், நெருப்பின் ஒளியும் ஆகாயத்தில் விளங்கும். ஆனால் நீரின் நெகிழ்ச்சியும், நெருப்பின் வெம்மையும் அங்கு இல்லை. நீரும் நெருப்பும் ஆகாயத்தில் எவ்வாறு வரும்? என்றால், நீரும் நெருப்பும் கலந்த பான்மையால் ஆகாயத்தை அடையும்.

உடம்பின் மேற்பகுதியில் (கழுத்திற்கு மேலே) சந்திர மண்டலம் உருவாவதை, மீண்டும் இப்பாடலிற் கூறுகிறார். நீரின் தண்மையும் நெருப்பின் ஒளியும் ஆகாயத்தில் விளங்குதலாவது: உடம்பில் உள்ள சூரிய கலைகள் பன்னிரண்டனுள் முன் ஆறும், அக்கினி கலைகள் பத்தும் சேர்த்தும், பின் அவை சந்திர மண்டலத்தின் பிற்பகுதிக் கலைகள் ஆறுடன் சேர்ந்தும், சந்திரமண்டலத்தைச் சென்றடைந்தால் அது பௌர்ணமியாகும். ஈண்டு ஆகாயம் என்பது ஆன்மாவின் அறிவு வெளி. இதனைச் "சந்திர யோகம்" என்ற இயலில், 870 ஆம் பாடலில்

கூறினார். அதனை இங்கு மீண்டும் கூறியது, சந்திரமண்டல அனுபவம் சுத்த துரியாதீதம் என்று குறிப்பதற்கு.

அகலம் - ஆகாயம்; சிதாகாயம்.

ஒன்றே மூன்று

2241. அறுநான்கு அசுத்தம்; மதி சுத்தாசுத்தம்
உறும் ஏழு மாயை, உடன் ஐந்தே சுத்தம்
பெறுமாறு இவை மூன்றும், கண்டத்தால் பேதித்து
உறும் மாயை, மாமாயை ஆன்மாவினோடே.

[1]அறுநான் கசுத்த [2]மதிசுத்தா சுத்த
[3]முறுமேழு மாயை [4]யுடனைந்தே சுத்தம்
பெறுமா றிவைமூன்றுங் [5]கண்டத்தாற் பேதித்
[6]துறுமாயை மாமாயை யான்மாவி னோடே. (37)

வேறு பாடம்: 1. அறு நான்கு சுத்த (அ ஓ) I. 2. மதில் சுத்த (அ ஈ ஓ) I; மதிசுத்த (ஆ இ) I. 3. யுறுவேழு (ஆ) IV. 4. யுடனைந்து (தி) 5. காண்டத்தாற் (த) 6. தறுமாயை (அ ஈ ஓ) I; துறுமான் மாயையின் (த)

கருத்து: முப்பத்தாறு தத்துவங்களும் மாயையிலிருந்து தோன்றுவனவே. ஆனால் மாயை, சுத்தமாயை சுத்தாசுத்தமாயை, அசுத்த மாயை என மூன்று பகுதிப்பட்டு நிற்க, சுத்த மாயையினின்று சுத்த தத்துவம் ஐந்தும் தோன்றும். சுத்தாசுத்த மாயையினின்று வித்தியா தத்துவம் ஏழும் தோன்றும். அசுத்த மாயையினின்று ஆன்ம தத்துவம் இருபத்து நான்கும் தோன்றும்.

கொண்டு கூட்டு: “மாயை கண்டத்தால் இவை மூன்றும் பேதித்து, ஆன்மாவினோடே உறும்” என்க.

நம் பெற்றோர்

2242. மாயை கைத்தாயாக, மாமாயை ஈன்றிட,
ஆய பரசிவன் தந்தையாய் நிற்கவே
ஏயும் உயிர் கேவல, சகலத்து எய்தி,
ஆய்தரு சுத்தமும் தான் வந்து அடையுமே.

மாயைகைத் தாயாக மாமாயை யீன்றிட
வாய பரசிவன் றந்தையாய் நிற்கவே
யேயு [1]முயிர்கே வலசக லத்தெய்தி
யாய்தரு சுத்தமுந் [2]தான்வந் தடையுமே. (38)

வேறு பாடம்: 1. மயிர்க்கே (சங்) 2. தானுவந் (ஒ) IV.

கருத்து:சுத்தமாயை பெற்ற தாய்; அசுத்தமாயை செவிலித்தாய். பரசிவன் தந்தை. இவர்களால் தோன்றி வளரும் சீவன், அதற்கு முன் கேவலநிலையில் கிடந்து, இவர்களின் உதவியால் சகல நிலைக்கு வந்து, (பரசிவனின் கருணையால்) சுத்த நிலையை அடையும்.

மாமாயை - சுத்த மாயை. இது ஈன்றிட என்றாரேனும் சிற்சத்தி, சுத்த மாயையை அருள் உடலாகக் கொண்டு 'சத்தியாய்' நின்று, ஆன் மாவுக்குப் பிறப்பை உண்டாக்குதலின், சிற்சத்தியாகும் அருட் சத்தியே பெற்ற தாய் என்க. "சிவன்" எனக் கூறாது. "பரசிவன்" எனக் கூறியது, பரசிவன் "பிறப்புத் தோன்றுக" என்று எண்ணுதலின்.

(v) பராவத்தை

வெளிப்படையாக அருள்வான்

2243. அஞ்சும் கடந்த அனாதி, பரந்தெய்வம்,
நெஞ்சம்-அது ஆய நிமலன், பிறப்பிலி
விஞ்சும் உடல் உயிர் வேறுபடுத்திட,
வஞ்சம் திருந்தும் வகை அறிந்தேனே.

அஞ்சுங் [1]கடந்தவ னாதி பரந்தெய்வ
நெஞ்சம [2]தாய நிமலன் பிறப்பிலி
விஞ்சு முடலுயிர் வேறு படுத்திட
[3]வஞ்சந் [4]திருந்தும் வகையறிந் தேனே. (1)

வேறு பாடம்: 1. கடந்தவன் (ஒ) IV; கடந்தே (ஓ) IV. 2. தாய்நின்ற (ஆ இ) II. 3. வஞ்சத் (இ ஒ) I. 4. திரிந்தும் (அ) I; திருத்தும் (ஒ ஓ) IV; திருந்து (ஆ இ) III; திருந்த (விசு) (தி) (வ).

கருத்து: இனிச் சுத்தாவத்தையைக் கடந்த பராவத்தையைக் கூறத் தொடங்கி, ஓரியல் அமைக்கின்றார். சிவபெருமான் சுத்த மாயா தத்துவம் ஐந்திலும் உள்ள இறைநிலைகளைக் கடந்தவன். தோற்ற

மில்லாதவன்; மேலான தெய்வம். அன்பர் சிந்தையே கோயிலாகக் கொண்டோன். இயல்பாகவே மலங்களினின்றும் நீங்கியவன்; தன்னைத் தோற்றுவித்தோர் இல்லாதவன். அவன் கண்டமாகிய உடலினுள் சிறைப்பட்டிருக்கும் அகண்டப் பொருளாகிய உயிரை விடுவித்தான். அப்பொழுது அவன் அதுவரை மறைந்திருந்து செய்த அருள், வெளிப்படையாகச் செய்யப்படுதலை உணர்ந்தேன்.

பராவத்தை, உடலிலிருந்து நீங்கி நின்று, சிவானுபவத்தை எய்தும் நிலை என்பதைக் குறித்தார்.

கீழாலவத்தை என்ற கேவலாவத்தை ஐந்தும், மத்தியாலவத்தை என்ற சகலாவத்தை ஐந்தும், சுத்தாவத்தை ஐந்தும் ஆக 15 அவத்தைகளும் சிவ அவத்தை எனப்படும். இவற்றுக்கு மேல் வருவன பரஅவத்தைகள் அவற்றை இவ்வியலில் கூறுகின்றார். (பராவத்தைகட்கு மேல் சிவ அவத்தைகள் ஐந்து உண்டு. அவற்றைப் பின்னர்க் கூறுவார்)

கண்டம் - அளவுபட்டது, வாழ்நாள் எல்லையுடையது. உயிரை வேறு படுத்துதல் - "உடல் நான்" என்று கருதிய உயிரை, "நான் அகண்டம்" (அளவில்லாத பொருள்) என்று உணரச் செய்தல்; உயிர் தன் வியாப கத்தை உணரச் செய்தல்.

வஞ்சம் திருந்துதல் - மறைவு மாறி, வெளிப்படையாதல். இம்முதற் பாடல், பராவத்தை ஐந்தையும் அடைவதன் பயனைத் தொகுத்துக் கூறிற்று.

யார் தருவார்?

2244. சத்தி பராபரம் சாந்தி; தனில் ஆன
சத்தி பரானந்தம்; தன்னில் பரவிந்து,
சத்தி அம்மாயை, தனுசத்தி; - ஐந்துடன்
சத்தி பெறும் உயிர் தங்காது ஆறாறுமே.

சத்தி பராபரஞ் சாந்தி தனிலான
சத்தி பரானந்தந் தன்னிற் பரவிந்து[1]
சத்திய மாயை [2]தனுசத்தி யைந்துடன்[3]
சத்தி பெறுமுயிர் [4]தங்காதா றாறுமே[5]. (2)

வேறு பாடம்: 1. சுடர் விந்து (விசு) (தி) (வ) 2. தனுர்ச்சத்தி (ஓ) I; தனுட்சத்தி (த) 3. விந்துடன் (அ) IV. 4. தங்கா (அ ஈ ஓ) I; தானங்காத் (ஓ) III; தானங்குற் (த) 5. தாறுமே (அ ஈ ஒ ஓ) III.

கருத்து: பராபர சிவனது சத்தி, ஆன்மாவிற்குச் சாந்தி அருள்வாள். அவளிடம் தோன்றும் பரம்பர சத்தி, பரானந்தம் தருவாள். அவளிடம் பரவிந்து (பரசிவை) தோன்றும்; அவளிடம் சுத்த தத்துவ விந்து தோன்றும். இவற்றாலும், உடம்பைத் தந்து காக்கும் அசுத்த மாயையாலும் திருவருளால், படி நிலையில் பக்குவம் பெற்று வளரும் ஆன்மா, பரசிவையின் அருள் பெற்றுப் பராவத்தைகளை எய்தும் நிலையில், 36 தத்துவங்களினின்றும் முற்றாக விலகி நிற்கும்.

தத்துவம் கடந்த நிலையே பராவத்தையின் தொடக்கம் என அறிக. பராபர சத்தியில் தொடங்கி, அசுத்த மாயா சத்தியில் முடித்தாரேனும் அனுபவ வரிசையைத் தலைகீழாகக் கூறினார் என்க.

36 தத்துவமாக விரியும் மாயா சத்திகள் இரண்டற்கும் பின்னணி ஆற்றலாக இருந்த சத்தி, பராவத்தையில், பரவிந்து, பரம்பர சத்தி, பராபர சத்தி ஆகியோராக, நேரிடையாகவே ஆன்மாவுக்கு அருள்வாள்.

ஐந்துடன் சத்தி பெறும் உயிர் - சத்திகள் ஐந்தின் மூலம் திருவருளைப் பெறும் உயிர். ஆறாறு - 36 தத்துவங்கள்.

ஞானி, அருளாளன், பேரின்பன்

2245. ஆறாறுக்கு அப்பால் அறிவார் அறிபவர்;
ஆறாறுக்கு அப்பால் அருளார் பெறுபவர்,
ஆறாறுக்கு அப்பால் அறிவு ஆமவர்கட்கே
ஆறாறுக்கு அப்பால் அரன் இனிது ஆமே.

ஆறாறுக் கப்பா லறிவா ரறிபவ
றாறாறுக் கப்பா லருளார் பெறுபவ
ராறாறுக் கப்பா லறிவா மவர்கட்கே
யாறாறுக் கப்பா லரனினி தாமே. (3)

கருத்து: தத்துவம் கடந்த இறையை அறிவால் அறிபவரே 'அறிவர்' ஆவார். படைப்பு வழியாகிய ஆறு அத்துவாக்களையும் கடந்து அருள் பெறுபவரே அருளாளர். யோக வழியாகிய ஆறு ஆதாரங் களைக் கடந்து நிராதாரத்தில் ஞானமயமாய் ஆகின்றவர்க்கே தத்துவம் கடந்த பரசிவன் முதலியோர் தரும் பேரின்பம் கிடைக்கும்.

அரனால் இனிது ஆமே என்று மூன்றன் உருபு விரிக்க.

அருளின்பம்

2246. அஞ்சொடு நான்கும் கடந்து அகமே புக்குப்
பஞ்ச-அணி ஞாலத்துப் பள்ளித் துயில்கின்ற
விஞ்சையர் வேந்தனும் மெல்லியலாளொடு
நஞ்சு அற நாடி நயம் செய்யுமாறே.

அஞ்சொடு நான்குங் கடந்தக மேபுக்குப்[1]
பஞ்சணி [2]ஞாலத்துப் பள்ளித் துயில்கின்ற
விஞ்சையர் வேந்தனு மெல்லிய லாளொடு
[3]நஞ்சற [4]நாடி நயஞ்செய்யு மாறே. (4)

வேறு பாடம்: 1. மேபுகும் (ஆ இ) III. 2. காலத்துப் (விசு) (தி) (வ) 3. நஞ்சுற (சங்) (விசு) (வ) 4. நாடின் (த)

கருத்து: ஞானேந்திரியங்கள் ஐந்தையும், அந்தக் கரணங்கள் நான்கையும் கடந்து, உயிருணர்வில் ஆழ்ந்து, உலகினர் பஞ்சு மெத்தையில் துயில்வது போல, பஞ்சிகரணம் செய்த ஐம்பூதங்களால் ஆன உடம்பில், 36 தத்துவங்களையும் கடந்து உணரும் நிராதார யோகத்தில், ஆன்மா, அருட்சத்தியின் அருளைப் பெற்று, தற்போதம் நையப்பெற்று, உலகியலார் சிற்றின்பம் நுகர்வது போலப் பேரின்பம் பெறுவான்.

உயர் துரியம் மூன்று

2247. உரிய நனாத்துரியத்தில் இவனாம்;
அரிய துரியம் நனவு-ஆதி மூன்றே
பரிய பரதுரியத்தில் பரனாம்;
திரியவரும் துரியத்தில் சிவமே.

[1]உரிய நனாத்துரி யத்தி லிவனா
மரிய துரிய [2]நனவாதி மூன்றே[3]
பரிய பரதுரி யத்திற் பரனாந்
திரிய வருந்துரி யத்திற் சிவமே. (5)

வேறு பாடம்: 1. இனிய (அ ஓ ஓ) II; இரிய (ஈ) I; இருவின் (ஆ இ) I ஈவடிகளின் பாடங்களுள் ஒன்றும் பொருந்தவில்லை. பதிப்புகளில் உள்ள பாடம் மேற்கொள்ளப்பட்டது. 2. நனவாகு (அ ஆ இ ஓ) II;

நனவாக்கு (ஈ) II இதுவும் மேற்கூறப்பட்டவாறே. 3. மூன்றிற் (விசு) (வ) (தி) 4. வரந்துரி (சங்) 5. சிவனே (அ) I.

கருத்து: சுத்த துரியத்தில் ஆன்மா மலங்கள் நீங்கிச் சுத்த நிலையில் இருக்கும். உயர் துரியம் என்பது மூன்று. அவை சுத்த துரியம், பர துரியம், சிவ துரியம் என்பவை. அவற்றுள், பரதுரியத்தில் ஆன்மா மேலான அனுபவம் பெறும். அதனை அடுத்து, மாறுதலை ஏற்படுத்த வல்ல சிவ துரியத்தில் ஆன்மா சிவமாகும்.

"சிவமாகும்" என்றது, தன்னைச் சிவமாகவே உணரும் என்ற பொருள் உடையது. "சிவமாக்கி எனை யாண்ட" என்றார் மணிவாசகரும். (திருவா. அச்சோ. 1)

நனா, நனவு என வருவன சுத்தாவத்தையைக் குறிக்கும். இவற்றைச் சாக்கிரம் (விழிப்பு நிலை) என்னும் பொருளில் ஆசிரியர் ஆளுதலும் கண்டோம்.

பர துரியாதீதம்

2248. பரமா [1]வதீதமே பற்றறப் பற்றல்[2]
பரமா மதீதம் பயிலப் பயில
பரமா வதீதம் [3]பயிலாத் தபோதனன்[4]
[5]பரமாகான் பாசமும் பற்றொன் றறாதே[6]. (6)

வேறு பாடம்: 1. மதீதமே (ஆ இ ஒ) I; தீதமே (ஈ) I. 2. பற்றப் (ஆ இ) I; பற்ற (ஒ ஓ) I. 3. பயிலா (அளன சுவ). 4. தபோதன (அனை. சுவ.) தபோதனர் (த) 5. பரமாகார் (விசு) (தி) (வ) 6. றாதே (ஒ ஓ) I.

கருத்து: பர துரியாதீதமாவது இறைநிலையை, 'அதைச் சேர்ந்துள்ளோம்' என்ற நினைவு இன்றிச் சேர்ந்திருத்தல். அதை மீண்டும் மீண்டும் பயில, ஆன்மா பர நிலையை அடையும். இதனைப் பயிலாத யோகி பரமாக மாறமாட்டான். அவனை விட்டு விலகிய ஆணவ மலம், மீண்டும் வந்து பற்றாமல் இராது.

அறிவு சிவமயமாகும்

2249. ஆயும்பொய்ம் மாயை யகம்புற மாய்நிற்கும்
வாயு மனமுங் கடந்த மயக்கறின்[1]
[2]றூய வறிவு [3]சிவானந்த மாகிப்போய்
[4]வேயும் பொருளாய் விளைந்தது தானே. (7)

வேறு பாடம்: 1. மயக்கறிந் (சங்) 2. தூய் (சங்) 3. சுகானந்த (இ) I. 4. வேயினைப் (ஆ இ) II.

கருத்து: நுண்ணியதும் நிலையற்றதுமாகிய மாயை உயிரின் அகத்திலும் புறத்திலும் செல்வாக்குச் செலுத்தும். பரதுரியா தீதத்தை எய்திய நிலையில், சொல்லும் எண்ணமும் கடந்து நிற்கும் இறைநிலையை உணர்ந்து, மாயையின் மயக்கத்திலிருந்து நீங்கினால், அறிவு சிவமயமாகும். இது பேரானந்தம். அந்த அனுபவம் மாயையை மூடித் தன்பாற் படுத்தும்.

மாயையும் சிவமயமாகும் என்பது கருத்து.

வினைமலை அழியும்

2250. [1]துரியப் [2]பரியி லிருந்தவச் சீவனை
பெரிய [3]வியாக்கிரத் துள்ளே புகலிட்டு[4]
நரிகளை [5]யோடத் துரத்திய நாதர்க்[6]
குரிய [7]வினைகணின் றோலமிட் டன்றே (8)

வேறு பாடம்: 1. துரியம் (அ ஈ ஒ) I; துரிய (ஆ இ) I. 2. மறியி (ஆ இ) I. 3. வியாக்கியத் (ஆ இ) I. 4. புகலிட்டால் (ஆ இ) II. 5. யோட்டித் (ஒ) III. 6. நால்வர்க் (ஆ இ) II.

கருத்து: சுத்த துரியத்தினை அனுபவித்த தமது உணர்வை, அதனினும் பெரிய பராவத்தையில் புகுத்தி, ஐம்புலன்களைத் தீமை செய்யாதவாறு தடுத்த யோகியர்க்கு, அவர் அனுபவிக்க வேண்டிய வினைகள், அவரை அடையப் பெறாமல் நிற்கும்.

நாதர் - யோகியர்; பர நாத அனுபவம் பெறுபவர். ஈண்டு வினை என்றது, சஞ்சிதத்தை. வியாக்கிரம் - நனவு, பரசாக்கிரம். சுத்த துரியம் மட்டும் கூறினாரேனும் சுத்த துரியாதீதமும் கொள்க.

நான் அருவம், அகண்டம்

2251. நின்ற இச்சாக்கிரம் நீள் துரியத்தினின்
மன்றனும் அங்கே மணம் செய்யாநின்றிடும்
மன்றன் மணம் செய்ய, மாயை மறைந்திடும்
அன்றே; இவனும் அவன் வடிவு ஆமே.

நின்றவிச் சாக்கிர [1]நீடுரி யத்தினின்[2]
[3]மன்றனு மங்கே [4]மணஞ்செய்யா நின்றிடு
மன்றன் மணஞ்செய்ய மாயை மறைந்திடு
மன்றே யிவனு மவன்வடி வாமே. (9)

வேறு பாடம்: 1. நீடு துரி (இ) II. 2. யத்தின் (அ) I. 3. மன்றறு (த) 4. மணஞ்செய்ய (விசு) (தி) (வ)

கருத்து: பரசாக்கிரம் கடந்து (அதன் கனவு, சுழுத்தியும் கடந்து) பர துரியத்தை ஆன்மா அடைந்தால், அகண்ட வெளியில், அருவமாக நடஞ் செய்யும் கூத்தப்பெருமான், ஆன்மாவுடன் கலந்து அனுபவம் அளிப்பான். ஆன்மாவைப் பிணித்திருந்த மாயை அப்பொழுதே மறைந்துவிடும். ஆன்மா சிவனது வடிவை எய்தும்.

மாயை நீங்குதலாவது, உடலை நான் என்று எண்ணிய எண்ணம் நீங்குதல். உடலாகிய உருவுடன் இருப்பினும் நான் அருவம் என உணர்தல். சிவனது வடிவை ஆன்மா அடைதலாவது. "நான் கண்டப் பொருள் அல்ல, அகண்டப்பொருள்" என்று உணர்தல். ஓரிடத்தில் அடங்கி, ஒரு காலத்திற்குள் அளவுபட்டு, ஒரு ஜீவன் என்ற தனி எண்ணத்தில் முடங்கிக் கிடப்பதைவிட்டு (கண்டப்பொருள் என்ற உணர்வை விட்டு) "நான் எல்லையற்றவன், காலம் கடந்தவன், சிவமே நான்" என உணர்தல். (அகண்ட வுணர்வைப் பெறுதல்).

இவ்விரண்டு உணர்வுகளும் பரதுரியாவத்தை உள்ளவரைதான் நிற்கும்.

மாயை விளக்காகும், சிவமாகும்

2252. விரிந்திடிற் சாக்கிர மேவும் விளக்கா
யிருந்த விடத்திடை யீடான மாயை
பொருந்துந் துரியம் புரியிற் றானாகுந்
[1]தெரிந்த [2]துரியத்துத் தீதக லாதே[3]. (10)

வேறு பாடம்: 1. தெரிந்து (ஒ) I. 2. துரியத் (துடி) 3. லாமே (அ ஒ) I; லாவே (இ ஒ) I. 3. லாதன்றே (துடி).

கருத்து: ஆன்மாவை வலிமையாகப் பிணித்திருக்கும் மாயை, ஆன்மாவுக்கு வரும் பரசாக்கிரத்தில் அறிவு விளக்கத்தை ஏற்படுத்தும். ஆன்மா பரதுரியத்தை அடைந்தால், அம்மாயை சிவமயமாகிவிடும். (அருளே எங்கும் நிறைந்திருக்கக் காணலாம்.) இத்துரியம் சில முறை வந்து பழகிவிட்டால், ஆன்மா மாயையின் இருளால் பாதிக்கப்படவே மாட்டாது.

"மாயை மயக்கமும் செய்யுமன்றே" என்பது சாத்திரம். பரதுரியம் பழகிவிட்டால் மாயை மயக்கம் செய்தல் அறவே நீங்கும். அகலாது என்பது ஆன்மாவின் வினை.

அறிந்தால் போதுமா?

2253. உன்னை அறியாது, உடலை முன் நீ என்றாய்
உன்னை அறிந்து துரியத்துஉற நின்றாய்
தன்னை அறிந்து பிறவி தணவாதால்
அன்ன வியாத்தன் அமலன், அறிதியே.

உன்னை யறியா துடலைமுன் னீயென்றா[1]
யுன்னை யறிந்து துரியத் துறநின்றாய்
தன்னை [2]யறிந்து பிறவி தணவாதா
லன்ன [3]வியாத்த [4]னமல னறிதியே[5]. (11)

வேறு பாடம்: 1. னேவென்றா (அ) I; னேயென்றா (ஈ ஓ) I; றானென்றா (ஓ) I; னானென்றா (விசு) (தி) (வ) 2. யறிந்தும் (இ ஒ) III. 3. வியார்த்த (ஓ) I. 4. னமலனென் (அனை. சுவ) V. 5. றாற்றுதியே (ஒ) II. றறுதியே (ஈ) I; "அமலன்" என்ற பாடம் சுவடியொன்றிலும் இல்லை. பதிப்புகளிலும் இல்லை. மாறாக, "அமல னென்" என்றே உள்ளது. ஆசிரியர் யாண்டும் தளை சிதையப் புணர்க்காராதலின், இப்பாடம் இப்பதிப்பில் திருத்தப்பெற்றது.

கருத்து: "மகனே, நீ முன்பு உன்னை அறியாமல், உடம்பை நீ என்று எண்ணினாய், இப்பொழுது உன்னை அறிந்து, பர துரியத்தினை அடைந்து, அதனைப் பிரியாமல் பொருந்தி நிற்கின்றாய். நீ இறைவனை அறிந்து கொள்வதாலேயே உனது பிறவி நீங்காது. மலமற்றவனாகிய இறைவன் உன்னைத் தன்னுள் அடக்கிக் கொள்ளும் பரம்பொருள் என நீ அனுபவத்தால் அறிவாயாக.

இறைவனை அறிந்தாலன்றி, உயிர் தன்னை அறியவியலாது ஆதலின், "தன்னை யறிந்து" என்றார். வியாத்தன் - வியாப்தன் என்ற வடசொல் திரிவு; பொருளைத் தன்னுள் அடக்கிக் கொள்பவன்; இதற்கு மாறாக, வியாபகன் என்பது, 'பொருளில் நிறைபவன்' எனப் பொருள்படும். சாதாரண நிலையில், இறைவன் ஆன்மாவில் வியாபகனாக இருக்கிறான். இதனை 'அவையே தானேயாகி" என்று சாத்திரம் கூறும். (சிவஞானபோதம்; 2 ஆம் நூற்பா). இறையனுபவத்தில் இந்நிலை

யோடு, இறைவன் வியாத்தனாகவும் ஆதல்வேண்டும். இதனை "ஏகனாகி" என்னும் சிவஞானபோதம் (10 - ஆம் நூற்பா). "ஆனேன் அவனா, அவனருளால் ஆங்காங்கு, நானே களித்து நடிக்கின்றேன்" என்று இராமலிங்க வள்ளலார் கூறுவதும், இந்நிலையில் இறைவனுக்குள் தாம் அடங்குவதாலாகும். (திருவருட்பா : 6 ஆம் திரு: அடிமைப்பேறு, 8) ஆன்மா இறைவனை வியாபகனாகவும் வியாத்தனாகவும் ஒரே சமயத்தில் உணர வேண்டும்.

"நின்றவிச் சாக்கிர" என்ற பாடலிற் (2251) கூறியதையே இப்பாடலில் வலியுறுத்தினார்.

ஒன்றாவது எப்போது?

2254. [1]கருவரம் பாகிய [2]காயத் துரிய
[3]மிருவருங் கண்டீர் பிறப்பிறப் புற்றவர்[4]
[5]குருவரம் பெற்றவர் கூடிய பின்னை
யிருவரு மின்றியொன் றாகிநின் றாரே. (12)

வேறு பாடம்: 1. கருவரப் (ஓ) I. 2. காயந் (ஓ) IV; காலத் (அ ஓ) I. 3. விருவருங் (ஓ) III. 4. பற்றவர் (ஆ) I; புற்றார் (சங்) 5. குருப ரம் (சங்).

கருத்து: மீண்டும் பிறத்தலை எல்லையாக உடைய உடம்பில், பரதுரியானுபவம் வாய்த்தலால், அவ்வனுபவத்தை அளிக்கும் சிவனும், அதனைப் பெறும் உயிருமாகிய இருவரும் பிறப்பு இறப்புகளில், முறையே 'கூட்டுபவன்', 'கூடுபவன்' என்ற பணிகளை உடையவரே. (அதாவது, இவ்வனுபவம் வாய்ப்பினும், இறைவன் உயிருக்குப் பிறப்பினை அளிப்பான், உயிரும் பிறக்கும்) சீடன் குருவின் அருளைப் பெற்று நிற்க, அவனும் சிவனும் கலக்கப் பெற்றபின், சிவன் - சீவன் என்ற இருவர் இல்லை, ஒருவர் ஆவர்.

பரதுரியானுபவம் வாய்த்தலோடு, வினைநீக்கமும் ஆணவமல நீக்கமும் வேண்டும் என்கின்றார். கருவரம்பு ஆகிய காயம் - இனி ஒரு பிறப்பு உண்டு என்ற நிலையில் உள்ள உடம்பு. காயத்துரியம் - அந்த உடம்பில் பெறும் பரதுரிய அனுபவம்.

"இருவரும்" என்பதற்கு, திணைவேறுபாடு நோக்காது 'உயிரும் உடலும்' எனப் பொருள் கூறி இடர்ப்பட்டனர் பிறரெல்லாம். உயிர் பிறக்கிறது என்பதன்றி, உடல் பிறக்கிறது என்று கூறுவதன் பொருத்தமின்மையை அவர் கண்டிலர்.

சீவநிலை தாண்டிப் பரநிலைக்கு ...

2255. அணுவின் துரியத்தில் ஆன நனவும்
அணு அசைவின்கண் ஆன கனவும்
அணு அசைவின் பராதீதச் சுழுத்தி
பணியின் பரதுரியம் பரம் ஆமே.

[1]அணுவின் றுரியத்தி [2]லான நனவு
[3]மணுவசை வின்கண் ணான கனவு
[4]மணுவசை [5]விற்பரா [6]தீதச் சுழுத்தி[7]
[8]பணியிற் [9]பரதுரி [10]யம்பர மாமே. (13)

வேறு பாடம்: 1. அணுவுந் (அ ஈ ஓ) I. 2. லானந்தமாகவும் (ஈ) II. 3. மணுவுமசை (ஈ) I. 4. மணுவகை (ஈ) I. 5. யிற்பரா (அ ஓ ஓ) I. 6. தீதஞ் (அ ஆ ஈ ஒ ஓ) I. 7. சுழுத்தியும் (ஆ இ) II. 8. பணிவிற் (ஆ) I. 9. பரியதுரி (அ) II; பரம (ஆ) IV. 10. துரியம் பரமே (ஆ) IV.

கருத்து: சுத்தாவத்தைகள் வரை சீவ அவத்தைகள் என முன்பு கூறினார்; இங்குச் சீவ அவத்தைகளிலிருந்து பராவத்தைகள முறையே பிறப்பதைக் கூறுகின்றார்.

சீவதுரியமான சுத்ததுரியத்திலிருந்து பர சாக்கிரம் பிறக்கும்; சீவ துரியாதீதம் ஆகிய சுத்த துரியாதீதத்திலிருந்து பர சொப்பனம் பிறக்கும். சுத்த துரியாதீதத்தைவிட மேலான, கடப்புநிலை பரசுழுத்தி. பரதுரியம் அதைவிட மேலானது.

மேலே "துரியப் பரியில் இருந்த அச்சீவனைப் பெரிய வியாக்கிரத் துள்ளே புகவிட்டு" எனத் தொடக்கஞ் செய்தவற்றை (2250 - ஆம் பாடல்) இங்கு விரிவாகக் கூறுகிறார்.

அணு - சீவன். "அணு வசைவு" என்பதை 'அணுவின் துரியத்தசைவு' என விரிக்க. அசைவு - அசைதல். இது தளர்தல்; நுண்ணிதாதல் என்ற பொருள்கள் உடைமையின், துரியத்தைவிட நுண்ணிய துரியா தீதத்தைக் குறித்தது.

சிவநிலை அவத்தைகள்

2256. பரதுரியத்து நனவும், பரந்து
விரிசகம் உண்ட கனவும், மெய்ச்சாந்தி
உரு உறுகின்ற சுழுனையும் ஓவ,
தெரியும் சிவதுரியத்தனும் ஆமே.

பரதுரி யத்து [1]நனவும் பரந்து
விரிசக முண்ட கனவுமெய்ச் சாந்தி[2]
[3]யுருவுறு கின்ற [4]சுழுனையு மோவத்
தெரியுஞ் சிவதுரி [5]யத்தனு மாமே. (14)

வேறு பாடம்: 1. நகவும் (ஓ) I. 2. காந்தி (ஓ) I. 3. யுருவரி (ஓ) I; யுருவறு (ஆ) I. 4. சுழுனியு (ஓ) I; சுழுத்தியு (விசு) (தி) (வ) 5. யஞ்சிவ (ஆ இ ஈ ஒ ஓ) I.

கருத்து: பரதுரியத்தினின்று பிறக்கும் சிவசாக்கிரமும், பரந்து விரிந்து உலகத்தை அறவே மறத்தற்கு இடமான சிவ சொப்பனமும், உண்மை அமைதி மயமான உருவை ஆன்மா அடைகின்ற சிவ சுழுத்தியும் எய்தப்பெறும். பின் அவை நீங்க, இவற்றினின்று வேறாக அறியப்படும் சிவதுரியத்தை ஆன்மா எய்தும்.

குறிப்பு: தருமபுரம் பதிப்பில், இப்பாடல் மிகையாகத் தெரிகிறது எனக் குறிக்கப்பட்டுள்ளது.

சிவ நிலை அவத்தைகள் - 2

2257. பரமாம் நனவின்பின், பாற்சகம் உண்ட
திரம் ஆர் கனவும், சிறந்த சுழுத்தி,
உரம் ஆகிய உபசாந்தம் உற்று அற்ற
தரன் ஆம் சிவதுரியத்தனும் ஆமே.

பரமா [1]நனவின்பின் [2]பாற்சக முண்ட
[3]திரமார் கனவுஞ் சிறந்த சுழுத்தி
யுரமா [4]கியவுப [5]சாந்தமுற் றற்ற
தரனாஞ் சிவதுரி யத்தனு மாமே. (15)

வேறு பாடம்: 1. நனவிற் பாற்சக (அ) I. 2. பார்சக (தி) 3. திரமாங் (ஆ இ) IV. 4. முபசாந்த முற்றுற்றவே (ஓ) I; முபசாந்தமுற்றற் றுறவே (விசு) (தி) (வ) 5. சாந்தமு முற்றற் (இ) I; சாந்தமு மற்றற் (ஆ) I; சாந்தமுற்றற் றறவே (சங்).

கருத்து: ஆன்மா மேலான நிலையாகிய சிவசாக்கிரமும், அதனை அடுத்து, பொருட் பிரிவுகளை உடைய உலகத்தை அறவே மறக்கும் சிவசொப்பனமும், ஞானப் பேறாகிய உபசாந்த நிலையை நன்றாக எய்தும் சிறந்த சிவசுழுத்தியும் அடைந்து, அதையே தொடர்ந்து எய்தி, பின்பு சிவதுரியாவத்தையை எய்தும்.

இப்பாடல் மேற்பாடலை ஒத்திருப்பினும், சிவசாக்கிரம் பரம் என்றும், சிவசுழுத்தி உபசாந்தநிலை என்றும் விளக்கித் தனியிடம் பெறுகின்றது. 'பின்பால்' எனப்பிரித்துப் பின்பு எனவும் பொருள் கொள்ளலாம். திரம் - ஸ்திரம் என்ற வடசொல் திரிபு. உரம் - ஞானம். உற்று அற்ற - நன்கு அடைந்த. தரன் - தாங்கியவன்; தொடர்ந்து எய்துபவன்.

அனுபவத்தில் அடங்கான்

2258. சீவன் துரியம் முதலாகச் சீரான
ஆவ சிவன் துரிய அந்தம் - அவத்தை பத்து
ஓவும் பரா நந்தி, உண்மைக்குள் வைகியே
மேவிய நால் - ஏழ் விடுத்து, நின்றானே

[1]சீவன் துரிய முதலாகச் சீரான
[2]வாவ [3]சிவன்றுரி யாந்த மவத்தைபத்
தோவும் பராநந்தி யுண்மைக்குள் வைகியே
மேவிய [4]நாலேழ் விடுத்துநின் றானே. (16)

வேறு பாடம்: 1. சீவ (தி) 2. வார்வ (அ) I. 3. சிவதுரி (தி) 4. நாளே (இ) II.

கருத்து: சீவதுரியம் முதல் சிவதுரியம் வரை உள்ள அவத்தைகள் பத்து. அவற்றில் நின்று, அப்பாலுமான சிவபரம்பொருள், பதினோராம் அவத்தையாகிய சிவதுரியாதீதத்தையும் கடந்து, (அனுபவிக்க வொண்ணாத) சொரூப இயல்புடன் நிற்கின்றான்.

சிவன் யோகிக்கு மேல்நிலை அனுபவத்தை அளிப்பினும், அதில் அடங்கான் என்றார். அந்த எல்லையின்மைக்குக் காரணம் கூறுவார், "உண்மைக்குள் வைகி" என்றார். உண்மையாவது சிவனது சொரூபம். அந்த உண்மை எல்லையற்றது.

சிவானுபவ ஞானம்

2259. பரஞ்சிவன் மேலாம் [1]பரமப ரத்திற்
பரம்பரன் மேலாம் பரநன வாக
விரிந்த [2]கனாவிடர் வீட்டுஞ் சுழுனை
யுரந்தகு மாநந்தி யாமுண்மை தானே. (17)

வேறு பாடம்: 1. பரமம் பரத்திற் (த) ரத்ததிற் (ஓ) I; 2. கனாவிட்டு மேவுஞ் (ஆ இ) IV.

கருத்து: பரவெளியில் உள்ள பரசிவனைவிட, பரம்பரத்தில் உள்ள பரம்பர சிவன் மேலானவன். (அவன் அருளால் வாய்ப்பவையே சிவ அவத்தைகள்). அவற்றுள் சிவ சாக்கிரம், அச் சிவனது நினைவே ஆன்மாவின் நனவாக அமைவதாகும். சிவ சொப்பனம் (மலத்) துன்பம் நீக்கும். சிவ சுழுத்தி பதிஞானம் அளிக்கும். அந்தப் பெருஞானம் சிவத்தையே அனுபவித்து அறியும் உண்மை ஞானமாகும்.

பரவெளியில் உள்ள சிவன் பராவத்தைகளை அளிக்கின்றவன் என்பதைக் குறிப்பால் உணர்த்தினார்.

2260. சார்வாம் பரசிவஞ் சத்தி பரநாத
மேலாய விந்து சதாசிவ மிக்கோங்கிப்
பாலாய்ப் பிரம னரியம ராபதி
தேவா முருத்திர னீசனாங் காணிலே. (அ, ட)

அருவநிலை அனுபவம் இல்லையென்றால்?

2261. கலப்பு அறியார், கடல்சூழ் உலகு ஏழும்
உலப்பு அறியார், உடலோடு உயிர் தன்னை
அலப்பு அறிந்து, இங்கு அரசாளகிலாதார்
குறிப்பது கோலம், அடல் அதுவாமே.

கலப்பறி [1]யார்கடல் சூழுல கேழு
முலப்பறி யாருட லோடுயிர் தன்னை
[2]யலப்பறிந் திங்கர சாளகி லாதார்
குறிப்பது கோல [3]மடலது வாமே. (18)

வேறு பாடம்: 1. வார்கடல் (அ ஈ ஓ) I. 2. யறப்பறிந் (த) 3. மலமது (ஓ) I; மலடது (ஈ) I; வலட்டது (இ) I; மலட்டது (ஆ) I.

கருத்து: மேற்கூறிய உயர்நிலை அவத்தைகளை அடைந்து, சிவனைக் கூடிநிற்க அறியாதார், உலகம் அழிதல் தன்மையது என அறியாதிருப்பவர் ஆவர். மேலும் உயிரும் உடம்பும் கூடி ஒன்றாக வாழ்க்கை அமைந்ததன் நோக்கத்தை அறிந்து, இவ்வுலகில் தலைவராக வீற்றிருக்கமாட்டாதார் ஆவர். அவர்கள் உய்ய வேண்டுமாயின் இறைவனின் உருவத்திருமேனியைத் தியானிப் பாராக. அது வெற்றி தரும்.

உருவத் தியானம் அருவத் தியானத்துக்கு வழிவகுக்கும் என்றார்.

என் தவம் பலித்தது

2262. பின்னை அறியும் பெருந்தவத்து உண்மைசெய்
தன்னை அறியின், தயாபரன் எம் இறை
முன்னை அறியும், முடிக்கின்ற காலமும்
என்னை அறியலுற்று, இன்புற்றவாறே

பின்னை யறியும் பெருந்தவத் துண்மைசெய்[1]
தன்னை [2]யறியிற் றயாபர னெம்மிறை
முன்னை யறிவு [3]முடிக்கின்ற காலமு[4]
மென்னை யறியலுற் றின்புற்ற வாறே. (19)

வேறு பாடம்: 1. துண்மையை (ஆ இ) I. 2. யறிதலாற் றாபர (ஆ இ) IV. 3. முடிகின்ற (அ ஒ) I. 4. ஞானமு (த)

கருத்து: பயன் யாது எனப் பின்பு அறியப்படும் பெருந்தவத்தின் பயனாக, சிவபரம் பொருளை அறிந்ததால், கருணையுடையவனாகிய எம் இறைவன், எனது முன்னை யறிவாகிய பாச ஞானத்தை எனக்கு இனங்காட்டி, அதை முடித்து வைத்த காலத்தில் தந்தருளிய மெய்ஞ்ஞானத்தால் என்னை அறியத் தொடங்கி, அது முதல் பேரின்பப் பேறு வரை எய்தினேன்.

இவையெல்லாம் தவத்தின் பயன் என்பார், 'பின்னையறியும் பெருந்தவம்' என்றார். தவத்துண்மை செய்தல் - தவத்தைப் பலிக்கச் செய்தல். காலம், ஆகுபெயர்; காலத்தில் நல்கிய மெய்ஞ்ஞானத்தை உணர்த்திற்று.

நோக்குக்கு ஏற்ற காட்சி

2263. பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்
பொன்னின் மறைந்தது பொன்னணி பூடணந்
தன்னை மறைத்தது தன்கர ணங்களாந்
தன்னின் மறைந்தது தன்கர ணங்களே. (20)

கருத்து: பொன்னாற் செய்த அணியின் அழகு, அது பொன்னாற் செய்யப்பட்டது என்ற உண்மையை மறக்கச் செய்தது. பொன்னால் செய்யப்பட்டது என்று நோக்குவோர்க்கு, அணியின் அழகு புலனாகாது. அது போல, உடம்பும் கருவி கரணங்களும்

ஆன்மாவை மறைத்தன. ஆன்மா, தன்னை உணரும் பொழுது, உடம்பையும், கருவி கரணங்களையும் உணராது.

காரணத்தைப்பார்; மயக்கம் பறக்கும்

2264. மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே. (21)

வேறு பாடம்: 1. பூவே (துடி).

கருத்து: மரத்தால் செய்யப்பட்ட யானை, தன் தோற்றத்தால் மரத்தால் செய்யப்பட்டது என்ற உண்மையை மறைக்கின்றது. 'மரமே' என்று நோக்கினால், யானையின் உருவம் மறைந்து போகும். அதுபோல், நிலம் முதலிய ஐம்பூதங்கள், தம்முள் நின்று இயக்கும் பரம்பொருள் தோன்றாதவாறு விளங்குகின்றன. பதிஞானத்தால் பரம்பொருளை உணர்ந்தால், பூதங்கள் தோன்றமாட்டா.

மேற்கூறிய இரு பாடல்களாலும் புலப்படும் கருத்து: காரியம் வெளிப்படையாகத் தோன்றும். அத்தோற்றத்தில் மயங்கினால், அதன் காரணம் புலப்படாது. காரணம் மறைந்தேயிருக்கும். அதனை உணர்ந்துவிட்டால், காரியத்தால் உண்டான மயக்கம் தெளியும்.

"சிவயசிவ"

2265. ஆறாறு அகன்று, நமவிட்டு, அறிவாகி
வேறான தானே யகாரமாய் மிக்கு ஓங்கி,
ஈறு ஆர் பரையின், இருள் அற்ற தற்பரன்
பேறு ஆர் சிவாய அடங்கும்; பின் முத்தியே.

ஆறா றகன்று நமவிட் டறிவாகி
வேறான தானே யகாரமாய் மிக்கோங்கி
[1]யீறார் [2]பரையி னிருளற்ற தற்பரன்
பேறார் சிவாய [3]வடங்கும் பின் முத்தியே. (22)

வேறு பாடம்: 1. யீறாம் (இ) III. 2. பரையிருளற்ற (அனை. சுவ) 3. வடங்கப்பின் (ஆ இ) III.

கருத்து: மேலிரண்டு பாடல்களால் கூறிய உவமையை இங்கு உவமேயத்துடன் பொருத்துகிறார். ஆன்மா முப்பத்தாறு தத்துவங்களையும் உணராமல் - அதாவது திருவைந்தெழுத்தில் 'நகர எழுத்தால் குறிக்கப்படும் திரோதாயி மறைப்பையும்' மகர வெழுத்தால் குறிக்கப்படும் ஆணவ மல மறைப்பையும் அகற்றி, அறிவுருவாகி, மாயை, வினை ஆகியவற்றையும் உதறி அதாவது, யகர எழுத்தால் குறிக்கப்பட்டு, 'சிவய' என நிற்கும். அதன் இறுதியில் பராசத்தியைக்' குறிக்கும் வகார எழுத்தும், அதற்கு முன் மலத்தின் நீங்கிய சிவத்தைக் குறிக்கும் சிகர எழுத்தும் சேர, 'சிவயசிவ' என நிற்கும். அதன் பின்பு அது முத்தி அடையும்.

யகரம் தனக்கு முன்னும் பின்னும் 'சிவ' நிற்க, அவற்றுள் அடங்கு தலைக் காண்க. இஃது அதிசூக்கும பஞ்சாக்கரம்.

சொல்லில் அடங்காச் சுகம்

2266. துரியத்தில் ஓர் ஐந்தும் சொல் அகராதி
விரியப் பரையின் மிகுநாதம் அந்தம்
புரியப் பரையின் பராவத்தார் போதம்
திரிய, பரம துரியம் தெரியவே.

துரியத்தி லோரைந்துஞ் [1]சொல்லக ராதி
விரியப் பரையின் [2]மிகுநாத மந்தம்
புரியப் பரையின் [3]பராவத்தார் போதந்
திரியப் [4]பரம துரியந் தெரியவே[5]. (23)

வேறு பாடம்: 1. சொல்லதிகாரி (இ) I. 2. மிகுபர (ஆ இ) III. 3. பராத்தாரம் (ஆ இ) I; பராவத்தா (ஓ) I. 4. பரமந் (விசு) (தி) (வ); பரமாமாந் (த) 5. துரியமே (தி) தெரிதெ (துடி).

கருத்து: சிவசுழுத்தி வரை முன்பு கூறியவர், இங்குச் சிவ துரியம் கூறு கின்றார்: சுத்தமாயையில், பரா, சூக்குமை, மத்திமை, பைசந்தி, வைகரி என்ற ஐவகை வாக்குகளும், அகரம் முதலிய ஐம்பத்தோரெழுத்துக்களும் விரிவதற்குக் காரணமான பரநாதம் சிவதுரியாவத்தையில், எழுந்து முடிவெய்தும். பராசத்தி நல்கியருள் கின்ற பராவத்தைகளின் ஞானம் மாறிட, சிவதுரியாவத்தை நிகழும்.

துரியம் - சுத்தநிலை. இங்குச் சுத்தமாயையைக் குறித்தது. பரையின் மிகு நாதம் - பரநாதம். பரவிந்துவைவிடச் சிறந்த பரநாதம் என்றும் கொள்ளலாம். பரநாதமும் பரவிந்துவும் முறையே பரசிவன், பராசத்தி

யின் இருப்பிடங்கள். இவர்கள் அருள்வனவே பராவத்தைகள். அதனை 2244 - ஆம் பாடலிற் கூறினார். பரசாக்கிரத்தில் பரநாதம் முழங்குவதை 2250 - ஆம் பாடலிற் கூறினார். இதனை வள்ளலாரும் "பரநாத முரசு முழங்கியதே" என்பார். (திருவருட்பா, தனித்திரு வலங்கல், 92) இவை முடிந்தபின் வருபவை சிவாவத்தைகள் ஆதலின் "பராவத்தார் போதம் திரிய" என்றார். "பராவத்தை ஆர்" என்பது 'பராவத்தார்' என மருவியது.

பரதுரியத்தில் ஆன்மா அகண்டவுணர்வு எய்தும் என்றவர் இங்கு சிவதுரியத்தின் அனுபவம் சொல்லுக்கு அடங்காமையின், "போதம் திரியப் பரம துரியம்' என்ற அளவில் கூறினார். அதனை அனுபவத்திற் காண்க என்பார், "தெரியவே" என்றார்.

கதிரவன் முன் காரிருள்

2267. **ஐந்தும் சகலத்து, அருளால் புரிவுற்று,**
ஐந்துஇடும் சுத்த அவத்தைப் பதிப்பினில்,
நந்தி பராவத்தை நாள் சுட்ட, முன் ஆகும்
அந்தி-இருள் போலும் ஐம்மலம் மாறுமே.

[1]ஐந்துஞ் சகலத் தருளாற் புரிவுற்று[2]
[3]வைந்திடுஞ் [4]சுத்த [5]வவத்தைப் பதிப்பினின்[6]
னந்தி பராவத்தை [7]நாட்சுட்ட முன்னாகு[8]
மந்தி யிருள்போலு மைம்மல மாறுமே. **(24)**

வேறு பாடம்: 1. அஞ்சுஞ் (அ) II. 2. பரியுற்றுப் (அ) I; பரிவுற்றுப் (இ ஒ) I; பிரிவுற்றுப் (ஓ) I; பரிவற்றுப் (ஈ) I; புரிவுற் (ஆ) II; புரிவற்றுப் (சைவ) 3. பந்திடுஞ் (அ ஈ ஒ ஓ) II; றைந்திடுஞ் (ஆ) II. 4. சுத்தா (அனை. சுவ) 5. வத்தைப் (ஓ) II. 6. பதைப்பினின் (விசு) (தி) (வ) 7. நாடச் சுடர் முன (விசு) (தி) (வ) 8. முன்னா (ஓ) III; முன்னாக (ஆ) I.

கருத்து: ஆன்மா மத்திய சாக்கிராவத்தை என்னும் சகலாவத்தை ஐந்தையும் சிவனது அருளால் அடைந்து, சுத்தாவத்தை ஐந்தையும் எய்திப், பிறகு அடையும் பராவத்தை சூரியனைப் போல அமைய, அதன் முன் ஐம்மலங்களும் வைகறையாமத்து இருள் மறைவது போல, மறையும்.

"சகலத்து ஐந்தும்" என மாற்றுக. புரிதல் - அனுபவித்தல். பதிப்பு - உணர்வு பதிதல். நாள் - ஆகுபெயர்; சூரியன். "நாள்சுட்ட" என்பது சத்தியின் திருவருள் ஆன்மாவின் அறிவில் பதிந்த நாளைக் காட்ட

எனப் பொருள் தந்த நயம் காண்க. அந்தி இருள் - இரவு முடியும் தறுவாயில் உள்ள இருள்; வைகறை இருள். முன்னை உரையாசிரியர். 'அந்திக் காலத்துச் சூரியன் முன் இருள்' என உரை கூறினார். சூரியன் மறைந்தபின் அன்றி, அவன் சன்னிதியில் இருள் இராது என விடுக்க.

பராவத்தையே சுத்தநிலை

2268. ஐ-ஐந்தும், எட்டுப் பகுதியும், மாயையும்
பொய்கண்ட மாமாயை தானும் புருடன்கண்டு
எய்யும்படியாய், எவற்றுமாய், அன்று ஆகி,
உய்யும் பராவத்தையுள் உறல் சுத்தமே.

ஐயைந்து [1]மெட்டுப் பகுதியு மாயையும்
பொய்கண்ட [2]மாமாயை தானும் புருடன்கண்
டெய்யும் படியா யெவற்றுமா யன்றாகி
யுய்யும் பராவத்தை யுள்ளுறல் சுத்தமே. (25)

வேறு பாடம்: 1. மட்டுப் (அ) I. 2. மாயையாம் (த) மாயை (அ இ ஈ ஓ) I; மாயேயந் (த)

கருத்து: ஆன்மா, ஐந்து ஞானேந்திரியங்களையும், ஐந்து கன்மேந்திரியங்களையும், ஐந்து தன் மாத்திரைகளும் மனம், புத்தி, அகங்காரம் என்னும் மூன்றும் ஆகிய எட்டையும், அசுத்த மாயையையும், ஆக, இவற்றை எல்லாம் நிலையற்றவை என உணர்த்தும் சுத்த மாயையையும் தன்னின் வேறாகக் கண்டு, அவற்றின் தன்மையையும் அறிந்து கொள்ளும்படியாக, எப்பொருளோடும் கலந்தும் தனித்தும் விளங்கும் இறைவனை உணரும் பராவத்தைகளை அடைதலே சுத்த நிலையாகும்.

நாதன் அளித்த வரம்

2269. நின்றான் அருளும், பரமும், முன் நேயமும்
ஒன்றாய்; மருவும் உருவும், உபாதியும்
சென்றான்; எனை விடுத்து ஆங்கில் செல்லாமையும்
நன்றான ஞானத்து நாதப் பிரானே.

நின்றா னருளும் பரமுமுன் னேயமு
மொன்றாய் மருவு முருவு முபாதியுஞ்
சென்றா [1]னெனைவிடுத் [2]தாங்கிற்செல் லாமையு[3]
நன்றான [4]ஞானத்து நாதப் பிரானே. (26)

வேறு பாடம்: 1. பரமுமுந் நேயமு (த) 2. னினைவிடுத் (ஓ) I. 3. தானகிற் (ஆ இ) II. 4. செல்லாமல் (ஆ இ) I. 5. ஞுழனத்தில் (ஆ இ ஈ) I.

கருத்து: ஞானவெளியில் நாத வடிவமாக உள்ள சிவபிரான், அருளும் பரநிலையும், கருணையும் ஒருங்கே வெளிப்படுத்தி நின்றான். உயிரைச் சேரும் உடம்பும், காரணவுடம்பும் நீங்கக் காரணம் ஆனான். என்னைவிட்டு நீங்காமல் நின்றான்.

செல்லாமையும் நின்றான் என இயைக்க.

2270. சாத்திக மெய்து நனவெனச் சாற்றுங்கால்
வாய்த்த விராசத மன்னுங் கனவென்ப
ஒய்த்திடுந் தாமத முற்ற சுழுத்தியா
மாய்த்திடு நிர்க்குண மாசி றுரியமே. (ஆ, ங)

(vi) அண்டாதி பேதம்

அண்டங்களில் இறைவன்

2271. பெறு பகிரண்டம், பேதித்த அண்டம்
எறிகடல் ஏழின் மணல் அளவாகப்
பொறியொளி, பொன் அணி என்ன விளங்கிச்
செறியும்; அண்ட-ஆசனத் தேவர் பிராற்கே.

பெறுபகி ரண்டம் பேதித்த வண்ட
மெறிகட லேழின் [1]மணலள வாகப்
பொறியொளி [2]பொன்னணி யென்ன விளங்கிச்
செறியுமண் டாசனத் தேவர் பிராற்கே[3]. (1)

வேறு பாடம்: 1. மண்ணள (ஆ இ) II. 2. பொன்மணி (அ ஈ ஓ) I. 3. பிரானே (சங்)

கருத்து: அண்டத்தை ஆசனமாகக் கொண்டுள்ள சிவபிரானுக்கு, புற அண்டமும், அதனுள் இருக்கும் தம்முள் மாறுபட்ட அண்டங்களும், ஏழு கடல் கரையின் கண்ணும் உள்ள மணலின் எண்ணிக்கை உடையவையாய், கண்ணில் காட்சி போலவும், பொன்னில் அணி போலவும் வேறுபாடு இன்றி, ஒன்றியிருக்கும்

இறைவன் அண்டங்களுடன் ஒன்றியிருப்பான் என்க.

குறிப்பு: முதலடியில் தளை சிதைய வரினும் சுவடிகளில் உள்ளவாறு பதிப்பிக்கப்பட்டது.

அண்டங்களானவன் அவன்

2272. ஆனந்த தத்துவம் அண்டாசனத்தின் மேல்
மேனி ஐந்தாக, வியாத்தம் முப்பத்தாறாய்,
தான் அந்தம் இல்லாத தத்துவம் ஆனவை;
ஈனம் இலா அண்டம் எண் மடங்கு ஆகுமே.

ஆனந்த தத்துவ மண்டா சனத்தின்மேன்
மேனியைந் தாக வியாத்தமுப் பத்தாறாய்த்
தானந்த மில்லாத தத்துவ மானவை
யீனமி [1]லாவண்ட மெண்மடங் காகுமே. (2)

வேறு பாடம்: 1. லாவண்டத் தென்மடங் (அ ஈ ஒ ஓ) III.

கருத்து: ஆனந்த மயமான இறைவன், அண்டங்களை ஆசனமாகக் கொண்டு, ஐந்து திருமேனிகளாக இருத்தலோடு, அவற்றின் தத்துவம் உட்பட 36 தத்துவங்களாக விரிந்தும் இருப்பான். அண்டங்கள் தத்துவங்களைப் போல் எட்டு மடங்கு உள்ளன.

(vii) பதினோராம் தானமும் அவத்தை எனக் காணல்

சந்திரனில் பராசத்தி

2273. அஞ்சில் அமுதும், ஓர் ஏழின் கண் ஆனந்தம்
முஞ்சில் ஓங்காரம், ஓர் ஒன்பான் பதினொன்றில்
வஞ்சகமே நின்று வைத்திடில், காயம் ஆம்
கிஞ்சுகச் செவ்வாய், கிளிமொழி கேளே.

அஞ்சி லமுதுமோ ரேழின்க ணானந்த
முஞ்சிலோங் காரமோ ரொன்பான் பதினொன்றில்
வஞ்சக மேநின்று வைத்திடிற் காயமாங்
கிஞ்சுகச் [2]செவ்வாய் கிளிமொழி கேளே. (1)

வேறு பாடம்: 1. னாழந்த (அ) I. 2. செவ்வாய்க் (ஆ இ ஓ) II.

கருத்து: மேற் கூறிவந்த அவத்தையுடன், முன்பு கூறிய பிராசாத யோகத்தை இணைத்துக் கூறுகின்றார். சந்திர மண்டலத்தின் (உடம்பில் உள்ளது) கலைகள் பதினாறனுள் முதன் மூன்றாகிய அகரம், உகரம், மகரங்களாற் குறிக்கப்படும் ஓங்காரத்தியானத்தால், அம் மண்டலத்தின் ஐந்தாம் கலையாகிய அர்த்த சந்திரனின் இடமாகிய நடுநெற்றியில் அமுதம் விளையும். இம்மண்டலத்தின் ஏழாம் கலையாகிய நாதத்தின் இடமாகிய தலையின் முன்பகுதியில், நாத ஒலி கேட்கும். ஆதலின், ஆனந்தம் உண்டாகும். ஒன்பதாம் கலையாகிய சத்தி, பதினோராம் கலையாகிய சமனை (வியாபினியை அடுத்து உள்ள நான்கு கலைகளும் அதன் விரிவே ஆதலின் பத்தாவதாகிய வியாபினியை அடுத்துப் பதினொன்றாவ தாகச் சமனை எண்ணப்படுகிறது.) ஆகியவற்றை இடமாகக் கொண்டு ஓங்காரத்தை அருவமாகத் தியானம் செய்தால், பன்னிரண்டாம் கலையாகிய உன்மணியின் இடமாக உச்சந் தலைக்கு மேலே 12 அங்குலம் வரை உள்ள சிதாகாசத்தில் (ஆன்மாவின் அறிவு வெளியில்) அதுவரை தூலவுடம்பின் சத்தியாக, 'குண்டலி' என்ற நிலையில் செயற்பட்டு வந்த அருட்சத்தி, பராசத்தியாகக் காட்சி தருவாள் (ஆன்மவுணர்வுக்குப் புலனாவாள்).

ஓங்காரத் தியானம் சந்திரமண்டலத்தின் முதல் மூன்று கலைகள் ஆகிய அகரம் (மேதை), உகரம் (அர்க்கீசம்) மகரம் (விடகலை) ஆகியவற்றை உருவாக்கி, அவற்றில் பரவி, நான்காம் கலையாகிய விந்துவின் இடமாகிய புருவத்திடையில் ஒளியாகக் காட்சிதரும். பின்னர் நடுநெற்றியில் அமுதத்தை விளைவிக்கும் என்க.

உடம்பில் புருவமத்தியிலிருந்து உச்சந்தலை வரையும் அதற்கு மேல் 12 அங்குல வெளி வரையும் உள்ள பகுதி சிதாகாயம். உலகங்களையும் அண்டங்களையும் அடக்கிக் கொண்டுள்ள பெரிய வெளி பராகாயம் அல்லது பரமாகாயம். (நுணுகிப் பார்க்குமிடத்துப் பரமாகாயத்தில் ஆன்ம அறிவு எத்துணை அளவு செல்லுமோ, அத்துணையும் சிதாகாயமே.)

முந்து - முஞ்சு என மருவிற்று. அர்த்த சந்திரனில் அமுதம் ஊறுதலை ஆசிரியர், "அட்டமாசித்தி" - இயலில், 688 ஆம் பாடலில் (தொடர் எண்) "அமிர்தத்தலை" என நிரோதினி கலையைக் குறிப்பதால் அறியலாம். அக்கலை அர்த்த சந்திரனை அடுத்தது.

"வைத்திடில் என்பது கடைநிலை விளக்காய், முஞ்சில் ஓங்காரம் அஞ்சில் வைத்திடில், ஏழில் வைத்திடில்" என இயையும்.

வியாபினி முதல் உன்மனை வரை அனுபவம் பெறுவது நிராதார யோகம். சந்திர கலைகள் பதினாறனுள் முதல் பத்தும், இறுதி கலைகள் இரண்டும் ஆகப் பன்னிரண்டும் "பிராசாத கலைகள்" என்பர்.

காயம் ஆம் கிஞ்சுகச் செவ்வாய் - உடம்பின் சத்தி ஆகிய குண்டலி யாகச் செயற்பட்ட அருட்சத்தி. கிஞ்சுகம் - முறுக்கவிதழ்; செவ்வாய் - அவ்விதழ் போலும் சிவந்த வாயினை உடையாள். அவளையே "கிளிமொழி" என்றும் கூறினார். கேள் - முன்னிலை வியங்கோள்.

சுத்த அவத்தைகளில் பிராசாத கலைகள்

2274. புருடனுடனே பொருந்திய சித்தம்
அருவமொடு ஆறும் அதீதத் துரியம்
விரியும் சுழுத்தியின் மிக்கு உள்ள எட்டும்
அரிய பதினொன்றும் ஆம் அவ் அவத்தையே.

புருட னுடனே பொருந்திய சித்த
மருவமொ டாறு மதீதத் துரியம்
'விரியுஞ் சுழுத்தியின் மிக்குள்ள வெட்டு
மரிய பதினொன்று மாமவ் வவத்தையே (2)

வேறு பாடம்: 1. பிரியுஞ் (ஆ) I.

கருத்து: பிராசாத கலைகள் பன்னிரண்டும் பதினோராம் கலையின் இடமாகிய சமனையை எய்திய நிலையில் அனுபவிக்கப் பெறுதலின், முன்பு கூறிய சுத்தாவத்தை ஐந்தோடும் இக் கலைகளைப் பொருத்திக் காட்டுகிறார்.

புருட தத்துவத்தையும் சித்த தத்துவத்தையும் இயக்குபவையாகிய சிவ தத்துவங்கள் ஐந்தும் தூலமாக நின்று ஆன்மாவுடன் இணைந்து (ஐந்தும் ஒன்றும் ஆறாக) சுத்த சாக்கிர அனுபவம் உண்டாகும். சுத்த சொப்பனம் என்பதில் அனுபவம் ஏதும் இல்லை. ("நனவிற் கனவில்லை" என்னும் பாடல் (எண் - 2170) காண்க.) அதில் புருடனுடன் மட்டும் ஆன்மா இருக்கும். சுத்த சுழுத்தியில் ஆன்மாவுடன் சிவ தத்துவம் ஐந்தும் சூக்குமமாக இருக்கும். சுழுத்தியிலிருந்து விரியும் துரியத்தில் சத்தி தத்துவமும் சிவதத்துவமும், ஆகிய இரண்டு மட்டும் அனுபவப் படும், துரியா தீதத்தில் சிவதத் துவம் மட்டும் அனுபவப்படும். இதுவரை ஆதார யோகம் எனப்படும். அதாவது உடலில் தலையுச்சிவரை உள்ள அனுபவம். இவ்வாதார யோகத்தில் பிராசாத கலைகள் பொருந்தி நிற்கும் வகை:

சுத்த சாக்கிரம்: அகரம், உகரம், மகரம், விந்து - ஆக நான்கு
,, சுழுத்தி : அர்த்த சந்திரன், நிரோதினி - ஆக இரண்டு
,, துரியம் : நாதம், நாதாந்தம், சத்தி - ஆக மூன்று
,, துரியாதீதம் : நாதம், நாதாந்தம் (மொத்தம் 9 கலைகள்)

இனி, பராவத்தை, சிவாவத்தைகள் அடையப்படும் யோகம், நிராதார யோகம் எனப்படும். இவற்றில் பரா சத்தியும் பரசிவமும் பரா வத்தையிலும், அகண்டாகார சிவம் மட்டும் சிவாவத்தையிலும் அனுபவப்படும். இந்த அனுபவத்தில் 11 - ஆவது கலை ஆகிய சமனையும், 12 - ஆவது கலையாகிய உன்மனையும் பொருந்தி நிற்கும்.

சிதாகாசத்தில் சிவன்

2275. காட்டும் பதினொன்றும் கைகலந்தால், உடல்
நாட்டி, அழித்திடில், நந்தி அல்லாது இல்லை;
வாட்டம் செய்யாத அது விதியே, நினை,
ஈட்டும் அது திடம் எண்ணலும் ஆமே.

காட்டும் பதினொன்றுங் கைகலந் தாலுட[1]
[2]னாட்டி [3]யழித்திடி னந்தியல் லாதில்லை[4]
[5]வாட்டஞ்செய் [6]யாத [7]வதுவிதி யேநினை[8]
[9]யீட்டு மதுதிட [10]மெண்ணலு மாமே. (3)

வேறு பாடம்: 1. தானுட (ஆ) I. 2. னாட்ட (ஒ) I. 3. யழிந்திடி (ஈ) I; யளித்திட (ஆ இ) I; யழுத்திடி (விசு) (தி) (வ) 4. லாலில்லை (அ ஒ) IV. 5. யாட்டஞ் செய் (ஒ) I. 6. பாச (இ) IV. 7. மதிவிதி (அ) II; மதுவிதி (ஆ இ ஈ ஒ) I. 8. யோநினை (அ) I. 9. யீட்டில் (ஒ) I. 10 மென்னலு (இ ஈ) IV.

கருத்து: மேற்பாடல்களில் காட்டிய பதினொரு பிராசாத கலைகளும் ஒருங்கே ஒருவனுக்கு வாய்த்தால், அவன், தன் தலையில் உச்சி வரை, அகரம் முதல் சத்தி வரையான கலைகள் ஒன்பதையும் அனுபவித்து, உச்சிக்கு மேலே சிதாகாசத்தில், வியாபினி, சமனை, உன்மனை ஆகிய கலைகளைப் பெற்றுச் சிவத்தை அனுபவிப்பான். மங்காமல் நிலை நிற்பதாகிய அப்பேரானந்தம் சிவனது திருவருளால் வாய்ப்பதாகும். அப்பொழுது ஆன்மா எய்தும் ஞானம் நிலையானதாகும். ஆகவே பிரணவயோகம் பயின்று, பிராசாத கலைகளின் அனுபவத்தைப் பெற எண்ணல் தகும்.

உடல் நாட்டி, அழித்திடல் - உடம்பிலும், அப்பால், சிதாகாசத்திலும் சிவானுபவம் பெறுதல் உடலைக் கடக்கும் போது, ஆதாரம் இல்லாமற் போகும் ஆதலின் சிவனே ஆதாரம் என்பார், "நந்தி அல்லாதில்லை" என்றார்.

விதி - அருள். ஈட்டுமது - ஞானம். வினையாலணையும் பெயர்.

(viii) கலவு - செலவு

சுத்தம் மூன்று

2276. கேவலம் தன்னின் கலவு-அல்; சகலத்தின்
மேவும் செலவு; விட அருள், நீக்கத்துப்
பாவும் தனைக் காண்டல் - மூன்றும் படர் அற்ற
தீதறு சாக்கிராதீதத்துச் சுத்தமே.

[1]கேவலந் தன்னிற் [2]கலவல் சகலத்தின்
மேவுஞ் செலவு [3]விடவரு ணீக்கத்துப்[4]
பாவுந் [5]தனைக்காண்டன் மூன்றும் படரற்ற[6]
தீதறு சாக்கிரா தீதத்துச் சுத்தமே. (1)

வேறு பாடம்: 1. வைவலந் (அ) I. 2. கலவச் (அ) I; கலவு (த) 3. விடல்வருள் (ஈ) I; விடாதிருள் (இ) IV. 4. நீக்கத்துப் (இ ஈ ஒ) I; நீக்கப் (ஓ) I. 5. தனைக் கண்டான் (இ ஒ) I. 6. படரறுத்த (அ) II; படர்வற்ற (ஆ இ ஈ) V; படர்வற (ஈ) II; மாடவற்ற (ஓ) II.

கருத்து: அவத்தைகளின் அனுபவங்களில், ஆன்மா சிலவற்றோடு கலத்தலும் பிரிதலும் மாறி மாறி நிகழ்வதைத் தொகுத்துக் கூறுகின்றார்.

ஆன்மா மும்மலங்களுடன் கலந்திருக்கும் சகல நிலையை விட்டுப் பிரிந்து, 'தான் தனியாதல்' ஆகிய கேவல நிலைக்கு முதலில் வரும். பிறகு, அந்நிலையினை நீத்து, 'சத்தியுடன் கலத்தல்' ஆகிய நிலைக்குச் செல்லும். பின்னர், சத்தியின் அருள் வழிகாட்ட, அவளை நீத்து, எங்கும் வியாபகமாய், அருவாய் உள்ள சிவத்தைத் தரிசித்துக், கலந்து நிற்கும். ஆக, 'தான் தனியாதல்', 'சத்தியோடு கூடல்', 'சிவத்தைக் கூடல்' என்னும் மூன்றும், சாக்கிரம் கடந்த நிலையில் வரும், துன்பம் அற்ற, தீமை அற்ற சுத்த நிலையாகும். இவற்றுள் 'சிவத்தைக் கூடல்' என்பது, பின்பு கூறப்போகும் சிவ துரியாதீதத்துக்குரிய அனுபவமாகும்.

கேவலம், சகலம், சுத்தம் என்பவற்றுக்குப் புதுப்பொருள் கூறினார். அதன்படி 'தான் தனியாதல்' என்ற கேவலம், மலங்களிலிருந்து நீங்கிய சுத்த நிலை. 'சத்தியோடு கூடல்' என்ற சகலம், தற்போதத்திலிருந்து விடுபட்ட சுத்த நிலை. 'சிவத்தோடு கூடல்' என்ற சுத்தம் தான்வேறு, சிவம் வேறு என்ற உணர்விலிருந்து விடுபட்ட சுத்தநிலை.

சாக்கிராதீதம் என்பது கேவலசாக்கிரம், மத்திய சாக்கிரம், சுத்த சாக்கிரம், பரசாக்கிரம், சிவசாக்கிரம் என்ற ஐந்தையும் தனித்தனி கடந்த நிலை. மலம் நீங்குதலின் 'தீதற்ற' என்றார். தற்போதம் நீங்குதலின் 'படரற்ற' என்றார். கலத்தல் அல்லாத பிரிதல் நிலையைக் "கலவு - அல்" என்றார்.

மலை வெட்ட வெளியாகும்

2277. வெல்லு [1]மளவில் விடுமின் வெகுளியைச்
செல்லு மளவுஞ் [2]செலுத்துமின் சிந்தையை
யல்லும் பகலு [3]மருளுடன் றூங்கினாற்
கல்லும் பிளந்து கடுவெளி யானதே[4]. (2)

வேறு பாடம்: 1. மளவும் (ஆ இ ஈ) I. 2. செறுத்துமின் (சங்) 3. மறிவுடன் (ஓ) II. 4. யாமே (ஓ) IV.

கருத்து: மேற்பாடலிற் கூறிய கலத்தல் - பிரிதல் என்பவற்றை வேறு வகையில் விளக்குகின்றார்: ஆன்மா தான் தனியாதல் வேண்டும் புலன்களை அடக்கல் வேண்டும். ஆசையடக்குதலும், கோபம் நீத்தலும் புலனடக்குதலின் படிகள். ஆதலின் அவற்றை அடக்குக. சத்தியைச் சேர வேண்டும் என்றால், உயிருணர்வை மிக்க மேல்நிலையில் செலுத்துக. (இது யோக சாதனையால் கைகூடும்) நாள் முழுதும் அருள் உணர்வில் உயிருணர்வு ஒன்றி வாழ்க. ஆணவம் என்ற மலை பிளந்து தூள் ஆகும். பரமாகாய வெளி புலப்படும்.

வெளி என்பது சிவானுபவம். அறிவை மறைத்தலின் ஆணவத்தை "மலை" என்றார். சிவத்தைச் சேர்ந்து, ஆன்மா வியாபக அறிவு பெறுதலின் 'கடுவெளியானது' என்றார். கடுவெளி - வெட்ட வெளி; "நந்தியல்லது இல்லாத" இடம். ஆணவம் என்ற மலை பிளந்து, அந்தத் தூளும் - பாசாங்குரமும் - இல்லாமற் போகும் என்பார், 'கடுவெளி' ஆகும் என்றார். கடுவெளி, மருந்துக்குக் கூட ஒரு பொருளும் இல்லாத வெற்றிடம் (Vacuum).

(ix) மேலாலவத்தை

பிரணவ வுடம்பு

2278. ஊமைக் கிணற்றகத்து, உள்ளே உறைவது ஓர்
ஆமையின் உள்ளே அழுவைகள் ஐந்து உள;
வாய்மையினுள்ளே வழுவாது ஒடுங்குமேல்,
ஆமையின் மேலும் ஓர் ஆயிரத்தாண்டே.

ஊமைக் கிணற்றகத் துள்ளே யுறைவதோ
ராமையி னுள்ளே [1]யழுவைக ளைந்துள
[2]வாய்மையி னுள்ளே வழுவா தொடுங்குமே
[3]லாமையின் மேலுமோ ராயிரத் தாண்டே. (1)

வேறு பாடம்: 1. யுழுவைக (ஆ இ) I. 2. வாமையி (அ இ) I. 3. லாமையின்புற (ஒ) II; லாமைமென் (த)

கருத்து: வாயில்லாத கிணற்றின்கண், ஆழத்தில் வாழும் ஆமைக்குள் ஐந்து ஆழிடங்கள் (குழிகள்) உள்ளன. அவ்வாமை, உண்மைப் பொருளினுள் தவறாது ஒடுங்குமாயின், தன் வயதைக் காட்டிலும் ஆயிரம் ஆண்டு அதிக வாழ்நாள் பெறும்.

இஃது ஒட்டணி அதனால் உணர்த்தும் பொருள்: இது சிவாவத்தை பற்றிக் கூறியது. நிராதார யோகம் பற்றியது. இதில் ஆன்மா அனுபவம் பெறுவது உச்சந்தலைக்கு மேல் பரமாகாயத்தில். பரமாகாயத்தில் ஆழ்ந்து செல்லும் ஆன்மாவுக்குச் சிவ சாக்கிரம், சிவ சொப்பனம், சிவ சுழுத்தி, சிவ துரியம், சிவ துரியாதீதம் என்னும் ஐந்து அவத்தைகள் உண்டு. அவற்றில் அகண்டாகார வெளியாகிய, என்றும் உண்மையாயுள்ள சிவத்தைத் தரிசித்து, கலந்து நின்றால், ஆன்மா, தான் வாழும் தூலவுடம்புக்கு விதித்த வாழ்நாளின் மேல், கூடுதலாக, ஆயிரம் ஆண்டுகள் வாழும்.

4 ஆம் அடியில் "ஆமையின் மேல்" எனக் கூறியதால், தூலவுடம்பாகிய ஊனுடம்பு, இப்பிரசாத கலையால், பிரணவ உடம்பாக மாற, அதில் 1000 ஆண்டுகள் வாழுவது என்க. ஆமை, ஆகுபெயர். "வாய்மையின் உள்ளே வழுவாது ஒடுங்குதலை" இராமலிங்க வள்ளலார் தமது அனுபவமாக, "சிவதுரியாதீதத்தே சிவமாய் நிறைந்தேன்" என்றும் பிரணவ உடம்பு பெறுவதை, "மன்னுகின்ற பொன்வடிவும் மந்திரமாம் வடிவும் வான் வடிவும் கொடுத்தெனக்கு ... பண்புற என் அகம்புறமும் விளங்குகின்ற பதியே" என்றும் கூறுவார். (திருவருட்பா, ஆறாம் திருமுறை, அருள் விளக்க மாலை : 61) அழுவை - ஆழ்ந்த இடம்.

குறிப்பு: இவ்வியலுக்குப் பெயர் குறிப்பிடுவதில் சுவடிகள் தம்முள் மாறுபடுகின்றன. பொருட் பொருத்தம் நோக்கி இ, ஈ, ஓ - என்ற சுவடிகளில் உள்ள பெயரே இப்பதிப்பிற் கொள்ளப்பட்டது. முன்னைப் பதிப்புகளில் ‘நின்மலாவத்தை’ எனக் காணப்படும் பெயர், ஆ, ஒ - என்ற 2 சுவடிகளில் உள்ளது. அது முற்போந்த சுத்தாவத்தையைக் குறிப்பது ஆதலின் பொருந்தாது என்க. உரைகாரர் ஒருவர் சுத்தாவத்தைகட்குக் கூறிய விளக்கத்தையே, இவ்வியற் பாடல்கட்கும் கூறினார். அது கூறியது கூறல் என்னும் குற்றத்தை ஆசிரியர்மேல் ஏற்றும் எனக் கருதிற்றிலர் போலும்.

‘பராவத்தை’ - இயலில் சுருக்கமாகக் கூறிய சிவ அவத்தைகளை இவ்வியலில் விரிவாகக் கூறுகின்றார். சிவாவத்தைகளினும் மேலான அவத்தை இன்றாதலின், இவை ‘மேலாலவத்தை’ எனப்பட்டன. சிவாவத்தைகளே மேலாலவத்தை என்பதற்குப், பின்னர் ஆசிரியர், “முத்துரியம்” - என்ற இயலில், 2439 ஆம் பாடலில்) “சிவதுரியம்” என வழங்கும் பெயரே சான்று பகரும்.

சிவமயம் ஆனார்

2279. கால், அங்கி, நீர், பூ, கலந்த ஆகாயமே,
மால், அங்கி, ஈசன், பிரமன், சதாசிவன்
மேல் அஞ்சும் ஓடி, விரவ வல்லார்கட்குக்
காலமும் இல்லை, கருத்து இல்லை தானே.

காலங்கி நீர்பூக் கலந்தவா காயமே[1]
மாலங்கி யீசன் பிரமன் சதாசிவன்
மேலஞ்சு மோடி விரவவல் லார்கட்குக்
காலமு மில்லை கருத்தில்லை தானே. (2)

வேறு பாடம்: 1. முதலடியிற் சுவடிகளிற் ‘காயம்’ என்னும் பாடமே உள்ளது. இவ்வடி ஆசிரியரின் வழக்கத்திற்கு மாறாக 11 எழுத்தே பெறுதலின், தருமபுரப் பதிப்பின் பாடம் கொள்ளப்பட்டது.

கருத்து: காற்று, தீ, நீர், நிலம் இவற்றில் கலந்தும் தனித்தும் நிற்கும் ஆகாயம் - இந்த ஐம்பூதங்களையும், இவற்றின் அதி தேவதை களான, முறையே மயேச்சுரன், உருத்திரன், திருமால், பிரமன், சதாசிவன் ஆகியோரையும் கடந்து, அகண்டாகார சிவத்துடன் கலந்து நிற்க வல்லவர்களுக்கு வாணாள் எல்லை இல்லை. அவர்களுக்கு என்று தனிக் கருத்து, சிந்தனை, அறிவு ஆகியவை இல்லை. சிவத்தின் கருத்தே, அறிவே - அவர்களது கருத்து; அறிவு.

சிவமே ஆன்மா

**2280. ஆன்மாவே, "மைந்தனும் ஆயினென்" என்பது,
'தான் ஆம்'- அறை அற்ற தன்மை அறிகிலர்;
ஆன்மாவே மைந்தன் அரனுக்கு; அவன் இவன்;
ஆன்மாவும் இல்லை; அரற்கு ஐந்தும் இல்லையே.**

ஆன்மாவே [1]மைந்தனு மாயினெ னென்பது
[2]தானா [3]மறையற்ற தன்மை யறிகில
[4]ரான்மாவே மைந்த னரனுக் கவனிவ[5]
[6]னான்மாவு மில்லை [7]யரற்கைந்து மில்லையே. (3)

வேறு பாடம்: 1. மைந்தனாயின (ஒ) II; தன்மைந்த னாயின (த) 2. காண்மா (ஓ) II; தான்மா (விசு) (தி) (வ) 3. மறை (ஆ இ) I; மறையறை (ஈ ஒ ஓ) II. 4. தான்மாவே (அ ஒ ஓ) I; தானாகு மான்மாவே மைந்தனுந் தக்கவ (ஆ இ) II. 5. கிவனன்றே (ஓ) II; கிவனென்ற (விசு) (வ) கிவனென்றா (தி) கிலனென்றா (த) 6. லான்மாவு (த) 7. யரற்கையு (அ) I; யாறைந்து (ஒ ஓ) IV; மில்லையா லையைந்து (விசு) (தி) (வ) (த).

கருத்து: ஆன்மா, "நான் சிவனுக்கு மைந்தனும் ஆனேன்" என்று கூறுவது, தான் சிவமே ஆகிய - சொல்ல வியலாத ஒன்றைச் சொல்லும் முறைதான். இதைப் பலரும் அறியார். ஆன்மா சிவனுக்கு மைந்தன் என்பதும் ஒரு வகையாற் பொருத்தமே. எவ்வாறு என்றால், அகண்டாகார சிவம் உருவம் அற்றவன்; ஆன்மா உருவம் உடையவன். சிவ துரியாதீதத்தில் ஆன்மா சிவம் ஆகிறது. இருவர்க்கும் வேறுபாடு இல்லை. தனக்கு எனத் தனி அறிவு இல்லையாதலால் ஆன்மா இல்லை. சிவன் ஐந்து சிவதத்துவங் களுள் ஒன்றைத் தனது திருமேனியாகக் கொள்ளாமல் அகண்டாகாரமாக இருக்கிறான். ஆதலின், அவனை ஈஸ்வரன் என்றோ மயேசுரன் என்றோ, சதாசிவன் என்றோ, சத்தி என்றோ, சிவன் என்றோ கூற இயலாது. இவ்வகையில் ஆன்மா சிவத்துக்கு மைந்தன் எனலாம்.

அறை - அறைதல்; சொல்லுதல். முதனிலைத் தொழிற் பெயர். சிவத்தின் மேனிலை சொல்லவியலாதது என்பதை இராமலிங்க வள்ளலார், "விலங்குகின்ற தத்துவங்கள் அத்தனையும் கடந்த மேல்நிலை என்று அந்தமெலாம் விளம்புகின்ற தன்றி வலங்கொளும் அம் மேல்நிலையின் உண்மை எது என்றால், மவுனம் சாதிப்பதன்றி வாய் திறப்பதிலையே" என்றார். (திருவருட்பா ஊரனடிகள் பதிப்பு - 6 ஆம் திரு: 5701) 3வது அடி: அவன் இவன் - இவ்வான்மா அச்சிவமே. 4 வது அடி: ஐந்து - ஐந்து சிவதத்துவங்கள். அவை மேலே கருத்தில் கூறப்பட்டன.

சிவாவத்தைகள்

2281. உதயம், மழுங்கல், ஒடுங்கல் - இம் மூன்றின்
கதி சாக்கிரம், கனவு ஆதி சுழுத்தி;
பதிதரு சேதனன் பற்றாம் துரியத்து
அதி சுபன் ஆய், அனந்தானந்தியாமே.

உதய மழுங்க லொடுங்கலிம் மூன்றின்[1]
கதிசாக் கிரங்கன வாதி சுழுத்தி
பதிதரு சேதனன் [2]பற்றாந் துரியத்
ததிசுப [3]னாயனந் தானந்தி யாமே. (4)

வேறு பாடம்: 1. மூன்றும் (ஆ இ) IV. 2. பற்றாத் (த) 3. னாவனந் (விசு)

கருத்து: சிவசாக்கிரம், சிவசொப்பனம், சிவ சுழுத்தி என்பவை முறையே, சிவசோதி தோன்றுதலைக் காணுதல், உலகை மறத்தல், உபசாந்தம் அடைதல் என்ற அனுபவங்களாகும். சிவதுரியத்தில் ஆன்மாவிற்குப் பற்றுக்கோடு அதில் விளையும் அனுபவமே. அதில் ஆன்மா மிக்க மங்கல வடிவினனாய், முடிவிலா ஆனந்தம் அடைவான்.

சேதனன் - அறிவுப் பொருளாகிய ஆன்மா. அனந்தம் - அளவற்ற. ஆனந்தி - ஆனந்தமுறுவோன்.

திரும்பியும் வருவாரோ?

2282. எல்லாந்தன் னுட்புக [1]யாவுளுந் தானாகி
நல்லாந் துரியம் புரிந்தக்கா னல்லுயிர்
[2]பொல்லாத [3]வாறாறுட் போகாது போதமாய்ச்[4]
செல்லாச் சிவகதி சென்றெய்து மன்றே. (5)

வேறு பாடம்: 1. யாவுந் (இ) I. 2. பொல்லாது (ஓ) I. 3. வாறுடன் (அ) I; வற்றுடன் (ஈ ஓ) IV. 4. போகமாய்ச் (ஓ) IV.

கருத்து: பொருள்கள் யாவும் தன்னுள் ஐக்கியமாகி நிற்கவும் அதாவது ஒரு பொருளையும் தன்னின் வேறாகக் காணாமலும் எல்லாப் பொருளிலும் இறைவன் கலந்திருப்பதைக் கண்டும், தானும் இறைவனும் அன்னியம் இல்லையென உணர்ந்தும், இதன் காரணமாக, பொருள் எதுவும் தனக்கு அன்னியமன்று எனக்

கொள்ளும் ஆன்மா, துரியாவத்தையை அடையும் பொழுது, பாச ஞானம் இன்றிப் பதிஞானம் கொண்டு, துரியாதீதத்தில், மீளுதல் இல்லாத சிவநிலையை அடையும்.

நன்றாம் என்பது எதுகை நோக்கித் திரிந்தது. ஆறாறு - 36 தத்துவம். அவற்றைச் சார்ந்து எய்துவது பாச ஞானம். ஆன்மா அவற்றைச் சாராது விடுத்து, சிவத்தைச் சார்ந்து பதிஞானம் பெறுதலின் 'போதம்' என்பது பதிஞானம். 'செல்லா' - சென்றடைதல் இல்லாத எனலும் ஆம்.

தூவானம் விடவில்லை

2283. காய்ந்த இரும்பு கனலை அகன்றாலும்
'வாய்ந்த கனல்' என, வாதனை நின்றாற்போல்
ஏய்ந்த கரணம் இறந்த துரியத்துத்
தோய்ந்த கருமத்துரிசு அகலாதே.

காய்ந்த விரும்பு கனலை யகன்றாலும்
வாய்ந்த கனலென வாதனை நின்றாற்போ
லேய்ந்த கரண மிறந்த துரியத்துத்'
தோய்ந்த கருமத் துரிசக லாதே. (6)

வேறு பாடம்: 1. துரியத்துந் (ஈ ஓ) III.

கருத்து: நெருப்பிற் காய்ந்த இரும்பு அதனை விட்டு எடுக்கப் பட்டாலும், அதன் வெப்பம், நெருப்பைப் போலவே, சிறிது நேரம் இருத்தலைப் போல, ஆன்மா சிவதுரியத்தில் சிவானுபவம் பெறும் பொழுது தன் அந்தக்கரணங்களைக் கடந்து நிற்பினும், இவ்வனு பவம் பெறுமுன் பரதுரியத்தில் அனுபவம் பெற்ற மனப்பதிவு, ஒரு குற்றமாக, அதனைப் பற்றி நிற்கும்.

சிவதுரியத்தில் அடிக்கடி தோய்ந்து எல்லாம் சிவன் செயல் என உயர்ந்தால், அக்குற்றம் மீண்டும் நேராது என்க. இறந்த - கடந்த.

சிவ துரியாதீதம்

2284. ஆன மறைவு ஆதியாம் உரு நந்தி வந்து,
ஏனை அருள்செய் தெரிசனாவத்தையில்,
ஆன வகையை விடும் அடைத்து ஆய்விட,
ஆன மல - அதீதம் அப்பரம் தானே.

ஆன [1]மறைவாதி [2]யாமுரு நந்திவந்
தேனை [3]யருள்செய் [4]தெரிசனா வத்தையி[5]
லான [6]வகையை [7]விடுமடைத் தாய்விட
[8]வான மலாதீத [9]மப்பரந் தானே. (7)

வேறு பாடம்: 1. மறை யாதி (அ ஈ) II; மறையோதி (ஒ) II; மறைவதி (ஆ இ) I. 2. யாமுறு (ஆ இ) I. 3. யிருள்செய் (ஓ) I. 4. தெரிநனா (விசு) (தி) (வ) 5. வவத்தையி (அ ஓ) I. 6. வதையை (ஓ) I; வகைவிடுத் தடையத்தனாய்விட (ஓ) II. 7. விடுமடைந் (அ) I; வீடு மனமந்தக்கா லாய்விட (ஆ இ) II. 8 வானவ மலாதன (ஓ) II. 9. மப்பதந் (ஆ இ) I.

கருத்து: சென்ற பாடலிற் கூறிய பரதுரிய வாசனையும் நீங்கப் பெறும் சிவ துரியா தீதத்தை இப்பாடலிற் கூறுகிறார். உருவற்ற அகண்ட வெளியாய் நின்றே, அனைத்து வடிவங்கட்கும் ஆதிகாரணமாய் இருக்கும் சிவம், உயிருணர்விற்குப் புலப்பட்டு, அனுபவம் அருள்கின்ற சிவதுரிய நிலையை நீங்கும் முறைப்படி நீங்கி நின்றால், அந்த மேலான நிலையில், வாசனை நீங்க, சிவமயமாய், நிறைந்து நிற்கக் கூடும்.

'உரு மறைவாம், ஆதியான நந்தி' என மாற்றுக. மறைவு என்பது, உரு இல்லாமையைக் குறிக்கும். இது சிவத்தின் சொரூபம். தெரிசனம் - உணர்விற்குப் புலப்படுதல். வாசனை நீங்கற்கண் அருளும், அதற்கு முன் செய்த அருளும் வேறு வேறு என்பார், "ஏனை அருள்" என்றார். அடைத்து - அடைவை - முறைமையை - உடையது. விடும் அடைத்து - விடும் முறைமை. இங்கு உடையது எனப்பட்டது சிவானுபவம். வாசனை உள்ள போது, துரியாதீதம் வராது. அதற்குப் பரிபாகம் - பக்குவம் - வரும் போது அவ்வுயரனுபவம் வரும் என்பார், "மலாதீதம்" என்றார். சிவதுரியாதீதம் சொல்ல வொண்ணாதது ஆயினும், ஒருவாறு உணர்த்தினார். சிவதுரியத்திற்கும் சிவதுரியாதீதத்திற்கும் உள்ள வேறுபாடு, ஓர் அரும்புதையலாக இப்பாடலிற் கிடக்கின்றது.

நீ வேறு, நான் வேறோ?

2285. சுத்த அதீதம் சகலத்தில் தோய்வுறில்
அத்தன் அருள் நீங்கா, ஆங்கணில் தான் ஆக,
சித்தசுக சுத்தத்தைத் தீண்டாச் சமாதி செய்து
அத்தனோடு ஒன்றற்கு அருள் அமுது ஆமே.

சுத்த வதீதஞ் சகலத்திற் றோய்வுறி
லத்த னருணீங்கா [1]வாங்கணிற் றானாகச்[2]
[3]சித்தசுக [4]சுத்தத்தைத் தீண்டாச் சமாதிசெய்
[5]தத்தனோ டொன்றற் [6]கருளமு தாமே. (8)

வேறு பாடம்: 1. வாங்கண்ணிற் (இ) III; வாங்கண்ணற் (ஆ) I; வாங்கணற் (ஒ) I; வாங்கனிற் (அ ஈ) I; வாங்கனித் (ஒ) IV. 2. தானாகச் (ஓ) IV. 3. சித்த (அ ஈ ஒ ஓ) II. 4. சுகத்தை (அ ஈ ஒ ஓ) II; சித்த சுகாவத்தை (த) 'சித்த சுகத்தை' எனப் பாடங்கொள்ளின் தளை தட்டுதலால், இவ்வடியில் 13 எழுத்துக்கள் வரினும் தீமையின்று எனக்கருதி, ஆ, இ - சுவடிகளிற் கண்ட "சித்த சுக சுத்தத்தை" என்ற பாடம், இப்பதிப்பிற் கொள்ளப் பட்டது. 5. யத்தனோ (த) 6. கருண்முத (சங்).

கருத்து: சகல நிலையில் உள்ள ஆன்மாவுக்கு, மலமும் மலவாசனையும் அற்ற சுத்த நிலையாகிய, சிவ துரியாதீதம் வாய்த்தால். சிவத்தின் அருட்சத்தி அதுவரை செய்த கருணையைச் சிவமே செய்யும். ஆன்மா 'நானே சுத்த நிலைச் சித்த சுகத்தை அனுபவிக்கிறேன்' என்ற எண்ணம் கொள்ளாமல். 'தருவது சிவம், பெறுவது தான்' என்ற உணர்வு இல்லாமல் சமாதி கூடி, சிவத்தோடு ஒன்றி நிற்பதற்கான கருணையைச் சிவமே புரியும். அது தரும் ஆனந்தமே சிவ அமுது.

அருளாகிய சத்தியின் கருணையைப் பெற்றது முன்னே; சிவத்தின் கருணையையே பெறுவது இப்பொழுது. அருள் நீங்கும் என்பதைக் கலவு - செலவு - இயலில், 2276 ஆம் பாடலிற் கூறினார்.

சித்த சுகம் என்பது, சுகத்தை உணரும் சித்தம். 'அது தீண்டாமல்' என்பது, சித்தம் கடந்த இடம். "சிந்தை பிறந்ததும் ஆங்கே - அந்தச் சிந்தை இறந்து தெளிந்ததும் ஆங்கே" என்பார் தாயுமானவரும். (ஆனந்தக் களிப்பு : 20) சமாதி - அவனே தான் ஆதல். "நீவேறெனாத படி நான் வேறெனாதபடி" என்பார் அருணகிரியார்.

தாயோடு; பின், தந்தையோடு

2286. வேறு செய்தான் இருபாதியின் மெய்த்தொகை
வேறு செய்தான் என்னை எங்கணும் விட்டு, உய்த்தான்
வேறு செய்யா அருட்கேவலத்தே விட்டு,
வேறு செய்யா அத்தன் மேவிநின்றானே.

வேறுசெய் தானிரு பாதியின் மெய்த்தொகை
வேறுசெய் தானென்னை யெங்கணும் விட்டுய்த்தான்
வேறுசெய் யாவருட் கேவலத் தேவிட்டு
வேறுசெய் யாவத்தன் மேவிநின் றானே. (9)

கருத்து: முதல்வன் சத்தியும் சிவனுமாக இருந்து, ஆண், பெண், அலி என்னும் பகுதிகளை உடைய உலகத்தைப் படைத்தான். நான் அவனை மறந்து, உலக விச்சைகளில் பட்டமையால், என்னைப் பல பிறவிகளிலும் பிறக்கச் செய்து, பின்பு மீட்டான். தன்னின் வேறு அல்லாத அருட் சத்தியை எனது அறிவில் பதியச் செய்தான். பின்னர், தானே என்னுடன் கலந்து, 'நான் - அவன்' என்ற வேறுபாடு இன்றி நிற்கின்றான்.

இரு பாதி - ஆண், பெண் என்னும் இரண்டு வகை. இவ்வாறு கூறியது அலியையும் தழுவும். மெய்த்தொகை உடம்புகளின் தொகுதி; உலகம். இதனை மெய்கண்டார் 'அவை' என்றார். (சிவ. போ. சூத். 1)

2287. கறங்கோலை கொள்ளிவட் டங்கட லிற்றிரை
நிறஞ்சேர் ததிமத்தின் மலத்தே நின்றங்
கறங்காண் சுவர்க்க நரகம் புவிசேர்ந்
திறங்கா வுயிரரு ளாலிவை நீங்குமே. (உ)

சூரியன் முன் சந்திரன்

2288. தானே 'சிவம் ஆன தன்மை' தலைப்பட
ஆன மலமும், பசு பாச பெத்தமும்
ஆன குணமும் பரான்மா உபாதியும்
பானுவின் முற்றம் மதிபோல் படராவே.

தானே சிவமான தன்மை தலைப்பட[1]
வான [2]மலமும் பசுபாச பெத்தமு[3]
மான குணமுஞ் பரான்மா வுபாதியும்[4]
பானுவின் [5]முற்றமதி போற்பட ராவே. (10)

வேறு பாடம்: 1. வெளிப்பட (அ) IV. 2. மலமு மபாபாச (அ ஈ ஓ) I; முப்பாச (ஓ) IV; மப்பாச (விசு) (தி) (வ) 3. பேதமு (ஓ) IV பேதங்களு (த) 4. வுமாதியும் (ஆ இ ஈ ஓ) I. 5. முன்னின்ற மதி (ஓ) II முன்மதி (விசு) (தி) (வ) முன்னர் மதிபோற் (சங்).

கருத்து: ஆன்மா சிவமாம் தன்மை பெற்றவுடன், மாயை, ஆணவம் ஆகியவற்றால் ஆன்மா கட்டுண்டிருந்த நிலையும், பின்பு பராவத்தையில் ஆன்மா அடைந்த அனுபவமும், அப்போது அதற்கு இருந்த தடையும், சூரியன் முன் சந்திர ஒளி படராமை போல் காரியப்படா.

துணையாயின முன்னே, இணைந்துவிட்டன பின்னே

2289. நெருப்பு உண்டு, நீர் உண்டு, வாயுவும் உண்டு அங்கு;
அருக்கனும் சோமனும் அங்கே அமரும்;
திருத்தக்க மாலும், திசைமுகன்தானும்,
உருத்திரசோதி என் உள்ளத்து உளாரே.

நெருப்புண்டு நீருண்டு வாயுவு முண்டங்
கருக்கனுஞ் சோமனு மங்கே யமருந்
[1]திருத்தக்க மாலுந், திசைமுகன் றானு
முருத்திர [2]சோதியென் னுள்ளத்து ளாரே. (11)

வேறு பாடம்: 1. திருத்தங் கிடுமாலுந் (ஆ) II. 2.சோதியு முள்ளத்து (சங்)

கருத்து: சிவ துரியாதீதம் அனுபவிக்கும் ஆன்மாவின் கூற்றாகப் பாடுகின்றார். என் உடம்பில் மூலக் கனலும், அமுதமும், மூச்சுக் காற்றும் இயங்குகின்றன. சூரிய மண்டலமும் சந்திர மண்டலமும் இயங்குகின்றன. இவற்றுடன் அக்கினி மண்டலத்திற்கும் முறையே அதி தெய்வங்களான திருமாலும், உருத்திரனும், பிரமனும் என் உள்ளத்தில் உள்ளனர். (ஆனால், இவையும் இவர்களும் அகண்டாகார சிவத்தின் அனுபவத்தில் உள்ளடங்கியுள்ளனர்.)

யோகத்துணையாக இருந்தவை - தனித்தனியே தியானிக்கப் பெற்றவை - யோகத்தின் முடிநிலையாகிய சிவதுரியாதீதத்தை எய்தியவுடன், தனித்தனி உணரப்படாவாயின. ஆன்மாவை விழுங்கிய சிவத்தில் இவையும் ஒடுங்கின.

வானுக்கு ஏணி

2290. ஆனைகள் ஐந்தும் அடக்கி, அறிவு என்னும்
ஞானத்திரியைக் கொளுவி, அதனுள் புக்கு,
ஊனை இருள் அற நோக்கும் ஒருவற்கு
வானகம் ஏற வழி எளிதாமே.

ஆனைக ளைந்து மடக்கி யறிவென்னு
ஞானத் [1]திரியைக் கொளுவி யதனுட்புக்
[2]கூனை யிருளற நோக்கு மொருவற்கு
வானக மேற வழியெளி தாமே. (12)

வேறு பாடம்: 1. திரியிற் (ஆ இ) I. 2. கூன (ஆ இ) III.

கருத்து: ஐம்புலன்களையும் அடக்கி, தெளிந்த அறிவு என்ற சுடரை ஏற்றி, அதன் சோதியினுள் அகண்டாகார சிவத்தைத் தரிசித்து, ஊனுடம்பின் இருட்டன்மை மாற முயலுவோர்க்கு, முத்தி எளிதாகும்.

இது பொதுப் பொருள். இப்பாடல் இவ்வியலோடு இயைபுடையதாக வேண்டுமாதலின், இதன் சிறப்புப் பொருள் வருமாறு:

பராவத்தை எனப்படும் பரசாக்கிரம், பரசொப்பனம், பர சுழுத்தி, பரதுரியம், பரதுரியாதீதம் என்னும் ஐந்து அனுபவங்களுக்கும் மேற்சென்று, உயிருணர்வு என்னும் திரியில், பதி ஞானம் என்னும் சுடரைக் கொள்ளச் செய்து, அகண்ட வெளியாகிய சிவானுபவத்தில் தோய்ந்து, தனது பிறவிப் பிணி நீங்குமாறு முயலுபவனுக்கு, பிறவி அறுத்து வீடுபேறு அடைதல் எளிதாக அமையும்.

வலக்கால் தூக்கி ஆடும் திருக்கூத்து

2291. ஆடிய காலில் அசைக்கின்ற வாயுவும்,
தாடித்து எழுந்த தமருக ஓசையும்,
பாடிஎழுகின்ற வேத ஆகமங்களும்
நாடி, என் உள்ளாக நான் கண்டவாறே.

ஆடிய காலி லசைக்கின்ற வாயுவந்
தாடித் தெழுந்த தமருக வோசையும்
பாடி யெழுகின்ற வேதா கமங்களு
நாடியென் னுள்ளாக நான்கண்ட வாறே. (13)

வேறு பாடம்: 1. தமரக (அனை சுவ.) 2. நாடியி (ஓ) I.

கருத்து: அகண்ட பரவெளியில் ஞான நடம் புரியும் -சிவக்கூத்தனின் இடக்காலில், எனது மூச்சுக் காற்றுச் செயலற்று நின்றுவிட்டதைக் கவனித்தேன். ஆழ்ந்த நுண்மையுடன், அந்தப் பரவெளியில் ஒலித்த ‘சி’ என்ற ஒலியைக் கேட்டேன். (அதுவும் பிரணவத்தின் மகரமும்

ஒன்று என்பதை உணர்ந்தேன்.) சப்தப் பிரபஞ்சமாகிய வேதாகம மந்திரங்கள் அனைத்தும் அந்த ஒலிக்குள் அடக்கம் என்பதை உணர்ந்தேன். அர்த்த பிரபஞ்சமாகிய அண்டங்கள், அவற்றில் உள்ள உலகங்கள், அவற்றில் உள்ள பொருள்கள் - இவை எல்லாமும் அந்த ஒலிக்குள் அடக்கம் என்பதை உணர்ந்தேன். இவற்றை எல்லாம் எனக்குள்ளே அனுபூதியாக உணர்ந்தேன்.

தானே சிவமாய் உணர்ந்தமையின், "என்னுள்ளாகக் கண்டவாறு" என்றார்.

சந்திரகலை இடைகலை நாடி யாதலின், சந்திர மண்டலத்தின் உயர்ந்த கலைகளாகிய சமனை, உன்மனை ஆகியவற்றைப் பெற்றுச் சிவானுபவம் பெறும் சிவ துரியாதீதக் 'காட்சியை', வலக்கால் தூக்கியாடும் நடனமாகக் கொண்டு, இடக்காலினால் முயலகன் அழுத்தப்பட்டுச் செயலற்றிருப்பது போல், இடகலையில் (சந்திர கலையில்) ஓடும் மூச்சுக்காற்று, நிராதாரத்தில் நின்றுவிடுவதை "ஆடிய காலில் அசைக்கின்ற வாயுவும்" என்றார். இப்போது, மூச்சுப் பிங்கலையில் ஓடும். அசைக்கின்ற - கட்டப்படுகின்ற. (மதுரை துவாத சாந்தத் தலமாதலின், அங்குச் சிவபெருமான் வலக்கால் தூக்கி யாடும் நடனம் நிகழ்ந்தது என்று புராணம் கூறும்.) "தடித்து", முதல் நீண்டது.

அகண்டாகார வெளியில் 'சி'கரம் ஒன்றே நுட்பமாய் ஒலிக்கும் என்பதையும் வேதாகமங்கள் அதில் அடக்கம் என்பதையும் இந்நூலில், பின்னே, 'அதிசூக்கும பஞ்சாக்கரம்' - இயலில் "அங்கமும் ஆகம வேதம தோதினும், எங்கள் பிரான் எழுத்தொன்றில் இருப்பது, சங்கை கெட்டவ் வெழுத்தொன்றையும் சாதித்தால், அங்கரை சேர்ந்த அருங்கலமாமே" என்று ஆசிரியர் கூறுவார். பிரணவத்தின் மகாரம் சிவமே என்பது, முன், 'திருவம்பலச் சக்கர' - இயலில், 966 ஆம் பாடலிற் கூறப்பட்டது.

பேரறிவும் பேயறிவும்

2292. முன்னை அறிவினின் செய்த முதுதவம்
பின்னை அறிவினைப் பெற்றால் அறியலாம்;
தன்னை அறிவது அறிவாம்; அஃது அன்றிப்
பின்னை அறிவது பேயறிவு ஆகுமே.

முன்னை யறிவினிற் செய்த முதுதவம்
பின்னை 'யறிவினைப் பெற்றா லறியலாந்
தன்னை யறிவ தறிவா மஃதன்றிப்[2]
பின்னை யறிவது பேயறி வாகுமே. (14)

வேறு பாடம்: 1. யறிவினிற் (ஈ) I. 2. மதன்றிப் (அ) I.

கருத்து: முற்பட்ட பதி ஞானத்தால் செய்த கடுந்தவத்தின் பயனை, பிற்பட்ட பதிஞானமாகிய சிவதுரியாதீதத்தைப் பெற்றால் மட்டும் பெறக்கூடும். அப்பயனாவது "தான் சிவமாம் தன்மை"யடைதல். அறிவு எனப்படுவது இந்த அறிவே. பிற அறிவெல்லாம் அலைவுடைய - சலனமுடைய - அறிவாகும்.

பேய் அலைதலின், சலன அறிவைப் 'பேயறிவு' என்றார். இவ்வாறு பழிக்கப்படுபவை பாச ஞானமும் பசு ஞானமும். அலைதல், உலகப் பொருள், செயல் - எதிலும் நிறைவு பெறாது அலைதலும், தன்னையே முழுமையெனக் கொண்டு, அதிலும் நிறைவு காணாமல் அலைதலும் ஆகும்.

"சும்மா விரு"

2293. செயலற் றிருக்கச் சிவானந்த மாகுஞ்
செயலற் றிருப்பார் சிவயோகந் தேடார்[1]
செயலற் றிருப்பார் செகத்தொடுங் கூடார்
செயலற் றிருப்பார்க்கே [2]செய்தியுண் டாமே. (15)

வேறு பாடம்: 1. தோடார் (அ) I. 2. செய்தாண்டாராமே (ஓ) IV.

கருத்து: 'யாவும் சிவத்தின் செயல்' என்றே இருக்கச் சிவானந்தம் உண்டாகும். அவ்வாறு இருப்பவர் யோக சாதனத்தின் சாத்தியத்தை (பயனை) அடைந்துவிட்டார் ஆதலின், யோகம் பயில வேண்டுவதில்லை. அந்த ஞானத்தின் பயனாக, அவர்கள் உலகியலாரோடு ஒருமனம் ஆகார். அவர்களுக்கே சிவானுபவம் மேன்மேல் விளையும்.

ஒரு மனம் ஆகாமை, ஒத்த கருத்துக் கொள்ளாமை. செய்தி - அனுபவம்.

மரணமிலாப் பெரு வாழ்வு

2294. தான் அவனாகும் சமாதி கைகூடினால்
ஆன மலம் அறும்; அப்பசுத் தன்மை போம்
ஈனம் இல் காயம் இருக்கும் இருநிலத்து
ஊனங்கள் எட்டும் ஒழித்து ஒன்றுவோர்க்கே.

தானவ னாகுஞ் [1]சமாதிகை கூடினா
லான மலமறு மப்பசுத் தன்மைபோ
மீனமில் [2]காய மிருக்கு மிருநிலத்
தூனங்க ளெட்டு மொழித்தொன்று வோர்க்கே[3]. (16)

வேறு பாடம்: 1. சமாதியைக் (ஈ ஒ) III. 2. கால (ஆ இ) I. 3. வோர்கட்கே (சங்) (த).

கருத்து: உலகில் காமம், கோபம், உலோபம், மோகம், மதம், பகைக்குணம், பசுஞானம், பாசஞானம் என்ற எட்டுக்குற்றமும் நீக்கி வாழ்வோர்க்கு, ஆன்மா, 'தான் சிவமாம் தன்மையைப்' பெறும் சமாதி கைவரப்பெற்றால், ஆணவ மலம் விலகும். ஆன்மபோதம் நீங்கும். இழிவற்றதாகிய ஞான உடம்பில் அவ்வான்மா வாழ்ந்திருக்கும்.

ஆன்ம போதம் - நான் என்ற அறிவு.

துரியாதீதம் விலகினால்?

2295. தொலையா அரன் அடி தோன்றும் அம் சத்தி
தொலையா இருள்-ஒளி தோற்ற, அணுவும்
தொலையாத் தொழில் ஞானம் தொன்மையின் நண்ணித்
தொலையாத பெத்தம் முத்திக்கு இடை தோயுமே.

தொலையா வரனடி [1]தோன்றுமஞ் சத்தி
தொலையா விருளொளி தோற்ற வணுவுந்
தொலையாத் தொழின்ஞானந் தொன்மையி னண்ணித்[2]
தொலையாத பெத்தமுத் [3]திக்கிடை தோயுமே. (17)

வேறு பாடம்: 1. தோன்றுமச் (ஈ) IV; தோன்றுமைஞ் (த) 2. னன்றித் (அ ஒ) I. 3. திக்கடை (ஒ) I.

கருத்து: சிவ துரியாதீதம் அவத்தையே (உணர்வு நிலை) ஆதலின், அது நீங்கியபின் நிகழ்வதைக் கூறுகின்றார். அவ்வவத்தையின் போது தோன்றாதிருந்த சத்தி, அது நீங்கிய போது சிவத்தினிட மிருந்து வெளிப்படுவாள். உயிருக்கு அறியாமையையும், ஞானத்தையும் தோற்றுவிப்பாள். ஆன்மா முன்போலவே உலகியற் செயலிலும், ஞானம் பெறுதலினும் ஈடுபட்டுப் பெத்த நிலை, முத்திநிலை - இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட ஒரு நிலையில்

வாழும். இஃது உடல் நீங்கும் வரை நிகழும் ஆயினும், ஆன்மாவின் பக்குவம் முதிருந்தோறும் சிவ துரியாதீதம் அடிக்கடி எய்தப்படும்.

சத்தியின் இச் செயலைப் "பேதித்து நம்மை வளர்த்து எடுத்த பெய்வளை" என்பார் மணிவாசகர். (திருவா. திருவெம்,) சத்தியின் மறைப்பை ஏழு திரைகளின் மறைப்பு என்பர் வள்ளலார்.

ஞானத்தில் ஊன்ற

2296\. தோன்றிய பெத்தமும் முத்தியும், சூழ்சத்தி
மான்றும் தெருண்டும் உயிர் பெறும் மற்றவை;
தான் தரு ஞானம், தன் சத்திக்குச் சத்தனாம்
ஊன்றல் இல்லா உள்ளொளிக்கு ஒளியாமே.

தோன்றிய பெத்தமு முத்தியுஞ் சூழ்சத்தி[1]
மான்றுந் தெருண்டு முயிர்பெறு மற்றவை
தான்றரு ஞானந்தன் சத்திக்குச் சத்தனா[2]
[3]மூன்றலில் லாவுள் ளொளிக்கொளி யாமே. (18)

வேறுபாடம்: 1. சூழ்ந்திடு (ஓ) II. 2. சாதனா (அ ஈ ஒ ஓ) I. சத்தன்றா (த) 3. மூன்றவில் (ஒ ஓ) I; னூன்றலில் (த).

கருத்து: பொதுவாக ஓர் உயிர்க்கு எப்போது பெத்த நிலையை முடிப்பது? எப்போது முத்தி அருள்வது? என்று எண்ணி முடிவு செய்பவள் சத்தியே. உயிர் மயங்குவது தொடர்ந்தால், பெத்தமும் தொடரும். ஞானத்தால் தெளிந்தால், முத்திப் பக்குவம் வரும். இந்நிலையில் சிவம் உயிர்க்குப் பதிஞானம் அளித்தல் உண்டு. அது, சத்திக்குத் துணைவனாக - சத்தனாக - இருந்து கொண்டு அளிப்ப தாகும். உண்மை இது வாதலின், சிவதுரியாதீத அவத்தைக்கு வந்த உயிர், அந்த அனுபவம் ஊன்றப் பெறாமல், மீண்டும் பெத்த நிலைக்குச் சென்றால், சிவன் அதற்கு மீண்டும் அறிவு அளிப்பான்.

"ஊன்றல் இல்லா உள்ளொளி", சிவதுரியாதீத அனுபவத்தில் வந்த ஞானம் உறுதிப் படாத நிலை. மான்று - மயங்கி

2297\. அறிகின்றி லாதன வையேழு மொன்று
மறிகின்ற வென்னை யறியா திருந்தே
னறிகின்றாய் நீயென் றருள்செய்தா னந்தி
யறிகின்ற நானென் றறிந்துகொண் டேனே. (அ, உ)

2298. தானவ னாகிய ஞானத் தலைவனை
வானவ ராதியை மாமணிச் சோதியை
ஈனமின் ஞானத் தின்னருட் சத்தியை
யூனமி லாடனை யூனிடைக் கண்டதே. (அ,உ,ட)

சிவனது அருளே சிவானந்தம்

2299. ஒளியும், இருளும், பரையும், பரையுள்
அளியது எனலாகும் ஆன்மாவை அன்றி,
அளியும் அருளும் தெருளும் கடந்து
தெளிபவருள்ளே சிவானந்த மாமே.

ஒளியு மிருளும் [1]பரையும் பரையு
ளளிய தெனலாகு மான்மாவை யன்றி
யளியு மருளுந் தெருளுங் கடந்து
[2]தெளிபவ ருள்ளே சிவானந்த மாமே. (19)

வேறு பாடம்: 1. பரையுறு (அ) I; பரையுட் (இ ஒ ஓ) I. 2. தெளிய வருளே (அ ஆ இ ஒ ஓ) II.

கருத்து: ஆன்மா எய்தும் ஞானமும், அதற்கு இன்னும் விலகாமல் இருக்கும் அறியாமையும், பராசத்தியும், அவளால் கருணை செய்வதற் குரியதாகிய ஆன்மாவும் இருப்பது பர நிலை. (அதற்கு மேலே உள்ளது சிவநிலை.) அது சிவத்தினுடைய அருளால் வாய்ப்பது. சத்தியால் கருணை செய்யப்படல், அவளது திருவருள், அதனால் எய்திய ஞானம் - இவற்றைக் கடந்து, சிவ நிலையை எய்தி, தெளி வெய்துபவருக்குச் சிவானந்தம் உண்டாகும்.

அருட் சத்தியை விட்டு, உடலை விட்டு

2300. ஆனந்தம் ஆகும் அரன் அருட் சத்தியில்
தான் அந்தம் ஆம் உயிர், தானே சமாதி ஏய்
ஊன் அந்தமாய், உணர்வாய், உள்ளுணர்வு உறின்
கோன் அந்தமாய், குருவாய், சிவம் ஆமே.

ஆனந்த மாகு மரனருட் சத்தியிற்
றானந்த மாமுயிர் தானே சமாதியே[1]
[2]யூனந்த [3]மாயுணர் [4]வாயுள் ளுணர்வுறிற்
கோனந்த [5]மாய்க்குரு [6]வாய்ச்சிவ மாமே. (20)

வேறு பாடம்: 1. சமாதி செய் (ஆ இ ஈ) II. 2. தூனந்த (ஓ) II. 3. மாயவுணர்வாயுள் (அ) II. 4. வாயவுள் (ஓ) IV. 5. மாய்க்கும் (அ ஈ ஓ) II. வாய்க்கு (ஓ) IV; 6. மகவாச்சியு (அ ஓ) II; மகவாய்வு (ஈ) I; மகாவாக்கிய (ஓ) II; மகவாகிய (த). (ஈ) சுவடியின் பாடம் திரிபுபட்டுள்ளது. பிற பாடங்கள் யாப்புப் பிழைபட ஏதுவாகின்றன ஆதலின், ஆ, இ - இரு சுவடிகளிலும் ஒத்ததாக உள்ள பாடம் இப்பதிப்பிற் கொள்ளப்பட்டது.

கருத்து: பர துரியாதீதம் வரை, அருளானந்தம் தருவதாகிய அருட் சத்தியில் தோய்ந்த நிலையை விட்டு, மேல்நிலை அனுபவம் பெற முயலும் ஆன்மா, உடலைக் கடந்த நிராதாரத்தில், உடற் கரணங்களின் துணை இன்றிச், சமாதி கைகூட, நிராதார வுணர்வுடன் நின்று, அதற்கும் உள்ளே அடிப்படையாய் நிற்கும் உணர்வைத் தொட்டால், சிவம் முடிவான அகண்ட வெளியாய் நின்று, ஞானம் நல்க, அவ்வான்மா சிவமேயாய்விடும்.

அந்தம் - முடிவு. ஆகுபெயராய் அகண்ட வெளியைக் குறித்தது. அந்த நிலையிலும் சிவம் ஞானம் நல்குதலின், 'குரு' என்றார். "குருவாய்" என்ற எச்சத்தை 'குருவாக' என்ற எச்சமாக மாற்றுக. குருவாக நின்று உபதேசித்தலால் என்பது பொருள். உயிர் சிவமாமே என வினைமுடிவு செய்க.

2301. அறிவிக்க வேண்டா மறிவற் றயர்வோர்க்கு
மறிவிக்க வேண்டா மறிவிற் செறிவோர்க்கு
மறிவுற் றறியாமை யெய்திநிற் போர்க்கே
யறிவிக்கத் தம்மறி வாரறி வோரே. (உ)

ஆன்மவியல்பு நீங்கும்

2302. சத்தும், அசத்தும், சதசத்தும் தான் கூடி,
சித்தும், அசித்தும், சிதசித்துமாய் நிற்கும்;
சுத்தம், அசுத்தம் தொடங்காத் துரியத்து
சுத்தராம் மூன்றுடன் சொல்லற்றவர்களே.

சத்து மசத்துஞ் சதசத்துந் தான்கூடிச்[1]
சித்து மசித்துஞ் [2]சிதசித்து மாய்நிற்குஞ்
சுத்த மசுத்தந் [3]தொடங்காத் துரியத்துச்
சுத்தரா மூன்றுடன் சொல்லற்ற வர்களே[4]. (21)

வேறு பாடம்: 1. தாங்கூடிச் (த) 2. சிவசித்து (அ ஆ ஒ ஓ) I; சிவசித்ததாய் (விசு) (தி) (வ) 3. தொடக்காத் (த) 4. வர்க்கே (அ) II; வர்கட்கே (த).

கருத்து: ஆன்மா சத்தை அறிதலின் சத்தாதலும், அசத்துடன் கூடி, அதைப் போல அசத்தாதலும் - ஆக இவ்விரண்டு தன்மையும் உடையது ஆதலின் 'சதசத்து' எனப்படும். அந்த இரு நிலைகளுள் ஒன்றில் அறிவுப் பொருளாக இருத்தலின் சித்தாகவும், ஒன்றில் அறிவில்லாப் பொருளாக இருத்தலின் அசித்துப் பொருளாகவும் ஆக, இவ்விரண்டு தன்மையும் உடையது ஆதலின், 'சிதசித்து' என்றும் வழங்கப்படும். அசுத்த மாயை, சுத்த மாயை - இரண்டையும் கடந்து, (பரதுரியமும் கடந்து) சிவ துரியத்தில் நிற்கும் சுத்தான்மாக்கள் சத்து, அசத்து, சதசத்து - என்ற மூன்றுடனோ, சித்து, அசித்து, சிதசித்து - என்ற மூன்றுடனோ இணைத்துச் சொல்லப்பெறார். 'சத்து' என்னும் ஒன்றாகவும் 'சித்து' என்னும் ஒன்றாகவும் மட்டுமே இருப்பர்.

ஆன்மவியல்பை நீத்துச் சிவமாகி நிற்பர் என்பது கருத்து.

சார்ந்ததன் வண்ணம்

2303. தானே அறியான், அறிவிலோன் தான் அல்லன்
தானே அறிவான் அறிவு சதசத்து என்று,
ஆனால், இரண்டும் அரனருளாய் நிற்கத்
தானே அறிந்து, சிவத்துடன் தங்குமே.

தானே [1]யறியா னறிவிலோன் றானல்லன்[2]
றானே யறிவா னறிவு சதசத்தென்
றானா லிரண்டு மரனரு ளாய்நிற்கத்[3]
தானே யறிந்து [4]சிவத்துடன் றங்குமே. (22)

வேறு பாடம்: 1. யறிவா (அ) I. 2. றான்வல்லன் (ஓ) II. 3. ளாய்நிற்குந் (அ) I. 4. சிவதத்துவந் தங்குமே (அ) II.

கருத்து: சிவன் அறிவிக்க, அறிதல் அன்றி, ஆன்மா தானே அறியமாட்டான். அறியாதார்க்கு அறிவிக்கவியலாது ஆதலின், அவன் அறிவற்றவனும் அல்லன். அவன் ஒரு நிலையில், தனது அறிவு 'சதசத்து' என்று அறிவான். முன்னர், பொருள்களை அறிந்த அறிவும், இப்பொழுது தன்னை அறிந்த அறிவும் சிவனது அருளால் அறிந்தவை - சிவன் அறிவிக்க அறிந்தவை - என்று உணர்ந்து, அது

போலவே அகண்டாகார சிவத்தையும் அச்சிவமே அறிவிக்க அறிந்து, அச்சிவமாகி நிற்பான்.

முடிநிலை மெய்யுணர்வு

2304. தத்துவ ஞானந் தலைப்பட் டவர்கட்கே
தத்துவ ஞானந் தலைப்பட லாய்நிற்குந்
தத்துவ ஞானத்துத் தானவ னாகவே
தத்துவ [1]ஞானாந்தத் [2]தானத்துட் டங்குமே. (23)

வேறு பாடம்: 1. ஞானந் (அ) I; ஞானானந் தந்தான தொடங்குமே (ஓ) I; ஞானந்தத் (இ) I; ஞானானந் தந்தான் றொடங்குமே (சங்) (த) 2. தானந்தத்துட் (ஈ) I.

கருத்து: மெய்யறிவு பெற்றவர்களுக்கே மேலும் அதனைப் பெறக்கூடும். ஆன்மா சிவதுரியத்தில் மேலான மெய்வுணர்வு பெற்றுச் சிவமாக நிற்கப் பெறுவதால், மெய்யுணர்வின் முடிநிலையில் உள்ளது.

முத்தியின் பின் ஞானவாழ்வு

2305. தன்னை அறிந்து, சிவனுடன் தானாக
மன்னும்; மலம் குணம் மாளும்; பிறப்பு அறும்;
பின்னது சத்-முத்தி; சன்மார்க்கப் பேரொளி,
நன்னது ஞானத்தின் முத்திரை நண்ணுமே.

தன்னை யறிந்து சிவனுடன் றானாக
மன்னு [1]மலங்குண மாளும் பிறப்பறும்
பின்னது [2]சன்முத்தி சன்மார்க்கப் பேரொளி
[3]நன்னது ஞானத்து முத்திரை நண்ணுமே. (24)

வேறு பாடம்: 1. பதங்குண (சங்) மலக்குண (த) 2. நன்முத்தி (த) நன்னர்த்து (த)

கருத்து: ஆன்மா தன்னை அறிந்து, சிவதுரியாதீதத்தில், சிவமாந்தன்மை அடைய, ஆன்மாவோடு அதுவரை இருந்த ஆணவமலத்தின் மறைத்தற் பண்பு மறையும். அதனால் ஆன்மா பிறவி அறும். சன்மார்க்க முத்தி வாய்க்கும். சன்மார்க்கத்தின் பெருவிளக்கமாகிய நல்ல ஞானத்தின் மெய்ப்பாடுகள் தோன்றும்.

விதேகமுத்தி எப்போது?

2306. ஞானம் தன் மேனி; கிரியை நடு அங்கம்;
தான் உறும் இச்சை உயிராகத் தற்பரன்
மேனி கொண்டு, ஐங்கருமத்து வித்து ஆதலால்,
மோனிகள் ஞானத்து முத்தி பெற்றார்களே.

ஞானந்தன் மேனி கிரியை நடுவங்கந்[1]
தானுறு மிச்சை யுயிராகத் தற்பரன்
மேனிகொண் [2]டைங்கரு மத்துவித் தாதலான்
மோனிகண் ஞானத்து [3]முத்திபெற் றார்களே. (25)

வேறு பாடம்: 1. நடுவாக (ஓ) I; நடுவகந் (ஈ) I. 2. டங்கரு (ஈ ஒ ஓ) I. 3. முத்ரை (விசு) முத்திரை (தி).

கருத்து: சிவம், சுத்தமாயையில் உள்ள சத்தி தத்துவத்தின் பிரிவுகளான ஞான சத்தியைத் தனக்கு உடம்பாகவும், கிரியா சத்தியைக் கைகளாகவும், இச்சா சத்தியை மூச்சாகவும் கொண்டு, படைத்தல் முதலிய ஐந்தொழில்களையும் செய்விக்கும் மூலம் ஆதலின், மோன நெறியினராகிய சிவதுரியாதீத நிலையினர், அவளது அருளால் - தொழிலால் ஞான முத்தி பெற்றார்கள்.

இவ்யோகிகள் சிவமாந் தன்மையை ஓர் அவத்தையாக அடைந்தனரே யன்றி, உடம்பை விட்டு முத்தி பெறவில்லை யாதலின், அவர்கள் முத்தி பெறுவது எவ்வாறு என இப்பாடலிற் கூறினார். சிவதுரியாதீதத்தில் அவர்களுக்குச் சிவன் தனது மறைத்தல் தொழிலை முடித்துக் கொள்கின்றான். எஞ்சியுள்ள அருளல் தொழிலால், அவர்களுக்கு விதேக முத்தியை அருள்வான் என்பதை இதிற் குறித்தார்.

அவன் செயல்

2307. உயிர்க்கு அறிவு உண்மை; உயிர் இச்சை மானம்;
உயிர்க்குக் கிரியை உயிர்; மாயை சூக்கம்;
உயிர்க்கு இவை ஊட்டுவோன் ஊட்டுமவனே;
உயிர்ச்செயல் அன்றி, அவ் உள்ளத்து உளானே.

உயிர்க்கறி வுண்மை யுயிரிச்சை மான[1]
முயிர்க்குக் கிரியை [2]யுயிர்மாயை சூக்க
முயிர்க்கிவை யூட்டுவோ னூட்டு மவனே
யுயிர்ச்செய லன்றியவ் வுள்ளத்து ளானே. (26)

வேறு பாடம்: 1. ஞான (ஆ இ) IV; மோன (ஒ) IV. 2. யுயர்மாயை (த)

கருத்து: மேற்பாடலுக்கு முன் பாடலில் கூறிய, ஞானவாழ்வை இப்பாடலில் விளக்குகின்றார். சிவ துரியாதீத அவத்தையை எய்திய பின், ஞான வாழ்வு வாழ்பவனுக்கு அறிவாக இருப்பது சத்தியம் (மெய்ப்பொருள்). இச்சையாக இருப்பது, தன்னைக் கொண்டு ஒழுகுதலாகிய பெருமை. அதற்குச் செயலாக இருப்பது, மூச்சின் இயக்கம். இந்நிலையில், அந்த அறிவு, இச்சை , செயல்களை அடையும் உடம்பின் மூலப்பொருளாகிய மாயை (மாயா மலம்) நுண்மையாகவே பற்றிநிற்கும். இவ்வாறு இச்சா, ஞான, கிரியைகளை அவனுக்குச் சேர்ப்பிப்பவன், பிற உயிர்களுக்கு வினைப் பயன்களைச் சேர்ப்பிப்பவனே (சிவனே). சிவன், அவ்வன்பனுடைய அறிவு, இச்சை, செயல்களாக அவன் உள்ளத்தில் இருக்கின்றான். ஆதலின் அவன் செயல்கள் சிவன் செயல்களே.

"உயிர்ச் செயலன்றி" எனக் கூறவே, எல்லாம் சிவன் செயல் ஆதல் தெளிவு. செயல் எனப்படுபவை அறிதல், இச்சித்தல், செய்தல் என்பவை. இவ்வன்பன் இவற்றைத் தான் செய்வதாக உணர்வதில்லை.

செயலின் பாதிப்பு
சிவனுக்கு இல்லை

2308. தொழில், இச்சை, ஞானங்கள் தொல் சிவ சீவன்
கழிவற்ற மாமாயை, மாயையின் ஆகும்;
பழியற்ற காரண காரியப் பாழ் விட்டு
அழிவற்ற சாந்தாதீதன் சிவன் ஆமே.

தொழிலிச்சை ஞானங்க [1]டொல்சிவ சீவன்[2]
கழிவற்ற மாமாயை மாயையி னாகும்
பழியற்ற [3]காரண [4]காரியப் பாழ்விட்
[5]டழிவற்ற சாந்தாதீ தன்சிவ னாமே[6]. (27)

வேறு பாடம்: 1. தொல்சிவஞ் (இ) I; தொல்சிவன் (த) 2. சீவர் (ச ங்) 3. காரணம் (த) 4. காரியம் (தி) (வ) 5. டிழிவற்ற (ஒ) I. 6. மாமே (ஒ) III.

கருத்து: மேல், துரியாதீதாவத்தித உயிரின் செயல்கள் சிவனின் செயல்களே என்றவர், இங்கு, அவ்வாறாயினும், சிவன் தனக் கெனச் செயல் அற்றவன் எனக் கூறுகின்றார். இது சீவனுக்கும் சிவனுக்கும் உள்ள வேறுபாட்டைச் சொல்லியவாறு. சிவமாம் தன்மை எய்திய சீவனுக்கு, ஞானம், இச்சை, தொழில் ஆகியவை,

சுத்த மாயை, அசுத்த மாயைகளால் உண்டாகின்றவை. (இவை சூக்குமமாக நின்று தம் செயலைச் செய்யும் என்றே மேற்பாடலில் கூறினார்) ஆனால், சிவனோ, காரண காரியங்களாகிய மாயை, அதைக் கடந்த பரம் - இவற்றைக் கடந்து, உபசாந்தத்தையும் கடந்து உள்ளவன். (பரம் காரணம் - மாயை காரியம்)

உயிர் செய்யும் செயலின் பாதிப்புச் சிவனுக்கு இல்லை என்றார். காரணப் பாழ், காரியப் பாழ், உபசாந்தப் பாழ் எனத் தனித் தனி இயைக்க. இவற்றின் விளக்கம், பின்பு "முப்பாழ்" என்னும் இயலிற் கூறுவார். சாந்தம், உபசாந்தம். இவற்றுள், முதல் இரண்டும் முறையே போதப்பாழ், மாயப்பாழ் என்றும் வழங்கும்.

உயிர்க்குயிர்

2309. இல்லதும் உள்ளதும் யாவையும் தானாகி
இல்லதும் உள்ளதும் ஆய், அன்றாம் அண்ணலை
சொல்-அது சொல்லிடின், தூராதி தூரம் என்று
ஒல்லை உணர்ந்தான் உயிர்க்கு உயிர் ஆகுமே.

இல்லது முள்ளது மியாவையுந் தானாகி
யில்லது முள்ளது மாயன்றா மண்ணலைச்
சொல்லது சொல்லிடிற் றூராதி தூரமென்
றொல்லை யுணர்ந்தா 'னுயிர்க்குயி ராகுமே. (28)

வேறு பாடம்: 1. லுயிர்க்குயி (ஓ) IV.

கருத்து: நிலையற்றனவும், நிலைப்பனவும் ஆகிய அனைத்திலும் கலந்து, அவையாகவே நின்று, பொருட்டன்மையால் வேறாகி நிற்கும் சிவனைச் சொல்லால் சொல்ல இயலாது என விரைவில் உணர்பவனின் உயிருக்கு உயிராக அவன் விளங்குவான். (விளங்கிப் பேருணர்வு ஊட்டுவான்.)

"அறிவிப்பான் தானே" என்பார் காரைக்கால் அம்மையார் (அற்பு. தி. அந். 20)

பற்று அறும் நெறி

2310. உயிர் இச்சையூட்டி, உழிதரும் சத்தி;
உயிர்-இச்சை வாட்டி, ஒழித்திடும் ஞானம்;
உயிர் இச்சையூட்டி, உடன் உறலாலே
உயிர் இச்சை வாட்டி, உயர்பதம் சேருமே.

உயிரிச்சை யூட்டி [1]யுழிதருஞ் சத்தி
யுயிரிச்சை [2]வாட்டி யொழித்திடு ஞான
முயிரிச்சை [3]யூட்டி [4]யுடனுற லாலே
யுயிரிச்சை வாட்டி யுயர்பதஞ் சேருமே. (29)

வேறு பாடம்: 1. யுமிழ்தருஞ் (ஓ) I. 2. வீட்டி (த) 3. சுட்டி (த) 4. யுடலுற (அ ஆ ஈ) I.

கருத்து: திரோதான சத்தி உயிர்கட்கு உலகியலில் இச்சை உண்டாக்கி, அலையச் செய்வாள். ஞான சத்தியோ, அவ்விச்சையை நலியச்செய்து, பின் நீக்குவாள். சிவதுரியாதீதம் எய்திய ஆன்மாவிற்கு, இறைவன் அதனோடு உறைந்து, ஞானத்தில் மேன் மேலும் விருப்பத்தை உண்டாக்குவான். அதனால், அவ்வான்மா உலக விச்சையை முற்றும் நீக்கி, வீடுபேறு எய்தும்.

இச்சை நீங்கப் பற்று நீங்கும். பற்று நீங்க வீடு எய்தும்.

பிறவியும் வீடும் சிவனருள்

2311. சேரும் சிவம் ஆனார் ஐம்மலம் தீர்ந்தவர்;
ஓர் ஒன்று இலார் ஐம்மல விருள் உற்றவர்;
பாரின்கண், விண், நரகம் புகும் பான்மையர்;
ஆரும் கண்டு ஓரார் அவை அருள் என்றே.

சேருஞ் சிவமானா ரைம்மலந் தீர்ந்தவ
ரோரொன்றி லாரைம் மலவிரு ளுற்றவர்
பாரின்கண் விண்ணர கம்புகும் பான்மைய
ராருங்கண் டோரா ரவையரு ளென்றே. (30)

கருத்து: சிவதுரியாதீதம் எய்தியவர், உயிர் இச்சையை நீக்கிப், பற்றறுத்து, ஐந்து மலங்களினின்றும் விலகி, அந்த அவத்தையில் தாம் கலந்த சிவத்தைச் சேர்ந்து, சிவமே ஆயினர். அவ்வவத்தையை எய்தியோ, எய்தாமலோ, அந்நெறியைச் சிந்தியாதவர், ஆணவ மலமாகிய இருளிலேயே - அஃது உண்டாக்கும் அறியாமையிலேயே கிடப்பர். அதன் பயனாக மண்ணுலகிலோ, விண்ணுலகிலோ, நரகத்திலோ பிறப்பர். இங்ஙனம் பிறப்போர் யாரும், வீடுபேறு அடைந்தோரின் உயர் நிலையும், தமது பிறப்புநிலைகளும் சிவனது அருளால் ஏற்பட்டவை என்பதைச் சிந்திக்க மாட்டார்.

ஓர் - ஓர்தல்; எண்ணுதல். ஒன்றும் - உம்மை தொக்கது.

இனி வருவதைச் சிந்திக்கவில்லையேனும், இப்பொழுது வந்ததைச் சிந்திக்கலாகாதா என வருந்துகின்றார்.

அருள் இன்றி இல்லை

2312. எய்தினர் செய்யும் இரு மாயா சத்தியின்;
எய்தினர் செய்யும் இரு ஞான சத்தியின்;
எய்தினர் செய்யும் எழில்ஞான சத்தியின்;
எய்தினர் செய்யும் இறையருள் தானே.

எய்தினர் [1]செய்யு [2]மிருமாயா சத்தியி
னெய்தினர் செய்யு [3]மிருஞான சத்தியி
னெய்தினர் செய்யு [4]மெழின்ஞான சத்தியி
னெய்தினர் செய்யு மிறையரு டானே. (31)

வேறு பாடம்: 1. செய்ய (சங்) 2. மிகுமாயா (சங்) 3. மிரும்பர (ஒ) IV. 4. மிருஞான (ஒ) I; மிருஞால (விசு) (தி) (வ).

கருத்து: செயற்படுகின்ற மாயாசத்தியினால் விளையும் பயன்களை மாந்தர் அடைந்தனர். ஞானசத்தியின் பணியால் விளைந்த அறிவைப் பெற்றனர். பதிஞானத்தின் பயனாகிய பேரின்பத்தையும் அடைந்தனர். அவர்கள் இம்மூன்றும் பெற்றது, சிவனது அருளால் ஆகும்.

மாயை என்ற சத்தியே உலகத்திற்கு மூலப் பொருள். அம் மாயையை இறைவன் இயக்குகிறான். காரணம், அவன் உயிர்கள் மேல் வைத்த அருள். உயிரின் ஆற்றலான அறிவை, வித்தை என்னும் அசுத்தமாயா தத்துவத்தின் மூலம் இயக்குபவள் சிற்சத்தியின் ஒரு கூறாகிய ஞானசத்தி. சத்தி இறைவனது அருளே. ஆன்மா மலபரிபாகம், சத்திநிபாதம் பெற்ற நிலையில், இறைவன் குருவாய் வந்து, பதிஞானம் அளித்துப், பேரின்பம் பெறும் நெறியிற் செலுத்துவான். இஃதும் அவன் அருளே. உலகியலும் இறையியலும் அருளின்றி இல்லை என்றார்.

திருந்தினர்

2313. [1]திருந்தினர் விட்டார் [2]திரைநர கெல்லாந்
திருந்தினர் விட்டார் திருவார் சுவர்க்கந்
திருந்தினர் விட்டார் [3]செறுமலக் கூட்டந்
திருந்தினர் விட்டார் சிவமா யவமே[4]. (32)

வேறு பாடம்: 1. திருந்தினர் (அ இ) I. 2. திறைநர (அ ஒ) I; திறைய நரகெல்லாந் (ஆ இ) I; திருவிரைகந் (சங்) 3. செறிமலக் (விசு) (தி) (வ) 4. யவமாமே (ஒ) I.

கருத்து: சிவன் அருளினால் நல்கிய மெய்யுணர்வால் திருந்தியவர்கள் அடுக்கடுக்கான நரக லோகங்களை அடையாது நீத்தார். சுவர்க்கங்களையும் நீத்தார். ஐந்து மலங்களையும் வென்றார். தாம் "சிவம்" - ஆகிப் பிறப்பை ஒழித்தார்.

திரை நரகு - அலைகள் போன்ற பல நரகங்கள். உவமத்தொகை. திரு - போகம். சுவர்க்க, நரகங்களை நீத்தது, இருவினையொப்பினால்.

இங்கும் துணை, அங்கும் துணை

2314. அவமுஞ் சிவமு மறியா ரறியா
ரவமுஞ் சிவமு [1]மறிவா ரறிவா
ரவமுஞ் சிவமு [2]மருளா லறிந்தா
லவமுஞ் சிவமு மவனரு ளாமே. (33)

வேறு பாடம்: 1. மறியா (சங்) மறிவா (அ) IV. 2.

கருத்து: பதிஞானம் உணர்த்தப் பெறாதோர், வீணானதாகிய பிறப்பின் சாதனம் (காரணம்) யாது? சிவப்பேற்றுக்குச் சாதனம் யாது? என அறியமாட்டார் அவற்றை அறிந்தோரே அறிஞர். சிவனது அருள்துணையால் அவற்றை உணர்ந்து கொண்டால், பிறப்பிலும் முத்தியிலும் அவ்வருள் எவ்வாறு துணை செய்கிறது? என்பதை அறியலாம்.

செம்பொருட் காட்சி

2315. அருளான சத்தி அனல் - வெம்மை போலப்
பொருள் அவனாக, தான் போதம் புணர்க்கும்;
இருள், ஒளியாய் மீண்டும் மும்மலம் ஆகும்;
திருவருளால் நந்தி செம்பொருளாமே

அருளான சத்தி [1]யனல்வெம்மை போலப்
[2]பொருளவ னாகத்தான் போதம் புணர்க்கு[3]
மிருளொளி [4]யாய்மீண்டு மும்மல மாகுந்
திருவரு [5]ளானந்தி செம்பொரு ளாமே. (34)

வேறு பாடம்: 1. யருள்வெம்மை (ஓ) II. 2. பொருள் வாகனத்தாள் யோகம் (ஓ) I. 3. புணரும் (விசு) (தி) (வ) 4. யாயீண்டு (த) 5. ளாநந்தி (த).

கருத்து: திருவருட் சத்தி, தீயும் சூடும் போல, சிவத்தோடு பிரியாமல் இருந்து, ஆன்மாவிற்கு மெய்யுணர்வு போதிப்பாள். மீண்டும் அறியாமையை (மாயையின் மூலம்) உண்டாக்கி, மும்மலங்களின் செயல்களை நடத்துவாள். அத்திருவருளைப் பெற்றால், சிவபெருமான் பரமாகாயத்தில், முழுதும் நிரம்பிய செம்பொருளாய் - குறைவிலா நிறைவாய்த் திகழும் காட்சியைக் காணலாம்.

செம்பொருள் - அடைமொழிகளால் சிறப்பித்துச் சுட்டவியலாப் பொருள், தனிப்பொருள் (Absolute Truth)

பெற்றுத்தருவது அருள்

2316. ஆதித்தன் தோன்ற, அரும் - பதுமாதிகள்
பேதித்த தம் வினையால் செயல் சேதிப்ப,
ஆதித்தன் தன் கதிரால் அவை சேட்டிப்ப,
பேதித்த வேதியாவாறு அருட் பேதமே.

ஆதித்தன் றோன்ற வரும்பது மாதிகள்
[1]பேதித்த [2]தம்வினை யாற்செயல் சேதிப்ப[3]
வாதித்தன் றன்கதி ராலவை சேட்டிப்பப்
[4]பேதித்த [5]வேதியா [6]வாறருட் பேதமே. (35)

வேறு பாடம்: 1. பேதித்தம் (ஈ ஓ ஓ) I. 2. தத்தம் வினை (ஆ இ) I; தவ்வினை (விசு) (தி) (வ) 3. சோதிப்ப (ஓ) I; பேதிப்ப (இ) IV. 4. பேதித்துப் (ஆ இ) II. 5. பேதியா (ஆ இ) II; வாதியா (ஓ) I. 6. வேறருட் (ஈ ஓ ஓ) I; பேறருட் (அ) I.

கருத்து: சூரியன் எழும்பொழுது, நீர்நிலையில் தாமரை, குவளை முதலிய மலர்கள், வேறுபாடான தமது தன்மையால், தம்முள் சில விரிந்தும், சில குவிந்தும் இருக்கும். சூரியனின் கதிர் அவற்றை விரிதலிலும், குவிதலிலும் தொழிற்படுத்தும். அவ்வளவே. அது போல, ஆன்மாக்கள் தத்தம் மனப் பக்குவத்திற்கு ஏற்பச் செயல் செய்து, உலகியல் - நன்மை, அல்லது தீமை, அல்லது வீடுபேறு அடையும். அவ்வாறு அடையச் செய்வது இறைவனது திருவருள். பேறு உயிர்களின் பக்குவத்தைப் பொறுத்தது. அதை அடையச் செய்வது திருவருள். அதன் துணை இல்லையேல் பக்குவம் இருந்தும் பேறு கிடைக்காது என்க.

ஆன்மாவிற்குப் பக்குவம், வினைப்பயனாய் வரும். அருட்பேதம் - அருள் துணை கிடைத்தலும், கிடைக்காமற் போதலும். பேதித்த வேதியாவாறு - வெவ்வேறு பக்குவம் உடைய உயிர்கள் பேற்றினை அடையாமை.

உலகமும் அறிவும் அவனருளால்

2317. பேதம், அபேதம், பிறழ் பேதாபேதமும்
போதம், புணர்போதம், போதமும் நாதமும்
நாதமுடன் நாதம், நாதாதி நாதமும்
ஆதன் அருளின் அருள் இச்சையாமே.

பேத மபேதம் [1]பிறழ்பேதா பேதமும்[2]
போதம் [3]புணர்போதம் போதமு நாதமு
நாத [4]முடனாத நாதாதி நாதமு
[5]மாத னருளி னருளிச்சை யாமே. (36)

வேறு பாடம்: 1. பிறழ்பேதாதி (ஆ) I. 2. பேதமே (அ) IV. 3. புணர்போதா (அ ஆ இ ஒ) I. 4. முடனாதி (அ) I. 5. மாதகு நாத (இ) IV.

கருத்து: உடம்பு, உயிர் - இவற்றுக்கு இடையே உள்ள வேற்றுமை, ஒற்றுமை, இருமை ஆகியவையும், உயிரின் இயற்கையறிவும், அது பெறுகின்ற அறிவும், தத்துவ ஞானமும், உலகப் படைப்பில் முதன்மையாக உள்ள நாதமும், பரநாதமும், பரவெளியையும் கடந்துள்ள நாதம், நாதாதிநாதம் ஆகியவையும் இறைவனது கருணையால், அவனது திருவருளின் விருப்பத்தால் ஆவனவாகும்.

இருமை - வேற்றுமையும் ஒற்றுமையும் வேறுபடுத்த இயலாத நிலை. உதாரணம் அந்தி நேரம். இது பகலும் அன்று; இரவுமன்று; இரண்டு தன்மையும் உடையது. ஆதன் - ஆவதற்குக் காரணமானவன். பரநாதமும் அதைக் கடந்து உள்ள நாதங்களும் சிவானுபவத்தில் அறியப்படுவன.

அருளால் புரியும் அரன் செயல்

2318. மேவிய பொய்க்கரி ஆட்டும் வினை என்னப்
பாவிய பூதம் கொண்டு ஆட்டி, படைப்பு ஆதிப்
பூ-இயல் சுட்டி, தற்போலப் புரிந்து, அருள்
ஆவியை நாட்டும்; அரன் அருளாலே.

மேவிய பொய்க்கரி யாட்டும் வினையென்னப்
[1]பாவிய பூதங்கொண் [2]டாட்டிப் படைப்பாதி
பூவியல் [3]கூட்டித்தற் போலப் புரிந்தரு
ளாவியை [5]நாட்டு மரனரு ளாலே[6]. (37)

வேறு பாடம்: 1. பாவியையம் (அ) IV. 2. டாடிப் (ஆ இ) I. 3. கூடித்தற் (அ) I; கூட்டித்தாம் (ஈ ஓ) I; கூட்டத்தற் (சங்) ; கூட்டத்தாற் (சைவ) (த) 4. போதம் (ஆ இ) II. 5. யாட்டு (ஆ இ) IV. 6. ளாமே (ஆ இ ஈ ஒ ஓ) I.

கருத்து: சிவபெருமான் தனது அருளால் என்னென்ன செய்கின்றான் என்று கூறுகின்றார்: மண்ணால் ஆகிய யானையை சூத்திரதாரி ஆட்டிவைக்கும் பாவைக் கூத்தைப் போல, சிவபெருமான் அருளினால், உலகமாகவும் பொருள்களாகவும் பரவியுள்ள ஐம்பூதங்களை இயக்கி, படைத்தல் முதலிய நான்கு தொழிலால், உலகியல் உணர்வுடன் ஆன்மாவை வாழச் செய்து, பின்பு அவ்வான்மா பக்குவம் எய்தும்பொழுது, அதனைச் “சிவம்” ஆக்கி, அருள் வியாபகத்தில், ஞானானந்தப் பெருவாழ்வு அடையச் செய்கின்றான்.

அரனது செயலுக்குத் திருவருள் துணைக் காரணம் என்க. தற்போதம் நீங்கும் பொழுது நிகழும் அருட் செயலை, முன்னைஉரைகாரர் கொண்ட “பூவியல் கூட்டத்தற்போதம் புரிந்து” என்ற பாடம் உணர்த்தாமையை அறிக.

கொண்டு கூட்டு: “அரன் அருளாலே, மேவிய பொய்க்கரியாட்டும் ... புரிந்து நாட்டும்” என்று கூட்டுக. (இதில் அரன் எழுவாய், நாட்டும் பயனிலை).

சிவமானான்

2319. ஆறாறு அகன்று, தனை அறிந்தான் - அவன்
ஈறு ஆகி யாவினும், யாவும் தனில் எய்த,
வேறு ஆய், வெளிபுக்கு வீடு உற்ற தம் அருள்
தேறாத் தெளிவுற்றுத் தீண்டச் சிவம் ஆமே.

ஆறா றகன்று தனையறிந் தானவ
னீறாகி [1]யாவினு மியாவுந் தனிலெய்த
வேறாய் வெளிபுக்கு [2]வீடுற்ற தம்மரு
[3]டேறாத் [4]தெளிவுற்றுத் [5]தீண்டச் சிவமாமே. (38)

வேறு பாடம்: 1. யாயினு (அ) I. 2. வித்தகர் (இ) IV; வீடுற்றானம்ம ரு (விசு) (தி) (வ) 3. டேறாய்த் (சங்) 4. தெளிவற்றுத் (அ) I. 5. தீண்டாச் (த).

கருத்து: முப்பத்தாறு தத்துவங்களையும் அறிந்து கடந்து, தன்னை, 'அவற்றின் வேறு' என உணர்ந்த ஆன்மா, தான் யாவற்றிலும் இருப்பதையும், யாவும் தன்னில் இருப்பதையும் உணர்ந்து, பின்பு அவ்வுணர்வையும் கடந்து, அருள் வெளியில் புகுந்து, வீடு பேறு எய்தும். இறைவனது அருளைத் தெளியும். சிவம் தன்னைப் பொருந்தத், தான் சிவமேயாய் விடும்.

தேறாத் தெளிவு - தெளியாமல் தெளியும் தெளிவு. இஃது அருளறிவால் தெளிதல் ஆதலின், "தேறாத்தெளிவு" என்றார். இது காணாக் காட்சி என்பது போன்றது. கண்ணாற் காணாமல் மனத்தால் உணர்தல் காணாக் காட்சி.

அருளால் முடியும்

2320. தீண்டற்கு அரிய திருவடிநேயத்தை
மீண்டு உற்று அருளால், விதிவழியே சென்று
தூண்டிச் சிவஞான-மாவினைத் தான்ஏறித்
தாண்டிச் சிவனுடன் சாரலும் ஆமே.

[1]தீண்டற் கரிய திருவடி நேயத்தை
மீண்டுற் றருளால் விதிவழி யேசென்று
தூண்டிச் சிவஞான மாவினைத் தானேறித்[2]
[3]தாண்டிச் சிவனுடன் சாரலு மாமே. (39)

வேறு பாடம்: 1. தீண்டிக் (ஒ) I. 2. தூயனேறித் (ஆ இ) II. 3. தாண்டிற் (ஈ) II.

கருத்து: திருவருளால் அறிதலன்றிச் சிந்தையால் எண்ண இயலாத சிவபெருமானது திருவடிகளில், அவனது அருளால் அன்பு வைத்து, அருள் வழியில் வாழ்ந்து, சிவஞானம் என்னும் குதிரையில் ஏறிச் செலுத்தி, பரவெளிகளைக் கடந்தால், சிவனோடு கலக்கலாம்.

"மீண்டு, நேயத்தை உற்று" எனப் பொருத்துக. மீண்டு - உலகியலிலிருந்து மீண்டு. சிவயோகத்தைச் சிவஞானம் என்றது, காரியவாகுபெயர்.

அணைந்தோர் தன்மை

2321. சார்ந்தவர் சாரணர் சித்தர் சமாதியர்
சார்ந்தவர் மெய்ஞ்ஞான தத்துவ சாத்தியர்[1]
சார்ந்தவர் நேயந் தலைப்பட்ட வானந்தர்
சார்ந்தவர் [2]சத்த வருட்டன்மை யாரே. (40)

வேறு பாடம்: 1. சத்தியார் (அ ஈ ஓ) I; சத்தியர் (சங்) 2. சத்தாருட்டன்மை (இ) I.

கருத்து: சிவனைக் கலந்தோர் யாரெனின், அவனருள்வழி நடந்தோர் என்க. அவர் யோகானுபவம் உடையோர், சமாதி கூடியோர். மெய்ஞ்ஞானத்தால் கைவரப் பெறும் உண்மையை அடைந்தோர். திருவடிநேயம் மிகுந்து, பேரானந்தம் கொள்பவர். என்றும் உள்ள அருளிற் கலந்தோர்.

சரிப்பவர் சாரணர். சரித்தல் - இயங்குதல், ஈண்டு, வாழ்தல். இதனால் சீவன்முத்தரின் தன்மை கூறினார்.

தற்போதம் நீங்குதலே சுத்தம்

2322. தான் என்று, அவன் என்று - இரண்டு என்பர் தத்துவர்;
தான் என்று, அவன் என்று - இரண்டற்ற தன்மையைத்
தான் என்று இரண்டு உன்னார் கேவலத்து ஆனவர்;
தான் அன்றித் தான் ஆகத் தத்துவ சுத்தமே.

தானென் றவனென் றிரண்டென்பர் தத்துவர்[1]
தானென் றவனென் றிரண்டற்ற தன்மையைத்[2]
[3]தானென் றிரண்டுன்னார் கேவலத் தானவர்
[4]தானன்றித் தானாகத் தத்துவ சுத்தமே. (41)

வேறு பாடம்: 1. தத்துவந் (ஓ) IV. 2. தன்மையால் (த) 3. தானொன் (ஆ இ) III; (இப்பாடத்திற்கு இகரம் தொக்கதாகக் கொள்க). 4. தானின்றித் (ஆ இ ஓ) III.

கருத்து: உயிர் வேறு, இறைவன் வேறு எனத் தத்துவம் வல்லார் கூறுவர். (அஃது உண்மையாயினும்) கேவல நிலையை (உயர்ந்த அருள்நிலையை) அடைந்தோர், அங்ஙனம் இரண்டாக இல்லாத தன்மையை அனுபவிக்கின்றார்கள் ஆதலின், இறைவனுக்கு வேறாகத் தம்மை உணரார். அங்ஙனம் தற்போதம் கெட்டுச், சிவமேயாகி நிற்பதே சுத்த நிலையாகும்.

முதற்படி

2323. தன்னினில் தன்னை அறியும் தலைமகன்
தன்னினில் தன் ஐ அறியத் தலைப்படும்;
தன்னினில் தன்னையும் சார்கிலன் ஆகில்,
தன்னினில் தன் ஐயும் சார்தற்கு அரியவே.

தன்னினிற் றன்னை யறியுந் தலைமகன்
றன்னினிற் றன்னை [1]யறியத் தலைப்படுந்
தன்னினிற் [2]றன்னையுஞ் சார்கில னாகிற்[3]
றன்னினிற் றன்னையுஞ் சார்தற் கரியவே. (42)

வேறு பாடம்: 1. யறியின் (த) 2. றன்னைச் (விசு) (தி) (வ); றன்னைய றிகில னாயிடில் (த) 3. நாதன் (அ) IV.

கருத்து: மனித வாழ்வு என்பதில், ஆன்மாவாகிய தான், தத்துவங்களிலிருந்து வேறானவன் என்பதை அறியும் ஒருவன், தான் இன்னான் என உணர்ந்து உடம்புடன் வாழும்பொழுதே, தன் ஆன்மாவில் தனது தலைவனை அறியத் தொடங்குவான். ஆனால், தன்னை அறியானாயின், தன் ஆன்மாவில் இறைவனை அறிதலும் இயலாது.

ஆன்மாவை அறிதல் முதற்படி என்றார். மூன்றாம் அடி: தன்னையும் - உம்மை இழிவு சிறப்பும்மை. நான்காம் அடியில் 'சார்தலும் அரியவே' என உம்மையைப் பிரித்துக் கூட்டி, அஃது இறந்தது தழீஇய எச்சவும்மை என்க. இப்பாடல் திருநாவுக்கரசரால் சிறிது மாற்றத்துடன் பாடப்பட்டுள்ளது (திருநா. தேவா. பொது. சித்தத்தொகைத் திருக்குறுந்தொகை : 29)

புலம்பாதே, மேலே செல்

2324. 'அறியகிலேன்' என்று அரற்றாதே நீயும்,
நெறி வழியே சென்று நேர்பட்ட பின்னை,
இருசுடர் ஆகி இயற்றவல்லானும்
ஒரு சுடரா வந்து என் உள்ளத்து உளானே.

[1]அறியகி லேனென் றரற்றாதே நீயு
நெறிவழி [2]யேசென்று நேர்பட்ட பின்னை
யிருசுட [3]ராகி யியற்றவல் லானு
மொருசுட [4]ராவந்தென் னுள்ளத்து ளானே[5]. (43)

வேறு பாடம்: 1. அறிகின்றி (இ) IV; அறிகிலேனென்றென் (ஆ) IV. 2. சென்று (இ ஓ) I. 3. ராகிய (த) 4. ராவதென் (ஆ இ) IV; ராய்வந் தென் (அ ஒ ஓ) III. 5. ளாமே (ஆ இ ஓ) III.

கருத்து: 'இறைவனை, மேலாலவத்தையில் நின்று அறிய வியலவில்லை, எனப் புலம்பாதே. யோகத்திற் கூறப்பட்ட முறைப்படி, அவத்தைகளைக் கடந்து மேல் வெளியை அடைந் தால், அதுவரை சூரியன், சந்திரன் என்னும் இரண்டு கலைகளின் ஒளிச் சுடராக நின்று, யோகத்தை நடத்தி வைத்த இறைவன், அப்பொழுது, ஒப்பற்ற தனிச்சுடராக, பராகாயச் சோதியாக உயிருணர்வில் தோன்றுவான்.

இஃது ஆசிரியர் தம் நெஞ்சிற்குக் கூறியது. திகைத்த நெஞ்சைத் தேற்றினார் என்க.

மேல்வெளி - துவாதசாந்தவெளி; பரமாகாயம்.

ஒருமைப்பாட்டுச் செல்வம்

2325. ஓம்புகின்றான் உலகு ஏழையும் உள்நின்று,
கூம்புகின்றார் குணத்தின்னொடும் கூடுவர்;
தேம்புகின்றார் சிவம் சிந்தை செய்யாதவர்
கூம்பலில் ஆர்ந்தது கொள்ளலும் ஆமே?

ஓம்புகின் [1]றானுல கேழையு முண்ணின்று[2]
கூம்புகின் றார்குணத் தின்னொடுங் கூடுவர்[4]
தேம்புகின் றார்சிவஞ் சிந்தைசெய் யாதவர்
[5]கூம்பலி லார்ந்தது கொள்ளலு மாமே. (44)

வேறு பாடம்: 1. றேனுல (சங்) 2. முன்னின்று (ஆ ஒ ஓ) I. 3. கம்புகின்றான் (ஆ இ) I. 4. கூறுவர் (சங்) 5. கூம்புகி (அ ஓ) I; கூம்புகிலாந்தது (ஆ) I; கூம்பகில்லார் வந்து (விசு) (தி) (வ); கூம்புகின்றார் வந்து (த).

கருத்து: சிவபெருமான் ஏழுலகின் உயிர்களையும், அவற்றுடன் கலந்து 'ஒன்றாய்' நின்று காக்கின்றான். ஆதலால் அவனை மனங் குவிந்து வழிபடுவோர், பரவெளிக்கும் அப்பால் உணர்வைச் செலுத்தி, அவனது எண்குணத்தைத் தாமும் பெற்றுச் 'சிவம்' ஆவர். அவ்வாறு வழிபடாதோர் வருந்துவர். அவர்கள், மன வொருமைப் பாட்டினால் வரும் நிறைந்த அனுபவங்களைப் பெற இயலுமோ? இயலாது.

அறிவு அன்னமாகும்

2326. குறி அறிவார்கள் குறி காணமாட்டார்,
குறி அறிவார்கள் தாம் கூடல் பெரிது;
குறி அறியா வகை கூடுமின்; கூடி
அறிவு அறியா இருந்து அன்னமும் ஆமே. (45)

கருத்து: மேலாலவத்தை நிராதார அனுபவம் ஆதலின், அதனை எய்தும் உபாயத்தை அறிவோர் உருவம் எதையும் காணார். அவர்கள் இறைவனைப் பரமாகாயமாக உணர்ந்து, கூடி அனுபவிக்கும் இன்பம் மிகப் பெரிய இன்பம். உலகில் காணும் எத்தெய்வவுருவமும் இன்றி, அருவமும் இன்றி, அவ்விரண்டையும் கடந்த சொரூப நிலையில் உள்ள இறைவனைக் கூடி நிற்பீராக. அவ்வாறு கூடினால் உங்கள் அறிவும் அவனை உணராமல் உணர்ந்து, அந்நிலையில் அம்ச மந்திர வடிவமாய் (அசபை) நிற்கும்.

"ஹம்சம்" என்பது ஒரு மந்திரம். இஃது ஒலி உடையதன்று. இதனை 'அசபை' என்பர் யோகிகள் (இந்நூல், 'அசபை' - இயல் காண்க) ஹம்சம் என்பது அன்னம் என்று பொருள்படுவதோர் சொல்லுமாதலின் 'அன்னம்' என்பதைக் குறியீடாக ஆள்கின்றார். அம்ச மந்திரம் ஒலிக்காமல் ஒலிப்பதே போல், அறிவு உணராமல் உணரும் என்க. பரமாகாய அனுபவம் சுட்டியறியப் படுவதன்று ஆதலின், உணராமல் உணரும் என்றார்.

சொல்ல முடியுமா அதை?

2327. ஊனோ? உயிரோ? உறுகின்றது ஏது இன்பம்?
வானோர் தலைவி மயக்கத்து உற நிற்றல்
தானோ? பெரிது அறிவோம் என்னும் மானிடர்
தான் ஓர் பிறப்போடு இறப்பு அறியாரே.

ஊனோ வுயிரோ வுறுகின்ற தேதின்பம்[1]
வானோர் தலைவி மயக்கத் துறநிற்றல்[2]
[3]தானோ பெரிதறி [4]வோமென்னு மானிடர்
[5]தானோர் பிறப்போ டிறப்பறி யாரே. (46)

வேறு பாடம்: 1. தின்பம் (இ) I. 2. துறநிற்கத் (ஆ இ ஈ ஒ ஓ) II. 3. யானோ (த) 4. வேனென்னு (த) 5. தானோ (ஆ இ ஈ ஓ) I; தானே (விசு); தானேய் (தி) (வ).

கருத்து: நிராதார அவத்தையில் இன்பம் அடைவது உடம்பா? உயிரா? இதற்கு விடைகூறத் துணிவது பொருந்தாது. ஏனென்றால் அது சுட்டியறியும் இன்பம் அன்று. இவற்றுள் ஒன்று இன்பம் அடைகின்றது என உணர்ந்தால், அந்த அனுபவம், பராசத்தி உள்ள பரவெளி அனுபவமாகவோ, சுத்தாவத்தையாகவோ, சகலாவத்தை எனப்படும் மத்திய சாக்கிராவத்தையாகவோ இருக்கும். 'யாங்கள் இறையின்பத்தை மிகுதியும் அறிந்தோம்' என்று கூறும் மானிடர் இறைவன் அவர்கட்குப் பிறப்பையும் இறப்பையும் தர எண்ணுவதை அறியார்.

மிக அறிவோம் என்று கூறுவது ஆணவமல முனைப்பு ஆதலின் பிறப்பு வரும். எனவே அவர்கட்குப் பிறப்பு அளித்தல் பற்றி இறைவன் எண்ணுவான் என்றார். ஓர் - ஓர்தல்; எண்ணுதல்.

பராசத்தியின் கலப்பில் உள்ள பராவத்தையினரை விட, "பெரிதறிவோம்" என்று கூறுவோர் கீழ்நிலையில் உள்ளனர்.

121. அறிவுதயம்

பதியறிவு

2328. தன்னை அறிய, தனக்கு ஒருகேடு இல்லை,
தன்னை அறியாமல், தானே கெடுகின்றான்,
தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே அர்ச்சிக்கத் தான் இருந்தானே.

தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை யறியாமற் றானே கெடுகின்றான்
றன்னை யறியு மறிவை யறிந்தபின்
றன்னையே யர்ச்சிக்கத் தானிருந் தானே. (1)

கருத்து: ஆன்மா தன்னை - தனது நிலையை - அறிந்தால் அதற்குத் தீமை சிறிதும் இல்லை. ஆனால், மனிதன் இவ்வாறு அறியாமல் தீமையால் கெடுகின்றான். தன்னைப் பதிஞானத்தால் ஒருவன் அறிந்தால், அப்பதியை வழிபடுதலே தன் கடன் என்று இருப்பான்.

தீமை, இங்கு வினை. தன்னை அறிபவன் 'எல்லாம் சிவன் செயல்' எனத் தெளிவான். ஆதலால் அவனுக்கு வினைப்பயன் இல்லை.

சத்தியும் இல்லை

2329. அங்கே அடல்-பெருந்தேவர்எல்லாம் தொழ,
சிங்காதனத்தே சிவன் இருந்தான் என்று,
சங்கு ஆர் வளையும், சிலம்பும் 'சலன்' எனக்
பொங்கு ஆர் குழலியும் 'போற்றி' என்றாளே.

அங்கே யடற்பெருந் தேவரெல் லாந்தொழச்
சிங்கா தனத்தே சிவனிருந் தானென்று
சங்கார் வளையுஞ் சிலம்புஞ் சலனெனப்[1]
பொங்கார் குழலியும் போற்றியென் றாளே. (2)

வேறு பாடம்: 1. சலரெனப் (ஓ) I; சரேலெனப் (விசு) (தி) (வ)

கருத்து: வெற்றி மிக்க தேவர்கள் எல்லாம் பரமாகாயத்தை நெருங்க வியலாமல், தாம் இருந்த இடத்தே தொழ; அவ்வெளியில் சிவபெருமான் சொரூபத்தில் திகழ, சக்தியும் பரவெளியில் இருந்தவாறே, தன் வளையலும் சிலம்பும் ஒலிக்க அவனை வணங்குகின்றாள்.

'சலன் என' என்பது ஒலிக் குறிப்பிடைச் சொல். பரமாகாயத்தில் சத்தியும் இல்லை என்றபடி. வளையும் சிலம்பும் ஒலிக்க என்றது, அவளும் தேடி நடக்க என்பதைக் குறித்தற்கு. சிவனைப் பிரியாத சத்தி பரமாகாயத்தில் பிரிந்தனளா? எனின், அவனுள் ஒடுங்கினாள் என்க.

அருளே அறியும்

2330. அறிவு வடிவு என்று அறியாத என்னை
அறிவு வடிவு என்று அருள்செய்தான் நந்தி
அறிவு வடிவு என்று அருளால் அறிந்தும்
அறிவு வடிவு என்று அறிந்தும் இரேனே.

அறிவு வடிவென் றறியாத வென்னை
யறிவு வடிவென் றருள்செய்தா னந்தி
யறிவு வடிவென் றருளா லறிந்து[1]
மறிவு வடிவென் [2]றறிந்து மிரேனே. (3)

வேறு பாடம்: 1. லறிந்தே (விசு) (தி) (வ) 2. றறிந்திருந்தானே (ஓ) II; றறிந்திருந்தேனே (ஈ) II.

கருத்து: சிவன் ஞான சொரூபம் என அறியாதிருந்த எனக்கு, அவன் அதனை அருளால் அறிவித்தான். அந்நிலையில் எனது தற்போதம் நீங்க, அதனை அறிந்தது அருளே ஆதலின், நான் அதை அறியேன் என்பதும் உண்மையே.

அறிபவன், அறிவிப்பவன், அறிவு (திரிபுடி) இம் மூன்றும் ஒன்றாகி விட்ட நிலை இது. இதில், அறிபவன் எனத் தனியே பிரிக்க வியலாதாதலின் "அறிந்துமிரேனே" என்றார்.

மூன்று இல்லை

2331. அறிவுக்கு அழிவு இல்லை, ஆக்கமும் இல்லை
அறிவுக்கு அறிவல்லது ஆதாரம் இல்லை
அறிவே அறிவை அறிகின்றது என்றிட்டு
அறைகின்றன மறையீறுகள் தாமே.

அறிவுக் கழிவில்லை யாக்கமு மில்லை
யறிவுக் கறிவல்ல [1]தாதார மில்லை
யறிவே யறிவை யறிகின்ற தென்றிட்
டறைகின் றனமறை யீறுக டாமே[2]. (4)

வேறு பாடம்: 1. தாதாரமு (சங்) 2. டானே (அனை. சுவ.) V.

கருத்து: ஞானம் அழியாதது. அஃது இல்லாதிருந்து தோன்றுவதும் இல்லை; அதுவே சிவ சொரூபம். அஃது எந்த வடிவத்தையும் சார்ந்தது அன்று. அச்சிவமாகி நின்றே ஆன்மா அதை அறிகின்றது. ஆதலின், அறிவான், அறியப்படுபவன், அறிவு என மூன்று இல்லை என்று வேத முடிவு கூறிற்று.

"அறிந்துமிரேனே" என்று மேற்பாடலில் கூறியமைக்குக் காரணம் கூறுகிறார்.

சிவானந்தம்

2332. ஆயும் மலரின் அணிமலர் தன்மேலே
மாய இதழும் பதினாறும் அங்குள,
தூய அறிவு சிவானந்தமாகியே
போய அறிவாற் புணர்ந்திடும் - தானே.

ஆயு மலரி னணிமலர் தன்மேலே
[1]மாய [2]விதழும் பதினாறு மங்குள
தூய வறிவு சிவானந்த மாகியே
போய அறிவாற் புணர்ந்திடுந் தானே. (5)

வேறு பாடம்: 1. பாய (விசு) (தி) (வ) 2. விதமும் (ஓ) I; விதழ்கள் (ஓ) II. 3. வறிந்து (அ) II; வறிவாய்ப் (ஈ) I. 4. புணர்ந்திருந் (விசு) (தி) (வ).

கருத்து: நாடிக் காண்பனவாகிய ஆதாரங்களுக்கெல்லாம் அணியாக உள்ள சகஸ்ராரத்தின் மேலே, பராகாயத்தில், அறிவு மயமாக உள்ள சந்திர கலைகள் பதினாறும் உள்ளன. அதனை அடையும் உயிருணர்வு, பரந்துகிடக்கும் பேரறிவுடன் கலந்து நின்று, சிவானந்தமாகி நிற்கும்.

குறிப்பு: இப்பாடல் "ஆறாதாரம்" - இயலுள் (இயல் எண். 92) இறுதிப் பாடலே எனக் கருதுவோர் உண்டு. (த. பதிப்பு) ஆனால், இவ்விரண்டு பாடலும் பாடத்தால் வேறுபடுதலோடு, பொருளாலும் வேறு படுகின்றன.

இறைவன் அங்கீகாரம்

2333. மன்னிநின்றாரிடை வந்து அருள், மாயத்து
முன்னி நின்றானை மொழிந்தேன், முதல்வனும்
பொன்-நிலம் தானோர் புகழ் திருமேனியைப்
பின்னிநின்றேன், "நீ பெரியை" என்றானே.

மன்னிநின் [1]றாரிடை வந்தருண் மாயத்து
முன்னிநின் றானை மொழிந்தேன் முதல்வனும்
பொன்னிலந் தானோர் புகழ்திரு மேனியைப்
பின்னிநின் றேன்னீ பெரியையென் றானே. (6)

வேறு பாடம்: 1. றானிடை (ஓ) I. 2. பொன்னின் வந்தானோர் (ஆ ஒ ஓ) II; பொன்னி வந்தானோர் (இ ஈ) I.

கருத்து: மாயையின் காரியமான உடம்பில் வாழும்போதே, தன்னிடம் கொண்ட அன்பில் வழுவாது நிலைபெற்று நிற்கும் அன்பரின் உடலில் தோன்றி அருள்கின்ற சிவனைப் போற்றினேன். அவன் சொரூபமாய் விளங்கும் பரமாகாயமாகிய திருவுருவத்தைக் கலந்து நின்றேன். அவன் 'நீ பெரியநிலையை அடைந்தனை' எனக் கூறி வாழ்த்தியருளினான்.

முன்னி - தலைப்பட்டு; நினைத்து. பொன்நிலம் - பரமாகாயம், ஓர் - அசை. பொன் நிலமே திருமேனி என்க. "நீ பெரியை" என்றது ஆசிரியர் உள்ளத்து உணர்த்திய சொல். "யாம் பெரிது அறிவோம்" என்ற கூற்றினும் (பாடல் எண்: 2327) இது வேறாதல் அறிக.

அறிவு விசாலம்

2334. அறிவு அறிவாக அறிந்து அன்பு செய்ம்மின்
அறிவு அறிவாக அறியும் இவ்வண்ணம்
அறிவு அறிவாக அணிமா - ஆதி சித்தி
அறிவு அறிவாக அறைந்தனன் நந்தியே.

அறிவறி வாக வறிந்தன்பு செய்ம்மி
னறிவறி வாக [1]வறியுமிவ் வண்ண
மறிவறி வாக வணிமாதி சித்தி
யறிவறி வாக [2]வறைந்தன னந்தியே. (7)

வேறு பாடம்: 1. வறியுமவ் (ஆ இ) IV. 2. வறிந்தன (விசு) (தி) (வ).

கருத்து: நும் அறிவு அகண்டாகார அறிவாவதற்கு வழியறிந்து, சிவனிடம் அன்பு செய்க. செய்தால், அகண்டாகார அறிவாக உள்ள சிவம் உங்கள் அறிவில் பொருந்துவான். நும் அறிவு அவனது அறிவாகிவிட்டால், அணிமா முதலிய சித்திகள் தாமே கைவரப் பெறும். இந்நிலை அடைவதற்கே, எனக்கு நந்தி, உபதேசம் செய்தான்.

அறிவாவது, அறியாமையாவது!

2335. அறிவு, அறிவு என்று அங்கு அரற்றும் உலகம்,
அறிவு அறியாமை யாரும் அறியார்;
அறிவு, அறியாமை - கடந்த அறிவு ஆனால்,
அறிவு, அறியாமை அழகியவாறே.

அறிவறி வென்றங் கரற்று முலக
மறிவறி யாமையை யாரு மறியா
ரறிவறி [1]யாமை கடந்தறி வானா
லறிவறி யாமை யழகிய வாறே. (8)

வேறு பாடம்: 1. யாமை (விசு) (தி) (வ).

கருத்து: மாந்தர் அறிவு, அறிவு என்று கதறுவர். உலக அறிவு என்பது பாச ஞானமே யாகலின், அஃது உண்மையில் அறியாமையே என்பதை ஒருவரும் அறியார். பாச ஞானம் பெறுந்தோறும் மாந்தர், தம் அறியாமையையே உணர்வர். எனவே இவ்விரண்டையும் கடந்த, இவை அல்லாத, பதிஞானத்தைப் பெற்று, அதுவாக ஆயினால், முன்பு பெற்ற அறிவும், அதன் முன்னம் அறியா திருந்தோமே என்ற வருத்தமும் மிக்க அழகியன என்று எண்ணி நகையாடத் தோன்றும்.

குறிப்பு: இப்பாடலை அடுத்து "அறிவறியாமையை" என்னும் பாடல் 'ஓ' - சுவடி தவிர ஏனையவற்றில் இல்லை. இப்பதிப்பில் அஃது இடைச்செருகலாகக் கருதப்படுகிறது.

2336. அறிவறி யாமையை நீவி யவனே
பொறிவா யொழிந்தெங்குந் தானான போது
அறிவா யவற்றினுட் டானா யறிவின்
செறிவாகி நின்றவன் சீவனு மாமே. (சு, ட)

2337. அறிவுடை யார்நெஞ் சகலிட மாவ
தறிவுடை யார்நெஞ் சருந்தவ மாவ
தறிவுடை யார்நெஞ்சொ டாதிப் பிரானு
மறிவுடை யார்நெஞ்சத் தங்குநின் றானே. (அ, ஆ)

ஞான வடிவமும் தெய்வ வடிவமும்

2338. மாயனும் ஆகி, மலரோன், இறையுமாய்க்
காய நன்னாட்டுக் கரு முதல் ஆனவன்
சேயன், அணியன், தித்திக்கும் தீங்கரும்பு
ஆய், அமுது ஆகிநின்று அண்ணிக்கின்றானே.

மாயனு [1]மாகி [2]மலரோ னிறையுமாய்க்
காயநன் னாட்டுக் [3]கருமுத லானவன்
சேய [4]னணியன் றித்திக்குந் தீங்கரும்
[5]பாயமு தாகிநின் றண்ணிக்கின் றானே. (9)

வேறு பாடம்: 1. மாய்மல ரோனிறையுமாய் (அ ஆ ஈ ஒ ஓ) II. 2. மலரோனுமிறையாகிக் (இ) III. 3. கருமுகி (ஆ இ) I. 4. னணியனாய்த் (த) 5. பாய வமுதாகிநின் (அ) II.

கருத்து: திருமால், பிரமன், உருத்திரன் - இவர்களின் உடம்புகளுக்கும் பிறர் உடம்புகட்கும் படைப்புக் காரணமான சிவம், பரமாகாயமாய்த் தொலைவிலும், தெய்வ வடிவங்களாய் அண்மையிலும் இருந்து, அன்பர்க்குக் கருப்பஞ்சாறு போலவும் அமுதம் போலவும் இனிய அனுபவம் தருகின்றான்.

அனுபவமே குறிக்கோளைக் காட்ட ...

2339. என்னை அறிந்திலேன் இத்தனை காலமும்
என்னை அறிந்தபின், ஏதும் அறிந்திலேன்
என்னை அறிந்திட்டு இருத்தலும் கைவிடாது
என்னை இட்டு, என்னை உசாவுகின்றேனே.

என்னை யறிந்திலே னித்தனை காலமு
மென்னை [1]யறிந்தபி னேது மறிந்திலே[2]
[3]னென்னை யறிந்திட் டிருத்தலுங் கைவிடா[4]
[5]தென்னையிட் டென்னை யுசாவுகின் றேனே. (10)

வேறு பாடம்: 1. யறிந்தனென் (ஔ) IV. 2. மறிகிலே (ஆ இ) IV. 3. தன்னை (அ) IV. 4. கைவிடாது (அ) IV. 5. தன்னையிட் (அ) IV.

கருத்து: 'நான் அறிவு வடிவம்' என இத்தனை காலமும் அறியாமல் இருந்தேன். இப்போது அவ்வாறு அறிந்தபின், என்னைச் சூழ்ந்திருக்கும் சார்பு எதனையும் நான், என்னைப் பந்திக்குமாறு விடவில்லை. மாறாக, 'பேரறிவு வடிவத்துடன் நான் அன்னியம் அற்றவன்' என்பதை, அதனோடு, கலந்து இருந்து அறிந்து கொண்டு, அதே நிலையைக் கடைப்பிடித்து, அந்த என் அனுபவத்தை வைத்தே, என்னுள் ஆத்ம விசாரணை செய்கிறேன்.

உசாவுதல் - ஆராய்தல்.

அப்பாலைக்கு அப்பால்

2340. மாய விளக்கது நின்று மறைத்திடுந்[1]
தூய விளக்கது [2]நின்று சுடர்விடுங்
காய விளக்கது நின்று கனன்றிடுஞ்
சேய விளக்கினைத் [3]தேடுகின் றேனே. (11)

வேறு பாடம்: 1. மறைந்திடுந் (ஆ இ ஒ ஓ) I. 2. நின்ற (ஈ) I. 3. தேடிநின் (ஈ) IV.

கருத்து: மாயை விளக்கம் செய்யுமேனும், தன்னையும் மறைத்துப் பொருளையும் மறைக்கும். ஞானமோ தன்னையும் காட்டிப் பொருளையும் காட்டும். உடம்பாகிய கருவி மூலக்கனலை உண்டாக்கும். நானோ, இவற்றுக்கு அப்பாற்பட்ட சிவ விளக்கை -சிவப் பேரொளியைத் தேடுகின்றேன்.

ஞானத்தாலும் யோக சாதனையாலும் சிவவொளியைக் காண முயலுகின்றேன் என்கிறார். ஞானம் கீழ்நிலையில் எய்துவது. தேடுவதோ பரமாகாய அனுபவம். அது நிராதாரம் ஆதலின், மூலக்கனல் சென்று எட்டும் எல்லையைக் கடந்தது. எனவே, நிராதாரத்தை எய்துதலில், மூலக்கனல் வறிதே கனன்றது என்பார், "நின்று கனன்றிடும்" என்றார் "அப்பாலைக்கு அப்பாலைப் பாடுதுங்காண்" என்றார் மணிவாசகரும் (திருவா. திருவம். 11)

பரநிலை அனுபவம்

2341. தேடுகின்றேன் திசை எட்டோடு இரண்டையும்,
நாடுகின்றேன் நலமே உடையான் அடி,
பாடுகின்றேன் பரமே துணையாம் என,
கூடுகின்றேன் குறையா மனத்தாலே.

தேடுகின் றேன்றிசை யெட்டோ டிரண்டையு[1]
நாடுகின் றேனல மேயுடை யானடி
பாடுகின் றேன்பர மேதுணை யாமெனக்
கூடுகின் றேன்குறை யாமனத் தாலே. (12)

வேறு பாடம்: 1. திரண்டையு, (விசு) (தி); டிரண்டிலு (த).

கருத்து: அண்ட வெளியினை - அதில் சிவத்தை - என் உள்ளே காண முயல்கிறேன். பேரானந்தம் தரும் அவனை ஆராய்கின்றேன். அந்தப் பரநிலையே என் நிலைபேற்றுக்குச் துணை என, அதையே விரும்பிப் பாடுகிறேன். அண்ட வெளியெல்லாம் அளாவிய என் உணர்வினால், சிவத்தைக் கலக்கின்றேன்.

குறையா மனம் - நிறைந்த உணர்வு; வியாபகமான அறிவு. குறை - ஆசை. குறையாமனம் - ஆசையற்ற மனம் என்னும் பொருளும் காண்க. தன்னை அறிந்தபின் உலகச் சார்பு யாதும் அறிந்திலராதலின், ஆசை இன்மை நிலை வந்தது என்க.

விளையாட்டு முடிந்தது

2342. முன்னை முதல் விளையாட்டடத்து, முன்வந்தோன்
பின்னை, பெருமலம் வந்தவர் பேர்த்திட்டு,
தன்னைத் தெரிந்து, தன் பண்டைத் தலைவன் தாள்
மன்னி, 'சிவம்' ஆக, வாரா பிறப்பே.

முன்னை முதல்விளை யாட்டடத்து முன்வந்தோன்[1]
பின்னைப் பெருமலம் [2]வந்தவர் பேர்த்திட்டுத்
தன்னைத் தெரிந்துதன் பண்டைத் தலைவன்றாண்
மன்னிச் சிவமாக [3]வாரா பிறப்பே. (13)

வேறு பாடம்: 1. முன்வந்தோர் (விசு) (தி) (வ) 2. வந்தவா (த) 3. வாராப் (சங்).

கருத்து: ஆதிநாள் தொட்டு நிகழ்வதாகிய படைப்பு என்னும் விளையாட்டில், முதலில் பிறப்பு எடுத்த ஆன்மா, பின்பு பல பிறவி களையும் எடுத்து, பின்பு மலபரிபாகமும் சத்திநிபாதமும் உண்டாகும் பொழுது, வருபவராகிய குருநாதன், அம் மலத்தைச் சிறிதே நீக்கத், தன்னை அறிந்து, முன்பே தனது தலைவனாக உள்ள சிவபெருமானின் திருவடிகளைச் சார்ந்து, ஆணவத்தை முற்றாக நீக்கப் பெற்றுச் 'சிவமாவான்'. அவனுக்கு மீண்டும் பிறப்பு இல்லை.

ஆதிநாள் தொட்ட விளையாட்டு, அவனளவில் நிற்கும் என்க. 'பேர்த் திட்டு' என்ற எச்சத்தைப் 'பேர்த்திட' எனத் திரிக்க.

கொண்டு கூட்டு: முன் வந்தோன் பெருமலம் பின்னை வந்தவர் பேர்த்திட்டு'' எனக் கூட்டுக.

122. ஆறந்தம்

என்னென்ன?

2343. வேதத்தின் அந்தமும், மிக்க சித்தாந்தமும்
நாதத்தின் அந்தமும், நற் போத வந்தமும்
ஓதத்தகும் எட்டு யோகாந்த அந்தமும்
ஆதிக் கலாந்தமும் ஆறு அந்தம் ஆமே.

வேதத்தி னந்தமு மிக்கசித் தாந்தமு
நாதத்தி னந்தமு நற்போத வந்தமு
மோதத் 'தகுமெட் டியோகாந்த வந்தமு
மாதிக் கலாந்தமு மாறந்த மாமே. (1)

வேறு பாடம்: 1. தகுமெட்டின் (அ ஒ) IV. 2. டியோகத்தி னந்தமு (த)

கருத்து: ஆறந்தம் ஆவன : வேதாந்தம், சித்தாந்தம், நாதாந்தம் , போதாந்தம், யோகாந்தம், கலாந்தம் என்பனவாகும்.

மாறுபாடு நீக்குக

2344. அந்தம் ஓர் ஆறும் அறிவார் அதி சுத்தர்
அந்தம் ஓர் ஆறும் அறிவார் அமலத்தர்
அந்தம் ஓர் ஆறும் அறியாதவர், தமக்கு
அந்தமோடு ஆதி அறிய ஒண்ணாதே.

அந்தமோ ராறு மறிவா ரதிசுத்த
ரந்தமோ ராறு மறிவா ரமலத்த
ரந்தமோ ராறு மறியா தவர்தமக்'
கந்தமோ டாதி யறியவொண் ணாதே. (2)

வேறு பாடம்: 1. ரவர்தமக் (இ) IV.

கருத்து: ஆறு அந்தங்களையும் அறிபவரே மிக்க தூய்மை உடையோர். அவரே மலங்களிலிருந்து நீங்குவோர். அவற்றை அறியாதாரோ, உலகின் ஆதியையும் ஒடுக்கத்தையும் அறியார்.

ஆறு அந்தங்களும் ஒன்றினொன்று வேறுபட்டவை எனத் தோன்றினும் அவற்றை முரண் நீக்கி அறிபவரே பிறப்பறுத்து வீடு பெறுவர் என்றார்.

எங்கே மாறுபாடு?

2345. தான் ஆன வேதாந்தம்; 'தான்' என்னும் சித்தாந்தம்
ஆனாத் துரியத்து அணுவன் தனைக் கண்டு
தேனார் பராபரம் சேர் சிவயோகமாய்,
ஆனா மலம் அற்ற, அருஞ்சித்தி யாதலே.

தானான வேதாந்தந் தானென்னுஞ் சித்தாந்த
மானாத் துரியத் தணுவன் றனைக்கண்டு
தேனார் பராபரஞ் சேர்சிவ யோகமா
யானா மலமற் றருஞ்சித்தி யாதலே[2]. (3)

வேறு பாடம்: 1. சேர் சிவோகமா (ஆ இ) I; சேரச் சிவோகமா (த) 2. யார்தலே (த)

கருத்து: "எல்லாம் பிரமமே" என்று கூறும் வேதாந்தம். சித்தாந்தமோ பிரமம் என்ற சிவம் தனிப் பொருள் என்று கூறும். இவ்விரண்டினுடைய கருத்தும், அணு அளவாகக் குறுகியுள்ள ஆன்மா, யோகமாய் மனமொன்றி இருந்து, துரியநிலையை எய்தி, உண்மையில் தான் வியாபகன் என்பதை உணர்ந்து, பரவெளிக்கும் அப்பால், சிவத்துடன் கலந்து, முன் என்றும் நீங்காத ஆணவ மலம் இப்போது நீங்கப்பெற்று, அரிய வீடு பேறு அடைதலே ஆகும்.

சிவம் தனியானாலும், ஒன்றானாலும் ஆகுக. அதனுடன் இரண்டறக் கலப்பதே அவ்விரண்டின் நோக்கம் என முரண் அறுத்தார்.

சித்தாந்தம்

2346. நித்தம் பரனோடு உயிர் உற்று, நீள்மனம்
சத்தம் முதல் ஐந்தும், தத்துவம் தான் நீங்கிச்
சுத்தம் அசுத்தம் தொடராவகை நினைந்து
அத்தன் பரன்பால் அடைதல் சித்தாந்தமே.

நித்தம் பரனோ [1]டுயிருற்று நீண்மனஞ்[2]
சத்த [3]முதலைந்துந் [4]தத்துவந் தானீங்கிச்[5]
சுத்த மசுத்தந் தொடரா வகைநினைந்
தத்தன் [6]பரன்பா லடைதல்சித் தாந்தமே (4)

வேறு பாடம்: 1. டுயிரோடு (ஈ) I. 2. நின்மனஞ் (ஓ) I. 3. முதலைந்து (த) 4. தத்துவத் (இ) IV. 5. தானீக்கிச் (ஆ இ) I. 6. பாலன்பா (ஈ) IV.

கருத்து: நாள்தோறும் சிவபரம்பொருளோடு உணர்வு கலந்து அனுபவித்து, மனம் முதலிய அந்தக் கரணங்கள், சத்தம் முதலிய ஐம்புலன்கள் - என்ற இவையனைய பிரகிருதி மாயா தத்துவங் களினின்றும் நீங்கி, அசுத்த மாயா தத்துவங்களான வித்தியா

தத்துவங்களினின்றும், சுத்த மாயா தத்துவங்களான சிவ தத்துவங்களினின்றும் நீங்கி, பரவெளிக்கு அப்பால் ஆடும் அகண்டாகார, சொரூப சிவனை அணுகி, அவனே யாகுதல் சித்தாந்தக் கொள்கை ஆகும்.

அளவற்ற பொருள்களில் அளவு இன்றிப் படர்தலின் "நீள் - மனம்" என்றார். அடைதல், ஒன்றாதல்.

நாதாந்தம்

2347. மேவும் பிரமனே, விண்டு, உருத்திரன்
மேவும் மெய்யீசன், சதாசிவன், மிக்கு அப்பால்
மேவும் பரவிந்து, நாதம் விடா ஆறாறு
ஓவும் பொழுது, அணு ஒன்று உளதாமே.

மேவும் பிரமனே விண்டு வுருத்திரன்
[1]மேவுமெய் யீசன் சதாசிவன் மிக்கப்பான்
மேவும் [2]பரவிந்து [3]நாதம்வி டாவாறா
றோவும் பொழுதணு வொன்றுள தாமே. (5)

வேறு பாடம்: 1. மேவுமயேசன் (ஓ) IV; மேவுசெய் (சைவ) 2. பரம்விந்து (த) 3. நாதம்விட (த).

கருத்து: மேற்பாடலில் சிவதத்துவம் ஐந்து எனக் கூறியவையும், பரநாதமும், பரவிந்துவும் நாதாந்தம் என விளக்குகிறார். பிரமன், திருமால், உருத்திரன், மயேசுரன், சதாசிவன், விந்து, நாதம் என்பவை சிவதத்துவமாம். பரவிந்து, பரநாதம் என்னும் இரண்டும் விந்து, நாதங்களுக்குக் காரணமாக உள்ளவை. இவை அனைத்தும், கீழ் உள்ள அசுத்த மாயா தத்துவங்களும், பிரகிருதி மாயா தத்துவங்களும் நாதாந்தம் எனப்படும். இவை விலகும் போது, ஆன்மா தனித்து நிற்கும்.

நிலம் என்ற தத்துவம் முதல் நாதம் வரை உள்ளவை முப்பத்தாறு தத்துவங்கள். பரவிந்து, பரநாதம் என்பவை முறையே பராசத்தி பரசிவம் ஆகியோரைக் குறிக்கும். அவர்கள் சுத்த மாயையைக் கலக்கி, நாதம் முதலிய தத்துவங்களாய்ப் படைக்கின்றனர். ஆதலின் "பரவிந்து நாதம் விடா ஆறாறு" என்றார்.

போதாந்தம்

2348. **உள்ள உயிர் ஆறாறது ஆகும் உபாதியைத்**
தெள்ளி, அகன்று, நாதாந்தத்தைச் செற்று, மேல்
உள்ள இருள் நீங்க, ஒருணர்வு ஆகுமேல்
எள்ளல் இல் நாதாந்தத்து எய்திடும் போதமே.

[1]உள்ளுயி [2]ராறாற தாகு முபாதியைத்
தெள்ளி யகன்றுநா தாந்தத்தைச் செற்றுமே
லுள்ள விருணீங்க வோருணர் வாகுமே
லெள்ளலி னாதாந்தத் தெய்திடும் போதமே. (6)

வேறு பாடம்: 1. உள்ள (அனை. சுவடி பதி) V. 2. வுயிராறாற (ஆ, ஈ, ஓ ஓ) II. வுயிர்க்குயிராகு (ஆ இ) II. (ஆ, இ சுவடிப் பாடம் பொருட் பொருத்தும் இன்மையாலும், ஏனைய சுவடிப் பாடம் யாப்புப் பிழை படுதலாலும், தற்போதைய பதிப்பில் திருத்தப்பட்டுள்ளன).

கருத்து: என்றும் அழிதல் இல்லாத ஆன்மா, 36 தத்துவம் என்னும் வழியை ஆராய்ந்து தெளிந்து, அவற்றின் நீங்கி, பரவிந்து, பரநாதம் ஆகியவற்றையும் கடந்து, ஆணவ மலம் நீங்கச் சிவத்தோடு உணர்வு ஒக்குமானால், அந்த நாதாந்த வெளியில் ஞானம் எய்தும்.

குறிப்பு: இப்பாடல் 'அ' - சுவடியில் இல்லை.

யோகாந்தம்

2349. **தேடும் இயம, நியமாதி சென்று, அகன்று,**
ஊடும் சமாதியில் உற்றுப் பரசிவன்
பாடு உறச் சீவன் பரமாகப் பற்று அற
கூடும் உபசாந்தம் யோகாந்தக் கொள்கையே.

தேடு மியம நியமாதி சென்றகன்
றூடுஞ் சமாதியி லுற்றுப் பரசிவன்[1]
[2]பாடுறச் சீவன் பரமாகப் பற்றறக்
கூடு முபசாந்த மியோகாந்தக் கொள்கையே. (7)

வேறு பாடம்: 1. படர் சிவன் (விசு) (தி) (வ) 2. பாருறு (ஆ இ) IV.

கருத்து: ஆராய்ந்து கடைப்பிடிக்கத் தக்கனவாகிய இயமம், நியமம் முதலிய யோகவுறுப்புகளைக் கடைப்பிடித்து, அவற்றின்

பயனாகச் சமாதி கூடி, ஆன்மா அகண்டாகார சிவனைச் சேர்ந்து, தானும் பரமாகும். அதன் பற்றுகள் நீங்கும். அந்நிலையில் வந்தெய்தும் போக்குவரவற்ற நிலையே யோகாந்தக் கொள்கை ஆகும்.

கலாந்தம்

2350. கொள்கையில் ஆன கலாந்தம் குறிக்கொள்ளில்,
விள்கையில் ஆன நிவிர்த்தாதி, மேதாதிக்கு
உள்ளனவாம் விந்துவுள்ளே ஒடுங்கலும்
தெள்ளி அதனைத் தெளிதலுமாமே.

கொள்கையி லான கலாந்தங் குறிக்கொள்ளில்
விள்கையி லான நிவிர்த்தாதி மேதாதிக்
குள்ளன வாம்விந்து வுள்ளே யொடுங்கலுந்
தெள்ளி யதனைத் தெளிதலு மாமே. (8)

கருத்து: கலாந்தத்தின் கொள்கையை எண்ணினால், நீங்குபவை யான நிவிர்த்தி முதலிய ஐந்து கலைகளையும், பிராசாத கலைகள் ஆகிய அகரம் (மேதை) முதலிய 12 கலைகளையும் உடையதாகிய விந்து சத்தியில் ஒடுங்கியிருத்தலும், அதனை அனுபவத்தாற் காணுதலும் ஆகும். இக்கலைகள் சத்தியின் கூறுகளே.

கலைகள், நீங்கும் கலைகள், ஆக்கும் கலைகள் என இரண்டு வகைப் படும். அவற்றுள், நீங்கும் கலைகள் நிவிர்த்தி கலை, பிரதிட்டை கலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தியதீத கலை என்ற ஐந்துமாகும். ஆக்கும் கலைகள் சிவானுபவத்தைத் தரும் பிராசாத கலைகள் ஆகும். அவை மேதை எனப்படும் அகர கலை முதல், உன்மனை வரை உள்ள சந்திர கலைகள் பதினாறும் ஆகும். நீங்கும் கலைகள் ஆன்மா ஆணவமலத்திலிருந்து நீங்கத் துணை செய்யும்.

கலாந்தம் - 2

2351. தெளியும் இவை அன்றித் தேர் ஐங்கலை வேறு
ஒளியுள் அமைந்துள்ளது ஓர வல்லார்கட்கு
அளியவன் ஆகிய மந்திரம், தந்திரம்,
தெளிவு, உபதேசம், ஞானத்தொடு ஐந்தாமே.

தெளியு மிவையன்றித் தேரைங் கலைவே
றொளியு 'ளமைந்துள்ள தோரவல் லார்கட்
களியவ னாகிய மந்திரந் தந்திரந்
தெளிவுப தேசஞா னத்தொடைந் தாமே. (9)

வேறு பாடம்: 1. ளமைத்துள்ள (ஒ) I; ளமைந்துள்ளத் (ஈ) I; ளவைந் துள்ளத் (ஆ இ) I.

கருத்து: ஆராய்ந்து தெளியும் மேற்சொன்ன கலைகள் அல்லாமல், சிவ ஒளியில் வேறு ஐந்து கலைகளும் அமைந்துள்ளன. அவை, மந்திரம், தந்திரம், தெளிவு, உபதேசம், ஞானம் என்பவை ஆகும்.

ஐங்கலையுள் நான்கு

2352. ஆகும் அனாதி கலை-ஆகம வேதம்
ஆகும் அத்தந்திரம் அந்நூல்வழி நிற்றல்,
ஆகும் மன ஆதி உடல் அல்லா மந்திரம்
ஆகும் சிவபோதகம் உபதேசமே.

ஆகு மனாதி கலையா கமவேத
மாகுமத் தந்திர மந்நூல் வழிநிற்ற
லாகு மனாதி 'யுடலல்லா மந்திர
மாகுஞ் சிவபோ தகமுப தேசமே. (10)

வேறு பாடம்: 1. யுடலெல்லா (ஈ) I.

கருத்து: தோற்றக் காரணம் அறியப்படாத கலைகள் வேதமும் ஆகமமும். அவற்றின் வழி நடத்தல் தந்திர கலை. மனம் முதலிய அகக் கருவிகள் நீங்க, கணிப்பது சூக்கும பஞ்சாக்கரம். உபதேசம் சிவ குருவால் செய்யப்படுவது . அதனால் எய்துவது பதி ஞானம்.

இவற்றின் இடையே சிந்தித்துப் பெறுதல் தெளிவு எனக் குறிப்பால் உணர்க.

ஞானம் தரும் கலை

2353. தேசு ஆர் சிவம் ஆகுதல் ஞானத்தின் கலை,
ஆசு ஆகா நேயம் அறையும் கலாந்தத்து;
பேசா, உரை, உணர்வு அற்ற பெருந்தகை
வாசாமகோசர மாநந்தி தானே

தேசார் [1]சிவமாகு தல்ஞானத் தின்கலை
[2]யாசாகா நேய மறையுங் கலாந்தத்துப்
பேசா வுரையுணர் வற்ற பெருந்தகை
வாசாம கோசர மாநந்தி தானே. (11)

வேறு பாடம்: 1. சிவமாகுந் (விசு) (வ) 2. யாசார (அ) IV.

கருத்து: ஞான கலையாவது, ஒளிவடிவான சிவமேயாகி நிற்பதாகும். சிவம், மௌனமாக இருந்து உணரும் அனுபூதியில், உயிரால் நேரே உணரப்படுவது. இப்படி யன்றிச், சொல்லால் புரிந்து கொள்ளவோ, மனவுணர்வால் உணரப்படவோ இயலாதது. இதைக் கருதிச் சிவத்தை 'வாசாமகோசரம்' என்பர் அறிஞர். ஆதலால் அவனைக் குற்றமற்ற அன்பினால்தான் அடையவியலும். அந்த அன்பைப் பற்றிக் கலைகள் கூறும். அந்த அன்பே ஞானத்தைத் தந்து, சிவத்தை அடையச் செய்யும்.

"நேயம் கலாந்தத்து அறையும்" என்றது, வழிபாடு செய்யும் முறைகளாகிய சரியை, கிரியை, யோகம் ஆகியவற்றைக் கலைகள் உரைத்தன என்பதால். 'சரியை கிரியா யோகங்களைச் செய்துழி, நன்னெறியாகிய ஞானத்தைக் காட்டியல்லது மோட்சத்தைக் கொடா வாகலான்" என மெய்கண்டார் ஏதுக் காட்டுவதும் அறிக. (சிவ. போ. 8 ஆம் சூத். 1 ஆம் அதி.)

சித்தாந்த போதம்

2354. தான் அவனாகும் சமாதி தலைப்படில்,
ஆன கலாந்த நாதாந்த யோகாந்தமும்
ஏனைய போதாந்தம்; சித்தாந்தமானது;
ஆனது மேல் ஞேய ஞாதுரு ஆகுமே.

தானவ னாகுஞ் சமாதி தலைப்படி
லானக லாந்தநா தாந்தயோ காந்தமு
மேனைய போதாந்தஞ் சித்தாந்த மானது[1]
[2]வானது மேல்ஞேய ஞாதுரு வாகுமே. (12)

வேறு பாடம்: 1. ரானது (அ ஈ ஒ) I; மானதும் (த) 2. ஞான (ஓ) II; (4 ஆம் அடி 2 ஆம் சீர் 'மெனநேய' எனப் பதிப்புகள் பாடஞ்கொண்டது, சுவடியெழுத்தை இடம் நோக்கி வாசியாமையால்; அல்லது முதற்சீர் 'ஞான' எனப் பாடங்கொண்டு, இயற்சீர் வெண்டளை தட வேண்டு மென்பதால் என்க.)

கருத்து: ஆன்மா, தான் சிவனாகும் சமாதிநிலையை எய்தினால், கலாந்தம், நாதாந்தம், யோகாந்தம் என்னும் மூன்றும் விளைக்கும் போதம் (போதாந்தம்; உணர்ந்தறிவு) சித்தாந்த போதம் ஆகும். ஏனெனில், அறியப் படும் பொருள் என்றும், அறியும் கருத்தா ஆகிய பொருள் என்றும் இரண்டு பொருள்கள் உள்ளமையால் 'இரண்டும் ஒன்றுகூடல்' என்ற சமாதி வாய்க்கிறது.

நேயம் - அறியப்படும் பொருள். ஞாதுரு - அறிபவன். வேதாந்தப்படி இரண்டு இல்லை; பிரமம் ஒன்றே உள்ளது எனின், சமாதி கூடல் என்பது தேவையில்லை.

கலாந்தம், நாதாந்தம், யோகாந்தம் - இவற்றின் விளைவாக எய்தும் போதம் அல்லது 'உணர்ந்தறிவு' ஒருவனைச் சமாதி கூடச் செய்தலின் "கலாந்த நாதாந்த யோகாந்தமும் ஏனைய போதாந்தம்" என்றார்.

மௌனம் ஆனந்த அறிகுறி

2355. ஆறு அந்தமும் சென்று அடங்கும் அந்நேயத்தே
ஆறுஅந்த நேயம் அடங்கிடும் ஞாதுரு
கூறிய ஞானக்குறியுடன் வீடவே
தேறிய மோனம் சிவானந்த உண்மையே.

ஆறந்த முஞ்சென் [1]றடங்குமந் நேயத்தே[2]
ஆறந்த நேய [3]மடங்கிடு ஞாதுரு
கூறிய ஞானக் [4]குறியுடன் வீடவே
தேறிய மோனஞ் சிவானந்த வுண்மையே[5]. (13)

வேறு பாடம்: 1. யடங்குமென் (ஓ) I. 2. நேயத்தை (ஈ) I. 3. மடங்கிட (ஈ ஓ) I. 4. குறியினின் (அ) IV. 5. முண்மையே (ஓ) III.

கருத்து: மேலே கூறிய ஆறு அந்தங்களும், நேயம் (சிவம்) என்ற குறிக்கோள் ஒப்புமை உடையன (நேயத்தைப் பெறுதலையே குறிக்கோளாக உடையன) அந்தச் சிவத்தில், பையப் பையக் கலக்கும் ஞாதுருவாகிய ஆன்மா, அதுகாறும் தான் பெற்ற ஞானத்தையும் விட்டு, தற்போதத்தையும் விடும். அப்போது அஃது எய்தும் மௌன நிலை அது சிவானந்தத்தை அனுபவிக்கின்றது என்பதைக் காட்டும்.

பிராசாத கலைகள்

2356. உண்மைக்கலை ஆறு ஓர்ஐந்தான் அடங்கிடும்,
உண்மைக் கலாந்தம் இரண்டு ஐந்தோடு ஏழு அந்தம்,
உண்மைக்கலை ஒன்றில் ஈறு ஆய நாதாந்தத்து
உண்மைக் கலை சொல்ல ஓர் அந்தம் ஆமே.

உண்மைக் [1]கலையாறோ ரைந்தா னடங்கிடு
முண்மைக் கலாந்த மிரண்டைந்தோ டேழுந்த[2]
முண்மைக் கலையொன்றி லீறாய் நாதாந்தத்
துண்மைக் கலைசொல்ல வோரந்த மாமே. (14)

வேறு பாடம்: 1. கலையாறொன் றைந்தி (த) 2. டேழுந்த (ஓ) I.

கருத்து: உண்மையான கலையாவது பிராசாத கலையே. இக்கலைகளை உயிருணர்விற் கலக்கச் செய்யும் பிராசாத யோகத்தில் பதினொரு வகைகள் உள்ளன. பிராசாத கலைகளை உள்ளடக்கிக் கொண்டு இருக்கும் கலைகள் சந்திர மண்டலத்துக் கலைகள் பதினாறும், சிவகலை ஒன்றுமாகப் பதினேழு ஆகும். (சிவகலைகள் ஐந்து. இவை ஒன்று எனத் தொகுத்துக் கூறப்பட்டன.) இவற்றுள், அகர கலை தொடங்கி ஒவ்வொரு கலையாக, உயிருணர்வு கலந்துகொண்டே வந்தால், எட்டாவது கலையாகிய நாதாந்தத்தைக் கலப்பது "அட்டகலாப் பிராசாத" மாகும். அதன் பிறகு, அடுத்தவையாகிய சத்தி கலை, வியாபினி கலை என்பவற்றுடன் கலக்கும் அனுபவம் 'தச கலாப் பிராசாதம்' ஆகும். அடுத்த இரண்டு கலைகளுடன் கலத்தல் 'துவாதச கலாப் பிராசாதம். அடுத்த இரண்டு கலைகளுடன் கலத்தல் "சதுர்த்த கலாப் பிராசாதம்". அடுத்த இரண்டு கலைகளுடன் கலத்தல் 'சோடசகலாப் பிராசாதம்'. அடுத்து, முதற் சிவகலையாகிய இந்திகையுடன், கலத்தல் 'பூதப் பிராசாதம்'. இரண்டாவது சிவகலையாகிய தீபிகையுடன் கலத்தல் 'ஆரம்பப்பிராசாதம்' மூன்றாவது சிவகலையாகிய உரோசிகையுடன் கலத்தல் 'மூர்த்திப் பிராசாதம். நான்காவது சிவகலையாகிய மோசிகையுடன் கலத்தல் 'சிவப்பிரார்சாதம்'. ஐந்தாவது சிவகலையாகிய ஊர்த்துவ காமினியுடன் கலத்தல் 'ஆனந்தப் பிராசாதம்'.

சந்திர கலைகள் 16 - ம், சிவகலைகள் 5 - ம் பிரணவத்தின் விரிவாகிய 'வியட்டிப் பிரணவம்' என்ற 'அ, உ , ம, விந்து, நாதம்' என்ற ஐந்தில் அடங்குவனவே. (அல்லது ஐந்தாற் குறிக்கப்படுவனவே) பிராசாத யோகம் பதினொன்றும் ஆகும். இக்கருத்து விளங்க, இப்பாடலின்

முதலடியை அமைத்துள்ளார். இதன்படி, இவ்வடி, 'பிராசாத கலைகளின் வழிமுறை, ஓர் ஐந்தின் காரணமாக அமையும்' எனப் பொருள்படும். இங்கு, 'ஆறு' என்பது வழி.

இரண்டாம் அடியும் ஒரு குறிப்புடன் அமைந்துள்ளது. அதன்படி அது 18 பிராசாத யோகங்களையும் உணர்த்தும். எவ்வாறு? அதில், "இரண்டு ஐந்து" என்பது, முதல் ஐந்து, இரண்டாம் ஐந்து எனப்பொருள்பட்டு, முறையே, சந்திர கலைகளுள் முதல் 5 கலைகளாகிய, 'அகரம்' முதல் 'அர்த்த சந்திரன்' வரை உள்ளவற்றில் உயிருணர்வு கலத்தல் 'பஞ்ச கலாப் பிராசாதம்', வியாபினி வரை கலத்தல் 'தச கலாப் பிராசாதம் உன்மனை வரை, 16 - கலைகளுடனும் கலத்தல் 'சோடச கலாப் பிராசாதம்' என்ற பொருள் விரிவு தோன்றும். 3 - ஆம் அடி யால் 'அட்டகலாப் பிராசாதமும்', "ஏழ் அந்தம்" என்பதால் 17 - ஆம் கலை சிவகலை என்பதும் சிவகலைகள் ஐந்தாதலின், அவ்வகையிலும் பிராசாத யோகங்கள் உள்ளன என்பதும் குறிப்பால் உணர்த்தப்பட்டன.

3 - ஆம் அடி: ஒன்றில் - ஒன்றினால்; உணர்வு கலந்தால். ஓர் அந்தம் - 11 பிராசாதங்களும் 11 கலாந்தங்கள் ஆகும். -பிராசாத கலைகள் ஆக்கும் கலைகளாதலின் "உண்மைக் கலை" என்றார். (பார்க்க - 2350 ஆம் பாடல்)

சிவமாகும் நிலை தா

2357. ஆ உடையாளை அரன் வந்து கொண்டபின்
தேவு உடையான், எங்கள் சீர்நந்தி தாள் தந்து
வீவு அற வேதாந்த சித்தாந்த மேன்மையைக்
கூவி அருளிய கோனைக் கருதுமே.

ஆவுடை [1]யாளை யரன்வந்து கொண்டபின்
தேவுடை யானெங்கள் சீர்நந்தி தாடந்து
வீவற வேதாந்த சித்தாந்த மேன்மையைக்
கூவி [2]யருளிய கோனைக் கருதுமே. (15)

வேறு பாடம்: 1. யானை (அ இ ஓ) I. 2. யருளிக் (ஓ) I.

கருத்து: பராவத்தைக்கு அப்பால், சத்தியும் சிவனும் சேர்ந்து ஆன் மாவுக்கு அனுபவம் அளித்தல் இல்லை. சிவம் அகண்டாகார வெளியாய் நிற்க, சத்தி அதில் அடங்கி நிற்கும், அந்நிலையை எய்தக் கருதும் ஆன்மா, தேவர்களின் தலைவனாகிய நந்தியை

இரந்து, அவனது திருவடியைத் தந்து, வேதாந்த சித்தாந்த மேன்மையை அருளுமாறு வேண்டும்.

வேதாந்த சித்தாந்த மேன்மை - ஆன்மா சமாதி கூடிச் 'சிவமாய்' நிற்றல். அருளிய - அருள்வதற்கு. கருதும் என்ற பயனிலைக்கு எழுவாய் ஆன்மா என வருவிக்க. இப்பாடலில், ஆசிரியர், தமக்கு 'வேதாந்த சித்தாந்த மேன்மையை' நந்தி அருளினான் என்று தெரிவிக்கும் குறிப்பு உள்ளது.

அப்பாலான்

2358. கருதுமவர்தம் கருத்தினுக்கு ஏற்ப
அரன் உரைசெய்தருள் ஆகமந் தன்னில்
வருசமயப்புறம்; மாயை மாமாயை
உருவிய வேதாந்த சித்தாந்த உண்மையே

கருது மவர்தங் கருத்தினுக் கேற்ப[1]
வரனுரை செய்தரு ளாகமந் தன்னில்
வருசம யப்புற மாயைமா மாயை
யுருவிய வேதாந்த சித்தாந்த வுண்மையே. (16)

வேறு பாடம்: 1. கொப்ப (ஆ) IV.

கருத்து: சிவபெருமான் தன்னை வழிபடக் கருதும் அன்பர்களின் மனப்பக்குவத்திற்கு ஏற்பப் படிநிலைகளாக அருள்செய்த ஆகமங் களில் கூறப்பட்டது சைவசமயம் அதற்குப் புறமாக உள்ள கருத்துக் களையும், அசுத்த மாயை, சுத்தமாயை ஆகியவற்றையும் ஊடுருவிக் கொண்டு அப்பாற் சென்று நிற்பது வேதாந்த சித்தாந்த உண்மையாகும்.

மாயையை ஊடுருவும் என்றது, சிவம் பொருள்களிற் கலந்திருப்பினும், அவற்றின் வேறாய் நிற்பது பற்றி. மாமாயை ஆகிய சுத்தமாயையை ஊடுருவும் என்றது, சிவம் தனது சுதந்திரத் தானமாக, சுத்தமாயை யினின்று தனக்குத் தடத்தமாக உருவ, அருவ, அருவுருவங்களை ஆக்கிக் கொண்டாலும், அத் தெய்வத்திருவுருவங்களே அவன் அல்ல; அவன் அவற்றின் வேறானவன் என்பது பற்றி. ஆகமங்கள் சைவ நூல்கள். அவற்றில் மேற்கூறிய நிலைகள் கூறப்பட்டன. சைவ சமயத்திற்குப் புறமான நூல்களில் கூறப்படும் தெய்வ நிலைகட்குச் சிவன் அப்பாற்பட்டவன். அதனோடு சைவாகமங்கள் கூறும் வழிபாடுகட்குரிய தெய்வ உருவங்கட்கும் அப்பாற்பட்டவன் என்றார்.

ஆறந்த சாரம்

2359. வேதாந்தம் சித்தாந்தம் வேறு இலா முத்திரை
போதாந்த ஞானம்; யோகாந்தம், பொதுஞேய
நாதாந்தம்; ஆனந்தம் சீரா உதயம் ஆகும்
மூதாந்த முத்திரை மோனத்து மூழ்கவே.

வேதாந்தஞ் சித்தாந்தம் வேறிலா முத்திரை
போதாந்த ஞானம் யோகாந்தம் பொதுஞேய
நாதாந்த மானந்தஞ் [1]சீரோ தயமாகு
மூதாந்த முத்திரை மோனத்து மூழ்கவே[2]. (17)

வேறு பாடம்: 1. சீருத யம்மாகு (த) 2. மூழ்கலே (த)

கருத்து: வேதாந்தம், சித்தாந்தம் - இவற்றின் இடையே உள்ள வேறுபாட்டினை நீக்குவது (தத்துவ வாதம் அன்று;) அனுபவமே. அந்த அனுபவத்தாற் பெறுவது ஞானம். அதைக் குறிப்பதே 'போதாந்தம்' என்பது. அந்த அனுபவத்தினைப் பெறுவதற்குரிய வழிமுறைகள் யோகாந்தமும், 'தெய்வவுருவங்கட்கெல்லாம் அப்பாற்பட்ட அகண்டாகாரமாம் சிவம் உள்ளது' என உணர்த்துமளவில் உள்ள நாதாந்தம், கலாந்தம் என்பவையுமாகும். இவற்றுள் கலாந்தத்தில், பதினொரு பிராசாத கலைகளையும் முறையே கைக்கொண்டு, யோகம் புரிவோர்க்கு, அவற்றுள் ஒவ்வொன்றும் தத்தம் பயனான பேற்றினைத் தரும். இறுதியில் உள்ளதான 'ஊர்த்துவ காமினி' என்னும் கலை ஆனந்தப் பிராசாதம் ஆதலின், அந்த யோகமாகிய மௌனத்தில் மூழ்கிநிற்க, பேரானந்தமான வீடுபேற்றின்பம் எய்தும். சீரா + உதயம் = சீரோ தயம். குணசந்தி. படிப்படியாக எழும். சீராக என்பதில் அகரம் தொக்கது.

மேற்கண்ட கருத்திற்கு இந்நூல் 2354 ஆம் பாட்டு அரண்செய்யும். இவ்விரு பாட்டுக்களின்படி, 'ஆறந்தம்' என்னும் இவ்வியலின் சாரம்: ஆறு அந்தங்களுள் தலைமையானவை வேதாந்தமும் சித்தாந்தமும் ஆகும். பொருள் ஒன்றா, இரண்டா என்பதில் வேறுபடுவது, இவற்றின் முதன்மையான வேறுபாடு. புற விசாரணையாகிய தத்துவ வாதத்தை விட, அகவிசாரணை (நாட்டம்) ஆகிய யோகாந்தமே ஒரு முடிவு காண உதவும். நாதாந்தம் ஆன்மாவைத் தத்துவங்களிலிருந்து வேறுபட்டவன் எனக்காட்டிப், பரம்பொருளே அதற்குச் சார்பு என உணர்த்தும். கலாந்தம் பிராசாத யோகங்களைக் கொண்டு பரம்பொருளை அடையச்செய்யும். 'பரம்பொருளை அடைதல்' என்பது, ஆன்மாவும்

சிவமும் வேறு வேறாக நிற்பது அன்று: ஒன்றாகிவிடுவதும் அன்று. ஆன்மா சமாதிகூடி, 'அத்தனோடு ஒன்றிநிற்றல்' ஆகும். அதற்குச் சிவத்தினுடைய திருவருள் நிமித்த காரணமாகும். இதனை ஆசிரியர், "தான் அவனாகும் சமாதி" என்றும் (இவ்வியல், 2354), "வேதாந்த சித்தாந்த மேன்மை" (இவ்வியல், 2357) என்றும் கூறினார். "துவிதமும் அன்றி, அத்துவிதமும் அல்லாத பேதா பேதமோ இது" என்பார்க்குச், சைவ சித்தாந்தம் இதனைச் 'சுத்தாத்துவிதம்' என்று பெயரிட்டு. இறைவன் தனது படைப்புடன் 'ஒன்றாகியும்' 'வேறாகியும்', உடனாகியும்' நிற்கிறான் என்று விளக்கும். இறைவனும் ஆன்மாவும் பொருளால் வேறு; கலப்பால் ஒன்று என்றும் விளக்கும்.

மகா வாக்கியப் பொருள்

2360. **வேதாந்தம்தன்னில் உபாதி மேல் ஏழ்விட,**
நாதாந்த பாசம் விடும் நல்ல தொம்பதம்
மீதாந்த காரணோபாதி ஏழ் மெய்ப்பரன்
போதாந்த தற்பதம் போம் அசி என்பவே.

வேதாந்தந் தன்னி லுபாதிமே லேழ்விட[1]
[2]நாதாந்த பாசம் விடுநல்ல தொம்பத
[3]மீதாந்த காரணோ பாதியேழ் மெய்ப்பரன்[4]
[5]போதாந்த [6]தற்பதம் [7]போமசி யென்பவே. (18)

வேறு பாடம்: 1. லேழ்விடல் (த) 2. நாதாந்தம் பாசமற (ஒ) IV. 3. மாதாந்த (அ ஆ ஒ) I. 4. மெய்ப்பரம் (த) 5. போதாந்தங்கற்பகம் (ஒ) II. 6. தற்பரம் (இ ஒ) I. 7. போற்சிவமென்பவே (இ) IV.

கருத்து: வேதத்திற் கூறப்பட்டவாறு, நாதாந்தத்தில், ஏழுவகையான சீவ உபாதிகளாக எண்ணப்படும் தத்துவங்கள் நீங்கியவுடன், ஆன்மா உலகியற் பாசத்தைக் கைவிடும். அப்பொழுது, அது தத்வமசி மகா வாக்கியத்தில் உள்ள 'த்வம்' எனக் குறிக்கப்பட்டுத் தூய ஆன்மாவாய் நிற்கும். இறைவனின் குணங்கள் ஆகிய ஏழும் காரண உபாதிகள் எனப்படும். அவை ஆன்மாவினால், போதாந்தத்தில் உணரப்படுவன. அவையே 'அது' என்ற பொருள் உடைய 'தற்பதம்'. 'அசி' என்ற பதத்தால், தூய ஆன்மா இறைவனோடு ஒன்றி நிற்றல் கூறப்பட்டது.

'தொம்' - பதம் 'தத்பதம்' 'போம் அசி' என்க. உபாதி - வழி. நாதாந்தம் நாதாந்த அனுபவம் பெறுமிடத்து. 'மீதந்த' எனற்பாலது, 'மீதாந்த' என, எதுகை நோக்கி நீட்டல் விகாரம் பெற்றது.

காரண உபாதிகள் சர்வஞ்ஞத்துவம், சர்வ காரணத்துவம், சர்வாந்தர் யாமித்துவம், சர்வேசுவரத்துவம், சருவசிருட்டி, சருவதிதி, சர்வசங் காரம்.

சத்தியும் இல்லை

2361. அண்டங்கள் ஏழும் கடந்து, அகன்று, அப்பாலும்
உண்டு என்ற பேரொளிக்குள் ஆம் உளர்ஒளி
பண்டு உறுகின்ற பராசத்தி என்னவே
கொண்டன; அன்றி நின்றான் எங்கள் கோவே.

அண்டங்க ளேழுங் [1]கடந்தகன் றப்பாலு
முண்டென்ற பேரொளிக் [2]குள்ளா முளரொளி[3]
பண்டுறு [4]கின்ற பராசத்தி யென்னவே[5]
[6]கொண்டன [7]வன்றிநின் [8]றானெங்கள் கோவே. (19)

வேறு பாடம்: 1. கடந்த தனிப்பாலு (அ) IV. 2. குள்ளாலுளவொளி (த) 3. முள்ளாகி (இ) II; முளவொளி (விசு) (தி) (வ) 4. நின்ற (விசு) (வ) 5. யெனவேறி (அ) I. 6. கொண்டவனன்றிநின் (அ) I; கொண்டள (ஆ இ) I. 7. னன்றிநின் (த) 8. றான்றங்கள் (வ)

கருத்து: ஏழு அண்டங்களுக்கும் அப்பாலும் உள்ளதாகிய பேரொளிக்கு உள்ளே அசையும் ஒளி, அவனுடன் என்றும் உள்ள பராசத்தி என்று கூறுமாறு அளவற்ற சத்திகளுடன், அளவற்ற சத்திமான்களாகக் காட்சி தருபவன் இறைவன். அவன் தன் சொரூப நிலையில், சத்தி இன்றித் தனித்திருக்கின்றான்.

உளர்தல் - அசைதல். இறையின் வடிவு ஒளியும் அன்று என்க. ஏனெனில் ஒளியாக நிற்பவள் சத்தியே. சுட்டு அகன்ற நிலை என்பர் இதனை. ஒரு பொருளைச் சுட்டவேண்டும் எனில், அது ஏதேனும் ஒன்றைச் சார்ந்திருக்க வேண்டும். இறைவன் சத்தியைச் சாராது, சுட்டுக் கடந்து உள்ளான். இஃது அவனது தனிநிலை (Absolute State)

திசை துலங்கிற்று

2362. கோ உணர்த்தும் சத்தியாலே; குறிவைத்துத்
தேவு உணர்த்தும் கருமம்; செய்தி செய்யவே
பா அனைத்தும் படைத்து அர்ச்சனை பாரிப்ப,
ஓவ அனைத்து உண்டு ஒழியாத ஒருவனே.

கோவுணர்த் துஞ்சத்தி யாலே குறிவைத்துத்
தேவுணர்த் துங்கரு மஞ்செய்தி செய்யவே
பாவனைத் தும்படைத் தர்ச்சனை பாரிப்ப
வோவனைத் துண்டொழி யாத வொருவனே. (20)

வேறு பாடம்: 1. கோவனைத் (ஆ இ) IV. 2. தேவனைத் (ஆ இ) IV. 3. தாக்கினை (ஈ) II. 4. பாவிப்ப (இ) I; பாலிப்ப (ஆ) I.

கருத்து: சொரூபநிலையில் சத்தியும் இன்றித் தனித்துநிற்கும் சிவன், தடத்த நிலையில் உயிர்களுக்குத் தலைவன் (பதி) ஆகும் பொழுது, சத்தியை உடன் கொண்டு, உயிர்க்கு அனைத்தையும் உணர்த்தும். அத்திருவருளாலே அவன் குருவாக உருவங்கொண்டு வந்து, பதிஞானம் நல்குவான். அதன் வழியே, உயிர் அவன் தனக்கு அன்னியமின்மையை உணர்ந்து, அவனது திருவடியை அடையும் பொருட்டுப் புறவழிபாடும், அகவழிபாடும் செய்ய, முறையே தோத்திரப் பாடல்களையும் மந்திரங்களையும் அன்புடன் விரிவாகக் கூறிப் போற்றும், இறைவன், தன்னைத் தவிர, சத்தி உட்பட வேறு எதையும் ஆன்மா உணராதபடி, எல்லாவற்றையும் தான் நீங்கித், தனித்த நிலையில் (சொரூபத்தில்) நிற்பான்.

குறி - உருவம்; தெய்வ வடிவம் என்ற இரண்டு கொள்க. அதை ஒப்பத் 'தேவு' என்பதும் தெய்வம், குரு என்ற இருவரையும் குறிக்கும். கருமம் - செயல். ஈண்டுப் பாச ஞான, பசு ஞானங்களிலிருந்து விலகுதல். ஐம்புலன்கள் தீயவை என்றும், இறைவனே தலைவன் என்றும் குரு உணர்த்தலின், பாசங்களிலிருந்தும், தானே கருத்தா என்று எண்ணுவதினின்றும் விடுபட வேண்டும் என்று ஆன்மா உணரும். குரு அருளால் நோக்கி, இறைவனின் கருணையை உணர்த்துதலின், இறைவனே தனக்குச் சார்பு; உறவு எனத் துணிந்து, அன்புசெய்யும்; அடைய விரும்பும், அவ்வன்பும் அவ்விருப்பமும் வழிபாடாக வடிவம் கொள்கிறது.

அறிந்துகொள்ளாத ஆதரவு

2363. ஒருவனை உன்னார்; உயிர்தனை உன்னார்
இருவினை உன்னார்; இருமாயை உன்னார்
ஒருவனுமே உள் உணர்த்தி, நின்று ஊட்டி
அருவனும் ஆகிய ஆதரவானே.

ஒருவனை யுன்னா ருயிர்தனை யுன்னா
ரிருவினை யுன்னா ரிருமாயை யுன்னா
ரொருவனு மேயுள் ளுணர்த்திநின் றூட்டி
யருவனு மாகிய வாதர வானே. (21)

வேறு பாடம்: 1. யாதரத்தானே (த) யதுவாகா (இ) I.

கருத்து: உலகிற்குத் தலைவன் ஒருவன் உளன் எனக் கருதார். உயிரை அறியார். தம் இன்ப துன்பங்கள் தமது வினைப்பயனே என அறியார். சுத்த மாயை, அசுத்த மாயை என்பவற்றை, உலகின் மூலங்கள் என அறியார். தலைவனாகிய சிவனே இவற்றை உணர்த்தி, வினைப்பயனை அனுபவிக்கச் செய்து, அருவனாகவும் நின்று உயிருக்குத் துணையாகின்றான்.

"நம்மவன்"

2364. அரன் அன்பதால் 'நமது' ஆகிச், சிவத்து
வருமவை சத்திகள் முன்னா வகுத்திட்டு,
உரன் உறு சன்னிதி சேட்டிப்ப, வென்றிட்டு
இறல் உறத் தோயாச் சிவானந்தி ஆகுமே.

[1]அரனன்ப [2]தானம தாகிச் சிவத்து[3]
வருமவை சத்திகண் [4]முன்னா வகுத்திட்
டுரனுறு சன்னிதி சேட்டிப்ப வென்றிட்[5]
[6]டிறலுறத் [7]தோயாச் சிவானந்தி யாகுமே. (22)

வேறு பாடம்: 1. அரனன்பர் (ஈ ஓ) I. அரனவ னன்பாதல் - மாதி சிவாந்தம் (இ) IV; அரனவன் பாதல் மாதி - சிவானந்தம் (ஆ) I. 2. தாயை (ஒ) I; தானமா (ஈ) I. 3. சிவந்து (அ ஈ ஒ ஓ) I. 4. முன்ன ாள் (அ ஈ ஓ) I. 5. வென்றுந் (விசு) (தி) (வ) 6. டிறனுறத் (ஆ இ ஓ ஈ) I; டிறனுறு (விசு) திரனுறத் (த) 7. தேயாச் (இ) I.

கருத்து: தம் சிவபத்தி காரணமாகச் சிவனால் 'நம்மடியான்' என்று கொள்ளப்பட்டு, சிவச் சார்பில் வாழும் ஆன்மாக்கள், சிவன் தம்மைச் சத்திகளைக் கொண்டு பக்குவப்படுத்தித் தொழிற்படுத்த, அதனால் உலகியலை விலக்கி, தமது தற்போதமும் நீங்க, சிவத்தில் கலந்து, பேரின்பம் எய்தும்.

"நமது" எனச் சிவனால் கொள்ளப்படும் பெருமையை, "நம் தமர் ஊரன் என்றான் நொடித்தான் மலை உத்தமனே" என்ற சுந்தரர் வாக்கானும்,

"திண்ணென் கெடிலப் புனலும் உடையாரொருவர் தமர்நாம்" என்ற அப்பரடிகள் வாக்கானும் உணர்க. (சுந்தரர் தேவாரம், நொடித் தான்மலை, 9; திருநாவுக்கரசு சுவாமிகள் தேவா 4 - ஆம் திரு. திருவதிகை வீர.: 1.) இறல் - அற்றுப்போதல்.

இனம் இனத்தோடே

2365. [1]வேதாந்த தொம்பத மேவும் பசுவென்ப[2]
நாதாந்த பாசம் [3]விடநின்ற நற்பதி[4]
போதாந்த தற்பதம் போயிரண் டைக்கியஞ்
சாதார ணஞ்சிவ சாயுச் சியமே[5]. (23)

வேறு பாடம்: 1. வேதாந்தந் (ஆ இ) I. 2. பசுவென்பர் (ஈ) IV. 3. விடாநின்ற (இ) I. 4. துன்பதி (அ ஈ ஓ) III. 5. சியமாமே (ஓ) II.

கருத்து: வேதாந்தத்தில், தத்வமசி மகா வாக்கியத்தில் உள்ள 'த்வம்' என்பது ஆன்மா என்பர். அது நாதாந்தத்தில், தனது பாசத் தைவிட அருள் செய்பவன் பதியாகிய சிவன். அவனே போதாந்தத்தால் உணரப்படும் 'தத்' என்ற பதப் பொருள். அவன் இயல்பாகவே பாசங்களினின்றும் விலகியிருப்பவனாதலின், அவனும் பாசம் நீங்கப் பெற்ற ஆன்மாவும் ஒன்றி நிற்றல் வியப்பன்று. இயற்கையே. அதுவே சிவப் பேறாகிய பரமுத்தி ஆகும். அதுவே 'அசி' என்ற பதத்தால் உணர்த்தப்படும் பொருள்.

அற்புதமான வேதாந்தம்

2366. 'சிவம் ஆன' வேதாந்த சித்தாந்தம் ஆகும்
அவம் ஆகா வேத ஆகமம் - அவ்விரண்டும்;
சிவமாம் சதாசிவன் சேர்ந்து ஒன்றாமானால்,
நவமான வேதாந்தம் ஞானசித்தாந்தமே.

[1]சிவமான வேதாந்த சித்தாந்த மாகு
[2]மவமாகா வேதா கமமவ் விரண்டுஞ்
சிவமாஞ் சதாசிவன் [3]சேர்ந்தொன்றா மானா
னவமான வேதாந்த [4]ஞானசித் தாந்தமே. (24)

வேறு பாடம்: 1. சிவமாதல் (விசு) (தி) (வ) 2. மவமவ மாகு மவ்வவ் (அ ஓ ஓ) II. மவமபமவமா மவ்வீரிரண்டுஞ் (த) 3. செய்ததொன்றானால் (அ ஓ) I; செய்தொண்ணா நல்லன் (ஓ) I; செய்தொன்றானாரை (விசு) (தி) (வ) 4. ஞானம்சித் (த).

கருத்து: பொய்படாத சத்திய வாக்காகிய வேதங்களும், ஆகமங்களும் ஆன்மா சிவமாதல் பற்றி வெவ்வேறு வகையால் விளக்கும் வேதாந்தத்தையும், சித்தாந்தத்தையும் முறையே தம்முட் கொண்டவையாகும். (அதாவது வேத முடிவு வேதாந்தம்; ஆகம முடிவு சித்தாந்தம்). சிவம் சதாசிவனை அதிட்டித்து நின்று படைக்கும் சீவான்மா, இறுதியில், அச்சதாசிவனையும் கடந்து, சிவத்தோடு கலந்து, இரண்டில்லை என்னும்படி ஒன்று ஆகும். அஃது அற்புதமான வேதாந்த முடிவான சித்தாந்தமாகும்.

“சிவமான' என்பதற்கு வருவிக்கும் எழுவாயான “ஆன்மா” என்பதே “சிவமான சதாசிவனைச் சேர்ந்து” என்பதற்கும் எழுவாய் ஆகும். இதன் அற்புதம் யாது எனின், சிவம் சதாசிவனாக நின்று படைக்கும் பொழுது, அவன் வேறு; ஆன்மா வேறு. ஆனால், சிவத்தினது அருளால் ஆன்மா பக்குவப்பட்டு, சிவத்துடன் கலந்து, ‘சிவமேயாகி' நிற்கும்பொழுது, அவன் வேறு, ஆன்மா வேறு அல்லர். இவ்வாறு இருமையும் கொண்டதாதலின், இஃது அற்புதமான வேதாந்த முடிவு.

வேதாந்த முடிவே சித்தாந்தம்

2367. சித்தாந்தத் தேசீவன் முத்திசித் தித்தலாற்
சித்தாந்தத் தேநிற்போர் முத்திசித் தித்தவர்
சித்தாந்த வேதாந்தஞ் செம்பொரு ளாதலாற்
சித்தாந்த வேதாந்தங் காட்டுஞ் சிவனையே. (25)

கருத்து: சைவ சித்தாந்தஞானத்தின் பயனாக முத்தி அடையப் பெறுதலால், அந்நெறி நிற்போர் முத்திபெற்றோர் என்றே கருதத்தகும். சித்தாந்தம், வேதாந்தம் - இரண்டும், மேற்கூறியவாறு தம்முள் மாறுபாடு இன்றிச் செம்பொருள் ஆய்வே (**Inquiry of the Absolute**) அவை சிவத்தைத் தரிசிக்க உறுதியாகத் துணை செய்யும்.

வேதாந்தமும் சித்தாந்தமும் வேறு வேறல்ல; வேதாந்த முடிவே சித்தாந்தம் என்று கூறினார்.

உயிரினுள்ளே வெளி

2368. சிவனைப் பரமனுள் சீவனுள் காட்டும்
அவம் அற்ற வேதாந்த சித்தாந்தம் ஆனால்,
நவம் உற்ற அவத்தையின் ஞானம் சிவமாம்
தவம் மிக்கு உணர்ந்தவர் தத்துவத்தாரே.

சிவனைப் [1]பரமனுட் சீவனுட் காட்டு
மவமற்ற வேதாந்த சித்தாந்த மானா
னவமுற் றவத்தையின் ஞானஞ் சிவமாந்
தவமிக் குணர்ந்தவர் தத்துவத் தாரே. (26)

வேறு பாடம்: 1. பரனுடன் (ஒ) II; பரமனைச் (ஆ இ) IV; பரமனுஞ் (த)

கருத்து: ஆன்மா சிவத்தை, அகண்டாகார வெளியாகத் தன்னுள்ளே காணச் செய்வதாகிய வேதாந்த - சித்தாந்தப் பொருளை அனுபவத்திற் கொணர்ந்து பயின்றால், அவை வெற்றுரையன்றிப், பயனைக் கைம்மேல் தருவனவாயிருக்கும். மேலாலவத்தைகள் வியக்கத்தக்க வண்ணமாய் வாய்க்க, சிவம் ஞானமே வடிவமாய் விளங்கக் காணலாம். மிக்க தவத்தைச் (யோக சாதனையை) செய்து இதைத் தரிசிப்போரே உண்மையில், மெய்யுணர்வாளர் ஆவார்.

சிவம் ஞான (வடி)வாம் என மாறுக. பரமன் - மேலானவன். சொரூபமே தடத்தத்திற்கு மேலானதாதலின், பரமன் என்பதற்கு 'அகண்டாகார வெளியாயுள்ளவன்' எனப் பொருள் செய்யப்பட்டது.

சொரூபமும் தடத்தமும்

2369. தத்துவம் ஆகும் சகள, அகளங்கள்,
தத்துவம் ஆம் விந்து, நாதம், சதாசிவம்;
தத்துவம் ஆகும் சீவன்தன் தற்பரம்
தத்துவம் ஆம் சிவ சாயுச்சியமாமே.

தத்துவ மாகுஞ் சகள வகளங்க[1]
டத்துவ மாம்விந்து நாதஞ் சதாசிவந்
தத்துவ மாகுஞ் சீவன்றன் றற்பரந்
தத்துவ மாஞ்சிவ சாயுச்சிய மாமே. (27)

வேறு பாடம்: 1. வுகளங்க (அ ஈ ஓ) I.

கருத்து: அகண்டாகார வெளி சிவத்தின் சொரூபம் எனின், அவன் வடிவங்கள் பொய்யோ எனவரும் ஐயம் அறுக்கின்றார். சிவனது உருவமும் அருவமும் மெய்ப் பொருளே. அருவமாகிய விந்துவும் நாதமும் மெய்ப்பொருளே. அருவுருவமாகிய சதாசிவம் மெய்ப் பொருளே, ஆன்மா, தன் சிதாகாசத்தில் காணும் காட்சி மெய்ப் பொருளே. பின்னை, அகண்டாகாரவெளி காண்பதன் பயன் யாது எனின், அதுவே வீடு பேறு என்க.

உருவம், அருவம், அருவுருவம் - இவற்றைத் 'தடத்தம்' என்ப.

அனுபவத்தில் மாறுபாடு இல்லை

2370. வேதமோடு ஆகமம் மெய்யாம்; இறைவன் நூல்;
ஓதும் சிறப்பும் ஒன்று உள ஆதலின்,
நாதன் உரை அவை நாடில் இரண்டு அந்தம்
'பேதம் - அது' என்பர்; பெரியோர்க்கு அபேதமே.

வேதமோ டாகம மெய்யா மிறைவனூ[1]
[2]லோதுஞ் [3]சிறப்பு [4]மொன்றுள வாதலின்
னாத னுரையவை நாடி லிரண்டந்தம்
பேதம [5]தென்பர் பெரியோர்க் கபேதமே. (28)

வேறு பாடம்: 1. விறைவனு (அ) IV; யிறைவனை (ஓ) IV. 2. ளோதுஞ் (அ) IV. 3. சிறப்பொன்றுள்ளன (ஓ) II; பொதுவுஞ் (ஆ இ) IV; சிறப்பும் பொதுவுமென்றுள்ளன (சங்) 4. சிறப்புமொன்றுள்ளன (ஆ) IV; சிறப்பு மென்றுள்ளன (இ) I; தென்னிற் (த)

கருத்து: வேதமும் ஆகமமும் சத்திய வாக்கு என்றும், இறைவனால் கூறியருளப் பெற்றவை என்றும் கூறும் கூற்றுகளில் ஒவ்வொரு சிறப்பு உள்ளது. அவற்றை ஆராயின், இரண்டு முடிவுகள் கிடைக்கின்றன. ஒன்று வேதாந்தம்; ஒன்று சித்தாந்தம். அவை யிரண்டும் மாறுபட்டன என்பர். ஆனால் அனுபவம் உடைய பெரியோர்க்கு மாறுபாடு தோன்றுதல் இல்லை.

வேதமும் ஆகமமும் இறைவன் அருளியவை; அவை சத்தியம்; ஆதலால் அவை தம்முள் மாறுபடுவன என்று ஆசிரியர் கொள்ளாராயினார். ஆனால் வேதங்களை ஆய்ந்து கண்ட முடிவாகிய வேதாந்தமும், ஆகமங்களின் முடிவாகிய சித்தாந்தமும் இரு வேறு முடிவுகள் என்பதை இசைந்து, பெரியோர் மாறுபாடு அகற்றி நோக்குவர் என்று கூறுகின்றார். இவ்வியலில், முன்னர் "தானவன் ஆகும் சமாதி தலைப்படில் ஆன கலாந்த நாதாந்த யோகாந்தமும் ஏனைய போதாந்தம் சித்தாந்தமானது (பா. 2354) "வேதாந்த சித்தாந்தம் வேறிலா முத்திரை போதாந்த ஞானம்" (பா. 2359) என்று கூறுவதும், 2357 ஆம் பாடலில், நந்தி நமக்கு வேதாந்த சித்தாந்த மேன்மையைக் கூறி அருளினான் என வைத்த குறிப்பும், 2365 ஆம் பாடலில் பதி பசு பாசங்களை வேதாந்த மகா வாக்கியத்துடன் இணைத்துக் காட்டுவதும், "நவமான வேதாந்த ஞான சித்தாந்தமே" (பா. 2366) என்று

கூறுவதும் நோக்க, வேதாந்தத்தைப் பற்றிய - அதாவது வேதத்தின் முடிவு யாது என்பதைப் பற்றிய - முடிவான கருத்துச் சித்தாந்தமே என நாட்டுவதாகத் தோன்றுகிறது. "ஒரும் வேதாந்தத்து உச்சியிற் பழுத்த ஆரா இன்ப அருங்கனிபிழிந்து சாரம் கொண்ட சித்தாந்தம்' என்பர் பிற்பட வந்த குமரகுருபரரும் (பண்டார மும்மணிக் கோவை: பாடல் 11:32 - 44) 'மெய்யாம்' என்ற கூற்றின் சிறப்பும், 'இறைவன் நூல்' என்ற கூற்றின் சிறப்பும் கருதி, 'உள' எனப் பன்மை முடிவு கொடுத்தார். ஒன்று - ஒவ்வொரு கூற்றிலும் ஒரு சிறப்பு. "இறைவன் நூல்" என்பதை அடுத்து "என" என ஒருசொல் வருவிக்க.

பேரானந்தம்

2371. பரானந்தி மன்னும் சிவானந்தம் எல்லாம்
பரானந்தம்; மேல் மூன்றும் பாழ் உறு ஆனந்தம்;
விரா முத்திரானந்தம், மேல் நட ஆனந்தம்
பொராநின்ற உள்ளமே பூரிப்பி ஆமே.

[1]பரானந்தி மன்னுஞ் சிவானந்த மெல்லாம்[2]
[3]பரானந்த மேன்மூன்றும் பாழுறா னந்தம்
விராமுத்தி [4]ரானந்த [5]மேனடா னந்தம்[6]
பொராநின்ற வுள்ளமே பூரிப்பி யாமே[7]. (29)

வேறு பாடம்: 1. பிரானந்தி (இ) I. 2. மேலாம் (அ) I. 3. பரானந்தி (அ ஈ) I. 4. ராந்த (ஈ ஒ ஓ) I. 5. மேணட (ஈ ஓ) I; மேனட (ஒ) I மேணடா (அ) I; மென்பரானந்தம் (ஆ) IV; மெய்ந்நட (விசு) (தி) (வ) 6. ராத்தம் (ஓ) I; வாந்தம் (ஓ) I; ராந்தம் (ஈ) I; னான ந்தம் (விசு) (தி) (வ) 7. யாயமே (அ) I; யாவே (ஒ) I; யாயே (இ ஒ) I; பூரிப்பியமே (ஈ) I.

கருத்து: சீவன் முத்தர் எய்தும் சிவானந்தம் பரவெளியில், பரை (சத்தி) உள்ள போது, எய்தும் ஆனந்தமே. அதைக் கடந்து உள்ளன மூன்று பாழ்வெளிகள். அங்கு ஆன்மா எய்தும் ஆனந்தம், சாம்பவி, கேசரி என்ற முத்திரைகளால், பராகாயத்தில் எய்தும் ஆனந்தமாம். அது அப்பாலைக்கு அப்பாலாம் வெளியில் (சபையில்) சிவம் புரியும் நடனத்தைக் காண்பதாகிய ஆனந்தமாகும். அதனைக் காணப் பெறும் ஆன்மாவே பேரானந்தி ஆவான்.

நட, ஆனந்தம் - நடானந்தம். தீர்க்க சந்தி. மூன்று பாழ் - போதப்பாழ், சீவப்பாழ், சிவப்பாழ். பாழ்உறு ஆனந்தம் - உறு என்பதில் உகரம் கெட்டு மெய்யின் மேல் உயிர் ஏறியது. பூரிப்பி - பூரிப்பது. உள்ளம் - ஆன்மா.

வேத ஆகம ஒப்புமை

2372. ஆகும் கலாந்தம் இரண்டு அந்தம்; நாதாந்தம்
ஆகும் பொழுதில் கலை ஐந்தாம்; ஆதலின்
ஆகும் அரனே பஞ்ச அந்தகன் ஆம் என்ன
ஆகும் மறை ஆகமம் மொழிந்தானன்றே?

ஆகுங் கலாந்த மிரண்டந்த நாதாந்த
மாகும் பொழுதிற் கலையைந்தா மாதலி
னாகு மரனேபஞ் சாந்தக னாமென்ன
வாகு மறையா கமமொழிந் தானன்றே[1]. (30)

வேறு பாடம்: 1. தன்றே (ஆ இ) II;

கருத்து: மேலே பதினொரு பிராசாத கலைகளைப் பற்றிக் கூறியவர், இங்கு வேதமும் ஆகமமும் கலைபற்றிக் கூறிய ஒருமொழியைக் காட்டி, அவற்றின் ஒற்றுமை சாதிக்கின்றார்:

கலாந்தம் இரண்டு வகை. அவை அகரகலை முதல் உன்மனைகலை வரை உள்ள 16 கலைகளால் அமையும் 6 பிராசாத யோகங்களும்; அவற்றைக் கடந்து, சிவகலைகள் ஐந்தால் அமையும் 5 பிராசாத யோகங்களும் ஆகும். இவற்றுள் சிவகலை ஐந்தும் வியட்டிப் பிரணவம் ஆகிய ‘அ, உ ம, விந்து, நாதம்’ என்பவற்றில், நாதத்தின் முடிவில் வாய்த்து, 5 பிராசாத யோகங்களும் அமையும். (இந்நூல் 2356 ஆம் பாடல் உரை காண்க.) இவ்வைந்து யோகங்களின் பேறாக எய்தப் பெறுபவன் சிவனே. ஆதலின் சிவனே ‘பஞ்ச அந்தகன்’ - ஐந்தின் முடிவாக உள்ளவன் - என வேதமும் ஆகமமும் கூறுகின்றன.

உண்மையில், வியட்டிப் பிரணவமாகிய ஐந்தின் விரிவே பதினொரு பிராசாத கலைகளும் ஆகும். அவ்வகையிலும், சிவனைப் ‘பஞ்சாந்தகன்’ எனல் பொருந்தும்.

கலைகளைக் கூறுபவை ஆகமங்கள். “பஞ்சாந்தகன்” என வேதம் கூறுவது இவ்வாகமக் கருத்தைத் தழுவுதல் காண்க.

கலைகள் இரண்டு வகை. ஒன்று, நீங்கும் கலைகள். ஒன்று, ஆக்கும் கலைகள் - என, மேலே 2350 ஆம் பாடலால் அறிந்தோம். நீங்கும் கலைகள் ஆகிய நிவர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை என்ற கலைகள் அகரம் முதலிய 12 கலைகளை உடையதான விந்து சத்தியில் ஒடுங்கும் என்றும் அங்கு அறிந்தோம். எனவே இங்கு அவ்வைந்து கலைகளும் கருதப்படவில்லை என அறிக.

அகண்ட சிவத்தை அடையலாம்

2373. 'அன்று, ஆகும்' என்னாது, ஐவகை அந்தம்தன்னை
ஒன்றான 'வேதாந்த - சித்தாந்தம்' உள்ளிட்டு
நின்றால், யோகாந்தம் நேர்படும், நேர்பட்டால்
மன்றாடி பாதம் மருவலும் ஆனதே.

அன்றாகு [1]மென்னா தைவகையந் தந்தன்னை[2]
யொன்றான வேதாந்த சித்தாந்த முள்ளிட்டு[3]
நின்றா லியோகாந்த நேர்படு நேர்பட்டான்
மன்றாடி பாத மருவலு மாமே. (31)

வேறு பாடம்: 1. மென்னாதை (த) 2. தந்தம்மை (த) 3. முன்னிட்டு (அ) IV.

கருத்து: வேதாந்த - சித்தாந்தம் உள்ளிட்ட ஐந்து வகை அந்தங்களையும், அவை தம்முள் ஒன்று ஆகும், ஒன்று ஆகாது என வேறுபடுத்தாது, அவை ஒன்றற்கு ஒன்று துணை செய்வனவே எனக் கொண்டு, யோகம் பயின்றால், பிராசாத யோகம் வாய்க்கும். அங்ஙனம் வாய்த்தால், பரமாகாயமாகிய மன்றத்தில் ஆடும் சொரூப சிவத்தை அடையலாம்.

இது மேற்பாட்டின் பொருட் டொடர்ச்சியே. நான்கு அந்தந்தன்னை வேதாந்த - சித்தாந்தத்துடன் இணைத்து என்று கொள்க. 'வேதாந்த - சித்தாந்தம்' ஓர் அந்தமே என மேலே நிறுவியதை இங்கு மேற்கொண்டார்.

வேதங்களின் முடிவு

2374. அனாதியே சீவன் ஐம்மலம் அற்று அப்பாலாய்
அனாதி அடக்கித் தனைக்கண்டு. அரனாய்த்
தன்ஆதி மலம் கெடத் தத்துவ - அதீதம்
வினாவு நீர் பாலாதல் வேதாந்த உண்மையே.

[1]அனாதியே [2]சீவனைம் மலமற்றப் பாலா
யனாதி யடக்கித் தனைக்கண் டரனாய்த்
தனாதி மலங்கெடத் தத்துவா தீதம்
வினாவுநீர் பாலாதல் வேதாந்த வுண்மையே. (32)

வேறு பாடம்: 1. அனாதி (ஆ ஊ ஓ) 2. சிவன்னைம் (ஈ ஒ ஓ) சீவன்னைம் (த) 3. மனாதி (த) 4. மடங்கத் (ஆ இ) 5. தனைக்கண்டு மாயை (ஆ ஊ) 6. மலங்கெட்ட (ஈ).

கருத்து: தோற்றமில்லாததாகிய உயிர், ஐந்து மலம், மலமற்றவனும் தோற்றம் இல்லாதவனுமாகிய இறைவன் - இம் முப்பொருள்களுள், உயிர் மாயேயமாகிய ஐம்புலன்களை அடக்கி, 'தான் அவற்றில் அடங்குவது அன்று, வியாபக அறிவை உடையது' என்ற உண்மையை உணர்ந்து தன் ஆதிமலமாகிய ஆணவமலம் நீங்க அனைத்துத் தத்துவங்களுக்கும் அப்பாற்பட்டவனாகிய சிவனை அடைந்து, அவனேயாகி, பாலில் கலந்த நீர் பால் போலும் நிறமும் குணமும் பெறுதல் போலாவது வேதங்களின் முடிந்த கருத்தாகும்.

2375. உயிரைப் பரனை யுயர்சிவன் றன்னை
யயர்வற் றறிதொந் தத்தசி யதனாற்
செயலற் றறிவாகி யுஞ்சென் றடங்க
வயர்வற்ற வேதாந்த சித்தாந்த மாமே. (அ, ட)

2376. மன்னிய சோகமா மாமறை யாளர்தஞ்
சென்னிய தான சிவோகமா மீதென்ன
அன்னது சித்தாந்த மாமறை யாய்பொரு
டுன்னிய ஆகம நூலெனத் தோன்றுமே. (ஆ)

2377. முதலாகும் வேத முழுதா கமமப்
பதியான வீசன் பகர்ந்த திரண்டு
முதிதான வேத முறைமுறை யாலாந்
ததிகாதி வேதாந்த சித்தாந்த மாகவே. (அ, க)

123. பதி பசு பாசம் வேறின்மை

உறவுடைய மூன்று

2378. அறிவு அறிவு என்ற அறிவும் அனாதி,
அறிவுக்கு அறிவாம் பதியும் அனாதி,
அறிவினைக் கட்டிய பாசம் அனாதி,
அறிவு பதியின் பிறப்பு அறும் தானே.

அறிவறி வென்ற வறிவு மனாதி
யறிவுக் கறிவாம் பதியு மனாதி
யறிவினைக் கட்டிய பாச மனாதி
யறிவு பதியிற் பிறப்பறுந் தானே. (1)

கருத்து: அறிபவன் எனக் கூறப்படும் அறிவுப் பொருள் (சித்துப்பொருள்; சேதனன்) ஆகிய ஆன்மா தோற்றமில்லாதது. ஆன்மாவுக்கு உயிராயிருந்து பொருளைக் காட்டும்பேரறிவுப் பொருள் ஆகிய பதியும் தோற்றமில்லாதவன். ஆன்மாவுடன் இருந்து அறிவை மறைக்கும் பாசமும் தோற்றமில்லதது. தோற்ற மில்லையாதலின் அழிவுமில்லை. ஆக, பசு, பதி, பாசம் ஆகிய இம்மூன்றும் என்றும் உள்ளவை. அழியாதவை. அதே சமயம் தம்முள் தொடர்புடையவை. பேரறிவு ஆன்ம அறிவில் பதிந்தால், ஆன்மாவின் (பாசம் விலக, அதன் விளைவாக அதுவரை தொடர்ந்து வந்து கொண்டிருந்த) பிறவி வட்டம் அற்றுவிடும்.

அறிவு அறிவு என்ற அறிவு - என்பதால் ஆன்மா சித்துப் பொருள் என்பதையும், அறிதலாகிய செயலை உடையவன் என்பதையும் கரணங்கள், பொறிகள், புலன்கள், குணங்கள், பூதங்கள் - ஆகிய தத்துவங்களைச் சார்ந்து நின்று அறிகின்றான் என்பதையும் உணர்த்தினார். அடுத்து அவ்வாறு சாரினும், இறைவன் காட்டினால் தான் அறிவான் என்றார். இதனால் ஆன்மா சிற்றறிவு, இறைவன் தானே அறியும் பேரறிவு' எனப் புலப்படுகிறது. இறைவனது அறிவு 'அருள்' எனப்படும். 'அருள் ஆன்மாவின் அறிவில் பதிந்தால்' - என்பதால், இறைவனை வழிபாடாற்ற வேண்டும் என்றும் அதற்கு இறைவன் இரங்கி, குருவாய்த் தோன்றி, செய்யத்தக்கது இது என்று அறிவிக்க வேண்டும் என்றும் புலப்படுகின்றது. 'பிறப்பு அறும்' என்று கூறவே, அறுதற்கு ஏதுவாக, ஆணவம், கன்மம் என்ற மலங்கள் விலகும் என்பது புலப்படுகின்றது.

அணை உடைத்த வெள்ளம்

2379. பசு பல கோடி பிரமன் முதலா;
பசுக்களைக் கட்டிய பாசம் மூன்று உண்டு;
பசுத்தன்மை நீக்கி, அப்பாசம் அறுத்தால்
பசுக்கள் தலைவனைப் பற்றி, விடாவே.

பசுப்பல கோடி பிரமன் முதலாப்
பசுக்களைக் கட்டிய [1]பாசமூன் றுண்டு
பசுத்தன்மை [2]நீக்கியப் பாச மறுத்தாற்
பசுக்க டலைவனைப் பற்றி விடாவே[3]. (2)

வேறு பாடம்: 1. பாசமொன் (இ) I. 2. நீக்கி (அனை. சுவ.); நீங்கியப் (த) (விசு) பதிப்பில் உள்ளவாறு இங்குப் பதிப்பிக்கப்பட்டது. 3. விடாதே (ஓ ஓ) I.

கருத்து: சகலான்மாக்களுள் அதிகாரம் பெற்றுப் பதவி பெறும் பிரம, விட்டுணுக்களாகிய காரியேசுரர் முதலாகப் பலப்பல கோடிப் பசுக்கள் (ஆன்மா என்பது சொரூபப் பெயர், பசு, தடத்தப் பெயர்) உண்டு. பசுவின் அறிவை மறைக்கும் மலம் மூன்று. அவை ஆணவம், கன்மம், மாயை என்னும் பெயருடையவை. ஆன்மாக்கள் தவத்தால் தற்போதத்தை விலக்கி, மும்மலங்களையும் நீக்கினால், அவை தம் தலைவனாகிய சிவத்தைச் சார்ந்து, பின் அதனிடமிருந்து நீங்கமாட்டா.

பசு என்ற பெயர், உயிருக்கு, பாசத்தால் கட்டப்பட்டமையால் ஏற்பட்டது. அந்தக் கட்டு நீக்கி, உயிர் தனது இயல்பான வியாபகத் தன்மையைப் பெற்று பிறகு தனது அறிவு எனத் தனியே எண்ணும் நிலையையும் விட்டால், சிவனது அருள் வியாபகத்துள் கலந்து நிற்கும். அதுவே "சிவமாதல்" - என்பது. பிறகு, அது மலத்துடன் சேர்வது இல்லை.

மன விளக்கு மலை விளக்காக

2380. கிடக்கின்றவாறே கிளர்பயில் மூன்றும்
நடக்கின்ற ஞானத்தை நாள்தொறும் நோக்கித்
தொடக்கு ஒன்றும் இன்றித் தொழுமின்; தொழுதால்
குடக்குன்றில் இட்ட விளக்கு-அது ஆமே.

கிடக்கின்ற வாறே [1]கிளர்பயின் மூன்று
நடக்கின்ற ஞானத்தை நாடொறு நோக்கித்
[2]தொடக்கொன்று மின்றித் தொழுமின் றொழுதாற்
குடக்குன்றி லிட்ட விளக்கது வாமே. (3)

வேறு பாடம்: 1. கிளர்பயன் (விசு) (தி) (வ) (த) 2. துடக்கொன்று (அ ஒ) I.

கருத்து: மாந்தரே, நீவிர் பாசத்தினால் அறிவு மறைப்புண்டு, பிறவிக் குழியில் கிடக்கும் இந்நிலையிலே, தவச்செயலில் ஈடுபட்டுப் புரிகின்ற சரியை, கிரியை, யோகம் என்ற மூன்று வகை வழிபாடு களினாலும் முறையே வளரும் மெய்யுணர்வை, விடாது மனத்தில் இருத்தி, எதையும் வேண்டாது, சிவத்தை வணங்குக. இடரினும் தளரினும் உமதுறு நோய், தொடரினும், துன்பமுற்று விட்டுவிடாமல் வணங்குக. வணங்கினால், குடத்தினுள் வைத்த விளக்குப்போல அடங்கியுள்ள உமது அறிவு, மெய்யுணர்வால் மலையின் மேல் ஏற்றிய விளக்குப் போலப் பரவிய ஒளியுடைய தாகும்.

குட விளக்குப் போன்ற அறிவு குன்றிவிட்ட விளக்குப் போலாகும் என்க.

சிறைசெய்தவனே விடுதலை செய்ய வேண்டும்

2381. பாசம் செய்தானை, படர்சடை நந்தியை
நேசம் செய்து ஆங்கே நினைப்பர்; நினைத்தலும்,
கூசம் செய்து உன்னைக் குறிக்கொள்வது அவ்வண்ணம்
வாசம் செய் பாசத்துள் வைக்கின்றவாறே.

பாசஞ்செய் தானைப் படர்சடை நந்தியை
நேசஞ்செய் தாங்கே நினைப்பர் நினைத்தலுங்[1]
கூசஞ்செய் [2]துன்னைக் குறிக்கொள்வ தவ்வண்ணம்[3]
வாசஞ்செய் பாசத்துள் வைக்கின்ற வாறே. (4)

வேறு பாடம்: 1. நினைத்தாலுங் (அ ஒ) I. 2. துன்னிக் (த) 3. தெவ்வண்ணம் (விசு) (வ) (தி).

கருத்து: ஆன்மாவுக்கு, அது மல நீக்கம் பெறுதற்காகப் பிறப்பை அளிப்பவனை-விரிந்து பரந்த சடையை உடைய சிவனை - அன்பர் அன்பு கொண்டு வழிபடுவர். (அவ்வாறு நீயும்) அவனை நினைத்து வழிபட்டால், இறைவன் உன்னைத் துன்பம் நலிவதற்கு மனம் கூசி, உன்னை எவ்வாறு, தான் கருத்தாவாக இருந்து பிறவியில் விட்டானோ அவ்வாறே, கருத்தாவாக இருந்து, உன்னைத் தன் திருவடியிற் சேர்க்கக் கருத்துக்கொள்வான்.

பிறவியைத் தந்தவனே அதனை நீக்க இயலும் என்றார். ஆணவ மலம் உயிரைக் கட்டுப்படுத்துவதாயினும், அது சடமாதலின், உயிரின் கண் இயங்கி மறைத்தல் - தொழிலைச் செய்வதற்கு இறைவன் கருத்தாவாக இருந்து இயக்க வேண்டும் என்ற கருத்தும்விளைந்தது காண்க. "வாசம் செய் பாசத்துள் வைக்கின்றவாறே - அவ்வண்ணம் உன்னைக் குறிக் கொள்வது" எனக் கூட்டுக.

போனால் வராது

2382. விட்ட விடம் ஏறாவாறு போல், வேறாக
விட்ட பசு, பாசம் மெய்கண்டோன் மேவுறான்
கட்டிய கேவலம் காணும் சகலத்தைச்
சுட்டும் நனவில், அதீதத்துள் தோன்றுமே.

விட்ட [1]விடமேறா வாறுபோல் வேறாக[2]
விட்ட பசுபாச மெய்கண்டோன் மேவுறான்
கட்டிய கேவலங் காணும் சகலத்தைச்
[3]சுட்டு நனவி [4]லதீதத்துட் டோன்றுமே. (5)

வேறு பாடம்: 1. விடமேறு (ஓ) I. 2. வேறாகி (ஓ) I; வேறாக்கக் (ஈ) I. 3. சுட்ட (ஓ) I. 4. லதீதத்திற் றோயுமே (த).

கருத்து: உடலினின்றும் இறங்கிய நஞ்சு மீண்டும் அங்கு ஏறாமை போல, மெய்யுணர்வு எய்திய ஆன்மா, தன்னின் வேறாகத் துணிந்து விலக்கிய மலத்தை மீண்டும், தன்னைக் கட்டுப்படுத்தவிடான். அந்த மலத்தின் தன்மை அவனுக்கு எப்பொழுது உணர்விற் புலப்படும் எனின், மும்மலங்களுடனும் வாழும் 'சகல' நிலையிலேயே உடம்போடு இருக்கும் பொழுதே - தன்னைச் சூழ உள்ளவற்றை உணரும் விழிப்பு நிலையில் உள்ள பொழுதே, அவன் சுத்த துரியாதீதத்தை எய்துவான். அப்பொழுது புலப்படும் என்க.

தன்னையும் காட்டாது, பிறவற்றையும் காட்டாமை ஆணவமலத்தின் தன்மை. எனவே சாதாரண நிலையில், கீழாலவத்தையின் விழிப்பு நிலையில் (சாக்கிரத்தில்) - அதை உணர இயலாது. ஆகவே, ஆணவமலம் ஆன்மாவின் அறிவைக் கட்டுப்படுத்தி - தடைபடுத்தி மயங்கச் செய்யும் இயல்பை, அதன் தனி நிலையைக், "கட்டிய கேவலம்" எனக் கூறி, அதனைச் சுத்தாவத்தையில் உணரலாம் என்றார். சுத்தாவத்தை ஐந்தையும் முன்பு இவர் 'நனவு' என்றே குறிப்பிட்டதை யும் நினைக.

கருணையால் அருள்பாலித்தான்

2383. நாடும் பதியுடன் நற் பசு, பாசமும்
நீடுமா நித்த நிலை அறிவார் இல்லை
நீடிய நித்தம், பசு, பாச நீக்கமும்
நாடிய சைவர்க்கு நந்தி அளித்ததே.

நாடும் பதியுட னற்பசு பாசமு
நீடுமா நித்த நிலையறி வாரில்லை[1]
நீடிய நித்தம் பசுபாச நீக்கமு
நாடிய சைவர்க்கு நந்தி யளித்ததே[2]. (6)

வேறு பாடம்: 1. வாளர்க்கு (ஆ இ) IV. 2. யளித்தானே (அ ஈ ஒ) III. இப்பாடம் எழுத்தளவாற் பொருந்தினும், ஓசையாற் பொருந்திலது.

கருத்து: இறைவன் நல்கியருளும் அருளறிவால் ஆய்ந்துணரத்தக்க பதி, பசு, பாச இயல்புகளையும், நித்திய வாழ்வின் இயல்பினையும், பாசஞானம் ஒன்றுமே உடையார் அறியார். சிவனை வழிபட்ட சைவ அன்பர்கட்கு, அவன் கருணையால் அவற்றை உணர்த்தியதோடு, பசுபோத நீக்கம் செய்து கொள்ளவும், பாசத்திலிருந்து நீங்கவும், அவன் திருவடிக்கீழ் என்றும் இன்பம் பெருக வாழவும் அருள்பாலித்தான்.

சிவாலயத்தில் பதி பசு பாசம்

2384. ஆய பதி தான் அருட் சிவலிங்கமாம்,
ஆய பசுவும் அடல் ஏறு என நிற்கும்,
ஆய பலிபீடம் ஆகும்நற் பாசமாம்,
ஆய அரன்நிலை ஆய்ந்து கொள்வார்கட்கே.

ஆய பதிதா னருட்சிவ லிங்கமா
மாய பசுவு மடலே றெனநிற்கு
மாய பலிபீட மாகுநற் பாசமா
மாய [1]வரனிலை யாய்ந்துகொள் வார்கட்கே. (7)

வேறு பாடம்: 1. பரமா மாய்ந்துகொள் (இ) IV.

கருத்து: வீடுபேறு என்னும் ஆக்கமாகத் திகழும் சிவத்தினது தடத்த நிலையை அவன் நல்கிய அருளறிவு கொண்டு ஆய்ந்து, அனுபவத்திற் கொள்ளும் அன்பருக்கு, பதியாக வீற்றிருந்து ஐந்தொழில்களுள் 'அருளுதல்' - தொழிலைச் செய்தருளும் சதாசிவ மூர்த்தி சிவலிங்கத் திருமேனியாகும். அவன் திருவருளுக்குப் பாத்திரமாகிய பசு (உயிர்) அவன் திருமுன்பு இடபதேவராக இருக்கிறது. அவ்வுயிருக்குச் சிவானுபவத்தை விளை வித்து நிற்றலால் நல்லதாக மாறிவிட்ட பாசம் (ஆணவமலம்) பலிபீடமாக உள்ளது.

பதி (சதாசிவன்) பசு, பாசம் என்பன தடத்தப் பெயர்கள். இவைகட்கு முறையே சிவம், ஆன்மா, சகசமலம் என்பன சொரூபப் பெயர்கள். இப்பெயர்களை முறையே 'மேற்கோட் பெயர், இயற்பெயர்' எனக் கொள்ளலாம்.

பதி அணுகின் பாசம் ஓடும்

2385. பதி, பசு, பாசம் பயில்வியா நித்தம்
பதி, பசு, பாசம் பயில்வோர்க்கு ஆறு ஆகி,
பதி, பசு, பாசம் பற்றுஅற நீக்கும்
பதி, பசு, பாசம் பயில நிலாவே.

பதிபசு பாசம் பயில்வியா நித்தம்[1]
பதிபசு பாசம் [2]பயில்வோர்க்கா றாகிப்
பதிபசு பாசத்தைப் பற்றற நீக்கும்[3]
பதி பசு பாசம் பயில நிலாவே. (8)

வேறு பாடம்: 1. நிற்கப் (த) 2. பகர்வர்க்காறாக்கிப் (த) 3. நிற்கும் (அ) IV.

கருத்து: பதியாகிய சிவன், அன்பரை நாடோறும் பதி, பசு, பாசங்களின் உண்மை நிலையை உணரவும் எண்ணவும் செய்வான். பாசத்தை விடுதற்கும், பசுபோதத்தைக் கொள்ளாமலிருத்தற்கும், பதியை வழிபடுதற்கும் முயலும் அன்பர்க்கு நன்மார்க்கமாகத் தானே அமைந்து, பசு போதத்தையும், பாசத்தையும், அவை உயிரைப் பற்றாதபடி நீக்குவான். இதற்கு நெறி திருவைந்தெழுத்தை முறைப்படி ஓதலும் தியானித்தலும் ஆகும். அது செய்தால் பதி, உயிரின் அறிவின் நிலவுவான், பசு போதமும் பாசத்தடையும் நில்லா.

நிலாவே என்பது இருபொருள் தந்தது. நிலாவுதலை யுடையது என்பது மற்றொரு பொருள்.

பேறும், பெறும் வழியும்

2386. பதியும் பசுவொடு பாசமு மேலைக்
கதியும் பசுபாச நீக்கமுங் காட்டி
மதிதந்த வானந்த மாநந்தி காணுந்[1]
துதிதந்து வைத்தனன் சுத்தசை வத்திலே. (9)

வேறு பாடம்: 1. தானுந் (ஈ) I.

கருத்து: அன்பருக்கு அருளறிவு நல்கியருளிய, ஆனந்தமே வடிவாகிய சிவபெருமான், சுத்தசைவ நெறியை உலகிற்கு அளித்தருளி, அதில் பதி, பசு, பாசங்களை உண்மையான் அறியும் மெய்யுணர்வு பற்றியும், வாழ்வின் பின் அடையத்தகும் உயர் கதியைப் பற்றியும், பசுபோத, பாச ஞான நீக்கத்திற்குரிய வழியைப்

பற்றியும் கூறியருளியதோடு, இவற்றைப் பயனாகத் தரும் திருவைந்தெழுத்தாகிய துதியையும் நல்கியருளினான்.

வாழ்வு தந்த தலைவன்

2387. அறிந்த அணு மூன்றுமே யாங்கணும் ஆகும்
அறிந்த அணு மூன்றுமே யாங்கணுமாகில்,
அறிந்த அனாதி வியாத்தனும் ஆகில்,
அறிந்த பதி படைப்பான் அங்கு அவற்றையே.

[1]அறிந்தணு [2]மூன்றுமே யாங்கணு மாகு
மறிந்தணு [3]மூன்றுமே யாங்கணு மாகி[4]
[5]லறிந்த வனாதி வியாத்தனு மாகி[6]
[7]லறிந்த பதிபடைப் பானங் கவற்றையே. (10)

வேறு பாடம்: 1. அறிந்தவை (ஒ) IV. 2. மூன்றுமெய் (த) 3. மூன்றுமெய் (த) 4. மாக (விசு) (வ) 5. வறிந்த (விசு) (வ) 6. மாவ (விசு) (வ) 7. னறிந்த (விசு) (வ), யறிந்த (சங்)

கருத்து: எவ்விடத்திலும் உள்ள ஆன்மாக்கள், சித்துப் பொருளாயும், மூன்று வகைகளாகவும் உள்ளன. அவை விஞ்ஞானா கலர், பிரளயா கலர், சகலர் என்பவை. ஆன்மாவினிடம் சிவம் 'ஒன்றாகி' உள்ளான். ஆன்மாவுக்குச் சிவன் தனு, கரண, புவன, போகங்களைப் படைத்து அளித்து அவற்றுக்குத் தலைவனாக உள்ளான்.

அறிந்த அணு என்பதில் அகரம் தொக்கது. வியாத்தன் - வியாபிக்கப் பட்டவன், இங்கு ஆன்மா. இறைவன் வியாபி.

உடலும் உணர்வும் சிவம்

2388. படைப்பு-ஆதி ஆவது பரசிவம், சத்தி
இடைப்பால் உயிர்கட்கு அடைத்து, இவை தூங்கல்,
படைப்பு-ஆதி சூக்கத்தைத் தற்பரம் செய்ய,
படைப்பு-ஆதி தூய மலம் அப் பரத்திலே.

படைப்பாதி [1]யாவது பரசிவஞ் சத்தி
[2]யிடைப்பா லுயிர்கட் [3]கடைத்திவை தூங்கல்[4]
படைப்பாதி சூக்கத்தைத் தற்பரஞ் செய்யப்
[5]படைப்பாதி [6]தூய மலமப் பரத்திலே. (11)

வேறு பாடம்: 1. யாவ (த) 2. யடைப்பா (சங்) 3. கிடைக்கிவை (ஒ) I. 4. தாங்கல் (ஈ) IV; வாங்கப் (ஆ இ) IV. 5. படைப்பாய (ஒ) II. 6. தூலமும் பாசத்திலாமே (ஆ இ) IV; தூலமப்பாசத்துளாமே (த).

கருத்து: படைத்தல், காத்தல், ஒடுக்கல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்களால் இறைவன், உயிர்க்குச் செய்வன யாவை என்று கூறுகின்றார். உயிர்களுக்கு உடல், பொறிகள், உலகம், நுகர்வன - இவற்றைப் படைத்து அளிக்கும் தலைவர் பரசிவனும், பராசத்தியுமாம். இவர்கள் உயிர்களைக் காத்தற்கண், அவற்றின் வினைப் பயன்களை அனுபவிக்கச் செய்வர். உயிர்களும் செயற்படும். பின்னர், அருளுதற்கண், உயிரினது சூக்குமமான (சூக்கும உடலெனச் சொல்லப்படுவதாகிய) உணர்வைச் சிவன், அருளுணர்வாக்குவான். அதன் வினைவாக, அதுவரை ஆணவ மலத்தின் மறைப்பால் புலன் வயப்பட்டும், மனம் முதலிய அகக் கருவிகளாலும் அறிந்து வந்த உயிர், அருளறிவால் அறியத் தொடங்கும். அதன் வினைப்பயன்கள் அதனைப் பற்றமாட்டா. அசுத்த மாயா காரியமான உடம்பு சுத்தமாயா காரியமாக மாறி, அதன் கரணங்கள் யாவும் சிவகரணங்களாகும். உயிருணர்வு சிவவுணர்வாகும்.

அடைத்து - அடையச் செய்து. இதனைச் 'செய' என்னும் வாய்பாடாக மாற்றுக. தூங்கல் - உயிரனுபவத்தில் தலைப்படாது, உலகியலிலேயே உழலுதல். 1 ஆம் அடியிலும், 3 ஆம் அடியிலும் உள்ள 'படைப்பாதி' - படைப்புக் காரணரான சிவன். 4 ஆம் அடி: படைப்பாதி - பிறவிக்கு ஏதுவான மலம். ஈண்டு அசுத்த மாயை. தூய மலம் - சுத்த மாயை. "அப்பரத்திலே, படைப்பாதி தூயமலம் ஆகும்" என மாற்றி, ஒரு சொல் வருவிக்க. பரத்திலே - உயிருணர்வு பரவெளியில் சிவானுபவம் எய்தும் பொழுது. கரணம் - கருவி.

ஐந்தொழில் ஈசன்

2389. ஆகிய சூக்கத்தை அவ்விந்து, நாதமும்,
ஆகிய சத்தி, சிவ, பரம் - மேல் ஐந்தால்
ஆகிய சூக்கத்தில் ஐங்கருமம் செய்வோன்
ஆகிய சூக்கத்து ஈசானனும் ஆமே.

ஆகிய [1]சூக்கத்தை யவ்விந்து நாதமு
மாகிய சத்தி சிவபர மேலைந்தா
லாகிய சூக்கத்தி லைங்கரு மஞ்செய்வோ
னாகிய [2]சூக்கத்தீ சானனு மாமே. (12)

வேறு பாடம்: 1. சூக்கத்தி லைவிந்து (ஆ இ) IV. 2. தூயத்தீ (அ ஈ) I; தூயவீ (ஒ) I; தூலத்தீ (ஆ இ) III; சூகத்தீ (ஒ) V. வந்த சொல்லே வரத் தொடுக்கும் ஆசிரியரின் தொடைநலம் கருதி, இப்பாடம் திருத்தி மேற்கொள்ளப்பட்டது.

கருத்து: உருவமில்லாததாகிய உயிரைச் சிவசத்தியர் ஐந்தொழில் களுள் படுமாறு, விந்து, நாதம், சிவம், சத்தி, பரம் என்ற ஐந்து நிலைகளுள் பரத்தில் இருந்து கொண்டு, சூக்குமமாகச் சங்கற்பிக்க, அவற்றைச் செயலாகச் செய்வோன், சூக்குமமான பரசிவத்தால் உருவாகிய ஈசான முகத்தினையுடைய சதாசிவனாவான்.

பரம் - பரசிவம், பராசத்தி. விந்து, நாதங்களே சத்தி சிவம். சத்தியும் சிவமும் அளவொப்ப இணைந்தவனே சதாசிவன். சதாசிவனின் ஐந்து முகங்கள்: ஈசானம், அகோரம், வாமதேவம், தத்புருடம், சத்தியோ சாதம். சூக்கத்தினின்று தோன்றிய என ஐந்தனுருபு விரிக்க. சதாசிவன் தூல மூர்த்தி; பரசிவன் சூக்குமமூர்த்தி.

சங்கற்பத்தால் ஐந்தொழில் ஆற்றும் பதி

2390. மேவும் பரசிவம், மெய்ச்சத்தி, நாதமும்
மேவும் பரவிந்து, ஐம்முகன், வேறு ஈசன்
மேவும் உருத்திரன், மால், வேதா மேதினி
ஆகும்படி படைப்போன் அரனாகுமே.

மேவும் பரசிவ [1]மெய்ச்சத்தி நாதமு
மேவும் [2]பரவிந்து வைம்முகன் வேறீசன்
மேவு முருத்திரன் மால்வேதா மேதினி
யாகும் படிபடைப் போனர னாகுமே. (13)

வேறு பாடம்: 1. மேசத்தி (ஆ) IV; மேற்சத்தி (விசு) (தி) (வ) 2. பரின்விந்து (த).

கருத்து: சிவபெருமான் உலகத்தைப் படைப்பிக்கும் பொருட்டுப் பரசிவம், பரசிவை, நாதம், விந்து, சதாசிவன், மயேச்சுரன், உருத்திரன், திருமால், பிரமன் என்னும் ஒன்பது தெய்வங்களையும் படைத்தான்.

சிவபெருமானது சங்கற்பத்தால் உலகை ஐந்தொழில் செய்பவர் இவர்கள் "பரசிவம் பரவிந்து நாதமும் மெய்ச்சத்தியும்" எனக் கொண்டு கூட்டுக. இதன் விரிவை முன்னர்ச் 'சர்வ சிருட்டி' இயலிற் கண்டோம்.

அவ்வியலில், ஆசிரியர் இவற்றுடன் சிவன், சத்திகளையும் கூறியுள்ளார். இறைவன் பதி என்பதற்காக ஈண்டும் கூறினார்.

ஒன்று அவன் தானே

2391. படைப்பும், அளிப்பும், பயில் இளைப்பாற்றும்,
துடைப்பும், மறைப்பும் முன் தோன்ற அருளும்,
சடத்தை விடுத்த அருளும் சகலத்து
அடைத்தனன் ஆதியை ஐந்து எனலாமே?

படைப்பு மளிப்பும் பயிலிளைப் பாற்றுந்
துடைப்பு மறைப்புமுன் [1]றோன்ற வருளுஞ்
சடத்தை விடுத்த வருளுஞ் சகலத்
[2]தடைத்தன னாதியை யைந்தென லாமே. (14)

வேறு பாடம்: 1. றோன்றா (இ) I; தோன்றுமருளுஞ் (த) 2. தடைத்தவ (ஒ) IV; தடத்தவ (சங்).

கருத்து: படைத்தல், காத்தல், ஒடுக்கல், மறைத்தல் என்னும் நான்கு தொழில்களும் உரிய தெய்வங்களைக் கொண்டு செய்விக்கும் அருளும், மாந்தர் மெய்யுணர்வு பெற்றுப் பிறவியை நீக்கும் அருளும் சகலநிலையில் உள்ள உயிர்களுக்கு நல்குபவன் பதியாகிய சிவமே. அவனன்றி அருளுதற்கு உரியவர் ஒருவரும் இலர். அங்ஙனமிருக்க, இறைவர் ஐவர் எனக் கூறுதல் பொருந்துமா? பொருந்தாது என்க.

கட்டுபவனும் விடுவிப்பவனும் அவன்

2392. ஆறாறு குண்டலிதன்னின் அகத்து இட்டு
வேறு ஆகும் மாயையில் முப்பால் மிகுத்திட்டு அங்கு
ஈறு ஆம் கருவி இவற்றால் வகுத்திட்டு
வேறு ஆம் பதி பசு பாசம் வீடு ஆகுமே.

ஆறாறு குண்டலி [1]தன்னி னகத்திட்டு
வேறாகு மாயையின் முப்பான் மிகுத்திட்டங்
கீறாங் கருவி யிவற்றால் வகுத்திட்டு
வேறாம் பதிபசு [2]பாசம்வீ டாகுமே. (15)

வேறு பாடம்: 1. தன்னா (ஒ) IV; தன்னை யகத்திட்டு (ஆ) IV. 2. பாசத்தில் வீடாமே (ஆ இ) II.

கருத்து: முப்பத்தாறு தத்துவங்களையும் குண்டலி என்ற திரோதான சத்தியின் ஆட்சிக்கு உட்படுத்துபவன் சிவமாகிய பதி. எப்படி? அச்சத்தியின் வேறானதாகிய மாயையை, சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை என்னும் மூன்று வகைப் படுத்தி, இவற்றினின்று 36 தத்துவங்களைப் படைப்பித்து, தான் தனிப்பொருளாக உள்ளவன் பதி. அவன் அருளால், உயிர், பாசங்களினின்றும் நீங்கி வீடுபெறும்.

கருவிகள் - தத்துவங்கள். சுத்தமாயையிலிருந்து. தோன்றும் தத்துவங்கள் சிவதத்துவங்கள். அசுத்தமாயையிலிருந்து தோன்றுபவை வித்தியா தத்துவங்கள். பிரகிருதிமாயையிலிருந்து தோன்றுபவை ஆன்ம தத்துவங்கள். ஈறாம் - படைப்புச் செயலில் இறுதியாகும்.

உயிரை மீட்க

2393. வீட்கும் பதி பசுவை, பாசம் மீதுற
ஆட்கும்; இருவினை ஆங்கு அவற்றால் உண்ணத்
தாட்கும் நரக சுவர்க்கத்தில்தான் இட்டு,
நாட்கு உற நான்று, அங்கு, நற்பாசம் நண்ணுமே.

வீட்கும் பதிபசு [1]வைப்பாச மீதுற
வாட்கு மிருவினை யாங்கவற் றாலுண்ணத்[2]
தாட்கு நரக சுவர்க்கத்திற் றானிட்டு
நாட்குற நான்றங்கு நற்பாச நண்ணுமே. (16)

வேறு பாடம்: 1. பாசமு (அ ஒ ஓ ஈ) II. 2. றாலுணர்ந் (அ ஈ ஒ ஓ) II.

கருத்து: சிவபெருமான் உயிரைப் பாச பந்தங்களில் மிகுதியான விருப்பம் உண்டாகுமாறு வீழ்த்தி ஆழ்த்துவான். அவ்விருப்பங் களைச் செயற்படுத்தியதன் விளைவாக உண்டான புண்ணிய பாவங்களை அஃது அனுபவிப்பதற்கு, அதனை முறையே சுவர்க்கத்திலும், நரகத்திலும் தங்கி வாழச் செய்வான். இக்காலத்தில் எல்லாம் அவனது மறைப்புத் தொழிலைத் திரோதான சத்தியைக் கொண்டு நடத்துவான்.

நாட்கு - உருபு மயக்கம். நாட்களில் எனப் பொருள் தந்தது. உற - வந்தடையுமாறு. நான்று - தொங்கி. இங்கு தொடர்ந்து என்னும் பொருள்தந்தது. நற்பாசம் - திரோதானம். இது சத்தியாற் செய்யப்படுவ தாயினும் மலம் என்று உபசாரமாகக் கூறப்படுதலின், "நற்பாசம்" என்றார். இவையெல்லாம் சிவன் செய்வது, உயிரை ஆணவ மலப் பிடிப்பிலிருந்து மீட்பதற்கு என்க.

இம்மையில் நன்மையும் அம்மையில் வீடும்

2394. நண்ணிய பாசத்தில் 'நான்' எனல் ஆணவம்
பண்ணிய மாயையில் ஊட்டல் பரிந்தனன்
கண்ணிய செய்தனன்கண் வந்த பேரருள்
அண்ணல் அடி சேர் உபாயமும் ஆகுமே.

நண்ணிய பாசத்தி னானென லாணவம்
பண்ணிய மாயையி லூட்டற் பரிந்தனன்
கண்ணிய [1]செய்தனன் [2]கண்வந்த பேரரு
ளண்ண லடிசே ருபாயமு மாகுமே. (17)

வேறு பாடம்: 1. சேதனன் (ஓ) IV. 2. காண்வந்தம் (ஓ) I.

கருத்து: மாயா காரியமான உலகில் வாழும் போது, உயிர் 'நான்', 'எனது' என்று கொள்ளும் அகப்பற்று புறப்பற்றுக்கள் ஆணவமலத்தால் விளைந்த அறியாமை ஆகும். ஆணவத்தைப் பரிபாகம் செய்தற்கே இறைவன் உயிர்க்கு மாயையில் உண்டாக்கிய தனு கரண புவன போகங்களை அளித்துக் கருணை செய்தான். இம்மயக்கத்தினிடையே, அறிவுற்று, இறையன்பு பொருந்திய செயல்களைச் செய்யும் ஆன்மாவினிடம் சிவன்வைக்கும் திருவருள் - அவன் அளிக்கும் அருளறிவு - சிவனது திருவடியை அடைவதற் குரிய வழியைக் காட்டும்.

இம்மையில் நன்மையும் தரும் என்பதைத் தழுவ, "அடிசேர் உபாயமும் ஆமே" என்றார்.

மலபந்தமன்று, அருட்பந்தம்

2395. ஆகும் உபாயமே அன்றி, அழுக்கு அற்று
மோகம் அறச் சுத்தன் ஆதற்கும் மூலமே
ஆகும்; அறுவை அழுக்கு ஏற்றி ஏற்றல்போல்
ஆகுவது எல்லாம் அருட்பாசம் ஆகுமே.

ஆகு முபாயமே யன்றி யழுக்கற்று
மோக மறச்சுத்த னாதற்கு மூலமே
யாகு மறுவை யழுக்கேற்றி யேற்றல்போ[1]
லாகுவ தெல்லா [2]மருட்பாச மாகுமே. (18)

வேறு பாடம்: 1. யெற்றல் போ (த) 2. மரனருட் பாசமே (ஆ இ) III.

கருத்து: சிவபெருமானது திருவருள் மாந்தர்க்குப் படைப்பு, இருவினைப் பயன் துய்ப்பு, மறைப்பு ஆகியவற்றை உண்டாக்கி, அன்பராவார் அறிவின்கண் நிகழ்தல், அவர் அவன் திருவடி அடைவதற்கு உபாயம் மட்டுமன்று. அனாதியே ஆன்மாவைப் பற்றியுள்ள ஆணவ மலம் படிப்படியாக நீங்கவும், அதன் விளைவாகிய மோகம் நீங்கிடவும் ஆகும். ஆணவத்தின் காரணமாக வந்தவையாகிய மாயா மலமும், கன்ம மலமும் நீங்கப் பெற்று ஆன்மா சுத்த நிலை அடைவதற்கு அடிப்படைத் துணை அத்திருவருளே. ஆடையில் படிந்த அழுக்கை, அழுக்காகிய உவர்மண், சவர்க்காரம் ஆகியவை ஏற்றிப் பன்முறை அடித்து, நீக்குவதைப் போல, மாந்தர்க்கு அபக்குவ காலத்தும், பக்குவ காலத்தும் நிகழ்பவை எல்லாம் அருளாகிய பந்தமாகும்.

அழுக்கை அழுக்கால் நீக்குதல் போல், சிவன் மல பந்தத்தைத் தனது அருட் பந்தத்தால் நீக்குகின்றான். ஏற்றல் போல் - தூய்மை யேற்றுவது போல். "இலக்கம் உடம்பு இடும்பைக்கு என்று" கலங்காதிருப்பர் பெரியோர் (திருக்குறள், 627). அவ்விடும்பை இறைவன் திருவருள் என்று, அருளிற் களிப்பர் அன்பர். பாசம் சுட்டு, பந்தம்.

சிவன் பொறுப்பு

2396. பாசம் பயிலுயிர் தானே பரன்முதற்[1]
பாசம் பயிலுயிர் தானே பசுவென்ப
பாசம் பயிலப் [2]பதிபர மாதலாற்
பாசம் [3]பயிலாப் [4]பசுபதி யாகுமே. (19)

வேறு பாடம்: 1. பரமுதற் (அ ஓ) I. 2. பதிபாச (இ) I. 3. பயிலப் (அ ஓ ஓ) I. 4. பதிபதி (அ ஓ ஓ) I; பதிபசு (விசு) (வ).

கருத்து: உயிர் அனாதியே ஆணவ மலத்தால் பிணிப்புண்டது. ஆனால், சிவனோ அங்ஙனமின்றிச் சுதந்திரமுடையவனும், உயிரின் தலைவ னுமாவான். உயிர் 'பசு' எனப் பெயர் பெறுவது, பாசத்தால் (ஆணவத்தால்) பிணிப்புண்டமையால் தான். ஆணவம் உயிரை விட்டு, உயிரின் முயற்சியால் நீங்காது - அதை நீக்குவது, தலைவனின் கடமை ஆகின்றது. தலைவன் அதை நீக்கியவுடன், உயிர் சிவச்சார்பில் வாழ்ந்து, முத்தி நிலையில், சிவமே ஆகிறது.

சின் முத்திரை

2397. அத்தத்தில் உத்தரம் கேட்ட அருந்தவர்
அத்தத்தில் உத்தரம் ஆகும் அருள்மேனி
அத்தத்தினாலே அணையப் பிடித்தலும்
அத்தத்தில் தம்மை அடைந்துநின்றாரே.

அத்தத்தி [1]லுத்தரங் கேட்ட வருந்தவ
ரத்தத்தி லுத்தர மாகு மருண்மேனி[2]
யத்தத்தி னாலே அணையப் பிடித்தலு
மத்தத்திற் றம்மை யடைந்துநின் றாரே. (20)

வேறு பாடம்: 1. லுத்திரங் (அ ஆ இ ஒ) I. 2. திருமேனி (த)

கருத்து: வேதத்தின் பொருளில் தமக்கு எழுந்த ஐயத்திற்குத் தீர்வருள வேண்டும் என முனிவர்கள் நால்வரும் சிவபெருமானை இரக்க அவன் தட்சிணாமூர்த்தியாக அருட்டிரு மேனி மேற் கொண்டு வந்து (கல்லால் மரத்தினடியில் வீற்றிருந்து) அவர்களது ஐயத்திற்கு விடையாகத் தனது வலக்கையால் சின்மூத்திரை பிடித்துக் காட்டினான். அவர்கள் அதன் பொருளை உணர்ந்து, கடைப்பிடித்துத் தம்மையுணர்ந்தனர்.

சின் முத்திரையில் சுட்டுவிரல் பசுவையும், பெருவிரல் பதியையும், மற்ற மூன்று விரல்களும் மும்மலங்களையும் குறிக்கும்.

124. அடி தலை அறியும் திறம் கூறல்

தலைகால் புரிகிறது

2398. காலும் தலையும் அறியார் கலதிகள்;
கால் அந்தச் சத்தி, அருள் என்பர்; காரணம்
பால் ஒன்று ஞானமே; பண்பு ஆர் தலை உயிர்
கால் அந்த ஞானத்தைக் காட்ட, வீடு ஆகுமே.

காலுந் தலையு மறியார் கலதிகள்
காலந்தச் சத்தி யருளென்பர் காரணம்
பாலொன்று ஞானமே [1]பண்பார் தலையுயிர்
காலந்த ஞானத்தைக் காட்டவீ டாகுமே. (1)

வேறு பாடம்: 1. பண்பாந் (ஈ) IV.

கருத்து: திருமாலும் பிரமனும் சிவபெருமானின் அடியும் முடியும் தேடிய வரலாற்றில், கால் எது, தலை எது என வீணர் அறியார். கால் சத்தி என்றும், அது சிவத்தினது அருள் என்றும் பெரியோர் கூறுவர். அஃது உயிருணர்வில் வந்து கலக்கும் ஞானமே ஆகும். அது காரண ஞானம். அது முடிவான மெய்ஞ்ஞானத்தை ஆன்மாவிற்குத் தரும். அப்பொழுது ஆன்மாவிற்கு வீடு பேறு வாய்க்கும்.

யோக நூலில் 'கால்' என்பது மூச்சுக்காற்று என்றும், தலை என்பது சகஸ்ராரம் என்றும் கூறுவர். இங்கு ஆசிரியர் "பால் ஒன்று" எனவும் "கால் அந்த ஞானத்தைக் காட்ட" எனவும் வைத்த குறிப்பால், புருவ மத்தியில், 'ஆக்ஞை' என்ற ஆதாரத்தில், மூச்சுக்காற்று, மூலக்கனல் ஆகியவற்றால் வலிமைபெறும் உயிருணர்வில் அருள் கலக்கும் அனுபவத்தையும், சகஸ்ராரத்தில் எய்தும் சிவானுபவத்தில் பெறும் ஞானத்தையும், முறையே சுட்டுவதாகக் கருதலாம்.

"பால் ஒன்று" என்பதன் முன், "உயிர்" எனப்பின்னே இருப்பதைக் கூட்டுக. உயிர் - சிவம். சிவத்துடன் உயிர் ஒன்றிநிற்பதற்கு ஏதுவான ஞானம் என்க. காரணம் சத்தி. அதாவது, காட்டுபவள். காரியம் சிவம். அதாவது, காட்டப்பெறுவது. "சரியை கிரியை யோகங்கள் ஞானத்தைக் காட்டியல்லது மோட்சத்தைக் கொடா" என்னும் மொழியை நினைக. (சிவஞா. போ. 8 ஆம் சூத். மாபாடியம்) எனவே, கால் என்பது காற்று ஆவதோடு, சத்தி, அருள், காரணம், ஞானம் இத்துணையுமாகும்.

தலை என்பது, சகஸ்ராரத்தின் மேல் உள்ள பரமாகாயம் (சிவம்) ஆகும். அதனை 'உயிர்' என்றார். எனவே, சத்தி உடல் என்பது தெளிவு. சொரூபசிவத்தில் சத்தி இலயித்து (ஒன்று கலந்து) நிற்கும். ஆனால் பரசிவத்துடன், சூக்கும உடம்பில், பராசத்தியாக நிற்கும். அதனினும் கீழ்நிலைகளுள், முதலில், சுத்த மாயையில். அருவுருவமாய், சதாசிவமாக (சத்தி சிவமாக) நிற்கும். மாகேசுவர மூர்த்திகளுடன் அம்பிகையாய், உருவாய்த் திகழ்வாள்.

காரணத்தைக் கால் (அடி) என்றும், காரியத்தைத் தலை (முடி) என்றும் கூறிய பொருத்தமும் உணர்க.

குறிப்பு: இவ்வியலை இங்கு அமைப்பதில் சுவடிகள் தம்முள் மாறு படுகின்றன. "ஈ, ஓ" - இவ்விரண்டு சுவடிகளில் இவ்விடத்திலும், அ, ஆ, இ, ஒ - என்னும் சுவடிகளில் பின்னே "நவாவத்தை நவாபிமானி" என்னும் இயலை அடுத்தும் உள்ளன. பொருட் பொருத்தம் நோக்கி "ஈ,

ஓ” சுவடிகளின் அமைப்பே, தற்போதைய பதிப்பில் மேற்கொள்ளப் பெறுகின்றது. முன்னைப் பதிப்புகளிலும் இவ்வாறே உள்ளது.

உடலில் நிரம்பும் சிவ - அமுதம்

2399. தலை அடி ஆவது அறியார் காயத்தில்;
தலை, அடி-உச்சியில் உள்ளது மூலம்,
தலை அடி ஆன அறிவை அறிந்தோர்
தலை அடியாகவே தான் இருந்தானே.

தலையடி யாவ தறியார்கா யத்திற்
றலையடி யுச்சியி லுள்ளது மூலந்
தலையடி யான வறிவை யறிந்தோர்
தலையடி யாகவே தானிருந் தானே''. (2)

வேறு பாடம்: 1. தாரே (ஓ ஓ) I.

கருத்து: மனிதவுடம்பில் தலை எது, அடி எது என்று வீணர் அறியார் தலையுச்சியிலும், அடியிலும் (இடுப்புப் பகுதியில்) மூலா தாரத்திலும்) மூலம் உள்ளது 'அஃதாவது, தலையுச்சிச் சகஸ்ராரத் தில், படைப்பின் (உடம்பின்) மூல காரணமான சதாசிவமும் மனோன்மணியும் வீற்றிருக்கின்றனர் மூலாதாரத்தில் உயிராற்றலும், குண்டலி சத்தியும் உள்ளன. மூலாதாரத்தில் உள்ள உயிராற்றலானது ஆக்ஞை ஆதாரத்தில் உள்ள உயிருணர்வைத் தலையுச்சிக்குச் செலுத்துமாறு செய்யும் யோக வழிபாட்டை அறிந்தோர்க்குச் சிவம் அமுத ஊற்றாகி உடல் முழுதும் நிறைந்து விளங்குவான்.

3 - ஆம் அடியில் “அடி தலையான” என மாற்றுக. இந்நூல் “அட்டாங்க யோக” இயலில், “தாரணை” ப் பகுதியில், “மேலை நிலத்தினாள் வேதகப் பெண்பிள்ளை, மூல நிலத்தில் உறைகின்ற மூர்த்தியை, ஏல எழுப்பி இவளுடன் சந்திக்கப் பாலனும் ஆவன் “என ஆசிரியர் கூறியதும் (பாடல் 583) காண்க. மேற்பாடலில் ‘கால்’ என்றது, மூலாதாரத்தின் ஆற்றலால் மணிபூரகத்திலிருந்து எழும் மூச்சுக்காற்று.

சிவானுபவம்

2400. நின்றான் நிலம் முழுது அண்டமும் மேல் உற,
வன்-தாள் அசுரர் அமரரும் உய்ந்திட,
பின், தான் உலகம் படைத்தவன் பேர்நந்தி
தன் தாள்-இணை என்தலைமிசையானதே.

நின்றா னிலமுழு தண்டமு மேலுற
வன்றா ளசுர ரமரரு முய்ந்திடப்
பின்றா னுலகம் படைத்தவன் பேர்நந்தி
தன்றா ளிணையென் றலைமிசை யானதே. (3)

கருத்து: வலிமையுடைய அசுரரும், தேவரும், தம் தலைவனை அறிந்து உய்யும்பொருட்டு, மண்ணுலகம், அண்டம் ஆகியவற்றை ஊடுருவி, அப்பாலும் உயர்ந்து நின்றான். உலகைப் படைத்த சிவபெருமானது திருவடிகளை எனது தலையுச்சியில் அனுபவிக்கப் பேறு பெற்றேன்.

ஆசிரியர் தமது சிவானுபவத்தை இவ்வாறு கூறினார்.

காட்டுகின்றான், காணுகின்றேன்

2401. சிந்தையின் உள்ளே எந்தை திருவடி,
சிந்தையும் எந்தை திருவடிக் கீழது;
எந்தையும் எம்மை அறியகிலான் ஆகில்,
எந்தையை யானும் அறியகிலேனே.

[1]சிந்தையி னுள்ளே யெந்தை திருவடி
சிந்தையு மெந்தை திருவடிக் கீழது
வெந்தையு [2]மெம்மை யறிய கிலானாகி
லெந்தையை யானு மறிய கிலேனே. (4)

வேறு பாடம்: 1. சிந்தை யகத்தது வெந்தை (ஆ) IV. 2. மென்னை (ஆ இ ஓ) II.

கருத்து: என் உயிருணர்வில் சிவத்தின் திருவடி (அறிவு) என்றும் திகழ்கின்றது. இன்று, என் உயிருணர்வு சிவத்தின் அருள்வியாபகத்தில் அடங்கி, தானற்று நிற்கின்றது. எம் தந்தையாகிய சிவம் என்றும் என் அறிவுக்கு அறிவாயிருந்து காட்டியும், என் அறிவில் 'உடனாகி' இருந்து தான் கண்டும் வராவிடில், நானும் அவனை அறிந்து கொண்டிருக்கமாட்டேன்.

சிவன் அனைத்துலகிலும், அனைத்துப் பொருளிலும், அனைத்து உயிரிலும் 'ஒன்றாகி' - வியாபகமாகி - உள்ளதை மேற்பாடலில் குறித்தார். உயிருக்கு 'உடனா யிருந்து, அஃது அறியும் பொழுதே தான் அறிந்து கொள்ளுதலோடு, 'வேறாக' - உயிருக்கு உயிராக - இருந்து,

அறிவித்தலும் செய்கிறான். அவன்அறிவிக்கவில்லையேல், உயிர் எதையும் அறியாது கண் காணக்கூடியதேனும், உயிரின் அறிவு அதனுள் நின்று - 'உடனாயும்', 'வேறாயும்' நின்று - தான் கண்டு, காட்டினால்தான், கண் காணும் அதுபோல என்க. இதனை மெய்கண்டார், "காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல், காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்" என்று குறித்தார். (சிவ. போ. சூத். 11.) பாச ஞானம், பசு ஞானம், பதி ஞானம் என்னும் மூவகை ஞானத்தையும் ஆன்மா பெறுவது இவ்வாறே. ஆன்மாவின் பக்குவம் நோக்கி, இறைவன் அறிவிக்கின்றான்.

இங்கு ஆசிரியர், சிவம் நந்தியாசிரியனாக - குருவாக - வந்து தமக்கு உபதேசம் செய்தமையால், அவன் தனது 'சொரூபத்தைக் காட்ட, தாமும் கண்டு, தமது ஆன்மபோதத்தைவிட்டு, அவனது அருட் போதத்தில் அடங்கிநிற்பதைக் கூறுகின்றார்.

திருவடி தந்த காட்சி

2402. பன்னாத பார்-ஒளிக்கு அப்புறத்து அப்பாலாம்
என் நாயகனார் இசைந்து அங்கு இருந்த இடம்;
உன்னா ஒளியும்; உரை செய்யா மந்திரம்
சொன்னான் கழலிணை சூட்டி நின்றானே.

பன்னாத பாரொளிக் கப்புறத் தப்பாலா[1]
[2]மென்னா யகனா ரிசைந்தங் கிருந்திட
முன்னா [3]வொளியு முரைசெய்யா மந்திரஞ்
சொன்னான் கழலிணை சூட்டிநின் றானே[4]. (5)

வேறு பாடம்: 1. தப்பா (ஆ இ ஈ) III. 2 லென்னா (ஆ இ) II. 3. யொளியு (ஒ) I; வெளியு (ஆ) I. 4. சூடிநின்றேனே (அ ஒ) IV; சூட்டி நின்றேனே (ஆ இ ஈ) I; சூட்ட நின்றானே (ஒ) I.

கருத்து: என் பதி சொரூபத் திருமேனியுடன் இருந்த இடம், உலகில் விளங்கும் ஆகாய வெளியில் உள்ள ஒளிகட்கு எல்லாம் அப்பாற் பட்டது. இன்னது என்று கூற வியலாத, எண்ணவும் இயலாத பேரொளி. உரைக்க இயலாத மந்திரத்தை எனக்கு உபதேசம் செய்த நந்தி, தன் திருவடியை என் தலையில் சூட்டி நிற்க, நான் இக் "காட்சியைக் கண்டேன்"

இடம் எனின் வெளியாம். வெளியில் திகழ்ந்த ஒளி எனக் கூற நேரும். ஆனால், இறைவனின் காட்சியில் 'வெளி' என்றும் 'ஒளி' என்றும்

பிரிக்க இயலாது என்பார். "இருந்த இடம் உன்னாத ஒளியும் (ஆம்)" என்றார்.

உரை செய்யா மந்திரம் சொன்னான். சின் முத்திரை காட்டி உபதேசம் செய்தான். கழலிணை சூட்டி, இடமாயும் ஒளியாயும் நின்றான் என்க.

கொண்டு கூட்டு: "இருந்த இடம் அப்புறத்து அப்பாலாம்; உன்னா ஒளியும் (ஆம்) மந்திரம் சொன்னான் சூட்டி நின்றான்", என இரு வாக்கியங்களாகக் கொள்க.

காலம் கண்டு வாழ்க

2403. பதி-அது தோற்றும் பதம்-அது வைம்மின்;
மதி-அது செய்து மலர்ப்பதம் போதும்;
நதி-பொதியும் சடை, நாரி ஓர்பாகம்
கதி-செய்து, காலங்கள் கண்டுகொள்ளீரே.

பதியது தோற்றும் பதமது வைம்மின்
மதியது செய்து மலர்ப்பதம் போது[1]
நதிபொதி யுஞ்சடை நாரியோர் பாகங்[2]
[3]கதிசெய்து காலங்கள் கண்டுகொ ளீரே. (6)

வேறு பாடம்: 1. மோது (ஆ இ ஈ ஓ) I. 2. பாகன் (அ·ஓ) I; பாகத்தங் (ஓ) II. 3. கதிசெயுங் (ஓ) IV.

கருத்து: சிவத்தினது சொரூபத் திருமேனியைக் காட்சியாக நல்க வல்லவை அவன் திருவடிகளே. அவற்றைத் தியானத்தில் வைத்துச் சமாதி கூடுக. மெல்ல, மெல்ல உங்கட்கு மெய்யுணர்வு தந்து, அவனது மலரனைய திருவடி காட்சிப்படும். அத்திருவடி, அவனது இடப்பாகத்து அமர்ந்த நாயகியாகிய சத்தியே. அவளைச் சரணாக அடைந்து, அவள் சிவகதியைக் காட்ட, இனிவரும் எத்துணையோ காலமெல்லாம் சிவத்தின் சொரூபத்தைத் தரிசித்துக் கொண்டிருப்பீராக.

செய்து என்பதை செய்ய என மாற்றுக. இவ்வியல் முதற்பாவின் கருத்தை இங்கு வைத்தார். "காலங்கள் கண்டு கொள்வது" என்பது மரணம் இல்லாப் பெருவாழ்வு. "அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு" என்று பெரியாழ்வார் கூறுவதையும் நோக்குக. (நாலா. பெரி. திரு. திருப்பல்லாண்டு. 2)

அன்பு செய்க; பயன் உண்டு

2404. தரித்து நின்றான் அடி தன் இடம் - நெஞ்சில்
தரித்து நின்றான் அமராபதி நாதன்;
கரித்து நின்றான் கருதாதவர் சிந்தை,
பரித்து நின்றான் பரிபாகம் - அதானே

தரித்துநின் றானடி தன்னிட நெஞ்சிற்
றரித்துநின் றானம ராபதி நாதன்
[1]கரித்துநின் றான்கரு தாதவர் சிந்தை
பரித்து நின் [2]றான்பரி [3]பாகம தானே. (7)

வேறு பாடம்: 1. றரித்துநின் (அ ஆ ஒ) I. 2. றானப் (விசு) (தி) (வ) 3. பாகமாயத் (அ) பரிபாகத்தானே (ஓ) I; பாகமற்றானே (ஆ) I; பாகமத்தானே (இ ஈ ஒ) I; (இவ்விறுதிப் பாடம் இப்பதிப்பில் திருத்தி மேற்கொள்ளப்பட்டது).

கருத்து: இந்திரனுக்கும் தலைவனாகிய சிவபெருமான், தனது திருவடிகளை எவன் தியானத்தில் வைக்கிறானோ, அவனைத் தன் 'அடியான்' எனக் கருதி அன்பு கொள்வான். தன்னை எண்ணாதாரின் சிந்தையில் சிறிதேனும் புலப்படமாட்டான், தனது அடியவனது பக்குவத்துக்கு ஏற்ப, அவனைப் பாதுகாத்தருள்வான்.

பரிபாகமதான் - பரிபாகம், அது ஆன் - இவை புணர்ந்து ஆகியது. அது - ப்குதிப் பொருள் விகுதி. ஆன் - மூன்றாம் வேற்றுமையுருபு.

உச்சித்தாமரை

2405. ஒன்று உண்டு தாமரை, ஒண்மலர் மூன்று உள;
தன் தாதை தாளும் இரண்டு உள காயத்துள்
நன்றாகக் காய்ச்சிப் பதம் செய்ய வல்லார்கட்கு
இன்றே சென்று ஈசனை எய்தலுமாமே

ஒன்றுண்டு தாமரை யொண்மலர் மூன்றுள
தன்றாதை தாளு மிரண்டுள காயத்து
ணன்றாகக் காய்ச்சிப் பதஞ்செய்ய வல்லார்கட்
கின்றேசென் றீசனை யெய்தலு மாமே. (8)

கருத்து: உடம்பினுள் தாமரைக்கொடி ஒன்று உள்ளது. அதில் மூன்று ஒளியுடைய மலர்கள் உள்ளன. உயிரின் தந்தையினுடைய

திருவடிகள் இரண்டும் உள்ளன. மூலக்கனலை நன்கு சுடர்விடச் செய்து, உயிருணர்வைப் பக்குவப்படுத்த வல்லவர்கள் விரைந்து சிவத்தை அடையலாம்.

இப்பாடல் உருவகமாயினும் உவமையாக ஆகும் பொருள்கள் தம்முள் தொடர்புடையவை அல்ல. ஆகவே இவற்றை உவமைகள் எனக் கொள்ளுவதினும், குறியீடு எனக் கொள்ளல் பொருந்தும். தாமரைக் கொடி, மூச்சு இயங்கும் தலைமை வழி. தாமரை மலர்கள் மூன்று - சூரியகலை என்னும் பிங்கலையுடன் தொடர்புடைய வலக்கண்; சந்திரகலை என்னும் இடகலையுடன் தொடர்புடைய இடக்கண்; அக்கினிகலையுடன் தொடர்புடையதும் பிடரியில் உள்ளதுமாகிய கண். இம் மூன்று கண்ணொளியும் ஒன்று சேர்ந்த பின், தலையுச்சியில் சகஸ்ரார நாடி ஒளிபெறும். (இதனையே, சகஸ்ராரம் என்ற தாமரை முதலில் கவிழ்ந்திருப்பதாகவும் பின்பு நிமிர்வதாகவும் கூறுவர்.)

தன் தாதை தாள் - சிவத்தின் திருவடிகள். இவை சத்தியையும், உள்வாங்கு மூச்சு, வெளிவிடும் மூச்சு ஆகியவற்றையும் தனித்தனி குறிக்கும். இனி இக் குறியீடுகளைக் கொண்டு உணர்த்தப்படும் கருத்தாவது.

யோகி மூச்சுக் காற்றைச் சுழுமுனை நாடியில் இயங்கச் செய்து, குண்டலி சத்தியால் மூலக்கனலை மேல்நோக்கிச் சுடர்விடச் செய்வான். உயிராற்றல் ஆகிய அக்கனல் சுழுமுனை வழியே சென்று ஆதார நாடிகளை (மூலாதாரம், சுவாதிட்டானம் முதலியவை) உயிர் பெறச் செய்து, விசுத்தியை அடையும்பொழுது, குண்டலி சத்தியாக இயங்கும் சிற்சத்தியே அருட்சத்தியாகி, அருளைப் பொழிய, அதனால் குளிரப் பெறும். ஒளிபெருகப் பெறும். புருவமத்தியில், ஆக்ஞைச் சக்கரத்தில் உயிருணர்வை ஆக்கம் பெறச் செய்து, அண்ணாக்குட்பகுதியில் அமுது ஊறச் செய்து, பிடரியின் வழியே தலையை அடையும் மூலக் கனலால் பிடரியில் உள்ள அக்கினிக் கண் ஒளிபெறும் பின் வலக்கண்ணும், அடுத்து இடக்கண்ணும் ஒளி பெறும் இம்மூன்று ஒளியும் இணைந்து, புருவமத்தியில் பேரொளியாக, உயிருணர்வாலும், கட்புலன் உணர்வாலும் உணரப்படும். பின்பு, மூலக்கனலை மூச்சுக் காற்றுடன் தலையுச்சியை அடையச் செய்ய மிக்க யோக சாதனை செய்தால், புருவமத்தியொளி வழிகாட்ட. மேற்கூறிய சூரியகலை, சந்திரகலை, அக்கினிகலை என்ற மூன்றும் கூடிச் சகஸ்தாரத்தை (தாமரையை) ஒளி பெறச் செய்யும். அங்குச் சதாசிவன், மனோன்மணியுடன் எழுந்தருள் வான். அச்சிவத்துடன் உயிருணர்வு கலந்து பேரானந்தம் பெறும்.

உயிருணர்வைப் பதம் செய்தல் - உயிருணர்வில் அருள் கலக்குமாறு செய்தல் இதனைச் சைவ சித்தாந்தம் 'சத்தி நிபாதம்' என வழங்கும்,

தாள் என்பது சத்தியென இவ்வியல் முதற் பாட்டிற் கூறினார். மூச்சு இரண்டு என்பதை முன்பு "ஆரியன் நல்ல, குதிரை இரண்டுண்டு" எனக் கூறினார். (பாடல்: 558)

சிவநிலை அனுபவம்

2406. **கால்கொண்டு என் சென்னியில், கட்டு அற, கட்டு அற,**
மால்கொண்ட என் நெஞ்சின் மயக்கின் துயக்கு அற,
பால்கொண்ட என்னைப் பரன் கொள்ளச் சாடினான்,
மேல்கொண்ட என் செம்மை விளம்ப ஒண்ணாதே.

கால் கொண்டென் சென்னியிற் கட்டறக் கட்டற
[1]மால்கொண்டெ னெஞ்சின் மயக்கிற் றுயக்கறப்
[2]பால்கொண்ட வென்னைப் பரன்கொள்ளச் சாடினான்[3]
[4]மேல் சொண்டென் செம்மை விளம்பவொண் ணாதே. (9)

வேறு பாடம்: வேறு பாடம்: 1. மால் கொண்ட (ஓ) IV. 2. பால் கொண்டு (ஓ) I. 3. நாடினான் (விசு) (தி) (வ) 4. மேல்கொண்ட (ஆ இ) III.

கருத்து: என் தலையில் சிவன் தனது திருவடியைச் சூட்ட, அதனால், எனது மும்மலக் கட்டு மெல்ல மெல்ல அற்று நீங்க, மயக்கம் கொண்ட என் சிந்தை, மயக்கத்தைத் தந்த தொடர்பினை நீக்க, தூயனாக நின்ற என்னைச் சிவன் தன் அடிமையாகக் கொள்ளுதற்கு (தனது அருள்வியாபகத்தில் என்னை அமைப்பதற்கு) எனது தற்போதத்தை நீக்கினான். அதற்குப் பிறகு நான் எய்திய "திருநின்ற செம்மையைக்" சொல்லவியலாது.

செம்மை சிவத்தின் சொரூபநிலை. இங்கு அதை அனுபவித்து நின்றமையைச் 'செம்மை' என்றார். முதலடி: "கால்கொள்ள" என மாற்றுக. திருவடி சூட்டல் பன்முறை நிகழ, மலம் முழுதும் நீங்கிற்று என்க. தொடர்பும் நீங்கினாலே மயக்கம் முற்றும் அகலுமாதலின், 'துயக்கு அற' என்றார். பால் - இடம் எனக்கொண்டு சிவனிடம் சார்ந்த என்றும் பொருள் கொள்ளலாம். சாடுதல் - கொல்லுதல்.

துன்பம் தண்டனையே

2407. **பெற்ற புதல்வர்போல், பேணிய நாற்றமும்**
குற்றமும் கண்டு, குணம் குறை செய்ய, ஓர்
பற்றைய ஈசன் உயிரது பான்மைக்கு,
செற்றம் இலாச் செய்கைக்கு, எய்தின செய்யுமே.

பெற்ற [1]புதல்வர்போற் பேணிய நாற்றமுங்
குற்றமுங் [2]கண்டு குணங்குறை செய்யவோர்
[3]பற்றைய வீச னுயிரது பான்மைக்குச்
செற்றமி லாச்செய்கைக் கெய்தின செய்யுமே. (10)

வேறு பாடம்: 1. புதல்வர்பாற் (ஆ இ) I. 2. கொண்டு (ஈ) I. 3. பற்றையல் (அ இ ஒ ஓ) I.

கருத்து: சிவபெருமான் ஆன்மாக்களைத் தன் மக்களே போல் கருதி, அவர்களின் கன்ம வாசனையையும், அதனால் விளைய விருக்கும் தீமையையும் எண்ணி, அவர்களின் நல்வினைக்கு ஏற்ப நன்மையைக் கொடுத்துத் தீவினைக்கு ஏற்பத் துன்பத்தைக் கொடுக்கும் பொழுது அவர்களிடம் பரிவோடு, அவ்வவ் வான்மாவின் இயல்புக்குத் தக்கவாறும், கோபம் இல்லாமல் கொடுக்கும் தண்டனையாக அமையுமாறும் கொடுப்பான்.

உயிர்கள் அனுபவிக்கும் துன்பம், அவை செய்த பாவத்திற்கான தண்டனையே. அத்தண்டனை இறைவனால் பரிவுடன், உயிரின் இயல்புக்கு ஏற்பக் கொடுக்கப்படும். கடுந்துன்பமாக இருப்பினும் அதை இறைவன் சினத்துடன் கொடுத்தான் எனக் கருதலாகாது. உயிரின் மலம் நீங்க வேண்டும் எனப் பரிவாற் கொடுக்கின்றானே அன்றிக் கோபத்தால் அன்று.

125. முக்குற்றம்

உதைத்துவிடு, தவறினால் புதைமணலாகும்

2408. மூன்று உள குற்றம், முழுதும் நலிவன;
மான்று, இருள் தூங்கி, மயங்கிக் கிடந்தன;
மூன்றினை நீங்கியே நீங்கினர்; நீங்காதார்
மூன்றினுள் பட்டு முடிகின்றவாறே.

மூன்றுள குற்ற முழுது நலிவன
[1]மான்றிரு டூங்கி மயங்கிக் கிடந்தன
மூன்றினை [2]நீங்கியே [3]நீங்கினர் நீங்காதார்
மூன்றினுட் பட்டு முடிகின்ற வாறே. (1)

வேறு பாடம்: 1. மான்றிருணீங்கி (அ) II. 2. நீக்கினர் (விசு); நீங்கினர் (தி) (வ) 3. நீக்கினர் (தி) (வ)

கருத்து: குற்றங்கள் மூன்று. அவை காமம், கோபம், மயக்கம் என்பன. அவை ஆன்மாவிற்குப் பெருங்கேடு செய்யக்கூடியவை. அவற்றால் ஆன்மாக்கள் மயங்கி, ஆணவம் செறிந்து, மாயையில் கட்டுண்டு, செய்வதறியாது பிறப்பிலே கிடக்கின்றன. (பிறத்தலும் இறத்தலுமே தொழிலாய்க் கொண்டன.) அறிவுடையோர் இம் மூன்று குற்றங்களிலிருந்தும் நீங்கியமையால்தான், பிறவியை நீக்கினர். அவற்றிலிருந்து நீங்காதார், அவற்றில் மேன்மேலும் ஆழ்ந்து, அழிவெய்துவர். என்னே பாவம்!

யோக சாதனைக்குத்தடை

2409. காமம், வெகுளி, மயக்கம் - இவை கடிந்து
ஏமம் பிடித்திருந்தேனுக்கு, எறிமணி
'ஓம்'- எனும் ஓசையினுள்ளே உறைவதோர்
தாமம் அதனைத் தலைப்பட்டவாறே.

காமம் வெகுளி மயக்க மிவைகடிந்
தேமம் பிடித்திருந் தேனுக் கெறிமணி[1]
யோமெனு மோசையி னுள்ளே யுறைவதோர்[2]
தாம மதனைத் தலைப்பட்ட வாறே. (2)

வேறு பாடம்: 1. கொிமணி (சங்) 2. புணர்வதோர் (இ) IV.

கருத்து: ஆசை, கோபம், மயக்கம் என்ற முக்குற்றங்களையும் நீக்கி, பாதுகாவலான சிவத்தைச் சார்ந்திருந்த எனக்கு, பிரணவத்தில் கலந்துள்ள ஒளியைத் தரிசிக்கும் பேறு வாய்த்தது.

தாமம்- ஒளி. விந்து ஒளியாக விளங்கிற்று. முக்குற்றமும் நீக்கியவர்க்கு யோக சாதனை கைகூடும் என்றார். எனவே குற்றங்கள் அதற்குத் தடையாதலை உணரலாம்.

126. முப்பதம்

கலப்பால் ஒன்று

2410. தோன்றிய 'தொம்'- பதம், 'தத்' - பதம் சூழ்தர
ஏன்ற 'அசி' - பதம் - இம்மூன்றோடு எய்தினோன்
ஆன்ற பராபரம் ஆகும், பிறப்பு அற
ஏன்றனன்; மாள, சிவமாயிருக்குமே.

தோன்றிய தொம்பதந் தற்பதஞ் சூழ்தர
வேன்ற வசிபத மிம்மூன்றோ டெய்தினோ
னான்ற பராபர மாகும் பிறப்பற
வேன்றனன் [1]மாளச் சிவமா யிருக்குமே. (1)

வேறு பாடம்: 1. மானச் (ஈ) I.

கருத்து: "தத்வமசி" மகா வாக்கியத்தை ஓர் இயலில் விளக்குவான் எடுத்துக் கொண்டார். நீ என்னும் பொருள் உடைய 'த்வம்' என்னும் சொல்லுக்கு முன்பாக, அது என்னும் பொருள் உடைய, 'தத்' என்னும் சொல் நிற்க அவ்விரண்டின் பொருளை முடிக்கும் பயனிலையாக, 'ஆகிறாய்' என்னும் சொல் இணையும் இவ் வாக்கியப் பொருளை - அனுபவத்தைத் (திருவருளால்) எய்தியவன் "சிவமேயாகின்றான்".

ஆன்மா சிவமாவது எவ்வாறு இயல்வது? எனின் சிவபெருமான் மலத்தை நீக்கி, அதனைப் பிறப்பு அற்ற நிலையில் வைக்கத் தனது அளப்பருங் கருணையால், பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறான். அவனது திருவருட் செயலால் ஆன்மாவின் ஆணவ மலம் பரிபாகம் (நீங்கும் பக்குவம்) அடைந்து நீங்கும். ஆணவம் ஆகிய காரணம் நீங்கவே, காரியமாகிய வினைகளும் மாயையும் நீங்கும். தான் சிவத்தோடு தொடர்பு உடைமையை உணர்ந்து, அருளின் சார்பில் வாழ்ந்த ஆன்மா, இறுதிநிலையில், தனது தற்போதத்தை நீக்கும். சிவத்தை முற்றும் சார்ந்து, 'சிவமே ஆகும்'.

ஆன்மாவுக்குப் பிறப்பைக் கொடுத்து, அதுவே தானாய் ஏகனாகி நின்றான் இறைவன். இஃது அத்துவித சம்பந்தம். மலபரிபாகம் உற்ற போது, குருவருளால் இந்தச் சம்பந்தத்தை ஆன்மா அறிந்து கொள்ளும். ஆதலின் மலம் நீங்கும் போது, முதலில் அருளை உணரும். பின், சிவத்துடன் ஒன்றி 'அதுவாகவே' நின்று உணரும். ஏனெனில், சார்ந்ததன் வண்ணமாதல் ஆன்மாவின் இயல்பு.

இஃது அத்துவித சம்பந்தத்தால் நிகழ்வதே யன்றி, ஆன்மா சிவமாகவே ஆகிவிடுவதில்லை என்க. ஆகுமாயின், ஆன்மா என ஒரு பொருள் இல்லை என்றாகும். ஒரு பொருள் மற்றொரு பொருள் ஆவதில்லை. சிவம் என்றும் சிவமே; ஆன்மா என்றும் ஆன்மாவே. பொருள் என்றது பதி, பசு, பாசம் என்னும் பொருள்களை.

மகாவாக்கியத்தால் எழுந்த ஐயத்தை நீக்கினார்.

'நீ'

2411. போதம்தனை உன்னிப் பூதாதி பேதமும்
ஓதும் கருவி தொண்ணூறுடன் ஓராறு
பேதமும் நாதாந்தப் பெற்றியின் கைவிட்டு
வேதம் சொல் 'தொம்-பதம்' ஆகுதல் மெய்ம்மையே

போதந் தனையுன்னிப் பூதாதி பேதமு
மோதுங் கருவிதொண் ணூறுட னோராறு
பேதமு நாதாந்தப் பெற்றியிற் கைவிட்டு
வேதஞ்சொ றொம்பத மாகுதன் மெய்ம்மையே[1]. (2)

வேறு பாடம்: 1. மெய்ம்மையே (அ இ ஈ ஒ ஓ) II.

கருத்து: பதிஞானத்தைச் சிந்தித்து பூதம் முதல் நாதம் வரையுள்ள 96 வகை தத்துவ, தாத்துவிகங்களையும், நாதாந்த ஞானத்தை (அனுபவத்தை) , உணர்தலால் கைவிட்டு, 'நீ' என்ற சொல்லின் பொருளை உணர்ந்து, 'நீ ஆதல்' மெய்யுணர்வின் முதற் படியாகும்.

மேல் முப்பதமும் கூறினார், ஈண்டு ஒரு பதத்தை விளக்கினார். தொண்ணூற்றாறு தத்துவங்கள்: தத்துவம் 36, தாத்துவிகம் 60. அவற்றைப் பின்னிணைப்பிற் காண்க.

ஒன்றானோம்; உண்மை இது

2412. தத்பதம் என்றும் 'துவம்' - பதம் தான் என்றும்
நிற்பது, அசியத்து நேரிழையாள் பதம்,
சொற்பதத்தாலும் தொடர ஒண்ணான் சிவன்
கற்பனை இன்றிக் கலந்து நின்றானே.

தற்பத மென்றுந் [1]துவம்பதந் தானென்று
[2]நிற்ப தசியத்து [3]நேரிழை யாள்பதஞ்
சொற்பதத் தாலுந் தொடரவொண் ணான்சிவன்
கற்பனை யின்றிக் கலந்துநின் றானே. (3)

வேறு பாடம்: 1. தவம்பதந் (அ இ) I. 2. நிற்பது சியத்து (அ ஈ) I. 3. ணேரிழை (விசு) (தி) (வ).

கருத்து: 'அது' எனக் கூறப்படும் தனிப் பொருளாகவும், 'நீ' எனக் கூறப்படும் ஆன்மாவாகவும் வேறு வேறாக உள்ள பொருள்கள்,

'அசி' என ஒன்றாதல், சத்தியின் திருவருளால் கைகூடுவதாகும். ஆன்மா சிவமாந் தன்மை எய்திச் சிவனை அனுபவிக்கும் நிலை சொல்லுக்கு எட்டாதது. சிவம் ஆன்மாவுடன் எவ்வேறுபாடும் இன்றிக் கலந்து நின்றது போல, இப்போது ஆன்மா சிவத்துடன் கலந்து, 'சிவமாகும்'. அவன் கலந்து நின்றதும் உண்மை; அனுபவம் தந்ததும் உண்மை. ஆனால் அதைச் சொல்லால் கூறவியலாது.

சொல்லவியலா ஆனந்தம்

2413. அணுவும் பரமும் 'அசி' - பரத்து ஏய்ந்து
கணு ஒன்று இலாத சிவமும் கலந்தால்
இணை அறு பால்தேன் அமுது என இன்பத்
துணை அதுவாய், உரை அற்றிடத் தோன்றுமே.

அணுவும் பரமு மசிபதத் தேய்ந்து
கணுவொன் றிலாத சிவமுங் கலந்தா
லிணையறு பாறே னமுதென வின்பத்
[1]துணையது வாயுரை யற்றிடத் தோன்றுமே. (4)

வேறு பாடம்: 1. துணையாறு (அ ஒ) I; துணையறு (சங்)

கருத்து: ஆன்மாவும் பரம்பொருளும் 'அசி' என்னும் சொல்லின் பொருளாக, ஒன்றாகி தடையற்றதாகிய சிவம் உணர்விற்கு வயப்படும் ஆன்மாவுடன் உடலாகி, பாலும் தேனும், அமுதும் போல இனிமை பயந்து, சொல்லவொண்ணாததாக விளங்கும்.

சிவம் தடையற்றது என்பது, எல்லையில்லாதது எனப் பொருள்படும். அதனாலேயே வசப்படாதாயுள்ள அதுவும் கருணை காரணமாக - அருளின் மூலம் - வசப்படுதலின், "சிவமும்" என, உயர்வு சிறப்பும்மை கொடுத்தார். இன்பத் துணை இன்பம் தரும் துணை, சார்பு. அனுபவம் உண்டு, ஆனால் அது சொல்லவியலாதது. "வாக்கிறந்து அமுதம் மயிர்க்கால் தோறும் தேக்கிடச் செய்தனன்" என்றார் மணிவாசகரும் (திருவா. திருவண். அடி. 170 - 171).

பெரும்பெயர்ப் பொருள் கண்டேன்

2414. தொம்பதம் தற்பதம் தோன்றும் அசிபதம்;
நம்பிய சீவன் பரசிவனாய் நிற்கும்;
அம்பதம் மேலைச் சொரூபம், மாவாக்கியம்
செம்பொருள் ஆண்டருள் சீர் நந்தி தானே

தொம்பதந் தற்பதந் [1]தோன்று மசிபத
நம்பிய சீவன் [2]பரசிவ னாய்நிற்கு
மம்பத மேலைச் [3]சொரூபமா வாக்கியஞ்
செம்பொரு ளாண்டருள் சீர்நந்தி தானே. (5)

வேறு பாடம்: 1. தோன்றுஞ் சிவபதம் (அ ஆ) I. 2. பரன்சிவ (விசு) (தி) (வ) 3. சொரூபமக (அ ஓ ஓ) II.

கருத்து: 'நீ அது ஆவது' எப்போது? 'அசி' - பதத்தின் நிலையை நீ அடையும் போது. அப்போது சிவத்தினையே முழுதும் சார்ந்த உயிர் தற்போதத்தையும் விட்டுச் சிவமாந் தன்மை எய்தி நிற்கும். 'அசி' - பதத்தின் பொருள் என்றும் உள்ள சிவத்தின் சொரூபம் ஆகும். 'தத்வமசி' மகாவாக்கியம் எனக்கு அனுபவப்படுமாறு ஆண்டருளிய நந்தியின் திருவருள் இருந்தவாறு என்னே.

செம்பொருள் பயக்க என ஒரு சொல் வருவிக்க அப்பொருள் சிவநிலையே. "சிவாய சிவ" என்ற அதிசூக்கும பஞ்சாக்கரத்தின் பொருளும் இதுவே.

யோகத்தின் பயன்

2415. ஐம்பது அறியாதவரும் அவர் சிலர்;
உம்பனை நாடி, உரை முப்பதத்திடைச்
செம்பரம் ஆகிய வாசி செலுத்திடத்
தம் பர யோகமாய்த் தான் அவன் ஆகுமே.

ஐம்ப தறியா தவரு மவர்சில
ரும்பனை நாடி யுரைமுப் பதத்திடைச்
செம்பர மாகிய வாசி செலுத்திடத்
தம்பர யோகமாய்த் தானவ னாகுமே. (6)

கருத்து: ஐம்பத்தோர் எழுத்துக்களும் சத்திகள் என்பதை அறியாத வரும் சிலர் உண்டு. (அவரைப் போல அன்றி, யோகி அவ்வெழுத்துக் களால் ஆன மந்திரங்களை அறிந்து) காணப்படாதவனாக உள்ள சிவபெருமானைக் கண்டறிதற்குத் தவமாகிய யோக சாதனையைச் செய்து, தத், தொம், அசி எனக் கூறப்படும் மூன்று சொற்களின் பொருளை உணர வேண்டி, மூச்சை (அசபா மந்திரத்தோடு) உச்சந் தலைக்குச் செலுத்தினால். அதுவே தனது மேலான யோகமாய் அமைந்திட, சிவனாம் தன்மை எய்துவான்.

'அசி' - பத நிலை எது?

2416. நந்தி அறிவு நமுவின், அதீதமாம்;
இந்தியம் சத்த-ஆதி விட, வியன் ஆகும்,
நந்திய மூன்று, இரண்டு, ஒன்று நலம் ஐந்து
நந்தி நனவு-ஆதி மூட்டும் அனாதியே.

நந்தி [1]யறிவு நமுவி லதீதமா
மிந்தியஞ் சத்தாதி விடவிய னாகு
நந்திய மூன்றிரண் டொன்று நலமைந்து[2]
நந்தி [3]நனவாதி மூட்டு மனாதியே. (7)

வேறு பாடம்: 1. யறிவும் (விசு) (தி) (வ) 2. மலமைந்து (இ ஈ) I.
3. னனவாதி (விசு) (தி) (வ).

கருத்து: சிவபெருமான் மாந்தர்க்கு எய்துவிக்கும் ஐந்து அவத்தைகள், (மேலாலவத்தைகளுள்) முறையே சாக்கிரம் என்ற நிலையில் எய்தும் அறிவு நமுவிச்செல்ல, ஏனைய நான்கு மட்டும் உளவாகும். பிறகு அவத்தைகளுள் (ஒன்று ஆகிய) சொப்பனம் வராமலே நிற்க, மற்றைய மூன்றும் உளவாகும். பிறகு சுழுத்தி நமுவ, துரியம் உளதாகும். அந்தத் துரிய அறிவும் நமுவ, துரியாதீதம் வாய்க்கும் ஐம்பொறிகள் தத்தம் புலன்களைப் பற்றுவதைவிட்டு விடும். ஆன்மா வியாபகன் ஆகும். (இந்த நிலை உறுதியாக நிலைபெறுவதே அசிபத நிலை ஆகும்).

முதலடி: "அறிவு நந்தி நமுவில்" என மாற்றுக, நந்தி - குறைந்து. மூன்றாம் அடி: நந்திய - குறைந்தன. ஐந்தும் - ஐந்தினுள். மூன்று அவத்தைகள் நமுவிய பின் துரியம் வர, அத்துரியத்தில் அதீதம் பிறக்கும். வியன் - வியாபகன். வியாபகன் ஆதலே 'சிவமாதல்' என இங்குக் குறிக்கப் பெற்றது.

கொண்டுகூட்டு: நந்தி அனாதியே மூட்டு நனவாதி நலம் ஐந்தும் ஒன்று, இரண்டு, மூன்று நந்திய; அறிவு நந்தி நமுவில், அதீதமாம்; இந்தியம் சத்தாதிவிட, வியன் ஆகும்.

துரியாதீத அனுபவம்

2417. பரதுரியத்து, நனவும், படிஉண்
விரிவு இல் கனவும், இதன் உபசாந்தத்து
உரிய சுமுனையும் ஓவும், சிவன்பால்
அரிய துரியம் 'அசி' - பதம் ஆமே.

[1]பரதுரி யத்து [2]நனவும் படியுண்[3]
[4]விரிவில் கனவு [5]மிதனுப சாந்தத்
துரிய சுழுனையு மோவுஞ் சிவன்பா
லரிய [6]துரிய மசிபத மாமே. (8)

வேறு பாடம்: 1. உரியதுரி (ஒ) IV. 2. நனவு (அ இ ஒ ஓ) I. 3. படியுண்ட (அனை. சுவ) 4. விரிவிற் (விசு) (தி) (தி) (வ), விரிவி லதீத நனவுப் (ஆ) IV. 5. மதனுப (இ ஈ) III. 6. துரியஞ் சிவபத (ஆ ஓ) III.

கருத்து: மேலைப் பாடலையே பின்னும் விளக்குகிறார். மேலாலவத்தையாகிய துரியம் எவ்வாறு அடைகின்றது எனின், மேலாலவத்தைச் சாக்கிரமும், விழிப்புநிலை போலவே தோன்றுவதும், அத்துணைத் தத்துவங்களின் செயற்பாடு அற்றதும் ஆன கனவும், இது நீங்கிய போது வந்தமையும் சுழுத்தியும் அனுபவிக்கப் பெற்று, மெல்ல நீங்கும். அந்நிலையில் துரியம் சிவானுபவத்தை உண்டாக்கும். அதன் அதீதம் அசிபத நிலை ஆகும்.

முன்னர் "மேலாலவத்தை" என்னும் இயலில் விளக்கிய செய்தியையே ஈண்டு, முப்பத விளக்கம் என்ற முறையில் மீண்டும் கூறினார்.

"படியுண்" என்றாரேனும் "நனவுபடியுண்" எனக் கூட்டுக. படி - தன்மை. உபசாந்தம் - போக்குவரவு அற்ற நிலை. இதனைக் கனவுக்கு அடை மொழியாக்கினும், நனவிற்கும் கொள்க. துரியாதீதம் வாய்ப்பது அரிதாதலின் 'அரிய துரியம்" என்றார்.

127. முப்பரம்

மும்மண்டலப் பரம் பொருள்

2418. தோன்றி, என்னுள்ளே, சுழன்று எழுகின்றதோர்
மூன்று படிமண்டலத்து முதல்வனை
ஏன்று, எய்தி, இன்புற்று இருந்தே, இளங்கொடி
நான்று, நலஞ்செய் நலம் தருமாறே. (1)

கருத்து: குண்டலி சத்தி முதுகந்தண்டின்கீழே, கீழ் நோக்கிய உயிராற்றலுக்கு முதலில் துணையாக இருந்து உலகியல் வாழ்விற்கு நன்மை சேர்த்தாள். பின்பு அவளே, உயிராற்றலை மூச்சுக் காற்றினால் மேல் நோக்கி ஏற்றி, அருள் வாழ்விற்கு அடிப்படை அமைத்தாள். என் உடம்பினுள், இடை முதல் தலையுச்சி வரை, மூன்று அடுக்காக அக்கினி மண்டலம், சூரிய மண்டலம், சந்திர

மண்டலங்கள் அமைந்துள்ளன. அவற்றின் அதிபதிகளான உருத்திரன், பிரமன், விஷ்ணு என்பவர்களாகச் சிவமே உள்ளான். அம்மண்டலங்களின் ஆற்றலான அக்கினி கலை 64, சூரிய கலை 12, சந்திர கலை 16 ஆகியவற்றில், உயிராற்றலாகிய மூலக்கனல் படிவதால் அச்சிவத்தை அனுபவித்தேன். பின்னர் இந்த மூவர்க்கும் மேற்பட்ட ஒரே பரம்பொருளான பர சிவத்தைச் சகஸ்ராரத்தில் பேரொளியாக அனுபவித்து இன்பம் எய்தினேன். ஆதலால், குண்டலி சத்தி நன்மையே செய்தாள் என உணர்ந்தேன்.

வினைமுடிவு: இளங்கொடி நான்று நலஞ்செய் (யுமாற்றையும்), நலம் தருமாற்றையும், என் உள்ளே மூன்றுபடி மண்டலத்துத் தோன்றிச் சுழன்று எழுகின்றதோர் முதல்வனை ஏன்று, எய்தி, இன்புற்று இருந்தே (அறிந்தேன்) என முடிக்க. இறுதி வினைமுற்று வருவித்து உரைக்கப் பட்டது.

சுழன்று மாறி - முதலில் மூவராகத் தனித்தனி நின்று, பிறகு ஒரே பரம்பொருளாக நிற்றல். பரம்பொருள் ஒன்றே. அது மூவராக நிற்றலின், 'முப்பரம்' என்றார். "இன்புற்றிருந்து, நலஞ் செய்யுமாறு அறிந்தேன்" என ஒரு சொல் வருவித்து முடிக்க.

உள்ளே, வெளியே

2419. மன்று நிறைந்தது மாபர மாயது
நின்று நிறைந்தது நேர்தரு நந்தியுங்
கன்று நினைந்தெழு தாயென வந்தபின்
குன்று நிறைந்த குணவிளக் காமே. (2)

வேறு பாடம்: 1. குடவிளக் (ஒ) IV.

கருத்து: மேற் பாடலில் "நலம் தருமாறு" எனக் குறிப்பாகக் கூறினார், இப்பாடலில், அம்முறை யாது எனச் சுட்டுகிறார்.

உயிருணர்விற்கு நேர்பட நின்று அருள் செய்பவனாகிய சிவபரம் பொருள், தன் கன்றை நினைத்து வரும் தாய்ப்பசுவே போலக் கருணைபுரிய, அருட்சத்தி, விசுத்தி - ஆதாரத்தில், மூலக்கனலுடன் (உயிராற்றலுடன்) இணைந்தும், புருவமத்தியில், ஆக்ஞை - ஆதாரத்தில், விழிப்பு நிலையில் உள்ள உயிருணர்வுடன் கலந்து அதனை 'அருளறிவாக்கியும்' (சத்தி நிபாதம்) அருள் புரிந்தாள். அப்போது சிவபரம் பொருள் சகஸ்ராரத்தில், மலைமேல் தோன்றும் சோதியாக - நாதம், விந்து என்ற இரண்டு சத்திகளும் கலந்த

சோதியாக - சதாசிவன் மனோன்மணியாகக் காட்சி நல்கியது. இது பின் இரண்டடிப்பொருள்.

சகஸ்ராரத்தை யோக நூலார் 'மலை' என்பர். குணம் - ஒளிக் குணம் விந்து; ஒலிக்குணம் நாதம். இவை சுத்த மாயா தத்துவங்கள் ஆதலின், இறைவனின் தடத்த வடிவங்களே; சகளமே; சகுணப்பிரமமே. இக்காரணம் பற்றியும் 'குண விளக்கு' என்றார். இனி, அடுத்த அனுபவத்தை முன் இரண்டு அடிகளிற் கூறுவார்.

குண விளக்காய் நின்று, சிதாகாயத்தில் நிறைந்த பரம்பொருள், அடுத்து, பரமாகாயம் ஆகிய ஞானமன்றில் அகண்டாகாரமாக, ஞானமே வடிவமாக, சொரூப நிலையில் நின்றான்.

சின் முத்திரையின் பொருள்

2420. ஆறாறு தத்துவத் தப்புறத் தப்பரன்[1]
கூறா [2]வுபதேசங் [3]கூறிற் சிவபதம்[4]
வேறாய் வெளிப்பட்ட வேதப் பகவனார்
பேறாக வானந்தம் பேணும் பெருகவே. (3)

வேறு பாடம்: 1. தப்புறங் (ஓ) I; தப்பாழாங் (ஈ) II; தப்பரங் (அ இ ஓ) I. 2. யுபதேசங் (அ ஓ) I. 3. கூறிச் (இ ஈ) I. 4. சிவபரம் (ஓ) I.

கருத்து: சிவபெருமான் தட்சிணாமூர்த்தியாக எழுந்தருளி, திருவாக்கு உரைக்காமல் சின்முத்திரை காட்டியருளியதன் கருத்து யாதெனில், சிவத்தின் நிலை (சொரூபம்) முப்பத்தாறு தத்துவங் களையும் கடந்து, அவையல்லாத வேறாய் இன்னதென எண்ணவும், சொல்லவும் இயலாததாய், அகண்ட வெளியாக நின்ற ஒன்று என்பதாகும். அதை அறிதல் என்பது, வேதங்களால் முடிபொருளாக உணர்த்தப்பட்ட இறைவனை அடைதலே 'அவனாக ஆவதே' - ஆகும். அப்பேறு என்றும் பேரானந்த அனுபவத்தைக் தந்து கொண்டிருக்கும் அதாவது அப்பேறே ஆனந்தப் பேறாகும்.

தோற்றி, ஒடுக்கப்படும் தத்துவம் கடந்தது என்பதால், அப்பேறு 'சத்' ஆகும். 'வெளிப்பட்ட' என்பதால் உணர்த்தப்படும் ஞான வடிவப் பேறு 'சித்' ஆகும். ஆனந்தம் பெருகப் பேணும் பேறு என்பதால் "ஆனந்தம்" ஆகும். ஆகவே, சின் முத்திரையால் உணர்த்தப்படும் பொருள் 'சச்சிதானந்தப் பேறு' என்பதாகும். பேணும் - செய்யும். ஆங்காங்குச் சொற்கள் வருவித்து உரைக்கப்பட்டன.

கொண்டு கூட்டு: "அப்பரன் கூறா உபதேசம் கூறின், ஆறாறு தத்துவத்து அப்புறத்துச் சிவபதம் பேறாய் வெளிப்பட்ட (நிலை). (இது) வேதப்பகவனார் பேறாக (நின்று) ஆனந்தம் பெருகப் பேணும்.

எல்லையற்ற ஞானவெளி

2421. பற்று அற்ற பற்றின், பரம் பதியாவது,
பற்று அற்ற பற்றின், பரன் அறிவே பரம்;
பற்று அற்ற பற்றினில் பற்ற வல்லோர்கட்கே
பற்று அற்ற பற்றின், பரம் பரம் ஆமே.

[1]பற்றற்ற [2]பற்றிற் பரம்பதி யாவது
பற்றற்ற பற்றிற் பரனறி வேபரம்[3]
பற்றற்ற பற்றினிற் பற்றவல் லோர்கட்கே
[4]பற்றற்ற பற்றிற் பரம்பர மாமே. (4)

வேறு பாடம்: 1. நான்கு அடியிலும் முதற்சீர்: பற்றறப் (ஈ) I. 2. பற்றினிற் (ஈ) IV. 3. யாகும் (ஈ) IV. 4. பற்றற்ப் (சங்).

கருத்து: சார்பு அல்லாத சார்பு ஆகிய அகண்டத்தைச் சார்ந்தால், ஆன்மாவுக்கு, (அதுவரை தடத்த வடிவச் சிவன் பதியாக இருந்தநிலை மாறி) சொரூப சிவம் பதியாகும். அந்நிலையில் பாச ஞானம், பசு ஞானம் ஆகியவற்றை வேண்டாது, அவற்றினும் மேலான ஞானத்தை விரும்பும் ஆன்மாவிற்குப் பதிஞானமாகவே வாய்ப்பது அகண்ட அறிவே. சொரூப சிவத்தின் திருவடி, பற்ற இயலாத சார்பாகும். அதனைப் பற்றிக் கொள்ளவல்ல ஆன்மா யாதோ, அதற்கு 'அனுபவம் அல்லாத அனுபவமாக', மேலும் மேலும் விரியும் அகண்டம் வாய்க்கும். அதற்கு எல்லை இல்லை.

ஞானம் அளவின்றிப் பெருகும் என்றார். நான்கு அடியிலும்: பற்றற்ற என்பது வினையாலணையும் பெயர். தடத்த நிலையில் ஆன்மாவின் தலைவனின் பெயர் பதி, சொரூப நிலையில் சிவம். அகண்ட அறிவு, தற்போதம் நீங்கிய பிறகே வாய்க்கும். மல நீக்கத்தையும், தற்போத ஒழிவையும் இரண்டாம் அடியிற் கூறினார்.

சிவானந்தம் வழங்கும் வள்ளல்

2422. பரம்பர மான பதிபாசம் பற்றாப்[1]
பரம்பர மாகும் [2]பரசிவ மேவப்[3]
பரம்பர மான பரசிவா னந்தம்
பரம்பர மாகப் படைப்ப தறிவே[4]. (5)

வேறு பாடம்: 1. பற்றாம் (அ ஓ) I; பற்றி (இ) I; பற்றாய் (சங்) 2. பரமஞ் சிவமே (அ ஓ) II; பரஞ்சிவ (ஓ) I. 3. மே சிவம் (ஆ இ) I. 4. தறிவையே (ஆ இ) II.

கருத்து: மேலான தலைவனான சிவமேயாந் தன்மை அடைந்த மேலான ஆன்மாவை ஆணவ மலம் பிணிக்காது. அவ்வான்மா சிவத்தைச் சார்ந்து நிற்க, அதற்கு மிக்க மேலான சிவானந்தம் விளையும் அவ்வானந்தத்தை விளைவிப்பது, அகண்டமாக நிற்கும் ஞானவடிவே.

ஆன்மா "சிவமேயாகி" நின்றாலும், அஃது ஆனந்தமே வடிவமாகப் பெறினும், அதற்கு ஆனந்தம் அளிப்பது சிவபதியே என்றார். மேற்பாடலில் "பரம் பதியாவது" என்றார், இங்கு அவன் பரானந்தம் தரும் பதி என்றார்.

தானே சிவம்

2423. நனவில் கலாதியாம் நால்ஒன்று அகன்று
தனியுற்ற கேவலம் தன்னில் தானாகி,
நினைவுற்று அகன்ற அதீதத்துள் நேயம்
தனை உற்றிட, தானே தற்பரம் ஆமே.

நனவிற் கலாதியா நாலொன் றகன்று
[1]தனியுற்ற கேவலந் தன்னிற் றானாகி
நினைவுற் றகன்ற வதீதத்து ணேயந்
தனையுற் [2]றிடத்தானே தற்பர மாமே. (6)

வேறு பாடம்: 1. தனையுற்ற (ஆ இ) I. 2. றறிந்திடந் (ஆ இ) IV.

கருத்து: (முன்னே கூறப்பட்ட பல்வகை அவத்தைகளுள்) சுத்தா வத்தைகளில் செயல்பட்ட கலை, வித்தை, அராகம், புருடன், மாயை என்னும் ஐந்து வித்தியா தத்துவங்களும், சுத்த தத்துவங்கள் ஐந்தும், சிவ அவத்தைகளில் ஆன்மாவை விட்டு நீங்கும். ஆன்மா தன்னை உணரும். சிவதுரியாதீதத்தில், அந்த உணர்ச்சியும் நீங்க, அறியப்படும் பொருளாகிய சிவத்தோடு கலந்து. தானே 'சிவம் ஆகும்'. இச்செய்தியை, முன்னர், 'மேலாலவத்தை' - இயலில் 2302, 2303, 2304 - ஆம் பாடல்களில் கூறினார். இங்கு முப்பரம் என்ற வகையில், தற்பரம் ஆகிய அதனைத் தொகுத்தார்.

மூன்று பரநிலைகள்

2424. தற்காண் துரியமும், தன்னில் விசாலமும்
பிற்காணும் தூடணம்தானும், பிறழ்வுற்றுத்
தற்பரன் கால பரமும், கலந்து அற்ற
நற்பராதீதமும் நாடு அகர ஆதியே.

[1]தற்காண் [2]டுரியமுந் தன்னில் விசாலமும்[3]
பிற்காணும் தூடணந் தானும் பிறழ்வுற்றுத்[4]
தற்பரன் கால பரமுங் கலந்தற்ற
[5]நற்பரா தீதமு நாடக ராதியே. (7)

வேறு பாடம்: 1. தற்காண்டு (அ ஒ) I; தற்கண்டு (இ ஈ) I; தற்கண்ட (விசு) (தி) (வ) 2. தூயமுந் (அ இ ஈ ஒ ஓ) I. 3. விலாசமும் (அ ஈ ஒ ஓ) I. 4. பிறழ்வற்றுத் (ஒ) 5. நற்பாலதீதமு (ஆ இ) II.

கருத்து: முப்பரம் யாவை யெனத் தொகுத்து உணர்த்துகின்றார். ஆன்மா தன்னை உணரும் துரிய நிலையும், தன்னை வியாபகனாகச் காணும் துரியாதீத நிலையும், இப்பயிற்சி முதிர்ந்து, பிறகு மலநீக்கம் பெறுதலும் (ஒரு பரநிலை ஆகும்) அடுத்து, ஆன்மா பெத்த நிலைமாறி முத்தனாகித் தற்பரனாகி (தானே சிவமாகி) நிற்கும் காலங்கடந்தநிலை (ஒரு பரநிலை ஆகும்.) அடுத்து, ஆன்மா சிவத்துடன் கலந்து, தான் என்பதே அற்று நிற்கும் சிவாவத்தை நிலை (ஒரு பரநிலை ஆகும்).

பிறழ்தல் - மாறுதல். அகரம் - அகரத்தால் குறிக்கப்படும் ஆன்மா. ஆதி - ஆவது.

128. பரவிலக்கணம்

எங்கே மன்னும்?

2425. அதீதத்துள் ஆகி அகன்றவன் நந்தி,
அதீதத்துள் ஆகி அறிவிலோன் ஆன்மா,
மதிபெற்று இருள்விட்ட மன்னுயிர் ஒன்றாம்
பதியில் பதியும் பரவுயிர் தானே.

அதீதத்து [1]ளாகி யகன்றவ னந்தி
யதீதத்து ளாகி யறிவிலோ னான்மா
மதிபெற் றிருள்விட்ட மன்னுயி ரொன்றாம்[2]
பதியிற் பதியும் பரவுயிர் தானே. (1)

வேறு பாடம்: 1. ளாதி (ஓ) I. 2. ரொன்றாப் (ஓ) IV.

கருத்து: வடிவங் கடந்த, அப்பாலான நிலையில், பேரறிவே வடிவாக, அகண்ட வெளியாக - வியாபகனாகத் - திகழ்பவன் சிவம். ஆன்மா சிவதுரியாதீத நிலையை அடைந்து, தற்போதமின்றி நிற்பான். இது ஆன்மாவின் பரநிலை. இந்த நிலை எத்தகையது? பதி ஞானம் எய்தி, ஆணவ மலத்தை நீக்கிய ஆன்மா, தன்னுடன் ஏற்கனவே 'ஒன்றாய்' உள்ள பதி (அந்தத் தடத்த நிலையின் நீங்கித்) தன் சொரூபத்தில் நிற்க, அதனோடு ஒன்றி நிற்கும். அதனால் தானும் பரவுயிர் (பரான்மா) எனப்பெயர் பெறும்.

"மன் உயிர்" (நிலைபெற்ற உயிர்) என உயிரைக் குறிப்பர் எங்கே மன்னும் எனின், பரத்தில் - சிவத்தில் - மன்னும் என்க. பரவுயிர் என்பது "பரசிவம்" என்பது போன்ற சொல்லாட்சி.

பரசிவம்

2426. ஆதியும் அந்தமும் இல்லா அரும்பதி
சோதி, பரஞ்சுடர் தோன்றத் தோன்றாமையின்
நீதியது ஆய் நிற்கும் நீடிய அப்பரம்
போதம் உணர்ந்தவர் புண்ணியத்தோரே.

ஆதியு மந்தமு மில்லா வரும்பதி
[1]சோதி பரஞ்சுடர் [2]தோன்றத்தோன் றாமையி
னீதிய தாய்நிற்கு நீடிய வப்பரம்[3]
போத முணர்ந்தவர் புண்ணியத் தோரே[4]. (2)

வேறு பாடம்: 1. சோதிப் (விசு) (தி) (வ) 2. தோன்றிக் (அ) I. 3. வப்பர (விசு) (தி) (வ) 4. தோர்களே (அனை. சுவ.) III.

கருத்து: தோற்றமும் முடிவும் இல்லாத அரிய சிவம், தனது சோதியும் சுடரும் முறையே அருவுருவத்திலும், உருவத்திலும் தோன்ற, தான் சொரூப நிலையில் வடிவமற்றிருக்கும். காலத் தத்து வத்தைக் கடந்த அந்தப் பரம்பொருளை, சிவஞானத்தால் மட்டுமே உணரவியலும். அங்ஙனம் உணர்ந்தோர் சிவபுண்ணியம் செய்தவர் ஆவர்.

சோதி பரஞ் சுடர் - உம்மைத் தொகை. நீதி - தடத்த வடிவுகளிலும் சொரூபத்திலும் நிற்கும் முறைமை. போதம் - சிவஞானம்.

பரநிலை கண்டால் பிறப்பு இல்லை

2427. துரியங் கடந்து துரியா தீதத்தே
அரிய வியோகங்கொண் டம்பலத் தாடும்
பெரிய பிரானைப் பிரணவக் கூபத்தே
துரியவல் லார்க்குத் துரிசில்லை தானே. (3)

கருத்து: சிவதுரிய நிலையைக் கடந்து, சிவதுரியாதீத நிலையில், விடுதற்கு அரிய தற்போதத்தை நீக்கி, பரமாகாயம் என்ற பேரம்பலத்தில் பர - ஆனந்த நடனம் புரியும் சிவபெருமானை, பிரணவமாகிய கிணற்றில் தேடி உணரவல்லவர்களுக்கு எக்குற்றமும் இல்லை. ஆதலின், அவர்கள் மீண்டும் பிறவார்.

வியோகம் - நீக்கம். துரிய - துருவ என்பதன் திரிபு.

இமயம் சேர்ந்த காகம்

2428. செம்மை முன் நிற்ப, சுவேதம் திரிவ போல்
அம் மெய்ப்பரத்தோடு அணுவன் உள்ளாயிட
பொய்ம்மைச் சகம் உண்ட போத வெறும் பாழில்
செம்மைச் சிவமேரு சேர் கொடியாமே.

செம்மைமுன் னிற்பச் [1]சுவேதந் திரிவபோ[2]
[3]லம்மெய்ப் பரத்தோ டணுவனுள் ளாயிடப்
பொய்ம்மைச் சகமுண்ட [4]போத வெறும்பாழிற்
செம்மைச் சிவமேரு சேர்கொடி யாமே. (4)

வேறு பாடம்: 1. சிவோகந் (அ ஈ) I. 2. தெரிவபோ (அ) I. 3. லம்மைப் (விசு) 4. போதம் பெறம் (ஆ இ) II.

கருத்து: கந்தகத்தின் முன் பாதரசம் தன்மை மாறுவது போல், சத்துப்பொருளாகிய பரம்பொருளோடு உயிர் ஒன்றிக் கலந்து, அசத்துப்பொருளாகிய உலகத்தை முற்றும் மறந்த (விட்ட) ஞானமாகிய வெட்டவெளியில், தானும் அவ்வெட்ட வெளியாக நிற்கும்; சிவமாகிய மேரு மலையைச் சேர்ந்த காக்கையாகும்.

பொன்னிற இமயத்தை அடைந்த காகம் பொன்னிறமாய் இருத்தலின், பரத்தைச் சேர்ந்து, அணுத்தன்மையை விட்டு, அப்பரமாகவே நிற்கும் ஆன்மாவைக் காகமாக உருவகம் ஆக்கினார்.

கொடி - காகம். சுவேதம் - வெண்மை. அணுவன் - ஆன்மா.

குருவருள்

2429. வைச்ச கலாதி வரு தத்துவம் கெட,
எச்ச இருமாயை வேறாக வேர் அறுத்து,
உச்ச பரசிவமாம் உண்மை ஒன்றவே
அச்சம் அறுத்து என்னை ஆண்டனன் நந்தியே.

வைச்ச கலாதி வருதத் துவங்கெட
'வெச்ச விருமாயை வேறாக வேரறுத்
துச்ச பரசிவ மாமுண்மை யொன்றவே
யச்ச மறுத்தென்னை யாண்டன னந்தியே (5)

வேறு பாடம்: 1. மெச்ச (இ ஈ) I; பொய்ச்ச (ஒ) I.

கருத்து: ஆசிரியர், தமக்கு ஆசிரியன் மாயைச் சார்பு நீக்கிச் சிவச் சார்பு அருளியதைக் கூறுகின்றார்.

நந்தியாகிய என் குருநாதன், எனது அச்சத்தை நீக்கினான். என் பிறவியில் இணைந்த கலை முதலிய வித்தியா தத்துவங்களின் மூலமாகிய அசுத்த மாயை என்னைவிட்டு நிங்கவும், பிறகு இரண்டு மாயைகள் ஆகிய பிரகிருதி மாயையும், சுத்த மாயையும் நீங்கவும் செய்து, இத்தொடர்புகளை அடியோடு அகற்றினான். மிக்க மேலான தாகிய பரசிவம் என்ற சத்துப்பொருளோடு நான் ஒன்றி நிற்குமாறு, என்னை ஆண்டு அருள்புரிந்தான்.

இது, குருவருளை வியந்தவாறு. "அச்சந்தீர்த்தாட்கொண்டான் அமுதம் ஊறி அகநெகவே புகுந்தாண்டான்" என மாணிக்கவாசகர் தம் குரு செய்த அருளைக் கூறியதை (திருவா. திருச்சதகம். 29) நினைக.

என்னை 'வெளி' ஆக்கினான்

2430. என்னை அறிய இசைவித்த என் நந்தி
என்னை அறிந்து, அறியாத இடத்து உய்த்து,
பின்னை ஒளியில் சொருகிப் புறப்பட்டுத்
தன்னை அளித்தனன், தற்பரம் ஆகவே.

என்னை யறிய விசைவித்த வென்னந்தி
யென்னை யறிந்தறி யாத விடத்துய்த்துப்
பின்னை [1]யொளியிற் [2]சொருகிப் புறப்பட்டுத்[3]
தன்னை யளித்தனன் றற்பர மாகவே. (6)

வேறு பாடம்: 1. வெளியிற் (ஆ) IV. 2. சொரூபம் (விசு) (தி) (வ). 3. பிறப்பறத் (ஆ இ) IV.

கருத்து: நான் என்னை அறிந்து கொள்ளும் பொருட்டு, என்னை உடம்புடன் பிறப்பித்த என் குருநாதன் (சிவம்), என் அறிவில் 'உடனாய்' இருந்து அறிந்து, என் பக்குவத்தை வளர்த்து, நான் அதுகாறும் அறியாத அவத்தைகளை அடையச் செய்து அப்பால் தோன்றிய சிவஞானத்தினால், தனது கலப்புநிலையை விட்டும், தடத்த நிலையை விட்டும் வேறாகி, தனது இயல்பு எனக்கு வெளிப்பட, தன்னை எனக்கு நல்கினான். அதாவது நான் அவனுடன் கலந்து பரம் ஆனேன்.

தன்னை நல்குதல் - என்னைப் பரமாக்குதல். சொருகி - மறைந்து. புறப்பட்டு - வெளிப்பட்டு.

ஆகாயமாகத் தாங்குகிறான்

2431. பரந்தும், சுருங்கியும் பார், புனலாயும்
நிரந்த வளியொடு ஞாயிறு, திங்கள்
அரந்த அரன் நெறியாய், அது ஆகி
தரு அந்த விசும்பு ஒன்று தாங்கி நின்றானே.

பரந்துஞ் சுருங்கியும் பார்புன லாயு[1]
நிரந்த வளியொடு ஞாயிறு திங்க[2]
ளரந்த வரனெறி யாயது வாகித்
தரந்த விசும்பொன்று தாங்கிநின் றானே. (7)

வேறு பாடம்: 1. பார்புனல் வாயு (விசு) (தி) (வ) 2. திங்களா (ஆ இ) IV. 3. யமர்ந்த (ஆ இ) II.

கருத்து: இறைவன் கலப்பு நிலையில், நீராகப் பரந்தும், நிலமாய்ச் சுருங்கியும், எங்கும் நிறைந்த காற்று, சூரியன், சந்திரன் ஆகிய வையாயும், தீயாகவும் ஆகாயமாகவும் அமைந்தும் உயிர்களைக் காக்கின்றான்.

தரு அந்த - தரந்த என்க. ஆகாயம் மற்ற் பூதங்களை வெளிப்படுத்து கிறது ஆதலின் 'தருகின்ற விசும்பு' என்றார். ஆகாயத்திலேயே பிற பூதங்கள் தோன்றுதலின், "விசும்பு ஒன்று தாங்கி" என்றார். ஆகாயமாக இருந்து தாங்குகின்றான் என்க. அரந்த - மெலித்தல் விகாரம்.

வடிவுடையாள்; வடிவளிப்பாள்

2432. சத்தி நிலையில், தான் ஆன சத்தியும்
தத் பரையாய் நிற்கும், தான் ஆம் பரற்கு உடல்
உய்த்தகும் இச்சையின் ஞான - ஆதி பேதமாய்,
நித்தம் நடத்தும், நடிக்கும் மாநேயத்தே.

[1]சத்தி நிலையிற் றானான சத்தியுந்
தத்பரை யாய்நிற்குந் தானாம் பரற்குட
லுய்த்தகு மிச்சையின் ஞானாதி பேதமாய்
நித்த [2]நடத்து நடிக்குமா நேயத்தே. (8)

வேறு பாடம்: 1. சத்தின் நிலையிற் (விசு) (தி) (வ) 2. நடிக்கும் நடக்குமார் (ஈ) I.

கருத்து: சத்தி என்ற சுத்த மாயா தத்துவத்தில் சத்தி தனியாக நிற்பாள் அத்துடன், சொரூப நிலையில் உள்ள சிவத்திற்கு, ஒரு வடிவம் ஏற்படும் பொருட்டு, அவனோடு இணைந்த பரையாக இருப்பாள். அந்நிலையில், அவளுக்குத் 'தற்பரை' அல்லது 'பராசத்தி' என்பது பெயர். சிவம் உயிர்களின் பொருட்டு உலகைப் படைக்க அருள் - இச்சை கொள்ளும்பொழுது, சத்தி ஞானசத்தி, இச்சாசத்தி, சிரியாசத்தி முதலிய பல வேறு வடிவம் கொள்வாள். அதே சமயம் சிவத்தினிடமாக இருந்து அவனை நடராசப் பெருமானாக வடிவம் கொடுத்து வெளிப்படுத்தி ஐந்தொழிற் கூத்தை இயற்றுகின்றாள். அவற்றின் வாயிலாக உலகங்களை நடத்துகின்றாள்.

சத்திக்கு வடிவம் உண்டு ஆனால் சிவத்தின் வடிவம் யாவும் சத்தியே என்று கூறினார். தத்பரை - பரனுக்குப் பரை தற்பரை என்றும் எழுதப் படும் ஈண்டு எதுகை நோக்கித் 'தத்பரை' என்றே கொள்ளப்பட்டது. 'உய்த்தல்' தகும் என்பது தொடர். இங்கு, உய்த்தல் முதனிலை அளவாய் நின்றது உய்த்தல் - செலுத்துதல் நேயம் - அறியப்படும் பொருள். இங்குச் 'சிவம்'. சத்தி, பதி ஞானமாகும்பொழுது, அந்த ஞானத்தால்

அறியப்படும் பொருள் சிவம். உலகைப் படைக்கச் சிவம் சங்கற்பிக்கும் போதே (இச்சை கொள்ளும் பொழுதே) அவனிடத்தில், சத்தி தோன்றிவிடுகிறாள். சிவத்தின் சங்கற்ப அளவாக உள்ள ஐந்தொழிலை 'ஞான நடனம்' என்பர். சத்தி நடிக்கின்றாள் என்பது இதற்கும் பொருந்தும்.

வளர்த்து, எடுக்கும் தாய்

2433. மேலொடு கீழ்பக்கம், மெய், வாய், கண், நாசிகள்
பாலிய விந்து, பரையுள் பரையாகக்
கோலிய நான்கு - அவை ஞானம் கொணர்வித்து
சீலம் இலா அணுச் செய்தியது ஆமே.

மேலொடு கீழ்பக்க மெய்வாய்கண் ணாசிகள்
பாலிய விந்து [1]பரையுட் பரையாகச்
கோலிய நான்கவை ஞானங் கொணர்வித்துச்[2]
சீலமி லாவணுச் செய்திய தாமே. (9)

வேறு பாடம்: 1. பரையோடப் (ஆ இ) II. 2. கொணர்விந்து (விசு) (தி) (வ) (சைவ)

கருத்து: மேற்பாடலில் 'சத்தி உலகை நடத்தும்' என்றார், ஈண்டு அஃது எவ்வாறு நடத்தும் எனக் கூறுகின்றார். சத்தி ஞான வொழுக்கம் இல்லாத உயிரின் பொருட்டு, சுத்த மாயையினின்று மேற்கொண்ட 'விந்து' என்ற வடிவுடன் நின்று, சுத்த மாயா புவன உலகங்களையும், அசுத்த மாயா புவன உலகங்களையும், ஆங்கு உள்ள சீவர்களின் நுண்ணுடல், பருவுடல் ஆகியவற்றில், மெய், வாய் முதலிய ஐம்பொறிகளையும் காக்கின்றாள். இதனைச் செய்யும் பொழுது அவள் பெயர் 'திரோதான சத்தி' என்பது. பராசத்தியும் அவளிடமிருந்து தோன்றிய இச்சாசத்தி, கிரியாசத்தி, ஞானசத்தியும் ஆகிய நால்வரும் உயிருக்கு ஞானம் வரச்செய்வர்.

பராசத்தியின் சொரூபப் பெயர் அருட்சத்தி. உலகியலறிவு பெற்றே ஞானம் பெற வேண்டுமாதலின், அதன் பொருட்டுச் சத்தி ஐம்பொறிகளைக் காக்கின்றாள்; இயக்குகின்றாள். பராசத்தி மூன்று வகைப்படுதலைச் சிவஞான சித்தியார், "ஒன்றதாய் இச்சா ஞானக் கிரியை என்று ஒரு மூன்றாகி நின்றிடும் சத்தி" எனக் கூறும் (சுப - 83). "நான்கவையால், ஞானம் கொணர்வித்து" என மூன்றன் உருபு விரிக்க.

மயக்கும் மாயை விளக்கமும் செய்யும்

2434. வேறாம் அதன் தன்மை போலும் இக்காயத்தில்
ஆறாம் உபாதி, அனைத்து ஆகும் தத்துவம்
பேறாம் பரவொளி தூண்டும் பிரகாசமாய்
ஊறு ஆய் உயிர்த்து உண்டு, உறங்கிடும் மாயையே.

[1]வேறா மதன்றன்மை போலுமிக் காயத்தி
லாறா முபாதி யனைத்தாகுந் தத்துவம்
பேறாம் பரவொளி தூண்டும் பிரகாசமா
[2]யூறா [3]யுயிர்த்துண் டுறங்கிடு மாயையே. (10)

வேறு பாடம்: 1. வேறாந்தன்றன்மை (அ) II; வேறாகுந் தன்றன்மை (ஓ) III. 2. வூறா வுயிர்த்துண் (ஓ) IV. 3. யுயிர் தூண் (ஈ ஓ) I.

கருத்து: உடம்பில் மூச்சுவிடும் செயலாகவும், உண்ணத் தூண்டும் பசியாகவும், உறங்கச் செய்யும் களைப்பாகவும் அமைந்து உலகியலில் ஆழ்ந்து கிடக்குமாறு அறிவை மயக்கும் இயல்பை உடையதாகிய மாயை, ஆறு ஆதாரங்களும் 24 ஆன்ம தத்துவங் களும், முடிநிலைப் பேறாகிய பரவொளியால் தூண்டப்பட்டு ஒளியுடையனவாக மாறுவதால், தன் இயல்பினின்றும் மாறுபட்டு நிற்கும் போலும்.

மாயை மலமாதலின் மயக்கம் செய்வதே ஆகும். அழுக்கைக் கொண்டு அழுக்கை நீக்குவது போல, இறைவன் உயிர்க்கு மாயா மலத்திலிருந்து உடம்பையும், உலகையும் படைத்து, அதன் கன்ம மலத்தையும் ஆணவ மலத்தையும் நீக்குகின்றான். அவ்வாறு நீக்கும் பொழுது, மாயையின் காரியமாகிய உடம்பின் தத்துவங்கள் ஒளி உடையவை ஆகும். ஊறு - உறுவது, பொருந்துவது, ஈண்டு வேட்கை, மூச்சுவிடவும், உண்ணவும் உறங்கவும் எழும் வேட்கை. உபாதி - வழி, துன்பம்.

ஆன்மா வீடுபேற்றில் அடைவது பர வொளியை ஆதலின், "பேறாம் பரவொளி" என்றார்.

கொண்டு கூட்டு: "இக் காயத்தில், ஊறாய், உயிர்த்து,உண்டு, உறங்கிடும் மாயை, ஆறாம் உபாதி, அனைத்து ஆகும் தத்துவம், பேறாம் பரவொளி தூண்டும் பிரகாசமாய் (நிற்க) அதன் தன்மை வேறாம் போலும்" எனக் கூட்டுக.

சிவவொளியே ஆன்மவொளி

2435. தற்பரம் மன்னும் தனிமுதற் பேரொளி
சிற்பரம் அஃதே செகம் உண்ணும் போதமும்
தொற்பதம் தீர்பாழில் சுந்தரச் சோதிபுக்கு
அப்பரம்: மற்றது இங்கு ஒப்பு - இல்லையாகுமே.

தற்பர மன்னுந் தனிமுதற் பேரொளி
சிற்பர [1]மஃதே செகமுண்ணும் போதமுந்
தொற்பதந் தீர்பாழிற் சுந்தரச் சோதிபுக்
[2]கப்பர மற்றதிங் கொப்பில்லை யாகுமே[3]. (11)

வேறு பாடம்: 1. தானே (விசு) (தி) (வ) 2. கப்புற (விசு) (தி) (வ) 3. தானே (விசு) (தி) (வ)

கருத்து: தன்னை நோக்க, வேறு மேலான பொருள் இன்றித் தானே மேலாம் பொருளாக நிலைபெறும், ஒப்பற்ற, பேரொளி ஆகிய முதல்வனே (சிவமே) ஆன்மா பரம் ஆகும் போது, அப்பரமாக உள்ளான். எவ்வாறு? ஆன்மா பாச ஞானமும் பசுஞானமும் (தற்போதம்) நீங்கப் பெற்று, தனியாக நிற்கும் போது, அதனுள் மிக்க அழகிய பரஞ்சோதி புகுந்து, அதனைத் 'தன்மயம்' ஆக்கும். ஆன்மா அடையும் இந்தப் பேற்றுக்கு இணை இல்லை.

அப்பரம் ஆக்கும் - என ஒரு சொல் வருவிக்க. சிற்பரம் ஆன்ம அறிவே சிவமாக நிறைதல்; செகம் உண்ணும்போதம்-உலகைத் தழுவிய அறிவு. தொற்பதம், தொம்பதம் என்பதன் திரிபு; துவம் பதம் - நீ என்ற சொல். தொம் பதம் தீர்தல் - நான் என்று எண்ணும் பசுஞானம் நீக்குதல். பாழ் (சூனியம்) என்பதும் இதுவே. இதனை "முப்பாழும் ஒருவிமேல், பெரும்பாழ் எனும் உலப்பில் ஆனந்தப் பொருளோடு ஏகமாய்ப் பொருந்திடும் முத்தர்" என்று திருவானைக்காப் புராணம் கூறும்.

காரணமும் காரியமும்

2436. பண்டை மறைகள் பரமன் உடல் என்னும்
துண்ட மதியோன் துரியாதீதம் தன்னைக்
கண்டு பரனும் அக்காரணோபாதிக்கே
மிண்டின், அவன் கத்தன் ஆகான் வினவிலே.

பண்டை மறைகள் பரம னுடலென்னுந்
துண்ட மதியோன் றுரியாதீ தந்தன்னைக்
கண்டு பரனுமக் காரணோ பாதிக்கே
மிண்டி னவன்சுத்த னாகான் வினவிலே. (12)

வேறு பாடம்: 1. பரவா (இ ஓ) II. 2. தீதப்பரன் (ஆ இ) II. 3. கண்ட பரன் என்னைக் (ஆ இ) II. 4. விண்டு பரன் சுத்த (ஆ இ) II.

கருத்து: வேதங்களால் இறைவனது திருமேனி எனச் சொல்லப் படும், சிவ துரியாதீதத்தை, உளது என உணர்ந்தும், அதை அடைதற்குக் காரணமாக - படி நிலையாக உள்ள வழிகளிலேயே அனுபவம் பெற்றுக் கொண்டிருந்தால், ஆன்மா மலம் நீக்கிச் சுத்த நிலை அடையான்.

துண்டமதியோன் - பிறை சூடிய கோலத்தைக் குறியாமல், 'சிவம்' என்ற அளவில் காட்டியது. ஆன்மாவுக்கு வீடு பேறு அருளும் நிலையினை, சிவன் பிறைச் சந்திரனைச் சூடிய செயல் உணர்த்தும் என்பர். பரன் கண்டும் என உம்மையைப் பிரித்துக் கூட்டுக. பரன் - தத்துவங்களை விட்டு நீங்கிய ஆன்மா. காரண உபாதி - காரணமாக உள்ள வழி; சிவதுரியாதீத நிலையை அடைவதற்கு முன் உள்ள அவத்தைகள், பர அவத்தை ஐந்தும். மிண்டுதல் - நெருங்குதல்.

பராவத்தைகளை அடைந்த பிறகு சிவாவத்தைகளை அடைதல் இன்றியமையாதது என்றார். பராவத்தை வரை உள்ளவை காரணம், சிவாவத்தைகள் காரியம் என்றும் உணர்த்தினார்.

சத்தியே ஆதாரம்

2437. வெளி, கால், கனல், அப்பு, மேவும் மண் உண்டது
அளி ஆகிய தற்பரம் காண் அவன் தான்;
வெளி, கால், கனல், அப்பு, மேவும் மண் நின்ற
வெளி ஆய சத்தி அவன் வடிவு ஆமே.

வெளிகால் கனலப்பு மேவுமண் ணுண்ட[1]
தளியா கியதற் பரங்கா ணவன்றான்
வெளிகால் கனலப்பு மேவுமண் ணின்ற
வெளியாய சத்தி [2]யவன்வடி வாமே. (13)

வேறு பாடம்: 1. ணுண்டை (அ ஒ ஓ) I னின்ற (விசு) (தி) (வ) 2. வியன்வடி (ஆ) IV.

கருத்து: ஆகாயம், காற்று, தீ, நீர், நிலம் என்னும் ஐம்பூதங்களின் சேர்க்கையாகிய உலகம், உடம்பு, ஆகியவை பற்றிய பாச ஞானத்தைக் கைவிடச் செய்து, அதன் இடத்தில் பரவி நின்ற பரவெளி சிவம். அதாவது இந்நிலையில், ஆன்மாவுக்கு உலகமும் உடம்பும் உணர்வில் தோன்றவில்லை. பரமே தோன்றிற்று. ஐம்பூதங்களும் நின்ற ஆதாரமாகிய வெளி சத்தியாகும். அச் சத்தியே சிவத்தின் வடிவாகும்.

சத்தி மாயையைக் கலக்கிய போது ஐம்பூதங்கள் தோன்றின ஆதலால் அவை நிற்பதற்கு ஆதாரம் சத்தி என்பபட்டது. அச்சத்தி பரசிவத்துக்கு வடிவம். சொரூப சிவத்துக்கு அகண்டவெளியே வடி. இவ்வெளி ஞானவெளியே. சிவமே ஞானம். சத்தி அதில் ஒடுங்கி நிற்கும்.

அளி - அருள். ஆன்மாவின் அறிவாகப் பரசிவம் நிற்பது, அவரது கருணையால். இக்கருணை ஆன்மாவின்மேல் செல்வது, காரணம் அற்றது. "தற்பரம் அவன்றான் காண்" எனப் பிரித்துக் கூட்டுக. இதில் அவன், பகுதிப் பொருள் விகுதி. தான், காண் என்பவை அசைகள். செய்யுளை நோக்கிப் பகுதிப் பொருள் விகுதிக்குமுன் அசை வந்தது.

2438. மேருவி னோடே விரிகதிர் மண்டல
மார நினையு மருந்தவ யோகிக்குச்
சீரார் தவஞ்செய்யிற் சிவனரு டானாகும்
பேரவும் வேண்டா பிறிதில்லை தானே. (ஆ)

129. முத்துரியம்

மேலுணர்வு - மூன்று நிலை

2439. தனது ஆதி மூன்றினில் சீவன்துரியம்;
தனது ஆதி மூன்றில் பரதுரியம் தான்;
நனவு ஆதி மூன்றில் சிவதுரிய(ம்) மாம்,
இனது ஆகும் 'தொந்தத்தசி' பதத்து ஈடே.

[1]தனதாதி மூன்றினிற் [2]சீவன் றுரியந்
[3]தனதாதி [4]மூன்றிற் பரதுரி யந்தான்
[5]னனவாதி [6]மூன்றிற் [7]சிவதுரி யம்மா
மினதாகுந் [8]தொந்தத் தசிபதத் தீடே'. (1)

வேறு பாடம்: 1. துனதாதி (அ ஈ ஓ ஓ) V நனவாதி (ஆ இ) II. 2. சீவதுரியந் (ஆ இ) III. 3. துனதாதி (ஓ) தனவாதி (ஆ) I. 4. மூன்றினிற் (அனை. சுவ.) V. 5. னைதாதி (அ ஆ இ ஈ ஓ) I. 6. மூன்றினிற் (ஓ) II. 7. சிவதுரியமா (அனை சுவ.) I; (விசுபதிப்பில் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்டது.) 8. தொந்தற்ற சிவபதத் (அ) I; 9. தெந்தையே (ஆ இ) II.

கருத்து: சீவனது சுத்த அவத்தைகள் மூன்றும் முடிந்த பின் வருவது சுத்த துரியம். அத்துரியத்தையே சாக்கிரமாகஉடைய பராவத்தை களுள், முதல் மூன்றும் கடந்த பின் வருவது பரதுரியம். அப்பரதுரியத்தையே சாக்கிரமாக உடைய சிவாவத்தைகளுள், முதல் மூன்றும் அடைந்தபின் வருவது சிவதுரியம். இவை மூன்றும் 'தத்துவமசி' மகாவாக்கியப் பொருள் ஆகிய அனுபவ நிலைகள் ஆகும்.

முதல் அடியில், "சீவன் தனதாதி" எனக் கூட்டுக. 2 ஆம் அடியில் "தனது" என்பது சீவதுரியத்தைக் குறிக்கும். 2 ஆம் அடியில், "பர துரியந்தான்" என்பதை, 3 ஆம் அடியிலும் இணையும் மத்திம தீபமாகக் கொள்க. இனது - இன்னது என்பதன் இடைக்குறை. ஈடு - இடப்பட்டது; பொருள்.

மகா வாக்கியப் பொருள்

2440. தான் ஆம் நனவில் துரியம் தன் 'தொம்-பதம்';
தான் ஆம் துரிய நனவு ஆதி தான் மூன்றில்
ஆனாப் பரபதம், மற்று அது அருநனா
வான் ஆன மேல் மூன்றாம் துரியம் அணுகுமே.

தானா நனவிற் [1]றுரியந்தன் றொம்பதந்
தானாந் துரிய நனவாதி தான்மூன்றி
லானாப் [2]பரபத மற்ற தருநனா
வானான [3]மேன்மூன்றாந் துரிய மணுகுமே. (2)

வேறு பாடம்: 1. துரியந்தான் (இ ஓ) I. 2. படர்பத (ஓ) I; பரமபர (ஓ) I. 3. மேன் மூன்றுந் (ஆ) I.

கருத்து: சுத்த நிலை அவத்தைகள் ஆன்மா தத்துவங்களின் தொடர்பின்றித் தானாய் நின்று அடையும் அவத்தைகள் ஆகும். அவற்றுள் துரியம், ஆன்மாவைக் குறிக்கும் 'தொம்' (த்வம்) என்னும் சொல்லின் பொருளாகிய அனுபவம். சுத்த துரியத்தையே சாக்கிர மாகக் கொண்ட பராவத்தைகளுள், முதல் மூன்று அவத்தைகள்

கடந்தபின் வந்து எய்தும் பர துரியம், ஆன்மா பரநிலையை அடையும் அனுபவம் ஆகும். அப்பரதுரியத்தைச் சாக்கிரமாகக் கொண்ட சிவாவத்தைகளுள், முதல் மூன்றும் கடந்தபின் அடையும் சிவதுரியம், அகண்டவெளியான சிவதுரியாதீதமாகி நிறைவெய்தும்.

பரமாக நிற்பது அருள் என்பதை ஆசிரியர், முன்னர் 'திருவம்பலச் சக்கரம்' - இயலில், "அகாரம் உயிரே, உகாரம் பரமே. மகாரம் சிவமாய் வருமுப்பதத்தில்" (பாடல் (966) என்னும் பாடலிற் கூறினர். சுத்த துரியத்தில், தத்துவங்களைவிட்டு நீங்கித் தானான ஆன்மா, பரதுரியத்தின் அருளைப் பற்றிக் கொண்டு, சிவ துரியாதீதத்தில் அகண்ட வெளியாய் உள்ள சிவத்தை அடைந்து, சிவமாகும் என்க. "மற்று அது (பரதுரியம்) அருநனாமேல் மூன்றாம் துரியம், வான் ஆன அணுகுமே" எனக் கூட்டுக. 'வான் ஆன' என்பதில், "ஆன" என்பது சிவதுரியாதீத அனுபவங்களை குறிப்பது; வினையாலணையும் பெயர்.

முத்துரியத்தின் உள்ளே ...

2441. அணுவின் துரியத்து நான்கும், அது ஆகிப்
பணியும் பரதுரியம் பயில் நான்கும்,
தணிவு இல் பரம் ஆகிச் சார் முத்துரியக்
கணு - இல நான்கும் கலந்த ஈரைந்தே.

அணுவின் றுரியத்து நான்கும தாகிப்[1]
பணியும் பரதுரி யம்பயி னான்குந்
[2]தணிவில் பரமாகிச் சார்முத் துரியக்
[3]கணுவில நான்குங் கலந்தவீ ரைந்தே. (3)

வேறு பாடம்: 1. தாதி (ஆ) I. 2 தணிவிற் (விசு) (தி) (வ) 3. கணுவிலோர் (ஆ இ) II; கணுவினில் (ஈ) II; கணுவிலிந் (விசு) (சங்) (வ) (தி).

கருத்து: சுத்த துரிய அனுபவத்தினுள் அடங்கிய சுத்த சாக்கிரம், சுத்த சொப்பனம், சுத்த கழுத்தி, சுத்த துரியம் என்னும் நான்கு அவத்தைகளும், சுத்த துரியமே சாக்கிரமாகித் திருவருளில் அடங்கி நிற்கும் அனுபவம் ஆகிய பரதுரியத்துள் அடங்கிய நான்கு அவத்தைகளும், ஆன்மா அவ்வாறு குறைவிலா நிறைவாகிய திருவருளைச் சார்ந்து, பின்னர், அதையும் கடந்து அடைவதும், மூன்றாவது துரியமும் ஆகிய, வேரற்ற அகண்ட வெளியாகிய சிவ அவத்தைகளுள் முதல் நான்கும், ஆக இப்பன்னிரண்டு அவத்தை களுடன், மத்தியாலவத்தை என்னும் சகலாவத்தைகள் ஐந்தும்,

கீழாலவத்தைகள் என்னும் கேவலாவத்தைகள் ஐந்தும் சேர்ந்து இருபத்திரண்டு அவத்தைகளும் முத்துரியத்தில் அடங்கும்.

முத்துரியம் என எடுத்துக் கொண்டமையால், மூன்று துரியாதீதத்தையும் நீக்கினார். கேவலாவத்தைத் துரியாதீதமும், சகலாவத்தைத் துரியாதீதமும், முத்துரிய நிலைகளை அடைவதற்கு இன்றியமையாதவை யாதலின், அவற்றைச் சேர்த்து எண்ணினார்.

அணு - உயிர். கணு - வேர். நிராதாரம் ஆதலின், 'வேரற்றது' என்றார்.
3 ஆம் அடி : முத்துரியம் - மூன்றாம் துரியம்; சிவ துரியம்.

தாயைப் பிரிக

2442. ஈர்-ஐந்து அவத்தை இசை முத்துரியத்து
நேர் அந்தம் ஆக, நெறிவழியே சென்று
பார் அந்தமான பராபரத்து ஐக்கியத்து
'ஓர் அந்தம்' ஆம் 'இரு பாதியைச்' செற்றிடே.

ஈரைந் தவத்தை யிசைமுத் துரியத்து
[1]நேரந்த மாக நெறிவழி யேசென்று
பாரந்த மான பராபரத்தைக்கியத்[2]
[3]தோரந்த [4]மாமிரு [5]பாதியைச் செற்றிடே[6]. (4)

வேறு பாடம்: 1. ணேரந்த (விசு) (தி) (வ) 2. தைக்கிய (இ) IV. 3. மோரந்த (இ) IV. 4. மாயிரே முழுபாதியைச் (ஆ இ) II. 5. காதியைச் (சங்) 6. சேர்த்திடே (அ) II; செற்றீரே (ஓ) I.

கருத்து: கேவலமும் சகலமும் ஆன அவத்தைகள் பத்தும் சேரப் பெற்றவையான மூன்று துரியங்களை, ஒன்றைக் கடந்து ஒன்றாக அனுபவித்து அவற்றின் அதீதங்களையும் (சுத்த துரியாதீதம், பர துரியாதீதம்) அனுபவித்து அனைத்து உணர்வு நிலைகளின் முடிவாகிய சிவதுரியாதீதத்தை அடைவதற்கு, உரிய வழியைக் கடைப்பிடிக்க வேண்டும். உலகமும் பொருள்களும் ஒடுங்கும் இடமாக உள்ளதும், பராபரமும் ஆன அகண்ட வெளியை - சிவதுரியாதீத உணர்வுடன் கலந்து ஐக்கியமாக வேண்டும். அவ்வாறு கலப்பதற்கு, முன்னர் முடிநிலையாக அடைந்த பரதுரியமே தடையாகும். அதாவது ஆன்மா அருட் சத்தியுடன் கலந்துநிற்பது ஒரு தடையாகும். ஆதலால், முழுமையாக உள்ள இரண்டு பாதிகளான 'சிவம் - திருவருள்' என்ற இருமையை, ஆன்மாவே, நீ உன் உணர்விலிருந்து அகற்றுக. 'எல்லாம் சிவமே' என உணர்க.

இருமை - சிவம் வேறு, திருவருள் (சத்தி) வேறு என எண்ணுதல். ஓர் அந்தம் - ஓர் உறுப்பு. சிவமும் திருவருளும் (சத்தி) ஒரு முழுப்பொருளின் ஓவ்வோர் உறுப்புக்கள். இதனை ஆசிரியர், கடவுள் வாழ்த்து முதற் பாடலில் "ஒன்று அவன்தானே, இரண்டு அவன் இன்னருள்" எனக் கூறினார். செற்றிடு - அகற்றுக. முத்துரியத்து நேர் அந்தம் - சிவ துரியாதீதம். அந்தம்-முடிவு. பார் அந்தம் - உலகின் ஒடுக்கம்.

மேற்பாடலிலும், இப்பாடலிலும் "முத்துரியம்" எனத் தொகுத்தலையும் அவற்றுள் 22 அவத்தைகள் அடங்கும் எனக் கூறுதலையும் நோக்கின், கீழாலவத்தை, மத்தியாலவத்தைகளிற்போல, ஏனைய மூன்று அவத்தை வரிசைகளில், சுழுத்தியை அடுத்துத் 'துரியாதீதம்' அடையப் படுவதன்று என விளங்குகின்றது. இப்பாடலில் "முத்துரியத்து நேர் அந்தமாக" எனக் கூறியமையால், இம் மூன்று அவத்தை வரிசைகளிலும், துரியம் வரை 12 அவத்தைகளை அடைந்து, பின்பு சுத்த துரியாதீதமும், பரதுரியாதீதமும் எய்தப்படும் என்றும், அதன் பின்பு, சிவதுரியாதீதம் எய்தப்படும் என்றும் தெரிய வருகின்றது.

ஞானோதயம் நவிலப்படுமோ?

2443. **தொட்டே இருமின் துரிய நிலத்தினை**
எட்டாது எனினும், நின்று, எட்டும் இறைவனைப்
பட்டாங்கு அறிந்திடின், பல் நா, உதடுகள்
தட்டாது ஒழிவதோர் தத்துவமாமே.

தொட்டே யிருமின் றுரிய நிலத்தினை
யெட்டா [1]தெனினுநின் றெட்டு மிறைவனைப்
பட்டாங் கறிந்திடிற் [2]பன்னா வுதடுக
டட்டா தொழிவதோர் தத்துவ மாமே[3]. (5)

வேறு பாடம்: 1. தெனினின் (ஈ) I. 2. பண்ணாவுக்கெழ (ஆ) I. 3. தத்துவந் தானே (சங்)

கருத்து: யோகசாதனையில் துரிய நிலையிலேயே உமது உணர்வை வைத்திடுக. ஒருகால், பலகால் முயன்றும் இறைவனின் சிவதுரியாதீதத்தை - நிராதாரநிலையை - உணர்வால் பற்ற இயலாதெனினும், தொடர்ந்து முயன்றால், அவன் கருணையால் அதனைப் பற்றிவிடலாம். அந்த நிலையை உள்ளவாறு அறிந்தால், அதனைச் சொல்லச் சொல் இல்லை. பேச்சு அற்றுவிடும்.

தட்டாது - பொருந்தாமல்.

குறிப்பு: இப்பாடலை அடுத்துத் துடிசை கிழார் பதிப்பில் உள்ள "மனவு நனவு" என்னும் பாடல் சுவடிகளிலும் பிற பதிப்புகளிலும் இல்லை.

2444. நனவி னனவாதி நாலாந் துரியந்
தனதுயிர் தொம்பத மாமாறு போல
வினையறு சீவன் நனவாதி யாகத்
தனைய பரதுரி யந்தற் பதமே. (அ)

2445. தொம்பதந் தற்பதஞ் சொன்முத் துரியம்போ
னம்பிய மூன்றாந் துரியத்து நற்றாம
மம்புவி யுன்னா வதிசூக்க மப்பாலைச்
செம்பொரு ளாண்டருள் சீர்நந்தி தானே. (அ)

130. மும்முத்தி

முத்தியின் மூன்று முகம்

2446. சீவன்தன் முத்தி அதீதம்; பர முத்தி
ஓ உபசாந்தம்; சிவமுத்தி ஆனந்தம்;
மூவயின் முச்சொருப முத்தி முப்பாலதாய்
ஓ உறு தாரத்தில் உள்ளும் நாதாந்தமே.

சீவன்றன் முத்தி யதீதம் பரமுத்தி
[1]யோவுப சாந்தஞ் சிவமுத்தி யானந்த
[2]மூவயின் முச்சொருப முத்திமுப் பாலதா
[3]யோவுறு தாரத்தி லுள்ளுநா தாந்தமே. (1)

வேறு பாடம்: 1. யோயுப (சங்) (சைவ) (துடி) 2. மூவகை (ஆ) IV. 3. லோவுறு (இ) II.

கருத்து: சீவனது முத்தி எனப்படுவது பாசம் கடந்து நிற்றல், பரமுத்தி எனப்படுவது போக்குவரவு அற்ற நிலை (தன் செயலின்றி, அருளின் வழியே நிற்றல்). சிவமுத்தி எனப்படுவது நிரதிசயானந்தம் (சிவம், ஆன்மா என இருமை அற்ற, ஆனந்தம்) இங்ஙனம், ஆன்மாவின் மூன்று வகை அவத்தைகளில், மூன்று வகை இயல்புடையதாய் விளங்கும் முத்தி, அ உ ம என்ற மூன்று பிரிவான வியட்டிப் பிரணவத்தினைத் தியானத்தில் நிறுத்துவதால் வரும் 'நாதம்' ஆகிய அனுபவத்தின் எல்லையில் அடைவதாகும். (இதுவே பிராசாத யோகம். இதன் விரிவு முன்னர்க் கூறப்பட்டது).

முப்பாலதாய் ஒவுதல் - மூன்று பிரிவாய் ஒலித்து நீங்குதல். நீங்கியே விந்து, நாதங்களாக அனுபவப்படும். நாதமும் ஞான வெளியாக நிறைவுறும். சீவன் ஞானவெளியாவதே சிவமுத்தி.

அருளோடு வாழ்; சிவனோடு பொருந்து

2447. ஆவது அறியா உயிர் பிறப்பால் உறும்;
ஆவது அறியும் உயிர் அருட்பால் உறும்;
ஆவது ஒன்று இல்லை அகம் புறத்து என்று அகன்று,
ஓவு சிவனுடன் ஒன்றுதல் முத்தியே.

ஆவ தறியா [1]வுயிர்பிறப் பாலுறு
மாவ தறியு [2]முயிரருட் பாலுறு
மாவதொன் றில்லை யகம்புறத் தென்றகன்
றோவு சிவனுட னொன்றுதன் முத்தியே. (2)

வேறு பாடம்: 1. ருயிர் பிறப் (அ ஈ ஒ ஓ) I. 2. முயிருடம் (அ ஆ) I.

கருத்து: பிறப்பால் ஆகும் பயனை அறியாத ஆன்மா, பிறப்புக் களையே மிகுதியாகப் பெறும், பயனை அறிந்த உயிரோ திருவருளைச் சார்ந்து வாழும். அருளினின்று பிரிந்தால், உலகப் பொருள்களால் மனத்திற்கோ, புற வாழ்வுக்கோ ஆகும் பயன் ஒன்றும் இல்லை என் பதை அறிந்து, பாசத்தினின்று நீங்கி, எல்லாம் கடந்த நிராதாரப் பொருளாகிய சிவனுடன் ஒன்றிக் கலப்பதே முத்தி ஆகும்.

பிறப்பால் - பிறப்புப் பால் என்பதன் விகாரம்.

மகா வாக்கியத் தவம்

2448. 'சிவம் ஆகி' மும்மல, முக்குணம் செற்றுத்
தவமான மும்முத்தி, 'தத்-துவத்து' ஐக்கியத்
துவம் ஆகிய நெறிச் "சோகம்" என்போர்க்குச்
சிவமாம் அமலம் சிறந்தது தானே.

சிவமாகி மும்மல முக்குணஞ் செற்றுத்
தவமான மும்முத்தி தத்துவத் தைக்கியத்
துவமா கியநெறிச் சோகமென் போர்க்குச்
சிவமா மமலஞ் [1]சிறந்தது தானே. (3)

வேறு பாடம்: 1. சிறந்தனன் (விசு) (தி) (வ).

கருத்து: தனது சார்பு சிவம் ஆகிட, மூன்று மலங்களையும், சத்துவ, இராஜச தாமத குணங்களையும் விலக்கி, முத்தியுண்மையை விளம்பு வதாகிய "தத்துவத்து - ஐக்கியம்" என்ற 'தத்துவமசி' மகா வாக்கியத்தின் அனுபவத்தை அடையும் தவநெறியில் நின்று 'சிவோகம்' பாவனை செய்பவர்க்கு, மலங்கடந்து நிற்பதாகிய சிவமாகிய பொருள், உணர்வில் சிறந்து விளங்கும். தவமான நெறி எனச் சேர்க்க. மும்முத்தி - மேற்பாடலில் காட்டியவாறு மூன்று படிநிலைகளை உடைய முத்தி. சிவோகம் பாவனை "என் அறிவே, என் உயிரே" எனச் சிவத்தைத் தியானித்தல்.

பிறவி ஒழிப்பவன்

2449. சித்தியு முத்தியுந் திண்சிவ மாகிய
சத்தியு [1]முத்தந் தொலைக்குஞ் சுகானந்த
சத்தியு மேலைச் சமாதியு மாயிடும்
பெத்த மறுத்த பெரும்பெரு மானே[2]. (4)

வேறு பாடம்: 1. முத்தி (ஆ) I; முத்தீ (விசு) (தி) (வ) 2. மாயனே (அ ஈ ஓ) I.

கருத்து: ஆன்மாவுக்கு அட்டமா சித்தியும், மலங்களிலிருந்து நீக்கமும் 'சிவமாந்தன்மையை அடைகின்ற வழியான தற்போத நீக்கமும் அருள்வது சிவம். பாசத்திலிருந்து விலகி, சார்பு ஏதும் இன்றித் துன்புறும் நிலையை மாற்றுவது அவனது அருட்சத்தி. ஆனந்தம் அளிப்பதும் அதுவே. இத்துணைப் பேறும் கிடைப்பதற்கு அடிப்படையான சமாதி நெறியாக நிற்பவனும் சிவனே. ஆன்மாவின் பிறப்பை யொழித்துப் பெரு வாழ்வு தரும் கருணையை உடைய முதல்வனே.

இத்துணையும் ஆனான் எனக் கூறினாரேனும், உயிரின் பிறப்பை ஒழித்தற்கு இவற்றை அருளுகின்றான் எனக் கொள்க. பெத்தம் - கட்டு நிலை; மலங்களாற் கட்டுண்ட நிலை.

131. முச்சொரூபம்

வாழ்க்கைத் தோழன்

2450. ஏறிய வாறே மலமைந் திடையடைத்[1]
தாறிய ஞானச் சிவோக மடைந்திட்டு
வேறு மெனமுச் [2]சொருபத்து வீடுற்றங்
கீறதிற் பண்டைப் பரனுண்மை செய்யுமே (1)

வேறு பாடம்: 1. திடையடைத் (இ ஈ) I; திடை யுடைந் (ஓ) I. 2. சொரூபத்துண் டேமுற்றங் (ஈ) IV.

கருத்து: சிவபெருமான் ஆன்மாக்கள் மலங்களைக் கடந்து பக்குவப்பட்டமைக்கு ஏற்ப, ஐந்து மலங்களுள், அவர்கள் இன்னும் கடக்க வேண்டியவற்றைக் கடப்பதற்குத் துணையாக அவர்களின் பிறப்பில் தானே பொருந்தி நிற்பான். அவர்கள் அனைத்து வேட்கையும் தணியப் பெற்று, ஞானநிலையாகிய சிவோகம் பாவனையை அடையத் துணை நின்று, விஞ்ஞானாகலர், பிரளயாகலர், சகலர் என்னும் தத்தம் தன்மைகளில் நின்று வீடுபேறு எய்தச் செய்வான். அம் முத்தியில் மூன்றாவது நிலையாகிய சிவ - துரியாதீதத்தில், சிவத்தின் சொரூபத்தை அறியும்படி செய்வான்.

சிவபெருமான் என்னும் எழுவாயை வருவிக்க.

மூன்று மாளிகை

2451. மூன்று உள மாளிகை, மூவர் இருப்பிடம்
மூன்றினின் முப்பத்தாறும் உதிப்பு உள,
மூன்றினினுள்ளே முளைத்து எழும் சோதியைக்
காண்டலும் காயக்கணக்கு அற்றவாறே.

மூன்றுள மாளிகை மூவ ரிருப்பிட
மூன்றினின் முப்பத் தாறுமு திப்புள
[1]மூன்றினி னுள்ளே முளைத்தெழுஞ் சோதியைக்
காண்டலுங் காயக் கணக்கற்ற வாறே. (2)

வேறு பாடம்: 1. மூன்றினுமுள்ளே (அ) IV.

கருத்து: விஞ்ஞானாகலர், பிரளயாகலர், சகலர் என்னும் மூவகை ஆன்மாக்கள் பிறந்து தங்குவதற்கு முறையே சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதிமாயை என்பவற்றிலிருந்து உடம்புகள் உண்டாக்கப்படும். இம் மூன்றிலும், தனித்தனி 36 தத்துவங்களும் உண்டு. இவ்வுடம்புகளுக்குள் தோன்றி ஒளி வீசத்தக்கது சிவசோதி. அதனை ஆன்மா தன் உணர்வால் கண்டால், அதன் பிறவி வட்டம் முடிவுறும்.

யாரறிவார் ஈசன் பெருமை

2452. உலகம் புடைபெயர்ந்து, ஊழியும் போன;
நிலவு சுடரொளி மூன்றும் ஒன்று ஆக,
பலவும் பரிசொடு பான்மையுள் ஈசன்
அளவும் பெருமையும் ஆர் அறிவாரே.

[1]உலகம் புடைபெயர்ந் தூழியும் போன
நிலவு சுடரொளி மூன்றுமொன் றாகப்[2]
பலவும் பரிசொடு பான்மையு ளீச
னளவும் பெருமையு மாரறி வாரே. (3)

வேறு பாடம்: 1. உலக முடையோ னூழியும் (ஆ) IV. 2. றாய (விசு) (தி) (வ).

கருத்து: உலகம் ஒடுக்கப்பட்டது. ஊழி முடிந்தது. சீவவொளி, பரவொளி, சிவ ஒளி என்ற மூன்றும் ஒன்றாயின. பல பொருள் கட்கும் தன்மையும் முறையும் உண்டு. ஆனால், இறைவனின் அளப்பரிய தன்மைகளையும், முறைகளையும் யாரே அறிய இயலும்?

புடை பெயர்தல் - நிலைமாறுதல்; அசைதல். ஊழி - யுகம். உயிர் இறையொளியுடன் கலந்தது. உலகம் ஒடுக்கப்பட்டது. இங்குக் கூறிய முச்சொருபம், முச்சுடர்; சீவவொளி, பரவொளி, சிவவொளி ஆகியவை.

மூன்று இறை வடிவம்

2453. பெருவாய் முதல் எண்ணும் பேதமே பேதித்து
அருவாய், உருவாய், அருவுரு ஆகிக்
குருவாய் வரும் சத்தி, கோன், உயிர்ப்பன்மை
உருவாய், உடன் இருந்து, ஒன்றாய், அன்றாமே.

பெருவாய் [1]முதலெண்ணும் பேதமே பேதித்
தருவா யுருவா யருவுரு வாகிக்
குருவாய் வருஞ்சத்தி கோனுயிர்ப் பன்மை[2]
யுருவா யுடனிருந் தொன்றாயன் றாமே. (4)

வேறு பாடம்: 1. முதலென்னும் (அ ஈ ஓ) I. 2. பான்மை (அ ஓ) I.

கருத்து: பெரிய இடம் முதல் அணு வரையும், யானை முதல் புழு வரையும் அனைத்துப் பொருள்களையும், உயிர்களையும் வேறுபாடு

தோன்றப் படைத்து, தானும் அருவம், உருவம், அருவுருவம் என்ற திருமேனிகளைத் தாங்கி, குருவாகவும் வந்தருளும் உமையொரு பாகன், அளவற்ற உயிர்களின் அறிவில் வியாபித்து ‘ஒன்றாயும்’, அவற்றுக்கு அறிவூட்டி ‘வேறாயும்’, தானும் உடனறிந்து, ‘உடனாயும்’ திகழ்கின்றான்.

இங்கு - முச் சொரூபம் என்றது, அருவம், உருவம், அருவுருவம் என்ப வற்றை. அன்று ஆமே - ஒன்றாதலும், உடனாதலும் அல்லானாகும்.

சிவவொளி சார்ந்து...

2454. மணி ஒளி, சோபை, இலக்கணம் வாய்த்த
மணி எனலாய் நின்றவாறது போலத்
தணி முச்சொருபாதி சத்தியாச் சாரப்
பணிவித்த பேர்நந்தி பாதம் பற்றாமே.

மணியொளி சோபை யிலக்கணம் வாய்த்த[1]
மணியென லாய்நின்ற வாறது போலத்
தனிமுச் சொரூபாதி [2]சத்தியாச் சாரப்
பணிவித்த பேர்நந்தி பாதம்பற் றாமே[3]. (5)

வேறு பாடம்: 1. வாய்த்து (ஓ) I. 2. சத்தியாதி (இ ஈ ஓ) I 3. றாயே (அ ஓ ஓ) III.

கருத்து: படிகமணி, தனக்கென ஓர் ஒளியும், நிறமும், இலக்கணமும் உடைய ஓர் இரத்தினத்தைச் சார வைக்கின், அதுபோன்றே விளங்குதல் போல, மலம் கடந்த ஆன்மா, முறையே சீவஒளி யாகவும், பரவொளியாகவும், சிவஒளியாகவும் அவ்வந் நிலைகளில் விளங்குவது, சிவவொளியைச் சார்ந்தமையால் என அறிக. அவ்வாறு, இறைவன் தனது சத்தி போலவே, ஆன்மா தன்னைச் சார்ந்து நிற்குமாறு ஆட் கொண்டான். அவன் திருவடியே நம் துணையாம்.

சத்தியா - சத்தியாக என்பதன் விகாரம்; கடைக் குறை. சத்தி எவ்வாறு சிவனைச் சார்ந்து நிற்கின்றாளோ, அவ்வாறு ஆன்மாவும் சிவத்தைச் சார்ந்து நிற்க என்பது பொருள்.

1 - ஆம் அடி: மணி - படிகக்கல். 2 - ஆம் அடி: மணி-ஓர் இரத்தினம் முச்சொருபம் - ஆன்மாவின் சீவசொருபம், அதன் பர சொரூபர், அதன் சிவ சொரூபம்.

3 - ஆம் அடியில், "சத்தியாதிசார்" எனப் பாடங்கொண்டு உவமை யைப் பொருந்த முடிக்காமல் இடர்ப்பட்டனர் முன்னுள்ள உரைகாரர்.

முத்திரை தரும் அனுபவம்

2455. கல் ஒளி, மாநிறம், சோபை கதிர்த்திட்ட
நல்ல மணி ஒன்றின், நாடி ஒண்முப்பதம்
சொல் அறு முப்பாழில், சொல் அறு பேர் உரைத்து
அல் இறு முத்திராந்தத்து அனுபூதியே.

கல்லொளி மாநிறஞ் சோபை கதிர்த்திட்ட[1]
நல்ல மணியொன்றின் னாடியொண் முப்பதஞ்
சொல்லறு முப்பாழிற் சொல்லறு பேருரைத்
[2]தல்லிறு [3]முத்திராந் தத்தனு பூதியே. (6)

வேறு பாடம்: 1. கதிதட்ட (ஓ) I; கதிர்தட்ட (ஓ) I. 2. தல்லறு (ஓ) ஐ. 3. முத்தாந்தத் (ஓ) I; முத்தாந்தந் (ஈ) I.

கருத்து: ஓர் இரத்தினத்தின் ஒளியும், நிறமும், பொலிவும் அதைச் சார்ந்த தன்பால் எழப்பெற்ற நல்ல படிகமணியைப் போல, சின்முத்திரையின் அனுபவம் அமையும். அந்த அனுபவமாவது "தத்-துவம்-அசி" என்னும் முப்பதம் சொல்லும் பொருளை, தன்னுள்ளே அக முகமாக ஆய்ந்து உணர்ந்து, மாயப்பாழ், போதப்பாழ், உப - சாந்தப்பாழ் என்பனவற்றையும் உணர்ந்து. அசபா மந்திரத்தைத் தியானித்து, ஆணவ மல இருளை ஒட்டுவதாகிய அனுபவமே ஆகும்.

ஆன்மதத்துவங்களின்றும் நீங்குதல் மாயப்பாழ். வித்தியா தத்துவம் நீங்குதல் போதப்பாழ் - இத்தத்துவங்களின் வாசனையிலிருந்து நீங்குதல் உபசாந்தப்பாழ். முத்திராந்தம் - முத்திரைகளுள் முடிவான தாகிய சின்முத்திரை. சின்முத்திரையின் அனுபவம், ஆன்மா சிவம் ஆவதே. முப்பதம் என்னும் மகாவாக்கியப் பொருளும், முப்பாழும் அதுவே. சிவம் ஆகும் ஆன்மா எதைப் போன்றது எனின், படிகம் இரத்தினத்தைச் சேர்ந்து, அதைப் போலவே விளங்குவதைப் போன்றது.

சிவமும் ஆன்மாவும் கலந்துநின்றாலும், அவை ஒரே பொருளல்ல என்பது கருத்து. இதைக் 'கலப்பால் ஒன்று, பொருள் தன்மையால் இரண்டு" எனச் சுருக்கமாகக் கூறுவர்.

சிவபோகம் பெறும் வழி

2456. உடந்த செந்தாமரையுள் உறு சோதி
நடந்த செந்தாமரை நாதம் தகைந்தால்
அடைந்த பயோதரி அட்டி, அடைத்து, அவ்-
இடம் தரு வாசலை மேல்திறவீரே.

உடந்தசெந் தாமரை யுள்ளுறு சோதி
நடந்தசெந் தாமரை [1]நாதந் தகைந்தா
லடைந்த பயோதரி யட்டி யடைத்தவ்[2]
விடந்தரு வாசலை மேற்றிற வீரே. (7)

வேறு பாடம்: 1. நாதாந்தத் தைந்தா (இ) II. 2. யடைத்தல் (ஆ) I. 3. விடத்தரு (அ) I.

கருத்து: முதலில் கவிழ்ந்தும், பிறகு நிமிர்ந்தும், மாறுபட்ட தன்மையுடையதாகிய சகஸ்ராரத் தாமரையில் எழும் பெருஞ் சோதியுடன், மூலாதாரத்திலிருந்து மேல்நோக்கி யெழும் மூலக் கனலான நாதம், திருவருளினால் கூடினால், அங்குத் தோன்றும் அமுதேசுவரி அமுதைப் பொழிவாள். அது நடத்தற் பொருட்டு, அண்ணாக்கின் இடத்தில் உள்ள கதவைக் கேசரி யோகத்தால் திறப்பீராக.

இதனால், துரியாதீத அனுபவம் எனப்படும் நிராதார யோகத்தைக் கூறினார், துரியாதீதமே சீவசொரூபம், பரசொரூபம், சிவசொரூபம் என்னும் முச்சொரூபத்தைப் பெறும் அவத்தை ஆகும். உடந்த - உடன்ற என்பதன் திரிபு; மாறுபட்ட தன்மையுடைய. கவிழ்தலும் நிமிர்தலும் ஆன்மாவின் பக்குவத்துக்கு ஏற்ப நிகழ்பவை.

132. முக்கரணம்

சொரூபம் வேறு; பொருள் ஒன்று

2457. இடன் ஒரு மூன்றில் இயைந்த ஒருவன்
கடன் உறும் அவ் உரு ஒன்று எனக் காணும்
திடமது போலச் சிவ, பர, சீவர்
உடன் உறை பேதமும் ஒன்று எனலாமே.

இடனொரு மூன்றி லியைந்த வொருவன்
கடனுறு [1]மவ்வுரு [2]வொன்றெனக் காணுந்
திடமது போலச் சிவபர சீவ
ருடனுறை பேதமு மொன்றென லாமே. (1)

வேறு பாடம்: 1. மவ்வரு (அ) IV; மவ்வுறு (சங்) 2. வேறெனச் (இ ஈ ஒ ஓ) II.

கருத்து: தூலவுடம்பு, சூக்கும உடம்பு, காரணவுடம்பு என்னும் மூன்று உடம்புகளிலும் ஒரே சமயத்தில் பொருந்தி வாழும் ஆன்மா ஒன்றே என்பது உறுதி. அது போல சீவன், பரம், சிவம் என்னும் மூவகைச் சொரூபத்தை வெவ்வேறு நிலையில் பெறும் ஆன்மா ஒன்றே.

சிவ-அனுபவம் எங்கு?

2458. ஒளியை யொளிசெய்து வோமென் றெழுப்பி
வளியை வளிசெய்து வாய்த்திட வாங்கி
வெளியை வெளிசெய்து மேலெழ வைக்கத்[1]
தெளியத் தெளியுந் சிவபதந் தானே. (2)

வேறு பாடம்: 1. வைக்குந் (அ) I; வைத்துத் (ஓ) IV.

கருத்து: மூலக் கனலைக் குண்டலி சத்தியின் அருளினால் மூட்டி, அசபா மந்திரத்தால் மேல் நோக்கி எழுப்பி, இடகலை பிங்கலை என்னும் இரு நாடிகளிலும் மாறிமாறி இயங்கும் மூச்சைச் சுழுமுனை நாடியில் செலுத்தி, அக்கனலும் காற்றும் உச்சந்தலையில், திருவருளினால் பொருந்தச் செய்து, சிதாகாச வெளியைப் பரமாகாச வெளியில் சேர்த்து, சகஸ்ராரத்தில் நிராதார சிவ அனுபவத்தைப் பெறச், சிவ பதம் வாய்க்கும்.

பரமாகாய வெளி, உயிருணர்வால் உணரப்படும் அளவு சிதாகாயமாகின்றது. எனவே, சிதாகாய அனுபவத்தைப் பெருக்குதலே 'சிதாகாச வெளியைப் பரமாகாச வெளியில் சேர்த்தலாகும்'. "சிற்பர வியோமம் ஆகும் திருச்சிற்றம்பலத்துள்" என்றார் சேக்கிழாரும். (பெ. பு. பா. 351) 'சித் வியோமம்', 'பரவியோமம்' எனத் தனிதனி பிரித்துக் கூட்டவேண்டும். ஈண்டு வெளி, வியோமம் என்பன அனுபவத்தையும் அறிவையும் குறிக்கும்.

மனோன்மணியை விட்டு உன்மனியுடன்

2459. முக்காரணங்களின் மூர்ச்சை சித்து ஆவது அக்
கைக் காரணம் என்னத் தந்தனன் தான் நந்தி,
மிக்க மனோன்மணி வேறே கனத்து ஏக,
ஒக்கும் அது உன்மனி ஓது உட்சமாதியே.

[1]முக்கா ரணங்களின் மூர்ச்சைசித் தாவதக்[2]
கைக்கா ரணமென்னத் தந்தனன் றானந்தி[3]
மிக்க மனோன்மணி வேறே கனத்தேக[4]
ஒக்கும துன்மனி யோதுட் சமாதியே. (3)

வேற பாடம்: 1. முக்கரணங்களின் (ஈ ஓ) I. 2. ரணமேல் (ஆ) I. 3. மூர்ச்சை தீர்த்தாவதக் (சங்) முறவச்சித்திவர் (ஆ) I. 4. காணந்தி (சங்) 5. தனித்தேக (ஓ) IV.

கருத்து: மனம், புத்தி, அகங்காரம் ஆகிய மூன்று அந்தக் கரணங்களில் மயங்கிய அறிவு, அம்மயக்கம் தீர்ந்து, தூய அறிவு ஆவதற்கு, மூலக்கனல், மூச்சு ஆகியவை சுழுமுனை நாடியில் செல்லுதல் காரணம் என, நந்தி அனுபவத்தில் காட்டித் தந்தான். அந்தச் சிதாகாய அனுபவத்தினைச் சகஸ்ராரத்தில் பெற்றேன். அப்பொழுது மனோன்மணி சத்தி உடன் இருந்தாள். அவள் அந்த வெளியிலேயே நிற்க, எனது சமாதியுள் உன்மனை கலை, அவளது இடத்தைப் பெற்றது.

பிராசாத கலை 16-இல், 6 ஆவது ஆகிய நிரோதினி முதல் 9 ஆவது ஆகிய சத்தி வரை, சகஸ்ரார அனுபவத்தில் உயிருணர்வுடன் சேர்ந் திருப்பவை. இவற்றில் சிற்சத்தி, மனோன்மணியாக, சதாசிவனுடன் விளங்குவாள். உச்சந் தலைக்கு மேல் 12 அங்குலம் வரை பராகாயவெளி. ஆன்மா அங்குப் பெறுவது நிராதார அனுபவம். அங்குச் சிற்சத்தி, பிராசாத கலைகளுள் 16 - ஆவதாகிய உன்மனை கலையில் விளங்குவான்.

முதலடியில் ‘கரணங்கள்’ என்பது ‘காரணங்கள்’ என எதுகை நோக்கி நீண்டது. மூர்ச்சை - மயக்கம். சித் - சிதாகாசம்; அறிவுவெளி; தூய அறிவு. அங்கு ஆன்மா சிவரூபம் அடையும். கனம் - ககனம் என்பதன் முதற்குறை; ஆகாயம். கனம் - மேகம். அஃது ஆகு பெயராய் ஆகாயத்தை உணர்த்திற்று எனலும் ஆம். வேறே - தனியாக. “மனோன்மணி ஏக” என்றாரேனும், ‘ஆன்மா அவளைவிட்டுப், பராகாயத்திற் புகுந்து’. எனக்கொள்க. “ஓது சமாதியுள் உன்மனி அது ஒக்கும்” எனக் கூட்டுக. அது - மனோன்மணி.

133. முச்சூனிய தொந்தத்தசி

மூன்றல்ல, ஒன்று

2460. 'தத்-பதம்', 'த்வம்-பதம்', தானாம் 'அசி - பதம்'
தொல் பதம் மூன்றும் துரியத்துத் தோற்றவே,
நிற்பது உயிர், பரம், நீள் சிவம் - இம் மூன்றில்,
சொல் பதமாகும் 'துவம்-தத்-அசியே'.

தற்பதந் தொம்பதந் தானா மசிபதந்[1]
தொற்பத மூன்றுந் துரியத்துத் தோற்றவே
நிற்ப துயிர்பர [2]நீள்சிவ மிம்மூன்றின்[3]
சொற்பத மாகுந் துவந்தத் தசியே. (1)

வேறு பாடம்: 1. சிவபதந் (ஆ ஓ) II. 2. னிகழ்சிவ (விசு) (தி) (வ)
3. மும்மூன்றின் (அ) I.

கருத்து: மகா வாக்கியம் 'தத் - துவம் - அசி' என்பது. அனுபவத்தில், நீ என்னும் பொருள் உடைய 'துவம்' என்னும் சொல் சுத்த துரியத்தில் விளங்கும். அதாவது, ஆன்மா 36 தத்துவங்களின் துணை வேண்டாத - தானே நேரிடையாக உணரவல்ல - பொருள் என்பது விளங்கும். ஆன்மா, தானே உணரும். (இதுவே தன்னை அறியும் நிலை) அடுத்து, 'ஆகின்றாய்' என்னும் பொருள் உடைய 'அசி' என்னும் சொல் பரதுரியத்தில் அனுபவப்படும். அதாவது, ஆன்மா தனது அறிவில், ஏற்கனவே அருட்சத்தி கலந்திருத்தலின், அந்த அருளறிவினால், அருட் சத்தியை (பராசத்தியை)ச் கலந்துநின்று, அவளையும் அவளோடு இணைந்த பர சிவத்தையும் உணர்ந்து நிற்கும். எல்லாம் சத்திமயம் (அருள்மயம்) எனக் காணும். அடுத்து, அப்பாற்பட்டது' (Transcendent) என்னும் பொருள் உடைய, 'அது' என்னும் சொற்பொருளுடைய, 'தத்' என்னும் சொல் சிவ துரியத்தில் அனுபவப்படும். அதாவது, பரநிலையில் எவ்வாறு ஆன்மா சத்தியுடன் கலந்து, ஒன்றி, 'தான் உட்பட எல்லாம் சத்திமயம்' என உணர்ந்ததோ, அவ்வாறு, சிவத்தை - அப்பாற்பட்ட சிவத்தை - சத்தியையும் தன்னுள் ஒடுக்கிக்கொண்டு, அகண்ட வெளியாய் உள்ள தனிச்சிவத்தை - நிர்க்குணப் பிரமத்தை - அருட்சத்தி காட்டக் கண்டு, கலந்து ஒன்றி நிற்கும். தானும் அகண்ட வெளியாகிக் கலந்து நிற்கும். தொகுத்துப் பார்த்தால், ஆன்மா முதலில் தானாய், பிறகு 'தான்' - அற்ற பரமாய், பிறகு பரமும் அற்ற சிவமாய் நிற்கும்.

'தத்' என்பது அது என்னும் பொருள் உடையது. அது பரதுரியத்தில் சத்தியைக் குறிக்கும். எனவே 'நீசத்தி ஆகின்றாய் என்பது பரதுரிய அனுபவம். அடுத்து, 'தத்' என்பது சிவத்தைக் குறிக்கும். எனவே 'நீ' சிவம் ஆகின்றாய் என்பது சிவதுரிய அனுபவம். இம் முறையில் மகா வாக்கியத்தைத் 'துவம் - தத் - அசி' (நீ அது ஆகின்றாய்) எனச் சொல்ல வேண்டும். அத்தொடரின் பொருள் ஒன்றே. அது 'சிவம்' என்பதே.

இம் மூன்றின் சொல் பதம் - இந்த மூன்றும் (தத்; த்வம்; அசி) சேர்ந்து குறிக்கும் நிலை. அது சிவநிலை. தனித்தனி கூறும்போது, இவற்றிற்குத் தனித் தனிப் பொருள் இருப்பினும், சேர்ந்த பொழுது இவை ஒரு சொல்நிலையாகிவிட்டன.

ஆன்மா சீவன் உருவாகிக் பிறகு அற்றுப்போவதாலும் (தற்போதம் நீங்கப்பெறுவதாலும்) சத்தி தெய்வ உருவாகிப் பின்பு 'பரவெளி' ஆகிப் பின்பு சிவத்தில் ஒடுங்குவதாலும், சிவமும் முதலில் உருவாகிப் பின்பு அருவாகிப் பின்பு அகண்ட வெளியாய்ச் சொரூபநிலையில் நிற்பதாலும் 'முச்சூனியம் என்றார்' இந்த நிலை வருவது 'துவம் - ததி - அசி' என்ற ஒரு பதத்தில் (நிலையில்) ஆதலின், 'முச்சூனிய தொந்தத் தசி' என இயலுக்குப் பெயரிட்டார்.

தொல்பதம் - பழமையான வேதங்களில் கூறப்படும் சொற்கள். இப்பாடலில் கூறப்படும் அனுபவங்களை முன்னர் மூன்று இயல்களில் விரிவாகக் கண்டோம். நீள் சிவம் - என்றும் உள்ள உண்மை, சொரூப நிலையில் உள்ள சிவம்.

"யானாகிய என்னை விழுங்கி, வெறும் தானாய் நிலை நின்றது தற்பரமே" என்ற அருணகிரியாரின் அனுபவம் காண்க. (கந்தரனு பூதி. 28)

மதி முன் இருள்

2461. தொந்தத் தசி - மூன்றில் தொல்காமியம் ஆதி
தொந்தத்தசி - மூன்றில் தொல் தாமதம் ஆதி
வந்த மலம், குணம் மாள, சிவம் ஆள,
இந்துவின்முன் இருள் ஏகுதல் ஒக்குமே.

தொந்தத் தசிமூன்றிற் றொல்கா மியமாதி
தொந்தத் தசிமூன்றிற் றொல்தா மதமாதி
வந்த மலங்குண மாளச் சிவமாள[1]
[2]விந்துவின் முன்னிரு ளேகுத லொக்குமே. (2)

வேறு பாடம்: 1. சிவந்தோன்றி (ஓ) IV. 2. னிந்துவின் (ஓ) IV.

கருத்து: 'துவம் - தத் - அசி' - அனுபவத்தில் பழவினைகளும், மாயையும், ஆணவமும், தாமதம், இராசசம், சத்துவம் என்னும் மூன்று குணங்களும் நீங்கும், சிவம் ஆளும் (அதாவது சத்தியும் ஆன்மாவும் சிவத்தில் ஒடுங்கும்.) இவற்றின் நீக்கமும் ஒடுக்கமும், சந்திரனின் முன் இருள் நீங்குவதைப் போன்றவை.

சிவமாதல் கூறும் மந்திரம்

2462. தொந்தத் தசிய்யை அவ்வாசியில் தோற்றியே
வந்த முறை ஈரைந்தாக மதித்திட்ட
அந்தம் இலாதவன் உவய வாக்கியத்து
உந்தும் முறையில், சிவோகம் வைத்து ஓதிடே.

தொந்தத் தசியையவ் வாசியிற் றோற்றியே
[1]வந்த முறையீரைந் தாக மதித்திட்ட[2]
வந்த மிலாத [3]வன்னுவய வாக்கியத்
துந்து முறையிற் [4]சிவோகம்வைத் தோதிடே. (3)

வேறு பாடம்: 1. யந்த (விசு) (தி) (வ) 2. மதித்திட்டு (ஓ) I. 3. வவத்தையவ் (ஓ) IV; வவத்தையை (இ) IV. 4. சிவன்முன்வைத் (ஆ) IV; சிவமுன்வைத் (விசு) (தி) (வ).

கருத்து: 'துவம் – தத் – அசி' – பத அனுபவத்தை யோக சாதனையில், மூச்சுக் காற்றைக் கருவியாகக் கொண்டு தோற்றுவிக்கும் முறையில், அதனைப் புருவமத்திக்குச் செலுத்த வேண்டும், உடம்பின் புருவ மத்தியிலிருந்து உச்சந்தலை வரை ஆகாயத்தானம். ஆதலின், சிதாகாய அனுபவத்தைச் சகஸ்ராரத்திலும், பரமாகாய அனுபவத்தை உச்சந்தலைக்கு மேல் பன்னிரண்டு அங்குலம் உள்ள இடத்திலும் கிடைக்கச் செய்வது திருவருட் சங்கற்பம். மூலதாரத்திலிருந்து மூச்சுக்காற்றைக் குண்டலி சத்தியின் துணையுட ன் மேல் நோக்கிச் செலுத்தும் முறையில், சிவத்தினது திருப்பெயர்த் தொடர்கள் இரண்டினை 'சிவோகம்' என்ற பொருள் வருமாறு, யோகத் தியானத்தில் வைப்பாயாக.

இப்பாடலால் கூறியது, ஆன்மா சிவம் ஆகும் அனுபவம், திருவைந் தெழுத்தை, முன்னர்த் 'திருவம்பலச்சக்கரத்தில்' அமைந்த அடுக்கு வரிசைப்படி தியானத்தில் வைப்பதால் கிடைப்பதாகும் என்பதாம். உவயவாக்கியம் - உபய வாக்கியம் என்பதில், பகரத்திற்கு வகரம்

போலி. உவய வாக்கியம் ஆவன: (1) சிவாயநம (2) 'மசிவாயந' என்னும் இரண்டும் ஆகும். உந்தும் முறை என்பது, திருவம்பலச் சக்கரத்தில், மேலிருந்து கீழாகக் படுத்த நிலையில் காட்டப்பெற்ற திருவைந்தெழுத்து அடுக்குகள். சிவோகம் வைத்தல் - சிவமே நான் எனக்கருதல். ஐந்து அடுக்குகளுள் இவ்விரண்டு அடுக்கிலேயே, முதலில் 'சிவாய' என்பது சேர்ந்தும், முறையே திரோதாயி, ஆணவ மலங்களின் குறியீடுகளான ந, ம என்பவை அவற்றை விட்டு விலகித் தம்முள் சேர்ந்தும் உள்ளன. அடுத்து 'சிவாய' என்பது சேர்ந்தும், 'ம' தனியாக முதலிலும் 'ந' தனியாக இறுதியிலும் உள்ளன. உந்தும் முறையில், 3 - ஆவது அடுக்காக உள்ள 'ய ந ம சி வா' என்பதில் 'ம' - என்ற ஆணவ மலம் சிவமாகி நிற்பதைத் 'திருவம்பலச் சக்கரம்' 912 ஆம் பாடலில் கூறினார். ஆணவமலம் சிவமாகவே, 'ந' என்ற திரோதாயி மலமும் சிவமாகும். ஆகவே இவற்றால் விளைந்த தடைவிலக, ஆன்மா சிவமாகும். இதுவே 'சிவாய' என்பது. துவம் - தத் - அசி' அனுபவம் என்பதும் இதுவே.

ஈரைந்து - பத்து. இவ்வெண்ணின் எழுத்து 'ய' என்பது அஃது உடம்பில் ஆகாயத்தானத்தின் குறியீடு.

குறிப்பு: இப்பாடல் மூன்றாவது அடியில் "மிலாத வன்னுவய" என ஆசிரியத்தளை தட்டது. இஃது ஆசிரியர் மேற்கொண்ட கலிவிருத்த யாப்பிற்கு மாறானது. ஆயினும் பொருட் சிறப்புக் கருதியும் 12 எழுத்துக்கணக்குப் பிழையாமை கருதியும் சுவடிகளில் உள்ள பாடம், அப்படியே இங்கு மேற்கொள்ளப் பெற்றது.

உபதேசம் பலித்தது

2463. **வைத்துச் சிவத்தை மதி சொரூபானந்தத்து**
உய்த்துப் பிரணவமாம் உபதேசத்தை
மெய்த்த இதயத்து விட்டிடும்; மெய்உணர்ந்து
அத்தற்கு அடிமை அடைந்து நின்றானே.

வைத்துச் சிவத்தை மதிசொரு பானந்தத்
துய்த்துப் பிரணவ மாமுப தேசத்தை
மெய்த்த விதயத்து விட்டிடு மெய்யுணர்ந்
தத்தற் கடிமை யடைந்துநின் றானே'. (4)

வேறு பாடம்: 1. றாயே (ஓ) I.

கருத்து: மெய்ப்பொருளை உணர்ந்து, சிவபதிக்கு அடிமையாகி நின்ற ஆன்மா, மேற்கூறியவாறு தன் உணர்வு முழுதையும்

சிவசொருபத்தில் நிறுத்தி அதுவே தானாகி - பேரானந்தத்தினை அனுபவித்து, அந்நிலையில், முன்பு குருபிரான் கூறிய பிரணவ உபதேசத்தைத் தன் உணர்வனுபவமாகப் பெறவான்.

'அ' என உயிரும், 'உ' - எனப் பரமும், 'ம்' எனச் சிவமும் இணைந்து ஒன்றாக நிற்பது பிரணவம் இப்பொழுது ஆன்மா இவ்வாறாகி நிற்கின்றான். ஆகவே உபதேசம் பலித்தது என்றார்.

2464. தொம்பத மாயையுட் டோன்றிடுந் தற்பத
மம்பரை தன்னி லுதிக்கு மசிபத
நம்புறு சாந்தியி னண்ணுமவ் வாக்கிய
மும்ப ருரைதொந்தத் தசிவாசி யாமே (ஏ)

கலந்தது எவ்வாறு?

2465. ஆகிய அச் சோமன் தெய்வகம்; தன்னிடத்து
ஆகியவ் விட்டு உயர், காயம், உபாதானம்
ஏகிய தொந்தத் தசியென்ப; மெய்யறிவு
ஆகிய சீவன் பரசிவன் ஆமே.

ஆகிய [1]வச்சோமன் [2]றெய்வகந் தன்னிடத்
[3]தாகியவ் [4]விட்டுயர் [5]காய முபாதான
மேகிய தொந்தத் தசியென்ப மெய்யறி
வாகிய சீவன் பரசிவ னாமே. (5)

வேறு பாடம்: 1. தச்சோமன் (ஒ) I; வச்சோயந் (விசு) (தி) (வ). 2. தெய்வந் (இ ஒ ஓ) I; தெய்வமது (ஒ) தெய்வகத்திடத் (ஆ) I; தேவதத் (விசு) (தி) (வ) தேய்வசி (சங்) 3. தாகிய வவ்விடமாகிய முபாதான (ஈ) தாகிய (விசு) (தி) (வ) 4. விட்டு (ஆ இ) IV; வைவிட்டாற் (விசு) (தி) (வ) யவ்விடட்டாகாய (சங்) (விசு) (தி) (வ) IV. 5. விடாத விலக்கணையாகும் பதார்த்தமே தொந்தத் தசியென (இ வை 2, 3 ஆகிய அடிகள்) (ஆ இ) IV.

கருத்து: உலகில் பிறந்து, சீவன் ஆகிய ஆன்மா, தன்னிடத்தில் அனாதியே இருந்த ஆணவ மலத்தையும், கன்ம மலத்தையும் நீக்கி, உயர்ந்த பரசிவனோடு கலந்து ஒன்றாகும். பிறவிக்கு உபாதான காரணமாகிய மாயா மலமும், அதன் காரியமாகிய (மாயேயம் ஆகிய) தூல, சூக்கும, காரணவுடம்புகளும், ஆன்மாவைவிட்டு நீங்கவே, அதன் நிலையைத் 'துவம் - தத் - அசி' எனக் கூறுவர்.

ஆன்மா பரசிவம் ஆயது எவ்வாறு எனின், மும்மலமும் நீங்கப் பெற்று, அறிவு வடிவாக நின்ற ஆன்மா, அறிவு வெளியாக உள்ள பரசிவனோடு கலந்ததனால் என்க.

2466. தாமத காமிய மாதித் தகுகுண
மாமல மூன்று மகார வுகாரத்தோ
டோமறு மவ்வு மவ்வா யுடன்மூன்றிற்
றாமாந் துரியமுந் தொந்தத் தசியே. (அ)

134. முப்பாழ்

முப்பாழ் யாவை?

2467. காரியம் ஏழ் கண்டு அறும் மாயப்பாழ், விடக்
காரணம் ஏழ் கண்டு அறும் போதப்பாழ், விடக்
காரிய காரண வாதனை கண்டு அறும்
சீர் உபசாந்தம் - முப்பாழ்; விடத்தீருமே.

காரிய மேழ்கண் டறுமாயப் பாழ்விடக்
காரண மேழ்கண் டறும்போதப் பாழ்விடக்
காரிய காரண வாதனை கண்டறுஞ்
சீருப சாந்தமுப் பாழ்விடத் தீருமே. (1)

கருத்து: தத்துவங்கள் முப்பத்தாறினுள் காரிய தத்துவங்கள் ஏழுவகை. அவை, தன்மாத்திரைகள் ஐந்து, பூதங்கள் ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து, அந்தக் கரணம் நான்கு, பிராணவாயு, பிரகிருதிமாயை என்பவை. இவற்றை அருளால் ஆன்மாவினின்றும் வேறு எனக் கண்டு, நீங்குதல் மாயப்பாழ் ஆகும். காரண தத்துவங்கள் ஏழு ஆவன, வித்தியா தத்துவங்களாகிய காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன் என்பவையும் இவற்றின் மூலமாகிய அசுத்த மாயையும் ஆகும். இவற்றை அருளால் ஆன்மாவினின்றும் வேறு எனக் கண்டு நீங்குதல் "போதப்பாழ்" ஆகும். இப்பதினான்கின் வாசனை (impression) யையும் கண்டு நீங்குதல் "உபசாந்தம்". அதுவும் பாழே. இம்மூன்று பாழையும் நீங்கும் நிலைதான் வீடுபேறு.

உபசாந்தம் - போக்கு வரவு அற்ற நிலை; மனம் இயங்காத நிலை. தீரும் - பிறவிப்பிணி தீரும் என்க. அடுத்த பாடலில் பின் இரண்டு பாழையும் முறையே "சீவப் பாழ்", "வியோமப் பாழ்" என வழங்குகின்றார். முன்பு

சுத்த அவத்தை, மேலாலவத்தை ஆகிய இடங்களில் கூறிய செய்திகள் சிலவற்றையே இங்கு வேறு கோணத்தில் காட்டுகின்றார்.

சிவக்கலப்புச் சிவமே ஆதல் அன்று

2468. மாயப்பாழ், சீவன், வியோமப்பாழ் - மன்பரன்
சேய முப்பாழ் என, சிவசத்தியின், சிவம்
ஆய வியாத்தம் எனும் முப்பாழாம்; அந்தத்
தூய சொருவத்தன் சொல்முடிவு ஆகுமே.

மாயப்பாழ் சீவன் [1]வியோமப்பாழ் மன்பரன்
சேயமுப் பாழெனச் சிவசத்தி யிற்சிவ[2]
[3]மாய வியாத்த மெனுமுப்பா ழாமந்தத்
தூய சொருவத்தன் சொன்முடி வாகுமே. (2)

வேறு பாடம்: 1. வியோமப்பாழன்பரன் (அ) I. 2. யிற்சீவன் (ஆ ஈ ஓ) II யிற்சிவ (ஓ) II. 3. னாய (ஓ) II; மாயை (ஆ இ ஈ) I.

கருத்து: மாயப் பாழ், சீவப்பழ், வியோமப் பாழ் என்னும் மூன்று நிலையும் பரசிவத்தின் அருளால் எய்துதற்குரிய 'முப்பாழ்' ஆகும். அவை, ஆன்மா சிவச்சத்தியால், சிவமே ஆகி, அச்சத்தியினுள் (அருள் வியாபகத்தில்) அடங்கி நிற்கும் நிலைகள் ஆகும் எனினும் 'சிவம்' என்ற சொரூப நிலை சொல்ல வொண்ணாததாகும்.

ஆன்மா சிவத்தைக் கலந்து நிற்குமேயன்றிச் சிவமேயாகிவிடாது என்றார். சேய - செம்மையான. இன் - ஏதுப் பொருள் உருபு. வியாத்தம் - அடங்கி நிற்கும் பொருள். தூய - இயல்பாகவே பாசத்தினின்றும் நீங்கியது.

முப்பாழுக்கு அப்பால்

2469. எதிர் அற நாளும் எருது உவந்து ஏறி,
பதி எனும் நந்தி - பதமது கூட்டக்
கதி எனும் பாழைக் கடந்தது, கற்பனை
உதறிய பாழில் ஒடுங்குகின்றேனே.

எதிரற நாளு மெருதுவந் தேறி[1]
பதியெனு நந்தி பதமது கூட்டக்[2]
[3]கதியெனும் பாழைக் [4]கடந்தது கற்பனை
[5]யுதறிய பாழி லொடுங்குகின் றேனே. (3)

வேறு பாடம்: 1. தேறிப் (அ ஆ இ ஈ ஒ) V; தேறும் (ஒ) IV. 2. கூடப் (இ) I. 3. கதியென (விசு) (தி) 4. கடந்தசங் (ஒ) IV; கடந்தந்தக் (விசு) (தி) (வ) கடந்து கற்பனையை (த) 5. யுதறியப் (த).

கருத்து: என்றும், யாவர்க்கும் மேம்பட்டு, காளை ஊர்தியில் வருபவனும், உலகிற்கெல்லாம் பதியும் ஆகிய சிவனது திருவடியிற் செலுத்தும் வழியாகிய முப்பாழைக் கடந்து விளங்குவது அருள். கற்பனைக்கு எட்டாதது; வெட்ட வெளி. (அதில்) ஒடுங்குகின்றேன்.

துரியாதீதம்

2470. துரியம் அடங்கிய சொல்லிய பாழை
'அரிய பரம்பரம்' என்பர்கள் ஆதர்;
'அரிய பரம்பரம்' என்றது, நீக்கும்
அருநிலம் என்பதை யார் அறிவாரே?

துரிய மடங்கிய [1]சொல்லிய பாழை
யரிய பரம்பர மென்பர்க ளாத
ரரிய பரம்பர [2]மென்றது நீக்கு
மருநில மென்பதை யாரறி வாரே. (4)

வேறு பாடம்: 1. சொல்லறும் (ஆ ஒ) II; சொல்லுறும் (த) 2. மென்றே துதிக்கு (ஆ இ) II; மன்றே யுதிக்கு (த).

கருத்து: மேலாலவத்தையின் துரியம் அடங்கியுள்ள, மேற்சொல்லிய முப்பாழை, அறியாதோர் 'அடைவதற்கு அரிய பரம்பரம்' என்று பொதுவிற் கூறுவர். ஆனால், அறிந்தோர் 'அரியபரம்பரம்' எனக் கூறியது, மேலாலவத்தையில் துரியத்தைக் கடந்த இடம் என்பதை யார் அறிவார்?

பாழை - முப்பாழையும். உம் முற்றுப் பொருளது. அது தொக்கது. பரம்பரம் - மேலானதற்கும் மேம்பட்டது.

திருவைந்தெழுத்தின் பொருள்

2471. ஆறாறும் நீங்க, நம-ஆதி அன்று இட்டு,
வேறாகிய பரை ய-என்றும் மெய்ப்பரன்
ஈறாக, வா சி-யில் கூட்டுமது அன்றோ
தேறாச் "சிவாயநம"- எனத் தேறலே?

ஆறாறு நீங்க [1]நமவாதி அன்றிட்டு[2]
வேறா கியபரை [3]யாவென்று மெய்ப்பர
[4]னீறாக வாசியிற் [5]கூட்டு மதுவன்றோ
[6]தேறாச் சிவாய [7]நமவெனத் தேறலே. (5)

வேறு பாடம்: 1. நமவாசி (இ) I; நமமாதி (ஆ) I. 2. யகன்றிட்டு (அ ஆ இ ஒ ஓ) II. 3. யவாவென்று (அ) I; யவாவென்ற (ஆ) I; வா வென்று (இ ஒ) I; வாரென்ற (ஈ) I. 4. னீறாகிய (அ ஈ ஒ ஓ) II; னீறாகா (இ) I. 5. கூடு (ஒ) I. 6. தேறாகச் (ஒ ஓ) II; தேறாய (ஈ) II. 7. நமவென்ற (இ) I. 8. தேறிலே (சங்).

கருத்து: அறிவாராய்ச்சியால் தெளியவியலாத சூக்கும வைந்தெழுத்து மந்திரத்தின் பொருளை அனுபவத்தால் தெளிதல் என்பது: உயிருணர்வைப் பந்தித்து நிற்கும் 36 தத்துவங்களும் அவற்றின் வாதனைகளும் நீங்கப்பெற்று, 'நமசிவாய' என்னும் மந்திரத்தில் 'நம' என்னும் தொடக்கப் பகுதி இல்லாமற் போனதை அனுபவத்தால் தெளிய வேண்டும். 'ந' என்பதால் குறிக்கப்படும் திரோதான சத்தி இப்போது அருட் சத்தியாக நின்று வா - என்ற எழுத்தாற் குறிக்கப்படும். அருட்சத்தி ய - என்ற எழுத்தாற் குறிக்கப்படும் ஆன்மாவை, 'சி' - என்ற சிவத்தோடு நிலையாகக் கட்டி, 'சிவா' என்பதன் முடிவில் 'ய' சேர்ந்து 'சிவாய' என நிற்கச் செய்யும்.

சிவா என மந்திரத்தில் நிற்பினும், அனுபவத்தில் முதலில் 'வா என்னும் அருட் சத்தியுடன் ஆன்மா கூடி நின்று, பிறகு 'சி' என்ற சிவத்துடன் அவளால் கூட்டப் பெறுதலின், 'வா சி - யில் கூட்டுமாறு' என்றார். அன்றிட்டு - அன்றி இட்டு என்பதன் திரிபு. கூட்டுமது - தொழிற்பெயர். வேறாகிய பரை - திரோதான சத்தியாக இருந்து, அருட்சத்தியாக மாறி நின்ற அன்னை.

கொண்டு கூட்டு: "தேறாச் சிவாய நம எனத் தேறல், ஆறாறு நீங்கப் பரைய கூட்டுமது வன்றோ என வினை முடிவு செய்க.

செத்தது உடல், சிவமாயிற்று உயிர்

2472. உள்ள [1]முருவென்று முருவ முளமென்று
[2]முள்ள பரிசறிந் தோரு மவர்கட்குப்
பள்ளமு மில்லை திடரில்லை பாழில்லை
உள்ளமு மில்லை உருவில்லை தானே. (6)

வேறு பாடம்: 1. முயிரென்று (அ ஆ ஈ ஒ) II. 2. முள்ளப் (த).

கருத்து: ஒற்றுமை நயத்தால் உயிரே உடம்பு போல உணர்தலும், உடம்பே உயிர் உணர்வதை உணர்வதும் உண்டு. ஆயினும், உண்மை யறிவால் (அனுபவத்தால்) அவற்றின் உண்மையை அறிபவர்க்கு ஆன்மீக நெறியில் தாழ்தலோ, உயர்தலோ இல்லை. மனத்தில் போக்குவரவற்ற உபசாந்த நிலையில் இருப்பர். அவர்களுக்குத் தத்துவச் சேட்டை இன்மையின், உடம்பு இல்லை என்றே கூறலாம். இறுதியில் அவர்கள் ஆன்ம போதம் கெட்டுச் 'சிவமாகி' நிற்றலின், அவர்களுக்கு உயிரும் இல்லை எனலாம்.

135. காரிய காரணவுபாதி

உபாதி நீங்கினால் உயிர் சிவமாகும்

2473. செற்றிடும் சீவ உபாதித் திறன் ஏழும்,
பற்றும் பர-உபாதி ஏழும், பகர் உரை
உற்றிடும் காரிய காரணத்தோடு அற
அற்றிட, அச்சிவம் ஆகும் அணுவனே.

செற்றிடுஞ் சீவ வுபாதித் திறனேழும்
பற்றும் பரோபாதி யேழும் பகருரை
யுற்றிடு காரிய காரணத் தோடற
வற்றிட வச்சிவ மாகு மணுவனே. (1)

வேறு பாடம்: 1. யற்றிடுங் (இ ஈ) I. 2. தோடுற (ஆ) I.

கருத்து: முன் இயலில் (முப்பாழ்) முதற் பாடலில் கூறியதையே வேறு பெயரிட்டு இங்குக் கூறுகின்றார். ஆன்மாவைத் துன்புறுத்தும் 'சீவ உபாதி' என்னும் ஏழு தத்துவங்களும், அவற்றுடன் தொடர்பு கொள்ளும் 'பர உபாதி' என்னும் வித்தியா தத்துவங்கள் ஏழும் நீங்கி, அவற்றின் வாதனையும் முற்றும் நீங்கியவுடன், ஆன்மா 'சிவம்' ஆகும்.

உயிர் தனிப்படுவது எப்போது?

2474. ஆறாறு காரிய - உபாதி அகன்றிட்டு
வேறு ஆம் நனவு மிகுத்த கனா, நனா,
ஆறாறு அகன்று, சுழுத்தி அதில் எய்தா,
பேறு ஆம் நிலத்து உயிர் தொம்பதம் பேசிலே.

ஆறாறு காரியோ பாதி யகன்றிட்டு
[1]வேறா [2]நனவு மிகுத்த கனாநனா
வாறா [3]றகன்று சுழுத்தி யதிலெய்தாப்
பேறா நிலத்துயிர் தொம்பதம் பேசிலே. (2)

வேறு பாடம்: 1. வேறாய் (விசு) (தி) (வ) (த) 2. நினைவு (த) 3. றகன்ற (ஓ) I.

கருத்து: முன்பு "சுத்த நனவாதி" - இயலில் கூறியதை இங்கு மீண்டும் கூறுகின்றார். முப்பத்தாறு தத்துவங்கள் ஆகிய காரிய, காரண உபாதிகள் உயிருணர்வை விட்டு நீங்கும் நிலைகள் சுத்த சாக்கிரம், சுத்த சொப்பனம் ஆகிய அவத்தைகள். அவற்றை ஆன்மா அடையும். காரிய காரண வாசனை என்ற உபாதி ஆகிய சிவ தத்துவம் ஐந்தும் நீங்கும் நிலையில் சுத்த சுழுத்தியை அடையும். அதையும் கடந்து, சுத்த துரியம், சுத்த துரியாதீதம் என்ற அவத்தைகளை (மாறுபாடு இன்றி) அடைந்து வீடுபேறு பெறும். இவ்விரண்டு அவத்தைகளில்தான் ஆன்மா 'துவம்' என்று கூறப்படும் இலக்கணத்தை உடையதாகும்.

அதுவரை தத்துவப் பிடிப்புடையதாக இருத்தலின், தத்துவங்கள் நீங்கிய நிலையே உயிரின் தனிநிலை என்பது இப்பாடலின் கருத்து. வீடு பேற்றுநிலையில் ஆன்மா சிவத்தோடு பிணைப்புறும்.

சுத்த அவத்தைகட்குச் 'சுத்த நனவாதி' என்னும் இயலில் 2162 ஆம் பாடல் காண்க.

குறிப்பு: இதனை யடுத்துச் சுவடிகளிலும் பதிப்புகளிலும் உள்ள "அகார முயிரே" என்னும் பாடல் "திருவம்பலச் சக்கர" வியலில் வந்தது (பா. எண். 966)

ஆணவம் நீங்க

2475. உயிர்க்கு உயிராகி, ஒழிவு அற்று, அழிவு அற்று,
அயல் பெறு காரண - உபாதி விவேகத்து
உயிர்ப்பு உறும் ஈசன் உபமித்தால் அன்றி
வியர்ப்பு உறும் ஆணவம் வீடல்செய்யாவே.

உயிர்க்குயி ராகி யொழிவற் றழிவற்
[1]றயற்பெறு காரணோ பாதி விவேகத்[2]
துயிர்ப்புறு மீச [3]னுபமித்தா லன்றி
[4]வியர்ப்புறு மாணவம் வீடல்செய் யாவே. (3)

வேறு பாடம்: 1. றயிர்ப்பெறு (ஆ இ) IV; றயிர்ப்பறு (சங்) 2. விபேதத் (ஆ) IV; யிலேகத் (இ ஈ) I; விதிரேகத் (விசு) (தி) (வ) வெதிரேகத் (த) 3. னுபமிதத் தாலன்றி (விசு) (தி) (வ) 4. வியப்புறு (ஆ ஈ) I.

கருத்து: உயிருக்கு உயிராகப் பிரிதலின்றி நிற்பவனும், அழியாதன வாகிக் காரிய உபாதி, காரணஉபாதி என நிற்கும் தத்துவங்களில், வெவ்வேறு வகையாக, 'ஒன்றாய்' நிற்பவனுமாகிய சிவபெருமான், உயிருக்கு 'உடனாய்' நின்று அனுபவம் தந்தாலல்லாமல், உயிரைக் களைத்துப் போகச் செய்யும் ஆணவமலம் நீங்காது.

என்றும் அழியாத மாயையின் காரியம் ஆதலின் "அழிவு அற்று அயற்பெறும் காரணோபாதி" என்றார். அயல் - மாறான; இங்குக் காரியோபாதி. விவேகத்து உயிர்ப்புறுதல் - வேறான தன்மைகளில் 'ஒன்றாய்' நிற்றல். சிவன் காரியோபாதியாகிய ஆன்மதத்துவங்களில் விறகில் தீப் போலவும், காரணஉபாதி ஆகிய வித்தியா தத்துவங்களில் பாலில் நெய் போலவும், சிவதத்துவங்களில் மணியில் ஒளி போலவும் நிற்றலை இவ்வாறு கூறினார். உபமித்தல் - உடனாய் நிற்றல். இது விரலும் விரலும் சேர்ந்தாற்போல் என்க. உபமானம் இத்தகையதே (ஒன்றாய் விடுதல் உருவகம் ஆகும்) வியர்ப்பு - களைப்பு; பிறந்து இறந்துவரும் களைப்பு. ஆணவம் அகலும் வரை பிறவி நீங்காது. "மலத்துளதாம்" என்பார் மெய்கண்டார் (சிவஞானபோதம்: சூத். 1).

சிவன் செய்யும் உதவி

2476. காரியம் ஏழில் கலக்கும் கடும்பசு
காரணம் ஏழில் கலக்கும் பரசிவன்
காரிய காரணம் கற்பனை சொற்பதப்
பார் அறும் பாழில் பராபரத்தானே.

காரிய மேழிற் [1]கலக்குங் கடும்பசு
காரண மேழிற் [2]கலக்கும் பரசிவன்
காரிய காரணங் கற்பனை சொற்பதப்
பாரறும் பாழிற் [3]பராபரத் தானே. (4)

வேறு பாடம்: 1. கரக்குங் (த) 2. கரக்கும் (த) 3. பராத்பரத் (த).

கருத்து: ஆணவமலம் நீங்கப் பெறாத ஆன்மா, ஆன்மதத்து வங்களோடு பிணிப்புறும் (ஆன்மாவுக்கு உதவுதற்காக) பரசிவன் வித்தியா தத்துவங்களில் "ஒன்றாகி" (கலந்து) நிற்பான். இக்காரியமும் காரணமும் அவனது படைப்புக்களாகும். இவை

உயிரைப் பிணித்து நிற்றலுக்கு இடமான பிறப்பு நீங்கப்பெற்ற நிலையில் சிவன் அனுபவப்பட ஆன்மா அச் சிவமே ஆவான்.

136. உபசாந்தம்

அருள் பெற

2477. முத்திக்கு வித்து முதல்வன்றன் னாமமே[1]
பத்திக்கு வித்துப் பணிந்துற்றுப் பற்றலே
சித்திக்கு வித்துச் சிவபரந் தானாதல்
சத்திக்கு வித்துத் தனதுப சாந்தமே. (1)

வேறு பாடம்: 1. ஞானமே (அ ஒ ஓ) II.

கருத்து: முத்திப் பேற்றிற்குத் தொடக்கம் சிவபதியின் திருவைந் தெழுத்துச் செபமே. அவன்பால் அன்பு முதிர்வதற்கு ஏது, அவனைப் பணிதலும், அனைத்திற்கும் அவனையே துணையாகப் பற்றிக் கொள்ளுதலும் ஆகும். திருவருட் சத்தி ஆன்ம உணர்வில் பதிவதற்கு ஏது, ஆன்மா உபசாந்த நிலையில் இருத்தலாகும். வீடு பேறு சித்தியாவதற்கு ஏது, ஆன்மா தானே 'சிவம் ஆதல்'.

திருநாம செபம், வழிபாடு, அருட்பேறு, சிவப்பேறு ஆகியவற்றை முறையே கூறினார் ஆதலின் 3 ஆம் அடியை இறுதிக் கண் கூட்டிடுக. உபசாந்தம் - மன அலைவு அற்ற நிலை. இதனைப் 'போக்கு வரவு அற்ற நிலை' என்பர்.

ஒடுங்கும் இடம்

2478. காரிய மேழுங் கரந்திடு மாயையுட்
காரண மேழுங் கரக்குங் கடுவெளி
காரிய காரண வாதனை பற்றறப்[1]
பாரண வும்முப சாந்தப் பரிசிதே. (2)

வேறு பாடம்: 1. யற்றற (அ இ ஈ ஒ).

கருத்து: ஆன்ம தத்துவம் 24 - ம் பிரகிருதிமாயை (மூலப் பகுதி) யினுள் ஒடுங்கும். (அம்மாயை அசுத்த மாயையுள் ஒடுங்கும்) வித்தியா தத்துவம் ஏழும் அசுத்த மாயையுள் ஒடுங்க, அது சுத்த மாயையுடன் நிற்கும். இத்தத்துவங்களால் உண்டாகும் வாசனை முற்றும் நீங்கினால் உபசாந்தநிலை வரும்.

முன்பு 'முப்பாழ்' - இயலில் கூறியதையே மீண்டும் கூறுகின்றார். ஒடுக்க நிலை யாது என நிலைக்களம் சுட்டுகின்றார்.

அருளே எங்கும்

2479. அன்ன துரியமே ஆத்துமசுத்தியும்,
முன்னிய சாக்கிராதீதத்து உறு புரி
மன்னு பரங்காட்சியாவது உடன் உற்றுத்
தன்னின் வியாத்திதனின் உபசாந்தமே.

அன்ன துரியமே யாத்தும சுத்தியு
முன்னிய சாக்கிரா தீதத் துறுபுரி
மன்னு பரங்காட்சி யாவ துடனுற்றுத்
தன்னின் வியாத்தி [1]தனினுப சாந்தமே. (3)

வேறு பாடம்: 1. தனியுப (த)

கருத்து: காரிய, காரண வாசனையும் நீங்குதலாகிய உபசாந்தநிலை ஆன்ம சுத்தி எனப்படும். இதனை அடைதற்குரிய அவத்தைகள் சுத்த துரியமும் பரதுரியமும் (சிவசுழுத்தியும்) ஆகும். இவ்வாறு ஆன்ம சுத்தி எப்பொழுது வாய்க்கும் எனின், இந்த மூன்று அவத்தை களிலும் சிவனைத் தரிசிக்கும் பொழுது என்க. அப்போது திருவருட் சத்தி ஆன்மாவுடனாகி நின்று ஆன்மாவின் அறிவில் வியாபித் திருக்க, அந்த "வியாத்தி" - நிலையில் ஆன்மா உபசாந்தத்தை அடையும்.

ஆசிரியர் இதனை முன்பு 2187, 2229 - ஆம் பாடல்களில் விரிவாகக் கூறினார். ஆன்ம சுத்தியை "உண்மைநெறி விளக்க" நூல், "போயிவன் தன்மை கெட்டுப் பொருளிற் போய், அங்குத் தோன்றாதாயிடில் ஆன்ம சுத்தி" என்றும், சிவதரிசனத்தை,

"பரை உயிரில், யான் எனது என்றது அற நின்றது அடியாம்;
பார்ப்பிடமெங்கும் சிவமாய்த் தோன்றல் அது முகமாம்;
உரை இறந்த சுகமதுவே முடியாகும்" என்றும்,

இவ் உண்மையினை மிகத் தெளிந்து, பொருள் வேறு ஒன்று இன்றித்

"தலை முதலில் போகாது, தன் நிலை நில்லாது
தற்பரையின் நின்று அழுந்தாது, அற்புதமே யாகித்
தெரிவரிய பரமா நந்தத்தில் சேர்தல்
சிவன் உண்மைத் தரிசனமாம் செப்புநூலே"

என்றும் கூறும். (பாடல்கள் : 2, 4)

வியாத்தி - எங்கும் இருக்கை. இங்கு, அருளே எங்குமாக இருக்கும் நிலை.

அருட் குரு

2480. ஆறாறு அமைந்து, ஆறு அவத்தை, உள் நீங்குதல்,
பேறு ஆன தன்னை அறிதல், பின் தீர்சுத்தி
கூறாத சாக்கிராதீதம் குருபரன்
பேறாம் வியாத்தம் - பிறழ் உபசாந்தமே.

ஆறா றமைந்தா [1]றவத்தையு ணீங்குதல்[2]
பேறான தன்னை யறிதல்பின் றீர்சுத்தி
கூறாத சாக்கிரா தீதங் குருபரன்
பேறாம் வியாத்தம் பிறழுப சாந்தமே. (4)

வேறு பாடம்: 1.ணவத்தையு (ஆ ஒ) I. 2. ணீக்குதல் (விசு) (தி) (வ) 3. கூறான (இ) I. 4. பிறங்குப (த).

கருத்து: ஆன்மா முன்பு கூறப்பட்ட மத்திய அவத்தை, சுத்தாவத்தை, பராவத்தை ஆகியவை முறையே அமையப்பெற்று, 36 தத்துவங்களினின்றும் தான் வேறு என அறிதல் ஆன்ம தரிசனம். பிறகு, சுத்த துரியம், பரதுரியம் ஆகியவற்றில் அத்தத்துவங் களினின்றும், ஆணவ மலத்தினின்றும் நீங்கி, சிவகுருவாக அமையவிருக்கும் திருவருளினால் தன் உணர்வு வியாபிக்கப்படுதல் உபசாந்தம் ஆகும்.

அருள் காட்டச் சிவத்தைக் காண வேண்டுமாதலின், அதனைக் குரு என்றார்.

உபசாந்தம் பத்து

2481. வாய்ந்த உபசாந்த வாதனை, உள்ளப்போய்
ஏய்ந்த சிவமாதல், இன் சிவானந்தத்துத்
தோய்ந்து, அறல், மோன சுகானுபவத்தோடே
ஆய்ந்து, அதின்தீர்கை ஆனது ஈரைந்துமே

வாய்ந்த [1]வுபசாந்தம் வாதனை யுள்ளப்போ[2]
யேய்ந்த சிவமாத லின்சிவா னந்தத்துத்
[3]தோய்ந்தறன் [4]மோன சுகானு பவத்தோடே
[5]யாய்ந்ததிற் [6]றீர்கை யானதீ ரைந்துமே. (5)

வேறு பாடம்: 1. வுபசாந்த (அ ஈ ஒ ஓ) I. 2. யுள்ளம் போ (ஆ) IV. 3. தோய்ந்தற (இ ஈ) I; தோய்ந்தான (ஆ ஓ) IV. 4. மோனஞ் (ஆ) IV. 5. யாய்ந்தது (ஓ) IV. 6. நீர்க்கை (ஆ இ ஈ) I.

கருத்து: உபசாந்தத்தின் உறுப்புகளாக இதுவரை கூறியவற்றைத் தொகுத்துக் கூறின், 1. ஆன்மா, 2. காரிய காரண வாதனை, 3. அவற்றின் வேறாகத் தன்னை உணர்ந்து நீங்குதல், 4. சிவமாதல் 5. சிவானந்தம் 6. அதனை அனுபவித்தல், 7. அதில் அழுந்துதல் 8. மௌனசுக அனுபவம், 9. அதனை ஆய்தல் 10. அதிலிருந்தும் நீங்கிச் சிவவியாபகத்தில் அடங்குதல்.

2482. பரையின் பாத பரத்துட னேகமாய்த்
திரையினின் றாகிய தென்புலம் போலவுற்
றுரையுணர்ந் தாரமு மொக்க வுணர்ந்துளோன்
கரைகண் டானுரை யுற்ற கணக்கிலே. (உ, க, ட)

137. புறங்கூறாமை

பழக்க வாசனை

2483. பிறையுட் கிடந்த முயலை யெறிவா
[1]னறைபணி வாட்கொண்ட [2]வாதனை போலக்
கறைமணி கண்டனைக் காண்குற மாட்டார்
நிறையறி வோமென்பர் நெஞ்சிலர் தாமே. (1)

வேறு பாடம்: 1. னிறைபணி (அ) IV. 2. வர்தமைப் (ஆ) IV.

கருத்து: சந்திரனில் உள்ள கறையைப் போக்க வாளேந்திப் புறப்பட்டவர் பழக்கத்திற்கு அடிமையாகியவர். (அவர் செயல் அறியாமையின்பாற்பட்டது) அது போலப் பழக்க வாதனையால், ஆராய்ச்சி மூலம், நீலகண்டப்பெருமானைக் காண முயன்று தோற்றவர், "யாம் நிறை நிலையை" அறிவோம் என்று ஏதேதோ கூறுவர். அவர் மனச் சாட்சியற்றோராவர்.

வேறு நெறிபிடித்து நிற்போர், தம்மை முற்றும் அறிந்தோராகக் கருதி, சைவநெறியினர் அங்ஙனம் அறியமாட்டார் என்று புறங்கூறுதல் தக்கது அன்று என மறுத்தார்.

நீ எம்மட்டு?

2484. கருந்தாள்-கருடன் விசும்பூடு அறுப்ப,
கருந்தாள்-கயத்தில் கரும்பாம்பு நீங்கப்,
பெருந்தன்மை பெற்றி, நீ ஒழி நெஞ்சே,
வருந்தான்? அலைகடல் ஆறு சென்றாலே.

[1]கருந்தாட் கருடன் விசும்பூ டறுப்பக்[2]
[3]கருந்தாட் கயத்திற் கரும்பாம்பு நீங்கப்[4]
பெருந்தன்மை [5]பெற்றி நீயொழி நெஞ்சே
[6]வருந்தா னலைகட லாறுசென் றாலே[7]. (2)

வேறு பாடம்: 1. கருநாட் (ஆ) I. 2. டிறப்பக் (ஓ) IV. 3. கருந்தாழ் (த) 4. நீங்கிப் (ஓ) I. 5. பேசுதி (ஒ ஓ) II; பேசுதல் (ஆ இ ஈ) II. 6. யருந்தா (ஆ இ ஒ ஓ) II; ளலைகட (ஆ இ) I; வலைகட (விசு) (தி) (த) (வ). 7. றாறே (த).

கருத்து: மிக்க வலிமையுடைய கருடன் ஆகாயத்தில் சென்றால், குளத்தில் உள்ள பாம்பு தனது வலிமை நீங்கப் பெறும். கடலில் ஆறு கலந்தால் மீண்டும் வருமோ? வராது. (அவை போல இறைவனது சன்னிதியில் நீ தற்போதம் இழப்பாய் அவனுடன் கலந்ததால் உனது தனித்தன்மை நீங்கும்.) ஆதலின், நீ உலகியலில் பெரியோனாக மதிக்கப்பட்டிருப்பினும், அதனை எண்ணாதே.

கொண்டு கூட்டு: "கயத்திற் கரும்பாம்பு கருந்தாள் நீங்க" என்றும், "ஆறு அலை கடல் சென்றால் வருந்தான்" என்றும் மாற்றுக. "விசும்பூடு" என்றாரேனும், காற்று மண்டலத்தின் ஊடு என்று பொருள் கொள்க. அறுப்ப - செல்ல என்ற அளவில் நின்றது. தாள் - ஈரிடத்திலும் வலிமை. பெற்றி - பெற்றனை. ஒழி - எண்ணுதலை விடுக.

"யான் பெரியோன்" என்று எண்ணுதல், சிவத்தினின்றும் வேறாகத் தன்னை எண்ணுவது ஆகும். அத்தகைய புறங்கூற்று வேண்டாம் என்றார்.

மலத்தோடு போர் வேண்டா

2485. கரு தலமாகக் கரு வாயில் நின்ற
பொருது அலை செய்வது புல்லறிவாண்மை;
மருது அலர்செய்கின்ற மாதவன் ஒத்தால்
தரு வலர் கேட்ட தனி உம்பர் ஆமே.

[1]கருதல [2]மாகக் [3]கருவாயி னின்ற[4]
[5]பொருதலை செய்வது புல்லறி வாண்மை
[6]மருதலர் செய்கின்ற மாதவ னொத்தாற்[7]
[8]றருவலர் [9]கேட்ட [10]தனியும்ப ராமே. (3)

வேறு பாடம்: 1. கருதலர் (அ ஆ ஈ ஓ) I. கருகல (ஓ) I. 2. மாளக் (விசு) (தி) (வ) (த) 3. கருவாய் (ஓ) IV. 4. நின்றார்ப் (ஓ) IV; நின்றே (த) 5. பொருதலைச் (விசு) (தி) (வ) (த) 6. மருவலர் (ஓ) IV. 7 . மொத்தாற் (விசு) (தி) (வ) (த) 8. றருதல் (ஆ) II; றாருவர் (ஓ) II. 9. வேட்ட (த) 10. தருவும்ப (தி).

கருத்து: பிறப்பு களமாக இருக்க, (அதில் இருந்து கொண்டு) பிறப்புக்குக் காரணமாக உள்ள மும்மலங்களுடன் போரிட்டு, அவற்றை விரட்டிவிடுவோம் என்று எண்ணுதல் அறிவுக்குறை. (அங்ஙனம் செய்யாது) இடைமருதில் ஒளிவீசித் திகழும் மாமுனியாகிய சிவபிரானை அடையத் தவஞ்செய்து, அவனைக் கலந்து உபசாந்தம் அடைந்தால், அவன் அத்தகைய அடியவர் வேண்டிய வீடு பேற்றை - மல நீக்கத்தை - தரவல்லவனாவான்.

ஆணவமலத்தை நீக்க வேண்டுவோர் அதனை வெல்லுதற்குத் தவஞ்செய்ய வேண்டா. சிவபிரானை அடைதற்குத் தவஞ்செய்க என்றார். வாயில் - காரணம். நின்ற - வினையாலணையும் பெயர். அலர் செய்தல் - விரிதல்; ஒளி விரிதல். மாதவன் ஒத்தல் - தவத்தால் சிவனை "உடனாக" நிற்கப் பெறுதல். தரவலன் என்பது எதுகை நோக்கித் திரிந்தது. இரண்டாவது மட்டுமன்றி ஈற்றெழுத்தும் ஒப்ப அமையும் ஒலிநயத்தை ஆசிரியர் கருதினர் போலும். இங்ஙனம் கொள்ளாக்கால், ஒருமை பன்மை மயக்கமாகும். ஒத்தல் - உடனாதல். உம்பர் - இமையவர் உலகம். இதனைப் பெறுதல் பிறவியை ஒழிக்காது ஆதலின், வீடுபேற்றைத் " தனியும்பர்" எனச் சிறப்பித்தார்.

"மலத்தை யாம், எம் தவத்தினால் வெல்வோம்" என்று எண்ணுதல் புறஞ் செல்லுதலாகும்; அது வேண்டா என்றார். தாம் அருள்மயமாகி, மலத்தையும் சிவமயம் ஆகச் செய்தலே செய்யத்தக்கது என்பது குறிப்பு.

வானம் வணங்குகிறது; மண்ணகம் வணங்குவதற்கு என்ன?

2486. பிணங்கவும் வேண்டா, பெருநிலம் முற்றும்
இணங்கி, எம் ஈசனே ஈசன் என்று உன்னிக்
கணம் பதினெட்டும் கழலடி காண
வணங்க எழுந்த அடி அங்கு அன்புறலாமே.

பிணங்கவும் வேண்டா பெருநில முற்று
மிணங்கியெம் மீசனே யீசனென் றுன்னிக்[1]
கணம்பதி னெட்டுங் கழலடி காண
[2]வணங்கெழுந் [3]தடியங் கன்புற லாமே. (4)

வேறு பாடம். 1. றுன்னிற் (ஓ) I. 2. வணங்கெழு (ஓ) I. 3. நாடி (விசு) (தி) (வ) (த)

கருத்து: பதினெண் கணத்தாரும் கருத்தொருமித்து, 'எம் சிவபெருமானே எல்லாம் உடைய தலைவன்' எனத் துணிந்து, அப்பெரு மானது திருவடியைக் காணும் பொருட்டு, அவனருளை வேண்டி வணங்குதற்கு எழுவர். அந்தத் திருவடிக்கு இவ்வுலகம் முழுதும் அன்பு செய்யலாம். வெவ்வேறு கருத்துக் கொண்டு மாறுபட வேண்டுவதில்லை.

பதினெண்கணத்தார் - உயர் உலகத்தார். அவர்கள் ஒருமித்துச் சிவபிரானை வணங்குதலால், இம்மண்ணுலகினர் முழுதும் ஒத்து வணங்கத் தடையில்லை என்றார்.

சிவனை அன்றி வேறு தெய்வம் வேண்டா என்றமையால் புறங் கூறாமை யாயிற்று.

வேறாய், ஒன்றாய், உடனாய்...

2487. என்னிலும் என் உயிர் ஆய இறைவனை
பொன்னிலும் மாமணி ஆய புனிதனை
மின்னிய எவ்வுயிர் ஆய விகிர்தனை
உன்னிலும் உன்னும் உறுவகையாலே.

என்னிலு மென்னுயி ராய விறைவனைப்
பொன்னிலு மாமணி யாய புனிதனை
மின்னிய வெவ்வுயி ராய விகிர்தனை
யுன்னிலு முன்னு முறுவகை யாலே. (5)

கருத்து: அறியும் பொருளாகிய என் உயிரிலும், அதற்கு அறிவு காட்டும் அதன் உயிராக, நீங்காதிருக்கும் சிவபிரானை, சிறந்ததாகிய பொன்னிலும், அதன் ஒளியை மிகுதிப்படுத்திச் சிறந்து விளங்கும் இரத்தினம் போன்ற புனிதனை, வாழ்நாள் அளவு தோன்ற நிற்கும் எவ்வுயிருக்கும் அதன் தோற்றத்திற்கும், இருப்பிற்கும், ஒடுக்கத்திற்கும் காரணமாகி, வேறாய் நிற்கும் தலைவனை, நாம்

வல்ல வகையில் நினைத்தால், அவனும் நம்மோடு 'உடனாக' நிற்க எண்ணுவான்.

உடனாக நிற்றல், சிவானுபவத்தில் செலுத்துதல்.

என் உயிர்க்கு உயிராய் நிற்றலின் பேரறிவுடையோனாகவும், மணி போன்று வினையின் நீங்கிய தூய்மையுடையோனாகவும் எவ்வுயிர்க்கும் ஆதியும் அந்தமுமாதலால் தனி முதல்வனாகவும் சிவபிரான் உள்ளமையால் அவனைப் புறங்கூறல் கூடாது என்க.

ஒன்று என்றிரு

2488. நின்று மிருந்துங் கிடந்து நிமலனை
யொன்றும் பொருள்க ளுரைப்பவ ராகிலும்
வென்றைம் புலன்கள் விரைந்து பிணக்கறுத்
[1]தொன்றே யுணரு மொருவனு மாமே. (6)

வேறு பாடம்: 1. மொன்றை (ஈ ஓ) IV; மொன்றா (விசு) (தி) (வ).

கருத்து: சிவபிரானைக் குறித்து அறிவிற்குப் பொருத்தமான தத்துவச் செய்திகளை (தம்முள் மாறுபட்டுப்) பேசுபவர் (பேசுதலோடு அமையாது), ஐம்புலன்களையும் தவத்தால் வென்று, விரைவில் கருத்து மாறுபாடுகளை நீக்கி, தாங்கள் நிற்றல், இருத்தல், கிடத்தல் முதலிய எச் செயல் செய்யும் பெழுதும் 'ஒன்று' எனவே உணரத்தக்க ஒப்பற்ற இறைவன் சிவன் ஆவான்.

"ஒன்றென்றிரு" என்றார் பட்டினத்தடிகளும். (சித்தர் பாடல்கள், பட்டின : பொது)

மாறுபாட்டை நீக்குக என்றமையின் புறங்கூறாமை ஆயிற்று.

யோகியின் மதிப்பு

2489. நுண்ணறி [1]வாமுல [2]காமுல கேழுக்கு
மெண்ணறி [3]வாய்நின்ற வெந்தைபி ரான்றன்னைப்
பண்ணறி வாளனைப் பாவித்த மாந்தரை
விண்ணறி வாளர் விரும்புகின் றாரே. (7)

வேறு பாடம்: 1. வாயுல (விசு) (தி) (வ) (த) 2. காயுல (ஓ) IV. 3. வாய்நிறை யெய்த (சங்).

கருத்து: எம் தந்தையும் தலைவனுமாகிய சிவன் உலகங்களைச் சங்கற்பித்தே படைக்கும் நுண்ணறிவாளன். அது மட்டுமன்றி, படைத்த உலகோடு 'ஒன்றாய்' நிற்கிறான். ஏழு உலகங்களிலும் சிந்திக்கும் அன்பருக்கு ஞானமாய் நிற்கின்றான். உயிர்களைப் படிப்படியே பக்குவப்படுத்துகிறான். அவனைப் பாவனையில் (தியானத்தில்) நிறுத்துவோரைப் பரமாகாயத்தை அறிந்த ஞானிகள் விரும்புவர்.

சிந்திப்பவர்க்கெல்லாம் ஞானம் சிவனே யாதலின், புறங்கூறக் கிடந்தது ஒன்றில்லை என்றார்.

அக வழிபாடு

2490. விண்ணவ ராலு மறிவரி யான்றன்னைக்
[1]கண்ணுற வுள்ளே கருதிடிற் காலையே
யெண்ணுற வாகமுப் போது மியற்றிநீ
பண்ணிடிற் றன்மை பராபர னாமே[2]. (8)

வேறு பாடம்: 1. கண்ணற (அ) IV. 2. பராபரன் றானே (ஈ) IV.

கருத்து: தேவர், மூவர், முனிவர் முதலிய விண்ணுலகத்தோராலும் சொரூபம் அறிய வியலாத சிவபெருமானை, அருட்கண் வாய்ப்ப, உணர்வினுள் காணக்கருதி, காலம் உள்ள போதே, மூன்று வேளையும் அவனைத் தியானத்தில் நிறுத்தி அகவழிபாடு செய்தால், நீ தன்மையால் சிவனே ஆகலாம்.

சிவமாகும் பேறு (நிறை நிலை) அளிப்பவன் சிவனே யாதலின், புறங்கூற வேண்டா என்றார்.

அருளின் வெற்றி

2491. ஒன்றாய், உலகு உடன் ஏழும் பரந்தவன்,
பின் தான் அருள்செய்த பேரருளாளவன்
கன்றா மனத்தார்தம் கல்வியுள் நல்லவன்
பொன்றாத போது புனை கழலானே.

ஒன்றா யுலகுட னேழும் பரந்தவன்
பின்றா னருள்செய்த பேரரு ளாளவன்
கன்றா மனத்தார்தங் கல்வியு ணல்லவன்
பொன்றாத போது [1]புனைகழ லானே. (9)

வேறு பாடம்: 1. புனைபுகழானே (அ) IV.

கருத்து: தனித்தலைமைக் கடவுள் ஆதலின் ஒரே பொருளாய் உள்ள சிவபெருமான், அதே சமயம் அனைத்து உலகங்களிலும் உயிருடையன, அஃது இல்லன - யாவற்றிலும், அவையே ஆகி நிற்றலின், பல பொருளாயும் இருக்கின்றான். அங்ஙனம் வியாபித்திருப்பினும், தன்னை யாரொருவர் சார்ந்தார், அவர்க்கே அருள்வான். அவன் அருள்கள் அளவிடும் தரம் அல்ல. சூதினாலும், காமத்தாலும் நிலை குன்றாத மனத்தையுடையவர், சிறந்தனவாகக் கற்கும் கல்வியுள் மிகச் சிறந்தவன் அவன். அவர்களின் உணர்வு குன்றாத இதயம் என்னும் தாமரை மலர் சாத்திய திருவடிகளை உடையவன்.

இறுதியடியால் அடியார் பெறுகின்ற வீடுபேறு கூறினார். முதலடி பொதுவருளைக் கூறிற்று. ஏனைய அடிகள் சிறப்பருளைக் கூறின. வெற்றியை, அதன் அடையாளமாகிய கழல் மீது ஏற்றி, அருளால் பெறும் வெற்றியே அவனது வெற்றியாதலின், அருளாகிய திருவடியில் கட்டிய கழல் என்பார். "கழலானே" என்றார். பரத்தல் - வியாபித்தல். கன்றுதல் - மனம் நிலை தளர்தல்; பெருமையிழத்தல். நல்லவன் என்பதில், நன்மை, மிகுதி என்ற பொருளில் வந்தது. மிக்க சிறப்பைக் குறித்தது. கல்வி - ஆகுபெயர், வாலறிவனாகிய இறைவன் நல்கும் பதிஞானத்தைக் குறித்தது. இந்த ஞானத்தைப் பெறுதற்குரிய வழி இறைவன் தாள் வணங்குவதே என்பார், ஈற்றடியில் இதயத்தாமரை சாத்திய திருவடி என்றார்.

உண்மை ஞானமாகிய பதிஞானம் தருபவன் சிவனேயாதலின், புறங்கூற வேண்டா என்றார்.

அருள் விளக்கு

2492. **போற்றி என்றேன் எந்தை பொன்றாத சேவடி,**
ஏற்றியது, என்றும் எறிமணிதான் தகக்
காற்றும் விளக்கு - அது, காயம் மயக்குறும்
மாற்றமும் கேட்டது, மன்று கண்டேனே.

போற்றியென் றேனெந்தை [1]பொன்றாத சேவடி
[2]யேற்றிய [3]தென்று மெறிமணி தான்றகக்[4]
[5]காற்றும் [6]விளக்கது காய மயக்குறு[7]
[8]மாற்றமுங் கேட்டது மன்றுகண் டேனே. (10)

வேறு பாடம்: 1. பொன்னான (ஆ இ ஈ ஒ) I; பொன்னாத (அ) V; பொன்றான (ஓ) V. 2. போற்றிய (ஆ இ ஈ ஒ) I; யேற்றியே (விசு) (தி) (த) 3. சென்று (விசு) (தி) 4. தான்றக (அ) V; தானற (ஒ) I; தானறக் (இ) I; தான்றாக (ஓ) I; தானக்க (ஆ) I; தானகக் (விசு) தானகம் (த) 5. காற்றின் (ஒ) I; 6. வினைக்கது (அ) I; 7. மயக்கறு (இ) I; மயக்குறல் (த) 8. மாற்றலுங் (ஓ) I;

கருத்து: எந்தை சிவபிரானது நிரந்தரமான திருவடியைப் 'போற்றி' என்று நாளும் வாழ்த்துனேன். என் உடம்பினுள், அவன் திருவடியாகிய பிராணவாயு, புருவமத்தியில் சோதியை ஏற்றியது. அந்த விந்துச் சோதிக்கு ஏற்ப, மணியோசைக்கு இணையாக, உடம்பு முழுதும் கலந்து நிற்பதான நாத ஒலியும் கேட்டது. என்னுள் கூத்தப் பெருமாள் திருநடம்புரியும் சபையைக் கண்டேன்.

இறைவனின் தடத்தத் திருமேனிகள் பல. ஆனால் சொரூபத் திருமேனி ஒன்று. அஃது என்றும் மாறாதது. அதுவே நிலையான உண்மை (சத்துப் பொருள்) ஆதலின் "பொன்றாத சேவடி" என்றார். விந்துச்சோதி தோன்றியே, அது நாத வொலியாகவும் கேட்கப் பெறும். இதனை முன்னும் ஆசிரியர் கூறினார். ("சொல்லியவிந்துவும் ஈறாறு நாதமாம்" - பா. எண். 1244)" திருவடியே காற்று என்பது, "அடி தலை அறியும் திறங்கூறல்" என்ற இயலிற் கூறப்பட்டது. (பா. எண் 2398, 2405) பிராணவாயு புருவமத்தியில் விந்துச் சோதியை ஏற்றதலை மேற்கண்ட 2405 ஆம் பாடலில் கூறினார். (இதன் உரையாக இப்பதிப்பில் எழுதப்பெற்றதைக் காண்க). "காயம் மயக்குறும் மாற்றம்" என்பது, நாத ஒலியின் போது சகஸ்ராரத்தில் எழும் அமுத ஊற்று உடம்பு முழுதும் பரவுதலாகும். மன்று - நடனசபை; இங்குச் சகஸ்ராரமும் அதற்கு மேல் உள்ள பரமாகாயமும். பரமாகாய அனுபவம் பற்றி "மேலாலவத்தை" - இயலில் கூறினார்.

நிர்க்குணப்பிரமத்தை உணர்த்துபவன் சிவனே ஆதலின் புறங்கூற வேண்டா என்றார்.

உலகங்கள் கண்டேன்

2493. **நேடிக்கொண்ட என்னுள்ளே நேர்தரு நந்தியை**
ஊடுபுக்கு ஆரும் உணர்ந்து அறிவார் இல்லை,
கூடுபுக்கு ஏறலுற்றேன், அவன் கோலம் கண் -
மூடிக்கண்டேன் உலகு ஏழும் கண்டேனே.

நேடிக்கொண் டென்னுள்ளே நேர்தரு நந்தியை
யூடுபுக் காரு முணர்ந்தறி வாரில்லை
கூடுபுக் கேறலுற் றேனவன் கோலங்கண்
மூடிக்கண் டேனுல கேழுங்கண் டேனே. (11)

கருத்து: சிவத்தை உயிருணர்வால், என் உடம்பின் உள்ளே நாடினேன், அவனும் நான் 'காண' நேர்பட்டான். அவனை யாரும் உலகின் பரந்துபட்ட உலகியற் கல்வியின் வாயிலாகவோ, அறிவாராய்ச்சி யாலோ அறிந்துகொள்ள இயலாது. அப்பெருமான் சத்தியாய் (குண்டலியாய்) என் உடம்பில் புகுந்து நின்றான். அவனது துணையால், புருவமத்தியில் விழிப்புநிலையில் இருந்த உயிருணர்வைத் தலையுச்சிச் சகஸ்ராரத்திற்கு ஏற்றினேன். நிராதார யோகத்தில் சிவனது சொரூபத்தைக் கண்டேன். ஏழு உலகங்களிலும் அவன் வியாபித்திருப்பதை உணர்ந்தேன்.

கண் மூடிக் கண்டேன் - தத்துவங்களுக்கு அப்பாற்பட்டுக் கண்டேன் என்பதைக் குறித்தது. "அடிஞானத்தாற் பொருளும் ஆன்மாவும் காட்டிக் கடியார் புவனமுற்றும் காட்டி" என்றார் குமரகுருபரரும் (கந். கலி. வெ. 27). உலகேழும் சிவனே வியாபகம்; புறங்கூறல் எங்ஙனம் என்றார்.

நிராதார யோகம் தருவான்

2494. ஆன புகழு மமைந்ததோர் ஞானமுந்
தேனு [1]மிருக்குஞ் சிறுவரை யொன்றுகண்
டூனமொன் றின்றி [2]யுணர்வுசெய் வார்கட்கு
வானகஞ் செய்யு மறவனு மாமே. (12)

வேறு பாடம்: 1. முடைய (த) 2. யுணர்தல் செய் (த).

கருத்து: 'வாளா தலையுச்சி அன்று, சிதாகாயம்' என்று கூறப்படும் புகழும், அவ்விடத்தில் அமையும் பதி ஞானமும், அருளமுதமும் தன்னகத்தே இருக்கப் பெற்றதாகிய சிறு மலை ஒன்று யாவர் உடம்பிலும் உண்டு. அதனை உணர்வால் கண்டுகொண்டு, அங்கு உணர்வைச் செலுத்தி, ஆதார யோகத்தின் முழுப்பயனையும் பெறும் யோகிக்கு, அதுகாறும் கருணை செய்த வள்ளலாகிய சிவபெருமான், மேலும், பரமாகாயத்தையும் அருள்வான்.

நிராதார யோகத்தைக் கூட்டுவிப்பான் என்பது கருத்து. ஊனம் - தடைப்படுதல்.

உயர்வினும் உயர்வாம் யோகம் தருபவன் சிவன் ஆதலின் புறங்கூற வேண்டா என்றார்.

வீடு பெறும் தகுதி

2495. மாமதியாம் மதியாய் நின்ற மாதவர்
தூய்மதியாகும் சுடர், பரமானந்தர்
தாம் மதியாக, சகம் உண்டு, சாந்திபுக்கு,
ஆம் மலம் அற்றார் அமைவுபெற்றாரே.

மாமதி யாமதி யாய்நின்ற மாதவர்
தூய்மதி யாகுஞ் சுடர்பர மானந்தர்[1]
தாமதி யாகச் [2]சகமுண்டு சாந்திபுக்
காமல மற்றா ரமைவுபெற் றாரே. (13)

வேறு பாடம்: 1. மானந்தந் (விசு) (தி) (த) மானந்தத் (வ). 2. சக முணச் (விசு) (தி) (வ) (த).

கருத்து: சந்திர மண்டலத்தில் கலந்த உணர்வுடையவராய்ச் சகஸ்ராரத்தில் அனுபவம் பெற்ற யோகிகள், அந்தச் சிதாகாயத் திற்கு மேல், பரமாகாயத்தில் உணர்வினை ஏற்றி, மலமற்ற தூய பேரறிவாளனும், சுடர் வடிவினனும் பரமானந்தமே உருவானவனு மாகிய சிவமே தமது உணர்வாக அமைய, தாமே அவனாக நின்று, உலகவுணர்வை முற்றும் கடந்து, உபசாந்த நிலை அடைவர். அவரே மலம் நீங்கப் பெற்று, வீடுபேறு அடையும் இலக்கணம் உடையோர்.

முன்னர்க் கூறிய மாயப் பாழ், போதப் பாழ் ஆகியவற்றைச் “சகமுண்டு” என்ற தொடரால் குறித்தார். “சாந்திபுக்கு அமைவு பெற்றார். மலமற்றாரே” என முடிக்க. மலமற்றோர் உபசாந்தப் பாழ் - என்ற நிலையில் உள்ளார். உண்மை வீடு தருபவன் சிவனாதலின் புறங்கூற வேண்டா என்றார்.

சிவசித்தர் யார்?

2496. பதமுத்தி மூன்றும் பழுது என்று கைவிட்டு,
இதம் உற்ற பாச - இருளைத் துரந்து,
மதம் அற்று, எனது, யான் - மாற்றிவிட்டு ஆங்கே
திதம் உற்றவர்கள் சிவசித்தர் தாமே.

பதமுத்தி மூன்றும் பழுதென்று கைவிட்[1]
[2]டிதமுற்ற பாச விருளைத் துரந்து
மதமற் றெனதியான் மாற்றிவிட் டாங்கே
திதமுற் றவர்கள் சிவசித்தர் தாமே. (14)

வேறு பாடம்: 1. கைவிட்டு (இ) IV. 2. விதமுற்ற (இ) IV.

கருத்து: புறங்கூறாமை பற்றிக் கூறிவருபவர், அகமார்க்கம் உடையோராகிய ‘சிவசித்தர்’ எத்தகையர் என்று கூறுகின்றார். சிவசித்தராவார், பதமுத்தி எனப்படும் சாலோக, சாமீப, சாரூப நிலைகள் குறையுடையன என்று அவற்றைக் குறிக்கொள்ளாதோர். அது, இது என்று சுட்டியறியும் அறிவை விளைவிக்கும் ஆணவ மலமாகிய இருளை நீக்கியோர், செருக்கு அற்றோர். எனது என்னும் புறப்பற்றும், நான் என்னும் அகப்பற்றும் விட்டோர். சிவமயமாகிய சித்தத்தில் நிலைபெற்று நிற்பவர்.

“நும் சித்தத்து நின்றே நிலைபெற நீர் நினைந்துய்ம்மினே” என ஆசிரியர் முன்னர், “இதோபதேச” - இயலிற் கூறியதை நினைக. சித்தத்தில் நிலை பெற்றவர் சித்தர். அச்சித்தம் சிவமயமானோர் சிவசித்தர். ஆசிரியர் முதலாம் சிவசித்தர் என்க. சிவம் ஆகிய சித்தம் - “அன்பே சிவமாய் அமர்ந்த” சித்தம்.

பதமுத்தியின் குறை - அவை மீண்டும் பிறப்பதற்கே காரணமாகின்றவை. பரமுத்தி என்பது சாயுச்சியம். இதம் - இது எனப்பொருள் தரும் வடிசொல். ஆணவம், கட்டியறியும் அறிவை விளைவிப்பது என்பது: உயிரின் அறிவை ஆணவம் மறைத்தலால், அது சுட்டியறியும் நிலைக்கு வந்தது. மறைப்பு நீங்கினால், அது வியாபகம் ஆகும். திதம் - ‘ஸ்தித’ என்னும் வடசொல் திரிபு.

சிவசித்தர் யார் - 2

2497. சித்தர் சிவசித்தைக் கண்டவர், சீருடன்
சுத்த, அசுத்தத்துடன் தோய்ந்து, தோயாதவர்
முத்தராம்; முத்திக்கு மூலத்தர்; மூலத்துச்
சத்தர்; சதாசிவத் தன்மையர் தாமே.

[1]சித்தர் [2]சிவசித்தைக் கண்டவர் சீருடன்
சுத்தாசுத் தத்துடன் [3]றோய்ந்துதோ யாதவர்
[4]முத்தரா முத்திக்கு மூலத்தர் மூலத்துச்
[5]சத்தர் சதாசிவத் தன்மையர் தாமே. (15)

வேறு பாடம்: 1. சித்தராஞ் (அ ஓ) II. 2. சிவத்தைக் (ஆ இ ஈ ஓ) II. 3. றோய்ந்துந் தோயாதவர் (விசு) (தி) (வ) (த) 4. முத்தரம் (ஓ) I; முத்தர (த) 5. சத்தாஞ் (அ) II.

கருத்து: சிவசித்தர் தன்மையை மேலும் கூறுகின்றார். சிவசித்தராவார் பேரறிவு வடிவாகிய சிவத்தைத் தரிசித்தோர். அசுத்த மாயை, சுத்த மாயைகளில் பாங்குடன் தோய்ந்தும், தோயாமலும் வாழ்பவர். ஆணவமலம் நீங்கிய சீவன் முத்தர். பரமுத்தி பெறும் பக்குவமுடையோர். தமது உயிராற்றலின் மூலசத்தியாக அருட் சத்தியை உடையோர் (உயிர், அருளில் நிலைக்கப் பெற்றோர்) யோகக்காட்சியில் சதாசிவத்தைத் தமது சகஸ்ராரத்தில் காண்பவராதலின் அதன் குணங்களைத் தம்மிடம் கைவரப் பெற்றோர்.

அசுத்த மாயை, சுத்த மாயைகளில் சீருடன் தோய்ந்து, தோயாமை யாவது, உலகியலில் வாழ்தலும், அதே சமயம் யோக அனுபவங்களைப் பெறுதலும். மூலத்துச் சத்தி - அருட் சத்தி.

138. அட்ட தள முக்குண அவத்தை

தலையில் திசைக் காவலர்

2498. உதிக்கின்ற விந்திர னங்கி யியமன்[1]
[2]றுதிக்கு நிருதி [3]வருணனவ் வாயு
மதிக்குங் குபேரன் வடதிசை யீசன்
னிதித்தெண் டிசையு நிறைந்துநின் றாரே[4]. (1)

வேறு பாடம்: 1. யியமனுந் (சங்) 2. துதிக்கு (சங்) 3. வருணனல் (சங்) 4. றானே (சங்).

கருத்து: சகஸ்ராரத்தாமரை ஆயிரம் இதழ் உடையதாயினும், அவ்விதழ்களை, எட்டுத் திக்கினையும் நோக்கிய வகையில், எட்டு எனக் கொண்டு எட்டிதழ்த் தாமரை என்றும் வழங்குவர். அவ்விதழ்களில் எட்டுத் திக்குப் பாலர்களாகிய இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் ஆகியோர் உள்ளனர்.

நிதித்து - நியதிக்குட் பட்டு; மரூஉ. அண்டத்தில் இவர் திசைக் காவ லராதல் போலப் பிண்டத்திலும் திசைக் காவலராவர் என்பது

யோகநூல் மரபு. சகஸ்ராரத்தாமரை ஆயிரம் இதழ் உடையது. அவை எட்டுத்திசைகளையும் நோக்கியிருத்தலின் 'அட்டதள கமலம்' எனப்படும். முக்குணம் என்பவை, சகளம், பரம், நிகளம் என்ற இறைவன் திருமேனிகள் மூன்று. சகஸ்ராரத்தில் அவற்றை முறையே தரிசித்தலின், "முக்குண அவத்தை" என்றார். சகஸ்ரார - அனுபவத்தைத் தனித்துக் கூறுவது இவ்வியல்.

சகஸ்ராரம் உருவாகிறது

2499. ஒருங்கிய பூவும் ஓர் எட்டு இதழாகும்
மருங்கிய மாயாபுரியதனுள்ளே
சுருங்கிய தண்டின் சுழுனையின் ஊடே
ஒருங்கிய சோதியை ஓர்ந்து, எழும் உய்ந்தே.

ஒருங்கிய பூவுமோ ரெட்டித ழாகு
மருங்கிய மாயா புரியத னுள்ளே
சுருங்கிய தண்டின் சுழுனையி னூடே
யொருங்கிய சோதியை யோர்ந்தெழு முய்ந்தே. (2)

கருத்து: செயற்படாமலும், வெளிப்பட்டுத் தோன்றாமலும், உள்ளுறை பொருளாய் மொட்டுப் போல இருக்கும் அத்தாமரை எட்டு இதழ்களை உடையது. அது பெருமையுடைய (யோகியின்) உடம்பில், முதுகுத் தண்டினுள் அமைந்துள்ள சுழுமுனை நாடியின் வழி, மேலே ஏறும் மூலக்கனலால் தோன்றும் சோதியை, மேலும் மேலும் தியானிப்பதால், யோகி உய்வதற்கு இடமாக, தலையுச்சியில் வெளிப்பட்டு நிற்கும்.

கீழ் நோக்கிச் சாய்ந்து, மொட்டாக, வெளிப்பட்டுத் தோன்றாமல் இருக்கும் தாமரை யோக சாதனையால், நிமிர்ந்து, வெளிப்பட்டு நின்று, மலர்ந்து விளங்கும் என்க. வெளிப்படுதல் - அனுபவமாதல்.

பூ எழும் என முடிக்க. ஓர்ந்து என்பதை ஓர என மாற்றுக. உய்ந்து - உய்வதற்கு இடமாகி. சினைவினை முதல்வினையாகக் கொள்ளப் படுதலின் இவ்வாறு கூறினார். யோகசாதனையினால், உடம்பின் உள்ளார்ந்த சத்தி, சகஸ்ராரத் தானமாக உருவாவதைக் கூறுகின்றார்.

சகஸ்ராரம் யாது?

2500. மொட்டு அலர் தாமரை மூன்று உள; மூன்றினும்
விட்டு அலர்கின்றன சோதி; விரிசுடர்
எட்டு அலருள்ளே, இரண்டு அலர் உள்ளூறின்
பட்டு அலர்கின்றது ஓர் பண்டு அங்கன் ஆமே.

மொட்டலர் தாமரை மூன்றுள மூன்றினும்
விட்டலர் [1]கின்றன சோதி விரிசுட[2]
ரெட்டல [3]ருள்ளே யிரண்டல ருள்ளூறிற்
பட்டலர் கின்றதோர் பண்டங்க னாமே[4]. (3)

வேறு பாடம்: 1. கின்றது (ஆ) IV; கின்றனன் (விசு) (தி) (வ) (த) 2. விரியிதழ் (த) 3. ருள்ளேர் பிரண்டல (த) 4. னாயே (ஒ) IV; னாவே (ஆ ஒ) I.

கருத்து: யோகிக்கு மூன்று தாமரை போன்ற மூன்று கண்கள் உள்ளன. அவை இடக்கண், வலக்கண், பிடரிக்கண் என்பன. அவைகளில் சோதி விளங்குகிறது. உலகெங்கும் விரிந்த சுடராகிய சிவம் (அருள்புரிந்தால்) இடக்கண், வலக்கண் ஆகியவை உள்ளார்ந்து நிற்க, அந்த விரிசுடர்ச் சிவம் உச்சந்தலையில் பொருந்த, அப்போது உருவாவது எட்டிதழ்த்தாமரை ஆகிய சகஸ்ராரம். அது, முன்பு இடக்கண், வலக்கண், பிடரிக்கண் ஆகியவை ஒளிவிளங்கியது போல், ஒளிவீசும். அதாவது மூன்று ஒளியும் சேர்ந்து ஆக்ஞையில் (புருவமத்தியில்) ஒளியாக வெளிப் பட்டதே போல, உச்சந்தலையிலும் வெளிப்படும். அதுவே சகஸ்ராரம். அதனைத் தியானித்து அறிக.

கொண்டு கூட்டு: "மொட்டலர் தாமரை மூன்றுள; மூன்றினும் விட்டலர்கின்றன சோதி, இரண்டு அலர் உள்ளூறின்,விரிசுடர்பட்டு, உள்ளே அலர்கின்றது (ஓர்) எட்டு அலர், பண்டு அங்கன் ஆமே" எனக் கூட்டுக. 'ஓர்' என்பதை இறுதியிற் கூட்டுக.

பண்டு - முன்பு. அங்கன் - அங்ஙனம்; தோன்றியவாறு. 4 ஆம் அடிக்குத் திருந்திய பாடம் கிடைக்காமையினால், முன்னை உரைகாரர் பல கூறி இடர்ப்பட்டனர்.

அருவி ஆறு; குளம் ஒன்று

2501. ஆறே அருவி, அகம் குளம் ஒன்று உண்டு,
நூறே சிவகதி நுண்ணிது, வண்ணமும்
கூறே குவிமுலைக் கொம்பு அனையாளொடும்
வேறே இருக்கும் விழுப்பொருள் தானே.

ஆறே யருவி யகங்குள மொன்றுண்டு
நூறே சிவகதி நுண்ணிது வண்ணமும்
கூறே குவிமுலைக் கொம்பனை யாளொடும்
வேறே யிருக்கும் விழுப்பொரு டானே. (4)

கருத்து: உடம்பில் உணர்வு தோன்றிப் பெருகும் இடம் ஆறு. அவை ஆறு ஆதாரங்கள். பேருணர்வாகப் பெருகிய அவ்வருவிநீர் அனைத்தும் சேரும் இடம் ஒன்று உண்டு. அதுவே, முதலில் மறைந்திருந்து, பின்பு தோன்றுவதாகிய சகஸ்ராரம் என்னும் பொய்கை. அங்கு யோகி பெறும் சிவானுபவம் பொடியைப் போல் நுட்பமானது. அப்போது யோகி தரிசிக்கும் சிவம், முதலில் சத்தியோடு உடனாய்த் தோன்றும். பிறகு தனிப்பரம் பொருளாய்த் திகழும்.

ஆறு ஆதாரங்களின் உணர்வும் ஒன்றுசேர்ந்தாலே குளம் உருவாகும் என்பது ஒரு நுட்பம். அஃது உள்ளார்ந்து இருப்பது, பின்னர்த் தோன்றுவது ஆதலின் "அகம் குளம்" என்றார். உயிருணர்வே அவ்வாறு பேருணர்வாய்ப் பெருகுகின்றது. இங்கு "அகம்" என்றது உயிருணர்வையே. "அகம் குளம் ஒன்றுண்டு" என்பதற்கு அகம் குளமாதலும் ஒன்று உண்டு எனப் பொருள்செய்து, அவ்வுணர்வால் அங்கு அமுதம் ஊறி, உடம்பெங்கும் பரவுதல் பற்றியும் உருவகமுகத்தான் "குளம்" என்றார் எனலுமாம். அகம் என்பதை முதலிற் கூட்டலுமாம்.

நூறு - பொடி. வண்ணம் - தன்மை. கூறே. கூறாக உள்ள, இடப் பக்கத்தில் உள்ள எனப் பொருள் செய்க. வேறேயும் என்பதன் உம்மை தொக்கது; தனியாகவும் சிவம் மட்டும் தரிசனமாவதை 'மேலாலவத்தை' இயலில், சிவதுரியாதீதம் என விளக்கினார்.

கலை நிறை மலர்

2502. திகையெட்டுந் [1]தேசெட்டுந் தேவதை யெட்டும்
[2]வகையெட்டு மாய்நின்ற வாதிப் பிரானை
[3]மிகையெட்டு நான்குமற் றாங்கே நிறைந்து
[4]முகையெட்டு முண்ணின் [5]றுதிக்கின்ற வாறே. (5)

வேறு பாடம்: 1. தேரெட்டுந் (சங்) (விசு) (தி) (வ) (த) 2. அகை யெட்டு (த) 3. வகையெட்டு (விசு) (தி) (வ) (த) (சங்) 4. முகையெட் டி னுண்ணின் (த) 5. திகைக்கின்ற (ஒ) II.

கருத்து: எட்டுத் திசைகளும், ஒளியுடைய எட்டு வடிவங்களும், தெய்வங்கள் (திக்குப் பாலகர்) எண்மரும், அவர்களின் குணவகைகள் எட்டுமாக நின்ற ஆதிப் பரம்பொருளை, நிராதாரத்தில் தரிசிக்கும் நிலை வந்துற்றபோது, பன்னிரண்டு பிராசாத கலைகளும் நிறைந்து, உள்ளேயிருக்கும் எட்டு அரும்புகளும் மலராய் விரியும்.

எட்டு அரும்பு என்றாராயினும், அரும்பின் பகுதி எட்டும் எனக் கொள்க. "அண்டத்தில் உள்ளது பிண்டத்திலும்" என்பர். ஆதலின் அண்டத்தில் உள்ள திசைக்காவலர் எண்மரும் மாந்தரின் தலையிலும் உள்ளனர். இப்பாடலில் கூறியது, யோகி தனது சகஸ்ராரத்தான அனுபவத்தில் அவர்களைத் தரிசிப்பான் என்பது அன்று. சிவபரம் பொருளே அவனது தலையைச் சூழ்ந்த 12 அங்குல ஆகாயத்தில், எட்டுத் திக்கிலும் தரிசனமாவான் என்கின்றார். (12 அங்குலம், வட்டத்தின் குறுக்களவு)

"ஆதிப் பிரானைத் தரிசிக்கும் வண்ணம், முகை எட்டும் உள் நின்று உதிக்கின்ற வாறே" என இரு சொல் வருவிக்க; இசையெச்சம். உதிப்பவன் சிவபரம்பொருள். மிகை - மேலான; தலைக்கு மேலே 12 அங்குல ஆகாயத்தில். எட்டும் நான்கும் - 12 பிராசாத கலைகள். மற்று - அசை. முன்னை யுரைகாரர் சிலர் 'அற்று' எனப் பிரித்து இடர்ப்பட்டனர்.

தடத்தமும் சொரூபமும்

2503. ஏழும் சகளம் இயம்பும்; கடந்து எட்டில்
வாழும் பரம் ஒன்று; அது கடந்து ஒன்பதில்
ஊழி பராபரம்; ஓங்கிய பத்தினில்
தாழ்வது வானம்; தனித்தன்மை தானே.

ஏழுஞ் சகள [1]மியம்புங் கடந்தெட்டில்
வாழும் [2]பரமொன் றதுகடந் தொன்பதி
லூழி பராபர [3]மோங்கிய பத்தினிற்
றாழ்வது [4]வானந் தனித்தன்மை தானே. (6)

வேறு பாடம்: 1. மியல்புங் (விசு) (தி) 2. பரமென் (ஆ) IV. 3. மூங்கியை (த) 4. வான (ஒ) I.

கருத்து: மேலே, யோகிக்குத் தலையில் எட்டுத்திக்கிலும் சிவபரம் பொருள், நிராதாரத்தில் தரிசனமாவான் என்று கூறியவர், ஈண்டு அதனை விளக்குகின்றார். கிழக்கு முதல் வடக்கு வரையுள்ள ஏழு திசைகளிலும் உருவமாகத் தரிசனப்படுவான். எட்டாவது, வடகிழக்கு ஈசானதிசை. அதில் பரசிவமாகக் காட்சி தருவான். கீழ்ப்பக்கம் பராபர நிலையில் சிவன் காட்சி தருவான். மேற்பக்கம் அகண்டாகார வானமாக நிற்பான். அஃது அவனது சொரூபம்; நிட்களம்.

தாழ்வது - தங்குவது. இது, காண்டற்கு அருமை பற்றிக் கூறியது. மேலே, மேலாலவத்தையிற் கூறியவற்றை இவற்றோடு ஒருங்குவைத்து உணர்க.

மகா சங்கார ருத்திரன்

2504. பல்லூழி, பண்பன், பகலோன், இறையவன்,
நல்லூழி ஐந்தினுள்ளே நின்ற ஊழிகள்
செல் ஊழி அண்டத்துச் சென்ற அவ்வூழியுள்
அவ்ஊழி உச்சியுள் ஒன்றில் பகவனே.

பல்லூழி [1]பண்பன் பகலோ னிறையவ
[2]னல்லூழி யைந்தினுள் ளேநின்ற வூழிகள்
செல்லூழி யண்டத்துச் சென்றவவ் வூழியு
ளவ்வூழி யுச்சியு ளொன்றிற் பகவனே. (7)

வேறு பாடம்: 1. யன்பன் (அ) IV. 2. வல்லூழி (ஈ ஒ) III.

கருத்து: ஊழிக் காலங்களை உண்டாக்குபவன். அருட் பண்பு உடையவன். ஞாயிறு அனையன். இறைவன். நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை என்ற கலைகளில் உள்ள புவனங் களை அழிக்கும் கடவுளருள், சதாசிவ மூர்த்தியை அதிட்டித்து, சாந்தியதீத கலா புவனங்களை அழித்து, இறுதியில் பிரமன் முதல்

சதாசிவன் வரையுள்ள ஐந்து சங்காரக் கடவுளரையும் சங்கரிப்பவன். மகாசங்கார ருத்திரன். இவனே அகண்டாகார மூர்த்தியும் என்க.

சங்காரம் ஆகிய ஒடுக்கமும், அவத்தைகளுள் சகளம் மாறி, நிட்களம் தரிசனப் படுவதும் ஒத்தவை.

அனைத்தும் தாங்கும் ஆகாயம்

2505. புரியும் உலகினில் பூண்ட எட்டானை,
திரியும் களிற்றொடு தேவர் குழாமும்
எரியும் மழையும் இயங்கும் வெளியும்
பரியும் ஆகாசத்தில் பற்று - அது தானே.

புரியு [1]முலகினிற் பூண்டவெட் டானைத்
திரியுங் களிற்றொடு தேவர் குழாமு[2]
மெரியு மழையு மியங்கும் வெளியும்[3]
பரியுமா காசத்திற் பற்றது தானே. (8)

வேறு பாடம்: 1. முலகினைப் (த) 2. பிரானும் (த) 3. வழியும் (இ) I; வளியும் (த) முதலடி ஈற்றுச் சீரில் சந்தி வேண்டுவதின்று. ஆயினும் சுவடிகளில் உள்ளவாறே மேற்கொள்ளப்பட்டது.

கருத்து: தான் படைத்தருள்கின்ற உலகில் அட்ட மூர்த்தியாக உள்ளவன். திசைதோறும் உலாவும் அட்டதிக்கு யானைகளும், திக்குக் காவலரும், தீ, மழை ஆகாயம் முதலியவையும் தமக்குப் பற்றுக் கோடாகக் கொண்டுள்ள அகண்டாகார வெளியாக விளங்குபவன்.

எட்டானை களிற்றொடு தேவர்குழாமும் வெளியும் பரியும் ஆகாசத்தில் பற்றது தானே. என வினை முடிவு செய்க.

தாமரையின் பெருமை

2506. ஊறு மருவி யுயர்வரை யுச்சிமே
லாறின்றிப் பாயு [1]மகங்குள மொன்றுண்டு
சேறின்றிப் பூத்த செழுங்கொடித் தாமரைப்
[2]பூவின்றிச் சூடான் புரிசடை யோனே. (9)

வேறு பாடம்: 1. மருங்குள (இ ஈ ஓ) III. மகன் குள (ஓ) IV. 2. பூவன்றிச் (இ ஓ) I.

கருத்து: அமுதம் ஊறுகின்ற மலையுச்சியாகிய தலையுச்சியில், ஆறு இல்லாமலே, நீர் பாய்ந்து நிரம்பும் குளம் ஒன்று உள்ளது. அது சகஸ்ராரம். அங்கு சேறு இல்லாமலே, எட்டு இதழ்த் தாமரை பூத்துள்ளது. சிவம், அப்பூவையன்றி வேறு பூக்களைச் சூடான்.

நிராதாரம் என்றற்கு, 'ஆறின்றிப் பாயும்' என்றார். பூத்த இடம் தலையன்று. அதன் பேர் மூலாதாரம் ஆதலின், 'சேறின்றிப் பூத்த' என்றார். சேற்றில் பூத்தலின், தாமரை பங்கயம் எனப்பெறும். இந் நிராதார யோகத்திலன்றி அகண்டாகார சிவத்தைத் தரிசிக்க இயலாது என்பார், "பூவின்றிச் சூடான்" என்றார். 'பூவன்றி' என்பது எதுகை நோக்கிப் "பூவின்றி" எனத் திரிந்தது.

குறிப்பு: இதனை யடுத்துச் சுவடிகளிலும் பதிப்புகளிலும் உள்ள "ஒன்று மிரண்டும்" என்னும் இதனை ஒத்த பாடல் "அந்தணரொழுக்கம்" - இயலில் வந்தது. (பா. எண். 391). அதுவும் இடைச்செருகல்.

2507. ஒன்று மிரண்டு மொருங்கிய காலத்து
நின்று மிருந்து நிலம் பல பேசினும்
வென்று விளங்கும் விகிர்தனை நாடுவர்
சென்று வணங்குந் திருவுடை யோரே. (உ)

139. நவாவத்தை

பொது

2508. நவமாம் அவத்தை நனவாதி, பத்தில்
பவமாம் மலம் குணம் பற்று அறும்; அற்றால்
தவமான சத்தியஞானப் பொதுவில்
துவம் ஆர் துரியம் சொரூபம் - அது ஆமே.

நவமா மவத்தை நனவாதி பத்திற்[1]
பவமா மலங்குணம் [2]பற்றறு மற்றாற்[3]
றவமான சத்திய ஞானப் பொதுவிற்
றுவமார் துரியஞ் சொரூபம தாமே. (1)

வேறு பாடம்: 1. யத்திற் (இ ஓ) I; பற்றிற் (விசு) (தி) (வ) (த) 2. பற்றற்றுப் பற்றாத் (விசு) (தி) (வ) (த) 3. மாற்றாமல் (ஈ) I; பற்றாற் (ஆ) I.

கருத்து: ஒன்பது அவத்தைகளாவன சுத்தாவத்தை ஐந்தனுள்ளும், அதனின் மேம்பட்ட பராவத்தை ஐந்தனுள்ளும், சிவாவத்தை

ஐந்தனுள்ளும் உள்ளவை. அவை, இம் மூன்று வகையிலும் நனவு (சாக்கிரம்) முதல் உள்ள மும்மூன்று ஆகும். இவற்றை எய்தும் பொழுது, பிறப்புக்குக் காரணமான ஆணவ மலமும், அதனால் விளையும் அறியாமை முதலிய குணங்களும் நீங்கும். பின்பு, அவ்வத் துரியநிலைகளில் மேனிலை அனுபவம் எய்தி, முடிவில், சிவ துரியாதீதத்தில், தவப் பயனாகத் தோன்றும் 'சத்தியஞானப் பொது' என்னும் அகண்டாகார வெளியனுபவத்தில், சிவசொரூ பத்தில் ஆன்மா கலக்கும்.

துவம் - நிலை பேறு. சொரூபம் - இயல்புத் திருமேனி.

செயலன்று, தவம்

2509. சிவமான சிந்தையிற் சீவன் சிதையப்
பவமான மும்மலம் பாறிப் பறிய
நவமான வந்தத்தி னற்சிவ போதந்
தவமா மலையாகித் தானல்ல வாகுமே. (2)

கருத்து: சித்தம் சிவமாகும் காரணத்தால், சீவ இயல்பு நீங்க, மும்மலங்களும் சிதைந்து நீங்க, (அந்த அன்பரின் செயல்கள்) சித்தாந்தச் செம்பொருளாகிய சிவபோதம் காரணமாக, தவம் எனக் கூறப்படுமே யன்றி, வாளா செயல் என நில்லா.

செயலாகா எனவே, வினைப் பயனும் இல்லை. தான் - செயல் என்ற பெயர்த்தன்மை. "சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும்" என்றார் மணிவாசகரும். (திருவா. திருத்தோ, 6) நவமான அந்தம் ஒன்பது அவத்தைகள்.

தன்போல் ஆக்குதல்

2510. முன்சொன்ன வொன்பானின் [1]முன்னின்ற தத்துவந்
தன்சொல்லி லெண்ணத் தகாவொன்பான் வேறுள
பின்சொல்ல லாகுமிவ் வீரொன்பான் பேர்த்திட்டுத்
[2]தன்செய்தி யாண்டவன் [3]றான்சிரத் தானே. (3)

வேறு பாடம்: 1. முன்னுறு (ஓ) IV மூன்று மகத்துவந் (ஆ இ) II. 2. தன்செய்த (விசு) (தி) (வ) (த) 3. றான்சிறந் (ஆ இ ஓ) III.

கருத்து: முன்னைப் பாடலிற் கூறிய ஒன்பது அவத்தைகளினும் மேம்பட்ட வேறு ஒன்பது அவத்தைகள் - சொல்லவும் சிந்திக்கவும் இயலாதவை - உள்ளன. குருவின் உபதேசத்தால் அறியும்

இப்பதினெட்டையும் அனுபவிக்கச் செய்து, நீக்கி, ஆன்மா அவற்றின் வேறு என அதற்கு உணர்த்தி, பிறகு அதனைத் தன்னைப் போல் ஆக்கி, ஆட்கொண்டது சொரூபம்.

இரவும் பகலும் சொல்லவைத்தது

2511. உகந்தன ஒன்பதும், ஐந்தும் உலகம்
பகர்ந்த பிரான் என்னும் பண்பனை நாடி,
அகந்து, எம்பிரான் என்பன் அல்லும் பகலும்,
இகந்தன வல்வினை; எட்டு அறுத்தானே.

உகந்தன வொன்பது மைந்து முலகம்
பகர்ந்த பிரானென்னும் [1]பண்பனை நாடி
[2]யகந்தெம் பிரானென்ப னல்லும் பகலு
[3]மிகந்தன வல்வினை [4]யெட்டறுத் தானே. (4)

வேறு பாடம்: 1. பண்பினை (ஒ ஓ) I. 2. யகைந்தெம் (த) 3. மிகந்தனம் (அ இ ஈ) I. 4. யோடறுத் (சங்) (விசு) (தி) (வ) யீடறுத் (த)

கருத்து: உயர்ந்தோர் "எம்பிரான்" என்று அன்புடன் கூறும் அருளாளனை என் அகத்தில் நாடி, நான் பெற்று மகிழ்ந்த அவத்தைகள் ஒன்பதும் ஐந்துமாகும். ஆகவே, என் அகத்தே இரவும் பகலும் 'எம் பிரான்' என்று கூறுவேன். என் வினையும், காமம் முதலிய ஆறு உட்பகையும் மாயா மலமும் அவன் நீக்கினான்.

உட்பகைகள் காரியம்; ஆணவமலம் காரணம். காரியம் நீங்கியதைக் கூறிக் காரணம் நீங்கியதைப் பெறவைத்தார். ஒன்பதும் ஐந்தும் - சுத்தாவத்தை ஐந்து; பர, சிவ அவத்தைகளுள் முதல் ஒன்பது.

உறுதி பயப்பது எது?

2512. கலம்-பல காலம் தொகுத்தன-நீவும்;
குலம்பல; வண்ணம் குறிப்பொடும் கூடும்;
பலம்பல பன்னிரு காலும் நினையும்;
நிலம்பல; ஆறினின் நீர்மையன் றானே.

[1]கலம்பல காலந் தொகுத்தன நீவுங்[2]
குலம்பல வண்ணங் குறிப்பொடுங் கூடும்
பலம்பல பன்னிரு [3]காலு நினையு
நிலம்பல [4]வாறினின் னீர்மையன் றானே. (5)

வேறு பாடம்: 1. நிலம்பல (ஓ) I நலம்பல (சங்) (விசு) (தி) (வ) (த) 2. நீளங் (அ இ ஈ ஒ ஓ) I. 3. கால (ஆ ஈ) III. 4. வாறின னீர்மையன் (சங்) (விசு) (தி)

கருத்து: பல காலம் சேர்த்த அணிகலங்கள் நீங்கும். எனவே அவை உறுதி பயப்பன வல்ல. குலத்தார் பலவகைக் கருத்துகளுடன் ஒன்று கூடுவர். (எனவே அந்தச் சுற்றமும் உறுதி பயக்காது) ஆனால் சிவபரம்பொருளைப் பன்னிரண்டு பிராசாத கலைகளிலும் நின்று தியானித்தலால் விளையும் பயன் பல. அவன் அமர்ந்தருளும் இடம் பலவாயினும், உடம்பினுள் ஆறு ஆதாரங்களின் மூலம் அவனை அணுகுதல் எளிதாகும்.

பிராசாத யோகத்தை இங்குக் கூறியது, அது சிவாவத்தைகளை எய்துவித்தல் பற்றி.

சத்தியின் ஒன்பது நிலை

2513. ஆதி பராபரம்; ஆகும் பராபரை,
சோதி, பரம், தொல்லுயிர், சொல்லும் தத்துவம்,
ஓதும் கலை, மாயை ஓர் இரண்டு, ஓர் முத்தி
நீதியாம் பெத்தம் ஒன்பான்; இடம் ஆதியே.

ஆதி பராபர மாகும் பராபரை
சோதி [1]பரந்தொல் லுயிர்சொல்லுந் தத்துவ
மோதுங் கலைமாயை யோரிரண் டோர்முத்தி
நீதியாம் [2]பெத்தமொன் பானிட மாதியே. (6)

வேறு பாடம்: 1. பரமுயிர் சொல்லுநற் (ஓ) IV. 2. பேதமொன் (சங்) (விசு) (தி) (வ) (த).

கருத்து: ஆதி முதல்வன் ஆகிய பராபரன், பெத்த நிலையுடைய உயிர்களின் பொருட்டு, பராபரையைத் தனியொரு கூறாகக் கொண்டு நிற்பான். அவள் அறிவு, அருள், உயிர், தத்துவங்கள், வேதம் முதலிய கலைகள், பஞ்சகலைகள், சுத்த மாயை, அசுத்த மாயை - முத்தி என்னும் ஒன்பது வகையாக உயிர்களுடன் ஒன்றாய் நிற்பாள்.

பள்ளத்திலிருந்து மீள வேண்டாவா?

2514. தேறாத சிந்தை தெளியத் தெளிவித்து
வேறா நரக சுவர்க்கமு மேதினி
யாறாப் பிறப்பு முயிர்க்கரு ளால்வைத்தான்
வேறாத் தெளியார் வினையுயிர் பெற்றதே. (7)

கருத்து: ஆணவமலம் விளைவித்த அறியாமையிருளில் மூழ்கிய உயிரை, தனு, கரண, புவன, போகங்களை அளித்துச் சிறிதே சிந்தை தெளியச் செய்து, அவரவர் வினைக்கு ஏற்ப நரகிலும், சுவர்க்கத்திலும், மண்ணுலகிலும் அளவு இல்லாப் பிறப்புகளை இறைவன் தனது அருளினால் வைத்தான். இதனைச் சிறப்பாக எண்ணி, பெத்த நிலை எது, முத்தி நிலை எது, அதனை எய்தும் நெறி யாது? எனத் தெளியாதார், மேலும் மேலும் வினையில் ஆழ்ந்து கிடப்பர்.

சித்தாந்த முத்தி

2515. ஒன்பான் அவத்தையுள் ஒன்பான் அபிமானி
நன்பால் பயிலும் நவ தத்துவம் ஆதி
ஒன்பானில் நிற்பது ஓர் முத்துரியத்து உற,
செம்பால் சிவமாதல் சித்தாந்த சித்தியே.

ஒன்பா னவத்தையு ளொன்பா னபிமானி
நன்பாற் பயிலு நவதத் துவமாதி
யொன்பானி னிற்பதோர் முத்துரி யத்துறச்
செம்பாற் சிவமாதல் சித்தாந்த சித்தியே. (8)

கருத்து: ஒன்பது அவத்தைகளை எய்தும் ஒன்பது வகை ஆன்மாக்கள், தாம் தாம் பயிலும் ஒன்பது தத்துவங்களைப் படிப்படிப்படியே ஒடுக்கி, சீவ துரியம், பர துரியம், சிவ துரியம் என்ற மூன்று நிலைகளை முறையே எய்தி, சிவதுரியாதீதத்தில் சொரூப சிவமாதல் சித்தாந்தத்தில் கூறப்படும் வீடுபேறாகும்.

முத்தி என்பது வீடு; பாச நீக்கம். சித்தி என்பது சிவப்பேறு.

140. சுத்த வசுத்தம்

வேதம் ஊமையானது

2516. நாசி நுனியினின் நால்-மூ விரல் இடை
ஈசன் இருப்பிடம் யாரும் அறிகிலர்,
பேசி யிருக்கும் பெருமறை, அம்மறை
கூசி யிருக்கும் குணம் அது ஆமே.

நாசி நுனியினி னான்மூ விரலிடை
யீச னிருப்பிட மியாரு மறிகிலர்
பேசி யிருக்கும் பெருமறை யம்மறை
கூசி யிருக்குங் குணமது வாமே[1]. (1)

வேறு பாடம்: 1. பாழே (ஆ) IV.

கருத்து: மூக்கு நுனியிலிருந்து, உட்பக்கமாகப் பன்னிரண்டு விரற்கடையில் உள்ள சகஸ்ராரத்தில் சதாசிவ மூர்த்தியை அனுபவம் பெறலாம் என்பதை மாந்தர் அறியார். அது வியப்பன்று. ஈசன் பெருமையைப் பலபடப் பேசும் வேதமே அது பற்றிச் சொல்ல வொண்ணாது கூசுகின்றது.

சிவன் பணி

2517. கருமங்கள் ஒன்று கருதும் கருமத்து
உரிமையும், கன்மமும், உன்னும் பிறவிக்கு
அருவினை ஆவதும் கண்டு, அகன்று, அன்பிற்
புரிவன கன்மக் கயத்துள் புகுமே.

கருமங்க [1]ளொன்று கருதுங் கருமத்
துரிமையுங் கன்மமு [2]முன்னும் பிறவிக்
கருவினை [3]யாவதுங் கண்டகன் றன்பிற்
புரிவன கன்மக் கயத்துட் புகுமே[4]. (2)

வேறு பாடம்: 1. ளொன்றுங் (அ) I ளொன்றுட் (விசு) 2. முண்ணும் (அ ஆ) I. 3. யாவது (சங்) 4. புகுதுமே (அ ஈ ஒ ஓ) II; புகுத்துமே (த)

கருத்து: யோகி செய்யும் கருமங்கள் வினைப்பயன் தாராமை கூறுகின்றார். செயல் செய்யும் போது, ஒரு பயனைக் கருதினால்,

அதனைச் செய்தான் என்னும் உரிமையும், வினைப் பயனும், வரக்கூடிய பிறவிக்கு என விளையும் வினையாவதும் உண்டு என்று தெளிந்து, பயன் கருதாமல், சிவன் பணி என அன்பினால் செய்யும் செயல்கள் வினையழிவின் பாற்படும்.

கயம் - க்ஷயம் என்னும் வடமொழிச் சொல்லின் திரிபு; நீக்குதல்.

செத்தேவிட்டது இவ்வுடம்பு

2518. மாயை மறைக்க மறைந்த மறைப்பொருள்
மாயை மறைய வெளிப்படு மப்பொருள்
மாயை மறைய மறையவல் லார்கட்குக்
காயமு மில்லை கருத்தில்லை தானே. (3)

கருத்து: மாயா காரியமாகிய தத்துவங்கள் மறைத்தலால், உயிர் அறிவிற்குப் புலப்படாது நிற்கும், வேதமுடியாம் பரசிவம் அத் தத்துவங்களினின்றும் விடுபட்டவர்க்கு, அனுபவத்திற்கு வரும். தத்துவ வாதனை முற்றும் நீங்குமாறு மெய்ஞ்ஞானத்துள் ஒடுங்க வல்லவர்கட்கு உடம்பு செத்தே போகும். தற்போதமும் இராதொழியும்.

யோக சாதனை

2519. மோழை அடைத்து, முழை திறந்து, உள்புக்குக்
கோழை அடைக்கின்றது அண்ணல் குறிப்பினில்
ஆழ அடைத்து, அங்கு அனலிற் புறஞ்செய்து
தாழ அடைப்பது தன் வலியாமே.

மோழை [1]யடைத்து [2]முழைதிறந் துள்புக்குக்
கோழை [3]யடைக்கின்ற [4]தண்ணல் குறிப்பினி
லாழ வடைத்தங் கனலிற் புறஞ்செய்து
தாழ வடைப்பது தன்வலி யாமே. (4)

வேறு பாடம்: 1. யடைந்தது (ஓ) I யடைந்து (சங்) 2. வண்ணல் (இ) I. 2. முறைதிறந் (சங்) 3. யடைகின்ற (சங்) தண்ணற் (சங்) 4. வண்ணல் (இ) I.

கருத்து: விந்து கீழ்நோக்கிப் பாய்ந்து வீணாவதைத் தடுத்து, சுழுமுனைவழியே மூலக்கனலை மேலேற்றி, (ஆக்ஞையை

அடைந்து ஒளிக்காட்சி கண்டு) அண்ணாக்கில் கபம் அடைக்கின்ற துவாரத்தை, இறையருளால் (கேசரி முத்திரையால்) திறந்து, அதன் வழியே மூச்சுக்காற்றை உச்சந் தலைக்குச் செலுத்தி, சூரிய கலையுடன் சேர்ந்த அக்கினிகலையைச் சந்திரனின் கலைகளாக மாற்றி, சிவானுபவத்தை நிலையாகப் பெறுவது யோகியின் சாதனை.

மோழை - கீழ்வழி. முழை - குகை. அனலில் புறம் - தீயில் குளிர்ச்சி; சந்திரகலை.

தூய்மையற்றது எது?

2520. ஆசூசம் ஆசூசம் என்பர் அறிவிலர்
ஆசூசம் ஆன இடம் ஆரும் அறிகிலார்
ஆசூசம் ஆன இடம் ஆரும் அறிந்த பின்
ஆசூசம் மானிடம் ஆசூசம் ஆமே.

ஆசூச மாசூச மென்ப ரறிவில
ராசூச [1]மானிட மாரு மறிகிலா
ராசூச [2]மானிட மாரு மறிந்தபி
னாசூச மானிட மாசூச மாமே. (5)

வேறு பாடம்: 1. மாமிட (சங்) 2. மாமிட (சங்)

கருத்து: எதற்கெடுத்தாலும், 'தூய்மையற்றது' எனச் சிலவற்றைக் கூறுவர் அறிவில்லாதவர். உண்மையில் தூய்மையில்லாமல் உள்ள இடத்தை ஒருவரும் அறியார். அவர்கள் அறியப் புகுந்தால், மனவுணர்வுகளே அதற்கு இடமாதலை அறியலாம்.

2, 3 ஆம் அடிகளில் 'ஆன விடம்' என்பதில்அகரம் தொக்கது. மன வுணர்வுடைமையின் மாந்தர் மானிடர் எனப்படுவர்.

அசுத்தமான மனவுணர்வுகளை உடைய மானுடப்பிறவியே அசுத்தம் என்க.

வேறுபட உணரார்

2521. ஆசூச மில்லை யருநிய மத்தருக்
காசூச மில்லை [1]யரனையர்ச் சிப்பவர்க்
காசூச மில்லையா மங்கி வளர்ப்போருக்
காசூச மில்லை யருமறை ஞானிக்கே. (6)

வேறு பாடம்: 1. யரனையறிபவர்க் (ஓ) IV.

கருத்து: அரிய நியமங்களை மேற்கொண்டு வாழ்பவர்க்கும், சிவபிரானை வழிபடுவோர்க்கும், புறத்திலும் அகத்திலும் சிவாக்கினியை வளர்ப்பவர்க்கும், மெய்ஞ்ஞானிக்கும் சுத்த, அசுத்த வேறுபாட்டு உணர்வு இராது.

சுட்டறிவும் அசுத்தமே

2522. வழிபட்டு நின்று வணங்கு மவர்க்குச்
சுழிபட்டு நின்றதோர் தூய்மை தொடங்குங்
குழிபட்டு நின்றவர் கூடார் குறிகள்
கழிபட் டவர்க்கன்றிக் காணவொண் ணாதே. (7)

கருத்து: உணர்வுத் தூய்மையே உண்மைத் தூய்மை. சிவபிரானை வழிபட்டு வணங்குபவர்க்கு அவ்வுணர்வுத் தூய்மை பிறக்கும். உலகியல் விருப்பம் என்னும் ஆசையில் தாழ்ந்தவர், உணர்வுத் தூய்மை எய்தார். சுட்டுணர்வு அற்றவர்க்கே இறைவனைக் காணவியலும்.

குறிகள் - புலன்களாலும், மனத்தாலும் உணரும் அடையாளங்கள். ‘குறிகள் கழிபட்டார்’ எனக் கூட்டுக. இதனால் சொல்லியது, சொரூப சிவத்தைத் தரிசித்தவரே மிக்க தூய்மை யுடையார் என்பதாகும்.

தூய்மை யாகும் உணர்வு

2523. தூய்மணி, தூய் அனல் தூய ஒளிவிடும்
தூய்மணி, தூய் அனல்-தூர் அறிவார் இல்லை
தூய்மணி, தூய் அனல் தூர் அறிவார்கட்குத்
தூய்மணி, தூய் அனல் தூயவும் ஆமே.

தூய்மணி தூயன றூய வொளிவிடுந்
தூய்மணி தூயன றூரறி வாரில்லை
தூய்மணி தூயன றூரறி வார்கட்குத்
தூய்மணி தூயன றூயவு மாமே. (8)

கருத்து: பிடரியில் ஒரு கண் உண்டு. அதுவே ஆக்ஞைச் சக்கரத்திற்கு ஆதாரம். சுழுமுனை வழியாக மேலேறும் மூலக் கனலால், இக்கண் ஒளிபெறும். (அதாவது ஆக்ஞை வரை உணர்வு

பரவி, விழிப்பு நிலையில் அங்கு உள்ள உயிருணர்வு வலிமை பெறும்.) உயிர் உணர்வு தத்துவங்களினின்றும் விடுபடும். அந்நிலையில் அது 'தூய உணர்வு' ஆகும். மூலக்கனலுடன் இணைந்துள்ள குண்டலிசத்தி, கழுத்திற்கு மேல், அருட் சத்தியாக மாறுவதால் 'தூய அனல்' ஆகும். இந்த அடிப்படையை அறிபவர் இல்லை. இவற்றை அறியும் யோகியர்க்கு, அப்பிடரிக் கண்ணின் ஒளியும், மூலக்கனலின் ஒளியும் ஆக்ஞையில், சூரியகலை, சந்திர கலை - இவற்றுடன் சேர்ந்து, மேலும் தூய்மையும் ஒளியும் பெறும்.

உயிருணர்வு தூய்மை யாதலைக் கூறினார்.

ஒளிபெற்ற உணர்வு

2524. தூயது [1]வாளா [2]வைத்தது தூய்நெறி[3]
தூயது [4]வாளாய நாதன் றிருநாமந்
தூயது [5]வாளாய வட்டமா சித்தியுந்
தூயது [6]வாளாய தூயடிச் சொல்லே (9)

வேறு பாடம்: 1. வாளால் (அ இ ஈ ஒ) I. 2. வைத்தவர் (ஓ) II. 3, தூநெறி (விசு) (தி) (வ) (த) 4. வாளா (2, 3, 4 ஆம் அடிகளில்) (விசு) (தி) (வ) (த) 5. வாளர் (சங்) 6. வாளாத் (சங்)

கருத்து: ஆகமம் கூறும் சிவயோக நெறி, உயிருணர்வைத் தூய வொளியாக்குகின்றது. அஃது அங்ஙனம் தூய வொளியாகத் துணைநிற்பது, அருளொளி பரப்புவதாகிய திருவைந்தெழுத்து. அருளொளியே அட்டமா சித்திகளை அளிப்பது. எம்பிரானின் திருவடியாகிய திருவருளே என் உணர்வினை நிறைத்து நிற்கின்றது.

திருவடியே திருவருளாயிருந்தது. வாள் - ஒளி. சொல், பொருளைக் குறித்தது; ஆகுபெயர். திருவடி என்னும் சொல், அது நல்கும் அனுபவத்தைக் குறித்தது.

அருளைப் போற்று, அல்லல் இல்லை

2525. பொருள்-அதுவா நின்ற புண்ணியன், எந்தை
அருள்-அது போற்றும் அடியவர் அன்றிச்
சுருள்-அதுவா நின்ற துன்பச் சுழியில்
மருளவர் சிந்தை மயங்கு கின்றாரே.

பொருளது வாநின்ற புண்ணிய னெந்தை
யருளது போற்று மடியவ ரன்றிச்
சுருளது வாநின்ற துன்பச் சுழியின்
[1]மருளவர் சிந்தை [2]மயங்குகின் றாரே. (10)

வேறு பாடம்: 1. மருளது வாச்சிந்தை (ஓ) II. 2. மாள்குகின் (துடி)

கருத்து: மெய்ப்பொருள் தானேயாக உள்ள புண்ணியனும், எந்தையுமாகிய சிவபிரானது திருவருளைப் போற்றும் அன்பரை அன்றிப் பிறரெல்லாம், அலைபோல் சுருண்டு சுருண்டு வரும் பிறப்பு - இறப்புகள் ஆகிய துன்பச் சுழியில் அகப்பட்டு, மாயை தீராதவராய், ஆணவமலத்தால் மயங்குதலும் ஒழியாதவராய் இருக்கின்றனர்.

மருள் - மாயை செய்யும் மயக்கம். மயக்கம், ஒன்றைப் பிறிதொன்றாகக் கருதல்; சிந்தை மயங்குதல்; ஆணவமறைப்பினால் உண்டான மயக்கம்; அறியாமை. துன்பம் - வினைத்துன்பம். ஆக, மும்மலமும் கூறினார்.

மீள வழியுண்டா?

2526. வினையா [1]மசத்து விளைவ துணரார்
வினைஞானந் தன்னில் வீடலுந் தேரார்
வினைவிட வீடென்னும் வேதமு மோதார்
வினையாளர் மிக்க [2]விளைவறி யாரே. (11)

வேறு பாடம்: 1. லசத்து (த) 2. வினையறி (ஓ) I.

கருத்து: வினை அசத்தே (அறிவற்றது) ஆயினும், அதன் பயனாக நன்மை, தீமைகளும், உலகியல் வாழ்வில் மேலும் மேலும் ஈடுபட நேர்தலும், விபரீத உணர்வும் உண்டாகி, உயிரைப் பிறவிச் சுழியில் சுழலச் செய்கின்றன என்பதைப் பலரும் அறியார். மெய்யுணர்வு பெறின், வினை நீங்கும் என்னும் நன்மொழியைத் தெளியார். வினை நீங்கினாலே வீடுபேறு கிடைக்கும் என்று வேத நூல் கூறுவதையும் அறியார். இங்ஙனம் வினையின் விளைவை அறியாமையால், மேலும் மேலும் வினைப் பாரம் சுமக்கும் வினையாளராயினர்.

141. மோட்ச நிந்தை

சோற்றுக்கு அலைவர்

2527. ‘பரகதி உண்டு’ என, ‘இல்லை’ என்போர்கள்
நரகு-அது செல்வது ஞாலம் அறியும்;
இரகதி செய்திடுவார் கடை தோறும்
துரகதி உண்ணத் தொடங்குவர் தாமே.

பரகதி யுண்டெனை வில்லையென் போர்க
[1]ணரகது செல்வது ஞால மறியு
மிரகதி செய்திடு வார்கடை தோறுந்
துரகதி யுண்ணத் [2]தொடங்குவர் தாமே. (1)

வேறு பாடம்: 1. ணரகதி (இ ஈ) I. 2. துடங்குவ (சங்)

கருத்து: ஆணைநூல்களும் ஆன்றோரும் ‘மாந்தர்க்கு’ மேலான வீடுபேறு என்னும் கதியுண்டு, அதனை அடைய முயல்’ எனக் கூறியும், அத்தகைய ஒன்று இல்லை என மறுப்போர், (தாம் தாம் வேண்டியவாறு தீவினைகளைச் செய்து) அதன் விளைவாக, நரகிற்குச் சென்றதை உயர்ந்தோர் அறிவர். அத்தீவினையாளர் இம்மையிலேயே பிறர்தம் வாயில்தோறும் இரந்து நிற்பர். உண்ணற்குக் குதிரை போல ஓடுவர்.

இரகதி, துரகதி என்பவை திரிபுகள். இரக்கும் என்பது கடைக் குறைந்தது. துரகம் - குதிரை. வாயில் தோறும் இரந்தும் வயிறு நிரம்பாமையினால், ‘சோறு’ எனக்கேட்டதும் குதிரை போல ஓடுவர் என்றார். கதியுண்ணல் - கதியிற் படுதல். கட்டுண்ணல், அடியுண்ணல் என்றாற் போன்றது. சோறு பெறுவரோ, மாட்டாரோ, இவர் ஓடுதல் நிற்பதில்லை என்பது பொருள்.

குறிப்பு: இதனை யடுத்துச் சுவடிகளிலும் பதிப்புகளிலும் உள்ள “கூடகில்லார்” என்னும் பாடல் “கேடு கண்டிரங்கல்” இயலில் வந்தது. (பா. எண். 2069)

“நான் வேறா?”

2528. புறப்பட்டுப் போகும், புகுதும் என் நெஞ்சில்
திறப்பட்ட சிந்தையைத் தெய்வம் என்று எண்ணி,
அறப்பட்ட அமரர் பதி! என்று அழைக்கின்
இறப்பற்றினேன், இங்கு, இது என்? என்கின்றானே.

புறப்பட்டுப் போகும் [1]புகுதுமென் னெஞ்சிற்
றிறப்பட்ட சிந்தையைத் தெய்வமென் றெண்ணி
[2]யறப்பட் டமரர் பதியென் றழைக்கி[3]
னிறப்பற்றி னேனிங் கிதென்னென்கின் றானே. (2)

வேறு பாடம்: 1. புகுதுமந் (ஓ) I; புகுந்து மென் (இ ஈ) I. 2. வறப் பட்டமற்றப் (அ) I; யறப்பட்ட மற்றப் (ஈ ஒ ஓ) II. 3. றழைத்தே (விசு).

கருத்து: தெய்வம் என்ற நினைவு மறைவதும் தோன்றுவதுமாக இருந்த என் மனநிலை மாறி, பரசிவம் நிலையாகக் கோயில் கொண்ட என் சித்தத்தைச் சிவம் என்றே கொண்டு, வேறு நினைவுகள் இன்றி, நன்றாகப் பற்றிக்கொண்டேன். அவனை நான் "அறநெறியில் பொருந்திய தேவர்கட்குத் தலைவா" என அழைத்தால், "இது என்ன" என்று உசாவுகின்றான்.

திரம், திறம் என்று ஆகியது, எதுகை நோக்கி; நிலைப்பாடு.

உடனிருந்து உய்விப்பான்

2529. திடர்-இடை நில்லாத நீர்போல, ஆங்கே
உடலிடை நில்லா உறுபொருள் காட்டிக்
கடலிடை நில்லாக் கலம் சேருமாபோல்
அடல்எரி வண்ணனும் அங்கு நின்றானே.

திடரிடை நில்லாத நீர்போல வாங்கே
யுடலிடை நில்லா வுறுபொருள் காட்டிக்[1]
கடலிடை நில்லாக் கலஞ்சேரு மாபோ
[2]லடலெரி வண்ணனு மங்குநின் றானே. (3)

வேறு பாடம்: 1. கூட்டிக் (ஓ) I. 2. லுடலெரி (ஓ) I.

கருத்து: மேட்டு நிலத்தில் நில்லாத தண்ணீரைப் போல, உடலினுள் நிற்கும் உயிர் நிலைத்து நில்லாது. மரக்கலம் கடலின் நடுவே நில்லாது; கரையை அடையும். அது போல, உயிர் பிறவியில் தங்காது; வீடுபேற்றை அடையும். கடலின் நடுவே, மாந்தருடன், மரக்கலமும் நிற்பதுபோல், உயிருக்கு நன்னெறி அறிவித்துக் கொண்டு, சிவமும் அதனுடனே இருப்பான்.

அடல் - வெற்றி. உயிரை வீடுபேற்றிற் செலுத்துவான் என்பது இவ்வடைமொழியின் குறிப்பு. "எரிவண்ணன் உறு பொருள் காட்டி, நின்றான்" எனக் கூட்டுக.

தானே தனக்குத் தடை

2530. தாமரை நூல்போல் தடுப்பர்; பரத்தொடும்
போம்வழி வேண்டிப் புறமே உழிதர்வர்
காண்வழி காட்டக்கண் காணாக் கலதிகள்
தீநெறி செல்வான் திரிகின்ற வாறே.

தாமரை நூல்போற் றடுப்பர் பரத்தொடும்
போம்வழி வேண்டிப் புறமே யுழிதர்வர்
காண்வழி காட்டக்கண் காணாக் கலதிக
டீநெறி செல்வான் றிரிகின்ற வாறே. **(4)**

கருத்து: சில மூடர் முத்தியை அடைய வேண்டும் என்று விரும்பினாலும், அதற்குரிய நெறியிற் செல்லாமல், மாறான வழியிலேயே செல்வர். சான்றோர் உரிய வழியைக் காட்டினாலும் காணார். அவர்களை நன்னெறி செல்ல ஒட்டாது தடுப்பது அவர்கள் மனமே. இது எதைப்போல? தாமரை மலரைக் கொய்யப் பொய்கையில் இறங்குவோரைத் தாமரையின் கொடியே தடுப்பது போல.

தடுப்பர் - தடுக்கப்படுவர். நூல் - நூலை உடைய கொடி; ஆகுபெயர். பரத்தொடு - பரத்திற்கு; முத்தியடைதற்கு. உருபு மயக்கம்.

தண்ணீரினுள் இருந்தும் தாகமா?

2531. மூடுத லின்றி முடியு மனிதர்கள்
கூடுவர் நந்தி யவனைக் குறித்துடன்
காடு மலையுங் கழனி கடந்தொறு[1]
மூடு [2]முருவனை யுன்னுகி லீரே. **(5)**

வேறு பாடம்: 1. தடந்தொறு (ஈ) I; கடல்தொறு (த) 2. முருவினை (இ ஈ ஓ) III.

கருத்து: ஆணவ மலம் தம் அறிவை மறைக்காது ஒழிய, தெளிவு பெற்ற மாந்தர், சிவபரம்பொருளைத் தியானித்து, விரைந்து அவனுடன் கலப்பர். நீவிரோ, காடு, மலை, கழனி, பாலைநிலம் இவற்றிலெல்லாம் பரவி நிற்கும் வியாபகனை எண்ணுவதும் இல்லையே!

யோகி சாகமாட்டான்

2532. ஆவது தெற்கும் வடக்கு மமரர்கள்[1]
போவர் குடக்குங் குணக்குங் குறிவழி
நாவினின் மந்திர [2]மொன்று நடுவங்கி
வேவது [3]செய்து விளங்கிடு நீரே[4]. (6)

வேறு பாடம்: 1. மனிதர்கள் (அ) IV. 2. மென்று (அ) I. 3. செய்ய (ஆ) IV. 4. வீரே (விசு)

கருத்து: இறப்பின் பின் மாந்தர் செல்வது தெற்கே உள்ள நரகு அல்லது வடக்கே உள்ள சுவர்க்கம் என்பர். ஆனால், இறவாத நிலையை எய்துவோர், முதலில் மேற்கிலும், பிறகு கிழக்கிலும் உரிய வழியாகக் குரு காட்டிய வழியில் செல்வர். மூலாதாரத்தில் ஒரு மந்திரத்தைத் தியானத்தில் வைத்து, மூலக்கனலை நடுநாடியாகிய சுழுமுனையில் செலுத்தி மரணமில்லா நிலையில் விளங்குதல் அவர்தம் இயல்பாகும்.

இதன் விளக்கம் முன்னைப் பாடல்களில் கூறப்பட்டதே. முத்தியை இங்கு 'மரணமில்லாமை' என விளக்கினர்.

வினை தாங்கி

2533. மயக்குற நோக்கினு மாதவஞ் செய்வார்
தமக்குறப் பேசின தாரணை கொள்ளார்
சினக்குறப் பேசின தீவினை யாளர்
தமக்குற வல்வினை தாங்கிநின் றாரே. (7)

கருத்து: தீவினையாளர் தம்மைப் பெரிய தவச் சான்றோர் உள்ளம் கலந்து நோக்கி, தமக்குப் பொருந்துமாறு கூறிய நன்னெறியை நெஞ்சில் நிறுத்தார். மாறாக, அவர்கள் சினமுறும்படி பேசுவர். அவர்கள் மிக்க வினைப்பயன்களைச் சுமந்து திரிவோரே.

மயக்குற - உள்ளம் கலந்து. சினமுற என்பது எதுகை நோக்கித் திரிந்தது. உற - மிகுதியாக.

142. வாய்மை

அருட் கனல்

2534. அற்றது உரைக்கில், அருள் - உபதேசங்கள்
குற்றம் அறுத்த பொன் போலும், கனல் இடை
அற்று அற வைத்து, இறை, மாற்று அற மாற்றிடின்
செற்றம் அறுத்த செழுஞ்சுடர் ஆகுமே.

அற்ற துரைக்கி [1]லருளுப தேசங்கள்
குற்ற மறுத்தபொன் [2]போலுங் கனலிடை
[3]யற்றற வைத்திறை [4]மாற்றற மாற்றிடிற்[5]
செற்ற மறுத்த செழுஞ்சுட ராகுமே. (1)

வேறு பாடம்: 1. வதுவுப (ஆ இ) I; லறத்துப (ஈ ஒ) II. 2. போலக் (த) 3. வற்றற (இ ஈ) I; யுற்றற (ஒ) I. 4. மற்றற (அ இ) I. 5. யாற்றிடிற் (விசு) வாற்றிடிற் (சைவ) (தி) (வ) (த)

கருத்து: நூல்களில் முடிந்த முடிவைக் கூறப்புகின்: இறைவன் (குருவாக எழுந்தருளி) செய்தருளும் அருளுபதேசத்தால், பொன்னைத் தீயில் காய்ச்சிக் குற்றமறச் செய்தல் போல, ஆன்மாவிலிருந்து ஆணவ மலம் வேருடன் நீங்கச் செய்து, இயல்பான ஆன்மா போதத்தைச் சிவபோதமாக மாற்றினால், அவ்வான்மா மேகமறைப்பினின்றும் நீங்கிய ஞாயிறு போல ஒளி வீசும்.

செற்றம் - பகை. ஒளிக்குப் பகை மறைப்பு.

2535. எல்லாம் அறியும் அறிவு தனைவிட்டு
எல்லாம் அறிந்தும் இலாபம் அங்கு இல்லை;
எல்லாம் அறிந்த அறிவினை 'நான்' என்னில்,
எல்லாம் அறிந்த இறை எனலாமே (ட)

தவக்கனி

2536. தலைநின்ற தாழ்வரை மீது தவஞ்செய்து
முலைநின்ற மாதறி மூர்த்தியை யானும்
புலைநின்ற பொல்லாப் பிறவி கடந்து
கலைநின்ற கள்வனைக் கண்டுகொண் டேனே. (2)

கருத்து: மேம்பட்ட கயிலைமலைச் சாரலில் தவம் இயற்றி, உமையம்மை பெற்றடைந்த தலைவனை, கலைகளில் ஒளித்து நின்ற கள்வனை, யானும் தவம் செய்து கண்டு, இழிவு நிரம்பிய பிறப்பைக் கடந்தேன்.

தோற்றம், நிலை, ஒழுக்கம்

2537. தானே உலகில் தலைவன் எனத்தகும்,
தானே உலகுக்கு ஓர் தத்துவமாய் நிற்கும்,
தானே மழைபொழி மாமறை கூர்ந்திடும்,
ஊனே உருகிய உள்ளம் ஒன்று ஆமே.

தானே யுலகிற் றலைவ னெனத்தகுந்
தானே யுலகுக்கோர் தத்துவ மாய்நிற்குந்
தானே மழைபொழி மாமறை கூர்ந்திடு
மூனே யுருகிய வுள்ளமொன் றாமே. (3)

கருத்து: உலகில் எத்துணைத் தேவர் இருப்பினும் சிவனே முதல்வன். அவனே மெய்ப் பொருள். வேதவழி யாகத்தால் மழை பொழிவிக்கும் கருணை அவனுடையதே. ஊன் உருகிட, உருகும் உள்ளத்துடன் அவன் 'உடனாகி' நின்று சிவானந்தம் நல்குவான்.

அருளால் செய்வது யாது?

2538. அருள்பெற்ற காரண மென்கொ லமரி
லிருளற்ற சிந்தை யிறைவனை நாடி
மருளுற்ற சிந்தையை மாற்றி யருமைப்
பொருளுற்ற சேவடி போற்றுவர் தாமே. (4)

கருத்து: அடியவர் இறைவனது திருவருளைப் பெற்ற நெறி யாது? அருளறிவு கொண்டு ஆணவ இருளை விலக்கி, பரசிவத்தை உண்முகமாக ஆய்ந்து, மாயையால் மயங்கிய மனத்தைத் தெளி வித்து, அரிய பொருளாகத் தாம் உணரும் திருவடியைப் போற்றியமையாற் பெற்றனர்.

உண்மையாளர்க்குக் கிடைப்பான்

2539. மெய்கலந் தாரொடு மெய்கலந் தான்றன்னைப்
பொய்கலந் தார்முன் புகுதா வொருவனை
யுய்கலந் தூழித் தலைவனு மாய்நிற்கு
மெய்கலந் தின்பம் [1]விளைத்திடு மெய்யர்க்கே (5)

வேறு பாடம்: 1. விளைந்திடு (சங்)

கருத்து: மனம், மொழி, மெய்களால் வாய்மையையே சார்ந்தவரோடு, உண்மையிற் கலந்து நிற்பான். பொய்ம்மையை மேற் கொண்டார்க்குச் சிறிதும் புலப்படான். உண்மை அன்பர் உய்யுமாறு, அவருடன் கலந்து, ஊழிகள் தோறும் ஆனந்தம் அளிப்பான்.

தலைவனாய் நின்று, இன்பம் விளைத்திடும் எனக் கூட்டுக. உய்தல் என்னும் தொழிற்பெயர் முதனிலையளவாக நின்றது.

அடைந்தால் அறியலாம்

2540. மெய்கலந் தாரொடு [1]மெய்கலந் தான்மிகப்
பொய்கலந் தாருட் புகுதாப் புனிதனை
யுய்கலந் தாவி யெழும்பொழு தண்ணலைக்
கைகலந் தாற்கே கருத்துற லாமே. (6)

வேறு பாடம்: 1. மெய்கலந் (ஓ) கைகலந் (விசு) (தி) (த) (வ).

கருத்து: வாழ்வில் யார் ஒருவர் வாய்மையைக் கடைப் பிடிக்கின்றாரோ, அவருக்கு மெய்யுணர்வை நல்குவான். பொய்மையைச் சார்ந்தவரின் நெஞ்சில் புகான். எழுச்சியுற்ற உயிருணர்வால் அவனைத் தலைப்படுபவர்க்கே அவன் புலப்படுவான்.

கைகலத்தில் - கூடுதல்.

எது வேண்டும்?

2541. எய்திய காலத்து இருபொழுதும் சிவன்
மெய் செயின் மேலை விதி-அதுவா நிற்கும்
பொய்யும் புலனும் புகல் என்று நீந்திடில்
ஐயனும் அவ்வழி ஆகி நின்றானே.

எய்திய காலத் திருபொழு துஞ்சிவன்
மெய்செயின் மேலை விதியது வாநிற்கும்
பொய்யும் புலனும் [1]புகலென்று நீந்திடி[2]
லையனு மவ்வழி யாகிநின் றானே. (7)

வேறு பாடம்: 1. புகலொன்று (ஈ) I. 2. நீத்திடி (விசு) (தி) (வ), நீக்கிடி (த).

கருத்து: உடம்பில் திறன் உள்ள காலத்திலேயே, பகலும் இரவும் சிவபரம்பொருளை, அதன் சொரூபநிலையில், நிராதார யோகத்தில் தரிசித்தால், அதன்பின் உயிரின் விதி, அச்சிவனுடன் கலந்து, 'அதுவாக' நிற்றலாக இருக்கும். அதுவன்றி, பொய்ப்பொருள் களாகிய ஏனையவையும், புலன் அனுபவமுமே அடையத் தகுவன என்று கருதி, அவற்றிலேயே திளைத்தால், இறைவனும், அப்பொருளின்பம், புலனின்பங்களாகவே நின்றுவிடுவான்.

அவற்றால் சேரும் வினைப் பயன்களை அனுபவிக்கவே வேண்டும். ஆனால், சிவனைக் கலந்தால் பிறவியறுக்கலாம்; சிவமாகலாம்.

யோகப் புரவி

2542. எய்துவது, எய்தாது ஒழிவது - இது அருள்,
உய்ய அருள் செய்தான் உத்தமன் சீர்நந்தி
பொய் செய் புலனெறி ஒன்பதும் தாள்கொளின்
மெய்யன் புரவியை மேற்கொள்ளலாமே.

எய்துவ தெய்தா தொழிவ திதுவரு
ளுய்ய வருள்செய்தா னுத்தமன் சீர்நந்தி
பொய்செய் புலனெறி யொன்பதுந் தாட்கொளின்
[1]மெய்யன் புரவியை மேற்கொள்ள லாமே. (8)

வேறு பாடம்: 1. மெய்யென் (ஓ) I.

கருத்து: நிராதார யோகம் கைகூடுவதும், தவிர்வதும் இறைவன் திருவருள். என் குருநாதன் நந்தியம்பெருமான் மாந்தர் உய்யும் பொருட்டுச் சிவயோக நெறியை உபதேசம் செய்துள்ளான். (அதைக் கடைப்பிடிப்பது நம் கடமை) புலன்களின் வழியே நம்மைச் செலுத்தும் ஐம்பொறிகளும், நான்கு அகக் கரணங்களுமாகிய ஒன்பது கருவிகளையும், இறைவனின் திருவடியைப் பற்றி நிற்கும் உயிருணர்வோடு ஒன்றி நிற்கச் செய்தால், சொரூப சிவத்தைத்

தரிசிப்பதற்குரிய நிராதார யோகம் என்ற குதிரையின் மேலேறிப் பரமாகாய வீதியில் செலுத்தலாம்.

குதிரையையும், யோகத்தையும் "யோகப்புரவி" எனச் சிறப்பித்தல் உண்டு. வாசியோகம் என்பதில் வாசி என்பது குதிரை. மூச்சுக் காற்றையும் குதிரை என்பர். "ஆரியன் நல்லன் குதிரை இரண்டுள" என, ஆசிரியர் முன்னும் கூறினார். (பாடல் எண் : 461)

2543. கைகலந் தானைக் கருத்தினுள் நந்தியை
மெய்கலந் தான்றன்னை வேத முதல்வனைப்
பொய்கலந் தார்முன் புகுதாப் புனிதனைப்
பொய்யொழிந் தார்க்கே புகலிட மாமே. (அ)

உருவமல்லன், உணர்வு

2544. மெய்த்தாள் அகம்படி மேவிய நந்தியைக்
கைத்தாள் கொண்டு ஆரும் திறந்து அறிவார் இல்லை
பொய்த்தாள் இடும்பையைப் போய் அற நீவிட்டு, அங்கு
ஐத்தாள் திறக்கில் அரும்பேறது ஆமே.

[1]மெய்த்தா ளகம்படி மேவிய நந்தியைக்
கைத்தாள்கொண் டாருந் திறந்தறி வாரில்லை
பொய்த்தா ளிடும்பையைப் [2]போயற நீவிட்டங்
[3]கைத்தா டிறக்கி லரும்பேற தாமே. (9)

வேறு பாடம்: 1. மெய்த்தாடரும்படி (ஆ) II. 2. பொய்யற (அ ஆ இ ஈ ஓ) II. 3. கத்தா (ஆ இ ஈ ஓ) II. 2 - ஆம் அடி முதற்சீர் "கைத்தாழ்" என வருவது பொருத்தமாயினும், சுவடிகளில் உள்ளவாறு பதிப்பிக்கப் பட்டது.

கருத்து: தனது சொரூபத் திருமேனி ஆன்மாவின் உயிருணர்வில் புலப்படுமாறு திகழும் பரசிவத்தை, ஏதோ, தாழக் கோலை நீக்கிக் கதவைத் திறந்து, ஒருவரைக் காண்பது போலக் காண வியலாது ஆதலின் பொய்யான முயற்சிகளால் துன்புறாமல், யோக நெறியில் புகுந்து, உடம்பில் கபம் அடைக்கும் இடமாகிய அண்ணாக்கைத் திறந்தால், பெறற்கரிய பேறாக, இறைக்காட்சி கிடைக்கும்.

இதன் விரிவு "கேசரி யோகத்திற்' கூறினார்.

உறுதியாகக் காணலாம்

2545. உய்யும் வகையால், உணர்வினால் ஏத்துமின்
மெய்யன் அரன் நெறி மேல் உண்டு திண் என,
பொய் ஒன்றும் இன்றிப் புறம் பொலிவார் நடு
ஐயனும் ஆங்கே அமர்ந்து நின்றானே.

உய்யும் வகையா லுணர்வினா லேத்துமின்
மெய்ய னரனெறி மேலுண்டு திண்ணெனப்
பொய்யொன்று மின்றிப் புறம்பொலி வார்நடு
வையனு மாங்கே யமர்ந்துநின் றானே. (10)

கருத்து: நீவிர் உய்யும் வண்ணம், பரசிவத்தை உயிருணர்வில் உணர்ந்து துதிக்க. அதன்மேல், என்றும் இருப்பவனாகிய பரசிவத்தினை அணுகும் நெறி புலப்படும். இஃது உறுதி. பொய்யான தத்துவச் சார்பு யாதுமின்றி - அதாவது உடலைக் கடந்த நிராதாரத்தில் - நிற்பாரது சிதாகாய வெளியில், பரசிவம் விளங்குவான்.

பொய் - உடலும் உலகும் ஆகிய இருபத்து நான்கு தத்துவங்களும், வித்தியா தத்துவம் ஏழும், சிவ தத்துவம் ஐந்தும். மெய்யன் - சொரூப சிவம். புறம் - தலையுச்சிக்கு மேலே 12 அங்குல வெளி. இதுவே சிதாகாசம். இதனையே 'நடு' என்றார்.

மனத்தினால் உணர முடியாது

2546. வம்பு பழுத்த [1]மலர்ப்பழ மொன்றுண்டு
தம்பாற் பறவை புகுந்துணத் தானொட்டா
தம்புகொண் டெய்திட் டகலத் துரத்திடிற்
செம்பொற் சிவகதி சென்றெய்த லாமே. (11)

வேறு பாடம்: 1. பலாப் பழ (இ) 2. டகலந்துரந்திடில் (அ இ ஈ) I.

கருத்து: திருவருளாகிய மணம் நிறைந்த சிவப்பழம், சகஸ்ராரத்தில் தாமரை மலரில் உள்ளது. கரண அறிவால் அதனை உணர இயலாது. உயிருணர்வு என்னும் அம்பினால், தத்துவச் சார்புகள் என்னும் அப்பறவைகளை ஓட்டினால் சிவகதியை அடையலாம்.

வம்பு - மணம். முதல் மூன்றடிகள் உருவகம்.

துணை செய்வான்

2547. மயக்கிய ஐம்புலப் பாசம் அறுத்து,
துயக்கு அறுத்தானைத் தொடர்மின்; தொடர்ந்தால்
தியக்கம் செய்யாதே, சிவன் எம்பெருமான்
உயப் போகவே மனம் ஒன்றுவித்தானே.

மயக்கிய வைம்புலப் பாச மறுத்துத்
துயக்கறுத் தானைத் தொடர்மின் றொடர்ந்தாற்
றியக்கஞ்செய் யாதே சிவனெம் பெருமா
[1]னுயப்போக வேமன மொன்றுவித் தானே. (12)

வேறு பாடம்: 1. னுயப்போ மென்மன (ஆ ஓ) I; னுயப்போ வென மன (இ ஈ ஓ) I; னுயப்போகெனமன (த)

கருத்து: புலன்கள் அறிவை மயக்குதற்குக் காரணமாக, அதனை மறைத்துக் கொண்டிருக்கும் ஆணவமலத்தை நீக்கி, அதனால் ஏற்பட்டிருந்த கலக்கத்தை (அறிவுக் குழப்பத்தை) நீக்குபவன் சிவபெருமான். அவனையே சார்க. சாரின், நாம் சோர்வு அடையாத வாறு, நமது அறிவில் நின்று, நாம் உய்யுமாறு நம் மனத்தைத் தியானத்தில் ஒன்றச் செய்வான்.

இவன் செயலா, சிவன் செயலா?

2548. மனமது தானே நினைய வல்லாருக்கு
இனம் எனக் கூறும் இருங்காயம் மேவல்;
தனிவினில் நாதன்பால் தக்கன செய்யல்
புனிதன் செயலாகும் போத; புவிக்கே.

மனமது தானே நினையவல் லாருக்
கினமெனக் கூறு மிருங்காய மேவல்
[1]தனிவினி னாதன்பாற் றக்கன செய்யல்[2]
புனிதன் செயலாகும் போதப் புவிக்கே. (13)

வேறு பாடம்: 1. தணிவினி (சங்) 2. செய்யில் (இ ஓ) II.

கருத்து: ஒருவனுக்கு மனம் தன்னியல்பாய் இறைவனை நினைக்கக் கூடுமாயின், அந்நிலையில், அவனது ஆன்ம பக்குவத்திற்கு இனமாகச் சுத்த வுடம்பு வந்து வாய்க்கும். சீவபோதம் தணிந்து,

சிவபோதம் மேலோங்கிடும். அந்நிலையில் 'சிவன்செயல்' என அவன் செய்யும் செயல் எல்லாம், சிவன் செய்வனவாகவே விளையும்.

போத - மிகுதியும், புவிக்கே - உலகினிடத்து. தணிவு என்பது எதுகை நோக்கித் திரிந்தது.

செய்பவனது செயலாய் வினைப் பயன் ஈட்டாது என்றார்.

143. ஞானி செயல்

வந்தது நுகர்வர், வாராமற் பார்ப்பர்

2549. முன்னை வினைவரின் முன் உண்டே நீங்குவர்,
பின்னை வினைக்கண்ணால் பேர்ந்து அறப் பார்ப்பர்கள்,
தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்
நன்மை இல் ஐம்புலன் நாடலினாலே.

முன்னை வினைவரின் முன்னுண்டே நீங்குவர்
பின்னை [1]வினைக்கண்ணாற் பேர்ந்தறப் பார்ப்பர்க
டன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிக
ணன்மையி லைம்புல னாடலி னாலே. (1)

வேறு பாடம்: 1. வினைக்கணார் (விசு) (தி) (வ) (த).

கருத்து: இறைவனை உணர்ந்த மெய்யுணர்வாளர், சிறிதும் நன்மை யற்ற ஐம்புலன்களை ஆராய்ந்து விலக்கும் காரணத்தால், பிராரத்த வினை தாக்கும்பொழுது, விருப்பு, வெறுப்பின்றி அனுபவித்துக் கழிப்பர். அவ்வாறு அனுபவித்தலில், ஆகாமிய வினை தோன்றாதவாறு செய்வர்.

வினையால் வினை விளையாதவாறு கருத்தாக இருப்பர் என்க. வினைக்கண் ஆல்: ஆல் - அசை.

வினை முழுதும் அழியும்

2550. தன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகண்
முன்னை வினையின் முடிச்சை யவிழ்ப்பர்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவனரு ளாலே. (2)

கருத்து: இறைவனை உணர்ந்த மெய்யுணர்வாளர் பழவினையாகிய சஞ்சிதத்தை நீக்குவித்துக் கொள்வர். ஆகாமிய வினையின் முளையைக் கசக்கி வீசுவர். இவையெல்லாம் அவர் செய்வது, தாம் நிராதார வெளியிற் கண்ட பரசிவத்தின் திருவருளாலாகும்.

தன்னை மறந்தால் வாசனையும் தாக்காது

2551. மனவாக்குக் காயத்தால் வல்வினை மூளும்
மனவாக்கு நேர்நிற்கில் வல்வினை மன்னா
மனவாக்குக் கெட்டவர் வாதனை தன்னாற்
றனைமாற்றி யாற்றத் தகுஞானி தானே. (3)

கருத்து: எண்ணம், சொல், செயல்களால் வினை தோன்றும். ஆனால், அவை மெய்யுணர்வின்படி நின்றால் வினை தோன்றாது. அவ்வாறு அவற்றை வினை விளைவு இன்றிச் செய்வோர், வாசனையால், அதற்கு மாறாகச் செய்ய நேர்ந்தால், வினை விளையவே செய்யும். ஆனால், சீவ போதத்தை விட்டுச் சிவபோதத்தால் (எல்லாம் சிவன் திருவருள் என்று) வினை செய்தால், அவன் ஞானியாவதற்குத் தகுதி பெறலாம்.

144. அவாவறுத்தல்

பேசவேண்டா, செய்க

2552. வாசியு மூசியும் பேசி வகையினாற்
பேசி யிருந்து [1]பிதற்றிற் பயனில்லை
யாசையு மன்பு மறுமி னறுத்தபி
னீச னிருந்த விடமெளி தாமே. (1)

வேறு பாடம்: 1. பிதற்றிப் (ஆ ஈ) III.

கருத்து: யோக நூலில் பிராணவாயுவும், சுழுமுனை நாடியும் பற்றிச் சொல்லியுள்ளவற்றை நீவிரும் பேசி, உலகியல் வாழ்க்கை முறையையே தொடர்ந்து, துன்பம் வரும்பொழுது பிதற்றுவதால் பயன் ஒன்றுமில்லை. உலகியற் பொருள்களில் ஆசை வைத்தலையும் உறவுடையாரிடம் பாசம் கொள்ளுதலையும் தவிர்வீராக. தவிர்த்து, யோக நெறியில் நிற்பீராக. நின்றால், சிவன் திருவடியை எய்த எளிதாகும்படி, அது நமக்குள்ளேயே இருக்கின்றது.

'வெளி' - ஆக்குவான்

2553. மாடத்து ளானலன் மண்டபத் தானலன்
கூடத்து ளானலன் கோயிலு ளானலன்
வேடத்து ளானலன் வேட்கைவிட் டார்நெஞ்சில்
மூடத்து ளேநின்று முத்திதந் தானே. (2)

கருத்து: பரசிவம் மாடத்திலோ, மண்டபத்திலோ, கூடத்திலோ, கோயிலிலோ, தெய்வ உருவத்திலோ, 'ஒன்றாய்' நிற்கும் அருவமோ உருவமோ மட்டும் அல்லன். அவன் அவாவை நீக்கியவரின் நெஞ்சில் நின்று, அவரது உணர்விற்குப் புலப்படுவான். அங்கும், ஒன்றும் அற்ற நிராதாரத்தில் புலப்படுவான். அவர்க்கு அருள் நல்கி, தன் போலவே அவரையும் 'வெளி' ஆக்குவான். அதுவே வீடுபேறு.

மூடம் - புலப்படாதது; சொரூபநிலை. வெளிநிலை முன்னர் விளக்கப் பட்டது.

ஆசை தவிர்

2554. ஆசை அறுமின்கள், ஆசை அறுமின்கள்,
ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள்,
ஆசைப்படப்பட, ஆய்வரும் துன்பங்கள்,
ஆசை விட, விட ஆனந்தமாமே.

ஆசை யறுமின்க ளாசை யறுமின்க
ளீசனோ டாயினு மாசை யறுமின்க
ளாசைப் படப்பட வாய்வருந் துன்பங்க
ளாசை விடவிட வானந்த மாமே. (3)

கருத்து: ஆசை தோன்றுந் தோறும் அதனை நீக்க வேண்டும். சிவத் தோடு கலந்து அனுபவித்தவர்க்கும், உடம்பு உள்ளவரை, வாசனா மலத்தால், ஆசை தோன்றலாம். அதை அவர் நீக்குவாராகுக. ஏனெனில், ஆசை எத்துணையோ, அத்துணை துன்பம்! ஆசையை நீக்க, நீக்க இன்பம்!

புலனாசை ஒடுக்குக

2555. அடுவன பூதங்க ளைந்து முடனே
படுவழி செய்கின்ற பற்றற வீசி
விடுவது வேட்கையை மெய்ந்நின்ற ஞானந்
தொடுவது தம்மைத் தொடர்தலு மாமே. (4)

கருத்து: ஐம்புலன்களைக் கேடு பயக்கும் பற்று வழியினின்றும் மாற்றி, அவற்றை ஒருங்கே நல்வழியிற் செலுத்திப் பக்குவப் படுத்துக. மோகத்தை விடுக. மெய்யுணர்வு எய்த யோகம் பயில்க. அவ் யோகத்தில் 'தாம் ஆன்மா' என்னும் ஞானம் பெற்று, அவ்வழியில் மேன் மேலும் மெய்யுணர்வு பெறுக.

கடலை அறியவில்லையே!

2556. உவாக்கடல் ஒக்கின்ற ஊழியும் போனது,
உவாக்கடலுள் பட்டுத் துஞ்சினர் வானோர்
அவாக் கடலுள் பட்டு அழுந்தினர் மண்ணோர்,
தவாக் கடல் ஈசன் தரித்து நின்றானே.

உவாக்கட லொக்கின்ற வூழியும் போன
துவாக்கட லுட்பட்டுத் துஞ்சினர் வானோ
ரவாக்கட லுட்பட் டழுந்தினர் மண்ணோர்[1]
தவாக்கட லீசன் றரித்துநின் றானே. (5)

வேறு பாடம்: 1. மன்னோ (சண்)

கருத்து: முழு நிலா நாளில் பொங்கும் கடல்போல் ஊழி வெள்ளம் தோன்றி, உலகை அழித்து மறைந்தது. இவ்வாறு பல ஊழிக் காலங்கள் சென்றன. இத்துணைக் காலமும், தேவரும், மாந்தரும், சிவபெருமான் என்றும் குறையாத இன்பக் கடலைத் தன்னிடம் தாங்கிக் கொண்டிருத்தலை அறியாமல், தாங்கள் ஆசைக்கடலில் அழுந்தியமையால் அவ்வின்பத்தை அடையாமல், கால அளவிற்குட் பட்டு இறந்தனர்.

இந்த அறியாமை காலங்காலமாக இருப்பதற்கு வருந்துகின்றார். உவா - பௌர்ணமி நாள். இறையின்பம் தவிர, ஏனையவெல்லாம் காலத்துட் பட்டன; அழியும் என்றார்.

பல ஊழிகளை 'உவாக் கடல்' என உருவகித்தார். 'வானோர் மண்ணோர்' எனச் சேர்க்க. தவா - தவாத - குறையாத.

ஞானியின் தூய்மை

2557. நின்ற வினையும், பிணியும், நெடுஞ்செயல்
துன்று தொழில் அற்றுச் சுத்தம் - அது ஆகலும்,
பின்றை, ஐங்கன்மமும் போர்த்து, அருள் நேர்பெற்றுத்
துன்ற வழுத்தலும் ஞானிகண் தூய்மையே.

நின்ற வினையும் [1]பிணியு நெடுஞ்செய
[2]றுன்று தொழிலற்றுச் சுத்தம தாகலும்[3]
[4]பின்றையைங் கன்மமும் [5]பேர்த்தரு ணோர்பெற்றுத்
[6]துன்ற [7]வழுத்தலு [8]ஞானிகட் டூய்மையே. (6)

வேறு பாடம்: 1. விளியும் (அ) I. 2. றுன்றொழிலற்றுச் (சண்) உன் றொழிலற்றுச் (துடி) தொழிலுற்றுச் (ஆ ஒ) I. 3. தாகிலும் (அ, இ, ஈ, ஒ, ஓ) I. 4. பின்றைங் (ஓ), பின்றையங் (ஆ இ) V; பின்றையுங் (அ இ ஓ) I. 5. பேற்றரு (ஆ இ) I. 6. துன்றி யழுந்தலும் (த) 7. வழுங்கலு (அ) I. 8. ஞானிக (சண்)

கருத்து: ஞானியிடம், அவனது அகத் தூய்மையால் காணப்படும் செயல்களாவன: (1) பல பிறப்புகளிலும் தொடர்ந்து வரும் வினையையும், மாயை என்னும் மலத்தாற் கட்டுண்டுகிடக்கும் நிலையையும், தன் தொழிலாக எண்ணிப் பல செயல்களையும் செய்யும் மன நிலையையும் நீக்கித் தூய்மை பெறுதல். (2) சிவனது ஐந்தொழிலுக்கு அடுத்தடுத்து உட்படும் நிலையினின்றும் மாறி, அவனது திருவருள் தனது உணர்வில் இசையப் (கலத்தலை) பெற்று, அவனிடம் அன்பு கொண்டு, வாழ்த்துதல் என்பவையாகும்.

ஐந்தொழில் - படைப்பு முதலியவை. ஆணவமலமும் வினையும் உடையவரே ஐந்தொழிலுக்கு உட்படுவர். சிவன் செயல் என எண்ணிச் செய்வோர்க்கு வினைப்பயன் சேராது. துன்ற - மிகுதியாக.

அருளால் அன்பு

2558. உண்மை உணர்ந்து, உற, ஒண்சித்தி முத்தியாம்;
பெண்மயல் கெட்டு அற, பேறு அட்ட சித்தியாம்;
திண்மையின் ஞானி சிவகாயம் கைவிட்டால்,
வண்மை அருள்தான் அடைந்து, அன்பில் ஆறுமே.

உண்மை [1]யுணர்ந்துற வொண்சித்தி முத்தியாம்
பெண்மயல் கெட்டறப் பேறட்ட சித்தியாந்
[2]திண்மையின் ஞானி சிவகாயங் கைவிட்டால்
[3]வண்மை யருடா னடைந்தன்பி லாறுமே. (7)

வேறு பாடம்: 1. யுணர்ந்தற (அ) IV; யுணர்ந்துறை (ஈ) IV. 2. தன்மையில் (அ) I. 3. அண்மை (த).

கருத்து: ‘மெய்ப்பொருள் சிவமே’ எனத் தெளிந்து, அதனைச் சார, அதன் பயனாக வீடுபேறு கிடைக்கும். பெண்ணாசை முதலிய

அவாவை நீத்தால் அட்டமாசித்தியும் கைகூடும். ஞானி சிவனுடம்பைப் பெறுதலாகிய ஈசத்துவத்தை உள்ளிட்டு அட்டமா சித்திக்கு அவாவுறாது, சிவத்தையே பெறுதல் குறிக்கோள் எனத் திட்பத்துடன் வாழ்ந்தால், சிவத்தின் வண்மையால் அருளைப் பெற்று, அவ்வருளால் அன்பு பெருகி, இன்பம் பெறுவான்.

"இன்ப அன்பு" என்பதும் "அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்பதும் ஆன்றோர் வாக்கு ஆதலின் "அன்பில் ஆறுமே" என்றார்.

ஆன்மா ஈசனா?

2559. அவன் இவன் ஈசன் என்று, அன்புற நாடி,
சிவன் இவன் ஈசன் என்ற உண்மையை ஓரார்
பவன் இவன் பல்வகையாம் இப்பிறவி
புவன் இவன் போவது, பொய்கண்டபோதே.

அவனிவ னீசனென் 'றன்புற நாடிச்
சிவனிவ னீசனென் றுண்மையை யோரார்
பவனிவன் பல்வகை யாமிப் பிறவிப்
புவனிவன் போவது பொய்கண்ட போதே. (8)

வேறு பாடம்: 1. றன்பற (தி)

கருத்து: 'ஆன்மாவிற்குத் தலைவன் சிவன்' என்று உள்ள உண்மையை, அன்பினால் ஆய்ந்து தெளியாதவராய், 'ஈசன் ஆகிய அவனே இவன்' எனச் சிலர் அத்துவிதம் பேசுகின்றார்கள். பலவகைப் புவனங்களில் , பலவகைப் பிறவிகள் எடுத்துப் பிறக்கும் பிறவிநோயாளனாகிய ஆன்மா, அப்புவனங்களை விட்டு, வீடு பேறு அடைவது, பொய்யான வாழ்வை, (அறியாமையால் மெய் யென்று கருதாமல்) பொய்யென்று தெளிந்தபொழுதே ஆகும்.

ஆன்மா பலவகைப் பிறவிகளில் பிறப்பது. சிவனோ பிறப்பில்லாதவன். ஆன்மா பிறப்பதற்குக் காரணம், அது செய்த வினைகள். அவ்வினைப் பயன்களை ஆன்மா அனுபவிக்கும்படி, பிறப்பைக் கொடுப்பவன் சிவன். ஆன்மா மீண்டும் மீண்டும் பிறப்பது, பொய்யான வாழ்வை மெய் யென்று கருதும் அறியாமையால். அவ்வறியாமையுடன் பல வினைகளைச் செய்வதால். இவ்வறியாமையின் மூலகாரணம் ஆணவ மலம். இது நீங்கும்வரை ஆன்மா பிறவி யெடுத்துக் கொண்டிருக்கும். சிவன் குருவாக வந்து அறியாமையைப் போக்கி, மெய்யுணர்வை அளிப்பான். அப்பொழுதுதான் ஆன்மா, பொய்யை உணர்ந்து, பிறவியிலிருந்து விடுதலை அடையும் வழியில் முயலும்.

இத்துணையையும் எண்ணாது, ஆன்மாவே ஈசன் என்று கூறுதல் அறிவுடைமையன்று.

புலனாசை வேண்டா

2560. கொதிக்கின்ற வாறும், குளிர்கின்றவாறும்
பதிக்கின்ற வாறு இந்தப் பாரக முற்றும்
விதிக்கின்ற ஐவரை வேண்டாது உலகம்
நொதிக்கின்ற காயத்து நூல் ஒன்றுமாமே.

கொதிக்கின்ற வாறுங் குளிர்கின்ற வாறும்
[1]பதிக்கின்ற வாறிந்தப் பாரக முற்றும்
விதிக்கின்ற வைவரை வேண்டா துலக
நொதிக்கின்ற காயத்து [2]நூலொன்று மாமே. (9)

வேறு பாடம்: 1. மதிக்கின்ற வர்க்கிந்தப் (அ) II. 2. நூலொன்றலாமே (த)

கருத்து: உலகம் முழுதும் உள்ள புலன்விடயங்களைக் கொணர்ந்து, உடலில் தொடர்புபடுத்தி, அவற்றை வெறுத்தலோ, உவத்தலோ செய்யச் செய்பவை, ஐம்பொறிகள். இவ்வாறு மனத்தை ஆள்கின்ற ஐவரை உயர்ந்தோர் ஒதுக்குவர். அவர்கட்கு, அழுக்குத் தோன்றி வெளிப்படும் இவ்வுடம்பில், சுழுமுனை நாடியின் வழியாக மூச்சுக்காற்று இயங்கப்பெற்று, மனம் ஐம்புலன் அவாவில் விழாது ஒடுங்கும்.

ஐம்பொறிகள் ஆகிய ஒன்பது வாயில்களில் அழுக்கு ஊறுதலை இழித்துக் கூறினார். "உள்ளம் பதிக்கின்றவாறு" என ஒரு சொல் வருவிக்க.

குறிப்பு: இதனை யடுத்துச் சுவடிகளிலும், பதிப்புகளிலும் உள்ள "உய்ந்தனமென்பீ" என்னும் பாடல், முன்னர் 'யோகம்' என்னும் இயலில் வந்தது. (பா. எண் 1445)

145. பத்தியுடைமை

பத்தியின் பரிசு

2561. முத்திசெய் ஞானமுங் கேள்வியு மாய்நிற்கும்
அத்தனை மாயா [1]வமரர்பி ரான்றன்னைச்
சுத்தனைத் தூய்நெறி யாய்நின்ற சோதியைப்
பத்தர் பரவும் பசுபதி தானே[2]. (1)

வேறு பாடம்: 1. வரன்றன்னை யாமகச் (ஆ) II. 2. தானென்றே (ஒ) II.

கருத்து: அன்பர் தமது அன்பு காரணமாக ஏத்தும் பசுபதி யாகிய சிவம், அவர்க்கு (குருவாக வந்து) முத்திக்கு வாயிலாம் பதிஞானத்தை உபதேசித்தருள்வான். அவர் அன்னியமற்ற அன்பு செய்ய, தந்தை என்னும் உறவு பூண்டு, அருள் செய்வான். (இங்ஙனமின்றிப் பதவி கொண்டாடி, இறந்து உழலும்) தேவர்க்கு, அவன் மகாதேவன். மலமற்றோன். தூய வழி காட்டுவோன்.

2, 3 ஆம் அடிகளில் வந்த ஐகாரம் சாரியை.

அடியார்க்கடியேன்

2562. அடியார் அடியார் அடியார் அடிமைக்கு
அடியனாய் நல்கிட்டு அடிமையும் பூண்டேன்
அடியார் அருளால் அவனடி கூட
'அடியான் இவன்' என்று அடிமை கொண்டானே.

அடியா ரடியா 'ரடியா ரடிமைக்
கடியனாய் நல்கிட் டடிமையும் பூண்டே
னடியா ரருளா லவனடி கூட[2]
வடியா னிவனென் றடிமைகொண் டானே. (2)

வேறு பாடம்: 1. ரடியார்க் கடிமை (சண்) (சைவ) 2. கூடி (அ) I.

கருத்து: சிவனடியார்க்கு, அடியார்க்கு அடியனாய் என்னை அர்ப்பணித்தேன். அடியார்களின் அருளால் சிவன் திருவடியினைச் சார்ந்தேன். சிவன் என்னை ஏற்று அடிமை கொண்டான்.

கைம்மேற் பலன்தருவான்; கண்ணுக்குத் தோன்றான்

2563. நீரில் குளிரும், நெருப்பினில் சுட்டிடும்,
ஆர் இக்கடன் நந்தி ஆமாறு அறிபவர்
பாரில் பயனாகும்; பார்க்கிலும் நேரியன்,
ஊரில் உமாபதியாகி நின்றானே.

நீரிற் குளிரு நெருப்பினிற் சுட்டிடு
மாரிக் கடனந்தி யாமா றறிபவர்[1]
பாரிற் [2]பயனாகும் பார்க்கிலு நேரிய
[3]னூரி லுமாபதி யாகிநின் றானே. (3)

வேறு பாடம்: 1. றறியவர் (ஒ) I. 2. பயனாரைப் (தி) (வ) (சைவ) 3. ரூரி (சண்) (சைவ)

கருத்து: சிவபெருமான் நீரில் தண்மையாயும், தீயில் வெம்மையாயும் இருக்கின்றான். இவ்வாறு பொருள் தோறும், அதன் தன்மையாய் அவன் நிற்கும் முறைமையை யார் அறிவார்? வாழ்வார்க்குப் பொருள்களின் பயனாகக் கிடைப்பவனும் அவனே. இவ்வாறு இருப்பவனது வடிவும் நுண்மையானது ஆனால் தன்னை வணங்கிடும் அடியார்க்கு அருள்புரிய உமாதேவியுடன் எழுந்தருளி வருகின்றான்.

கடன் - முறை. நேரியன் - நுண்ணியவன்.

யார் கூறுவார்?

2564. ஒத்து உலகு ஏழும் அறியாத ஒருவன் என்ற
அத்தன் இருந்த இடம் ஆர் அறிவார் சொல?
பத்தர்தம் பத்தியின்பால் படல் அல்லது
முத்தினை யார்சொல்ல முந்துகின்றாரே?

ஒத்துல கேழு மறியா தொருவனென்[1]
[2]றத்த னிருந்திட மாரறி வார்சொலப்
பத்தர்தம் பத்தியின் [3]பாற்பட லல்லது
முத்தினை யார்சொல்ல முந்துகின் றாரே. (4)

வேறு பாடம்: 1. வொருவனென் (அ) IV. 2. னத்த (அ) IV. 3. பாற் படினல்லது (ஓ) IV.

கருத்து: ஏழு உலகங்களில் வாழ்வோரும் ஒருங்கே, 'யாம் அறியோம்' எனச் சொல்லுமாறு அமைந்த சிறப்புடையவன் ஆகிய எம் தலைவன் உள்ள இடத்தை யார் அறிவார்? ஒருவரும் அறியார். பத்தர்கள், தம் பத்தியினால், "தமது நெஞ்சத்தில் இருக்கிறான்" எனக் கூறுவாரே அல்லாமல், வேறு யார் கூறவியலும்?

அழைத்தேன், வந்தான்

2565. ஆன்கன்று தேடி யழைக்கு மதுபோல
நான்கன்றாய் நாடி யழைத்தேனென் னாதனை
வான்கன்றுக் கப்பாலா நின்ற மறைப்பொரு
ளூன்கன்றா நாடிவந் துள்புகுந் தானே. (5)

கருத்து: பசுங்கன்று தன் தாயைக் காணாது, அதனைத் தேடுமாற்றான் அழைப்பதே போல், நான் என் நாதனுக்குப் பிள்ளைமை உறவு கொண்டு, அவனை அன்பால் அழைத்தேன். காமதேனுவின் கன்று உள்ள இடத்திற்கும் அப்பால் உள்ள வேத நாயகன், என் உடம்பு தவத்தால் மெலியாதவாறு வந்து, என்னுட் புகுந்தான்.

"வான் கன்றுக் கப்பாலாய் நின்ற" என்றது, கேட்டதை யெல்லாம் தரும் காம தேனுவின் உலகத்தையும் தாண்டி, கேட்டவுடன் கிடைக்காத பொருளாய் நிற்பவன் சிவன் என்பதை உணர்த்தற்கு. ஊன் கன்றா என்பதில், "கன்றா" ஈறு கெட்ட எதிர் மறை வினையெச்சம்.

என்றும் இல்லை பணி

2566. பெத்தத்தும் தன் பணி இல்லை பிறத்தலால்,
முத்தத்தும் தன் பணி இல்லை முறைமையால்,
அத்தற்கு இரண்டும் அருளால் அளித்தலால்
பத்திப் பட்டோற்குப் பணி ஒன்றும் இல்லையே.

பெத்தத்துந் தன்பணி யில்லை பிறத்தலான்
முத்தத்துந் தன்பணி யில்லை முறைமையா
லத்தற் கிரண்டு மருளா லளித்தலாற்
பத்திப்பட் டோற்குப் பணியொன்று மில்லையே. (6)

கருத்து: பத்தியுடையவன், தான் பிறந்து வாழும் காலமாகிய பெத்தக் காலத்திலும், உடம்பை விட்ட காலத்தில், வீடுபேறு அடையின், அந்த முத்திக் காலத்திலும், 'தன் பணி' என ஒன்றும் உடையனல்லன். ஏனெனில், அவன் அருளறிவு பெற்றுத் தன் பணிகளை எல்லாம் தலைவனாகிய சிவபிரானுக்கு அர்ப்பணித்து விடுகின்றான்.

பிறத்தலால் பெத்தம் - பிறவியால் வரும் மலப் பிணிப்பு. முறைமையால் முத்தம் - மும்மலங்களையும் முறையே நீக்கும் வீடுபேறு. இரண்டு - இரண்டு நிலையிலும்.

கொண்டு கூட்டு: "பிறத்தலால்", "முறைமையால்" என்பவை, அவ்வவ்வடி முதலில் சேரும். அவற்றை அடுத்து, 'வரும்' என ஒரு சொல் வருவிக்க.

உள்ளேன் பிற தெய்வம்

2567. பறவையின் கற்பமும், பாம்பும் மெய்யாக,
குறவம் சிலம்பக் குளிர்வரை ஏறி,
நறவு ஆர் மலர் கொண்டு நந்தியை அல்லால்
இறைவன் என்று என் மனம் ஏத்தகிலாவே.

பறவையிற் கற்பமும், பாம்பு மெய்யாகக்
குறவஞ் சிலம்பக் குளிர்வரை யேறி
நறவார் மலர்கொண்டு நந்தியை யல்லா
லிறைவனென் றென்மன மேத்தகி லாவே. (7)

வேறு பாடம்: 1. குறவன் (அனை. சுவ.) பதிப்புகளில் உள்ளவாறு மேற் கொள்ளப் பெற்றது.

கருத்து: முதுமையைத் தவிர்க்கும் மருந்தும், குண்டலி சத்தியும் என் உடம்பிலேயே உள்ளனவாக, கடலில் பறக்கும் பறவை, கப்பலின் பாய்மரத்தைச் சார்வதுபோல், நான் அவற்றைச் சார்ந்து, நாதவொலி முழங்க, சகஸ்ராரத் தானத்தில் ஏறி, கொல்லாமை முதலிய எட்டு மலர்களைக் கொண்டு சிவபிரானை வழி படுவதையன்றி, வேறு தெய்வங்களை என் அந்தக் கரணங்கள் சாரமாட்டா.

மூவாமை தரும் மருந்து அருளமுது. இது சகஸ்ராரத்தில் ஊறுவது.

குறவம் - குறவர் கூட்டம். குற + அம் : அம்மு விகுதி பெயர் என்பதைக் குறிப்பது; மகிழம் என்றாற் போல. குரவன் என்றே பாடம் கொண்டு, குறவன் என்பது எதுகை நோக்கித் திரிந்தது என்றுமாம். அன்றி 'குறவன்' என்றது திரியாமல் நின்றது என்றும் கொள்ளலாம். குரவன் என்பது ஆசிரியன் எனப் பொருள்படும். இங்கு, அது சிவனைக் குறிக்கும். வரும் பாடலில் கூறுவது போல, சிவன் மூலக்கனலாய் நின்று,

சகஸ்ராரத்திற்கு ஏறி, நாதமாக எழுதலால், "குரவன் சிலம்ப" என்றார். (583 ஆம் பாடலிலும் சிவனை மூலக்கனல் என்றார்.)

முதற்பொருளில்: நாதவொலி குறவரின் இசையாகவும், தலையுச்சி மலையாகவும், கொல்லாமை முதலிய எண் குணங்கள் மலர்களாகவும் உருவகிக்கப்பட்டன.

அவனே மூலக்கனல்

2568. உறுதுணை நந்தியை யும்பர் பிரானைப்
பெறுதுணை செய்து பிறப்பறுத் துய்ம்மின்
செறுதுணை செய்து [1]சிவனடி சிந்தித்
துறுதுணை யாயங்கி யாகிநின் றானே. (8)

வேறு பாடம்: 1. சிவனெனச் (ஒ) IV.

கருத்து: மிக்க துணையாய் இருக்கத் தக்கவனும், தேவதேவனு மாகிய சிவபிரானைப் பெறத் தக்க தவத்தைச் செய்து, பிறப்பை நீக்கி, வீடுபேறு எய்துக. அதற்கு முதற்படியாக, புலன்களை ஒடுக்கி, அவாவை நீக்கி, அவனது திருவடியை அன்பால் எண்ண, அவன் உடம்பில் உடன் நின்று உதவும் துணையாய், மூலக்கனலாய் நிற்பான்.

புலடைக்கமும் பத்தியும் தியானத்திற்கு உதவ, தியானத்தால் மூலக் கனல் உயிருணர்வுப் பெருக்கத்திற்கு உதவும் என்றார்.

உணர்வு கலந்தார்

2569. வானவர் தம்மை வலிசெய்திருக்கின்ற
தானவர் முப்புரம் செற்ற தலைவனைக்
கானவன் என்றும், கருவரையான் என்றும்
ஊன்-அதனுள் நினைந்து, ஒன்றுபட்டாரே.

வானவர் தம்மை வலிசெய் திருக்கின்ற
தானவர் முப்புரஞ் செற்ற தலைவனைக்
கானவ னென்றுங் கருவரை யானென்று
மூனத னுண்ணினைந் [1]தொன்றுபட் டாரே. (9)

வேறு பாடம்: 1. தொன்று படாரே (த)

கருத்து: தேவரைத் துன்புறுத்தும் அசுரர்களின் திரிபுரங்களையும் அழித்த சிவபிரானை யோகியர் தமது உடம்பில் நாதமயனாகவும், சகஸ்ராரத்தில் எழுந்தருளியிருப்பவனாகவும் தியானித்து, அவனோடு உணர்வு கலந்தனர்.

கானம் - இசை. முன்பு "குறவம் சிலம்ப" என்றதை இங்கு மீண்டும் கூறினார். கருவரை - கரியமலை. இங்குச் சகஸ்ராரம்.

நிலைபெற்றேன்

2570. நிலைபேறு, கேடு - என்று முன்னே படைத்த
தலைவனை நாடித் தயங்கும் என் உள்ளம்,
மலையுளும், வானகத்துள்ளும், புறத்தும்
உலையுளும், உள்ளத்தும் ஊழி நின்றானே.

[1]நிலைபேறு கேடென்று முன்னே படைத்த
தலைவனை நாடித் தயங்குமென் னுள்ள
மலையுளும் வானகத் துள்ளும் புறத்து
முலையுளு முள்ளத்து [2]மூழிநின் றானே[3]. (10)

வேறு பாடம்: 1. நிலைபெறு (சைவ) நிலைபெற (த) (சுவடிகளில் நெடிலுயிர்க்கும் குறிலுயிர்க்கும் ஒற்றைக் கொம்பு இட்டு எழுதுவதே மரபு. இதனை யறிந்தும் முன்னைய பதிப்பாசிரியர்கள் 'நிலை பெறு' என்றே பதிப்பித்துள்ளனர். 'நிலைபெறு கேடு" என்பது குழந்தை பெற்ற மலடி என்றாற் போன்றது). 2. மூழ்கிநின் (ஆ இ ஈ) I மூழ்த்துநின் (த) 3. றேனே (விசு) (தி) (வ).

கருத்து: 'ஆன்மா நிலைபெறுக, அல்லது கெடுக' என்று அதனைப் பிறவியிற் புகுத்தும் காயத்திலேயே தீர்மானித்த இறைவனை நாடி நான் உணர்வு மலரப் பெற்றேன். அவன் என் யோக சாதனையால், என் உச்சந்தலையிலும், சிதாகாசத்திலும், பரமாகாசத்திலும் ஊழிக்காலங்களாக நிற்கின்றான். அதற்கு முன், என் மூலக்கனலில் சத்தியாகத் திகழ்ந்தான். என் உயிர் உணர்வில் திகழ்ந்தான்.

மூலாதார சத்தியால் ஆற்றல் பெற்ற உயிருணர்வே ஆக்ஞை இடத்திலும், சகஸ்ராரத்திலும் இறைக்காட்சிகளைப் பெறுகிறது. தயங்குதல் - ஒளிபெறுதல்; இங்கு உணர்வு மலர்தல். வானகம் - சிதாகாயம். புறம் - பரமாகாயம். உலை - யாககுண்டம். மூலாதாரமே யாககுண்டம். அதில் சுடர்விட்டெழும் அக்கினியே மூலக்கனல். உள்ளம்

- புருவமத்தியில் சாக்கிர நிலையில் உள்ள உயிருணர்வு. தமக்கு என்றும் மரணம் இல்லாமை கூறினார்.

குறிப்பு: பதிப்புகளில் இப்பாடலுடன் 'பத்தியுடைமை' இயல் நிறைவுற, 'முத்தியுடைமை' என்ற இயல் தொடங்குகின்றது. 'ஓ' சுவடியில் மட்டும், பத்தியுடைமையை அடுத்து, ஒரு தனி இயல், பதிப்புகளில் முத்தியுடைமை - இயலில் தரப்பெற்றுள்ள 2 பாடல்களுடன், பெயரின்றி உள்ளது. 'அ, ஆ, இ, ஓ' - சுவடிகளில், இவ்விரண்டு பாடல்களும் பத்தியுடைமையில் அடங்க, அடுத்துச் 'சோதனை' என்னும் இயல் தொடங்குகின்றது. பொருட் பொருத்தம் நோக்கி, இந்நான்கு சுவடிகளையே இப்போதைய பதிப்புப் பின்பற்றுகின்றது.

பேரானந்தம் பெறத்தக்கோர்

2571. முத்தியி லத்தன் முழுத்த வருள்பெற்றுத்
தத்துவ சுத்தி தலைப்பட்டுத் தன்பணி
மெய்த்தவஞ் [1]செய்கை வினைவிட்ட மெய்யுண்மைப்
பத்தியி லுற்றோர் பரானந்த போதரே. (11)

வேறு பாடம்: 1. செய்வகை (அ ஈ ஓ) II.

கருத்து: முத்திநெறியில் வாழ்வதை மேற்கொண்டு, தலைவனது அருளை நிரம்பப் பெற்று, தத்துவ சுத்தி பெறும் வழியில் முயன்று, தாம் செய்யும் பணிகள் யாவும் மெய்த்தவமாக அமைத்துக் கொண்டு, தமக்கு வினைப்பயனை ஈட்டாது, மெய்யுணர்வோடு கூடிய பத்தியுடன் விளங்குவோர், பேரானந்த ஞானம் பெறும் தகுதியுடையவராவர்.

உச்சிப்படி ஏறுவோர்

2572. வளங்கனி தேடிய வன்-தாள் பறவை
உளங்கனி தேடி உழிதரும் போது,
களங்கனி அங்கியில் கைவிளக்கு ஏற்றி
நலம் கொண்ட நால்வரும் நாடுகின்றாரே.

வளங்கனி தேடிய வன்றாட் பறவை
யுளங்கனி தேடி யுழிதரும் போது
களங்கனி யங்கியிற் கைவிளக் கேற்றி
நலங்கொண்ட நால்வரு நாடுகின் றாரே. (12)

கருத்து: பழத்தைத்தேடும் பறவைபோல் சிவனைத் தேடும் உயிர், அச்சிவத்தைத் தனக்குள்ளே தேடும். உடம்பில் விசுத்தி ஆதாரம் அமைந்த கழுத்தில் அருட்சத்தியாக மாறும் மூலக்கனலைக் கொண்டு, உணர்வாகிய சிறு விளக்கை ஏற்றி, மத்தியாலவத்தை, சுத்தாவத்தை, பராவத்தை, சிவாவத்தை என்னும் நால்வகை அவத்தை வகையை எய்திய நால்வகையினரும் சொரூப சிவத்தைக் காணுதற்கு முயல்கின்றனர்.

இவர்கள் தத்தம் அவத்தை நிலையில், துரியாதீதத்தில் சிவத்தைக் காண்பர். அக்காட்சிகளுள் சிவதுரியாதீதத்திற் காண்பதே சொரூப சிவம் என்க. வன்தாள் - வலியமுயற்சி. களம் - கழுத்து. கனிதல் - அருட்சத்தியாதல். சீவன் பறவையாக உருவகிக்கப்பட்டது.

146. சோதனை

வீடு பேறு எத்தகையது?

2573. பெம்மான், பெருநந்தி, பேச்சு அற்ற பேரின்பத்து
அம்மான் அடி தந்து, அருட்கடல் ஆடினேன்,
எம்மாயமும் விடுத்து, என்னைக் கரந்திட்டுச்
சும்மாது இருந்து இடம் சோதனை ஆமே.

பெம்மான் பெருநந்தி பேச்சற்ற பேரின்பத்
தம்மா னடிதந் தருட்கட லாடினே[1]
[2]னெம்மாய மும்விடுத் [3]தென்னைக் கரந்திட்டுச்
சும்மா [4]திருந்திடஞ் சோதனை யாமே. (1)

வேறு பாடம்: 1. லாடினோ (அ ஆ ஈ ஒ ஓ) V. 2. மெம்மாய (அ ஓ) II. 3. மெம்மைக் (இ) II; தெம்மைக் (சங்) 4. விருந்திடஞ் (ஆ) I.

கருத்து: தலைவன், மகாதேவன், சொல்லொணாத பேரின்பம் வழங்கும் வள்ளல் - அவன் தன் திருவடியை எனக்கு நல்கியமை யால், அத்திருவடியின்பமாகிய அருட்கடலில் திளைத்தேன். மும்மலங்களால் வந்த பொய்ம்மை ஞானத்தை எல்லாம் என்னிடமிருந்து போக்கி, ஆன்ம போதத்தையும் அருட்போதத்தில் ஒடுக்கிக் கொண்டு, என்னைச் சும்மா இருக்க வைத்தான். இது வீடுபேற்றின் தன்மை.

சிவனைக் கலந்தேன்

2574. அறிவுடை யானரு மாமறை யுள்ளே
செறிவுடை யான்மிகு தேவர்க்குந் தேவன்
பொறியுடை யான்புல னைந்துங் கடந்த
குறியுடை யானொடுங் கூடுவன் னானே[1]. (2)

வேறு பாடம்: 1. றானே (அ ஒ) I.

கருத்து: பேரறிவாளன், மறையுள்ளே பொதிந்த மாண்பொருள், மகாதேவன். ஐம்பொறிகளும் கொண்ட தெய்வ உருவுடையான் எனினும் புலன் அறிவால் உணர வியலாத சொரூபநிலை உடையவன் - இத்தகைய சிவபிரானோடு நான் கலந்து நிற்கின்றேன்.

குறிப்பு: இதனையடுத்துச் (சைவ) பதிப்பில் உள்ள "அறிவறி வென்றங்" என்ற பாடலை அப்பதிப்பு 3 பிரதிகளில் இல்லை என்று குறிப்பிடுகிறது. ஏனைய பதிப்புகளிலும், இப்போதைய பதிப்பிற்கு ஆய்ந்த சுவடிகளிலும் இப்பாடல் உள்ளது. ஆயினும், இது முன்னர், 'அறிவுதயம்' - இயலில் வந்தது. (பா. எண். 2335)

சிவப் பேறு

2575. குறியாக் குறியினில், கூடாத கூட்டத்து
அறியா அறிவினில் அவிழ்ந்து, ஏக சித்தமாய்
நெறியாம் பராநந்தி, நீடுஅருள் ஒன்றும்
செறியாச் செறிவே 'சிவம்' எனல் ஆமே.

குறியாக் குறியினிற் கூடாத கூட்டத்
தறியா வறிவினி லவிழ்ந்தேக சித்தமாய்
நெறியாம் பராநந்தி நீடரு ளொன்றுஞ்
செறியாச் செறிவே சிவமென லாமே. (3)

கருத்து: சுட்டி உணராத இடம், அங்குத் தற்போதம் -விட்ட இறைவனுடன் ஆன புணர்ச்சி; அதனால் உணர்ந்த மெய்யுணர்வு - இவற்றால் மனம் கட்டுவிட்டு நெகிழ்ந்து, ஒரே உணர்வுடன், சிவனது அருளில் ஒன்றியிருக்கும் நிலையே 'சிவப்பேறு'.

அறியா அறிவு - பாசஞானம் போல், புத்தி தத்துவத்தால் அறியாத அறிவு. இஃது உயிருணர்வு; பதிஞானம். இறைவன் உயிரோடு

இரண்டறக் (ஏகனாக) கலந்திருப்பதை ஆழ உணர்ந்து, அவனுடன் அதேபோல் இரண்டற (உயிர், இறைவன் என்ற வேறுபாட்டு உணர்வு இல்லாமல்) கலத்தலே 'சிவப்பேறு' ஆதலின், "செறியாச் செறிவு" என்றார். தலைவன் தலைவியுடன் கலத்தல் போல், இது வெளிப் பொருளோடு சேர்வதன்றாதலின், சேராத சேர்க்கை.

இங்கே எப்படி? அங்கும் அப்படி

2576. காலினி லூறுங் கரும்பினிற் கட்டியும்
பாலினுண் ணெய்யும் பழத்து ளிரதமும்
பூவினு ணாற்றமும் போலுள னெம்மிறை
காவல னெங்குங் கலந்துநின் றானே. (4)

கருத்து: காற்றில் ஊற்று ஆகிய புலன்விடயமும், கரும்பில், அதன் கட்டியிற் பெறும் சுவையும், பாலில் நெய்யும், பழத்தில் சுவையும், மலரில் மணமும் 'இரண்டு' அறக் கலந்திருப்பது போல, இறைவனும் உயிர்களில் 'ஒன்றி' யுள்ளான்; அவற்றைக் காத்தலும் செய்கின்றான்.

ஊற்று - தொடுவுணர்ச்சி; பரிசம். இக்கலப்பே முத்திக் கண்ணும் உள்ளது என்பது குறிப்பு.

மூலக்கனலாகும் மூர்த்தி

2577. விருப்பொடு கூடி விகிர்தனை நாடிப்
பொருப்பகஞ் சேர்தரு பொற்கொடி போல
விருப்பர் மனத்திடை யெங்கள் பிரானார்
நெருப்புரு வாகி நிகழ்ந்து நிறைந்தே[1]. (5)

வேறு பாடம்: 1. நின்றாரே (சைவ. விசு)

கருத்து: சிவபிரானை அன்போடு நாடி வழிபட, அவன் மூலாதாரத்தில் நெருப்பு வடிவாகத் தோன்றி, மூச்சுக் காற்றுடன் சுழுமுனை வழியாகச் சகஸ்ராரத்திற்குச் சென்று, அந்த மலரை மலர்வித்து, இமயம் சார்ந்த பொற்கொடியைப் போல, மனோன்மணி தன்னைத் தழுவி நிற்க, உயிருணர்விற்குச் சதாசிவ மூர்த்தியாக - பரசிவம், சிவையாகப் - புலப்படுவான்.

விகிர்தன் - பல்வகை வடிவங்களை உடையவன். மனம் - இங்கு, உயிருணர்வு. கொடி-காக்கை.

கனவிற் புணர்ச்சி

2578. நந்தி பெருமா னடுவுள்ளி யாமத்து[1]
வந்தெ ஞகம்படி கோயில்கொண் டான்கொள்ள[2]
எந்தைவந் தானென் றெழுந்தே னெழுதலுஞ்
சிந்தையி னுள்ளே சிவனிருந் தானே. (6)

வேறு பாடம்: 1. லியோமத்து (விசு) (தி) (வ) (து) 2. டான் சொன்ன (விசு)

கருத்து: சிவன் நடுயாமத்தில் எனது உயிருணர்வில் புகுந்தான். அது கனவு என அறியாது, நனவில் நிகழ்ந்தது எனக் கருதித் துயில் உணர்ந்தேன். அவன் கனவிலேனும் என் உணர்வில் நின்றதை எண்ணி என் மனம் மகிழ்ந்தது.

பரிசளிப்பான்

2579. தன்மைவல் லோனைத் தவத்து ணலத்தினை
நன்மைவல் லோனை [1]நடுவுறை நந்தியைப்
[2]புன்மைபொய் யாதே புனிதனை நாடுமின்
பன்மையி லும்மைப் பரிசுசெய் வானே. (7)

வேறு பாடம்: 1. நடுவரை (ஒ) I; நடுவுரை (ஆ இ ஈ ஒ) I. 2. (து) பதிப்பில் பாடல் அடிகள் மாறியுள்ளன.

கருத்து: தனது பண்பாகிய திருவருளைச் செலுத்துதலில் வல்லவன்; வழிபாட்டின் பயனாக வந்து கிடைப்பவன்; நல்லாரின் நன்மையை அறிபவன்; சகஸ்ராரத்தில் வாழ்பவன்; பனிதன் - இத்தகு சிவபிரானைப் புன்மையும் பொய்யும் இன்றி நாடுக. பல உயிர்களிட மிருந்து உங்களை வேறுபடுத்திப் பரிசு நல்குவான்.

பரிசு - வீடுபேறு. திருமுருகாற்றுப்படை, "விழுமிய பெறவரும் பரிசில்" என்று கூறும். (அடி. 294 - 5)

என்னை விடவில்லை

2580. தொடர்ந்து நின்றான் என்னைச் சோதிக்கும் போது
தொடர்ந்துநின்றான் நல்ல நாதனும் அங்கே,
படர்ந்து நின்ற ஆதிப்பராபரன், எந்தை
கடந்து நின்ற அவ்வழி காட்டுகின்றானே.

தொடர்ந்துநின் றானென்னைச் சோதிக்கும் போது
தொடர்ந்துநின் றானல்ல நாதனு மங்கே
படர்ந்துநின் றாதிப் பராபர னெந்தை
கடந்துநின் றவ்வழி காட்டுகின் றானே. (8)

கருத்து: இப்பாடலில், ஆசிரியர், தமக்கு இறைவன் மூன்று படிநிலைகளில் அறிவூட்டியமையைக் கூறுகின்றார். இறைவன் என் அறிவுக்கு அறிவாய் நின்று, எனக்குப் பக்குவம் வருவதற்காகச் சிலவற்றை உணர்த்தி, அப்பக்குவம் வருகிறதா என்று அறிய, என்னைத் தொடர்ந்து நின்றான். பின்பு, அப்பக்குவம் வந்தபோது குருவாக எழுந்தருளி வந்து சிலவற்றை உணர்த்தி, என் அத்துவாக்களை ஆராய்ந்தான். அப்போதும் தொடர்ந்து நின்றான். உலகெங்கும் வியாபகமாக நிற்கும் ஆதிமூர்த்தியும், பரநிலையிலும் பராபர நிலையிலும் விளங்குபவனுமாகிய அவன், அனைத்தையும் கடந்து, சொரூப நிலையில் நிற்பதை எனக்குக் காட்டிய போதும் என்னைத் தொடர்ந்து நின்றான்.

தொடர்ந்து நிற்றல் என்பது, விடாமை. "சோதிக்கும் போது" என்பது இடைநிலை விளக்காய் இருபுறமும் இணைந்தது முதற்படிநிலையில் அறிவுக்கு அறிவாயும், இரண்டாம் நிலையில் குருவாயும், மூன்றாம் நிலையில் தந்தையாயும் தொடர்பு கொண்டான் என்க. நாதன் - குரு நாதன். வழி என்பது இடம் ஆயினும், இங்கு நிலை என்பதைக் குறிக்கும். அது சுட்டு இறந்த நிலை; இன்னது என்று சுட்டிக் கூற வியலாத நிலை; சொரூபநிலை.

எமக்கு எளியான்

2581. அவ்வழி காட்டும் அமரர்க்கு அரும்பொருள்,
இவ்வழி தந்தையர், எற்கு எளியான் ஒக்கும்,
செவ்வழி சேர் சிவலோகத்து இருந்திடும்,
இவ்வழி நந்தி இயல்பு இது தானே.

அவ்வழி காட்டு மமரர்க் கரும்பொரு
ளிவ்வழி [1]தந்தைய [2]ரெற்கெளி யானொக்குஞ்
செவ்வழி சேர்சிவ லோகத் திருந்திடு
மிவ்வழி நந்தி யியல்பிது தானே. (9)

வேறு பாடம்: 1. தந்தையார்க் கெளி (ஆ ஒ ஓ) I; தந்தையாய் (விசு) தந்தைதாய் (தி) (வ) (த) 2. யாய்கேளி (சங்) கேளியான் (விசு) (தி) (வ) கேளிரேயொக்குஞ் (த) பதிப்பாசிரியர்கள், "அரும்பொருள் எளியான்"

என்னும் அருமையில் எளிய அழகை நோக்காது, பொருந்தாப் பாடங் கொண்டனர்.

கருத்து: மேற்பாடலில் கூறியவாறு, தன் சொரூபத் திருமேனியின் நிலையைக் காட்டியருள்பவனும், தேவர்க்கு அணுகவியலாத அரும் பொருளாயுள்ளவனும் ஆகிய சிவபெருமான் இவ்வுலகில், (எங்களைக் குடிகுடி ஆட்கொண்டமையால்) எம் தந்தையர்க்கும், எனக்கும் எளிமையானவனாக இருக்கின்றான். அவன் சிவ லோகத்தில் தெய்வத் திருமேனி கொண்டு விளங்கும் தன்மை இது.

"அவன் அமரர்க்கு அருமையாதலும் ஒக்கும், எமக்கு எளிமையாதலும் ஒக்கும்" எனக் கூட்டுக. செவ்வழி சேர் - நன்னெறியின் பயனாகக் கிடைக்கும்.

சாதகன் செய்வன

2582. எறிவது ஞானத்து உறைவாள் உருவி;
அறிவதனோடே அவ் ஆண் - தகையானைச்
செறிவது தேவர்க்கும் தேவர் பிரானை,
பறிவது பல்கணப் பற்று விடாரே.

எறிவது ஞானத் துறைவா ளுருவி
யறிவத னோடேயவ் வாண்டகை யானைச்
செறிவது தேவர்க்குந் தேவர்பி ரானைப்
பறிவது [1]பல்கணப் [2]பற்றுவி டாரே. (10)

வேறு பாடம்: 1. பல்காமல் (அ) IV. 2. பற்றுவிட் (ஈ ஓ) I.

கருத்து: சாதகர் ஞானமாகிய வாளைக் கொண்டு பற்றுக்களை அறுத்தெறிக. தலைவனும் தேவதேவனுமாகிய சிவனை அறிக. அதனோடு, அவனைக் கூடுக. உலகப் பற்றுகளை விடாத கூட்டத்தாருடன் பழகாமல் நீங்குக.

எறிவது முதலிய தொழிற்பெயர்கள் வியங்கோட் பொருளில் வந்தன.

அத்துவ சோதனை

2583. ஆதிப்பிரான் தந்த வாள் அங்கைக் கொண்டபின்
வேதிக்கில், என்னை விலக்க வல்லார் இல்லை,
சோதிப்பன் அங்கே சுவடு படா வண்ணம்
ஆதிக்கண் தெய்வம் அவன், இவன் ஆமே.

ஆதிப்பி ரான்றந்த வாளங்கைக் கொண்டபின்
[1]வேதிக்கி லென்னை விலக்கவல் லாரில்லை
சோதிப்ப னங்கே [2]சுவடுப டாவண்ண
மாதிக்கட் டெய்வ மவனிவ னாமே. (11)

வேறு பாடம்: 1. வேதித்து வென்னை (ஓ) II; வேதித்திங் கென்னை (த) தருமபுரப் பதிப்பில் இங்ஙனம் பாடத்தை வேண்டியவாறு மாற்றிக் கொண்ட பின்னும், (விசு) பதிப்பிற் கண்ட பாடத்திற்குரிய (ஓ - சுவடிப்பாடம்), "குற்றியலுகரம் கெடாது நின்றது" என்று இலக்கணக் குறிப்பு எழுதப்பட்டுள்ளது. 2. சுவடும் படாவண்ண (த).

கருத்து: சிவபிரான் அளித்த ஞானமாகிய வாளை நான் ஏந்தியபிறகு, அப்பெருமான் என்னைச் 'சிவமாக்க' முனைந்தால், அவனைத் தடுப்பார் ஒருவரும் இல்லை. படைப்புக்கு முதல்வன் அவன். படைப்பு வாயில்களாகிய அத்துவாக்களை அவன் ஆய்ந்து, அவை இருந்தமைக்கான, சுவடு தெரியாதவாறு, ஞானவாளால் நீக்குவிப்பான். பின்பு ஆன்மாவைச் 'சிவம்' ஆக்குவான்.

ஆறு அத்துவாக்களையும் ஆய்ந்து நீக்குவிப்பதே சோதனை. அவை, வன்னம், பதம், மந்திரம், தத்துவம், புவனம், கலை என்பவை ஆகும். இவற்றுள், தத்துவங்களிலிருந்து நீக்குதலை, 'ஐந்தவத்தை' என்னும் பகுதியில் விரிவாகக் கூறினார். கலைகள் பிரதிட்டை, நிவிர்த்தி, வித்தை, சாந்தி, சாந்தியதீதை என்ற ஐந்து. இவை நீங்குதலும் அவத்தை நிலையே. ஆயினும், ஆசிரியர் 'முப்பாழ்' என்னும் இயலில் இதனைக் கூறினார். அவைகள் நீங்கவே, அவற்றில் உள்ள புவனங்களும் நீங்கும். ஆக, தத்துவம், கலை, புவனம் - என்ற மூன்றாகிய அர்த்தப் பிரபஞ்சம் (பொருள் உலகு) நீங்குதலைக் கூறினார். இவற்றைப் படைக்கும் சப்தப் பிரபஞ்சம் (சொல் உலகு) வன்னம், பதம், மந்திரம் என்பவை. இவை நீங்குதலும் 'முப்பாழ்' - இயலிற் கூறப்பட்டது.

சோதனையின் பயன்

2584. அந்தக் கருவை [1]யருவை வினைசெயற்
பந்தம் [2]பணியச்சம் பல்பிறப்பும் வாட்டிச்
[3]சிந்தித் திருத்தலுஞ் [4]சேர்ந்தாரச் சோதனை
சந்திக்கத் தற்பர மாகுஞ் சதுரற்கே (12)

வேறு பாடம்: 1. யருவினைச் செயல் (அ ஓ) I; யருவினையச்செயல் (ஆ இ) I; யருவவினை செயல் (ஓ) I; வினைசெய்தற் (துடி) 2. பிணியச்சம் (ஓ) I; பனியச்சம் (த) 3. சிந்தை (விசு) (தி) (வ) (த) 4. சேர்ந்தார் (அனை சுவ) பதிப்புகளில் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்டது.

கருத்து: பிறப்புக்கு மூலமாக உள்ள ஆணவ மலத்தையும், அருவமாக உள்ள மாயையையும், வினை செய்தலால் விளைந்த கன்மம் என்ற மலத்தையும், அது தந்த அச்சத்தையும், வினையால் உண்டாகிய பல பிறப்புகளையும் ஞானத்தினால் ஆய்ந்து, நீக்கிக் கொள்ளும் வாய்ப் புடைய வல்லாளர், அந்தச் சோதனையால் மேம்பட்ட நிலையை அடைவர்.

என்னுட் புகுந்தான், இறவாமை தந்தான்

2585. உரை அற்றது ஒன்றை உரைத்தான் எனக்கு,
கரை அற்று எழுந்த கலைவேட்டு அறுத்துத்
திரை ஒத்த என் உடல் நீங்காது இருத்திப்
புரை அற்ற என்னுள் புகும் தற்பரனே.

உரையற்ற தொன்றை யுரைத்தா னெனக்குக்
கரையற் றெழுந்த கலைவேட் டறுத்துத்
திரையொத்த வென்னுட னீங்கா திருத்திப்
புரையற்ற வென்னுட் புகுந்தற் பரனே. (13)

கருத்து: சிவன் எனக்குச் சொல்லொணாத ஒன்றைச் சொன்னான். அதுமுதல் கலைஞானம் பெறும் வேட்கை நீங்கியது. கடல் அவைபோல மாறி மாறிப் பிறக்கும் என் உடலை இறவாமல் செய்து, ஆணவ மலம் நீங்கப்பெற்ற என் உணர்வில் புகுந்தான்.

“கேளாதன வெல்லாம் கேட்பித்து” என்பார் மணிவாசகரும் (திருவா. திருச்சதகம். பா. 28) சிவன் சொல்லியவை அது வரை கேளாதவை. அவற்றைக் கேட்டவுடன், முன்பு கேட்ட கலைஞானத்தில் வேட்கை நீங்கிற்று. வேட்டறுத்தல் - வேட்கை நீக்குதல். வேட்டல், ஈறு கெட்டது.

குறிப்பு: இப்பாடல் (துடி) பதிப்பில் இல்லை.

147. இலக்கணாத்திரயம்

இலக்கணை மூன்று

2586. விட்ட விலக்கணை [1]தான்போம் வியோமத்துத்
தொட்டு விடாத துபசாந்தத் தேதொகும்[2]
[3]விட்டு விடாதது மேவுஞ்சத் தாதியிற்
சுட்டு மிலக்கணா தீதஞ் சொரூபமே. (1)

வேறு பாடம்: 1. தாம்போம் (அ ஆ) I; காண்போம் (ஓ) I. 2. தேதொக்கும் (சங்) 3. விட்டும் (த).

கருத்து: ஆன்மாவின் இலக்கணமாகச் சென்ற இயல்களுள் கூறிய சிலவற்றை இலக்கண நோக்கில் காட்டுகின்றார். ஆன்மாவின் தடத்த இலக்கணங்களுள் மூன்று, இப்பாடலில், இலக்கணை என்று இனங்காட்டப்படுகின்றன. இலக்கணையின் மூன்று வகையும் இங்குக் காணப்படுகின்றன.

(ஆன்மாவின் தடத்த இலக்கணங்களுள்) 'அது பல உலகங்களிற் பிறந்தும், இறந்தும் உழல்கின்றது' என்பது விட்ட இலக்கணை. 'ஆன்மா உபசாந்த நிலையை அடைந்தது' என்பது விடாத இலக்கணை. 'ஆன்மா ஒலியைக் கேட்கும், உருவத்தைப் பார்க்கும்' என்பது விட்டும் விடாத இலக்கணை. ஆன்மாவின் சொரூபம் இலக்கணம் கடந்தது.

இலக்கணை என்பது 'லக்ஷண' என்னும் வடசொல்லின் திரிபு. ஆயின், 'இலக்கணா' என்பதைத் திரிபாகக் கொண்டு, இயலுக்குப் பெயர் அமைக்கப்பட்டுள்ளது. திரயம் - மூன்று.

குறிப்பு: அ, ஆ, ஒ - சுவடிகளில் இவ்வியல் இவ்விடத்து உள்ளது. ஏனைய சுவடிகளில் 'வாய்மை' - இயலை அடுத்துள்ளது. பதிப்புகளிலும் இவ்வாறே உள்ளது. இப்போதைய பதிப்பு, வைப்பு முறைப் பொருத்தம் நோக்கி, அ, ஆ, ஒ - சுவடிகளைப் பின்பற்றுகின்றது.

புலன்கள் வீழ ...

2587. வில்லின் விசை நாணில் கோத்து, இலக்கு எய்தபின்
கொல்லும் களிறு ஐந்தும் கோலொடு சாய்ந்தன,
இல்லுள் இருந்து, எறிகூரும் ஒருவற்குக்
கல், கலன் என்னக் கதிர் எதிராமே.

வில்லின் விசைநாணிற் கோத்திலக் கெய்தபின்
கொல்லுங் களிறைந்துங் [1]கோலொடு சாய்ந்தன
வில்லு [2]ளிருந்தெறி [3]கூரு மொருவற்குக்
கல்கல னென்னக் கதிரெதி ராமே. (2)

வேறு பாடம்: 1. கூடவே (ஆ) II. 2. ளிருந்தெரி (அ, ஆ, இ, ஈ, ஓ) I; பதிப்புகளில் உள்ள பாடம் மேற்கொள்ளப்பட்டது. 3. கூறு (சங்)

கருத்து: வில்லினிடத்தில், வேகம் பொருந்திய நாணில் அம்பைப் பொருத்தி, இலக்கைக் குறிவைத்து எய்த பொழுது ஐந்து யானைகள் மடிந்தன. அதுபோல, பொருந்திய இருக்கையில் (ஆசனம்) இருந்து, பிரணவமாகிய வில்லில், திருவைந்தெழுத்து ஆகிய நாணில், உயிருணர்வு என்னும் அம்பைத் தொடுத்து, 'இறைக்காட்சி' என்ற இலக்கை நோக்கி எய்தால், ஐந்து புலன்களாகிய யானைகளும் வீழும்; மாணிக்கக் கல்லும், அது பதிக்கப் பெற்ற அணிகலமும் போன்று, திருவருளும், அதிற் பொதிந்துள்ள சிவமும் சோதி வடிவில் காட்சிப்படும்.

இஃது ஒட்டணி அமைந்த பாடல், ஒட்டணி விட்ட இலக்கணை ஆகும். மேற்பாடலும் இதுவும் முன்பு கூறிய செய்திகளையே இலக்கண நோக்கில் மீண்டும் எடுத்துக் காட்டுகின்றன.

148. 'தத்துவமசி' - வாக்கியம்

முத்துரிய அனுபவம்

2588. சீவதுரியத்துத் 'தொம்' - பதம் சீவனார்;
தாவு பரதுரியத்து அற்ற 'தத்' - பதம்;
மேவு சிவதுரியத்து 'அசி' - மெய்ப்பதம்
ஓவி விடும் 'தத்துவமசி' உண்மையே.

சீவ துரியத்துத் தொம்பதஞ் சீவனார்
தாவு பரதுரி [1]யத்தற்ற தற்பத
[2]மேவு சிவதுரி யத்தசி மெய்ப்பத
மோவி விடுந்தத் துவமசி யுண்மையே. (1)

வேறு பாடம்: 1. யத்தினிற் (விசு) (தி) (வ) (த) 2. மேய வுபசாந்தம் பேறாகிய (ஓ) I.

கருத்து: முன்பு 'முத்துரியம்' என்னும் இயலின் "தானா நனவில்" என்ற பாடலில் (எண் : 2440) கூறியதை, விளக்கத்திற்காக இங்கு மீண்டும் கூறுகின்றார்: 'தத்துவமசி' என்பதைத் 'தொந்தத்தசி' என வைத்து நோக்கினால், 'தொம்' (த்வம்) என்பது, தத்துவங்களின் தொடர்பு இன்றித் தானாய் நின்று, துரியாவத்தையை - அதாவது சுத்த துரியாவத்தை என்ற சீவ துரியாவத்தையை - அனுபவிக்கும் உயிர் ஆகும். 'தத்' - பதம் என்பது அவ்வுயிர் 'சீவன்' என்ற நிலை

அற்று, பரநிலையில், துரியத்தை, அதாவது பரதுரியத்தை - அனுபவித்தல் ஆகும். (அந்நிலையில் உயிர் பராசத்தியையும் பரசிவத்தையும் அனுபவிக்கும்.) அசி - என்பது, உயிர் சிவதுரியத்தை அடைந்து, பராசத்தியையும் விடுத்து, சிவத்தை உணர்ந்து, அவனோடு ஒன்றிச் சிவமே ஆதல்.

தொடக்கத்திலிருந்து சத்தி, சிவம் என இரண்டாகவே உயிரினால் உணரப்பெற்று வந்த முழுமுதற்பொருள், சிவ துரியத்தில், அந்த இருமை அற்று, ஒரு பொருளாக உணரப்படும், அகண்டாகார சிவமாக உணரப்படும். அதனுடன் ஆன்மா கலந்து, தன்னைச் 'சிவமாக' உணரும். ஆதலின் இதனை 'அசிமெய்ப்பதம்' என்றார். அதன் விரிவு 2442 - ஆம் பாடல் உரையிற் கூறப்பெற்றது.

முப்பாழில் வாக்கியம்

2589. ஆறாறு அகன்ற அணு தொம்பதம் சுத்தம்;
ஈறு ஆன தற்பரம் எய்து உபசாந்தத்துப்
பேறு ஆகிய சீவன் நீக்கு இப்பிரசாதத்து
ஈறு ஆன 'தொம் - தத் - அசி' தத்வமசியே.

ஆறா றகன்ற வணுத்தொம் பதஞ்சுத்த
மீறான [1]தற்பர மெய்துப சாந்தத்துப்
பேறா [2]கியசீவன் [3]னீக்கிப் பிரசாதத்
[4]தீறான தொந்தத் தசிதத் வமசியே. (2)

வேறு பாடம்: 1. தற்பத (சங்) 2. கிய சீவனை (அ ஈ ஒ ஓ) I. 3. னீங்கிப் (விசு) (தி) (வ) (த) 3. பிராத்துவ (ஓ) I. 4. வீறான (ஓ) I.

கருத்து: மேற்பாடலிற் கூறியதையே 'முப்பாழ்' என்பதோடு தொடர்புபடுத்திக் கூறுகின்றார். உயிர் முப்பத்தாறு தத்துவங்களும் நீங்கப் பெற்றுச் சுத்தாவத்தையில் (போதப்பாழ் அல்லது சீவப்பாழ் என்னும் நிலையில்) நிற்கும் பொழுது 'தொம்' - என்ற பதத்துக்கு உரிய பொருளாகும். (அப்பொழுது தான் உயிர் 'தொம்' - எனச் சொல்லப்படும்) தற்பரத்தை' அடைய முயலும் உயிர் 'உபசாந்த' நிலையைப் பெற்று (தத் - என்ற பதத்திற்குப் பொருளாகும்.) பிறகு, முடிநிலையாகிய சிவப்பேற்றை அடைவதற்காக, அந்த உபசாந்தத்தையும் நீக்கிச் செல்வதாகிய 'உபசாந்தப் பாழ்' என்ற நிலையை அடைந்து, பிராசாத யோகத்தின் முடிவில், 'அசி' என்ற பதத்தின் பொருள் ஆகும். தத்வமசி வாக்கியம் 'இவ்வாறு, 'தொம் - தத் - அசி' என நின்று பொருள் தருகின்றது.

ஆசிரியர் தம் அனுபவமாதலின், 'இப்பிரசாதம்' என்றார். பிராசாத கலைகள் பராவத்தை, சிவாவத்தைகளில் அனுபவிக்கப்படுதலைப் "பதினோராந் தானமும் அவத்தை எனக் காணல்" என்னும் இயலில் (இயல் எண் : 120 - (7) பாடல்கள் எண். 2273, 2274 - ஆகியவற்றின் உரையில் காட்டினோம்." ஈண்டு "இப்பிராசாதத்து ஈறான" என்று கூறியவாறு, 12 பிராசாத கலைகளுள், இறுதியான சமனை, உன்மனை என்னும் இரு கலைகளின் அனுபவத்தில் 'சிவ துரியாதீதம்' அடங்குதலை அங்கே காண்க.

குறிப்பு: இப்பாடலை அடுத்து, ஆ - சுவடி தவிர, ஏனைய சுவடிகளில் உள்ளதும், பதிப்புகளில் உள்ளதுமாகிய "ஆகிய வச்சோயம்" என்பது "முச்சூனிய தொந்தத்தசி" என்ற இயலில் 2465 ஆம் பாடலாகச் சில பாடவேறுபாடுகளுடன் வந்தது.

சித்தாந்த விளக்கம்

2590. 'த்வம்-தத்-அசி'-யே தொந்தத்தசியும்,
அவை மன்னும் அன்னுவயத்து ஏகம் ஆன;
தவம் உறு தத்வமசி வேதாந்தம்,
சிவம் ஆகுமது சித்தாந்த - வேதாந்தமே.

[1]துவந்தத் தசியே தொந்தத் தசியு
[2]மவைமன்னு [3]மன்னுவ யத்தேக மான
[4]தவமுறு தத்து வமசிவே தாந்தஞ்
[5]சிவமா [6]குமதுசித் தாந்தவே தாந்தமே[7]. (3)

வேறு பாடம்: 1. துமம் சித்ததியே (அ) I; துவம்சித்மசியே (இ) I; துவத்தத்தசி (ஓ) I; (பதிப்புகளில் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்டது) 2. மவைமன்ன (இ ஈ ஒ) I; மவைவன்ன (அ) I; மவைமன்னா (த) 3. மந்துவ (சங்) வந்து (சைவ) 4. தவவுறு (த) தவமன்னு (தி) 5. சிவமாக் (ஒ ஓ) I; சிவமாகுமதுஞ் (தி) சிவமா மதுவும் (த) 6. குமதுமசி (அ) I; குமதுசித்த (ஓ) I; குந்தொம்மசி (இ) II; மதுஞ்சித் (சைவ) கும்துஞ்சித் (சங்) 7. வேதமே (இ ஈ ஒ ஓ) II; போதமே (அ) II.

கருத்து: 'தத்துவமசி' வாக்கியஃமே, தொந்தத்தசி எனக் கொண்டு கூட்டப்படுகிறது. தவத்தின் பயனாக அடையப்பெறுவது 'தத்வமசி' எனக் கொள்வது வேதாந்தம். 'சிவத்வமசி' அதாவது, சிவமாதல் எனக் கொள்வது வேதாந்த சித்தாந்தம்.

வேதாந்தம் - வேதங்களின் முடிந்த பொருள். வேதாந்த சித்தாந்தம் - ஆகமங்களாகிய சித்தாந்த நூல்கள் - அந்த வேதாந்தத்தை விளக்கும்

விளக்கம். அதாவது, வேதாந்தம் (வேதத்தின் முடிந்த உண்மை இன்னது என முடிவெடுத்துக் கூறுவன). சிவமாதலே, நிராதார அனுபவமாக சிவதுரியாதீதமாகக் கூறப்பட்டது. அதையே 'தொந்தத்தசி' என்ற அன்வய வடிவம் குறிக்கின்றது.

முதல் அடியில், முதற்சீர்: 'தத்வமசி' என்பதை எதுகை நோக்கித் 'துவம்தத்தசி' என்றார்.

மேலும் புதிய அனுபவம்

2591. துரியம் அடங்கிய சொல் அறும் பாழை
'அரிய பரம்' என்பர் ஆதர்; இன்று என் ஆய்
உரிய, பரம்பரமாம் ஒன்று உதிக்கும்
அருநிலம் என்பதை யார் அறிவாரே?

துரிய மடங்கிய [1]சொல்லறும் பாழை
யரிய [2]பரமென்ப [3]ராதரின் றென்னா
[4]யுரிய பரம்பர [5]மாமொன் றுதிக்கு
மருநில மென்பதை [6]யாரறி வாரே. (4)

வேறு பாடம்: 1. சொல்லுறு (ஒ) I. 2. பரம்பரமென்பர்களாதர்க ள் (ஆ இ) I. 3. ராதாரின் (அ ஈ ஒ) I; ராகாரி தன்றென்னார் (ச ங்) 4. ருரிய (விசு) (தி) (வ) (த) 5. மாமென் (அ ஈ ஒ) I; மாமென்றே துதிக்கு. (ஆ இ) II. 6. யாருமறியாரே (அ) IV.

கருத்து: சுத்த துரியம் என்னும் அவத்தை என்றும், 'சீவப்பாழ்' என்றும் கூறப்படும் உணர்வுநிலையை, அறியாதார் 'அடைவதற்கு அரிய மேலான நிலை' எனப் பொதுவாகக் (பொருள் விளக்கம் இன்றிக்) கூறுவர். இன்று, என்னை (உயிரை) ஆராய்வதற்குரியதும், பரம்பரம் என்னும் அரிய பொருள் உயிருணர்வுக்குப் புலப்படும் இடமும் ஆகிய வெளிஅது என்று யான் அறிந்தேன். ஆனால், பிறர் அறிவாரோ?

ஆய் உரிய - நுண்மை ஆதற்குரிய. எனவே, 'என்னை ஆய்தல்' என்பது, என் உயிருணர்வை நுண்ணியது ஆக்குதல் எனப் பொருள்படும். ஆய் - முதனிலைத் தொழிற்பெயர், உணர்வு இல்லாதார், அரியது, மேலானது எனப் பொதுவாகக் கூறும் நிலையானது, உணர்வுடையார்க்கு ஒரு புது அனுபவம் - 'பரம்பரம்' எனப்படும் அனுபவம் - தோன்றும் இடமாக (வாய்ப்பாக) இருக்கிறது. "என் ஆய் உரிய அருநிலம் ; பரம்பரமாம் ஒன்று உதிக்கும் அருநிலம்" - எனப் பிரித்துத் தனித்தனிக் கூட்டுக.

குறிப்பு: முன்னர்ச் சென்ற 'முப்பாழ்' - இயலில், இப்பாடலை ஒத்த பாடல் உள்ளது. (எண். 2470) அதன் பொருள் வேறுபடுமாற்றை பாடவேறுபாட்டுடன் ஒப்புநோக்கி, நுட்பமாய் உணர்க.

முன்னேற்றம்

2592. தொம்-பதம், தத்-பதம், சொல்லும் அசிபதம்
நம்பிய முத்துவம் முற்றும் மேல் நாட -
(ஏ) யும் பதம் முப்பதம் ஆகும் உயிர் பரன்
செம்பொருளான சிவம் எனலாமே.

தொம்பதந் தற்பதஞ் சொல்லு மசிபத[1]
நம்பிய [2]முத்துவ முற்றுமே னாடவே
யும்பத [3]முப்பத மாகு முயிர்பரன்
செம்பொரு ளான சிவமென லாமே. (5)

வேறு பாடம்: 1. சிவபத (அ ஆ) II. 2. முத்துரி யத்துற (ஆ) II; முத்துரிய (ஓ) II; முத்துரியத்துமே (விசு) (தி) (வ) (து) 3. முப்பதார்த்த (ஈ ஓ) II மும்பத (சைவ).

கருத்து: தொம், தத், அசி - என மூன்று சொல்லாகக் கூறப் பட்டாலும் அவை தம்முள் தொடர்ந்து, ஒரு பொருளையே உணர்த்துகின்றன. அந்த 'முப்பத அர்த்தம்' யாது எனின்; இவை மூன்றிலும் உள்ள தன்மைகள் முறையே, பசுத்தன்மை (ஆன்ம போதம்), இறைத் தன்மை, ஒன்றி நிற்கும் சேர்க்கை யின்பம் - என்பவை, தாம் உள்ள நிலையினும் மேல், மேல் மேன்மேற் செல்லச், செம்பொருளான (Absolute Truth) சிவத்தின் அனுபவம் வளர்ந்து வருதலாகும். மேன்மேற் செல்லுதலாவது, உயிர் பரன் ஆகிப் பிறகு, சிவமாதல்.

உயிர், தனது பசுத்தன்மையை விட்டாலே பரனாதல் இயலும். இறைத்தன்மை மேன்மேற் செல்லுதலாவது, "எண் இறந்து எல்லை இலாதவன் ஆகிய" சிவத்தை உயிர் மேலும் மேலும் புதியதாக அறிதல். இதனைக் கருதியே மணிவாசகர், திருக்கோவையாரில், "உணர்ந் தார்க்கு உணர்வு அரியோன்" என்றார். (பாடல் எண் : 9) ஒன்றி நிற்கும் சேர்க்கை இன்பம் மேன்மேல் செல்லுதலாவது, இத்திருக்கோவைப் பாடலிற் கூறுவது போல், "இக்கொடியிடை தோள் புணர்ந்தால், புணருந்தொறும் பெரும்போகம் பின்னும் புதிதாய் ..." வளர்தல் போல, சிற்றம்பலமாகிய அகண்டாகாரப் பரவெளியில் விளங்கும் சிவத்தை

உணர்ந்தால், உணருந்தோறும் பேரின்பம் பின்னும் புதிதாய் வளர்தலாகும்.

வினைமுடிவு: "முத்துவம் முற்றும் மேனாட ஏயும் பதம் சிவமெனலாமே" என்பது.

குரு உபதேசம்

2593. வைத்த துரிய [1]மதிற்சொரூ பானந்தத்
துய்த்த பிரணவ மாமுப தேசத்தை
மெய்த்த விதயத்து விட்டிடு மெய்யுணர்
வைத்த படியே யடைந்துநின் றானே. (6)

வேறு பாடம்: 1. மதி சொரூ (அ ஆ இ ஈ) I.

கருத்து: சிவதுரியம் என்னும் உணர்வு நிலையில், சிவனது சொரூபத் திருமேனியை உணர்ந்து பேரின்பம் அடையுமாறு, ஆன்மாவைச் செலுத்தவல்ல பிரணவ உபதேசத்தை இதயத்தில் நிறுத்திய (சகஸ்ரார அனுபவம் பெற்ற) சீடன் மும்மலங்களையும் நீக்குவதாகிய மெய்யுணர்வை, (இறைவன் குருவாக வந்து) அருளியவாறே அடைந்தான்.

அந்த மெய்யுணர்வு மேற்பாடலில் கூறப்பட்டது. பிரணவ உபதேசம் செய்தவன் இறைவனாகிய குரு என்க.

முப்பதமும் முப்பாழும்

2594. நனவு ஆதி ஐந்தையும், நாத - ஆதியில் வைத்து,
பினம் ஆம் மலத்தைப் பின்வைத்துப்; பின் சுத்தத்
தனது ஆம் சிவகதி சத்த - ஆதி சாந்தி
மன, வாசகம் கடந்த மன்னனை நாடே.

நனவாதி யைந்தையு [1]நாதாதியில் வைத்துப்
பினமா மலத்தைப்பின் [2]வைத்துப்பின் சுத்தத்
தனதாஞ் [3]சிவகதி சத்தாதி சாந்தி
மனவா சகங்கெட்ட மன்னனை நாடே. (7)

வேறு பாடம்: 1. மனாதியில் (இ ஈ) II; நவாதியில் (ஆ) I. 2. பெத்துப்பின் (அ இ ஈ ஒ) I; பொத்துப்பின் (ஒ) I. 3. சிவாகாதி (ஆ இ ஈ ஒ) I.

கருத்து: மேலே பிரணவ யோகத்தைக் கூறியவர், இங்கு, அவத்தை, பாழ்தத்வமசி வாக்கியப் பொருள் - என்பவற்றை அதனுடன் தொடர்புபடுத்திக் கூறுகின்றார். சகலாவத்தைகளான (மத்தியாலவத்தையில்) சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்பவற்றை முறையே பிரணவத்தின் கூறுகளான அ, உ, ம, விந்து நாதம் ஆகியவற்றைத் தியானிப்பதால் அடைக. அடைந்தால் உயிர் 36 தத்துவங்களாக உள்ள மாயா மலத்தை நீக்கி, 'மாயப் பாழ்' ஆகிய நிலையை அடையும். அது சுத்தாவத்தைகளை எய்துதற்கு உரிய தகுதி. இதைத் 'தொம்' -பதம் என்பர். பிறகு. சுத்தாவத்தைகள் ஐந்தையும் மீண்டும் பிரணவத்தின் ஐந்து கூறுகளையும் முறையே தியானிப்பதால் அடைக. அடைந்தால், 'சீவப்பாழ்' என்ற தகுதி வந்து சேரும். இது பராவத்தைகளை எய்துதற்கு உரிய தகுதி. பராவத்தையில் 'சிவகதி' தொடங்கும். இந்த அவத்தைகள் ஐந்தையும், மீண்டும் பிரணவத்தின் ஐந்து கூறுகளையும் முறையே தியானிப்பதால் அடைக. பராவத்தைகளில் சத்தியின் அருளால் உபசாந்தம் உண்டாகும். பின்பு 'உபசாந்தப் பாழ்' என்னும் தகுதி வந்து சேரும். இது சிவாவத்தைகளை அடைவதற்கு உரிய தகுதி. இதைப் பெற்றுச், சிந்தனையும் சொல்லும் கடந்த சிவத்தை - அதன் சொருபத் திருமேனியை - அகண்டாகார வெளியை - உணர்ந்து கொள்ள முயல்க.

நாத ஆதி என்பதை எதிர் நிரல் நிரையாகச் சாக்கிரம் முதலியவற்றுடன் பொருத்துக. பினமாம் - இடைக்குறை. மாயை என்ற ஒரு பொருள் 36 தத்துவங்களாகஆயினமையின்,"பின்னமாம்" என்றார். (முப்பாழ் என்ற இயல் காண்க). சுத்தத் தனது - சுத்த நிலையை அடைந்த உயிரினது. சத் ஆதி சாந்தி - பராசத்தியின் அருளால் உண்டாகும் உபசாந்தம். சத் - சத்தி என்பதன் விகாரம்.

சொரூபம் எத்தகையது?

2595. பூரணியாது, புறம்பு ஒன்று இலாமையின்;
பேர் அணியாதது, பேச்சு ஒன்று இலாமையின்;
ஓர் அணையாதது ஒன்றும் இலாமையின்;
காரணம் இன்றியே காட்டும் தகைமைத்தே.

பூரணி [1]யாது புறம்பொன் றிலாமையிற்
பேரணி யாதது பேச்சொன் றிலாமையி
னோரணை யாதது வொன்று மிலாமையிற்
காரண மின்றியே காட்டுந் தகைமைத்தே. (8)

வேறு பாடம்: 1. யாதது (அ) I; யாவது (ஒ) I.

கருத்து: அகண்டாகார சிவம், தனக்கு வேறாக (அன்னியமாக) எதுவும் இல்லாமையால், முழுமை அடையாது. (ஏற்கனவே முழு முதற் பொருளாக உள்ளது) அது சொல் கடந்து நிற்பதால், பெயர் இடப்பெறாதது. ஒரு செயலும் உடையதன்று ஆதலின், சிந்தனைக்கு அப்பாற்பட்டது. ஆயினும் ஏது இல்லாமல், தன்னைக் காட்டக் கூடியது.

பூரணித்தல் - முழுமையடைதல். ஏது - காரணம்; காரணமாக அமையும் சூழல். இது மாந்தரின் தகுதி பாராமல் அருளல். ஓர்தல் என்னும் தொழிற்பெயர் முதனிலை அளவாய் நின்றது; நினைத்தல்.

ஆவதா? ஆக்கப்பெறுவதா?

2596. 'நீ அது ஆனாய்' - என நின்ற பேருரை
'ஆயது நான் ஆனேன்' என்னச் அமைந்து அறச்
சேய சிவமாக்கும் சீர்நந்தி பேரருள்
ஆயதுவாய், அனந்தானந்தி ஆமே.

நீயது வானா யெனநின்ற பேருரை
யாயது நானானே னென்னச் சமைந்தறச்
சேய சிவமாக்குஞ் சீர்நந்தி பேரரு
ளாயது வாயனந் தானந்தி யாகுமே. (9)

கருத்து: 'நீ அது ஆனாய்' எனப் பொருள்படும் முன்னிலைத் தொடரான 'தத்வமசி' - வாக்கியம் சீடனால் அனுபவமாகப் பெறப் படும் போது, 'நான் அது ஆனேன்' என்ற பொருள்படுமாறு, 'அகம் பிரம்மாஸ்மி' என்று சொல்லப் படும். இங்ஙனம் உயிர் அனுபவம் பெறுமாறு சிவனது அருளே செய்கிறது. இவ்வனு பவத்தில் உயிர் முதலில் அருள்மயமாகும். பின்பு, சிவமாகும். அளவு இல்லா ஆனந்தத்தை உடையதாகும்.

பொருள் ஒன்றே யானால் அனுபவம் எங்கே?

2597. உயிர் பரமாக உயிர்பர; சீவன்
அரிய சிவமாக, அச்சிவம், வேதத்
திரியிலும் சீராம் பராபரன் என்ன
உரிய உரை அற்ற ஓம் மயமாமே.

உயிர்பர மாக [1]வுயிர்பர சீவ
னரிய சிவமாக [2]வச்சிவம் வேதத்
திரியிலுஞ் சீராம் பராபர னென்ன
வுரிய வுரையற்ற வோமய மாமே. (10)

வேறு பாடம்: 1. வுயர்பர (இ) I. 2. வச்சிவ (அனை. சுவ) தி - பதிப்பில் உள்ளவாறு பதிப்பிக்கப்பட்டது.

கருத்து: உயிர், பராவத்தையில், தற்பதம் என்ற நிலையை அடையின், பரவுயிர் என்று கூறப்படும். அந்தப் பரவுயிர், அடுத்து 'அசிபதநிலையில்', சிவதுரியத்தில், சொரூப சிவத்துடன் கலந்து, சிவமே ஆகும்பொழுது, மூன்று வேதங்களும் 'பராபரன்' என்று கூறும் வண்ணம் பிரணவ மயமாகும்.

பிரணவத்தை அனுபவிக்கும் என்றபடி. இந்த அனுபவத்தைச் சிவமே தனது அருளால் அளிக்கின்றது என்பது கருத்து.

அனுபவம் அளிப்பவனும், அனுபவமும் இருக்க, அனுபவிக்கும் உயிர் தனிப் பொருளாகவே கொள்ளப்பட வேண்டும் என்பது உணரவே 'பிரணவ மயம் ஆகும்' என்றார்.

மேற்பாடலில் உயிரைச் சிவமாக்குவது சிவனே என்றவர், இங்குச் சிவனே உயிருக்கு அனுபவம் தருகிறான் என்று கூறிப் பொருள் இரண்டு ஆதலை - இறையும் உயிரும் வேறு வேறு ஆதலைச் சாதித்தார்.

பிரணவத்தியான இடங்கள்

2598. வாய், நாசியே, புரு, மத்தகம், உச்சியில்
ஆய் நாசி உச்சி முதலவையாய் நிற்கும்
தாய்நாடி - ஆதி, வாக்கு - ஆதி, சகலாதி,
சேய் நாடு ஒளியோன் சிவகதி ஐந்துமே.

வாய்நாசி யேபுரு மத்தக முச்சியி
லாய்நாசி யுச்சி முதலவை யாய்நிற்குந்
தாய்நாடி யாதிவாக் காதி சகலாதி[1]
சேய்நா [2]டொளியோன் சிவகதி யைந்துமே. (11)

வேறு பாடம்: 1. கலாதி (அ ஒ) I; கலாதிகள் (த) 2. டொளியெனச் (விசு) (வ) டொளியாச் (தி) (த).

கருத்து: மேல், "நனவாதி ஐந்தையும்" என்னும் பாடலில் (எண்:2594) பிரணவ யோகத்தில் சகலாவத்தை, சுத்தாவத்தை, பராவத்தை, சிவாவத்தை ஆகிய வரிசைகளில் அனுபவம் பெறப்படுதலைக் கூறினார். மேலும் பராவத்தையில் சிவகதி தொடங்கும் என்றும் கூறினார். இப்பாடலில் பிரணவத்தின் ஐந்து கூறுகளும், இந்நான்கு வகை அவத்தைகளைப் பெறுவதற்கு, உடம்பில் எவ்வெவ்விடங் களில் வைத்துத் தியானிக்கப்பெற வேண்டும் என்று கூறுகின்றார்.

சகலாவத்தை முதலியவற்றில் தொடங்கிப் பராவத்தை, சிவாவத்தை என்ற வரிசைகளில் ஐந்து, ஐந்தாக உள்ள அவத்தைகளை அடைய, மூலநாடியான மூலாதாரத்தில் தொடங்கிச் சுழுமுனை வழியாக மேலேறி, (கழுத்தில் அருட்சத்தியுடன் இணையப்பெறும்) மூலக்கனலைப் பயன்படுத்திப் பிரணவத்தின் கூறுகளான நாதம், விந்து, ம, உ, அ என்ற ஐந்தையும் எதிர் நிரல் நிரையாக, முறையே மூக்கு, புருவமத்தி, நெற்றிநடு, உச்சந்தலை, அதற்கு மேல் 12 அங்குல வெளி என்ற ஐந்து இடங்களில் வைத்துத் தியானிக்க வேண்டும்.

சேய்நாடுஒளி - தொலைவுவரை எட்டுகின்ற ஒளி; சிதாகாயத்தில் திகழும் சோதி. ஒளியோனது சிவகதி என்க.

வினைமுடிவு: சிவகதி ஐந்தும் வாக்காதி முதலவையாய் நிற்கும் என முடிவு காண்க. இப்பாடலுக்கு மேலைப் பாடலின் தொடர்பு காணாது, முன்னையுரைகாரர்கள் பொருந்தாப் பாடங்கொண்டு, பலவாறு உரை கூறி இடர்ப்பட்டனர்.

இவன் அறியான், அவன் அறிஞன்

2599. அறிவறி யாமை யிரண்டு மகற்றிச்
செறிவறி வாயெங்கு நின்ற சிவனைப்
பிறிவறி யாது பிரானென்று பேணுங்[1]
குறியறி யாதவர் கொள்ளறி யாரே. (12)

வேறு பாடம்: 1. பேணார் (த)

கருத்து: கருவி கரணங்களால் அறியும் அறிவையும், ஆணவமலத் தால் உண்டாகும் அறியாமையையும் நீக்கி, எல்லாப் பொருளிலும், இடத்திலும், உயிர் தோறும் நீங்காது, அறிவாக நின்று, (உயிர்கட்குக் காட்டிக் காணும்) சிவபிரானைக் கணமும் மறவாமல், 'எம்பிரான்' என்று உள்ளங் கசிந்துருகி, அன்பு செய்யும் குறிக்கோளை அறியாதோர், பேரின்பம் கொள்ள அறியாதோரே ஆவர்.

சிவன் வேறாக இருந்தும், உயிர்களுடன் இரண்டு அற்று நின்ற அத்துவிதத்தைச் சுட்டினார். உயிரின் அறிவு பயன் அற்றது என்பதும், உயிர் அறியாமை உடையது என்பதும், இறைவன் அறிவு வடிவானவன் என்பதும் உணர்த்தினார்.

அறிவுத் துணை

2600. அறிவார் அறிவன அப்பும் அனலும்,
அறிவார் அறிவன அப்பும் கலப்பும்,
அறிவான் இருந்து அங்கு அறிவிக்கினல்லால்
அறிவான் அறிந்த அறிவு அறியோமே.

அறிவா ரறிவன வப்பு மனலு
மறிவா ரறிவன வப்புங் கலப்பு[1]
மறிவா னிருந்தங் கறிவிக்கி னல்லா
லறிவா னறிந்த [2]வறிவறி யோமே. (13)

வேறு பாடம்: 1. கயப்பு (அ ஆ இ ஈ ஓ) I; பதிப்புகளில் உள்ளவாறு மேற் கொள்ளப்பெற்றது.

கருத்து: உயிர் அறிவுடையதாயினும், அஃது அறிவன நீரும், தீயும், நிலமும், ஆகாயமுமே. எல்லாவற்றையும் ஒருங்கு அறியும் சிவன், உயிரின் அறிவுக்கு அறிவாக இருந்தும், அதன் அறிவோடு ஒன்றாக இருந்தும், பொருள்களைத் தான் அறிந்து, உயிர்க்கு அறிவிக்கா விடில், உயிர் தனது அறிவால் அறியப் பெறாது.

நான்கு பூதம் கூறினமையின், காற்றை இசையெச்சத்தாற் கொள்க. 2 ஆம் அடியில், 'அப்பூவும்' என்பது செய்யுள் விகாரமாய் அப்பும் என நின்றது. பூ - நிலம். உயிர் ஐம்பூதங்களை அறிதல் கூறித் தன்மாத்திரை களையும் (புலன்கள்) பொறிகளையும், அந்தக் கரணங்களையும் குறிப்பாற் பெறவைத்தார். அறிவான் (3 ஆம் அடி) - சிவன். அறிவான் (4 ஆம் அடி) அறிவினால்.

உயிர் அறிவுடையதாயினும், கருவி கரணங்களின் துணையால் அறிகிறது என்றும், அவ்வாறு அறிவதும், இறைவன் உயிரினுள்ளிருந்து அறிவித்தாலன்றி நிகழாது என்றும் கூறினார்.

தியானப் - பயன்

2601. அடிதொழ முன்னின் றமரர்க ளத்தன்
முடிதொழ வீசனு முன்னின் றருளிப்
படிதொழ நீபண்டு பாவித்த வெல்லாங்
[1]கடிதொழக் காணென்னுங் கண்ணுத லானே. (14)

வேறு பாடம்: 1. கடிதெழக் (த)

கருத்து: தேவர்களின் தலைவனது திருவடியை - வீடுபேற்றை - எண்ணித் தலையால் வணங்கினேனாக, அவனும் எனக்குக் காட்சி தந்து, “நீ முன்பு அகவழிபாட்டின் படிமுறைப்படி தியானித்த (பிரணவக்கூறுபாடுகள்) எல்லாம் இப்பொழுது உனக்கு அனுபவமாகி, விளக்கமாகத் திகழ்வதை வணங்கிக் காண்பாயாக” என்றான்.

பிரணவத்தின் அனுபவமே ‘தத்துவமசி’ என முன்பு கூறியவர், அது சிவன் அருள்வது என இங்குக் கூறுகின்றார்.

தன்போலாக்கினான்

2602. [1]நின்மலன் மேனி நிமலன் பிறப்பிலி
என்னுளம் வந்திவ னென்னடி யானென்னும்[2]
பொன்வளர் மேனி புகழ்கின்ற வானவன்
நின்மல மாகென்று நீக்கவல் லானே (15)

வேறு பாடம்: 1. நின்மல (ஈ ஓ) I. 2. யானென்று (விசு) (தி) (வ) (த)

கருத்து: தூய திருமேனியை உடையவன். மலமற்றவன். பிறவா யாக்கைப் பெரியோன். அவன் என் உள்ளத்திற் புகுந்தான். அதனால், என்னை அடிமையாகக் கொண்டு, தனது அருளை வழங்கினான். தனது பொன்னொளி சிறந்திடும் மேனியை வேதங்கள் புகழுமாறு விளங்கும் இறைவனாகிய அவன், “இவன் நின்மலன் (தூயன்) ஆகுக’ எனக் கருதி, என் மலத்தை நீக்க வல்லவன் ஆவான்.

சிவன், உயிரைத் தன் போல ஆக்கினான் என, ஆசிரியர், தம்மையே காட்டாகக் கொண்டு கூறுகின்றார். முதலில் அடியவன் ஆக்கிப், பிறகு தன்போல ஆக்கினான் என்கின்றார். “தானாகத் தந்தது என்று உந்திபற”, என்பது திருவுந்தியார். (பா. 1)

பிறவாப் பெருநிலை

2603. துறந்துபுக் [1]குள்ளொளிச் சோதியைக் கண்டு
பறந்ததெ னுள்ளம் பணிந்து கிடந்தேன்[2]
மறந்தறி [3]யானென்னை வானவர் கோனு
மிறந்து பிறவாம [4]லீசன்வைத் தானே. (16)

வேறு பாடம்: 1. கொள்ளொளிச் (விசு) (தி) (வ) 2. கிடந்தே (ஓ) I. 3. யாவென்னை (சங்) 4. லீங்குவைத் (சங்).

கருத்து: நான் எனது தற்போதத்தை விட்டுத் திருவருட் சத்தியும் கடந்த, முதற் சோதியாக நின்ற சொரூப சிவத்தை உணர்ந்து தொழுதேன். என் உள்ளம் வியாபகம் கொண்டது. என்னைக் கைவிடாது, தொடக்கம் முதல் அருள் வழங்கி வருகின்ற தேவதேவன், அந்நிலையில் என்னை நிலைத்த வாழ்வின் நிற்க வைத்தான்.

பரந்தது என்பது எதுகை நோக்கி வலித்தல் விகாரம் பெற்றது. சிவன் இச்சை அன்றித் தன் இச்சை ஒன்றும் இல்லாமல் இருந்ததைக் "கிடந்தேன்" என்பதால் உணர்த்தினார். ஆனால், ஈசன் மறவாமல் இவரைத் தன்போல் ஆக்கினான் என்பதால் மறந்தறியான் என்றார். உள்ளொளி - அருளொளிக்கு உள்ளே விளங்கும் ஒளி.

அகண்ட வடிவம்

2604. மெய், வாய், கண், மூக்குச், செவி என்னும் மெய்த்தோற்றத்து
ஐ வாய அந்தக் கரணம், அகிலமும்
எவ்வாய் உயிரும் இறை ஆட்ட ஆடலால்,
கை, வாய் இலா நிறை எங்கும் மெய் கண்டதே.

மெய்வாய்கண் மூக்குச் செவியென்னு மெய்த்தோற்றத்
[1]தைவாய வந்தக் கரண மகிலமு
மெவ்வா யுயிரு மிறையாட்ட வாடலாற்
கைவா யிலாநிறை யெங்குமெய் கண்டதே. (17)

வேறு பாடம்: 1. தவ்வாய (ஆ ஓ) I.

கருத்து: உடம்பின் புறக்கருவிகளான ஐம்பொறிகளும், பிறவும், அகக் கருவிகளான அந்தக்கரணங்களும், உலகத்து அறிவிலாப் பொருள்களும், எங்கும் உள்ள உயிர்களும், சிவன் தம்முடன்

இருந்து இயக்க, இயங்குகின்றன ஆதலின், சிவத்திற்கு என்று உள்ள வடிவம் கை, வாய் முதலிய உறுப்புகள் யாதும் இல்லாத நிறை வடிவமே (அகண்டம்) ஆகும்.

149. விசுவக் கிராசம்

உடம்பு ஒடுங்கும் இடம்

2605. அழிகின்ற சாயாபுருடனைப் போல,
கழிகின்ற நீரில் குமிழியை; காணில்
எழுகின்ற தீயில் கற்பூரத்தை ஒக்கப்
பொழிகின்றது இவ்வுடல் போம் அப் பரத்தே.

அழிகின்ற சாயா புருடனைப் போலக்
கழிகின்ற நீரிற் குமிழியைக் காணி
லெழுகின்ற தீயிற்கற் பூரத்தை யொக்கப்[1]
பொழிகின்ற [2]திவ்வுடற் போமப் பரத்தே. (1)

வேறு பாடம்: 1. யொத்த (அ ஆ இ) I. 2. திவ்வுயிர் (ஒ) I; விவ்வுடற் (விசு) (தி) (வ) (த) 3. போம் வசத்தே (ஆ) I.

கருத்து: கருவி, கரணங்களால் உயிரின் அறிவு, இச்சை, செயல் களைப் புறத்தே புலப்படுத்துகின்றதாகிய இவ்வுடம்பு (மாயையின் காரியம் ஆதலால்) ஆராயும் இடத்து, சிறிது காலம் தோன்றி மறையும் சாயா புருடனைப் போலவும், ஓடும் நீரில் தோன்றி மறையும் குமிழியைப் போலவும், தன்னிடத்தே கொளுவிய தீயினால் எரிந்து நீங்கும் கற்பூரம் போலவும் (தனது முதற் பொருளாகிய மாயையில் ஒடுங்க, மாயை) சத்தியிடம் ஒடுங்கும்.

பரம் - அருள். அருள் என்பது சத்தியாதலின் இங்குச் சத்தியைப் "பரம்" என்றார். இதனால் உடம்பு ஒடுங்கும் இடம் கூறினார்.

உயிர் எங்கே போகிறது?

2606. உடலும் உயிரும் ஒழிவு அற ஒன்றின்,
படரும் சிவசத்தி தானே பரமாம்;
உடலைவிட்டு, இந்த உயிர் எங்கும் ஆகிக்
கடையும் தலையும் கரக்கும் சிவத்தே.

உடலு முயிரு மொழிவற வொன்றிற்
படருஞ் சிவசத்தி [1]தானே பரமா
முடலைவிட் டிந்த வுயிரெங்கு மாகிக்
கடையுந் தலையுங் கரக்குஞ் சிவத்தே. (2)

வேறு பாடம்: 1. தாமே (அ இ ஈ) II.

கருத்து: உடம்பும் உயிரும் இணைந்திருக்கும் காலத்தில், உலகமும் பொருள்களும் ஆகிப் பரவியுள்ள சத்திதான் அவற்றிற்குத் தலைவி. உயிர் ஞானப் பக்குவம் அடைந்துநிற்கும்பொழுது, அது சிவத்தைப் போலவே வியாபகமாகி, முதலும் முடிவும் அற்ற அகண்டாகார சிவத்தில் ஒடுங்கும்.

மேற்பாடலில், உடம்பு ஒடுங்கும் இடம் கூறினார், இங்குப் பக்குவமுற்ற உயிர், வீடுபேற்றில் ஒடுங்கும் இடம் கூறுகின்றார்.

உணர்வுக்குறைவு உயிர்க்கேடு அன்று

**2607. செவி, மெய், கண், வாய், மூக்குச் சேர் இந்திரியம்
அவி இன்றிய மனம் ஆதிகள் ஐந்தும்
குவிவு ஒன்று இலாமல் விரிந்தும் குவிந்தும்
தவிர்வு ஒன்று இலாத சராசரம் தாமே.**

செவிமெய்கண் வாய்மூக்குச் சேரிந் திரிய
மவியின் றியமன மாதிக ளைந்துங்
குவிவொன் றிலாமல் விரிந்துங் குவிந்துந்
தவிர்வொன் [1]றிலாத [2]சராசரந் தாமே. (3)

வேறு பாடம்: 1. றிலான (அ இ ஈ ஒ) I. 2. சராசரத்தானே (அ ஆ இ ஈ) I. 3. தானே (சங்).

கருத்து: இயங்குவன, நிற்பன என்னும் இரு வகை உயிர்களும், ஐம்பொறிகள், மனம் முதலிய நான்கு அகக்கருவிகள், கலை, காலம், நியதி, வித்தை, அராகம் என்னும் ஐந்து கலைகளும் விரியப் பெற்றும், குவியப்பெற்றும் வருவது தொடர்ந்து நடைபெறும். உயிர் அழியாது நிற்கும்.

இங்குக் கூறியது: மரணக் காலம் வரை உயிர்கள் கேடின்றி நிற்க, அவற்றின் அகப் புறக்கருவிகள் தொடர்ந்து. தம் உணர்வு விரிந்தும் குவிந்தும் வரப்பெறும் என்பது.

அவன் செயல் உணர்கின்றேன்

2608. பரன் எங்கும் ஆகிப் பரந்துற்று நிற்கும்
திரன், எங்கும் ஆகிச் செறிவு எங்கும் எய்தும்
உரன், எங்கும் ஆய், உலகு உண்டும் உமிழ்க்கும்
வரம் - இங்ஙன் கண்டு, யான் வாழ்ந்துற்றவாறே.

பரனெங்கு [1]மாகிப் பரந்துற்று நிற்குந்
திரனெங்கு மாகிச் செறிவெங்கு மெய்து
முரனெங்கு மாயுல [2]குண்டு முமிழ்க்கும்[3]
வரமிங்ஙன் கண்டியான் வாழ்ந்துற்ற வாறே. **(4)**

வேறு பாடம்: 1. மாரப் (விசு) (தி) (வ) (த) 2. குண்டுமிழ் செய்யும் (விசு) (தி) (வ) 3. உமிழ்க்கும் (சைவ).

கருத்து: பரசிவன் உலகெங்கும் உள்ள பொருள்களில் 'ஒன்றாய்' நிற்கும் வகைப்பாட்டையும், அவன் எல்லா இடத்திலும் புலப் பட்டும், பொதிந்தும் நிற்கும் பேரறிவுடைமையையும், எல்லாப் புவனங்களிலும் உள்ள உலகங்களைத் தன்னுள் ஒடுக்கிப் பின்னர், மீண்டும் படைக்கும், அவனது திருவுள்ளத்து இச்சையையும் நான் உணர்ந்து, நிலையான வாழ்வு பெற்றேன்.

உணர்ந்த வண்ணம் வாழ்கின்றேன் என்றபடி.

மலை வெட்ட வெளியாகும்

2609. [1]அளந்த துரியத் தறிவினை வாங்கி
யுளங்கொள் [2]பரஞ்சக முண்ட தொழித்துக்[3]
கிளர்ந்த பரஞ்சிவஞ் சேரக் கிடைத்தால்
விளங்கிய [4]வெட்ட [5]வெளியனு மாமே. (5)

வேறு பாடம்: 1. அளந்து (ஓ) I. 2. பரஞ்சுக (சங்) 3. தொழிந்து (இ உ ஓ) IV. 4. வெட்டு (அ ஒ ஓ) I. 5. வளியனு (ஓ) II.

கருத்து: உயிர் சுத்தாவத்தைகளுள் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி ஆகிய நிலைகளில் அடைந்த சுத்த துரியம் என்னும் உணர்வு நிலையில் உயிரின் தற்போதத்தை நீக்கி, அதற்கு மாறாகச் சிவபோதத்தை அளிப்பது திருவருள். அடுத்துத் திருவருள், உயிரானது அதுவரை உலகியலில் அழுந்தியிருந்ததை முற்றாக

நீக்கி, சொரூப சிவத்தை அதற்கு அடையாளம் காட்டும். பிறகு அவ்வருட்சத்தி விலகினால், உயிர் சிவமேயாகித் தானும் அகண்டாகார வெளியாகும்.

பரம் (2 ஆம் அடி) அருள். பரஞ்சிவம் (3 ஆம் அடி) சொரூபசிவம் "பரம், துரியத்து அறிவினை வாங்கி, சகம் உண்டது ஒழித்துப் பரஞ்சிவம் சேரக் கிடைத்தால் (உயிர்) வெட்ட வெளியனும் ஆமே" என முடிக்க.

என்னிற் கலந்தான்

2610. இரும்பு - இடை நீர் என என்னை உள்வாங்கிப்
பரம்பரமான பரமது விட்டே,
உரம்பெற முப்பாழ் ஒழிய விழுங்கி
இருந்த என் நந்தி இதயத்து உளானே.

இரும்பிடை நீரென வென்னையுள் வாங்கிப்
பரம்பர மான பரமது விட்டே
யுரம்பெற முப்பா [1]ழொழிய விழுங்கி
[2]யிருந்தவென் னந்தி யிதயத்து ளானே. (6)

வேறு பாடம்: 1. ழொளியை (ஆ இ) IV. 2. யிருந்தவ (ஒ) I; யிருந்தன (விசு) (தி) (வ) (த).

கருத்து: காய்ந்த இரும்பிற் சுவர்ந்த நீர் போல, எனது தற்போதத்தை நீக்கி, பரம்பரமாகச் சிவமும் சத்தியும் உள்ள பர வெளியை விட்டு, முப்பாழ் நிலைகளையும் கடந்து நான் தன்னை அணுக, சொரூப சிவம் என்னில் கலந்தான்.

2611. கரியுண் விளவின் கனிபோ லுயிரு
முரிய பரமுமு னோதுஞ் சிவமு
மரிய துரியமே லகிலமு மெல்லாந்
திரிய விழுங்குஞ் சிவபெரு மானே. (அ)

மூன்று இல்லை

2612. அந்தமும் ஆதியும் ஆகும் பராபரன்
தந்தம் பரம்பரன் தன்னின் பரம் உடன்
நந்தமை உண்டு மெய்ஞ்ஞான நேய அந்தத்தே
நந்தி இருந்தனன் நாம் அறியோமே.

அந்தமு மாதியு மாகும் பராபரன்
றந்தம் பரம்பரந் தன்னிற் பரமுட
னந்தமை யுண்டுமெய்ஞ் ஞானநே யாந்தத்தே
நந்தி யிருந்தன னாமறி யோமே. (7)

கருத்து: உலகிற்கு முதலும் ஈறுமாக உள்ள சிவம், வெவ்வேறு (பக்குவ நிலைகளில்) உணர்வு நிலைகளை உடைய உயிர்களுக்கு, அவ்வவற்றின் நிலைக்கு மேலானவன். அந்த மேல்நிலை ஒவ்வொன்றிற்கும் மேலானவன். அவன் நமக்கு உடனாய், நமது தற்போதத்தை நீக்கி, தனது வியாபகத்துள் நம்மை அடக்கி, ஞானம், ஞாதுரு, நேயம் - இம்மூன்றும் தானேயாக நின்றான். அவன் நிலையை நாம் அறியோம்.

அந்தம் - மூன்று என்பது (வேறு என்பது) அற்ற நிலை.

150. குரு மட தரிசனம்

ஞானாசிரியர் வாய்த்தால் ...

2613. பலியும், அவியும், பரந்த புகையும்,
ஒலியும் எம் ஈசன்தனக்கு என்றே உள்கிக்
குளிரும் குருமடம் கண்டவர் தாம் போய்த்
தளிரும் மலரடி சார்ந்து நின்றாரே.

பலியு மவியும் [1]பரந்த புகையு
மொலியுமெம் மீசன் றனக்கென்றே யுள்கிக்
[2]குளிருங் குருமடங் கண்டவர் தாம்போய்த்
தளிரு மலரடி சார்ந்துநின் றாரே. (1)

வேறு பாடம்: 1. பரந்து (அ ஆ இ ஈ) II. 2. குவியுங் (ஓ) IV; குளியுங் (அ ஈ ஓ) I.

கருத்து: படையலும், ஓமகுண்டத்தில் சொரியும் அவிப்பொருளும், வழிபாட்டில் காட்டும் தூபமும், பாடும் பாட்டொலியும் எம் ஈசனுக்கு மட்டுமே உரியன என்று கருதிச் செய்து, மனம் குளிரும் குருமூர்த்திகள் (ஞானாசிரியர்) வாழும் மடத்தைக் கண்டு (பயன்கொண்டோர்), புத்தனுபவங்கள் தோன்றும் இறைவனது திருவடியைச் சார்வர் என்பது உறுதி.

ஆசாரியனே சிவம்

2614. இவன் இல்லம் அல்லது அவனுக்கு அங்கு இல்லை
அவனுக்கும் வேறு இல்லம் உண்டே அறியில்?
அவனுக்கு இவன் இல்லம் என்று என்று அறிந்தும்
அவனைப் புறம்பு என்று அரற்றுகின்றாரே.

இவனில்ல மல்ல தவனுக்கங் கில்லை
யவனுக்கும் வேறில்ல [1]முண்டே யறியில்
லவனுக் கிவனில்ல மென்றென் றறிந்து
மவனைப் புறம்பென் றரற்றுகின் றாரே. (2)

வேறு பாடம்: 1. முண்டா (சங்)

கருத்து: ஞானாசிரியனின் மடம் சுத்தமாயையில் உள்ள சிவலோகமே போல்வதாகும். உணர்ந்தால், சிவத்திற்கு எனத் தனியுலகம், தனியிடம் உண்டா? ஆசாரியனின் இதயத்தில் சிவம் விளங்குதலை அறிந்தும், சிவம் உயிருக்கு வேறாய்த் தனியே உள்ளது என மாந்தர் புலம்புகின்றனர்.

உலகின் உயிர்

2615. நாடும் பெருந்துறை நான்கண்டு கொண்டபின்
கூடுஞ் சிவனது கொய்ம்மலர்ச் சேவடி
தேட [1]வரியன் சிறப்பிலி எம்மிறை
யோடு முலகுயி ராகிநின் றானே. (3)

வேறு பாடம்: 1. வரிய (த)

கருத்து: வீடுபேற்றுப் பக்குவம் உடையார் கூடும் இடமாகிய சிவனது மலரடிகளை அடைந்து அனுபவிப்பதற்குரிய வழியை - ஞானாசிரி யனது கருணையை - நான் பெற்ற பிறகு, யாராலும் கண்டு கொள்ள இயலாதவனும், தனது சிறப்பான இருப்பிடமாக ஞானாசிரியனைக் கொண்டவனுமாகிய எம் இறைவன், உலகுக்கு உயிராக விளங்குகிறான் என்பதை உணர்கின்றேன்.

சிவன் உறையும் இடம்

2616. இயம்புவன் ஆசனத்தோடு மலையும்,
இயம்புவன் சித்தக் குகையும் மடமும்,
இயம்புவன் ஆதாரத்தோடு வனமும்,
இயம்புவன் ஈராறு இரு நிலத்தோர்க்கே.

இயம்புவ னாசனத் தோடு மலையு
மியம்புவன் சித்தக் குகையு மடமு[1]
மியம்புவ னாதாரத் தோடு வனமு[2]
மியம்புவ னீரா றிருநிலத் தோர்க்கே. (4)

வேறு பாடம்: 1. மிடமு (சங்) 2. மனமு (இ) I.

கருத்து: இறைவனுக்கு ஆசனமும் உறைவிடமுமாக உள்ளவை எல்லா உலகங்களும், 36 தத்துவங்களும் ஆகும். இவை மட்டுமின்றி, யோகியரின் சித்தக் குகையும், அவர் உறையும் மடமும், அவனுக்கு ஆசனமும் உறைவிடமுமாகக் கருதப்படும். மேலும், யோகியின் உடம்பில், ஆறு ஆதாரங்களும், அவற்றில் வைத்துத் தியானிக்கப் படும் மந்திர எழுத்துக்களும் அவனுக்கு முறையே ஆசனமும், உறைவிடமும் ஆகும். இதனைப் பதினான்கு உலகங்களின் உயிர்களுக்கும் கூறுவேன்.

மடம் சிவலோகமே

2617. முகம் பீடமாம், மடம் முன்னிய தேயம்,
அகம் பரவர்க்கமே, ஆசு இல் செய் காட்சி
அகம் பரமாதனம்; எண் - எண் கிரியை,
சிதம்பரம் தற்குகை, ஆதாரம் தானே.

[1]முகம்பீட [2]மாமட முன்னிய தேய[3]
மகம்பர வர்க்கமே யாசில்செய் காட்சி[4]
யகம்பர மாதன மெண்ணெண் கிரியை
[5]சிதம்பரந் தற்குகை யாதாரந் தானே[6]. (5)

வேறு பாடம்: 1. முகமிட் (ஆ) I. 2. மாமட (ஆ ஓ) I. 3. தெய்வ (ஆ இ ஈ) II; தேகம் (த) 4. ஆட்சி (த) 5. சிகம்பரத் (ஓ) I. 6. தாமே (சங்)

கருத்து: திருமடத்தைச் சிவலோகமாக உருவகிக்கின்றார். மடத்தில் உள்ள பீடம் சிவலோகத்தின் முகப்பு. மடமே சிவலோகம். மடத்தில்

உள்ளோர் சிவலோக வாசிகள். மடத்தில் நிகழும் தூய செயல்கள், சிவலோக நிகழ்வுகள். மடத்தில் உள்ளோரது தூய உள்ளம் சிவலோகத்தில் சிவபெருமானுக்கு இட்ட உயர்ந்த இருக்கை. அந்த உள்ளங்களில் எண்ணும் எண்ணங்கள் எட்டு உபசாரங்கள். அவர்களது சிதாகாசமே (தூய அறிவு வெளி) சிவலோகத்தில், சிவனை அணுக்கமாகக் காணுதற்குரிய குகை. திருமடத்தின் ஆதாரமாகிய குரு சிவலோக நாயகன் ஆகிய சிவபெருமான்.

அகம் (2 ஆம் அடி) - ஆகுபெயர். செய் - முதனிலைத் தொழிற் பெயர்; செய்கைகளைக் குறித்தது, எட்டுக் கிரியை - வழிபாட்டில் செய்யும் எட்டுக் கிரியைகள்: ஆசமனம், அர்க்கியம், ஆவாகனம், தாபனம் முதலியன. சித், அம்பரம் - சிதம்பரம் - சிதாகாசம். ஆதாரம் - முதல்வன். குருவைச் சிவமாக உருவகித்தாரல்லர். குருவே சிவம் - இது சிவநெறிக் கொள்கை. (இலிங்கத் திருமேனியும் அடியார்களும் சிவமே என்பதும் இந்நெறிக் கொள்கை).

யோகியின் உலகம்

2618. முகம் முகம் ஆம் பீடம் ஆதாரம் ஆகும்,
சகமுகமாம் சத்தி ஆதனம் ஆகும்
செகமுகமாம் தெய்வமே சிவமாகும்,
அகமுகம் ஆய்ந்த அறிவுடையோர்க்கே.

[1]முகமுக மாம்பீட மாதார மாகுஞ்
சகமுக மாஞ்சத்தி யாதன மாகுஞ்
செகமுக மாந்தெய்வ [2]மேசிவ மாகு
மகமுக மாய்ந்த [3]வறிவுடை யோர்க்கே. (6)

வேறு பாடம்: 1. அகமுக (விசு) (தி) (வ) (த) 2. மெய்சிவ (அ இ ஈ) I. 3. தறிவுடை (அ இ ஈ ஓ) I.

கருத்து: அகமுக ஆய்வும் தெளிவும் உடையோர்க்கு, அவரது முகம் வாயிலாக உள்ள தலையுச்சியாகிய பீடமே அவர்களது உயர்ந்த அனுபவத் தானமாகும். அதாவது சிவலோகம் ஆகும். உலகத்திற் பிறரது நன்மைக்காக அவர் செய்யும் செயல்களில் பொதியும் திருவருள், அவர்கள் அமரும் ஆசனம் ஆகும். அதாவது சத்தி பீடமாகும். உலகத்தைக் கருதி, வழிபாட்டை ஏற்று வரம் அளிக்கும். தெய்வம் சத்தி பீடத்தில் உள்ள சிவமே ஆகும்.

சத்தி பீடத்தில் உள்ள சிவம் - சதாசிவன்.

மௌன ஞானிகள்

2619. மாயை இரண்டும் மறைக்க, மறைவுறும்
காயம் ஓர்ஐந்தும் கழியத், தான் ஆகியே
தூய பரஞ்சுடர் தோன்றச், சொரூபத்துள்
ஆய்பவர் ஞானாதி மோனத்தர் ஆமே.

மாயை யிரண்டு மறைக்க மறைவுறுங்
காயமோ ரைந்துங் கழியத்தா னாகியே[1]
தூய பரஞ்சுடர் தோன்றச் சொரூபத்து
[2]ளாய்பவர் ஞானாதி மோனத்த ராமே. (7)

வேறு பாடம்: 1. னாக்கியே (அ ஆ இ) I; மாகியே (த) 2. ளாயவர் (த)

கருத்து: மடத்தில் உள்ள ஞானிகளின் இயல்பைக் கூறுகின்றார். ஞானிகள் சிவத்தின் சொரூபத் திருமேனியை உணர முயல்வோர். மனிதப் பிறவிக்கு உள்ள ஐந்து உடம்புகளையும், அவற்றின் இயல்பு தோன்றாது மறைக்கும் பிரகருதி மாயை, அசுத்த மாயைகளை முதலில் அவர்கள் வெல்வர். அவர்களது உணர்வில் "உயிர் அவ்வுடம்புகள் அல்லாத தனிப்பொருள் என்ற தெளிவு பிறக்கும். அந்த உயிருணர்வினால் உணரத்தொடங்குவர். அவ்வுணர்வில் அருட்சத்தி வந்து கலக்கும். அருளறிவின் துணையால், சிவத்தின் சொரூபத் திருமேனியைக் காணத் தவத்தில் ஈடுபடுவர். அவர்கள் ஞானம் உடைய, மிகுமௌனியர் ஆவர்.

ஐந்து உடம்புகள் - அன்மையகோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் பரம்சுடர் - அருள் ஒளி இஃது உயிருணர்வில் கலத்தல் சத்தி நிபாதம். மிகு ஞானம் பெருமௌனமே ஆதலின், "ஞான அதி மோனம்" என்றார்.

151. ஞான குரு தரிசனம்

குருவருள்

2620. ஆறொடு முப்பது மங்கே யடங்கிடிற்[1]
[2]கூறாக் குருபரன் கும்பிடு தந்திடும்[3]
வேறே சிவபதம் மேலா வளித்திடும்[4]
பேறாக வானந்தம் பேணும் பெருகவே. (1)

வேறு பாடம்: 1. யடங்கிடல் (த) 2. கூறக் (விசு) (தி) (வ) (த) 3. தந்திரம் (சங்) 4. வெளிப்படும் (ஆ இ) III.

கருத்து: ஞான குருவை வணங்கும் மாணவனுக்கு 36 தத்துவங்களும் தூய்மை அடைகின்றன. அது எதனால் என்றால், குரு உபதேச மொழி ஒன்றும் கூறானாயினும், அவனது நயனதீட்சையே அந்நிலையை அளிக்கும் என்க. அதன்பின், குருவின் அருள், மாணவனுக்குச் சிவ தரிசனம் கிடைக்கச் செய்யும்.

சொரூப சிவம்

2621. துரியங்கள் மூன்றும் கடந்து ஒளிர் சோதி
அரிய பரசிவம்; யாவையும் ஆகி
விரிவு, குவிவு அற விட்ட நிலத்தே
பெரிய குருபதம் பேச ஒண்ணாதே.

துரியங்கண் மூன்றுங் கடந்தொளிர் சோதி
யரிய பரசிவ மியாவையு மாகி
விரிவு குவிவற விட்ட நிலத்தே
பெரிய குருபதம் பேசவொண் ணாதே. (2)

கருத்து: சகல துரியம், சுத்த துரியம், பர துரியம் - என்ற மூன்று உணர்வு நிலைகளுக்கும் அப்பால் ஒளி வீசும் சோதியாகிய சொரூப சிவம்; உலகில் உள்ள எல்லாப் பொருள்களும் ஆகி, அவற்றைத் தன்பால் ஒடுக்கிக் கொள்கின்ற தடத்த நிலை கடந்த அகண்டாகார வெளியில் - அவ்வொளியாய் விளங்கும் குருபதம் - இந்த இறைநிலை சொல்லுக்கு அடங்காதது.

உயிரின் அறிவு - வெளியில் (சிதாகாயத்தில்) மூன்று துரியங்களையும் கடந்த பரசிவம்; அண்டப் பெரு வெளியில், படைத்தல், அழித்தல் இரண்டும் அற்ற அசைவற்ற நிலை - இவை சொரூப சிவத்தின் இரண்டு கோணங்கள். இவற்றுள், இரண்டாவதை மணிவாசகர், "போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே" என்பார். (திருவா. சிவபு. அடி : 77)

வாழ்வு பெற்றேன்

2622. ஆய் அன நந்தி அடிக்கு என் தலை பெற்றேன்
வாய் அன நந்தியை வாழ்த்த என் வாய் பெற்றேன்
காய் அன நந்தியைக் காண என் கண் பெற்றேன்
சேயன் அந்நந்திக்கு என் சிந்தை பெற்றேனே.

ஆயன நந்தி யடிக்கென் றலைபெற்றேன்
வாயன நந்தியை வாழ்த்தவென் வாய்பெற்றேன்
காயன நந்தியைக் காணவென் கண்பெற்றேன்
சேயன நந்திக்கென் சிந்தைபெற் றேனே. (3)

கருத்து: தாயைப் போலும் அன்புடைய நந்தி, தன் திருவடியைச் சூட்ட, என் தலையைப் பெற்றேன். உண்மைப் பொருளே கிடைத்து விட்டாற் போன்ற அப்பெருமானை வாழ்த்த வாய் பெற்றேன். ஆகாயம் போன்ற சொரூபத் திருமேனியை உடைய அவனை உணர உணர்வு பெற்றேன். அப்பாலுக்கு அப்பாலாம் பொருளாகிய அவன் என் சிந்தையில் மாறாது நிற்கின்றான்.

காயம் என்பது ஈறு கெட்டது. அந்நந்தி என்பதில், சந்தியாக வந்த நகரம் எதுகை நோக்கித் தொக்கது.

குருத்தியான பலன்

2623. கருட னுருவங் கருது மளவிற்
பருவிடந் [1]தீர்ந்து பயங்கெடு மாபோற்
குருவி னுருவங் குறித்தவப் போதே
திரிமலத் தீர்ந்து சிவனவ னாமே. (4)

வேறு பாடம்: 1. தீய்ந்து (அ, ஈ) III.

கருத்து: மாந்திரீகன் கருட மந்திரத்தைத் தியானித்தலால், பாம்பின் நஞ்சு நீங்கி, அதனால் உண்டாகிய உயிரச்சம் நீங்கினாற்போல, சிவகுருவின் உருவத்தைத் தியானித்த போதே, உயிர் மும்மலமும் நீங்கப்பெற்று, சிவனே யாகிவிடும்.

உவமை கருடபாவனை. பொருள் சிவோகம் பாவனை.

குறிப்பு: இதனை யடுத்துச் சுவடிகளிலும், பதிப்புகளிலும் உள்ள "அண்ண லிருப்பிட" என்னும் பாடல் 'காலசக்கரம்' - இயலில் வந்தது (பா. எண் 759)

மௌனப் பேரரசின் வேந்தன்

2624. தோன்ற அறிதலும், தோன்றத் தோன்றாமையும்
மான்ற அறிவும், அறி நனவு ஆதிகள்
மூன்று-அவை நீங்கும் துரியங்கள் மூன்று அற,
ஊன்றிய நந்தி உயர் மோனத்தானே.

தோன்ற வறிதலுந் [1]தோன்றத் தோன்றாமையு
மான்ற வறிவு [2]மறிநன வாதிகண்
மூன்றவை நீங்குந் துரியங்கண் மூன்றற
வூன்றிய நந்தி யுயர்மோனத் தானே. (5)

வேறு பாடம்: 1. தோன்றித் (ஓ) IV; தோன்றறோன்றாமையு (விசு) (தி) (வ) (த) 2. மதுநன (ஆ இ ஈ) I.

கருத்து: நன்கு உணர்தலாகிய சாக்கிரமும், தெளிவாகத் தோன்றாமை ஆகிய சொப்பனமும், அறிவு மயங்குதலான சுழுத்தியும் ஆகிய இவை கடந்து உண்டாகும் சகல துரியம் சுத்த துரியம், பரதுரியம் - என்ற மூன்றும் கடந்த நிலையில் உணரப்படும் சிவம் உயர் மௌனப் பேரரசின் தலைவன் ஆவான்.

நெற்றியில் குருபீடம்

2625. சந்திரபூமிக்குள் தன் புருவத்திடைக்
கந்த மலரில் இரண்டு இதழ்க் கன்னியும்
பந்தம் இலாத பளிங்கின் உருவினள்
பந்தம் அறுத்த பரங்குரு பற்றே.

சந்திர [1]பூமிக்குட் டன்புரு வத்திடைக்
கந்த மலரி லிரண்டிதழ்க் கன்னியும்
பந்த மிலாத பளிங்கி னுருவினள்
பந்த மறுத்த பரங்குரு பற்றே. (6)

வேறு பாடம்: 1. பூமிக்கு (சங்)

கருத்து: உடம்பில், சந்திர மண்டலத்தில், புருவங்கட்கு இடையே, ஆக்ஞை என்ற ஆதாரத்தில் உள்ள இரண்டு இதழ் கொண்ட தாமரையில் வாழும் 'ஹாகினி' என்னும் சத்தி பளிங்கு போன்ற நிறமுடையவள். அவள் தத்துவங்களால் உண்டாகிய பந்தத்தை நீக்குபவள்; குருவாய் இருந்து பர சிவத்தை உணரச் செய்பவள். அவளது திருவடியைப் பற்றுக.

சிவபுரம்

2626. மனம் புகுந்தான் உலகு ஏழும் மகிழ,
நிலம் புகுந்தான் நெடுவானகம் தாங்கிச்,
சினம் புகுந்தான் திசை எட்டும் நடுங்க,
வனம் புகுந்தான் ஊர் வடக்கு என்பதாமே.

மனம்புகுந் தானுல கேழு மகிழ
நிலம்புகுந் தானெடு வானகந் தாங்கிச்[1]
சினம்புகுந் தான்றிசை யெட்டு நடுங்க
வனம்புகுந் தானூர் வடக்கென்ப தாமே[2]. (7)

வேறு பாடம்: 1. தாங்கச் (த) 2. தாமே (அனை. சுவ.) பதிப்புகளில் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்டது.

கருத்து: உடம்பில் உள்ள ஏழு அனுபவத்தானங்களும் வளர்ச்சி யடையுமாறு புருவமத்தியில், உயிருணர்வில் குரு எழுந்தருளினான். அதற்கு முன்பு, சிதாகாயமாகிய சந்திர மண்டலம், நட்சத்திர மண்டலம் ஆகியவை குடைபோலக் கவிப்ப, அவற்றிற்கு ஆதாரமாகச் சுவாதிட்டானச் சக்கரத்தில் எழுந் தருளினான். பின்னர்த் தலையைச் சூழ உள்ள எட்டுத்திக்குக் காவலரும் நடுங்குமாறு உச்சியை நோக்கி விரைந்து எழுந்தான். அவனுக்கு உரிய ஊர் தலையுச்சிக்கு மேலே 12 அங்குல வெளி என்று கூறுவர். அது சிதாகாயம்.

அங்கு அவனது சொரூபத் திருமேனிக்காட்சி வாய்க்குமாதலின், அதை "ஊர்" என்றார்.

பிராசாதம் பயில்க

2627. தானான [1]வண்ணமே கோசமுஞ் சார்தருந்
தானாம் பறவை வனமெனத் தக்கன
தானான சோடச மார்க்கந்தான் நின்றிடிற்
றானாந் தசாங்கமும் வேறுள தானே. (8)

வேறு பாடம்: 1. வன்னமே (சுவ.) V; வன்னமுங் (சங்) வண்ணமுங் (விசு) (தி) (வ) வண்ணமைங் (த).

கருத்து: உயிர் சார்ந்ததன் வண்ணம் ஆகும் தனது இயல்போடு ஐந்து உடம்புகளையும் சார்ந்து நிற்கும். அந்நிலையில், அதை ஒரு பறவைக்கும் உடம்புகளைக் காட்டிற்கும் ஒப்பிடலாம். (இவ்வாறு காட்டில் பறந்து திரியாமல்) பிராசாத யோக நெறியினைக் (குருவினால் உணர்த்தப்பட்டு) அந்நெறியில் பயின்றால், தசாங்க அனுபவங்களைத் தனித்தனியாகப் பெறலாம்.

சோடசமார்க்கம், சந்திர கலைகள் பதினாறையும் எய்திச் சிவத்தை அனுபவிக்கும் நெறி. இது பிராசாதயோகம் என முன்னர் விளக்கப்

பெற்றது. தசாங்கம் - தசகாரியம்; தத்துவரூபம் முதலியன (பின்னிணைப்புக் காண்க).

வினை குறையும்

2628. மருவிப் பிரிவறியான் எங்கள் மாநந்தி
உருவம் நினைக்கின், நின்று உள்ளே உருக்கும்
கருவில் கரந்து உள்ளம் காண வல்லார்க்கு இங்கு
அருவினை கண்சோரும் அடியார் அகத்தே.

[1]மருவிப் பிரிவறியா னெங்கண்மா நந்தி
யுருவ நினைக்கினின் றுள்ளே யுருக்குங்
கருவிற் கரந்துள்ளங் காணவல் லார்க்கிங்[2]
[3]கருவினைகண் சோரு [4]மடியா ரகத்தே. (9)

வேறு பாடம்: 1. மருவிற் (ஓ) IV; மருவப் (ஆ இ) IV. 2. லார்க்குப் (சங்) 3. பருவினைகண் (சங்) 4. மழிவா (விசு) (தி) (வ) (த) மடிவா (சங்)

கருத்து: அன்பரைக் கலந்த பின்பு பிரியாதவன் எங்கள் சிவகுரு. அவனது திருவுருவை நினைத்த அளவில் மனம் உருகும். நமக்கு முதலாகிய திருவருளறிவு பெற்று, அவனை உணரும் அடியார்களின் பிராரத்த வினை ஏமாறிப் போகும்.

இடைவிடாது நினைக

2629. தலைப்படலாம் எங்கள் தத்துவன் தன்னை,
அலைப்படு பாசம் அறுத்து, அறுத்திட்டு
நிலைபெற நாடி, நினைப்பு அற உள்கின்
தலைப்படல் ஆகும், தருமமும் தானே.

தலைப்பட லாமெங்க டத்துவன் றன்னை
[1]யலைப்படு பாச மறுத்தறுத் திட்டு
நிலைப்பெற நாடி நினைப்பற வுள்கிற்
றலைப்பட லாகுந் தருமமுந் தானே. (10)

வேறு பாடம்: 1. பலப்படு (அ ஓ) I.

கருத்து: மெய்ப்பொருளாகிய சிவத்தை எய்தலாம். எவ்வாறு? (அதனை உணர்வது எவ்வாறு?) கடல் அலை போல அடுத்தடுத்துப்

பற்று, அறியாமை, மோகம் முதலியவற்றை உண்டாக்கியவண்ணம் இருக்கும் ஆணவமலத்தைப் பற்றற நீக்கி, செம்பொருள் இறைவனை இடைவிடாது அகமுகமாக ஆய்ந்து, நினைப்பு - மறப்பு, இன்றித் தொடர்ந்து சிந்தித்தால், அடையலாம். அவ்வாறு அவனை சிந்தித்தலாகிய யோக நெறியையும் அவனே குருவாக நின்று உணர்த்துவான்.

தானே தரும் என ஒரு சொல் வருவிக்க. நினைப்பு மறப்பற்ற உணர்வே துரியம்.

நினைத்தார் உயர்ந்தார்

2630. நினைக்கின் நினைக்கும்; நினைப்பவர் தம்மை
சுனைக் குவளைமலர்ச் சோதியினானைத்
தினைப் பிளந்த அன்ன சிறுமையரேனும்
தனத்தை மனத்து அடைந்தார் உயர்ந்தாரே.

நினைக்கின் னினைக்கு நினைப்பவர் தம்மைச்
[1]சுனைக்கு வளைமலர்ச் சோதியி னானைத்
தினைப்பிளந் தன்ன சிறுமைய ரேனுந்
[2]தனத்தை மனத்தடைந் தாருயர்ந் தாரே. (11)

வேறு பாடம்: 1. சுனைக்கும் (அ) I; சுனைக்குள் விளைமலரச் (விசு) (தி) (வ) (த) 2. கனத்த (விசு) (தி) (வ) (த).

கருத்து: சிவபெருமான் யாரேனும் தன்னை நினைத்தால், அவரைத் தானும் நினைத்தருள்வான். அவரது புருவமத்தியில், சோதியாகக் காட்சி அளிப்பான். தினையைப் பாதியாக்கினால் ஒத்த அத்துணைச் சிறுமை உடையராயினும், அவர் பெருஞ்செல்வமாகிய சிவத்தை நினைக்கப் பெற்றால், உயர்ந்தோரே யாவர்.

படைத்தவன் தந்தது

2631. தலைப்படுங் காலத்துத் தத்துவன் றன்னை
விலக்குறின் மேலை [1]விதியென்று கொள்க
வனைத்துல காய்நின்ற வாதிப் பிரானை
நினைப்புறு வார்பத்தி நேடிக்கொள் வாரே. (12)

வேறு பாடம்: 1. விதியொன்று (அ இ ஈ) IV; விதியென்றுங் (விசு)

கருத்து: சிவத்தை எய்த முயலும் காலத்தில், ஏதேனும் இடையூறு நேர்ந்தால், "இது முன் நாம் செய்த வினைப் பயன்" என்று கருதுக. நமக்கு மட்டுமன்றி, உலகில் வாழ்வார் அனைவர்க்கும் வினைப் பயனைக் கூட்டுவிப்பவன் இவ்வுலகைப் படைத்த சிவனே என ஒருவர் எண்ணினால், அதனால் அவரது பத்தி வளரும்.

வினைப் பயனும் அவன் செயலே என உணர்ந்தால், அவனிடம் அன்பு தளராது.

பிறவாமை பெற்றார்

2632. நகழ்வு ஒழிந்தார் அவர் நாதனை உள்கி
நிகழ்வு ஒழிந்தார் எம்பிரானொடும் கூடித்
திகழ்வு ஒழிந்தார், தங்கள் சிந்தையின் உள்ளே
புகழ் வழி காட்டிப் புகுந்து நின்றானே.

நகழ்வொழிந் தாரவர் நாதனை யுள்கி
நிகழ்வொழிந் தாரெம் பிரானொடுங் கூடித்
திகழ்வொழிந் [1]தார்தங்கள் சிந்தையி னுள்ளே
புகழ்வழி [2]காட்டிப் புகுந்துநின் றானே. (13)

வேறு பாடம்: 1. தார்திங்கள் (சங்) 2. காட்டப் (இ ஈ) I.

கருத்து: யாரொருவர் 'யான், எனது' என்னும் பற்றும், செருக்கும் நீக்கினாரோ, அவரது அறிவில், சிவம் அருள்வழியைக் காட்டி, அவரோடு கலந்தான். அவர்கள் அவனை என்றும் மறவாது, அருள்நெறியை வழுவாது பின்பற்றினர். அவனோடு 'ஏகம்' ஆகிக் கூடினர். ஆதலால் பிறப்பு நெறிக்கு வருதலைத் தவிர்த்தார்.

நகழ்வு - நகர்தல்.

புருவமத்தி ஒளி

2633. வந்த மரகத மாணிக்க ரேகைபோய்ச்[1]
சந்திடு மாமொழிச் சற்குரு சன்மார்க்க
மிந்த விரேகை யிலாடத்தின் மூலத்தே
சுந்தரச் [2]சோதியுட் சோதியு மாமே. (14)

வேறு பாடம்: 1. ரேகைபோற் (ஓ) I. 2. சந்தித்திடுமொழிச் (ஆ) IV. 3. சோதியுடன் சோதி (ஆ) II.

கருத்து: ஞானகுரு காட்டும் சன்மார்க்கம் மரகத மலையின் மீது மாணிக்கமணி வைக்கப்பட்டபொழுது உண்டாகும் புதிய ஒளியைப் போன்றது. இவ்வொளி, புருவமத்தியின் அடிப்பாகத்தில் எழும் அழகிய ஒளியுள் திகழும் ஒளியாகும்.

குருவின் உபதேசம் உயிரின் உணர்வில் கலக்கும்பொழுது தோன்றும் சிவக்காட்சியைக் கூறுகின்றார்.

வினைமுடிவு: "மாமொழிச் சன்மார்க்கம் மரகத மாணிக்க ரேகை போய்ச் சந்திடும்" என முடிக்க. சந்திடும் - சந்திக்கும். சந்திப்பது போன்றது என்க. குருவின் உபதேசம் (தொட்டுக்காட்டுதல்) மாணவனின் உணர்வில் பொருந்தும் என உணர்க.

உடலும் உயிரும் சிவமயம்

2634. உண்ணும் வாயு முடலு முயிருமாய்
கண்ணு மாயோகக் கடவு ளிருப்பது
மண்ணு நீரனல் காலொடு வானுமாய்
விண்ணு மின்றி வெளியானோர் மேனியே. (ட)

இருமையிலும் அருள்வாழ்வு

2635. 'பரிசு பதி' என்று பார்முழுது எல்லாம்
பரிசு அவன் ஆணை நடக்கும் பதியால்
பெரிய பதிசெய்து, பின்னும் அடியார்க்கு
உரிய பதியும் பார் ஆக்கி நின்றானே.

[1]பரிசு பதியென்று பார்முழு தெல்லாம்
[2]பரிசவ னாணை [3]நடக்கும் பதியிற்[4]
பெரிய பதிசெய்து [5]பின்னு மடியார்க்
குரிய பதியும்பா ராக்கிநின் றானே. (15)

வேறு பாடம்: 1. பரசு (ஒ) I. 2. பரசிவ (ஒ) II. 3. நடக்குமப் (த) சுவடிகளில் 'நடக்கும்' என்னும் பாடமே உள்ளது. அடுத்த சீர் 'பாதியால்' எனப் பாடங்கொண்டு, ஆசிரியத் தளை தடுதலின், தருமபுரப்பதிப்பில், 'நடக்குமப்' எனப் பாடம் திருத்தப்பட்டுள்ளது. 4. பதியர்ற் (இ ஒ) I. 5. பின்னா (விசு) (தி) (வ) (த).

கருத்து: 'முதல்வனின் இயல்பு இது' எனக் கூறும் வண்ணம், உலகங்கள் முழுதும் எல்லாச் செயல்களும், அவன் ஆணை வழி

இயங்குவதே இயல்பாகக் கொண்டு நிகழும். அன்பர் அவனிடத்து மனம் பதிவராயின், அவர்க்கு மறுமையில் வீடுபேறு அளிப்பது மட்டுமன்றி இம்மையிலும், இம்மண்ணுலக வாழ்வையே அருள்வாழ்வு ஆக்குவான்.

எல்லாம் அவன் ஆணையின்படி நடத்தல், ஆன்மாவின் வினைப் பயனைக் கூட்டுவிப்பவன் அவன் ஆதலின்.

யார் அருள் பெற்றார்?

2636. "அம்பரநாதன் அகலிடம் நீள்பொழில்
தம் பரம் அல்லது தாம் அறியோம்" என்பர்,
உம்பருள் வானவர், தானவர் கண்டிலர்,
எம்பெருமான் அருள் பெற்று இருந்தாரே.

அம்பர நாத னகலிட நீள்பொழில்
[1]தம்பர மல்லது தாமறி யோமென்ப
ரும்பருள் வானவர் தானவர் கண்டில
ரெம்பெரு மானருள் பெற்றிருந் தாரே. (16)

வேறு பாடம் : 1. தன்பர (த).

கருத்து: சில மாத்தர் தேவர் தலைவனாகிய சிவபெருமான் படைத்த இவ்வுலகின் செயல்கள் தமக்கு மேலான திருவருளால் நிகழ்பவையே அன்றித் தாம் அவற்றின் காரணத்தை அறியமாட்டார் என்றே கூறுவர். அவர்கள் சிவனது அருளைப் பெற்று வாழ்ந்தனர். ஆனால், யாவும் தமது செயல் எனக் கருதும் தேவரும் அசுரரும் இவ்வுண்மையை உணராது போயினர் ஆதலின், திருவருளைப் பெறாது ஒழிந்தனர்.

சித்தம் சிவமாக்கி...

2637. கோ வணங்கும்படி கோவணம் ஆக்கிப் பின்
நா வணங்கும்படி நந்தி அருள் செய்தான்,
தே வணங்கோம் இனிச் சித்தம் தெளிந்தனம்,
போய் வணங்கும் பொருளாய் இருந்தோமே.

கோவணங் கும்படி கோவண மாக்கிப்பின்[1]
னாவணங் கும்படி நந்தி யருள்செய்தான்
றேவணங் கோமினிச் சித்தந் தெளிந்தனம்
போய்வணங் கும்பொரு ளாயிருந் தோமே. (17)

வேறு பாடம்: 1. மாகிப் பின் (விசு) (தி) (வ) (த).

கருத்து: நந்தியாகிய சிவகுரு முதலில் என்னை மன்னரும் வணங்குமாறு துறவு பூணச் செய்து, பின்பு, தனது திருவருளை உணர்ந்து பாடப் பணித்தான். அவனருளால் சிந்தை தெளிந்தேன். அவனை அன்றிப் பிற தெய்வத்தை வணங்கேன். அச் சிவமே யாகி இருக்கின்றேன்.

சிவத்தைப் "போய் வணங்கும் பொருள்" என்று பிறர் கூறுவர். ஆனால் ஆசிரியர் 'என் சித்தமே சிவமயம் ஆயிற்று' என்றார். மணிவாசகரும் "அப்பார் சடையப்பன் ஆனந்த வார்கழலே ஒப்பாக ஒப்புவித்த உள்ளத்தார் உள்ளிருக்கும் அப்பாலைக்கு அப்பாலைப் பாடுதுங் காண்" என்றார் (திருவா. திருவம். 11)

152. பிரணவ சமாதி

பிரணவத்தியானத்தால் 'சிவோகம்'

2638. தூலப் பிரணவம் சொரூப - ஆனந்தப் பேர்;
பாலித்த சூக்குமம் மேலைச் சொரூபப்பெண்
ஆலித்த முத்திரை ஆங்கு அதில் காரணம்
மேலைப் பிரணவம் வேதாந்த வீதியே.

தூலப் பிரணவஞ் சொரூபா னந்தப்பேர்[1]
பாலித்த சூக்கும மேலைச்சொ ரூபப்பெண்
ணாலித்த முத்திரை [2]யாங்கதிற் சூக்கும[3]
மேலைப் பிரணவம் வேதாந்த வீதியே. (1)

வேறு பாடம்: 1. னந்தப் பேருரை (அ ஆ இ ஒ) II (விசு) பதிப்பில் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்டது. 2. யாங்கதிர் (சங்) 3. காரணம் (விசு)

கருத்து: பிரணவ ஒலி 'தூலப் பிரணவம்' ஆகும். அது சொரூபானந் தத்திற்கு - மெய்ப்பொருளை உள்ளவாறு உணரும் பேரின்பத்திற்கு

இட்ட பெயரே. அதாவது குழூஉக்குறியே. யோகியின் தலையுச்சியில், சகஸ்ராரத்தில் காட்சிதரும் சத்தியே சூக்குமப் பிரணவம். அவள் விந்து, நாதமாக இருப்பவள். அச்சத்தியைத் தரிசித்தலாகிய 'சொரூப - ஆனந்தம்' எப்பொழுது விளையும் எனில், ஞானகுரு "கேசரிமுத்திரை" யைப் பயிற்றுவிக்கும் பொழுது என்க. இப்பிரணவ யோகம் பற்றி வேத, வேதாந்தங்களில் கூறப்பட்டுள்ளது.

ஆசிரியர் முன்னர்ச் 'சமாதி' - இயலில், "விந்துவும் நாதமும் மேருவில் ஓங்கிடில் சந்தியிலான சமாதியில் கூடிடும்", என்றும், 'விந்து சயம்' - இயலில், "விந்துவும் நாதமும் விளைய" எனத் தொடங்கும் பாடலில், "விந்து அடங்க விளையும் சிவோகமே" (பாடல் எண். 1947) என்றும் கூறியன அறிக. இவற்றுள் பின்னதற்கு, "ஆன்ம உணர்வு விந்துவில் அடங்கினால், "சிவமாதல்" என்னும் அனுபவம் ஏற்படும் என்பது பொருள். அதனையே ஆசிரியர், இங்குப் 'பிரணவ சமாதி' என்று விளக்கத் தொடங்குகின்றார்.

இங்குச் 'சொரூபம்' என்றது சிவத்தின் சொரூபத்திருமேனியை. "சொரூபப் பெண்" எனச் சத்தியைக் கூறியது, அவள் சிவத்தை ஆன்மாவிற்குக் காட்டுதலின். இதன் விளக்கம் "மேலாலவத்தை" - இயலில் கூறப்பட்டது. பிரணவ சமாதியாக வேதாந்தத்தில் கூறப்பட்டதுவே, சித்தாந்தத்தில் 'பஞ்சாட்சர சமாதி' யாகக் கூறப்படும் ஆதலின் "வேதாந்த வீதி" என்று பிரித்துக் காட்டினார்.

தாய் மொழி

2639. ஓமெனு மோங்காரத் துள்ளே யொருமொழி
யோமெனு மோங்காரத் துள்ளே யுருவரு
வோமெனு மோங்காரத் துள்ளே பலபேத
மோமெனு மோங்காரத் தொண்முத்தி சித்தியே.

(2)

கருத்து: ஞானாசாரியனின் உபதேசம் - அதனால் விளையும் அனுபவம் - பிரணவத்தால் விளையும் சமாதியே. உருவமாயும் அருவமாயும் விளங்கும் தெய்வத் திருமேனிகள் பிரணவத்தையே மூலமாக உடையன. பிரணவத்திலிருந்து பலவகை எழுத்தொலிகளும், பலவகைப் பொருள்களும் தோன்றின. பிரணவத் தியானத்தால் பாச நீக்கமும் சிவப்பேறும் எய்தலாம்.

தாயகம்

2640. ஓங்காரத்துள்ளே உதித்த ஐம்பூதங்கள்,
ஓங்காரத்துள்ளே உதித்த சர-அசரம்,
ஓங்கார அதீதத்து உயிர் மூன்றும் உற்றன
ஓங்கார சீவன் பரசிவன் ஆமே.

ஓங்காரத் துள்ளே யுதித்தவைம் பூதங்க
ளோங்காரத் துள்ளே யுதித்த சராசர
மோங்காரா தீதத் துயிர்மூன்று முற்றன
வோங்கார சீவன் பரசிவ னாமே. (3)

கருத்து: ஐந்து பூதங்களும் பிரணவத்திலிருந்து தோன்றின. இயங்குவகை உயிர், நிலைவகை உயிர் ஆகியன பிரணவத்திலிருந்து தோன்றிய உடம்புகளில் புகுந்தன. அவை விஞ்ஞானாகலர், பிரளயாகலர், சகலர் என்னும் மூன்று வகைப்படுவன. அவற்றுள் பிரணவத்தியானத்தில் ஈடுபட்டு 'ஓம்' - மயமாகும் விஞ்ஞானாகலர் சிவமே யாவர்.

தொகையறிவு

2641. வருக்கம் சிவமாம், பிரமமும் ஆகும்;
அருக்கம் சராசரம் ஆகும் உலகில்;
தருக்கிய ஆதாரம் எல்லாம் தனதே
சுருக்கம் இல் ஞானம் தொகுத்து உணர்ந்தோர்க்கே.

வருக்கஞ் [1]சிவமாம் பிரமமு மாகு
மருக்கஞ் சராசர மாகு முலகிற்
றருக்கிய வாதார மெல்லாந் தனதே[2]
சுருக்கமின் ஞானந் தொகுத்துணர்ந் தோர்க்கே[3]. (4)

வேறு பாடம்: 1. சுகமாம் (ஆ இ) II. 2. தன்மேனி (விசு) (தி) (வ) (த) 3. தோர்களே (சங்).

கருத்து: அ - உ - ம என உள்ள வியட்டிப் பிரணவத்தில், உறுப்பாக உள்ள மகாரம் சிவத்தைக் குறிக்கும். சிவம், உபநிடதம் சுட்டும் பிரமம் எனலுமாம். சிவத்தின் ஒளியாகிய சத்தியே, உலகில் சராசரங்களில், 'ஒன்றாகி' நிற்கிறது. தெய்வத்திருமேனிகள்,

உயர்ந்த சிவானுபவம் - இவற்றிற்கு ஆதாரமாக இருப்பது சத்தியே. இவற்றை யார் அனுபவமாக அறிவார் எனின், வியாபக அறிவுடையராய், 'எல்லாம் சிவமே' என்ற தொகையறிவு (**Synthetic knowledge**) உடையவரே என்க.

சுருக்கம் இல் ஞானம் - வியாகப அறிவு. தொகையறிவும் இதுவும் ஒன்றே ஆயினும் இருவேறு நிலைகளில் உணர்த்தினார்.

சமட்டிப் பிரணவம் ஓம் என்பது. அதன் வருக்கம் அல்லது இனம் வியட்டிப் பிரணவம். வருக்கத்தின் உறுப்பை வருக்கம் என்றே கூறியது, ஆகுபெயர்ப் பொருளால்.

ஒளி நெறி

2642. மலையும் மனோபவம் பூத வனமாம்
நிலையின் தரிசனம் தீப நெறியாம்
தலமும், குலமும், தவம் சித்தம் ஆகும்
நலமும் சன்மார்க்கத்து உபதேசந் தானே.

மலையு மனோபவம் [1]பூத வனமா
நிலையிற் றரிசனந் தீப நெறியாந்
தலமுங் குலமுந் தவஞ்சித்த மாகு
நலமுஞ்சன் மார்க்கத் துபதேசந் தானே. (5)

வேறு பாடம்: 1. மமுத (அ) II மருள்வன வாவன (விசு) (தி) (வ).

கருத்து: மெய்ப்பொருள் இதுவோ, அதுவோ என்று, ஐயத்திற்கு இடங்கொடுக்கும் மனநிலை, மனத்தைப் பூதங்கள் திரியும் காடாக்கும். ஞான குரு காட்டும் ஒளி நெறியிலேயே சிவத்தின் உண்மை நிலையை உணர இயலும். அவ்வொளிநெறி யாது எனின், சாதகனது சித்தமே தவம் (யோக சாதனை) செய்யும் இடம்; யாவரிடத்திலும் பெருகும் அன்பினால், 'ஒன்றே குலமும்' எனக் கொள்ளும் 'ஒரு குலக் கொள்கையே' குலம்; சித்தம் சிவமாகும் சாதனையே தவம் என்பதேயாகும்.

மனத்தில் ஐயத்திற்கு உரிய கருத்துகள் இரண்டும், வலிய சான்று, மேற்கோள், நியாயங்கள் பெற்றுத் தம்முள் மாறுபடுதலின், 'பூதக்காடு' என்றார். பூதம் கருநிறம். கருத்து மாறுபாட்டால் மனத்தில் இருளே மிஞ்சுதலின், 'பூதவனம்' என்றார் எனினும் பொருந்தும். தரிசனம், தீபநெறியின் பயன்.

பிரணவ உபதேசம்

2643. சோடச மார்க்கமும் சொல்லும் சன்மார்க்கிகட்கு
ஆடிய ஈராறின் அந்தமும், ஈரெட்டில்
கூடிய அந்தமும், கோதண்டமும் கடந்து
ஏறியே ஞான, ஞேய - அந்தத்து இருக்கவே.

சோடச மார்க்கமுஞ் சொல்லுஞ்சன் மார்க்கிகட்
காடிய வீராறி னந்தமு மீரெட்டிற்[1]
கூடிய வந்தமுங் கோதண்ட முங்கடந்
தேறியே [2]ஞானஞே யாந்தத் திருக்கவே. (6)

வேறு பாடம்: 1. மிரேழிற் (சைவ) (விசு) (தி) (த) 2. ஞானயேகாந்தத் (அ) II.

கருத்து: ஞானகுரு சன்மார்க்க சாதகர்க்கு, மேலும், 'சோடச மார்க்கம்' என்னும் பிரணவ யோகத்தை - பிராசாத யோகத்தை - உபதேசிப்பார். அவ்யோகத்தின் பயன், சுழுமுனை நாடியின் முடிவில் உள்ளதாகிய ஆக்ஞை என்ற ஆதாரத்தில் வாய்க்கும் சிவானுபவத்தைப் பெற்று, மேலே தலையுச்சிக்கு மூச்சுக் காற்றையும் உணர்வையும் ஏற்றிச் சந்திர கலைகளுள், அகரம் முதல் வியாபினி வரை, பத்தையும் பெற்று, அவற்றின் ஆற்றலால், தலையுச்சியில், பிரமரந்திரத் துளையில் உள்ள சகஸ்ராரத்தில் 'பரசிவன் - பராசத்தி' தரிசனம் பெற்று, அதையும் கடந்து, மேலே 12 அங்குலத் தொலைவு உள்ள சிதாகாசத்தில், நிராதார யோகத்தில், சந்திர கலைகள் பதினாறனுள், இறுதி ஆறினையும் பெற்று, சிவத்தின் சொரூபத்தைத் தரிசித்து, காண்பான் - காட்சி - காணப்படும் பொருள் என்ற 'திரிபுடி' வேறுபாடு இன்றி இம் மூன்றும் சிவமே என்றவாறு இருத்தலாகும்.

திரிபுடியில் இரண்டைக் கூறினார், மூன்றாவதாகிய 'ஞாதுரு' என்பதையும் தழுவிக் கொள்ளுதற்கு. சோடச மார்க்கம் - பதினாறு கலை உள்ள பிராசாத யோக நெறி. "சன்மாக்கிகட்கு, கோதண்டமும் கடந்து, ஆடிய ஈராறின் அந்தமும், ஈரெட்டின் அந்தமும், கூடிய (இடத்திற்கு) ஏறியே இருக்கவே சொல்லும்" என வினை முடிவு செய்க. ஞானகுரு, தோன்றா எழுவாய்.

153. ஒளி

ஒளியை அறிக

2644. ஒளியை அறியில், உருவும் ஒளியும்,
ஒளியும் உருவும் அறியில் உருவாம்,
ஒளியின் உருவும் அறியில் ஒளியே,
ஒளியும் உருக உடன் இருந்தானே.

ஒளியை யறியி [1]லுருவு மொளியு
மொளியு [2]முருவு மறியி லுருவா[3]
மொளியி [4]னுருவு மறியி லொளியே
யொளியு முருக வுடனிருந் தானே. (1)

வேறு பாடம்: 1. லுருவ (ஆ) IV. 2. முருவ (இ ஒ) IV. 3. லுருவு (அ இ ஒ) I. 4. னுருவ (விசு) (தி) (வ) (த).

கருத்து: இப்பாடலில், ஒளி என்பது அறிவு. உரு என்பது பொருள்கள்; தத்துவங்கள். நமது கண்ணுக்குப் பொருளைக் காட்டும் ஒளி நான்கு வகை. அவை கண்ணொளி, புறவொளி, ஆன்மவொளி, சிவவொளி என்பவை. இவற்றுள் ஏதேனும் ஓர் ஒளியை நன்கு காணத்தொடங்கினால், பொருள் மறையும். பொருள்கள் அழியும் தன்மையுடையனவே. அவற்றையே அறிந்து கொண்டிருந்தால் மேலும் மேலும் பிறப்பு உண்டாகும். ஆதலால் உருவத்தைத் தள்ளி, ஒளியையே அறியவேண்டும்.

கண்ணொளி, புறவொளி, ஆன்மவொளி - இவற்றின் உண்மையை ஆராய்ந்தால், சிவவொளியினால் அவை ஒளிபெறுகின்றன என்று தெளியலாம். சிவம் நமது ஆன்ம வொளியும் கரையும்படி நம்முடன் இருந்து அறிவும் சிவானந்தமும் தருபவன்.

சிவவொளி என்பதும் அருவொளி என்பதும் ஒன்றே. சிவம் முதற்கண் அருளாயும், பின்பு அருள், சிவம் - ஆகிய இணையாயும் பின்பு சிவமே யாயும் அனுபவப்படும். கண்ணொளியையும், புறவொளியையும், ஆன்ம வொளியையும் சிவவொளி என்றே பாவித்து வந்தால், அகத்திலும், புறத்திலும் சிவம் எளிதாக அனுபவப்படும்.

பொது அருள் - சிறப்பு அருள்

2645. புகல் எளிது ஆகும் புவனங்கள் எட்டும்
அகல் ஒளி செய்து, இருள் ஆசு அற வீசிப்
புகல் ஒளி செய்தும் அத்தாமரை - இல்லே
இகல் ஒளி செய்து எம்பிரான் இருந்தானே.

புகலெளி [1]தாகும் புவனங்க ளெட்டு
மகலொளி செய்திரு ளாசற வீசிப்[2]
[3]புகலொளி [4]செய்துமத் தாமரை யில்லே[5]
யிகலொளி செய்தெம் பிரானிருந் தானே. (2)

வேறு பாடம்: 1. தாயிரு (சைவ) வீச (அ, இ) I; 2. வீசம் (விசு) (வ) (தி) (த) 3. பகலொளி செய்தது (விசு) (தி) (வ) (த) 4. செய்தது (சைவ) 5. தாமரையிலே (விசு) (தி) (வ).

கருத்து: சிவபிரானது அருள் பெற்றோர் எளிதாகச் சென்றுவரக் கூடிய, எட்டு எட்டாகக் கூறப்படும் புவனங்களில் எல்லாம் சிவஒளி பரவி, அறியாமை இருளை ஓட்டும். யோகியின் உயிருணர்விற்கு ஒளியேற்றிச் சகஸ்ராரத்தில் புகச் செய்து, அங்குள்ள தாமரையின் அகத்தே சத்தியுடன் இணைந்து, சதாசிவமாய் எங்கள் இறைவன் வீற்றிருக்கின்றான்.

இது பொது அருளும் யோகிக்கு அளிக்கும் சிறப்பருளும் கூறினார்.

சிவனுக்கு ஆன்மா இடம்

2646. விளங்கு ஒளி அங்கி, விரிகதிர், சோமன்
துளங்கு ஒளி பெற்றது சோதி அருள,
வளம் கொளி பெற்றது என்? பேரொளி வேறு
களம் கொளி செய்து கலந்து நின்றானே.

விளங்கொளி யங்கி விரிகதிர் சோமன்
றுளங்கொளி [1]பெற்றது சோதி யருள
வளங்கொளி [2]பெற்றதென் பேரொளி வேறு
களங்கொளி செய்து கலந்துநின் றானே. (3)

வேறு பாடம்: 1. பெற்றன (சைவ) 2. பெற்றதே (சங்).

கருத்து: அண்டத்திலும், உடம்பிலும் உள்ள அக்கினி மண்டலம் சூரிய மண்டலம், சந்திர மண்டலம் ஆகியவை, மறைந்தும் தோன்றியும் வரும் தன்மை பெற்றது யாரால்? சிவம் அருளியமை யால் பெற்றன. அவற்றின் வளத்தைப் பெறுபவனாகிய யோகி யாது பெறுகின்றான்? இயல்பாகவே பேரொளி வடிவினன் ஆகிய சிவம், தனக்கு யோகியின் ஆன்மாவை இடமாக்கிக் கொண்டு, கலந்து நிற்பான்.

களம் கொளி - களமாக உள்ளவன்; ஆன்மா. மண்டலங்கள் ஒளியை மட்டும் பெற, ஆன்மா பேரறிவையே பெறுகிறது என்றார். ஆனால், அது சிவம் ஆன்மாவைக் களமாகக் கொள்ளும் வரையிலேயே ஆகும்.

ஆகாயத்தில் மூன்று கதிர் ஒளி

2647. இளங்கு ஒளி ஈசன் பிறப்பு ஒன்றுமில்லி
துளங்கு ஒளி ஞாயிறும் திங்களும் காண,
வளம் கொளி அங்கியும் மற்றைக்கண் நெற்றி
விளங்கு ஒளி செய்கின்ற மெய் காயம் ஆமே.

[1]இளங்கொளி யீசன் பிறப்பொன்று மில்லி
துளங்கொளி ஞாயிறுந் திங்களுங் காண[2]
வளங்கொளி யங்கியு மற்றைக்கண் ணெற்றி
விளங்கொளி செய்கின்ற மெய்காய மாமே. (4)

வேறு பாடம்: 1. இளங்கிளை (அ ஈ) I. 2. கண்கள் (விசு) (தி) (வ) (த).

கருத்து: வேறு ஒரு சார்பினால் அன்றித் தானே ஒளிவடிவினன் ஆகிய சிவன் பிறவாத பெரியோன். அதாவது, அவனுக்கு உடம்பு என யாதும் இல்லை. எங்கும் விளங்கும் ஆகாயமே அவனுக்கு உடம்பு. அங்கு விளங்குகின்ற சூரியனும் சந்திரனும் அவனுக்குக் கண்கள். தீ அவனது நெற்றியில் உள்ள மற்றொரு கண். மாந்தருக்கும் இவை இவ்வாறு அமைந்துள்ளன. இவற்றுள், வலக்கண்ணாகிய சூரியனும், இடக்கண்ணாகிய சந்திரனும் புறப்பொருள்களை மட்டுமே காணும். ஆனால், புருவமத்தியில், யோக சாதனையால் விழிக்கப்பெறும் கண்ணோ, சிதாகாயத்தில் அமைந்த கதிர் ஒளியாகி, என்றும் நன்று விளங்கி, அகத்தே நிகழும் இறைவனுடைய திருவுருவைக் காட்டவல்லது.

காயம் - சிவனுக்குப் பரமாகாயம்; ஆன்மாவுக்குச் சிதாகாயம். முதலடி முதற்சீரில் 'இலங்கு' என்பது எதுகை நோக்கித் திரிந்தது.

ஐம்பூதங்களின் ஆற்றல்

2648. மேல்ஒளி, கீழ் அதில் மேவிய மாருதம்
பால் ஒளி அங்கி, பரந்தொளி ஆகாசம்
நீர் ஒளி செய்து. நெடுவிசும்பு ஒன்றிலும்
ஓர் ஒளி ஐந்தும் ஒருங்கு ஒளியாமே.

மேலொளி கீழதின் மேவிய மாருதம்
[1]பாலொளி யங்கி பரந்தொளி யாகாச
நீரொளி [2]செய்து நெடுவிசும் பொன்றிலு[3]
[4]மோரொளி யைந்து மொருங்கொளி யாமே. (5)

வேறு பாடம்: 1. பாரொளி (அ) IV. 2. செய்ய (ஆ) IV. 3. பேபோலு (ஆ) IV. 4. மேலொளி (ஈ ஓ) II.

கருத்து: (முன்பு "அடிதலை அறியும் திறம் கூறல்" என்ற இயலில் கூறப்பட்டவாறு) தலை சிவவொளியாகவும் அடியாகிய முச்சுக் காற்று அருட்சத்தியாகவும் நிற்க, நிலம் ஆகிய மூலாதாரத்தில் ஒளிவிடச் செய்யும் மூலக்கனல் திகழ, அவ்வொளியால் நீர் ஆகிய மணிபூரகச் சக்கரம் ஒளிபெற, பரந்த ஒளியை உடைய ஆகாயம் கழுத்திற்கு மேல் உள்ள பகுதியில் விளங்க, மூலக் கனலைச் சுழுமுனை வழியாக உச்சந்தலைக்கு ஏற்றினால், ஆகாயத்தான மாகிய அந்த ஓரிடத்திலேயே, ஐம்பெரும் பூதங்களின் ஒளியும் (ஆற்றலும்) ஒருங்கிணைந்து பேரொளியாகும். இதற்குச் சிவ - சத்தியின் அருளே காரணம்.

ஒரே ஒளி

2649. மின்னிய தூவொளி, மேதக்க செவ்வொளி,
பன்னிய ஞானம் பரந்த பரத்து ஒளி,
துன்னிய ஆறு ஒளி, தூய்மொழி நாள்தொறும்
உன்னியவாறு ஒளி ஒத்தது தானே.

மின்னிய தூவொளி [1]மேதக்க செவ்வொளி
பன்னிய ஞானம் பரந்த பரத்தொளி
துன்னிய வாறொளி தூய்மொழி நாடொறு
முன்னிய வாறொளி யொத்தது தானே. (6)

வேறு பாடம்: 1. மேதகு (ஆ இ) III.

கருத்து: ஞானாசிரியன் நல்கிய மூலமந்திரத்தை நாள்தோறும் தியானிப்பதால், அந்த யோக சாதனையில், யோகியின் உடம்பில் உள்ள ஆறு ஆதாரங்களின் ஆற்றல், தூய வொளி ஆகிய சிவஒளி, சத்தியின் செவ்வொளி, அகண்ட ஞானம் விளையும் ஆன்மாவின் சிதாகாய ஒளி என்ற இவை இணைந்து, ஒரே ஒளியாக விளங்கும்.

மூலமந்திரம் - சிவ வழிபாட்டு மூல மந்திரம் - திருவைந்தெழுத்து. அதன் அனுபவம் இங்குக் கூறப்பட்டது.

உலகம், அன்பர், பழுத்த அன்பர்

2650. விளங்கொளி மின்னொளி யாகிக் கரந்து
துளங்கொளி யீசனைச் சொல்லுமெப் போது
முளங்கொளி யூனிடை நின்றுயிர்க் கின்ற
வளங்கொளி யெங்கு மருவிநின் றானே. (7)

கருத்து: சிவபரம்பொருள் இயல்பாய் விளங்கும் பேரொளி உடைய வனாயினும் மின்னலின் ஒளி மேகத்தில் மறைந்திருப்பதைப் போல, உலகமெங்கும் கலந்து நிற்கின்றான். அன்பர்க்கு எப்போதேனும் தோன்றி மறைவான். ஆனால், அவனை எப்பொழுதும் எண்ணியும், துதித்தும், வணங்கியும் வருகின்ற உழுவலன்புடைய பழுத்த மனத்து அடியார்க்கு, அவர்தம் ஆணவ மலவிருளைக் கடிந்து, உள்ளம் முழுதும் இடங்கொண்டு விளங்குவான். அது மட்டுமோ? அவரது உடம்பில் இயங்கும் மூச்சுக்காற்றாக இருந்து, அதன் வளமாகிய யோகசித்தியை அவர்க்கு வழங்குவான்.

"விளங்கொளியீசன், துளங்கொளி, கரந்து எங்கும் மருவிநின்றான், எப்போதும் சொல்லும் உளம் கொளி, ஊனிடை நின்று உயிர்க்கின்ற வளங்கொளி (ஆவான்)" என வினை முடிவு செய்க.

"என்னுளே உயிர்ப்பாய்ப் புறம் போந்து, புக்கு, என்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசனே" என்றார் அப்பரடிகளும். (5 ஆம் திருமுறை, திருவின்னம்பர் - 1) உயிர்ப்பு - மூச்சு. மின்ஒளி ஆகி - மின்னல் ஒளியைப் போல. துளங்குதல் - அசைதல்; தோன்றி மறைதல். வளம் கொளி - வளத்தை உடையவன். வளம் - அருள். அஃது அட்டமாசித்தியாக இறைவனால் வழங்கப்படுவது என ஆசிரியர் உணர்த்துகின்றார்.

நஞ்சு உண்ட கழுத்து

2651. விளங்கு ஒளி அவ்வொளி, அவ்விருள் மன்னும்
துளங்கு ஒளியான், தொழுவார்க்கும் ஒளியான்
அளம்கொளி ஆரமுது ஆக, நஞ்சு ஆரும்
களம் கொளி ஈசன் கருத்து அது தானே.

விளங்கொளி [1]யவ்வொளி யவ்விருண் மன்னுந்
துளங்கொளி [2]யான்றொழு வார்க்கு மொளியா
னளங்கொளி யாரமு தாகநஞ் சாருங்
களங்கொளி யீசன் கருத்தது தானே (8)

வேறு பாடம்: 1. மின்னுந் (ஆ இ) 2. யான்றெழு (சங்).

கருத்து: இயல்பாய் விளங்கும் பேரொளியாகிய சிவம், உயிரின் அறிவிலும், அதன் அறிவாக உள்ளான். அதே சமயம், உயிரைப் பிணித்துள்ள மலவிருளிலும், அதை இயக்கும் சத்தியாக உள்ளான். இவ்வாறு இருவகை நிலையும் உடைய அவன், தன்னை வணங்கும் அடியாருக்கு, மலவிருளை நீக்கி, அவருடைய உணர்விற்கு எப்போதும் தோன்றுவான். பாற்கடலில் தோன்றும் அமுதத்தைத் தேவர்கள் உண்ணும் பொருட்டு, அங்கு எழுந்த ஆலகால நஞ்சைத் தான் உண்டு, கறுத்த கழுத்தை உடையவன் ஆகிய இறைவனது கருத்து, அடியார்கள் மலம் நீங்கப் பெற்றுச் சிவானந்தவமுதை உண்ண வேண்டும் என்பதே.

அகச் செயலாக உள்ளதைப் புறச்செயலால் உணர்த்தினான் என்றார்.

உயிரை ஒளியாக்குவான்

2652. இலங்கியது எவ்வொளி? அவ்வொளி ஈசன்
துலங்குஒளி போல்வது தூங்கு அருட்சத்தி,
விளங்குஒளி மூன்றே விரிசுடர்; தோன்றி
உளம்கொளி உள்ளே ஒருங்குகின்றானே.

இலங்கிய தெவ்வொளி யவ்வொளி யீசன்
துலங்கொளி போல்வது தூங்கருட் சத்தி
விளங்கொளி [1]மூன்றே விரிசுடர் தோன்றி
யுளங்கொளி யுள்ளே யொருங்குகின் றானே. (9)

வேறு பாடம்: 1. முன்னே (ஒ) I.

கருத்து: சார்பு வேண்டாது தானே ஒளிவிடும் சுடர் யாது? அது சிவம். அச்சுடரின் கதிர்கள் போன்றது அருட்சத்தி. அவர்களால் படைக்கப்பட்டு ஒளியுடையவையாக்கப்பட்ட சுடர்கள் சூரியன், சந்திரன், நெருப்பு என்ற மூன்றும். சிவம் யோக சாதனையால் உயிருணர்வுக்குப் புலப்பட்டு, உயிரைத் தன்னுடன் ஒன்றிடச் செய்கின்றான்.

ஒருக்குதல் என்ற பிறவினை, தன் வினையாக வந்தது. உயிரையும் தன்போல் ஒளியாக்குவான் என்பது பெறப்பட்டது.

உயிருக்கு ஒளி வழங்கினான்

2653. உளம்கொளி ஆவது, என் உள் நின்ற சீவன்
வளம் கொளியா நின்ற மாமணிச் சோதி
விளங்கு ஒளியாய் மின்னி, விண்ணில் ஒடுங்கி,
வளம்கொளி ஆயத்துளாக நின்றானே.

[1]உளங்கொளி யாவதென் னுண்ணின்ற சீவன்[2]
வளங்கொளி யாநின்ற மாமணிச் சோதி
விளங்கொளி [3]யாய்மின்னி விண்ணி லொடுங்கி
[4]வளங்கொளி யாயத்து [5]ளாகநின் றானே. (10)

வேறு பாடம்: 1. நலங்கொளி (அ) II. 2. வீசன் (அ) II. 3. யாய் மன்னி (அ) I. 4. அளங்கொளி (த) 5. ளாகிநின் (விசு) (தி) (வ) (த).

கருத்து: என் உள்ளத்தைத் தனக்கே உரிமையாக்கிக் கொண்டவன் என் உயிர்க்கு உயிராய் விளங்கும் சிவமாவான். அவன் என் உயிருக்கும் ஒளி வழங்கும் சோதியுடைய மாணிக்க மணி. சுடர் விடும் தெய்வ உருவில் தோன்றுபவன். அத்துடன் பரமாகாயமாகத் திகழும் சொரூபத் திருமேனியுடையவன். அன்புச் செல்வம் உடைய அடியார் கூட்டத்தில், அருட் சூழலாக இருக்கின்றான்.

மனோன்மனி நாதன்

2654. விளங்கு ஒளியாய் நின்ற விகிர்தன் இருந்த
துளங்கு ஒளி பாசத்துள், தூங்கு இருள் சோர,
களங்கு இருள் நட்டமே கண்ணுதல் ஆட,
விளங்கு ஒளி உன்மனத்து ஒன்றி நின்றானே.

விளங்கொளி யாய்நின்ற விகிர்த னிருந்த
துளங்கொளி பாசத்துட் டுங்கிருள் சோரக்
[3]களங்கிரு ணட்டமே கண்ணுத லாட
விளங்கொளி யுன்மனத் தொன்றிநின் றானே. (11)

வேறு பாடம்: 1. யாகத்துட் (ஆ) IV. 2. சேராக் (சங்) 3. கலங்கிரு (சுவ).

கருத்து: சிவம் உடனாய் நின்ற உயிருக்கு, அதன் மலங்கள் ஐந்தனுள் ஆணவமலம் நெகிழ்ந்து, நீங்குதற் பக்குவம் பெற, நெற்றிக் கண்ணையுடைய அப்பெருமான் இருள்நேரத்தில் சூக்கும நடனம் இயற்றும் பொருட்டு, யோகியின் தலைக்கு மேல், 12 அங்குல எல்லையில் உள்ள "உன்மனி" என்ற கலையோடு பொருந்தி நின்றான்.

உன்மனி பிராசாத கலை பன்னிரண்டனுள் இறுதியானது. (பதினோராந் தானமும் அவத்தை எனல் என்னும் முன்னை இயல் காண்க.)

தூது

2655. போது, கருங்குழல், போனவர் தூது இடை
ஆதி பரத்தை, அமரர் பிரானொடும்
சோதியும் அண்டத்து அப்பால் உற்ற தூவொளி
நீதியின் அல் இருள் நீக்கியவாறே.

போது கருங்குழற் போனவர் தூதிடை
யாதி பரத்தை யமரர் பிரானொடுஞ்
சோதியு மண்டத்தப் பாலுற்ற தூவொளி
நீதியி னல்லிரு [1]ணீக்கிய வாறே. (12)

வேறு பாடம்: 1. னீங்கிய (ஆ) I.

கருத்து: ஆன்மா தேவதேவனாகிய சிவபெருமானை அடைய முயலும் போது, அவர்களிடையே தூதாகச் செல்பவள், மலர் சூடிய கூந்தலாளும், மேலானவளும், ஆதிசத்தியின் மறுவடிவமுமாகிய திரோதான சத்தி (அவளே குண்டலி சத்தி). சிவபிரானோ, தன் சொரூப நிலையில் அண்டங்களுக்கெல்லாம் அப்பால் உள்ளான். அவனது சங்கற்பத்தால், திரோதான சத்தி, ஆணவ மல இருளைப் படிப்படியாக வலிமை குன்றச் செய்தது.

திரோதான சத்தியும் உயிரின் அறிவை மறைப்பதாயினும், வளரும் அறிவுக்கு அம்மறைப்பு இன்றியமையாதது. உயிர்க்கு அருளைப்

பெறும் பக்குவம் வரும் வரை, மறைக்க வேண்டியதை மறைத்து, அறிவூட்டுவதே முறையாகும். ஆதலின், "நீதியின் அல் இருள் நீக்கிய வாறே" என்றார். திரோதான சத்தியின் இச்செயலை, இரண்டு மன்னர்க்கு இடையே தூது செல்வோரது செயலாக உருவகித்தார்.

கொண்டு கூட்டு: "அமரர் பிரானொடும் (உயிர் இடைத்) தூது போனவர், போது கருங்குழல், ஆதி பரத்தை" எனக் கூட்டுக. பரத்து ஐ - பரவெளியின் தலைவி, பராசத்தி. இவளது பணி வடிவம் (Functional Form) திரோதான சத்தி.

மன விளக்கு

2656. உண்டில்லை யென்னு முலகத் தியலிது[1]
பண்டில்லை யென்னும் பரங்கதி யுண்டுகொல்
கண்டில்லை மானுடர் கண்ட கருத்துறில்
விண்டில்லை யுள்ளே [2]விளக்கொளி யாமே. (13)

வேறு பாடம்: 1. தியலது (அ) IV தியல்பிது (ஆ இ) III தியல்லது (சங்) (வ) தியற்கை (தி) 2. விளங்கொளி (ஒ) III.

கருத்து: ஒரு பொருளைக் கண்டு ஆராயாமல், உண்டு என ஒரு சிலரும், இல்லை என வேறு சிலரும் கூறுதல் உலகத்து இயற்கை. இத்தகைய உலகம் பழைய பொருளை இல்லை என்று கூறும். இவ்வாறு கூறுவோர்க்கு மேலான கதி கிடைக்குமா? பழம் பொருளாகிய இறைவனை மாந்தர் கண்டதில்லை. கண்டோரும் சொல்லியதில்லை. அவ்வாறானால், அந்த முதற்பொருள் எத்தகையது? யார் ஒருவர் தமது உணர்வின் உள்ளே ஓர்ந்து உணர்வாரோ, அவர்க்கு விளங்கும் மனவிளக்காக உள்ளது அது.

ஞான வொளி

2657. சுடர் உற ஓங்கியது உள்ளொளி; ஆங்கே
படர் உறு காட்சிப் பகலவன் ஈசன்
அடர் உறு மாயையின் ஆய இருள் வீசி
உடல்உறு ஞானத்து உறவியன் ஆமே.

சுடருற வோங்கிய [1]துள்ளொளி யாங்கே
படருறு காட்சிப் பகலவ னீச
னடருறு மாயையி [2]னாயிருள் வீசி
[3]யுடலுறு ஞானத் துறவிய னாமே. (14)

வேறு பாடம்: 1. வெள்ளொளி (இ ஈ) III வொள்ளொளி (ஆ) IV. 2. னாரிருள் (விசு) (தி) (வ) (த) 3. லுடலுறு (அ ஒ) IV.

கருத்து: புருவமத்தியில் உயிருணர்வாகிய சுடர் தோன்ற, அதன் உள்ளே, அருளானது ஒளியாகத் திகழ்ந்தது. அந்த அருளொளிக் குள்ளே, சிவபெருமான் சூரியன் போலத் தோன்றினான். அவன் உலகியலுடன் மாறுபடுவதாகிய மெய்ஞ்ஞானத்தை எனக்கு நல்கி, அந்த ஞான ஒளியினால், செறிவான மாயை இருளை நீக்கி, எனக்கு "ஆண்டான்" என்னும் உறவாயினான்.

படர் உறு காட்சி - படர்வதாகிய ஒளி. ஈண்டு, அருள்ஒளி. அடர்தல் - நெருக்கமாக இருத்தல். "திணிந்ததோர் இருள்" என்பார் மணிவாசகர். "ஆய" என்பதில் அகரம் தொக்கது. ஞானம் அன்பை விளைவிக்கு மாதலின், "ஞானத்து உறவியனாமே" என்றார்.

பளிங்கிற் பதிந்த பவளம்

**2658. ஒளிபவளத் திருமேனி வெண்ணீற்றன்
அளி பவளச் செம்பொன் ஆதிப் பிரானும்
களி பவளத்தினன் காரிருள் நீக்கி
ஒளி பவளத்து எனோடு ஈசன் நின்றானே.**

ஒளிபவ ளத்திரு மேனிவெண் ணீற்ற
னளிபவ ளச்செம்பொ னாதிப் பிரானுங்
களிபவ [1]ளத்தினன் காரிரு ணீக்கி[2]
யொளிபவ [3]ளத்தெனோ டீசனின் றானே. (15)

வேறு பாடம்: 1. ளத்தனன் (அ ஆ இ ஈ ஒ) I; ளத்தினின் (விசு) 2. ணீங்கி (சங்) 3. ளந்தனோ (அ) IV.

கருத்து: ஒளியுடைய பவளம் போன்ற திருமேனியில் வெண்ணீறு அணிந்தவனும், திருவருட்சத்தி யாகிய பவளத்தைப் பதித்து வைத்த செம்பொன்னைப் போன்றவனும், ஆதியாகிய தலைவனுமாகிய ஈசன், உவகை யூட்டும் மெய்ஞ்ஞானமாகிய பவளத்தைக் கொண்டவனாக விளங்கி, எனது ஆணவ மலவிருளை நீக்கி, பளிங்கில் மறைந்த பவளம் போலே, என் உயிருணர்வில் கலந்தான்.

ஒன்றுவது எப்போது?

2659. ஈசன் நின்றான், இமையோர்கள் நின்றார், நின்ற
தேசம் ஒன்று இன்றித் திகைத்து இழைக்கின்றன
பாசம் ஒன்றாக, பழவினை பற்று அற
வாசம் ஒன்றாம் மலர் போன்றது தானே.

ஈசனின் றானிமை யோர்கணின் றார்நின்ற
தேசமொன் றின்றித் திகைத்திழைக் கின்றன'
பாசமொன் றாகப் பழவினை பற்றற
வாசமொன் றாமலர் போன்றது தானே. (16)

வேறு பாடம்: 1. திகைத்திழைக்கின்றனர் (ஆ) II; திகைத்தழைக் கின்றனர் (த).

கருத்து: சிவபெருமான் யாவர்க்கும் முதல்வனாய் நிற்கின்றான். அவனது ஆணையாலே தேவர்கள் விண்ணுலகில் வாழ்கின்றனர். பிற உயிர்கள் எத்துணையோ உலகங்களில் வாழ்கின்றன. தேவர் உட்பட அத்துணை உயிர்களும், தாம் எவ்விடத்தில் வாழ்ந்தாலும், தம்மைப் பிணித்துள்ள ஆணவ மலத்தால் திகைத்து வினைகளைச் செய்கின்றன. அவ்வினைகள் எல்லாம் சஞ்சிதமாகச் சேர்ந்துள்ளன. அவை முற்றும் நீங்கினால்தான் மலரும் மணமும் பிரிப்பின்றி ஒன்றாய் இருப்பது போல, ஈசனும் உயிரும் ஒன்றியிருக்கக் கூடும்.

புகழுக்குரியவன்

2660. தானே இருக்கும்; அவற்றின் தலைவனும்;
தானே இருக்கும் 'அவன்' என நண்ணிடும்;
வானாய் இருக்கும் இம் மா இரு ஞாலத்துப்
பானுவாய் இருக்கப் பரவலுமாமே.

தானே யிருக்கு மவற்றிற் றலைவனுந்
தானே யிருக்கு மவனென நண்ணிடும்
வானா யிருக்குமிம் மாயிரு ஞாலத்துப்
பானா யிருக்கப் பரவலு மாமே. (17)

கருத்து: வேதங்களும் ஈசனே. அவற்றின் தலைவனும் அவனே. வேதநெறி, தன்னால் எய்தப்படும் முடிபொருள் ஈசனே என்று,

அதற்கு உரிய வழியாக அமைந்ததாகும். ஆகாயத்திலிருந்து தோன்றி, அதில் அடங்கியுள்ள இவ்வுலகில், ஈசன் ஞான ஒளி வீசும் சூரியனாக உள்ளான். இக்காரணங்களால் நாம் அவனைப் புகழ்ந்து வணங்க வேண்டும்.

குறிப்பு: இதனை அடுத்துச் சுவடிகளிலும் பதிப்புகளிலும் 'தூல பஞ்சாக்கரம்' என்ற இயலின் முதற் பாடலாக உள்ள "ஐம்பதெழுத்தே" என்னும் பாடல் 'திருவம்பலச் சக்கர' - இயலில் வந்தது. (பா. எண். 956) அங்கு அஃது இடைச்செருகல் என இனங்காட்டப்பட்டது.

154. தூல பஞ்சாக்கரம்

பிரணவமே ஐந்தெழுத்து

2661. அகார முதலாக வைம்பத்தொன் றாகி
உகார முதலாக வோங்கி யுதித்து
மகார விறுதியாய் மாய்ந்துமாய்ந் தேறி
நகார [1]முதலாக நந்திதன் னாமமே. **(1)**

வேறு பாடம்: 1. முதலாரு (சங்)

கருத்து: மந்திரங்களின் தாய்-எழுத்துகள் (மாத்ருகாக்ஷரங்கள்) எனப்படும் ஐம்பத்தோரெழுத்துகளும் அகாரத்தை முதலாக உடையவை. அவை ஒவ்வொன்றும் குறிப்பிட்ட மாத்திரை நேரம் ஒலித்து மறைவதே. அவற்றுள் அகார, உகார, மகாரங்கள் சேர்ந்து, பிரணவம் பிறக்கும். அதில் மகரமெய் இறுதியாக எழுதப் பெற்றாலும், பிரணவ ஒலி அதில் முடிந்துவிடாது. மகரத்தைத் தொடர்ந்து நாதம், விந்து, நாதாந்தம் என நீளும். பிரணவமே நகரத்தை முதலாக உடைய திருவைந்தெழுத்தாக விரியும்.

எல்லாப் பொருள்களின் பெயர்களும், ஐம்பத்தோர் எழுத்துத் தொகுதியிலிருந்து உண்டாவனவே. அப்பொருள்கள் அழியும் தன்மையவாதலின், சொற்களும் பொருளற்று நிற்கும். மீண்டும் பொருள்கள் தோன்றும் போது, சொல்லும் பொருள் பெறும். இதனை, "மாய்ந்து மாய்ந்து ஏறி" என்றார். அவை போல் பிரணவமும் திருவைந் தெழுத்தும் அழிவனவல்ல. ஆதலின், சொற்கள் மீண்டும் தோன்றும் போது, பிரணவத்திலிருந்து தோன்றும். மாய்ந்து, பின் ஏற என்க.

பிரணவமும் தூல பஞ்சாக்கரமும்

2662. அகர ஆதி ஈர்-எண் கலாந்தப் பரையும்
உகர-ஆதி தன் சத்தி; உள்ளொளி ஈசன்
சிகர ஆதி தான் சிவ, ஏதமே, கோணம்
நகர-ஆதி தான் மூலமந்திரம் நண்ணுமே

அகராதி [1]யீரெண் [2]கலாந்தப் பரையும்
உகராதி தன்சத்தி யுள்ளொளி யீசன்
சிகராதி தான்சிவ [3]வேதமே கோண
நகராதி தான்மூல மந்திர நண்ணுமே. (2)

வேறு பாடம்: 1. யீரெட்டலர்ந்த (து) 2. கலந்தப் (அ) I கலந்த (இ ஒ) I. 3. வேதவே (சுவ)

கருத்து: அகரம் முதலாக உள்ள சந்திர கலைகள் பதினாறனுள்ளும், அவை கடந்த பெருஞ்சுக வெளியிலும் முறையே சிவத்துடன் உடனாயும் ஒன்றாயும் இருப்பவள் அவனது சத்தி. அவள் பிரணவத்தில் உகர எழுத்தாற் குறிக்கப்படுவாள். (உகரத்துடன் மகர மெய் சேர்ந்து, அவளது திருப்பெயர், 'உமா' என அமையும்) சத்தியின் உள்ளொளி சிவம். திருவைந்தெழுத்தில் சத்தி - சிவம், சிகரத்தை முதலாகக் கொண்ட 'சிவ' என்ற பகுதியாலும், உயிர் யகர எழுத்தாலும், மலங்கள் 'நம' என்ற எழுத்துகளாலும் சுட்டப் படும். இது தூல பஞ்சாக்கரமாகிய மூலமந்திரமாகும்.

"திருவம்பலச்சக்கர" இயலுள் "அகாரம்உயிரே" என்ற பாடலை இப்பாடலுடன் ஒப்பவைத்து உணர்க.

திருவைந்தெழுத்தின் இடம்

2663. வாயொடு கண்டம், இதயம், மருவு உந்தி
ஆய இலிங்கம், அவற்றின் மேல் அவ்வவாய்த்
தூயதோர் துண்டம், புரு, மத்தகம், சொல்லல்
ஆய சிரம் ஐந்தோடு ஆம் எழுத்து அஞ்சுமே.

வாயொடு கண்ட மிதய மருவுந்தி
[1]யாய விலிங்க மவற்றின்மே லவ்வவாய்த்[2]
தூயதோர் துண்டம் [3]புருமத் தகஞ்சொல்ல
[4]லாய சிரமைந்தோ டாமெழுத் தஞ்சுமே. (3)

வேறு பாடம்: 1. மாய (ஓ) I. 2. லவ்வாய்த் (ஆ இ) II; யவ்வவாய்த் (ஓ) I; லேயவ்வாய் (சங்) (சைவ) 3. புருமத்திகஞ்சொல்ல (அ) I; மிருமத்த கஞ்சொல்ல (இ) IV; மிகுமத்தகஞ்சொல்ல (ஓ) I; மிருமத்தகஞ்செய்ய (விசு) (வ) (த) 4. லாயதீறா (சைவ) (சங்) (விசு) (தி) (வ) (த)

கருத்து: திருவைந்தெழுத்து சூக்குமை, மத்திமை, பைசந்தி, வைகரி என்னும் நால்வகை வாக்குகளாக, வாய், கழுத்து, இதயம், உந்தி, மூலாதாரம் என்னும் இடங்களில் பொருந்தியும் தியானிக்கப்படும் பொருளாயும் புருவமத்தி, நெற்றி, உச்சந்தலை ஆகியவற்றில் பொருந்தியும் நிற்கும்.

உயிருக்குப் பாதுகாப்பு

2664. கிரணங்கள் ஏழும் கிளர்ந்து எரி பொங்கிக்
கரணங்கள் விட்டு, உயிர்தான் எழும் போதும்,
மரணம் கை வைத்து, உயிர்மாற்றிடும் போதும்
அரணம் கைகூட்டுவது அஞ்செழுத்தாமே.

கிரணங்க ளேழுங் கிளர்ந்தெரி பொங்கிக்
கரணங்கள் விட்டுயிர் தானெழும் போது
மரணங்கை வைத்துயிர் மாற்றிடும் போது
மரணங்கை கூட்டுவ தஞ்செழுத் தாமே. (4)

கருத்து: நெருப்பு தன் எழுவகைத் கதிர்களும் எழ, எரியும் பொழுது, அதில் கருவி கரணங்களை எல்லாம் சாம்பலாகும்படிவிட்டு, உயிர் நீங்கும் போதும், வாழ்நாள் முடியும் முன்னரே மரணம் விபத்தாக நேரிட்டு, உயிர் நீங்கும் போதும், அதற்குப் பாதுகாப்பாக அமைந்து, நற்கதி யடைவிப்பது திருவைந்தெழுத்தே யாகும்.

தாயைக் காட்டும் மந்திரம்

2665. ஞாயிறு திங்க ணவின்றெழு காலத்தி
லாயுறு மந்திர மாரு மறிகிலர்
சேயுறு கண்ணி திருவெழுத் தஞ்சையும்
வாயுற வோதி வழுத்தலு மாமே. (5)

கருத்து: வலக்கண் ஒளியாகிய சூரிய கலையும், இடக்கண் ஒளியாகிய சந்திர கலையும் இணைந்து, புருவமத்தியில் ஏறுமுக மாக நோக்கும் போது, சுழுமுனை வழியே வந்த மூலக்கனலும் அங்கு வந்து, அவற்றுடன் இணைந்து முக்கூட்டு ஒளியாகக்

காட்சிப்படுவதற்குரிய மந்திரத்தைச் சிவயோகி அன்றி வேறு யாரும் அறியார். மூலக்கனலை எழுப்பிப் புருவ மத்திக்குக் கொண்டு வரும் குண்டலிசத்தி, அருட் சத்தியாக - தன் இயல்பு நிலையை அடைவதற்குச் செபிக்கும் (தியானிக்கும்) மந்திரம் ஒன்றே. அது திருவைந்தெழுத்தே. அதன் பெருமையை வாயாரக் கூறி வாழ்த்துவோம்.

ஆயுறு - ஆய்தல் உறுகின்ற; தியானத்தால் உள்முகமாகத் தேடலுறுகின்ற. அதற்கு உதவும் மந்திரம் என்க. சேயுறு கண்ணி - செம்மை பொருந்திய கண்ணை உடையவள். செம்மை - கருணை. இதை உடையவள் அருட் சத்தி.

குறிப்பு: இதனை அடுத்துச் சுவடிகளிலும் பதிப்புகளிலும் உள்ள "தெள்ளமுதூற" என்னும் பாடல் அடுத்த இயலில் இருத்தற்குரியது. எனவே, இங்கு விடப்படுகிறது.

அருள் நெறிச் சாதனம்

2666. குருவழி [1]யாய குணங்களி னின்று
கருவழி யாய கணக்கை யறுக்க[2]
வரும்வழி [3]மாள [4]மறுக்கவல் லார்கட்
[5]கருள்வழி காட்டுவ தஞ்செழுத் தாமே. **(6)**

வேறு பாடம்: 1. யாயங் (அ) I. 2. யறுத்து (இ) III. 3. மான (சங்) 4. மறிக்க (இ) IV. 5. கருவழி (இ ஈ ஓ) III.

கருத்து: ஞானாசிரியன் கூறும் உபதேச வழியில், அதற்கு ஏற்ற நல்ல பண்புகளைக் கடைப்பிடித்து, பிறந்துள்ள பிறப்புக்குக் காரணமான பிராரத்தவினையை, மேலும் வினைப்பயன் வந்து சேராத வண்ணம் அனுபவிக்கவும், எஞ்சியிருக்கும் சஞ்சித வினை அற்றுப் போகுமாறு, இறையருளால் தீர்க்கவும் வல்லார்க்கு, அதற்கு ஏதுவான அருள்நெறி வாழ்க்கையைத் தருவது திருவைந்தெழுத்தே.

கணக்கை அறுத்தலும், மறுத்தலும், அருள்நெறி வாழ்வின் பயன் என்க. அவ்வாழ்வுக்குச் சாதனம் திருவைந்தெழுத்து.

ஐந்தெழுத்து யோகம்

2667. [1]வெறிக்க வினைத்துயர் வந்திடும் போது
செறிக்கின்ற நந்தி திருவெழுத் தோதுங்
குறிப்பது [2]வுன்னக் குரைகழற் கூட்டுங்
குறிப்பறி [3]வான்றவங் கோனுரு வாமே. **(7)**

வேறு பாடம்: 1. வெறுக்க (அ) I. 2. வுன்னல் (அ ஈ) III; வுன்னிற் (ஓ) III. 3. வான்றன் குருபரனாமே (அ) IV.

கருத்து: செய்வது அறியாது திகைக்கும் அளவிற்கு, வினையால் துயரம் உற்றபோது, மனவுறுதியைத் தருவதாகிய திருவைந் தெழுத்தை ஓத வேண்டும் என்ற எண்ணம் தோன்றினால், அந்தச் செபம் அல்லது தியானம் சிவனது திருவடியில் ஒருவனைச் சேர்க்கும். அவன் சிவயோகம் பயின்றால், சிவனது உருவத்தையே பெறலாம்.

சரணாகதி

2668. நெஞ்சு நினைந்துதம் வாயாற் பிரானென்று
துஞ்சும் [1]பொழுதுன் [2]றுணைத்தாள் சரணென்று
மஞ்சு தவழும் வடவரை மீதுறை
[3]யஞ்சி லிறைவ னருள்பெற லாமே. (8)

வேறு பாடம்: 1. பொழுதென் (இ ஓ) I; பொழுதெந் (ஓ) I. 2. துணை சரணீசனு (ஓ) IV; துணைசரண் நீயெனும் (ஓ) IV; துணையே சரணென்னு (இ ஈ) IV. 3. யஞ்ச (அ ஆ ஈ) I.

கருத்து: சிவனை மனத்தால் எண்ணி, வாயால் 'எம் பிரான்' என்று கூறி, 'யான் இறக்கும்போது உன் திருவடியே எனக்கு அடைக்கலம்' என்று யோகி தன்னை ஒப்படைத்தால், அவன் தனது சகஸ்ராரத்தில், அச்சம் போக்கி யாட் கொள்ளும் இறைவனது காட்சியை - அருளைப் - பெறலாம்.

எல்லா ஆற்றலும் ஐந்தெழுத்துள்ளே

2669. பிரான்வைத்த வைந்தின் பெருமை யுணரா
திராமாற்றஞ் செய்வர்கொ லேழை மனிதர்
பராமுற்றுங் கீழொடு பல்வகை யாலு
மராமுற்றுஞ் சூழ்ந்த அகலிடந் தானே. (9)

கருத்து: சிவபிரான் நல்கிய திருவைந்தெழுத்தின் பெருமையை உணராதோர் அறிவற்றோர். அவர் எங்ஙனம் தம்மைப் பிணித்த ஆணவ இரவை, ஞானப்பகல் ஆக்குவர்? கீழ்நிலையிலிருந்து பரை என்ற மேல்நிலை வரை, பலவகையாக உள்ள சத்திகளும் திருவைந்தெழுத்தே. குண்டலியாகிய பௌதிக சத்தியால் இயங்கும் மாந்தர் நிறைந்த உலகம் முழுவதும் திருவைந்தெழுத்தின் ஆற்றலே.

155. சூக்கும பஞ்சாக்கரம்

2670. எளிய வாதுசெய் வாரெங்க ளீசனை
யொளியை யுன்னி யுருகு மனத்தராய்த்
தெளிய வோதிச் சிவாயநம வென்னுங்
குளிகை யிட்டுப்பொன் னாக்குவன் கூட்டையே. (ட)

சொல்லமுது

2671. தெள்ளமு தூறச் சிவாய நமவென்று
வுள்ளமு தூற வொருகா லுரைத்திடும்
வெள்ளமு தூறல் விரும்பியுண் ணாதவர்
துள்ளிய நீர்போற் சுழல்கின்ற வாறே. (1)

கருத்து: நாவில் நீர் ஊறவும், மனத்தில் இனிமை ஊற்றெடுக்கவும் ஒருமுறை 'சிவாயநம' என்ற கூறும் நிறைந்த சொல்லமுதத்தை உண்ணாதோர் துள்ளியோடும் கடல் அலையைப் போல் நிலைபேறு இன்றிச் சுழல்கின்றனர்.

குறிப்பு: இப்பாடல் (சங்), (சைவ) பதிப்புகளில் 'தூல பஞ்சாக்கார' இயலில் உள்ளது.

ஆணவம் அணுகாது

2672. சிவன்சத்தி சீவன் செறுமல மாயை
யவஞ்சேர்த்த பாச மலமைந் தகலச்
சிவன்சத்தி தன்னுடன் சீவனார் சேர்வ[1]
ரவஞ்சேர்த்த பாச மணுக கிலாவே. (2)

வேறு பாடம்: 1. சேர (சங்) (சைவ)

கருத்து: சூக்கும பஞ்சாக்கர எழுத்துக்கள் முறையே சிவன், அருட்சத்தி, ஆன்மா, திரோதானசத்தி, ஆணவமலம் ஆகியவற்றைக் குறிக்கும். உயிரிலிருந்து மலங்கள் ஐந்தும் நீங்கும்போது, அவ்வுயிர் சிவ - சத்திகளுடன் உடனாய் நிற்கும். அப்போது அதனை ஆணவ மலம் நெருங்காது.

முத்தி பஞ்சாக்கரம்

2673. சிவனரு ளாய சிவன்றிரு நாமஞ்
சிவனரு ளான்மாத் திரோத மலமாய்ச்[1]
சிவமுத லாகச் சிறந்து நிரோதம்
பவம தகன்று பரசிவ னாமே. (3)

வேறு பாடம்: 1. மாயை (ஓ) II.

கருத்து: சிவபெருமானுடைய கருணையால் உலகுக்குக் கிடைத்த அருட்பொருள் திருவைந்தெழுத்து. சிவம் முதலாகக் கணிக்கப் பட்டால், அது முத்திபஞ்சாக்கரமாம். அது முறையே சிவமுதல்வன், அருட்சத்தி, ஆன்மா, திரோதானம், ஆணவமலம் என்பவற்றைக் குறிக்கும். அதைச் செபித்தல், ஆணவமலப் பிணிப்பிற்குத் தடையாக அமையும். செபிக்கும் மாந்தர் பிறப்பு நீங்கிச் சிவமாந் தன்மை பெறுதலாகிய வீடுபேற்றை அடைவர்.

குறிப்பு: சுவடிகளிலும் பதிப்புகளிலும் இதனை அடுத்துள்ள "ஓதிய நம்மலம்" என்னும் பாடல் அடுத்த இயலில் இருத்தற்குரியது. எனவே இங்கு விடப்படுகிறது.

தலைக்கு மேல் துரியம்

2674. நம - ஆதி நனா - ஆதி திரோதாயி ஆகித்
தம் ஆதியதாய் நிற்க, தான் அந்தத்து உற்று,
சமாதித் துரியம் தனது ஆகம் மீதோன்
நம-ஆதி சமாதி சிவம் ஆதல் எண்ணவே.

நமாதி நனாதி திரோதாயி யாகித்
தமாதி யதாய்நிற்கத் தானந்தத் துற்றுச்
சமாதித் துரியந் [1]தனதாக மீதோன்[2]
நமாதி சமாதி சிவமாத லெண்ணவே. (4)

வேறு பாடம்: 1. தமதாக (இ ஓ) II. 2. மாவோன் (ஓ) II; மீயவோர் (இ) I; மீவோர் (ஆ) I; மிதோர் (அ, ஓ) V; மாவே (சங்) மாகவே (விசு) (தி) (வ) மாக (த) ஒரு பாடமும் பொருந்தாமையின், அ - சுவடிப் பாடம் திருத்திக் கொள்ளப்பட்டது.

கருத்து: தூல பஞ்சாக்கரத்தில், திரோதான சத்தி நின்று, கேவலம், சகலம் ஆகிய இரண்டு தொகுதி அவத்தைகளையும் உண்டாக்க,

‘நம’ என்பது அப்பஞ்சாக்கரத்தின் முதலாக நிற்கும். உயிரைக் குறிக்கும் யகர எழுத்து இறுதியில் நிற்கும். அவ்வுயிராகிய யோகி ‘நம’ - என்பதற்குச் சமமாகச் ‘சிவ’ என்பதை வைத்துச் சிவ முதலாகப் பஞ்சாக்கரத்தைக் கணித்தால், தன் உடம்புக்கு (உச்சந்தலைக்கு) மேல் துரிய அவத்தை எய்திச் சமாதி கூடுவான்.

நெற்றிக்கு மேல், சகஸ்ராரத்தில், சுத்த துரியத்தையும் உடம்புக்கு மேலே, பர துரியம், சிவ துரியம் ஆகியவற்றையும் முறையே எய்துவான் என்று கொள்க. “ஆக மீது” என்பதற்கு, உடம்பின் மேற் பகுதியிலும், அதற்கு மேற்பட்ட பகுதியிலும் எனப்பொருள் செய்க. நமாதி - ‘நம’ என்பது. நனா, ஆதி - நனாதி என ஆகாரவுயிர் புணர்ச்சியில் கெட்டது. பாடலில், ‘உயிர்’ என்பது தோன்றா எழுவாய். “மீதோன்” என்பது பயனிலை.

குறிப்பு: இப்பாடலை அடுத்துச் சுவடிகளிலும் பதிப்புகளிலும் உள்ள “அருள் தருமாயமும்” என்னும் பாடல் அடுத்த இயலில் இருத்தற் குரியது. அதனையடுத்த இரு பாடல்கள் அதற்கு அடுத்த இயலில் நிற்றற்குரியன. அவற்றை யடுத்த ‘நம வென்னும்’ என்ற பாடல் “அதி சூக்குமபஞ்சாக்கரம்” என்ற இயலில் இருத்தற்குரியது. எனவே அவையாவும் இங்கு விடப்படுகின்றன.

156. அதி சூக்கும பஞ்சாக்கரம்

சிவஞானம்

2675. ஓதிய ந, மலம்-எல்லாம் ஒழித்திட்டு, அவ்
ஆதி தனை விட்டு, இறை அருட்சத்தியால்
தீதில் சிவஞான யோகமே சித்திக்கும்
ஓதும் “சிவாய”-மலம் அற்ற உண்மையே.

ஓதிய நம்மல மெல்லா மொழித்திட்டவ்[1]
வாதி தனைவிட் டிறையருட் சத்தியாற்
றீதில் சிவஞான யோகமே சித்திக்கு
மோதுஞ் [2]சிவாய மலமற்ற வுண்மையே. (1)

வேறு பாடம்: 1. மொழித்தியல் (அ) IV. 2. சிவமாய (அ இ ஒ) I.

கருத்து: சூக்கும பஞ்சாக்கரத்தில், நகரத்தால் குறிக்கப்பெறும் திரோதான சத்தியையும், மகரத்தாற் குறிக்கப்பெறும் ஆணவ மலத்தையும் நீக்கி, ஆதிசத்தியாகிய திரோதான சத்தி அருட் சத்தியாக நிற்க, ஓதுகின்ற “சிவாய” என்னும் பஞ்சாக்கரம், மலமற்ற

அனுபவத்தின் வெளிப்பாடாகும். அதனைத் தியானிப்பதால் சிவஞானமும், சிவயோகமும் எய்தும்.

சிவயோகம் என்று, சிவ துரியாதீத நிலையில் எய்தும் சமாதியைக் கூறினார். இம் மந்திரத்தைச் 'சிவாயசிவ' என்றும் கொள்வர்.

ஐம்மலம் நீக்க

2676. அருள்தரும் ஆயமும், அத்தனும் தம்மில்
ஒருவனை ஈன்றவள் உள் உறு மாயை
திரி மலம் நீங்கச் 'சிவாய' என்று ஓதும்
அருவினை தீர்ப்பது அஞ்செழுத்தாமே.

அருடரு [1]மாயமு மத்தனுந் தம்மி
லொருவனை யீன்றவ [2]ளுள்ளூறு மாயை
திரிமல நீங்கச் சிவாயவென் றோது
மருவினை தீர்ப்பது [3]வஞ்செழுத் தாமே. (2)

வேறு பாடம்: 1. மாயனு (அ ஆ இ ஒ) I. 2. னுள்ளூறு (ஒ ஒ) I; ருள்ளூறு (விசு) (வ) (த) ருள்ளூறை (த) 3. மவ்வெழுத்தாமே (விசு) (தி) (த)

கருத்து: அருட்சத்தியின் பேதங்களாய் விளங்கும் சத்திகள் கூட்டமும், அவர்களுடன் தக்கவாறு கூடி நிற்கும் சிவனும் படைக்க, உயிருக்கு உடம்பை அளிப்பவள் அசுத்தமாயை. ஆணவம், மாயை, திரோதானம் என்ற மூன்று மலங்களும் நீங்கச் செய்து, கடத்தற்கு அரிய வினைகளையும் (கன்மம்) நீக்குவது, 'சிவாய' என்று கணிக்கும் அதி சூக்கும பஞ்சாக்கரமே. ஐந்து மலங்களுள், மாயேயம் ஈண்டு மாயைக்குள் அடங்கியது.

மந்திரப் பயன்

2677. 'நம'-என்னும் நாமத்தை நாவில் ஒடுக்கிச்
'சிவ'-என்னும் நாமத்தைச் சிந்தையுள் ஏற்றிப்
பவம்-அது தீரும் பரிசும்-அது உற்றால்
அவமதி தீரும்; அறும் பிறப்பு அன்றே.

நமவென்னு நாமத்தை நாவி லொடுக்கிச்
சிவவென்னு நாமத்தைச் சிந்தையு ளேற்றிப்[1]
பவமது தீரும் [2]பரிசது வுற்றா
[3]லவமதி தீரு மறும்பிறப் பன்றே. (3)

வேறு பாடம்: 1. ளேற்றப் (விசு) (தி) (வ) (த) 2. பரிசும தற்றா (அ இ ஈ ஒ ஓ) II. 3. லவமது (ஆ இ) IV.

கருத்து: 'சிவாய நம' என்னும் திருவைந்தெழுத்தில் 'நம' என்பதைச் செபிக்காமல், 'சிவாய' என்பதை மட்டும் தியானத்தில் நிறுத்தினால், அதன் விளைவாகப் பாவம் நீங்கும். அறியாமை நீங்கும், பிறப்பும் நீங்கும்.

157. காரண பஞ்சாக்கரம்

சிவமாக்கும் திருவருள்

2678. சிவ சிவ வென்றே தெளிகில ரூமர்
சிவ சிவ வாயுவுந் தேர்ந்துள் ளடங்கச்
சிவ சிவ வாய தெளிவினுள் ளார்கள்
சிவ சிவ வாகுந் திருவரு ளாமே. (1)

கருத்து: 'சிவ' - பஞ்சாக்கரத் தியானத்தால் மனமும் மூச்சும் பக்குவப் பட்டு முறையே, மனம் உயிருணர்வின் வழியும், மூச்சு நடுநாடியிலும் இயங்க, 'எல்லாம் சிவம்' என்றே காணும் ஞானத்தைப் பெற்று, அ மைந்து, அடங்கி வாழ்பவர் சிவமே ஆகும் திருவருள் பிறக்கும். அதனை அறிந்து 'சிவ சிவ' என்று செபிக்காதோர், வாய் இருந்தும் ஊமையராவர்.

தெளிவு - ஞானம். அவர்கள் பதிஞானம் உபதேசிக்கப் பெறுவர் என்பது குறிப்பாற் பெறப்படும். 'உள்ளார்கள் ஆகும் திருவருள் ஆமே" என வினை முடிவு செய்க.

திருவைந்தெழுத்து மந்திரம் அனுபவ முறையில், தூலமாயும், பிறகு சூக்குமமாயும் கணிக்கப்பட்டுப் பின்னர், மறைப்பு ஆற்றல், மலம் ஆகியவை அறவே நீங்கும் போது, 'சிவாய' என மூன்று எழுத்தாய் நின்று, பின்னர் ஆன்ம போதமும் நீங்க, இரண்டெழுத்தாய் நின்று, சொரூப சிவத்தை உணரும் நிலையில் ஓர் எழுத்தாய் நிற்றலைக் கூறுவதே ஆசிரியர் கருத்தாதலின், 'சிவ' என்ற இரண்டு எழுத்தே காரண பஞ்சாக்கரம் எனக்கொள்க. 'சிவயசிவ' என ஐந்தெழுத்து நிற்பதே காரண பஞ்சாக்கரம் எனக் கொள்வது ஆசிரியர் கருத்தன்று.

குறிப்பு: இப்பாடலும் அடுத்த பாடலும், சுவடிகளிலும், பதிப்புகளிலும் 'சூக்கும பஞ்சாக்கரம்' என்னும் இயலில் உள்ளன. இவை 'சிவ' என்ற இரண்டு எழுத்துப் பஞ்சாக்கரத்தைக் கூறுகின்றன ஆதலினாலும், அது

காரண பஞ்சாக்கரம் ஆதலாலும் அப்பெயருடன், தருமபுரவாதீனப் பதிப்பில், தனியியலாகக் கொள்ளப்பட்டது போல, இப்பதிப்பும் மேற்கொண்டது. சுவடிகளும் பதிப்புகளும், "அதிசூக்கும பஞ்சாக்கர" இயலில் வைத்த "செஞ்சுடர் மண்டலத்து" என்ற பாடலும் இவ்வியலில் வைக்கப்படுகின்றது. இவ்வியலில் உள்ள 3 பாடல்கள் தருமபுரப் பதிப்பிற் போல "மகா காரண பஞ்சாக்கரம்" எனத் தனியோர் இயலாக்கப்பட்டுள்ளன.

வளரும் பயன்

2679. சிவசிவ வென்கிலர் தீவினை யாளர்
சிவசிவ வென்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ வென்றிடத் தேவரு மாவர்
சிவசிவ வென்றிடச் சிவகதி தானே. (2)

கருத்து: 'சிவசிவ' எனச் செபியாதோர், இன்னும் தீவினைப் பயனை அனுபவிக்க வேண்டியவர். அவர்கள் இனிமேலேனும் அப்புண்ணிய நாமத்தைச் செபித்தால், அவரது தீவினைப் பயன்கள் மாய்ந்து விடும். அதன் மேலும் செபிக்க, நல்வினை பெருகி, அதன் பயனாக விண்ணுலக வாழ்வு பெறுவர். அதன் மேலும் செபிக்க,சிவகதி ஆகிய வீடு பேறு அடைவர்.

பிரியாப் பேறு

2680. செஞ்சுடர் மண்டலத் தூடுசென் றப்புற
[1]மஞ்சண வும்முறை யேறி வழிக்கொண்டு
[2]துஞ்சு மவன்சொன்ன காலத் திறைவனை
[3]நெஞ்செசன நீங்கா நிலைபெற லாகுமே. (3)

வேறு பாடம்: 1. மஞ்சள (ஓ) IV. 2. சுஞ்சுணவன் (அ ஈ ஓ ஓ) I. 3. நெஞ்சினை (ஆ) IV.

கருத்து: தனது உடம்பின் மூலக்கனலை உடம்பிலே உள்ள சூரிய மண்டலத்தின் வழியே மேலே ஏற்றி, அதனோடு உயிருணர்வைத் தலையுச்சிச் சகாஸ்ராரத்திற்கு ஏற்றி, இக்காரண பஞ்சாக்கரத்தைத் தியானித்துச் சமாதி கூடும் யோகி, இறைவனைத் தன் மனமே என நீங்காத நிலையைப் பெறலாம்.

158. மகா காரண பஞ்சாக்கரம்

கப்பல் கரைசேர

2681. அங்கமும் ஆகம வேதமும் ஓதினும்
எங்கள் பிரான் எழுத்து ஒன்றில் இருப்பது
சங்கைகெட்டு அவ் எழுத்து ஒன்றையும் சாதித்தால்
அங்கரை சேர்ந்த அருங்கலம் ஆமே.

அங்கமு மாகம [1]வேதமு மோதினு
மெங்கள் பிரானெழுத் தொன்றி லிருப்பது
[2]சங்கைகெட் டவ்வெழுத் தொன்றையுஞ் சாதித்தா
லங்கரை சேர்ந்த வருங்கல மாமே. (1)

வேறு பாடம்: 1. வேதம தோதினு (விசு) (தி) (வ) 2. சங்கையற (ஆ இ) II.

கருத்து: வேதம், அதன் அங்கம் ஆறு, ஆகமம் ஆகிய நூல் எல்லாம் ஓதினாலும், எம் சிவமுதல்வன் ஓர் எழுத்தில் (அதன் தியானத்தில்) உணரப்படுவான் என்று அறிந்து, ஐயம்விட்டு, 'சி' என்ற அவ்வெழுத்து ஒன்றை மட்டும் தியானித்தால் கடலில் சுழலும் கப்பல், கரை சேர்ந்தது போல், உயிர் பிறவிக் கடலைக் கடந்து, முத்திக் கரை ஏறலாம்.

2682. சிவாய நமவெனச் சித்த மொருக்கி
அவாய மறவே யடிமைய தாக்கிச்
சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க வானந்த மாமே. (ங, அ)

தலையெழுத்தை மாற்றும்

2683. பழுத்தன ஐந்தும் பழமறையுள்ளே
விழித்து அங்கு உறங்கும் விளைவு அறிவார் இல்லை
எழுத்து அறிவோம் என்று உரைப்பர்கள் ஏதர்
எழுத்தை அழுத்தும் எழுத்து அறியாரே.

பழுத்தன வைந்தும் [1]பழமறை யுள்ளே
விழித்தங் குறங்கும் [2]விளைவறிவா ரில்லை
யெழுத்தறி வோமென் றுரைப்பர்க ளேத
ரெழுத்தை யழுத்து மெழுத்தறி யாரே[3]. (2)

வேறு பாடம்: 1. பாழறை (அ) II. 2. வினையறிவா (அ) IV; வினை யையறியார் (ஆ) IV. 3. வாரே (ஈ) IV.

கருத்து: திருவைந்தெழுத்து வேதத்தின் முடிபொருளாகக் கிடைத்த ஞானச் செல்வம். அதைத் தியானித்து, அதன் விளைவாக, பரசாக் கிரத்தை அடையும் அனுபவம் உண்டு என ஒருவரும் அறியார். மற்றும் சிலர் அம்மந்திரத்தின் எழுத்துக்களைத் தாம் அறிவர் என்பர். அவர்கள் அறியாதோரே. நம் தலையில் பிரமன் எழுதிய ஊழை மாற்றும் எழுத்துக்கள் அவை என்று அவர் அறிவரோ?

159. திருக்கூத்து

அருள் விளையாட்டு

2684. எங்குந் திருமேனி யெங்குஞ் சிவசத்தி
எங்குஞ் சிதம்பர மெங்குந் திருநட்ட
மெங்குஞ் சிவமா யிருத்தலா லெங்கெங்கும்
தங்குஞ் [1]சிவனரு டன்விளை யாட்டே. (1)

வேறு பாடம்: 1. சிவனொருத்தன் (ஓ) IV.

கருத்து: காணப்படும் பொருள் எல்லாம், அவற்றில் சிவன் 'ஒன்றாய்' இருத்தலின், அவன் திருமேனிகளே. அவனது அருட் சத்தியே உயிர்களைச் செயல்புரிவிக்கின்றது. எங்கும் நீக்கமின்றி நிறைந்த அகண்டாகாரப் பெருவெளியில் அவன் பேரறிவு வடிவனாகத் திருநடனம் ஆடுதலின், இவ்வெளி முற்றும் சிதாகாயமே. அவனது நடனத்தை எங்கும் காணலாம். இவ்வாறு எங்கும் சிவத்தொடர்பு இருக்கிறது. அத்தொடர்பு யாது? அவன் தன் அருளால் இவை யாவற்றையும் ஆக்கி விளையாடுகின்றான் என்பதே.

இவ்விளையாட்டு உயிர்கள் பொருட்டு என்பது, அருள் என்ற குறிப்பாற் பெறப்படும்.

யார் அறிவார்?

2685. சிற்பரஞ் சோதி சிவானந்தக் கூத்தனைச்
சொற்பத மாமந்தச் சுந்தரக் கூத்தனைப்
பொற்பதிக் கூத்தனைப் பொற்றில்லைக் கூத்தனை
யற்புதக் கூத்தனை யாரறி வாரே. (2)

கருத்து: ஆன்மாவின் அறிவு வெளியில் உணரப்படும் சோதியும், அதே சமயம் அதனால் உணர்தற்கு அரிய பெருவெளியுமாதலால் 'சித் - பரம் - சோதி' என வழங்கும் சிவத்தை - சிவானந்தக் கூத்து, சுந்தரக் கூத்து, பொற்பதிக் கூத்து, பொற்றில்லைக் கூத்து, அற்புதக்கூத்து ஆகிய திருநடனங்கள் ஆடியருள்பவனை - முழுதும் உணர்வார் யார்? ஒருவரும் இல்லை.

(i) சிவானந்தக் கூத்து

அருளால் இனம் காட்டப்படும் சிவம்

2686. தான் அந்தம் இல்லாச் சத் - ஆனந்த சத்திமேல்
தேன் உந்தும் ஆனந்த மாநடம் கண்டீர்
ஞானம் கடந்து நடம் செய்யும் நம்பிக்கு அங்கு
ஆனந்தக் கூத்தாட ஆடரங்கு ஆனதே. (1)

கருத்து: ஆதியும் அந்தமும் இல்லாததும் 'சித், ஆனந்தமாக' உள்ளதுமாகிய சத்தியை இடமாகக் கொண்டு, சிவன் ஆடுகின்ற பேரின்பக் கூத்தே சிவானந்தக் கூத்து; ஆனந்தத் தாண்டவம். உயிரின் அறிவுக்கு எட்டாமல் நின்று அவன் ஆடும் அத்திரு நடனத்திற்குச் சத்தியே மன்றமாகும்.

இதனை வள்ளலார் "அருட்சபை நடம்புரி அருட் பெருஞ்சோதி" என்பர். (6 ஆம் திரு. அருட்பெருஞ்சோதி அகவல்) சிவத்தை அருட்சத்தி காட்ட, அருளே கண்ணாகக் காணவேண்டும் என்பதும் அதனாலேயே. உயிரின் அறிவுக்கு எட்டாதது; ஆயினும் அருளறிவுக்கு எட்டும் என்று கொள்க. இது சொரூபசிவ தரிசனம்.

ஞான நடனம்: சத் - சித் - ஆனந்தமே வடிவாக உள்ள சொரூபசிவம், படைப்புக் குறித்துத் தன் திருவுள்ளத்தில் சங்கற்பித்தலைக் 'கூத்து' என்றார். அச்சங்கற்பத்திற்குக் காரணம், அவனோடு பிரிப்பின்றியுள்ள அருட்சத்தியாதலின், சத்தியை 'ஆடரங்கு' என்றார்.

எல்லாம் இன்பமயம்

2687. ஆனந்தம் ஆடரங்கு, ஆனந்தம் பாடல்கள்
ஆனந்தம் பல்-இயம், ஆனந்தம் வாச்சியம்,
ஆனந்தம் ஆக அகில சராசரம்
ஆனந்தம் ஆனந்தக் கூத்து உகந்தானுக்கே.

ஆனந்த மாடரங் கானந்தம் பாடல்க
ளானந்தம் பல்லிய மானந்தம் வாச்சிய[1]
மானந்த [2]மாக வகில சராசர
மானந்த மானந்தக் கூத்துகந் தானுக்கே. (2)

வேறு பாடம்: 1. வாத்தியம் (ஆ) III. 2. மான (ஆ ஓ) I.

கருத்து: சிவானந்தம் என்ற நிலையில் நின்று சிவம் செய்யும் சங்கற்பம் சிவானந்தக் கூத்து எனப்படுகின்றது. இக்கூத்தினை இயற்றும் சிவனுக்கு மன்றமாக அமையும் சத்தியும் (மேற்பாடலில் கூறியவாறு) ஆனந்தம் ஆவாள். மன்றம் மட்டுமோ? பாடல்களும், இசைக் கருவிகளும் பாடற் பொருளும், ஆனந்தமேயாகும். இவையெல்லாம் அனைத்து உயிர்களையும் ஆனந்தம் அடையச் செய்யும் பொருட்டு நிகழ்வனவாகும்.

பாடல்கள் முதலியவை பிற சத்திகள் என்று கொள்க.

கூத்துக் காண்பதன் பேறு

2688. ஒளியாம் பரமும், உளதாம் பரமும்
அளி ஆர் சிவகாமி ஆகும் சமயக்
களி ஆர் பரமும் கருத்து உறை அந்தத்
தெளிவு ஆம் சிவானந்த நட்டத்தின் சித்தியே.

ஒளியாம் பரமு முளதாம் பரமு
மளியார் [1]சிவகாமி யாகுஞ் சமயக்
களியார் பரமுங் [2]கருத்துறை யந்தத்
தெளிவாஞ் சிவானந்த நட்டத்தின் சித்தியே[3]. (3)

வேறு பாடம்: 1. சிவோகாமி (அ ஓ) I. 2. கருதுரை (சைவ) 3. சித்தே (துடி)

கருத்து: சிவானந்தக் கூத்தினை உயிருணர்வால் உணர்தலின் விளைவு யாது? ஆன்மா பெறும் ஞானமே ஆகும். அந்த மெய்ஞ் ஞானத்தால், ஆன்மா சத் - சித் - ஆனந்த நிலையைப் பெறும். இம்மூன்றும் மேலான நிலைகள்; இறைநிலைகள். இவற்றுள் ‘சத்’ என்பது என்றும் ஒருபடித்தாய் உள்ள உண்மை (Everlasting Truth) ‘சித்’ என்பது பேரறிவு; பேரொளி. ஆனந்தம் என்பது பேரின்பம். அதுவே ‘அருளின்பம்’, சமய நிலையில், அருளைச் ‘சிவகாமவல்லி’ என்ற உருவத் திருமேனியாக வைத்து வழிபடுவர்.

ஐந்தொழிற் கூத்து

2689. ஆன நடம் ஐந்து அகள சகளத்தர்
ஆன நடம் ஆடி ஐந்கருமத்து ஆக
ஆன தொழில் அருளால் ஐந்தொழில் செய்தே
தேன்மொழி பாகன் திருநடம் ஆடுமே.

ஆன நடமைந் தகள சகளத்த
ரான நடமாடி யைங்கரு மத்தாக[1]
வான தொழிலரு ளாலைந் தொழில் செய்தே
தேன்மொழி பாகன் திருநட மாடுமே. (4)

வேறு பாடம்: 1. மத்தாகம் (தி) (த)

கருத்து: சத்தியுடனாகிய சிவ பரம்பொருள் உருவமில்லா தவனாகவும், உருவம் உடையவனாகவும் விளங்கிச் செய்கின்ற ஐந்து நடனங்கள் படைத்தல் முதலிய ஐந்தொழில்களே. அவற்றை அவன் அருள் காரணமாகப் புரிகின்றான்.

பராசத்தி, ஆதி சத்தி, இச்சா சத்தி, கிரியா சத்தி, ஞானசத்தி என்ற ஐவகைச் சத்திகளுடன் செய்தலின், ஐந்து நடனம் ஆகின்றது. இறைவன் உயிர்கள் பொருட்டுச் செய்யும் அருட்செயல்களாகிய படைத்தல் முதலிய ஐம்பெருந்தொழில்களே நடனமாக உபசரிக்கப் பட்டன.

குறிப்பு: இப்பாடல் ஆ, இ சுவடிகளில் இல்லை.

அருள்வெளியில் அண்டங்கள்

2690. பூதாண்ட பேதாண்ட போகாண்ட யோகாண்ட
மூதாண்ட முத்தாண்ட மோகாண்ட தேகாண்ட
தாகாண்ட மைங்கரு மத்தாண்ட தற்பரத்
தேகாந்த மாம்பிர மாண்டத்த வென்பவே. (5)

கருத்து: ஆன்மாக்களை ஐந்தொழில் - அருட் செய்கையினால் ஆளும் தற்பரமான பரசிவத்தின் வடிவம் பிரம்மாண்டம் ஆகும். உருவமற்ற அந்த வெளியில், பூத அண்டம், பேத அண்டம், போக அண்டம், யோக அண்டம், மூதாண்டம், முத்தாண்டம், மோகாண்டம், தேகாண்டம், தாக அண்டம் முதலிய பல அண்டங்கள் சுழலுகின்றன.

குறிப்பு: இப்பாடல் ஆ, இ சுவடிகளில் இல்லை.

ஞான நடனம்

2691. வேதங்க ளாட மிகுவா கமமாடக்
கீதங்க ளாடக் கிளரண்ட மேழாடப்
பூதங்க ளாடப் புவன முழுதாட
[1]நாதங்கொண் டாடினான் ஞானானந் தக்கூத்தே. (6)

வேறு பாடம்: 1. நாதன் கொண் (த)

கருத்து: பரசிவம் பராசத்தியிடமிருந்து தோன்றிய பரநாதத்தை மூலமாக வைத்து, ஞான ஐந்தொழிற் கூத்து ஆடினான். அவன் அவ்வாறு ஆடவே, சத்தப்பிரபஞ்சமாகிய வேதங்களும், ஆகமங்களும் எழுந்தன. பூதங்கள் தோன்றிப் புவனங்களாக விரிந்தன. ஏழு அண்டங்கள் தோன்றின.

பரசிவத்தின் சங்கற்பம் இத்துணையையும் தோற்றுவித்தது என்க.

குறிப்பு: இப்பாடல் ஆ, இ - சுவடிகளில் இல்லை.

இயக்குபவன்

2692. பூதங்க ளைந்திற் பொறியிற் புலனைந்தில்
வேதங் ளைந்தின் மிகுமா கமந்தன்னி
லோதுங் கலைகால மூழி யுடனண்டம்
போதங்க ளைந்திற் புணர்ந்தாடுஞ் சித்தனே (7)

கருத்து: பரசிவம், ஐம்பூதம், ஐம்பொறி, ஐம்புலன் - ஆகியவற்றில் 'ஒன்றாதல்' என்னும் முறையில் கலந்திருக்கின்றான். வேதங்களும் ஆகமங்களும் அவன் வாக்கு. கலை, காலம், அண்டங்கள், ஐவகை வாக்கு - இவற்றிலும் கலந்து இயக்குகின்றான்.

ஆட்டுவிப்போன்

2693. தேவர் சுரர்நரர் சித்தர்வித் தியாதரர்
மூவர்க ளாதியின் முப்பத்து மூவர்க
டாபதர் [1]சத்தர் சமையஞ் சராசர
மியாவையு மாடிடு மெம்மிறை யாடவே. (8)

வேறு பாடம்: 1. புத்தர் (அ ஈ) II; சாத்தர் (த)

கருத்து: பரசிவம் தான் ஆடுவதால், தேவர் முதலியோரை ஆட்டு விக்கின்றான்.

சத்தர் - எழுவர்; ஏழு முனிவர்கள். சமயம் - சமயக் கடவுளர். சராசரம் யாவையும் ஆடிடும் என்க.

(ii) சுந்தரக் கூத்து

அம்மை காண...

2694. அண்டங்கள் ஏழினுக்கு அப்புறத்து அப்பால்
உண்டு என்ற சத்தி, சதாசிவத்து உச்சிமேல்
கண்டம் கரியான் கருணை திருவுருக்
கொண்டு, அங்கு உமை காணக் கூத்து உகந்தானே.

அண்டங்க ளேழினுக் கப்புறத் தப்பா
லுண்டென்ற சத்தி சதாசிவத் துச்சிமேற்
கண்டங் கரியான் கருணை திருவுருக்
கொண்டங் குமைகாணக் கூத்துகந் தானே. (1)

கருத்து: இஃது இறைவனது பரவெளி நடனம். ஏழு அண்டங் களையும் கடந்த பரவெளியில், சாதாக்கியம் என்ற நிலையில் சத்தியுடன் கலந்தும், சிவமாகித் தனித்தும், சத்தியும் தனி நின்று காண, கருணையே திருமேனியாக நின்று ஆடுகின்றான்.

குறிப்பு: இப்பாடல் முதல் "மேகங்கள் ஏழும்" என்ற பாடல் வரை ஏழு பாடல்கள் 'ஆ, இ' சுவடியில் இல்லை.

இறைவனின் நடனங்கள்

2695. கொடுகொட்டி, பாண்டரம், கோடு, சங்காரம்
நடம் எட்டோடு, ஐந்து, ஆறு, நாடியுள் நாடும்
திடம் உற்று எழும்; தேவதாருவாம்; தில்லை
வடம் உற்ற மாவனம் மன்னவன் தானே.

கொடுகொட்டி பாண்டரங் கோடுசங் கார
நடமெட்டோ டைந்தாறு நாடியுண் ணாடுந்
திடமுற் றெழுந்தேவ 'தாருவாந் தில்லை
வடமுற்ற மாவன மன்னவன் றானே. (2)

வேறு பாடம்: 1. தாருவுந் (சங்)

கருத்து: தேவதாரு வனம், தில்லைவனம், திருவாலங்காடு என்ற இடங்களில் சிவபெருமான் முறையே கொடுகொட்டி, பாண்டரங்கம், கோடு என்னும் சங்கார தாண்டவங்களை ஆடுகின்றான். அட்டமூர்த்தங்களில் எட்டு நடனங்கள் ஆடுகின்றான். ஐந்தொழிற் கூத்து நிகழ்த்துகின்றான். யோகியின் சுழுமுனை நாடியில் அமைந்துள்ள ஆறு ஆதாரங்களிலும் கூத்து ஆடுகின்றான்.

கோடு - காபாலம் என்னும் நடனம்.

வியாபகமே திருநடனம்

2696. பரமாண்டத் தூடே பராசத்தி பாதம்
பரமாண்டத் தூடே படரொளி யீசன்
பரமாண்டத் தூடே படர்தரு நாதம்
பரமாண்டத் தூடே பரனட மாடுமே. (3)

வேறு பாடம்: 1. 4 அடிகளிலும் 2 ஆம் சீர: துள்ளே (த)

கருத்து; பரமாண்டம் எனப்படும் பிரமாண்டத்தில் ஒவ்வோர் அணுவிலும் பராசத்தியின் மற்றொரு வடிவமாகிய ஆதிசத்தியைத் தனது திருவடியாகக் கொண்டு பேரொளி வடிவினனாகிய சிவன் நாத வடிவில் ஆடுகின்றான்.

பாதம் உருவாய்த் தோன்றும்; ஒளி அருவுருவாய் விளங்கும்; நாதம் அருவமாக நிற்கும். ஆதலின் அண்டத்தில் பொருள்கள் எல்லாம் தம் முள் சத்தி 'ஒன்றாய்' நிற்கப் பெற்றவை. உயிர் எல்லாம் தமது அறிவுக்கு அறிவாய்ச் சிவம் தம்முள் நிற்கப்பெற்றவை. பக்குவமுற்ற ஆன்மா, சிவத்தைத் தன்னுள் பேரொளியாகத் தரிசிக்கின்றது. அது சிவத்தைச் சொரூபத் திருமேனியாக உணர்வதற்குச் சற்று முன் சிவம், நாதமாக எங்கும் வியாபித்திருத்தலை உணரும். இவ்வியாபகத்தைப் "படர்தரு நாதம்" என்றார். ஆக, உருவாய் வியாபிப்பது சத்தி. அருவுருவாயும் அருவாயும் வியாபிப்பது சிவம் என உணர்க.

சாகாவுடம்பில் சங்கரன் நடனம்

2697. அங்கு உசவு என்ன எழுமாறு, அம் போதத்தில்
தங்கிய தொந்தி எனும் தாள ஒத்தினில்
சங்கரன் மூலநாடிக்குள் தரித்து ஆடப்
பொங்கிய காலம் புகும், போகல் இல்லையே.

அங்குச [1]வென்ன [2]வெழுமாறம் போதத்திற்
றங்கிய தொந்தி யெனுந்தாள வொத்தினிற்
சங்கரன் மூலநா டிக்குட் டரித்தாடப்[3]
பொங்கிய காலம் புகும்போக லில்லையே. (4)

வேறு பாடம்: 1. மென்ன (விசு) (தி) (வ) (த) 2. வெழுமார்க்கம் (வி சு) (தி) (வ) மார்க்கப் (த) 3. டரித்தாடிப் (ஈ ஓ) IV; டரித்தாடற் (விசு) (தி) (வ) (த).

கருத்து: சுழுமுனை நாடியில் மூச்சுக் காற்று மேல் நோக்கி எழும் படியும், அதே சமயம் உள்முக ஆராய்ச்சி தோன்றும்படியும், யோகியின் அறிவில் தான் நீங்காது இருக்கும் பொருட்டு, சிவபெருமான், அவ் யோகியின் உடம்பில் 'தொம் - தி' என்ற தாள ஒத்துப்படி அதிக காலம் ஆடுவான். அவ்வாடலை நிறுத்தான்.

உசா, உசவு என - வந்தது; நிலா, நிலவு என்றாற் போல. போதம் - தெளிவு. தங்கிய - தங்குவதற்காக; செய்யிய என்றும் வாய்பாடு. புகும் - தொடங்குகின்றான். போகல் - புறப்படுதல். 'சம்' என உள் இழுத்து, 'அம்' என விடுதலைத் 'தொம் - தி' என்னும் தாளமாகக் கூறினார்.

யோகியின் மூச்சே சிவனது நடனம் என்றார். முன்னை உரைகாரர் "அங்குசமென்ன எழுமார்க்கம்" எனப் பாடங் கொண்டு இடருற்றனர்.

உலகியல் - அருளியல்

**2698. ஆளத் தீயாடியபின், நவக் கூத்து ஆடிக்
காளத்தீ ஆடிக், கருத்தில் தரித்து ஆடி,
மூளச் சுழுனையுள் ஆடி, முடிவில்லா
ஞாளத்துள் ஆடி முடித்தான் எழுத்ததே.**

[1]ஆளத்தி யாடிய பின்னவக் கூத்தாடிக்
[2]காளத்தி யாடிக் [3]கருத்திற் றரித்தாடி[4]
[5]மூளச் சுழுனையு ளாடி முடிவில்லா
[6]ஞாளத்து ளாடி [7]முடித்தா னெழுத்ததே. (5)

வேறு பாடம்: 1. ஆளத்தீ (அ) IV; ஆனத்தி (விசு) (தி) (வ) 2. காளத் தீ (அ) III; கானத்தி (சைவ) (விசு) (தி) (வ) காலத்தீ (த) 3. கருமத்திற் (சங்) 4. றடித்தாடி (விசு) 5. மூனச் (சைவ) (விசு) (தி) (வ); மூலச் (த) 6. ஞாலத்து (ஓ) I; நாளத்து (ஈ) III; ஞானத்து (விசு) (தி) (வ) ஞாலம், நாளம் என்ற

பாடங்களிலிருந்து 'ஞாளம்' என்ற பாடம் மீட்டுருவாக்கம் (Recension) செய்யப்பட்டது. 7. முடித்தானென்னாதனே (விசு) (தி) (வ) (த).

கருத்து: மாந்தரை உலகியலில் விட்டு ஆளுதற் பொருட்டு, அவர் உடலில் ஆற்றலாகி (திரோதான சத்தி) இயக்குவான். இவ்வாறு, திருவைந்தெழுத்தில் 'நம' என்பதை நிறைவேற்றுவான். மாந்தருள் பக்குவம் எய்துவோர் பொருட்டு, புது நடனமான அருட்கூத்து ஆடத்தொடங்குவான். பாற்கடலில் தீப் போலப் பெருகிய ஆலகால விடத்தை அமுதம் ஆக்கி உண்டாற்போலே, குண்டலி சத்தியை அருட்சத்தியாக மாற்றி, அவரது உயிருணர்வில் அருளைப் பதியச் செய்வான். அருட்டீயாக மாறிய மூலக்கனலும், வலக்கண் சூரியவொளியும், இடக்கண் - சந்திர வொளியும் புருவமத்தியில் ஒன்றுகூட, அங்கு அருட் சோதியாகக் காட்சியளித்து, அதற்கு அப்பால், சகஸ்ராரத் தாமரையில் சத்தி சிவமாகக் காட்சியளித்துச் 'சிவ' என்ற எழுத்தை நிறைவேற்றுவான். அதற்கும் அப்பால் சிதாகாய வெளியில், 'யகர' எழுத்தால் குறிக்கப்படும் ஆன்மாவின் தற்போதத்தை நீக்கிச் 'சிவம்' ஆக்குவான். இவ்வாறு, 'யகர' - எழுத்தை நிறைவேற்றுவான்.

முடித்தான் என்றற்கு, யகர எழுத்தால் குறிக்கப்படும் ஆன்மாவைத் தன் தலையிற் சூடினான் என்றும் பொருள் தோன்றல் நயம். ஆளத்தி, காளத்தி - தீக் குறுகியது. நவம் - புதுமை. காளம் ஆலகாலநஞ்சு. நாளம், ஞாளம் - போலி; தண்டு. சுழுமுனை நாடி என்ற நாளம் பிடரியில் முடிந்துவிடும். சகஸ்ராரத் தாமரையின் நாளம் மேலிருந்து - பரமாகாயத்திலிருந்து - வருவது ஆதலின், "முடிவு இல்லா நாளம்" என்றார். இதனை ஆசிரியர், முன்னும், "பாரில்லை நீரில்லை பங்கயம் ஒன்றுண்டு, தாரில்லை வேரில்லை தாமரை பூத்தது" என்றார். "ஊர்த்வ மூலம் அதஸ் சாகம்" என்றது கீதையும் (15 : 1)

எழுத்தை முடித்தான் என்பதைக் கொண்டு அதன் தொடக்கமும் நடுவும் கூறப்பட்டன.

முடித்தான் என் நாதனே'' என்ற பாடம் முன்பு ஆசிரியர் "பொங்கிய காலம்புகும், போகல் இல்லையே" என்று கூறியதோடு முரணும். அவன் ஆடலை என்று முடித்தான்?

வல்லவன் ஆடல்

**2699. சத்திக ளைந்துஞ் சிவபேதந் தானைந்து
முத்திக ளெட்டு முதலாம் பதமெட்டுஞ்
சித்திக ளெட்டுஞ் [1]சிவபதந் தானெட்டுஞ்
சுத்திக ளெட்டீசன் [2]சொன்னட மாடுமே. (6)**

வேறு பாடம்: 1. சிவபரந் (அ ஓ) I. 2. தொன்டை (ஈ) III.

கருத்து: சிவ பரம்பொருள் சத்தி பேதங்கள் ஆகிய பராசத்தி, ஆதி சத்தி, இச்சாசத்தி, கிரியாசத்தி, ஞானசத்தி என்பவற்றாலும், தானே பரசிவன், சிவன், நாத மூர்த்தி, விந்துமூர்த்தி, சதாசிவன் என்ற சிவபேதங்களாக இருந்தும், ஆன்மாவுக்கு எட்டுவகை முத்திகளை அருள்கின்றான். எட்டுவகை இறைவர் பதவிகளை நியமித்து உள்ளான். யோகியர்க்கு எண் வகைச் சித்திகளை அளிக்கின்றான். எட்டுவகைப் பொருள்களில் கலந்திருக்கின்றான். சிவ வழிபாட்டில் எண்வகைச் சுத்திகளைச் செய்விக்கின்றான். இவையெல்லாம் ஈசன் பண்டு முதல் நிகழ்த்தி வரும் ஆடலாகும்.

எட்டு வகைப் பொருள்களில் கலந்துள்ளமை - அட்ட மூர்த்தம்: அவை ஐம்பூதம், இரு கதிர், இயமானன் என்பவை.

எல்லாம் அவன் ஆட்சி

2700. மேகங்கள் ஏழும், விரிகடல் தீவு ஏழும்
தேகங்கள் ஏழும், சிவபாற்கரன் ஏழும்
தாகங்கள் ஏழும், சாந்தி தனில் ஏழும்
ஆகின்ற நந்தி அடிக்கீழ் அடங்குமே.

மேகங்க ளேழும் விரிகடற் றீவேழுந்
தேகங் ளேழுஞ் சிவபாற் கரனேழுந்
தாகங்க ளேழுஞ் [1]சாந்தி தனிலேழு
மாகின்ற நந்தி யடிக்கீ ழடங்குமே. (7)

வேறு பாடம்: 1. சாந்திகளேழு (சைவ).

கருத்து: ஏழு எழு எனக் கூறப்பட்ட பல வகைகளும் சிவபெரு மானது திருநடனத்தால் இயக்கப்படுபவையே.

சிவபாற்கரன் - சிவ பாஸ்கரன்; சிவ சூரியன். இவை இறைவன் மா ந்தர் உடம்பில் அறியாமையைப் போக்குதற்கு அமைத்த அறி கருவி களான ஐம்பொறிகளும், மனமும், புத்தியும் ஆகும். தாகம் - வெம்மை, அதனையுடைய தீயைக் குறித்தது. சாந்தி ஏழு:- கலாசுத்தி 5, கன்ம சுத்தி 1, ஆணவ சுத்தி 1.

(iii) பொற்பதிக் கூத்து

சிவலிங்க மூர்த்தி

2701. தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்கு, உச்சிமேல்
அற்புதமானது ஓர் அஞ்சு முகத்தினும்
ஒப்பில் பேரின்பத்து உபய உபயத்துள்
தற்பரன் நின்று தனிநடம் செய்யுமே

தெற்கு வடக்குக் கிழக்குமேற் குச்சியி
லற்புத மானதொ ரஞ்சு முகத்திலு
மொப்பில்பே ரின்பத் துபய வுபயத்துட்[1]
டற்பர னின்று தனிநடஞ் செய்யுமே. (1)

வேறு பாடம்: 1. வமையத்துட் (ஓ) I; வவையத்துட் (ஈ) I.

கருத்து: தற்பரம் பொருள் ஆகிய சிவபெருமான், உருவம் அருவம் அருவுருவம் ஆகிய திருமேனிகளைத் தாங்கி அருட்செயல் புரிவான். அருவுருவம் ஆகிய சிவலிங்கத் திருமேனி, நான்கு திசைகளுக்கும், மேற்பக்கத்திற்கும் ஒவ்வொரு முகமாக ஐந்து முகம் கொண்டது. அச்சிவலிங்கத்துள் நின்று அடியார்க்குப் பேரின்பம் வழங்குகின்றான்.

சிவலிங்க மூர்த்தி சதாசிவம் எனப்படுவார். ஐந்தொழில்களுள், அருளலைச் செய்பவர் இவரே.

2702. அடியா ரரனடி யானந்தங் கண்டோ
ரடியா ரானவ ரத்தரு ளுற்றோ
ரடியார் பவரே யடியவ ராமா
லடியார்பொன் னம்பலத் தாடல்கண் டோரே. (ட, ண)

என்னிடம் படிந்தான்

2703. அடங்காத என்னை அடக்கி அடிவைத்து,
திடம்காண் பர-ஆனந்தத்தே விட்டு,
நடம்தான் செயும் நந்தி, நன் ஞானக் கூத்தன்
படம் தான் செய்து, உள்ளுள் படிந்திருந்தானே.

அடங்காத வென்னை யடக்கி யடிவைத்துத்
திடங்காண் பரானந்தத் தேயென்னை விட்டு
நடந்தான் செயுநந்தி நன்ஞானக் கூத்தன்
படந்தான் [1]செய்துள்ளுட் படிந்திருந் தானே. (2)

வேறு பாடம்: 1. செய்யுள்ளுட் (த)

கருத்து: சிவபெருமான், அடியவன் ஆகும் தன்மையில்லாத என்னையும், தன் திருவடி சூட்டி ஆட்கொண்டு, மேலான ஆனந்த வாழ்வில் நிறுத்தி, ஞானக் கூத்தை நான் எனக்குள் காணச் செய்து, எனது சீவ போதத்தில் அழுந்தியிருக்கின்றான்.

உள்ளுள் - உள்ளுக்கும் உள்ளே; சீவபோதம். சிவபோதமே என் அறிவாயிற்று என்கின்றார். 'என் அறிவே என் உயிரே' என்பார் வள்ளலாரும் (திருவருட்பா 6 ஆம் திரு. அருள் விளக்க மாலை, 1) "ஞான நாடகம் ஆடுவித்தவா" என்ற மணிவாசகத்தை (திருவா. திருச்சதகம், 95) இது கொண்டு உணர்க.

"அடி வைத்து அடக்கி" என மாற்றுக. 'உலகியலிற் சென்ற என்னை அருளியலுக்கு மாற்றினான்' என்பார், "அடக்கி" என்றார்.

நெஞ்சில் நிறுத்தினேன்

2704. உம்பரிற் கூத்தனை யுத்தமக் கூத்தனைச்
செம்பொற் றிருமன்றுட் சேவகக் கூத்தனைச்
சம்பந்தக் கூத்தனைத் தற்பரக் கூத்தனை
யின்புற நாடியெ னன்பில்வைத் தேனே. (3)

கருத்து: பேராற்றல் உடைய தேவர்களை, அவருள் நின்று இயக்குவோன். அவன் ஆடுவது உயர்ந்த திருநடனம். பொற்சபையில் ஆடும் வீரநடனம். பல்லுயிர்களின் செயல்களோடு தொடர்புடைய ஆடல். பரவெளியில் நிகழும் ஞான நடனம். அவனே பேரின்பம் வழங்குவோன் என்று ஆய்ந்து அறிந்து அவனை என் அன்பால் என்னுடன் இருக்க வைத்தேன்.

"சிக்கெனப் பிடித்தேன்" என்றார் மணிவாசகரும் (திருவா. பிடித்தபத்து) அன்பில்: இல் - ஏதுப் பொருளில் வந்தது, "நேயத்தே நின்ற நிமலன்" என்ற திருவாசகத்தைக் கருதுக. (சிவபு. 13).

கூத்தின் வகை எத்தனை? பெருமை யாது?

2705. மாணிக்கக் கூத்தனை வண்டில்லைக் கூத்தனைப்
பூணுற்ற மன்றுட் புரிசடைக் கூத்தனைச்
சேணுற்ற சோதி சிவானந்தக் கூத்தனை
யாணிப்பொற் கூத்தனை யாருரைப் பாரே[1]. (4)

வேறு பாடம்: 1. யாரறி வாரே (ஆ) IV.

கருத்து: மாணிக்க மணியில் செல்வொளியாகவும், தில்லையில், பொன்னம்பலத்தில் தெய்வவுருவில் நின்றும், ஏனைய மன்றங்களில், அவ்வவற்றுக்குரிய தெய்வ வுருவங்களில் பொலிந்தும் ஊனநடமாடி, எல்லாவற்றையும் கடந்து திகழும் அகண்டாகார வெளியில் ஞான ஆனந்தமே எங்கும் பரவிய வடிவாகக் கொண்டு சங்கற்பம் நிகழ்த்தும் போது, திருவுள்ளத்தில் 'அசைவு' கொள்ளு தலாகிய ஞான நடனம் புரியும் பொன்னம்பலவாணனது திருக்கூத்தின் வகைகளையும், அவை ஒவ்வொன்றின் பெருமை யையும் யார் சொல்ல வல்லார்? ஒருவரும் இலர்.

சிவப் பித்தர்

2706. விம்மும் [1]வெருவும் விழுமெழு மெய்சோரும்
தம்மையுந் தாமறி [2]யார்கள் சதுர்கெடுஞ்
செம்மை சிறந்த திருவம் பலக்கூத்து
ளம்மலர்ப் பொற்பாதத் தன்புவைப் பார்கட்கே[3].
(5)

வேறு பாடம்: 1. ஒருவும் (அ) 2. யாதே (ஆ) IV. 3. தன்புவைத்தார்கட்கே (ஆ) III.

கருத்து: வீடுபேறு நல்குகின்ற செவ்விய தன்மை சிறந்து விளங்கு வதும், திருவம்பலத்தில் திருநடம் புரியும் காலத்து, எடுத்த நிலையிற் பொலிவதுமாகிய சிவபிரானது திருவடியில் அன்பு செய்பவர்களுக்கு மூச்சு விம்மும். மனம் அஞ்சும். கீழே விழுந்து வணங்குதலும், எழுதலும் அவர்களிடம் நிகழும். தம்மை அறியாது செயலாற்றுவர் சில நேரம். மற்றும் சில நேரம் செயலற்றிருப்பர்.

"பேரரையற்கு இங்ஙனே பித்து ஒருவர் ஆமாறு" என, அடியார் உறும் மெய்ப்பாடுகளை யெல்லாம் ஈண்டு நினைக. (திருவா. திருவெம். 15)

நாதம் கேட்கும்

2707. தேட்டு அறும்; சிந்தை திகைப்பு அறும்; பிண்டத்துள்
வாட்டறும் கால் புந்தியாகிவரும் புலன்
ஓட்டு அறும்; ஓசை உறும்; உளத்து ஆனந்த
நாட்டம் முறுக்குஉறு நாடகம் காணவே.

தேட்டறுஞ் சிந்தை [1]திகைப்பறும் பிண்டத்துள்
வாட்டறுங் [2]கால்புந்தி [3]யாகி வரும்புல
னோட்டறு [4]மோசை [5]யுறுமுளத் தானந்த
நாட்ட முறுக்குறு நாடகங் காணவே. (6)

வேறு பாடம்: 1. திகைப்புறும் (அ ஓ) I. 2. காலப்புந்தி (ஓ) I. 3. யாகம் வரும்புன (அ) I. 4. மானச (விசு) (தி) (சைவ) 5. யறுமுளத் (சைவ)

கருத்து: கண்ட அளவில், உள்ளத்தில் 'பேரின்பம் எய்த வேண்டும்', என்ற நாட்டம் முறுகியெழச் செய்வதாகிய திருநடனத்தைக் கண்டால், மாந்தரின் சிந்தை, எதனையும் குறையுற்றுத் தேடுதலை நிறுத்தும். செய்வதறியாது திகைத்தல் அதற்கு இல்லை. உடம்பில் தசைகளை வேகச் செய்யாத மூச்சுக் காற்று, உயிருணர்வை வலிமை யுறுத்த, அதனால் புத்தி செம்மைப்படும். புலன்கள் விடயத்தில் செல்லமாட்டா. சுழுமுனையில் நாதம் கேட்கும்.

திருவம்பலக் கூத்தினைத் தியானத்தில் வைத்தலால் விளையும் அனுபவம் கூறினார்.

இடையறா நடனம்

2708. காளியோடு ஆடி, கனக - அசலத்து ஆடி,
கூளியோடு ஆடி, குவலயத்தே ஆடி,
நீளிய நீர், தீ, கால், நீள்வான் இடை ஆடி,
நாள் உற அம்பலத்தே ஆடும் நாதனே.

காளியோ டாடிக் கனகா சலத்தாடிக்
கூளியோ டாடிக் குவலயத் தேயாடி[1]
[2]நீளிய நீர்தீகால் நீள்வா னிடையாடி
நாளுற வம்பலத் தேயாடு நாதனே. (7)

வேறு பாடம்: 1. தோடாடி (அ) IV. 2. நீடிய (அ) I.

கருத்து: தலைவன் ஆகிய சிவபெருமான் உலகினர் பொருட்டுக் காளியுடன் போட்டியிட்டு நடனமாடினான். பொன்மலையில் உமையவள் காண ஆடினான். சுடுகாட்டில் பேய்கள் சூழ்ந்து நின்று ஆட, ஆடினான். ஐம்பெரும் பூதங்களில் நின்று, அவற்றை இயக்கு கின்றான். இத்துணைச் செயலும் புரிந்தாலும், அவன் என்றும் பரமாகாயம் ஆகிய அகண்ட வெளியில் சொரூபத் திருமேனியாய் நின்று, ஞானநடனம் நிகழ்த்திக் கொண்டிருக்கின்றான்.

காளியோடு ஆடியமை: - புராணத்தில், காளி தாருகாசுரனைக் கொன்று அவனது குருதியைக் குடித்தமையால், தானும் கொடுங் குணம் கொண்டு, உலகை அழிக்கத் தொடங்க, சிவபெருமான் அவளோடு போட்டியிட்டு, ஊர்த்துவ தாண்டவம் ஆடி வென்றான் என்ற வரலாறு உண்டு. அதைக் கொண்டு, ஆசிரியர் உணர்த்தும் யோக நூற்செய்தி வருமாறு:

மாந்தர் உடம்பில் வாயுவை இயக்கும் சத்தி காளி. இவள் அதோமுகம் கொண்டபோது (கீழ் நோக்கும்பொழுது) சிற்றின்ப விருப்பம் ஏற்படும். உடல் அழியத் தொடங்கும். சிவம் யோகிக்குத் துணைநின்று, மூச்சுக் காற்றைச் சுழுமுனையில் மேலே ஏற்றுவான்.

கனகாசலம் - பொன்மலை; தலையுச்சி. அங்குச் சகஸ்ராரத்தில் இறைவன் காட்சி தருவான். "குவலயத்தே ஆடிக் கூளியோடு ஆடி" என மாற்றுக. உயிர்களைக் காத்தல் தொழிலைச் செய்து, பின் அழித்தலும் செய்து என்பது பொருள். 'ஐம்பூதங்களில் ஆடி' என்பது. யோகிக்கு அருள்வாழ்வு தருதல். இதில் அட்டமாசித்திகளும் அடங்கும்.

கூளி - பேய். நீளிய - பெரிய. "நாள் உற" என்பது ஒவ்வொரு நாளும்; கணந்தோறும் எனப் பொருள்படும்.

சிவன் ஆடும் தலங்கள்

2709. மேரு நடுநாடி; மிக்க இடை, பிங்கலை
கூரும் இவ்வானின், இலங்கைக் குறி உறும்;
சாரும் திலைவனம்; தண்மா மலயத்து ஊடு
ஏறும் சுழுனை - இவை சிவபூமியே.

மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை
கூருமிவ் வானின் இலங்கைக் குறியுறுஞ்[1]
சாருந் [2]திலைவனந் தண்மா மலயத்தூ
டேறுஞ் [3]சுழுனை யிவைசிவ பூமியே. (8)

வேறு பாடம்: 1. குறியுஞ் (ஈ) I. 2. திலைவனத் (விசு) (தி) (வ) 3. சுழுமுனை (அ) II.

கருத்து: 'அண்டம்போலப் பிண்டமும்' என்பதை விளக்குகின்றார். அண்டத்தில் மேரு, பிண்டத்தில், சுழுமுனை நாடியின் பயன் எய்தும் இடமாகிய தலையுச்சி. அண்டத்தில் இமயமலை, பிண்டத்தில் பிங்கலை நாடி. அண்டத்தில் இலங்கைத் தீவு, பிண்டத்தில் இடை கலை நாடி. அண்டத்தில் உள்ள தில்லை, பிண்டத்தில் தலையுச்சி யில் உள்ளதாகக் கருதப்படும் சுழுமுனைநாடியில் ஏறும் மூச்சுக் காற்றும் மூலக்கனலும், நெஞ்சில் இடமாக உள்ள அநாகதச் சக்கரத்தில் படிந்து, பின்பு மேல் ஏறும். சகஸ்ராரமும், அதை யொத்த தில்லையும் அநாகதமும் அதையொத்த பொதிகை மலையும் சிவபெருமான் திருநடனம் செய்யும் தலங்களாகும்.

"தில்லை விராட் புருடனுக்கு இருதயத்தானம்" என்று கூறப்படும். இங்கு, இருயத் தானம் என்பது, யோகிக்குத் தலையுச்சியே; இதயகமலம் என்பது சகஸ்ராரமே என்பதை ஆசிரியர் தெளிவுபடுத்து கின்றார். வான் - இமவான்; முதற்குறை; இமயமலை. மேருமலையும் இமயமலையும் வேறு வேறாக ஆசிரியர் கூறுதல் குறிக்கத்தக்கது. இமயம், மலைத்தொடர் எனவும், மேரு அதில் ஒரு குறிப்பிட்ட மலை எனவும் கொள்ளப்பட்டது போலும்.

யோகியின் திருவம்பலம்

2710. பூதல மேருப் புறத்து ஆன தெக்கணம்
ஓதும் இடை, பிங்கலை, ஒண் சுழுனையாம்;
பாதி மதியோன் பயில் திருவம்பலம்
ஏதம் இல் பூத - அண்டத்து எல்லையின் ஈறே.

பூதல மேருப் புறத்தான தெக்கண
மோது மிடைபிங் கலையொண் சுழுனையாம்
பாதி மதியோன் பயிறிரு வம்பல
மேதமில் பூதாண்டத் தெல்லையி னீறே. (9)

கருத்து: மண்ணுலகில் மேரு மலைக்கு வேறாக அதன் தென்திசையில் சிவபெருமான் திருநடனம் புரியும் தில்லைத் திருவம்பலம் உள்ளது. அத்தலம் பூத - அண்டத்தின் முடிவு அன்று, நடுவில் உள்ளது. ஆனால், பிண்டத்தில் (உடம்பில்) இடைநாடிக்கு உரிய சந்திரகலையும், பிங்கலை நாடிக்குரிய சூரியகலையும்

சுழுமுனை நாடிக்கு உரிய அக்கினி கலையும் ஒன்று சேரும் இடமாகிய புருவமத்தியிலிருந்து, நூல்போல் நுணுகிச் செல்லும் வழியில் உயிருணர்வைச் செலுத்திப் பெறுவதாகிய தலையுச்சிச் சகஸ்ராரமே மேருமலை, அதுவே தில்லையம்பலம். சிவபரம் பொருள் அண்டவெளியில் ஞான நடனம் புரியும் "காட்சியை", யோகிகாணும் இடம் அதுவே. அஃது பூத அண்டத்தைக் கடந்து அப்பால் உள்ள பரவெளி.

"அண்டத்தைப் போலப் பிண்டம்" என்பது யோகியர் கூறும் பொதுமொழி ஆயினும், பிண்டத்தில், சிவதுரியாதீத உணர்வு நிலை கைவரப் பெற்று, அண்டத்தைக் கடந்த காட்சியையும் காணலாம் என்று ஆசிரியர் கூறுகின்றார்.

அண்டம் கடந்தது பரமாண்டம்; பராகாயம். உயிரின் ஞானக் காட்சிக்கு வருவது; சிதாகாயம். இரண்டு ஆகாயமாகச் சொல்லப்பட்டாலும், அவை ஒன்றே. இத்திருமந்திரப்பாடற் பொருளைச் சேக்கிழார், "சிற்பரவியோமம் ஆகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று பொற்புற நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி, போற்றி" என்று பாடுவார். (பெ. பு. தில்லைவாழந்தணர் புரா. 2)

எனவே யோகிக்குத் திருவம்பலம், சகஸ்ராரமும், அதன் மேல் 12 அங்குலம் உள்ள வெளியுமாகும். அவனது சிதாகாயமும் இவையே. மேரு என்பது யோகியர் மரபில் தலையுச்சியைக் குறித்தலை முன்னும் ஆசிரியரின் கூற்றுகளிற் கண்டோம்.

குறிப்பு:- இப்பாடலுக்கு முன்னை உரைகாரர் பலவாறு உரை கொண்டனர். மேற்பாடலில் 2 ஆம் அடியில் "இலங்கைக் குறியுறும் எனப்பிரித்துப் பொருள் கண்டு, அதற்குக் கோயிற் புராண மேற்கோளும் காட்டுவர். ஆயினும் ஆசிரியர் திருமூலரின் கருத்துக்கு அவ்வுரை இயையவில்லை என்றே தோன்றுகின்றது.

(iv) பொற்றில்லைக் கூத்து

வியாபகக் கூத்து

2711. அண்டங்க ளோரேழு மம்பொற் பதியாகப்
பண்டையா காசங்க ளைந்தும் பதியாகத்
தெண்டினிற் சத்தி திருவம்பல மாகக்
கொண்டு பரஞ்சோதி கூத்துகந் தானே. (1)

கருத்து: மேம்பட்ட சோதி வடிவினன் ஆகிய சிவன், கலைகள் ஐந்தும் நாடாகவும், அண்டங்கள் ஏழும் தலமாகவும், அவற்றில் தண்டுபோல் ஊடுருவியிருக்கும் சத்தி திருவம்பலமாகவும் கொண்டு கூத்து இயற்றுகின்றான்.

இறைவன் ஏழு அண்டத்திலும் வியாபகமாக நின்று செயலாற்றுதலைப் "பொற்றில்லைக் கூத்து" என்றார்.

பதி - நாடு. பொற்பதி - ஊர்; நகரம். "பாண்டிநாடே பழம்பதியாகவும் உத்தர கோச மங்கை ஊராகவும்" (திருவா. கீர்த்தி, அடி 118 - 120) ஐந்து கலைகள் - நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை. அண்டங்கள் கலைகளுள் அடங்கியவை. தண்டு - தெண்டு எனத் திரிந்தது.

ஆனந்தத் தாண்டவம்

2712. குரு-ஆனந்த ரேகையாய், கூர்ந்த குணமாய்ச்
சிர-ஆனந்தம் பூரித்து, தென்திசைச் சேர்ந்து
புரானந்த போகனாய், பூவையும் தானும்
நிரானந்தம் ஆகி, நிருத்தம் செய்தானே.

குரானந்த ரேகையாய்க் கூர்ந்த குணமாய்ச்[1]
சிரானந்தம் [2]பூரித்துத் தென்றிசைச் சேர்ந்து
புரானந்த போகனாய்ப் பூவையுந் தானு
நிரானந்த மாகி நிருத்தஞ்செய் தானே. (2)

வேறு பாடம்: 1. குணமாஞ் (விசு) (தி) (த) 2. போதித்து (ஒ) II.

கருத்து: குருவினால் உணர்த்தப் பெற்று, இன்பமாய் விளங்கும் சந்திர மண்டலத்து ஒளியாய் உள்ளவன். மிகுதியாக விளங்கும் நற்பண்பினனாய், சிறந்த ஆனந்தத்தை நிறைய வழங்குபவன். சந்திர கலையின் ஒளியைச் சூரிய கலையுடன் இணைவித்து, உடம்பில் இன்பம் அளிப்பவனாய்ச் சத்தியுடன் இருந்து, என்றும் நிலவும் ஆனந்தத்தை விளைவிக்கும் திருநடனத்தை நிகழ்த்துகின்றான்.

போகம் - உயிர்களுக்கு இம்மை இன்பமும், மறுமையில் வீடு பேறும். இப்பாடலில், புருவமத்தியில் தோன்றும் சோதிக்காட்சியும், சகஸ்ராரத்தில் எழும் சோதிக்காட்சியும் சிவநடனம் என்று கூறப்படுகின்றன.

பரநாத வெளி நடனம்

2713. ஆதி பரனாட வங்கைக் கனலாட
வோதுஞ் சடையாட வுன்மத்த முற்றாடப்
பாதி மதியாடப் பாரண்ட மீதாட
நாதமோ டாடினா னாதாந்த நட்டமே. (3)

கருத்து: பரவெளியில் பரசிவம் இயற்றும் திருநடனத்தைக் கூறுகின்றார். உலகிற்கு ஆதியாகிய பரசிவம் ஆடினான். அப்போது அவனது கையில் உள்ள தீப்போலச் சுழுமுனையில் அக்கினிகலை ஒளிவீசியது. அவனுடைய சடைக்கற்றைகள் போல, ஒளிக் கற்றைகள் எங்கும் பரவின. பக்குவ ஆன்மாக்கள் தம்மை மறந்து ஆடினர். யோகியின் பிறைச் சந்திரன் போன்ற நெற்றியில் நீலவொளி தெரிந்தது. சகஸ்ராரத்திற்கு மேல் அண்டவெளியில் இக்கூத்து நிகழ்ந்தது. இக்கூத்தைத் தரிசிப்போர், நாதசத்தியின் துணையுடன் நாதாந்த நிலையை அடையும் பொருட்டு, இக்கூத்து நிகழ்ந்தது.

தில்லை நடனம் அண்ட பிண்ட வெளி நடனமே

2714. கும்பிட, அம்பலத்து ஆடிய கோன் நடம்
அம்பரன் ஆடும் அகிலாண்ட நட்டமாம்,
செம்பொருள் ஆகும் சிவலோகம் சேர்ந்து அற்றால்,
உம்பர் அம் மோன ஞானாந்தத்தில் உண்மையே.

கும்பிட வம்பலத் தாடிய கோனட
மம்பர னாடு மகிலாண்ட நட்டமாஞ்
செம்பொரு ளாகுஞ் சிவலோகஞ் சேர்ந்தற்றா[1]
லும்பர மோனஞா னாந்தத்தி லுண்மையே. (4)

வேறு பாடம்: 1. சேர்ந்துற்றா (விசு) (தி) (வ) (த).

கருத்து: மாந்தர் புறத்தே கண்டு வணங்கும்படி, தில்லையம் பலத்தில், கூத்தப் பெருமான் ஆடும் திருநடனம், உண்மையில் அகிலாண்டத்திலும், உயிர்களின் உடம்பில் அவன் நிகழ்த்தும் நடனமேயாகும். இந்த உண்மையை எப்போது உணரக்கூடும்? ஒவ்வொருவரும் யோக சாதனை செய்து, தம் தலையின் மீது உள்ள துவாதசாந்த வெளியைத்தமது உணர்வால் எட்டிப் பிடித்து, அங்கு

ஊன்றி நின்றால், சிறிது காலத்தின் பின்னர் அடையும் மௌன ஞானத்தினால் விளையும் ஆனந்தத்தைக் கொண்டு உணரக் கூடும்.

துவாதசாந்த வெளி சிவலோகம் எனப்பட்டது புராணமரபு. அற்றால் - தற்போதம் கெட்டு நின்றால் எனலுமாம்.

செயலெல்லாம் திருக்கூத்து

2715. மேதினி மூவேழ், மிகும் அண்டம் ஓர் ஏழு
சாதகம் ஆகும் சமயங்கள் நூற்றெட்டு
நாதமொடு அந்தம் நட - ஆனந்த நாற்பதப்
பாதியோடு ஆடும் பரன் இரு பாதமே.

மேதினி மூவேழ் மிகுமண்ட மோரேழு
சாதக மாகுஞ் சமயங்க ளூற்றெட்டு
நாதமோ டந்த நடானந்த நாற்பதப்[1]
பாதியோ [2]டாடும் பரனிரு பாதமே. (5)

வேறு பாடம்: 1. நற்பதம் (அ) I. 2. டாடிடும் பன்னிரு (அ) I.

கருத்து: நாத தத்துவத்தினுள் அடங்கிய 21 உலகங்கள், 7 அண்டங்கள் ஆகியவற்றிலும், 108 சமயங்களால் கூறப்படும் இறைச் செயல்களிலும், நாத தத்துவத்தைக் கடந்த பர வெளியிலும், சிவம் உயிர்களுக்கு நான்கு வகையாகச் சத்திநிபாதம் அளிக்கும் சத்தியுடன் நின்று திருநடனம் இயற்றுகின்றான்.

2716. இடைபிங் கலையிம வானோ டிலங்கை
நடுநின்ற மேரு நடுவாஞ் சுழுனை
கடவுந் திலைவனங் கைகண்ட மூலம்
படர்வொன்றி யென்ற பரமாம் பரமே. (அ)

அருள் விளங்கும் திசை

2717. ஈறான கன்னி குமரியே காவிரி
வேறா நவதீர்த்த மிக்குள்ள வெற்பேழும்[1]
பேறான வேதா கமமே பிறத்தலான்
மாறாத தென்றிசை வையகஞ் சுத்தமே. (6)

வேறு பாடம்: 1. வெற்பேழுட் (சைவ)

கருத்து: தெற்கு எல்லையாகிய கன்னித்துறை என்னும் குமரி, காவிரி, இவை அன்றி, வேறாக உள்ள ஒன்பது தீர்த்தங்கள், ஏழு மலைகள் - இவற்றில் வேதாகமங்களின் கூறப்படும் ஞானப்பேறான இறைவன் திருநடனம் நடைபெறுதலின், அவனது அருள் மாறாத தென்றிசை, உலகின்கண் உயிர்கள் தமது ஆணவ மலத்தைப் போக்கிக் கொண்டு, சுத்த நிலை அடைவதற்கு ஏற்ற இடமாகும்.

"வேதாகமப் பேறு பிறத்தலால்" என மாறுக. தில்லையில் ஆடுதல் மட்டுமன்றி, இவ்விடங்களிலும் சிவனது அருள்விளக்கம் இருத்தலின் தென்றிசையை உயர்த்துக் கூறினார்.

தன்னை விளக்கும் தலைவன்

2718. நாதத் தினிலாடி [1]நாற்பதத் தேயாடி
வேதத்தி லாடித் [2]தனிலந்த மீதாடிப்
போதத்தி லாடிப் புவன முழுதாடும்
தீதற்ற தேவாதி தேவர் பிரானே. (7)

வேறு பாடம்: 1. நற்பதத் (ஈ) I; நற்பாதந் (ஆ) I. 2. தழலந்த (விசு) (தி) (வ) (த).

கருத்து: இயல்பாகவே பாசங்களின் நீங்கிய மகாதேவன், உலகத் தோற்றத்திற்கு முற்பட்டதாகிய நாதத் தத்துவத்தில் ஆடி, சூக்குமை முதலிய நால்வகை வாக்குகளில் ஆடி, அவற்றிலிருந்து தோன்றிய வேதத்தில் ஆடி, வேதாந்தப்பொருளாக ஞானநடனமாடி, உயிர்களின் அறிவில் ஆடி, அனைத்துப் புவனங்களையும் இயக்குவதாகிய நடனத்தையும் புரிகின்றான்.

ஆடுதல் - அருள் விளக்கம் செய்தல். வள்ளலார் தமது 'அருள் விளக்க மாலையில்', "ஆடுகின்ற அரசே" என்று இறைவனை விளிப்பார். நாதம் முதலியவாகக் கூறப்பட்டவற்றால் சிவபிரானது அருளை விளங்கிக் கொள்ளலாம். அருளால் அவனையே உணரலாம்.

தனிப் பெருங்கருணை

2719. தேவரோ டாடித் திருவம் பலத்தாடி
மூவரோ டாடி [1]முனிகணத் தோடாடிப்
பாவினு ளாடிப் பராசத் தியிலாடிக்
[2]கோவினு ளாடிடுங் கூத்தப் பிரானே. (8)

வேறு பாடம்: 1. முனிசனத் (அ ஓ) III. 2. கோவிலு (த)

கருத்து: நடராசப் பெருமான் அகண்டாகார வெளியில், சொரூபத் திருமேனியுடன் ஞானத் திருநடனம் புரிந்தவாறே, தேவர்களுள் அதிட்டித்துச் செயல்படுகின்றான். அயன், அரி, அரன் என்ற முத்தொழில் - தேவரை அதிட்டித்துப் படைத்தல் முதலிய தொழில் களைச் செய்கிறான். முனிவர்களின் தவவொளியில் விளங்கு கின்றான். அருளாளர் பாடும் பாடலில், உணர்வு வடிவில் திகழ்கின்றான். இவையெல்லாம் சத்தியுடன் இருந்து அவன் நிகழ்த்தும் 'ஆடல்'. இவையன்றி, யாவும் கடந்த பரவெளியில் பராசத்தியுடன் நடனம் புரிகின்றான். இத்துணைத் திரு நடனங்களையும் ஆன்மா காண அருள் புரிகின்றான். என்னே அவன் தனிப்பெருங்கருணை!

திருவம்பலம் - பரமாகாயம். இப்பொருளில் ஆசிரியர் இதனை முன்னும் வழங்கினார். கோ - பசு; ஆன்மா.

நீ வேறு எனாதபடி

2720. ஆறு முகத்தில் அதிபதி - நான் என்றும்
கூறு சமயக் குருபரன் - நான் என்றும்
தேறினர் தெற்குத் திருவம்பலத்துளே
வேறு இன்றி, அண்ணல் விளங்கி நின்றானே.

ஆறு முகத்தி [1]லதிபதி நானென்றுங்[2]
கூறு சமயக் குருபரன் னானென்றுந்[3]
தேறினர் [4]தெற்குத் திருவம் பலத்துளே
வேறின்றி யண்ணல் விளங்கிநின் றானே. (9)

வேறு பாடம்: 1. னதிபதி (த) 2. தானென்றுங் (ஆ) IV. 3. தானென்றுந் (த) 4. தேறுத் (த)

கருத்து: யோகியர் தமது தலையின் நான்கு திசைகளிலும் - நான்கு திசைகளையும் நோக்கிய தலையின் பக்கங்களிலும் - மேலும் கீழும் காட்சிதரும் சிவத்தையும் தம்மையும் வேறின்றி உணர்வர். சமயநெறியில் ஞானாசிரியனாக வந்து உணர்த்தும்சிவனே, தமது யோகக் காட்சியில், தம் உள்ளிருந்து உணர்த்துகின்றான் என்று தெளிவர். இவ்வாறு, சிவம் 'ஒன்றாயும்' 'வேறாயும்' தம்முள் காட்சி தருதலை அவர்கள் கண்டு, ஞானத்தெளிவு பெறும் வண்ணம் தென்றிசையில் உள்ள தில்லைச் சிற்றம்பலத்தால் அடையாளமாகக் குறிக்கப்படும் பரமாகாயத்தில் சொரூபசிவம் விளங்குகின்றது.

சிவம் ஆன்மாவுடன் வேறுபாடு இன்றி விளங்குவது சிவதுரியாதீதம் என்ற உணர்வில் விளங்கும் பரமாகாய வெளியிலே ஆகும். எனவே, "தெற்குத் திருவம்பலம்" என்பது அடையாளக் குறியேயாகும்.

ஈசானம் முதலிய ஐந்து முகத்தோடு அதோ முகமும் சேர, ஆறுமுகம். முகந்தோறும் காட்சியளிக்கும் அதிபதி என்க. முகம் - திசை.

"அதிபதி நான்" என உணர்தல், சிவம் யோகியுடன் ஒன்றாய் நிற்பதால். "குருபரன் நான்" (குருபரன் என்னுள் நின்று உணர்த்துகிறான்) என உணர்தல், சிவம் 'வேறாய் நிற்றலால்'. யோகி இந்த இருமையையும் கடந்து, "திருவம்பலக் காட்சியைக்" - பரமாகாயத்தில் விளங்கும் சொரூப சிவத்தைக் - காண்பான். அங்கே, எல்லாம் அவனுள் ஒடுங்கி விடுதலின், "வேறு இன்றி விளங்கி நின்றான்" என்றார். "தேறினர் காட்சியில்" என ஒரு சொல் வருவிக்க. இசையெச்சம்.

அருள் - ஆடல்

2721. அம்பலம் ஆடரங்கு ஆக, அதன் மீதே
எம்பரன் ஆடும்; இரு தாளில் ஈரொளி -
யும் பரமாம்; ஐந்து நாதத்து இரேகையுள்
தம் பதமாய் நின்று; தான் வந்து அருளுமே.

அம்பல மாடரங் காக வதன்மீதே
யெம்பர னாடு மிருதாளி லீரொளி[1]
யும்பர மாமைந்து நாதத் திரேகையுட்
[2]டம்பத மாய்நின்று தான்வந் தருளுமே. (10)

வேறு பாடம்: 1. னீரொளி (விசு) (தி) (வ) (த) 2. தம்பமதாய் (ஈ) I.

கருத்து: அகண்டாகார வெளியே மன்றம். சொரூப சிவம் அங்கே ஞானக் கூத்தியற்றும். அவனுடைய திருப்பாதங்கள் எனக் காணும் போது, அவை பரவெளியில் முறையே பரநாதம், பரவிந்துவாக விளங்குவன. அவை சுத்த மாயையின் தத்துவங்களான நாதம், விந்து, சாதாக்கியம், மாயேச்சுரம், சுத்த வித்தை என்ற ஐந்து கதிர்களில், அவையேயாகி நிற்கும். அந்நிலையில் அன்பர்க்கு அருள் வழங்கும்.

ஈர் ஒளி - ஈர்க்கும் ஒளி; ஞானம் "ஈரொளியும் பரமாம்" எனச் சேர்த்துப் படிக்க. நாதம் முதலிய ஐந்து இரேகைகளில் என்க. இரேகை - ஒளிக்கதிர். நாதம் முதலிய ஐந்தும் சிவம் தடத்தத்திருமேனி கொண்டு

நிற்கும் சுதந்திரத்தானம் ஆதலின், "தம் பதம்" என்றார். பதம் - நிலை. "நின்று" என்பதை "நிற்க" என மாற்றுக.

தடத்தத் திருமேனி கொண்டு ஆடுகிறான் என்பது கருத்து. 'தான்' - சிவம். சொரூபத்தில் ஆடுவது விளங்குவது; தடத்தத்தில் ஆடுவதே அருளுவது என்றார்.

இதனால் சொரூப சிவம், பரசிவம், தடத்தசிவம் - மூன்றும் கூறினார்.

சிவகுரு இசைத்த சிவஞானப்பாட்டு

2722. ஆடிய காலு மதிற்சிலம் போசையும்
பாடிய பாட்டும் பலவான நட்டமுங்
கூடிய கோலங் குருபரன் கொண்டாடத்
தேடியு ளேகண்டு தீர்ந்தற்ற வாறே. **(11)**

கருத்து: சிவபெருமான் பல்வேறு தடத்தத் திருமேனி கொண்டு, பொருத்தமான கோலம் தாங்கி, கரணங்கள் பலவும் அமைந்த நடனவகைகளை இயற்றுகிறான். அவற்றைப் புறக்கண்ணாலும், பின்பு அகக்கண்ணாலும் கண்டேன். அவன் குருவாக என் உள்ளே எழுந்தருளி இசைத்த சிவஞானப் பொருள் அமைந்த பாட்டைத் துணைக்கொண்டு, அந்த மெய்ஞ்ஞானத்தின் வழி, என் உயிருணர்வால் அகமுகமாகத் தேடி, பரவெளியில் பரசிவனாக நின்று, அப்பெருமான் ஆடிய திருப்பாதம் ஆகிய பரவிந்துவையும், திருப்பாதச் சிலம்போசையாகிய பரநாதத்தையும் உணர்ந்தேன். பின்னர்ப் பரவெளிக்கு அப்பால், உணர்வைச் செலுத்தி, சிவதுரியாதீத நிலை எய்திச் சொரூப சிவத்தை 'உணர்ந்து', தற்போதம் நீங்கி நின்றேன்.

தடத்த சிவத்தைப் பற்றிக் கொண்டு, ஆசாரியன் உபதேசத்தின் வழியே, சொரூப சிவத்தை உணர்ந்தமையைக் கூறினார். அனுபவமும், பேறும் நல்கியமையை உணர்த்தினார்.

கொண்டு கூட்டு: "குருபரன் கூடிய கோலம் கொண்டு, பலவான நட்டம் ஆட, (அவன்) உள்ளே பாடிய பாட்டும் கொண்டு, உள்ளே தேடி, ஆடிய காலும், அதில் சிலம்போசையும் கண்டு, தீர்ந்து அற்றவாறே" எனக் கூட்டுக. உள்ளே, கொண்டு என்பனவற்றை முன்னும் கூட்டுக.

கடைநிலைத் தீவக அணி.

அனுபவம் இங்கே; அடைபேறு எங்கும்

2723. இருதயந் [1]தன்னிலே நின்ற பிராணன்
கரசர ணாதி கலக்கும் படியே
யரதன மன்றினின் மாணிக்கக் கூத்தன்
குரவனா யெங்கணுங் கூத்துகந் தானே. (12)

வேறு பாடம்: 1. தன்னிலெழுந்த (ஓ) IV.

கருத்து: தலையுச்சிச் சகஸ்ராரத்தை அடைந்த மூச்சக்காற்றும், உயிர்ச் சத்தியும், மீண்டும் குருதியின் வழியே உடம்பின் ஏனைய உறுப்புகளில் கலக்கும். அதுபோல, இரத்தினசபையில் ஊர்த்துவத் திருநடம் புரியும் மாணிக்கக் கூத்தனே எல்லா இடங்களிலும் மாந்தர்க்குக் குருவாய்ச் சிவஞானம் அருள்கின்றான்.

சிவன் ஊர்த்துவ தாண்டவம் ஆடிய தலம் திருவாலங்காடு. இத்தாண்டவத்தில், அவனது கால், தலையைத் தொடுவது, கேசரி யோகத்தில் மூச்சுக் காற்று (கால்) சகஸ்ராரத்தை அடைவதற்குப் படிமமாகப் பயன்படுத்தப்படுகின்றது. சகஸ்ராரத்தில் ஆன்மா பெற்ற 'சிவவொளி' உடலெங்கும் பரவுவது போல், சிவம் திருவாலங்காட்டில் ஆடினாலும், அவனே எங்கெங்கும் உள்ள மாந்தருக்குச் சிவ வொளியை - சிவஞானத்தை - நல்கியருள்கின்றான்.

நடனம் ஆலங்காட்டில், ஞானம் உலகெங்கும். அதுபோலச் சிவானுபவம் சகஸ்ராரத்தில்; சிவவொளி உடலெங்கும்.

(V) அற்புதக் கூத்து

இயற்கையும் செயற்கையும்

2724. குருவுரு வன்றிக் குனிக்கு முருவ
மருவுரு வாவது மந்த வருவே[1]
திரிபுரை யாகித் [2]திகழ்தரு வாளு
[3]மருவுரு வாகு முமையவ டானே. (1)

வேறு பாடம்: 1. வுருவே (த) 2. திகழ்ந்திருந்தாளு (அ) III. 3. முருவரு (சங்)

கருத்து: சிவ - சத்திகள், தமக்கு இயல்பான நிலையுடன், தடத்த நிலைகளையும் மேற்கொள்வர் என்பதை விளக்குகின்றார்.

சிவம் சொரூப நிலையில் உள்ளபோது வடிவமற்றது. (வடிவத்தில் அடங்காதது.) ஆனால் அண்பர்பாற் கருணையால், சிவமே குருவின் உருவம் கொண்டு எழுந்தருள்கின்றது. தாண்டவ வடிவங்களையும் மேற்கொள்கின்றது. இலிங்கத்திருமேனியாகிய அருவுருவத்தையும் மேற்கொள்கிறது. காற்று, அறிவு, உணர்வு, ஆற்றல் முதலிய அருவங்களையும் மேற்கொள்கின்றது. சிவத்தின் சத்தியாகிய பரையும் திரிபுரசுந்தரி என்ற பெயருடைய உருவத்தை மேற்கொள்கிறாள். ஏனைய பற்பல வடிவங்களும் கொள்வாள். அருவம், அருவுருவம் என்ற நிலைகளையும் மேற்கொள்வாள்.

குனிக்கும் உரு - அகண்டாகார வெளியில் ஞான நடனம் இயற்றும் சொரூப சிவம்.

திருவம்பலம் காண

2725. திருவழியாவது, சிற்றம்பலத்தே
குருவடிவு உள்ளாக் குனிக்கும் உருவே;
உருவரு ஆவதும்; உற்று உணர்ந்தோர்க்கும்
அருள்வழியாவதும் அவ்வழியாமே.

[1]திருவழி யாவது சிற்றம் பலத்தே
குருவடி [2]வுள்ளாக் குனிக்கு முருவே[3]
யுருவரு வாவது முற்றுணர்ந் தோர்க்கு
மருள்வழி யாவது மவ்வழி யாமே. (2)

வேறு பாடம்: 1. திருவடி (அ) I. 2. வுள்ளாகக் (அ) II. 3. முருவமே (த)

கருத்து: அற்புதக் கூத்தைக் 'காண்டல்' முத்திப் பேறு. அதுவே திரு. அதனை எய்தும் நெறி, 'சிற்றம்பலம்' என வழங்கும் புருவமத்தியில் விளங்கும் அருவுருவான சோதியை - அதன் உள்ளே சிவஒளி உள்ளது என்ற பாவனையுடன் - தியானித்தலாகும். இவ்வாறு தியானித்து உணர்ந்தோர்க்குப் புருவமத்தியில் விளங்கும் உயிருணர்வில், அருள் கலப்பதற்கு உரிய வழியும் அதுவே யாகும்.

அருள் கலத்தல், சத்தி நிபாதம். அருள் கலந்த பின்பே, தலையுச்சிக்கு உயிருணர்வைச் செலுத்திச் சிவவொளியைக் காணல் இயலும்.

புருவமத்தி சிற்றம்பலம். சகஸ்ராரமும் அதற்கு மேல் உள்ள வெளியும் திருவம்பலம்.

உள்ளாக என்பதில் ஈற்று அகரம், ஏறியமெய்யுடன் தொக்கது. புருவ மத்தியைச் சிற்றம்பலம் என்றமையால், அங்கு விளங்கும் சோதியை

'நடமாடும் உரு' என்றார். குனித்தல் - நடனமாடுதல். குருவடிவு உள்ளாக - சிவ வடிவமும் தானாக. புருவமத்தி ஒளியைப் பலகால் கண்டு பழகியவர்க்கே உயிருணர்வில் அருள் கலக்கும் ஆதலின், "உற்று உணர்ந்தோர்க்கு" என்றார். இங்கு உம்மை அசை.

"குனிக்கும் உரு, தியானித்தலாகும்" என வருவித்து முடிக்க.

திருவம்பலம்

2726. [1]நீடுஞ் [2]சிரத்திடைப் பன்னிரண் டங்குல
மோடு [3]முயிரெழுந் தோங்கி யுதித்திட
நாடுமின் னாதாந்த நம்பெரு மானுகந்
தாடு மிடந்திரு வம்பலந் தானே. (3)

வேறு பாடம்: 1. நீருஞ் (சைவ) 2. சீர்கடை (ஓ) I; சிரசிடை (விசு) (தி) (வ) 3. முயிரெழுத் (ஈ ஓ) II.

கருத்து: இயல்பாகக் கீழ் நோக்கி ஓடும் உயிராற்றல், மேல்நோக்கி எழுந்து, தலையுச்சியை அடைந்து, அங்குச் சகஸ்ராரத்தில் சிவவொளி தோன்றியருளுமாறு அகமுகமாக நாடுக. முப்பத்தாறு தத்துவ எல்லையான நாதமும் கடந்த நிலையில், சிவம் ஞான நடனம் இயற்றும் இடம், அச்சகஸ்ராரமும் அதன் மேல் உள்ள 12 அங்குல வெளியும் ஆகும். அதன் திருப்பெயர் 'திருவம்பலம்'.

மறைந்து, பின் வெளிப்படும்

2727. வளிமேக மின்வில்லு வானக வோசை
தெளிய விசும்பிற் றிகழ்தரு மாறுபோற்
களியொளி யாறுங் கலந்துடன் வேறா
யொளியுரு வாகி யொளித்துநின் றானே. (4)

கருத்து: காற்றும், மின்னலும், இடியோசையும் வானத்தில் மறைந் திருந்து முறையே அருவமாயும், அருவுருவமாயும் வெளிப்படுவதே போல், சிவம் ஆறு அத்துவாக்களிலும் ஒன்றாய்க் கலந்துமறைந்து நின்று, பின்பு யோகக் காட்சியில், சிவவொளியாகத் திருவம் பலத்தில் 'காட்சி' தருவான்.

உடன் வேறாய் - கலந்துநிற்கும் அந்தச் சமயத்திலேயே வேறாயும் திகழ்வான். ஒளியுருவாகி - ஞானமே வடிவாகி, "கலந்து ஒளித்து" என்றும், "வேறாய் ஒளியுருவாகி (நின்றான்)" என்றும் நிரனிரையாகப் பொருள் கொள்க.

மேகத்தில் மின்னலாகிய வில்லும் ஓசையும், வானகத்தில் வளியும் திகழ்தருமாறு போல் எனக்கூட்டுக. உவமைக்குக் கூறியதைப் பொருளுக்கும், பொருளுக்குக் கூறியதை உவமைக்கும் கூட்டுக. தெளிய - தெளியாகுமாறு; மறைந்திருந்து, பின் வெளிப்படும் தன்மை தெளிவாகுமாறு. ஆறு - கலை, வன்னம், பதம், மந்திரம், தத்துவம், புவனம் - என்ற ஆறு அத்துவாக்கள். இவை மாயையிலிருந்து பிறப்பவை. "மாயை மயக்கமும் செய்யுமன்றே" என்றதனால், மாயை அறிவு விளக்கம் தருதலே பெரும்பான்மையாதலின்," ஒளி ஆறு" என்றார்.

ஆனந்தம் தரும் ஆடல்

2728. தீமுத லைந்துந் திசையெட்டுங் கீழ்மேலு
மாயு [1]மறிவினுக் கப்புற மானந்த
மாயைமா மாயை கடந்துநின் றார்காண
நாயக னின்று நடஞ்செய்யு மாறே. (5)

வேறு பாடம்: 1. மறிவினு மப்புற (தி)

கருத்து: இறைவனை ஐம்பூதங்களிலும், எட்டுத் திசைகளிலும், மேல், கீழ்ப்பக்கங்களிலும் ஆய்ந்து காண முயல்வார் சிலர். (அவற்றில் நின்றானாயினும்) அவன் ஆனந்தத் தாண்டவம் புரிவது, மேற்கண்டவற்றின் மூலமான மாயையும், இறைவனுக்குத் தடத்தத் திருமேனி கொள்ளும் கருவியாகிய சுத்தமாயையும் கடந்த அகண்ட பரவெளியிலே யாகும்.

செயல் கடந்த தெய்வம்

2729. கூத்தன் கலந்திடுங் கோல்வளை யாளொடுங்
கூத்தன் கலந்திடுங் கோதிலா வானந்தங்
கூத்தன் கலந்திடுங் கோதிலா ஞானத்துக்
கூத்தனுங் கூத்தியுங் கூத்ததின் மேலே. (6)

கருத்து: திருவம்பலமாகிய அகண்டாகார வெளியில் ஞானக்கூத்து ஆடும் சிவம் சொரூபசிவம். அந்நிலையில் அஃது ஒன்றே. சத்தியும் அதனுடன் கலந்துள்ளது. (அம்மையப்பன், மாதொருபாகன் என்னும் நிலைகள் அங்கு இல்லை) சிவமே பொருள்; உண்மை. சிவமே குற்றமற்ற ஆனந்தம். மாசற்ற பேரறிவு. அந்நிலையில் 'செயல்' என்ற நிலைக்கு அப்பாற்பட்டது அது. உண்மை - அறிவு - ஆனந்தமே அங்கு உள்ளது.

"எத்திறம் ஈசன் நிற்கும், அத்திறம் அவளும் நிற்பள்" எனச் சத்தி பற்றிச் சிவஞான சித்தியார் கூறும். சிவம் சொரூபநிலையில் நிற்பா ன் ஆதலின், சத்தியும் அவனுடன் இரண்டற நிற்றல் ஆகிய தனது சொரூப நிலையில் நிற்பாள் என்க. உலகை ஆட்டுவிக்கும் நிலையில் சத்தியும் சிவமும், கூத்தியும் கூத்தனும் ஆவர். ஆட்டுவித்தல் அவரது கூத்து.

கருத்தா யார்?

2730. இடங்கொண்ட சத்தியு மெந்தை பிரானு
நடங்கொண்டு நின்றமை நானு மறிந்தேன்
படங்கொண்டு நின்றவிப் பல்லுயிர்க் கெல்லா
மடங்கலுந் தாமாய்நின் றாடுகின் றாரே. (7)

கருத்து: ஒரே பொருளாய் நின்ற இறைப்பொருள், குணி - குண சம்பந்தம் உடைய சத்தி, சிவமாகப் பிரிந்து, சத்தி சிவத்தின் இடப்பாகத்தில் பொருந்தி, திருக்கூத்து ஆடுகின்ற காட்சியை நான் கண்டு, அதன் அடிப்படையை உணர்ந்தேன். ஆணவ மலம் என்ற திரைமறைப்பை உடைய உலக வுயிர்களுக்கெல்லாம் குணம், அறிவு, செயல் - இவற்றின் விளக்கமாக, இவற்றை இயக்குபவர் தாமேயாகச் சத்தியும் சிவமும் நிற்கின்றனர். இதுவே அவர்கள் இயற்றும் திருக்கூத்து.

அடங்கலும் - எல்லாத் தத்துவங்களும், கலை, வன்னம், பதம் முதலிய பிற அத்துவாக்களும் என்று கொள்ளலுமாம். மலமறைப்பால், உயிர்கள் தம் செயலுக்குத் தாமே கருத்தா என்று எண்ணும். ஆனால் உண்மையில் ஆட்டுவிப்பவர் சத்தி சிவமே.

"இப் பல்லுயிர்" என்றது, அண்டவெளியில் "வேறாய்" இருந்தாலும், இறைவன் கருணையால் உயிர்களுக்கு உதவுதல் பற்றி.

பொருள்நடனமும் அருள் நடனமும்

2731. சத்தி வடிவு சகல ஆனந்தமும்,
ஒத்த ஆனந்தம் உமையவள் மேனியாம்,
சத்தி வடிவு சகளத்து எழுந்து இரண்டு
ஒத்த ஆனந்தம் ஒரு நடம் ஆமே.

சத்தி வடிவு சகலவா னந்தமு
மொத்தவா னந்த முமையவண் மேனியாஞ்
சத்தி வடிவு சகளத் தெழுந்திரண்
டொத்தவா னந்த மொருநட மாமே. (8)

கருத்து: இறைவன் உயிர்களைப் பெத்த நிலையில் (உலக வாழ்வில்) மட்டுமன்றி, முத்திநிலையிலும் ஆட்டுவிக்கின்றான் என்று கூறுகிறார்.

யாரும் எப்பொருளாலும் அடையும் இன்பம் சத்தியின் வடிவமே. அது மட்டும் அன்றி, இருவினை யொப்பில் எய்தும் இன்பமும் சத்தியின் வடிவமே (முன்னது, பொருளால் சத்தி கூட்டிவைக்கும் இன்பம், பின்னது அருளால் வரும் இன்பம்.) இவ்விரண்டு வகை இன்பத்தையும் சத்தி 'சகளமாய்' நின்று தருகின்றாள். இவற்றுள், முதலது பொருளின்ப நடனம், மற்றையது அருளின்ப நடனம்.

சத்தி கொள்ளும் முதல் வகைச் சகள வடிவம் தெய்வத்திருமேனிகள் ஆகும். உமையம்மை, காமாட்சி, திரிபுர சுந்தரி முதலியவை எடுத்துக் காட்டு. மற்றொரு வகைச் சகள வடிவம் ஞானாசாரியன் வடிவம். அவனே இருவினையொப்பின்கண் எழுந்தருளிச் சிவஞானம் உணர்த்து பவன். சத்தியின் வடிவாகிய சகளத்து எழுந்த ஆனந்தம் - சகளத்தில் இருந்து சத்தி தரும் ஆனந்தம்.

இரண்டு ஆனந்தம் ஒரு நடம் ஆகிய ஒக்கும் என வினை முடிவு செய்து, 'இரண்டு ஆனந்தமும் ஒவ்வொரு நடனம் ஆதலில் ஒக்கும்' எனப் பொருள் கொள்க.

சிற்றம்பலம்

2732. நெற்றிக்கு நேரே, புருவத்து இடை, வெளி
உற்று உற்றுப் பார்க்க ஒளிவிடும் மந்திரம்
பற்றுக்குப் பற்றாய்ப் பரமன் இருந்திடம்
சிற்றம் பலமென்று சேர்ந்துகொண்டேனே.

நெற்றிக்கு நேரே புருவத் திடைவெளி
யுற்றுற்றுப் பார்க்க வொளிவிடு மந்திரம்
பற்றுக்குப் பற்றாய்ப் பரம னிருந்திடஞ்
சிற்றம் பலமென்று சேர்ந்துகொண் டேனே. (9)

கருத்து: நெற்றிக்கு நேரேயும், புருவத்தின் இடையிலும் உள்ள வெளி, உடம்பில் உள்ள ஆகாயம். அங்கு நனவு நிலையில் (சாக்கிரம்) உயிருணர்வு இருக்கும். அவ்வுணர்வால் அவ்வெளியைப் (அதாவது, அகமுகமாக, உணர்வு, தனக்குள்ளே நோக்க.) பலமுறையும் உற்று நோக்கித் தியானம், சமாதி ஆகியவை செய்தால், அச்சிவயோகத்தில் நாம் தியானிக்கும் மந்திரம் ஆகிய சூக்கும பஞ்சாக்கரம், அவ்விடத்தில் (புருவத்திடையில்) ஒளியாகத்

தோன்றும். அந்த இடம், நாம் பற்றிக் கொள்வதற்கு எளிய பற்றாகச் சிவம் எழுந்தருளும் இடமாகும்.

(சிவம் அங்குப் பேரொளியாகக் காட்சி தரும். அவ்வொளி, நமது 'உயிருணர்வு - ஒளியில்' உள்ளொளியாக நின்று அசையும்) ஆகவே அவ்விடம் சிற்றம்பலம் என்று உணர்ந்து, சிவவொளியுடன் சமாதி யானேன்.

சுழுமுனை வழியே வரும் மூலக்கனல் (உயிராற்றல்) வலக்கண் ஒளி, இடக்கண் ஒளி - மூன்றும் புருவமத்தியில் கலக்கும். அப்போது உயிருணர்வும் அருள்ஒளியும் சேர, இவை அனைத்திற்கும் மையமாகச் சிவவொளி திகழ, ஆகமொத்தம் ஒரு பேரொளி விளக்கம் உண்டாகும். உயிருணர்வு காணும் ஒளி இது. எனவே, உணர்வு விளக்கம் உண்டாகும். பின்பு ஞான விளக்கமும் உண்டாகும். யோகத்தின் பயனாக ஒளி தோன்றும் என்க. பற்றுக்குப்பற்று - உயிரொளிக்கு உள்ளே உள்ள ஒளி எனலுமாம். சிற்றம்பலம் - சிதாகாயம். மந்திரம் - மந்திரயோகம்.

ஆறாதாரத்திலும் ஒளி

2733. அண்டங்கள் தத்துவ [1]மாகிச் சதாசிவந்
தண்டினிற் சாத்தவி சாம்பவி யாதனந்
தெண்டினி லேழுஞ் சிவாசன மாகவே
கொண்டு பரஞ்சோதி கூத்துகந் தானே. (10)

வேறு பாடம்: 1. மாதி (த)

கருத்து: சிவன் அண்டங்களிலும், சதாசிவ தத்துவத்திலும் உடம்பிலும் ஆடுகின்றான் என்று கூறுகின்றார்.

உடம்புடன் தொடர்புடைய தத்துவங்கள் அண்டங்களாக விளங்க, சுழுமுனையில் அமைந்தவையும், முறையே குண்டலிசத்திக்கும், அருட்சத்திக்கும் இருப்பிடமாக அமையத் தக்கவையுமாகிய, மூலாதாரம் முதல் சகஸ்ராரம் வரையுள்ள ஏழு அனுபவத்தானங்களும் தனக்கு மன்றங்களாகக் கொண்டு, அக்காரணத்தால், சத்தியை (மனோன்மணியை) இடமாகக் கொண்டு திகழும் சதாசிவன் போல விளங்கி, சிவபரஞ்சோதி அசையும்.

இதனால், புருவமத்தியில் மட்டுமன்றி, ஏனை ஆதாரங்களிலும் ஒளியுண்டாதலைக் கூறினார். சகஸ்ராரத்தில தோன்றும் பேரொளி பற்றி முன்னர்க் கூறினார்.

சாத்தவி - சத்தி; குண்டலி. சாம்பவி - மனோன்மணி. இவர் சதா சிவனின் சத்தி. சாம்பன் - சாம்பவி. 'சாம்ப சதாசிவ' என்ற வழக்குக் காண்க. தொண்டு - முறை.

பேரம்பலம்

2734. மன்று நிறைந்த விளக்கொளி மாமலர்,
நன்றுஇது தான்இதழ் நாலொடு நூறு அவை
சென்று அது தான் ஒரு பத்து இருநூறு உள
நின்றதுதான் நெடுமண்டலம் ஆமே.

மன்று நிறைந்த விளக்கொளி மாமலர்
நன்றிது தானிதழ் நாலொடு நூறவை
சென்றது [1]தானொரு பத்திரு நூறுள
நின்றது தானெடு மண்டல மாமே. **(11)**

வேறு பாடம்: 1. தானிரு (த)

கருத்து: மேற்பாடல் ஒன்றில் புருவமத்தியைச் 'சிற்றம்பலம்' என்றவர், இங்கு உடம்பு முழுவதையும் 'பேரம்பலம்' என்கிறார்.

உடம்பாகிய பேரம்பலத்தில் நிறைந்து விளங்கும் சிவப்பேரொளி, மூலாதாரத்தில் நான்கு இதழ்த் தாமரை முதல், சகஸ்ராரத்தில் ஆயிர இதழ்த் தாமரை, அதற்கு உட்பட்ட நான்கு ஆதாரங்களின் தாமரைகள் - இவற்றை எல்லாம் தழுவி நின்றது. இது 210 புவனங்களை இடமாகக் கொண்டு சிவன் ஆடுதல் போன்று உள்ளது.

நிவர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை என்ற ஐந்து கலைகளிலும் மொத்தம் 224 புவனங்கள் உள. இவற்றுள், தூலமாக உள்ள சத்தி கலைகள் நான்கும் சிவகலைகள் பத்தும் நீங்க, ஏனைய கலைகளில் உள்ள புவனங்கள் - 210.

அகண்ட சிவம் உமக்குள்ளே

2735. அண்டம் எழுகோடி; பிண்டம் எழுகோடி,
தெண்திரை சூழ்ந்த திசைகள் எழுகோடி,
எண்திசை சூழ்ந்த இலிங்கம் எழுகோடி,
அண்டன் நடம் செய்யும் ஆலயந்தானே.

அண்ட மெழுகோடி பிண்ட மெழுகோடி
தெண்டிரை சூழ்ந்த திசைக ளெழுகோடி
எண்டிசை சூழ்ந்த விலிங்க மெழுகோடி
யண்ட னடஞ்செய்யு மாலயந் தானே. (12)

கருத்து: அண்ட நாயகன் நடஞ்செய்யும் உடம்பு, எழுகோடி அண்டங்கள், அத்துணை உடம்புகள், அத்துணைக் கடல்கள், அத்துணைத் தீவுகள், அத்துணை இலிங்கத் திருமேனிகள் - இத்துணையிலும் அவன் ஆடுதலின், அவற்றை ஒக்கும்.

ஆலயம் - ஈண்டு உடம்பு. உடம்பு இவற்றையெல்லாம் ஒக்கும் என்க. ஆதலின், இறைவனைப் புறத்தே சென்று தேட வேண்டா என்றார்.

பரமாகாய நடனம்

2736. ஆகாசமாம் உடல், அம் கார் முயலகன்,
ஏகாசமாம் திசை எட்டும் திருக்கைகள்,
மோகார் முக்கண்கள் மூன்று ஒளி தான் ஆகும்
மாகாய மன்றுள் நடம் செய்கின்றானே.

ஆகாச மாமுட [1]லங்கார் முயலக
னேகாச மாந்திசை யெட்டுந் திருக்கைகள்
[2]மோகார் முக்கண்கண் மூன்றொளி தானாக
மாகாய மன்று ணடஞ்செய்கின் றானே. (13)

வேறு பாடம்: 1. லங்கானி (விசு) லாங்கா (த) 2. மோகாய (சங்)

கருத்து: சிவம் அண்ட வெளியே உடலாகவும், மேகம் முயலகனாகவும், எட்டுத்திசையும் மேலாடை அணிந்த எட்டுத் தோள்களாகவும், சூரியன், சந்திரன், தீ என்ற மூன்று சுடர்களும் கண்களாகவும் கொண்டு நடனம் புரிகின்றான்.

எல்லாம் அம்பலம்தான்

2737. அம்பலமாவது அகில சராசரம்
அம்பல மாவது ஆதிப் பிரானடி
அம்பல மாவது அப்புத் தீமண்டலம்
அம்பல மாவது அஞ்செழுத்தாமே.

அம்பல மாவ தகில சராசர
மம்பல மாவ தாதிப் பிரானடி
யம்பல மாவ தப்புத்தீ மண்டல
மம்பல மாவ தஞ்செழுத் தாமே. (14)

கருத்து: சிவம் நிற்பன, இயங்குவன என்னும் இருவகை உயிர்களின் கண்ணும் நின்று ஆடுகின்றான். ஐம்பூதங்களை உள்நின்று இயக்கு கின்றான். இவ்வண்ணம் வியாபித்திருந்து, உயிர்ப் பொருள் களையும் சடப்பொருள்களையும் இயக்குவது அவனது அருட்சத்தி. திருவைந்தெழுத்து அவனேயாகும். ஆதலின் மேற்கூறிய அம்பலங் களில் ஆடுவது திருவைந்தெழுத்தே.

திருவைந்தெழுத்தில் சராசரம், அருட்சத்தி, ஐம்பூதம் - இவை குறிக்கப் படுதலை யாவரும் அறிவர், அவை : சராசரம் - ய; ஐம்பூதம் - ந. அருட்சத்தி - வ.

ஆண்டவன் ஆடிய ஆடல்

2738. கூடிய திண்முழவம் குழல் ஓம் என
ஆடிய மானுடர் ஆதிப் பிரான் என்ன
நாடிய நற்கணம் ஆறு அன பூதங்கள்
பாடியவாறு ஒரு பாண்டரங்காமே.

கூடிய திண்முழ வங்குழ லோமென
வாடிய மானுட ராதிப் பிரானென்ன
நாடிய நற்கண [1]மாறன பூதங்கள்
பாடிய வாறொரு பாண்டரங் காமே. (15)

வேறு பாடம்: 1. மாரம்பல் (விசு) (தி) (வ) மாரும்பல் (த)

கருத்து: சிவன் 'பாண்டரங்கம்' என்னும் கூத்தினை ஆடினான். அப்பொழுது சுருதியால் ஒத்த முழவும், குழலும் 'ஓம்' என இசைத்தன. அவ்வரிய காட்சியைக் காணப்பெற்ற மாந்தர், "அவனே உலகப் படைப்புக்குக் காரணமாகிய தலைவன்" என்று கூறி மெய்ம்மறந்து ஆடினர். தேவர் கூட்டம் அங்கு வந்து சூழ்ந்து வணங்கியது. ஆறு போன்ற பூதங்களின் கூட்டம் பாடியது.

இறைவனது ஆடலைத் திருஞானசம்பந்தர் அருட் கண்ணாற் கண்டு, "கனை கடல் வையகம் தொழுகருக்குடி அனல் எரி யாடும் எம் அடிகள்

காண்மினே" என்று விம்மிதங் கொள்வது காண்க. (திருஞா. தேவா. 3 ஆம் திருமறை - கருக்குடி : 1).

2739. அண்டத்திற் றேவர்க ளப்பாலைத் தேவர்கள்
தெண்டிரை சூழ்புவிக் குள்ளுள்ள தேவர்கள்
புண்டரி கப்பதப் பொன்னம் பலக்கூத்துக்
கண்டுசே வித்துக் கதிபெறு வார்களே. (ங)

ஆடல் காணும் ஆனந்தம்

2740. புளிக்கண் டவர்க்குப் புனல்ஊறு மாப்போல்
களிக்கும் திருக்கூத்துக் கண்டவர்க் கெல்லாம்
துளிக்கும் அருட்கண்ணீர் சோர்நெஞ்சு உருக்கும்
ஒளிக்குள் ஆனந்தத்து அமுதுஊறும் உள்ளத்தே

புளிக்கண் டவர்க்குப் புனலூறு மாப்போற்
களிக்குந் திருக்கூத்துக் கண்டவர்க் கெல்லாந்
துளிக்கு மருட்கண்ணீர் சோர்நெஞ் சுருக்கு
மொளிக்கு ளானந்தத் தமுதூறு முள்ளத்தே. (16)

கருத்து: புளியைக் கண்டவர்க்கு, அதைச் சுவைக்கு முன்பே நாவில் நீர் ஊறுவது போல், சிவபிரான் ஆடும் ஆனந்தத் தாண்டவத்தைக் காண்பவர்க்கு, அவனருள் வாய்ப்பதற்கு முன்பே, அருளால் விளையும் மெய்ப்பாடாகக் கண்ணீர் பொழியும். உள்ளம் உருகும். பின்பு, அவர்தம் உயிருணர்விற்கு அருள் ஒளி புலப்படும். உள்ளத்தில் ஆனந்தம் பெருகும்.

2741. திண்டாடி வீழ்கை சிவானந்த மாவ
துண்டார்க் குணர்வுண்டா லுன்மத்தஞ் சித்திக்குங்
கொண்டாடு மன்றுட் குனிக்குந் திருக்கூத்துக்
கண்டார் வருங்குணங் கேட்டார்க்கும் ஒக்குமே. (ங)

ஞானக் கூத்து

2742. அங்கி, தமருகம், அக்குமாலை, பாசம்,
அங்குசம், சூலம், கபால முடன் ஞானம்
தங்கும் அபயம் தருநீலமும், உடன்
மங்கையோர் பாகமாய் மா நடம் ஆடுமே.

அங்கி தமருக மக்குமா லைப்பாச
மங்குசஞ் சூலங் கபால முடன்ஞானந்
தங்கு [1]மபயந் தருநீல மும்முடன்
மங்கையோர் பாகமாய் மாநட மாடுமே. (17)

வேறு பாடம்: 1. பயந்தருநீல (விசு) (தி) (வ), பயமுன் (த)

கருத்து: கூத்தப் பிரான் தன் எட்டுக் கைகளில் நெருப்பு, உடுக்கை, உருத்திராக்க மாலை, கயிறு, அங்குசம், சூலம், மண்டையோடு, அபயக் கையில் ஞானத்தைக் குறிக்கும் நீலமலர் - ஆகியவற்றை ஏந்தி, உமையம்மை இடப்பக்கம் நிற்க, ஞானப் பெருங் கூத்தாடுவான்.

இது ஞானக் கூத்து. எனவே, எட்டுப் பொருள்களை ஏந்துதல், சிவம் சங்கற்ப மாத்திரையாகச் செய்யும் செயல்கள் எட்டினைக் குறிக்கும்.

உள்ளே, வெளியே

2743. ஆடல் பதினோ ருறுப்பு மடைவாகக்
கூடிய பாதஞ் சிலம்புகைக் கொள்துடி
நீடிய நாதம் பராற்பர நேயத்தே
யாடிய நந்தி புறமகத் தானே. (18)

கருத்து: சிவபெருமான் அன்பிற் சிறந்த யோகியரின் அகவுணர்வு வெளியிலும் (சிதாகாயம்), அண்டவெளியாகிய பரமாகாயத்திலும், முறையே அவர்கள் மிக்க மேலான இறைநிலையை நேசிக்கும் பேரன்பு காரணமாகவும் அந்த மிக்க மேலான நிலையில், அறியப்படும் பொருள் தான் மட்டுமே ஆதலாலும் ஆடல் நிகழ்த்தினான். அவன் பதினோராடல் வகைகளையும், தன் திருவடியில் அணிந்த சிலம்பும், கையில் ஏந்திய உடுக்கையும் எழுப்பிய நாதமும் தனது ஆடலும் இணைய ஆடினான்.

பதினோராடல்: அவ்வியம், கொடுகொட்டி, குடை, குடம், பாண்டரங்கம், மல், துடி, கடையம், பேடு, மரக்கால், பாவை. இது சிலப்பதிகாரவுரையிற் கண்டது.

நேயம் - அறியப்படும் பொருள். பராற்பரம் - பரவெளியையும் கடந்த சிவவெளி, சிவவெளியில் ஞானக்கூத்தாடும் சிவம், மாகேசுவர வடிவங்களுள் ஒன்றான நடராச மூர்த்தியின் கோலத்தில் பதினோராடல்களையும் நிகழ்த்தினான் என்க.

கொண்டு கூட்டு: (சிவம்) "கூடிய பாதம் சிலம்பும், கைக்கொள் துடி நீடிய நாதம் பராற்பர நேயத்தே, ஆடல் பதினோருறுப்பாக அடைவாக ஆடிய நந்தி புறம் அகத்தானே" எனக் கூட்டுக.

அனுபவம் எல்லாம் அவன் ஆடலே

2744. ஒன்பதும் ஆட, ஒருபதினாறு ஆட,
அன்புறு மார்க்கங்கள் ஆறும் உடன் ஆட,
இன்புறும் ஏழினும் ஏழ், ஐம்பத்து ஆறு ஆட
அன்பு-அதும் ஆடினான் ஆனந்தக் கூத்தே.

ஒன்பது மாட வொருபதி னாறாட
வன்புறு மார்க்கங்க ளாறு முடனாட
வின்புறு மேழினு மேழைம்பத் தாறாட
[1]வன்பது மாடினா னானந்தக் கூத்தே. (19)

வேறு பாடம்: 1. வன்பனு (த)

கருத்து: சிவத்தின் தெய்வநிலைகள் ஒன்பதும், அன்பர்களுக்கு, அவரவர் பக்குவத்திற்கு ஏற்ப அருள்தர, யோகிக்குப் பிராசாத கலைகள் பதினாறும் அனுபவம் நல்க, ஆறு சமயங்களும், அவற்றைப் பின்பற்றுபவர்க்கு நல்வழி காட்ட, மந்திர யோகிக்கு, அவனது உடம்பில் உள்ள ஏழு ஆதாரங்களிலும் 51 தாய் எழுத்துகளும் திருவைந்தெழுத்து ஐந்தும் ஆக 56 எழுத்துகளும் மந்திரப் பயனைத்தர, அன்பரின் அன்பு வெளியில் (உணர்வு வெளியில்) சிவன் ஆனந்தத் தாண்டவம் ஆடினான்.

அருள் நடனம்

2745. ஏழினில் ஏழாய், இகந்து எழுந்து ஏழ்-அது ஆய்
ஏழினில் ஒன்றாய், இழிந்து அமைந்த ஒன்றாகி
ஏழினிற் சன்மார்க்கம் எங்கள் பரஞ்சோதி
ஏழிசை நாடகத்தே இசைந் தானே.

ஏழினி லேழா யிகந்தெழுந் தேழதா
யேழினி லொன்றா யிழிந்தமைந் தொன்றாகி
யேழினிற் சன்மார்க்க மெங்கள் பரஞ்சோதி
யேழிசை நாடகத் தேயிசைந் தானே. (20)

கருத்து: சிவபிரான் பின்னணி இசையாகப் பாடப்படும் ஏழிசைக்கு ஏற்ப ஆடுகின்ற பொழுது, ஆறு அகச் சமயங்கள், சன்மார்க்கம் ஒன்று, ஆக ஏழுசமயங்களிலும் பொருந்தியிருக்கின்றான். எவ்வாறு? ஏழு இசை வரிசைகள் இரண்டனுள், சமன் தானத்து இசை ஏழாகவும் (மத்திம ஸ்தாயியின் ஏழு சுரங்கள்) அலகுக் கணக்கால் அவற்றைவிட மிகுந்து ஒலிக்கும் வலிவுத் தானத்து இசை ஏழாகவும் (காந்தார ஸ்தாயியின் ஏழு சுரங்கள்) அமைந்து, (இப்பதினான்கு இசைகளும் வேறு வேறாக இருப்பினும்) சமன் தானத்து ஏழு இசைகளுள் ஒன்றாயும், இப்பதினான்கினுள்ளும் குறைந்த அலகுடைய சுரமாகவும் உள்ள 'குரல்' என்ற இசையே (ஸட்ஜமம்) இப்பதினான்கிற்கும் ஆதார சுருதியாக இருத்தலைப் போல், ஏழு சமயங்களுள், சன்மார்க்கம் ஆதாரமாக அமைந்து, ஏனைய ஆறு சமயங்களும் வேறுபட்டுத் தோன்றினாலும், அவற்றினிடையே ஒருமைப்பாடு உள்ளமையை உணர்த்தி நிற்கின்றது.

சிவம் ஏழு சமயங்களிலும் பொருந்தியுள்ளான் என்பதன் கருத்து: அவ்வச் சமயக் கடவுளரின் அருட்செயல்களும் சிவத்தின் செயல்களே. சன்மார்க்கத்தில் ஆன்மாவிற்கு, மலம் அகற்றி, சிவவெளியில், அனுபவம் அளித்துத் தானாக்கிக் கொள்வதும் சிவத்தின் அருட்செயலே. இச்செயல் எல்லாம் நடனமாகக் கூறப்படுகின்றன.

இரண்டாகத் தொடுத்த ஏழ் இசை வரிசையை "பிழையா மரபின் ஈரேழ் கோவை" என்பார் இளங்கோவடிகள். (சிலப். வேனிற்காதை: அடி 310) இதனை இக்காலத்தில், 'சரிகமபதநிச்ரிக்ம்ப்த்நி' என எழுதுவர். இங்கு மெலிவுத் தானத்து ஏழ் இசையைக் கூறாமல், குறிப்பிற் பெறவைத்தார்.

இருவகை அனுபவம்

2746. மூன்றினில் அஞ்சு ஆகி, முந்நூற்றறுபதாய்,
மூன்றினில் ஆறாய், முதற்பன்னீர் மூலமாய்,
மூன்றினில் அக்க முடிவாகி, முந்தியே
மூன்றினும் ஆடினான் மோகாந்தக் கூத்தே.

மூன்றினி லஞ்சாகி முந்நூற் றறுபதாய்
மூன்றினி லாறாய் முதற்பன்னீர் மூலமாய்
மூன்றினி லக்க முடிவாகி முந்தியே
மூன்றினு மாடினான் மோகாந்தக் கூத்தே. (21)

கருத்து: உடம்பில் உள்ள அக்கினி, சூரியன், சந்திரன் என்னும் மூன்று மண்டலங்களிலும் திருவைந்தெழுத்தின் அனுபவமாகி, அம்மண்டலங்களைக் கடந்து 12 அங்குலம் வரையுள்ள துவாதசாந்த வெளியில், திருவைந்தெழுத்தின் நாதம் பரவ, அந்த அண்டவெளி அனுபவமாகி, சிவன் ஆன்மாவின் ஆணவ மலத்தை நீக்கும் கூத்தை அவ்வான்மாவின் உடம்பில் ஆடினான்.

ஆதார யோகம், நிராதார யோகம் என வழங்கும் இவ்விருவகை அனுபவங்களுக்கும் இடமாக, முறையே அமையும் ஆறு ஆதாரங்களாகவும், தலையுச்சிக்கு மேல் 12 அங்குல வெளியாகவும், அவற்றின் இயக்கமாகவும் உள்ளவள் சத்தி. அவளுக்கு மூலப் பொருள் சிவன். இனி, இவ்வனுபவங்கள் யாவை எனக் கூறப்புகில், மூன்று மண்டலங்களிலும் முடிவான அனுபவம், வலக்கண், இடக்கண், புருவமத்திக்கண் - என்ற மூன்றின் இணைப்பாகிய சோதிக் காட்சியே. பின்னர், அதுவே வழியாக, உயிருணர்வு முன்னேறிச் சகஸ்ராரத்தை அடையும். அங்கும், அதற்கு மேல் துவாத சாந்த வெளியிலும், முறையே, சுத்தாவத்தை, பராவத்தை, சிவாவத்தைகளை அடைந்து. ஆன்மா சிவானுபவம் பெறும்.

இருவகை அனுபவங்களையும் தரும் சிவபிரானது செயலை நடனமாகக் கூறினார். அக்க முடிவு - கண்ணொளிகளின் இணைப்பாகிய நிறைவு. முந்தி - மேற்சென்று. முந்நூற்றறுபது என்பது ஓர் ஆண்டின் நாட்கள். அஃது ஒரு வட்டம். நாதம் ஆகாயத்தில் பரவும்போது வட்டமாகப் பரவும். எனவே, "வட்டமாய்ப் பரவி" எனற்பாலதை "முந்நூற்றறுபதாய்" என்றார். பன்னீர் - பன்னிரண்டு. புணர்ச்சியின்றியும் யாப்பு நோக்கித் திரிந்தது. மோகம் - ஆணவமலத்தால் விளைவது. காரியத்தைக் காரணமாக உபசரித்தார் ஆதலின், ஆணவத்தைக் குறித்தது.

அருமையில் எளிய அழகு

2747. தாம்முடி வானவர் தம்முடி மேல் உறை
மாமணி ஈசன் மலரடி, தாளிணை
வாம்; அணி அன்புடையார் மனத்து உள் எழும்
கா, மணி; ஞாலம் கடந்து நின்றானே.

தாமுடி வானவர் தம்முடி மேலுறை
மாமணி யீசன் மலரடி தாளிணை
[1]வாமணி யன்புடை யார்மனத் துள்ளெழுங்
காமணி ஞாலங் கடந்துநின் றானே. (22)

வேறு பாடம்: 1. யாமணி (த)

கருத்து: வாழ்நாள் எல்லையினை உடைய தேவர்கட்குத் தலைவனான சிவபெருமானின் சொரூபத் திருமேனி, உருவத்தைக் கடந்தது. உலகில் காணப்படாதது. ஆனால், அவன்பால் அன்பு வைத்து அணிந்து அணிந்து புகழும் அன்பர்க்குப் புலப்படும். அவன் அவ்வன்பர்க்கு வேண்டுவன கொடுப்பதில், கற்பகச் சோலையையும், சிந்தாமணியையும் விஞ்சுபவன்.

வாவும் என்பது இடைக் குறைந்தது; தாவும், கடக்கும்.

மலரடி - குறிப்பால் சொரூபத்தை உணர்த்திற்று. தாளிணை - குறிப்பால் உருவத்தை உணர்த்திற்று.

அவன் செயல் உணர்ந்தேன்

2748. புரிந்து, அவன் ஆடின், புவனங்கள் ஆடும்,
தெரிந்து அவன் ஆடும் அளவு எங்கள் சிந்தை
புரிந்து, அவன் ஆடின் பல் பூதங்கள் ஆடும்
எரிந்து, அவன் ஆடல்கண்டு இன்புற்றவாறே.

புரிந்தவ னாடிற் புவனங்க ளாடுந்
தெரிந்தவ னாடு மளவெங்கள் சிந்தை
புரிந்தவ னாடிற்பல் பூதங்க ளாடு
மெரிந்தவ னாடல்கண் டின்புற்ற வாறே. (23)

கருத்து: சிவன் ஆடுதலைச் சங்கற்பித்தால், உலகங்கள் தோன்றி, இயங்கி, மறையும். அவன் எம் சிந்தையுள் இருந்து அறிந்து, யாம் என்ன அறிதல் வேண்டும் என எண்ணுகின்றானோ, அதனையே எம் சிந்தை எண்ணும். உயிர் வகைகளின் வினைப்பயனை அவன் கூட்டுவிக்க, அவை இன்ப துன்பங்களை நுகரும். அவன் சோதி வடிவாய் அசைதலை நான் 'கண்டு' இன்புற்று, உணர்ந்தவை இவை.

சாத்திரக் கூற்றுத் தம் அனுபவம் ஆயிற்று என்றார்.

ஞானமாநடராச மூர்த்தி

2749. 'ஆதி நடம்செய்தான்' என்பர்கள் ஆதர்கள்,
ஆதி நடம்செய்கை ஆரும் அறிகிலர்
ஆதி நடமாடல் ஆரும் அறிந்தபின்
ஆதி நடமாடல் ஆம்அருட் சத்தியே.

ஆதி நடஞ்செய்தா னென்பர்க ளாதர்க
ளாதி நடஞ்செய்கை யாரு மறிகில
ராதி நடமாட லாரு மறிந்தபி
னாதி நடமாட லாமருட் சத்தியே (24)

கருத்து: 'முதல்வன் ஆகிய சிவபெருமான் நடனம் செய்கின்றான்' எனக் கண்டறிந்தார் போலக் கூறுவர் அறியாதோர். ஆனால் அவன் நடனமாடுதலை இதுகாறும் யாரும் கண்டதில்லை. அந்நடனம் யாது என உணர்வோர், அவன் தனது அருளால், (உயிர்கள் உய்க, உலகங்கள் தோன்றுக) எனச் சங்கற்பித்தலாகிய அசைவே அது என உணர்வர்.

சொரூப சிவத்தின் சங்கற்பம், பிரமன், திருமால், உருத்திரன், மயேச்சுரன், சதாசிவன் என்னும் சிவபேதங்களின் செயல்களாக மலரும். இவர்கள் செய்யும் படைத்தல் முதலிய ஐந்தொழில்களையும், நடராசமூர்த்தியின் ஆடற்கலையாகப் பெரியோர் உணர்ந்த குறிப்பு இது. அதையே ஆசிரியர் ஈண்டுக் கூறுகிறார்.

இராமலிங்க வள்ளலாரும் "உயிர் ஒளிக்கு உள்ளொளியின் அசைவே நடனம்" என்றார். அவர் 'ஒளி' என்றது அறிவை.

இரண்டு நடனம்

2750. ஒன்பதோடு ஒன்பதாம் உற்ற இருபதத்து
அன்புறு கோணம் அசிபதத்து ஆடிட,
துன்புறு சத்தியுள் தோன்றிநின் றாடவே
அன்புறும் எந்தைநின்று ஆடலுற் றானே.

ஒன்பதோ டொன்பதா [1]முற்ற விருபதத்
தன்புறு கோண [2]மசிபதத் தாடிடத்
துன்புறு [3]சத்தியுட் [4]டோன்றிநின் றாடவே
[5]யன்புறு மெந்தைநின் றாடலுற் றானே. (25)

வேறு பாடம்: 1. யுற்ற (இ) IV. 2. சிவபதத் (ஓ) II. 3. சத்தியுந் (ஓ) II. 4. டோன்றினனாடவே (ஓ ஓ) III. 5. யன்புற (ஓ ஓ) I யின்புறு மேனி சமைந்தாடு மெந்தையே (இ) IV. (சுவடிப் பாடம் எதுவும் பொருந்தாமை யால், தருமபுர வாதீனப் பதிப்புப் பாடம் மேற்கொள்ளப் பெற்றது.)

கருத்து: ஒன்பது வகைத் தடத்த வடிவங்களை மேற்கொள்ளு பவனும், 'தத்' என்ற பதத்தால் குறிக்கப்படுபவனும் ஆகிய சிவனும்,

ஐந்து புலன்கள் நான்கு அந்தக் கரணங்கள் - இந்த ஒன்பது தத்துவங்களால் பிணிக்கப் படுபவனும், "த்வம்" என்ற பதத்தால் குறிக்கப்படுபவனுமாகிய ஆன்மாவும், ஒருவர்பால் ஒருவர் அன்பு கொள்ளும் நிலை உண்டாகுமாறு, ஆன்மாவின்மேல் வைத்த கருணையினால், சிவன் அருள்புரிவான். அதன் விளைவாக, ஆன்மா சிவனிடம் வைக்கும் அன்னியம் அற்ற அன்பினால், அவன் சிவனோடு உணர்வால் ஒன்றுவான். இஃது "அசி" என்ற பதத்தின் பொருள் உண்மையாகுமாறு, சிவன் ஆடும் ஞான நடனம். அந்நிலை தோன்றுவதற்கு முன், சிவனுக்கு ஆன்மாவிடம் அன்பில்லையோ எனின், உண்டு என்க. அனாதியே, ஆணவமலப் பிணிப்பினால் அறிவு மறைப்புண்டு கிடக்கும் ஆன்மா, அம்மலத்தினின்று விடுதலை பெறவேண்டும் என்று, சிவன் அன்பினால்தான் திருவுள்ளம் கொள்கிறான். அதன் பொருட்டு ஆன்மாவிற்குப் பிறவி அளிக்கிறான். மலம் காரணமாக ஆன்மா வினைகளை ஈட்டி, இறந்து, மீண்டும் மீண்டும் பிறந்து, வினைப்பயன்களாகிய இன்ப துன்பங்களை நுகர்கிறது. அவ்வாறு விடயங்களை நுகரச் செய்து, அதன் உணர்வில், பிறவியின் மேல் உவர்ப்பை உண்டாக்குவான். இஃது அவன் புரியும் ஊன நடனம்.

"ஒன்பதாம் இருபதம், உற்ற இருபதம்" எனத் தனித்தனி கூட்டுக. சத்தியுள் - உள்: ஏதுப் பொருளில் ஏழன் உருபுவந்தது; பொருள் மயக்கம். "மலத்து உளதாம்" என்ற சிவஞான போதம் (சூத். 1) காண்க. ஆட - நுகர. கோணம் - நிலை. "கோணம் அசிபதத்து ஆடிடவும், தோன்றி நின்றாடவும் எந்தை ஆடலுற்றானே" என முடிக்க.

இறைவன் மேற்கொள்ளும் ஒன்பது உருவம் சுதந்திர நிலையாக இருக்க, ஆன்மா உற்ற ஒன்பது நிலை (புலன் 5, அந்தக்கரணம் 4 ஆக 9) பிணிப்பு நிலையாக இருத்தல் காண்க. இவ்வாறு பிணிப்புண்டமை பற்றியே மணிவாசகரும், "கடையவனேனைக் கருணையினால் கலந்தாண்டுகொண்ட விடையவனே" என்றார். (திருவா. நீத்தல் விண்ணப்பம், 1) "அன்பு உறு கோணம் அசி பதத்து ஆடிட" என்பதனோடு "பின்றா நேசத்தாற் பிறப்பு இறப்பைக் கடந்தார் தம்மை ஆண்டானே" என்ற திருவாசக அடியை (திருச் சதகம், 24) ஒப்புநோக்குக.

இயக்குபவன்

2751. தத்துவ மாடச் சதாசிவந் தானாடச்
சித்தமு மாடச் சிவசத்தி தானாட
வைத்த சராசர மாட மறையாட
வத்தனு மாடினா னானந்தக் கூத்தே (26)

கருத்து: உலகம் எல்லாம் இயங்க, இறைவன் ஆடல் நிகழ வேண்டும் என்று கூறுகிறார். உலகம், உடம்புகள் - இவற்றின் மூலக் கூறுகளாகிய 24 ஆன்ம தத்துவங்களும், ஐந்தொழிற் கடவுளரும், உயிர்களின் சித்தமும், சிவம், சத்தி என்ற தத்துவங்களும், அனைத்து உயிரினங்களும் இயங்கவும் வேதப் பொருள் உண்மையாய் விளங்குதற் பொருட்டும், சிவபெருமான் ஆனந்தத் தாண்டவம் ஆடுகின்றான்.

மூவடிவ நடனம்

2752. இருவரும் காண எழில் அம்பலத்தே
உருவோடு அருவோடு உருவரு ரூபமாய்த்
திருவருட் சத்திக்குள் சித்தன், ஆனந்தன்
அருள்உரு ஆகநின்று ஆடலுற்றானே.

இருவருங் காண வெழிலம் பலத்தே
யுருவோ டருவோ [1]டுருவரு ரூபமாய்த்
திருவருட் சத்திக்குட் சித்தனா னந்த
னருளுரு வாகநின் றாடலுற் றானே. (27)

வேறு பாடம்: 1. டுரூபா (சங்) டுரூபர (விசு) (தி) (வ).

கருத்து: தன் சித்தப்படி எல்லாம் செய்பவனும், இன்பமே வடிவாகிடப் பெற்றவனுமாகிய சிவபிரான், தனது அருட்சத்தியே காரணமாக, அருட்டிரு மேனிகளாகிய உருவம்,அருவம், அருவுருவத் திருமேனிகளை மேற்கொண்டு, தில்லைச் சிற்றம்பலத்தில், பதஞ்சலி, வியாக்கிரபாதர் என்ற இருவரும் கண்டு உய்யத் திருநடம் புரிகின்றான்.

உருவம் - ஆடும் கோலம். அருவம் - சிதம்பர இரகசியம். அருவுருவம் இலிங்கத்திருமேனி.

வேதாந்த சித்தாந்த உண்மை

2753. சிவமாடச் சத்தியு மாடச் சகத்தி
லவமாட வாடாத வம்பர மாட
நவமான தத்துவ நாதாந்த மாடச்
சிவமாடும் வேதாந்த சித்தாந்தத் துள்ளே. (28)

கருத்து: சொரூப சிவம் தனது சங்கற்பத்தால் ஞானக்கூத்தாட, அதன் விளைவாக, நவநிலைகளாகிய சிவத்திருமேனிகள் இயங்கின. உலகில், தீயவை நீங்குதற்கான பக்குவம் உற்றன. ஆடாத தன்மையுடைய ஆகாயத்திலும் பிற பூதங்களின் தோற்றத்திற்காக, அணுக்கள் இயங்கின. தத்துவங்கள் - பூமி முதல் நாதம் வரை உள்ளவை - இயங்கின. இது வேதாந்த சித்தாந்தம் கண்டது.

வேதாந்த சித்தாந்த உண்மை - சைவ சித்தாந்தம்.

அம்பலம் எங்கே?

2754. நாதத்தின் அந்தமும், நற்போத அந்தமும்
வேதத்தின் அந்தமும், மெய்ச்சிவானந்தமும்
தாதற்ற நல்ல சதாசிவானந்தத்து
நாதப்பிரம சிவம் நடமாடுமே.

நாதத்தி னந்தமு நற்போத வந்தமும்
வேதத்தி னந்தமு [1]மெய்ச்சிவா னந்தமுந்
தாதற்ற நல்ல [2]சதாசிவா னந்தத்து
நாதப் [3]பிரம சிவநட மாடுமே[4]. (29)

வேறு பாடம்: 1. மெய்ச்சிவ வந்தமும் (த) 2. சதாசிவ வந்தத்து (த) 3. பிரமஞ் (விசு) (தி) (வ) 4. மாமே (விசு) (தி) (வ) (த).

கருத்து: நாதத்தைக் கடந்த இடம்; ஆன்மா தனது அறிவைக் கடந்த இடம்; வேதத்திற்கு அப்பால், வடிவம் உடைய சிவனைக் கடந்த இடம்; சதா சிவனைக் கடந்த இடம் - இங்கு 'நாதப் பிரமம்' எனப் பிறர் கூறும் சொரூப சிவம் நடனமாடும்.

2755. சிவமாதி ஐவர்திண் டாட்டமுந் தீரத்
தவமார் பசுபாச மாங்கே தனித்துத்
தவமாம் பரனெங்குந் தானாக ஆடுந்
தவமாஞ் சிவானந்தத் தோர்ஞானக் கூத்தே. (ஔ, ங)

அரியான் என்னை ஆட்கொண்டான்

2756. கூடிநின்றான்; ஒருகாலத்துத் தேவர்கள்
வீட நின்றான், விகிர்தா என்னும் நாமத்தைத்
தேட நின்றான், திகழும் சுடர் மூன்று ஒளி
ஆட நின்றான், என்னை ஆட்கொண்டவாறே.

கூடிநின் றானொரு [1]காலத்துத் தேவர்கள்
வீடநின் றான்விகிர் தாவென்னு நாமத்தைத்[2]
தேடநின் றான்றிக ழுஞ்சுடர் மூன்றொளி
யாடநின் றானென்னை யாட்கொண்ட வாறே. (30)

வேறு பாடம்: 1. தத்துவத் (இ) II. 2. நாமத்துத் (த)

கருத்து: சிவபெருமான் உயிர்களைக் காக்கும் காலத்தில் அவற்றுடன் 'ஒன்றாய்' நின்றான். அழிக்கும் காலத்தில், "வேறாய்" நின்று, ஐந்தொழில் - தேவர் உளப்பட, அத்துணை உயிர்களையும் அழித்தான். பற்பல வண்ணமும், செயலும் உடையவனாதலின், யாவரும் அவனை 'விகிர்தா' என்ற திருப்பெயரைக் கூறி வாழ்த்தி, அவனுடைய சொரூபம் யாது என ஆராயுமாறு விளங்குகின்றான். அண்டத்திலும், பிண்டத்திலும் சூரியன், சந்திரன், அக்கினி என்னும் மூன்று சுடர்களும் ஒளிபெற, அதனை வழங்குகின்றான். அத்தகைய வள்ளல் - தலைவன் இன்று என்னை அடிமை கொண்டது என்னே வியப்பு!

விகிர்தன் - வேறுபட்டவன்; முரண்படும் பண்புகள் உடையவன் "ஆண் எனத் தோன்றி, அலி எனப் பெயர்ந்து, வாணுதற் பெண் என ஒளித்தும்" என வரும் திருவாசகம் (திருவண்டப் பகுதி: அடி 134 - 5) காண்க. ஒளியாட - சிவவொளியால் ஒளிபெற.

கடையவர்க்குக் கருணை

2757. நாதத்துவம் கடந்த ஆதிமறை நம்பி
பூ தத்துவத்தே பொலிந்து, இன்பம் எய்தினால்
நே தத்துவமும், அவற்றொடு நீதியும்
பேதப்படா வண்ணம், பின்னை நின்றானே.

நாதத் துவங்கடந் தாதி மறைநம்பி
பூதத் துவத்தே பொலிந்தின்ப மெய்தினால்[1]
[2]நேதத் துவமு மவற்றொடு நீதியும்[3]
பேதப்ப டாவண்ணம் [4]பின்னைநின் றானே. (31)

வேறு பாடம்: 1. மெய்தீன்ற (ஓ) I; மெய்தினர் (ஓ) I; மெய்தினார் (இ) V; (சுவடி, பதிப்புகளுள் எதன் பாடமும் பொருந்தவில்லை யாதலின், 'இ'- சுவடிப் பாடம் இப்போதைய பதிப்பில் திருத்தப்பெற்றது.) 2. வேதத் (ஓ) I. 3. நேதியும் (விசு) (தி) (வ) 4. பின்னிநின் (ஓ) IV.

கருத்து: சூக்கும நாதத்தையும் கடந்து விளங்குபவனும், வேதங்களுக்கு முதலும் ஆகிய சிவம், நிலம் முதலிய ஆன்ம தத்துவம் 24 - இலும் 'ஒன்றாய்' விளங்க, அதனால் மாந்தர் இம்மை இன்பங்களை எய்தினால், இது முரண் அன்றோ? எனின், அன்று சொரூப சிவம், உலகப் படைப்பைச் சங்கற்பித்த பிறகு, ஆன்ம தத்துவங்களுடன் இயைந்து நின்ற இச்செயல், நேதி என்ற தத்துவமும், நீதியும் ஒன்றுக்கு ஒன்று மாறுபடாதவாறு அமைந்தன என்க.

நேதி - இல்லை என மறுத்தல். இறைவன் "பூதங்களல்ல பொறியல்ல வேறு புவனல்ல உள்ள மதியின் பேதங்களல்ல இவையன்றி நின்ற பிறிதல்ல" என மறுத்தல். நீதி - மெலிந்தார்க்கு வலியார் உதவுதல் என்ற நீதி. அதன்படி, தன்னொப்பார் இல்லாத சிவம், ஆணவ மலப் பிணிப்பால் அறிவற்று, எவர் உதவியும் இன்றிக் கிடக்கும் உயிர்க்குப் பூதத்துவத்தால் உலகும் உடம்பும் அளித்து, அதனோடு ஒன்றாயும், வேறாயும், உடனாயும் இருந்து, அறிவூட்டி மலமகற்றிச் சிவானந்தமும் அளிக்கின்றான்.

'நான்' - அற்ற போது ...

2758. ஆனந்த மானந்த மென்ப ரறிவில
ரானந்த மாநட மாரு மறிகில
ரானந்த மாநட மாரு மறிந்தபின்
றானந்த மற்றிட மானந்த மாமே. (32)

கருத்து: சிவபெருமான் இயற்றும் ஆனந்தத் தாண்டவத்தை உண்மையில் அறியாதார், அறிந்தார் போல மீண்டும் மீண்டும், "ஆனந்தம் தருவது அது" என்பர். அத்தாண்டவத்தை யார் தாம் அறிவார்? ஒருவர் (தவத்தால்) அறியப் பெற்றால், தற்போதம் பெருகுதல் இன்றிக் கெட்ட விடத்து, இறைவனது ஆடலால் சிவானந்தம் விளையும்.

ஐந்தெழுத்து நடனம்

2759. திருந்துநற் 'சி' - என்று உதறிய கையும்
அருந்தவர், 'வா' - என்று அணை மலர்க் கையும்
பொருந்தில் அமைப்பில் 'ய' என்ற கையும்
திரு 'ந' தீ ஆகும்; திருநிலை 'ம' - வே.

திருந்துநற் சீயென் றுதறிய கையு
மருந்தவர் வாவென் [1]றணைமலர்க் கையும்
பொருந்தி [2]லமைப்பிலி யவ்வென்ற கையும்
[3]திருந்நத்தீ யாகுந் திருநிலை மவ்வே. (33)

வேறு பாடம்: 1. றணைத்தவியற்கையும் (ஒ) IV; மணிக்கையும் (தி) 2. லிமைப்பிலி (விசு) (தி) (வ) 3. திருந்தத்தீ (விசு) (தி) (வ) (த).

கருத்து: நல்ல உள்ளத்துடன், எதனையேனும் 'சி' - என்று கையை உதறுவது போல், சிவபெருமான் உடுக்கையை முழக்க உதறும் கை, திருவைந்தெழுத்தில் சிகாரத்தைக் குறிக்கும். அரிய முனிவரைச் சிவன், 'வா' - என அன்புடன் அழைக்கும் கை வகாரத்தைக் குறிக்கும். 'இரு' என அமைத்த கை யகாரத்தைக் குறிக்கும், தீ ஏந்திய இடக்கை நகரத்தைக் குறிக்கும். ஊன்றிய திருவடி மகாரத்தைக் குறிக்கும்.

மந்திரத் தெய்வம்

2760. மருவும் துடியுடன் மன்னிய வீச்சும்
மருவி அமைப்பும் அனலுடன் கையும்
கருவில் மிதித்த கருமப் பதமும்
உருவில் 'சிவாயநம' - என ஓதே.

மருவுந் துடியுடன் மன்னிய வீச்சும்
[1]மருவி யமைப்பு மனலுடன் கையுங்
கருவின் மிதித்த [2]கருமப் பதமு
முருவிற் சிவாய நமவென வோதே. (34)

வேறு பாடம்: 1. மருவிய வப்பு (விசு) (தி) (வ) மருவுமமைப்பு (த) 2. கமலப் (இ) III.

கருத்து: நடராசப் பெருமான் திருமேனியில், உடுக்கை ஒலிக்கும் கையும், வீசியாடும் கையும், அமைத்தல் தொழில் உடைய கையும், தீயேந்திய கையும், முயலகனின் உடலினை மிதித்த, மறைத்தல் தொழில் காட்டும் திருவடியும் முறையே, 'சிவாயநம' என்னும் மந்திர ஒலி குறிக்கும் தெய்வ உருவாகும்.

வீச்சு - தொழிலாகுபெயராகிக் கையைக் குறித்தது. அமைப்பு என்பதும் அதுவே. கரு முதலாகுபெயராகி உடம்பை - முயலகன் உடம்பைக் - குறித்தது.

ஐந்தொழிற் கூத்து

2761. அரன் துடி தோற்றம், அமைத்தல் திதியாம்
அரன் அங்கி தன்னில் அறையின் சங்காரம்,
அரன் உற்று அணைப்பில் அமரும் திரோதம்
அரன் அடி என்றும் அனுக்ரகம் என்னே.

அரன்றுடி தோற்ற மமைத்த றிதியா
மரனங்கி தன்னி லறையிற்சங் கார
மரனுற் றணைப்பி [1]லமருந் திரோத[2]
மரனடி யென்று [3]மனுக்ரக மென்னே. (35)

வேறு பாடம்: 1. லணையுந் (தி) 2. திரோதாயி (இ) II. 3. மனுக்கிரக (அனை. சுவ) இப்பாடங் கொள்ளின், இவ்வடி 13 எழுத்துப் பெறும். நிரை நடுவாய காய்ச்சீராகும். அஃது ஆசிரியர் கொண்ட கட்டளைக்கலிவிருத்த யாப்பிற்குப் பொருந்தாது. எனவே, வடசொல் ஒலி கிடந்தவாறே கொள்ளப் பட்டது.)

கருத்து: சிவபெருமான் முழக்கும் உடுக்கையில் படைப்பும், கையை அமைத்தலில் காத்தலும், ஏந்தும் தீயில் அழித்தலும், ஊன்றும் திருவடியில் மறைத்தலும், தூக்கிய திருவடியில் அருளலும் நிகழ்கின்றன.

அறையில் - கூறின். ஊற்று, செய்யுள் நோக்கிக் குறுக்கல் விகாரம் பெற்றது. அணைத்தல் - தப்ப விடாமை. திரோதம் - மறைத்தல்.

ஒன்று அவன் தானே

2762. தீத்திரட் சோதி திகழ் ஒளியுள் ஒளி
கூத்தனைக் கண்ட அக் கோமளக் கண்ணினள்
மூர்த்திகள் மூவர் முதல்வனிடைச் செல்லப்
பார்த்தன வேதங்கள் பாடின தாமே.

தீத்திரட் சோதி திகழொளி யுள்ளொளி
கூத்தனைக் [1]கண்டவக் கோமளக் கண்ணினள்
மூர்த்திகண் மூவர் முதல்வ னிடைச்செல்லப்
[2]பார்த்தன வேதங்கள் [3]பாடின தாமே. (36)

வேறு பாடம்: 1. கண்டவள் (இ) IV. 2. பார்த்தனன் (ஓ) II; பார்த்தனள் (விசு) (தி) (வ) (த) 3. பாடினள் தனே (விசு) (தி) (வ) (த) 4. தானே (இ ஓ ஓ) V.

கருத்து: சுற்றிலும் தீச்சுடர்கள் ஐம்பத்தொன்று அமைந்த திருவாசி ஓங்காரம் ஆகும். அது பரநாதம். அதன் ஒளி பரவிந்து. அவ்வொளிக்கு உள் ஒளியாக - மூலமாக - விளங்கும் சிவவொளியே கூத்தப் பெருமான் திருமேனி. பரவெளியில், பரசிவத் தோடு உடன் நின்று, சிவத்தின் உள்ளொளியைக் கண்ட பராசத்தி (பரவிந்து இவளே) பேரூழியில், பரநாதத்தில் ஒடுங்கினாள். பரநாதம் சிவசொரூபத்தில் ஒடுங்கிற்று. படைத்தல் முதலிய முத்தொழிற் கடவுளர் மூவரும், (ஏனை மயேச்சுரன், சதாசிவன் என்போரும்) சத்தி காணவே, சிவத்தில் (இச்சத்தி, சிவம் சுத்த மாயையில் உள்ளோர்) ஒடுங்கினர். இதனை வேதங்கள் உணர்ந்து பாடின.

வேதங்கள் குறிப்பால் கூறிய மந்திர மொழிகளை ஆய்ந்து, வேதாந்தம் இதனை உணர்த்திற்று என்க. ஆசிரியர், 'வேதத்தின் சிறப்பு' - இயலில், "ஒன்றாக வேதாந்தம் ஓதுமே" (பா எண். 88) என்றதும் இதனையே.

"கோமளக் கண்ணினள், மூர்த்திகள் மூவர்" என்பது தொகை பெறாத செவ்வெண். "கண்ட கோமளக் கண்ணினள்" எனச் சத்திக்கு அடைகொடுக்கவே, மூவரும் (ஐவரும்) கூத்தனைக் கண்டிலர் என்பது பெற்றாம். சத்தியின் கண்கள் கண்டன வாதலின் 'கோமளக் கண்' எனச் சிறப்பித்தார். பார்த்தன - முற்றெச்சம்; உணர்ந்து என்ற பொருளில் வந்தது.

சொல் அறியேன்

2763. நந்தியை, எந்தையை, ஞானத் தலைவனை,
மந்திரம் ஒன்றுள் மருவி, அது கடந்து
அந்தர வானத்து அப்புறத்து, அப் பர
சுந்தரக் கூத்தனை என் சொல்லுமாறே.

நந்தியை யெந்தையை ஞானத் தலைவனை
மந்திர [1]மொன்றுண் மருவி யதுகடந்
தந்தர வானத்தி னப்புறத் தப்பர[2]
சுந்தரக் கூத்தனை யென்சொல்லு மாறே. (37)

வேறு பாடம்: 1. மொன்று (இ ஓ) I. 2. தப்பாற் (இ) IV.

கருத்து: நந்தியாசிரியனாக எழுந்தருளியவனை, என்னை மகன்மை கொண்ட என் தந்தையை, ஞானமே வடிவான தலைவனை, திருவைந்தெழுத்து மந்திரமாக வடிவு கொண்டு, உண்மையில், அதனையும் கடந்து, அண்டவெளியையும் கடந்து விளங்கும் அந்தச் சொரூப சிவத்தை என்னவென்று கூறுவது?

அண்ட வெளி பூதவெளி. அகண்டாகார வெளி சிவம்.

தாயே கதி

2764. [1]சீகுரு நந்தி திருவம்ப லத்திலே
யாயுறு மேனியை யாரு மறிகிலர்
தீயுறு செம்மை வெளுப்பொடு மெய்த்தன்மை[2]
[3]யாயுறு [4]மேனி [5]யனைபுக லாமே. (38)

வேறு பாடம்: 1. சியகுரு (ஒ ஓ) II. 2. மத்தன்மை (விசு) (தி) (வ) (த) 3. யணைப்புக (ஓ) I. யாயுரு (இ ஓ) I. 4. வோதின் (இ) IV; 5. மனைபுக (இ) V; (யணைபுக: - மனைபுக: இவ்விரு பாடங்களும் "யனைபுக" என மீட்டுருவாக்கம் செய்யப்பட்டன.)

கருத்து: அகண்ட வெளி ஆகிய 'திருவம்பலத்தில்' திகழ்பவனும், ஸ்ரீ குரு நந்தியாக எழுந்தருளியவனுமாகிய சிவபெருமானின் சொரூபத்திருமேனியை, 'இன்ன தன்மையது' என அறிபவர் ஒருவரும் இல்லை. அவ்வாறாயின், அவனை அடையும் வழி யாது? தீயின் குணமாகிய செம்மை நிறமும், வெண்மை நிறமும் அதன் வடிவமாகவும் கொள்ளப்படுதல் போல, இறைவனின் குணமாகிய அருளே - அருட்சத்தியே - அவனது வடிவுமாகும். ஆதலின், அவ்வன்னையைச் சரண்புகுந்தால் சிவத்தை அடையலாம்.

ஸ்ரீகுரு தமிழாயிற்று; ஸ்ரீ காழி, சீகாழி ஆயினாற் போல. 'அன்னை' இடைக்குறைந்தது. மேனி - நிறப் பண்பு. மெய் - வடிவம். புகல் - கதி. "அருள் வடிவப் பொருளே" என்றார் வள்ளலாரும். (திருவருட்பா : 6 ஆம் திரு. அருள்விள - 1)

சிவனுக்கும் உயிர்க்கும் பாலம்

2765. தான்-ஆன சத்தியும் தற்பரையாய் நிற்கும்
தான்-ஆம் பரற்கும், உயிர்க்கும் தகும் இச்சை
ஞான-ஆதி பேதம் நடத்தும் நடித்து அருள்
ஆனால், அரன் அடி நேயத்தது ஆமே.

தானான சத்தியுந் தற்பரை யாய்நிற்குந்
தானாம் பரற்கு முயிர்க்குந் தகுமிச்சை
ஞானாதி பேத நடத்து நடித்தரு
ளானா லரனடி நேயத்த தாமே. (39)

வேறு பாடம்: 1. தருமிச்சை (த)

கருத்து: சத்தியும் தடத்த வடிவம் எதுவும் மேற்கொள்ளாமல், சொரூபத்திருமேனியுடன், பரவெளியில், யாவரையும், யாவற்றையும் கடந்து நிற்பவளே; பராசத்தியே. ஆதலின், அவளைச் சரண் புகுதல் எவ்வாறு? எனின், அவள் பரசிவனோடும் உயிர்களோடும் தொடர்புடையவள். சிற்சத்தியாக இருந்து, சிவனுக்கு உலகைப் படைத்தல் முதலிய ஐந்தொழில்களைப் புரியும் இச்சையை உண்டாக்குகின்றாள். அவனுடைய அறிவு, செயல்களாக வெளிப்படுகின்றாள். திரோதான சத்தியாக நடித்து உயிர்களுக்கு விருப்பம், அறிவு, செயல் இவற்றை இயக்குகின்றாள். உயிருக்குப் பக்குவம் வரும்பொழுது, திரோதான சத்தியாக இருந்தவள், அருட்சத்தியே என உயிர் உணரும். பின்பு, சொரூப சிவத்தை விட்டு நீங்காத, அவனது அருட் குணமே அவள் என, உயிர் உணரும். சத்தியைச் சரணடையும். அருள் வாழ்வு வாழும். இவ்வாறு அருட் சத்தி, உயிர்க்கும் சிவத்திற்கும் பாலமாக இருத்தலால், உயிர், தனக்கும் சிவனுக்கும் அன்னியத் தன்மை இல்லை என அறிந்து, அவனிடம் அன்பு கொள்ளும்.

"அன்னியம் இன்மையின், அரன் கழல் செலுமே" என்ற சிவஞான போதம் காண்க. (சூத். 8) அன்னியம் இல்லாமையை உணர்ந்த உணர்வே பேரன்பு உண்டாவதற்கு ஏதுவாகும்.

குறிப்பு: ஆய்வுக்குக் கிடைத்த சுவடிகளில் இப்பாடல் இல்லை. பதிப்பு களில் மட்டுமே உள்ளது.

160. ஆகாசப் பேறு

வானம் வசப்படும்

2766. உள்ளத்துள் 'ஓம்' என, ஈசன் ஒருவனை
உள்ளத்துளே அங்கி ஆய ஒருவனை
உள்ளத்துளே நீதி ஆய ஒருவனை
உள்ளத்துளே, உடல் ஆகாசம் ஆமே.

[1]உள்ளத்து [2]ளோமென வீச னொருவனை
யுள்ளத்து ளேயங்கி யாய வொருவனை
யுள்ளத்து ளேநீதி யாய வொருவனை
யுள்ளத்து [3]ளேயுட லாகாச மாமே. (1)

வேறு பாடம்: 1. உள்ளது (சைவ) 2. ளோமென்ற (ஆ) II; ளோமெனும் (த) 3. ளேயுற (த).

கருத்து: உயிரில் 'ஒன்றாய்' நின்று, அதன் உணர்வாக உள்ள சிவத்தை, 'வேறாய்' நின்று, உயிருக்கு அறம் உணர்த்துபவனை, எல்லாவற்றையும் உடையவனாகிய ஈசனை - உயிருணர்வினால் 'ஓம்' எனத் தியானித்து, பிராசாத யோக சாதனை செய்தால், பரமாகாயம் ஆகிய அகண்டகாரவெளி, உடலின் உச்சிக்கு மேல் 12 அங்குல எல்லையில், உயிருணர்வினால் எட்டிப் பிடிக்கும் வண்ணம் வந்து அமையும். அதுவே சிதாகாயம். இந்த எல்லைவரை உயிரின் சூக்குமவுடல் உள்ளமையால், உடலே ஆகாயம் ஆகிறது என்பது கருத்து.

பரமாகாயம் உயிருணர்வினால் உணரப்படும் அளவு, சிகாகாயம் ஆயிற்று. இது நாம் காணும் பூத ஆகாய மன்று, உணரும் ஆகாயம். "சிற்பர வியோமம் ஆகும் திருச்சிற்றம்பலம்" எனச் சேக்கிழார் கூறுவது இது. (பெ. பு. 351). இறுதியடியில், "உள்ளத்துளே உணர" என ஒரு சொல் வருவிக்க.

"ஓம் என, உடல் ஆகாசமாம்" என வினை முடிவு செய்க.

குறிப்பு: ஓ - சுவடியில் மட்டுமே இவ்வியல், இப்பெயருடன், இவ்விடத்தில் உள்ளது. ஆ, இ, ஒ, ஐ - சுவடிகளில், இதன் பின் 7 இயல்களை அடுத்து உள்ளது. சென்ற இயலில் கூறப்பட்ட 'திருவம்பலமே' ஆகாசம். அதைப் பெறுவது பற்றியது ஆதலின், இவ்வியல் இங்கு இருத்தலே பொருத்தம். பதிப்புகளில் இவ்விடத்திலேயே உள்ளது.

அருளே தாயகம்

2767. பெருநில மாயண்ட மாயண்டத் தப்பாற்
குருநில மாய்நின்ற கொள்கைய னீசன்
பெருநில மாய்நின்று தாங்கிய தாளோ
னருநிலை யாய்நின்ற [1]வாதிப் பிரானே. (2)

வேறு பாடம்: 1. தாதிப் (ஆ) I.

கருத்து: யாவராலும் அறிதற்கு இயலாத நிலையினை உடைய சொரூப சிவம், (உயிர்களிடம் வைத்த கருணையால்), உலகத்தோடு 'ஒன்றாயும்', பற்பல உலகங்களைக் கொண்ட அண்ட வெளியுடன் 'ஒன்றாயும்' நிற்கிறான். அவ்வாறு நிற்பது அவனது ஒளி அல்லது

அருட்சத்தியே. சத்தி இவ்வாறு கலந்து நிற்றல் மட்டுமன்றி, அவற்றின் 'வேறாயும்' நின்று இயக்குகின்றாள். சத்தியே, அண்டங்களை மட்டுமன்றி, உயிர்களையும் தாங்கி, இயக்கிக், காத்தும் நிற்கிறாள். அவ் வருட் சத்தியே சிவத்தின் திருவடி ஆகும்.

சத்தி பிறவற்றுடன் கலந்து நிற்கும்பொழுது, பற்பல நிலைகளில், பற்பல திருப்பெயர் பெறுவாள்.

பேரைக் கெடுத்தான்

2768. அண்ட ஒளியும் அகண்ட ஒளியுடன்
பிண்ட ஒளியாய்ப் பிதற்றும் பெருமையை
உண்டு, அவ் ஒளிக்கு உள்ளொளிக்குள் ஒளித்தது
கொண்ட குறியைக் குலைத்தது தானே.

அண்ட வொளியு மகண்ட வொளியுடன்
பிண்ட [1]வொளியாய்ப் பிதற்றும் பெருமையை
[2]யுண்ட [3]வொளிக்கு [4]ளொளிக்கு ளொளித்தது
கொண்ட குறியைக் குலைத்தது தானே. (3)

வேறு பாடம்: 1. வெளியாற் (ஆ) I; வொளியாற் (ஒ இ) I. 2. யண்ட (ஆ) I; 3. வெளிக்கு (ஆ) I. 4. ளொளியாயடுத்துக் (ஆ இ) II.

கருத்து: அண்டத்தில் உள்ள ஒளி ஆகிய சூரியன், சந்திரன், அக்கினி மட்டுமன்றி, அகண்டாகார ஒளியாகிய 'சொரூப சிவத்தின்' விளக்கமும் உடம்பின் எல்லையிலேயே - சூக்கும வுடம்பிலேயே - வந்து கிடைத்து, உயிர், தன் உணர்வால் (ஒளியால்) அதனை உணருமாறு சிவம் அருள் செய்தான். அந்நிலையிலேயே, அதைப் பெருமையாக நினைக்காதவாறு, உயிரின் சீவபோதத்தை நீக்கினான். அதை விழுங்கினான். அதாவது, உயிரின் ஒளியை, அதன் உள்ளொளி ஆகிய அருள் வியாபகத்தில் ஒடுக்கினான். 'சீவ போதம்' என்ற பெயரை நீக்கினான். (சிவ போதம் ஆக்கினான்.)

பிண்ட ஒளி - உடலில் வாழும் யோகி, சாதனையால் பெறும் உயிருணர்வாகிய ஒளி. இந்நூலில் அறிவு, உணர்வு என்பன 'ஒளி' என்று வழங்கப்படும். உயிர் தன் பெருமையாக நினைத்தல் தவறு என்பார், "பிதற்றும் பெருமையை" என்றார். ஒளித்தது - மறையச் செய்தது. 'சிவபோதம் ஆக்கினான்' என்பது குறிப்பெச்சத்தாற் பெற்ற பொருள்.

கைக்குள் வருவது கருணையால்

2769. பயன் உறு கன்னியர் போகத்தின் உள்ளே
பயன் உறும் ஆதி பரஞ்சுடர்ச் சோதி
அயனொடு மால் அறியா வகை நின்றிட்டு,
உயர்நெறியாய், அயல் ஒன்றது ஆமே.

பயனுறு [1]கன்னியர் போகத்தி னுள்ளே
பயனுறு [2]மாதி பரஞ்சுடர்ச் சோதி
யயனொடு மாலறி யாவகை நின்றிட்
டுயர்நெறி [3]யாயய லொன்றது வாமே. (4)

வேறு பாடம்: 1. கண்ணியர் (ஓ ஓ ஆ இ) I. 2. மாரி (ஓ) I; மாதிப் (சங்) 3. யாயலே யொன்றது (ஓ) V யாயொளி யொன்றது (ஆ இ) II யாய்வெளியொன்றது (ஓ) II (4 ஆம் அடி 2 ஆம் சீரின் பாடம் மீட்டுருவாக்கம் செய்யப்பட்டது.)

கருத்து: உயிருணர்வினுள் 'பரமாகாய அனுபவத்தைப் பெறுதல்' ஆகிய மிகப் பெரிய, அரிய இன்பப் பயனை அளிக்கும், மேலான சுடரும் சோதியுமாக உள்ள சிவம், பிரமனும் திருமாலும் தேடியும் காணாதது; யாவரது அறிவுக்கும் எட்டாத ஒன்றாய், யாவர்க்கும் "வேறாய்" உள்ளது. (நம்முள்ளே இன்பம் தரும் பொருள், நமக்கு வேறாயது எவ்வாறு? எனின்) மகளிர் நம்முடன் ஒன்றி நின்று நமக்கு இன்பம் தரினும், அவர் 'வேறு' ஆவது போல என்க.

உயர் நெறி - உயரமான இடம். எட்டாதது என்னும் பொருள் உடையது. அது - பகுதிப் பொருள் விகுதி. வேறான பொருளாகிய சொரூபசிவம், நம் அனுபவத்தினுள் வருவது, அவன் கருணையால்.

திருவடிப் பெருவாழ்வு

2770. அறிவுக்கு அறிவாம் அகண்ட வெளியும்
பிறியா வலத்தினின் பேரொளி மூன்றும்
அறியாது அடங்கிடில், அத்தன் அடிக்குள்
பிறியாது இருக்கின் பெருங்காலம் போமே.

அறிவுக் கறிவா மகண்ட வெளியும்[1]
பிறியா வலத்தினிற் பேரொளி மூன்று
மறியா [2]தடங்கிடி லத்த னடிக்குட்
பிறியா திருக்கிற் பெருங்காலம் போமே[3]. (5)

வேறு பாடம்: 1. வொளியும் (விசு) (தி) (வ) (த) 2. தடங்கிடு (ஆ ஒ) I. 3. மாமே (மேற்கண்ட பதி.) (சங்).

கருத்து: உயிரின் அறிவுக்கு "வேறாய்" நின்று, அதற்கு அறிவிப்ப தாகிய (சொரூபசிவம் ஆகிய) அகண்டாகார வெளியும், (அதை யுணர்ந்து) சாதனை செய்யும் யோகி, அவ் வகண்ட அறிவை உணரப்பெற்று, அது தன் உயிருணர்வோடு "உடனாக" இருக்கப் பெறும் பொழுது, அவ் யோகியின் உணர்வாக இணைந்து நிற்கும் சூரிய, சந்திர, அக்கினி ஒளியும், தொடர்ந்த சாதனையால், பின்னர் 'சிவ ஒளி வேறு, தனது உணர்வு வேறு' என வேறுபாடு இன்றி (காணாமல்), 'ஒன்றாய்' உணர்ந்தால், சிவபெருமான் திருவடியில், காலத்தை வென்று, பெருவாழ்வு பெறலாம்.

அகண்ட வொளி என்னாது, வெளி என்றது ஏன் எனின், அவ்வெளி வேறு, ஒளி வேறு அல்ல ஆதலின் என்க. "அகண்ட ஒளியும் மூன்று ஒளியும் பிரியாது அடங்கிடில், அதுவே திருவடிக்கீழ்ப் பெரு வாழ்வு." பிரியா - ஈரிடத்திலும் எதுகை நோக்கித் திரிந்தது. "பிறியாதிருக்கின்" என்ற வினையெச்சத்தைப் "பிறியாதிருக்க" என்ற வினையெச்சமாக மாற்றுக. பெருங்காலம் - நீண்ட காலம். போம் - போகும்; கழியும்.

எளிமையிலும் எளிமை

2771. ஆகாச வண்ணன், அமரர் குலக்கொழுந்து
ஏகாச மாசுணம் இட்டு, அங்கு இருந்தவன்
ஆகாச வண்ணம் அமர்ந்து நின்ற அப்புறம்
ஆகாசமாய், அங்கி வண்ணனும் ஆமே.

ஆகாச வண்ண னமரர் குலக்கொழுந்
தேகாச மாசுண மிட்டங் கிருந்தவ
னாகாச வண்ண மமர்ந்துநின் றப்புற
மாகாச மாயங்கி வண்ணனு மாமே. (6)

கருத்து: ஐந்து பிரிவுகளாக உள்ள சுத்தமாயா தத்துவங்களில் சிவ பேதங்களாக நிற்பவன். அவ்வகையில் தேவர்கட்கு எல்லாம் தலைவன். சிவனாகத் திருக்கோலம் கொண்ட போதே, சுத்த மாயையினை ஐந்தலைப் பாம்பு ஆக்கி, அதையே மேலாடையாக அணிந்தவன். இவ்வாறு அவன் தடத்தத் திருமேனிகளை மேற்கொண்டாலும், அதே சமயம், அகண்ட வெளியாகிய சொரூபத் திருமேனியிலும் உள்ளான். இவ்விரண்டும் அன்பர்க்கு அரியனவாதலின், அவர் பொருட்டு, ஆகாயம் முதலிய ஐம்

பூதங்களாய் நிற்கின்றான். அக்கினி முதலிய சுடர்களாய் நிற்கின்றான். (யோகிக்கு ஐம்பூதமும் முச்சுடரும் உடம்பிலும் செயற்படும்.)

சிவத்தின் சொரூபம் அரியது என்றாலும் அவன், அன்பர் பொருட்டு, அவர் கால்வைத்து நடக்கும் நிலமாய், கை வைத்துப் பருகும் நீராய், மூச்சாய், தீயாய், வானமாய், அவரைச் சுற்றிலும் இருப்பதன்றி, அவர் உடம்பிலும் உறைவது, அவனது "தாயினும் சாலப் பரிந்த" தயவன்றோ? அதற்கு என்ன கைம்மாறு செய்வோம்?

வான் ஆனேன்

2772. உயிர்க்கின்றவாறும், உலகமும் ஒக்க
உயிர்க்குண்டடத்து உள்ளொளி சேர்கின்றபோது
குயில்கொண்ட பேதை குலாவி, உலாவி,
வெயில்கொண்டு, என் உள்ளம் வெளி-அது ஆமே.

உயிர்க்கின்ற வாறு முலகமு மொக்க
[1]வுயிர்க்குண்டத் துள்ளொளி சேர்கின்ற போது
குயிற்கொண்ட பேதை குலாவி யுலாவி
வெயிற்கொண்டெ [2]னுள்ளம் வெளியது வாமே. (7)

வேறு பாடம்: 1. உயிர்க்கின்ற (விசு) (தி) (வ) (த) 2. னுள்ள (ஓ) I.

கருத்து: ஆன்மா உடம்பில் சீவனாக வாழ்வதற்குரிய கருவிகளாகிய, உலகத்தை உள்ளிட்ட 24 ஆன்ம தத்துவங்களும் எனது (யோகியின்) புருவமத்தியில், ஆக்ஞை என்னும் ஆதாரத்தில் தோன்றும் உயிருணர்வுக் குண்டத்தில் (ஓமகுண்டம்) சுத்த தத்துவங்களாக மலர்ந்து விளங்கும் (காண்க: நவகுண்டம் - இயல், பா. எண்: 1024) மூலாதாரத்திலிருந்து சுழுமுனை வழியே, அங்கு வந்து, அருளொளியாக வளரும் சிவாக்கினி (உயிருணர்வுடன் இணைந்த மூலக்கனல்) சகஸ்ராரத்தில் மனோன்மணியாக வீற்றிருக்கும் அருட்சத்தியைச் சென்றடைந்தது. (காண்க. நவகுண்டம் பா. எண்: 1022) அப்போது விந்து ஆகிய பேரொளியும், நாதம் ஆகிய நுண்ணிய ஒலியும் எழுந்தன. அருட்சத்தியின் கருணை தொடர்ந்தது. எனது உணர்வு பரமாகாயத்தில் விளங்கும் சொரூப சிவத்தை உணர்ந்தது. அதன் விளைவாக, என் உயிருணர்வே - ஆன்மாவே - ஆகாயம் ஆயிற்று.

உயிர்க்கின்றவாறு - சீவனாதல். உலகம் - ஐம்பூதங்கள். உயிர்க் குண்டம் - உயிருணர்வு விழிப்புநிலையில் உள்ள இடமாகிய

புருவமத்தியில் தோன்றும் ஓம குண்டம். உள்ளொளி - மூலக்கனல். குயில் - நாதத்தை உணர்த்தும் படிமம். "மயில் குயிலாச்சுதடி" - வள்ளலார். குலாவுதல் - பேசுதல். உலாவுதல் - பரவுதல். பேசுதல், நாதம். பரவுதல், விந்து (ஒளி). ஆன்மபோதமாகிய இருளை ஓட்டுதலின், அருட்சத்தியின் கருணையை "வெயில்" என்றார். உவம ஆகுபெயர். வெளி - பரமாகாயம்.

மின்னல் - சோதி - வெளி

**2773. நணுகில் அகல் வியன்நாதன், உலகத்து
அணுகில் அகன்ற பெரும்பதி நந்தி
நணுகிய மின்ஒளி, சோதி, வெளியைப்
பணியின் அமுதம் பருகலும் ஆமே.**

நணுகி [1]லகல்விய னாத னுலகத்
தணுகி லகன்ற பெரும்பதி நந்தி
நணுகிய மின்னொளி சோதி வெளியைப்
பணியி னமுதம் பருகலு மாமே. (8)

வேறு பாடம்: 1. லகல்கில (விசு) (தி) (வ) (த).

கருத்து: தன்னை அணுகி நின்று உணர்பவர்க்கு, வியாபகம் உடையவனாகக் 'காட்சி தரும்' தலைவன். ஆனால், உலகியலை எண்ணுபவர்க்கு, அவர் உள்ளத்தைவிட்டு நீங்கி நிற்பவன். யோகிக்குப் புருவ மத்தியில் மின்னொளியாகவும், சகஸ்ராரத்தில் சோதியாகவும், துவாதசாந்தத்தில் சிதாகாயமாகவும் விளங்குபவன். அவனை வணங்கினால் சிவானந்த அமுதைப் பருகலாம்.

ஆகாயம் பல!

**2774. புறத்துள் ஆகாசம் புவனம், உலகம்,
அகத்துள் ஆகாசம் எம் ஆதி அறிவு,
சிவத்துள் ஆகாசம் செழுஞ்சுடர், சோதி,
சகத்துள் ஆகாசம் தான் ஆம் சமாதியே.**

புறத்துளா காசம் புவன முலக
மகத்துளா காசமெம் மாதி யறிவு[1]
சிவத்துளா காசஞ் [2]செழுஞ்சுடர் சோதி
சகத்துளா காசந் [3]தானாஞ் சமாதியே[4]. (9)

வேறு பாடம். 1. யறியுஞ் (ஆ) II. 2. செழுஞ்சுடர்ச் (ஆ இ) I. 3. தானுஞ் (ஓ) I; தானஞ் (ஓ) I. 4. சமாதே (துடி).

கருத்து: வெளியே உள்ள ஆகாயம், புவனம், உலகம் ஆகியவற்றைத் தழுவிய பூதாகாயம். அக ஆகாயம் (மன ஆகாயம்) ஞானாசிரியனால் ஊட்டப்பெற்று, வளரும் சிவஞானம். சிவம் ஆகாய வடிவமாகியிருத்தல் உண்டு. அது சிவம் (சுத்த மாயையிலிருந்து) தடத்த வடிவம் மேற்கொண்டு தெய்வ உருவங்களில் ஒளி வீசி விளங்கும் நிலையையும், (அதைக் கடந்து, பரவெளியில்) பரசிவ சோதியாக (விந்து நாதமாக, அம்மையப்பனாக) விளங்கும் நிலையையும் தன்னுள் தழுவிய சொரூப சிவம் ஆகிய அகண்டவெளி (பரமாகாயம்). அகண்டவெளியை உடம்புள்ள போதே பெறலாம். அதற்குச் சாதனம் 'சிவத்தோடு ஒன்றி நிற்றல்' ஆகிய சமாதி கூடுதலே.

ஆதியறிவு - பதிஞானம்.

161. ஞானோதயம்

இன்பம் இரண்டு

2775. மன சந்தியில் கண்ட மன் நனவு ஆகும்
கனவு உற ஆனந்தம் காண்டல்; அதனை
வினவுற ஆனந்தம் மீதொழிவு என்ப;
இனம் உற்ற ஆனந்தி ஆனந்தம் இரண்டே.

மனசந்தி யிற்கண்ட மன்னன வாகுங்
கனவுற வானந்தங் காண்ட லதனை
வினவுற வானந்த மீதொழி வென்ப
வினமுற்றா னந்தியா னந்த மிரண்டே. (1)

கருத்து: சிவஞானம் ஆனந்தம் என்பார், ஆனந்தத்தை விளக்குகின்றார். புறப்பொருளை மனம், பொறிகள் முதலிய கருவிகளின் தொகுதிப்பட்ட துணைக் கொண்டு உயிர் அறிவது நனவு. கனவில், புறப்பொருளையே, பொறிகளின் துணை இன்றி, மனம் உணர்தல் இன்பம் தரும். இதனை எண்ணிப் பார்த்தால், இன்பம் என்பது 'கருவி கடந்த நிலை' என்பது தெளிவு. இவ்வகையில் உயிர் நுகரும் இன்பம், பொருளின்பம், அருளின்பம் என இரண்டாகும்.

உயிர் இன்ப, துன்பம் உறுதலை 'அழுந்தி அறிதல்' அல்லது 'தன் வேதனைக் காட்சி' என்பர்.

காணாதே ஆட்பட்டேன்

2776. கரி அட்ட கையன், கபாலம் கை ஏந்தி,
எரியும் இளம்பிறை சூடும் எம்மானை
அரியன், பெரியன் என்று ஆட்பட்டது அல்லால்,
கரியன் கொல்? சேயன் கொல்? காண்கின்றிலேனே.

கரியட்ட கையன் கபாலங்கை யேந்தி
யெரியு மிளம்பிறை சூடுமெம் மானை
யரியன் பெரியனென் றாட்பட்ட தல்லாற்
கரியன்கொல் சேயன்கொல் காண்கின்றி லேனே. (2)

கருத்து: கயாசுரன் என்ற யானை யுருவ அசுரனைக் கொன்றோன்; பிரமன் செருக்கொழிக்க அவன் தலையை நகத்தால் கிள்ளி, அதையே பிச்சைக் கலமாக ஏந்தியவன்; பிறையை அணிந்தவன் - எனப் பெரியோர் சிவபெருமானது அருமை பெருமைகளைக் கூறக் கேட்டு, அவனுக்கு நான் ஆட்பட்டேனே அன்றி, அவன் திருவுருவைக் கண்டதில்லை.

புறப்பொருளாக நின்ற சிவனைக் கண்டு, மனத்தால் உணர்ந்து ஆனந்தம் கொண்டேன் என்றார்.

அடிமைப்பட்டால் ஞானம் அருள்வான்

2777. மிக்கார் அமுது உண்ண, நஞ்சுண்ட மேலவன்
தக்கார் உரைத்த தவநெறியே சென்று
புக்கால், அருளும் பொன் உரை ஞானத்தை
நக்கு ஆர்கழல் வழி நாடுமின் நீரே.

மிக்கா ரமுதுண்ண நஞ்சுண்ட மேலவன்
றக்கா ருரைத்த தவநெறி யேசென்று
புக்கா லருளும் பொன்னுரை ஞானத்தை
நக்கார் கழல்வழி நாடுமின் னீரே. (3)

கருத்து: மாந்தரினும் சிறந்தவராகிய தேவர்கள், பாற்கடல் அமுதத்தை உண்ண, தான் நஞ்சை உண்ட அருட்பெரியோன்.

அருளாளர் வகுத்த வழிபாட்டு முறையைக் கைக்கொண்டு வாழ்ந்தால், ஞானாசிரியனின் பொன் போன்ற உரையாகச் சிவஞானத்தை நல்குவான். ஒளிவீசி, ஒலியெழுப்பும் வேதக்கழல் அணிந்த அவனது திருவடியை அடையும் அத்தவநெறியை நாடுக.

அருளினால் ஞானம்

2778. விளக்கைப் பிளந்து விளக்கினை யேற்றி
விளக்கினுக் குள்ளே விளக்கினைத் தூண்டி
விளக்கில் விளக்கை விளக்கவல் லார்க்கு
விளக்குடை யான்கழன் மேவலு மாமே. (4)

கருத்து: பொறி, மனம் முதலிய கருவிகளால் அறிவதே தொழிலாக உடைய ஆன்மாவை, அந்நிலை மாற்றி, தன்உணர்வைப் (உயிருணர்வைப்) பெறச் செய்து, பிறகு, அவ்வுணர்வுக்கு உணர்வு தரும் அருளை எய்தி, அதை வளர்த்து, அவ் அருள்கொண்டு சிவத்தை உணர முற்படுவார்க்கு, அருளைச் சத்தியாக உடைய சிவத்தினை அடைதல் கூடும்.

உயிரொளி, அருளொளி, சிவவொளி என்பன ஞானம். மாயையினைக் 'கைவிளக்கு' என்பர். அது சிறு விளக்கு. அருளே பெரு விளக்கு. அதைப் பெற மாயையினைக் கடந்து செல்ல வேண்டுமாதலின், "விளக்கினைப் பிளந்து" என்றார்.

தன்னை அறிதல் முதற்படி

2779. தத்துவ மெங்குண்டு தத்துவ னங்குண்டு
தத்துவ மெங்கில்லை தத்துவ னங்கில்லை
தத்துவ ஞானத்திற் றன்னை யறிந்தபின்
றத்துவ னங்கே தலைப்படுந் தானே. (5)

கருத்து: மெய்ப்பொருள் உணர்வு யாருக்கு வாய்க்கின்றதோ, அவர் உள்ளத்தில் 'சிவ சொரூபம்' விளங்கும். (சிவ சொரூபத்தைப் புரிந்து கொள்வார்.) ஒருவர்க்கு மெய்ப்பொருளுணர்வே தோன்றவில்லை யெனின், அவர் சிவனைப் பற்றி அறிய இயலாது. மெய்யுணர்வின் முதற்படி, ஒருவர் தன் ஆன்மாவை அறிதல் என்பது கருவி, கரணங்களைச் சார வேண்டாத சுதந்திர நிலையை அடைந்து, உயிருணர்வால் சிந்தித்தலாகும்.

சிவானந்த அமுது

2780. விசும்பு ஒன்று தாங்கிய மெய்ஞ்ஞானத்துள்ளே
அசும்பினின்று ஊறியது, ஆரமுதாகும்
பசும்பொன் திகழும் படர்சடை மீதே
குசும்ப மலர்க்கந்தம் கூடி நின்றானே.

[1]விசும்பொன்று தாங்கிய மெய்ஞ்ஞானத் துள்ளே
யசும்பினின் றூறிய தாரமு தாகும்
பசும்பொன் றிகழும் படர்சடை மீதே
குசும்ப மலர்க்கந்தங் கூடிநின் றானே. (6)

வேறு பாடம்: 1. விசும்பொன்றத் (த) 2. றூறுமாரமு (து)

கருத்து: சொரூப சிவம் என்பது அகண்டாகார வெளி; ஞானமே அதன் வடிவு. அச்சிவ ஞானத்தை அடைந்தோர், அதன் காரண மாகப் பேரின்பம் எய்துவர். சிவம் தடத்தத் திருமேனி மேற் கொள்ளும்பொழுது, பொன் போல் திகழும் புரிசடையில், குசும்பமலர் மாலை அணிந்து, அதன் நறுமணம் எங்கும் கமழ வீற்றிருப்பான்.

கலப்பின் வியப்பு

2781. முத்தும் வயிரமும் முந்நீர்ப் பவளத்தின்
கொத்தும் பசும்பொன்னின் தூவொளி மாணிக்கம்
ஒத்து, உயர் அண்டத்துள் அமர் சோதியை
எத்தன்மை வேறு என்று கூறு செய்வீரே?

முத்தும் [1]வயிரமு முந்நீர்ப் பவளத்தின்
[2]கொத்தும் பசும்பொன்னின் றூவொளி மாணிக்க
[3]மொத்துய ரண்டத் துள்ளமர் சோதியை
யெத்தன்மை வேறென்று [4]கூறுசெய் வீரே. (7)

வேறு பாடம்: 1. முத்தின் (ஓ) III. 2. வயிரத்தின் (ஓ) III. 3. கொத்தின் (ஓ) III. தொத்தும் (த) 4. கூறிடு (ஈ) III.

கருத்து: முத்து, வயிரம், பவளம், பொன், மாணிக்கம் - இவற்றின் ஒளியை இவற்றினின்று பிரிக்க வியலாது. அதுபோல், அண்ட

மெங்கும், அனைத்துப் பொருளிலும் கலந்துள்ள சிவ சோதியை (அறிவை, இயக்கத்தை) அவற்றினின்று பிரித்து வேறாகக் காண இயலாது. இது கலப்பு நிலையின் வியப்பு.

என் அறிவு - என் உயிர் சிவம்

2782. நான் என்றும், தான் என்றும் நாடினேன், நாடலும்
நான் என்று, தான் என்று இரண்டு இல்லை என்பது
நான் என்ற ஞான முதல்வனே நல்கினான்,
நான் என்று நானும் நினைப்பு ஒழிந்தேனே.

நானென்றுந் தானென்று நாடினே னாடலு
நானென்று தானென் றிரண்டில்லை யென்பது
நானென்ற ஞான முதல்வனே நல்கினான்
நானென்று நானும் 'நினைப்பொழிந் தேனே. (8)

வேறு பாடம்: 1. பிறப் பொழிந் (ஓ) IV.

கருத்து: ஞானாசிரியன் உரை கேட்டு, என்னை - என் உயிரை - தத்துவங்களின் வேறாக உணர்ந்து, நான் அடிமை, சிவன் ஆண்டான் என, இருவரையும் வேறாக எண்ணிக்கொண்டு, யோக சாதனையின் வழியில், அகமுக ஆய்வில் ஈடுபட்டேன். அப்பொழுது, நான் வேறு சிவம் வேறு அல்ல' என்பதை, நான் அனுபவ வாயிலாக உணரும்படி, முன்பு என்னை எனக்கு உணர்த்திய சிவனே உணர்த்தினான். அவ்வனுபவத்தின் உறைப்பால், 'நான்' என்று உணரும் தற்போதத்தை நீக்கினேன்.

சும்மா இரு

2783. ஞானத்தின் நன்னெறி நாதாந்த நன்னெறி
ஞானத்தின் நன்னெறி 'நான்' என்ற அறிவு ஓர்தல்
ஞானத்தின் நல்யோகம் நன்னிலையே நிற்றல்
ஞானத்தின் நல் மோனம் நாதாந்த வேதமே.

ஞானத்தி னன்னெறி நாதாந்த நன்னெறி
ஞானத்தி னன்னெறி 'நானென் றறிவோர்தன்
ஞானத்தி னல்யோக நன்னிலை யேநிற்றன்
ஞானத்தி னன்மோன நாதாந்த வேதமே. (9)

வேறு பாடம்: 1. நானறி வென்ரோர்தல் (த)

கருத்து: நல்ல ஞான நெறியாவது, நாதம் (சுத்தமாயையில் உள்ள நாதம்) கடந்த பரவெளியில் அனுபவம் பெற்று, அதனால் எய்தும் ஞானமாகும் (அதை மேலும் விளக்கினால்) 'நான்' என்ற தனியறிவை (தத்துவம் சாராத அறிவு), ஆழமாகச் சிந்தித்தலால் எய்துவது ஞானம். அந்த ஞானத்தோடு பொருந்தி நிற்பது என்பது திருவருளில் நிற்றல். அத்திருவருள் கூட்டுவிக்கும் ஞானம், நாதம் கடந்து விளங்கும் பரசிவத்தின் தன்மையை, அனுபவத்தை உணர்த்தும். அதை உணர்பவன் தற்போதம் இழப்பான். ஆதலின் மௌன நிலை அடைவான்.

வேதம் - அறியப்படுவது. அறிபவன், அறியப்படுவது, அறிவு என்ற மூன்றும் ஒன்றாவதால் அதன் விளைவு மௌனம்.

உயிர் அவன்

2784. உய்யவல்லார்கட்கு உயிர் சிவஞானமே;
உய்ய வல்லார்கட்கு உயிர் சிவதெய்வமே
உய்ய வல்லார்கட்கு ஒடுக்கம் பிரணவம்
உய்ய வல்லார் அறிவு உள்ளறிவு ஆமே.

உய்யவல் லார்கட் குயிர்சிவ ஞானமே
யுய்யவல் லார்கட் குயிர்சிவ தெய்வமே
யுய்யவல் லார்கட் கொடுக்கம் பிரணவ
முய்யவல் லாரறி வுள்ளறி வாமே. (10)

கருத்து: பிறவிப் பிணி நீக்க வல்லமை வேண்டுமெனின், சிவஞானம் வேண்டும். ஏனெனில், சிவஞானமே உயிராற்றலாக நின்று அப்பிணியறுக்கும் தவத்தைச் செய்விக்கும். அத்தவத்தைச் செய்வோர், தம் உயிரினும், சிவத்தையே பெரிதாக மதிப்பர். காதலிப்பர். அவர்கள் அத்தவத்தில் தம்மை மறந்து இருப்பது பிரணவ மந்திரத்தின் துணையால்தான். அத்தவப் பயனாக, அவர்கள் அடையும் ஞானம், அறிவுக்கு அறிவாக விளங்கும் சிவமும் தானும் ஒன்று என உணர்ந்து, சிவம் போலே அனைத்தையும் ஒருங்கே அறிந்து நிற்றலாகும். இது சர்வஞ்ஞத்துவம் எனப்படும்.

முத்தி நிலையில் ஆன்மா சிவத்தின் எண் குணங்களை அடைதல் உண்டு. ஆனால் அஃது ஓர் உணர்வே. மணிவாசகர், "எல்லையிலாதன எண்குணமானவை எய்திடுமாகாதே" (திருவா. திருப்படையாட்சி) எனக் கூறுவதை நோக்குக.

இருமையிலும் துணை

2785. காண வல்லார்க்கு அவன் கண்ணின் மணி ஒக்கும்
காண வல்லார்க்குக் கடலின் அமுது ஒக்கும்
பேண வல்லார்க்குப் பிழைப்பிலன், பேர்நந்தி
ஆண வல்லார்க்கே அவன் துணையாமே.

காணவல் லார்க்கவன் கண்ணின் மணியொக்குங்
காணவல் லார்க்குக் கடலி னமுதொக்கும்
பேணவல் லார்க்குப் பிழைப்பிலன் பேர்நந்தி
யாணவல் லார்க்கே யவன்றுணை யாமே. (11)

கருத்து: காண்பவர்க்கு அவர் கண்ணில் உள்ள பாவை உதவுவது போல், தன் அடியவர் உலகைக் காண (புரிந்து கொள்ள) சிவன், தன் அருளால் உதவுவான். உலகைக் காண்பதைவிட்டு, அவனையே அருளால் 'காண்பவர்க்கு', அவன் அமுதம்போல் இனிமை பயப்பான். ஒருமுறை, இருமுறை காண்பதோடு அமையாது, "மலர்ப் பாதமவை காண்பான், இருந்து நல்ல மலர் புனைந்தும், நாத்தழும்பேற வாழ்த்தியும், திருக்கோயில் தூயும் மெழுகியும் கூத்தாடியும்" வழிபடுவார்க்கு, நெஞ்சினின்றும் மறைந்து நில்லான். நந்தி என்ற திருப்பெயருடையான். தன்பால் மிக்க அன்பு செலுத்து வார்க்கு, இம்மை வாழ்வுக்கும், அம்மையில் வீட்டுக்கும் துணையாவான். துணை, இன்புறுத்தும் துணை.

ஜீவ நாதம்

2786. 'ஓம்'- எனும் ஓர் எழுத்துள் நின்ற ஓசை போல்
மேல் நின்ற தேவர் விரும்பும் விழுப்பொருள்
சேய் நின்ற செஞ்சுடர்; எம்பெருமான்; அடி
யாய் நின்ற தேவர் அகம்படியாமே.

ஓமெனு மோரெழுத் துண்ணின்ற வோசைபோன்
மேனின்ற தேவர் விரும்பும் விழுப்பொருள்
சேய்நின்ற செஞ்சுட ரெம்பெரு மானடி
யாய்நின்ற தேவ ரகம்படி யாமே. (12)

கருத்து: பிரணவத்தில் இறுதிக் கலையாக உள்ள நாதம் தோன்றும் இடம் பிரணவமேயன்றி, முடியும் இடம் என ஒன்றில்லை. அந்த

நாதம், மிகத் தொலைவில், அப்பாலுக்கு அப்பால், பரநிலைக்குச் சென்ற உயர் அடியார்களும் இன்னும் அடையாமல், அடைய வேண்டும் என்று விரும்பும் மாண்புடைய பொருளாக நிற்பது. ஆனால், எம்பெருமானின் திருவருளோடு ஒன்றி, திருவருளேயாகி நிற்கும் மிகச் சிறந்த அடியாரின் உயிருணர்வில் (உயிர் வீணையிலே) கேட்கும் அந்த நாதம்.

அகம்படி - அகத்திலே படிவது. அடையடுத்த தொழிலாகு பெயர். படி - முதனிலைத் தொழிற்பெயர். "ஓசைபோல் சேய்நின்ற" என உவமை காண்க. "தொடையின் நீங்கி, எல்லையிற் சென்றும் தீரா இசையென" என்பது, கவிதையிற் பட்ட சொல் குறித்து எழுந்தது எனின் (கம்ப. யுத்த. கும்ப. 22) பிரணவநாதம் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?

அத்துணைத்தொலைவிலிருந்தாலும் அன்புடைய அடியாரின் உயிரில் ஒலிக்கும் என்றார்.

162. சத்திய - ஞான - ஆனந்தம்

சிவசொரூபம்

2787. எப்பாழும், பாழும் யாவுமாய், அன்று ஆகி,
முப்பாழும், கீழ் உள முப்பாழும் முன்னியே
இப்பரம், இன்னவாறு என்பது இலா இன்பத்
தற்பர-ஞான-ஆனந்தம் தான் அது வாகுமே.

எப்பாழும் பாழும் யாவுமா யன்றாகி
முப்பாழுங் கீழுள முப்பாழு முன்னியே
[1]யிப்பர மின்னவா றென்ப திலாவின்பத்
தற்பரஞா [2]னானந்தந் தானது வாகுமே. (1)

வேறு பாடம்: 1. யிப்பாழு (சைவ) (விசு) (தி) (த) (வ). 2. ஞானாந்த மோனாந்தமாகுமே (ஆ) IV.

கருத்து: முப்பத்தாறு தத்துவங்களிலும் அவற்றின் மூலமான பிரகிருதி மாயை, அசுத்தமாயை, சுத்தமாயை என்பனவற்றிலும் 'ஒன்றாய்க்' கலந்து நிற்பது. அதே சமயம் அவையன்று என 'வேறாகி' நிற்பது - இவை சிவத்தின் உண்மைத்தன்மை (சத்து அல்லது சத்தியம்). சுத்தமாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயைகளிலிருந்து தத்துவங்களும் அத்தத்துவங்களிலிருந்து

உலகமும் தோன்றுக' எனச் சங்கற்பிப்பது, ஐந்தொழில்களையும் சங்கற்பத்தாலேயே நிகழ்த்துவது - இது சிவத்தின் அறிவுத் தன்மை (சித்து அல்லது ஞானம்). மேலான இன்பம் எனக் கூறுவதன்றி, இன்னபடியான இன்பம் எனக் கூற இயலாத இன்ப வடிவுடைமை - இது சிவத்தின் ஆனந்த இயல்பு. ஆகவே, அது பரம்பொருள்; பரஞானம்; பரானந்தம். 'தத்' - என்னும் சொல்லால் வேதம் குறிக்கும் பொருள்.

நிரனிறையணி. மேல் உள்ள மூன்று அடிக்கும் நிரல் நிறையாக பரம், ஞானம், ஆனந்தம் என்பவற்றைக் கூட்டுக. பாழ் (முதலடி) - மூன்று மாயைகள். முப்பாழ் (2 - ஆம் அடி) சுத்தமாயையின் மூன்றுபிரிவுகள் (இவற்றில் சுத்த தத்துவம் ஐந்தும் அடங்கும்). கீழ் உள்ள முப்பாழ் - அசுத்தமாயை, வித்தியா தத்துவம் 7, ஆன்ம தத்துவம் 24. முன்னி - நினைத்து, சங்கற்பித்து. இப்பரம் - இதற்குப்பரம். இகரச் சுட்டால் குறிக்கப்படுவது உலக இன்பம். உலக இன்பத்துக்கு மேலானது, பர இன்பம்.

குறிப்பு: இதனை அடுத்துச் சுவடிகளிலும் பதிப்புகளிலும் உள்ள 'தொம்பதம்'' என்னும் பாடல், "முத்துரியம்'' இயலில் வந்தது. (பாடல் எண் : 2445.) அங்கு, அஃது இடைச்செருகல் என இனங்காட்டப் பட்டது. ஆகவே இங்கு விடப்படுகின்றது.

மலரும் பல குணமும்

2788. மன்னு சத்தாதி மணியொளி மாசோபை
அன்னதோடு ஒப்பா மிடல் ஒன்று ஆம் மாறு அது
முன்னிய உற்பலம் ஒண், சீர், நிறம், மணம்,
பன்னிய சோபை பகர்மாறும் ஆனதே.

[1]மன்னுசத் தாதி மணியொளி மாசோபை
யன்னதோ [2]டொப்பா மிடலொன்றா மாறது
[3]முன்னிய வுற்பல மொண்சீர் நிறமணம்
பன்னிய சோபை [4]பகர்மாறு மானதே. (2)

வேறு பாடம்: 1. மன்னுஞ்சத் தியாதி (ஓ ஓ) I; சத்தியாகு (ஆ) IV. 2. டொப்ப (ஆ ஓ) IV. 3. ஒன்னிற (ஓ) I; வின்னிய (விசு) (தி) (வ) வின் னியல் (த) 4. பகராறு (சைவ).

கருத்து: அருட்சத்தியும், ஆதிசத்தி, இச்சாசத்தி, கிரியா சத்தி, ஞானசத்தி என்பவையும் செயலால் வேறுவேறான சத்திகள்.

பொருளால் அவை ஒன்றே. எதைப்போல? மணியின் ஒளி அதனுடனே உள்ளது. அதன் சோபை பிற பொருள்களிற் படிந்து, அவற்றை விளக்குகிறது. அதைப்போல என்க. மற்றும், நீலோற்பல மலரின் ஒளி, சிறப்பு, நிறம், என்பவை அதனுடன் பிரிவின்றி இருந்தாலும், மணம் எங்கும் சென்று பரவும். சோபை நெடுந் தூரத்திற்குத் தெரியும். அதுபோல என்க.

மாறு - தன்மை.

சிவத்தின் வடிவம் சத்தி

2789. சத்தி சிவன் பரஞானமும் சாற்றுங்கால்
உய்த்த அனந்தம், சிவம் உயர் ஆனந்தம்
வைத்த சொரூபத்த; சத்தி வருகுரு
உய்த்த உடல் இவை உற்பலம் போலுமே.

சத்தி சிவன்பர ஞானமுஞ் சாற்றுங்கா
லுய்த்த வனந்தஞ் சிவமுய ரானந்தம்
வைத்த சொரூபத்த சத்தி வருகுரு
வுய்த்த வுடலிவை யுற்பலம் போலுமே[1]. (3)

வேறு பாடம்: 1. போதுமே (ஓ) I.

கருத்து: சத்தி, சிவன் - இவரை இயல்பு கூறுமிடத்து, சிவன் பரம்பொருள்; சத்தி அதுபற்றிய ஞானம். சிவன் முடிவில்லாத (பரிணாமமில்லாத) பொருள். அன்பர் சிவத்தைத் தம் அனுபவத்தில் கண்டு துய்க்கும் பேரானந்தம் (பரானந்தம்) சத்தி ஆகும். மண்மீது குருவாக எழுந்தருளிச் சிவஞானம் உணர்த்தும் ஞானாசிரியனும் சத்தியின் வடிவே. பரஞானம் முதலிய இவ்வடிவங்களை மேற்பாடலிற் கூறிய குவளை மலரின் தன்மைகளோடு ஒப்பிடலாம். குவளை போன்றது சிவம், அதன் தன்மைகள் போன்றது சத்தி. எவ்வாறு மலரின் தன்மைகள் அதினின்று வேறுபட்டவை யல்லவோ, அவ்வாறு சத்தி சிவத்தினின்று வேறுபட்டவள் அல்லள். சிவம் சுட்டியுரைக்கப்படாதது. எவ்வெவற்றால் அதனைப் புரிந்துகொள்கிறோமோ, அவை எல்லாம் சத்தி எனப்படும்.

“அருள் என்பது கடவுளின் இயற்கை விளக்கம்” என்றார் வள்ளலார். (திருவருட்பா: உரைநடைப் பகுதி: சீவகாருணிய விளக்கம்)

முத்தியில் விளங்கும் அருள்

2790. உரு உற்பலம் நிறம், ஒண், மணம், சோபை,
தர, நிற்ப போல், உயிர் தற்பரம் தன்னில்
மருவ, சிவம் என்ற மாமுப்பதத்தின்
சொருபத்தன் சத்தி ஆதி தோன்ற, நின்றானே.

உருவுற் பலநிற மொண்மணஞ் சோபை
தரநிற்ப போலுயிர் தற்பரந் தன்னின்[1]
மருவச் சிவமென்ற மாமுப் பதத்தின்
சொருபத்தன் [2]சத்தியாதி தோன்றநின் றானே. (4)

வேறு பாடம்: 1. தன்னை (ஓ) III. 2. சத்தியா (தி)

கருத்து: அழகிய குவளை மலர் நிறம், பொலிவு, மணம், ஒளி முதலியன விளங்க நிற்பதைப் போல், அதாவது இத்தன்மைகள் அம்மலரில் அடங்கி, மலரேயாய், நிற்பது போல், 'உயிர் சிவத்தில் அடங்கிச் சிவம் ஆகும்' என்ற பொருள் தரும் மகாவாக்கியத்தின் பொருளாக உள்ள சிவன், தன்னிடம் அருட்சத்தி முதலிய சத்திகள் தோன்றுமாறு நிற்கின்றான். அருட்சத்தியால் தான் உயிர் சிவத்தில் கலக்கின்றது.

மனமணி

2791. நினையும் அளவில் நெகிழ, வணங்கிப்
புனையில், அவனைப் பொதியலும் ஆகும்
எனையும் எம் கோன் நந்தி தன் அருள் கூட்டி
நினையும் அளவில் நினைப்பித்தனனே.

நினையு மளவி னெகிழ வணங்கிப்
புனையி லவனைப் [1]பொதியலு மாகு
மெனையுமெங் கோனந்தி தன்னருள் கூட்டி
நினையு மளவின் [2]னினைப்பித் தனனே. (5)

வேறு பாடம்: 1. போகலு (ஆ) II. 2. னிலைப்பித் (விசு)

கருத்து: சிவபெருமானை நினைத்த உடனே, மனம் நெக்குவிட, அவனை வணங்கி, அவன் புகழ்கூறி ஏத்தினால், அவனை உள்ளப் பேழையில் பொதிந்து வைத்தலும் கைகூடும். என் தலைவன் நந்தி,

தனது அருளை வழங்கி என்னையும் அவ்வாறு நினைக்கச் செய்தான்.

உடலில் பரவிய இன்பம்

2792. பாலொடு தேனும், பழத்துள் இரதமும்,
வாலிய பேரமுது ஆகும் மதுரமும்
போலும் துரியம் பொடிபட உள் புகச்,
சீலம் மயிர்க்கால் தொறும் தேக்கிடுமே.

பாலொடு தேனும் பழத்து ளிரதமும்
வாலிய பேரமு தாகு மதுரமும்
போலுந் துரியம் பொடிபட வுள்புகச்[1]
சீல மயிர்க்கா றொறுந்தேக் கிடுமே. (6)

வேறு பாடம்: 1. வுள்புக்க (ஒ) I.

கருத்து: துரியநிலையைக் கடந்து, மேல்வெளியின் உள்ளே உயிருணர்வு சூழ்ந்தவுடன், பாலோடு கலந்த தேன், பழச்சாறு, அமுதம், போன்ற இனிமை மயிர்க்கால் தோறும் நிறைந்தது.

பொடிபட - சிறிது என்னுமாறு. சீலம் - தன்மை, இங்கு இனிமை.

தொடர்ந்த சோதிக் காட்சி

2793. அமரத் துவங்கடந் தண்டங் கடந்து
தமரத்து நின்ற தனிமைய னீசன்
பவளத்து முத்தும் [1]பனிமொழி மாதர்
[2]துவளற்ற சோதி தொடர்ந்துநின் றானே. (7)

வேறு பாடம்: 1. பணிமொழி (ஒ) III. 2. துவரற்ற (ஆ) II.

கருத்து: சிவபெருமான் பிறவான்; இறவான். ஆதலின், அவன் தேவ பிறப்பையும் கடந்துள்ளோன். ஆயினும், அடியார்க்கு எளியான் பவளத்தில் முத்துப் பதித்தாற் போன்ற பல்வரிசையும், குறைந்த மொழிகளும் உடைய அருட்சத்தி உடனிருக்க, அவன் வாட்டமற்ற சோதிவடிவத்தோடு, நான் பார்க்கும் இடமெல்லாம் காட்சி தருகின்றான்.

மெய்ப்பொருட் கடல்

2794. மத்திமம் ஆறாறும் மாற்றி மலம் நீக்கி,
சுத்தம் - அது ஆகும் துரியத்துரிசு அற்று,
பெத்தம் அற, சிவமாகிப், பிறழ்வுற்றுச்
சத்தியஞான - அந்தம் சார்ந்தனன் ஞானியே.

மத்திம மாறாறு மாற்றி மலநீக்கிச்
சுத்தம [1]தாகுந் துரியத் துரிசற்றுப்[2]
பெத்தம றச்சிவ [3]மாகிப் பிறழ்வுற்றுச்
[4]சத்திய ஞானாந்தஞ் சார்ந்தனன் ஞானியே. (8)

வேறு பாடம்: 1. தாக்குந் (ஓ) I. 2. துரியத்து (ஆ) III. 3. மாக்கிப் (ஆ ஓ) I. 4. சத்திய ஞானானந்தஞ் (ஆ ஓ) II.

கருத்து: மத்தியாலவத்தை அனுபவங்களின் மூலம், 36 தத்துவத் தொடர்பை நீக்கி, மாயா மலத்தினை ஒதுக்கி, சுத்தாவத்தை, பராவத்தை, சிவாவத்தை ஆகியவற்றில், துரியாவவத்தையை அடைந்து, அவற்றில் உள்ள குற்றங்களை நீக்கிச், சிவதுரியாதீத உணர்வு நிலையை அடைந்து, சிவத்தை ஒன்றிக்கலந்து அதன் பயனாகக் கட்டு நீங்க, "சிவமேயாகி", தன் கரணம் எல்லாம் சிவ கரணங்களாக மாறிநிற்க, ஞானி மெய்ப்பொருளை உணர்வான்.

ஞானாந்தம்: ஞானமுடிவு என ஒன்றில்லை. எனவே, ஞானத்தின் பயன் என்க. அளந்துகாண இயலாத அளவும், முடிவற்ற ஞானமும், முடிவற்ற ஆனந்தமுமே இறைவனின் நிலைகள்.

புலப்பாடு

2795. சிவமா யவமான மும்மலந் தீரப்[1]
பவமான முப்பாழைப் பற்றறப் பற்றத்
தவமான சத்திய ஞானானந் தத்தே
துவமார் துரியஞ் சொரூபம தாமே. (9)

வேறு பாடம்: 1. தீர்ந்து (த)

கருத்து: பயனற்றவையான மும்மலமும் நீங்க, ஆன்மா பிறப்புக்குக் காரணமான மாயப்பாழ், போதப்பாழ், உபசாந்தப் பாழ் ஆகியவற்றின் பற்று நீங்கத் திருவருளைப் பற்ற, அதன் தவத்தின்

பயனாக, சத்திய ஞான ஆனந்த நிலையாகிய சிவசொரூபம் ஆன்மாவின் உணர்விற்குப் புலப்படும். இந்நிலை வந்தமைவது சுத்தாவத்தை, பராவத்தை என்னும் இரண்டு அவத்தை வரிசைகளையும் கடந்து, சிவாவத்தை வரிசையை அடைந்து, அதில் துரியாதீத நிலையை அடையும் போதாகும்.

"துவமார் சிவமாய்த் துரியம் சொரூபம தாமே" எனக் கொண்டு - கூட்டுக. இவ்வாறன்றிச் "சிவமாய்" என்பதற்குச் "சிவமாகி" எனப் பொருள் கொள்ளின், "சொரூபமதாமே" என்பது வேண்டா கூறலாய் முடியும். ஈண்டுச் சிவசொரூபத்தை உணர்தலைக் கூறினாரேயன்றிச் "சிவமாதலைக்" கூறவில்லை.

துவம் - இருமை.

163. சொரூப வுதயம்

உருவம் ஒருகோடி; சொரூபம் ஒன்று

2796. பரம குரவன் பரம் எங்கும் ஆகித்
திரம் உற எங்கணும் சேர்ந்து, ஒழிவு அற்று,
நிரவு சொருபத்துள் நீடும் சொருபம்
அரிய துரியத்து அணைந்து நின்றானே.

பரம குரவன் பரமெங்கு மாகித்
திரமுற வெங்கணுஞ் சேர்ந்தொழி வற்று
நிரவு [1]சொருபத்து ணீடுஞ் சொருப
மரிய துரியத் தணைந்துநின் றானே. (1)

வேறு பாடம்: 1. சொருபத்த (ஆ) I.

கருத்து: எனது பரமாசாரியன் நந்தியம் பெருமானின் அருளே எங்கும் நிறைந்துளது. எவ்வாறு? ஒவ்வொரு பொருளோடும், அது அது வாய், அத்துவித சம்பந்தம் கொண்டு, பொருள் அழிந்தாலும் தான் அழியாமல் நிற்கின்றது. இவ்வாறு திருவருள் கலந்துநிற்கும் பொருள்களின் சொரூபம் பல. அந்தப் பலவற்றுள் நிற்கும் சிவசொரூபம் ஒன்றே. அது மாறாதது. அழியாதது. அச்சொரூபத்தை நான் 'கண்டேன்', அரிதாய் வாய்ப்பதான சிவதுரியாதீதத்தில் கண்டேன்.

பரம் - அருள். திரம் - ஸ்திரம் - உறுதிப்பாடு. நிரவுதல் - அது அதுவாதல். "நிரவு சொருபத்துள் நீடும் சொரூபம்" - வேற்றுமையில் ஒற்றுமை. "தோற்றம் பல, உண்மை ஒன்று" என்னும் தொடரை நினைக.

குறிப்பு: சுவடிகளிலும் பதிப்புகளிலும் இப்பாடலை யடுத்து உள்ள "குலைக்கின்ற நீரின்" என்ற பாடல் "சிவலிங்கம்" - என்னும் இயலில் சிறிது வேறுபாட்டுடன் வந்தது. (பா. எண். 1756)

இருளாய், ஒளியாய்...

2797. அங்கு நின்றான் அயன், மால்முதல் தேவர்கள்
எங்கு நின்றாரும் இறைவன் என்று ஏத்துவர்
தங்கி நின்றான் தனி நாயகன் எம் இறை,
பொங்கிநின்றான் புவனாபதிதானே.

அங்குநின் றானயன் மான்முதற் றேவர்க
ளெங்குநின் றாரு [1]மிறைவனென் றேத்துவர்[2]
தங்கிநின் றான்றனி நாயக னெம்மிறை
பொங்கிநின் றான்புவ னாபதி தானே[3]. (2)

வேறு பாடம்: 1. மிறைவநின் (ஓ) I. 2. றேற்பவர் (ஓ) I. 3. நாதனே (ஓ) II.

கருத்து: எம் கடவுளாகிய சிவபெருமான் மக்களும் பிறரும் வழிபடு மிடந்தோறும் எழுந்தருளியுள்ளான். பிரமனும், திருமாலும் மற்றும் உள்ள தேவரும், எங்கெங்கு உள்ளோரும் அவனையே தம் கடவுள் என ஏத்தி வழிபடுவர். இவ்வாறு உயிர்களுக்கு (தடத்த நிலையில்) நின்று அருள் புரியினும், அவன் 'வேறாக' - எவ்வுருவமும் எக்குணமும் இல்லாதவனாக - தான் உள்ள இடத்தில், தனக்கு இணையாக ஒன்றும் இல்லாமையினால், ஒப்பற்ற தலைவனாக இருக்கின்றான். முன்பு கூறியவாறு, புவனங்களின் தனிப் பெருந் தலைவனாக, அருள் வடிவு தாங்கி - அருளால் வடிவு தாங்கி - 'வெளிப்பட்டும்' நிற்கின்றான்.

இறைவன் 'புலப்பாடின்மையும்' 'வெளிப்பாடுண்மையும்' உளன் என்றார். மணிவாசகர் திருவண்டப்பகுதியில் இவ்விரண்டையும் பாடுதலை ஈண்டு நோக்குக. அவனுக்கு வடிவம் இல்லையேனும், அவன் நின்றது உறுதியாதலின், "தங்கிநின்றான்" என்றார். பொங்கி -

'தடத்தம் கொண்டு வெளிப்பட்டு' எனவும், 'அருள் பொங்க' எனவும் பொருள்படும்.

யார் காண்பர்?

2798. சமையச் சுவடுந் தனையறி யாமற்
கமையற்ற காமாதி காரண மெட்டுந்
திமிரச் செயலுந் [1]தெளிவுற நிற்போ[2]
ரமரர்க் கதிபதி யாகிநிற் போரே[3]. (3)

வேறு பாடம்: 1. தெளிவுட (ஆ இ ஒ) III. 2. நின்றோ (இ) III. 3. பாரே (விசு) (தி) (வ) (த).

கருத்து: சொரூபத்தை யார் எய்துவர் என்று கூறுகின்றார். சமயநெறி வாழ்வால் நெஞ்சில் படிந்த உணர்வு; ஆசை முதலிய எட்டாவனவும், பிறவிக்குக் காரணமாவனவுமாகிய தீய குணங்கள்; இவற்றின் வயப்பட்டுப் பரபரப்பு அடைந்து, ஆன்மாவாகிய தன்னை அறியாமல் இருந்த நிலை; தன்னைக் காட்டாமல், உயிரின் அறிவை மறைக்கும் இருளாகிய ஆணவமலத்தின் கொடுமை - இவற்றைச் சிந்தித்துக் தெளிவு பெற்று, அதில் உறைத்து நிற்பவரே சொரூபத்தைக் 'கண்டு', அதுவே யாவர்.

சமையம் - சமயம்; இடைப்போலி. கமை - அமைதி. ஆசை முதலிய எட்டு: ஆசை, கோபம், உலோபம், மோகம், செருக்கு, பகை. இடும்பை, பொறாமை. திமிரம் - இருள். இங்கு உவமை யாகுபெயராக ஆணவமலத்தைக் குறித்தது. அமரர்க்கு அதிபதி - மகாதேவன்; சிவன்.

ஒன்றி நின்றாலும் வேறுதான்

2799. மூவகைத் தெய்வத்து ஒருவன் முதல் உரு
வாய், அது வேறு ஆம்: அதுபோல் அணுப்பரன்,
சேய சிவம் - முத்துரியத்துச் சீர்பெற
ஏயும் நெறி என்று இறைநூல் இயம்புமே.

மூவகைத் தெய்வத் தொருவன் முதலுரு
வாயது [1]வேறா மதுபோ லணுப்பரன்
சேய சிவமுத் துரியத்துச் சீர்பெற
வேயு நெறியென் றிறைநூ லியம்புமே. (4)

வேறு பாடம்: 1. போலா (ஓ) II.

கருத்து: முத்தொழில் செய்யும் தெய்வங்கள் மூவருள், உருத்திரன் சிவமுதல்வனது தடத்த வடிவம் போன்ற வடிவமுடையவனாயினும், முதல்வன் அல்லன். அதுபோல், பரவெளி அனுபவம் எய்திய உயிர், மூன்றாம் துரியம் ஆகிய சிவதுரியத்தில், சொரூப சிவத்தோடு ஒன்றிச் சொரூபமே ஆயினும். சிவமாகாது என்று சைவநூல்கள் கூறும்.

மூன்று துரியங்கள் - சுத்த துரியம், பரதுரியம், சிவ துரியம். (இது முற்போந்த இயலால் அறிந்தோம்.)

"ஏயும் நெறி அதுபோ(ன்றது)" என முடிக்க. அது வேறாம் - அதினின்றும் வேறாம் என ஐந்தன் உருபு விரிக்க. அணு - அணுபட்சத்தைச் சேர்ந்து, பின்பு பரன் ஆகிய உயிர். பரன் - பர வெளி அனுபவம் அடைந்த உயிர். சேய - தொலைவில் உள்ள.

குரு தேவை

2800. [1]உருவின்றி யேநின் றுருவம் புணர்க்குங்
[2]கருவின்றி யேநின்று தான்கரு வாகு
[3]மருவின்றி யேநின்ற மாயப் பிரானைக்
[4]குருவின்றி யாவர்க்குங் கூடவொண் ணாதே. (5)

வேறு பாடம்: 1 - 4 உருவன்றி, கருவன்றி, மருவன்றி, குருவன்றி (ஓ ஓ) I.

கருத்து: முதல்வன், தான் உடம்பு இல்லாமல் நின்றே, பல சீவர்களைப் படைக்கின்றான். தன்னைத் தோற்றுவித்தவர் இல்லாமலே, தான் அனைவரையும் தோற்றுவிக்கும் நிமித்த காரணன் அவன். அனைத்துப் பொருளோடும் ஒன்றாய்க் கூடிநின்றாலும், அவற்றால் - அவற்றின் இன்ப துன்பங்களால் பாதிக்கப்படாதவன். இத்தகைய மாயம் வல்லவனைக் குருவின் துணை இன்றிச் 'சொரூபம்' கண்டு ஒன்றி நிற்க, யார்க்கும் இயலாது.

உணர்வின் பயன்

2801. உருவம் நினைப்பவர்க்கு உள் உறு சோதி
உருவம் நினைப்பவர் ஊழியும் காண்பர்
உருவம் நினைப்பவர் உம்பரும் ஆவர்
உருவம் நினைப்பார் உலகத்துள் யாரே?

உருவ நினைப்பவர்க் குள்ளுறு சோதி
யுருவ நினைப்பவ ரூழியுங் காண்ப
ருருவ நினைப்பவ ரும்பரு மாவ
ருருவ நினைப்பா ருலகத்துள் யாரே. (6)

கருத்து: சிவத்தின் சொரூபத்தை நினைப்பவர்க்கு, அறிவினுள் பெருவிளக்கம் தோன்றும். அவர் இறவாநிலை எய்துவர். தேவர்களாயும் வாழ்வர். ஆனால் அத்தகையோர் உலகத்தில் அரியராகவே உள்ளனர்.

கருணை வெள்ளத்து அழுத்தி . . .

2802. பரஞ்சோதி யாகும் பதியினைப் பற்றாப்[1]
பரஞ்சோதி யென்னுட் படிந்ததற் பின்னைப்
பரஞ்சோதி யுண்ணான் படியப் படியப்
பரஞ்சோதி தன்னைப் [2]பறையக்கண் டேனே. (7)

வேறு பாடம்: 1. பற்றப் (த) 2. பரையோடு (ஓ) II.

கருத்து: தடத்த சிவமாயும் தோன்றவல்ல, சொரூப சிவமுதல்வனை நான் விடாதே பற்றிச் சாதனை செய்ய, தடத்த சிவத்தின் உருவம் என் உணர்வில் பதிந்தது. பிறகு, அதில் நான் தோயத் தோய, சிவம் தனது சொரூபத்தைக் காட்டிற்று; நான் கண்டேன்.

பறைதல் - சொல்லுதல். ஈண்டு உணர்த்துதல்.

காட்டுதற்கு ஏது அவன் கருணை. காணுதற்கு ஏது தற்போத இழப்பு. இவை இரண்டும் நுனித்துணருமாறு "பறையக் கண்டேனே" என்றார். பறையக் கேட்டேன் என்னாது, கண்டேன் என்றார், பறைதலும் காட்டலும் ஒன்றேயாதலின்.

"ஆனாலும் இதன் பெருமை எவர்க்கு ஆர் சொல்வார், அதுவானால் அது ஆவர், அதுவே சொல்லும்" என்றார் தாயுமானவரும். (தாயு. பா. ஆகார புவனம், 22).

எப்போதும் காலைநேரமே

2803. சொரூபம், உருவம், குணம் தொல் விழுங்கி
அரியன உற்பலம் ஆமாறு போல,
மருவிய சத்தி ஆதி நான்கும் மதித்துச்
சொரூபக் குரவன் சுகோதயத்தானே.

சொரூப முருவங் [1]குணந்தொல் விழுங்கி
யரியன வுற்பல மாமாறு போல
மருவிய சத்தியாதி நான்கு மதித்துச்[2]
சொரூபக் குரவன் சுகோதயத் தானே[3]. **(8)**

வேறு பாடம்: 1. குணந்தொல்லை (ஓ) II. 2. மதித்த (சைவ) 3. தாமே (ஈ) I.

கருத்து: குவளை மலர் தனது சாதியியல்பு, வடிவம், நிறம், மணம் என்ற நான்கையும் உட்கொண்டே மலர்தல் போல, அருள், சத்தியம், ஞானம், ஆனந்தம், என்ற நான்கும் அமைந்த சொரூப மாகிய சிவம், (ஆன்மா தன்னுடன் கலந்து, தானேயாகி நிற்க அதற்குப்) பேரறிவு வழங்கும் குருவாய், 'உடனாய்' நிற்பான்.

சுகோதயம் - சுக உதயம் - பேரானந்தம் தரும் பேரறிவு எல்லையற்று விரிதல் இது. உதய காலத்தில், சூரியனின் கதிர்கள் முதற்கண் சிறிதே தோன்றிப் பின் உலகின் பரப்பெங்கும் விரிதல் போன்றது. அறிவில் புதுமை தோன்றுந்தோறும் அது சுகோதயமே ஆகும். இறைவன் என்றும் மாறாச் சுகோதயம்.

தொன்மை, மைவிருதி கெட்டது. தொகுத்தல் விகாரம். உருவக்குருவாக வந்ததே போலச் சொரூபக் குருவாகவும் நின்று ஞானமளிப்பான் என்றார்.

பிரணவத்தின் உள்ளொளி

2804. உரை அற்ற ஆனந்த ஒண் சொருபத்தன்
கரை அற்ற சத்தி ஆதி காணில், அகாரம்
மருவுற்று, உகார மகாரமது ஆக
உரை அற்ற தாரத்தில் உள்ளொளியாமே.

உரையற்ற வானந்த [1]வொண்சொரு பத்தன்
கரையற்ற சத்தியாதி காணி லகார
மருவுற் றுகார மகாரம தாக[2]
வுரையற்ற தாரத்தி னுள்ளொளி யாமே. (9)

வேறு பாடம்: 1. மோனசொரு (ஓ) III. 2. தாகி (த)

கருத்து: சொரூபம் என்பது எல்லையிலாச் சத்தி, எல்லையிலாச் சத்தியம், எல்லையில்லா ஞானம், எல்லையில்லா ஆனந்தம் ஆகும். மௌனமாக இருந்து உணரப்படும் பிரணவத்தின் உள்ளொளி அது.

தாரம் - பிரணவம். பிரணவம் தடத்தம். அதன் உள்ளொளி சொரூபம்.

குறிப்பு: இதனை அடுத்துச் சுவடிகளிலும் பதிப்புகளிலும் உள்ள "தலைநின்ற" என்ற பாடல் முன்பு "வாய்மை" - இயலில் வந்தது. எனவே இங்கு விடப்படுகிறது.

பிரான் அறிவு

2805. ஆமாறு அறிந்தேன் அகத்தின் அரும்பொருள்
போம் ஆறு அறிந்தேன், புகும் ஆறும் ஈது என்றே,
ஏமாப்பதில்லை, இனி ஓர் இடர் இல்லை
நாம் ஆம் முதல்வனும் நான் எனலாமே.

ஆமா றறிந்தே னகத்தி னரும்பொருள்
போமா றறிந்தேன் புகுமாறு மீதென்றே
யேமாப்ப தில்லை யினியோ ரிடரில்லை[1]
நாமா முதல்வனு [2]நானென லாமே. (10)

வேறு பாடம்: 1. ரிடமில்லை (தி) (வ) (த) 2. நாமென (த)

கருத்து: சொரூப சிவத்தை உணரும் நெறி அருள்வழியில் நடத்தலே என்று, அங்ஙனம் நடத்தற் பயிற்சியால் நன்கு அறிந்தேன். பின்பு அருளின் உள்ளே, அதன் உயிராக உள்ள - அதனை உடைய - 'பொருள் ஒன்று உளது, என உணர்ந்து, அச்சொரூபத்தை அடைதற்கு, அருளையும் விடுத்து, உணர்வை அருளுக்குள்ளே, ஆழத்தில் செலுத்த வேண்டும் என்பதை அறிந்து கொண்டேன். அங்ஙனமே உணர்வைச் செலுத்திச் சொரூபத்தை உணர்ந்து கொண்டேன். அருள் அவனிடம் கலந்து 'ஒன்றாகியதை' உணர்ந்து கொண்டேன். இனி எனக்குப் பாதுகாவலாக அருளைப் பற்ற வேண்டா. சிவத்தையே பற்றிக் கொள்ளலாம். இனிச் சாதனைத்

துன்பம் இல்லை. ஏனெனில் 'சாத்தியன்' ஆனேன். தனது கருணையால், அனைத்து உயிரிலும் 'அவையே' ஆகி, அத்துவிதமாய் நின்ற சிவத்தோடு, இன்று நான் அத்துவிதம் ஆகிக் கலந்தேன்.

அகத்தின் - அருளின் உள்ளே, அதன் உயிராக. அரும்பொருள் - அருளை உடைய பொருள்; சிவம். அருள் குணம், சிவம் குணத்தை உடைய பொருள் (குணி). போம் ஆறு - நடந்து செல்லும் (வாழும்) வழி. அருட்சத்தி சிவத்தைக் காட்டுகிறாள் என்பதை ஆசிரியர் முன்பு "நாடொறும் நம்பனை நோக்கி நவிலுகின்றாளே" எனக் கூறினார். அருட்சத்தியை விடுத்தால், சிவத்தைக் காட்டுவது யார்? எனின் ஞானமே வடிவாக உள்ள சொரூப சிவத்துடன் கலந்து நிற்கும் போது, சிவமே தன்னை உணர்த்தும் என்க. இதனை, ஆசிரியர் முன்பு, "நுண்ணறிவாகும் நுழைபுலன் மாந்தர்க்குப் பின்னறிவாகும் பிரானறிவால் தடஞ்சென்னெறியாகும் சிவகதி" என்றார் (ஆதார வாதேயம் இயல் பா. 1215)

ஏமாப்பது, ஏமம் ஆர்ப்பது என்பதன் மரூஉ. யோக சாதனையில் இடர் பலவாதலின், அவற்றைச் சந்தித்த ஆசிரியர், "இனி ஓர் இடரில்லை" என்றார். "நாம் ஆம் முதல்வனும் நான்"என்பதை "அவனே தானே ஆகிய அந்நெறி ஏகனாகி" என்ற மெய்கண்டார் மொழி (சிவ. போ. தத் 10) யுடன் ஒத்துணர்க.

கொண்டு கூட்டு: "போமாறு அறிந்தேன், அகத்தின் அரும்பொருள் புகுமாறும் ஈது, (அஃது) ஆமாறு(ம்) (ஈது) என்று இன்றே (அறிந்தேன்).

இடையிடையே வருவித்த சொற்கள் சொல்லெச்சம்.

164. ஊழ்

நடுவு நிலை

2806. செத்தில் என்? சீவில் என்? செஞ்சாந்து அணியில் என்?
மத்தகத்தே உளி நாட்டி மறிக்கில் என்?
வித்தக நந்தி விதிவழி அல்லது
தத்துவ ஞானிகள் தன்மை குன்றாரே.

[1]செத்திலென் சீவிலென் செஞ்சாந் தணியிலென்
மத்தகத் தேயுளி நாட்டி மறிக்கிலென்[2]
வித்தக நந்தி விதிவழி யல்லது
தத்துவ ஞானிக டன்மைகுன் றாரே. (1)

வேறு பாடம்: 1. செற்றிலென் (சைவ) மறுக்கிலென் (ஒ) I.

கருத்து: மெய்யுணர்ந்தோரைப் பிறர் வாள்கொண்டு ஆழ வெட்டினாலும், மேற்சதையைச் செதுக்கினாலும், இவ்வாறு துன்புறுத்துதல் அன்றிச் சந்தனம் பூசி இன்புறுத்தினாலும், தலையில் உளியை வைத்துக் குறுக்கே அடித்து நிலத்தில் அசையாதவாறு நிறுத்தினாலும், அவர்கள் "எல்லாம் சிவன் வகுத்த விதியின்படி நிகழும்" என்று வாளாவிருப்பதல்லாமல், இன்ப துன்பங்களின் பொருட்டு, மனம் சலித்து, நடுவுநிலைமையிலிருந்து வழுவார்.

வித்தகம் - திறமை. "நெஞ்சத்துக் கோடாமை சான்றோர்க்கு அணி" என்றது திருக்குறள் (நடுவு:) பட்டினத்தாரைக் கள்வர் என்று சிறையில் இட்டுத் துன்புறுத்தியபோது, அவர் நினைந்ததை எண்ணுக.

இறைவன் திருவுள்ளம்

2807. தான் முன்னஞ் செய்த விதிவழி தானல்லால்
வான்முன்னஞ் செய்தங்கு வைத்ததோர் மாடில்லை[1]
கோன்முன்னஞ் [2]செய்த குறிவழி யேசென்று
நான்முன்னஞ் செய்ததே நன்னில மானதே. (2)

வேறு பாடம்: 1. மாட்டில்லை (விசு) (தி) (வ) (த) 2. சொன்ன (ஒ) II; செய்தான் (ஈ) I; சென்னி (விசு) (தி) (வ) (த).

கருத்து: ஒருவன் அனுபவிக்கும் செல்வம், அவனே முற்பிறவிகளில் செய்த வினையின் பயனாக வருவதே அன்றி, வானுலகில் உள்ளோர் யாரும் கொணர்ந்து கொடுப்பதன்று. அவ்வாறு அவன் செய்த வினைப்பயனை அவனோடு கூட்டுவிப்பது இறைவனின் செயல். நான் இறைவனது திருவுள்ளக் கருத்தை அறிந்து, அதன்படி செயலாற்றியதே நல்ல நிலமாக அமைய, அதிலிருந்து ஆகாமியவினை விளையாதொழிந்தது.

இதனால், இறைவனின் குறிப்பு அறியாமல் தன் முனைப்புடன் செயலாற்றுவோர், ஆகாமிய வினையை உண்டாக்குவர் என அறிக.

குறி - அடையாளம். நிகழும் சில நிகழ்ச்சிகளை அடையாளமாகக் கொண்டு இறைவன் உள்ளக் குறிப்பை அறிதல் வேண்டும்.

செல்வத்திற்குக் கூறியது வறுமைக்கும் கொள்க. பயிர் விளையும் நிலம் வன்னிலமாக, வினை விளையா நிலம் நன்னிலம் என்றது ஒரு நயம்.

இறைவன் தந்த பேறு

2808. ஆறு இட்ட நுண்மணல் ஆறே சுமவாதே
கூறு இட்டுக்கொண்டு சுமந்தறிவார் இல்லை
நீறு இட்ட மேனி, நிமிர்சடை நந்தியை
பேறு இட்டு, என் உள்ளம் பிரியகிலாவே.

ஆறிட்ட நுண்மண லாறே சுமவாதே[1]
கூறிட்டுக் கொண்டு [2]சுமந்தறி வாரில்லை
நீறிட்ட மேனி நிமிர்சடை நந்தியைப்
பேறிட்டெ னுள்ளம் பிரியகி லாவே. (3)

வேறு பாடம்: 1. சுமக்குங் (ஆ) II. 2. சுமந்தழி (த)

கருத்து: ஆறு தனது ஓட்டத்தில், வழியில் உண்டாக்கிய மேடோ, பள்ளமோ அதனை ஆறே கரைத்தல் செய்தோ, நிரப்பியோ, நுண்ணிய மணலைச் சுமக்கின்றது. அதுவல்லாமல் இச்செயல்களுக்காக மணல் சுமப்பவர் எவரும் இல்லை. (அதுபோல்) ஒருவன் தான் செய்த வினையின் பயனைத் தானே அனுபவிக்க வேண்டுமேயல்லாது பிறர் வாங்கிக் கொள்ளவியலாது. இங்ஙனம் வினைப் பயனைச் செய்தவனுக்கே சேர்ப்பது இறைவனின் நீதி ஆதலால், எந்தச் செயலையும் 'நான்' என்ற முனைப்புடன் செய்து, வினைப் பயனை ஈட்டிக் கொள்ளாமல் இருக்கும் பொருட்டு, நான் எனக்கு வரும் இன்ப துன்பங்களை, 'சிவன் தந்த பேறு' என்று கருதியும், எனக்குள்ள கடமைகளை 'அவன் பணி செய்யக் கிடைத்த - அவன் தந்த பேறு' - என்று கருதியும் அவற்றைத் தந்தமைக்காக அவனிடம் பேரன்பு கொண்டு, இடையறாது நினைக்கின்றேன்.

நெஞ்ச நினைப்புப் பலவாதலின், "பிரியகிலாவே" எனப் பன்மை முடிவு கொடுத்தார். சுமந்தறிவாரில்லை - சுமப்பவரை ஒருவரும் அறிந்திலர். சுமக்க என வாய்பாட்டை மாற்றுக. பேறு இட்டு: இட்டு - ஏதுவாகக் கொண்டு. மறவாமைக்கு இஃது ஏதுவாயிற்று.

தடுமாறேன்

2809. வான்நின்று இடிக்கில் என்? மாகடல் பொங்கில் என்?
கான் நின்ற செந்தீக் கலந்துடன் வேகில் என்?
தான் ஒன்றி மாருதம் சண்டம் அடிக்கில் என்?
நான் ஒன்றி நாதனை நாடுவன் நானே.

வானின் றிடிக்கிலென் மாகடல் பொங்கிலென்
கானின்ற செந்தீக் கலந்துடன் வேகிலென்
தானொன்றி மாருதஞ் சண்ட மடிக்கிலென்
நானொன்றி நாதனை நாடுவ னானே. (4)

கருத்து: மேகம் இடியிடித்தால் என்ன? கடல் பொங்கினால் என்ன? காட்டில் பற்றிய நெருப்பு நாட்டிலும் பரவி அழித்தால் என்ன? சூறைக்காற்று வீசினால் என்ன? நான் அவற்றால் எல்லாம் மனம் சலியாமல், தலைவனாகிய சிவபெருமானையே உணர்வேன்.

தவம் விடேன்

2810. ஆனை துரக்கிலெ னம்பூ டறுக்கிலென்
கானத் துழுவை கலந்து வளைக்கிலெ
னேனைப் பதியினி லெம்பெரு மான்வைத்த
ஞானத் துழவினை நானுழு வேனே. (5)

கருத்து: என்னை யானை துரத்தினாலும், அம்பு நெஞ்சிற் பாய்ந்து முதுகு வழியே வெளிப்பட்டாலும், காட்டில் புலி எதிர்ப்பட்டு வளைத்துக்கொண்டாலும் அஞ்சேன். உலகை அருள் நிகழும் இடமாகவே நோக்கி, ஞானம்பெறவே முயல்வேன்.

ஞானத்து உழவு - தவம். "பதியினில் எம்பெருமான் வைத்த ஏனை ஞானத்துழவு" எனக் கூட்டுக. ஏனை - மற்றையது, பொருள் வழியல்லாதது.

இயற்கை

2811. கூடு கெடின்மற்றோர் கூடுசெய் வானுளன்
னாடு கெடினு நமர்கெடு வாரில்லை
வீடு கெடின்மற்றோர் வீடுபுக் காலொக்கும்
பாடது நந்தி பரிசறி வார்க்கே. (6)

கருத்து: சிவபெருமானது செயலை அறிபவர், மாந்தர்க்கு இறப்பு நேர்ந்தால் மற்றொரு பிறப்பை, அப்பெருமான் தருவான் என்பதை நன்கு அறிவர். நாடு பஞ்சத்தால் நலிய, தம் வீட்டை விடுத்துச் செல்வோர், அண்டைய நாட்டில் வீடு அமைத்துக் குடியேறுவது போன்ற, இயல்பான நிகழ்ச்சி இது என்று அவர்கள் அறிவர்.

பாடு - படுவது, இயல்பாய் நிகழ்வது.

165. சிவரூபம்

"வேறாயும் உடனாயும்"

2812. சிந்தைய தென்னச் சிவனென்ன வேறில்லை
சிந்தையி னுள்ளே சிவனும் வெளிப்படுஞ்
சிந்தை தெளியத் தெளியவல் லார்கட்குச்
சிந்தையி னுள்ளே சிவனிருந் தானே. (1)

கருத்து: ஆன்மாவின் அறிவிற்கு அறிவாய்ச் சிவம் நிற்றலைக் கூறுகின்றார். ஆன்மாவின் அறிவு வேறு, சிவம் வேறு என்று பிரித்து அறிய இயலாதபடி, சிவம் ஆன்மாவின் அறிவுக்கு அறிவாக இருக்கிறான். (உடம்பும் உயிரும் வேறு வேறு ஆயினும், அவை பிரித்து அறிய இயலாதபடி நிற்பது போன்றது இது.) இவ்வாறு மறைந்து நிற்கும் சிவம், ஆன்மாவிற்கு, அகவழிபாட்டினால், வெளிப்படும். அதாவது, அதன் உணர்வுக்குப் புலப்படும். படிப் படியான சாதனையினால் ஆன்மாவின் சித்தம் தெளியத் தெளிய, சிவம் அதனை 'உடன் நின்று' 'சிவ அனுபவத்திற்' செலுத்தும்.

அறிவுக்கு அறிவாய் இருத்தல் "வேறாய்" நிற்றல். "சிந்தையின் உள்ளே சிவன் இருந்தான்" என்பது "உடனாய்" நிற்றல்.

முயல்க, காணலாம்

2813. வாக்கும் மனமும் மறைந்த மறைப்பொருள்
நோக்குமின், நோக்கப்படுபொருள் நுண்ணிது,
போக்கு ஒன்றும் இல்லை, வரவு இல்லை, கேடு இல்லை
ஆக்கமும் அத்தனை ஆய்ந்து கொள்வார்கட்கே.

வாக்கு மனமு மறைந்த மறைப்பொரு
ணோக்குமி னோக்கப் படுபொரு ளுண்ணிது
போக்கொன்று மில்லை வரவில்லை கேடில்லை
யாக்கமு [1]மத்தனை யாய்ந்துகொள் வார்கட்கே. (2)

வேறு பாடம்: 1. மில்லை யறிந்துகொள் (ஆ) IV.

கருத்து: சிவத்தை ஓர்ந்து உணர்ந்தால், அது வேதாந்தத் தெளி பொருள் ஆகும். அது சொல்லொணாதது, சிந்திக்க வாராதது.

ஆயினும் அதைக் காண்பதைக் குறிக்கோளாகக் கொள்ளலாம், அவ்வாறு கொண்டு, முறைப்படி காண்க. அவ்வாறு காணலுறு வார்க்கு, அது மிக நுண்ணிய பொருளாகப் புலப்படலே செய்யும். அது பிற உயிர்ப் பொருள், உயிரில் பொருள்களைப் போல முறையே, போக்குவரவு உடையதும் அன்று; அழிதல், உண்டாதல் தன்மைகள் உடையதும் அன்று.

அப்பாற் பட்டவன்; ஆனால் அருள் மறந்தானா?

2814. பரனாய், பராபரனாகி, அப்பால் சென்று
உரனாய் வழக்கு அற்ற ஒண்சுடர் தானாய்,
தரனாய், தனது என ஆறு அறியொண்ணா
அரனாய், உலகில் அருள் புரிந்தானே.

பரனாய்ப் பராபர [1]னாகியப் பாற்சென்
றுரனாய் [2]வழக்கற்ற வொண்சுடர் தானாய்த்
தரனாய்த் தனதென வாறறி யொண்ணா
வரனா யுலகி லருள்புரிந் தானே. (3)

வேறு பாடம்: 1. னாகிய பார் சென்று (விசு) 2. வழக்கற (விசு) (த).

கருத்து: சிவம் சிதாகாச வெளியில் விளங்குபவனாய், அதற்கும் நுண்ணியன் ஆகி, அகண்டாகார வெளியில், இன்னது என்று புலப்படும் நேயப்பொருள் போல அன்றி, ஒலியற்ற நாதமும், ஒளியற்ற விந்துவுமாக இருக்கின்றான். ஆயினும் (தனது அளவில்லாக் கருணையினால்) எல்லாப் பொருளையும் உள் நின்று தாங்குபவனாய் உள்ளான். ஆனால் எப்பொருளும், தன்னில் அவன் இருப்பதை அறியாது. அவ்வாறு நின்று அவற்றைக் காப்பவன், ஒரு கால அளவில் அவற்றை அழிக்கின்றான்.

உரன் - ஒலி; நாதம் "வழக்கு அற்ற உரன், வழக்கு அற்ற சுடர்" என இரு புறமும் கூட்டுக. வழக்குடைய நாதமும் விந்துவும் சுத்த மாயையில் அடங்கும். அவற்றைக் கடந்தவை பரநாதமும் பரவிந்துவும். அவை பரவெளியில் உள்ளவை. அவற்றையும் கடந்து உள்ள நாதமும் விந்துவும் இங்குக் கூறினார். பரநாதத்தைப் "பேசாப் பெரிய ஓங்காரம்" என்பார் வள்ளலார். (திருவருட்பா 6 ஆம் திரு. திருவடிநிலை. 9)

166. சிவ தரிசனம்

தடைபடாத இன்பம்

2815. ஓதும் மயிர்க்கால் தொறும் அமுதூறிய,
பேதம், அபேதம் பிறழாத ஆனந்தம்
ஆதி சொரூபங்கள் மூன்று அகன்று அப்பாலை
வேதமும் ஓதும் சொரூபிதன் மேன்மையே.

ஓது மயிர்க்கா றொறுமமு தூறிய[1]
பேதம பேதம் பிறழாத வானந்த
மாதி சொரூபங்கண் மூன்றகன் றப்பாலை
[2]வேதமு மோதுஞ் சொரூபிதன் மேன்மையே. (1)

வேறு பாடம்: 1. தூறியப் (ஆ) I. 2. வேதக (இ ஈ ஒ ஓ) II; வேதம தோதுஞ் (த).

கருத்து: முன்னே அறியப்படும் தடத்த வடிவங்களாகிய உருவம், அருவம், அருவுருவம் என்னும் மூன்றையும் கடந்து, அப்பால் உள்ளதாய் உணர்ந்துகொள்ளப்பட்ட பொருள்; வேதமும் கூறுகின்ற பொருள் - யாது எனின், சொரூபம் என்பதாகும். அஃது இறைவனது உண்மை நிலை. அஃது இன்னது எனக் கூறவியலா விடினும், அதன் பெருமையைக் கூறலாம். அப்பெருமை யாது? அதனை உணர்வார்க்கு உடம்பு முழுதும் இன்ப வுணர்ச்சி பெருகும். சிவனும் சீவனும், ஒன்றா, வேறா என்ற ஆராய்ச்சி, அப்போது தோன்றாது. (தோன்றினால் தற்போதம் நீங்கவில்லை என அறிக. தற்போதம் இருந்தால் ஆனந்தம் இல்லை) அது தடையற்ற ஆனந்தமாகும்.

பேதம் அபேதம் பிறழாத - பேத அபேத ஆராய்ச்சியால் தடைப் படாத.

முத்தியில் அத்துவிதம்

2816. உணர்வும் அவனே, உயிரும் அவனே,
புணரும் அவனே, புலனும் அவனே
இணரும் அவன் தன்னை எண்ணலும் ஆகான்
துணரின் மலர்க்கந்தம் துன்னி நின்றானே.

உணர்வு மவனே யுயிரு மவனே
'புணரு மவனே புலனு மவனே
யிணரு மவன்றன்னை யெண்ணலு மாகான்
றுணரின் மலர்க்கந்தந் துன்னிநின் றானே. (2)

வேறு பாடம்: 1. புணர்வு (த)

கருத்து: கொத்தாக உள்ள மலர்களில் மணம் ஒன்றியைந்தே இருத்தல் போல் சிவம் என் உணர்வாயும் உயிராயும், என்னோடு ஒன்றியைந்து நிற்கின்றான். அதே சமயம் வேறு பொருளாய், உடன் நின்று, நான் கூடி மகிழத் தன்னைத் தருபவனும் அவனே. கூடி மகிழுங்கால் புலப்படுகின்ற பேரின்பமும் அவனே. இவ்வாறு எல்லாம் நெருங்கிய தொடர்பு கொள்ளுகின்ற அவனைச் சிந்திக்கலாம் என்று தொடங்கினால், சிந்தனைக்கு எட்டான்.

பேரின்ப சித்தியிலும் சிவம் 'ஒன்றாயும்', 'வேறாயும்', 'உடனாயும்' நிற்றலைக் கூறினார்.

அனைத்தும் அவன் செயல்

2817. துன்னி நின்றான் தன்னை உன்னு, முன்னா இரு,
முன்னி, அவர்தம் குறையை முடித்திடும்;
மன்னிய கேள்வி மறையவன், மாதவன்
சென்னியுள் நின்றதோர் தேற்றத்தனாமே.

துன்னிநின் றான்றன்னை 'யுன்னுமுன் னாவிரு
முன்னி யவர்தங் குறையை முடித்திடு
மன்னிய கேள்வி மறையவன் மாதவன்
சென்னியு ணின்றதோர் தேற்றத்த னாமே. (3)

வேறு பாடம்: 1. யுன்னிமுன் (விசு) (தி) (வ) (த).

கருத்து: மாந்தர் உயிரோடும் உணர்வோடும் மிக நெருங்கி, அவையாகவே, 'ஒன்றி' இருக்கும் சிவனை, நெஞ்சே, நீயும் நெருங்கி 'ஒன்றி' நினைப்பாயாக. எச்செயலையும் அவன் திருவருளை முன்னிட்டுக் கொண்டு செய்வாயாக. அவன் உனது எண்ணத்தைத் தானும் எண்ணுபவன் ஆதலின், உன் விருப்பத்தை நிறைவேற்றுவான். மாந்தர்க்கு மட்டுமன்றி, பிரமன், திருமால் ஆகியோரின் தலைவனாகவும் அவன் உள்ளான். இது நூல்களால் தெளியப்பெற்ற உண்மை.

பிரமனுக்கும் திருமாலுக்கும் தலைவன் எனவே, அவர்களுள் இருந்து, படைத்தல் காத்தல் தொழில்களைச் செய்பவன் சிவமே என்பது தெளிவு. இதனால், எங்கும் நின்று, செயலாற்றுவது சிவமே என்று கூறினார்.

நானா உணர்ந்தேன்?

2818. மின் உற்ற சிந்தை விழித்தேன், விழித்தலும்
தன் உற்ற சோதித் தலைவன், இணையிலி
பொன் உற்ற மேனிப் புரிசடை நந்தியும்
என் உற்று அறிவன், நான் என் விழித்தேனே.

மின்னுற்ற சிந்தை விழித்தேன் விழித்தலுந்
தன்னுற்ற சோதித் தலைவ னிணையிலி
பொன்னுற்ற மேனிப் புரிசடை நந்தியு[1]
[2]மென்னுற் [3]றறிவனா [4]னென்விழித் தேனே[5]. (4)

வேறு பாடம்: 1. நந்தியை (ஆ இ) II. 2. யென்னுற் (ஆ இ) II. 3. றறிபவ (துடி) 4. றென் விழித் (ஆ இ ஈ) I. 5. தானே (ஒ ஓ) I.

கருத்து: நான் சிவதுரிய நிலையை எய்தி உணரப்பெற்றேன். அந்நிலையில், அகண்டாகார அறிவாக விளங்கும் சிவம், 'நானாகி' உணர்ந்தான். ஆதலால், நான் உணர்ந்தேன் என்பது இல்லை.

தற்போதம் கெட்டு ஒழிந்தது ஆதலின், 'நான் உணர்ந்தேன் என்பது இல்லை' என்றார். வள்ளலார் "நான் ஆர்? எனக்கென ஓர் ஞான வுணர்வேது சிவம் ஊன் நாடி நில்லாவுழி" எனப்பாடுவதை ஒப்பு நோக்குக. (திருவருட்பா 6 ஆம் திருமுறை: சுத்தசிவநிலை: 18) மின் உற்ற - ஒளிபொருந்திய. சிந்தை - உயிருணர்வு. சிவதுரிய நிலையை இப்போதுதான் பெற்றார் ஆதலின் "விழித்தேன்" என்றார். "பொன் உற்ற மேனிப்புரிசடை நந்தி" என்பது தடத்தநிலை. "தன் உற்ற சோதி" என்பது சொரூபநிலை.

சிவ துரியாதீதப் பேரொளி

2819. சத்திய - ஞானத் தனிப்பொருள் - ஆனந்தம்
சித்தத்தின் நில்லாச் சிவானந்தப் பேரொளி
சுத்த துரிய - துரிய - துரியத்துள்
உய்த்த துரியத்து உறு பேரொளியே.

சத்திய [1]ஞானத் தனிப்பொரு ளானந்தஞ்[2]
சித்தத்தி னில்லாச் சிவானந்தப் பேரொளி
சுத்த [3]துரியத் துரியத் துரியத்து
ளுய்த்த துரியத் துறுபே ரொளியே. (5)

வேறு பாடம்: 1. ஞானந் (ஆ) I. 2. ளானந்தன் (இ ஈ) I. 3. பிரம (ஆ இ) II. (ஆசிரியர் கூறிய அவத்தை வரிசையில் 'சுத்த பிரம துரியம்' என ஒன்றில்லை ஆதலின் இப்பாடம் விலக்கப்பட்டது.)

கருத்து: சிவம் 'சத் - சித் - ஆனந்தமான' தனிப்பரம்பொருள். ஆன்ம அறிவில் அடங்காத பேரறிவு. ஆன்மாவின் அறிவாகவே தான் நின்று, சிவானந்தம் தருவது. சுத்ததுரியமும், பர துரியமும், சிவதுரியமும் கடந்து ஆன்மாவினால் எய்தப்படும் சிவ துரியாதீதத்தில் பேரொளியாக உணரப்படுவது.

சிவதுரியம் - சிவத்தைத் 'தனியாகத்' தெளியும் நிலை. சிவ துரியாதீதம் வாசனாமலம் கெட்டுச் சிவத்துடன் ஒன்றி நிற்கும் நிலை. (இந்நூல் பா. எண். 2283, 2284 காண்க.) துரியம் (4 ஆம் அடி) உயர்நிலை. சுத்த துரியம், பரதுரியம், சிவதுரியம் என்பவை முன்பு கூறப்பட்டன. பரதுரியமும் கடந்து சிவத்தை உணர வேண்டும் என்பதை. ஆசிரியர் முன்னும், மேலாலவத்தை" - இயலில்" அளியும் அருளும் தெருளும் கடந்து தெளிபவருள்ளே சிவானந்தமாமே" என்று கூறினார் (பா. எண்: 2299).

அப்பால் ... அப்பால் ...

2820. பரன் அல்ல, நீடும் பராபரன் அல்ல,
உரன் அல்ல, மீது உணர் ஒண்சுடர் அல்ல,
தரன் அல்ல, தான் அவையாய் அல்ல ஆகும்;
அரன் அல்ல, ஆனந்தம் அப்புறம் ஆமே.

[1]பரனல்ல நீடும் பராபர னல்ல
வுரனல்ல மீதுண ரொண்சுட ரல்ல
தரனல்ல தானவை யாயல்ல வாகு[2]
மரனல்ல [3]வானந்த மப்புற மாமே. (6)

வேறு பாடம்: 1. பரனல்லன் (த) தருமபுரப் பதிப்பில் முதற்சீர் நான்கும், முதலிரண்டடி இறுதிச்சீரும் ஆண்பால் விகுதியே பெற்றுள்ளன.) 2. னாகு (ஒ) II. 3. வானந்தத்து அப்புறத் தானே (இ ஈ ஒ ஓ) IV.

கருத்து: மேற்பாடலிற் கூறிய சிவானந்தத்தை அன்மை வாய்பாட்டால் கூறுகின்றார். சிவானந்தம் என்பது, பரவெளியில் உள்ள பரசிவமும் பரசிவையும் அல்ல. அவ்வெளிக்கு அப்பால் நெடியதாக உள்ள பராபர வெளியில், அவற்றினும் மேற்பட்ட நுண்ணிய இறைநிலைகள் அல்ல. ஒலிவழக்கு அற்ற நாதம் அல்ல, ஒளி வழக்கு அற்ற விந்து அல்ல. இனிக் கீழ்நிலைகளுள் உலகங்களை ஆதாரமாய் நின்று தாங்குபவன் அல்ல. சங்காரம் செய்யும் அரன் அல்ல, இந்த இறைநிலைகளாகத் தானே நின்று, அதே சமயம், இவையல்லவாக நிற்கும் உண்மைப் பொருளாகும்.

இப்பாடலுடன் மேல் 2814 ஆம் பாடலை ஒப்பு நோக்குக. இந்த இறை நிலைகளாகத் தானே நிற்றல் அப்பாடலிற் கூறப்படுகின்றது. "ஆனந்தம் பரனல்ல, அரனல்ல. . . . தான் அவையாய், அல்லவாகும்" என வினை முடிவு செய்க. மீதுணர் - அப்பாற் சென்று உணரப்படும். இதனை 'உரன்' என்பதற்கும் அடையாக்குக. சிவத்தினை அறிதோறும் ஆனந்தம் புதிது புதிதாய்க் கிளைத்துச் செல்வது ஆதலின், 'அல்ல' எனப் பன்மை முடிவு கொடுத்தார்.

பேரறிவை உணர்ந்தோர்

2821. முத்தியுஞ் சித்தியு முற்றிய ஞானத்தோன்
பத்தியு ணின்று [1]பரந்தன்னு ணின்றுமா[2]
சத்தியு ணின்றோர்க்குத் தத்துவங் கூடலாற்
சுத்தி யகன்றோர் சுகானந்த போதரே. (7)

வேறு பாடம்: 1. பரந்தன்னி னுன்னின்று (ஆ) IV. 2. ணின்று (ஓ).

கருத்து: சிவ சொரூபத்தை உணரும் ஞானமே முழுதுணரும் ஞானமாதலின், அந்த ஞானத்தை ஆன்மா பெறுதலே முத்தியாகவும், சித்தியாகவும் வைத்த சிவத்தினிடம் பேரன்பு செய்து, அதில் ஊன்றி நின்று, பர சிவத்தை உணர்ந்து, அதில் ஆழ்ந்து, அருள்வெளியில் அருட் சத்தியிடம் தோய்ந்து நிற்போர்க்கு மெய்ப்பொருள் தலைப்படும். அந்த அருட் சத்தியால், வாசனா மலத்தை நீக்கப்பெற்று, அந்தச் சத்தியினின்றும் விலகி, அப்பாற்பட்டு நிற்போர், ஆன்மாவிற்கு இன்பம் அளிப்பதாகிய சிவானந்தத்தை, பேரறிவு நிலையை உணர்ந்தோர் ஆவர்.

ஞானத்தோன் - சிவம். ஞானத்தோனது பத்தி என்க. சுத்தி - வாசனா மலம் நீக்கப்பெறுதல். சுத்தி பெற்று, அகன்றோர் என்க.

சீவனா, சிவனா?

2822. துரிய [1]வதீதஞ் சொல்லறும் பாழா
மரிய துரிய மதீதம் புரியில்
விரியுங் குவியும் விள்ளா மிளிர்ந்தெ[2]
[3]னுருவந் [4]திரிய வுரைப்பதெவ் வாறே. (8)

வேறு பாடம்: 1. வதீதமுஞ் (த) 2. மிளிருந்தன் (விசு) (த) (வ) 3. னுருவுந் (ஒ ஓ) I. 4. திரியு முரைப்பதெவ் (ஓ) III.

கருத்து: அவத்தை வகைகளில் எல்லாத் துரியாதீதமும் சொல்லற்ற நிலையே. அவற்றுள் அரியதாகிய சிவதுரியாதீதத்தை எய்தினால், கிடைக்கும் சிவானந்தம் இத்தகையது எனக் கூறவியலாததே. ஆனால், இவ் அவத்தையில் ஆன்மாவின் நிலை யாது என்று கூறலாமோ எனின், எனது நிலையைக் கூறுவேன். என் அறிவு விரிந்து அகண்டம் ஆதலும், குவிந்து சிவத்தின் அருளில் நிற்றலுமாக மாறி மாறி நிகழ்ந்தது. இந்நிலையில் என் ஆன்மாச் சீவன் என்பதா? சிவன் என்பதா? அறியேன்.

ஆன்மாவின் அறிவு அகண்டம் ஆதலின் சிவன் எனலாம். குவிந்து, அவனருளில் நிற்றலின் சீவன் எனலாம். இவை மாறி மாறி அடுத்தடுத்து நிகழ்கின்றன வாதலின், இவற்றுள் யாது என்பது? விள்ளா மிளிர்ந்து - சொல்லத்தக்க நிலையில் அல்லாமல் பிறழ்ந்து. விரிதலும் குவிதலுமாய் மிளிர்ந்து திரிய என்க. திரிய - மாறுபட.

குறிப்பு: சிவரூபம், சிவதரிசனம் என்னும் இரண்டு இயல்கட்கும், சுவடிகளில் சிவரூப தரிசனம், சிவதரிசனம் என்ற பெயர்கள் தம்முள் மாறி வழங்குகின்றன (விசு) (தி) (வ) பதிப்புகள் இவற்றுக்கு முறையே சிவ தரிசனம், சிவ சொரூப தரிசனம் எனப் பெயர் வழங்குகின்றன. தருமபுரப் பதிப்பிற் கண்ட பெயர் வழக்கின் பொருத்தம் உடைமை கருதி, அப்பெயர்களே இப்பதிப்பிலும் மேற்கொள்ளப்படுகின்றன.

167. முத்தி நிலை; கரும நிருவாணம்

உயிர் 'இயல்பு' ஆயிற்று

2823. ஓதிய முத்தி, அடைவே உயிர் பரம்
பேதம் இலாச் சிவம் எய்தும், சொரூபமோடு
ஆதிதன் அச்சொரூபச் சொரூபத்து ஆக,
ஏதம் இலா நிருவாணம் பிறந்ததே.

ஓதிய முத்தி [1]யடைவே யுயிர்பரம்
[2]பேதமி [3]லாச்சிவ மெய்துஞ் சொரூபமோ[4]
[5]டாதி தனச்சொரு [6]பச்சொரூ பத்தாக
வேதமி லாநிரு வாணம் பிறந்ததே. (1)

வேறு பாடம்: 1. யடையவே (ஓ) II. 2. மேதமில் சிவ (ஆ) I. 3. லச் சிவ (ஓ) I. 4. துரியமோ (ஓ) IV; துரியம் (த) 5. டாதிதன் (ஆ ஓ) I; நாதி (த) 6. பஞ்சொரூபத்த (ஓ) II; சொரூபஞ் சொரூபத்தாகவே (விசு) (தி) (வ) (த)

கருத்து: முத்தி நிலையில் உயிர் முறையாக, தனக்கும் பரம்பொருளுக்கும் வேறுபாடு இல்லாத ஒருநிலையை - சிவகதியை - அடையும். அதனைத் "தூயநிலை" (நிருவாணம்) என்பர். (தூயது ஆவது எவ்வாறு எனில்) உயிர் மலங்களினின்றும் நீங்கித் தன் இயல்பான நிலையுடன் (சொரூபம்) முதல்வனின் இயல்பான நிலையோடு சேர்ந்து விடுதலால் என்க.

உயிரின் சொரூபத்திற்குப் பெயர் 'ஆன்மா'. அதன் தடத்தப் பெயர் பசு. சொரூபச் சொரூபம் - அருள் என்ற வடிவத்திற்கும் அடிப்படையாய் உள்ள பொருள். வடிவமற்ற சிவமே பொருள். அது மேற்கொள்ளும் பண்பு வடிவமே அருள். "அருள் வடிவப் பொருளே" என்றார் வள்ளலாரும் (திருவரு. 6 ஆம் திரு. அருள் விளக்கமாலை. 1) அருள் என்ற வடிவம் சுட்டிக்கூறும் தன்மை உடையது ஆதலின் "அச்சொரூபம்" என்றார். அச் சொரூபத்தை உடைய சொரூபம் என்க.

சொல்ல முடியுமா?

2824. பற்றற் றவர்பற்றி நின்ற பரம்பொருள்
கற்றவர் கற்றுக் கருதிய கண்ணுதல்
சுற்றற் றவர்சுற்றி நின்றவெஞ் சோதியைப்
பெற்றுற் றவர்கள் பிதற்றொழிந் தாரே. (2)

கருத்து: நூல்களைக் கற்றவர், ஞானாசிரியன் வாயிலாகப் பதிஞானமும் உணர்ந்து, அதனால் உலகியற் பயனை விட்டுத் தன்னையே பெறவேண்டி அன்பு கொள்வதற்கு இடமான ஈசன்; (அவரினும் மேலாக) உலகியற் பற்றுச் சிறிதும் இல்லாதோர் தமக்கு ஒரே பற்றாகப் பற்றிக்கொண்டு, விடாமல் நின்ற பரம்பொருள்; (அவரினும் மேலாக) சிவனும் சிவனடியாருமே சுற்றம், வேறு சுற்றம் இல்லை என்று அன்பராய் வாழ்வார் கண்டு, தோய்ந்து நிற்பதற்கு இடமான சோதி - இத்தகு சிவத்தைத் தமதாகவே பெற்றவர் -

சிவப்பேறு பெற்றவர் - இத்தகையர் என்று நாம் சொல்லக் கருதும் பிதற்றற் சொல்லைக் கடந்துநின்றோர் ஆவர்.

குறிப்பு: ஆ - சுவடி இவ்வியலில் முதற்பாடலை 'முத்தி பேதம்' என்ற இயலாகவும் அடுத்த பாடலைக் "கரும நிருவாணம்" என்ற இயலாகவும் குறிப்பிடுகிறது. இ, ஒ - சுவடிகள், இவ்விரண்டு பாடலையும் ஓர் இயலாகக் காட்டி, இரு பெயர்களையும் இணைத்து இடுகின்றன. இ - சுவடியில் 'கரும நிருவாணமனுபூதி' என்று இயற்பெயர் இட்டு, அந்த இயல் இரண்டு பாடலுக்கு மேலும் தொடர்ந்து, 'ஒ' சுவடியில், மற்றோர் இடத்தில் "மோனசமாதி" என உள்ள இயலின் பாடல்களையும் தழுவிக் கொண்டுள்ளது. ஒ சுவடியும் இவ்வாறே. ஆனால், அதில் முத்திபேதம் முதலிய இயற்பெயர்கள் இல்லை. தனி எண் வரிசை உள்ளது.

'கரும நிருவாணமனுபூதி' என்ற தொடர்மொழி கருதியும் பொருட் டொடர்ச்சி கருதியும், இப்பொழுதைய பதிப்பில் அடுத்த இயல் "அனுபூதி" எனப் பெயர் இடப்படுகிறது. (பதிப்புகளில் இவ்வியல் "மோன சமாதி" என்ற இயலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

168. அனுபூதி

சித்தம் சிவமாகும்

2825. சென்றார், இருந்தார், கிடந்தார் என இல்லை,
சென்று ஆர்தரும் சித்தமான சமாதி ஆம்,
மன்று ஏயும் அங்கே மறைப்பொருள் ஒன்று உண்டு
சென்று ஆங்கு அணைந்தவர் சேர்கின்றவாறே.

[1]சென்றா ரிருந்தார் கிடந்தா ரெனவில்லை[2]
[3]சென்றார் தருஞ்சித்த [4]மான சமாதியா
[5]மன்றேயு மங்கே மறைப்பொரு ளொன்றுண்டு
சென்றாங் கணைந்தவர் சேர்கின்ற வாறே. (1)

வேறு பாடம்: 1. நின்றா (சைவ) 2. ரெனவில்லாச் (த) 3. சென்றார் தஞ்சித்தமே (த) 4. மோன (விசு) (தி) (வ) (த) 5. மன்றே நிறையு (ஆ) IV.

கருத்து: ஞானி உலகியலை விட்டு விலகி, தன் சித்தம் ஒன்றி நிற்பதாகிய உயிருணர்வு, பரம்பொருளுடன் கூடி நிற்பதாகிய சமாதியை அடைவான். அப்பொழுது அவன் செல்லுதல், இருத்தல், கிடத்தல் முதலிய செயல்களை (போக்கு வரவுகளை) மனத்தாலும்

செய்தல் இல்லை. இஃது, ஆன்மா சிவம் ஆக, சித்தம் ஆன்மாவாகும் சமாதி நிலை. இப்பொழுது அவன் சித்தம் அம்பலம் ஆகும். அங்கே ஆடும் வேதப் பொருளாம் சிவம் அவ்யோகிக்கு அனுபவம் ஆவான்.

எனல் என்னும் தொழிற்பெயர் 'என' எனத் திரிந்தது. ஆர்தரும் - நிறையும்.

கழுத்தில் பால் வருமா?

2826. காட்டும், குறியும் கடந்த அக் காரணம்
ஏட்டின் புறத்தில் எழுதி வைத்து என் பயன்?
கூட்டும் குரு-நந்தி கூட்டிடின் அல்லது
ஆட்டின் கழுத்தில் அதர் கிடந்த அற்றே.

காட்டுங் குறியுங் [1]கடந்தவக் காரண
மேட்டின் புறத்தி லெழுதிவைத் தென்பயன்
கூட்டுங் குருநந்தி கூட்டிடி னல்லது[2]
வாட்டின் கழுத்தி [3]லதர்கிடந் தற்றே. (2)

வேறு பாடம்: 1. கடந்தவர் (விசு) (தி) 2. னல்லதை (த) 3. னடவறந் (ஆ) I.

கருத்து: எடுத்துக் காட்டும், ஏதுவும் காட்டி விளக்க வியலாதது ஆதி காரணமான சொரூப சிவம். அதை அறியும் நெறி பற்றி நூல்களில் உள்ள செய்திகளால் என்ன பயன்? உயிருணர்வைத் தரும் குருவாகச் சிவம் எழுந்தருளி, அனுபவமாக அறியும் நெறியைப் பயிற்றுவிக்க வில்லையேல், அந்த நூற்கல்வி எல்லாம், வெள்ளாட்டின் கழுத்தில் மடிக்காம்பின் தோற்றத்தோடு தொங்கும் தசைத் திரள் போலப் பயனற்றனவாகும்.

ஆட்டின் கழுத்தில் தொங்கும் தசையில் பால் வராமை போல, நூலறிவால் அனுபவம் உண்டாகாது. அனுபவம் நம் உயிரில் உண்டாக வேண்டும். அதைக் கூட்டுவிப்பவர் குருவே.

குறிப்பு: இதனை யடுத்துச் சுவடிகளிலும் பதிப்புகளிலும் உள்ள "உணர்வுடையார்கட்கு" என்ற பாட்டுச் 'சம்பிரதாயம்' என்னும் இயலில் வந்தது. இப்போதைய பதிப்பில் இடைச்செருகல் என இனங்காட்டப் பட்டது. எனவே, இங்கு விடப்பட்டது.

என்றும் சிவபோகம்

2827. மறப்பு-அதுவாய் நின்ற மாய நன்னாடன்
பிறப்பு-இலன், நீக்கிய பேரருளாளன்
சிறப்புடையான், திருமங்கையும் தானும்
உறக்கம் இல் போகத்து உறங்கிடுந்தானே.

மறப்பது வாய்நின்ற மாயநன் னாடன்
[1]பிறப்பில னீக்கிய பேரரு ளாளன்
சிறப்புடை யான்றிரு மங்கையுந் தானு
முறக்கமில் [2]போகத் துறங்கிடுந் தானே. (3)

வேறு பாடம்: 1. பிறப்பினை நீக்கிய (சங்) (சைவ) (துடி) 2. யோகத் (இ) III.

கருத்து: யோகி அசுத்த மாயையினின்று தோன்றிய காரியமாகிய ஊனுடம்பை உடையவன் ஆயினும் உலகியலை அறவே மறப்பான். தனக்குப் பிறப்பு இறப்பு இல்லாதோனும், அன்பருக்கு அவற்றை நீக்கியருளும் பெருங்கருணை உடையவனுமாகிய சிவனது திருவருள் இந்த யோகிக்கு வாய்க்கும். அந்த அருள் - அறிவாகிய வெளியில், யோகி சிவபோகத்தை இடையறாது அனுபவிப்பான்.

'மறப்பான்' எனவே மௌனமாவான் எனல் புலப்படும். மாயா காரியவுடம்பாயினும் சிவகரணமாய் விடுதலின் 'நன்னாடன்' என்றார். உடம்பை நாடு என உருவகித்து, அதில் உள்ள உயிரை, 'நாடன்' என்றார். நாடன், இங்கு யோகி.

சிவமே எங்கும்

2828. துரியங்கண் மூன்றுந் [1]தொடர்ந்தொளிர் சோதி
யரிய துரிய [2]மதன்மீது மூன்றாய்
[3]விரியுங் குவியும் விழுங்கி யுமிழ்ந்தே
யுரையி னனுபூதி யத்தினுள் ளானே. (4)

வேறு பாடம்: 1. கடந்தொளிர் (ஓ ஓ) II. 2. மதின்மீது (ஓ) I. 3. விரிவுஞ் குவிவும் (விசு) (தி) (வ) விரிவு குவிவு (த).

கருத்து: சுத்த துரியம் (சீவ துரியம்). பர துரியம், சிவ துரியம் என்னும் மூன்று உணர்வு நிலைகளிலும் சோதியனுபவம் எய்தும்.

அவற்றுள் சிவ துரியத்தில், அறிபவன், அறிவு, அறியும் பொருள் எனப் (அதாவது ஆன்மா, ஞானம், சிவம் என) பாகுபட்டு நிற்கும். உடன், அப்பாகுபாடு நீங்க, ஒன்றுபட்டு நிற்கும். இவ்வாறு ஆன்மா, இவ் வேறுபாட்டினை முதலில் உணர்ந்தாலும் பிறகு மறந்து, பேசா அனுபூதியில் திளைப்பான்.

சோதி விரியும், குவியும். (ஆன்மா) உள்ளான் என இரண்டு வாக்கியத்திற்கும் வினைமுடிவு செய்க. இதனை விடுத்துச் 'சோதி உள்ளான்' என வினை முடிவு செய்தல் பொருந்தாது.

இந்நிலையில், அறிபவன் சிவம், அறிவு சிவம், அறியப்படும் பொருளும் சிவம்.

அருமையில் எளிய அழகு

2829. உருவிலி யூனிலி [1]யூனமொன் றில்லி
திருவிலி தீதிலி தேவர்க்குந் தேவன்
பொருவிலி பூதப் படையுடை யாளி
மருவிலி வந்தென் மனம்புகுந் தானே. (5)

வேறு பாடம்: 1. யீனமொன் (சங்)

கருத்து: சிவன் உருவம் இல்லாதவன். அன்பர்க்காக வடிவம் கொள்ளும்பொழுதும் ஊனுடம்பை அன்றி, அருளுடம்பைக் கொள்ளுபவன். நன்று, தீது - இரண்டும் அற்றவன். செல்வம், வறுமை இரண்டும் அற்றவன். மகாதேவன். தன்னை ஒப்பார் இல்லாதவன். பதினெட்டுச் சிவகணங்களை உடையவன். என்றும் உயிர்களோடு 'ஒன்றாய்' இருத்தலால், வந்து சேர்தல் என்பது இல்லாதவன், அவன் என்னால் இன்று 'உண்மையாய்', அனுபூதியாய், அறியப்பட்டான்.

மேலே இறைவனின் அருமையை விரித்துப் பின்பு அவனது எளிமையைக் கூறினார்.

உடம்பிற்குள் உலக எல்லை

2830. கண்டு அறிவார் இல்லை காயத்துள் நந்தியை,
எண் - திசையோரும் இறைவன் என்று ஏத்துவர்,
அண்டம் கடந்த அளவு இலா ஆனந்தம்
தொண்டர் முகந்த துறை அறியோமே.

கண்டறி வாரில்லைக் காயத்து ணந்தியை
யெண்டிசை யோரு மிறைவனென் றேத்துவ
ரண்டங் கடந்த வளவிலா வானந்தந்[1]
தொண்டர் முகந்த துறையறி யோமே. (6)

வேறு பாடம்: 1. வானந்தத் (சங்) (சைவ).

கருத்து: எட்டுத் திசைகளில், எந்நாட்டில் வாழ்வோரும், தாம் புறத்தில் கொண்ட உருவம், அருவங்களுள் ஏதேனும் ஒன்றினை இறைவன் என்று போற்றுகின்றனர். அவருள் ஒருவரும், தம் உடம்பினுள் இறைவனைக் காண்பதில்லை. ஆனால் இறைவனை யோகநெறியில், அகவழிபாடு செய்யும் தொண்டர்கள், (அவனைத் தம் உடம்பினுள், உயிருணர்வினால் கண்டு) அண்டத்தைக் கடந்து, ஆனந்தமே வடிவாக விளங்கும் அவனைத் தம் உடம்பின் எல்லையிலேயும் கண்டு, அந்த ஆனந்தமாகவே தாமும் ஆயினர். அதன் அளவு, வகை - இவற்றை இன்னவென்று சொல்ல அறியோம்.

துறை - நிகழ்ச்சி; அகப்பொருட்டுறை என்பது போல.

கற்பனையா, உண்மையா?

2831. தற்பர மல்ல சதாசிவந் தானல்ல
நிட்கள மல்ல சகள நிலையல்ல
யற்புத மாகி யனுபோகக் காமம்போற்
கற்பனை [1]யின்றிக் கலந்துநின் றானே. (7)

வேறு பாடம்: 1. யன்றிக் (ஆ ஓ) I.

கருத்து: சிவன் சொரூபமே அல்லாமல், தடத்த வடிவங்கள் ஆகிய பரசிவம், சதாசிவன், அருவம், உருவம், முதலியவை அல்லன். இவையெல்லாம் அவனது அருட் கற்பனையினால் வந்த வடிவங்கள். தன் இயல்பாய் உள்ள சொரூப சிவம், அன்பர்க்கு அனுபவப்படும்பொழுது, சிற்றின்பம் எவ்வாறு உண்மையாக அனுபவிக்கப்பட்டாலும், இன்னபடி இருந்தது எனப் பிறர்க்குச் சொல்லவராது உள்ளதோ, அது போல் உண்மையாகவே அனுபவிக்கப்படும். (தடத்த வடிவங்களை நினைத்தும் உணர்ந்தும் அன்பர் இன்புறுவதெல்லாம் பாவனையால் (கற்பனையால்) வரும் இன்பமே).

பேசா இன்பம்

2832. முகத்திற் கண்கொண்டு [1]பார்க்கின்ற மூடர்கா
ளகத்திற் கண்கொண்டு [2]பார்ப்பதே யானந்த
மகட்குத் தாய்தன் மணாளனோ டாடிய
சுகத்தைச் சொல்லென்றாற் சொல்லுமா றெங்ஙனே. (8)

வேறு பாடம்: 1. காண்கின்ற (ஓ) IV. 2. காண்பதே (ஓ) IV.

கருத்து: புறக்கண்ணால் கண்டே இன்பம் அனுபவிக்க எண்ணும் அறிவிலிகளே, (பாவனையால் வரும் அவ்வின்பத்தை விட்டு) உணர்வில் அருள் கலக்க, அருட்கண்ணால் சிவத்தினது சொரூபத்தை - ஆனந்தமே வடிவாக உள்ளதை - உணர்வதே உண்மை அனுபவம். அதனால் உண்டாகும் இன்பமே இன்பம். அதைச் சொல்லுவார் இல்லையே என்றால், எவ்வாறு சொல்ல இயலும்? தாய் புதிதாய் மணம் கொண்ட தன் மகளிடம், 'உன் கணவனோடு இருந்து பெற்ற இன்பத்தைச் சொல்' என்றால், மகளால் கூறவியலுமா? இயலாது. அதுபோல் சொல்ல இயலாது. அது பேசா இன்பம்.

உப்பும் நீரும்

2833. [1]அப்பினி [2]லுப்பென வத்த னணைந்திட்டுச்
செப்பு பராபரஞ் சேர்பர மும்விட்டுக்
[3]கப்புறு [4]சொற்பத மாளக் கலந்தமை
யெப்படி யப்படி யென்னுமவ் வாறே. (9)

வேறு பாடம்: 1. அப்பினை (ஆ) I; அப்பனை (ஓ) I. 2. யுறவென்பறில் வல்ல வனைத்திட்டு (ஓ) I. 3. கற்புறு (ஆ) I. 4. தொம்பத (இ) III.

கருத்து: சிவத்தை உயிர் நெருங்கி, 'சிவம் பராபரம், தான் பரம்' என்று பாகுபடுத்தி உணர்தலை விட்டு, வேறுபடுகின்ற அச்சொற்களையும் மறந்து, சிவத்துடன் ஒன்றிநிற்றல், தண்ணீரில் உப்புக் கலந்தமை எப்படியோ, அப்படி. இந்த அளவிற்குத் தான் சிவானுபவத்தைப் பற்றிக் கூறலாம்.

கப்புறுதல் - கவர்படுதல்; இரண்டாகப் பிரிதல்.

2834. கண்டார்க் கழகிதாங் காஞ்சிரத் தின்பழந்
தின்றார்க் கறியலா மப்பழத் தின்சுவை
பெண்டா னிரம்பி மடவிய ளானாற்
கொண்டா னறிவன் குணம்பல தானே. (உ, ட)

2835. நந்தி யிருந்தா னடுவுத் தெருவிலே
சந்தி சமாதிக டானே யொழிந்தது
வுந்தியி னுள்ளே யுதித்தெழு சோதியைப்
புந்தியி னாலே புணர்ந்துகொண் டேனே. (ஏ, ஔ)

2836. விதறு படாவண்ணம் வேறிருந் தாய்ந்து
பதறு படாதே பழமறை பார்த்துக்
கதறிய பாழைக் கடந்தது கற்பனை
யுதறிய பாழி லொடுங்குகின் றேனே. (அ, ட)

விடய இன்பமா? வீட்டின்பமா?

2837. வாடா மலர்புனை சேவடி வானவர்
கூடா [1]ரரனெறி நாடொறு மின்புறச்
சேடார் கமலச் செழுஞ்சுட ருட்சென்று
நாடா [2]வமுதுற நாடா ரமுதமே[3]. (10)

வேறு பாடம்: 1. ரறநெறி (விசு) (வ) (த) 2. ரமுதுற (விசு) (தி) (வ) 3. வமுதமே (ஆ) I; வமுதே (ஓ) II.

கருத்து; தேவர் நாள்தோறும் சிற்றின்பத்தையே விரும்பி, சிவனை நாடும் நெறியில் வாழ்தலையும், அவன் திருவடியிற் கூடுவதையும் எண்ணார். சகஸ்ராரத் தாமரையில் எழும் சிவசோதியைக் காண்பதையோ, அமுதம் பருகுவதையோ விரும்பிச் சாதனை புரியார்.

2838. அதுக்கென் றிருவ ரமர்ந்தசொற் கேட்டும்
பொதுக்கெனக் காமம் புலப்படு மாபோற்
சதுக்கென்று வேறே சமைந்தாரைக் காண
மதுக்கொன்றைத் தாரான் வளந்தரு மன்றே. (உ, ஔ)

2839. தானு மழிந்து தனமு மழிந்துநீ
டூனு மழிந்து வுயிரு மழிந்துடன்
வானு மழிந்து மனமு மழிந்துபின்
னானு மழிந்தமை நானறி யேனே. (ஆ)

கல்லும் கனிந்தது

2840. இருளும், வெளியும் - இரண்டையும் மாற்றி,
பொருளில் பொருளாய்ப் பொருந்த உள் ஆகி,
அருளால் அழித்திடும் அத்தன் அடிக்கே
உருளாத கல்மனம் உற்று நின்றேனே.

இருளும் வெளியு மிரண்டையு மாற்றிப்
பொருளிற் பொருளாய்ப் பொருந்தவுள் ளாகி[1]
யருளா [2]லழித்திடு மத்த னடிக்கே
யுருளாத கன்மன முற்றுநின் றேனே. (11)

வேறு பாடம்: 1. ளாறி (ஓ) I. 2. வழிந்திடு (த).

கருத்து: அறிபவனும், அறிவும் இல்லை ஆதலின், தெளிவு, தெளிவின்மை என்ற மறுதலை நிலைகள் (இரட்டைகள்) இல்லாத படி செய்து, அறியப்படும் பொருளாகிய சிவத்தில், அச்சிவமாகவே கலக்குமாறு, என்னுள் நின்று, அருளினால் பிற நினைவுகளை எல்லாம் போக்கும் சிவபெருமானது திருவடியில், முன்பு கல் போன்று உருகாமலிருந்த என் மனம், உருகிக் கரைந்து, கலந்து நின்றது.

தலைவ, நினைப் பிரியாத நிலை

2841. ஒன்றிநின் றுள்ளே யுணர்ந்தேன் பராபர
மொன்றிநின் றுள்ளே யுணர்ந்தேன் சிவகதி
யொன்றிநின் றுள்ளே யுணர்ந்தே னுணர்வினை
யொன்றிநின் றேபல வூழிகண் டேனே. (12)

கருத்து: மேலதற்கும் மேலாகிய சொரூப சிவத்தை, அதனோடு ஒன்றி நின்று உணர்ந்தேன். அதுவே சிவகதி. அதுவே என் உணர்வு. அந்நிலையிலே பல காலம் வாழ்ந்தேன்.

169. வரைவுரை மாட்சி

நிறைவில் குறைவுண்டா?

2842. தான்வரை வற்றபி னாரை வரைவது?
தானவ னானபி னாரை நினைவது?
காமனை வென்றக ணாரை யுகப்பது?
தூமொழி வாசகஞ் சொல்லுமி னீரே. (1)

கருத்து: ஆன்மா தான் எல்லையற்ற வியாபகம் ஆகிய பிறகு, உருவம், நிறம், குணம் முதலிய சிற்சில உடையவராகிய ஒருவரை நினைக்க இயலுமா? இயலாது. இந்நிலையில் ஆன்மா சிவமேயாகி விட்டது. இதன்பின் தியானிப்பது எதற்கு? பற்று எல்லாம் விட்ட பேரறிவு பெற்ற ஆன்மா இப்போது எதை விரும்பும்? ஒன்றையும் விரும்பாது.

தூமொழி வாசகம் - குற்றமற்ற விடை. விடை இல்லை என்பது கருத்து. இது உலகத்தாரை முன்னிலைப்படுத்திக் கூறியது.

ஓர் உவமன் இல்லி

2843. உரையற்ற தொன்றை யுரைசெய்யு மூமர்காள்
கரையற்ற தொன்றைக் கரைகாண லாகுமோ
திரையற்ற நீர்போற் சிந்தைதெளி வார்க்குப்
புரையற் றிருந்தான் புரிசடை யோனே. (2)

கருத்து: சிவம் சொல்லைக் கடந்தது. அதைச் சொல்லப்புகும் ஊமைகளே, கரையில்லாத கடலுக்குக் கரை காணும் முயற்சி ஏன்? அலையில்லாத கடல் போல் சிந்தை தெளிந்தால், அந்த ஞானத்தில் சிவம் விளங்கும். அதனை அவ்வாறு உணரலாமேயன்றி, உவமையால் சொல்லி விளக்க வியலாது.

புரை - உவமை.

கலகத்தை விடு, உன்னை ஆய்ந்து பார்

2844. மனமாயை மாயையிம் மாயை மயக்கம்
மனமாயை [1]தான்மாயு மற்றொன்று மில்லை
பினைமாய்வ தில்லை பிதற்றவும் வேண்டா
தனையாய்ந் திருப்பது தத்துவந் தானே. (3)

வேறு பாடம்: 1. தான்மாய (சைவ)

கருத்து: மாயை எனச் சொல்லப்படுவது ஒரு புறம் இருக்க, நம் மனமயக்கமே நாம் தெளிவாக அறியும் மாயையாகும். இந்த மயக்கம் ஒழிந்தால், மாயையின் செயல் வேறு எதுவும் இல்லை. பிற தத்துவங்களை அடக்க வேண்டா. மாயை அது, இது என ஆய்ந்து கொண்டிருக்கவும் வேண்டா. அதைவிட்டு, அகமுகமாகத் தன்னை ஆய்ந்து, (அறிவுக்கு அறிவாக உள்ள சிவத்தை உணர்தலே) மெய்ப்பொருள் உணர்வு ஆகும்.

தான் வரைவு அற்ற பொருள் - வியாபகம் - என அறிந்தால், மாயைச் சார்பு தானே நீங்கும்.

170. அணைந்தோர் தன்மை

சித்தத்தில் நிற்பார்

2845. மலமில்லை மாசில்லை மானாபி மானங்[1]
குலமில்லை கொள்ளுங் குணங்களு மில்லை
நலமில்லை [2]நந்தியை ஞானத்தி னாலே
பலமன்னி [3]யாங்கே பதித்துவைப் பார்க்கே. (1)

வேறு பாடம்: 1. மானக் (இ ஓ) I. 2. நந்தி (தி) 3. யன்பிற் (ஓ) IV.

கருத்து: தம் சித்தத்தில் நிலைபெற்று நின்று, அங்கு (தம் உயிருணர்வில்) ஞானத்தினால் (ஞானமே வடிவான) சொரூப சிவத்தைத் தம்மின் வேறு இல்லை என்னுமாறு பதித்துக் கொள்பவர் சீவன் முத்தர். அவர்களுக்கு ஆணவமலம் இல்லை. ஆசை, கோபம் முதலிய குற்றங்கள் இல்லை. நான் எனது என்ற பற்றுகள் இல்லை. இவர் உறவினர், இவர் அயலார் என்ற பாகுபாடு இல்லை. சத்துவம், இராஜசம், தாமதம் என்னும் குணங்களின் வயப்படுவதும் இல்லை. அனைத்தும் சிவ கருமமே எனக் கொள்ளுதலின், புண்ணிய பாவங்கள் இல்லை.

பலம் என்றசொல் சித்தத்தைக் குறித்தது; ஆகுபெயர். "உரம் ஒருவற்கு உள்ள வெறுக்கை, அஃதிலார் மரம், மக்களாதலே வேறு" என்ற திருக்குறள் காண்க. இஃது ஊக்கமே வலிமை என்றது. பலம் என்ற திருமூலரின் வழக்கில், வலிமை சித்தத்திற்கு ஆகியது. மானம் - நான் என்னும் பற்று. அபிமானம் - எனது என்னும் பற்று. ஞானத்தினாலே -

ஆல் உருபு உடனிகழ்ச்சிப் பொருளில் வந்தது. ஆங்கே - சித்தத்தில்; உயிருணர்வில். ஒருவன் தன் சித்தத்தில் நிலையாக நிற்றலை ஆசிரியர் முன்னும் "நும் சித்தத்து நின்றே நிலைபெற நீர் நினைந்துய்ம்மினே" என்றார் (பாடல் எண். 2080)

நான் வேறு, சிவன் வேறு அல்லோம்!

2846. ஒழிந்தேன் பிறவி உறவு என்னும் பாசம்
கழிந்தேன், கடவுளும் நானும் ஒன்றானேன்
அழிந்தாங்கு, இனி வரும் ஆக்கமும் வேண்டேன்
செழுஞ்சார்பு உடைய சிவனைக் கண்டேனே.

ஒழிந்தேன் பிறவி யுறவென்னும் பாசங்
கழிந்தேன் கடவுளு நானுமொன் றானே
னழிந்தாங் கினிவரு [1]மாக்கமும் வேண்டேன்
செழுஞ்சார் புடைய சிவனைக்கண் டேனே. (2)

வேறு பாடம்: 1. மார்க்கமும் (விசு) (தி)

கருத்து: நான் மீண்டும் மீண்டும் பிறத்தற்கு ஏதுவான ஆணவ மலத்திலிருந்தும், மாயை மலத்தால் உண்டாகிய பந்தத்திலிருந்தும் முழுதுமாக நீங்கினேன். அதைக் கடந்து, என் அறிவு செல்லப் பெற்று, இறையனுபவம் பெற்று, இறைவனோடு ஒன்றிநிற்கும் பேறு பெற்றேன். இது போக்குவரவு அற்ற நிலையை நான் அடைந்ததாகும். ஆதலின் இறத்தலையும், மீண்டும் பிறத்தலையும் தவிர்ந்தேன். மங்கலமான சார்பு ஆகிய சிவனை, நானாக - நானும் சிவனும் வேறின்றி நிற்க - உணர்ந்து கொண்டேன்.

பிறவி உறவென்னும் பாசம் - பிறவிக்கு ஏதுவான அவா என்றுமாம். அழிந்தாங்கு வரும் ஆக்கம் - இறந்தவுடன் வரும் பிறவி. "உறங்கி விழிப்பது போலும் பிறப்பு" என்ற வாசகம் காண்க. (திருக்குறள் : 339).

சிவானந்தம்

2847. ஆலைக் கரும்பும் அமுதும் அக்காரமும்
சோலைத் தெண்ணீரும் உடைத்து எங்கள் நாட்டிடைப்
பீலிக்கண் அன்ன வடிவு செய்வாள் ஒரு
கோலப் பெண்ணார்க்குக் குறிப்பு ஒன்றும் இல்லையே.

ஆலைக் கரும்பு மமுதுமக் காரமுஞ்
சோலைத்தெண் ணீரு முடைத்தெங்க ணாட்டிடைப்
பீலிக்கண் [1]ணன்ன வடிவுசெய் வாளொரு
கோலப்பெண் ணார்க்குக் [2]குறிப்பொன்று மில்லையே. (3)

வேறு பாடம்: 1. ணான (ஆ இ ஒ) I. 2. குறைவொன்று (ஒ ஒ) III.

கருத்து: திருவருள் அனுபவத்தினும் சொரூப சிவானுபவமே நிறைவுடைய தாயிருந்தது என்று கூறுகின்றார்.

பரவெளி யாகிய எமது நாட்டில் கருப்பஞ்சாறு உண்டு. அமுதம் உண்டு. இனிப்புக் கட்டி உண்டு, சோலையில் ஓடும் ஓடையில், இன்சுவைத் தண்ணீரும் உண்டு. இந்நாட்டிற்கு உடையவள் திருவருட்சத்தி ஆகிய பராசத்தி. மயிலினிடத்து உள்ளது போன்ற எழிலார்ந்த வடிவுடைய அவ்வம்மை இவற்றின் எதையும் எனக்கு நல்கியருளும் கருத்து உடையவள் அல்லள்.

கீழ்நிலை முதல் பரவெளி வரை, உயிருக்குச் சிவானுபவம், சிவனது திருவருளால் - அருட்சத்தியால் - வரும். ஆனால் சொரூப சிவத்தை உயிர்க்குக் காட்டுவதுடன் திருவருளின் பங்கு முடிந்துவிடும். அதன்பிறகு, உயிர் சிவத்தைத் தரிசித்தலும், சிவானந்தம் பெறுதலும், உண்மை - அறிவு - இன்பமாக (சத்திய ஞான ஆனந்தமாக) விளங்கும் சிவத்தோடு, சிவமாக நின்றே நிகழும். சிவம் காட்டக் காண்பதன்று இது. சிவம் உயிருக்குத் தன்னையே தருகிறான். ஆதலின், ஆலைக்கரும்பு முதலியன போன்ற சிவானுபவங்களுள், அருட்சத்தி உயிருக்குத் தன் மூலம் நல்கக் கூடியதாக ஒன்றுமில்லை. ஆதலின், அம்மை கருத்தொன்றும் இன்றி விளங்கினாள்'' என்கின்றார். இவையெல்லாம் உவமையாகக் கூறப்படுதலே பரவெளி முடிய உள்ள சிவானுபவம் சுட்டிக் கூறும் இயல்பை உடையது என்பதைத் தெரிவிக்கும். அதையும் கடந்த சிவவெளியில், சொரூப சிவத்தின் ஆனந்தம் சுட்டிக் கூற இயலாதது. திருவருட் சத்தியும் சுட்டிக் கூறப்படுவது என்பார், அதனை மயிலோடு உவமித்து, 'மயில் போன்ற வடிவுடையாள்' என்றார்.

ஒருமையே, பன்மை இல்லை

2848. ஆராலு மென்னை யமட்டவொண் ணாதினிச்
சீரார் பிரான்வந்தென் சிந்தை புகுந்தனன்
சீராடி [1]யங்கே திரிவதல் லாலினி
யார்பாடுஞ் சாரா வறிவறிந் தேனே. (4)

வேறு பாடம்: 1. யெங்குந் (ஆ) IV.

கருத்து: சொரூப சிவம் என்னிடம் பதிந்தது. அது முழு நிறைவு. அது தவிர வேறு எதற்கும் - நான் என்ற தற்போதம் உட்படவேறு எதற்கும் - என் உணர்வில் இடம் இல்லை. எனவே என்னை ஒருவர் மேற்கொள்ளுதல் அல்லது அடக்கியாளுதல் என்பது இல்லை. சத்திலும் சித்திலும் ஆனந்தத்திலும் (உண்மை, அறிவு, இன்பம்) முழு நிறைவாக உள்ள சிவவியாபகமே எங்கெங்கும் உள்ளது. எங்கும் சிவம். ஏகசிவம். இவ்வெண்ணத்தில் திளைத்து, அவ்வியாபகமே என் வாழ்வாக இருப்பதைத் தவிர, தனி ஒருவர்பாற் சார்ந்து நிற்பது என்ற பேச்சுக்கே இடமில்லை.

"அகண்டாகார சிவபோகம் எனும் பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பிப் பூர்ணமாய் ஏக உருவாய்க் கிடக்குதையோ" என்ற தாயுமானவ அடிகள் வாக்குக் காண்க. (30, காடும் கரையும்; 3)

"அங்கே" என்பது வியாபகத்தையும், "யார் பாடும்" என்பது தனியொருவரையும் குறிக்கும். சீர் - சத் - சித் - ஆனந்தம் என்ற செல்வப் பெருக்கு. பாடு - பக்கம்.

எல்லை தாண்டி ...

2849. பிரிந்தேன் பிரமன் பிணித்தது ஓர் பாசம்,
தெரிந்தேன் சிவகதி செல்லும் நிலையை
அரிந்தேன் வினையை அயில் மனவாளால்
முரிந்தேன் புரத்தினை முந்துகின்றேனே.

பிரிந்தேன் பிரமன் பிணித்ததோர் பாசந்
தெரிந்தேன் சிவகதி செல்லு நிலையை
யரிந்தேன் வினையை [1]யயின்மன வாளான்
முரிந்தேன் புரத்தினை முந்துகின் றேனே[2]. (5)

வேறு பாடம்: 1. யயிர்மள (ஆ இ ஒ) I. 2. முந்தி நின்றேனே (ஒ) I.

கருத்து: பிரமனின் படைப்பினால் வந்த மாயாமலத்தின் பந்தத்திலிருந்து விடுபட்டேன், பிறப்புக்கதிகளை விட்டு மாறிச் சிவகதிக்குச் செல்லும் வழியைச் சிவகுருவின் வாயிலாக அறிந்தேன். கூரிய மெய்யுணர்வு என்னும் வாளினால், ஆகாமிய வினையை அறுத்தேன். உடம்பில் வாழ்வதால் வரும் சிற்றறிவு நிலையைக் கடந்து, பேரறிவு பெறும் நெறியில் முன்னேறுகின்றேன்.

என்றும் இனிப்பு

2850. ஒன்றுகண் டீருல குக்கொரு தெய்வமு
மொன்றுகண் டீருல குக்குயி ராவது
நன்றுகண் டீரின் னமச்சிவா யப்பழந்
தின்றுகண் [1]டோர்க்கிது தித்தித்த வாறே. (6)

வேறு பாடம்: 1. டேற்கிது (இ) III.

கருத்து: உலகுக்கு ஒரு தெய்வமான பரம்பொருள், இவ்வுலகோடு 'ஒன்றாய்', அனைத்திலும் பரவி இருப்பதாகும். இதுமட்டுமன்றி, உயிர்ப்பொருள்கள் அனைத்திற்கும் உயிராக - அறிவுக்கு அறிவாக - இருப்பதும் அதுவே. அதன் இனிய பெயர் 'நமசிவாய' என்பது. அப்பெயரின் ஆழ்பொருளை அனுபவத்தில் உணர்ந்தவர்க்கு அஃது இனிமை எதனையும் விட இன்சுவை உடையதாய் இருக்கிறது.

நமசிவாயப்பழம் என்றது, சிவானுபவத்தை. பிற அனுபவம் எல்லாம் ஓர் அளவில் கசந்துவிட, சிவானுபவம் மட்டுமே என்றும் இனித்தது என்றார்.

2851. சந்திரன் பாம்பொடு சூடுஞ் சடாதரன்
வந்தெனை யாண்ட மணிவிளக் கானவ
னந்தமு மாதியு மில்லா வரும்பொருள்
சிந்தையின் மேவித் தியக்கறுத் தானே. (ஆ)

வியாபகத்தின் அங்கம்

2852. பண்டு எங்கள் ஈசன், நெடுமால், பிரமனும்
கண்டு அங்கு இருக்கும் கருத்து அறிவார் இல்லை
விண்டு அங்கே தோன்றி, வெறுமனம் ஆயிடின்
துண்டு அங்கு இருந்து தூறு - அது ஆமே.

பண்டெங்க ளீச னெடுமால் பிரமனுங்[1]
கண்டங் கிருக்குங் கருத்தறி வாரில்லை
விண்டங்கே தோன்றி வெறுமன மாயிடிற்
றுண்டங் கிருந்ததோர் தூறது வாமே. (7)

வேறு பாடம்: 1. பிரமனைக் (ஓ) II.

கருத்து: மகேசுரனும், திருமாலும், பிரமனும், சிவபரம்பொருள் தம்முள்ளே அதிட்டித்து நின்று, படைத்தல், காத்தல், ஒடுக்கல் என்ற மூன்று தொழில்களையும் செய்வித்தலால், அவற்றைச் செய்கின்றனர் என்ற கூற்றின் கருத்தை மாந்தர் அறியார். அம்மூவரும் எவ்வாறு பரம்பொருளின் அங்கமோ, அவ்வாறே மாந்தர் ஒவ்வொருவரும் பரம்பொருளின் அங்கமே. அதனை யாரேனும் மறந்து செயற்பட்டால், ஒரு பொருளிலிருந்து சிதறி விழுந்த துண்டு எவ்வாறு அதன் அங்கமேயாகி, அதனுடன் சேர்ந்து இல்லாத பொழுது பயன்படாதோ, அது போலப் பயன்படார். ஒவ்வொரு வரும் தாங்கள் பரம் பொருள் வியாபகத்தின் ஓர் அங்கமே என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

கண்டு - காண்பதால். பிரமனும் திருமாலும் தமக்கு மேலான பரம்பொருள் உண்டு என்பதை முதலிற் காணாது, பிறகு கண்டு என்ற பொருளும் விளைந்தவாறு காண்க.

அருள்வாழ்வும் சிவவாழ்வும்

2853. அன்னையும் அத்தனும் அன்பு உற்றது அல்லது
அன்னையும் அத்தனும் யார் அறிவார் என்னை
அன்னையும் அத்தனும் யானும் உடன் இருந்து
அன்னையும் அத்தனை யான் புரிந்தேனே.

அன்னையு மத்தனு மன்புற்ற தல்ல
தன்னையு மத்தனு மாரறி வாரென்னை
யன்னையு மத்தனும் யானு முடனிருந்
தன்னையு மத்தனை [1]யான்புரிந் தேனே. (8)

வேறு பாடம்: 1. யான்புரந் (விசு) (தி) (வ) (த)

கருத்து: என்னைப் படைத்த சத்தியும் சிவனுமாகிய தாய் தந்தையர் என்பால் அருள் கொண்டு மெய்யுணர்வை நல்கினரே யன்றி, உலகில் என்னைப் பெற்றெடுத்த தாய் தந்தையர், எனது உயிரின் பக்குவம் அறிந்து உதவுமாறு எங்ஙனம்? சத்தி - சிவம் என் அறிவில் “உடனாக” நிற்க, முதற்கண் அருட் சத்தியை உணர்ந்து வாழ்ந்து, பின்னர்ச் சொரூப சிவத்தை உணர்ந்து, சிவ வியாபகத்தில் வாழ்கின்றேன்.

புரிதல் செயலாற்றுதல், வாழ்தல். இறுதியடியில் “அத்தனையும்” என்ற சொல்லில், உம்மை தொக்கது. இவ்வடியில் ‘முறையே’ என ஒரு சொல் வருவிக்க.

குறிப்பு: இதனையடுத்து ஓ, ஓ சுவடிகளிலும் பதிப்புகளிலும் உள்ள "கொண்ட குறியும்", "தானே திசையொடு" எனத் தொடங்கும் பாடல்கள் முறையே, 'அடியார் பெருமை' 'திதி' என்னும் இயல்களில் வந்தவை. எனவே இங்கு விடப்படுகின்றன.

எமனா? சிவனா?

2854. **நமன்வரின் ஞானவாள் கொண்டே யெறிவன்**
சிவன்வரின் னானுடன் போவது திண்ணம்
பவம்வரும் வல்லினை பண்டே யறுத்தேன்[1]
றவம்வருஞ் சிந்தைக்குத் தானெதி ராமே. (9)

வேறு பாடம்: 1. யரிந்தேன் (அ) III.

கருத்து: மீண்டும் பிறப்பதற்குக் காரணமான வினையை முன்பே நீக்கினேன். என் வாழ்நாள் முடிவில், இறப்பு வந்தால், ஞானம் கொண்டு, அதனைத் தடுப்பேன். சிவக்காட்சி தோன்றி என்னைத் தழுவுமானால், நான் அதில் கலந்து, அதைப் போல வியாபகமாவது உறுதி. என் தவத்திற்குப் பயனாக அவன் காட்சிப் படுவான்.

உலக ஆரவாரம் வேண்டார்

2855. **சித்தஞ் சிவமாய் மலமூன்றுஞ் செற்றவர்**
சுத்த சிவமாவர் தோயார் மலபந்தம்[1]
கத்துஞ் சிலுகுங் கலகமுங் கைகாணார்
சத்தம் பரவிந்து [2]தானாமென் றெண்ணியே. (10)

வேறு பாடம்: 1. பவபந்தஞ் (ஓ) III. 2. தாமாமென் (விசு)

கருத்து: தமது சித்தத்தைச் சிவத்தினிடம் நிறுத்தி, மும் மலங் களையும் வென்றோர், ஆணவ மலத்தால் பிணிப்புறாது, சுத்த சிவமேயாகி நிற்பர். பிறர் கூறும் ஆரவாரச் சொற்களும், புன்மொழியும், மயக்கும் மொழியும் தம்மை அணுக விடார். ஏன் எனின், அவர்கள் பரவிந்து, பரநாதம் ஆகியவற்றை மதிப்பரே அன்றி, பௌதிக நிலையில் உள்ள ஒலிகளை மதியார் ஆதலின்.

சித்தம் சிவம் ஆன நிலையில் உள்ளோருக்கு, ஒலிகளும் பரநாத மாகவே உணரப்படும்.

சித்தத்தில் இருத்துக

2856. நினைப்பும் மறப்பும் இல்லாதவர் நெஞ்சம்
வினைப்பற்று அறுக்கும் விமலன் இருக்கும்
வினைப்பற்று அறுக்கும் விமலனைத்தேடி
நினைக்கப் பெறில், அவன் நீளியன் ஆமே.

நினைப்பு மறப்பு மில்லா தவர்நெஞ்சம்
வினைப்பற் றறுக்கும் விமல னிருக்கும்
வினைப்பற் றறுக்கும் விமலனைத் தேடி
நினைக்கப் பெறிலவ னீளிய னாமே. (11)

கருத்து: நினைத்தலும் மறத்தலும் மனத்தின் செயல்கள். சிவத்தை உயிருணர்வால் இடையறாது உணர்ந்து, அவ்வுணர்வு சித்தத்தில் நிலைக்கச் செய்பவர்க்குச் சித்தம் சிவமாகும் பேறு உண்டாகும். அவனை ஒரு கால் நினைத்து, ஒரு கால் மறந்து, பின்னர் நினைக்க முயன்றால், அவன் அணுக வியலாதவனாவான்.

குருவே சிவம்

2857. சிவபெரு மானென்று நானழைத் தேத்தத்
தவபெரு மானென்று தான்வந்து நின்றான்
நவபெரு மானென்னை யாளுடை நாதன்
பவபெரு மானைப் பணிந்துநின் றேனே. (12)

கருத்து: சொரூப சிவத்தை நான் உணரத் தலைப்பட்டுச் 'சிவமே' என்று அழைத்துப் போற்ற, அந்த வழிபாட்டுக்கு உரிய தலைவனாக, என் உணர்விற்குப் புலப்பட்டான். புதுப் புதுக் காட்சி வழங்கினான். அவனே முன்பு நந்தியாசிரியனாகத் தோற்றம் கொண்டு வந்து என்னை ஆட்கொண்டவன். அவனைப் பணிகின்றேன்.

பவன் - நினைத்த வடிவில் தோன்றுபவன்.

சிவச் செல்வம்

2858. பணிந்துநின் றேன்பர மாதி பதியைத்
துணிந்துநின் [1]றேனினி மற்றொன்றும் வேண்டே
னணிந்துநின் றேனுட லாதிப் பிரானைத்
தணிந்துநின் றேன்சிவன் றன்மைகண் டேனே. (13)

வேறு பாடம்: 1. றேனினிப் பற்றொன்றும் (ஓ) IV.

கருத்து: முழு முதல் தலைவனாகிய சிவனே என் உயிர்த் தலைவன் எனத் தேர்ந்து, அவன் பத்தியில் நிலைத்து நின்றேன். இனிப் பிற தெய்வம் நினையேன். என் உடலால் அவனை நெருங்கி நிற்கும் பேறு பெற்றேன். பதற்றம், வேகம் முதலியன தணிந்து அமைதியாக இருக்கின்றேன். சிவனுடைய தன்மைகளை அறிந்த வண்ணம் இருக்கின்றேன். நான் பெற்ற ஞான - ஆனந்த வாழ்வு இது.

நீ வேறு எனாதபடி
நான் வேறு எனாதபடி

2859. என் நெஞ்சம் ஈசன் இணையடி தான் செய்து
முன்னம் செய்து, ஏத்த, முழுதும் பிறப்பு அடும்,
தன் நெஞ்சம் இல்லாத் தலைவன் தலைவிதி
பின்னம் செய்து, என்னைப் பிணக்கு அறுத்தானே.

என்னெஞ்ச மீச னிணையடி தான்செய்து[1]
முன்னஞ்செய் தேத்த முழுதும் பிறப்படுந்[2]
தன்னெஞ்ச மில்லாத் தலைவன் தலைவிதி
பின்னஞ்செய் தென்னைப் பிணக்கறுத் தானே. (14)

வேறு பாடம்: 1. தாஞ்சேர்ந்து (விசு) (தி) (வ) (த) 2. பிறப்பறுந் (இப்பதிப்புகள்)

கருத்து: நெஞ்சத்தைச் சிவன் சேவடிக்கே என்று ஒப்படைத்து, அவனை நினைத்து வழிபட்ட எனக்குப் பிறவியை முழுதுமாக நீக்கினான். அவன் தற்போதம் இல்லாதவரின் உணர்வில் நிற்பான். அவன் என் ஊழ்வினையை மாற்றி, நான் அவனின் வேறுபடாதபடி செய்தான்.

பிணக்கு - மாறுபாடு என்பதே பொருள் எனினும், மாறுபடுகின்ற ஆணவமலம் முன்பே நீங்கியமையாலும் முத்தி நிலையில் நீங்குவது தற்போதமே யாகையாலும் 'சிவம் வேறு, நான் வேறு' என எண்ணும் மாறுபாட்டைக் குறித்ததாகக் கொள்ளலே பொருத்தம்.

பந்தம் ஒழித்தேன் வந்தான் சிவன்

2860. பிணக்கறுத் தான்பிணி மூப்பறுத் தெண்ணுங்[1]
கணக்கறுத் தாண்டனன் காணந்தி என்னைப்
பிணக்கறுத் தென்னுடன் முன்வந்த துன்பம்
வணக்கலுற் றேன்சிவம் வந்தது தானே. (15)

வேறு பாடம்: 1. தென்றுங் (ஓ) I.

கருத்து: என்னிடம் 'ஒன்றாய்' இருந்து, என் குறைபாட்டை அறிந்த சிவன், ஞானாசிரியனாகத் திருமேனி தாங்கி வந்து, மலம் அறுத்து, பிணி, முதுமை, வாழ்நாள் எல்லை இவற்றை நான் அடையாதவாறு ஆட்கொண்டான். அவன் உணர்த்திய அன்பு நெறியில், நான் முன்பு புலன்வழி மாறி நின்ற மாறுபாட்டை நீக்கிக்கொண்டு, என் பிறவி வந்தமைக்குச் காரணமாகிய மாயைப் பந்தத்தை நீக்கினேன். இத்தவத்தின் பயனாகச் சிவத்தை எளிதாகப் பெறும் பேறு பெற்றேன்.

2861. சிவன்வந்து தேவர் குழாமுடன் கூடப்
பவம்வந் திடநின்ற பாச மறுத்திட்
டவனெந்தை யாண்டரு ளாதிப் பெருமா
னவன்வந்தெ னுள்ளே யகப்பட்ட வாறே. (அ, ஔ)

2862. கரும்புந் தேனுங் கலந்ததோர் காயத்
தரும்புங் கந்தமு மாகிய வானந்தம்
விரும்பியே யுள்ளம் வெளியுறக் கண்டபின்
கரும்புங் கைத்தது தேனும் புளித்ததே. (ட)

எல்லாம் சிவன் செயல்

2863. உள்ள சரியாதி யொட்டியே மீட்டென்பால்
வள்ள லருத்தியே வைத்த வளம்பாடிச்
செய்வன வெல்லாஞ் சிவமாகக் காண்டலாற்
கைவள மின்றிக் கருக்கடந் தேனே[1]. (16)

வேறு பாடம்: 1. கருத்தடைந்தேனே (இ) IV.

கருத்து: சிவன் என்னைச் சரியை முதலிய தவநெறியில் வாழச் செய்து, பந்தத்திலிருந்து மீட்டு, நல்கிய சிவானந்தச் செல்வத்தின்

சிறப்பைப் பாடி, நான் செய்யும் செயல்களை எல்லாம் சிவன் செயலாகவே உணர்தலால், ஆகாமிய வினை சேராமல் போக, அதனால் பிறவியை நீக்கப் பெற்றேன்.

அருளும் கடந்த அனுபவம்

2864. மீண்டார் கமலத்து ளங்கி மிகச்சென்று
தூண்டா விளக்கின் றகளிநெய் சோர்தலும்[1]
பூண்டா ளொருத்தி புவனசூ ளாமணி[2]
மாண்டா னொருவன்கை வந்தது தானே. (17)

வேறு பாடம்: 1. சேர்தலும் (வ) 2. டாமணி (வி) (தி) (வ) (த).

கருத்து: புறப்பார்வை செலுத்தாமல் அகப்பார்வை செலுத்தும் யோகியரின் சகஸ்ராரத் தாமரையில் சோதி விளங்குமாறு, புருவ மத்தியில் ஒளிவீசிய உயிருணர்வை வளப்படுத்திய அருட்சத்தி புவனங்களுக்கெல்லாம் முடிமணி போல்வாள். அவளது அருள் எல்லை பரவெளியுடன் அமைய, அகண்டாகார வெளியில், உரை, உணர்வு கடந்த சொரூப சிவம் 'காட்சி தந்தான்'. இஃது என்னே வியப்பு!

ஒருவன் கைவந்தது - ஒருவனது காட்சி கைவரப்பெற்றது. மாண்ட - திருவாசகத்தில் "உரைமாண்ட உள்ளொளி" என்பது போலக் கொள்க. புவனங்கட்கு மேற்பட்ட பரவெளியில் விளங்கும் பரசிவையைப் "புவன சூளாமணி" என்றார். மாண்டான் - அவளையும் கடந்தவன். சோர்தலும் என்பதில் உம்மை சிறப்பு.

குறிப்பு: இதனை யடுத்துச் சுவடிகளிலும் பதிப்புகளிலும் உள்ள "ஆறே யருவி" என்னும் பாடல் "அட்டதள கமல முக்குண அவத்தை" இயலில் வந்தது. எனவே, இங்கு விடப்படுகின்றது.

ஐம்புலன்கள் ஆர வந்தனை!

2865. அன்பு உள்உருகி அழுவன், அரற்றுவன்,
என்பும் உருக இராப்பகல் ஏத்துவன்,
என் பொன் மணியை, இறைவனை, ஈசனைத்
தின்பன், கடிப்பன், திருத்துவன் நானே.

அன்புள் ளுருகி யழுவ னரற்றுவ
னென்பு முருக விராப்பக லேத்துவ
னென்பொன் மணியை யிறைவனை யீசனைத்
தின்பன் கடிப்பன் றிருத்துவ னானே. (18)

கருத்து: எனது பொன்னும் இரத்தினமும் சிவனே. அவனிடம் அன்பால் மனம் உருகி அழுவேன்; அரற்றுவேன்; இடைவிடாது, எலும்பும் உருகப் போற்றிப் பாடுவேன். இவற்றுக்கு இரங்கி, அவன் அனுபவப்படும் போது, உயிருணர்வில் மட்டுமன்றிப் புலன் உணர்விலும் இன்பம் காண்பேன்.

தின்பன், கடிப்பன் எனச் சுவைப்புலன் மட்டும் கூறினார், ஏனைய புலன்களால் முன்பாக அனுபவித்தது தோன்றுதற்கு. ஐம்புலனுக்கும் இன்பம் நல்கும் ஒரு பொருளைப் பெற்றவர் அதனைக் கண்டும் கேட்டும், முகர்ந்தும் தழுவியும் பின்பு சுவைத்தல் வழக்கு.

திருத்துதல் - அழகு செய்தல். இஃது அனுபவத்தின் ஆராமையைக் காட்டும். இறையனுபவத்தில் மேலும் புதிய காட்சியைக் காண்பதனை, இவ்வாறு கூறினார். 'அணிநலம் பாராட்டல்' என்னும் அகப்பொருள் துறையையும் நினைக.

இது முத்தி

2866. மனம்வி ரிந்து குவிந்தது மாதவம்
மனம்வி ரிந்து குவிந்தது வாயுவும்
மனம்வி ரிந்து குவிந்தது மன்னுயிர்
மனம்வி ரிந்துரை மாண்டது முத்தியே. (19)

கருத்து: என் தவம் பயன் தர, என் உயிருணர்வு வியாபகம் ஆயிற்று. அதனால் பிராணனும் நடுநாடியில் நிலைப்பட்டது. அதனால் உயிருணர்விலிருந்து தற்போதம் நீங்கிற்று. அவ்வியாபக நிலையின் தன்மை யாது எனக் கூறச் சொற்கள் இடந்தரா. இது முத்தியின் நிலை.

171. சூனிய சம்பாஷணை

மாயச் சூது

2867. காயம் பலகை, கவறு ஐந்து, கண்மூன்றாய்,
ஆயம் பொருவது ஓர் ஐம்பத்தோர் அக்கரம்
ஏய பெருமான் இருந்து பொருகின்ற
மாயக் கவற்றின் மறைப்பு அறியேனே.

காயம் பலகை கவறைந்து கண்மூன்றா
யாயம் பொருவதோ ரைம்பத்தோ ரக்கர
மேய பெருமா னிருந்து பொருகின்ற
மாயக் கவற்றின் [1]மறைப்பறி யேனே. (1)

வேறு பாடம்: 1. மறப்பறி (ஓ) I.

கருத்து: ஒரு சூதாடு பலகை. ஐந்து பகடைகள். மூன்று கட்டங்கள். அவற்றுள் நகர்த்தப்படும் காய்கள் ஐம்பத்தொன்று. இச் சூது விளையாட்டு நிகழ்கின்றது. அதனை ஆடுபவர் இருவர் வேண்டு மன்றோ? அவர்களைக் காணோம். இவ்விளையாட்டில், அவர்கள் மறைந்துள்ள மாயத்தை அறிய வியலவில்லை.

இவ்வியல் முழுதும் ஒட்டணி வாயிலாகப் பொருள் உணர்த்தப் படுகின்றது. இப்பாடலில், உவமையால் உணர்த்தப்படும் பொருள் வருமாறு:

ஓர் உடம்பு; ஐந்து பொறிகள்; மனம், புத்தி, அகங்காரம் என்ற மூன்று அகக் உருவிகள்; இவை தவிர உடம்பின் உள்ளே இருக்கும் ஆறு ஆதாரங்களைச் சூழ்ந்து, எண்ண வடிவில் அவற்றுக்கு வலுவூட்டுவனவும், சத்தப்பிரபஞ்சமாக இருந்து, அனைத்து உலகங்களுக்கும் மூலமாய் உள்ளனவுமாகிய ஐம்பத்தோர் எழுத்துக்கள் - இவற்றைக் கொண்டு வாழ்க்கை என்னும் சூதுவிளையாட்டு நடைபெறுகின்றது. ஆனால் இதனை ஆடுபவனாகிய சீவன் (ஆன்மா) மறைந்திருக்கின்றான். அவனது உயிர்க்கு உயிராகச் சிவபெருமானும் மறைந்திருக்கின்றான். ஆனால், 'ஆடுபவன் தான் ஒருவனே' என்று சீவன் எண்ணுகின்றான். மற்றொருவனும் ஆடுகின்றான் என்றோ, அவன் தனக்கு உதவியாக ஆடுகிறானா, எதிராக ஆடுகிறானா, இருவருக்கும் எதிரி வேறு ஒருவனா - என்றோ அவ்விளையாட்டின் நோக்கம் என்ன என்றோ அவன் அறியான்! தான் ஆன்மா என்பதையே அறியான்.

மறைப்பு - திரோபவம். இறைவனது ஐந்தொழில்களுள் ஒன்று. 'கவற்றின் மாய மறைப்பு' எனக் கூட்டுக.

நல்லவழி நடப்போர்

2868. தூறு [1]படர்ந்து கிடந்தது தூநெறி
மாறிக் [2]கிடக்கும் வகையறி வாரில்லை
மாறிக் கிடக்கும் வகையறி வாளர்க்கு
வூறிக் கிடந்ததெ னுள்ளன்பு தானே. (2)

வேறு பாடம்: 1. கடந்து (ஓ) I. 2. கடக்கும் (ஓ) I.

கருத்து: நல்ல ஊர்க்குச் செல்லும் நல்ல வழியொன்று, பயன் படுத்தப் படாமல் சிறு புதர் மண்டிக் கிடந்தது. வேறு இரண்டு வழிகளில் செல்கின்றனர் பலர். அவை அவ்வூர்க்குச் செல்வனவல்ல என்று அவர்கள் அறியார். அதை அறிந்து, நல் வழியில் செல்லும் அன்பரிடம் என் அன்பு பெருகுகின்றது.

நல்ல வழி - சுழுமுனைநாடி. வேறு வழிகள் - இடகலையும் பிங்கலையும். அறிந்தோர் - யோகியர்.

சுட்ட பழம் வேண்டுமா?

2869. ஆறு தெருவில் அகப்பட்ட சந்தியில்
சாறு படுவன நான்கு பனை உள,
ஏறற்கு அரியதோர் ஏணியிட்டு அப்பனை
ஏறலுற்றேன், கடல் ஏழும் கண்டேனே.

ஆறு தெருவி லகப்பட்ட சந்தியிற்
சாறு படுவன நான்கு பனையுள
வேறற் கரியதோ ரேணியிட் டப்பனை
யேறலுற் றேன்கட லேழுங்கண் டேனே. (3)

கருத்து: தொடர்ந்து செல்லும் ஆறு தெருக்கள். அவை கூடும் சந்திகள் இரண்டு, முதல் தெரு தொடங்கும் இடம் ஒன்று, மூன்றாம் தெரு முடியும் இடம் ஒன்று - ஆக நான்கு இடங்களிலும், இடத்திற்கு ஒன்றாக நான்கு பனை மரங்கள் உள்ளன. அவற்றில் சாறு நிரம்பிய பழங்கள் உள. அவற்றைச் சுட்டால் சாறு வெளிப்படும். எளிதில் ஏற வியலாத ஏணி வைத்து, அப் பனை மரங்களில் ஏறினேன். அடுத்து அடுத்து ஏழு கடல்களையும் கண்டேன்.

உவமையால் உணர்த்தப்படும் பொருள் வருமாறு:- மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்கள். ஒவ்வொன்றிலிருந்தும் தொடங்கி, மேல் நோக்கிச் செல்வது சுழுமுனை வழி. இது ஆறு பிரிவுகளாக உள்ளது. இவ்வாறினையும் இரண்டு, இரண்டாய்ச் சேர்த்து மூன்று மண்டலங்கள் ஆக்கப்பட்டுள்ளன. அவை முறையே அக்கினி மண்டலம், சூரிய மண்டலம், சந்திர மண்டலம் என்பவை. சந்திர மண்டலத்தின் முடிவில் தொடங்கும் துவாதசாந்த வெளி அல்லது பரமாகாயம் நட்சத்திர

மண்டலம் எனப்படும். மூலாதாரத்திலிருந்து மூலக்கனலைச் சுழுமுனை வழியே இவற்றில் ஏற்றி, இறுதியாகப் பரமாகாயத்திற்கும் உயிருணர்வு சென்றால், ஆறு ஆதாரங்கள், சகஸ்ராரம் - என்ற ஏழு இட அனுபவங் களையும், அவற்றின் முடிவிடத்தில் அகண்டாகார சொரூப சிவத்தையும் காணலாம். அதனைக் காண்பதே முத்தி.

இவை எல்லாம் முற்போந்த இயல்களுள் கண்டவை. ஏனைய பழங்கள் போலவன்றிப் பனம் பழத்தைச் சுட்டுத்தான் அதன் சாற்றைச் சுவைப்பர். இம்மண்டலங்கட்கு மூலக் கனலை ஏற்ற வேண்டிய அவசியத்தை காட்ட, இவற்றைப் பனம் பழத்தோடு உவமித்தமை சாலப்பொருத்தம்.

அதிசயத் தோட்டம்

2870. [1]வழுதலை வித்திடப் பாகன் முளைத்தது
புழுதியைத் தோண்டினேன் பூசணி பூத்தது
தொழுதுகொண் டோடினர் தோட்டக் குடிகண்
முழுதும் பழுத்தது [2]வாழைக் கனியே. (4)

வேறு பாடம்: 1. வழுதிலை (இ ஒ ஓ) I. 2. வாழக் (சங்)

கருத்து: ஒரு தோட்டம். அதில் கத்தரி விதையை விதைக்கப் பாகற் கொடி முளைத்தது. அந்தவிடத்தில் இருந்த புழுதிமண்ணைத் தோண்டினேன். உடனே பூசணி மலர்ந்தது. அத்தோட்டத்தில் குடியிருந்த குடும்பங்கள் என்னை வணங்கி நீங்கினர். நான் பூசணிக் கொடி வளர்த்தபோது அதில் முழுவதும் வாழைப் பழங்கள் பழுத்தன. இனி, உவமையாற் போந்த பொருள் வருமாறு:

நன்னெறியினின்றும் வழுவிச் சிற்றின்பத்திற் செலவிடும் சுக்கிலத்தை மூலக்கனல் ஆக்கிப் புருவமத்திக்கு ஏற்ற, அங்கு அருட்சத்தி தோன்றினாள். அருளறிவு கொண்டு ஆய்ந்தேன். தத்துவப் பிணிப்பு (தத்துவங்களால் பாதிப்புறுதல்) நீங்கிற்று. என் உணர்வு தூயதாகிச் சகஸ்ராரத்தை அடைந்தது. என் கரணங்கள் (சீவ கரணங்கள்) சிவகரணங்களாயின. சிவானுபவம் பெற்றேன்.

'வழுவுதல்' மருவியது; தொழிலாகு பெயர்; சுக்கிலத்தைக் குறித்தது. (விந்து உற்பனம், விந்துச் செயம் என்னும் இயல்கள் காண்க) பகல், பாகல் என நீண்டது. "ஒன்றவன் தானே, இரண்டவன் இன்னருள்" என்றபடிச் சிவத்தைப் பகுத்து இரண்டாகப் பார்த்தால், சிவன், அருட்சத்தி எனத் தோன்றுவர். விசுத்தி ஆதாரத்தில் குண்டலிசத்தி அருட் சத்தியாக மாறுவதைக் கூறினார். புழுதிப் படலம் என்பது

தத்துவப் படலம்; தத்துவ மறைப்பு. பூசுனை, பூசணி என மருவியது. சுனைப்பூ என மாற்றுக. பிரமரந்திரக் குழியைச் சுனை என்றார். குடிகள் - 36 தத்துவங்கள். வாழை, வாழ்வு அளிப்பது; பெரு வாழ்வு நல்கியருளும் சிவம். ஈண்டுக் கனியே சிவம். வாழை குலையீன்றவுடன் மடியும். அது போல சிவபோதம் தோன்றிய போது தற்போதம் நீங்கிற்று.

என்னைக் கண்டுகொண்டேன்

2871. ஐயென்னும் வித்தினி லானை விளைப்பதோர்
செய்யுண்டு செய்யின் றெளிவறி வாரில்லை
மையணி கண்டன் மனம்பெறி னந்நிலம்
[1]பொய்யொன்று மின்றிப் புகவெளி தாமே. (5)

வேறு பாடம்: 1. பொய்யென்று (இ ஒ) I.

கருத்து: ஓர் அதிசய வயல். அங்கு மிகச் சிறிய தானியங்கட்குரிய விதையை விதைத்து மிகப் பெரிய பழங்களை விளைவிக்கலாம். அதைப் பற்றிய உண்மையை அறிந்தவர் இல்லை. நீல கண்டப் பெருமானது பெருங்கருணையைப் பெற்றால், உண்மையாகவே அவ்வயலுக்குச் சென்று பயிர் செய்யலாம்.

இனி, உவமையாற் போந்த பொருள் வருமாறு: மாயா காரியமாகிய உடம்பைக் கொண்டே, இவ்வுடம்பிலேயே, உயிருணர்வு (ஆன்ம வுணர்வு) பெறலாம். அவ்வுணர்வு உண்டாகத் துணை திரோதான சத்தி - மறைத்தல் தொழிலைச் செய்யும் சத்தி. அவள் நம் உடம்பில், மூலாதாரத்தில் குண்டலி சத்தியாக உறைகின்றாள். அவளை வழிபட்டு, அகவழிபாடாகிய யோக சாதனை செய்தால், அவளாக மாறி உள்ளவளாகிய அருட்சத்தி விசுத்தி ஆதாரத்தில் வெளிப்படுவாள். புருவமத்தியில், ஆக்ஞை ஆதாரத்தில் உயிருணர்விற்கு வலுவூட்டிச் சிவனோடு சேர்ந்து அருள் - ஒளியாகக் காட்சி வழங்குவாள். சிவம் உள்ளொளியாக விளங்கும். அதாவது ஆன்ம விளக்கமும் பதி விளக்கமும் உடம்பின் நாதவிந்து விளக்கத்துடன் இணைந்து, உணர்வுக்குப் புலப்படும். இதுவே ஆன்மா தன்னை அறிதல் (Self - realization). இது முற்றும் இறைவனது கருணையால் எய்தப்பெறுவது. இந்தச் சோதிக் காட்சி உயிரொளி, அதற்குள் அருளொளி, அதற்குள் சிவவொளி என இவ்வாறு இருக்கும்.

நீலகண்டன் என உருவம் கூறியமையால், சிவன் மனித உருவில் ஞானாசிரியனாக வருவதைக் குறிப்பாக உணர்த்தினார்.

ஐ - நுண்ணிய. வித்து எனப்பட்டது உடம்பு. ஆன் - ஆன்மா. செய் - நிலம். ஈண்டுத் திரோதான சத்தி. அதன் தெளிவு - அருட் சத்தியே அவள் என்ற உண்மை.

ஐந்து வயற் சாகுபடி

2872. பள்ளச்செய் யொன்றுண்டு [1]பாழ்ச்செய் யிரண்டுள
கள்ளச்செய் யங்கே கலந்து கிடந்தது
உள்ளச்செய் யங்கே [2]யுழவுசெய் வார்கட்கு
வெள்ளச்செய் யாகி விளைந்தது தானே. (6)

வேறு பாடம்: 1. பாடச்செய் (தி) 2. யுறவுசெய் (ஒ) I.

கருத்து: பள்ளத்தில் உள்ளது ஒரு வயல், மேட்டு நிலத்தில், பாழான இரண்டு வயல்களும் உள்ளன. இவை ஒருவர்க்கு உரியன. இவற்றுடன் அவர் உரிமை கொண்டாடாத வேறு வயல்களும் இருக்கின்றன. அவற்றில் அவர் உழவு செய்தால், நிறைய விளைவு தரும்.

இனி, உவமையால் போந்த பொருள் வருமாறு: சுழுத்தி என்பது ஓர் உணர்வுநிலை. அதில் சித்தம் மட்டும் இயங்கும். சாக்கிரம், சொப்பனம் என்னும் இரண்டு உணர்வு நிலைகள் உண்டு. அவற்றில் மனம், புத்தி, அகங்காரம் என்ற கருவிகள் இயங்கும். இவை தவிரத் துரியம், துரியாதீதம் என்ற உணர்வு நிலைகளும், உடையவனால் உணரப் படாமல் உள்ளன. இவ்வைந்தையும் யோக சாதனையால் பண்படுத்தினால் சிவபோகம் நன்கு விளையும்.

சுழுத்தியில் ஆன்மா, சித்தத்துடன் நின்று ஒருவாறு தன் நிலையில் நிற்றலின் 'பள்ளச் செய்' என்றார். சாக்கிரம், சொப்பனங்களில் அஃது மாயை வசப்பட்டுக் கிடத்தலின் 'பாழ்ச்செய்' என்றார். துரிய, துரியாதீதங்களின் உரிமை தோன்றாமையின் 'மறைவான செய்'என்ற பொருளில் 'கள்ளச் செய்' என்றார்.

கும்பகம் வேண்டா, குடுமிக்கு ஏற்றுக.

2873. மூ அணை ஏறும் உழுவது முக்காணி
தா அணை கோலித் தறியுறப் பாய்ந்திடும்
நா அணை கோலி, நடுவில் செரு உழார்
கால் அணை கோலிக் களர் உழுவாரே.

மூவணை [1]யேறு முழுவது முக்காணி
[2]தாவணை [3]கோலித் [4]தறியுறப் பாய்ந்திடும்
[5]நாவணை கோலி நடுவிற் செருவுழார்
[6]காலணை கோலிக் களருழு வாரே. (7)

வேறு பாடம்: 1. யேரு (இ ஓ) II. 2. தாமணி (ஓ) II. 3. கோலின் (த) 4. தறியிற் (இ ஓ) I. 5. நாவினிக் (ஓ) I. 6. காலனைக் (ஓ ஓ) I.

கருத்து: மூன்று இணை எருதுகள். அவை உழும் நிலம் முக்காணி. அவை மூன்று இணையும் மூன்று பக்கமாகத் தாவுகின்றன. அதைத் தடுத்தால், தறியிலேயே பாய்ந்திடும். அவற்றை நடுவழியிலே செலுத்தி, நடுவில் உள்ள (பெரிய) வயலை உழுது பண்படுத்தா தோர், வடிகாலை மட்டும் அமைத்துக் களர் நிலத்தை உழுகின்றார்.

உவமையாற் போந்த பொருள் வருமாறு: இடைகலை, பிங்கலை, சுழுமுனை என்ற மூன்று நாடிகளின் வழியேயும் இயங்கும் மூச்சுக் காற்று, மனிதருக்கு, முதலிரண்டு நாடிகளில் மட்டும் மாறி மாறி இயங்கும். அக்காற்று மூலாதாரத்தில் உள்ள சத்தியைச் செயல்கட்குப் பயன்படுத்த உதவுகின்றது. (மூலாதாரத்தில் உள்ள சத்தியே உயிர் ஆற்றல். அதுவே மூலக்கனல் என்றும் வழங்கும். மூச்சுக் காற்றாகிய பிராண வாயு அவ்வாற்றலை வலுப்படுத்தும்.) மூலாதாரம் முக்கோண வடிவம் உடையது. யோகப் பயிற்சியின் உறுப்பாகிய பிராணாயா மத்தினால், மூச்சுக் காற்றுச் சுழுமுனை நாடியில் இயங்கும். அக்காற்றை வாயின் அண்ணாக்குப் பகுதியில் உள்ள அடைப்பைத் திறந்து, தலையுச்சிச் சகஸ்ராரத்திற்குச் செலுத்தினால், இறையனுபவம் பெறலாம். அவ்வாறு அன்றி, மூச்சுக் காற்றைக் கும்பகம் செய்து, அடயோகம், குண்டலி யோகம் முதலியன செய்து, விந்து ஆற்றலை வீணாக்குகின்றனர்.

உயிருணர்விற் சிவத்தை எய்துதலே சிவ யோகத்தின் குறிக்கோள். மூச்சைக் கட்டிச் சித்துப் புரிவதன்று. இது மலயோகம். அசட்டு யோகம்.

கிளியை வளர்த்து . . .

2874. ஏத்தம் இரண்டு உள, ஏழு துலா உள,
மூத்தான் இறைக்க, இளையோன் மடுத்தநீர்
பாத்தியில் பாயாது, பாழ்ப் பாய்ந்து போயிடின்
கூத்தி வளர்த்ததோர் கோழிப்புள்ளாமே.

[1]ஏத்த மிரண்டுள வேழு துலாவுள[2]
மூத்தா னிறைக்க விளையான் மடுத்தநீர்[3]
பாத்தியிற் பாயாது பாழ்ப்பாய்ந்து போயிடிற்
கூத்தி வளர்த்ததோர் கோழிப்புள் ளாமே. (8)

வேறு பாடம்: 1. ஏற்ற (ஓ) III; (இதன் மரூஉவே 'ஏத்தம்') 2. துரவுள (ஓ) II. 3. படுத்தநீர் (இ ஓ) I.

கருத்து: ஏத்த மரங்கள் ஏழு உள்ளன. நீர் இறைத்தல், அதைப் பய்ச்சுதல் என ஏத்தச் செயல் இரண்டு. இவற்றுள் இறைத்தலை அண்ணன் மேற்கொள்கிறான். மற்றதைத் தம்பி செய்கிறான். தண்ணீர் பாத்தியில் பாய்ந்து வயலுக்குச் செல்ல வேண்டும். அப்படியின்றிப் பாத்தியிலேயே விழாமல், வெளியே பாய்ச்சப்பட்டு வறிதே ஓடினால், ஏத்தச் செயல், விலைமகள் வளர்த்த கோழிக் குஞ்சு பறவையாக வளரும் முன்னே, காமுகர் கைப்பட்டு, உணவாகி இறப்பது போல, வயலில் உள்ள பயிருக்குப் பயன்படாமல் வீணாகும்.

ஏத்தச் செயல் புள்ளின் (அழிவு போல) ஆகும் என வினை முடிவு செய்க.

இல்லக் கிழத்தியாயின், தலைவன் அவளிடம் மலரினும் மெல்லிதாய்க் காமம் துய்க்குமாப் போலே, அவள் பேணும் பொருளையும் காப்பான். ஆதலின் அவனை விலக்கிக் காமக் கிழத்தியைக் கூறினார்.

இனி, உவமையாற் போந்த பொருள் வருமாறு: மூச்சுக்காற்றின் இயக்க வழிகள் இரண்டு. அவை இடைகலையும் பிங்கலையும். அஃது இயங்கும் இடம் ஏழு தாதுக்களும் உள்ள உடம்பு. மூலாதாரத்தில் தொடங்கும் மூச்சின் இயக்கம் இடைகலை என்ற சந்திர கலையில் இயங்கினால், மணிபூரகத்தின் அருகே உள்ள சுக்கிலப் பையில் உள்ள சுக்கிலம் மேல் நோக்கும். அது பிங்கலையில் இயங்கினால், சுக்கிலம் (அல்லது அதன் சக்தி) பாய்ச்சப்படும். இவ்விரண்டும் சமமாகப் பங்கு ஏற்குமாறு, மூச்சு நடுநாடியாகிய சுழுமுனையில் இயங்கினால், சுக்கிலம் மூலக்கனலால் எரிக்கப்பட்டு, சக்தியாகி, சுழுமுனை வழியே மூச்சுக் காற்றுடன் இணைந்து, மேல் நோக்கி ஏறும். இஃதன்றி இடைகலை, பிங்கலைகளில் தனித் தனியாக, மூச்சுமாறி மாறி இயங்கினால், (சாதாரணமாக, இவ்வாறே இயங்குகின்றது.) விந்து சக்தி வீணாகும்.

பால் தராத பசு எதற்கு?

2875. பட்டிப் பசுக்க ளிருபத்து நாலுள
குட்டிப் பசுக்களோ ரேழுள வைந்துள
[1]குட்டிப் பசுக்கள் குடப்பால் சொரியினும்
[2]பட்டிப் பசுவே பனவற்கு வாய்த்ததே. (9)

வேறு பாடம்: 1. பட்டிப் (சங்) 2. அட்டிப் (சங்)

கருத்து: பட்டியில் உள்ளமையே யன்றிப் பால் தராத, கன்றீனாப் பசுக்கள் 24 உள. கன்றோடு கூடிய பசுக்கள் ஏழு ஓரினமாகவும், ஐந்து மற்றோர் இனமாகவும் உள்ளன. கன்றினை ஈன்ற இப்பசுக்கள் ஒவ்வொன்றும் ஒரு குடம் பால் தருவன. ஆயினும், பார்ப்பானுக்குப் பட்டிப் பசுக்களே கிடைத்தன.

உவமையாற் போந்த பொருள் வருமாறு: ஆன்ம தத்துவம் 24. இவை ஆன்மாவால் நுகரப்படுவனவே தவிர, அவனை உணர்த்துவனவும் உயர்த்துவனவும் அல்ல. வித்தியா தத்துவங்கள் ஏழும், சிவதத்துவங்கள் ஐந்தும் உணர்த்தும்; உயர்த்தும். ஆனால், சாதாரணமாக, மாந்தர் ஆன்ம தத்துவங்களைப் பயன்படுத்துவதோடு அமைகின்றனர். ஏனைய தத்துவங்களை அறியவும், அவற்றால் தம்மை உணரவும், உயரவும் முயல்வதில்லை.

காற்றால் கறக்கும் பசு

2876. ஈற்றுப் பசுக்க ளிருபத்து நாலுள
ஊற்றுப் பசுக்க ளொருகுடம் பால்போதும்
காற்றுப் பசுக்கள் கறந்துண்ணுங் காலத்து
மாற்றுப் பசுக்கள் வரவறி யோமே. (10)

கருத்து: அண்மையில் ஈன்ற பசுக்கள் 24 உள்ளன. (அவற்றின் பால் பயன்படாது.) பால் ஊறும் தண்மையுடைய பசுக்கள் 12 உள்ளன. அவை ஒரு குடம் பால் தரும் தன்மை உடையன. காற்றைப் போல எளியனவாகிய அவற்றிடமிருந்து பால் கறந்து பருகும்பொழுது, அதன் சுவையில், மற்ற பசுக்கள் அங்கு வந்தனவா என்றோ, நின்றனவா என்றோ நாம் அறியோம்.

உவமையாற் போந்த பொருள் வருமாறு:- ஆன்மீக உயர்வுக்குப் பயன்படாத ஆன்ம தத்துவங்கள் 24 உள்ளன. ஆனால் உணர்வைப்

பெருக்கி, உயர்வைத் தரும் வித்தியா தத்துவங்களும், சிவ தத்துவங்களும் கண்டுகொண்டு பயன்கொள்ளப்பட்டால், சாதனை யின் மூலம் - மிக எளிய பிராணயாமப் பயிற்சியில் மூலம் - அவற்றை இனங்கண்டு, பயன்கொண்டால், ஆன்ம தத்துவங்கள் இருப்பதையே நாம் உணர மாட்டோம்.

காற்றுப் பசு - உவமைக்கும் பொருளுக்கும் முறையே, காற்றுப் போன்ற பசு என்றும், காற்றால் (மூச்சுக் காற்றால்) கறக்கும் குட்டிப் பசுக்கள் (வித்தியா, சிவ தத்துவங்கள்) என்றும் கொள்க. காற்று ஆன்ம தத்துவங்களுள் ஒன்றாயினும் அது ஒன்று மட்டும் யோக சாதனையால் வித்தியா தத்துவங்களைப் பயன்கொள்வதற்கும் சிவதத்துவங்களை உணர்வதற்கும் உதவுகின்றது. மிக உயர்ந்த இறையனுபவமான பரவெளி, சிவவெளி அனுபவங்கள் வாய்க்கும்பொழுது மூச்சுக்காற்றின் இயக்கம் நின்றுபோகும். இதற்குக் 'கேவல கும்பகம்' எனப் பெயர்.

பொன் செம்பாயிற்று

2877. தட்டா னகத்திற் றலையான மச்சின்மேற்
[1]பொட்டா யெழுந்தது [2]செம்பாய் மலர்ந்தது
வட்டம் படவேண்டி வாய்மை மடித்திட்டுத்[3]
தட்டா னதனைத் தகைந்துகொண் டானே. **(11)**

வேறு பாடம்: 1. மட்டா (ஆ இ) I; மொட்டா (விசு) (தி) (வ) (த) 2. செம்பான் (விசு) (தி) (வ) 3. பறித்திட்டு (ஆ) II; மதித்திட்டு (ஓ) I; மறைத்திட்டு (த).

கருத்து: பொன்வினைக் கலைஞர் ஒருவரது வீடு. அதில் உயரமான மாடி. அங்கு அவர் பொட்டுப் போன்ற சிறிய அளவுத் தங்கத்தில் நிறையச் செம்பு சேர்த்து அணிகலம் செய்தார். தங்கமாக இருந்த மூலப்பொருள் செப்பு நகையாக உருக் கொண்டது. அவர் இலாபம் கருதி, உண்மையை மறைத்து, அதனைப் பொன்னகை என்றே கூறினார். இனி, உவமையாற் போந்த பொருள் வருமாறு: யோகியின் உடம்பில், ஆகாய மண்டலம் எனப்படும் தலையில், புருவமத்தியில் ஒளியாகத் தோன்றிய சிவம், பிறகு யோகி சிவத்தை வான் வெளியாகிய பரமாகாயத்திலும் 'காண' விரும்பி, வாயின்கண், நாவைத் திருப்பி மடித்துக் கேசரி முத்திரை உண்டாக்கி, மூச்சுக்காற்றை அண்ணாக்குப் பகுதியில் உள்ள கதவின் வழியாக **(Epiglottis)** தலையுச்சிக்குச் செலுத்துவான். அவனது உயிர் ஆற்றலும், உயிருணர்வும் திருவருளின் ஆற்றலால் உந்தப்பெற்று அங்குச் செல்லும். அந்தச் சாதனையின் நிறைவில்,

சகஸ்ராரத் தாமரை நிமிர, அதன் மேல், செவ்வொளியாகச் சிவவொளி காட்சி தரும்.

சித்த விருத்தியைத் தடுத்தவன் தட்டான். பொட்டு - புருவமத்தி. ஆகுபெயராய், அங்குச் சாக்கிரத்தில் உள்ள உயிருணர்வைக் குறித்தது. செம்பு - செம்மை. ஆகு பெயராய்ச் சிவத்தைக் குறித்தது. ஆன்மா சிவமாயிற்று என்றார். அவ்வாறு ஆவதற்கு முன்னே "தட்டான் வட்டம் பெற வேண்டி ... தகைந்து கொண்டான்" எனக் கொள்க. அதனை - உயிருணர்வை. வட்டம் - இலாபம்; ஆகாயம்.

சிவானந்தத்திற்கு விதை

2878. அரிக்கின்ற நாற்றங்கால் அள்ளற் கழனி
திரிக்கின்ற ஓட்டகம் சிக்கெனக் கட்டி
நரிக்கின்ற நல்லான் கறவையைப் பூட்டின்
விரிக்கின்ற வெள்ளரி வித்து வித்தாமே.

அரிக்கின்ற நாற்றங்கா [1]லள்ளற் கழனி
திரிக்கின்ற [2]வோட்டகஞ் சிக்கெனக் கட்டி
[3]நரிக்கின்ற நல்லான் கறவையைப் பூட்டின்
விரிக்கின்ற வெள்ளரி வித்துவித் தாமே. (12)

வேறு பாடம்: 1. லல்லற் (ஓ) I. 2. வொட்டஞ் (விசு) (தி) (வ), வோட்டஞ் (த) 3. வரிக்கின்ற (ஓ) II; யரிக்கின்ற (ஆ இ) I.

கருத்து: தண்ணீர் வேரை அரித்துச் செல்லும் நாற்றங்காலாக இருந்தால், அது நல்ல வயலை, விளையா வயலாக்கிவிடும். ஆதலால் தண்ணீர் நில்லாமல் ஓடுவதற்குக் காரணமான மேடு பள்ளத்தைச் சீராக்கி, வியத்தகும் பசுக்களை ஏரில் பூட்டி உழுதால், நாம் விதைக்கும் தானிய வித்து, மேலும் பலமடங்கு விதைகளைப் பெற வழி வகுக்கும்.

இனி, உவமையாற் போந்த பொருள் வருமாறு: சிற்றின்ப வேட்கையால் சுக்கிலம் வீணாக்கப்படுகின்ற சாதாரண வாழ்க்கையில், ஆன்மீக உயர்வு அடைய, ஒருவன் விரும்பினால், யோக சாதனை பயில வேண்டும். அதில் சுக்கிலம், கீழ் நோக்குதற்குக் காரணமான அபான வாயுவை, போகாமல் தடுத்து, அதையும் பிராண வாயுவாக. மேல் முகமாக ஏற்ற வேண்டும். வியத்தகும் ஆற்றல் உடைய பிரணவத்தையும் திருவைந்தெழுத்தையும் தியானித்து மூலாதாரத்தில்,மூலக் கனலை மூட்டினால், குண்டலி சத்தியின் அருளால், சுக்கிலம் எரிந்து,

சக்தியாகிச் சுழுமுனை நாடியின் வழியே ஏறி, ஆதாரங்களில் பரவி, சகஸ்ராரத்திற்கும் ஏறி, சிவபோகத்திற்கு வித்தாகும்.

நாற்றங்கால் - நாற்று வளரும் இடம். விந்து உற்பத்தி. அள்ளல் - சேறு; உண்ட உணவு. கழனி - வயல்; உடம்பு. நரிக்கின்ற - வியத்தக்க. ஆன் கறவை - பசு; நாத தத்துவம். இங்குப் பிரணவமும் திருவைந்தெழுத்தும். வெள்ளரி வித்து - சுக்கிலம்.

அருட் பயிர் - சிவக்கதிர்

2879. [1]இடாக்கொண்டு [2]தூவி யெருவிட்டு வித்திக்
[3]கிடாக்கொண்டு பூட்டிக் கிளறி முளையை
[4]மிடாக்கொண்டு [5]சோறட்டு மெள்ள விழுங்கார்
[6]கிடாக்கொண்டு செந்நெ லறுக்கின்ற வாறே. (13)

வேறு பாடம்: 1. இடர்க்கொண்டு (விசு) 2. நூவி (விசு) 3. கிடர்க் கொண்டு (விசு) கிடாய்க்கொண்டு (த) 4. மிடர்க்கொண்டு (விசு) யிடாக்கொண்டு (ஓ) I; விடாக்கொண்டு (இ) V. 5. சோறிட்டு (ஆ) I. 6. ரடர்க் கொண்டு (விசு) (த).

கருத்து: கூடையில் வைத்து எருவையும், விதையையும் வயலில் தூவி, விதைத்து, காளைகளைக் கலப்பையிற் பூட்டி உழுது, அதனால் வித்து முளைத்து வளரச்செய்து (கதிரை அறுத்து, வீடு கொணர்ந்து) பானையில் இட்டுச் சோறு சமைத்து, மெல்லென உண்ணாதோர், காளையைக் கொண்டு உழுது, செந்நெல்லை அறுவடை செய்தும் என்ன பயன்?

இனி, உவமையாற் போந்த பொருள் வருமாறு: நடுநாடி இயக்கம் உடைய பிராணவாயுவை, மேல் முகமாக, தலையுச்சிவரை ஏற்றி, உயிருணர்வை ஆக்ஞை ஆதாரத்தில், நேரே இயங்கச் செய்து, பிரணவம், திருவைந்தெழுத்து - ஆகிய நாத தத்துவத்தைத் தியானித்து, அதை மூச்சின் இயக்கத்துடன் இரண்டற இணைத்து, மேலோட்டமாகப் பார்ப்பவர்க்குக் குண்டலி சத்தியாகத் தோன்றும் அருட்சத்தியை வெளிப்படச் செய்து, அவ் அருட் சத்தியால் சிவத்தை உணர்ந்து, *அதனுடன் கலந்து சிவானந்தம் பெறவேண்டும்.* இவ்வாறு, மூச்சு இயக்கத்தைப் பயன்கொள்ளாதவர், இடைகலை, பிங்கலை நாடிகளில், மூச்சு மாறி மாறிச் சென்று உடலுக்கு வலிமை தர, சிறந்த உலக இன்பங்களை அனுபவிக்கின்றனர். அதனால் பெறும் பயன் என்ன? ஒன்றும் இல்லை.

இடா - கூடை; நடுநாடி (சுழுமுனைநாடி). எரு - உரம்; பிராண வாயு. வித்து - விதை; உயிருணர்வு. கிடாய் - கடா - காளை; நாத தத்துவம். முளை கிளறுதல் - கிளறினால் (உழுதால், அதன் பயனாக) விதை முளைவிட்டு, மேலே தலை காட்டும். அந்தப் பயிர் அருட்சத்தி. சோறு அடுதல் - அருள் உணர்த்தச் சிவத்தை உணர்தல்.

சிவானந்தப் பெருக்கு

2880. விளைந்து கிடந்தது மேலைக்கு வித்து[1]
விளைந்து கிடந்தது மேலைக்குக் காதம்
விளைந்து [2]கிடந்த விளைந்துகொள் வார்க்கு
விளைந்து கிடந்தது [3]மேலைமுக் காதமே. (14)

வேறு பாடம்: 1. வித்தது (விசு) (தி) (வ) 2. விளைந்து (ஓ ஓ) I. 3. மேலுமுக் (ஓ ஓ) II; மேவுமுக் (விசு).

கருத்து: வயலில் ஏராளமாக விளைந்து கிடக்கும் கதிர்கள் இப்போது உணவாதலோடு, எதிர் காலத்தில் விளைக்க விருக்கும் பயிருக்கு வித்தும் ஆகும் என்று வைத்தனர். அவ் எதிர்காலமும் வந்தது. பயிர் விளைவு ஒரு காத தூரத்திற்கு இருந்தது. அத் தானியங்களை வித்தாக வைத்திருந்து இட்டு, விளைவிக்க, முன் விளைந்த ஒரு காதம் அன்றி, மேலும் மூன்று காத தூரம் விளைந்தது.

இனி, உவமையாற் போந்த பொருள் வருமாறு: உடம்பில் விளையும் சுக்கிலம் சிவானுபவத்துக்கு உதவுவது ஆகும். யோகி இவ்வாறு அனுபவம் பெற்றபோது, முதலில் ஆக்ஞை ஆதாரத்தில், மத்திய சாக்கிர உணர்வு நிலையில் அனுபவம் பெற்றான். அதனைப் பயன்படுத்திச் சகஸ்ராரத்தில், சுத்த வெளியில், சுத்தாவத்தைகளில் அனுபவம் எய்தினான். அடுத்துப் பரவெளியிலும், பின்னர்ச் சிவ வெளியிலும் சிவானந்தம் பெற்றான்.

மேலை (1 ஆம் அடி) - எதிர் காலம். மேலை (2 ஆம் அடி) - தலையுச்சி. மேலை (4 ஆம் அடி) தலையுச்சியும் பரமாகாயமும். காதம் - ஏழரை நாழிகை வழி (மூன்று மணி நேரம் நடக்கும் வழி) மேலைக்குக் காதம் - தலையுச்சியை உணர்வு சென்று அடைய ஏழரை நாழிகை உள்ள போது. மேலை முக் காதம் - சுத்த வெளி முதலிய மூன்றும் தம்முள் ஏழரை நாழிகைத்) தொலைவில் உள்ளன. (யோகியின் அனுபவத்திற் கண்டதைக் கொண்டு இவ்வாறு ஆசிரியர் கூறினார் போலும்.)

குண்டலியின் தரம்

2881. களர் உழுவார்கள், கருத்தை அறியோம்,
களர் உழுவார்கள் கருத்திலும் இல்லை
களர் உழுவார்கள் களரில் முளைத்த
வளர் இள வஞ்சியின் வாய்த்தலும் ஆமே?

களருழு வார்கள் கருத்தை யறியோங்
களருழு வார்கள் [1]கருத்திலு மில்லை
களருழு வார்கள் களரின் முளைத்த
வளரிள வஞ்சியின் [2]வாய்த்தலு மாமே. (15)

வேறு பாடம்: 1. கருதலு (ஒ) II. 2. மாய்தலு (விசு) (தி) (வ) (த).

கருத்து: விளையாத களர் நிலத்தில் சிலர் உழுகின்றனர். அவரது எண்ணத்தை அறியோம். உயர் பயன் கொள்ளுதல் அவரது கருத்தாகத் தோன்றவில்லை. அந்நிலத்தில் வஞ்சிக்கொடி வளர்ந்தது. அதனால் அவர் மிக்க பயன் கொள்ளக் கூடுமா? கூடாது.

இனி உவமையாற் போந்த பொருள் வருமாறு: சிலர் குண்டலி சத்தியைத் தியானித்து, மூலக் கனலை ஆக்ஞைக்கு ஏற்றுவர். உயிருணர்வும் பெறுவர். ஆனால், அவ்வுணர்வால், அவர் உணர எண்ணும் (நாடும்) உணர்வு என்ன? யாம் அறியோம். அவரும் அறியார். அவ்வாறாதலின், குண்டலி சத்தியால் அவர்க்கு என்ன நன்மை விளையும்?

சிவானந்தப் பேறு அருட் சத்தியால் கிடைக்கப் பெறுமே யன்றிக் குண்டலி சத்தியால் அன்று. ஆதலின் சிவயோகம் பயன் தருமே யன்றிக் குண்டலி யோகம் பயன் தராது என்றார்.

வளர்கின்ற சிறுமியாகிய குண்டலி எனத் தொனிப் பொருள் விளைந்து, சிறுமி எங்ஙனம் இன்பம் தருவாள்? அருட்சத்தி ஆகிய மங்கையல்லளோ அதைத் தருவாள் - என்ற பெற வைத்தமை ஒரு நயம்.

சொரூப சிவானந்தம்

2882. கூப்பிடு கொள்ளக் குறுநரி; கோட்டகத்து
ஆப்பு இடு பாசத்தை அங்கியுள் வைத்திட்டு,
நாள் பட நின்று, நலம்புகுந்து, ஆயிழை
ஏப்பட, இல்லத்து இனிது இருந்தானே.

[1]கூப்பிடு [2]கொள்ளக் [3]குறுநரி கோட்டகத்[4]
[5]தாப்பிடு பாசத்தை யங்கியுள் வைத்திட்டு
[6]நாட்பட நின்று நலம்புகுந் தாயிழை
[7]யேப்பட வில்லத் தினிதிருந் தானே[8]. (16)

வேறு பாடம்: 1. கூப்பிட்டுக் (ஆ ஓ) I. 2. கொள்ளாக் (இ ஓ) I. 3. குறுநரிக் (சங்) 4. கோட்டத் (இ) I; (முற்காலத்தில் குறில் ஒகர உயிர் மெய்க்கும், நெடில் ஓ - கார உயிர்மெய்க்கும் ஒரே வகைக் கொம்பு இட்டமையால், பதிப்புகள் 'கொட்டகத்' என்று பாடங் கொண்டன போலும்.) 5. தாப்பிட்டுப் (ஓ) I. 6. நாட்பட்டு (ஆ) IV. 7. யேற்பட (ஓ) II; (உண்டாதல் என்ற பொருளில் உள்ள ஏற்படுதல் பிற்கால வழக்கு.) 8. தானே (அ) I; தாரே (ஆ) II.

கருத்து: நரிகள் ஊளையிடும் அக்கானகத்தில் அமைந்த சிற்றரணோடு கூடிய வீட்டில், அழகிய மனைவியுடன் வாழ்ந்த ஒருவன், ஒருநாள் அவள் யாரோ ஒருவர் எய்த அம்பினால் உயிர் இழக்க, அவளுடன் தன்னை இணைத்து வைத்திருந்த பந்தத்தை, அவளது உடலுடன் தீயில் வைத்து எரித்துவிட்டு, மனைக்கு மீண்டான். நாள் பல சென்றன. நன்மைகள் உண்டாயின. அவற்றை அனுபவித்து மனையில் இனிது வாழ்ந்தான்.

இனி, உவமையாற் போந்த பொருள் வருமாறு: உடம்பில் இருந்து வாழும் வாழ்வில், ஐம்பொறிகளினால் உண்டாகும் ஆசைப் பெருக்கத்தின் இடையே, அவ் ஆசைகளில் மனத்தைச் செலுத்தும் போது, மூச்சுக்காற்று, இடைகலை பிங்கலைகளில் மாறி மாறி இயங்கிப் பயனற்ற 'சங்', 'அங்' என்ற ஒலிகளை எழுப்ப, அவற்றால் சித்தம் தடுமாறாமல், சுழுமுனை இயக்கம் என்ற அரணை அமைத்துக் கொண்டு, தன் அறிவில் அருட்சத்தி பதியப் பெற்று, அருள் - அனுபவங்களைப் பெற்று, ஒருநாள் அருட் சத்தி சிவத்துடன் கலந்துவிட, அவன் அவள் துணையை நாடாமல், சிவத்தையே நாடி, சொரூப சிவத்தைப் பெற்றான்.

கூப்பிடு - ஊளையிடுதல், ஒலித்தல்; முதனிலைத் தொழிற்பெயர். இதில் இரண்டன் உருபு தொக்கது. கோட்டகம் - மதிலுடன் கூடிய இருக்கை. யாப்பு - கட்டுதல், இணைத்தல். பாசம் - அன்பு. அங்கி - தீ, மூலக்கனல். ஆயிழை - மனைவி; அருட் சத்தி. ஏ - அம்பு; சிவன். இல்லம் - மனை; அகண்ட வெளி.

கொண்டு கூட்டு: குறுநரி கூப்பிடு கொள்ள, கோட்டகத்து ஆயிழை ஏப்பட, ஆப்பிடு பாசத்தை அங்கியுள் வைத்திட்டு, நாட்பட நின்று, நலம் புகுந்து இல்லத்து இனிது இருந்தானே'' எனக் கூட்டுக.

மனைத் தலைவன் என்பதும் யோகி என்பதும் முறையே உவமைக்கும், பொருளுக்கும் தோன்றா எழுவாய்.

தாய்ப்பால் வேண்டா

2883. மலைமேல் மழை பெய்ய, மான் கன்று துள்ள,
குலைமேல் இருந்த கொழுங்கனி வீழ,
உலைமேல் இருந்த உருப்பு என, கொல்லன்
முலைமேல் அமுதம் ஒழிய வைத்தானே.

மலைமேன் மழைபெய்ய மான்கன்று துள்ளக்
குலைமே லிருந்த கொழுங்கனி வீழ
வுலைமே லிருந்த [1]வுருப்பெனக் கொல்லன்
முலைமே லமுத [2]மொழியவைத் தானே. (17)

வேறு பாடம்: 1. வுறும்பிணக் (ஒ) I; வுறுபிணக் (ஆ இ) I; வுறுப்பெனக் (விசு) (தி) (வ) (த) 2. பொழியையைவைத் (இ) I; பொழியவைத் (விசு) (தி) (வ) (த).

கருத்து: மலைச்சாரலில் மழை பொழிந்தது. மான்குட்டி குதித் தோடியது மரத்தின் குலையிலிருந்த கனிந்த பழம் உதிர்ந்தது. அதைப் பார்த்த ஒருவன் கொல்லனின் உலையில் காய்ச்சுவதற்கு வைத்த இரும்பு தன் உருவம் தெரியாமல் மறைவது போல், அக்கனியின் அழகில் தன்னை மறந்து அதனைத் தாய்தரும் பாலினும் சுவையானது எனறு, தான் உண்டற் பொருட்டு வைத்தான்.

இனி, உவமையாற் போந்த பொருள் வருமாறு: யோகிக்குச் சிதாகாசத்தில் விந்து - நாதமாயும், பராசத்தி பர சிவமாயும் சிவானுபவம் வாய்த்தது. பிரகிருதியால் வளர்க்கப்பெற்ற அவனது சீவன் சீவத் தன்மை நீங்கி நின்றது. அவன் அருட் சத்தியால் வளர்க்கப்பட்டான். அப்பாலைக்கு அப்பாலாம் அகண்டாகார, சொரூபசிவம், அச்சிவமேயான அவனது அறிவிற்குப் புலனாகியது. அவன் சத் - சித் - ஆனந்தமானான். கொல்லனது உலையில், நெருப்பில் இட்ட இரும்பு, தன் உருவிழந்து, நெருப்பாகவே ஆதல் போல, இச்சிவானுபவம் கிடைக்குமுன் அருட்சத்தியால் வளர்க்கப்பட்ட அவன், இப்பொழுது, அவள் சிவத்தில் ஒன்றாகிவிட்டபடியால் அவளது அருள் அமுதம் வேண்டாது, சொரூப சிவானந்தத்திலேயே ஒன்றி நின்றான்.

மலை - சிதாகாசம், சுத்தவெளி, பரவெளி ஆகியவை. மான் - பிரகிருதிமாயை. கன்று - சீவன். குலை - அனைத்துமாய் அப்பாலாம்

பரமாகாயம். கனி - சிவம். உருப்பு - வெம்மை. ஆகுபெயர். வெம்மை ஏற்றப்படும் இரும்பைக் குறித்தது. "கொல்லன் உலை மேலிருந்த உருப்பு" என மாற்றுக. மேல் - உள்ளே. முலைமேல் என்பதிலும் மேல், அப்பொருளது. முலை, சினையாகு பெயராய், முறையே தாயையும் அருட் சத்தியையும் குறித்தது. உருப்பென - உருப்புப் போல. இவ்வாறு ஆனவன் யோகி. ஒழிய (உவமைக்கு) - இணையற்று நீங்க. (பொருளுக்கு) - சிவத்தில் ஒன்றாகிவிட.

குருவின் துணை

2884. பார்ப்பா னகத்திலே பாற்பசு வைந்துண்டு
மேய்ப்பாரு மின்றி [1]வெறித்துத் திரிவன
மேய்ப்பாரு முண்டாய் வெறியு மடங்கினாற்[2]
பார்ப்பான் பசுவைந்தும் பாலாச் சொரியுமே. (18)

வேறு பாடம்: 1. வெறுத்துத் (ஒ) I. 2. மடக்கினாற் (ஆ) I.

கருத்து: உவமையின் பொருள் வெளிப்படை அவ்வுவமையாற் போந்த பொருள் வருமாறு: மனிதனின் உடம்பில் சிறந்த பயன் விளைக்கும் ஐந்து பொறிகள் உள்ளன. ஆனால் வழி நடத்தும் குரு இல்லாமையால், அவை தம் இச்சையாய்ப் புலன்கள் மீது செல்கின்றன. குருவும் வாய்த்து, புலனிச்சையும் அடங்கினால், அவை நல்லின்பம் நல்கும்.

புலன்கள் நல்கும் இன்பம் புலனின்பந்தானே. அஃது ஆன்ம வின்பம் ஆகுமா எனின், ஆகும். அதனைச் சிந்திப்போம்.

இங்குப் "பார்ப்பான்" என்றது ஆன்மாவை. அவன் அகத்தில் உள்ள பசு எனவே, அவை புறத்தில் உள்ள ஐம்பொறிகளல்ல என்பது. தெளிவு. ஆன்மாவின் அறிவாகிய உயிருணர்வு, குருவின் உபதேசத்தால் விழிப்புப் பெற்றால், புறத்தில் உள்ள பொறிகளை உள் நின்று இயக்கும் புலன்கள் உட்புலன்களாக மாறிவிடும். இதனைக் குமரகுருபரர், "அடங்கா ஐம்புலன் அடங்கினர்க்கு அம்ம, ஒடுங்கா ஐம்புலன் உளத்தினும் உளவே" என்பார் (பண்டார. பா. 26) அவர் உள்ளம் என்றது ஆன்மாவை. உயிர் தனக்குரியவையாகி விடும் புலன்களால் ஐந்து விடயங்களை உணரும். அவை காணல், கேட்டல், சுவைத்தல், முகர்தல், உறுதல் என்பவையே. இவை புறத்தே உள்ள விடயமல்ல. அகத்தே புலப்படும் ஆன்ம விடயம். சுந்தர மூர்த்திகள் தில்லையில், சிற்சபையில், ஆடும் கூத்தப் பெருமானின் உருவத்தைக் கண்டு, அகத்தே ஆன்ம விடயத்தை அனுபவித்தார். இதனைச் சேக்கிழார்" ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள" என்று பாடுகின்றார். அகத்தே உள்ள புலன்கள்

ஆதலின். "பேரறிவு" என்றார். சுந்தரர் அகத்தே அனுபவித்த ஆன்ம விடயம், 'காட்சிப் பொருள்' - இறைவனது "எல்லையில் தனிப்பெருங் கூத்து." அகண்டாகார வெளியில் அருட்சத்தியும் தன்னில் இலயமாகி நிற்க, ஆடும் ஞானக் கூத்து ஆதலின், அவரது அகக் கட்புலனே, பிற அகப் புலன்களையும் மேற்கொண்டது என்று அமுதவாக்குப் பொழியும் சேக்கிழார் பெருமான் "அத்தனிப் பெருங்கூத்தின் வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து" ச் சுந்தரர் "மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்" என்று பாடுகின்றார். (பெரிய பு. 252)

பிராணாயாமம் அவசியம்

2885. ஆமாக்கள் ஐந்தும், அரியேறு முப்பதும்
தேமா இரண்டொடு திப்பிலி ஒன்பதும்
தாமாக் குரம் கொளின், தம் மனத்து உள்ளன;
மூவாக் கிடாவிடின் முட்டுகின்றாரே.

ஆமாக்க ளைந்து [1]மரியேறு முப்பதுந்
[2]தேமா விரண்டொடு திப்பிலி யொன்பதுந்
தாமாக் குரங்கொளிற் [3]றம்மனத் துள்ளன
[4]மூவாக் கிடாவிடின் முட்டுகின் றாரே. (19)

வேறு பாடம்: 1. மரியொன்று (த) 2. சேமா (இ) IV. 3. தம்பனத் (ஆ இ) II. 4. மூவர்க் கெட்டாவிடின் (ஆ) IV; மூவாக் கடாவிடின் (சங்)

கருத்து: காட்டுப் பசுக்கள் ஐந்தும், சிங்கம் போன்ற காளைகள் முப்பதும், வீட்டைச் சேர்ந்த மாடுகள் இரண்டும், குற்றம் அற்ற காளைகள் ஒன்பதும் உழவுக்கு வந்துள்ளன. அவை ஏரில் பூட்டப் பெற்று நடந்தால், உழவனது மனம் போல நடக்கும். ஆனால், முதிராத இளங்கடாக்களைப் பூட்டினால், உழவு செவ்வையாக நடவாது.

இனி உவமையால் போந்த பொருள் வருமாறு: சிவ தத்துவங்கள் ஐந்தும், 'புருடன்' தவிர வித்தியா தத்துவம் ஆறும் ஆன்ம தத்துவங்கள் இருபத்து நான்கும், உடம்பில் உள்ள இடகலை, பிங்கலை என்ற இரண்டும், குற்றம் அற்ற நவகுண்டங்களும், உயிருணர்வு நேராக இயங்குமாயின், அதைச் சார்ந்திருக்கும். உயர்நிலை அனுபவம் கிடைக்கும். பிராணாயாமத்தால் பயிற்சி பெறாத மூச்சு இயக்கத்தால் உயர்நிலை அனுபவம் எய்தாது.

தேம் - இடம், வீடு; உடம்பு. தேம் மா, தேமா. மா என்ற பல பொருள் ஒரு சொல் ஈண்டுக் காளையைக் குறித்தது. திப்பி இலி: திப்பி - கோது.

குற்றம். இகரம் தொக்கது. தாமாக என்பது, இறுதி அகரம் தொக்கது. தாம் - உயிருணர்வு. உயிருணர்வு மூச்சுக் காற்றுடன் சேர்ந்தே இயங்குவதால், மூச்சு என்ற பொருள் உடைய 'வாசி' என்பதற்குக் குதிரை என மற்றொரு பொருள் இருத்தலை வைத்து, மூச்சு சுழுமுனையில் நடைபெறுவதைக் "குரம்கொள்ளல்" என்றார். குரம் கொள்ளல் - குளம்பால் ஊன்றி நடத்தல். குரம் - குளம்பு. வாசி நடத்துதல் யோகத்தில் அடிப்படையான ஒன்று. "வாசி நடத்தித் தருவாண்டி - ஒரு வாசியில் இங்கே வருவாண்டி" என்பர் வள்ளலார். (திருவருட்பா 6 ஆம் திரு.முறை - கீர்த்தணைப் பகுதி)

சிவானந்தத் தேன்

2886. எழுதாத புத்தகத் தேட்டின் பொருளைத்
தெருளாத கன்னி தெளிந்திருந் தோத
மலராத [1]மொட்டின் மணத்தின் மதுவைப்
பிறவாத வண்டு மணமுண்ட வாறே. (20)

வேறு பாடம்: 1. பூவின் (விசு) (தி) (வ) (து).

கருத்து: நம் அறிவு மறைப்புறுவதற்குக் காரணமாக உள்ள திரோதான சத்தி, ஆன்மாவின் பக்குவம் நோக்கி, அருட்சத்தியாகி, இன்னதென்று உணர்த்த வியலாதது ஆகிய சிவானுபவத்தை நாம் அடைந்திட உதவும். தலையுச்சியில், சகஸ்ராரத்தில், நிமிராமல் கிடக்கும் தாமரை அருளால் நிமிரும். மணம் மிக்க அதன் தேனை - சிவானந்தத்தை - தத்துவங்களினின்றும் நீங்கிய ஆன்மா, மணமறிந்து உண்ணும்.

தொருளாத; தெளிந்திருந்து - இவை, காரணங்களைக் காரியமாக உபசரித்துக் கூறியவை. சாதாரண மக்களுக்குச் சகஸ்ராரத் தாமரை கவிழ்ந்து கிடக்குமாதலின் "மலராத மொட்டு" என்றார். தத்துவங் களுடன் சேர்தல் பிறவிக் குணமாதலின், அவற்றின் நீங்கியதைப் "பிறவாமை" என்றார்.

"எரிகின்ற வீட்டில் ..."

2887. போகின்ற பொய்யும் புகுகின்ற பொய்வித்துங்
கூகின்ற நாவலின் கூழைத் தருங்கனி
யாகின்ற பைங்கூ ழவையுண்ணு மைவரும்
வேகின்ற கூரை விருத்திகொண் டாரே. (21)

கருத்து:. பறவைகள் கூவுகின்ற நாவல் மரத்தில் விளங்குபவையும், உணவுப் பொருளுமான நாவற்பழங்களுள், சில உதிர்கின்றன; சில உதிர உள்ளன. உணவாக அவற்றை உண்ணும் ஐவர், எரிந்து கொண்டிருக்கும் வீட்டில் தம் செயல்களைச் செய்து கொண்டிருப்ப வராவர்.

இனி, உவமையாற் போந்த பொருள் வருமாறு: மூச்சு இயக்கத்தில் வெளிச் செல்லும் இரேசகமும், உட்புகும் பூரகமும் முறையே, அழிவும், அழிவிற்கு விதையும் ஆகும். அவற்றின் இயக்கத்தால் எழும் ஒலி, 'நாவலோ' என்று கூவுவது போல உள்ளது. "நாவல், நாவல்" என்று கூவி, அவை மனத்தை எண்ண ஓட்டம் உடையதாகச் செய்கின்றன. ஐம்புலன்கள் மனத்தின் துணையுடன், எண்ணங்களை ஈர்த்து அழிவு நெறியில் செயற்படச் செய்கின்றன. முடிவில், சித்தம் அழிந்து கெடுவதுடன், இவ்வகையான மூச்சு இயக்கமே உடம்பின் தசைகளை எரித்து அழிக்கின்றது. (இதனை 'வேகும் கால்' என்பர்) இவ்வாறு சிறிது சிறிதாக வெந்துகொண்டிருக்கும் உடம்பின் ஐம்புலன்கள், தத்தம் விடயங்களின்மேற் சென்று இன்புறுகின்றன. இதற்கெல்லாம் அடிப்படை இரேசக பூரகங்கள்.

"நாவல், நாவல்" என்று கூவித் தரும்கனி, ஆக்கும் பொருளாகாமல், அழிக்கும் பொருளாதல் ஒரு நயம். கூ என்பதே பகுதி. அது பிற்காலத்தில் உகரச் சாரியை பெற்றது. கூவிளி, கூப்பாடு முதலியன அதினின்றும் பிறந்தவை. கனி - பழம்; எண்ணம். விருத்தி - வாழ்க்கைக்கான தொழில். உஞ்ச விருத்தி என்பது இரந்துண்ணலே வாழ்க்கைத் தொழில் எனப் பொருள்படும்.

"வீட்டை" எரியவிட்டு அங்கிருந்து உணவும் உண்ணுதல் என்னே கொடுமை என இரங்கியவாறு. "The King plays the lyre when Rome is on fire" என்பது போன்றது இது.

வீணாகும் மூச்சு

2888. மூங்கின் முளையி லெழுந்ததோர் வேம்புண்டு
வேம்பினிற் சார்ந்து கிடந்த பனையிலோர்
பாம்புண்டு பாம்பைத் துரத்தித்தின் பாரின்றி
வேம்பு கிடந்து வெடிக்கின்ற வாறே. (22)

கருத்து: மூங்கில் முளையில் வேம்பு வளர்ந்தது. அதையொட்டி நிற்கும் பனைமரத்தில் ஒரு பாம்பு இருக்கிறது. அதனை மேல் நோக்கி ஓட்டி, வேப்பம் பழத்தை உண்பவர் இல்லாமல், அப்பழங்கள் வெடித்துச் சிதைகின்றன.

இனி, உவமையாற் போந்த பொருள் வருமாறு: மூலாதாரத்தில் மூச்சு இயக்கம் தொடங்குகிறது. இடைகலை, பிங்கலை வழியாக நடக்கிறது. இவ்விரு நாடிகட்கும் நடுவே, சுழுமுனை நாடி உள்ளது. அதன் அடியில், பாம்பு போல இடைகலை, பிங்கலை நாடிகள் பின்னிக் கிடக்கும் இடத்தில், குண்டலி சத்தி உறைகின்றாள். அவளை வழிபட்டு, அவள் துணையால்,மூலாதாரத்தில் கனலை மூட்டி, சுக்கிலத்தை எரித்துச் உயிராற்றல் ஆக்கி, மூச்சுக்காற்றுடனும், குண்டலி சத்தியுடனும் சுழுமுனை நாடியில் மேல் நோக்கிச் செல்லச் செய்து, மூச்சாகிய பிராண வாயுவால் சுக்கில (விந்து) சத்திக்கு வலிமையூட்டி, அக்காற்றைப் பயன் கொள்பவர் இல்லாமல் அது வீணே கழிகிறது.

இச்செயல்முறைகள் முற்போந்த இயல்களில் விளக்கப்பட்டன. மூலாதாரம் என்ற தெளிவு வரற்பொருட்டு 'முளை என்றாரே அன்றி, நாடிகள் அதில் தோன்றுபவை அல்ல. அவை இடக்கால், வலக்கால் களின் பெருவிரல் நுனியில் தொடங்கி, உச்சந்தலை வரை செல்லும். அவற்றுட் சுழுமுனை இடுப்பில் தொடங்கிப் பிடரி வரை செல்லும். இடகலை, பிங்கலைகளில் இயங்கும் மூச்சு உடலை வேகச் செய்வது ஆதலின் அதனை ஒலியொற்றுமைப்பட 'வேம்பு' என்றார். பனை மரம் மடல் உடையது. அதன் வழியே ஏறுதற்கு அரிதாதலின், சுழுமுனை நாடியைப் 'பனை' என்றார். குண்டலி பாம்பு அன்று. இடகலையும் பிங்கலையும் பாம்பு போற் பின்னிக் கிடக்கும் இடத்தில் உறைதலின், அதனைப் பாம்பு என்றார். பின்னும் பல இடங்களில் பாம்பு என்பார். உவமை, இடத்திற்கு ஆகி, இடம் அங்கு உள்ள சத்திக்கு ஆயிற்று. இருமடியாகு பெயர். துரத்தி - மேல் நோக்கிச் செலுத்தி.

குறிப்பு: (விசு) பதிப்பில் இப்பாடல் 1 ஆம் அடியில் "முளையில்" என்ற சீர் விட்டுப் போக, 2, 3 ஆம் அடிகளிற் சீர்கள் மாறிக் கிடக்கின்றன.

தாத்துவிகம்

2889. பத்துப் பரும்புலி, யானை பதினைந்து,
வித்தகர் ஐவர், வினோதகர் ஈர் எண்மர்,
அத்தகு மூவர், அறுவர் மருத்துவர்,
அத்தலை ஐவர் அமர்ந்து நின்றாரே.

பத்துப் [1]பரும்புலி யானை பதினைந்து
வித்தக ரைவர் [2]வினோதக ரீரெண்ம[3]
ரத்தகு மூவ ரறுவர் மருத்துவ
ரத்தலை யைவ ரமர்ந்துநின் றாரே. **(23)**

வேறு பாடம்: 1. பெரும்புலி (ஆ ஒ) III. 2. விநாயக (ஆ இ) I. 3. ரீரைவர் (ஓ) II.

கருத்து: சித்தாந்தத்தில் தாத்துவிகங்கள் யாவை எனக் கூறுகின்றார். வாயுக்கள் 10; ஐம்பூதங்களின் கூறுகளான மயிர், தோல், நரம்பு, எலும்பு, தசை, இரத்தம், வெயர்வை, சிறுநீர், நிணம், சுக்கிலம், பசி தாகம், உடல் வெப்பம், சோம்பல், பித்து; புலன்கள் 5, நாடிகள் 10, உட்பகை என்னும் காமம் முதலிய குற்றம் 6, (மூவரும் அறுவரும் சேர்த்து) துவாரங்கள் 9. கன்மேந்திரிய விடயங்களாகிய பேச்சு, நடை, ஈகை, மலம் கழித்தல், சுக்கில நீக்கம் என்ற 5 ஆக 60 - இவை உயிர் உடம்பில் வாழ்வதற்குத் துணை செய்பவை. தத்துவங்களின் காரியமாக உள்ளவை தாத்துவிகம்.

2890. இரண்டு கடாவுண் டிவ்வூரி னுள்ளே
யிரண்டு கடாவுக்கு மொன்றே தொழும்ப
னிரண்டு கடாவு மிருத்திப் பிடிக்கி
லிரண்டு கடாவு மொருகடா வாமே. (அ, ட)

யோக சாதனை

2891. ஒத்த [1]மனக்கொல்லை யுள்ளே சமன்கட்டிப்
பத்தி வலையிற் [2]பருத்தி நிறுத்தலான்
[3]முத்தக் [4]கவறாக மூவர்க ளூரினு
நித்தம் பொருது [5]நிரம்பநின் றாரே. (24)

வேறு பாடம்: 1. மணற் கொல்லை (த) 2. படுத்தி (ஓ) IV. 3. முத்தங் (த) 4. கயிறாக (விசு) (தி) (வ) ணாரினுள் (சங்) 5. நிரம்பிநின் (ஆ இ) III.

கருத்து: இருவினை யொப்பு நிகழ்ந்த மனத்தை விருப்பு வெறுப்பு அற்ற சமநிலையில் நிறுத்தி, பத்தி என்னும் வலையால், 'சிவம்' என்ற பருத்திச் செடியைப் பாதுகாத்தலால், முத்தி என்ற சூதாட்டத்தை - பிரமன், மால், உருத்திரன் என்பார் ஆளும் ஊராகிய உடம்பில் ஆடி, ஆன்மா, சிவத்தியானத்திற்குத் தடை யாவனவற்றுடன் நாள்தோறும் போராடி வென்று, இறுதியில் சிவமே ஆகியது.

குணம் குறி இல்லாமையின் சொரூப சிவத்தைப் பருத்தி என்றார்.

குருவை நாடும் நேரம்

2892. கூகையும் பாம்புங் கிளியொடு பூவையு
நாகையும் பூழு நடுவி லுறைவன
நாகையைக் கூகை நணுக லுறுதலுங்[1]
கூகையைக் கண்டெலி கூப்பிடு மாறே. (25)

வேறு பாடம்: 1. நிறுத்தலும் (ஒ) IV.

கருத்து: கோட்டான், பாம்பு, கிளி, பூவை, நாகணவாய், காடை முறையே இப்பறவைகள் போன்ற அறியாமை - காமம், அறம், பாவம், சிற்றறிவு, கோபம் முதலிய ஐந்தும், மனத்தில் உள்ளன. சிற்றறிவை, ஒரொருகால் அறியாமை நெருங்க, அதைக் கண்டு, சிவன் குருவை நாடுகிறான்.

நூலைப் போலச் சேலை

2893. குலைக்கின்ற நன்னகையாம் கொங்கு உழக்கி,
விலைக்கு என்று வெள்ளெலி மூன்று கொணர்ந்தான்
உலைக்குப் புறம் எனில் ஓடும், இருக்கும்
புலைக்குப் பிறந்தவை போகின்றவாறே.

குலைக்கின்ற நன்னகை [1]யாங்கொங் குழக்கி[2]
[3]விலைக்கென்று வெள்ளெலி [4]மூன்று கொணர்ந்தா[5]
னுலைக்குப் புறமெனி லோடு மிருக்கும்
புலைக்குப் [6]பிறந்தவை போகின்ற வாறே. (26)

வேறு பாடம்: 1. யாங்கொடு குத்தி (ஆ இ) I. 2. குழக்கின் (விசு) (தி) (வ) (த) 3. விலைக்கின்று (ஒ) IV. னிலைக்கின்ற (விசு) (தி) (வ) (த) 4. மூன்றுங் (இ) IV. 5. குணந்தான் (ஒ ஓ) I. குணர்ந்தா (ஆ இ) I. 6. பிறந்தவர் (ஆ இ ஒ) II.

கருத்து: சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை என மூன்று வகைப்படும் மாயையைக் கலக்கி, இறைவன் படைக்க, சத்துவ, இராசச, தாமதம் என்ற முக்குணங்களைச் சீவன் பெற்றான். அவை உயிருணர்வுடன் தொடர்பு பெறாவிடில் மாறி மாறி வரும். வஞ்சிப்பதாகிய மாயையில் தோன்றியவை அவ்வாறு இருத்தல் இயல்பே.

நன்னகை - மாயை; அன்மொழித்தொகை. உழக்கியவன் சிவன். அவன் விலைக்கு விற்றான். விலை - அறியாமைமையை விளைக்கும் ஆணவ மலம். அதனை நீக்குதற் பொருட்டே இறைவன் உயிர்க்கு உடம்பை அளிக்கின்றான் ஆதலின், அது விலை ஆயிற்று. உலை - அடுப்பு, உயிருணர்வு. புலை - வஞ்சிக்கும் தொழில். அதனைச் செய்யும் மாயைக்கு ஆயிற்று; காரியவாகு பெயர்.

ஆணவ மறைப்பு

2894. காடு புக்காரன்றிக் காணார் கடுவெளி,
கூடு புக்கானது ஐந்து குதிரையும்,
மூடு புக்கானது ஆறு உள ஒட்டகம்,
மூடு புகாவிடின், மூவணை யாமே.

காடுபுக் [1]காரன்றிக் காணார் கடுவெளி
கூடுபுக் கானது வைந்து குதிரையு
மூடுபுக் கானது வாறுள வொட்டக
மூடு புகாவிடின் மூவணை யாமே. (27)

வேறு பாடம்: 1. காரினிக் (விசு) (தி) (வ) (த).

கருத்து: உலக வின்பங்களில் இச்சையுடையோர் விடயங்கள் ஆகிய காட்டில் நுழைந்தனர். அவர்கள் மீண்டும் வந்து, வெட்ட வெளியாகிய சிவத்தைக் காணார். ஐம்புலன்களாகிய குதிரைகள் ஓடிச் சலித்து ஒய்வு கொள்கின்றன. ஆறு உட்பகைகளாகிய ஒட்டகங்கள் முற்றுகையிட்டாற் போல, உயிரின் அறிவை மறைக்கின்றன. அவை மறைத்தலைச் செய்யாவிடின், உயிர் சீவதுரியம், பர துரியம், சிவ துரியம் என்ற மூன்று உணர்வுகளையும் எய்திச் சிவானந்தம் பெறும்.

அறுபகை என்பவை ஆணவ மலத்தின் காரியம். ஆணவம் நீங்கினால், அவையும் நீங்கும்.

விவேகம் இழந்தால் ...

2895. கூறையுஞ் சோறுங் குழாயகத் தெண்ணெயுங்
காறையு நாணும் வளையலுங் கண்டவர்
பாறையி [1]லேற்றுப் பறக்கின்ற சீலைபோ
லாறைக் குழியி லழுந்துகின் றாரே. (28)

வேறு பாடம்: 1. லூற்றுப் (த) லூற்ற (விசு) (தி) (வ).

கருத்து: மகளிரின் ஆடை, தசைத்திரட்சி, மேனியழகு, கழுத்தணி, மார்பணி, வளையல் ஆகியவற்றைக் கண்டு மயங்கியவர், பாறையில் உலர்த்தப்பட்டு, சடுதியில் ஈரம் இழந்து பறக்கும் சேலை போல, சடுதியில் விவேகம் இழந்து, அம் மகளிரின் உந்திக் குழியில் விழுகின்றனர்.

மறைக்கும் சத்தி

2896. துருத்தி உண்ண, கரை தோன்றும் மலைமேல்
விருத்தி கண்காணிக்கப் போவார் முப்போதும்,
வருத்தி உள், நின்ற மலையைத் தவிர்ப்பாள்
ஒருத்தி உள்ளாள், அவர் ஊர் அறியோமே.

[1]துரத்தியுண் ணக்கரை தோன்று மலைமேல்[2]
விருத்திகண் காணிக்கப் போவார்முப் போதும்
வருத்தியுண் ணின்ற மலையைத் தவிர்ப்பா
ளொருத்தியுள் ளாளவ [3]ரூரறி யோமே. (29)

வேறு பாடம்: 1. துருத்தியுள்ளக் கரை (விசு) (நி) (வ) 2. மலைபோல் (ஆ இ) I. 3. ளூரறி (இ ஒ ஓ) I.

கருத்து: ஆற்றிடைக் குறையில் இருந்து விளையாடுவார்க்கு, ஆற்றின் கரையில் ஒரு மலை தோன்றியது. அங்கு நிகழும் செயல்களைப் பார்வையிடுவதற்கு, அவர்கள் மூன்று வேளையும் சென்றனர். ஆனால், அவர்கள் கரைக்குச் சென்றதும் மலையைக் காணமுடியாதபடி ஒருத்தி அவர்களைத் தடுத்தாள் - அவர்களை வருத்திப் பார்வையை மறைத்தாள். அவளும், அவளைச் சார்ந்தோரும் உறையும் ஊரை யாம் அறிய வியலவில்லை

இனி, உவமையாற் போந்த பொருள் வருமாறு:- உடம்பில் உள்ள சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம் என்ற ஆதாரங்களில் அனுபவம் பெறும் பொழுது, அப்பால் விசுத்தி, ஆக்ஞை என்ற ஆதாரங்களும் உச்சந் தலையில் சகஸ்ராரமும் உள்ளமை தெளிவின்றி புலப்படுகின்றது. அவற்றை அடையலாம் என்று, யோக சாதனையைத் தீவிரப்படுத்தி, மூன்று வேளையும் செய்கிறோம். திரோதான சத்தி (குண்டலி) எம்மைத் துயர் உறுத்தி, அம்மேனிலை அனுபவங்களை

உணராதபடி, எம் அறிவை மறைக்கின்றாள். அவளது உண்மை நிலை யாது? அவளது உறைவிடம் யாது? என அறியோம்.

துருத்தி - ஆறு பிரியும் இடத்தில் உள்ள நிலப் பகுதி; உடம்பு. கரை தோன்றும், கரையில் மலை தோன்றும் என்க. மலை - சகஸ்ராரம். உள் வருத்தி என மாறுக. ஊர், வரலாற்றைக் குறித்தது.

ஆன்மா வாழ்க்கைப்பட்டது

2897. பருந்தும் கிளியும் படுபறை கொட்டத்
திருந்திய மாதர் திருமணப்பட்டார்
பொருந்திய பூதம் பெறல் உரு ஆகும்
இருந்து இயல் பேரிலில் இன்புருவாயே.

பருந்துங் கிளியும் படுபறை கொட்டத்
திருந்திய மாதர் [1]திருமணப் பட்டார்
[2]பொருந்திய பூதம் [3]பெறலுரு வாகு
[4]மிருந்தியல் [5]பேரிலி [6]லின்புறு வாயே. (30)

வேறு பாடம்: 1. சிவமனம் (ஆ இ) IV. 2. பொருந்தவப் (ஓ) I; பெருந்தவப் (விசு) (தி) (வ) (த) 3. போலுரு (ஆ இ ஓ) II. 4. மிருந்திய (ஆ இ) I. 5. பேரி (ஆ) I; பேறினி (இ) I; பேற்றினி (விசு) (தி) (த) I; 6. லன்புறு வாயே (ஓ) IV; லின்புறுவாயே (ஆ இ) IV; லின்புறுவாரே (ஓ) IV; யின்புறு (சங்).

கருத்து: அசுத்தமாயா காரியமாகிய ஒலி என்ற தன்மாத்திரையும் , சுத்த மாயா காரியமாகிய நாதமும் கீழ்ப்பட (பறைய), பரநாதம் முழங்கிற்று. ஆன்மா சிவத்தோடு கலந்தது. பரமாகாயப் பெரு வெளியே தனது உருவாகப் பெற்றது. அப்பெரிய வீட்டில் (வீடுபேற்று நிலையில்) பேரின்பம் அனுபவித்தது.

பௌதீக ஒலியைப் பருந்தாகவும் அதனினும் நுண்ணிய சுத்த மாயையிற் பிறந்த நாதத்தைக் கிளியாகவும் உவமித்தார். தத்துவங் களின் நீங்கிச் சுத்தமாகிய ஆன்மாவை 'திருந்திய மாதர்' என்ற உவமையாற் குறித்தார். பௌதீக ஆகாயம் இறைவனாற் படைக்கப் பெறுவது. அஃது அருவம் ஆயினும், அஃது இறைவனால் அசுத்த மாயையிலிருந்து படைத்துக் கொடுக்கப்பட்டதே. ஆனால் பரமாகாயம் படைக்கப்பட்டதன்று. என்றும் இருப்பது ஆதலின், "பூதம் பெறல் உருவாகும், இருந்து இயல் பேரில்" என்றார்.

புலன் அனுபவமா உடம்பின் பயன்?

2898. கூடும் பறவை இரைகொத்தி, மற்று அதன்
ஊடு புக்கு உண்டியறுக்க உறில் என் ஒக்கும்?
சூடு எரி நெய் உண்டு, மை கான்றிடுகின்ற
பாடு அறிவார்க்குப் பயன் எளிதாமே.

கூடும் பறவை [1]யிரைகொத்தி மற்றத
னூடுபுக் குண்டி யறுக்குறி லென்னொக்குஞ்
[2]சூடெரி நெய்யுண்டு மைகான் றிடுகின்ற
பாடறி வார்க்குப் பயனெளி தாமே. (31)

வேறு பாடம்: 1. யிரை கொத்த (ஓ) IV. 2. சூடரி (ஆ இ) I; சூடெறி (விசு) (தி) (வ) (த).

கருத்து: புலன்கள் ஐந்தும் விடயத்தைத் தேர்ந்து, அதில் அழுந்தி இன்புறுவதால் பயன் யாது? புலன்களில் செல்லும் உணர்வை மூலாதாரத்தில் மூளும் கனலில் செலுத்தி, எரியச் செய்து, சூழ்ந்துள்ள அறியாமை இருளைப் போக்குதலாகிய ஒரு முயற்சி - சாதனை - உண்டு. அதன் முறையை அறிந்தவர்க்கு, உடம்பினால் ஆகும் பயன் கிட்டும்.

உண்டி யறுத்தல் - உணவை முடித்தல், அனுபவித்தல்.

வாடாத மலர்

2899. இலையில்லை பூவுண் டினவண்டிங் கில்லை
தலையில்லை வேருண்டு தாளில்லை பூவின்
குலையில்லை கொய்யுமலருண்டு சூடுந்[1]
தலையில்லை தாழ்ந்த [2]மயிர்புல ராதே. (32)

வேறு பாடம்: 1. கொய்யுந் (சங்) 2. கிளைபுல (விசு) (தி) (வ) (த).

கருத்து: இலைகள் இல்லை, ஆனால் பூப் பூத்தது. அதை வண்டுகள் மொய்க்கவில்லை. இத் தாவரத்தில் உச்சி இல்லை, ஆனால் வேர் உள்ளது. மரத்தின் அடிப்பாகம் உண்டு. ஆனால் அது மரம் அன்று. பூக்கொத்து இல்லை. ஒற்றைப் பூத்தான் உள்ளது. அதைத் தலையிற் சூடும் தகுதி யார்க்கும் இல்லை. ஆனால் அதன் முன் தாழ்ந்து நிற்பாரின் தலைமயிர் பொலிவின்றிப் போகாது.

இவ்வுவமையாற் போந்த பொருள் வருமாறு: சொரூப சிவத்தின் நிலை கூறியவாறு. சிவம் எதையும் சார்ந்து நிற்பது அன்று. சுதந்திரம் உடையது. சிவத்தில் கலந்தோரும், சிவ வியாபகத்திற் கலந்தோரே யன்றிச் சிவத்தை யறிந்து அனுபவிப்போர் அல்லர். அதன் வியாபகத்திற்கு முடிவு இல்லை. தொடக்கம் - அதாவது காரணம் உண்டு. அதுவே அதன் அருள். உருவம், அருவம், அருவுரு என்ற நிலையில் உள்ள தெய்வங்கள் எல்லாம், சிவத்தின் தடத்தமே அன்றிச் சிவம் அல்ல. சிவம் ஒன்று தான், பலவல்ல. அதை உணர்வார் யாரும் இல்லை. அதை வணங்குபவர் ஆகிய யோகியரின் தலையுச்சியில், சிவத்தினது சம்பந்தத்தால், சகஸ்ராரத்தாமரை என்றும் வாடாது. எத்தனை நாள் ஆயினும் நின்று அலர்ந்து தேன் சொரியும்.

சிவம் எதையும் சார்ந்து நிற்பதில்லை யெனவே தன் வயத்தனாதலும், அதிற் கலந்தோர் இல்லையெனவே தூய உடம்பினனாதலும், வியாபகத்திற்கு முடிவில்லை எனவே முடிவிலாற்றல் உடைமையும் நிமித்த காரணம் எனவே பேரருள் உடைமையும், தெய்வங்கள் சிவமல்ல எனவே முடிவிலாற்றல் உடைமையும், உணர்வோர் யாருமிலர் எனவே முற்றுணர்வுடைமையும், வணங்குவோர் தலை என்றும் புலராது எனவே, வரம்பிலின்பம் உடைமையும் ஆகிய சிவத்தின் இயல்புகள் தெளிவாம். இவை எண்குணத்துள் சில. 'தாளன்று' என வரற்பாலது சொற்பின் வருநிலையணி நலம் நோக்கித் 'தாளில்லை' என வந்தது. மயிர் என்பது ஆகுபெயராய்ச் சகஸ்ராரத் தாமரையைக் குறித்தது.

கரை கண்டவர்

2900. [1]அக்கரை நின்றதோ ரால மரங்கண்டு
[2]நக்கரை வாழ்த்தி நடுவே கிழிவஞ்சி[3]
மிக்கவ ரஞ்சு துயரமுங் கண்டுபோய்த்
தக்கவர் [4]தாழ்ந்து கிடக்கின்ற வாறே. (33)

வேறு பாடம்: 1. அக்கண (விசு - பதிப் பாடம் அச்சுப்பிழை) 2. நக்கண (1 ஆம் எண் போல) 3. பயன்கொள்வர் (ஓ) IV. 4. வாழ்ந்து கிடக்கின்ற வாறே (ஆ இ) II; கடக்கின்ற (ஓ) I.

கருத்து: ஆற்று வெள்ளத்தில் அகப்பட்டோருள் சிலர் நீந்திக் களைத்து, தொலைவில் ஓர் ஆலமரத்தைக் கண்டு, கரை நெருங்கிவிட்டது என்று தெளிந்து, அங்ஙனம் "மல்லற் கரை காட்டி, அச்சம் தீர்த்து ஆட்கொண்டமைக்காகச்" சிவ பெருமானை வாழ்த்தி, அவன் காட்டிய கரையைச் சேரல் வேண்டும், நடுவே காரியத்தாழ்ச்சி கூடாது என்ற எண்ணத்தோடு, அங்ஙனம்

கரையைக் காணாதவரின் துயரத்தையும் எண்ணி, நீந்திக் கரைசேர்ந்து, அவ் ஆலமர நிழலில் இளைப்பாறினர்.

இனி, உவமையாற் போந்த பொருள் வருமாறு: புருவ மத்தியில் உயிரொளியும், அதன் உள்ளே அருள் - ஒளியும், அதன் உள்ளே சிவ வொளியும் "கண்ட" யோகியருள் சிலர், அவ்வொளியின் உண்மை நிலை காணாது, யோக சாதனையில், அதற்கு அப்பாற் செல்ல வலிமையின்றி அல்லல் உற்றனர். அவருட் சிலர் விடாது முயல, சகஸ்ராரத் தானம் புலப்பட்டது. அதனை உணர்த்தி யருளிய சிவனை வாழ்த்தினர். அவ்விடத்தை அடைவதற்கு முன் சாதனை நின்று விடலாகாது என்ற எண்ணத்துடன், தம்மைப் போலவே தடைப்பட்டு நின்றவர்களின் அல்லலையும் எண்ணி, உள்ளுணர்வு காட்டிய வழியில் சாதனையை வைராக்கியத்துடன் தொடர்ந்து செய்து, சகஸ்ராரத்தை எய்தினர். பரசிவத்தைத் தரிசித்துத் தற்போதம் நீங்கி இன்புற்றனர்.

அக்கரை - மறுகரை; சிதாகாயம். ஆலமரம் - விழுது படர்ந்த வியாபகம். நக்கர் - வியாபகம் உடைய சிவம். மிக்கவர் - மீதிப் பேர். தாழ்தல் - தம்மை மறத்தல்; தற்போதம் நீங்கப் பெறுதல்.

நிறைநிலைக்கு மூன்று படிகள்

2901. கூப்பிடும் ஆற்றிலே வன்காடு இருகாதம்
காப்பு இடு கள்ளர் கலந்து நின்றார் உளர்
காப்பு இடு கள்ளரை வெள்ளர் தொடர்ந்திட்டுக்
கூப்பிட மீண்டது ஓர் கூரை கொண்டாரே.

கூப்பிடு மாற்றிலே வன்கா டிருகாதங்
காப்பிடு கள்ளர் கலந்துநின் றாருளர்
காப்பிடு கள்ளரை வெள்ளர் தொடர்ந்திட்டுக்[1]
[2]கூப்பிட மீண்டதோர் [3]கூரைகொண் டாரே. (34)

வேறு பாடம்: 1. துரந்திட்டுக் (இ ஓ ஓ) III. (இதுவும் பொருத்தமான பாடம் ஆயினும், ஆசிரியர் கருத்தாக முற்போந்த இயல்களுட் கண்ட செய்திக்குப் பொருத்தமான பாடம் தேர்ந்து கொள்ளப்பட்டது.) 2. கூப்பிடு (ஓ ஓ) I; கூறை (அ இ) I.

கருத்து: ஒருவர் நின்று கூப்பிடும் திசையில் செல்லும் வழியில், கடத்தற்கு அரியதும், இடையூறுகள் நிரம்பியதுமான இரண்டு காடுகள் காத தூரத்திற்கு உள்ளன. அங்கு, இனியவையாக உள்ள இடங்கள் தோறும் வழிப்போவாரைத் தமக்குரிய இடங்களில் சிறை

செய்து வைக்கும் கள்ளர்களும் உள்ளனர். காட்டிற்கு வெளியே நின்று கூப்பிட்டவர், அக்கள்ளர் எங்கெங்கு வழிப்போவாரைச் சிறைசெய்கின்றனரோ, அவ்விடந்தோறும் வந்து, அவரை மீட்பர். இவ்வாறு, காடு எங்கும் உள்ள சிறைகளிலிருந்து, அவர்கள் உதவியால், மாந்தர் மீண்டனர். இறுதியில், தாம் அடைபட்டிருந்த சூழலாகிய சிறையைத் தமது வசப்படுத்திக் கொண்டனர்.

இனி, உவமையாற் போந்த பொருள் வருமாறு: புருவமத்தியிலும், முன் நெற்றியிலும் மத்திய சாக்கிராவத்தை என்னும் சகலாவத்தைகளை எய்திய யோகி; அங்குத் தன் அறிவில், அருள் கலக்கப்பெற்றான். ஆதலின் அத் திருவருளால், தலையுச்சியில், பரமாகாய அனுபவத்தைப் பெறலாம் என்று உணர்த்தப் பெற்றான். அவ்வனுபவத்தைப் பெற, அவன் இரண்டு அவத்தை வகைகளை எய்தி, அதன்பின் மூன்றாவதாக, ஓர் அவத்தை வகையை எய்த வேண்டியிருந்தது. அவை முறையே சுத்தாவத்தை, பராவத்தை, மேலாலவத்தை என்பவை. இவற்றுள், முதல் இரண்டும் கடத்தற்கு அரியவை. இடையூறு நிரம்பியவை. சுத்தாவத்தையை அடையவிருக்கும் நிலையில், சுத்த மாயையின் 36 தத்துவங்களும் சூக்கும நிலையில் இருக்கும். ஆன்மாவைப் பிணித்த ஆணவ மலமும் இருக்கும்.

இவை ஆன்மாவின் அறிவை மறைக்கும். யோகி பதிபத்தியுடனும், உறுதியுடனும் சாதனையைத் தொடர்ந்து செய்தால், திருவருளால், இவை படிப்படியே நீங்கும். சுத்தமாயை மட்டும் நிற்கும். யோகி அடுத்து எய்தும் பராவத்தையில், அவன் தன் அறிவு முழுதும் அருளறிவாகப் பெறுவான். அதனால் சுத்த மாயை நீங்கும். ஆனால், அவன் சிவத்தோடு ஒன்றுதல் கைகூடாது. அது நிறைவேற, பரதுரிய வாசனை நீங்க வேண்டும். அதாவது அருட்சத்தியாகிய தாயுடன் இருந்து, சிவத்தை உணர்ந்த நிலை மாறி, சிவத்தின் தன்மையினாலேயே. சிவத்தை உணர்தல் வேண்டும். இது, மேலா லவத்தையில், 'சிவதுரிய உணர்வு நிலை' எய்திய பிறகுதான் வாய்க்கும். சிவத்தால் அது வாய்க்கும் பொழுது, ஆன்மா சார்ந்திருந்த அருள் என்ற சார்பிடம், சிவத்தில் ஒன்றிக் கலந்துவிடும். ஆன்மா சிவமாம் தன்மை எய்தும். இந்நிறைநிலை வருதற்கு முன்னரே, சுத்தாவத்தையின் தொடக்கம் முதலே, திருவருளால், சுத்த துரியம், பரதுரியம் முதலிய உணர்வு நிலைகளில் யோகி சொரூப சிவத்தின் நிலையைத் 'தரிசிப்பான்.'

இதனை நன்கு உணர,முற்போந்த 2161, 2163, 2171, 2186, 2194, 2209, 2246, 2251, 2253, 2283, 2285, 2299 ஆம் பாடல்களைக் காண்க.

வெள்ளர் - அகண்டாகார வெளியாக உள்ளவர்; சொரூப சிவம். மீண்டது ஓர் கூரை - இடர்ப்பாடுகளிலிருந்து இறுதியாக நீங்கிய போது, ஆன்மா சார்ந்திருந்த சார்பு; அஃது திருவருள்.

திருவருள் படைத்த மாயா காரியத்தால் சிவ விளக்கம் பெறுவது முதற்படி. அருளால் சிவ விளக்கம் பெறுவது இரண்டாவது படி. சிவத்தினாலே, அதில் தானும் சிவமாகிச் கலந்தே, அதனை உணராமல் உணர்வது நிறை நிலை.

இப்பாடலுடன், "வெள்ளநீர்ச் சடையனார்தாம் வினவுவார் போல வந்து, என் உள்ளமே புகுந்து நின்றார்க்கு, உறங்கும் நான், புடைகள் போந்து, 'கள்ளரோபுகுந்தீர்' என்னக், கலந்து தான்நோக்கி, நக்கு, 'வெள்ளரோம்' என்று நின்றார், விளங்கு இளம்பிறையனாரே" என்னும் அப்பரடிகள் திருவாக்கை ஒப்புநோக்குக. (திருநா. தேவா. 4 ஆம் திருமுறை, தனித்திருநேரிசை, 9).

எட்டியா, வாழையா - எதுவேண்டும்?

2902. கொட்டியு மாம்பலும் பூத்த குளத்திடை
யெட்டியும் வேம்பு மினியதோர் வாழையுங்
கட்டியுந் தேனுங் கலந்துண்ண மாட்டாதா
ரெட்டிப் பழத்துக் கிளைக்கின்ற வாறே.

கருத்து: பயனற்ற கொட்டிப்பூவும், தேன் மிக்க ஆம்பற் பூவும் ஒருங்கே மலரும் குளம்; தின்றால் கொல்லும் பழத்தை உடைய எட்டிமரமும், மருந்தாகப் பயன்படும் பழம் உடைய வேம்பும் ஒன்றாய்ப் பழுத்துள்ள இடம் - இவற்றில் முறையே ஏராளமான கொட்டியை ஒதுக்கி, அரிதேயுள்ள ஆம்பலைக் கொள்ளும் துன்பமும், அழகால் உள்ளம் ஈர்க்கும் எட்டிப்பழத்தை ஒதுக்கி, அழகும் இனிப்பும் இல்லாத வேப்பம் பழத்தை உண்ணும் துன்பமும் உண்டு. ஆனால் எங்கு நோக்கினாலும் வாழை மரங்கள் குலையீன்று விளங்கும் தோட்டத்தில், அதன் பழத்துடன் கரும்பின் கட்டியும், தேனும் கலந்து கிடைத்தால், உண்ண இயலாதவர் இருப்பாரோ? இருக்கமாட்டார். ஆயினும் பற்பலர் அங்ஙனம் உண்டு இன்புறாமல், எட்டிப் பழத்தை எப்படிப் பறிப்பது என்று எண்ணி ஏங்குகின்றனர்.

இனி, இவ்வுவமையாற் போந்த பொருள் வருமாறு: சுத்த மாயா தத்துவங்களின் சேட்டையும், எப்பொழுதோ சில நேரம் சிவானு பவமும் உள்ளதாகிய சுத்தாவத்தை புறவிடய அனுபவத்தையே தந்து,

உறக்கமும் ஓய்வும் தரும். கீழாலவத்தை பிறவியை உண்டாக்கும். மத்திய சாக்கிராவத்தை, கீழாலவத்தையாகிய வழக்கத்தைவிட்டு, முதன் முதலில் மாறுவதாகலின், எய்துவதற்கு அரியது. எய்துவோர்க்கு அருளறிவை அடைவிப்பது. மேலாலவத்தை என்னும் சிவ - அவத்தைகள் ஐந்தும் இனியவை. சிவம் சத் - சித் - ஆனந்தமே. எனவே, சிவத்தை உணரும் அனுபவம், மூன்று வகை ஆனந்தமும் ஒன்றுகலந்த தாகும். ஒன்றே சிவம். 'சத்' அதனுடைய தன்மை யன்று. 'சத்தே' சிவம். அது போலச் சித்தே சிவம். ஆனந்தமே சிவம். இத்தகைய சிவத்தை உணர இயலாதோர், உலக இன்பங்களுக்கே ஏங்குகின்றனர்.

அருள் சிவமாகுமா?

2903. பெடைவண்டு மாண்வண்டும் பீடிகை வண்ணக்
குடைகொண்ட பாசத்துக் கோலமுண் டானுங்
கடைவண்டு தானுண்ணு கண்கலந் திட்ட
பெடைவண்டு தான்பெற்ற தின்பமு மாமே. (36)

கருத்து: உயர்ந்த வகைப் பெண் வண்டும், அதன் இணையாகிய ஆண் வண்டும், தாம் மேலே அமரும்பொழுது இருக்கையாகவும், கேசரங்களின் உட்புகுந்து இன்புறும் பொழுது, வண்ணமிகு குடையாகவும் கொள்ளும் அழகிய ஒரு மலரின் தேனை உண்டு நீங்குகின்றது ஒரு சாதாரண வண்டு. அவ்வாறு அது தேன் உண்ணும் பொழுது, அங்கு இருந்த பெண் வண்டோடு உடன்நின்றே உண்டது. அதனை அப்பெண் வண்டுடன் கலந்து பெற்ற இன்பமாகக் கருதலாமோ? கூடாது.

இனி, உவமையாற் போந்த பொருள் வருமாறு: சத்தியும் சிவமும் யோகிக்கு, அவனது சொந்த உணர்வை விழிப்புறச் செய்யும் பொழுது, அவனது புருவ மத்தியை இருக்கையாகக் கொண்டு, அருள்ஒளியாகக் காட்சி வழங்குவர். யோகி இன்பமடைகின்றான். (அருள் ஒளியினை உடையது சிவ ஒளியே ஆயினும், அதனை அந்நிலையில், யோகி வேறு பிரித்து அறியமாட்டான்.) அவ்விருவரும் யோகியின் சகஸ்ராரத்தில் (பரவெளியில்) பரசிவமாகவும், பரசிவையாகவும், அம்மையப்பனாக - சதாசிவமாக - அவனால் தரிசிக்கப்படுவர். அப்பொழுது, யோகியின் அறிவில், முழுதும் அருள் கலந்து நிற்கும். அதாவது, அருளால், சிவத்தையும் சத்தியையும் உடனாகக் காண்கின்றான். இஃது இன்பமே ஆயினும் சிவத்தோடு கலக்கும் இன்பம் ஆகுமோ? ஆகாது.

அச் சிவானுபூதி சிவதுரியாதீதத்தில் வாய்க்கும். வண்டுகள் (1 ஆம் அடி) சத்தி சிவம். பாசம் - அழகு; மாயாகாரியமாகிய உடம்பு. கோலம் -

தேன்; உயிரனுபவம். ஆனும் - நிறைவு பெறும். நிறைவு என்பது இன்ப நிறைவு. அஃது உண்மையில் முழுநிறைவு அன்று. ஆயினும், அந்நிலையில் மனநிறைவு கொள்ளுதலின், யோகியைச் சாதாரண வண்டோடு உவமித்தார். கண் - மலராகிய இடம்; புருவமத்தியும் சகஸ்ராரத்தானமும். பௌட வண்டு (4 ஆம் அடி) அருட்சத்தி.

குறிப்பு: இதனை யடுத்துச் சுவடிகளிலும் பதிப்புகளிலும் உள்ள "கொல்லையின் - என்ற பாடல" ஆன்ம விலக்கணம் - இயலில், 'பசு' - என்னும் பிரிவில் வந்தது. (பா. 1992) எனவே, இங்கு விடப்படுகிறது.

மூன்றொளிக் கூட்டு

2904. **தட்டத்து நீரிலே தாமரை பூத்தது**
குட்டத்து நீரிற் குவளை யெழுந்தது
விட்டத்தி னுள்ளே 'விலக்கவல் லார்கட்குக்
குட்டத்தி லிட்டதோர் கொம்மட்டி யாமே. (37)

வேறு பாடம்: 1. விளங்கவல் (ஒ) II.

கருத்து: ஒரு நீர்நிலையில் தாமரை மலர்ந்தது. ஆழமான மற்றொரு நீர்நிலையில் குவளை மலர்ந்தது. அவ்விரண்டையும், குறுக்கே ஒன்றை வளரச் செய்து, இணைக்க வல்லவர்களுக்கு, அம் மூன்றும் இணைந்து வளரும் செடியில், குளத்தின் மண்ணில் கொழுமையாக வளர்ந்த கொடியிற் பழுத்தது போல, முலாம்பழம் தோன்றிப் பழுக்கும்.

இனி உவமையாற் போந்த பொருள் வருமாறு: யோக சாதனையில், யோகியின் வலக் கண்ணில் சூரியகலைகள் எழுந்தன. அவனது இடக்கண்ணில் சந்திர கலைகள் எழுந்தன. மூலாதாரத்தில் எழுந்து, சுழுமுனை வழியாக வரும் மூலக்கனலாக உள்ள அக்கினி கலைகளை, அவ்விரண்டுடனும் இணைத்து, திருவருட் சத்தியால், அம் மூன்று கலைகளையும் சந்திர கலைகள் 16 ஆக ஆக்க வல்லவனாயின், அந்த யோகிக்கு, அச் சந்திர கலைகளின் மூலம் சிவானுபூதி எய்தும்.

சிவானுபூதி முதலில் புருவமத்தியிலும், அடுத்துத் தலையுச்சியிலும், பின்பு உடம்பின் எல்லையில், பரமாகாயத்திலும் வாய்க்கும்.

2905. ஆறு பறவைக ளைந்தகத் துள்ளன
நூறு பறவை நுனிக்கொம்பின் மேலன
ஏறு பெரும்பதி யேழுங் கடந்தபின்
மாறுத லின்றி மனைபுக லாமே. (அ)

அமுதம் பரவும்

2906. கொட்டணம் செய்து குழிக்கின்ற கூவலுள்
வட்டணப் பூமி மருவ, வந்து ஊறிடும்,
கட்டணம் செய் கயிறு ஆர்த்துக் கொளுவி உள்
எட்டணம் செய்தொளி யாவர்க்கும் ஆமே.

[1]கொட்டணஞ் செய்து [2]குழிக்கின்ற கூவலுள்
[3]வட்டணப் பூமி [4]மருவவந் தூறிடுங்
கட்டணஞ் [5]செய்கயி [6]றார்த்துக் கொளுவியு
[7]ளெட்டணஞ் [8]செய்தொளி யாவர்க்கு மாமே. (38)

வேறு பாடம்: 1. கொட்டனஞ் (ஒ ஓ) III. 2. குளிக்கின்ற (ஆ இ ஓ) I. 3. வட்டனப் (விசு) (தி) (வ) (த) 4. மருவிவந் (ஆ இ ஓ) I. 5. செய்த (ஓ) II; செய்து (விசு) (தி) (வ) (த) 6. றார்த் தொழுவியுள் (ஆ இ ஓ) I கயிற்றால் தொழுமியுள் (விசு) (தி) (வ) (த) 7. ளொட்டணஞ் (ஒ ஓ) I; மெட்டணஞ் (இ) III; ளொட்டனஞ் (விசு) (தி) (வ) (த) 8. செய்தொழி (இ ஓ) I செய்தெளி (த).

கருத்து: நிலத்தைத் தோண்டி, ஆழமாகச் செய்கின்ற கிணற்றில், மண்ணும் கல்லும் சரிந்து விழுவதைத் தடுக்க, மரத்தாலான வட்டைகளை அடுக்கி, அவற்றை இணைத்துக் கயிற்றால் கட்டி, ஊறும் தண்ணீரை, முழுதும் உள்ளே நிறுத்துவர். எட்டி முகக்கின்ற அளவு அருகில் கிடைக்கும் அந்நீர், இவ்வேற்பாடுகளைச் செய்வோர்க்கெல்லாம் கிடைக்கும்.

இனி, உவமையாற் போந்த பொருள் வருமாறு: மூலாதாரத்தில் மூலக் கனலை எழுப்பிச் சுழுமுனை வழியே தலையுச்சியில், பிரமரந்திரக் குழியில் அமையும் சகஸ்ராரத்திற்குக் கொணர்ந்தால், சிதாகாய அனுபவம் பெறலாம். அவ்விடத்தில் அருளமுதல் ஊறும். பத்தியுடனும், வைராக்கியத்துடனும் விடாது சாதனை செய்து, அமுதம் ஊறுவதை இடையறாதது ஆக்கி, தேக்கிவைத்தால், அவ்வமுதம் உடம்பு முழுதும் பரவும்.

'கொட்டணம் - தோண்டுதல். வட்டணப்பூமி - ஆகாயம். கட்டணம் - கட்டுதல். கொளுவி - அகப்படுத்தி. உள் கொளுவி என மாறுக. எட்டணம் - எட்டுதல். தொளி - சேறு, சேறு நீருக்கு ஆகியது; அமுதம்.

புறம் அகமாகும், உடம்பு கோயிலாகும்

2907. ஏழு வளைகடல், எட்டுக் குலவரை,
ஆழும் விசும்பு இடில் அங்கி, மழை, வெளி
தாழும் இருநிலம், தன்மையது கண்டு,
வாழ நினைக்கின், அது ஆலயம் ஆமே.

ஏழு வளைகட லெட்டுக் குலவரை
யாழும் [1]விசும்பிடி லங்கி மழைவெளி[2]
தாழு மிருநிலந் தன்மை யதுகண்டு
வாழ [3]நினைக்கில தாலய மாமே. (39)

வேறு பாடம்: 1. விசும்பிலடங்கி (ஓ) I; விளிம்பிடி (இ) IV; விசும்பினி (விசு) (தி) (வ) 2. மழைவழி (ஓ) I; மழைவளி (விசு) (தி) (வ) 3. நினைக்கிலத் (ஆ இ ஓ) I.

கருத்து: ஏழு கடல்களும் எட்டுத் திசையிலும் எட்டு மலைகளும் ஆகாயத்தால் கவிக்கப்பட்டுள்ளன. அவ்வாகாயம் உடம்பின் எல்லையிலும் உள்ளது. அச் சிதாகாயத்தில் மூலக்கனலைச் செலுத்தினால், அந்த நிராதார அனுபவத்தால் அமுதமழை பொழியும். உடம்பு முழுவதும் பரவும். இதனை உணர்ந்து, இச்சாதனையைச் செய்து, பெரு வாழ்வு வாழ எண்ணினால், உடம்பு கோயிலாகும்.

மனமணி இலிங்கம்

2908. ஆலிங்கனம் செய்து அகம் சுடர் சூலத்துச்
சாலிங்கம் வைத்தமை தானம் கவித்தனர்
கோல் இங்கு அமைத்தபின், கூபப் பறவைகள்
மால் இங்ஙன் வைத்தது முன்பின் வழியே.

ஆலிங் கனஞ்செய் [1]தகஞ்சுடர் சூலத்துச்
[2]சாலிங்கம் வைத்தமை தானங் கவித்தனர்
கோலிங் கமைத்தபின் கூபப் பறவைகண்
மாலிங்ஙன் வைத்தது முன் பின் வழியே. (40)

வேறு பாடம்: 1. தகஞ்சுமச் (விசு) (வ) 2. சாலிங்கமைத்துத் தலைமை தவிர்த்தனர் (ஓ) IV.

கருத்து: யோகியர் சிதாகாய அனுபவம் பெற்றுச் சொரூப சிவத்துடன் கலந்து, சிவமாந் தன்மை எய்தினர். தம்முடைய அகமே சூலபாணியின் இலிங்கமாக ஒளிவிட, புறமாகிய உடம்பால் அதைச் சூழ்வித்தனர். உடம்பில் உள்ள ஐம்பொறிகள் என்ற பறவைகட்கு, இவ்வாறு ஒரு கோலைக் காவலாக வைத்தபின், உணர்வு பொறிகளின் வழிச் செல்வதற்கு மாறாக உணர்வின் வழி அவை நின்றன.

ஆலிங்கனம் செய்து - கலந்து. சாலிங்கம் - சக லிங்கம், ஒத்த இலிங்கம். சூலத்துச் சாலிங்கம் என்பதில், சூலம் போல, உயிர் ஒளி, அருள் ஒளி, சிவ ஒளி என மூன்று ஒளியும் இப்பொழுது சிவவொளி என்ற ஒரே ஒளியாய் விளங்குகின்றன என்ற குறிப்பு உள்ளது. அகத்தில் ஒளி வீசும் சாலிங்கம் என்க. தானம் - இடம், அகமாகிய இடம். அதனைப் புறத்தில் உள்ள உடல் கவித்தது என்க. மால் - விருப்பம்.

சிவ சங்கற்பம்

2909. கொட்டு, குந்தாலி - இரண்டே; இரண்டுக்கும்
கொட்டுக், குந்தாலிக்கும் பாரை வலிது என்பர்
கொட்டுக், குந்தாலிக்கும், பாரைக்கும்-மூன்றுக்கும்
இட்டம் வலிது என்பர், ஈசன் அறிவே.

கொட்டுக்குந் தாலி யிரண்டே யிரண்டுக்குங்
கொட்டுக்குந் தாலிக்கும் பாரை வலிதென்பர்
கொட்டுக்குந் தாலிக்கும் பாரைக்கு மூன்றுக்கு
மிட்டம் வலிதென்ப ரீச னறிவே[1]. (41)

வேறு பாடம்: 1. னருளே (ஓ) IV.

கருத்து: மண்ணை வெட்டுவது மண்வெட்டி. மரத்தைப் பிளப்பது கோடரி. இவ்விரண்டையும் விட, நிலத்தை அகழும் கடப்பாரை வலியது. இம் மூன்றையும்விட, மழை வலியது. ஏனெனில் மழை வெள்ளம் ஊர்களை அழிக்கும். சிவனது சங்கற்பம், மழை போல வலியதாகும்.

இட்டம் - விருப்பம்.

இரும்பு பொன்னாகும்

2910. கயலொன்று கண்டவர் கண்டே யிருப்பர்
முயலொன்று கண்டவர் மூவரு முய்வர்
பறையொன்று பூசல் பிடிப்பா னொருவன்
[1]மறையொன்று கண்ட துருவம்பொன் னாமே. (42)

வேறு பாடம்: 1. பிறையொன்று (இ) IV.

கருத்து: குளத்து நீரில் கயல்மீன் பிறழுதல் போன்று, மாறி வரும் உலக இன்பங்களை அனுபவிப்பவர், மீண்டும் பிறப்பர். சரியை, கிரியை, யோகம் என்ற தவநெறியில் ஒன்றைக் கண்டவர், அதையே பற்றி, பிற இரண்டையும் சார்ந்து, தவத்தின் பயனாக ஞானம் பெற்று உய்வர். இவ்விருவகை அனுபவமும் எய்தாது, இவை பற்றி நூலறிவு பேசி, வாதம் செய்பவன் எப்பயனும் எய்தான். ஞானாசிரியனின் உபதேச வழியில் நடப்பவன் சிவமாம் தன்மை எய்துவான்.

முயல் - முயற்சி, தவம். மறை - உபதேச மந்திரம்; ஒன்று - ஒன்றுதல், சிவத்தோடு ஒன்றுதல். ஆன்மா சிவமாதல், இரும்பு பொன்னாதலை ஒத்தது.

மலத்தின் மறைப்பு

2911. கோரை யெழுந்து கிடந்த குளத்தினி
லாரை படர்ந்து தொடர்ந்து கிடந்தது
நாரை [1]படிகின்றாற் [2]போனல்ல நாதனார்
பாரை [3]கிடக்கப் [4]படிகின்ற வாறே. (43)

வேறு பாடம்: 1. பகுக்கின்றார் (ஆ இ ஒ) I. 2. போலல்ல (ஆ இ ஒ) I. 3. கடக்கப் (ஆ இ ஒ) I. 4. படிக்கின்ற (ஆ ஒ இ ஒ) I.

கருத்து: கோரைப்புல் மண்டியுள்ள கரையுடன் உள்ள குளத்தில் ஆரைக் கொடியும் படர்ந்து நிறைந்துள்ளது. இதில் நாரை தரை வரை மூழ்கி நீராடும். ஆனால் மனிதர் நீராட இயலுமா? இயலாது.

இனி, உவமையாற் போந்த பொருள் வருமாறு: ஆணவ மலமும், மாயை, கன்மங்களும் ஆன்மாவின் அறிவை மறைத்துள்ளன. இந்நிலையில் அதில் சிவ விளக்கம் உண்டாவது எவ்வாறு?

நீயும் தடை, தாயும் தடை

2912. கொல்லை முக்காதமும், காடு அரைக்காதமும்
எல்லை மயங்கிக் கிடந்த இரு நெறி;
எல்லை மயங்காது இயங்க வல்லார்கட்கு
ஒல்லை கடந்து சென்று ஊர் புகலாமே.

கொல்லைமுக் காதமுங் காடரைக் காதமு
மெல்லை மயங்கிக் கிடந்த விருநெறி
யெல்லை மயங்கா தியங்கவல் லார்கட்கு
வொல்லை கடந்துசென் றூர்புக லாமே. (44)

கருத்து: வீடுபேறு என்னும் ஊரை அடைவதற்கு மூன்றரைக் காத தொலைவைக் கடக்க வேண்டும். அதில் இனிய சோலையும், துன்பம் மிகுந்த காடும் விரவியுள்ளன. வழிதவறிக் காட்டினுட் புகுந்துவிடாமல், சோலை வழியையே பிடித்து நடந்தால், இத் தொலைவைக் கடந்து சென்று வீடுபேற்றை எய்தலாம்.

முக்காதம் - சுத்த வெளி, பரவெளி, சிவவெளி என்பவை. காடு அரைக்காதம் - சுத்த வெளியில் நிகழக்கூடிய பசு ஞானத்தின் தடையும் பரவெளியில் அருட்சத்தியால் சிவத்தை உணர்தலன்றி, சிவத்தைநேராக உணர இயலாத தடையும் ஆகும். சத்தி என்பது, சிவத்தின் சக்தியே; அதன் தன்மையே; அதன் குணமே, அந்தக் குணத்தை உடைய சிவத்தை - அந்தப் பிரமப் பொருளை - உணர வேண்டும். நிர்க்குணப் பிரமம் என்பர் இதனை. இப்பொருளை உணர்வதே வீடுபேறு.

அருளில் தோய்ந்தால் அகலும் வினை

2913. உழவு ஒன்றுவித்து, ஒருங்கின காலத்து,
எழுமழை பெய்யாது, இருநிலச் செவ்வி
தழுவி, வினை சென்று, தாம் பயவாது
வழுவாது போவன் வளர்சடையோனே.

உழவொன்று வித்து வொருங்கின காலத்
தெழுமழை பெய்யா திருநிலச் செவ்வி
தழுவி வினைசென்று தாம்பய வாது
வழுவாது போவன் வளர்சடை யோனே. (45)

கருத்து: தவமுயற்சி மனத்தை ஒருமைப்படுத்த, உயிருணர்வு அருளில் ஒடுங்கியபோது, 'நான்' என்னும் அகப்பற்றுத்

தோன்றாது. வினை என்ற நிலம் முனைப்பதற்கு ஏற்ற பக்குவத்தை அடையாது. பழவினைகளும் பயனை ஊட்டமாட்டா. ஆதலின், இத் தவமுயற்சியாளர் அறிவிற்குச் சிவவொளி உறுதியாகக் 'காட்சிப்படும்'.

இதனால் அகப்பற்றுத் தோன்றும் உள்ளம், வினைப் பயன் உண்டாவதற்கு அடிப்படையாகும் என்று மறைமுகமாகக் கூறினார்.

அருளமுது

2914. பதுங்கிலும் பாய்புலி பன்னிரு காத
மொதுங்கிய தண்கட லோத முலவ
[1]வதுங்கிய [2]வார்கனி யாரமு தூறப்
பொதுங்கிய வைவரைப் போய்வளைத் தானே.
(46)

வேறு பாடம்: 1. மதுங்கிய (ஆ இ ஒ) I. 2. வாரமுதூற லுண்ணாமல் (ஆ இ) II.

கருத்து: ஒருகாற் பதுங்கினாலும், ஒருகாற் பாயும் புலி உலாவும் காடு 12 காதம் தொலைவிற்கு உள்ளது. அதை அரிதிற் கடந்து, குளிர்ந்த கடற் பரப்பில் படகில் ஊர்ந்து சென்ற போது, கனி கிடைத்தது. அதை வாயில் இட்டுச் சுவைக்க, அதில் சாற்றமுது ஊறியது. அதைப் பருகிப் பெற்ற வலிமையால் பகைவராகிய ஐவரை முற்றுகையிட்டான்.

இனி, உவமையாற் போந்த பொருள் வருமாறு: ஒருகால் நன்மை செய்தாலும், ஒருகால் கடுந்துன்பம் செய்யும் சூரிய கலைகள் பன்னிரண்டு. அதாவது, மூலாதாரத்திலிருந்து, மூலக்கனலை எழுப்பிச் சுழுமுனை நாடி வழியே மேலே ஏற்றுவதற்கு உதவுபவள் குண்டலி சத்தி. அவளுக்கு இதில் கருவியாக இருப்பவை, முதலில் அக்கினி கலையும் பிறகு சூரிய கலையும் ஆகும். சூரிய கலை கழுத்துப் பகுதிவரை பரவியுள்ளது. அதற்கு மேல் உள்ளது சந்திர மண்டலம். சூரிய கலைகளைத் தாண்டி, சந்திர மண்டலத்திற்குச் சென்றால் தான், உயிரொளி, அருள்ஒளி, சிவ ஒளி ஆகியவற்றைக் காணலாம். அவ்வாறு தாண்டிச் செல்லக் குண்டலி சத்தி உதவாள். அருட்சத்தியை வழிபட வேண்டும். இல்லையேல், குண்டலியால் துன்பமே விளையும். சந்திர மண்டலத்தில் அனுபவம் பெற்றால், அருளமுது ஊறும். அதாவது அறிவு அருளறிவாய் மலரும் (இதைச் சத்தி நிபர்தம் என முன்பு கண்டோம்.) இவ் அறிவின் துணை வலிமையால், இதுவரை துன்பம் தந்த ஐம்பொறிகளை எதிர்க்கலாம்.

இதனை ஆசிரியர், ''சந்திர யோகம்'' என்ற இயலிலும் (பாடல் பா. 855) கூறினார். ஆயினும் குண்டலி துன்பம் செய்யும் என்ற செய்தி, அவரால் வேறு இடத்தில் கூறப்பட்டது. இத்துன்பத்தை நீக்கி, யோக நெறியில் சாதகனை முன்னேறச் செய்தலே, திருமூலர் கூறும் சிவயோகத்தின் சிறப்பு.

அதுக்கிய, பொதுக்கிய என்பன மெலித்தல் விகாரம் பெற்றன. அதுக்குதல் - வாயில் அடக்குதல். பொதுக்குதல் - துவாரம் இடுதல். ஐம்பொறிகள் மனத்தைத் துன்புறுத்தின என்பதை இவ்வாறு கூறினார். போய் - மேற்சென்று. பகை முடித்தலில் விரைவு காட்டுவோர், மேற்சென்று தாக்குவர்.

இடம் மாறிய அன்பு

2915. தோணி ஒன்று ஏறித் தொடர்ந்து கடல்புக்கு
வாணிபம் செய்து, வழங்கி, வளர்மகன்
நீலிக்கு உறையும் மென்-நெஞ்சின் நிலை தளர்ந்து
ஆலிப் பழம் போல் அளிகின்ற அப்பே.

தோணியொன் றேறித் தொடர்ந்து கடல்புக்கு
வாணிபஞ் செய்து வழங்கி வளர்மகன்[1]
நீலிக் [2]குறையுமென் னெஞ்சின் னிலைதளர்ந்
தாலிப் பழம்போ [3]லளிகின்ற வப்பே. (47)

வேறு பாடம்: 1. வளர்மகள் (ஆ இ ஒ) I. 2. கிறையுமென் (இ) I. கறையுமே (ஒ) I; கிறைக்குமே (த) 3. வழிகின்ற (ஆ இ) I; லளிக்கின்ற (ஒ) I; லழிக்கின்ற (ஒ) I.

கருத்து: தோணி யேறிக் கடல் கடந்த நாட்டுக்குச் சென்று, வாணிகம் செய்து, பொருளீட்டி, அதை அறம், பொருள், இன்பங் கட்கு வகுத்து வாழ்வான் ஒருவன், பரத்தையை விரும்பி, அவளிடம் மட்டுமே அன்பு செய்தான். பிறகு நிலைமாறி, கற்போலிருந்த ஆலங்கட்டி நீராகக் கரைதல் போல, தன் மனையாளிடம் கொண்ட அன்பினால் நீராழமாக உருகினான்.

இனி உவமையாற் போந்த பொருள் வருமாறு: அருட் சத்தியின் துணை கொண்டு, சந்திர மண்டலத்தை எய்தி, யோக சாதனை தொடர்ந்து செய்து, பதி ஞானத்தின் முதற்படியாக உயிருணர்வு பெற்ற யோகி, மேலும் மேலும் அவ்வுணர்வை வளர்த்துப் பாசஞானத்தை விட்டுப் பதிஞானத்தின் உயர்நிலையைப் படிப்படியாகப் பெற்று வளர்ந்தான்.

அவ்வாறு வளரும் பொழுது, முன்னர்க் குண்டலி சத்திக்கு அன்பு செய்து வழிபட்ட அவனது உணர்வின் நோக்கு நிலை மாறியது. அருட் சத்திக்கு அன்பு செய்து உருகினான்.

கடல் - சந்திர மண்டலம். வழங்கி - பதிஞானத்தால் சிந்தித்து. வளர்தல் - அனுபவப் படிகளில் உயர்தல். நீலி - கறுமை நிறமுடையவள்; குண்டலி. திரோதான சத்தி மறைக்கும் ஆற்றல் ஆதலின் இந்நிறம் கூறினார். உறைதல் - இறுகுதல். இறுகி, உடையாத கல்போலத் தோன்றிய உள்ளம், அருட்சத்திக்கு நெகிழ்ந்தது ஆதலின் அது கல்லன்று, ஆலங்கட்டி. அஃது உடைந்து நீராயிற்று என்றார்.

மென்னெஞ்சம் என்றதும் அதனால். அப்பு - நீர். வன்மையான காய் கனிந்து பழமாதல் போல, நெகிழ்ந்து உருகுதலின், "ஆலிப்பழம்" என்றார். "நெஞ்சின்நிலை அப்பே" என வினைமுடிவு செய்க.

காயா, பழமா?

2916. முக்காதம் ஆற்றிலே மூன்றுள வாழைகள்
செக்குப் பழுத்தது, இகழ் மரம் காய்த்தன
பக்கனார் மிக்கார் படங்கினார் கன்னியார்
நக்கு மலர் உண்டு, நடுவு நின்றாரே.

முக்காத [1]மாற்றிலே மூன்றுள வாழைகள்
செக்குப் பழுத்த [2]திகழ்மரங் காய்த்தன[3]
பக்கனார் மிக்கார் படங்கினார் கன்னியார்
நக்கு மலருண்டு நடுவுநின் றாரே. (49)

வேறு பாடம்: 1. மற்றிலென் (ஓ) I; வாற்றிலே (தி) (த) 2. திரிமலங் (விசு) (தி) (வ) (த) 3. காய்ந்ததின் (ஓ) II.

கருத்து: மூலாதாரத்திலிருந்து சகஸ்ராரம் வரை உள்ள மூச்சுப் பாதையில் மூன்று மண்டலங்கள் உள்ளன. அவை அக்கினி, சூரிய, சந்திர மண்டலங்கள். அவற்றில் முறையே அக்கினி கலை, சூரிய கலை, சந்திர கலை ஆகியவை நிரம்பியுள்ளன. அவற்றுள் பயன் மிக்கவை சந்திர கலைகள். ஏனையவை ஓரளவு நன்மையே தருவன. மூலாதாரத்திலிருந்து மூலக்கனலை மேலே ஏற்றும் சாதனையில், அக்கினி மண்டலம், சூரிய மண்டலங்களைக் கடந்து மேலே சென்று, சந்திர மண்டலத்தை அடைந்த யோகி உயர்நிலை அனுபவம் பெற்றான். ஆனால் பிறருக்கு (அங்ஙனம் கடவாதார்க்கு) முதலில் நன்மை செய்வது போலத் தோன்றிய குண்டலி சத்தி,

பின்னர்த் துன்பம் செய்தாள். சந்திர மண்டலத்தை அடைந்தவனோ, இவர்களை எள்ளி நகையாடி, சகஸ்ராரத் தாமரையில் சிவானுபவம் பெற்றுத் தொடர்ந்து, சுழுமுனை வழியில் தனது மூச்சை இயக்கி வந்தான்.

செக்கு - செக்கர், செம்மை. இது அக்கினி கலையின் நிறம். இதன் முதிர்ச்சியே சந்திர கலை யாதலின், 'செக்குப் பழுத்தது' என்றார். காய் பழாமையின் 'இகழத்தக்க மரம்' என்றார். பக்கன் - பகு என்பதனடி யாகப் பிறந்த பெயர். பகுதல் - பிரிதல். படங்குதல் - மெய்போலப் பேசுதல். குண்டலியால் சிறிது இன்பம் எய்தியவன், மிக்க இன்பம் பெற்றதாகக் கூறிக்கொள்கின்றான். கன்னியார் - குண்டலி. அவளருள் பெற்றோர் பொய்பேசுவதை, அவள் பேசுவதாகக் கூறியது உபசார வழக்கு.

வாகைக் களத்தில் வலம்புரிச் சங்கு

2917. அடியும் முடியும் அமைத்ததோர் ஆத்தி,
முடியின் நுனியின்கண் முத்தின் அ(ம்) மூங்கில்
கொடியும், படையும் கொடு அச் சாலை ஐந்தும்
மடியும், வலம்புரி வாய்த்தது அவ்வாறே.

அடியு முடியு [1]மமைத்ததோ ராத்தி
[2]முடியி னுனியின்கண் [3]முத்தின மூங்கில்
கொடியும் [4]படையுங்கொ [5]டச்சாலை யைந்து
மடியும் வலம்புரி [6]வாய்த்ததவ் வாறே. (49)

வேறு பாடம்: 1. மமையத்தக்கோ (ஒ) II; மமைத்தோ (ஒ) I; மமைந்ததோ (விசு) (தி) (வ) (த) 2. முடிகினார் (ஆ) II; முடிய (விசு) முடியு (தி) (வ) (த) 3. முற்றின (ஆ) I; முத்தினை (ஒ) I; முத்தலை (ஒ) II; (இப்பாடங் களினின்றும் "முத்தின" என்னும் பாடம் மீட்டுருவாக்கம் (Recension) செய்து இப்பொழுதைய பதிப்பில் மேற்கொள்ளப்பட்டது.) 4. படியுங் (ஒ) I. 5. தொடர்சாளை (இ) I; கொடர் சாளை (ஆ) I; கொடசானை (ஒ) I; கோட் சரனையைந்து (விசு) (தி) (வ) கொளுஞ் சார்பையைந்து (த) (இப்பாடங்களினின்றும் "கொடச் சாலையைந்து" என்னும் பாடம் மீட்டுருவாக்கம் செய்யப்பட்டு, இப்பொழுதைய பதிப்பில் மேற் கொள்ளப்பட்டது.) 6. வாய்வைத்த (இ) III.

கருத்து: அடிப்பகுதி வலிமையுடையதும், உச்சிப் பகுதி பயனுடையதுமான ஓர் ஆத்திமரம். அதன் உச்சி நுனியில் முத்தினை உடைய மூங்கில் வளர்ந்துள்ளது. இவற்றைப் பாதுகாத்தற்கு வீரர்

பாசறைகள் ஐந்து உள்ளன. ஓர் அரசன் இம்மரத்தைக் கொள்ளப் படையுடன் எழுந்தான். படைகள் நிரம்பி, வெற்றிக் கொடி பறந்த அப்பாசறைகள் ஐந்தும் வீழ்ந்தன. வாகைக் களத்தில் வலம்புரிச் சங்கு முழங்கிற்று.

இனி, உவமையாற் போந்த பொருள் வருமாறு: அருட் சத்தியின் செயல் வடிவங்களுள் (Functional form) ஒன்றாகிய திரோதான சத்தி (குண்டலி) வீற்றிருக்கும் மூதாரம், அதிலிருந்து மேலே செல்லும் சுழுமுனை நாடி, அதன் முடிவிடத்தில், அருட்சத்தியானவள் சிவத்தோடு வீற்றிருக்கும் சகஸ்ராரம் - இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது மனிதர் உடம்பு. தலையுச்சியிலிருந்து 12 அங்குலத் தொலைவிற்குச் சிதாகாயமும், அதற்கும் அப்பால் பரமாகாயமும் உள்ளன.

அருள் உருவம் கொண்ட சிவமாகிய பொருள், சகஸ்ராரத்தில் அருளோடு இணைந்தும், சிதாகாய, பரமாகாயங்களில் தனித்தும் விளங்குகின்றது. சிவத்தைப் பெறுதலைக் குறிக்கோளாகக் கொண்ட ஒரு யோகி, அருட் சத்தியின் துணையுடன் மத்திய சாக்கிரம், சுத்தம் - என்ற வரிசைகளில் உள்ள, ஐந்து, ஐந்து அவத்தைகளைக் கடந்து, பரவெளியை அடைந்தான். பர நாத வொலியைத் தனது உட்புலனால் கேட்டு மகிழ்ந்தான்.

மூத்தின மூங்கில் - மகரம் தொக்கது; முத்தை உடைய அழகிய மூங்கில். சாலை - பாசறை; உணர்வுத் தொகுதி.

நிறைவின் விளிம்பில் தடை

2918. [1]பன்றியும் பாம்பும் பசுமுசு வானரந்
தென்றிக் கிடந்த சிறுநரிக் கூட்டத்துக்
[2]குன்றாமைக் [3]கூட்டித் தராசி னிறுத்தபின்
குன்றி [4]யறையைக் குறைக்கின்ற வாறே. (50)

வேறு பாடம்: 1. பன்றியும் (விசு) 2. குன்றாமை (ஓ) I. 3. கூடிக் (இ) IV. 4. நிறையைக் (ஓ) IV.

கருத்து: சாதாரணமாக தாமத குணம், இராசத குணம், சத்துவ குணம் ஆகியவற்றில் மனம் ஊசலாடும். தத்துவங்களினிடையே (உலக வாழ்வில்) யோகி, அவற்றால் மனம் பாதிக்கப் படாதவாறு, உயிருணர்வு விழிக்கப்பெற்று, சுழுமுனை வழி, உயிராற்றலின் இயக்கத்தால் அதற்கு வலிவூட்டி வளர்த்த பிறகு, ஆன்மா தத்துவங்களும், அவற்றின் வாசனையும் அற்றுச் சுத்தான்மா ஆகியது. பிறகு அருட் சத்தியுடன் கலந்து நின்று, பரசிவத்தை

உணர்ந்தது. பின்பு, அது சொரூபசிவத்தைக் காணத் திருவருளால் உந்தப்பெற்றபோது, அந்த அருட்சத்தியும் விலகி நின்றது. இப்போது ஆன்மா 'வெற்றான்மா' (அறை) ஆகியது. அது 'நிருவாணநிலை' தான். ஆயினும், அது 'சொரூப சிவத்தை' உணரவியலவில்லை. அதற்கு உரிய தகுதி ஒரு குன்றிமணியளவு குறைந்தது. குறைத்தது யாது? அதுவே ஆன்ம போதம்.

பன்றி, பாம்பு, பசு ஆகியவை தம் இயல்புகளால் முக்குணங்களுக்கு உவமை ஆயின. முசு - குரங்கு; மனம். நரிக் கூட்டம் - 36 தத்துவங்கள். தராசு - சுழுமுனை. நிறுத்தல் - அளத்தல், நிறுத்துதல். குன்றி - குறைந்து; குன்றி மணி. அறை - அற்றது. தொழிலடிப் பெயர். மூக்கற்றவன் மூக்கறை. ஏதும் அற்றவன் அறை. "அற்றார் அழிபசி தீர்த்தல்" என்னும் குறட்பாவில் அற்றான் என்பது ஏழையைக் குறித்தலைக் காண்க.

தாமரை மலருமா?

2919. மொட்டித் தெழுந்ததோர் மொட்டுண்டு மொட்டினைக்
கட்டுவிட் [1]டோடி மலர்தலுங் காணலாம்
பற்றுவிட் டம்மனை பாழ்பட நோக்கினாற்
கட்டுவிட் [2]டார்க்கன்றிக் காணவொண் ணாதே. (51)

வேறு பாடம்: 1. டோடின் (விசு) (தி) (வ) (த) 2. டாலன்றிக் (த).

கருத்து: மூலாதாரம் முதல் ஆக்ஞை வரையுள்ள ஆறாதாரங் களிலும் அனுபவத்தைத் தோற்றுவிப்பது, நிராதாரத்தில் உள்ள சகஸ்ராரம். ஆனால், உச்சந் தலையில், சகஸ்ராரத்தாமரை அரும்பாகவே கவிழ்ந்து நிற்கின்றது. அது மேல்நோக்கி நிமிர்ந்து, இதழ் விரித்து மலர்தலும் கூடும். எப்பொழுது? உயிருணர்வு ஆதாரங்களைச் சார்ந்து அனுபவம் பெறும் நிலையைத் தாண்டி, அருட் சத்தியையே முழுவதும் சார்ந்து, நிராதாரத்திற்குச் செல்ல, தத்துவங்கள் நம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டுள்ள நிலை நீங்கினால், அத்தாமரை மலரும்.

நோக்கினால் கட்டுவிட்டார் - உணர்வால் பற்று நீத்தவர்; அருளைச் சாரும் உணர்வால் அகப்பற்று, புறப்பற்றுகளை விட்டோர். உணர்வு ஏதுவாக என்க. ஓடி - நிமிர்ந்து. மனை - வீடு; ஆகுபெயராய், ஆறு ஆதாரங்களையும் குறித்தது.

ஊரில் இல்லாத அதிசயம்

2920. நீர் இன்றிப் பாயும், நிலத்து இன்றிப் பச்சையாம்
யாரும் என்றும் அறிய வல்லார் இல்லை,
கூரும் மழை பொழியாது பொழிபுனல்
தேரின் இந்நீர்மை திடரின் இல்லாதே.

[1]நீரின்றிப் பாயு [2]நிலத்தின்றிப் பச்சையா
[3]மியாரு மென்று மறியவல் லாரில்லை
கூரு மழைபொழி யாது பொழிபுனல்
[4]தேரினிந் நீர்மை [5]திடரினில் லாதே. (52)

வேறு பாடம்: 1. நீரன்றி (ஓ) I. 2. நித்தன்றிப் (ஓ) I. நிலத்தினிற் (விசு) (தி) (வ) (த) 3. யாவரு (இ ஒ ஓ) II; யாருமிங் (த) 4. தேரினில் (ஓ) I; 5. திடரில்லாவே (ஆ) II; திடரின்னில் (ஓ) I; (2 ஆம் அடி தளைச் சிதைவுடைமையோடு எழுத்துப் பெறலுமில்லை, ஆயினும், 'அ' - சுவடியில் உள்ளபடியே பதிப்பிக்கப் பட்டது. பிறசுவடிகளில் உள்ள 'யாவரும்' என்ற பாடம் எதுகை பெறவில்லை. இதனைக் கொண்டால் தளைச்சிதைவு இல்லை. எழுத்துக் கணக்கும் முறைப்படி உள்ளது. ஆனால், யாப்பில் தளை சிதையினும், கட்டளை தவறினும் ஏற்பர். எதுகை வழுவுதலை இசையார்.

கருத்து: பாய்கிறது. நீர் இல்லை. பச்சை படர்ந்தது. நிலம் இல்லை. பெய்கின்றது. மழை இல்லை. இவை யாவை? என்றும் யாரும் அறியார், இதனை ஆராய்ந்தால், இச்செயல்கள் உலகில் நிகழ்வன அல்ல.

இனி உவமையாற் போந்த பொருள் வருமாறு: அருளுடன் கூடிய உயிருணர்வு எழுந்தது. மூச்சுக் காற்றுடனும், குளிர்ந்த மூலக்கனலுடனும் தலையுச்சிச் சகஸ்ராரத்துக்குச் சென்றது. சிதாகாய வெளியில் அருளொளியைக் "கண்டது". அதன் விளைவாக, அருளமுதம் ஊறிப் பெருகிற்று. இது நிராதாரம் ஆகிய சிதாகாய அனுபவம்.

கூரும் - மிக்க. திடர் - மேடு. நிலத்தைப் பொதுவாகக் குறித்தது. உவமையாய் நின்று ஆறு ஆதாரங்களைக் குறித்தது. ஆதாரங்களில் கிட்டாத அருளனுபவம் நிராதாரத்தில் கிடைத்தது என்றார். இஃது அரிய அனுபவமாதலின் 'யார் அறிய வல்லார்' என்றார். முன் இயல்களின் உரைகளில் பரவெளியனுபவம் என்பதும் இதனையே.

கோட்டான் சக்கரவாகம் ஆயிற்று

2921. கூகை குருந்தம் - அது ஏறிக், குணம் பயில்
கோகம் உலகு குணக்கின்ற காலத்து,
நாகமும் ஒன்று நடு உரைசெய்திடும்,
பாகனுமாய் நின்ற பண்பனுமாமே.

கூகை குருந்தம தேறிக் குணம்பயில்
[1]கோக [2]முலகு [3]குணக்கின்ற காலத்து
நாகமு மொன்று நடுவுரை செய்திடும்
பாகனு மாய்நின்ற பண்பனு மாமே. (53)

வேறு பாடம்: 1. மோக (விசு) (தி) (வ) (த) 2. முலகுக் (ஓ ஓ) IV. 3. குணர்கின்ற (ஓ ஓ) IV. 4. மென்று (ஓ) IV.

கருத்து: ஒரு கோட்டான் குருந்த மரத்தின்மேல் அமர்ந்தது. சக்கரவாகப்பறவையாக மாறியது. அச்சமயம் நடுவே தோன்றிய ஒரு பாம்பு ஏதோ கூறியது. உடனே சக்கரவாகப் பறவை யானைப் பாகனாய் மாறிற்று.

இனி, உவமையாற் போந்த பொருள் வருமாறு: ஆன்மா பரவெளியை எய்திச் சந்திர மண்டலத்து அமுதத்தை அனுபவித்தது. அமுதம் உடம்பிலும் பரவியது. அப்பொழுது திருவருள், ஆன்மா அகண்டாகார வெளியாய் விளங்கும் சொரூப சிவத்தை உணர வேண்டும் என்று சங்கற்பித்தது. அவ்வாறே ஆன்மா உணர்ந்து, சிவம் ஆகியது.

குணம் - நிலவொளியை அன்றி எதையும் உண்ணாமை. குணங்குதல் - வளைதல், மாறுதல்; தன்வினை. வலித்தல் விகாரம் பெற்றது; உலகு, உடம்பு எனப் பொருள் செய்து, உலகு குணக்குதல் - உலகை வளைத்தல், உடம்பை அமுதமயமாக - அருளுடம்பாக - மாற்றுதல் என்றுமாம். குணக்குதல் ஈண்டுப் பிறவினை. நாகமும் ஒன்று - நாகம் ஒன்றும் என உம்மையை மாற்றுக. நாகம் - அகண்டாகார வெளி. ஒன்றும் - ஒன்றுதலும்; ஒன்றி நிற்பதாகிய அனுபவமும். நடு - திருவருள்; ஆகுபெயர், சுழுமுனை வழியே வாய்ப்பது ஆதலின். உரை செய்திடும் - சங்கற்பிக்கும். பாகன் - அருட்சத்தியுடன் கூடி நின்றவன். இப்பொழுது 'தனிப் பொருளாய்' நிற்பவன்.

சிவன் உறையும் கோயில்

2922. வாழையுஞ் சூரையும் வந்திடங் கொண்டது[1]
[2]வாழைக்குஞ் சூரை வலிது வலிதென்பர்
வாழையுஞ் [3]சூரையை வன்றுண்டஞ் செய்திட்டு
வாழை யிடங்கொண்டு வாழ்கின்ற வாறே. (54)

வேறு பாடம்: 1. கொண்டன (விசு) (தி) (வ) (த) 2. வாழைக்குச் (ஓ) I. 3. சூரையும் (விசு) (தி) (வ) (த).

கருத்து: ஆன்மா பிறவி பெற்றுப் பிறந்தபொழுது, சிவமும், அனாதியே அதனைப் பிணித்திருக்கும் ஆணவ மலமும், அதனுடன் 'ஒன்றாய்க்' கலந்திருந்ததை அறிவோம். வாழ்க்கையின் போக்கில் சிவத்தை விடவும் ஆணவ மலம் வலிமை மிக்கதாக இருந்தது. சிவத்தின் செயல், உயிருடன் அறிந்து, உயிருக்கு அறிவித்தல். மலத்தின் செயல், உயிரின் அறிவை மறைத்தல். உயிருக்குச் சிவம், அதன் பக்குவத்தை நோக்கியே அருள்புரிவானாதலின், அப்பக்குவம் வாராமையால், ஆணவ மலமே வலிவுடையதாய் இருந்தது. அப்பக்குவம் உயிர்க்கு வந்து கனிந்தபோது, சிவம் ஆணவ மலத்தை நீக்கி, உயிரின் உள்ளம் முழுதும் இடங் கொண்டது. ஆன்மாவும் சிவத்தில் ஒன்றியது. அதனால் விளைந்த பேரானந்தம் துய்த்து வாழ்கின்றது.

வாழை - சிவம். சூரை - ஆணவ மலம். வந்து - வர. இடங்கொண்டது - வளர, நிலம் நிரம்பியது. வன் துண்டம் - மீண்டும் வடிவம் பெறாதவாறு வெட்டப்பட்ட துண்டுகள். இடங்கொண்டு என்பதை இடங்கொள்ள என மாற்றுக. ஆணவ மலம், உயிரின் அறிவை மறைத்து, அது தன்னையும், உலகையும், இறைவனையும் அறிய வியலாமற் செய்வதுடன், ஆணவத்தையும், அறியாமற் செய்வதால், "வலிது, வலிது" என்றார். அடுக்கு மிகுதியைக் காட்டியது.

வெட்டாதே, விற்றுவிடு

2923. நிலத்தைப் பிளந்து நெடுங்கட லோட்டிப்
[1]புலத்துக் குறவன் புணர்ந்த கொழுமீன்[2]
விலக்குமின் யாவர்க்கும் வேண்டிற் குறையா
[3]தலத்தமு மின்றி யடுவது மாமே. (55)

வேறு பாடம்: 1. புனத்துக் (ஆ இ ஓ) II. 2. தொழுமீன் (ஆ ஓ) I; தருத்தமு (ஆ இ ஓ) II; (அலத்தலும் என்று இருப்பின் நன்று. ஆயினும் ஓ - சுவடிப் பாடம் ஏறக் குறைய ஒத்தலின், அதன்படியே பதிப்பிக்கப்பட்டது.)

கருத்து: நாட்டில் வாழும் குறவன் பூமியை ஆழமாகத் தோண்டிக் கிணறு உண்டாக்கியும், கடலில் தோணி செலுத்தியும் பிடித்துக் கொண்டு வந்த கொழுமையாகிய மீனைத் தான் உண்பதற்காக, அரிந்து சமைக்க முற்படுகின்றான். அதை விலக்குக. அதனை விற்றால் நிறைந்த பொருள் கிடைக்கும். அவன் ஒருவன் மட்டுமன்றி, அவனைச் சேர்ந்தோர் யாவர்க்குமே நிரம்பக் கிடைக்கும். உணவிற்காகத் துன்புறுதல் இன்றி, அப் பொருளைக் கொண்டு உணவுப் பொருள்களைப் பெற்றுச் சமைத்து உண்ணலாம்.

இனி உவமையாற் போந்த பொருள் வருமாறு: யோகி சுவாதிட்டானத்திலும், மணிபூரகத்திலும் தியானயோகம் முயன்று, குண்டலி சத்தியின் அருளால், விந்துவைக் கட்டினான். அதன் ஆற்றலை உலகியற் பயன் பெறுதற் பொருட்டுப் பயன்படுத்த விரும்புகின்றான். அதனை விலக்குக. அவ்யோகி சிவயோகம் பயின்று, அருளொளியைப் பெறுவானாயின், அவனுக்கு மட்டுமன்றி, அவனது தவ ஆற்றல், பலர்க்கும் நன்மை செய்ய உதவும்.

சுவாதிட்டானம் - உடம்பில் நிலம் என்ற பூதத்திற்குரிய இடம். மணிபூரகம் நீருக்குரிய இடம். சுவாதிட்டானப் பகுதியில் விந்து (சுக்கிலம்) உண்டாகி, மணிபூரகப் பகுதியில் - விந்துப் பையில் - சேர்கின்றது. புலம் - நாடு; உடம்பு. குறவன் - சீவன். அலத்தல் - துன்புறுதல்.

பிள்ளை பிறந்தது

2924. தளிர்க்கும் ஒரு பிள்ளை தட்டான் அகத்தில்
விளிப்பது - ஓர் சங்குண்டு வேதனை நாடிக்
களிக்கும் குசவற்கும், காவிதியார்க்கும்
அளிக்கும் பதத்து ஒன்றாய் ஆயம் கொள்வார்க்கே.

தளிர்க்கு மொருபிள்ளை தட்டா னகத்தில்
விளிப்பதோர் சங்குண்டு [1]வேதனை நாடிக்
களிக்குங் [2]குசவற்குங் காவிதி யார்க்கு
மளிக்கும் [3]பதத்தொன்றா யாயங்கொள் வார்க்கே. (56)

வேறு பாடம்: 1. வேந்தனை (ஓ ஓ) II. 2. கயலற்குங் (ஆ) I; கவசற்கு (இ) I. 3. பதத்தொன் றாய்ந்துகொள் (ஓ ஓ) IV; பதத் தொன்றாயையங்

கொள் (ஆ) V; பதத்தொன் றாயங்கொள் (இ) V; சுவடிகளில் உள்ள பாடங்களிலிருந்து மீட்டுருவாக்கம் செய்து, இப்பதிப்பில் பாடங் கொள்ளப்பட்டது.

கருத்து: தண்ணீரைத் தேக்கி அணை கட்டுவது போல, யோகி விந்துவைக் கட்டிச் (சேமித்து) சிவயோக சாதனை செய்தால், (அருட்சத்தியின் துணையால்) அவனுக்கு உயிருணர்வு விழிப்புப் பெறும். எவ்வாறு? உடம்பின் சூரிய மண்டலத்திலும் சந்திர மண்டலத்திலும், தான் முறையே செலுத்துகின்ற, அக்கினி கலை நிரம்பிய மூலக்கனலை அருட்சத்தியால் குளிர்வித்து, அருளொளியை அவள் வழங்கியருள, அதன் ஒளியாய், சந்திர கலையின் சாளரமாகிய இடக்கண்ணில் சந்திர ஒளி நிரம்ப, சூரிய கலையின் சாளரமாகிய வலக்கண்ணில் சூரிய ஒளிநிரம்ப, இவ் விரண்டிற்கும் நடுவே, புருவமத்தியில், பிடரியின் வழியே வரும் அக்கினி ஒளியோடு இணைந்த, குளிர்ந்த மூலக்கனல் நிரம்ப, இம் மூன்று ஒளியும் இணைந்து, முக்கூட்டு ஒளியாகச் சோதிக் காட்சி தோன்றினால், உயிருணர்வு விழிப்புப் பெற்றது என்று அறியலாம். புருவமத்திக்கு மேலே, தலையுச்சியில் சகஸ்ரார அனுபவத்தில் பெறும் பரசிவக் காட்சியில், பரநாதமாகிய சங்கு முழங்கும். அது, சீவனைச் சிவமாக மாற்றும் சொரூப சிவ அனுபவம் கிடைப்பதற்கு முன்னறிவிப்பாகும்.

உயிருணர்வைப் பிள்ளை என உருவகித்து, அது விழிப்புப் பெறுதலைப் பிறத்தலாகக் கூறினார். தட்டான் - தட்டவன்; தளைத்தவன்; அடைத்தவன். "நிலன் நெளி மருங்கின் நீர்நிலை பெருகத் தட்டோர்" என்னும் புறநானூறு காண்க. (பா. 18) "வேதனை நாடி விளிப்பதோர் சங்குண்டு" என மாற்றுக. வேதன் - மாற்றுவோன். ஆசிரியர் கடவுள் வாழ்த்து இயலில், "உடலுள் நின்ற வேதியுமாய் இருந்தான்" எனக் கூறிப் போந்ததை நினைவு கூர்க. (பா. 14) உடம்பில் கழுத்திற்கு மேல் உள்ள பகுதி பிரமன் இருப்பிடம் ஆதலின், சந்திர மண்டலத்தைப் 'பிரமன்' என்னும் குறிப்பால் 'குயவன்' என்றார். அவன் மண்ணைக் கொண்டு பானை முதலியன வனைவது போல, பிரமன் மாயையைக் கொண்டு உலகத்தைப் படைக்கின்றான். காவிதி, வணிகர்க்கு வழங்கிய சிறப்புப் பெயர். வணிகர் நாடு சுற்றுதல் போலப் பன்னிரண்டு இராசியிலும் சுற்றும் சூரியனை இச் சொல் குறித்தது. பதம் - சோறு. சோறு பக்குவமாதல் போல, மூலக்கனல் அருட்சத்தியால் குளிர்ந்து பக்குவம் பெறுகிறது.

ஆயம் கொள்ளுதல் - கூட்டாகச் சேர்த்தல். இவையெல்லாம் முன் இயல்களிற் கண்டவை.

ஐம்புலன் அருள்மயம்

2925. குடை விட்டுப் போந்தது கோயில் எருமை
படை கண்டு மீண்டது பாதி வழியில்,
உடையவன் மந்திரி உள்ளலும், ஊரார்
அடையா நெடுங்கதவு ஐந்தொடு நான்கே.

குடைவிட்டுப் [1]போந்தது கோயி லெருமை
படைகண்டு மீண்டது பாதி வழியி
லுடையவன் மந்திரி யுள்ளலு மூரா
[2]ரடையா நெடுங்கத வைந்தொடு நான்கே. (57)

வேறு பாடம்: 1. போந்து (ஆ இ) I. 2. வடையா (ஒ) IV.

கருத்து: அரண்மனைப் பாதுகாப்பில் உள்ள எருமை, எவ்வாறோ, காவலை மீறி வெளியே சென்றது. பகைவர் யாரோ உட்புகுந்து, அதனைக் கவர்ந்து சென்றனர் என்று எண்ணிய அமைச்சர் ஆணையிட, அப்பகைவரை எதிர்த்து ஓட்டுதற்குப் படைகள் சென்றன. அப்படைவீரர்களை எருமை கண்டு, பாதி வழியிலேயே திரும்பியது. ஆனால், அரசன் யாதோ கருதி, அமைச்சரைக் குறிப்பால் நோக்க, அவர் அக்குறிப்பை உணர்ந்து, செய்தி அனுப்ப, படைகள் எருமையைப் பிடிப்பதற்காகத் தொடர்ந்து செல்லாமல், திரும்பி வந்து எல்லை வாயில்கள் ஒன்பதையும் அடைத்துவிட்டு, ஊரைச் சேர்ந்தனர்.

இனி, உவமையாற் போந்த பொருள் வருமாறு: யோகியின் உணர்வு, அவனது உடம்பில் உள்ள ஆதாரங்களையும், சகஸ்ராரத்தையும் கடந்து, நிராதாரத்திற்குப் - பரவெளிக்குச் - சென்றது. அதற்குத் துணையிருந்த அருட்சத்தி, பரவெளி அனுபவம் பெறத் திருவருள் செய்தாள். ஆனால், ஆன்மா, சொரூப சிவத்தை உணரும் சாதனைக்கு, அருள் - அனுபவங்கள் - அருட்காட்சிகள் தடையாக இருந்தன. சிவ வெளியை அடைய முயன்ற உயிர், பரவெளிக்கே திரும்ப நேர்ந்தது. இஃது ஒருமுறை அன்று, பலமுறை நிகழ்ந்தது. இறுதியில், பதியாகிய சிவம் சங்கற்பிக்க, அருட்சத்தி விலகினாள். உயிருணர்வு சிவவெளியை எய்தியது. இனி, ஆதாரங்களுக்கோ, உடலுணர்விற்கோ மீளாது, அருட்சத்தி அவ்வுடம்பின் ஐம்புலக் கதவுகளை அடைத்துவிட்டாள். அதாவது, அவை அருட்கதவுகள் ஆயின. எனவே, யோகியின் உடம்பு, அருள்மயம் ஆயிற்று. உணர்வு சிவமயமாயிற்று.

குடை - காவல்; அருட் சத்தியின் துணை. படை - அருள் உருவங்கள்; சத்தி, சிவத்தின் தெய்வீக உருவங்களின் காட்சி. உடையவன் - சிவம்.

மந்திரி - அருட்சத்தி, "ஐந்தொடு நான்கு நெடுங்கதவு அடையா, ஊரார் என்க. அடையா - செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். 'அடைத்து' என்று பொருள் தந்தது. இவ்வினையெச்சம் கொண்டு முடியும் சொல்லாக, "ஊர் சேர்ந்தனர்" என்பதைப் பெய்க.

குண்டலி யோகம் குழியில் தள்ளும்

2926. போகின்ற எட்டும், புகுகின்ற பத்து - எட்டும்
ஆகிப் படைத்தன ஒன்பது வாய்தலும்
நாகமும், எட்டொடு - நாலு புரவியும்
பாகன் விடாவிடின், பன்றியும் ஆமே.

போகின்ற வெட்டும் புகுகின்ற பத்தெட்டு[1]
[2]மாகிப் படைத்தன வொன்பது வாய்தலு
[3]நாகமு மெட்டொடு நாலு புரவியும்
[4]பாகன் [5]விடாவிடிற் பன்றியு மாமே. (58)

வேறு பாடம்: 1. பாத்தெட்டு (ஓ) IV. 2. மாதி (ஆ இ ஓ) I. 3. நாதமு (ஓ) I. 4. பாதன் (ஓ) I. 5. விடிலவை (ஓ) IV.

கருத்து: சந்திர கலை பதினாறனுள் முற்பகுதி எட்டும், அவற்றினின்று உருவாகும் பதினெட்டுக் கலைகளும், முறையே, சந்திர மண்டலத்திற்குக் கீழ் உள்ள சூரிய மண்டலத்தில் பன்னிரண்டு சூரிய கலைகளாகவும், அதற்குக் கீழே உள்ள அக்கினி மண்டலத்தில் பத்து அக்கினி கலைகளாகவும் அமைகின்றன. இது படைப்புக் காலத்தில் இம் மூன்று கலைகளும் உடம்பில் அமைந்த முறை. இக்கலைகளே, உடம்பில் ஒன்பது துவாரங்களாக அமைந்த ஐம்பொறிகளும், அவற்றின் உணர்வான ஐம்புலன்களும் செயற் படுதற்கு அடிப்படை. மாந்தர் (சிவயோகம் பயின்று, குண்டலி சத்தியை வழிபட்டு, மூச்சுக்காற்றுப் பன்னிரண்டு அங்குலத்தையும், இவற்றால் எழும் மூலக்கனலையும் மேல் நோக்கி ஏற்றும்பொழுது) குண்டலி சத்தியாகப் பணி செய்பவள் அருட்சத்தியே ஆதலின், குண்டலியை நீக்கி, அருட்சத்தியை வழிபட வேண்டும். அவளருள் கிடைத்தால்தான், சத்தி நிபாதம் ஏற்படும். அதாவது, உயிரின் அறிவில் அருள் வீழ்ந்து (கலந்து) அஃது அருளறிவாகும். மூலக்கனல் ஒளி பெருகி, வெம்மை குறையும். மூச்சு என்ற உணர்வு மறைய, அருள் என்னும் நினைவு உண்டாகும். மூச்சே பிரணவம் என்ற உணர்வு தோன்றி வளரும். இந்த நிலை வந்தமையாமல், குண்டலியையே வழிபட்டும், மூச்சுக் காற்றுத்தான் என்ற

நினைவோடும் இருந்தால், ஐம்புலன்களும் கீழான இச்சையில் கிடந்து உழலுதல் ஒழியாது.

பாகன் - யோகி. ஒரு பாதியாக உள்ளவன் என்றும் பொருள் தந்து, சிவம் அவனுள்ளே மற்றொரு பாதியாக இருத்தலைக் குறிப்பாற் காட்டியது. சிவத்தையும் எய்தி, "சிவமாகி" - நிறைவு அடைய வேண்டியவன், உலகியல் இச்சையிற் கிடந்து உழலும் அவலமும் 'தொனிப்' பொருள் ஆகிறது.

அக்கினி கலை 10 - ம் (சூரிய கலை 12 - ம் ஆக 22 இருக்க, 18 எனக் கூறியது ஏன்? எனின், சூரிய கலைகளுள் முற்பகுதி - 6 கலைகள் அக்கினி கலைகளுடன் சேர்ந்தேயிருக்கும் (இந்நூல், சந்திரயோகம், பா. எண். 870) என்று கூறவே, சந்திர மண்டலத்திலிருந்து பிற்பகுதி - 8 கலைகள் பிரிந்து, முறையே அக்கினி கலை 10 ஆகவும், சூரிய கலை 8 ஆகவும் உருவாகிப், பின்பு இவ்வெட்டுச் சூரிய கலையும் 12 ஆக வளர்கின்றன என எண்ண இடமுண்டாகின்றது.

இப்பாடலுடன் பா. 855, 856 - ஆம் பாடல்களை ஒப்ப வைத்து உணர்க. 'ஒன்பது வாய்தலும் பன்றியுமாமே" என வினை முடிவு செய்க. விடுதல் - நீக்குதல். பன்றியும் - உம்மை சிறப்பு.

குறிப்பு: இந்நூல், 'கருப்பக்கிரியை' - இயலில், இப்பாடலை ஒத்த பாடல் உள்ளது. அதில் இரண்டாம் அடி, முதலிரண்டு சீர்கள் மட்டும் மாறி வருகின்றன (வாடல் எண் 266) ஆனால், அது இங்கு மீண்டும் வந்ததாகச் கொள்ளலாகாது, ஏனெனில், இதனை வேறு பொருள் பட, ஆசிரியர் பாடுகின்றார்.

அருள்கண்டால் புலனிச்சை பறக்கும்

2927. பாசி படர்ந்து கிடந்த குளத்திடைக்
கூசி யிருக்குங் குருகிரை தேர்ந்துண்ணுந்
தூசி மறவன் றுணைவழி யெய்திடப்
பாசங் கிடந்து பதைக்கின்ற வாறே. (59)

கருத்து: புலனிச்சை ஆகிய பாசி பரவி, அறிவை மறைத்துக் கிடக்கும் சித்தம் என்ற குளத்தில், உயிருணர்வு விழிக்கப் பெற்ற உயிராகிய நாரை, அச்சத்தோடு அனுபவங்கள் ஆகிய இரையைத் தேடிப் பெறும். அருள் என்னும் படையின் முற்படையாக வந்தருளும் அருட்சத்தியின் துணையால், அருள் நெறி, அதற்குப் புலப்படும். அந்த வழியிற் செல்ல, உயிர் முந்தும். அதனால் புலனிச்சை பயனற்று நீங்க நிற்கும் (நின்று வற்றும்.)

என்றது, புலன்கள் செயற்படும்; ஆனால் புலனிச்சை தோன்றாது என்றபடி. தூசி - தூசிப்படை. முன்னே செல்லும் வீரர் அணி. தொடர்ந்து. செல்லும் வீரராக, அருட்சத்தியின் அடுத்தடுத்த உயர் நிலைகள் வாய்க்கப் புலனிச்சை அடியோடு அழியும் என்பது குறிப்பு.

“உரைமாண்ட உள்ளொளி உத்தமன் வந்து, உளம் புகலும், இரைமாண்ட இந்திரியப்பறவை இரிந்தோட” என்ற திருவாசகம் காண்க. (திருத்தோ. 14)

அனுபவிப்போன் ஆன்மாவா, ஆண்டவனா?

2928. கும்ப மலைமேல் எழுந்தது - ஓர் கொம்பு உண்டு,
கொம்புக்கும் அப்பால் அடிப்பது-ஓர் காற்று உண்டு,
வம்பாய் மலர்ந்தது - ஓர் பூ உண்டு, அப்பூவுக்கு
வண்டாய்க் கிடந்து மணம் கொள்வன் ஈசனே.

கும்ப [1]மலைமே லெழுந்ததோர் கொம்புண்டு
கொம்புக்கு மப்பா லடிப்பதோர் காற்றுண்டு
வம்பாய் மலர்ந்ததோர் பூவுண்டப் பூவுக்கு[2]
வண்டாய்க் கிடந்து மணங்கொள்வ னீசனே. (60)

வேறு பாடம்: 1. முலைமே (ஒ) I. 2. பூவுக்குள் (விசு) (தி) (வ) (த).

கருத்து: யோகியின் தலையாகிய மலையுச்சியில், சகஸ்ராரம் ஆகிய பூங்கொம்பு புதிதாய் எழுந்தது. அதற்கு அப்பாலும், 12 அங்குலத் தொலைவு மூச்சுக் காற்றினைத் திருவருளாற் செலுத்தலாம். (அது மூச்சுக்காற்று ஆயினும் அருள் என்றே உணரப்படும்) அங்குச் சகஸ்ராரத்தில் ஒட்டாமல் புதிய முறையில், நிராதாரத்தில், அனுபவமாகிய மலர் தோன்றும். அது, சிவ துரிய அனுபவம். ஆயிர இதழ் என்ற வியாபகத் தன்மை இவ்வனுபவத்தின் சிறப்பு. இந்த அனுபவத்தைப் பெற விரும்பும் வண்டாக ஆன்மா, பிராசாத கலையுள், உன்மனி என்ற ரீங்காரம் இடும். சிவதுரியமும் சிவ துரியாதீதமும் பெறும். சிவமாகும்.

ஆன்மா சிவமாய் விடுதலின், ‘மணம் கொள்வான் ஈசனே’ என்றார். ஏகாரம் பிரிநிலை. ஆன்மாவுக்குத் “தான்” என்ற உணர்வு இருப்பின், இவ்வனுபவம் இல்லை என்பதைப் பிரித்துக் காட்டினார்.

“அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன், யாது நீ பெற்றதொன்று என்பால்?” என்னும் மணிவாசகரின் வினாவிற்கு (திருவா. கோ. 10) இத் திருமந்திரப் பாடலையே விடையாகக் கூறலாம்.

புதுமையான வாணிகம்

2929. வீணையுந் தண்டும் விரவி யிசைமுரல்
தாணுவு மேவித் தகுதலைப் பெய்தது
வாணிபஞ் சிக்கென் [1]றதுவடையா முன்னங்
காணியு மங்கே கலக்கின்ற வாறே. (61)

வேறு பாடம்: 1. றதுபடையா (ஆ இ) I.

கருத்து: வீணை யிசையும் தாளக்கருவியின் தாளமும் ஒத்த சுருதியில் கலந்து இசைக்கும் இசையாளரைப் போலப் பரவெளியில் விந்துவும் நாதமும், தம்முள் ஒத்த பாங்கில் இணைந்து விளங்கிடச் செய்பவன் சிவன். அவன் யோகியின் அனுபவக் களத்தில் பொருந்தி, அவனுக்குத் தகுதியை அளித்தான். யோகி சிவனுக்குத் தற்போதத்தைக் கொடுப்பதும், சிவப் பேற்றைக் கொள்வதுமாகிய வாணிகம் நிறைவேறிற்று.

அவ்வாறு எனின், சிவப்பேறு பெற்ற ஆன்மாவிற்கன்றோ, அதன் உரிமை இருத்தல் வேண்டும்? அவ்வாறில்லை. அஃது இருவரிடமும் இருந்தது. இது புதுமையான வாணிகமன்றோ?

இதனாற் கூறியது, ஆன்மா சிவமாயிற்று என்பது.

எழுந்தது சிவம்; மறைந்தது சீவன்!

2930. கொங்கு புக்காரொடு வாணிபம் செய்ததும்
அங்குப்புக்கால் அன்றி, ஆய்ந்து அறிவார் இல்லை;
திங்கள் புக்கால் இருளாவது அறிந்திலர்
தங்குபு உக்கார் சிலர், தாபதர் தாமே.

கொங்குபுக் காரொடு வாணிபஞ் செய்தது[1]
[2]மங்குபுக் காலன்றி யாய்ந்தறி வாரில்லை
திங்கள்புக் காலிரு ளாவ தறிந்திலர்
தங்குபுக் கார்சிலர் தாபதர் தாமே[3]. (62)

வேறு பாடம்: 1. சேயிது (ஓ) II. 2. வங்குபுக் (ஓ) IV. 3. ராமே (சுவ.) (சுவடிப் பாடம் இலக்கணப் பிழை யாதலின், பதிப்புப் பாடம் கொள்ளப்பட்டது.)

கருத்து: சகஸ்ராரத் தாமரையின் மணமாக உள்ள சிவத்தோடு ஆன்மா வாணிகம் செய்ததன் உண்மையை அறிய வேண்டுமானால், நாமும் யோகியாகிச் சந்திர மண்டலத்தில் நுழைய வேண்டும். அவ்வாறு அல்லாமல், ஆராய்ச்சி அறிவால் அறியவியலாது. ஆயினும் அதனை ஒருவாறு கூறுவோம்:

வானத்தில் நிலவு எழும்; இருள் ஓடும். அதுபோல், சிவம் எழுந்தது; சீவன் மறைந்தது. அதாவது, ஆன்மா 'சிவத்தில்' புகுந்து, தற்போதம் இழந்தது. அத்தகைய யோகிகள் உண்மைத் துறவிகளல்லரோ?

தங்குபு - தங்க; சிவம் தங்க. செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்சத்தைச் 'செய' என்னும் - வாய்பாடு உடையதாக மாற்றுக. செய்ததும் - உம்மை இறந்தது தழுவியது. புகுந்ததும் செய்ததும் ஆகிய சிவம் என்க. கொங்கு - மணம். சிவத்திற்கு உருவகம். உக்கார் - மறைந்தார். தாபதர் - துறவியர்.

இருகரையும் எழிற் சிவமே

2931. போது புலர்ந்தது, பொன்னிறம் கொண்டது
தாது அவிழ் புன்னை தயங்கும் இருகரை
ஏதம் இல் ஈசன் இயங்கும் நெறி, இது
மாதர் இருந்ததோர் மண்டலந்தானே.

[1]போது புலர்ந்தது பொன்னிறங் கொண்டது
தாதவிழ் புன்னை தயங்கு மிருகரை
யேதமி லீச னியங்கு நெறியிது[2]
மாத ரிருந்ததோர் [3]மண்டலந் தானே. (63)

வேறு பாடம்: 1. போதும் (விசு) (தி) (வ) (த) 2. நெறியது (ஒ) I. 3. மண்டலத் (ஆ, இ, ஒ) I.

கருத்து: சகஸ்ராரத் தாமரை மலர்ந்தது. அதன் இடத்தே மகரந்தம் விரிந்து மலர்ந்த புன்னை மலர்கள் பொன்னின் பொலிவு கொண்டு நிரம்புகின்றன. எங்கும் புன்னை மலர்கள்தாம். அதற்கு அப்பால் நோக்கினால், அங்கும் புன்னை மலர்களே. யோகியின் அனுபவத்தில், சிவன் விளங்கும் மண்டலங்கள்தாம் இவை. இக்கரையில் இருப்பது பரவெளி, அக்கரையில் சிவவெளி. இதோ, இக்கரையில் உள்ள பரவெளியில் என் அம்மை பராசத்தியும் பரசிவத்துடன் விளங்குகிறாள்.

"இருகரை(யும்) ஈசன் இருந்த நெறி, (அவற்றுள்) இது மாதர் இருந்த மண்டலம்" என்க. அக்கரை சொரூப சிவம் விளங்கும் அகண்டாகார வெளி என்பது அருத்தாபத்தியாற் கொள்ளும் பொருள்.

அருளமுது

2932. கோ முற்ற அமரும் குடிகளும் தம்மிலே
காமுற்று, அகத்தி இடுவர் கடைதொறும்,
ஈவு அற்ற நெல்லை, விடாது வழி காட்டி
ஆம் உற்ற தட்டினால் ஐந்து உண்ணலாமே.

[1]கோமுற் றமருங் குடிகளுந் தம்மிலே
காமுற் [2]றகத்தி யிடுவர் கடைதொறு
[3]மீவற்ற [4]நெல்லை [5]விடாது வழிகாட்டி
யாமுற்ற தட்டினா [6]லைந்துண்ண லாமே. (64)

வேறு பாடம்: 1. கோயிற் (ஆ இ ஒ) I. 2. றகற்றி (ஆ இ ஒ ஓ) சுவடிப் பாடம் ஏதும் பொருந்தாமையின், பதிப்புப் பாடம் கொள்ளப்பட்டது) 3. யாவற்றை (ஒ) I. 4. யெல்லை (விசு) (தி) (வ) (த) 5. விடாத (ஆ) IV. 6. லண்ணலுமாமே (ஆ) I.

கருத்து: சீவன் (தான் சார்ந்துள்ளமையால்) மிகவும் விரும்புபவை யான தத்துவங்கள் (உடம்பில் உள்ள கருவி கரணங்கள்) புறத்தே உள்ள விடயங்களை நாடி, சீவனுக்குள் வெம்மையை மூட்டும். அவ்வெம்மை உடம்பில், கண் முதலிய ஒன்பது வாயில்களிலும் புலப்படும். இவ்வாறு ஐம்புலன்களால் சீவன் பொருள் அனுபவத்தைப் பெறுகின்றது. இவ்வாறு புலன்நுகர்ச்சியில் அஃது அழிந்தொழிய விடாமல், ஞானாசிரியன் வழிகாட்ட, யாரும் கொடாத நெல்லைப் பெற்று, உணவு சமைக்காமல் சமைத்து, தட்டு அல்லாத தட்டில் நிரப்பினால், பிறகு ஐம்புலன் நுகர்ச்சி இருக்குமா? இராது.

"அகத்தீ", குறுக்கல் விகாரம் பெற்றது. "வழிகாட்ட" எனத் திரிக்க. நெல் - அருள். அது சீவனுடனே "ஒன்றாய்" உள்ளது. அதனைப் புறத்தே பெற வேண்டுவதில்லை. ஆதலின், "ஈவு அற்ற நெல்" என்றார். யாரும் கொடுத்தல் இல்லையாகவே, கொள்ளுதலும் இல்லை. ஆமம் – உணவு; சோறு; கடைக் குறைந்தது. அருளைப் பக்குவம் நோக்கிச் சீவனின் அறிவிற் பெருகச் செய்பவள் அருட்சத்தி. ஆதலின் சமைக்காத உணவு எனப் பெறவைத்தார். தட்டு அல்லாத தட்டு - வெளி; சிவானுபவக் களம். இவ்வெளியும் சீவனது உணர்வு - எல்லையில் இருப்பது, அந்த

எல்லை விரிய, விரிய அனுபவமும் ஆழ்ந்ததாக வாய்க்கும். அவத்தை வகைகளின் வரிசை, உணர்வு - எல்லையின் விரிவே. ஐந்து - ஐம்புலன்கள்.

சிவம் நம்முடையது

2933. தோட்டத்தில் மாம்பழம் தோண்டி விழுந்தக்கால்,
நாட்டின் புறத்தில் நரி அழைத்து என் செயும்?
மூட்டிக் கொடுத்து முதல்வனை முன்னிட்டுக்
காட்டிக்கொடுத்தவர் கைவிட்டவாறே.

[1]தோட்டத்தின் மாம்பழந் [2]தோண்டி விழுந்தக்கா[3]
[4]னாட்டின் புறத்தி னரியழைத் தென்செயு
மூட்டிக் கொடுத்து முதல்வனை முன்னிட்டுக்
காட்டிக் கொடுத்தவர் கைவிட்ட வாறே. (65)

வேறு பாடம்: 1. தோட்டத்து (ஆ) IV. 2. தொண்டி (த) 3. விழுந்தக்கால் (ஆ இ ஒ ஓ) I. 4. லாட்டின் (ஆ இ ஒ ஓ) I.

கருத்து: நாட்டின் உள்ளே, தோட்டத்தில், கிழங்கு தோண்டி எடுத்தல் போல, மாம்பழத்தைத் தோண்டி எடுக்கலாம் என்றால், நாட்டுற்கு வெளியே, காட்டிற்குச் சென்று, மமரத்தைத் தேடி அலையவும் வேண்டா. அங்கு நரிகள் ஊளையிடுதல் கேட்டு அஞ்சவும் வேண்டா. அதுபோல், இறைவனை நம் உடம்பிலேயே, மூலாதாரத்தைச் செயற்படுத்துவதால், காணலாம். அவனைத் தேடிப் புறத்தே முயல வேண்டுவதில்லை. புற விடயங்களால் புலன்கள் மயங்கும் என்று அஞ்சவேண்டுவதில்லை. நமது உயிருணர்வில் பெறும் இறை - ஒளியைப் புலன்களோ, வேறு எவையுமோ கவர வியலாது. குண்டலிசத்தியாக இருந்து, மூலக்கனலை மூட்டி; அருட் சத்தியாக இருந்து சிவத்தைக் காட்டி, நமக்கு உயிருணர்வை விழிப்புப் பெறச் செய்து, அருள் - அனுபவம் தந்து, சிவத்தியானத்தில் நாம் ஆழ்ந்து நிற்கச் செய்து, இறுதியில், சொரூப சிவத்தையும் அடையுமாறு உணர்வூட்டும் அருட்சத்தியே, அந்த அரிய சிவானுபூதி கிடைக்க விருக்கும் எல்லையில், நமது சாதனையில் தலையிடாமல் விலகி விடுவாள். அந்த அளவு, சிவப்பேறு நமது சொந்தமாகிவிடும்.

“காட்டிக்கொடுத்தவரும்” என்பதில், உம்மை தொக்கது. தோண்டி - தோண்ட எனத் திரிக்க. விழுதல் - கிழங்கு விழுதல் என்பது மரபு. நிலத்திற்கு அடியில், செடியின் வேரில் கிழங்கு தோன்றி, முதிர்தலை

'விழுதல்' என்பர். அதுபோல, 'மாம்பழம் விழுந்தால்' என்பது பொருள். இஃது இல்பொருள் உவமை. முன்னிட்டு - தியானித்து, காரணத்தைக் காரியமாக உபசரித்தார்.

காலத்தை வென்றவன்

2934. புலர்ந்தது போது என்று புட்கள் சிலம்ப,
புலர்ந்திலை போது என்று, பூங்கொடி புல்ல,
புலம்பின் அவளொடும் போகம் நுகரும்
புலம்பனுக்கு என்றும் புலர்ந்திலை போதே.

புலர்ந்தது [1]போதென்று புட்கள் சிலம்பப்
[2]புலர்ந்திலை [3]போதென்று பூங்கொடி புல்லப்[4]
புலம்பி [5]னவளொடும் போக நுகரும்
புலம்பனுக் [6]கென்றும் புலர்ந்திலை போதே. (66)

வேறு பாடம்: 1. வாமென்று (ஓ) III; னாமென்று (ஓ) I. 2. புலர்ந்தது (விசு) (தி) (வ) (த) 3. போவென்று (ஓ) I. 4. புல்லிப் (விசு) (தி) (வ) (த) 5. லவளொடும் (ஓ) III; புலம்ப (ஆ இ) I; 6. கென்றே (ஆ இ) II.

கருத்து: பொழுது விடிந்ததற்கு அறிகுறியாகப் பறவைகள் ஒலிக்கின் றன. இது நாள் போய் நாள் வருதல். காலத்தின் ஓட்டம். பிறருக் கெல்லாம் இவ்வாறு நாட்கள் செல்ல, யோகி 'இராப் பகல் இல்லா' இடத்தே - பரதுரிய நிலையில் அருட்சத்தியின் அருளால், அருளனுபவம் பெறுகின்றான். அந்த ஏகாந்த வெளியில், அருளோடும் கூடிச் சிவானுபூதி எய்தும் அந்தச் சுத்தான்மாவுக்குக் காலம் என்றும் போவதில்லை. அவன் காலத்தை வென்றுவிட்டான்.

இதனை ஆசிரியர் முன்னும், 'பூரணசத்தி' - இயலில், "இரவும் பகலும் இலாத இடத்தே" என்னும் பாடலில் (எண். 1123) கூறினார். சுத்தான்மா - சுத்த வெளி அனுபவத்தில், 36 தத்துவங்களின்றும் நீங்கிய உயிர்.

இப்பாடலில், ஆசிரியர் அகப்பொருள் நிகழ்ச்சியொன்றைக் கூறி, அஃது ஒட்டணி பட, யோகப் பொருளை உணர்த்த வைத்தார். அகப்பொருளின்படி, பூங்கொடி - தலைவி, புல்ல - தழுவ. புலர்ந்தது இலை என்பது புலர்ந்திலை என மருவிற்று. புலம்பு - தனிமை. புலம்பன் - நெய்தல் நிலத் தலைவன்.

சார்பு மாறும்

2935. தோணி ஒன்றுண்டு, துறையில் விடுவன
ஆணி மிதித்து நின்று ஐவர் கோல் ஊன்றலும்
வாணிபம் செய்வார், வழியிடை, ஆற்றிடை
ஆணி கலங்கின், அது இது ஆமே.

தோணியொன் றுண்டு துறையில் விடுவன[1]
வாணி [2]மிதித்துநின் றைவர்கோ லூன்றலும்
வாணிபஞ் செய்வார் வழியிடை யாற்றிடை
யாணி [3]கலங்கி னதுவிது வாமே. (67)

வேறு பாடம்: 1. விடுவது (விசு) (தி) (வ) (த) 2. மிதிக்கநின் (ஆ இ) II. 3. கலக்கி (ஆ) I.

கருத்து: பிரபஞ்சம் என்ற ஆறு. அதில் ஓடும் பிறவி என்ற தோணி. குறிப்பிட்ட பிறவியில் அனுபவிக்க வேண்டிய பிராரத்த வினைகள் என்ற சரக்குகளை ஏற்றிக்கொண்டு, சீவர்களாகிய வணிகர்கள், அதிற் பயணம் செய்கின்றனர். பிரமன், திருமால், உருத்திரன், மகேச்சுரன், சதாசிவன் என்ற படகோட்டிகள் ஆகிய ஐந்தொழிற் கடவுளர், சீவர்களுக்குக் பிறவிவட்டத்தை ஏற்படுத்துதல் என்னும் தொழிலைச் செய்யும் நிலையில், படகின் பக்கப் பலகைகளை மிதித்து நின்றவாறு, துடுப்புப் போடுகின்றனர். படகு கரைகட்கு இடையில் பன்முறை சென்று வருகின்றது. பல யோனிகள் (பிறவிகள்) ஆகிய துறைகளிலும் படகை நிறுத்தி, வணிகராகிய சீவர்களை இறக்கிவிட்டு, வினைநுகர்ச்சி ஆகிய வாணிகத்தை முடிக்கச் செய்கின்றனர். மீண்டும் அவர்களை ஏற்றிக் கொண்டு வருகின்றனர். இவ்வாறு பலகாலம் நடக்கிறது. படகு செல்லும் பொழுது, வழியில், ஆற்றின் இடையில், அதன் பக்கப்பலகை நிலைகலங்கி முறிந்தால், அழிவன பலவாகும்.

பிறவித் தோணிக்குப் பக்கப் பலகைகள் 36 தத்துவங்கள். ஞானாசிரியனின் உபதேசத்தால், அத்தத்துவங்களிலிருந்து சீவன் நீங்கிநிற்கும் நிலை ஏற்பட்டால், "ஊசற் கயிறு அற்றால், தாய் தரையாம் துணை" (சிவ. ஞா. போ. மாபா. 8 ஆம் நூற்பா உரை) என்பது போல, அவனைச் சிவம் தாங்குவான். சிவச்சார்பு ஏற்படும். சிவத்தின் இந்த அன்பு கண்டு, 'சிவம் அன்னியம் அல்லன்' என்று உணர்ந்து, உயிர் சிவனை வழிபடும்.

அது - சிவம். இது - இந்தச் சார்பு. இந்தத் தத்துவச் சார்பு, உயிருக்கு எவ்வாறு அன்னியமல்லாமல் இருந்ததோ, அவ்வாறே. சிவமும்

அன்னியம் அல்லாது இருப்பான். இந்த உறவுகோல் நடப்பட்டு, சீவன் 'உயிருணர்வு' என்ற கயிற்றால் முறுக வாங்கிக் கடைந்தால், சிவம் முன்நிற்பான். அப்பொழுது 'இது, அது வாகும்' - ஆன்மா சிவமாகும்.

உவமையில், 'அழிவன பல' எனப் பொருள் தரும் 'அது இது'' என்றாராயினும், தத்துவத் துறையில், அத்தொடரின் பொருள் வேறு.

172. சருவ வியாபி

சருவ வியாபி அன்று

2936. ஏயும் சிவபோகம், ஈது அன்றியே ஒளி
ஆயும் அறிவையும், மாயா உபாதியால்
ஏய பரிய புரியும் தனது எய்தும்
சாயும் தனது வியாபகத்தானே.

ஏயுஞ் [1]சிவபோக மீதன்றி யேயொளி[2]
யாயு மறிவையு மாயா வுபாதியா
லேய பரிய புரியுந் தனதெய்துஞ்[3]
சாயுந் தனது [4]வியாபகத் தானே. (1)

வேறு பாடம்: 1. சிவயோக (ஓ) I. 2. யோரொளி (விசு) (தி) (வ) (த) 3. தனதெய்த்துஞ் (ஆ) I; தனையெய்தும் (த) 4. வியாபித்ததான தே (ஓ) II; வியாபகந் (விசு) (தி) (வ) (த).

கருத்து: ஆன்மா அறிவுப் பொருள். பதிஞானம் பெற்றுச் சிவபோகத்தை அனுபவிக்கும். அந்நிலையில் அது வியாபகம் உடையது. ஆயினும், (சிவ முதல்வனைப் போல்,அது சர்வ வியாபி அன்று. அதாவது, என்றும், எங்கும், ஒருபடித்தாக நிறைந்திருப்பது அன்று.) ஏன்? அது வினைகளை நுகரப் பிறப்புப் பெறும்பொழுது, மாயையினின்றும் தனக்குக் கிடைக்கப் பெறும் தூலவுடம்பைத் 'தனது' எனக் கருதும். அப்பிறவியில், தத்துவங்களுள் ஒருவகை யாகிய புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக் கரணங்களைச் சார்ந்து அறிவு பெறும், அந்த அறிவை ஆராய்தலும் செய்யும். இக்காரணத்தால், அது சர்வ வியாபி அன்று. சிவானுபவத்தில் 'சிவமாந் தன்மை' பெறுதலின், அதன் வியாபகத் தன்மை வெளிப்படுகின்றது.

உபாதி - குற்றம்; மலம்; வழி. பரிய புரி - பருவுடம்பு. தனது எய்தும் - தனது என்ற புறப்பற்றுக் கொள்ளும். இஃது, உயிர்க்கு ஆணவமலச் சார்பால் வந்த குற்றம். இக்குற்றத்தால், பிறர்உடைமை தனது அன்று எனவும் கருதும். ஆகவே ஆன்மா எங்ஙனம் வியாபகம் உடையதாகும்?

குறிப்பு. ஆய்வுக்குக் கிடைத்த சுவடிகளுள், ஆ, இ, ஐ, ஒ, ஓ - ஆகிய 5 சுவடிகளில் மட்டுமே நூல்முழுதும் உள்ள இதழ்கள் உள்ளன. இவற்றுள் முதல் 4 சுவடிகளில் "சர்வ வியாபி" என்னும் இயலே அடுத்து உள்ளது. ஓ - சுவடியில் "தோத்திரம்" என்னும் இயல் உள்ளது. அடுத்துச் "சர்வ வியாபி" என்னும் இயல் இல்லை. எனவே இப்பதிப்பில், சுவடிப்பெரும் பான்மை நோக்கியும், வைப்புமுறைப் பொருத்தம் கருதியும் "சருவ வியாபி" என்னும் இயலே இங்கு அமைக்கப்படுகின்றது.

உயிர் வியாபகம் அடைவது எப்படி?

2937. நான் அறிந்து, அப்பொருள் நாட இடமில்லை
வான் அறிந்து அங்கே வழியுற, விம்மிடும்
ஊன் அறிந்து உள்ளே ஒளி உற ஓங்கினால்,
தான் அறிந்து, அங்கே தலைப்படலாமே.

நானறிந் தப்பொரு [1]ணாட விடமில்லை
வானறிந் தங்கே வழியுற விம்மிடு
மூனறிந் துள்ளே [2]யொளியுற வோங்கினாற்
றானறிந் தெங்குந் தலைப்பட லாமே. (2)

வேறு பாடம்: 1. ணாடா (ஆ) IV. 2. யுயிர்க்கின்ற வொண்சுடர் (விசு) (தி) (வ) (த).

கருத்து: மாந்தர் தம் அறிவால் வியாபகத்தை எய்த வியலாது. அதற்குச் சிவத்தை உணர்ந்து எய்த வேண்டும். அதற்கும் அறிவு துணை நில்லாது. பதிஞானம் பெற வேண்டும். அதனை எவ்வாறு பெறுவது? சிவத்தின் திருவருள் ஆகிய அருட்சத்தி நம் உடம்பிலேயே மறைந்து நிற்கின்றது. அதனை அக வழிபாடாகிய சிவயோகத்தால் எய்தலாம். அருள் - அறிவு நமது உயிருணர்வில் பெருகப் பெருக, சிவத்தை உணர்கின்ற பதிஞானம் வாய்க்கும். அந்த மெய்யுணர்வால், 'சிவத்தை' உணர்ந்து, 'தரிசித்து', அதில் ஒன்றி நிற்க, ஆன்மாவின் வியாபகம் வெளிப்படும்.

அலைக்குள்ளே கடல்ஸ

2938. கடலிடை வாழ்கின்ற கௌவை உலகத்து
உடலிடை வாழ்வுகண்ட உள்ளொளி நாடி,
உடலிடை வைகின்ற உள் உறு தேனைக்
கடலின் மலிதிரைக் காணலுமாமே.

கடலிடை வாழ்கின்ற கௌவை யுலகத்
துடலிடை [1]வாழ்வுகண் டுள்ளொளி நாடி[2]
யுடலிடை [3]வைகின்ற வுள்ளுறு தேனைக்[4]
கடலின் [5]மலிதிரைக் காணலு மாமே. (3)

வேறு பாடம்: 1. வாழ்வுகொண் (விசு) (தி) (வ) (த) 2. நாடின் (த) 3. வைக்கின்ற (ஆ இ ஒ) I. 4. தேவனைக் (வ) 5. மலிதிரை (ஆ இ) I.

கருத்து: உலகில் துன்பக் கடலிடையே, பிறவிகளில் அலைப் புண்ணும் சீவர்கள், திருவருளால், தம் உடம்பில், தம் உயிருணர் வாகிய ஒளியின் உள்ளொளியாக உள்ளது அருள் - ஒளி என்று சிவயோகத்தாற் கண்டுகொள்வர். அருளொளியை மேன்மேலும் பெறுவதற்கு இவ் யோக வழிபாட்டினைத் தொடர்ந்து பயில்வர். தம் உடம்பிலேயே இருப்பதும், அந்த அருளொளிக்கும் உள்ளொளியாய் விளங்குவதும் சிவமே; அருள் என்பது ஆற்றல்; பேரறிவு, அதனை உடைய பொருள் சிவமே, என உணர்வர். சிவானந்தமேயாகித் திகழ்வதான அகண்டாகார சிவத்தைத் 'தரிசிப்பர்'. சிவம் என உணர்தல் எது போன்றது? கடலின் கரையில் நிற்போர், அலைகளைக் கண்டு அவற்றை உடையது கடல் என உணர்தல் போன்றது.

சிவானந்தம், சிவத்தின் வடிவமன்று; சிவமே. சிவமே உண்மை. சிவமே பேரறிவு. இவற்றையே 'சத்சித் ஆனந்தம்' என்பர். இதனாற் பெற்றது, 'சத்தியால் சிவத்தை உணர்ந்து எய்தும் ஆனந்தம் வேறு, சிவத்தையே உணர்ந்து எய்தும் ஆனந்தம் வேறு' என்பது. இதனை எய்தினோர் சிவத்தையே எய்தினோர். சிவமாக ஆனோர்.

கௌவை - துன்பம். கௌவைக் கடல் எனக் கூட்டுக. கண்ட என்பதன் அகரம் தொக்கது. உள் உறு - நினைக்கப்படும். 'திரையிற் கடலின்' என மாறுக. அலைக்குள்ளே காணும் கடல் என்பது பொருள்.

சத்தியாய், உள்ளொளியாய் ...

2939. பெருஞ்சுடர் மூன்றினும் உள்ளொளி ஆகித்
தெரிந்த உடலா, நிற்கும் தேவர் பிரானும்
இருஞ்சுடர் விட்டிட்டு இகல் - இடம் எல்லாம்
பரிந்து உடன் போகின்ற பல்கு - ஓரை ஆமே.

பெருங்சுடர் மூன்றினு முள்ளொளி யாகித்[1]
[2]தெரிந்துட லாநிற்குந் தேவர் பிரானு
மிருஞ்சுடர் விட்டிட் டிகலிட மெல்லாம்
பரிந்துடன் போகின்ற [3]பல்கோரை யாமே. (4)

வேறு பாடம்: 1. யாதி (ஆ இ) III. 2. தெளிந்துட (ஆ இ) I. 3. பல்குரை (த)

கருத்து: சிவம் சூரியன், சந்திரன், தீ என்னும் ஒளியுடைய கதிர்கள் மூன்றிற்கும் உள்ளொளியாக இருந்து, அவற்றிற்கு ஒளியை வழங்குகின்றான். ஏகனாகிய அவன் அருவமாதலின் அவற்றைத் தனது உடம்புகளாகக் கொண்டு, 'அநேகனாக' விளங்குகின்றன். உலகில் ஒன்றையொன்று ஒவ்வாத எல்லாப் பொருள்களிலும் விளங்குகின்றான். உயிரற்ற பொருள்களில், அவ்வவற்றின் தன்மையாக உள்ளான். உயிர் உடைய சீவர்களில், 'ஒன்றாகியும்', அவற்றிற்கு அறிவூட்டும் நிலையில் 'வேறாகவும்' அவற்றை அனுபவத்தில் செலுத்தும் நிலையில் 'உடனாகவும்' நிற்கின்றான். இது அவற்றிடம் அவன் வைத்த கருணையால். இவ்வாறு, முக்கதிர்கள், உயிரற்ற பொருள், உயிர் உடைய பொருள் - ஆகியவற்றில் நிற்கும்பொழுது பலப்பல சத்திகளாக நிற்கின்றான். சிறப்பாக, உயிர்ப் பொருள்களாகிய சீவர்களுக்கு அனுபவம் நல்கும் போது 'அருட் சுடராக' அவர் தம் உடம்பில் விளங்குகின்றான்.

ஓரை - விளையாட்டு. சத்திக்கு ஆகியது. பல்கு ஓரை - பெருகும் சத்திகள்.

வாழ்விற்குப் பொன், வளத்திற்கு ஒளி

2940. உறுதியின், உள்வந்து அவிழ்வினைப்பட்டு,
இறுதியின் வீழ்ந்தோர் இரணம் - அது ஆகும்,
சிறுதியின் உள்ளொளி தீயினின் முற்றப்
பெறுதியின் மேலோர் பெருஞ்சுடராமே.

உறுதியி [1]னுள்வந் தவிழ்வினைப் பட்டு
விறுதியின் வீழ்ந்தோ ரிரணம தாகுஞ்
சிறுதியி னுள்ளொளி [2]தீயினின் முற்றப்
பெறுதியின் மேலோர் பெருஞ்சுட ராமே. (5)

வேறு பாடம்: 1. னுள்வந்த வுள்வினைப் (ஆ இ) III. 2. திப்பிய முத்தி (ஆ இ) IV.

கருத்து: பிறவியில் நுகரத்தக்கனவாக வந்து தம் பயன்களை விரியச் செய்யும் பிராரத்த வினைகளை, பத்தி வைராக்கியம் காரணமாக, 'சிவன் கூட்டி வைத்தவை' என்று கொண்டு, கலங்காத உள்ளத்துடன் அனுபவித்து, முடிபொருள் சிவமே என எண்ணி, அவனையே காதலித்து வழிபடும் அன்பர்க்குச் சிவன் வைப்புப்

பொன் போல உதவுவான். அவர் யோகியராயின், அவரது ஆன்மா வாகிய சிற்றணுவின் உணர்வினுள், அவர் திருவருளாற் செய்யும் சிவயோக சாதனையால் அருளொளி வெளிப்பட, அவ்வொளி கொண்டு, சிவத்தை உணர்வாராயின், அவர்களுக்கு அகண்டாகார ஒளியாக விளங்குவான்.

சிவம் என, எழுவாய் வருவிக்க. இரணம் - பொன். வீழ்ந்தோர் - அன்பு செய்தோர். சிறு தீ - என்பது சிறுதி என்று ஆயிற்று. தீ என்பது உயிர். உவமையாகு பெயர். தீ மூலக்கனல். உள்ளொளி முற்ற - அருளொளி புலப்பட. பெறுதி - பேறு.

இகத்தே பரத்தை அடையலாம்

2941. பற்றி நின்று, உள்ளே பரமாய், பரஞ்சுடர்
முற்றினும் முற்றி முளைக்கின்ற மூன்று ஒளி
நெற்றியின் உள்ளே நினைவாய் நிலைதரும்,
மற்று, அவனாய் நின்ற மாதவன் தானே.

[1]பற்றிநின் றுள்ளே [2]பரமாய்ப் பரஞ்சுடர்
முற்றினு முற்றி முளைக்கின்ற மூன்றொளி
நெற்றியி னுள்ளே நினைவாய் நிலைதரு
மற்றவ னாய்நின்ற [3]மாதவன் றானே. (6)

வேறு பாடம்: 1. பற்றினி னுள்ளே (ஓ) III. 2. பரமாய (விசு) (தி) (வ) (த) 3. மாதவந் (ஓ) I.

கருத்து: (சிவம்) இக வாழ்க்கைச் சாதனமாக உள்ள உடம்பிலேயே, இகத்தைக் கடந்த பரமாய் யோகியால் உணரப்படும். திருவருட் சம்மதம் இருக்குமாயின், புருவமத்தியில் எழுகின்ற முக்கூட்டு ஒளி அங்கே உயிருணர்வாய் விளங்கும். அது முதிர்ந்து, முறுகி, யோகியின் பரவெளியில் பரசிவம் - பராசத்தியாகிய பரஞ்சோதி யாய் காட்சிப்படும். பின்பு அகண்டாகார சிவச் சோதியாய் உணரப்படும். இந்த உயர்நிலை அவத்தைகள் மறைந்த பின், சுத்த சாக்கிரத்தில், நிலைபெற்ற உணர்வாக நிற்கும். மேலும், சிவயோக சாதனையின் முதிர்ச்சியில், யோகியாகிய தவத்தோன் 'சிவமாந் தன்மை' எய்துவான்.

பற்றி - உடம்பைப் பற்றி. "ஊன் பற்றி நின்ற உணர்வு" என ஆசிரியர் முன்னும் (பா. 66) கூறினார். முக்கூட்டு ஒளி - சூரியன், சந்திரன், அக்கினி கலைகளின் இணைப்பு. பர, சிவ - அவத்தைகளை அடைந்தோர்,

கேவல, சகல அவத்தைகளுக்கு (கீழாலவத்தையும் மத்திய சாக்கிராவத்தையும்) இறங்கமாட்டார். ஆதலின், 'நெற்றி யின் உள்ளே' என்பதற்குச் சுத்தாவத்தை எனப் பொருள் கொள்ளப்பட்டது. 'சிவம் நிலைதரும்' என எழுவாய் வருவித்து முதல் தொடரை முடிக்க. அடுத்த தொடர், "மாதவன் மற்று, தானே அவனாய் நின்றான்" என்பது. நின்ற என்ற பெயரெச்சத்தை முற்றாக்கி முடிக்க.

வாழ்வும் வாக்கும் சிவன்

**2942. தேவனும் ஆகும், திசை திசை பத்தையும்
மேவனும் ஆம், விரிநீர் உலகு ஏழையும்
ஆவனும் ஆம், அமர்ந்து எங்கும் உலகினும்
நாவனும் ஆகி நவிற்றுகின்றானே.**

தேவனு மாகுந் திசைதிசை பத்தையு[1]
மேவனு மாம்விரி நீருல கேழையு
மாவனு மாமமர்ந் [2]தெங்கு முலகினு
[3]நாவனு [4]மாகி நவிற்றுகின் றானே. (7)

வேறு பாடம்: 1. பத்துளு (விசு) (தி) (வ) (த) 2. தேகு (ஆ) I. 3. நாவினு (ஓ) I. 4. மாதி (ஆ) III.

கருத்து: தேவர்களுக்கு அவன் மகாதேவன். எத்திசையிலும் உள்ள அனைத்துப் பொருள்களிலும், அவை யவையாக நிற்பவன். ஏழுலகங்களையும் படைத்தவன். உலகில் வாழும் அனைத்து உயிர்க்கும் விரும்பி அருள் புரிபவன். அருளாளர் நாவில் உரையாடியாக இருந்து, அருள்மொழி பொழிபவன்.

உரையாடி - நாக்கு உரையாடுவதற்கு ஏதுவாய் நின்ற முதல்வன். "ஒருகால் உமையாளோர் பாகனுமாம், உள்நின்ற நாவிற்கு உரை யாடியாம்" என்னும் அப்பர் அருண்மொழி காண்க. (தேவா. 6 ஆ ம் திருமுறை, 15:1)

மேவன் - பொருந்துபவன். அமர்ந்து - விரும்பி.

பொது அருளும் சிறப்பருளும்

**2943. நோக்கும் கருடன் நொடி ஏழ் உலகையும்;
காக்கும் அவனித் தலைவனும் அங்கு உளன்,
நீக்கும் வினை என், நிமலன், பிறப்பு - இலி,
போக்கும் வரவும் புணர வல்லானே.**

நோக்குங் கருட னொடியே ழுலகையுங்
காக்கு மவனித் தலைவனு மங்குள
[1]னீக்கும் வினையென் னிமலன் பிறப்பிலி
போக்கும் வரவும் புணரவல் லானே. (8)

வேறு பாடம்: 1. நீக்கும் (த)

கருத்து: கருடன் வானத்திற் பறந்தவாறே, கீழே உள்ள அனைத்தையும் நோக்குதல் போல, இறைவன் பரமாகாயத்தில், சொரூபமாய் இருந்துகொண்டே பரசிவமாய் அனைத்தையும் ஒருங்கே நோக்குகிறான். பிற்காலத்தில், தான் அழிக்கப்போகும் ஏழு உலகங்களையும் காப்பவன் அவனே. இக்காரணங்களால் உலகின் தலைவன் அவனே. இது பொதுவருள். சிறப்பாக அருள் செய்து, எனக்கு ஞானாசிரியனாக வந்து, என் வினைகளை நீக்கியவன். பிறப்பு, இறப்பு அற்றவன். தான் போக்கும் வரவும் அற்றவன் ஆயினும், தான் படைத்த உயிரினங்கள் பிறத்தல், இறத்தல்களைச் செய்யும் பொழுது, தானும் அவற்றோடு 'ஒன்றாய்ப்' போக்கு வரவு செய்பவன்.

என்வினை நீக்கும் நிமலன் எனக் கூட்டுக.

அருளாதிரான்

2944. செழுஞ்சடையன், செம்பொன் ஒக்கும் மாமேனி,
ஒழிந்தன வாயும் ஒருங்குடன் கூடும்,
கழிந்திலன் எங்கும், பிறப்பிலன் ஈசன்,
ஒழிந்திலன், ஏழுலகு ஒத்து நின்றானே.

செழுஞ்சடை [1]யன்செம்பொ னொக்குமா மேனி
ஒழிந்தன [2]வாயு மொருங்குடன் கூடுங்
கழிந்தில னெங்கும் பிறப்பில னீச
[3]னொழிந்தில னேழுல கொத்துநின் றானே. (9)

வேறு பாடம்: 1. செம்பொனே யொக்குமேனி (விசு) 2. னாயு (விசு) 3. ஒழிந்தில கேழுல (விசு) (தி) (வ) (த).

கருத்து: சடாமுடியும், பொன்னார் மேனியும் உடையான். தன்னை எண்ணாதாரோடும் "ஒன்றாய்" உள்ளவன். அவன் இல்லாத உயிரற்ற பொருளும் இல்லை. சீவர்களோடு "ஒன்றாய்" இருப்பவன் ஆயினும் அவர்கள் போலப் பிறப்பு, இறப்பு உடையவனல்லன்.

அவர்கள் பக்குவம் பெறும்போது, அருளாது இரான். ஏழு உலகங்களில் உள்ளார்க்கும் இவ்வாறே.

குறிப்பு: இதனை யடுத்துச் சுவடிகளிலும் பதிப்புகளிலும் உள்ள "உணர்வுமவனே" என்னும் பாடல் முன்பு "சிவதரிசனம்' - இயலில் வந்தது. (பா. எண். 2816) அதனால் இங்கு விடப்படுகின்றது.

ஞானமே வடிவம்

2945. புலமையி னாற்றமில் புண்ணிய னெந்தை
நலமையின் ஞான வழக்கமு மாகும்
விலமையின் வைத்துள வேதியர் கூறும்
பலமையி னெங்கும் பரந்துநின் றானே. (10)

கருத்து: எந்தை; சிவபுண்ணுயப் பயனாய் வாய்ப்பவன். இவ்வன்பு - உறவும், சிவபுண்ணியமும் இன்றி, வெற்றேட்டுச் கல்வியிற் புலமை வளர்ந்தவர்க்கு வாய்க்க மாட்டான். நல்லதாகிய பதிஞானமே அவன் வடிவம். உயர்ந்தனவாகிய வேத மந்திரங் களையும் வடிவமாகக் கொண்டுள்ளான்.

விலமை - விலைமை என்பதன் மரூஉ. மதிப்புக்கு ஆயிற்று. பலமை - பலவாகிய மந்திரங்கள். இஃது இவ்வாசிரியர் வழக்கு.

அருளொளி

2946. விண்ணவனாய், உலகு ஏழுக்கும் மேல் உளன்,
மண்ணவனாய், வலம் சூழ்கடல் ஏழுக்கும்
தண்ணவனாய், அது தன்மை அறிகிற்பதோர்
கண்ணவன் ஆகிக் கலந்து நின்றானே.

விண்ணவ னாயுல கேழுக்கு மேலுளன்
மண்ணவ னாய்வலஞ் சூழ்கட லேழுக்குந்
தண்ணவ [1]னாயது [2]தன்மை யறிகிற்பதோர்
கண்ணவ [3]னாகிக் கலந்துநின் றானே. (11)

வேறு பாடம்: 1. னாயதன் (த) 2. தன்மையி னிற்பதோர் (இ ஒ) III. 3. னாதி (ஆ) IV; னந்தி (இ) IV; ணங்கிக் (ஒ) IV.

கருத்து: சிவம் பரமாகாயத்தில் விளங்கும் சொரூபம். மேல் உலகுகள் ஏழிலும் உள்ளோராலும் அறியப்படாது நிற்கின்றான்.

மண்ணுலகில், ஏழு தீவுகளிலும், சிவபிரானாய் விளங்கித், தன் கோயிலை வலம் வந்து வணங்கும் அடியார்களுக்கு அருள் பாலிக்கின்றான். அவர்கள் உலகின் தன்மையை உள்ளவாறு அறியவல்ல ஞான - ஒளியாக, அவர்களுடன் கலந்து நிற்கின்றான்.

கண் - அருட் கண்.

இங்கும் அவனே, அங்கும் அவனே

2947. நின்றனன் மாலொடு நான்முகன் றானாகி
நின்றனன் றானிலங் கீழொடு மேலென
நின்றனன் றானெடு மால்வரை யேழ்கடல்
நின்றனன் றானே வளங்கனி யாயே. (12)

கருத்து: திருமாலையும் பிரமனையும் அதிட்டித்து நின்றான். மேல், கீழ் உலகங்களில் உள்ள சீவர்களில் 'ஒன்றாய்' க் கலந்துள்ளான். மலையிலும் கடலிலும் விளங்குகிறான். யோகியரின் தவத்தின் பயனாகிய பேரின்பக் கனியாகவும் உள்ளான்.

சிவக் காதல் ஏன்?

2948. புவனாபதி, மிகு புண்ணியன், எந்தை
அவனே உலகின் அடல் - பெரும்பாகன்,
அவனே அரும்பல சீவனும் ஆகும்,
அவனே இறையென மால் உற்றவாறே.

புவனா பதிமிகு புண்ணிய னெந்தை
யவனே யுலகி 'னடற்பெரும் பாக
னவனே யரும்பல சீவனு மாகு
மவனே யிறையென மாலுற்ற வாறே. (13)

வேறு பாடம்: 1. யடற் பெரும் (இ ஒ) IV.

கருத்து: சிறந்தோர் 'சிவனே முதல்வன்' என்று அன்பு கொள்வதற்குக் காரணம் என்ன? சிவனே அனைத்துப் புவனங் கட்கும் ஒப்பற்ற தலைவன். சிவபுண்ணியங்களின் பயனாக எய்தப் படுபவன். எமக்குத் தந்தையுறவு பூண்டவன். இவை மட்டுமோ? உலகில் நிறைந்து நிற்பவன். அதனை இயக்குபவன். அது மட்டுமோ? எண்ணிலடங்காத சீவர்களிடம் 'அத்துவிதமாய்' உள்ளான்.

அடல் - வெற்றி. பாகன் - செலுத்துபவன். தீமையை அழித்து நன்மையில் செலுத்துபவன் அவன்.

ஒளியும் காற்றும்

2949. உள் நின்ற ஒளியை, உலகர் பிராணனை
விண் நின்று இயங்கும் விரிகதிராய்ச் செல்லும்
மண் நின்று இயங்கியும் வாயுவுமாய் நிற்கும்,
கண்நின்று இலங்குங் கருத்தவன் ஆமே.

உண்ணின் [1]றொளியை யுலகர் பிராணனை
விண்ணின் றியங்கும் [2]விரிகதி ராய்ச்செல்லும்
மண்ணின் [3]றியங்கியும் வாயுவு மாய்நிற்குங்
கண்ணின் றிலங்குங் கருத்தவ னாமே. (14)

வேறு பாடம்: 1. றொளிரு முலவாப் பிராணனும் (விசு) (தி) (வ) (த) 2. விரிகதிர்ச் செல்வனும் (ஷ பதிப்.) 3. றியங்கும் (விசு) (தி) (வ) றியங்கிடும் (த).

கருத்து: சிவன் ஒளி வடிவானவன். வானத்தில் இயங்கும் சூரியனாய் நிற்கிறான். அதேசமயம் சீவர்களில் - மனிதர்களிடத்தில் - உயிருக்கு அறிவூட்டும் உயிராக நிற்கிறான். அதே சமயம் யோகியர்க்குப் புருவ மத்தியில், ஆக்ஞையாதாரத்தில், முக்கூட்டு ஒளியாய் விளங்கு கிறான். உலகில் காற்றாய் வீசுபவன் அவனே. அதே சமயம், சீவர்களுக்குப் பிராணவாயுவாக உடலுக்குள் சென்று வந்து, உயிராற்றல் அளிக்கிறான்.

உலகரையும் யோகியரையும் பிரித்துக் கூறியமையால் யோகியர்க்குப் பிராணவாயு வெளியே இருந்து சென்று வருதலோடு, உடம்பினுள்ளேயும் அவ்வாயு உருவாகி இயங்குதலை, "மண் நின்றியங்கியும், வாயுவுமாய் நிற்கும்" என்று குறிப்பித்தார்.

ஆய்தல் வேண்டா, உணர்க

2950. எண்ணும் எழுத்தும் இனம் செய்தல் - அவ்வழிப்
பண்ணின் திறனும் படைத்த பரமனைக்
கண்ணின், கவரும் கருத்தில் அது, இது,
உள் நின்று உருக்கி, ஓர் ஆயமும் ஆமே.

எண்ணு மெழுத்து மினஞ்செய்த லவ்வழிப்
[1]பண்ணின் றிறனும் படைத்த பரமனைக்
[2]கண்ணின் கவருங் கருத்தி லதுவிது
வுண்ணின் [3]றுருக்கியோ ராயமு மாமே. (15)

வேறு பாடம்: 1. பண்ணுந் (விசு) (தி) (வ) (த) 2. கண்ணிற் (ஷ. பதிப்பு) 3. றுருக்குவோ (ஒ) IV.

கருத்து: தியானத்தில் அமைக்கும் மந்திர எழுத்துக்களைச் சக்கரமாக அமைத்துத் தியானித்தால், அதன் பயனாகச் சகஸ்ராரத்தில் நாதமும் அதிற் பிறக்கும் விந்துவும் எழச் செய்யும் சிவத்தை, விசாரணை நெறியில் ஆராய்ந்தால், பல்வேறு கருத்துகள் தோன்றும். அவற்றால் சிவமும் - ஆன்மாவும் வேறு வேறு என்ற உணர்வே மிஞ்சும். ஆனால், யோக நெறியில், அவனை உள்ளொளியாக உணர்ந்தால், அவன் நமது உயிருணர்வினுள் நின்று, அதை உருக்கி - தற்போதத்தைக் கெடுத்து - நம்மொடு 'ஒன்றிக் கலந்து நிற்பான்'.

ஆயம் - கூட்டம். இங்குப் புணர்ச்சி. இசைக்கலையில் பண்ணில் பிறப்பது திறம். அது போல், யோகக் கலையில் பண் - நாதம், அதிற் பிறப்பது விந்து. இனம் - மந்திர அடுக்குகள்; சக்கரம். கவர்தல் - வேறு படுதல்.

உலகம் விரிந்தது சிவனிடம்

2951. இருக்கின்றது எண் - திசை அண்டம், பாதாளம்
உருக்கொண்டு தன் நடு ஓங்கல்; இவ்வண்ணம்
கருக்கொண்டும், எங்கும் கலந்தவன் தானே;
திருக்கொன்றை வைத்த செழுஞ் சடையானே.

இருக்கின்ற [1]தெண்டிசை யண்டம்பா தாள
முருக்கொண்டு தன்னடு [2]வோங்கலிவ் வண்ணங்
கருக்கொண்டு மெங்குங் கலந்தவன் றானே
திருக்கொன்றை வைத்த செழுஞ்சடை யானே. (16)

வேறு பாடம்: 1. வெண்டிசை (விசு) (தி) (த) (வ). 2. வோங்கவிவ் (ஷ பதிப்.).

கருத்து: எட்டுத் திசைகளிலும் கவிந்த அண்டவெளியில் அடங்கிய, பாதாளம் உள்ளிட்ட அனைத்துலகங்களும், சடையிலே கொன்றை

மாலை சூடிய சிவனிடத்தில் உருக்கொண்டு எழுந்தன என்பது உண்மையே. எவ்வாறு? "அவை தோன்றுக" எனச் சங்கற்பித்து, (தனது சத்தியினிடம் ஒடுங்கியிருந்த) மாயையைத் தனது சிற்-சத்தியோடு கலந்து இயக்கியவனும் அவன். படைத்த பின், உலகங்களில், பொருள்களில், உயிர்களில் "ஒன்றாய்" நிற்பவனும் அவன்.

முனிவர் சிலர் விருப்பம் கொண்டு நோக்கினால், மாதரிடம் கருப்பம் தோன்றும் என்பர். அதுபோலச் சிவனது சங்கற்பம் மாயைக்குக் கருவாயிற்று. தான் படைத்தவற்றில், அவன் "ஒன்றாய்க்" கலந்து நிற்றலும் அவனது அன்னியமின்மையைக் காட்டும்.

நச்சினார்க்கு இனியன்

2952. பலவுடன் சென்றது பார்முழுது ஈசன்,
செலவு அறிவார் இல்லை, சேயன், அணியன்,
நலவியன், சங்கரன், ஆதி எம் ஆதி,
பல இலகா நிற்கும் பார்வை வல்லானே.

பலவுடன் [1]சென்றது பார்முழு தீசன்
செலவறி வாரில்லை சேய னணிய
[2]னலவியன் சங்கர னாதியெம் மாதி
பலவில [3]காநிற்கும் பார்வைவல் லானே. (17)

வேறு பாடம்: 1. சென்றவப் (விசு) (தி) (வ) சென்றவிப் (த) 2. னலவிலன் (ஒ) I. னலைவிலன் (விசு) (தி) (வ) (த) 3. தாய்நிற்கும் பான்மை (விசு) (தி) (வ).

கருத்து: சிவன் உலகம் முழுவதும் கோடிக்கணக்கான பொருள்களில் "அவையவையாக" நிற்கின்றான். ஆனால்,அவை அழிவது போல அவன் அழிவதில்லை. மீளத் தோன்றுவதும் இல்லை. அவன், தன்னை எண்ணி அன்பு செய்யாதவர்க்கு எட்டாதவன். (அன்பால் உருகும் அடியார்க்கு) அழைத்த குரலுக்கு ஆராமையுடன் ஓடிவந்து அணைக்கும் தாய். நன்மையின் நன்மையாகிய வீடுபேறு உடையான். அதை எய்தியோர்க்குப் பேரின்பம் அளிப்பவன். ஆதி சத்தியை உடைய எமது முதல்வன். பலவற்றையும் ஒருங்கே பார்க்கும் ஆற்றலுடையவன்.

சென்றது - சென்ற தன்மை; தொழிற்பெயர். இலகு - இலக்கு என்பதன் விகாரம். இலகா - அகரம் தொக்கது.

அறிவு எட்டாது, அன்பு எட்டும்

2953. அது அறிவு ஆனவன், ஆதி, புராணன்
எது அறியாவகை நின்றனன் ஈசன்,
பொது - அதுவான புவனங்கள் எட்டும்
இதுவானவன், நந்தி, எங்கள் பிரானே.

அதுவறி வானவ னாதி புராண
னெதுவறி யாவகை நின்றன னீசன்
பொதுவது வான புவனங்க ளெட்டு
[1]மிதுவா னவனந்தி யெங்கள் பிரானே. (18)

வேறு பாடம். 1. மிது வறி வானந்தி (விசு) (தி) (வ) (த).

கருத்து: எம் முதல்வனாகிய நந்தி, அறிவால் ஆய்வார்க்கு 'அது' (தத்பதம்) வாய்நிற்பவன், சேய்மையில் உள்ளவன். அதாவது அன்னியன். உண்மையில் அவன் நம்மை எல்லாம் தோற்றுவித்தவன். முன்னைப் பழமைக்கும் முன்னைப் பழம் பொருள். எந்த அளவையாலும் அளந்தறிய இயலாதவன். புவனங்களில் உள்ளோர் பொதுவில் அன்னியமாகக் கருதும் அவன், அவர்கள் அன்பு செய்தால் எட்டிப் பிடிக்கும் அளவுக்கு அண்மையில் உள்ளவன்.

அறிவு 'அது, அது' என்றே சொல்லும், அன்போ 'இது, இது' என்று உறவு கொள்ளும் என்கின்றார். "பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மான் இவனன்றே" என்பது திருஞானசம்பந்தர் வாய்மொழி. (தேவா 1 ஆம் திரு. பிரமபுரம் 1:1).

கடவுள் வாழ்த்து முதற் பாட்டில் "உணர்ந்து எட்டே" என்று ஆணையிட்ட ஆசிரியர், இங்கு 'அன்பால் உணர்வோர்க்கு எட்டுவான்' என்கின்றார்.

உயிரில் சிவம்

2954. நீரும், நிலனும், விசும்பு, அங்கி, மாருதம்
தூரும் உடம்பு உறு சோதியும் அங்கு உளன்
பேரும் பராபரன், பிஞ்ஞகன் - எம் இறை
ஊரும் சகலன், உலப்பு - இலி தானே.

நீரு நிலனும் விசும்பங்கி மாருதந்
தூரு முடம்புறு சோதியு மங்குளன்
பேரும் பராபரன் பிஞ்ஞக னெம்மிறை
யூருஞ் சகல னுலப்பிலி தானே. (19)

கருத்து: 'பராபரன்' என்ற கடப்பு நிலைத் திருப்பெயரும், 'சடைமுடியன்' என்னும் கலப்பு நிலைத் திருப்பெயரும் உடைய எமது கடவுளாகிய சிவம், ஐம்பூத காரியமாகிய உடம்பில், மிக்க பெருஞ்சோதியாக - அருட்பெருஞ்சோதியாக - விளங்குகின்றான். இவ்வுடம்பில் உறையும் உயிரோ மும்மலமும் உடைய சகலன். இனி, சிவசோதி உறையும் காரணத்தால், இவ்வுயிர் மும்மலமும் நீங்கப் பெற்றுச் சிவானந்தப் பெருவாழ்வு பெறும். என்றென்றும் வாழும். எங்கும் வியாபகமான அறிவைப் பெறும்.

மாயா காரியமாகிய உடம்பிற் பொருந்துதற்கு ஏதுவான வினைப்பயன் உள்ளவரை, உயிர் தனது இயல்பான வியாபகத் தன்மையைப் பெறாது என. இயல் தொடக்கத்திற் கூறிய ஆசிரியர், உயிர் அங்ஙனம் வியாபகத் தன்மை பெறுதற்குரிய வழியைக் கூறி இயலை நிறைவு செய்கின்றார்.

173. தோத்திரம்

உடம்பே கோயில்

2955. மாயனை நாடி மனநெடுந் தேர் ஏறிப்
போயின நாடு அறியாதே புலம்புவர்,
தேயமும் நாடும் திரிந்து, எங்கள் செல்வனை,
காய மின் - நாட்டிடைக் கண்டு கொண்டேனே.

மாயனை நாடி மனநெடுந் தேரேறிப்
போயின நாடறி யாதே புலம்புவர்
தேயமு நாடுந் திரிந்தெங்கள் செல்வனைக்
காயமின் னாட்டிடைச் கண்டுகொண் டேனே. (1)

கருத்து: சுத்த மாயா தத்துவத்திலிருந்து அருள்திருமேனி மேற்கொண்டு காட்சியளிக்கும் சிவனை, விசாரணை நெறியில் அறியலாம் என்று, அந்நெறியில் முயன்றோர் தத்துவக் காட்டிற் புகுந்து, இன்ன இடத்தில் உள்ளோம் என்றேனும் அறியாமல் வருந்துகின்றனர். மற்றும் பலர், பல தலங்களிலும், நாடுகளிலும் அவனைத் தேடினர். யான் அவனை உடம்பாகிய, ஒளியுடைய நாட்டிற் கண்டேன்.

சிவானுபூதிச் செல்வராதலின், தமது உணர்வினுள் பெற்ற அனுபவத்தைக் கூறினார். மின் - ஒளி, இங்கு அருள் ஒளி.

அஞ்செழுத்தின் பெருமை

2956. மன்னும் மலை ஒண் மத வாரணத்தின் மேல்
இன்னிசை பாட, இருந்தவர் ஆர்? என்னில்,
முன் இயல் காலம் முதல்வனார் நாமத்தைப்
பன்னியவர் என்று பாடு அறிவீரே.

மன்னு [1]மலையொண் மதவா ரணத்தின்மே
லின்னிசை பாட விருந்தவ ராரென்னின்
[2]முன்னியல் கால முதல்வனார் நாமத்தைப்
[3]பன்னி யவரென்று பாடறி வீரே. (2)

வேறு பாடம்: 1. மலைபோல் (இ) III. 2. முன்னிய (இ) III. 3. பன்னி னரென்றே (விசு) (தி) (வ).

கருத்து: உயிருணர்வு நிலை பெறுகின்ற சகஸ்ராரத்தில் சிதாகாய அனுபவம் பெற்று, அதைக் கடந்து, 12 அங்குலம் உள்ள பர வெளியில் சிவானந்தம் எய்தி, நாத இசைபருகி வீற்றிருந்தவர் யார் எனின், முற்படச் சென்ற காலத்தில், "திருநாமத்து அஞ்செழுத்தும் நெஞ்சமுழுத்தித்" தியானம் செய்தவர் என்க. அவர் எய்திய சிவப்பேற்றின் பெருமை இது.

சிவானந்தக் களிப்பு உடையது ஆதலின், பரவெளியை யானையாக உருவகித்தார்.

எனது துயரம்

2957. முத்தினின் முத்தை முகிழிள ஞாயிற்றை[1]
யெத்தனை வானோரு மேத்து மிறைவனை
யத்தனைக் காணா தரற்றுகின் றேனையோர்
பித்தனிவ னென்று பேசுகின் றாரே. (3)

வேறு பாடம்: 1. ஞானத்தை (இ) II.

கருத்து: முத்துகள் எல்லாவற்றினும் சிறந்த முத்துப் போன்றவனை, எழுகின்ற இளஞ்சூரியனை, தேவர் எல்லோரும் ஏத்தி வழிபடும்

மகாதேவனை, என் தந்தையைக் காணாது புலம்பும் என்னை உலகவர் 'பித்தன்' என்று இகழ்கின்றார்கள். இஃது என்ன வியப்பு!

நானானான்

2958. புகுந்துநின் றானெங்கள் புண்ணிய மூர்த்தி
புகுந்துநின் றானெங்கள் போதறி வாளன்
புகுந்துநின் றானடி யார்தங்க ணெஞ்சம்
புகுந்துநின் றானையே போற்றுகின் றேனே. (4)

கருத்து: அறவடிவான சிவம் என் 'உடலிடங் கொண்டான்', 'சிந்தையே கோயில் கொண்டான்', உணர்வாய்க் கலந்தான். என் பக்குவம் அறிந்து, பேரருள் புரிந்தான். அடியார்களின் நெஞ்சிற் குடிகொண்டிருக்கிறான். 'நான்' ஆனான். அவனைப் போற்றித் துதிக்கின்றேன்.

தெளிவாக உணர்ந்தேன்

2959. பூதக்கண் ணாடியிற் புகுந்திலன் போதுளன்
வேதக்கண் ணாடியின் வேறே வெளிப்படும்
நீதிக்கண் ணாடி நினைவார் மனத்துளன்[1]
கீதக்கண் ணாடியிற் கேட்டுநின் றேனே. (5)

வேறு பாடம்: 1. மனத்துளே (இ) I.

கருத்து: பௌதிகமாகிய கண்களுக்குப் புலப்படான். ஆனால் சகஸ்ராரத்தில் உணர்விற்குத் தோன்றுவான். வேதமாகிய கண்ணாடி அவனது இயல்பைப் புலப்படுத்துகின்றது. அவனை முறைப்படி வழிபாடு செய்து நினைக்கும் அடியாரின் மனத்தில் கோயில் கொண்டான். அவன் எழுப்பும் பிரணவ நாதத்தைக் கேட்டு, கண்ணாடியிற் காண்பது போலத் தெளிவாக, அவனை உணர்ந்தேன்.

தியானப் பயன்

2960. நாமம் ஓர் ஆயிரம் ஓதுமின் நாதனை
ஏமம் ஓர் ஆயிரத்துள்ளே இசைவீர்கள்,
ஓமம் ஓர் ஆயிரம் ஓத வல்லார்களும்
காமம் ஓர் ஆயிரம் கட்டு ஒழிந்தாரே.

நாமமோ ராயிர மோதுமி னாதனை
யேமமோ ராயிரத் துள்ளே யிசைவீர்க'
ளோமமோ ராயிர மோதவல் லார்களுங்
காமமோ ராயிரங் [2]கட்டொழிந் தாரே. (6)

வேறு பாடம்: 1.யியைவன (இ) II. 2. கண்டோழிந் (ஒ) III.

கருத்து: சிவமுதல்வனைப் பேராயிரம் பரவி வழிபடுக. ஆயிரக் கணக்கான சுகங்களை ஒத்த சிவானந்தம் பெறுவீர். இடைவிடாது அப் பெருமானது திருப்பெயரை - ஐந்தெழுத்தைத் - தியானம் செய்வோர், பற்பல ஆசைகட்கும் காரணமாகிய ஆணவ மலப் பிணிப்பிலிருந்து விடுபடுவர்.

நாமம் ஓதுதலும் தியானமே, இதில் உயிருணர்வு இணைந்தால். இதனைச் சென்ற இயலில் "எண்ணும் எழுத்தும் இனம் செய்தலவ்வழி" எனக் கூறினார். யோகத்தை 'ஓமம்' என்றல் ஆசிரியர் வழக்கு. யோகத்தில் ஓதுதல், தியானித்தல்.

குறிப்பு: இதனை யடுத்துச் சுவடிகளிலும், பதிப்புகளிலும் உள்ள "போற்றுகின்றேன்" என்ற பாடல் "அசபை" இயலில் வந்தது (பா. எண். 875) எனவே, இங்கு விடப்படுகின்றது.

யோகத்தின் நிறைவு

2961. நானா விதம் செய்தும் நாடுமின் நந்தியை
ஊனார் கமலத்தின் ஊடுசென்று, அப்புறம்
வானோர் உலகும் வழிபட, மீண்டபின்,
தேன் ஆர உண்டு, தெவிட்டலும் ஆமே.

நானா விதஞ்செய்து நாடுமின் னந்தியை
யூனார் கமலத்தி னூடுசென் றப்புறம்
வானோ [1]ருலகும் [2]வழிபட மீண்டபின்[3]
றேனார வுண்டு தெவிட்டலு மாமே. (7)

வேறு பாடம்: 1. ருலகம் (இ) I. 2. வழிப்பட (விசு) (தி) (வ) 3. மீண்டவன் (த)

கருத்து: உலகியல் தொழில்கள் பற்பல செய்யினும், சிவத்தையே பெற எண்ணுக. அதற்கு, யோக நெறியில், உடம்பில் மூலாதாரத்தில் இருந்து, ஆதாரத் தாமரைகளின் ஊடே, சுழுமுனை நாடியின் வழியாக, மேலே சென்று, சகஸ்ரார அனுபவமும் எய்தி, அதற்கும்

மேலே, பரவெளியில் பரசிவத்தைத் தரிசித்து, உங்களை வானோரும் வழிபட, மேலும் அப்பால், அகண்டாகார வெளியாக உள்ள சிவானந்தத் தேனை நிரம்ப உண்ணலாம்

கருத்தை அறிவான்

2962. வந்து நின்றான் அடியார்கட்கு, அரும்பொருள்
இந்திரன் - ஆதி இமையவர் வேண்டினும்
சுந்தர மாதர் துழனி ஒன்றல்லது
அந்தர வானத்தின் அப்புறத்தானே.

வந்துநின் றானடி யார்கட் கரும்பொரு
ளிந்திர னாதி யிமையவர் வேண்டினுஞ்
சுந்தர மாதர் துழனியொன் றல்ல
தந்தர வானத்தி னப்புறத் தானே. (8)

கருத்து: வானுலகில் தேவர் மாதரோடு துய்க்கும் களியன்றி, வேறு இல்லை. எனவே, இந்திரன் முதலிய தேவர்கள் வேண்டினாலும், வானத்திற்கும் அப்பால் உள்ள பெறற்கரிய சிவமுதல்வன், தன் அடியார் அழைத்த குரலுக்கு வந்து, அருள் .வழங்குகின்றான்.

துழனி - (இன்ப) ஆரவாரம் அல்லது இல்லாத என ஒரு சொல் வருவிக்க. இன்பந் துய்க்கும் கருத்தினர்க்கு அரியன். ஆனால், அன்பு செய்யும் தொண்டர்க்கு எளியன் என்றார்.

ஞானாசிரியன் பணி

2963. மண் - நீர் கலங்கிய நீர்போல், மனிதர்கள்
எண் - நீர் கலங்கி, இறைவன் இவன் எனார்,
உண் - நீர் குளத்தில் முகந்து, ஒருபால் வைத்துத்
தெண்ணீர்ப் படுத்தச் சிவனவன் ஆமே.

[1]மண்ணீர் கலங்கிய நீர்போன் மனிதர்க
[2]ளெண்ணீர் கலங்கி யிறைவ னிவனெனா
[3]ருண்ணீர் குளத்தின் முகந்தொரு பால்வைத்துத்
[4]தெண்ணீர்ப் படுத்தச் சிவனவ னாமே. (9)

வேறு பாடம்: 1. மண்ணிற் (ஓ) III. 2. ளெண்ணிற் (ஓ) III. 3. ருண்ணிற் (விசு) (தி) (வ) (த) 4. தெண்ணிற் (ஷ பதிப்.)

கருத்து: மழைநீர் இயல்பால் தெளிந்தது ஆயினும், விழுந்த மண்ணின் தன்மையால் கலங்கியது போல், மாந்தர் பிறப்பின் சார்பால், சிந்தனைத் தெளிவற்று, 'இறைவன் சிவனே' எனக் கொள்ளாமல், பற்பல தெய்வம் கொண்டு குழம்புவர். குளத்தில் உள்ள குடிநீர் கலங்கியிருப்பினும், ஒரு குடத்தில் முகந்து, ஓர் இடத்தில் வைத்துத் தேற்றாங் கொட்டையால் தெளிவு உண்டாக்குதல் போல், ஞானாசிரியன் மாணவனைத் தனியிடத்தில் இருத்தித் தன் சொல்லால் தெளிவுண்டாக்க, அவன் தெளிந்து, சிவநெறி நின்று முடிவில் சிவனாவான்.

அடிமை பூண்டேன்

2964. மெய்த்தவத் தானை விரும்பு மொருவற்குக்
கைத்தலஞ் சேர்தரு நெல்லிக் கனியொக்கு
சுத்தனைத் தூய்நெறி யாய்நின்ற தேவர்க
ளத்தனை நாடி யமைந்தொழிந் தேனே. (10)

கருத்து: உண்மைத் தவத்தின் பயனாக உள்ளவனை, அன்பால் இத்தவநெறி நின்று தன்னைப் பெற விரும்புவோனுக்கு, உள்ளங்கை நெல்லிக் கனிபோல், உறுதியாகக் கிடைத்துப் பேரின்பம் அளிப்பவனை, சொரூப சிவத்தை, தூய சிவநெறி யாகவே உள்ளவனை, தேவர்தலைவனை நாடும் உள்ளத்துடன், அவனுக்கு அடிமை பூண்டேன்.

அமைந்தொழிதல் - அமைதல். ஒழிதல் - அமைதலின் வழுவாமையைக் குறிக்கும் துணைவினை.

அமைதிக்குக் காரணம்

2965. அமைந்தொழிந்தேன் அளவில் புகழ் ஞானம்
சமைந்தொழிந்தேன், தடுமாற்றம் ஒன்று இல்லை
புகைந்து எழும் பூதலம் புண்ணியன் நண்ணி
வகைந்து கொடுக்கின்ற வள்ளலுமாமே.

அமைந்தொழிந் 'தேனள வில்புகழ் ஞானஞ்
சமைந்தொழிந் தேன்றடு மாற்றமொன் றில்லை
புகைந்தெழும் பூதலம் புண்ணிய னண்ணி
வகைந்து கொடுக்கின்ற வள்ளலு மாமே. (11)

வேறு பாடம்: 1. தேனழி (ஓ) III.

கருத்து: மாந்தர் தீக்குணங்களால், அமைதியின்றி, மனம் எரிந்து நிற்கும் இவ்வுலகில், சிவனே ஞானாசிரியனாக எழுந்தருளி அளவில்லாப் புகழையுடைய ஞானத்தை, வகை செய்து உணர்த்தினான். அவ்வள்ளலுக்கு அடிமை பூண்டேன். அம் மெய்யுணர்வு நெறியில் நின்றேன். அதனால், சிறிதும் தடுமாற்றம் இன்றி, அமைதியாக இருக்கிறேன்.

அறிவுத் துணை

2966. வள்ளல் - தலைவனை, வான நன்னாடனை,
வெள்ளப்புனல் - சடை வேத முதல்வனைக்
கள்ளப் பெருமக்கள் காண்பர் கொலோ என்று
உள்ளத்தினுள்ளே ஒளித்திருந்து, ஆளுமே.

வள்ளற் றலைவனை வானநன் னாடனை
வெள்ளப் புனற்சடை வேத முதல்வனைக்
கள்ளப் பெருமக்கள் காண்பர்கொ லோவென்று
வுள்ளத்தி னுள்ளே யொளித்திருந் தாளுமே[1]. (12)

வேறு பாடம்: 1. தானே (ஓ)

கருத்து: "சிவன் உலகைப் படைத்துதவிய வள்ளல். உயிர்கட்குத் தலைவன். அகண்டமாகிய வெளியில் உள்ளோன். ஆயினும் அருள் - திருமேனி கொண்டு, வான கங்கையைச் சடையில் நிறுத்தி, உலகத்தைக் காத்தவன். வேதங்களை அருளிச் செய்தவன்" என்று, தம்மையே தலைவராக எண்ணிக்கொள்ளும் மக்கள் உணர்வரோ? எனக் கருதி அவர்கட்குச் சமயம் நேரும் பொழுதெல்லாம் அறிவிப்பதற்காகவும், அவர்தம் பக்குவம் நோக்கி அடிமை கொள்ளுதற்கும் அவர்கள் அறிவினுள்ளே சிவன் மறைந் திருக்கின்றான்.

கள்ளர் காண்பரோ என, அவன் (கள்ளனாய்) ஒளித்திருந்தான் என்பது ஒரு நயம். கள்ளப் பெருமக்கள் என்பது வஞ்சப் புகழ்ச்சி. அவர் காணார் ஆயினும், செவ்விபார்த்து, உணர்த்தக்கருதிய இறைவனின் எல்லையிலாப் பரிவை உணர்த்தினார்.

ஞான வாள்

2967. ஆளு மலர்ப்பதந் தந்த கடவுளை
நாளும் வழிபட்டு நன்மையு ணின்றவர்
கோளும் வினையு மறுக்குங் குரிசிலின்[1]
வாளு மனத்தொடு வைத்தொழிந் தேனே. (13)

வேறு பாடம்: 1. குரிசிலை (ஓ) I.

கருத்து: அடிமைகொண்டு, திருவடிக் காட்சி நல்கிய கடவுள், தினமும் வழிபட்டுச் சிவ புண்ணியங்கள் செய்தோர்களின் வினையையும், அவற்றை அறிவிக்கும் கோள்களையும் நீக்கும் தலைவன் உணர்த்திய ஞானமாகிய வாளை மனத்தில் ஏந்திப் (பகையாகிய மலத்தை) வென்றேன்.

வேண்டுவதே ஈவான்

2968. விரும்பி லவனடி வீர சுவர்க்கம்
பொருந்தி லவனடி புண்ணிய லோகந்
திருந்தி லவனடி தீர்த்தமு மாகும்
வருந்தி யவனடி வாழ்த்தவல் லார்க்கே. (14)

கருத்து: தவம் முயன்று, சிவன் திருவடிகளை வழிபடுவோர்க்கு, அவர் வேண்டுவனவற்றை அம்மலரடிகள் நல்கும். நுண்ணுடம்புடன் இன்பம் நுகர விரும்பின், வீர சுவர்க்கத்தைத் தந்தருளும். சிவபுண்ணியங்கள் செய்ய மனங்கொண்டால், புண்ணிய வுலக வாழ்வைத் தரும். இருவினையொப்பு அமைய, எவ்வகைப் பிறப்பிலும் உவர்ப்பு வர, வீடு பேற்றை அவாவினால், மலம் அகற்றி, அருள் (தீர்த்த நீர் ஆட்டித்) திருவடிப் பெருவாழ்வை நல்கும்.

எட்டாரை எட்டினேன்

2969. வானகம் ஊடு அறுத்தான், இவ் உலகினில்,
தான் அகம் இல்லாத் தனியாகும் போதகன்
கானக வாழைக் கனி நுகர்ந்து, உள் உறும்
பானகச் சோதியைப் பற்றிநின்றேனே.

வானக மூடறுத் தானிவ் வுலகினிற்
றானக மில்லாத் தனியாகும் போதகன்
கானக வாழைக் கனிநுகர்ந் துள்ளுறும்
பானகச் சோதியைப் பற்றிநின் றேனே. (15)

கருத்து: சிவன் உலகைக் கடந்தவன். உலகில், பொருள்களோடும், உயிர்களோடும் "ஒன்றாக" இருப்பினும், இயல்பில் தனக்கு என்று உடம்பு இல்லாதவன். சுத்தப் பொருள். செம்பொருள் (Absolute). ஆனால், அதே சமயம், உயிர்க்கு உயிராய் (அறிவுக்கு அறிவாய்) நின்று உணர்த்தும் போதகாசிரியனாயும் உள்ளான்.

அவன் உணர்த்திய மெய்யுணர்வு நெறி நின்று, காட்டில் வாழைப்பழம் பெற்று உண்பவரைப் போல், உலக வாழ்வில் திருவருளை உணர்ந்து, அருள் - அனுபவம் எய்திப், பின்னர் அவ் அருளை உடைய பொருளை - செம்பொருளை - அகண்டாகார வெளியாகப் பரவியுள்ள சிவச் சோதியை - உணர்ந்து, யாரும் எட்டாத அதனைச் சிக்கெனப் பிடித்தேன்.

"வானகம் ஊடு அறுத்தல்" குறிப்பாக நின்று, "போது ஆர் புனை முடியும் எல்லாப் பொருள் முடிவே" (திருவா. திருவெம். 10) என்பதை உணர்த்தும். செம்பொருளை உணரும் அரிய நிலையைச் சுந்தரரின் புராணத்தில் வைத்து, "மாலயன் தொடராதானை வலிந்து பின்தொடரல் உற்றார்...." பூவணத்தவரை உற்றார்,அவரலால், புரங்கள் செற்ற ஏவணச் சிலையினாரை யார் தொடர்ந்து எட்ட வல்லார்" எனச் சேக்கிழார் பாடுதல் காண்க. (பெ. பு. 189, 190)

வாழை மருதநிலப் பொருள். முல்லை நிலமாகிய காட்டில் கிடைக் காது. அது போல, மாயாகாரியமான உலகில், திருவருள் அரிய தொரு பொருள். சிவபிரான் கருணையால், அன்பருக்கு அது கிடைக்கும். இதனை இராமலிங்க வள்ளலார், "மாயைக் காடகத்தை வளம் செறிந்த நாடகமாப் புரிந்த கருணையனே" என்பர். (திருவரு. 6 ஆம். திரு. பெறாப்பேறு, 8)

பா அகச்சோதி - பாவகச் சோதி எனற் பாலது, எதுகை நோக்கிப் பானகச் சோதி எனத் திரிந்தது. அகச் சோதி - அருளை வடிவமாகக் கொண்டு அதன் உள்ளே உள்ள சோதி. இஃது உடலுக்கு உயிர் போன்றது. பா - அகண்ட வெளியாய்ப் பரவிய. பாவுதல் - பரவுதல்.

தொடர்ந்து அருளும் துணைவன்

2970. விதி அது, மேலை அமரர் உறையும்
பதி அது, பாய்புனல் - கங்கையும் உண்டு,
துதி அது, தொல்வினைப்பற்று அறுவிக்கும்,
பதி அது, 'வ' - விட்டது, அந்தமு மாமே.

விதியது மேலை யமர ருறையும்
[1]பதியது பாய்புனற் கங்கையு முண்டு
துதியது தொல்வினைப் பற்றறு விக்கும்
[2]பதியது [3]வவ்விட்ட தந்தமு மாமே. (16)

வேறு பாடம்: 1. கதியது (இ) II. 2. மதியது (த) 3. பவ்வ விட்டந்தமு (ஓ) I.

கருத்து: சிவபெருமான் உயிர்கட்குப் படிநிலையால் அருள்கின்ற பான்மையைக் கூறுகின்றார். சிவன் செய்வன எல்லாம் அருள்களே. உலகில் வாழ்வோர்க்கு வினைப் பயனைச் சேர்க்கின்றான். (அதுவும் அருளே) தேவர்கள் இன்புறும் மேலுலக வாழ்வை அளிக்கின்றான். (அதுவும் அருளே) சிவலோகத்தில், உருத்திர மூர்த்தியாக, அம்மையப்பனாக, (தேவரும், மூவரும், முனிவரும், கணங்களும்) துதிக்க வீற்றிருக்கின்றான். (அதுவும் அருளே) இருவினையொப்பு, மலபரிபாகம் உள்ள அன்பர்க்குச் சஞ்சித வினைப் பிணிப்பை அகற்றுகின்றான். (அதுவும் அருளே.) யாவர்க்கும், எவைக்கும் பதியாய், (இதுவரை செய்து வந்த) அருள் ஆகிய சத்தியும் இல்லாத செம்பொருளாய், யாவரும் பெறவுறும் முடிவான கதியாய், அகண்ட பரிபூரண சச்சிதானந்தமாய் விளங்குகின்றான்.

இத்தகைய தாயினும் மிக்க தயையுடையவனை விட்டுப் புறந்தொழுவதேன்? என்பது குறிப்பு எச்சம்.

'வ' - எழுத்துத் திருவைந்தெழுத்தில் அருட் சத்தியைக் குறிக்கும். முதலில் 'நம' - விலகிச் 'சிவய' - வாய் நிற்கும். பின்பு, 'வ' விலகி, அதே சமயம் 'யாவும்' விழுங்கப் பெற்றுச் 'சி - கரமே' - சிவமே - நின்று நிலவும்.

"மூல பண்டாரம் வழங்குகின்றாய்க்கு"

2971. மேலது வானவர், கீழது மாதவர்,
தான் இடர் மானுடர் கீழது மாதனம்,
கானது கூவிள மாலை கமழ் சடை,
ஆனது செய்யும் எம் ஆருயிர் தானே.

மேலது வானவர் கீழது மாதவர்
தானிடர் மானுடர் கீழது மாதனம்
கானது கூவிள மாலை கமழ்சடை
யானது செய்யுமெம் மாருயிர் தானே. (17)

கருத்து: உடம்பிற்கு நன்மையே செய்யும் நல்லுயிர் போல, எம் உயிருக்கு, அறிவுநிறை உயிராய்த் துணைநின்று, நன்மை அருளும் சிவம், மேலாகிய வானவர்க்கும் மேலானது. இது சிவத்தின் அருமை. இனி, அக்கருணாமூர்த்தி பேரன்பினாலே, தவம் பூண்டு, தன்னை வழிபடும் அடியார்க்கு, அவர் ஏவின செய்யும் தொண்டன். இது சிவத்தின் எளிமை. இனி, அல்லற்படும் மானிடர்க்கு, அவர்கள் உணர்ந்தால், அவர்களின் அடிவலிமையாக, மூலாதாரத்தில், குண்டலி சத்தியாக உறையும் அருட் சத்தியாகிய பெருஞ் செல்வத்தை உடையவன். அவனே அது, அவனது சத்தியே அது. இது சிவம் வைத்த புதையல். வில்வமாலை தெய்வ மணம் கமழும் அடர்ந்த சடைமுடியுடன், தெய்வப் பேரொளி, பரவெளியில் எழுகின்றது. இது சிவம் அன்பர்க்கு அருளும் காட்சி. (சடை எண்டிசையிலும் விரிந்து பரந்தது ஆதலின், அகண்டாகார வெளியைக் குறிப்பால் உணர்த்தும்.)

'இவ்வண்ணம் வழங்குகின்றான் மூல பண்டாரம்' என்று வியந்தவாறு.

1 - ஆம் அடி: வானவர் மேலது, மாதவர் கீழது என மாறுக. மேல் - தலைவன். கீழ் - தொண்டன். சிவபெருமான் திருவாசகம் படியெடுத்து எழுதிய சுவடியில் "அடியார்க்கடியன் சிற்றம்பலவன்" என்று திருக்கைச் சாத்திட்டதை நினைக. (திருவாத. புரா.) மேலது, கீழது, கீழது, கானது என்ற வினைக் குறிப்பு முற்றுப் பயனிலைகட்கு எழுவாய், எம் ஆருயிர் எனக் கொண்டு முடிக்க.

இரண்டு நிலையில் சிவம்

2972. சூழும் கருங்கடல் நஞ்சு உண்ட கண்டன், ஐ
யேழும் இரண்டிலும் ஈசன் பிறப்பிலி,
ஆழும் சுனையும் அடவியும் அங்கு உளன்
வாழும் எழுத்து ஐந்தும் மன்னனும் ஆமே.

சூழுங் கருங்கட னஞ்சுண்ட கண்டனை
யேழு மிரண்டிலு மீசன் பிறப்பிலி
யாழுஞ் சுனையு மடவியு மங்குளன்
வாழு மெழுத்தைந்து மன்னனு மாமே. (18)

கருத்து: ஈசன் கடல் நஞ்சை உண்டு, கறுத்த கழுத்தை உடையவன். ஆனான் அவன் சுத்த மாயை, அசுத்த மாயை என்ற இரண்டில் இருந்தும் தோன்றும் 35 தத்துவங்களும் அடங்கிய பிறப்பு எதுவும் கொள்வதில்லை. ஆழ்ந்த சுனையிலும், காட்டிலும் அவன் வியாபகமாகியுள்ளான். அவனே திருவைந்தெழுத்தில்,அதன் பொருளாக உறைபவன்.

கடல் என்னும் ஒப்புமை பற்றிப் பாற்கடலை, மண்ணுலகக் கருங்கடலாகக் கூறினார். சிவன் கலப்புநிலையில் அனைத்துப் பொருள்களிலும் இருப்பதை 1, 3 ஆம் அடிகள் கூறின. கலந்திருப்பினும், பொருட்டன்மையால், அவன் வேறு என்பதை 2 ஆம் அடி கூறிற்று. அவன் சுட்டற்ற பரம்பொருள் என்பதை ஈற்றடி உணர்த்திற்று. இதனை முற்போந்த "விதியது" என்னும் திருமந்திரப் பாடலால் அறியலாம்.

36 தத்துவங்களுள் புருடன் ஒரு தத்துவம் அன்று. ஆதலின் "ஐயேழும்" என்றார். சுனையும் அடவியும் என்ற அங்கு என்க. எழுத்தைந்தும் வாழும் மன்னன் என்க. ஏழன் தொகை. மன்னனும் என்பதன் உம்மை இறந்தது தழுவியது.

கலப்பு நிலையில் உள்ளதன்றிக் கடப்பு நிலையிலும் உள்ளான் என்பது உணர்த்திற்று.

அட்ட மூர்த்தி

2973. உலகம்-அது ஒத்து, மண் ஒத்து, உயர்காற்றை
அலர்கதிர், அங்கி ஒத்து, ஆதிப் பிரானும்
நிலவிய மாமுகில் நீர் ஒத்து, மீண்ட
செலவு ஒத்து, அமர் திகைத் தேவர் பிரானே.

உலகம தொத்துமண் ணொத்துயர் காற்றை
யலர்கதி ரங்கியொத் தாதிப் பிரானு
[1]நிலவிய மாமுகி னீரொத்து மீண்ட[2]
செலவொத் தமர்திகைத் தேவர் பிரானே. (19)

வேறு பாடம்: 1. நிலவியன் (த) 2. மீண்டச் (விசு) (தி) (வ) (த)

கருத்து: சிவபெருமான் உயிர்கள் (இயமானன்), நிலம், காற்று, ஆகாயம், அதில் விரியும் சூரியன், சந்திரன், தீ, நீர் - என்ற அட்ட மூர்த்தமாய் உள்ளான். இவை மாயையில் ஒடுங்கும் பொழுது,

அவற்றில் ஒன்றியைந்திருந்த தனது செயற்பாட்டை ஒக்கவே நிறுத்துகிறான். இவை எல்லாம் சங்கற்பமாகத் தோன்றும் அண்டவெளியாகவும் (பரமாகாயம்) உள்ளான்.

செலவு - ஒடுக்கம். சங்காரம்; கதிர்களுக்கு இடம் என்று ஆகாயத்தைப் பெறவைத்தார். திகை - திசை.

மண்டல நாயகன்

2974. பரிசு அறிந்து அங்கு உளன் அங்கி, அருக்கன்,
பரிசு அறிந்து அங்கு உளன் மாருதத்து ஈசன்
பரிசு அறிந்து அங்கு உளன் மா மதி-ஞானப்
பரிசு அறிந்து, அந் நிலம் பாரிக்குமாறே.

பரிசறிந் தங்குள னங்கி யருக்கன்
பரிசறிந் தங்குளன் மாருதத் தீசன்
பரிசறிந் தங்குளன் மாமதி ஞானப்'
பரிசறிந் தந்நிலம் பாரிக்கு மாறே. (20)

வேறு பாடம்: 1. ஞானமப் (இ ஓ) I.

கருத்து: சிவன் உயிரினுடைய அறிவின் தன்மையை, உள்நின்று உணர்பவன். அவன் அதனை வளர்க்கும் பொருட்டு, அவ்வுயிர் உள்ள உடம்பில் (யோகியின் உடம்பில்) அக்கினி மண்டலத்தின் தன்மையை அறிந்து, அங்கு உள்ளுறை சத்தியாக விளங்குகின்றான். அதுபோல், சூரிய, சந்திர மண்டலங்களிலும் மூச்சுக்காற்றிலும் விளங்குகின்றான்.

ஞானம் - உயிருணர்வு. இதனைப் பெருக்குவதே யோகத்தின் குறிக்கோள். மூலக்கனல் இம் மூன்று மண்டலங்களின் வழியாக மேலேறும் பொழுது,இவற்றின் கலைகள் (முறையே பத்தும், பன்னிரண்டும், பதினாறும்) மூலக்கனலுக்கும், உயிருணர்வுக்கும் தக்கவாறு உதவ வேண்டும். அவ்வாறு உதவச் செய்பவன் சிவன். உயிருணர்வை வளர்க்கும் பொருட்டு இதைச் செய்கின்றான். உயிருணர்வை வளர்த்தலாவது, ஆணவமலத்தின் காரணமாக, உயிர் பற்றுக்களில் விழாமல் காத்து, அதன் தனித்தன்மையை வளர்த்தல். இதனை மாணிக்க வாசகர், "பாசமாம் பற்றுஅறுத்துப் பாரிக்கும் ஆரியனே" என்பார். (திருவா. சிவபு. அடி. 64) நிலம் - உயிர். யோகிக்கு உடம்பு ஞான சாதனமாதலின், இச்சொல் உடம்பையும் குறிக்கும். ஆகவே, சீவன் என்று பொருள் கொள்ளல் ஏற்றது. மூச்சுச்

சுழுமுனையிலும், அண்ணாக்கின் வழியாகத் தலையிலும் இயங்க வேண்டும். "மன் மனம் எங்குண்டு, வாயுவும் அங்குண்டு" என்ற ஆசிரிய வசனத்திற்கேற்ப, உயிருணர்வைப் புருவமத்தியிலிருந்து, கொடி வழியில், மேலே சுமந்து செல்வது மூச்சுக் காற்றே. ஒருநிலையில், அது வெளிக்காற்றாக அன்றி, உடம்பினுள்ளேயே தோன்றி இயங்க வேண்டும். இதனைக் 'கேவல கும்பகம்' என்பர். இவற்றுக்கெல்லாம் சிவன் திருவருள் துணை நிற்க வேண்டும். ஆதலின், "மாருதத்துப் பரிசறிந்தங்குளன்" என்றார். ஈசன் என்பது இடை நிலைவிளக்கமாய் இயையும்.

படைப்பின் சிறப்பு

2975. அந்தம் கடந்தும், அது - அதுவாய் நிற்கும்
பந்த உலகினில், கீழோர் பெரும் பொருள்
தந்த உலகு எங்கும் தானே பராபரன்
வந்து படைக்கின்ற மாண்பு அது தானே.

அந்தங் கடந்து மதுவது வாய்நிற்கும்
'பந்த வுலகினிற் கீழோர் பெரும்பொரு
டந்த வுலகெங்குந் தானே பராபரன்
வந்து படைக்கின்ற மாண்பது தானே. (21)

வேறு பாடம்: 1. பெந்த (த)

கருத்து: சிவன் படைத்த உலகங்களுக்கு அவனே பராபரனாய் விளங்குகின்றான். அதாவது, உலகங்களுக்கு முன்னும் (முன்பு இருந்தவன்) அவனே, பின்னும் அவனே. இஃது எவ்வாறு? அவன் உலகங்களைக் கட ந்தநிலையில் உள்ளவன். அந்த நிலையிலிருந்து சற்றும் மாறாமலே, உலகப் பொருள்களில், அவற்றின் தன்மையாகக் கலந்துநிற்கின்றான். அவை அழியும். அவனோ, அழிவைக் கடந்தவன். இக்காரணத்தால் உலகில் மலங்களால் பிணிக்கப் பட்டுள்ள சகலர் ஆகிய உயிர்களுக்கு வாய்த்த பெருஞ்செல்வ மாவான். இது சிவன் மேல்நிலையினின்று கீழிறங்கி வந்து, உலகைப் படைப்பதில் உள்ள சிறப்பாகும்.

சகலர் - மூன்று மலங்களும் நீங்கப் பெறாதவர் ஆதலின், கீழான நிலையில் உள்ளோராவர். பந்தம் - பிணிப்பு.

2976. முத்தண்ட வீரண்ட மேமுடி யாயினு
மத்த னுருவ முலகே ழெனப்படு
மத்தனின் பாதாள மளவுள்ள சேவடி
மத்த ரதனை மகிழ்ந்துண ராரே (அ, ஔ)

2977. ஆதிப் பிரானம் பிரானவ் வகலிடச்
சோதிப் பிரான்சுடர் மூன்றொளி யாய்நிற்கு
மாதிப் பிரானண்டத் தப்புறங் கீழவ
னாதிப் பிரானடு வாகிநின் றானே. (அ)

தம்மை மறப்பார்

2978. அண்டம் கடந்து உயர்ந்து, ஓங்கும் பெருமையன்,
பிண்டம் கடந்த பிறவிச் சிறுமையன்,
தொண்டர் நடந்த கனைகழல் காண்தொறும்
தொண்டர்கள் தூய்நெறி தூங்கி நின்றாரே.

அண்டங் கடந்துயர்ந் தோங்கும் பெருமையன்
பிண்டங் கடந்த பிறவிச் சிறுமையன்
[1]றொண்டர் நடந்த கனைகழல் காண்டொறுந்
தொண்டர்க டுய்நெறி தூங்கிநின் றாரே. (22)

வேறு பாடம்: 1. கண்டர் கடந்த (த)

கருத்து: சிவன் அண்டங்களில் உள்ளார் யாருக்கும் எட்டாத கடப்பு நிலையில் உள்ளான். இஃது அவன் பெருமை. அவன் எவ்வுடம்பையும் உடையவனல்லன். இது பிறவாத் தன்மை. இவ்வாறாயினும், உண்மைத் தொண்டர்க்குப் பதிஞானம் நல்க, அவன் மனிதவுருவில் எழுந்தருளி, மண்ணில் திருவடி தோய நடந்தான். அத்திருவடியை உயிருணர்வுக் காட்சியிற் காணுந் தோறும், யோகியர் சுத்த துரிய சமாதி எய்துவர்.

பிண்டம் - உடம்பு, சிறுமை - வறுமை. பிறவி வறுமை என்பது, பிறவி இல்லாமை. "பிறவாயாக்கைப் பெரியோன்" என்றனர் இளங்கோவடிகளும் (சிலப். இந்தி அடி. 169) தூய்நெறி - சுத்த அவத்தை. தூங்குதல் - துரிய நிலை.

பொன்னொளி

2979. உலவுசெய் நோக்கம் பெருங்கடல் சூழ்ந்த
நிலம் முழுது, எல்லாம் நிறைந்தனன் ஈசன்
பலம் முழுது எல்லாம் படைத்தனன் முன்னே
புலம் உழு பொன்னிறம் ஆகி நின்றானே.

உலவுசெய் [1]நோக்கம் பெருங்கடல் சூழ்ந்த[2]
நிலமுழு தெல்லா நிறைந்தன னீசன்
பலமுழு தெல்லாம் படைத்தனன் முன்னே
புலமுழு பொன்னிற மாகிநின் றானே. (23)

வேறு பாடம்: 1. யோக்கம் (த) சூழ (விசு) (தி) (வ) (த)

கருத்து: சிவபெருமானுக்குத் திருநோக்கம் (பார்வை) உலகப் பொருள்கள், உயிர்கள் எல்லாவற்றின் மீதும் ஒரே சமயத்தில் நிலவும். அதாவது எல்லாவற்றையும் ஒருங்கே அறிய வல்லவன் அவன். உயிர்கள் செய்யும் செயல்கட்கு உரிய பயன்களை, 'நியதி' என்னும் தத்துவம் ஊழ் என்ற இயற்கை விதியினால் உண்டாக்கு கிறது. இது உயிர்கட்குப் பொதுவாகச் சிவன் முன்பே வகுத்து வைத்தவிதி. இனி, அன்பர் பொருட்டு, அவ்வப்பொழுது, சிவன் நல்கும் அருளும் உண்டு. அவ்வகையில், யோகியர், தமது உயிருணர்வைப் பண்படுத்துவராயின், அஃது அருளொளி பெற்றுப் பொன்னொளியாகத் திகழச் செய்வான்.

உலவு - உலவுதல், பரவுதல்; முதனிலைத் தொழிற்பெயர். உழுபுலம் என மாற்றுக. புலம் - புலன், அறிவு; இங்கு உணர்வு. ஆகி - செய்து என்னும் வாய்ப்பாட்டு எச்சத்தைச் செய என்னும் வாய்பாட்டெச்சமாகத் திரிக்க.

2980. பராபர னாகிப்பல் லூழிக டோறும்
பராபர னாயிவ் வகலிடந் தாங்கித்
தராபர னாய்நின்ற தன்மை யுணரார்
நிராபர னாகி நிறைந்துநின் றானே. (அ, ஔ)

2981. போற்றும் பெருந்தெய்வந் தானே பிறரில்லை
யூற்றமு மோசையு மோசை யொடுக்கமும்
வேற்றுட றானென் றதுபெருந் தெய்வமாங்
காற்றது வீசன் கலந்துநின் றானே (அ, ஔ)

2982. திசையனைத் துஞ்சிவ னேயவ னாகின்
மிகையனைத் துஞ்சொல்ல வேண்டா மனிதரே
புகையனைத் தும்புற மங்கியிற் கூடு
முகையனைத் துமெங்க ளாதிப் பிரானே (அ, ஔ)

குறிப்பு: இதனை யடுத்துச் சுவடிகளிலும் பதிப்புகளிலும் உள்ள "அகன்றானகலிட" என்னும் பாடல் 'அனுக்கிரகம்' இயலில் வந்தது. (பா . எண். 257) எனவே, இங்கு விடப்படுகின்றது.

"ஒருவன் என்னும் ஒருவன்"

2983. கலை ஒருமூன்றும் கடந்து அப்பால் நின்ற
தலைவனை நாடுமின், தத்துவ நாதன்,
விலையில்லை, விண்ணவரோடும் உரைப்ப
உரையில்லை, உள்ளுளும் உள்ளவன் தானே.

கலையொரு மூன்றுங் கடந்தப்பா னின்ற
தலைவனை நாடுமின் றத்துவ நாதன்
விலையில்லை விண்ணவ ரோடு முரைப்ப
[1]வுரையில்லை [2]யுள்ளுளு முள்ளவன் றானே. (24)

வேறு பாடம்: 1. னரையில்லை (விசு) (தி) (வ). 2. யுள்ளுறு (ஷ பதிப்.) (த).

கருத்து: அக்கினிகலை, சூரிய கலை, சந்திரகலை என்ற மூன்று கலைகளையும் கடந்தவன். அகண்ட வெளியாயுள்ளவன். இத்தன்மையால் உலகங்கட்கெல்லாம் தலைவன். அனைத்துத் தத்துவங்கட்கும் முதல்வன். இணையற்றவன். அவனைத் தேவர்களுடன் ஒப்பவைத்துக்கூற, யாதோர் ஒப்புமையும், அவனோடு அவர்கட்கு இல்லை. ஏனெனில், அவர் ஒவ்வொருவர் உள்ளேயும் நின்று இயக்குபவன் அவனே.

அன்பு எல்லாம் அவனுக்கே

2984. படிகால் பிரமன் செய் பாசம் அறுத்து,
நெடியான் குறுமைசெய் நேசம் மறுத்துச்
செடி ஆர் தவத்தினில் செய் தொழில் நீக்கி,
அடியேனை உய்ய வைத்து, அன்பு கொண்டானே.

[1]படிகாற் பிரமன்செய் பாச மறுத்து
நெடியான் குறுமைசெய் நேச மறுத்துச்
செடியார் தவத்தினிற் செய்தொழி னீக்கி
யடியேனை யுய்யவைத் தன்புகொண் டானே. (25)

வேறு பாடம். 1. படிகால் (இ ஓ) I.

கருத்து: பிரமனது படைப்புத் தொழிலால், வாய்த்த பிறப்பில், ஒருவன் உற்றாரிடம் வைத்த பாசத்தை, சிவபெருமான் முதற்கண் நீக்கினான். இயற்கையில், பரந்த மனம் உடைய அவன், ஆணவ மலத்தால், அறிவு குறுகப் பெற்றுச் சிலரிடம் மட்டும் அன்பு கொள்ளும் உயிரின் குறுகிய இயல்பைப் பின்பு மாற்றினான். என் விடயத்தில், குற்றம் உடைய தவத்தைச் செய்வதிலிருந்து தவிர்த்து, அனைத்துயிர்களிடமும் அன்பு கொள்ளும் ஆன்ம நேயமும் சிவயோக சாதனையும் மேற்கொள்ளுவித்து, நான் உய்யுமாறு செய்து, என் அன்புமுழுதும் தனக்கே உரியதாக்கிக் கொண்டான். இக்கருணைச் செயலை, அவன் படிமுறையாகச் செய்தான்.

படிகால் - படிமுறை. பிரமன்செய் - பிரமன் செயல்; படைப்பு. செய் - முதனிலைத் தொழிற் பெயர். நெடியான் - உயர்ந்து வளர்ந்தவன், இங்குப் பரந்த அன்பு காட்ட உரியவன். நெடுமை, குறுமை என்றவை மனத்தின் பண்பு. மறுத்து (2 ஆம் அடி) - மாற்றி. செடி - குற்றம். அன்பு வேறு, சிவம் வேறு அல்ல என்னும் கருத்தினர் ஆசிரியர் ஆதலின், உயிர்களிடம் கொள்ளும் அன்பையும் சிவக்காதலையும் சேர்த்து, "(என்) அன்பு கொண்டானே" என்றார்.

மலரில் மணம் போல்

2985. ஈசன் என்று, எட்டுத்திசையும் இயங்கின,
ஓசையினின்று எழு சத்தம், உலப்பு - இலி
தேகம் ஒன்று, ஆங்கே செழுங்கண்டம் ஒன்பது,
வாசம் - மலர் போல் மருவி நின்றானே.

[1]ஈசனென் றெட்டுத் [2]திசையு மியங்கின
வோசையி னின்றெழு சத்த முலப்பிலி[3]
[4]தேகமொன் றாங்கே [5]செழுங்கண்ட மொன்பது[6]
வாச மலர்போன் மருவிநின் றானே. (26)

வேறு பாடம்: 1. ஈசனே (இ) I. 2. திசைக்கு (இ) II. 3. முலப்பில (ஓ) I. 4. தேசமொன் (இ) IV. 5. செழுங்கொண்ட (ஓ) I. 6. மொன்பதும் (விசு) (தி) (வ)

கருத்து: சிவபெருமானே முதல்வன். படைப்புக்கு நிமித்த காரணம். அண்டத்தில் எட்டுத் திசைகளிலும் உள்ள உலகங்களில், எல்லாப் பொருள்களும் (உயிருள்ள பொருள், உயிரற்ற பொருள்) சிவன் தம்மிடம் 'ஒன்றாய்' நிற்பதால் (கலந்து நிற்பதால்), முறையே, தத்தம் தன்மை உடையனவாயும், இயக்கம் உடையனவாயும் உள்ளன. இப்பொருள்கள் உள்ளமை நமக்குத் தெரிகிறது. ஆனால் சிவபெருமான்உள்ளமை தெரியவில்லை. இஃது எது போல? நாதத்திலிருந்து (சூக்கும வாக்கிலிருந்து) தோன்றும் சத்தம் (வைகரி வாக்கு) செவியிற் புலனாக, நாதம் புலனாகாமை போல. பொருள்களும், உலகங்களும் அழியும். ஆனால் சிவன் என்றும் உள்ளான். பொருள்களில் அவன் 'ஒன்றாய்' நிற்றல் எது போல? மலரில் மணம் போல. பொருள்கள் பல, சிவன் ஒருவன். அவற்றில் அவன் 'ஒன்றாய்' நிற்றல் எதுபோல? உடம்பின் உறுப்புகளான ஒன்பது குண்டங்களிலும், உடம்பின் தன்மை உள்ளமை போல.

முதல் அடி: 'என்று' என்பது காரணப்பொருளில் வந்த இடைச்சொல். இக்காலத்தில் பெருக வழங்கும். திசை - ஆகுபெயர். கண்டம் - பிரிவு (இங்கே) குண்டங்கள். நவகுண்டங்கள் பற்றி முன்னர்க் கூறினார்.

கல்லும் கனியாகும்

2986. இல்லனும் அல்லன், உளனல்லன் - எம் இறை
கல்லது நெஞ்சம் பிளந்திடும் காட்சியன்,
தொல்லையன், தூயன், துளக்கு இலன், தூய் மணி
சொல்லருஞ் சோதி, தொடர்ந்து நின்றானே.

இல்லனு மல்ல னுளனல்ல னெம்மிறை
கல்லது நெஞ்சம் பிளந்திடுங் காட்சியன்
றொல்லையன் றூயன் றுளக்கிலன் றூய்மணி
சொல்லருஞ் சோதி தொடர்ந்துநின் றானே. (27)

கருத்து: எம் முதல்வன் கண்ணுக்குப் புலப்படாமையின், இல்லா தவனல்லன். பிறர் போல உள்ளவனும் அல்லன். உணரும்போது கல் நெஞ்சையும் கனிவிப்பான். பழமையானவன். மலமற்றவன். போக்கு வரவு செய்யாதவன். மாணிக்கச்சோதியுடையவன். அகண்ட சோதி.

இயல்பால் உலகைக் கடந்தவனாயினும், கருணையால் உயிர்களோடு கலந்து நிற்கின்றான்.

காட்சி - உணர்விற் புலப்படுதல்.

தோன்றும் அருள்

2987. உள்ளத்து ஒடுங்கும் "புறத்துளும் நான்" எனும்,
கள்ளத் தலைவன் கமழ்சடை நந்தியும்
வள்ளற் பெருமை வழக்கம் செய்வான், நுதல்
அள்ளற் கடலை அறுத்து நின்றானே.

உள்ளத் தொடுங்கும் புறத்துளு நானெனுங்
கள்ளத் தலைவன் கமழ்சடை நந்தியும்
வள்ளற் பெருமை வழக்கஞ்செய் வானுத[1]
லள்ளற் கடலை யறுத்துநின் றானே. **(28)**

வேறு பாடம்: 1. வார்கடம் (விசு) (தி) (வ) (து)

கருத்து: சிவபெருமான் உலகின் தலைவன். ஆனால், கள்ளத் தலைவன். ஏன்? அவன் எங்கும் தோன்றாமல், உயிர்களின் அறிவில் மறைந்திருக்கின்றான். பிற பொருள்களில், அதன் இயல்பாக உள்ளான். அவன் உலகையும்,உயிர்கட்கு எல்லாம் உடம்பையும் படைத்து, இன்ப துன்பங்களை நுகரச்செய்து, அதனால் அறிவு விளக்கம் பெறச் செய்துள்ளமை, அவனது கொடையின் பெருமையாகும். ஆனால், அது புலப்படாதிருக்கின்றது. தனது கொடைப் பண்பைப் புலப்படுத்தும் பொருட்டு, உயிர்களின் தீவினைக்கு ஈடாகத் தான் சங்கற்பித்து உண்டாக்கிய துன்பமாகிய சேற்றுக் கடலைப் போக்கினான்.

"புறத்துளும் நான்" என்பது சிவன் கூற்று.

உள்ளும் புறமும் சிவசோதி

2988. மாறு எதிர் வானவர் தானவர் நாடொறும்
கூறுதல் செய்து குரைகழல் நாடுவர்,
ஊறுவர் உள்ளத்தகத்தும் புறத்துளும்,
வேறு செய்து ஆங்கே விளக்கொளியாமே.

மாறெதிர் வானவர் தானவர் நாடொறுங்
கூறுதல் செய்து குரைகழ னாடுவ
ரூறுவ ருள்ளத் தகத்தும் புறத்துளும்
வேறுசெய் தாங்கே விளக்கொளி யாமே. (29)

கருத்து: தம்மில் பகையான தேவரும், அசுரரும் தத்தம் எண்ணம் முடிதல் வேண்டிச் சிவபெருமானை நாள்தோறும், ஏத்தி வழிபாடு செய்வர். அப்பெருமானும் அவரது எண்ணம் முடிப்பான். ஆனால், அவன்பால் உண்மையன்பு கொண்ட அடியார் நாள்தோறும் அன்பு பெருகி, அதன் மெய்ப்பாடு உடம்பில் தோன்ற வழிபடுவர். வழிபாட்டுப் பயனை அவர்கட்கு வேறு வகையில் அருள்வன். அதாவது, மலவிருளைப் போக்கும் ஞானவொளியாக, அவர்கள் உணர்வுக்குப் புலனாவான். (அதனால்), அவர்கள் மேலும் அன்பு பெருக நிற்பர்). அதன் காரணமாகப் புறத்திலும் சிவசோதி விளங்குதலைக் காண்பர்.

மூன்றும் ஒன்றே

2989. விண்ணிலும் வந்த [1]வெளியலன் மேனியன்
கண்ணிலும் வந்த புலனல்லன் காட்சியன்
பண்ணினில் வந்த பயனல்லன் பான்மையன்[2]
எண்ணிலா னந்தமு [3]மெங்கள் பிரானே. (3)

வேறு பாடம்: 1. வெளியல்ல (ஓ) II; வெளியிலன் (விசு) (தி) (வ). வெளியினன் (த) 2. பார்வையன் (இ) II. 3. மெங்கணு மாமே (ஓ) II.

கருத்து: பூத காரியமாகிய ஆகாயமே பரமாகாயமா? எனின், அன்று என்க. ஆகாயம் அருவம். அதாவது, ஆகாயம் என்ற பொருள் அருவ வடிவத்தை உடையது. பரமாகாயமோ சிவத்தின் சொரூபம். சிவம் என்ற இறைப் பொருள் அதுவே. அதுவே ஞானமும் ஆகும். அந்த ஞானம் பாச ஞானம், பசு ஞானம் என்ற அறிவுகளுக்குப் புலனாகாதது. பதிஞானமே அதைக் "காண" வல்லது. அப்பொழுதும் ஞானத்தால் காணுதல் அன்று; ஞானமாகவே ஆகிக் காண வேண்டும். இந்நிலையில், காண்பவன், காட்சி, காணப்படும் பொருள் - இம் மூன்றும் ஒன்றாய்விடும். அதுவே ஆனந்தமும் ஆகும். இவ்வானந்தம், மாந்தர் ஒரு செயல் செய்ய, அதன் பயனாக விளைந்த (generated) ஆனந்தம் அன்று. இயற்கையாகவே, ஆனந்தமாக இருப்பது.

பொருள் ஒன்று, அதன் இயல்பு அறிவு. அதனால் விளைவது ஆனந்தம் என்பது உலகியல் உண்மை. ஆனால், சிவம் அத்தகையது அன்று. அதுவே பொருள். அதுவே அறிவு. அதுவே ஆனந்தம் - இதனைச் "சத் - சித் - ஆனந்தம்" என்பர்.

பரமாகாயமும் அகண்டாகார வெளியும் ஒன்றே.

அளவில்லான்

2990. உத்தமன் எங்கும் உகக்கும் பெருங்கடல்
நித்திலச் சோதியன் நீலக் கருமையன்
எத்தனை காலமும் எண்ணுவர் ஈசனை,
சித்தர், அமரர்கள் தேர்ந்து அறியாரே.

உத்தம னெங்கு முகக்கும் பெருங்கட
னித்திலச் சோதிய னீலக் கருமைய
னெத்தனை காலமு மெண்ணுவ ரீசனைச்
சித்த ரமரர்க டேர்ந்தறி யாரே. (31)

கருத்து: ஈசன் உயர்ந்தோன். கடல் முத்துப் போன்ற வெண்ணிற ஒளியினன். அவ்வொளியின் ஒருபால் நீலநிறம் திகழும். சித்தரும், தேவரும் முறையே அக, புற வழிபாட்டால் எத்தனையோ காலம், அவனை எண்ணுவர். உணர்வர். ஆனால், அவனை நிறைவுற ஆய்ந்து அறியார்.

சிவம் அளவிலன் என்றபடி.

உருவம் பல, அருள்பவன் சிவனே

2991. நிறம்பல, எவ்வண்ணம்? அவ்வண்ணம் ஈசன்;
அறம்பல, எவ்வண்ணம்? அவ்வண்ணம் இன்பம்;
மறம் பல, எவ்வண்ணம்? அவ்வண்ணம் பாவம்;
புறம் பல காணினும் போற்றுகிலாரே.

நிறம்பல வெவ்வண்ண மவ்வண்ண மீச
னறம்பல வெவ்வண்ண மவ்வண்ண மின்ப
மறம்பல வெவ்வண்ண மவ்வண்ணம் பாவம்
புறம்பல 'காணினும் போற்றுகி லாரே. (32)

வேறு பாடம்: 1. காணிவை (இ) III.

கருத்து: பல உருவம், பல நிறம் - இவையெல்லாவற்றிலும் சிவன் உள்ளான். ஆதலின், அன்பர் எவ்வுருவை, எந்நிறத்தைக் காதலிப்பரோ, அவனும் அவ்வுருவில், அந்நிறத்தில் தோன்றி அருள்புரிவான். எதுபோல்? அறம் பல. அவற்றுள் எதைச் செய்கின்றோமோ, அதன் பயனாகிய புண்ணியம் விளையும். தீவினை பல. அவற்றுள் எதைச் செய்கின்றோமோ, அதன் பயனாகிய பாவம் விளையும் - என்பது போல. இவ்வாறு இருக்க, இறைவன் அருள் - திருமேனிகள் பல இருப்பினும், ஒன்றையும் வழிபடாது ஒழிவர் சில மாந்தர்.

எங்கும் உள்ளான், எல்லாம் தருகிறான்

2992. இங்கு நின்றான், அங்கு நின்றனன், எங்கு உளன்,
பொங்கிநின்றான் புவனாபதி, புண்ணியன்,
கங்குல் நின்றான், கதிர் மாமதி, ஞாயிறு
எங்கும் நின்றான் மழைபோல் இறைதானே.

இங்குநின் றானங்கு நின்றன னெங்குளன்
பொங்கிநின் றான்புவ னாபதி புண்ணியன்
கங்குனின் றான்கதிர் மாமதி ஞாயிறு
வெங்குநின் றான்மழை போலிறை த்தானே. (33)

கருத்து: உலகத் தலைவனாகிய சிவபெருமான் இங்கும் விளங்கு கின்றான். தொலைவிலும் விளங்குகின்றான். எங்கும் உள்ளான். அருள் மிகுந்து திகழ்கின்றான். அறமே வடிவாயும் உள்ளான். இருளில் உள்ளான். சந்திரன், சூரியன் முதலிய ஒளிகளில் எல்லாம் உள்ளான்.

புவனை - உலகம். இது புவனா என நின்றது, வடசொல்.

உண்மை ஞானம் பெறுக

2993. உணர்வது உபாயமே, உத்தமமாயும்
உணர்வது நுண்ணறிவு எம்பெருமானை,
புணர்வதுவாயும் முன் புல்லியதாயும்
உணர்வு, உடல், அண்டமும் ஆகி நின்றானே.

உணர்வ [1]துபாயமே யுத்தம மாயு
முணர்வது நுண்ணறி வெம்பெரு மானைப்
புணர்வது [2]வாயுமுன் புல்லிய தாயு
[3]முணர்வுட லண்டமு மாகிநின் றானே. (34)

வேறு பாடம்: 1. துவாயுமே (இ) I. 2. முணர்வு முடலண்ட (இ) III. 2. வாயும் (சுவ.) V. (3 ஆம் அடி 2 ஆவது சீர் சுவடிகள், பதிப்புகளில், "வாயும்" என்றே உள்ளது. அது யாப்புப் பிழையாதலின் இப்பதிப்பில் "வாயுமுன்" என்று திருத்தப்பட்டது.

சிவத்தை நூலறிவால் உணரலாமாயினும் நுண்ணுணர்வால் உணர்வதே சிறந்தது. யோகானுபவத்தில், உடலில் உள்ள ஆதாரங்கள், சகஸ்ராரம் ஆகிவற்றில் நின்று அனுபவிக்கும் பொருளாகவும் நிராதாரத்தில் அகண்ட வெளியாக அனுபவிக்கப்படும் சொரூப சிவமாகவும் அவன் உள்ளான்.

ஒளியும் அருளும்

2994. தன் வலியால் உலகு ஏழும் தரித்தவன்
தன் வலியாலே அணுவினும் தான் நொய்யன்,
தன் வலியால் மலை எட்டினும் தான் சாரான்
தன் வலியாலே தடங்கடலாமே.

தன்வலி யாலுல கேழுந் தரித்தவன்
றன்வலி யாலே யணுவினுந் தானொய்யன்
றன்வலி யான்மலை யெட்டினுந் தான்சாரான்[1]
றன்வலி யாலே தடங்கட லாமே. (35)

வேறு பாடம்: 1. சார்பவன் (த).

கருத்து: சிவபெருமான் தனது வலிமையால் பதினான்கு உலகங்களையும் தாங்குகின்றான். ஆதலின் இவற்றினும் பெரியவன். தனது நுண்ணறிவாற்றலால் உயிரின் அறிவினுள் மறைந்திருந்து, அதற்கு உணர்த்துகின்றான். ஆதலின் அணு எனப்படும் உயிரினும் நுட்பமானவன். அவன் வலிமையை நோக்க, எட்டுத் திசைகளிலும் நின்று, உலகைக் காக்கும் பெருமலை எட்டினும் பெரியன். அருளுடைமையில், உலகில் உள்ள கடல்களிலும் பெருங்கடல் போன்றவன்.

இறைவனின் வலிமை, ஒளி, திண்மை, அருள் ஆகியவை கூறினார்.

நம்மை அறிவான்

2995. ஏனோர் பெருமையன், ஆகிலும் எம் இறை
ஊனே சிறுமையுள் உட் கலந்து, அங்குளன்,
வானோர் அறியும் அளவல்லன் மாதேவன்
தானே அறியும் தவத்தின் அளவே.

ஏனோர் பெருமைய னாகிலு மெம்மிறை
[1]யூனே சிறுமையு ளுட்கலந் தங்குளன்
வானோ ரறியு மளவல்லன் மாதேவன்
றானே யறியுந் தவத்தி னளவே. (36)

வேறு பாடம்: 1. தானே (த).

கருத்து: எம் முதல்வன் பிற தெய்வங்களின் பெருமையும் தன் பெருமையாக உடையவன். ஆயினும் மனிதரின் சிறுமையுடைய உடம்பிலும், உணர்விலும் கலந்து உறைகின்றான். தேவதேவனாகிய அவனுடைய முழு நிறைவையும் தேவர்களும் அறிய இயலாது. ஆனால், அவன் பிறர் ஒவ்வொருவருடைய தவத்தின் அளவையும் அறிந்து, அதற்கு ஏற்ப அருள் புரிவான்.

உய்யும் வழி

2996. பிண்டட ஆலம் வித்தில் எழுந்த பெருமுளை
குண்டு ஆலம் காய்த்து, குதிரை பழுத்தது,
உண்டனர் உண்டார் உணர்வு இலா மூடர்கள்
பிண்டத்துள் பட்டுப் பிணங்குகின்றாரே.

[1]பிண்டாலம் வித்தி லெழுந்த பெருமுளை
குண்டாலங் காய்த்துக் குதிரை பழுத்தது
வுண்டன ருண்டா ருணர்விலா மூடர்கள்
பிண்டத்துட் பட்டுப் பிணங்குகின் றாரே. (37)

வேறு பாடம்: 1. விண்டாலம் (இ) I.

கருத்து: உடம்பாகிய ஆல வித்திலிருந்து முளைத்து எழுந்த உயிராற்றல் என்ற முளை, ஆல மரமாக வளர்ந்து, காய்த்தது. அருளொளியுடன் கூடிய உயிருணர்வாக முதிர்ந்தது. அதனால்

சிவானுபவம் பெற்றவர் உய்ந்தார். உயிருணர்வு பெறாத மூடர், பிறப்பு, இறப்புகளுக்குட் பட்டு, ஞானநெறி அறியாமலே அழிகின்றார்.

குண்டு - பெரிய. குதிரை - மாங்கனி, மா என்பது குதிரையையும் குறிக்கும். ஈண்டு, அருளொளி.

2997. மூல னுரைசெய்த மூவா யிரந்தமிழ்
மூல னுரைசெய்த முந்நூறு மந்திர
மூல னுரைசெய்த முப்ப துபதேச
மூல னுரைசெய்த மூன்றுமொன் றாமே (ஓ)

வாழ்த்து

2998. வாழ்கவே வாழ்கவென் னந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்கமெய்ஞ் ஞானத் தவன்றாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே.

கருத்து: குரு திருவடியை வாழ்த்தி நூலை நிறைவு செய்கின்றார்.

பின்னிணைப்பு - I

பாட்டு முதற்குறிப்பு
அகர நிரல்

எண் : பாட்டெண்

அ

பின்னிணைப்பு - II

இம் மூன்றாம் பகுதியில் இருமுறை வந்த பாடல்கள்
(நூலில் அவ்வவ்விடங்களில் குறிப்புகள் தரப்பட்டுள்ளன)

பாட்டு முதற் குறிப்பு

1. ஏறுடையா
2. ஆவனவாவ
3. மண்ணொன்று
4. ஒன்று மிரண்டும்
5. அறிவாயசத்
6. அகார முயிரே
7. காயக் குழப்
8. கூடகில்லார்
9. உய்ந்தன
10. அறிவறி
11. ஆகியவச்சோமன்
12. அதீதத்துளாகி
13. அண்ணலிருப்பிடம்
14. ஐம்பதெழுத்தே
15. தொம்பதம்
16. குலைக்கின்ற
17. கொண்ட குறியுங்
18. தானே திசை
19. ஆறேயருவி
20. உணர்வு மவனே
21. போற்றுகின்றேன்
22. அகன்றா
23. தலைநின்ற
24. கொல்லையின்
25. உணர்வுடை

பின்னிணைப்பு – III

கலைச் சொல் அகர நிரல்

எண் : பாட்டெண்

அகலம்	–	சிதாகாயம் – அறிவுவெளி,	2240
அகளம்	–	அருவம்,	2369
அங்கி	–	மூலக்கனல் – உயிர் ஆற்றல்,	2068
அசபை	–	பிராணாயாம மந்திரம்,	2124
அணு	–	உயிர்,	2589
அணுவன்	–	உயிர்,	2428
அருட்கேவலம்	–	உணர்வு அருள்மயமாதல்	2286
அவித்தை	–	அறியாமை,	2132
அன்னம்	–	அம்ச மந்திரம் – பிராணாயாம மந்திரம்,	2326
உபசாந்தம்	–	மனச்சலனம் அற்றநிலை,	2226, 2349
உபாதானம்	–	உபாதான காரணம், முதற்கருவி,	2465
உன்மனி	–	சந்திரகலை பதினாறினுள் ஒன்று,	2459
கனம்	–	ககனம் என்பதன் திரிபு. சிதாகாயம்,	2459
கன்மம்	–	வினைப் பயன்,	2517
கன்மக் கயம்	–	வினை நீக்கம்,	2517
காமியம்,	–	வினைப்பயனால் விளையும் இன்ப துன்பம்,	2201, 2142
கை	–	சுழுமுனை நாடி,	2101
கோதண்டம்	–	ஆக்ஞை என்ற ஆதாரம்,	2643
சகளத்தர்	–	உருவம் உடையோர்,	2689
சகளம்	–	உருவம்,	2018
சத்தியஞானப் பொது	–	அகண்டவெளி – இறைவனின் இயல்பு நிலை,	2508
சாக்கிரம்	–	விழிப்பு நிலை – நனவு,	2119
சிதம்பரம்	–	சிதாகாயம்,	2617, 2684
சிவசித்து	–	சிவம் ஆகிய பேரறிவுப் பொருள்,	2497

சிவோகம்	–	'நான் சிவமாக இருக்கிறேன்' என்ற உணர்வு	2462
சிற்றம்பலம்	–	புருவமத்தி,	2732
சுத்த வித்தை	–	சிவ தத்துவம் ஐந்தனுள் ஒன்று,	2212
சுத்தாவத்தை	–		2209
சுழுத்தி	–	சுஷூப்தி என்ற வடசொல்லின் திரிபு – உறக்கம்,	2130
சுழுனை	–	உறக்கம்,	2131
செம்மை	–	சிவத்தின் சொரூப நிலை,	2406
சேதனன்	–	அறிவுடையவன் – ஆன்மா,	2281
சோடச மார்க்கம் (சந்திர கலை 16 –ஐயும் எய்துதல்)	–	பிராசாத யோகம்	2627, 2643
சோமன்	–	சந்திரன், படிமமாய், ஆன்மாவைக் குறித்தது	2465
தசாங்கம்	–	தச காரியம்,	2627
தத்துவசுத்தி	–		2571
தனு சத்தி	–	அசுத்தமாயை,	2244
தாரம்	–	பிரணவம்,	2446, 2804
திமிரம்	–	இருள்; ஆணவ மலம்,	2798
திருவம்பலம்	–	பரமாகாயம்,	2726
திரோதாயி	–	மறைக்கும் சத்தி,	2142
நனவு	–	சுத்தாவத்தை,	2382
நிருவாணம்	–	தூயநிலை,	2823
பஞ்சவணி	–	பஞ்சீகரணம் – ஐம்பூதங்களும் கலந்த முறை,	2246
பாசம்	–	ஆணவமலம்,	2025
பாழ்	–	முப்பாழ்,	2371
பிரகிருதி	–	மூலப்பகுதி,	2051
பிரசாதம்	–	பிராசாதம் – ஒருவகை யோகம்,	2589
பிரணவம்	–	ஓம் என்ற மந்திரம்,	2593
பிரளயாகலர்	–	உயிர் வகையுள் ஒன்று,	2217

புரியட்டகம்	–	சூக்கும வுடம்பு,	2098
மணி	–	உயிருணர்வு,	2523
மாயேயம்	–	மாயையிலிருந்து பிறப்பவை – உடலும் உலகமும்	2132, 2203
முத்தன்	–	பாதிப்பு அற்றவன்,	2221
முத்தி	–		2265
வாசி	–	மூச்சு,	2462
வாதனை	–	வாசனை – மனப்பதிவு,	2283
விஞ்ஞாகலர்	–	விஞ்ஞானாகலர் – உயிர் வகையுள் ஒன்று,	2216
விந்து	–	சுத்த மாயை,	2350
வியாக்கிரம்	–	நனவு – விழிப்பு நிலை,	2250
		பராவத்தை	2250
வியாத்தம்	–	அண்டவெளி,	2199
வியாத்தன்	–	வியாபிக்க பட்டவன், ஆன்மா,	2387
வியாத்தி	–	”	2240
வேதாந்த சித்தாந்தம்	–	சைவ சித்தாந்தம்,	2357, 2590

பின்னிணைப்பு – IV

கலைச்சொல் விளக்கம்

I. அவத்தை (1) :

இச் சொல் 'நிலை' எனப் பொருள்படும். அறிவின் நிலையை 'அவத்தை' என்பர். இது மூன்று வகைப்படும். அவற்றுள் :

1.	கேவலாவத்தை	-	இது 'தனி நிலை' எனப் பொருள்படும். பிறவி வட்டம் தொடங்குமுன், உயிர் (ஆன்மா), தன்னோடு அனாதியே ஒட்டிக் கொண்டுள்ள ஆணவ மலத்தால் பிணிக்கப்பட்டு முழு அறியாமையில் மூழ்கிக் கிடக்கும். அஃது அறிவுடையது ஆயினும், அவ்வறிவு தொழிற்படாது.
2.	சகலாவத்தை	-	இது 'சேர்வு நிலை' எனப்படும். ஆணவ மலத்தை நீக்கும் பொருட்டுச் சிவபெருமான் அளிக்கும் வகையில். உயிருக்குப் பிறப்பை நல்குவான். பிறப்பு, உடம்பு எடுத்து, உலகிற் பிறப்பது ஆதலின், இப்போது, உயிருக்கு மாயையின் 'சேர்வு' (சார்பு) உண்டாகின்றது. இறைவன் இயக்க, ஆணவமலமும், உயிரின் அறிவும் தொழிற்படும். பிறப்பு ஏற்படக் காரணமான மூல கன்மமும், பிறப்பில் உயிர் செய்யும் வினைகளுமாகிய கன்ம மலத்தின் சேர்வும் (சார்பு) உண்டாகும். ஆதலால், உயிர் மீண்டும் மீண்டும் பிறந்து, இன்ப, துன்பங்களை அனுபவிக்கும். பல உணர்வுநிலைகளை அடையும்.
3.	சுத்தாவத்தை	-	உயிர், வாழ்வினால் பக்குவம் அடைந்து, பக்தி, வழிபாடு, ஞானம் ஆகியவற்றால் மூன்று மலங்களினின்றும் விலகி, அன்புமய

மாக நிற்கும். பல உணர்வு நிலைகளை அடையும்.

அவத்தை (2) :

உணர்வு நிலையையும் அவத்தை என்பர். இவற்றுள் 5 பெரும்பிரிவுகளும், 5 உட்பிரிவுகளும் உண்டு. பெரும் பிரிவுகள் :

1. கீழாலவத்தை (கேவலாவத்தை என்றும் கூறுவர் – இது மேலே கூறியதன்று)
2. மத்திய – அவத்தை (மத்தியாலவத்தை அல்லது சகலாவத்தை. இதுவும் மேலே கூறியதன்று.)
3. சுத்தாவத்தை (இதுவும் மேலே கூறியதன்று)
4. பராவத்தை
5. மேலாலவத்தை (சிவாவத்தை) இவை ஒவ்வொன்றிலும் 5 உட்பிரிவுகள் உண்டு. அவை :
    1. நனவு (விழிப்பு அல்லது சாக்கிரம்)
    2. கனவு (சொப்பனம்)
    3. உறக்கம் (சுழுத்தி)
    4. பேருறக்கம் (துரியம்)
    5. உயிர்ப்படக்கம் (துரியாதீதம்)

பெரும் பிரிவு தோறும், உட்பிரிவுகளுக்கு வெவ்வேறு பொருள் உண்டு. முதலாவது பெரும் பிரிவு உலக அனுபவம். ஏனையவை இறையனுபவம்.

II. ஆறு அந்தம் :

மெய்யுணர்வு ஆய்வின் முடிபாகக் கண்டறியப் பட்ட, உண்மைகளை வைத்து, அவ் வாய்வை 'அந்தம்' என்றனர். அவை ஆறு : (அ) நாதாந்தம் (ஆ) கலாந்தம் (இ) யோகாந்தம் (ஈ) போதாந்தம் (உ) வேதாந்தம் (ஊ) சித்தாந்தம் என்பவை. காலப்போக்கில், இவை இணைந்து, ஒரு மெய்யுணர்வுக் கோட்பாட்டின் கூறுகள் ஆயின.

III. ஒளி :

இஃது அறிவு, தெளிவு (ஞானம்) எனப் பொருள்படும். எனினும், திருமூலர் இதை

யோகவியலில் கலைச்சொல்லாகக் கொண்டார். இதனை 3 வகையாகக் கொண்டார். அவை அண்டவொளி, அகண்டவொளி, பிண்டவொளி என்பவை.

1.	அண்டவொளி	..	சூரியன், சந்திரன், அக்கினி, நட்சத்திரம்
2.	அகண்டவொளி	..	சிவம் என்னும் பேரறிவு
3.	பிண்டவொளி	...	உடம்பில் மறைந்து நிற்கும் ஒளி, யோக சாதனையில் புருவமத்தி, உச்சந்தலை, அதற்கும் மேல் உள்ள வெளி – ஆகியவற்றில், உயிரின் உணர்வு வெண்ணிற ஒளியாக விளங்க, அதன் உள்ளே அருளொளியும், சிவவொளியும் திகழும். சாதனை முதிர்வில் உடம்பு ஒளியுடம்பு ஆகும்.

IV. காரண தத்துவம் :

உலகப் படைப்பின் கூறுகள் (Substantial units or elements) மொத்தம் 36, இவை மாயையிலிருந்து தோன்றுபவை. இவற்றைத் தத்துவங்கள் என்பர். இவை மூன்று வகைப்படும். (இப்பதிப்பு முதற்பகுதிப் பின்னிணைப்புக் காண்க.)

1. காரணதத்துவம் என்பவை, வித்தியா தத்துவம் ஏழும் ஆகும்,
2. ஆன்மதத்துவம் 24–ம் காரிய தத்துவம் ஆகும். காரண தத்துவங்கள் காரண–உபாதி என்றும் பரவுபாதி என்றும் வழங்கும். காரிய தத்துவங்கள் காரியவுபாதி என்றும், சீவவுபாதி என்றும் வழங்கும்.

V. தச காரியம் :

மாந்தர் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளும் பற்றிய ஞானமும், பக்குவமும், தூய்மையும் பெற்று, வீடுபேறு அடையும் ஆன்ம யாத்திரையைத் 'தச காரியம்' எனப் பத்துப் படி நிலைகளாக வகுப்பர். அவை :

1.	தத்துவ ரூபம்	...	தத்துவங்கள் 36 – இன் இயல்பையும் அறிதல்
2.	தத்துவ தரிசனம்	...	அவை தாமே இயங்கா; அறியா. சடப்பொருள் என அறிதல்
3.	தத்துவ சுத்தி	...	குருவின் உபதேசத்தால் தத்துவத் தொடர்பினின்றும் நீங்குதல்.

4.	ஆன்ம ரூபம்	...	ஆன்மா தனது அறிவை மறைத்து நிற்கும் ஆணவ மலத்தை உணர்ந்து, அதிலிருந்து விலகி, "நான் ஞான வடிவம்"; சிவத்தின் ஞானமே எனது ஞானமாக நிற்கப் பெற்றேன்" என்று உணர்தல்.
5.	ஆன்ம தரிசனம்	...	ஆன்மா தன் செயல் ஒன்றுமின்றி, அனைத்தும் சிவன் செயலே என உணர்தல்.
6.	ஆன்ம சுத்தி	...	ஆன்மாவின் தன்–உணர்வாகிய தற்போதம் கெட, சிவனது தன்மை யாகிய ஆனந்தம் இது என உணர்தல். ஆன்ம அறிவு சிவத்தில் கலந்து, அது தன்னை மறந்து, சிவமாக நிற்றல்.
7.	சிவ ரூபம்	...	எவ் வடிவும், யாரும், எதுவும் சத்தியின் வடிவமே. அவள் இன்றி யாரும் எதுவும், வடிவும், வாழ்வும், செயலும், அறிவும் கொள்ள இயலாது, இனி அந்தச் சத்தி தான் சிவத்தின் வடிவம். ஆன்மாவின் பொருட்டுப் படைத்தல் முதலிய ஐந்தொழில்களைச் சிவமே செய்கிறான். சிவம் உயிருக்கு உயிராய் நின்று, அதற்கு அருள் மூலம் ஞானம் போதித்துக் கொண்டுள்ளான் என்று அருளால் அறிவது.
8.	சிவதரிசனம்	...	பார்க்கும் இடம் எல்லாம், பார்க்கும் பொருள் எல்லாம் சிவமே யாகப் பார்த்து, 'சிவமே உண்மை'; மற்றன எல்லாம் பொய், எனத் தெளிந்து, 36 தத்துவங்களால் மீண்டும் பிணிக்கப்படாமல், சத்தியினிடமும் அழுந்திவிடாமல், சிவத்தை எய்துவதால் கிடைக்கும் சிவானந்தத்தையே சார்தல்.
9.	சிவயோகம்	...	ஆன்ம போதமும் சிவமே; வினை நுகர்ச்சியும் சிவமே. அவனன்றி

			அணுவும் அசையாது – என உணர்ந்து, உயிருணர்வால் சிவத்துடன் ஒன்றி நிற்றல்.
10.	சிவபோகம்	...	சிவம் ஆன்மாவின் உடலும் உயிருமாக நின்று, உண்டு, உறங்கி, நடந்து, பிராரத்தம் ஆகிய வினையின் அனுபவங்களைச் சிவபோகமாகவே செய்து, வேறுபாடு இன்றி நின்று, ஆன்மாவைச் சிவம் ஆக்கி விடுவான். இது பரமானந்தம் தரும் சிவபோகம்.

பின்னிணைப்பு – V

சிறப்புப் பெயர் அகர நிரல்

எண் : பாட்டெண்

பின்னிணைப்பு – VI

அருஞ்சொல் அகர நிரல்
எண் : பாட்டெண்

துல்லியம் – ஒளி, 2105
துழனி – ஒலி, 2962
தூசி – முன் செல்லும் படை, 2927
தூடணம் – சிறப்பு அற்றது, 2199
தூமம் – புகை, 2120

தெருள் – ஞானம், 2299
தென்றி – இனம்பிரிந்து, 2918

நகழ்வு – நகர்தல், 2632
நந்துதல் – குறைதல், 2416
நயம் – இன்பம், 2069
நலவியன் – நல்லதாகிய வீடுபேறு உடையான், 2952

நாமம் – பெயர், 2016

நிரோதம் – தடை, 2673

நீர் – இயல்பு, 2080
நீவுதல் – நீங்குதல், 2512

நொதித்தல் – ஊறுதல் 2560

பக்கன் – பிரிந்தவன், 2916
பஞ்சணி – பஞ்சுமெத்தை 2646
படங்குதல் – மெய்போலப் பேசுதல் 2916
படி – அடுக்கு, 2418
படியுண்டல் – போலத் தோன்றுதல் 2417
பண் – இராகம் 2950
பதிப்பு – பதிதல், 2267
பயிர்தல் – பழகுதல் 2054
பரம் – மேலானது, 2636
பர நிந்தை – பிறரைப் பழித்தல் 2020
பர யோகம் – மேலான யோகம் 2415
பர வர்க்கம் – சிவலோக வாசிகள் 2617
பராதீதம் – பரவெளியைக் கடந்தது 2424
பரிசன வேதி – ஒரு மருந்து. இது பட்ட உலோகம் பொன்னாகும். 2030

பரிசு – தன்மை, 2635
பரிபாகம் – பக்குவம், 2404
பவன் – பிறவிகள் எடுப்பவனாகிய ஆன்மா 2559
பறிதல் – நீங்குதல், 2582
பனவன் – அந்தணன், 2875

பாலிய – பகுதியாக உள்ள 2437
பானு – சூரியன், 2660

புறம்பு – வேறு 2614

பூடணம் – அணி 2263
பூரணித்தல் – முழுமையடைதல் 2595
பூரிப்பி – பூரிப்பது 2371

பேய்த் தேர் – கானல் நீர் 2012

பைய – மெல்ல, 2015

போதம் – சிவஞானம், 2426

மலைதல் – ஐயுறுதல் 2642
மனு – மந்திரம் 2158
மன்றன் – சபையில் ஆடுபவன், சிவன் 2251
மாலுதல் – மயங்குதல் 2296
மானிடம் – மனவுணர்வு, 2520
மான் – பிரகிருதி 2059
மான்று – மயங்கி 2408

மிண்டுதல் – நெருங்குதல் 2436

முத்தன் – குரு, 2037
முரவு – ஒலி, 2077
முழை – உடலில் அண்ணாக்கு வழி 2519

மேவுதல் – விரும்புதல் 2008

மோழை – உடம்பில் கீழ்ப்புற வழி 2519

யந்திரம் – உடம்பு, 2219

வட்டம் – இலாபம் 2877
வதுவை – நீர் 2127

இந்நூல் ...

பதஞ்சலி முனிவர் வடமொழியில் செய்த ''யோக சூத்திரத்தில்'' கூறிய அஷ்டாங்க யோகமே, இந்திய தரிசனங்களுள் யோக தரிசனத்திற்குச் சிறந்த நூலாகக் கருதப்படுகின்றது. திருமூலர் அந்த யோக முறையை அப்படியே ஏற்று, அதைச் சிவயோகமாக வளர்த்து, இந்திய ஆன்மீகத் துறையில் முக்கியமான இடம் பெறுகின்றார்.

அவர் அருளிய திருமந்திரத்தின் இப்புதிய பதிப்பில், இந்த மூன்றாம் பகுதியில், சிவயோகத்தின் பயனாகக் கிடைக்கும் ஞானம் என, அவர் கூறும் செய்திகள் இந்திய வேதாந்தத்தில், அவருக்கு முக்கியமான ஓர் இடத்தைப் பெற்றுத் தருகின்றன.

''வேதமோடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்'' என்று கூறி, ''வேதாந்த சித்தாந்த நெறி'' என்று பெயரிட்டு, அவர் வழங்கும் தத்துவ முடிவு, 'வேதாந்தமா, சித்தாந்தமா?' என்ற சர்ச்சைக்கு முடிவு கட்டுகின்றது. இந்த நெறியில் நின்றே திருமூலர் 'தத்வமசி' – மகாவாக்கியத்திற்கு விளக்கம் தருகின்றார்.

இப்பகுதியில் யோக – அனுபவங்களைப் பெறும் உணர்வு நிலைகளைத் திருமூலர் விரிவாக விளக்குகின்றார்.

பிரபஞ்சத்தின் பிள்ளையாகிய மனிதன் பிரபஞ்சத்தின் சக்திகளையே துணையாகக் கொண்டு உணர்வால், உயிராற்றலால் வளர்ந்து, நிறைநிலை – பிரமநிலை – அடைவதை அழகாக விளக்கி நூலை நிறைவு செய்கின்றார் திருமூலர்.